வெளியீடு—5—1—1972]
Issued—5—1—1972]

3897

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1971 ஜூலை 6

Tuesday 6th July 1971

தொகுதி VI—எண் 1

Volume VI—No. 1

தமிழ் நாடு அரசு
1971

GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9.

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

V2IIL,81 N71
3N71.6
61514
3897

# Tamil Nadu Legislative Assembly Debates

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES.

SECOND SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

6th, 7th, 8th, 9th and 10th July 1971.

Volume VI (Nos. 1 to 5).

*Tuesday, 6th July* 1971.

PAGES

Personnel of the Government of Tamil Nadu ... i–iv

Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... ... v

List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies ... ... vi–xii

1. Questions and Answers ... ... ... ... 1–32

2. Adjournment Motion—

   Arrest of Workers in Coimbatore who were demanding the early re-opening of closed Mills ... 32–36

3. Calling Attention—

   Hardships caused due to restriction of admission to Teachers' Training Schools ... ... ... 36–37

4. Government Bill—

   The Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1971 ... ... ... ... ... ... 37

   Conversion into Ryotwari) Amendment Bill, 1971 ... ... ... ... ... ... 37

PAGES.

*Tuesday, 6th July 1971*—cont.

5. Voting on Demands for Grants for the year 1971-72—*cont.*
   - (i) Demand No. 9—District Administration and Miscellaneous ... ... ... ... ...
   - (ii) Demand No. 31—Famine Relief ... ...
   - (iii) Demand No. 32—Pension ... ... ...
   - (iv) Demand No. 36—Other Miscellaneous compensation and Assignments ... ... ... 38-87
   - (v) Demand No. 37—Compensation to Zamindars.
   - (vi) Demand No. 45—Commuted value of Pensions ... ... ... ... ...
   - (vii) Demand No. 47—Loans and Advances by the State Government ... ... ... ...
   - (viii) Demand No. 1—Land Revenue Department.
   - (ix) Demand No. 4—Stamps Administration ...
6. Papers laid on the Table ... ... ... ... 87

*Wednesday, 7th July* 1971.

1. Obituary Reference—
   Thiru K. S. Lakshmipathy, former M.L.A. ... 119
2. Questions and Answers ... ... ... 119-148
3. Adjournment Motion—
   Agitation by Coimbatore Textile Workers and the rejection of the Chief Minister's appeal ... 148-151
4. Government Bills—
   - (i) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 ... 151
   - (ii) The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Validation of Proceedings Bill, 1971 ... 152





PAGES.

*Wednesday, 7th July* 1971—cont.

5. Voting on Demands for Grants for the year 1971-72—*cont.*
   - (i) Demand No. 9—District Administration and Miscellaneous ... ... ... ... ...
   - (ii) Demand No. 31—Famine Relief ... ...
   - (iii) Demand No. 32—Pensions ... ... ...
   - (iv) Demand No. 36—Other Miscellaneous compensation and Assignments ... ... ... 152-211
   - (v) Demand No. 37—Compensation to Zamindars.
   - (vi) Demand No. 45—Commuted value of Pensions ... ... ... ... ...
   - (vii) Demand No. 47—Loans and Advances by the State Government ... ... ... ...
   - (viii) Demand No. 1—Land Revenue Department.
   - (ix) Demand No. 4—Stamps—Administration ...
6. Papers laid on the Table ... ... ... ... 211

*Thursday, 8th July* 1971.

1. Questions and Answers ... ... ... ... 215-237
2. Government Resolution—
   Reference of the Cauvery Water Dispute to a Tribunal and the need to halt the project works of the Mysore Government ... ... ... 237-301
3. Papers laid on the Table ... ... ... 302-303

*Friday, 9th July* 1971.

1. Questions and Answers ... ... ... ... 323-350
2. Adjournment Motion—
   Unrest among the workers of the Madras Rubber Factory on account of the declaration of the ten weeks old strike illegal ... ... ... ... 351-358
3. Calling Attention—
   - (i) Rise in prices of rice supplied through the Civil Supplies Agency in Kanyakumari district ... 358-360
   - (ii) Difficulty of students in getting admission into Colleges and High Schools and the need to take adequate steps to tackle it ... ... ... 360-364

## How to use the Index.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Board's Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| Ann. | ... | Announcement. |
| B.O.H. | ... | Business of the House. |
| C.A. | ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. | ... | Calling Attention Statement. |
| **Consid.** | ... | Consideration stage of a Bill. This stage includes :<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee. |

| | | |
|---|---|---|
| | | (iii) Amendment to circulate. |
| | | (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. |
| | | (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H. D.s./H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res. | ... | Resolution. |
| St. | ... | Statement. |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதலமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்–வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (பொதுநலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுது-பொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி; எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்த்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வணிக வரிகள், வருவாய், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக்கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை, மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. வே. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், கார்டுகள், சின்கோனா.

13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## Governor of Tamil Nadu

Thiru KODARDAS KALIDAS SHAH

1. The Hon. Thiru M. KARUNANIDHI (Chief Minister) : Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. The Hon. Thiru V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Local Administration) : Minister in-charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. The Hon. Thiru K. ANBAZHAGAN (Minister for Public Health) : Minister in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. The Hon. Thiru N. V. NATARAJAN (Minister for Labour) : Minister in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. The Hon. Dr. (Thirumathi) SATYAVANIMUTHU (Minister for Harijan Welfare) : Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. The Hon. Thiru P. U. SHANMUGAM : (Minister for Food and Revenue) : Minister in-charge of Food, Commercial Taxes, Revenue Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. The Hon. Thiru S. MADHAVAN (Minister for Industries) : Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. The Hon. Thiru S. J. SADIQ PASHA (Minister for Public Works) : Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR (Minister for Co-operation): Minister in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Agriculture): Minister in-charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (Minister for Backward Classes): Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity): Minister in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport): Minister in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments): Minister in-charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

**பேரவைத் தலைவர்:**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்

**பேரவைத் துணைத் தலைவர்:**

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன்

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

திரு. மா. வெ. கரிவேங்கடம்
திருமதி ஜோதி வெங்கடாசலம்
திரு. நா. வீராசாமி
திரு. நீ. அன்புச்செழியன்
திரு. என். கே. பழனிசாமி
திரு. எம். ஏ. லத்தீப்

**சட்டப் பேரவைச் செயலாளர்**

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர்**

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.

**உதவிச் செயலாளர்கள்**

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. ஜி. இராகவன்
திரு. சி. கே. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி. எஸ்ஸி., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி. வி. எம். .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத்தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைசசர்). .. | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். ஃபௌலர் திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.) |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ வ ) |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 38 எட்டியப்பன், திரு. பூ. | பொணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. நா. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம். |
| 48 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 49 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 50 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 51 கருணாநிதி, மாண்புமிகு திரு. மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 52 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 53 கருணைநாதன், திரு. சோ. | கூனூர். |
| 54 கருப்பையா, திரு. ஆ. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 55 காசிராமன், திரு. நா. | கும்பகோணம் |
| 56 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 57 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 58 கார்த்திசன், திரு. வீ. | இராதாபுரம். |
| 59 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |
| 60 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 61 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 62 கிருட்டிணன், திரு. நர. | பேரணம்பட்டு, (செ. வ |
| 63 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1 |
| 65 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 66 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 67 குமார்சாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 68 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 69 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 70 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 71 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி. |
| 72 கோபால், திரு. எம். | குன்னத்தூர், (செ. வ. |
| 73 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 74 கோபால், திரு. பி. | கோயம்புத்தூர் மேற்கு |
| 75 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம். |
| 76 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 77 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 78 கோவிந்தன், புலவர் கா. | செய்யாறு. |
| 79 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 80 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 81 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 82 சதாசிவம், திரு. சே. | ஆண்டிமடம். |
| 83 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 84 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 85 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 86 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 87 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 88 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 89 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. | இராமநாதபுரம். |
| 90 சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோயில். |
| 91 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 92 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 93 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 94 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 95 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 96 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி, (செ. வ.) |
| 97 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 98 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 99 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டன் (செ.. |
| 100 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 101 சின்னசாமி, திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 102 சின்னசாமி, டாக்டர் வ. | ஏற்காடு (ஆ.வா.). |
| 103 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர், (செ.வ.) |
| 104 சின்ன வெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வ. |
| 105 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல் |
| 106 சுப்ரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலய. |
| 107 சுப்பிரமணியம், திரு கே. எம். | தியாகராயநகர். |
| 108 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 109 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 110 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ.வ.). |
| 111 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 112 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ.வ.) |
| 113 சுப்பையா, திரு. வ. ஆர். | கடயநல்லூர். |
| 114 சுப்பிரமணியம், திரு. வ. | சிங்கநல்லூர். |
| 115 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 116 சுருளிவேல், திரு. மு. | போடிநாயக்கனூர். |
| 117 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 118 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 119 செபமாலை, திரு. கோ. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 120 ஜெயராமன், திரு. கி. .. .. .. | சேலம்-1. |
| 121 செல்லதுரை, திரு. வீ. .. .. .. | ஓமலூர் (செ.வ.). |
| 122 செல்லையா, திரு. குழ. .. .. | பேராவூரணி. |
| 123 செல்வராஜ், திரு. எம். .. .. .. | விருத்தாசலம். |
| 124 சேதுராமன், திரு. சி. .. .. .. | சிவகங்கை. |
| 125 சோனையா, திரு. த. .. .. .. | மானாமதுரை. |
| 126 சோமசுந்தரம், திரு. ந. .. .. .. | வலங்கைமான் (செ.வ.). |
| 127 சௌடி சுந்தரபாரதி, திரு. .. .. | அருப்புக்கோட்டை. |
| 128 சௌந்திரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 129 டென்னிஸ், திரு. என். .. .. | கிள்ளியூர். |
| 130 தங்கமணி, திரு. கே. டி. கே. .. .. | மதுரை மேற்கு. |
| 131 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 132 தருமலிங்கம், திரு. ந. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 133 தவமணித் தேவர், திரு. வி. .. .. | சேடப்பட்டி. |
| 134 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. .. | நாட்ரம்பள்ளி. |
| 135 தியாகராசன், திரு. அ. .. .. .. | திருமயம். |
| 136 தியாகராசன், திரு. இ. எஸ். .. .. | திருத்தணி. |
| 137 திருப்பதி, திரு. கு. .. .. .. | மதுரை சென்ட்ரல். |
| 138 துரைசாமி, திரு. ஏ. க. .. .. .. | குடியாத்தம். |
| 139 துரைசாமி, திரு. சு. .. .. .. | திருப்பூர். |
| 140 துரைமுருகன், திரு. .. .. .. | காட்பாடி. |
| 141 துரைராஜ், திரு. சு. ம. .. .. .. | திருவள்ளூர் (செ.வ.). |
| 142 தூயமணி, திரு. மே. சி. .. .. | மேட்டுப்பாளையம். |
| 143 தேவராசன், திரு. எம். .. .. .. | உதகமண்டலம். |
| 144 தேவேந்திரன், திரு. அ. .. .. .. | நன்னிலம் (செ.வ.). |
| 145 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. .. | கணியம்பாடி. |
| 146 நடராசன், திரு. ஈ. எம். .. .. .. | அந்தியூர். |
| 147 நடராசன், திரு. எஸ். .. .. .. | தஞ்சாவூர். |
| 148 நரசிம்மன், திரு. ஏ. சி. .. .. .. | ஆரணி. |
| 149 நல்லசாமி, திரு. எஸ். .. .. .. | கரூர். |
| 150 நாகராஜன், திரு. க. .. .. .. | வடமதுரை. |
| 151 நாகலிங்கம், திரு. பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.). |
| 152 நாச்சிமுத்து, திரு. நா. .. .. .. | ஒட்டஞ்சத்திரம். |
| 153 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. .. | ஆத்தூர். |
| 154 நாச்சியப்பன், திரு. ந. .. .. .. | சங்கராபுரம். |
| 155 நாராயணசாமி, திரு. மா. வே. .. | திருவொற்றியூர். |
| 156 நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. இரா. (அமைச்சர்—பேரவை முன்னவர்). | திருவல்லிக்கேணி. |
| 157 நைனாமலை, திரு. இரா. .. .. .. | ராசிபுரம். |
| 158 பத்மநாபன், திரு. பொ. .. .. .. | திருநெல்வேலி. |
| 159 பத்மாவதி, திருமதி எ. கோ. .. .. | முகையூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 160 பரந்தாமன், திரு. ஆ. .. .. .. | கடம்பத்தூர். |
| 161 பரமசிவம், திரு. எம. .. .. .. | தாரமங்கலம். |
| 162 பலராமன், திரு. என். எஸ். .. .. | அரக்கோணம். |
| 163 பழனிசாமி, திரு. நா. .. .. .. | பொங்கலூர். |
| 164 பழனிசாமி, திரு. என். கே. .. .. | பெருந்துறை. |
| 165 பழனிசாமி, திரு. மு. .. .. .. | வெள்ளகோயில். |
| 166 பழனிச்சாமி, புலவர். சி. .. .. | பழனி (செ.வ.). |
| 167 பழனியப்பன், டாக்டர் ச. மு. .. .. | கோபிசெட்டிபாளையம். |
| 168 பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம். |
| 169 பழனிவேலன், திரு. க. .. .. .. | வரகூர். |
| 170 பழனிவேலன், திரு. மு. .. .. .. | நாமக்கல். |
| 171 பழனிவேலு, திரு. வி. .. .. .. | ஆத்தூர். |
| 172 பழனிவேல் ராஜன், திரு. .. .. | தேனி. |
| 173 பன்னீர்செல்வம், திரு. எம். .. .. | ஆம்பூர் (செ.வ.). |
| 174 பாண்டுரங்கம், திரு. சி. .. .. .. | செங்கம் (செ.வ.). |
| 175 பாலகிருட்டிணன், திரு. கு. .. .. | மன்னார்குடி. |
| 176 பாலசுந்தரம், திரு. வை. .. .. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 177 பாலையா, திரு. ஏ. .. .. .. | கொளச்சல். |
| 178 பெரியசாமி, திரு. கு. .. .. .. | கொடவாசல். |
| 179 பெரியசாமி, திரு. தி. ஒ. .. .. | அவினாசி. |
| 180 பெருமாள், திரு. செ. .. .. .. | காட்டுமன்னார்கோயில். |
| 181 பெருமாள், திரு. ஏ. ஆர். .. .. | காரியப்பட்டி. |
| 182 பொம்மன், திரு. கு. அ. .. .. | கூடலூர் (செ.வ.). |
| 183 பொன் சொக்கலிங்கம், திரு. பி. .. .. | சிதம்பரம். |
| 184 பொன்னப்ப நாடார், திரு. ஆர். .. | விளவங்கோடு. |
| 185 பொன்னுமலை, திரு. தி. .. .. | பனைமரத்துப்பட்டி. |
| 186 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். .. | சோளிங்கபுரம். |
| 187 மணலி கந்தசாமி, திரு. சி. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 188 மணியன், திரு. பி. எஸ். .. .. | சோழவந்தான். |
| 189 மதியழகன், மாண்புமிகு திரு. கே. ஏ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 190 மருதாசலம், திரு. என். .. .. | பேரூர் (செ.வ.). |
| 191 மலைக்கண்ணன், திரு. வீ. .. .. | இளையாங்குடி. |
| 192 மலைச்சாமி, திரு. பெ. .. .. | மேலூர் வடக்கு. |
| 193 மன்னியப்பன், திரு. சி. .. .. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். .. .. | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 197 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மு. .. .. .. | தலைவாசல் (செ.வ.). |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. .. | வேதாரண்யம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 200 முகமது காதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. | சங்கரி (செ.வ.). |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிரி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ.வ.). |
| 206 முத்தையா, திரு. கே. கே. | கடவூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ.வ). |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோவில். |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர். |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ.வ.). |
| 218 ராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 221 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 222 வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சீ. க. | தோட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை. (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ். திரு. ஜே. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 234 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் | உசிலம்பட்டி. |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண்ணும், பெயரும். | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன் | அமைச்சர். |
| திரு. எஸ். கோவிந்த் சுவாமிநாதன் | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டப் பேரவை

---

### செவ்வாய்க்கிழமை, 1971 ஜூலை 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணிஅளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்–விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட-வினாக்கள்.

*Teachers Association Centres in Pallipet Range*

*136 *Q.*—THIRU E. S. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware that Teachers' Association Centres have been organised language-wise recently in Pallipet Range; and

(*b*) if so, the reasons for such an organisation?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பள்ளிப்பட்டு வட்டாரத்திலுள்ள பொடத்தூர்பேட்டை ஆசிரியர் சங்கத்தில் தமிழாசிரியர்களும், தெலுங்காசிரியர்களும், உறுப்பினர்களாக உள்ளனர். தெலுங்காசிரியர்கள், தாங்கள் எளிதில் புரிந்துகொள்ள, சங்கக் குறிப்புகளைத் தெலுங்கிலும் வாசிக்க வேண்டுமென்று செயலாளரைக் கேட்டுக் கொண்டார்கள். செயலாளர் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. மேற்கொண்டு அவர்களிடையே மனக்கசப்பு ஏற்படுவதைத் தவிர்க்கவும், தெலுங்கு ஆசிரியர்களும், சங்கம் அமைத்துத் தொண்டாற்ற, வழிவகை செய்யவும் பள்ளிப்பட்டு வட்டாரத்திலுள்ள கீச்சலம் என்ற இடத்தில் தெலுங்காசிரியர்களின் தனிப்பட்ட நலனுக்காக ஒரு தனி ஆசிரியர்கள் சங்கம் ஏற்படுத்தப்பட்டது எனத் தெரிய வருகிறது.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, இதுபோன்று மொழிவாரியாகச் சங்கங்கள் அமைக்கப்படுவதால் அங்கிருக்கும் ஆசிரியர்களுக்கு மன வேதனை ஏற்படுவதோடு மொழிக் கிளர்ச்சியும் உண்டாகும் என்பதை அரசு உணருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அங்கு ஒரு பிரச்சினை எழுந்ததற்குப் பிறகு அதை எப்படித் தீர்த்து வைப்பது என்பதிலே கவனம் செலுத்தப்பட்டது. இரு மொழிக் கொள்கையை அனுமதித்திருக்கிறோம். தெலுங்கு ஆசிரியர்களும் தமிழ் ஆசிரியர்களும் அங்கே பணி புரிந்து வருகிறார்கள். இருவரும்

சேர்ந்தே பணியாற்றி வந்தார்கள். ஆசிரியர்கள் சங்க நிகழ்ச்சிக் குறிப்புகளை தமிழ், தெலுங்கு இரண்டிலும் எழுத வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். ஆனால், செயலாளர்–தமிழ் ஆசிரியர்–அதை ஏற்றுக்கொள்ளவில்லை. டெபுடி இன்ஸ்பெக்டர் தலையிட்டுப் பார்த்தார். அதுவும் நடைபெறவில்லை. பிறகு மாவட்டக் கல்வி அதிகாரி அவர்களும் சொல்லிப் பார்த்தார்கள். அவர்கள் கேட்கவில்லை. அதற்குப்பிறகு தமிழ், தெலுங்கு ஆசிரியர்களிடையே மாச்சரியம் ஏற்பட்டு விபரீத விளைவுகள் ஏற்பட்டு விடக்கூடாது என்று கருதப்பட்டு, இரு மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், அந்தந்த மொழி ஆசிரியர்கள் தங்கள் தங்கள் மொழிகளில் சங்க நிகழ்ச்சிக் குறிப்புகள் இருக்க வேண்டும் என்று எண்ணுவது நியாயம் என்ற அடிப்படையில், இரண்டையும் தனித் தனியாகப் பிரித்து வைப்பதன்மூலம் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படக்கூடும் என்று மாவட்டக் கல்வி அதிகாரி நினைத்தார். அதன் காரணத்தால் இரு மொழிக் கொள்கை அடிப்படையில், தெலுங்கு ஆசிரியர்கள் எல்லாம் ஒரு தனிச் சங்கம் வைத்துக்கொள்ளலாம் என்றும், மற்றைய தமிழ் ஆசிரியர்கள் எல்லாம் தனிச் சங்கம் வைத்துக் கொள்ளலாம் என்றும் கருதப்பட்டது. இது அரசாங்க நிர்வாகத்தைச் சேர்ந்ததாகாது. அரசாங்கமும் குறுக்கிடுவதற்கில்லை. ஆசிரியர்கள் ஆங்காங்கு சங்கங்கள் அமைத்துக்கொண்டு, கல்வித் துறையைப்பற்றியும், மற்ற வசதி வாய்ப்புகளைப் பற்றியும் கோரிக்கைகளையும் முறையீடுகளையும் வைப்பதற்காகத்தான் அத்தகைய சங்கங்களை வைத்திருக்கிறார்கள். ஆகவே, இரண்டு சங்கங்கள் தனித் தனியே வைத்துக்கொள்வதில் தவறு இல்லை என்று கருதுகிறேன். இந்த முடிவுக்குப் பிறகு அங்கு ஓரளவு மாச்சரியம் குறைந்திருப்பதாகத்தான் கருதப்படுகிறது. ஆகவேதான் இரண்டு சங்கங்கள் தனித் தனியாக இயங்க அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. இ. எஸ். தியாகராசன்: கடந்த பத்தாண்டுகளில் ஒரே சங்கமாக இயங்கிவந்ததை இப்பொழுது மொழிவாரியாகப் பிரித்ததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழியினர் சேர்ந்து பல்லாண்டுகளாக இருந்துவந்து, மொழி உணர்ச்சி ஏற்பட்ட பிறகு, தங்கள் தங்களுக்குத் தனி மாநிலம் ஏற்பட வேண்டும் என்ற கருத்துக்கள் பரவத் தொடங்கி, பிறகு மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அது வரவேற்கத்தக்க நல்ல அமைப்புகளாகும். குறிப்பிட்ட அந்தப் பகுதியில் இரு மொழி ஆசிரியர்களிடையே நல்ல சூழ்நிலை ஏற்படவில்லை என்று தெரிந்தபிறகு அதை எப்படித் தீர்ப்பது என்பதைக் கவனிக்க வேண்டும். அந்த வகையில் கேடு இல்லாத வகையில், தீங்கு ஏற்படாத வகையில், இரண்டு சங்கங்களும் நடைபெற அனுமதி அளிக்கப்பட்டது.



திரு. க. சுப்பு: இராஜபாளையம் போன்ற இடங்களில் தெலுங்கு ஆசிரியர்களுக்கு மாதம் முப்பது ரூபாய்தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுப்பதுபோல் அவர்களுக்கும் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. ஆ. பரந்தாமன்: பள்ளிப்பட்டு வட்டாரத்தில் இப்படி மொழியின் அடிப்படையில் சங்கங்கள் ஏற்பட்டதற்குக் காரணம் சில அரசியல்வாதிகள் என்று கூறப்படுகிறதே, இது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, "அரசியல்வாதிகள்" என்று கூறப்பட்டால், மாண்புமிகு உறுப்பினர் போன்ற அரசியல்வாதிகள் எல்லாம் ஒரு அமைதி நிலையை அங்கு ஏற்படுத்த முயற்சி செய்தால் நல்ல சூழ்நிலை ஏற்படும்.

திரு. எம். தேவராசன்: சில மாவட்டங்களில் சில ஆசிரியர் சங்கங்கள் இந்த அரசுக்கு எதிராக செயல்பட்டு வருவதை இந்த அரசு அறியுமா? ஆம் எனில், இதற்கான நடவடிக்கைகள் என்ன எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. இது பொதுப்படியான குற்றச்சாட்டாக இருக்கிறது. இதற்கு பொதுப்படையாக விடை அளிப்பதற்கு இல்லை. எந்த வகையில் இந்த அரசுக்கு எதிராகச் செயல்படுகிறார்கள் என்று சொன்னால், எதிராகச் செயல்படுகிறார்களா இல்லையா என்று காணமுடியும். பொதுப்படையான கேள்விக்கு விடை இருக்க இயலாது.

திரு. எம். சுரேந்திரன்: மொழிவழியாக மாநிலங்கள் பிரிந்த பின்னர் மைனாரிடியாக உள்ளவர்கள் மெஜாரிடியினராக உள்ளவர்களோடு சேர்ந்து சங்கங்களை அமைத்துக்கொண்டு செயல்படுவதுதான் சரியானது. அதல்லாமல், மைனாரிடியினருக்குத் தனியாக சங்கங்கள் இருந்தால் இரு சாராரிடையே மாச்சரியம் வளர்ந்து ஒற்றுமை நிலவுவது அரிதாகப் போய்விடும். ஆகவே, இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து செயல்படுவதற்கான முறைகளில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல இடங்களில் ஒன்றாகத்தான் இயங்குகின்றன. கோவை, நாகர்கோவில் இன்னும் வேறு பகுதிகளிலெல்லாம் ஒன்றாகச் சேர்ந்துதான் பணியாற்றி வருகின்றன. எப்படியும் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்ற வேண்டுமென்றுதான் டெபுடி இன்ஸ்பெக்டர் முயன்று பார்த்தார்.

மாவட்டக் கல்வி அதிகாரியும் முயன்று பார்த்தார். மாச்சரியம் வளரக்கூடாது என்ற முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், ஒன்றுகச் சேர்வதற்கான முயற்சிகள் எடுப்பதிலே, அந்த முயற்சி வெற்றிபெறுவதிலே ஒன்றும் தடை இல்லை. அப்படிப்பட்ட முயற்சி எடுக்கப்பட்டு வெற்றி கிடைத்தால் நல்ல சூழ்நிலை உருவாகும்.

திரு. கே. எ. வகாப் : இப்படி மொழிவாரியாகச் சங்கங்கள் அமைப்பதனுல் மாணவர்களை எந்த விதத்திலாவது பாதிக்கும் என்று அரசு உணருகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எந்த விதத்திலும் பாதிக்காது. தமிழாசிரியர் சங்கத்தினர் தமிழில் நிகழ்ச்சிகளையெல்லாம் நடத்துவார்கள். தெலுங்கு ஆசிரியர் சங்கத்தினர் தெலுங்கில் நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். இது மாணவர்களை எந்த விதத்திலும் பாதிக்காது.

*Facilities for study of Urdu language*

* 137 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the facilities offered by the Government for the study of Urdu language in this State?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இருமொழித் திட்டத்தின்படி கீழ்க்கண்டவாறு போதனை மொழித்திட்டம் செயல்பட்டு வருகிறது :

பிரிவு 1 : பிராந்திய மொழி (Regional Language) அல்லது தாய்மொழி பிராந்திய மொழியைவிட வேருென்ருக இருந்தால், தாய்மொழி.

பிரிவு 2 : ஆங்கிலம் அல்லது இந்திய மொழியல்லாத பிறமொழி : ஆகவே, இத்திட்டத்தின் கீழ் உருது தாய்மொழியாகக் கொண்ட மாணவர்கள் 1 முதல் 11-ம் வகுப்புவரை மேற்குறிப்பிட்ட முதல் பிரிவின் கீழ் உருது பயிலலாம்.

ஆரம்பப்பள்ளிகளிலும், நடுத்தரப்பள்ளிகளிலும் கூட, போதிய அளவு உருது மாணவர்கள் இருந்தால், உருது மொழி படிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

ஓரியன்டல் (கிழைநாட்டு மொழிகள்) பள்ளிகளில் உருது தீவிர முறையில் கற்றுத் தரப்படுகிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : சார், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், உருது மொழி அன்னிய மொழியாகும். உருது மொழி கற்றுத்தர ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைப் போலவே இந்தி மொழியும் கற்றுக் கொடுக்க இந்த அரசு என்ன என்ன ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது என்று தெரிவிக்க முடியுமா?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அன்னிய மொழியைக் கற்றுக்கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் உருது மொழிக்கு வகை செய்யப்படவில்லை. உருதுவைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இருக்கிருர்கள். சென்னை நகரில்கூட 13 மொழிகளுக்கு இந்த வாய்ப்பு வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கென்று இரண்டு உயர்நிலைப்பள்ளிகள் சென்னை நகரில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கு பாடங்களெல்லாம் இந்தி மொழியின் மூலமே நடைபெற வாய்ப்புகள் இருக்கின்றன. இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அதில் முழு நேரமும் எல்லாப் பாடங்களையும் இந்தியில் படிக்கிருர்கள். குஜராத்திமொழி பேசுபவர்களுக்கு அவ்விதமே வகை செய்யப்பட்டிருக்கிறது. மராத்தியமொழி பேசுபவர்களுக்கும் அவ்விதமே வகை செய்யப்பட்டிருக்கிறது. அப்படி, உருதுவைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கும் இந்த அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தியைப் பொறுத்த வரையிலும், அதைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு இந்த அனுமதி சென்னை நகரில் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவர் அவர்களே, ஒசூர் பகுதியில் தெலுங்கு மட்டுமே போதிக்கப்படுகிறது, தமிழாசிரியர்கள் கூட நியமிக்கப்படவில்லை, தமிழே போதிக்கப்படவில்லை என்று கூறுகிருர்களே அது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் அரசாங்கத்தினிடத்தில் இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, உருது பேசுகிற மக்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால் பாடசாலைகளை இன்னும் அதிகரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா? உருது படிக்கும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் போன்றவைகள் கொடுக்க அரசினிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக்கேள்வியோடு உருதுவைத் தாய்மொழியாகக் கொண்டு பத்து மாணவர்களுக்குக் குறையாமல் இருந்தால் அவர்களுக்கு அந்தத் தனி வகுப்பு நடத்த இப்போதே வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, பத்து மாணவர்களுக்கு ஒரு வகுப்பு இருக்கும். ஒரு வகுப்பில் பத்து மாணவர்களுக்குக் குறையாமலும், மொத்தத்தில் முப்பது மாணவர்களுக்குக் குறையாமலும் உருது படிக்கின்ற மாணவர்கள் இருக்கவேண்டும். அந்த அடிப்படையில் இடம் அளிக்கப்படுகிறது. இது ஆருவது முதல் எட்டாவது வகுப்பைப் பொறுத்தது. அடுத்து, 9 முதல் 11-வது வகுப்பு வரையிலுள்ளதைப் பொறுத்து ஒரு வகுப்புக்கு 15 மாணவர்கள் இருக்கவேண்டும். மொத்தத்தில் 45 மாணவர்களுக்குக் குறையாமல் 9, 10, 11-வது வகுப்புகளில் இருக்கவேண்டும். அந்த வகையில் உருதுவுக்கு இடம் அளிக்கப்படுகிறது.

கிழைநாட்டுப் பள்ளிகளில் (ஓரியண்டல் ஸ்கூல்ஸ்) என்ற வகையிலும் உருது மொழி பயிற்சிமொழியாக இருப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் உருது மொழி [illegible]

பயிற்சி அளிக்கக்கூடிய ஐந்து கீழைநாட்டுப் பள்ளிகள் இருக்கின்றன. 1969–70-ம் ஆண்டில், உருது மொழியை மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷனுகக் கொண்டுள்ள 31 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. அங்கே உருது மொழியின்மூலம் பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. 5,714 பேர்கள் பயின்று வருகின்றனர். 47 உயர்நிலைப்பள்ளிகளில் உருது மொழி பாடமாகச் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. அதன் மூலம் 2,986 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். 341 துவக்கப் பள்ளிகளில் உருது பாடமொழியாக வைக்கப்பட்டு, 40,539 பேர்கள் பயிலுகின்றனர். உருதுவைத் தாய்மொழியாகக்கொண்ட, இப்படிப் பட்ட பள்ளிகளை நிறுவ, குறிப்பிட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் முன்வருவார்களானல் அதற்கான வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, மலையாள மொழி பயில்கின்றவர்களுக்கென ஒரு தனிப் பள்ளிக்கூடம் குழித்துறையிலே இருந்தது. அந்தப் பள்ளிக்கூடத்தை சமீபத்திலே மூடுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது, இனியாவது அப்படிப்பட்ட நடவடிக்கைகளை கைவிட்டு தொடர்ந்து அந்தப் பள்ளி நடப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அங்கே போதுமான மாணவர்கள் வரவில்லை என்ற காரணத்தினுல் அப்படிப்பட்ட எண்ணம் இருக்கிறது. இப்பொழுதும் போதுமான அளவுக்கு மாணவர்கள் வருகின்ற சூழ்நிலை இருக்குமானல் அந்தப் பள்ளியை மூடவேண்டாம் என்றுதான் கல்வித் துறை இயக்குநருக்குக் கூறப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: சார், உருது மொழி, நம் மாநிலத்தில் உள்ள மற்ற மைனரிட்டி மொழிகள் இவற்றிற்குப் பள்ளிகள் எவ்வளவு இருக்கின்றன? அவ்வாறு எந்த எந்த மொழிகள் பயிற்றுவிக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி தொடர்புடையது இல்லையென்றாலும் நான் முதலிலேயே கூறியபடி எவ்வளவு பள்ளிகள் என்ற தகவல் இல்லை, கிட்டத்தட்ட 13 மொழிகளுக்கு அப்படிப்பட்ட வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, உருது மொழி இன்னும் மற்றைய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் படிப்பதற்காகப் பல்வேறு வசதிகளை நம்முடைய அரசு செய்து தந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினர்கள். தாய்மொழியாக இருக்கும் தமிழ்மொழியைப் பயிற்சிமொழியாக்கக்கூடாது என்று தமிழ்நாட்டிலே எதிர்ப்புத் தெரிவித்தது தெரியுமா?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட தனிக் குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் சார்பில் வரவில்லை. பலர் பல இடங்களில் பலவிதமாகப் பேசலாம். அதற்கெல்லாம் அரசாங்கத் தின் சார்பில் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, தமிழ் ஆசிரியர் வகுப்பில் நான்காண்டு காலம் படித்த பிறகுதான் புலவர் பட்டம் பெறுகிறார்கள். இதில் முதல் நிலை என்றும் இரண்டாம் நிலை என்றும் பிரிவுகள் இருக்கின்றன. இந்த வேறுபாட்டை அரசு நீக்குமா? பள்ளி இறுதி வகுப்புவரை படிக்காத புலவர் பட்டம் பெற்றவர்களுக்கு ஒரு கால கட்டத்தை நிர்ணயித்து முதல்நிலை என்ற நிலைமையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இது மூலக்கேள்வியோடு தொடர்பில்லாதது. தனிக் கேள்வி போட்டால் பதில் கூறலாம்.

திரு. சோ. கருணைநாதன்: நீலகிரி மாவட்டம் கூனூர் பகுதியிலிருந்து உருதுமொழி பள்ளிக்கூடம் வேண்டுமென்ற விண்ணப்பம் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு இந்த அரசு இரண்டு பள்ளிகளுக்கு வசதி செய்து தந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபோன்று மத்திய அரசுப் பள்ளிகள் இங்கே நடத்தப்படுகின்றனவே அந்தப் பள்ளிகளில் சில பள்ளிகளிலாவது தமிழைப் பாடமொழியாகச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மத்திய அரசுப் பள்ளிகள் 9 பள்ளிகள் இங்கே நடந்துவருகின்றன. அங்கே ஆங்கிலம் அல்லது இந்தி இரண்டு வகையிலும் பயிற்சிமொழியாகச் சொல்லிக்கொடுக்கிறார்கள். பெரும்பாலும் ஆங்கிலம்தான் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. அண்மையிலே இந்தியிலே மாற்ற வேண்டுமென்று முயற்சி செய்தார்கள். அது கூடாது என்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு இந்த அரசு எழுதியதிற்குப் பிறகு ஆங்கிலத்திலே அவற்றையும் சொல்லிக்கொடுக்கிறார்கள்.

தமிழையும் முழுப்பாடமாகச் சொல்லிக்கொடுக்க முயற்சிகள் நடக்கின்றன.

திரு. எ. சுவாமிநாதன்: இந்த அரசு ஜனநாயக அரசு. மாணவர்களிலே பெரும்பாலோர் இந்தி படிக்கவேண்டுமென்று கேட்டால் அரசு வசதி செய்து கொடுக்குமா?

[1971 ஜூலை 6

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அகில இந்திய அளவிலே வேலைவாய்ப்பைப் பெறவேண்டுமென்று நினைக்கின்றவர்கள் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்ற நிலையில் தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் அவர்களாக விரும்பிக் கேட்பார்களானால் அவர்களுக்கு அப்படிப்பட்ட வசதி தரப்படுகிறது. மற்ற மொழிகளைத் தாய்மொழியாகக்கொண்ட சிறுபான்மையோருக்கு என்ன என்ன வசதிகள் செய்து தரப்படுகின்றனவோ அந்த வசதிகள் செய்து தரப்படும். அந்த அடிப்படையிலேதான் இந்திப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. எஸ். முருகையன்: தலைவர் அவர்களே, சில நகரசபை துவக்கப் பள்ளிகளில் 7 அல்லது 8 மாணவர்களாக இருந்தாலும் கூட அவர்களுக்கு என்று தனியாக உருது ஆசிரியர்களை நியமித்து இருக்கிறார்கள். ஒரு வீதிக்கு அடுத்த வீதியிலே பள்ளி இருந்தாலும் கூட தனியாக 8 மாணவர்களுக்காக ஆசிரியர்களை நியமித்துப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இப்படியில்லாமல் எல்லா மாணவர்களையும் ஒன்றாக ஆக்கி ஒரே ஆசிரியர் மூலம் பாடம் கற்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 10 மாணவர்களாக இருந்தால்தான் ஒரு ஆசிரியர் நியமிக்கவேண்டுமென்ற விதி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று நிலைமை இருக்குமானால் அதைத் தனியாகக் கவனிக்கலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி: 13 மொழிகளைப் பொறுத்தவரையில் எல்லாவற்றிற்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு சலுகைகள் தரப்பட்டு வசதிகள் செய்துதரப்படுகின்றன. அண்டை மாநிலங்களான கேரளம், ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் அங்கிருக்கின்ற தமிழர்களுக்குத் தனியாகத் தமிழ்மொழி பயில்வதற்கு ஆவன செய்யப்படுகின்றதா? இல்லையெனில் தமிழக அரசு இதில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அண்டை மாநிலங்களான கேரளம், மைசூர், ஆந்திரம் போன்றவற்றில் சிறுபான்மையோர் தமிழர்களாக இருந்தால் அந்தப் பகுதிகளிலே தமிழைப் பாடமொழியாக எடுத்துப் பயில்வதற்கும் ஏற்பாடுகள் இருக்கின்றன. அதற்காக அந்த அரசாங்கங்களை அவர்கள் அணுகுகிறார்கள். நம்மிடத்திலே சில குறிப்புகள் ஸோனல் கான்பெரன்ஸ் நடைபெற்ற பொழுது வைக்கப்பட்டன. தமிழக அரசு பிற சிறுபான்மையோர்களை எவ்வாறு கருதி வசதிகள் செய்து தருகின்றதோ அதைப் போன்றே அண்டை மாநிலங்களும் நடந்துவருகின்றன. இதைத் தவிர டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களிலும் தமிழர்கள் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன.

திரு. கே. எ. வகாப்: ஒப்புக்கொள்ளப்பட்ட 13 மொழிகளிலே அராபி மொழி ஒன்றாக இருக்கிறதா? இல்லையென்றால் அதைப் படிப்பவர்கள் அதிகமாக இருப்பதால் அதையும் சேர்க்க அரசு முன்வருமா?



1971 ஜூலை 6]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இது மூலக்கேள்வி பற்றிய கேள்வி இல்லை எனவே தனிக் கேள்வி போட்டால் விடை கூறலாம்.

திரு. கு. காமாட்சி: வெளிநாடுகளிலிருந்து வருகின்றவர்கள் பிரெஞ்சு மொழி போன்றவற்றைப் பயில்வதற்கு தனியார் கல்லூரிகளில் வசதிகள் செய்துதரப்படுகின்றன. அதேபோன்று அரசினர் கல்லூரிகளிலும் வசதி செய்துகொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மேலை நாடுகளில் இருந்து வருகின்றவர்கள் ஆங்கிலம் அல்லாத அன்னிய மொழி பயிலலாம் என்று இருக்கிறது. அப்படி மாணவர்கள் இருப்பார்களானால் அதுபற்றிக் கவனிக்கலாம்.

### *Arts College at Ponneri*

*138 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have changed the medium of instruction in the Loganathan Narayanaswamy Government Arts College, Ponneri from English to Tamil; and

(*b*) whether the Government propose to have at least one section in English for the benefit of the Telugu speaking people and such of those who desire to join in the English medium?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இதற்கான வசதி செய்யப்படும்.

Dr. H. V. HANDE: May I know from the Hon. Minister whether any representations were received by him for the retention of English as the medium of instruction, especially because it is a border area where a number of minority people are there? If so, what are the steps taken by this Government to see that facilities are given to them and their rights are also protected?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுதே ஆங்கிலத்திலே ஒரு பிரிவும் தமிழிலே ஒரு பிரிவும் இருக்கிறது அந்தக் கல்லூரியில். குறிப்பிட்ட இரண்டு பிரிவுகளில் ஆங்கிலம் பூராவும் இருக்கிறது, தமிழ் பூராவும் இல்லாமல் இருக்கிறது. அதை மாற்றவேண்டுமென்று கல்வித்துறை இயக்குநர் வேண்டிய முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: This question I originally put in 1968 when the grievance was brought to my attention. For the last two years, may I know whether the attention of the Government has been drawn to this particular problem? Also the Minister said that the matter is under consideration. May I know whether

instructions have been issued and whether English medium is introduced in all sections and whether it is going to take effect from this current year?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே மேதமேடிக்ஸ் குரூப்பிலே ஆங்கிலப் பிரிவும் தமிழ்ப் பிரிவும் இருக்கிறது. சயன்ஸிலே ஆங்கிலத்திலே இல்லாமல் தமிழில் இருக்கிறது. மேதமேடிக்ஸில் இரண்டு மொழிப் பிரிவுகளும் இருக்கின்றன. பி.ஏ.விலே ஆங்கிலத்திலே இருக்கிறது, தமிழில் இல்லை. பி.எஸ்ஸி. கெமிஸ்ட்ரியிலே இரண்டு பிரிவுகளும் இருக்கின்றன, பிஸிக்ஸிலே இரண்டு மொழிப் பிரிவுகளும் இருக்கின்றன, மேதமேடிக்ஸிலும் இரண்டு மொழிப் பிரிவுகளும் இருக்கின்றன. சயன்ஸ் குரூப்பிலே ஆங்கிலம் இல்லாமல் இருப்பதால் அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

*Registry office for Anandapuram*

* 139 Q.—Thiru R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Labour be pleased to state whether there is any proposal under the consideration of the Government to open a Registry Office at Anandapuram in Gingee taluk?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அனந்தபுரத்தில் ஒரு துணை பத்திரப் பதிவு அலுவலகம் ஒன்று திறப்பதைப் பற்றி அரசு பரிசீலித்தது. அனந்தபுரத்தில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் திறப்பதினால் அண்மையில் உள்ள செஞ்சி, அன்னியூர் ஆகிய ஊர்களில் இருக்கும் துணைப்பத்திரப் பதிவு அலுவலகங்களுக்கும் போதிய வேலை இருக்காது என்று கருதப்படுகிறது. எனவே, அனந்தபுரத்தில் ஒரு துணைப்பத்திரப் பதிவு அலுவலகம் துவக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் இப்போதைக்கு நிறைவேற்றுவதற்கு இல்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, 1944-ம் ஆண்டு முதற்கொண்டே அனந்தபுரத்தில் ஒரு பத்திரப்பதிவு அலுவலகம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அங்கே உள்ள மக்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இப்போதும் அப்படித் திறக்க இயலாது என்று சொல்லி விட்டால், அங்கே இருக்கும் மக்கள் செஞ்சிக்குத் தான் வரவேண்டும். கிட்டத்தட்ட 35 மைல் ஆகிறது. அதைத் தடுக்கும் வகையில் அனந்தபுரத்தில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் திறக்க முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, ஒரு துணைப்பத்திரப் பதிவு அலுவலகம் திறக்க வேண்டுமானால் குறிப்பிட்ட அளவு பத்திரப் பதிவு நடக்க வேண்டுமென்று இருக்கிறது. அங்கே அனந்தபுரத்தில் இருப்பவர்கள் சிரமப்படுவதாக உறுப்பினர் சொன்னார்கள். 3-வது மைலிலுள்ள அன்னியூரில் ஒரு துணைப்பத்திரப் பதிவு அலுவலகம் இருப்பதால், அனந்தபுரத்தில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் துவக்கும் நிலை ஏற்படும் வரையில் அனந்தபுரம் மக்கள் அன்னியூர் சென்று வரலாம்.



நெல் கொள்முதல் விலை

* 140 வினா.—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில், 1969–70, 1970–71 ஆகிய ஆண்டுகளில் நெல் கொள்முதல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

The Hon. Thiru P. U. SHANMUGAM: (a) Yes.

(b) The procurement prices fixed for fine, medium and coarse varieties of paddy during the years 1968–69, 1969–70 and 1970–71 are furnished below:—

| | 1968–69 *per quintal.* | 1969–70 *per quintal.* | 1970–71 *per quintal.* | |
|---|---|---|---|---|
| | RS. | RS. | RS. | |
| Fine .. | 48·00 | 50·00 | 51·00 | plus Re. 1.00 per quintal for high yielding varieties. |
| Medium .. | 45·00 | 47·00 | 48 00 | Do. |
| Coarse .. | 43·00 | 45·00 | 46·00 | Do. |

திரு. எ. சுவாமிதாஸ்: சார், இந்த விலை நிர்ணயம் என்பது பொருளின் தரத்தை வைத்து நிர்ணயிக்கப்படுகிறதா அல்லது அது உற்பத்தி செய்ய ஆகும் செலவை வைத்து நிர்ணயிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சன்முகம்: தலைவரவர்களே, நெல்லின் தரத்தை வைத்துத்தான் விலையை நிர்ணயித்து இருக்கிறோம். அமோக விளைச்சல் தரும் ஐ.ஆர். 8 போன்றவற்றை "பைன்" வெரைட்டியில் சேர்த்து வைத்து இருக்கிறோம். அதற்குக் காரணம் மக்கள் அதைப் பயிரிடுவதற்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்பதற்காக சேர்க்கப்பட்டு இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது இப்போது விலைகள் எல்லாம் ரூ. 50, 51, 47, 48 என்ற அளவில் இருக்கிறது என்று சொன்னது, விலைகள் உயர்ந்து கொண்டு இருப்பதைத்தான் காட்டுகிறது. அந்த அளவைக் குறைப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சன்முகம்: தலைவரவர்களே, நல்ல யோசனை சொல்லி இருக்கிறார்கள். இந்த விலையில் அரசாங்கம் கொள்முதல் செய்கிறது. இந்த விலை உயர்வு கூட போதவில்லை என்று விவசாயிகள் குறைபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இப்படி இருக்கும்போது, விலை குறைக்க வேண்டுமென்று சொன்னது நல்ல யோசனைதான். ஏற்றுக்கொள்கிறேன்.

[1971 ஜூலை 6

<u>திரு. சி. கணேசன்:</u> தலைவரவர்களே, 1971–72-ல் கொள்முதல் விலை இப்படியே இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் உறுதியளிப்பாரா?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:</u> இப்போது ஒன்றும் விலையை மாற்றுவதற்கு உத்தேசம் இல்லை.

Dr. H. V. HANDE: While it is a welcome measure that the procurement rate has been increased, and the amount given to the farmers is increased, may I know, in view of the fact that the expenditure involved for raising the produce has also proportionately increased, will this Government give subsidised fertilisers so that it will be possible for farmers to do farming in a cheap manner?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:</u> தலைவரவர்களே, சென்ற ஆண்டு சப்சிடி செய்து ஃபெர்டிலைசர் கொடுத்தது போல், இந்த ஆண்டும் தொடர்ந்து கொடுப்பதற்கு அரசு முடிவு எடுத்து இருக்கிறது.

<u>திரு. எம். சுரேந்திரன்:</u> சார், கொள்முதல் விலையை உயர்த்துவது போல், தாழ்த்துவதற்கும் அரசு முன் வருமா? அதேபோல் அந்த விலையை நிர்ணயிக்கிறபோது உரத்தின் விலை, மற்றுமுள்ளவைகள் இவற்றை விஞ்ஞான ரீதியில் ஆராயப்பட்டு நிர்ணயிக்கப்படுகிறதா அல்லது எந்த விதத்தில் நிர்ணயிக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:</u> எல்லாவற்றையும் கருத்தில் கொண்டுதான் விலை மாற்றம் செய்கிறோம். ஆனால் விலை மாற்றம் செய்வது நம்மிடம் மட்டுமல்ல. மத்திய அரசாங்கத்திடமிருந்து ஒப்புதல் பெற்றுத்தான் விலையை உயர்த்துவதோ, குறைப்பதோ செய்ய முடியும்.

<u>திரு. நா. வீராசாமி:</u> தலைவரவர்களே, இந்த விலை மாற்றத்தின் விளைவாக ஆண்டு ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது? இப்படி விலைகளைக் கூட்டித் தந்தாலும் விவசாயிகளுக்கு போதவில்லை என்று கருதுகிறார்கள். இதற்குக் காரணம் உரம் போன்றவற்றின் விலை ஏறி இருப்பதால்தான். அந்த உரத்தின் விலையைக் குறைப்பதற்கு மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் வற்புறுத்துமா?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:</u> நஷ்டம் எவ்வளவு என்று கேட்டார்கள். அது பற்றிய புள்ளிவிவரம் இல்லை. எதிர்க்கட்சித் தலைவரவர்கள் விவசாயிகளுக்கு அதிக விலை கொடுக்க வேண்டாம் என்று சொல்கிறார். ஆனால் நண்பர் வீராசாமி விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள், அதிக விலை கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். விலை ஏற்றுவதைப் பற்றி இப்போதைக்கு உத்தேசம் இல்லை. உரத்தைப் பற்றி கேட்டார்கள். தனியாக விவசாய அமைச்சருக்கு கேள்வி போட்டால் பதில் சொல்வார்கள்.



1971 ஜூலை 6]

<u>திரு. எஸ். முருகையன்:</u> தலைவரவர்களே, அரசாங்கம் நிர்ணயித்து இருக்கும் விலைக்கு விவசாயிகள் எத்தனை சதவிகிதம் செஸ் கொடுக்கிறார்கள். மொத்தம் உற்பத்தி செய்யும் நெல்லில் எத்தனை சதவிகிதம் அரசாங்கத்திற்கு தரவேண்டுமென்று ஏதேனும் உத்தரவிடப்பட்டிருக்கிறதா?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:</u> அது அரசாங்கம் தந்து இருக்கும் உத்தரவாத விலையாகும். அந்த விலைக்குக் கீழே யாருக்கும் நெல் தர வேண்டாம் என்று உத்தரவாத விலையை நிர்ணயித்து இருக்கிறோம். விவசாயிகள் இவ்வளவு சதவிகிதம் கொடுக்கவேண்டுமென்று நிர்ணயிக்கவில்லை. பிரியப்பட்டால் கொடுக்கலாம். விவசாயிகளுக்கும் அரசாங்கம் இவ்வளவு நெல் கொடுக்கவேண்டுமென்று எந்த உத்தரவும் போடவில்லை.

Thiru K. M. SUBRAMANIAN: Out of the increased price now going to be given in respect of procurement, what is the proportion that would be passed on to the agricultural labour? "Vivasaya" may mean producer, lessee or landlord. Out of the increased price, what is the proportion for agricultural labour?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:</u> தலைவரவர்களே, இதிலே உழவர்களுக்கு எவ்வளவு போகிறது என்று கேட்கிறார்கள். இது நெல் விலையைப் பொறுத்தது. உழவர்களுக்கு எவ்வளவு கூலி கொடுக்கவேண்டுமென்பதற்கு தனியாக சட்டம் வைத்து இருக்கிறோம். நெல் யார் கொடுத்தாலும் இந்த விலைக்கு அரசாங்கம் வாங்கிக்கொள்ளும் என்று உத்தரவாதம் தந்து இருக்கிறோம்.

<u>திரு. ஆ. கு. சுப்பையா:</u> தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மூட்டை ஒன்று ரூ. 40 விற்கிறது. விவசாயத் தொழிலாளிகள் அந்த விலைக்கு வாங்கி உபயோகிக்க முடியவில்லை. ஆகவே குறைந்த விலையில் விவசாயத் தொழிலாளிகளுக்கு அரிசி கொடுப்பதற்கு அரசாங்கம் நியாய விலைக் கடைகள் திறக்குமா?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:</u> மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும், தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்ல, வேறு சில மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அரசாங்கம் அதை உன்னிப்பாக கவனித்து வருகிறது. தக்க தருணத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>திரு. கு. காமாட்சி:</u> தலைவரவர்களே, 5 ஏக்கருக்குள் இருக்கும் விவசாயிகளிடமிருந்து இந்த நிர்ணயித்த விலையில் கொள்முதல் செய்துவிட்டு, அதற்கு மேல் உள்ள மிராசுதாரர்களிடமிருந்து கனம் எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதைப் பரிசீலிக்கலாமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:</u> இது ஒரு யோசனைதான்.

<u>திரு. கே. எ. வகாப்:</u> தலைவர் அவர்களே, உழுபவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சுவது இல்லை என்ற நிலைமையில் விவசாயிகளது நிலைமை இருக்கிறது. இந்தக் கொள்முதல் விலையை

அரசாங்கம் நிர்ணயித்தாலும் இந்த விலைக்கு வாங்க தனி வியாபாரிகள் முன்வருவதில்லை. எல்லா விவசாயிகளிடம் இருந்தும் நிர்ணயித்த விலைக்கு வாங்க அரசாங்கமே ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசாங்கம் எப்போதும் எந்த இடத்தும், இந்த நிர்ணயித்த விலைக்கு யாரிடம் இருந்தும் நெல் வாங்கிக்கொள்வதற்குத் தயாராய் இருக்கிறார்கள் என்கிற உத்தர வாதத்தை இந்த மாமன்றத்தின் மூலம் இந்தச் சந்தர்ப்பத்திலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, அரசாங்கம் மூட்டைக்கு 50 ரூபாய் என்று விலை நிர்ணயித்தால் மூட்டை 52, 53 என்று கொடுத்து தனியார் கொள்முதல் செய்யத் தயாராய் இருக்கிறார்கள். ஆனால் எடையில் ஏமாற்றிவிடுவது விவசாயிகளுக்குத் தெரிவதில்லை. ஆகவே உடனடியாகத் தமிழகம் பூராவிலும் விவசாயிகளிடம் இருந்து அரசாங்கமே நேரிடையாகக் கொள்முதல் செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசாங்கமே கொள்முதல் செய்யும் என்கிற உத்தரவாதத்தில்தான் விலை தரப்பட்டிருக்கிறது. தனியார்களிடம் விவசாயிகள் ஏமாந்துபோகாதிருக்க ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு எடுத்துச்சென்று கொடுக்கலாம். விவசாயிகள் தனியார்களிடம் ஏமாந்துபோகாதிருக்க கனம் உறுப்பினரைப் போன்றவர்கள் அவர்களுக்கு யோசனை சொல்லலாம்.

*Transfer of Village Officers*

* 141 *Q.*—THIRU P. S. MANIYAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether there is any proposal under the consideration of the Government to effect district-level transfer of Village Officers?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாவட்ட அளவில் கிராம அதிகாரிகளை மாறுதல் செய்வதற்கு ஏற்கனவே விதிகள் இருப்பதால் இது விஷயமாக செயற்குறிப்பு அரசிடம் பரிசீலனையில் இல்லை.

திரு. பி. எஸ். மணியன்: கிராமாதிகாரிகள் பரம்பரை பரம்பரையாக ஒரே ஊரில் இருக்கிற காரணத்தினால் ஊர்களில் பல விவகாரங்கள் அவர்களால் தூண்டப்பட்டுவிடுகின்றன என்ற குறை பரவலாக இருக்கிற காரணத்தினால் அவர்களைப் பரீட்சார்த்த மாகவாவது தாலுக்கா அளவில் மாற்ற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 16—12—1970-க்குப் பிறகு நியமிக்கப்பட்ட கிராம அதிகாரிகளை மாவட்டத்திற்குள் எங்கு



வேண்டுமானாலும் மாற்றலாம். அதற்கு முன்பு வேலையில் சேர்ந்துள்ளவர்களை மாற்றுவதற்கு முடியாது. அதுதான் இப்போதிருக்கிற விதி.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, கிராம உத்தியோகஸ்தர்களை முழு நேர அரசாங்க ஊழியர்களாக ஏற்றுக் கொள்ள அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்போதைக்கு இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: பல கிராம உத்தியோகஸ்தர்கள் வீணாக அரசியலில் தலையிட்டும், லஞ்ச ஊழலுக்கு இலக்காகி இருப்பதால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அவர்களை வேறு இடத்திற்கு மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவர்கள் மீது குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டாம். வேலையைவிட்டே நீக்கிவிடலாம்.

திரு. எஸ். ஆறுமுகம்: அமைச்சர் அவர்கள் 1970-க்குப் பிறகு நியமிக்கப்பட்ட கிராம அதிகாரிகளை மாவட்டங்களுக்குள் மாற்றலாம் என்று சொன்னார்கள். இப்போது நியமிக்கப்படுகிறவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. இருக்கவேண்டுமென்ற விதி இருக்கிறது. ஆனால் முன்பு மூன்றாவது, நான்காவது படித்தவர்களைக் கூட நியமித்திருக்கிறார்கள். நமக்கு சுதந்திரம் வந்தும் கிராம மக்களுக்குச் சுதந்திரம் இல்லாத நிலையில் பலயிடங்களில் இந்த கிராம அதிகாரிகள் சிக்கல் விளைவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே முன்பு இருப்பவர்களையும் மாற்ற அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: குறிப்பிட்ட கிராம அதிகாரிகளின் மீது புகார் இருந்தால் அதை எழுதி அனுப்பினால் விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் இருப்பதனால் மாற்ற முடியாது. அந்த விதியே போதும் என்று அரசும் கருதுகிறது.

திரு. நா. வீராசாமி: பழைய காலத்தில் நியமிக்கப்பட்ட கிராம அதிகாரிகள் குறிப்பிட்ட கல்வித் தகுதி இல்லாமல் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். கரும்பு என்பதற்கு கரம்பு என்று எழுதுகிறார்கள். இப்படிப்பட்ட பல தவறுகளை கிராம அதிகாரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ரிடையர்மென்ட் ஏஜும் நிர்ணயிக்காமல் 68, 70 வயது வரை வேலையில் இருக்கிறார்கள். இதை எல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து குறிப்பிட்ட தகுதிக்குள், குறிப்பிட்ட வயதிற்குள் அவர்களையும் கொண்டுவர அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கெனவே குறிப்பிட்டபடி உத்தியோகத்தில் இருக்கிறவர்கள் விஷயத்திலும் பரம்பரை முறையை எடுத்துவிட்டோம். கரும்பு என்பதற்கு கரம்பு என்று எழுதிய கிராம அதிகாரி யார் என்று குறிப்பிட்டு எழுதினால் அவர் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கும்.

திரு. எம். முத்தையா : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் கிராம அதிகாரிகளாக எத்தனை பெண்கள் பணியாற்றி வருகிறார்கள். கிராம அதிகாரிகள் டெஸ்ட் எழுதினால் அவர்களை நியமிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கிராம அதிகாரிகள் டெஸ்ட் பெண்கள் எழுதக்கூடாது என்று எதுவும் இல்லை. ஆனால் தற்போது எவ்வளவு பெண்கள் கிராம அதிகாரிகளாகப் பணியாற்றி வருகிறார்கள் என்கிற புள்ளிவிவரம் இல்லை.

திரு. துரைமுருகன் : சமீபத்தில் நியமிக்கப்பட்ட கிராம அதிகாரிகளை மாவட்டத்திற்குள் மாற்றலாம் என்று சொன்னார்கள். இந்த கிராம அதிகாரிகள்தான் சர்க்காருக்குத் தேவைப்படுகிற அடிப்படை புள்ளி விவரங்களை எல்லாம் சேகரித்துத் தருகிறவர்கள். அந்த அந்த ஊரில் இருக்கிற அடங்கல், மலை, மரம், குளம், குட்டை, பயிர் பச்சை எல்லாவற்றையும் தரவேண்டியிருப்பதால் அவர்களை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுவதனால் பலவிதமான இடையூறுகள் ஏற்படும் என்பதை அரசு உணருகிறதா? அப்படி மாற்றாதிருக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எத்தகைய இடையூறும் ஏற்படாது என்று அரசாங்கம் கருதுகிறது. போகிற இடத்தில் அங்குள்ள அதிகாரிகள் அந்த விவரங்களை இவர்களுக்கு அளிப்பார்கள்.

திரு. ஆ. பரந்தாமன் : சில கிராமங்களில் டிரய்ன் ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருப்பதனால் தனித்தனி அதிகாரிகளை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது ஒரு ஆலோசனை. ஆலோசிக்கப்படும்.

திரு. என். கணபதி : தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள் உயர்ந்த அந்தஸ்து பெற்றிருக்கிற காரணத்தினால் அவர்களுக்கு ஏற்கனவே இருக்கிற நிலையோடு அரசியலில் பங்குகொள்கிற சலுகை இப்போது தரப்படுகிறது. அது நிறுத்தப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.





திரு. அ. ஆறுமுகம் : கிராம அதிகாரிகள் தற்சமயம் பஞ்சாயத்துகளுடைய வரி வசூலையும் செய்கிறார்கள். மற்ற வேலைகளோடு இதைச் செய்வதனால் நெருக்கடி ஏற்படுகிறது. ஆகவே, இதை இவர்களிடம் இருந்து எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஊராட்சி மன்றங்களுக்கு நேரிடையாக வரி வசூல் செய்கிற அலுவலையும் இவர்களேதான் கவனிக்கவேண்டும் என்பது முடிவு செய்யப்பட்டுவிட்டது.

திரு. எம். சுரேந்திரன் : கிராம அதிகாரிகள் பரம்பரையாக வந்துகொண்டிருப்பதால் அவர்களுக்கு மிகுந்த கெட்ட பெயர் இருந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக ஒரு கதைகூடச் சொல்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கதை வேண்டாம். கேள்வி போடுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : அந்தக் கெட்ட பெயரை அகற்ற தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கிராம அதிகாரிகளுக்கு பரம்பரை பாத்யதை இப்போது கிடையாது. எந்த கிராம அதிகாரி தவறாக நடந்துகொண்டாலும் குறிப்பிட்டு எழுதினால் அரசாங்கம் நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. ரா. முனுசாமி : கிராம அதிகாரிகள் குறிப்பாக கர்ணம் போன்றவர்கள் எல்லாம் விவசாயிகளுக்கு சர்வே நம்பர், பட்டா நம்பர் கொடுப்பதற்குக்கூட பணம் கொடுத்தால்தான் கொடுப்பதாக பல இடையூறுகளைக் கொடுக்கும் துர்பாக்கியமான நிலைமை தொன்று தொட்டு வந்துகொண்டிருக்கிறது. அவர்களை முழுநேர ஊழியர்களாக ஆக்கிவிட்டால் லஞ்சம் வாங்க இயலாது என்பது அரசுக்குத் தெரியும். அவர்களை முழுநேர ஊழியர்களாக ஆக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பொதுவான குற்றச் சாட்டுகளை ஒத்துக் கொள்ளத் தயாராயில்லை. குறிப்பிட்டு யார் மீது குற்றச்சாட்டு எழுதி அனுப்பினாலும் கவனிக்கலாம்.

திரு. ஏ. கே. துரைசாமி : கிராமங்களில் இருக்கும் ஏரிகளில் தண்ணீர் தேக்க முடியாமல் மணியக்காரரர், கிராம உத்தியோகஸ்தர் போன்றவர்கள் தனியாருக்கு அதிலே பயிரிட அனுமதித்து விடுகிறார்கள். இதனால் ஏரி, கால்வாய்கள் சரியாகப் பராமரிக்கப்பட முடியாத நிலையில் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டு விடுகிறது. அப்படிப்பட்ட ஆக்கிரமிப்பை அகற்ற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதுவும் பொதுவான குற்றச்சாட்டு. குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட கிராம உத்தியோகஸ்தர் இப்படி நடந்து கொண்டார் என்று எழுதி அனுப்பினால் அரசு பரிசிலிக்கும்.

<u>திரு. எஸ். முருகையன்</u> : கிராம அதிகாரிகளுக்கு நீண்ட நெடும் நாளைக்கு முன்பே அதிகார வரம்பு எல்லை நிர்ணயிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்தப் பகுதியில் தண்ணீர் வசதி, நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுத்த பிறகு ஒரு லட்சம் ஒன்றரை லட்சம் ரூபாய் அளவுக்கு கிஸ்தி பணம் வசூலிக்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த அதிகார வரம்பு எல்லைகளைக் குறைத்து நிர்ணயிக்க அரசு முன்வருமா ?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u> : தற்சமயம் அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

THIRU K. M. SUBRAMANIAN : In view of the increasing responsibilities in villages and increased work for village officials, is there any proposal to bifurcate villages as we have bifurcated districts?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u> : இந்தக் கேள்விகளுக்குத் தான் முன்பே அப்படி ஒன்றும் யோசனை இல்லை என்று சொன்னேன்.

<u>திரு. ஏ. எம். இராஜா</u> : கணக்குப் பிள்ளை, மணியக்காரர்கள் சிட்டா அடங்கல் நகலை தாலூக்கா அலுவலகத்திற்குக் கொடுக்கிறார்கள். அதே போன்று பிளாக்குகளுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் நகலைக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u> : சிட்டா அடங்கல், சர்வே ஆகியவற்றை பிளாக்குகளிலும் வைக்கலாம் என்று அதிகாரிகளிடத்தில் கலந்து பேசினேன். அப்படி வைப்பதானால் அங்கு ஒரு சர்வேயர் தேவைப்படும் என்ற நிலை இருப்பதால் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

<u>திரு. தி. பொன்னுமலை</u> : கிராம அதிகாரிகள் சர்க்கார் கடன்களை வசூல் செய்தால் ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் கட்டாது ஆறு மாதம், ஒரு வருடம் கழித்துக் கூடக் கட்டுகிறார்கள். அடுத்த ஆண்டு பாக்கியைக் கட்டவில்லை என்று புகார் வருகிறது, அந்த கிராம அதிகாரிகள் மறுபடியும் அதை வசூல் செய்கிறார்கள். அவர்கள் பணம் வசூலித்ததை மூன்று மாதத்திற்கு ஒரு முறை கட்ட வேண்டுமென்று செய்வதோடு பஞ்சாயத்து கணக்குகளை எல்லாம் ஆடிட் செய்வது போல் கிராம அதிகாரிகள் கணக்குப் புத்தகத்தையும் ஆடிட் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u> : இதுவும் பொதுவான குற்றச்சாட்டு. குறிப்பிட்ட கிராமத்தில் அப்படி நடக்கிறது. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம். ஆடிட் முறையை அமலாக்குவது பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே ஜமாபந்தி முறையை ஒழிக்க வேண்டுமென்று முடிவெடுத்த பிறகு ஆடிட் முறையை ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு தாலூக்காவை எடுத்து புகுத்தியிருக்கிறோம். அதன் நடைமுறை பற்றி அறிக்கைகள் வந்த பிறகு அரசு மேற்கொண்டு பரிசீலிக்கும்.





<u>மாண்புமிகு திரு. மு. கருணாநிதி</u> : சட்டமன்றத்தில் கிராம அதிகாரிகளைப் பற்றிக் கேள்விகள் கேட்கின்ற நேரத்தில் கிராம அதிகாரிகள் எல்லோருமே குற்றவாளிகள் என்ற முறையில் கேள்விகள் கேட்பது நல்லதல்ல. யாராவது தவறு செய்தால் இன்ன கிராம அதிகாரி என்ற அளவில் கேள்வி கேட்பதுதான் முறை. பொதுவாக எல்லாக் கிராமதிகாரிகளையும் புண்படுத்தும் முறையில், கிராமதிகாரிகளாக இருப்பதே பெரிய குற்றம் என்ற அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்காமல் இருப்பது நல்லது.

<u>திரு. என். கணபதி</u> : சில இடங்களில் கிராமதிகாரிகள் ஊராட்சி மன்றத் தலைவர்களைவிடச் செல்வாக்குப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். ஊராட்சி மன்றத்திற்காக வசூலிக்க வேண்டிய வரிகளைச் சரியான நேரத்தில் வசூலிக்காத நிலையில் வரிப்பணத்தை ரைட் ஆஃப் செய்ய வற்புறுத்தித் தீர்மானம் அனுப்பப்படுகிறது. இப்படிக் காலங்கடந்து கடன், வரி வசூல் செய்கிற கிராமதிகாரிகளிடமிருந்து சர்சார்ஜ் வசூல் செய்யத் திட்டம் இருக்கிறதா ?

<u>மாண்புமிகு திரு. மு. கருணாநிதி</u> : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில இடங்கள் என்று சொன்னார்கள். எந்த இடம் என்று குறிப்பிட்டுச் சொன்னால் விசாரிக்கலாம்.

<u>திரு. என். கணபதி</u> : தஞ்சை மாவட்டத்தில் சென்ற மாவட்ட ஆட்சி மன்றக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. குறிப்பிட்ட இடங்கள் பற்றிய விவரம் தற்போது இல்லை. விவரங்களைச் சேகரித்து முதலமைச்சர் அவர்களிடம் நேரில் சேர்ப்பிகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஆறுமுகம்</u> : குறிப்பிட்ட இடத்தில் தவறு செய்திருந்தால் அந்தக் கிராமதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சேலம் மாவட்டம் சேலத்தாம் பட்டி கிராமத்தில் கிராமதிகாரி அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் கிஸ்தி வசூலைக் கூடுதலாக வசூலித்தார் என்ற புகாரை நானே நேரடியாக எழுதி, ரசீது உட்பட கொடுத்திருக்கிறேன். புகார் செய்யப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுப்பார்களா ? சங்ககிரி வட்டம் தப்பக்கோட்டை, ஏகபுரம், நடுவனேரி கிராம அதிகாரிகள் தேர்தல் நேரத்தில் நேரடியாக அரசியலில் ஈடுபட்டு வேலை செய்தார்கள். சாட்சி உட்பட இருக்கிறது. அது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u> : குறிப்பிட்ட பெயர்களை எல்லாம் இப்போதுதான் சொல்லியிருக்கிறார்கள். முதலிலேயே சொல்லி இருந்தால் விசாரிக்கச் சொல்லியிருப்பேன். நான் சொல்லுகிற பதிலின் மூலம் அதிகாரிகள் விசாரித்து அறிக்கை அனுப்புவார்கள் என்று நம்புகிறேன்.

<u>திரு. தி. பொன்னுமலை</u> : கிராமதிகாரிகள் முன்பெல்லாம் பஞ்சாயத்துக் கூட்டங்களில் கலந்து கொண்டு அவர்களுடைய ஆலோசனைகளைத் தெரிவித்து வந்தார்கள். இப்போது சில ஆண்டுகளாக யாரும் வருவதில்லை. அவர்கள் வந்தால் கிராமங்களின் நிலை

பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ள முடியும் என்ற காரணத்தால் ஒவ்வொரு கூட்டத்திற்கும் அவர்கள் வரவேண்டுமென்று உத்தர விடப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது உள்ளாட்சித் துறையைப் பொறுத்தது. உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேள்வி கேட்டால் பதில் அளிப்பார்கள்.

*Reorganisation of Agriculture Department.*

*142 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to reorganise the Agriculture Department; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) இது பரிசீலனையில் இருந்து வருகிறது.

*Dr. H.V. HANDE : Answering the question the Hon. Minister said "yes". May I know the details about the reorganisation ? May I know whether at the Secretariat level, there would be any reorganisation? Whether such a thing is contemplated ? About two or three years ago the late Hon. Chief Minister, Thiru Anna announced that this will be done. May I know the details from the Hon. Minister?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, உழவர்களுக்கு வேளாண்மைத் தொழில் குறித்து அறிவைப் பரப்பவும், திறமையைப் பெருக்கவும், வேளாண்மைத் துறையின் பல்வேறு நடவடிக்கைகளை மேலும் சீரிய முறையில் ஒருங்கிணைக்கவும், அதிகாரிகள் ஒருங்கிணைந்து செயல்படவும் வேண்டி வட்டார அடிப்படையில் வேளாண்மைத் துறை சீரமைக்கப்படலாம் என்று கருதப்பட்டது. 13—5—1971 அன்று நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களிடத்தில் நாங்கள் எங்களுடைய இலாகா சம்பந்தப்பட்ட பேச்சு நடத்தியபோது அவர்கள் எங்களுக்கு ஒரு திட்டத்தைச் சொன்னார்கள். அதன்படி ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு மாவட்ட வேளாண்மைத் துறை அதிகாரியை நியமிப்பது என்றும், ஒரே இடத்தில் அல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்தில் இருக்கின்ற அத்தனை அதிகாரிகளையும் எல்லா வட்டங்களுக்கும் அனுப்பி ஆங்காங்கு இருக்கும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணியாற்றுவதற்கு திட்டத்தை உருவாக்குமாறு பணித்திருக்கிறார்கள். அது வேளாண்மைத் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டு இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவில் சீர்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சொ. காவேரிமணியம் : கிராமங்களில் இருக்கக்கூடியவர்களில் பெரும்பான்மையானவர்கள் வேளாண்மைத் துறையை நம்பி இருக்கிறார்கள். முழுக்க முழுக்க வேளாண்மையை நம்பி இருக்கும் குடும்பங்களுக்கு என்ன சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?



மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இது இலாகா சம்பந்தப்பட்ட கேள்வி. உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் குடும்ப முன்னேற்றத்திற்காக அரசாங்கம் எவ்வளவோ திட்டங்களைத் தயாரித்திருக்கிறது. நம்முடைய கனம் அங்கத்தினர் வகாப் அவர்கள்கூட "உழைப்பவன் கணக்குப் பார்த்தால்" என்று குறிப்பிட்டார்கள். அது "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது" என்பது அந்தக் காலத்துப் பழமொழி. தமிழக அரசு "மேழி பிடிக்கும் கை மேதினி ஆளும் கை" என்ற அளவுக்கு அவர்களை உயர்த்த மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கியிருக்கிறது. அவை பிறகு அறிவிக்கப்படும்.

திரு. க. உரோ. எட்மண்ட் : மீன் வளத் துறையும், விவசாயத் துறையும் தனித் தனித் துறைகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அரசு மட்டத்தில் இரண்டையும் கண்காணிக்கின்ற அளவுக்கு ஒரே செயலாளர்தான் இருந்து வருகிறார். விவசாயத் துறையில் ஆக்க பூர்வமான பணிகளைச் செய்யும் வகையில் விவசாயத் துறைக்குத் தனிச் செயலாளர், மீன்வளத் துறைக்குத் தனிச் செயலாளர் என்று திருத்தியமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது வேளாண்மைத் துறையும், மீன்வளத் துறையும் தனித் தனியான அமைச்சரிடத்தில் இருக்கின்றன. செயலாளர் ஒருவர்தான் என்றாலும் வேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதால் தனிச் செயலாளரை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. தி. பொன்னுமலை : வேளாண்மை சீரமைப்புத் திட்டத்தை பொறுத்தவரை ஏரிப் பாசனம், ஆற்றுப் பாசனம் தவிர, சேலம் மாவட்டம், கோவை மாவட்டம் போன்ற பகுதிகளில் நூற்றுக் கணக்கான அடி ஆழத்தில் கிணறுகளை வெட்டி பாசனம் செய்ய வேண்டியிருப்பதால் அந்தக் கிணறுகளை வெட்டுவதற்குச் சர்க்காரே முழுத் தொகையையும் கொடுத்து அதனை வேளாண்மைச் சீரமைப்புத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மூலக் கேள்வி வேளாண்மைத் துறை அலுவலர்களைப் பற்றியது. கனம் அங்கத்தினர் அவர்கள் தனிப் பிரிவைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக தனி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். வடிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய அமைச்சரவர்கள் மேழி பிடிக்கும் கையைப் பற்றிச் சொன்னார்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி பற்றிக் கேளுங்கள்.

திரு. எம். முத்தையா : பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த சாலிகுளத்தில் ஆராய்ச்சிப் பண்ணை ஒன்று நிறுவுவதாக ஆராய்ச்சி நடந்ததே ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இது சம்பந்தமாகக் கேளுங்கள்.

<u>திரு. எம். முத்தையா</u> : அதிலே வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று அந்த வட்டார மக்கள் பெருமைப்பட்டார்கள். இப்பொழுது அந்த பண்ணை எங்கேயோ வேறு மாநிலத்திற்குப் போகிறது.........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இந்தக் கேள்வி அனுமதிக்கப் படவில்லை.

<u>திரு. எ. சுவாமிதாஸ்</u> : வேளாண்மைச் சீரமைப்புக்கு சாத்தியக் கூறுகள் இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்கள். வட்டம் தோறும் மாதிரிப் பண்ணைகளை அமைத்து, நேரிடையாக விவசாயிகள் கற்றுக்கொள்ளும் முறையில் அமைக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்</u> : தலைவர் அவர்களே, ஒவ்வொரு கிராமமும் பயன்பெறும் வகையில் சீரமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் வேளாண்மை அலுவலர்களை வட்டாரங் களுக்கு அனுப்பி செயல்படும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. மாதிரிப் பண்ணைகள் அமைக்கும் திட்டம் இப்பொழுதே பல இடங் களில் நடைபெறுவதால் மேற்கொண்டு வேறு எதுவும் அவசியம் இல்லை.

<u>திரு. எம். சுரேந்திரன்</u> : சார், வேளாண்மை அலுவலர்களைச் சேர்க்கும் போது, ஒவ்வொரு கிராமத்திலும் வாலிப அலுவலர்களை எடுத்து, நவீன முறைகளை விவசாயிகளுக்கு போதிக்க மாலை வகுப்புகள் நடத்த முயற்சிக்குமா ?

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்</u> : அப்படிப்பட்ட திட்டம் யோசனையில் இல்லை.

<u>திரு. என். கிட்டப்பா</u> : தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறையைச் சீரமைக்கும்போது, இந்தத் துறைக்கு நெருங்கிய தொடர்புள்ள நீர்ப்பாசனத் துறையையும் இதோடு ஒருங்கிணைந்த தாகச் செயல்படுத்த யோசனை இருக்கிறதா?

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்</u> : தனிக் கேள்வி போட வேண்டும்.

DR. H. V. HANDE : Even during 1964 the Agriculture Department wrote to most of the Legislators inviting our opinions as to how best to reorganise this Department. Is it not a fact that one of the main purposes of this reorganisation is to see that pesticides, fertilisers and seeds are properly distributed to the farmers? Now the problem is, they are distributed through the Block Development Officers and there is a bottleneck there. How best



this Department, in the process of its reorganisation, is going to see that these things which are well drafted and planned by the Agriculture Department, reach the farmers without the bottleneck of the Block Development Officers ?

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்</u> : தலைவர் அவர்களே, ஆங்காங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கு நேரிடையாக பூச்சி மருந்துகள், உரங்கள் இவற்றை வழங்கும் திட்டம் அமுலாக்கப் பட்டுவருகிறது. தஞ்சையில் ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார். அதை விஸ்தரிக்க வேண்டும் என்ற யோசனை அரசாங்கத்திடம் இருக்கிறது. விரைவில் பரிசீலிக்கப்பட்டு எல்லா வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கும் அமுலாக்கப்படும்.

<u>திரு. ஏ. எம். இராஜா</u> : தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையை சீரமைக்கும்போது, இப்பொழுது வேளாண்மைத் துறை இயக்குனராகவும், செயலாளராகவும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருப்பதை மாற்றி, வேளாண்மைத் துறையில் பயிற்சி பெற்றவர் களையே நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்</u> : அப்படிப்பட்ட யோசனை ஒன்றும் இல்லை.

<u>திரு. நா. வீராசாமி</u> : தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையை ரீ-ஆர்கனைஸ் செய்யும் செயற்குறிப்புகள் இருக்கின்றன என்று அமைச்சர் குறிப்பிட்டார்கள். இதிலே ரிஸர்ச் வேலையே நடை பெறுவதில்லை. இன்னும் நாட்டில் மஞ்சள், சேனைக் கிழங்கு போன்ற வற்றிற்கு எவ்வளவு உரம் போடவேண்டும், எப்பொழுது பயிரிட வேண்டும் என்பதை அறிய வாய்ப்பு இல்லை. ரீ-ஆர்கனைஸ் செய்யும் போது, ஒவ்வொரு மாவட்டத்திலும் ரிஸர்ச் செண்டர் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்</u> : இப்பொழுது ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. பலவகையான திட்டங்கள் உருவாக்கப் பட்டு செயல்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அவசியம் இல்லை. ஒவ்வொரு பகுதிக்கும் வேண்டியது இப்பொழுதே ஆராய்ச்சி செய்யப்படுகிறது.

<u>திரு. சோ. அழகர்சாமி</u> : தலைவர் அவர்களே, வட்டார அளவில் விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் விவசாயக் கிடங்குகளையும் மேற் பார்வை பார்க்கவேண்டியதாக இருக்கிறது. இப்படி இரண்டு பொறுப்பு இருப்பதற்குப் பதிலாக, இந்தப் பணி செம்மையாக நடைபெற, அபிவிருத்தி அதிகாரி, டெப்போ அதிகாரி என்று இரண்டு அதிகாரிகளைப் போட உத்தேசம் உண்டா?

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்</u> : ஒவ்வொரு மாவட்டத் திற்கும் தேவையான உரம் முதலியவை மாவட்டத் தலைநகருக்கு அனுப்பப்படுகிறது. அங்கத்தினர்கள் சொல்வது போல், இப்பொழுது இருப்பதை மாற்றி, பணியாற்றுவதற்கு சீரமைப்புத்

திட்டத்தில் யோசிக்கலாம். தனி அதிகாரிகள் போடுவது என்பதெல்லாம் இப்பொழுது நிதி இலாகாவிலும், பொதுத் துறையிலும் ஆலோசனையில் இருக்கிறது.

*Garden opposite to Legislators' Hostel*

* 143 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the amount spent for reclaiming the garden and for installing sprinkler irrigation opposite to the multi-stroyed M.L.A.'s House ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கான பல அடுக்கு விடுதிக்கு எதிரிலுள்ள தோட்டத்தைப் பண்படுத்துவதற்காக செலவிடப்பட்டத் தொகை ரூ. 6,968.50 ஆகும் (ரூபாய் ஆறுயிரத்து தொளாயிரத்து அறுபத்தெட்டும் ஐம்பது பைசாவும்). தெளிப்பு முறையில் தண்ணீர் பாய்ச்சுவதற்கான சாதனங்கள் கட்புல விளக்கத்திற்காக ஒரு நிறுவனத்தால் அமைக்கப்பட்டு, அந்நிறுவனம் அச்சாதனத்தைத் திரும்ப எடுத்துக் கொண்டுள்ளது. எனவே, இதற்காக எத்தொகையும் செலவு செய்யப்படவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்தத் தோட்டம் இப்பொழுது தோட்டமாக இருக்கிறதா அல்லது பொட்டலாக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுது இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தத் தோட்டத்திலிருந்து அரசாங்கத்திற்கு அல்லது இலாகாவிற்கு வருவாய் ஏதாவது வருகிறதா? அல்லது நட்டம் ஏற்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டமே சென்னை நகருக்கும், சுற்று வட்டாரங்களுக்கும் காய்கறிகளை உற்பத்தி செய்து குறைந்த விலையில் கொடுக்கவேண்டும் என்றுதான் ஆரம்பிக்கப்பட்டது. முன்னோடித் திட்டமாக அமைக்கப்பட்டது. சட்டமன்ற விடுதிக்கு முன்னால் இருக்கும் 26 ஏக்கர் நிலத்தில், 1968–69-ல், இதில் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : லாபமா, நஷ்டமா என்பதை மட்டும் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : லாபமும் இல்லை, நட்டமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதோடு முடிந்தது.

திரு. எ. சுவாமிதாஸ் : முன்னோடித் திட்டம் என்றார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், இதைப் பார்த்துவிட்டு இந்த வகையிலேயே விவசாயத்தைப் பின்பற்ற வேண்டும் என்று நினைக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதைச் சீர்படுத்த உறுப்பினர்கள் முன் வந்தால் பாராட்டுவேன்.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, குழாய் மூலமாகத் தண்ணீர் தெளித்து விவசாயம் செய்தார்களே, அந்த விவசாயத்தினால் ஏதாவது பலன் ஏற்பட்டதா? பல மாவட்டங்களில் அந்த முறையைக் கையாளுவதற்காக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, தண்ணீரை வீணாக்காமல் குறைந்த அளவில் பயன்படுத்தலாம் என்ற நோக்கத்தோடு அந்த முறை பயன்படுத்தப்பட்டது. ஆனால் அந்தத் தோட்டத்தில் பயன்படுத்தும்போது, அந்த நீர் உப்பு நீராக இருந்த காரணத்தால் சரியாக இயங்கவில்லை. தனியார் துறையில் ஒருவர் வைத்து ஒரு "மாதிரியாகக்" காட்டினார். அது சரியாக இருந்து, நல்ல முறையில் வேலை செய்தால், அம்மாதிரி அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகளுக்குரிய காலத்தை நீட்டிக்க பேரவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

*State Express buses*

* 114 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state whether the number of seats in State Transport Express buses has been increased from 35 to 49?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that by increasing the number of seats, the inconvenience caused to each passenger has been increased and consequently the very purpose of providing more seats has been negatived for the reason that the people have stopped using it as liberally as they wanted to. Also, because of this inconvenience, it is better that the Government reconsider the whole thing and see that more confortable seats are given and wring the nomber of seats back to 35.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதிகம் பேர் பயணம் செய்வதற்காக வேண்டி, அந்த வசதியையும் உத்தேசித்துத்தான் இந்த இடங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே இட நெருக்கடி இருக்கிறது என்று சிலரிடத்திலிருந்து புகார் வந்ததையொட்டி, 49 இடங்களிலிருந்து—முன்பு ஒருவருக்கு 29 அங்குலம் வசதிகளோடு ஏற்கெனவே கொடுத்திருந்தார்கள். அதை இப்போது 32 அங்குலம் என்ற அளவில் வசதிகளோடு 45 இடங்கள் உள்ள அளவுக்கு நல்ல வசதிகளோடு கூடிய பேருந்துகளாக அமைக்க திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, நீண்ட தூர துரித வண்டிகளில் உடனடியாக இந்தச் சீர்திருத்தத்தை அமைக்க சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி அந்தச் சீர்திருத்தம் வருடாந்திர ரிப்பேர்கள் செய்கிறபோது இத்தகைய முறையில் சீட்டுகளை மாற்றியமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கு. திருப்பதி : தலைவர் அவர்களே, மாடி பஸ்களில் மாடியை எடுத்துவிட்டு, சீட்டுகளைக் குறைக்கிற உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாடி பஸ்ஸில் மாடியில் பயணம் செய்வது பயணிகளுக்குக் கஷ்டமாக இருக்கிறதென்று புகார் செய்ததையொட்டி, இந்த அரசு பயணிகளின் நலனை முதன்மையாகக் கருதுகிற காரணத்தால், மாடி பஸ்களை விரைவு பஸ்களாக சாலைகளில் விடுவதில்லையென்று தீர்மானித்து இருக்கிறது. இப்போது மூன்றுதான் ஓடிக்கொண்டிருக்கின்றன. மற்றவைகளை நிறுத்தி, மற்ற இடங்களில் பயன்படுத்தும் ஏற்பாடு இப்போது இருக்கிறது.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, மக்களுடைய வசதியை முன்னிட்டு அரசு பஸ்களில் 49 பேராக இருந்ததை 45 ஆக குறைத்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனிப்பட்டவர்களுடைய பஸ்களில் 64 பேர்களை ஏற்றுகிறார்களே, அதைத் தடை செய்ய அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பத்திரிகைகளுக்கு அரசாங்கத்தின் போக்குவரத்துதான் கண்ணில் படுகிறது. தனியார் பேருந்துகள் அவர்களின் கண்ணில் படுவதில்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, நீண்டதூர அரசு பேருந்துகள் பல இடங்களில் நின்று நின்று செல்கின்ற காரணத்தால் அதிக நேரம் ஆகிறது. ஆகவே, 100 மைலுக்கு ஒரு இடத்தில்தான் நிற்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைகளை அரசாங்கம் பரிசீலிக்கும். குறிப்பாக மாலை நேரங்களில் புறப்படுகின்ற பேருந்துகள் இடையிலே அடிக்கடி நிற்க வேண்டியதில்லையென்று பொதுமக்களிடமிருந்து வேண்டுகோள் வந்திருப்பதால் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. க. உ ரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, துரித பேருந்துகளின் மூலம் அரசாங்கத்திற்கு லாபம் கிடைக்கிறதா? அல்லது நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா?





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த துரித பேருந்துகளுக்கென்று நாம் தனியாக வரவு செலவுக் கணக்கு—பாலன்ஷீட்—வைத்துக்கொள்ளவில்லை. துரிதப் பேருந்துகளுக்கு, டவுன் சர்வீஸ் பேருந்துகளுக்கு என்று தனித்தனியாக கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. துரித பஸ் நாள் ஒன்றுக்கு ஓடிய 250 மைல் மூலம் கிட்டத்தட்ட 476 ரூபாய் வருகிறது. அதனுடைய செலவு எல்லாம் போக 200 ரூபாயாவது நமக்கு லாபமாகத்தான் இருக்கிறது. சென்ற மாதத்தைவிட இந்த மாதம் சுமார் 10 சதவீதம் அதிகமாக வசூலாகியிருக்கிறது. அதாவது 2 லட்சம் ரூபாய் கூடுதலாகியிருக்கிறது. இந்த வசூல் அதிகரிப்பு தொழிலாளர்களின் ஒத்துழைப்பையே எடுத்துக்காட்டுகிறது.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, உதகையிலிருந்து மைசூர் செல்லும் பஸ் பழுதடைந்து யானைக்கால் காடுகளில் நின்றுவிடுகிறது. அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்து சரியானது அல்ல. ஏனென்றால், ஒரு மாதத்திற்கு எவ்வளவு ஓட வேண்டுமோ அவ்வளவு ஓடுகின்றது. இப்போது 99.54 சதவீதம் பஸ்கள் ஓடுகின்றன. இன்னும் ஓரிரு வாரங்களில் 100 சதவீதம் ஓடும்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் இவ்வளவு புகார்கள் முன்னால் வந்ததில்லை. நமது மாண்புமிகு கலைஞர் அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்தில் அடிக்கடி ஆலோசனைக் குழுவை மாதத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை கூட்டி, நிலைமைகள் ஆராய்ந்து டைரக்டர், அதிகாரிகளுக்குச் சொல்லிவந்ததன் காரணமாக சென்னையிலும் பிற இடங்களிலும் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு சரியாக பஸ்கள் ஓடின.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இப்படி ஆலோசனைக் குழு அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இத்தகைய ஆலோசனைக் குழுவில் திரு. துரை முருகன் அவர்கள் உறுப்பினராக இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்படிப்பட்ட ஆலோசனைக் குழு அமைக்கப்படும்போது அவரையும் கவனத்தில் கொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் துரித வண்டிகள் விடுவதற்காக அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்போதும் சில வண்டிகள் இரவு நேரங்களில் விடப்படுகின்றன. பயணிகளிடமிருந்து இன்னும் அதிகம் விட வேண்டுமென்று கோரிக்கைகள் வருகின்ற நேரத்தில் அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

THIRU K. M. SUBRAMANIAN : Is it not a fact that one of the M.Ps. spoke in Vellore saying that spare parts of transport buses of our Government are being sold in open market?

MR. SPEAKER : How does it arise out of the main question?

THIRU K. M. SUBRAMANIAN : May be Krishnagiri also.

MR. SPEAKER : This question is not allowed.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த சென்னை–கிருஷ்ணகிரி விரைவுப் பேருந்தானது என்னுடைய தொகுதியிலே உள்ள வாலாஜாப்பேட்டை போன்ற இடங்களிலே நின்று பயணிகளை ஏற்றாமல் செல்லுகிறது. இனியாவது அது இப்படிப்பட்ட இடங்களிலே நின்று பயணிகளை ஏற்றிச் செல்லுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படி ஏற்றாமல் செல்லுகிறதா, இல்லையா என்பதுபற்றிய விவரம் இப்பொழுது என்னிடமில்லை. அதாவது "ஸ்டாப்" இல்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். அதைப்பற்றி, அரசாங்கம் பரிசீலிக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, சென்னையிலிருந்து வேலூருக்கு விரைவு பேருந்து விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னையிலிருந்து திருப்பத்தூர் வரை ஒரு புதிய பேருந்து இன்று காலையிலிருந்து புறப்பட்டுச் செல்கிறது. இது தொடரும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கோவை நகர்ப்புறத்தில் மூடப்பட்டிருக்கும் ஆலைகளைத் திறக்கும்படி கோரிய தொழிலாளர்கள் கைதானது குறித்து.

MR. SPEAKER : Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, Thiru K. T. K. Thangamani and Thiru K. Subbu have given notice of the following adjournment motion—

"The serious situation in Coimbatore following the arrest of 14 workers who are demanding early reopening of the closed mills particularly in the town area."





திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலே மூடப்பட்டிருக்கும் பஞ்சாலைகளைத் திறக்கக் கோரி நூற்பாலைத் தொழிற்சங்கங்களின் கூட்டுப்பேரவையின் முடிவிற்கு ஏற்ப அங்கே தொழிலாளர்கள் மறியல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்தின் விதிமுறைகளின் கீழ் வருகிறது என்பதைத்தான் விளக்கவேண்டும். இதிலே அரசாங்கம் செய்யத் தவறியது என்ன என்பதைத்தான் விளக்கவேண்டும். அங்கே நடைபெறுகின்ற விஷயங்களை எல்லாம் இந்தத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டால்தான் பேச முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நூற்பாலைத் தொழிற்சங்கங்களின் கூட்டுப் பேரவையின் பிரகடனத்தின்படிதான் அங்கே தொழிலாளர்கள் மறியல் போராட்டம் நடத்துகிறார்கள். இந்த மறியலிலே கலந்து கொண்ட 14 தொழிலாளர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். நேற்றைக்கு கூட 800 பேர் வரை கைதுசெய்யப்பட்டிருப்பதாக எனக்கு செய்தி கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் விவரங்களைப் பற்றி பேசுகின்றீர்கள். அவசரப் பொது முக்கியமான காரியம் என்றால் அது எப்படி இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வரும் வகையில் முக்கியமானது என்பதைப்பற்றியும், அதிலே அரசாங்கத்தின் பொறுப்பு என்ன இருக்கிறது என்பதை மட்டும் விளக்க வேண்டுமே தவிர, அந்தத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டால் அதற்குப் பிறகு பேசக் கூடியதை இப்பொழுது பேசக் கூடாது.

திரு. க. சுப்பு : நாளுக்கு நாள் அங்கே மறியல் செய்யும் தொழிலாளர்கள் கைது செய்யப்படுவதால், அங்கே ஒரு பதட்ட நிலைமை இருக்கிறது. எனவே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண இந்த அரசாங்கம் உடனடியாக தலையிட வேண்டும். எனவே, தொழில் அமைச்சரும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் அந்த இடத்திற்குச் சென்று தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப்போல் பல மில்கள் தமிழ் நாட்டிலே மூடப்பட்டு வரும்பொழுது, இதுபோன்ற நிலைமைகள் தமிழ் நாடு பூராவும் பெருகும் நிலைமை இருக்கிறது. தொழிற் துறையிலே தீர்மானங்கள் பல எடுக்கப்பட்டபொழுதும் கூட, இதற்கு ஒரு முடிவு எடுக்க முடியாமல் இந்த அரசு தவறிவிட்டது. எனவே, மேலும், மேலும் தொழிலாளர்களை அங்கே கைது செய்து உள்ளே வைப்பதைத் தவிர்க்கும் அளவிலே, இந்த நிலைமைகளைப் பற்றி விவாதிக்க இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[1971 ஜூலை 6

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, அரசு எடுத்துக் கொண்ட பெரும் முயற்சியால் திறக்கப்பட்டது போக, இன்னமும் திறக்கப்படாமல் மூடியிருக்கின்ற மீதியுள்ள நூற்பாலைகளை அரசு ஏற்றெடுத்து நடத்த வேண்டுமென்ற அளவிலே நூற்பாலைத் தொழிற்சங்கங்களின் கூட்டுப்பேரவை பிரகடனம் ஒன்றைச் சொல்லி, அதன்படி மறியல் போராட்டத்தை 1—7—1971 முதல் கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு முன்னால் நடத்தி வருகிறார்கள்.

1—7—1971, 2—7—1971, 3—7—1971, 5—7—1971 ஆகிய நான்கு நாட்களில் அனைத்துச் சங்கங்களின் தொழிலாளர்கள் சுமார் 200 பேர் ஊர்வலமாக மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவல்கத்தை அடைந்து, ஊர்வலத்திலுள்ள தொழிலாளர்களில் ஒரு சிலர் மட்டும் ஒவ்வொரு நாளும் மறியல் செய்து, அரசு அலுவலகத்தில் போக்கு வரத்துக்கு இடைஞ்சல் செய்ததற்காக கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டனர். 4—7—1971 அன்று விடுமுறையாதலால் அன்று மறியல் இல்லை. முதல் மூன்று நாட்களில் ஒவ்வொரு நாளும் 14 பேரும், 5—7—1971-ல் 12 பேரும் ஆக 54 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். இவர்கள் பல்வேறு சங்கங்களைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இந்தச் சம்பவத்தினால் அமைதிக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாமல் காத்திட காவல் துறையினர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கைதுசெய்யப்பட்டவர்கள் மீது எடுத்த நடவடிக்கையாவது:—அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டு இ.பி.கோ. 143, 341 செக்ஷன்ஸ்படி கோயம்புத்தூர் அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் முன்னால் வழக்கு தொடரப்பட்டது. நேற்று அதாவது 5—7—1971-ல் வழக்குகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. 1—7—1971-ல் கைது செய்யப்பட்டவர்கள் மீதுள்ள வழக்கு 9—7—1971-க்கு தள்ளி வைக்கப்பட்டது. 2—7—1971-ல் கைது செய்யப்பட்ட 14 பேர்களும், 3—7—1971-ல் கைது செய்யப்பட்ட 14 பேர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள். இதில் 27 பேர்களுக்கும் 2 மாத கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டு, ஒருவர் 4(1) எம்.பி.ஓ. ஆக்டின் கீழ் விடுதலை செய்யப்பட்டார். 5—7—1971-ல் கைது செய்யப்பட்டவர்கள் ரிமாண்டில் உள்ளனர்.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து, இப்படி மூடப்பட்ட நூற்பாலைகளின் தொழிலாளர்கள் நலனை கருத்தில் கொண்டு அவைகளை மீண்டும் திறப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து அவைகள் செயல்பட எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இதனை ஆராய்ந்திட 1967-ல் ஒரு குழு நியமிக்கப்பட்டு, அதன் பரிவுரையின் மூலம் நிதிப் பற்றாக்குறை காரணமாக மூடப்பட்ட ஆலைகளுக்கு கவர்ன்மென்ட் கிரான்ட் 222 லட்சம் கொடுக்க முன்வந்து அப்படி மூடப்பட்ட ஆலைகளில் 12-க்கு அரசு ரூ. 119.41 லட்சத்திற்கு வங்கி உத்திரவாதம் (பாங்க் காரண்டி) வழங்கி, அவைகளைச் செயல்படச் செய்தது. இவற்றிற்குப் பிறகு நியமிக்கப்பட்ட மற்றொரு கமிட்டியின் பரிவுரையின் பேரில், (1) ஓம் பராசக்தி மில்ஸ்,



1971 ஜூலை 6] [திரு. மு. கருணாநிதி]

(2) ஸ்ரீரெங்கவிலாஸ் மில்ஸ், (3) கம்போடியா மில்ஸ் (4) கிருஷ்ணவேணி மில்ஸ் ஆகிய நான்கு ஆலைகளை டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் ஏற்று நடத்த அரசு ஆணை பிறப்பித்து அதன்படி டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் அவைகளை நடத்தி வருகிறது. கோவை முருகன் மில்ஸ், அனைத்துக் கட்சி சங்கங்களின் கூட்டுப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலைகளில் ஒன்றாகும். டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் இதனை ஏற்று நடத்த வேண்டுமென்று சமீபத்தில் ஆணை பிறப்பித்து, கடந்த மாதம் 26-ம் தேதி டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் இதனை ஒப்புக்கொண்டு, இதில் ஏற்கனவே வேலை செய்த 820 தொழிலாளர்களை திரும்ப வேலைக்கு பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டதில், 750 பேர் இதுவரை பதிவு செய்திருக்கிறார்கள். அத்தோடு, இயந்திரங்கள் சீர்படுத்தும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. மானேஜர் நியமித்தாகிவிட்டது. இன்னும் ஒரு மாத காலத்தில் இந்த ஆலையின் வேலைகள் தொடங்கி விடும். இது தொழிலாளர்கள்பால் அரசு காட்டும் பரிவிற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். மேலும், பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள ஆலைகளில் சோமசுந்தரா மில்ஸ், காளேஸ்வரா மில்ஸ் ஆகிய இரண்டிற்கும் கமிட்டியின் பரிவுரையின் மேல் ரூ. 25 லட்சத்திற்கு வங்கி உத்திரவாதம் அரசு அளித்தது. அரசின் உத்திரவாதத்தை ஏற்று இப்பொழுதுதான் சோமசுந்தரா மில்லிற்கு கடன் வழங்க மைசூர் மாநில வங்கி (மைசூர் ஸ்டேட் பாங்க்) முன்வந்திருப்பதால், உத்திரவாதம் வழங்குவது அரசின் பரிசீலனையில் உள்ளது. காளேஸ்வரா மில்லின் விவகாரத்தை மீண்டும் பரிசீலிக்க, தொழில் முன்னேற்றச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட கமிட்டி, ஏற்கனவே வழங்கிய 25 லட்ச ரூபாய் உத்திரவாதத்தோடு மேலும் ரூ. 24 லட்சத்திற்கு உத்திரவாதமோ அல்லது சோமசுந்தரா மில்லோடு இணைத்திடவோ வேண்டுமென்று இப்பொழுது பரிந்துரைத்துள்ளது. இதுவும் அரசின் உடனடிப் பரிசீலனையில் உள்ளது.

அரசு ஒரு ஆலையை ஏற்று நடத்தவோ அல்லது அதற்கு உத்திரவாதம் வழங்கிடவோ வேண்டுமென்றால், முதலில் அந்த ஆலையின் "லயபிலிட்டீஸ்", "அசெட்ஸ்", இயந்திரங்களின் நிலைமை, இயந்திரங்களின் வயது இவைகளை ஆராய்ந்திட வேண்டியுள்ளது. மேற்கூறியவைகளிலிருந்து தமிழக அரசு மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்குத் தேவையான தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளதோடு, அவைகள் பெரும்பாலும் வெற்றியடைந்துள்ளது என்பது தெளிவாகிறது. அரசு மேற்கொண்டுள்ள தொடர்நடவடிக்கையின் சூழ்நிலையில், அரசு மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதில் அக்கறை காட்டவில்லையென்றோ அல்லது அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர் நலனில் ஆழ்ந்த கவனம் செலுத்தவில்லையென்றோ கூறுவதற்கில்லை. தொழிலாளர்கள் தங்கள் உணர்வினை வெளிப்படுத்திட இதுவரையில் அவர்கள் நடத்தியுள்ள ம்றியல் போராட்டம் போதுமென்கிற அளவில் இந்த அரசின் தொழிலாளர் நலக் கொள்கையின் மீது நம்பிக்கைவைத்து கிளர்ச்சியை நிறுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்

கொள்கிறேன். ஆகவே இந்த விளக்கத்திற்குப் பின் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையை அனுமதித்து விவாதித்திட எவ்வித முக்கியத் துவமும் இருந்திடவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புப் பிரேரணைக்கு அவசியமில்லை என்று கருதுகிறேன், அதனால் இந்தப் பிரேரணைக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

### 3. கவன ஈர்ப்பு

### ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்ததால் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள்

THIRU K. M. SUBRAMANIAN: Mr. Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Education and Local Administraton to a matter of urgent public importance. Sir, as regards the limitation of admission to the Teachers' Training Schools, particularly in the case of secondary trained teachers; the Government have now, I understand, prescribed that 300 . . .

MR. SPEAKER: The hon. Member has to read what he has given notice of.

THIRU K. M. SUBRAMANIAN: Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the hardships caused on account of the instructions issued by the Government to drastically cut down the admission to Teachers' Training Schools, particularly to Secondary Training Course.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவைக்கு அதிகமாகவே இருப்பதால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்க அதிக இடங்கள் ஒதுக்கவேண்டிய அவசியம் தற்சமயம் இல்லை. திட்ட காலத்திற்கு ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு தேவைப்படும் என்பது ஆராயப்பட்டுள்ளது. தற்சமயம் இருக்கும் பயிற்சிப் பள்ளிகளே போதும் எனக் கருதப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் பயிற்சிப் பள்ளிகளில் அவசியம் ஏற்பட்டால் அப்பள்ளிகளில் ஒவ்வொரு பிரிவிலும் 40 மாணவர்களுக்குப் பதில் 50 வரை சேர்க்க அனுமதிக்கப்படுகிறார்கள், ஒவ்வொரு வருடமும் மாவட்டவாரியாக எவ்வளவு பிரிவுகள், எவ்வளவு பயிற்சிப் பள்ளிகளில் தேவைப்படும் என ஆராய்ந்து மாநில மட்டத்தில் எவ்வளவு பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளனவோ, அந்த அளவை மீறுமல், பிரிவுகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

1970–71-ல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் 199 பிரிவுகள் இருந்தன. இந்த ஆண்டு 160 பிரிவுகள் போதுமென்று மதிப்பிடப் பட்டுள்ளது.



THIRU K. M. SUBRAMANIAN: In view of the fact that there is a very huge number of students according to the teacher-student ratio, and there is considerable unemployment in this country and in view of the fact that ladies are more fit to undertake the teaching profession, is it possible for the Hon. Minister to reconsider the matter and increase the strength of the trainees in the training course at least women training teachers to the 1970–71 level ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது பயிற்சி பெற்று வேலையில்லாமல் பல ஆசிரியர்களும், ஆசிரியைகளும் இருக்கிறார்கள். இன்னும் 2, 3 ஆண்டுகளில் அவர் களைக் கணக்கிட்டு எவ்வளவு தேவைப்படுகிறார்கள் என்று பார்த்து, பயிற்சிப் பள்ளிகளில் பிரிவுகள் ஒதுக்கப்படவிருக்கிறது. திட்டமான முறையில் ஆசிரியர்களைச் சேர்ப்பது பற்றியோ, ஆசிரியைகளைச் சேர்ப்பது பற்றியோ ஒன்றும் சொல்வதற்கில்லை, அதில் பல பிரச்சினைகள் ஏற்படக்கூடும். இது பற்றி பல கேள்விகள் எழுப்பப் பட்டிருக்கின்றன. ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளிலிருந்து அதிகமாக வந்து கொண்டேயிருக்கிறார்கள். மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கு வேலைவாய்ப்புக் குறைவாக இருக்கின்ற காரணத்தால் ஆசிரியைகளுக்கு அதிக ஊக்கம் தரவேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, தற்போது திட்டவட்டமான எண்ணிக்கை எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. தேவையான அளவுக்கு அவர்களுக்கு இடம் ஒதுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: திரு. கே. என். குமாரசாமி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் இடத்தில் இல்லாத காரணத்தால் திரும்பப்பெற்றதாகக் கருதப் படுகிறது.

### (4) அரசினர் சட்ட முன்வடிவு

### தமிழ்நாடு 1971-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்து-வாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்து வாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## (5) 1971–72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) மானியக் கோரிக்கை எண் 9.—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—

"கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 18,37,72,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, to discuss policy, I move the cut motion standing in my name:

"That the allotment of Rs. 18,37,72,200 under Demand No. 9—District Administration and Miscellaneous be reduced by Rs. 100."

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, நில உச்சவரம்பு சட்டத்தில் உள்ள விதி விலக்குகள் அனைத்தையும் ரத்து செய்வது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,37,72,200-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, to discuss the necessary steps to be taken to prevent the Indian Oil Corporation, from acquiring the land at Royapuram where more than 3,000 fishermen are living, I move the cut motion standing in my name:

"That the allotment of Rs. 18,37,72,200 under Demand No. 9—District Administration and Miscellaneous be reduced by Rs. 100."

திரு. எம். சுரேந்திரன் : சார், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அதிகாரங்களைப் பரவலாக்குவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,37,72,200-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### (ஆ) கோரிக்கை எண் 31—பஞ்சத்தணிப்பு

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—

"கோரிக்கை எண் 31—பஞ்சத்தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,48,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று கேட்டுக் கொள்கிறேன்.





திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, என் பெயரில் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணையான, பஞ்சத்தணிப்புக்கு அதிக நிதி ஒதுக்காதது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 31—பஞ்சத்தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 16,48,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என பிரேரேபிக்கிறேன்.

### (இ) கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—

"கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,78,73,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, to discuss about the benefits that have to be granted to the persons who opted to the Travancore-Cochin Pension Rules and the need for reconsideration, I move the cut motion standing in my name:

"That the allotment of Rs. 4,78,73,300 under Demand No. 32—Pensions—be reduced by Rs. 100".

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, தகுதியானவர்களுக்கும் முதியோர் உதவித் தொகை கிடைக்காமலிருப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,78,73,300-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை பிரேரேபிக்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, to discuss the need to point out the disparity in the pension amount between the L.T. Grade Teachers who have retired before 1st July 1960 and after 1st July 1960, I move the cut motion standing in my name:

"That the allotment of Rs. 4,78,73,300 under Demand No. 32—Pensions—be reduced by Rs. 100."

திரு. எம். சுரேந்திரன் : வயது முதிர்ந்தவர்களுக்கு ஓய்வூதியங்களை பரவலாக வழங்க வேண்டுமென்பதைக் குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,78,73,300-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஈ) கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,76,26,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

Dr. H. V. HANDE: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 7,76,26,500 under Demand No. 36—Other Miscellaneous Compensations and Assignments—be reduced by Rs. 100."

(உ) கோரிக்கை எண். 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின் கீழ் ரூ. 77,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

Dr. H. V. HANDE: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 77,15,000 under Demand No. 37—Compensation to Zamindars—be reduced by Rs. 100."

(ஊ) கோரிக்கை எண் 45—ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 45—ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

Dr. H. V. HANDE: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 9,05,000 under Demand No. 45—Commuted Value of Pensions—be reduced by Rs. 100."

(எ) கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் * என்ற தலைப்பின் கீழ் ரூ. 43,10,01,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

* 88–109-ம் பக்கங்களில் "தமிழ்நாட்டில் வீட்டு வசதி" என்ற கொள்கை விளக்கம் குறித்து முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. சோ. அழகர்சாமி: ஐயா, அரசாங்கத்தில் விவசாயிகள் வாங்கிய கடன் தவணையைச் செலுத்த ஒரு நாள் தவணை கடந்தாலும் ஓராண்டு வட்டி வசூலிக்க வேண்டுமென்ற ரெவின்யூ போர்டு உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று விவாதிக்க—

"கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 43,10,01,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: திரு. வி. க. நகர் (பெரம்பூர்), டி. பி. சத்திரம் (ஷெணாய் நகர்) மற்றும் பல இடங்களில் வீட்டு வசதி வாரியம் மூலம் ஒதுக்கப்பட்ட வீடுகளை பழுது பார்க்க வேண்டியது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 43,10,01,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

Thiru K. M. SUBRAMANIAN: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 43,10,01,500 under Demand No. 47—Loans and Advances by the State Government—be reduced by Rs. 100."

(ஏ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,79,37,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

Thiru R. PONNAPPA NADAR: Sir, to discuss policy I move—

"That the allotment of Rs. 2,79,37,700 under Demand No. 1—Land Revenue Department—be reduced by Rs. 100."

திரு. ஆ. கு. சுப்பையா: இனும் ஒழிப்பு சட்டத்தில் உரிய திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,79,37,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

Dr. H. V. HANDE: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 2,79,37,700 under Demand No. 1—Land Revenue Department—be reduced by Rs. 100."

[1971 ஜூலை 6

திரு. எம். சுரேந்திரன் : நிலவரி வசூல் முறையை மாற்றி அமைக்காதது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,79,37,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

## (ஐ) கோரிக்கை எண் 4—முத்திரை தாள்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்—

கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,86,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss policy in general and to stress the need for making available stamps of lower denominations in the mufassal centres, I move—

"That the allotment of Rs. 31,86,900 under Demand No. 4—Stamps Administration—be reduced by Rs. 100."

திரு. சோ. அழகர்சாமி : அரசாங்க அதிகாரிகளுக்கான மனுவில் ஸ்டாம்ப் ஒட்டக் கோருவதைத் தவிர்ப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31,86,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss the need to give exemption from stamp duty for such of those who have to occupy L.I.G. and M.I.G. houses through State Housng Board, I move—

"That the allotment of Rs. 31,86,900 under Demand No. 4—Stamps—Administration—be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றுவார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்காக விளக்க உரை* ஒன்று அச்சிடப்பட்டு அதை இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிறேன். இந்த மாமன்றக் குறிப்பேடுகளிலே அவைகள் ஏற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் சீரிய உரையைக் கேட்ட பிறகு இறுதியாக என்னுடைய பதிலை நான் கூற இருக்கின்றேன்.

* 110–117-ம் பக்கங்களில் இரண்டாவது விளக்க இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளது. கொள்கை குறிப்பு அச்சிடப்பட்டுள்ளது.



1971 ஜூலை 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் தம்முடைய கருத்துகளைத் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையை ஒட்டி உறுப்பினர்கள் சொல்வதில் நானும் ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் இடையிலே சொல்வேன் என்று கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை அறிவிக்க வேண்டுகிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAN : Mr. Speaker, Sir, on these vast subjects, I do not think I can do justice within five minutes or seven minutes.

MR. SPEAKER : I have allowed ten minutes.

THIRU K. M. SUBRAMANIAN : Thank you, Sir.

We are now experiencing a lot of inconvenience in the administration not because of the indifference of the officers but because of the huge work that they have to bear to-day. The District Collector in the former days was only a District Revenue Officer and a Magistrate. To-day he is in-charge of various functions including planning and other welfare activities like housing and also anything connected with the district administration of which he is the highest executive. So, either the districts have to be bifurcated or there should be two District Collectors, one in-charge of revenue and other in-charge of old functions like the magistracy and the other in-charge of development programmes, namely animal husbandry and various other new duties that are enforced now.

Then, the D.M.K. Government which pledges itself to be a Socialistic Government, must practise unostentatiousness. The ostentatious living of officers and Ministers which has been imported from the previous rulers, the British regime, still continue to-day. We do not realise that we are living in a poor India. So, it is very necessary that we should bring that to the notice of the D.M.K. Ministers who must also be feeling equally like me. This ostentatious living also makes the general public to attempt to live ostentatiously.

Now I come to the indiscriminate use of vehicles like jeeps which are going about the country, using so much of petrol. I think it is necessary to find out whether so many jeeps are necessary and whether they are all being put to proper use. I do not mean that it should be cut down. What I mean is they should be economically used.

Now I come to the other point, namely salaries. I think it is time that we should consider the giving of the same scales of pay as are given to the Central Government employees to our State Government employees also, because they are doing similar work. It may be that our financial position does not warrant it but at the same time we must consider that if we do not give it, the

enthusiasm of our employees will definitely be cut down. Now a bank clerk is getting Rs. 600 or 700 but a Secretariat clerk is getting Rs. 300 or 400 and an employee in the taluk is yetting Rs. 150 or 200. Even a bank watchman is Karur is getting about Rs. 200. This sort of disparity should be cut down.

Then I come to the question of pension. I think the Kerala Government had passed an order two years ago that the minimum pension should be Rs. 45. The Mysore Government also had passed an order that the minimum pension should be Rs. 50. But so far as our Government is concerned, I think—I speak, subject to correction—the minimum pension is Rs. 30 which is ridiculously low when compared to the present cost of living. Of course, the Government had recently ordered that one month's bonus should be given and that medical facilities should also be provided. But we find that the same facility is not extended to the teacher pensioners who had worked in municipal corporations and various other local bodies. I think it is very unjust that one section of pensioners should get one scale and another section another scale, in the same category, viz., 'teachers'. I hope and trust the needful would be done by Government. Probably in the meantime Government might have modified that order. I do not know. This story I had got two or three months ago.

So far as loans are concerned, I hope Government has to revise the policy of giving loans to the local bodies. Local Bodies are suffering and they are unable to repay these loans. For example the Corporation of Madras has borrowed Rs. 18 crores from Government, from L.I.C. and from the Public. The income of the Corporation is Rs. 10 crores. With a revenue expenditure of Rs. 8 crores normally, what can the Corporation repay except interest? It is time the Government reconsiders the whole fabric of giving loans because there is a race between Central Government, State Government and Local Government—all these three governments are trying to increase taxes, rightly (I do not say wrongly).

In this process so far as local bodies are concerned, their tax structure is static. There is no possibility of their increasing other taxes except the tax on house properties. The taxes have risen to such an extent that people would come to a stage that it would not be worth while to build houses anymore and there would be a housing shortage. I request Government, whatever be the loan given to Corporation (Madras) and other local bodies, it is time that Government writes them off so that we can start afresh. I say this because they cannot and will not be able to pay the loans. They have much higher responsibilities now. Previously the Madras Corporation had only to look after the health of the city population. Now so many things had increased. Population had increased. But there is no increase in housing with the result that even though the income of the Madras Corporation had increased from Rs. 3-1/2 crores to Rs. 10 crores annually, the Corporation and other local bodies are not able to discharge their



duties and therefore it is my earnest request that Government treats these corporations and local bodies and themselves as one entity and see that the advances made to these local bodies are definitely written off.

We all know the present conditions of the drainage system in Madras. There is leakage everywhere. After the Cooum repair and stoppage of drainage water emptying there, there is drainage leakage in every road and every street has become a Cooum. Everyday there is overflow. When it was planned it was intended for 6 lakhs of people. Now there are 22 lakhs of people in the City apart from 3 to 4 lakhs engaged in business and who are floating population. Of course, Government can say "half loan and half grant". But what is wanted is speedy execution of work.

Environmental pollution that is taking place in Madras is something that cannot be imagined. Somebody has to get down at Mambalam station and walk through Ranganathan street. He would know the pollution in the City. Government will be shocked at the pollution. There is immediate necessity for provision of funds. If you are going to give 'half loan and half grant' in the old way, I think no local body can tackle the situation. These are important things regarding my constituency. There should be a review of local administration in the State. Almost every district should be bifurcated into two or there should be two collectors for each district, one in-charge of normal work and another for developmental work. Then the administration will be toned up.

Whenever we go to any Tamil Nadu Government office, we find there is a feeling of frustration. This is what any visitor feels. It is time efforts are made so that every visitor may feel that he has been fully served.

With a plea that loans to corporations and local bodies be converted into grants, I conclude my speech. I am grateful to you, Sir, for having given me this opportunity to speak. Thank you.

திரு. ஆ. பாங்காமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்றைய தினம் மாவட்ட நிர்வாக மானியத்தை ஒட்டி நடைபெறுகின்ற விவாதத்திலே நானும் கலந்துகொண்டு பேசுகின்ற நல்வாய்ப்பினை அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக மாண்புமிகு கலைஞர் முதல்வர் அவர்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் பல்வேறு இடங்களிலும் ஏழை எளிய மக்களுக்குப் பட்டா செய்து கொடுத்து வருகிறார்கள். அதை மகிழ்ச்சியோடு நாமெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தாலும் மாவட்ட நிர்வாகத் துறையில் இருக்கிற சில சங்கடங்களை விளக்குவது இந்த நேரத்திலே என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கின்ற ஏழை தன்னுடைய புறம்போக்கு நிலத்தைப் பட்டா செய்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தோடு வட்ட ஆட்சித் தலைவரைச் சந்திக்

கின்ற நேரத்திலே—அவர் அதை பரிந்துரைசெய்து கோட்டாட்சித் தலைவருக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது—அவருடைய பரிந்துரையோடு கோட்டாட்சித் தலைவருக்குச் சென்று அவர் அதைப் பரிசீலிக்கவேண்டும். அதற்குப் பிறகு கோட்டாட்சித் தலைவரிடமிருந்து மாவட்ட வருவாய்த் துறை அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும். இப்படிப் பார்க்கிற நேரத்திலே ஏறத்தாழ பல ஆண்டுகள் ஓடிவிடுகின்றன.

இன்றைய தினம் மாவட்ட நிர்வாகத்திலே இருக்கின்ற வேலைப் பளுவைக் குறைக்கவும், வட்ட ஆட்சித் தலைவருக்கே இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தும் உரிமையை அளிக்கவும் வேண்டும். அப்படிச் செய்தால் புறம்போக்கு நிலங்களை அவரே நேரடியாக பட்டாச் செய்து கொடுக்கக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திவிடலாம். இப்படிச் செய்வதன்மூலம் நிர்வாகத்திலே பல ஆண்டுகளாக இருந்து வருகின்ற சிவப்பு நாடா தன்மைகூட குறைந்துவிடும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திருத்தணி வட்டத்தில் பஞ்சத் தணிப்பு வேலைகள் நடந்து முடிவடைந்து இருக்கின்றன. இருந்தாலும் அந்த வேலைகள் எல்லாம் இன்னும் முழுமை பெறவில்லை. அந்த வேலைகள் எல்லாம் முழுமைபெற அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பொதுவாக நாம் நல்ல ஆற்றல் மிக்க, அனுபவம் மிக்க ஐ,ஏ.எஸ். அதிகாரிகளைப் பெற்றிருக்கிறோம். அப்படி நல்ல அதிகாரிகளைப் பெற்றிருக்கிறோம் என்ற மகிழ்ச்சி இருந்தாலும் ஒரு சில இடங்களில் சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மக்களை சில சங்கடங்களுக்கு ஆட்படுத்துகின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம்.

நேற்றைய தினம் உள்ளாட்சித் துறை மானியத்தின்மீது நான் சில சம்பவங்களைப் பற்றிக் குறிப்பிடலாம் என்று நினைத்த நேரத்தில் நேரமில்லாமல் குறிப்பிட இயலாமற்போனாலும் மாவட்ட நிர்வாகத் துறை பற்றிப் பேசும்பொழுது அதனைப் பேசிவிடுவதும் நியாயம் என்று கருதி அதை இப்பொழுது கூற விரும்புகிறேன். என்னுடைய கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலே ஆசிரியர்களை வேலை மாற்றும் நேரத்திலே ஒரு அட்ஹாக் கமிட்டி நியமித்து அதன்மூலம் செய்கிறார்கள். அங்கே சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இருக்கவேண்டுமென்று கருதித்தான் தமிழக அரசு முடிவுசெய்து நாங்கள் அந்தக் கமிட்டியிலே பங்கு பெற்றிருக்கிறோம். அங்கே ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவருக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எந்தவிதமான கருத்துவேறுபாடும் இல்லை. அந்தக் கமிட்டியின் தலைவர் திருவள்ளூர் உதவி ஆட்சியாளர் அவர்கள் எங்களுடைய காரணங்களை ஏற்க முடியாத நேரத்திலே, மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களுடைய காரணங்களை ஏற்க முடியாத நேரத்திலே, நேரடியாகக் காரியங்கள் செய்கின்ற நிலைமையிலே நாங்கள் இருவரும் வெளியேறினோம். நாங்கள் வெளியேறியதற்குப் பிறகு எந்தக் காரணத்திற்காக தமிழக அரசு சட்ட மன்ற உறுப்பினர்





களுக்கு வாய்ப்பு அங்கே அளிக்கப்படவேண்டுமென்று கருதி அளித்ததோ அதைக்கூடச் சிந்திக்காமல் ஆசிரியர்களை வைத்துக் கொண்டு "கோரம்" இருக்கிறது என்று அறிவித்து உத்திரவுகளைப் பிறப்பித்துவிட்டார்கள். நாங்கள் அவமதிக்கப்பட்டிருக்கிறோம். இதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்து அவர்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து அந்த உத்தரவைச் சில நாட்களுக்கு நிறுத்தி வைக்கலாம் என்று இன்டரிம் ஸ்டே கொடுத்த பிறகு கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உடனடியாக உதவி ஆட்சியாளருக்கு அந்தத் தகவலை அனுப்பிய பிறகும் கூட உதவி ஆட்சியாளர் எழுதுகிறார்—"நான் இந்த உத்தரவைப் பிறப்பித்து விட்டேன். மேலே உங்கள் யோசனையைக் கேட்க விரும்புகிறேன்" என்று அவர்கள் சொல்லி இப்படி பல நாட்கள் ஓடிவிட்டது. ஆகவே, ஜி.ஓ.-வில் குறிப்பிடப்பட்டிருக்கும் "கோர"த்தைப் பொறுத்து மாற்றியமைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். "தி கோரம் வில் பி டு" என்று இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த அட்ஹாக் கமிட்டியில் சட்ட மன்ற உறுப்பினரும், ஊராட்சி ஒன்றியத் தலைவரும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். கோட்டாட்சித் தலைவரும் இருக்கிறார். ஆக, மூன்று பேருக்கும் வாக்களிக்கும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது ஏன் இந்த விவகாரம் நடந்தது என்று புரியவில்லை. அது குறித்துத் தனியாக எழுதி அனுப்பினால் கவனிக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : அமைச்சர் அவர்கள் பதிலை நன்றியோடு ஏற்றுக் கொள்கிறேன். "கோரம் வில் பி டு" என்று இருப்பதைப் பற்றி இரண்டு வார்த்தைகள் பேச விரும்புகிறேன். "கோரம் வில் பி டு" என்று இருப்பதை வைத்துக் கொண்டு உதவி ஆட்சியாளர் அவர்கள் உத்தரவு பிறப்பித்து.............

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆசிரியர்களை மாற்றும் போது அதற்குச் சில விதிமுறைகளை வைத்திருக்கிறார்கள். இன்னின்ன விதிமுறைகளின்படிதான் மாற்ற வேண்டுமென்று இருக்கிறது. கோட்டாட்சித் தலைவர் விதிமுறைக்கு உட்பட்டுத்தான் மாற்ற வேண்டும். அப்படித்தான் அவர் மாற்றப்பட்டிருக்கிறார். ஆகவே, இதனை விடுத்து வேறு விஷயங்களைப் பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரசாங்கத்திலிருந்து குறிப்பிட்ட முறையில் விதிமுறைகளுக்கேற்ப மாற்றம் செய்ய வேண்டுமென்று உத்தரவு வந்திருக்கிறது. அதையொட்டித்தான் நடக்கிறது என்பதைக் கனம் உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு அனுபவத்தின் காரணமாகக் கூறுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறிய பிரச்சினை பற்றி ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவர் முறையீடு செய்திருக்கிறார்கள். அது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விசாரிக்கப்பட்டு அதுபற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு என்ன நிலைமை என்று கண்டறிந்து தக்க முடிவுகள் எடுக்கலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் அன்றாட நிர்வாகத்தில் தொடர்பு கொண்டிருக்கின்றவர்கள், நம்மைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கூட்டங்களுக்கு, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்காமல், கோட்டாட்சித் தலைவரை நியமிப்பதன் மூலம் நேரடித் தொடர்பு கொள்ள முடியுமென்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உறுப்பினர் அவர்கள் அடிப்படையில் தவறு செய்கிறார்கள். ஐ.ஏ.எஸ். தேர்வு பெற்றவர்கள் முதலில் ரெவின்யூ டிவிஷன் மட்டத்தில் அனுபவம் பெற வேண்டுமென்ற விதி இருக்கிறது. அனுபவம் பெற்ற பிறகுதான் ஒரு மாவட்டம் ஒப்படைக்கப்படுகிறது. அவர்களுடைய அனுபவத்திற்காக அவர்களைப் போடுவதற்கு மாநிலத்தில் சில இடங்களை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போடுவதற்காக வைத்திருக்கிறோம். அதிலே தமிழ் தெரியாதவர்கள் இருக்கலாம். அவர்கள் தமிழ் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற விதி இருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : நான் இங்கே தெரிவித்த கருத்துக்களை எல்லாம் கவனித்து தமிழக அரசு காரியங்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொண்டு இந்த மானியத்தை வரவேற்று முடிக்கிறேன்.

* திரு. தோப்பூர் திருவேங்கடம் : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை மானியத்தின்மீது உரையாற்றுகின்ற வாய்ப்பளித்தமைக்காக நன்றி. வருவாய்த்துறை மிக முக்கியமான துறை என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். வருவாய்த்துறைதான் மக்களுக்கு ஏற்படுகின்ற சில சூழ்நிலைகளில் நேரடியாக உதவி செய்யக்கூடிய ஒரு துறையாக இருந்து வந்திருக்கிறது. வறட்சி, சூறாவளி, வெள்ளம் போன்ற ஆபத்தான நிலைமைகள் வரும்போது வருவாய்த் துறை மிகத் திறமையாகவும், அவசரமாகவும் மக்களைக் காப்பாற்றி வருகிறது என்பதை நாம் அனைவரும் நன்றாக உணர்ந்திருக்கிறோம்.

அதைப் போலவே மாவட்டத்தைப் பொறுத்த அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்தான் அச்சாணியாக விளங்குகிறார்கள். அத்தகைய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்கின்ற சூழ்நிலைகளைப் பார்க்கும்போது மிகவும் அதிகமான வேலைப் பளுவின் காரணமாக அவதிப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவது என்பது உண்மையிலேயே ஜனநாயக மரபில் ஏற்றுக் கொள்ளக் கூடியதா என்பதையும் சிந்திக்க வேண்டும். வேறு எந்த ஒரு அமைப்பிலும் அப்படிப்பட்ட நிலை இல்லை. ஆகையினால் மாவட்ட ஆட்சித் தலைவரே மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் தலைமை தாங்குவது பற்றி நம்முடைய அரசு ஆராய்ந்து மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் உறுப்பினர்களாக இருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்களில் ஒருவரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.





வருவாய்த் துறை மூலமாக தமிழக அரசு பல்வேறு நல்ல சாதனைகளைப் புரிந்திருக்கிறது. நிலம் இல்லாத ஏழைகளுக்குப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வீட்டு மனைகள் ஏராளமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மணியக்காரர் பரம்பரை முறை ஒழிக்கப்பட்டிருக்கிறது. மணியக்காரர்களைப் பற்றிப் பரவலாகக் குறைகளை உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள் என்றாலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது போல் எல்லோருமே தவறு செய்வதில்லை. ஒரு சிலர் கிராமங்களில் நல்லவர்களாக இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை பல மணியக்காரர்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள். ஆனால் ஒரு சிலர் தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு தொல்லைகளைத் தருகிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பற்றி அரசு கவனித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வழிவகைகளைக் காண வேண்டும்.

எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்களைத்தான் மணியக்காரர்களாக நியமிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருப்பது நல்ல முடிவாகும். அவர்களை மாற்றுவதற்குக் கூட வழிவகை செய்யப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. தவறு செய்பவர்களை, கிராமத்தில் நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்காக மாற்றக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். அப்படி மாற்றக்கூடிய நிலை இருந்தால்தான் கிராமத்தில் இருக்கும் மணியக்காரர்கள் செல்வாக்குப் பெற்று கிராமத்தை ஆட்டிப்படைக்கும் நிலைமையில் இல்லாமல் இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் வறட்சி ஏற்பட்ட நேரத்திலே வறட்சித் துயர் துடைப்புக்காக பல லட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். குறிப்பாக, குடிதண்ணீர் வழங்கும் பணிக்கு அதிகமான தொகையைச் செலவழித்திருப்பது பாராட்டுக்குரியது. திட்டப்பணி அல்லாது மத்திய அரசுப் பணி என்ற தலைப்பின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், தருமபுரி மாவட்டத்திற்கும் பல நல்ல திட்டங்களை நிறைவேற்றுவது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு கோடி ரூபாய் செலவில் அங்கே தொடங்கி நான்கு ஆண்டுக் காலத்தில் முடிவு அடைய இருக்கிறது என்பதை அறிய என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு கொடுக்கிற உதவித் தொகை மற்ற மாவட்டங்களுக்கும் பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திட்டப்பணி அல்லாத மத்திய அரசு உதவித் திட்டத்தின்கீழ் வடஆற்காடு மாவட்டத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தின்கீழ் சாலைகள் சீரமைப்பு, நீர் வழங்குதல், கால்வாய் சீரமைப்புத் திட்டம், காடு வளர்ப்புத் திட்டம், குளங்களைச் சுத்தப்படுத்தும் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்ற முன்வந்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

அதைப்போலவே, விவசாயத் தொழிலாளர்களுக்கு, நிலச் சொந்தக்காரர்கள் இடத்தில் வீடு கட்டிக்கொண்டு இருந்தால், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் விதத்தில், அந்த இடத்தை அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கே கொடுத்து, உதவும் வகையில் ஒரு திட்டத்தை நம் அரசு உருவாக்கி இருக்கிறது. இந்த

திட்டத்தின் மூலம் உழவர்களுக்கு வீடு வாங்கித் தருவது மட்டுமல்லாமல், நிலச் சொந்தக்காரர்களுக்கு இழப்புத் தொகையும் கொடுக்க அரசு முன் வந்து இருப்பதை நாம் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். இப்படி பல்வேறு நல்ல பல பணிகளை நம்முடைய வருவாய்த் துறை ஆற்றி வந்து இருக்கிறது. மேலும் வருவாய்த் துறை மூலமாக நல்ல பணிகளை ஆற்ற இருக்கும் இந்த அரசின் மானியக் கோரிக்கையைப் பாராட்டி வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் இந்த அவைமுன் வந்திருக்கும் படியான மானியக் கோரிக்கை மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக நம்முடைய அரசாங்கத்தின் சிறந்த திட்டங்களை நிறைவேற்றுவது வருவாய்த் துறைதான். இது எல்லா இலாக்காக்களோடும் தொடர்பு கொள்ளும் இலாகாவாக இருக்கிறது. விவ்சாயிகளுக்கு, விவசாய அபிவிருத்திக்குக் கடன் தரவேண்டுமானால் இந்த இலாகாதான் செய்யவேண்டும். மின் இணைப்பு வேண்டுமானல் கூட ஒனர் சர்டிபிகேட் கேட்டு இந்த இலாகாவிற்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. இந்த வேலைகளை எல்லாம் செய்வதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிற நிலைமை இருக்கிறது. இப்படிக் காலதாமதம் ஏற்படாமல் இருக்க வேண்டிய சில மாற்றங்களைச் செய்வதற்கு ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரெவின்யூ இலாகாவைப் பொறுத்தவரையில், தாலுக்கா அளவில் இருக்கும் நிர்வாகத்தை வட்டார அளவில் அமைத்தால் வேலைகள் துரிதமாக நடைபெற ஏதுவாக இருக்கும். அதாவது பொதுவாக தாலுக்கா அளவில் என்று சொல்லும்போது, வட்டாரத்திலிருந்து தாலூகா, தாலூகாவிலிருந்து டிவிஷன் என்று சொல்லி பல்வேறு அடுக்கடுக்காக அந்த பேப்பர் போய் வரவேண்டியிருப்பதால், மிகவும் காலதாமதம் ஆகிறது. வட்டார அளவில் இருக்குமேயானல் அதிகமான முறையில் பணிகளை காலதாமதம் இல்லாமல் செய்யலாம். அதோடு, வட்டார அபிவிருத்தி வேலைகளை தனியாகவும், ரெவின்யூ இலாகா சம்பந்தப்பட்ட வரையில் தனியாகவும் பணிகள் ஆற்றிடும் வகையில் ஏற்பாடுகள் அமைய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

ஜமாபந்தி முறை ஒழிய வேண்டும். அதை மறுபரிசீலனை செய்ய இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த முறையில் தொடர்ந்து பல விதமான தொல்லைகள் ஏற்படுவதோடு, அந்த வட்டாரத்திலுள்ள அதிகாரிகள், கிராம உத்தியோகஸ்தர்கள், மக்கள் ஆகியவர்களுக்கும் மிகுந்த தொல்லை ஏற்படுகிறது, கஷ்டங்கள் ஏற்படுகிறது. கணக்குகளை தணிக்கை செய்வதற்கு வேறு விதமான முறைகளைக் கையாளலாம். ஆகவே, இதை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சத் தணிப்பு சம்பந்தமாக தீவிர நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். ஒரு இடத்தில் பஞ்சம் ஏற்பட்டு விட்டால், அந்தக் கஷ்டம் மிகவும் சாதாரணமான கஷ்டம் இல்லை. அந்தக் கஷ்டத்தை தவிர்க்கும் முறையில் உடனடியாக செய்யவேண்டிய காரியங்களை, சில





நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமானல், அது முடியவில்லை. காலதாமதம் ஆகிறது. மழை இல்லை, வறட்சி என்று சொன்னல் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அளவில் மாற்றங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டு பருவ மழை தவறி விட்டது. எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஒன்றிரண்டு எடுக்கப்பட்டதே தவிர மேற்கொண்டு அதற்குமேல் ஒன்றும் செய்யவில்லை. வேலைவாய்ப்பு அளிக்க வேண்டிய முறைகளிலோ, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உதவிகளோ துரிதமாக செய்யப்படவில்லை. கோவில்பட்டி, சங்கரன்கோவில், விளாத்திக்குளம், ஒட்டப்பிடாரம் ஆகிய வட்டாரங்களில் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தின் காரணமாக குடி தண்ணீர் வசதி மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. பஞ்சத் தணிப்பு பணிகளுக்கு ஒன்று ரூ. 24;84,000 ஒதுக்கப்பட்டு இருப்பதில், திருநெல்வேலி மாவட்டத்திற்கு என்று ரூ. 1.08 லட்சம் தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இது மிகமிகக் குறைச்சலான தொகையாகும். அந்த வட்டாரத்தில்-குடி தண்ணீருக்காக மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கிணறு வெட்டினல் மட்டும் போதாது, கிணறு வெட்டினல் உப்புத் தண்ணீராக இருக்கிறது. ஆகவே, அந்தந்த வட்டாரத்திலுள்ள கிராம ஊரணிகளை ஆழப்படுத்த ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய போர்டு மெம்பர் அந்தப் பகுதிக்கு வந்திருக்கும்போதுகூடச் சொன்னோம். அதற்குப் பிறகும் வேண்டிய நிதிகளை ஒதுக்கவில்லை. ஒரு ஆண்டு பெய்யும் மழையில் அந்த ஊரணிகள் நிரம்பி, அந்த ஆண்டு பூராவும் தண்ணீர் போதுமானதாக இருக்கும். இந்த ஊரணிகளை சரிவர பல்லாண்டுகளாகப் பராமரிக்காமல் விட்டு விட்டதால், அவற்றில் அதிகமான அளவு தண்ணீர் தேங்க முடியவில்லை. அந்த ஊரணிகளை அதிகமாக ஆழப்படுத்தினல் பஞ்சம் ஏற்படுகிற காலத்தில் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் இருக்கும். ஆகவே, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சம் ஏற்படுகிற நேரத்தில் கடன்கள் வசூல் செய்வதை ஒத்திவைக்கிறோம். இப்படிச் சர்க்கார் கடன், இன்னும் பல்வேறு விதமான கடன்கள் வசூல் செய்வதை ஒத்திவைத்து வருகிறோம். ஆனல் அடுத்த அண்டு வசூல் செய்கிறபோது, ஒத்தி வைத்த ஆண்டுக்கான தவணைத் தொகையையும் சேர்த்து வசூல் செய்யப்படுகிறது. இது விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் மிகுந்த இடைஞ்சலைத் தருகிறது. ஆகவே, இப்படி ஒத்தி வைத்த தவணைத் தொகையை, கடைசி ஆண்டுத் தவணைத் தொகையாக, அதாவது 10 ஆண்டு தவணைகளில் அந்த கடன் முடிகிறது என்று சொன்னல், 11 ஆண்டு கடன் தொகையாக இந்த ஒத்தி வைத்த ஆண்டு தவணைத் தொகையை வசூல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தக்க வகையில் மாற்றங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று தண்டத் தீர்வை என்று போடப்படுகிறது. ஓடை ஆற்று ஓரங்களில் இருப்பவர்கள், சமுத்திரத்தில் சென்று வீணக விழும் தண்ணீரைப் பாசனத்திற்கு என்று பம்புகள் மூலமாகவும், ஏற்றத்தின் மூலமாகவும் எடுத்துச்செல்கிறார்கள். அவர்களிடமிருந்து 1க்கு 10 மடங்கு தண்டத்தீர்வை வசூல் செய்யப்படுகிறது. அந்த தண்டத் தீர்வையை அறவே நீக்கவேண்டுமென்று

[திரு. சோ. கருணைநாதன்] [1971 ஜூலை 6

கிராம மணியக்காரார்கள் தங்களுடைய வசூல்களைச் செய்யும் போது–நான் எல்லோரையும் சேர்த்துக் கொள்ள வில்லை–சிலர் அப்படிச் செய்கிறார்கள், வசதிபடைத்தவர்களை விட்டு விட்டு, வசதி யற்ற ஏழை மக்களைத் துன்புறுத்தி, அவர்களுடைய வீடு வாசல்களை ஜப்தி செய்கிறார்கள். ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்றால், அது அரசாங்கத்தின் உத்தரவு என்று சொல்லுகிறார்கள். இப்படிப் பட்ட நிலைகளை அவர்கள் உருவாக்கியிருப்பதால், கிராம மக்களிடம் கசப்பு உணர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. நான் எல்லா மணியக்காரார்களையும் சொல்லவில்லை. ஒரு சிலர் அப்படி யிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு முதுகெலும்பாக, வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் வகையில் அவர்கள் அரசாங்கப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று கிராம அதிகாரிகளை தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் பிற்பட்ட மக்கள் இருக்கும் பகுதியில் தேவையான எல்லாக் காரியங்களையும் தமிழக அரசு செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம், வருவாய்த் துறை மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். மக்கள் அரசு இது என்பதை நாட்டு மக்களுக்கு நிலைநாட்டும் வகையிலும், வருவாய்த் துறை இலாகாவினர் கிராமப் பெரு மக்களுக்கு நீதி வழங் கிட வேண்டும் என்று மனு நீதி திட்டத்தை நம்முடைய முதல்வர் வகுத்து, அந்த மனு நீதி திட்டத்தின் மூலம் கிராமப் புறங்களில் தீர்க்கப்படாமல் இருந்த பிரச்சினைக்கெல்லாம் தீர்க்கப் பட்டு வருகிறது என்பதையும், அதன் மூலம் நாட்டு மக்கள் இந்த அரசின் மீது நிரம்ப நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த மானியத்தின் மீது பேசும் நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு அதிகாரங்களைப் பரவலாக்கி உடனுக்குடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்பதை நம்முடைய அரசு தனி முயற்சி செய்து வருகிறது. அந்த அடிப்படை யில் இன்றைய தினம் ரெவின்யூ போர்டு ஒன்று தனியாக இயங்கும் முறையில் இருக்கிறது. ரெவின்யூ போர்டு வேண்டாம் அதை ஒழிக்க வேண்டும் என்றும் அந்தப் பணிகள் சர்க்காரின் நேரிடையில் நடை பெற வேண்டும் என்றும் நீண்ட நாளாக இந்த மன்றத்திலேயும், பொதுமக்களாலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வந்திருக்கிறது. இதே சட்ட மன்றத்தில் முன்னால் இந்த இலாகா பொறுப்பேற்றிருந்த வரும் இந்நாள் பேரவைத் தலைவரும் இந்த மன்றத்திலே அறிவித் தார்கள், ரெவின்யூ போர்டு ஒழிக்கப் பட வேண்டிய சட்டம் விரை வில் வரும் என்று. ஆனால் இன்னும் அது நடைமுறைக்கு வராமல் அதந் போர்டு ஒழிப்பு உண்டா இல்லையா என்பது தெளிவாக்காத நிலை இருந்து வருகிறது.

இந்த நேரத்தில் வருவாய்த் துறை அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், நம்முடைய அரசு மக்களுக்கு உள்ள பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காண விரும்புவதால், அந்த அடிப்



1971 ஜூலை 6] [திரு. எஸ். ஆறுமுகம்]

முன்னேற்றத்திற்கு எந்த அளவுக்குக் காரியங்களைச் செய்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய நல்ல காரியங்கள் எல்லாம் தமிழ் நாட்டிலே நடைபெறுகின்ற காரணத்தினால்தான் இன்றைக்கு நம்முடைய முதலமைச்சருக்கும், தமிழக அரசுக்கும் மக்கள் தங்களுடைய ஒருமித்த ஆதரவைக் கொடுத்து வருகிறார்கள்.

அடுத்து, நான் ஒரு ஊராட்சி ஒன்றிய குழுவின் தலைவனாக இருப் பதால், எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் சொன்னதைப் போல, ஒன்றியக் குழுவிலே இருக்கக் கூடிய ஆசிரியர்களை "புது மாறுதல் செய்வதற்கு" அட்ஹாக் கமிட்டி என்ற ஒன்றைப் போட்டு பொது மக்களின் பிரதிநிதிகளை அவமானப்படுத்தும் நிலைமையிலே இருக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூட இந்த மன்றத்திலே அறிவிக்கும் பொழுது சொன்னதைப் போல், "பழைய முறைப்படி இருக்கக் கூடியவர்கள் அவர்கள்" என்ற அளவிலே பொது மக்களின் பிரதிநிதிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தச் சர்க்கார் சோஷலிசக் கொள்கையை நிறைவேற்றுகிறது என்பதற்குச் சான்றாகத் தான், நகர்ப்புற நில வரிச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறது. அடுத்து, தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி சட்டத்தை சீரமைக்க அரசு முடிவு செய்து இருப்பதாக சொல்லப்படுகிறது. $7\frac{1}{2}$ ஸ்டான்டார்டு ஏக்கராவுக்குத் தான் வரியை விதித்திருக்கிறோம் என்கிறார்கள். இது எந்த அடிப்படையிலே கொண்டு வரப்போகிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதிலே விவசாயிகளிடையே குழப்பமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லி, இது எல்லா விவசாயிகளையும் பாதிக்காமல் விவசாய வருமானச் சட்டத்தை கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது)

* திரு. எ. சுவாமிதாஸ்: மாமன்றத் துணைத் தலைவரவர்களே, வருவாய்த் துறை மானியத்தின் மீது நாங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூறலாம் என்று முற்படுகிறேன்.

நமது தமிழ் நாடு இப்பொழுது 13 மாவட்டங்களாக ஆட்சி செய்வதற்காகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் பல மாவட்டங்கள் இன்னும் ஆட்சியை நல்ல முறையில் நடத்துவதற்கு மிகவும் கடினமான முறையிலே இருக்கிறது. காரணம், அதனுடைய பரப்பளவும், மக்கள் தொகையும் அதிகமாக இருப்பது தான். குறிப்பாகச் சொல்லப் போனால் திருநெல்வேலி மாவட்டம் அப்படி இருக்கிறது. அதை இரண்டு மாவட்டமாகப் பிரிக்கலாம். நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பு அதை இரண்டாகப் பிரிப்பதாகக் கூட இருந்தது. அப்படி அதைப் பிரித்தால், இன்னும் ஆட்சி முறை நல்ல முறையில் நடப்பதற்கும், அதன் மூலம் மக்கள் பல நலன்களைப் பெறு வதற்கும் உதவிகரமாக இருக்கும்.

அந்த மாவட்டம் கிட்டதட்ட 30 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருக்கிறது. அதைப் போலவே, மற்ற மாவட்டங்களையும் இரண்டாகப் பிரித்து நல்ல முறையிலே ஆட்சி செய்ய இந்த அரசு

ஆவன செய்ய வேண்டும். முன்பு சேலம் மாவட்டம் பெரிதாக இருந்தது. அப்பொழுது இந்தப் பிரச்சினையை இந்த மன்றத்திலே கிளப்பி, தர்மபுரி மாவட்டம் சேலம் மாவட்டம் என்று இரண்டாக அதைப் பிரித்தார்கள். எனவே, அதையும் இங்கே மனதில் கொண்டு, இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். இதனால் அரசுக்குக் கொஞ்சம் செலவும் அதிகமாக ஏற்படும். அப்படிச் செலவு ஏற்பட்டாலும் கூட, ஆட்சி முறை நல்ல முறையிலே நடக்க அது உதவிகரமாக இருக்கும் என்று சொல்லி, திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து நகர்ப்புற மனைகளுக்கு, ஒரு மனைக்கு மேற்படாத நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் பல தர்மஸ்தாபனங்களுக்கு முன்பு கொடுக்கப்பட்ட வரி விலக்கு ரத்து செய்யப்பட்டுள்ளது. இது பலரையும் பாதிக்கும் என்றுசொல்லிக்கொள்கிறேன். பல்கலைக் கழகத்திற்குக் கூட சொந்தமான நிலம் இருக்கிறது; அது ஒரு மனைக்கு மேலே பல நூறு மனைகளைக் கொண்டதாக இருக்கிறது. அவர்களுக்குக் கூட இச்சட்டத்தினால் இனி வரி கொடுக்கின்ற கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. அதைப் போலவே பல தர்ம ஸ்தாபனங்கள் அதாவது "கான்வென்ட்ஸ்" நகரத்திற்குள்ளே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் வருவாயைப் பெருக்க வேண்டும் என்று நடக்கும் ஸ்தாபனங்கள் இல்லை; மக்களுக்குத் தொண்டு புரிய இயங்கும் ஸ்தாபனம்தான். அவர்களுக்கும் இந்தச் சட்டம் சுமத்தப்படும் நிலையிலுள்ளது. ஆகவே, இதை எல்லாம் இந்த அரசு கவனித்து, எந்தெந்த ஸ்தாபனங்கள் வருவாயைப் பெருக்க வேண்டும் என்று எண்ணுகிறதோ அப்படிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு வேண்டுமானால் வரி போடலாம்; மற்றைய மக்கள் நல ஸ்தாபனங்களுக்கு இந்த வரியை ரத்து செய்வது நல்லது என்று சொல்லிக் கொள்கிறேன்.

முன்பு, இன்றைக்கு ஆளும் தரப்பில் இருப்பவர்கள் எதிர்த் தரப்பிலே இருந்தபொழுது "ரெவின்யூ போர்டை" ஒழிக்க வேண்டும், ஜமாபந்தி முறையை ஒழிக்க வேண்டும் என்று சொன்னார்கள். பிறகு, இந்த முறை சில மாவட்டங்களின் பகுதிகளிலே பரிசீலிக்கப்பட்டு, மீண்டும் ஜமாபந்தி நீடிக்க வேண்டும், ரெவின்யூ போர்டு இருக்க வேண்டும் என்று சொன்னால் அதனால் பல தொந்தரவுகள் இன்றைக்குச் சிப்பந்திகளுக்கு ஏற்படுகிறது என்பதை இந்த அரசாங்கம் உணர வேண்டும்.

ஒரு தாலுகா ஆபிஸில் போய் ஜமாபந்தி நடத்தினால் மேலதிகாரிகளுக்குப் பணிவிடை செய்வதில் நேரம் செலவழிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஜமாபந்தி முறையைத் திரும்பவும் கொண்டுவருவதற்கு உத்தேசித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி அல்ல. ஜமாபந்தி ஒழிப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவும் இல்லை, விட்டுவிடவும் இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தாலுகாவில் ஆரம்பிப்பது என்று திட்டம் போட்டோம். அதனுடைய ரிப்போர்ட்டுகள் மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்து வரவேண்டும். "ரெவ்யூ"



செய்கிறோம் என்று சொல்லும்போது, "மறு ஆய்வு" செய்கிறோம் என்பது தான் பொருள். வேறு ஒரு மாற்றம் என்று போகும்போது அதில் தவறு ஏற்படாது தவிர்க்க, ரெவ்யூ நடந்து கொண்டிருக்கிறது.

திரு. எ. சுவாமிதாஸ்: அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கிராம அதிகாரிகளைப் பற்றிக் கேள்வி நேரத்தில் பல்வேறு அங்கத்தினர்கள் கேள்வி கேட்டார்கள். முன்பு மணியகாரருக்குக் கொடுக்க ஊதியம் ரூ. 51, இப்போது ரூ. 70, கணக்கப்பிள்ளைக்கு முன்பு கொடுத்தது ரூ. 53, இப்போது கொடுப்பது ரூ. 72, தலையாரி, வெட்டியான் ஆகியவர்களுக்கு முன்பு கொடுத்தது ரூ. 45, இப்போது ரூ. 60 வரை கிடைக்கிறது. இதுபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகிறதா?

நான் சொல்லுகிற கருத்து, இந்தக் கிராம அதிகாரிகளை முழு நேர ஊழியர்களாக மாற்ற வேண்டும். அவர்களை முழு நேர ஊழியர்கள் ஆக்கி ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு அலுவலகத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சிறு சிறு கிராமங்களில் வேண்டுமானால் இது முடியாமல் இருக்கலாம். 10 சிறு கிராமங்களை ஒன்றாக இணைத்து அதற்குத் தனியாக ஒரு கிராம அதிகாரி போடலாம். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற முறை நல்ல முறை. பல கிராமங்களைச் சேர்த்து ஒரு "வில்லேஜ்" என்று வைத்திருக்கிறார்கள், அதற்கு ஒரு கிராம அதிகாரி (வில்லேஜ் ஆபீசர்), இரண்டு துணை அதிகாரிகள், ஒரு கடைநிலை ஊழியர் (மீனியல் சொர்வன்ட்) என்று இப்படி அமைத்து, கிராம அதிகாரிக்கு என்று ஒரு அலுவலகம் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கிராம அதிகாரி வரி வசூலிப்பதோடு, கிராமத்திற்கான பொதுக் காரியங்களையும் கவனித்து வருகிறார். இவ்வாறு கிராம அதிகாரிகளை முழு நேர ஊழியர்கள் ஆக்கி, அவர்களுக்கு அலுவலக வசதியும் செய்து கொடுத்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். இப்படிச் செய்தால் அவர்கள் மேல் சாட்டுகின்ற குற்றச்சாட்டுகள் குறையும். கன்னியாகுமரியில் இருக்கின்ற இந்த நிலையை ஆராய்ந்து தமிழகத்தில் மற்ற பகுதிகளிலும் இதைப் பின்பற்றினால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து, பஞ்சத் தணிப்புத் திட்டத்தில் பரவலாகப் பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த மட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் குடிநீர் வசதிக்குக் கிணறுகள் வெட்டி குழாய்கள் அமைத்துத் தண்ணீர் கொடுத்திருக்கிறார்கள். இவ்வாறு பஞ்சத் தணிப்புக்காக லட்சக்கணக்கான ரூபாய் செலவிடுவது ஒரு நல்ல திட்டம். அதோடு அந்தக் குழாய் மூலம் தண்ணீர் கிடைக்கிறதா என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாவட்டக் கலெக்டருக்கு ஒரு உத்தரவு போட்டு, எந்தக் குழாய்க் கிணறு வேலை செய்கிறது, எந்தக் குழாயில் தண்ணீர் வருகிறது, கிணற்றில் நல்ல தண்ணீர் இருக்கிறதா என்று பார்த்து ரிப்போர்ட்டு அரசுக்கு அனுப்பச் செய்ய வேண்டும். தண்ணீர் இல்லையென்றால் அதற்குக் காரணம் என்ன? பல காரணங்கள் சொல்லுகிறார்கள். குறை கூறவேண்டுமென்று சொல்லவில்லை,

[திரு. எ. சுவாமிதாஸ்] [1971 ஜூலை 6

அரசாங்கம் செலவு செய்கின்ற பணம் முழுமையாக பொதுமக்களுக்குப் பயன்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறேன். எனக்குக் கிடைத்த தகவல்படி பார்த்தால் போடப்பட்ட குழாய்கள் எல்லாம் பழைய குழாய்கள், அப்படி நடைபெற்றிருந்தால் அவற்றை நீக்கி விட்டு புதிய குழாய்கள் போடவேண்டும்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள் ...

திரு. எ. சுவாமிதாஸ்: நல்ல எண்ணத்தில் இதைச் சொல்லுகிறேன். இப்படித் தவறுகள் நடக்காதபடி, கண்காணிக்க, மாவட்டக் கலெக்டருக்கு உத்தரவு போடுவது பற்றி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சி முறை பற்றி யாரும் தவறு சொல்லவில்லை. கட்சிக் கண்ணோட்டம் ஆங்காங்கு ஊடுருவதாகக் கூறப்படுகிறது. மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தின் முன்னால், பல அரசியல் வாதிகள் சூழ்ந்து கொண்டு வேலைக்கு இடையூறாக இருக்கிறார்கள். அதை அரசு தடுக்க வேண்டும். அங்கு நேர்மையான முறையில் அதிகாரிகள் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு ......

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் தங்களுக்குத் தெரிந்து யார் என்று சொல்ல வேண்டும். யாரோ சொன்னார்கள் என்பது போல் சொல்லக் கூடாது. ஆதாரம் இருந்தால் அப்படிச் சொல்ல வேண்டுமே தவிர, யாரோ சொன்னார்கள் என்று பேசுவது இந்த அவையின் மரபுக்கு உகந்ததல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ்: யாரோ என்று சொல்லவில்லை. அதிகாரிகளை வேலை செய்யவிடுவதில்லை என்று தான் சொன்னேன், சட்ட திட்டப்படி அதிகாரிகள் வேலை செய்வதற்கு இடையூறாக இருக்கிறார்கள் என்று தான் சுட்டிக் காட்டினேன். இன்னொன்று. ஜீப் கார்கள் பற்றிப் பலர் கூறினார்கள். அவைகளைச் சிக்கனமாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னொன்று வயதானவர்களுக்குப் பென்ஷன் கொடுப்பது பற்றியது. இதற்காக முந்திய அரசு ரூபாய் 20 கொடுப்பது என்று திட்டம் கொண்டுவந்தது. அந்தத் திட்டம் அப்படியே இருக்கிறது. அந்தத் தொகையை உயர்த்தி குறைந்தது 40 ரூபாயாவது கொடுக்க வேண்டும். மற்றவர்களுக்கு குறைந்த பென்ஷன் தொகை என்பது தற்போது 40 ரூபாயாக இருக்கிறது. அதை ரூபாய் 50 என்ற அளவில் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பனையேறு தொழிலாளர், மீன்பிடித் தொழிலாளர் உயிரைப் பணயம் வைத்து அத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். உயிர் போனாலும் பரவாயில்லை என்று இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். பலர் இத் தொழிலில் ஏற்படும் விபத்துக்களில் உயிரிழந்து விடுகிறார்கள். அம்மாதிரி இறந்தவர்களின் குடும்பத்திற்குக் குறைந்தது மூவாயிரம் ரூபாய் வரையில் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



1971 ஜூலை 6] [திரு. பூ. எட்டியப்பன்]

* திரு. பூ. எட்டியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய வருவாய்த்துறை மானியக் கோரிக்கை மீது சில குறிப்பிட விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அதிலேயுள்ள சிறப்பான அம்சங்களை எல்லாம் எடுத்துக் கூறினார்கள். இந்தத் திட்டத்தில் பல நல்ல அம்சங்கள் பாராட்டுகின்ற முறையில் அமைந்திருக்கின்றன என்றால், எதிர் கால நம் வாழ்வுக்கு அவை ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்கின்ற வகையில் உருவாக்கப்பட்டிருக்கிற தென்பது என்னுடைய கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது 1—7—1971 முதல் விவசாய நஞ்சை நிலங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் ஐ.எம்.எஸ். போன்ற வகையில் கடன் கொடுத்து இந்த ரெவ்யூவிலேயே நல்ல பல திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக மனு நீதித் திட்டம்பற்றிச் சொன்னார்கள். கடந்த 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் வட ஆற்காடு மாவட்டத்தில் 2 ஆயிரம் பேருக்குத்தான் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலப் பட்டா வழங்கியிருக்கிறார்கள். தமிழக அரசு வந்து 4 ஆண்டு காலத்தில், இன்றைக்கு கழக அரசு ஒரு லட்சத்திற்கு அதிகமான பேர்களுக்கு நிலமற்ற விவசாயிகளுக்கு நிலப்பட்டா, மனைப்பட்டா எல்லாம் கொடுத்திருக்கிறது. இவ்விதம் கடந்த 20, 25 ஆண்டுகளாக மனுப் போட்டும் நிலம் கிடைக்காத நிலை மாறி இன்று அவர்களுக்கு எல்லாம் நல்ல முறையில் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கிறது. அதோடு கிராம அதிகாரிகளைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன் ......

கிராமங்களிலே உள்ள உழவர்களுக்கு நிலங்களைப் பயிர் செய்வதைத் தவிர, வேறு எந்த ஒரு தொழிலும் தெரியாத காரணத்தாலும், கிராம கர்ணங்கள் அவர்களுக்குப் பட்டா வழங்காமல் இருக்கும் காரணத்தாலும் 20, 30 ஆண்டு காலமாக, அந்த நிலத்திலேயே கிணறுகள் வெட்டிப் பயிர் செய்து கொண்டிருக்கும் நிலையிலும் கூட அந்தக் கிராம அதிகாரிகள் ஒத்துழைக்காத காரணத்தால் அவர்களுக்குப் பல இக்கட்டுகள் ஏற்பட்டு வருகின்றன. இதற்கு அரசு ஏதாவது கவனம் செலுத்தி அவர்கள் ஏதாவது நல்ல பயன் அடையத் தக்க வகையில் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காடு வளர்ப்புத் திட்டம் நல்ல முறையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. நீலகிரித் தைல மரங்கள் போன்ற மரங்கள், பழ வகை மரங்கள் அதிகமாகப் பெருக்கும் முயற்சிகளை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆனால் அதே நேரத்தில் இந்த மரங்களை வைத்துப் பயிர் செய்து விட்டார்களே தவிர, அவைகளுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. இவைகள் அரசாங்கத்தின் நேர் பார்வையில் கண்காணிக்கப்பட வேண்டும். பல ஊர்களிலே பல நேரங்களிலே இந்த மரங்கள் அடியோடு வெட்டி எடுத்துக் கொண்டு போகப் படுகின்றன. தக்க காவல் போட்டு இவைகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களிலிருந்து அரிசனங்களைச் சாதி இந்துக்கள், அந்த நிலங்களிலிருந்து வெளியேற்றி விடுவது பல கிராமங்களிலே நடைபெற்று வருகிறது. இவைகளைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜமாபந்தி முறையைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஒழிக்கவும் இல்லை. எடுக்கவும் இல்லை. என்னுடைய அனுபவத்தைப் பொறுத்த வரையில் ஜமாபந்தி மிக நல்ல முறை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எல்லா ரிகார்டுகளும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்து விடுகின்றன. ஏறத்தாழ 5 நிமிஷத்தில் ஒரு காரியத்தை முடித்து விட முடிகிறது. அந்த ஜமாபந்தி முறை இல்லை என்றால், உண்மையிலேயே மிகவும் கால தாமதமாக ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுக் கடன்களைப் பற்றிச் சொன்னார்கள். கடந்த 2, 3 ஆண்டுக் காலமாக வரட்சியின் காரணமாக, விவசாய மக்கள் தங்கள் நிலங்களின் பேரில் வாங்கப்பட்ட கடன்களைத் திருப்பித் தருவதில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சென்ற ஆண்டு முதல் போகத்தில் பூச்சியினால் பயிர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டன. இரண்டாம் போகத்தில் எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு எலிகள் மிக மோசமான அளவில் உற்பத்தியாகக் கூடிய பயிர்களை நாசப்படுத்தியிருக்கின்றன. எனவே இந்நிலையில் அரசாங்கக் கடன்களை தை மாதம் வரையிலாவது ஒத்திப் போட வேண்டுமென்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கிராம அதிகாரிகளைப் பற்றி ஏற்கனவேயே சொல்லியாகி விட்டது. அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது புகார்கள் வரும்போது அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய கருத்துக்களை எடுத்துரைக்க இந்த மாமன்றத்தில் வாய்ப்புக் கொடுத்ததற்கு என்னுடைய நன்றியைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எஸ். வடிவேல்: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கிராமப் புறத்தில் மக்கள் குறைகளை நேரில் விசாரித்து பரிகாரம் வழங்குவதற்காக மனுநீதி முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த மனு நீதி முறையினால் பரிகாரங்கள் கண்டு விட முடியாது. குறிப்பாக அரசு அலுவலகங்களிலே ஏழை எளிய மக்கள் குறைகளை நேரில் தெரிவிக்க முடியாத நிலை இன்னும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு தாங்கள் குடி இருக்கிற மனைக் கட்டை சொந்தம் என்று ஆக்கி விட்ட இந்த அரசை நான் நெஞ்சார வாழ்த்துகிறேன். அதேபோல் மற்ற மாவட்டங்களிலே இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கும் இந்த வசதியை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





7, 8 ஆண்டு காலமாக, நல்ல உற்பத்தி கொடுக்கக் கூடிய விளை நிலங்களைத் தரிசாகப் போட்டு வைத்திருக்கிறார்கள். 10 ஏக்கர், 8 ஏக்கர் என்ற அளவில் இந்த நிலங்களில் உற்பத்தி எதுவும் செய்யப்படாமல் இருந்து வருகிறது. ஒன்று இவைகளை மனைக்கட்டுகளாக ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் அந்த நிலங்களில் உற்பத்தியாவது பண்ண வேண்டும். இதை நம்முடைய அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மரம் ஏறி தொழிலாளர்கள், மீனவத் தோழர்கள் போன்றவர்களுக்கு அகால மரணம் அடைகிற நேரத்தில் நம்முடைய அரசு மானியத் தொகை தருகிறது. ஆனால் விவசாயத் தோழர்கள் பசுமைப் புரட்சியின் மூலம் உற்பத்திப் பெருக்கத்திற்குப் பாடுபடுபவர்கள் இன்றைக்கு வறுமையில் வாடுகிறார்கள். நம்முடைய நீதிபதி கணபதியா பிள்ளை அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள், தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு வருட வருமானம் ரூபாய் 300 தான் என்று. உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் நவீன கருவிகளை உபயோகப்படுத்தும்போதோ, பூச்சி மருந்து அடிக்கிற காலத்திலோ, இன்னும் அறுவடை காலம், நடவு காலத்தில் நாற்றுக்கட்டை எடுத்துப் போகும்போது வரப்பில் தடுக்கி விழுந்தோ அகால மரணம் அடைந்தால் அவர்களுக்கு எந்தவிதமான நஷ்டஈடும் அளிக்கப்படாத நிலையில் இருக்கிறார்கள். உழவுத் தொழில் மிக உயர்ந்த தொழில். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம், தொழுதுண்டு பின்செல் பவர்" என்று வள்ளுவப் பெருந்தகையார் கூறினர். ஆனால் அந்தத் தொழில் இன்றைக்கு பல்வகையாலும் தாழ்த்தப்பட்டு, "உழுதுண்டு வாழ்வாரே சாவார், செத்து மடிவார், மற்றையோர் தொந்தி பெருத்திருப்பார்" என்கிற நிலைக்கு வந்துவிட்டது. இந்த அரசு அந்த நிலையை மாற்றி–விவசாயத் தொழிலாளர்கள் அகால மரணம் அடைகிறபோது நஷ்டஈடு அளிப்பதற்கான ஏற்பாட்டையும் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தரிசு நிலங்களாக–ஏறத்தாழ இருபது ஆண்டுகாலமாக உப்புக்களராக இருந்த பூமியை விவசாயிகள் தங்களுடைய செய்நேர்த்தியினால் சாகுபடிக்குக் கொண்டுவந்திருந்தால் அந்த அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டும். அதற்குமாறாக இன்றைக்கு அதிகமான அளவு தண்டத்தீர்வை போடுவது சரியல்ல. நகைகள், மாடுகள் ஆகிய மூலதனத்தை விற்று அந்த மண்ணிலே போட்டு ஒரு பக்கம் சாகுபடி செய்ய, மறுபக்கம் மிகுந்த அளவுக்கு அரசு தண்டத் தீர்வை போடுவது–"செம்பும் போச்சுதடா கோவிந்தா, அரிசியும் போச்சுதடா கோவிந்தா" என்கிற நிலையில் அவர்கள் அவதிப்படுவதை அரசு கவனிக்க வேண்டும். பத்தாண்டு, இருபதாண்டாக அப்படிச் சாகுபடி செய்து வருகிறவர்களுக்கே இனமாக அந்த தரிசு நிலத்தை பட்டா வழங்க அரசு முன்வர வேண்டும்.

அடுத்தபடியாக ஜமாபந்தி முறை. இதைப்பற்றி மற்ற அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். அரசும் கவனம் செலுத்தி வருகிறது. அதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை.

அடுத்து, கிராம விவசாயிகள் நிர்வாகத்தினருக்கு தமிழில் ஏதாவது எழுதினால் அவர்களும் அதற்குத் தமிழிலேயே பதில் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதுதான் அதைப் புரிந்து கொண்டு அவர்கள் மேற்கொண்டு அலுவலகம் சென்று தங்கள் காரியத்தைக் கவனித்து வர முடியும். தமிழன்னை கொலுவீற்றிருக்கிற இந்த ஆட்சியில் அதற்கு ஏற்பாடு செய்தால் தான் மிகவும் உதவியாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு பேச வாய்ப்பளித்த உதவித் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நிர்வாக மானியக் கோரிக்கையின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாநிலத்திலுள்ள மாவட்டங்களின் எல்லைகள் எத்தகைய புனிதத்தன்மையும் வாய்ந்தவை அல்ல. இவை நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்றன. ஆகவே எல்லா மாவட்டங்களையும் ஒன்றாகக் கருதி—நிர்வாக வசதி, பரப்பளவு ஆகியவை வைத்து எப்படி மாற்றி அமைக்கலாம் என்பதை யோசித்தாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணமாக திருச்சி ஜில்லாவில் எங்கள் ஊரின் எல்லையில் இருந்து மறு எல்லையோரம் உள்ள பெரம்பலூர் எல்லைக்கு 150 மைல்கள் கடந்தாக வேண்டும். இப்படி சில மாவட்டங்கள் கட்டுக்கடங்காத பரப்பளவு உடையதாக இருக்கிறது. ஒரு பெரிய மாவட்டம் என்றால் அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. எல்லா மாவட்டங்களையும் ஒன்றாகச் சேர்த்து, புதிய முறையில் மாவட்டங்கள் அமையும்படி மாற்றி அமைப்பது நன்மை தரும். அதனால் நிர்வாக வசதி பெருகும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அத்துடனே பட்டா வழங்கும் விஷயத்தில்—குடியிருப்புப் பட்டா வழங்குவது மிகமிக தாமதப்படுகிறது. என்னுடைய சின்னதாராபுரம் ஒற்றைமான்துரை என்ற இடத்தில் மிகமிக ஏழைகள் இருபதாண்டுக் காலமாக குடிசை போட்டுக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். அவர்களும் கடந்த இருபதாண்டுக் காலமாக பட்டா கோரி வருகிறார்கள். நாங்கள் போகும்போது "என்ன ஐயா, இருபது ஆண்டுகளாகக் கோரி வருகிறோம், இந்தப் பேப்பர்களை எங்கே இருக்கின்றன என்று தெரியவில்லை, நீங்கள் உதவக் கூடாதா" என்று கண்ணீர் விடுகிறார்கள். இதுபோல குடியிருப்பு பட்டா வழங்குவதில் காலதாமதம் ஏற்படாதவாறு அரசு தக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும். பள்ளப்பட்டி கிராமத்திலும் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஒன்று, அரசு அதை ஏலத்தில் விடுவது என்றாலும் ஆட்சேபணை இல்லை. எந்தவித உரிமையும் இல்லாது அவர்கள் அங்கே இருக்கிற காரணத்தினால்தான் அவர்கள் கிராம கணக்குப்பிள்ளை, மணியக்காரர்களுக்கு பயந்து ஒடுங்கியே வாழ்கிற சூழ்நிலை ஏற்பட்டு





வருகிறது. இதைத் தவிர்க்க குடியிருப்புப் பட்டாக்களை உடனடியாக அந்தப் பகுதிகளில் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாடு என்னமோ அன்னியர்கள் ஆட்சியிலிருந்து விடுபட்டது உண்மை. ஆனால் கணக்குப்பிள்ளைகளிடம் இருந்து மக்கள் விடுதலை பெறுகிறபோது தான் உண்மையான விடுதலை கிடைத்ததாக ஆகும். எதற்கெடுத்தாலும் லஞ்சம்—எதற்கெடுத்தாலும் கணக்குப்பிள்ளை சர்டிபிகேட் வேண்டும் என்கிறார்கள். போலீசில் ஒரு வழக்கு கொடுப்பது என்றால் கூட அவர் அந்த ஊர்க்காரர் என்பதாக கணக்குப்பிள்ளை சர்டிபிகேட் வேண்டும் என்கிற நிலை இருப்பதன் காரணமாக தொட்டதற்கெல்லாம் காசு—அவர் பேனா சும்மா கையெழுத்துப் போடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காலையில் கேள்வி நேரத்தில் முதல் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு கிராம அதிகாரிகள் எதுவும் கொடுக்காமல் கையெழுத்துப் போடமாட்டார்கள் என்பதாக பொதுவாகச் சொல்வது பொருத்தமாக இருக்காது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கிராமாதிகாரிகளாக இருப்பது பாவமான காரியம் என்பதான கருத்து ஏற்படக் கூடாது. சிலபேர்கள் தவறு செய்யலாம். யார் தவறு செய்கிறார்கள் என்பதை உறுப்பினர்கள் குறிப்பிட்டு எழுதி அனுப்பினால் உடனுக்குடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். எல்லோரும் தவறு செய்கிறார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை. உறுப்பினர் ஏதாவது குற்றச்சாட்டு சொன்னால் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: நான் சொல்ல வந்தது—இந்த மாதிரியாக எதற்கெடுத்தாலும் கணக்குப்பிள்ளை சர்டிபிகேட்தான் வேண்டும் என்பது இல்லாது ஊராட்சி ஒன்றியத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய எங்களுக்கு அதுபோன்ற சர்டிபிகேட்டுகளில் கையொப்பமிட்டு வழங்கும் அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்பதுதான். சர்டிபிகேட் வழங்கும் முறையைக் கணக்குப்பிள்ளைகளிடம் இருந்து மாற்ற வேண்டும். அவர்கள் மீது புகார் செய்கிறபோதும் தாசில்தார், ரெவின்யூ ஆபீசர் விசாரிப்பார் என்பது இல்லாமல் ஆர்.டி.ஓ. லெவலில் மேல்மட்டத்தில் விசாரணைக்கு வழி செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக அரசாங்கத்தில் சீக்ரட்ஃபைல் "Confidential file" கையாளப்படுகிறது. கீழுள்ள சிப்பந்திகளைப்பற்றி மேலதிகாரிகள் சொந்த விருப்புவெறுப்பின் காரணமாக, சமய உணர்ச்சியின் காரணமாகப் பல சந்தர்ப்பங்களில் பாதகமாக எழுதி வைத்து விடுகிறார்கள். அது சிப்பந்திகளின் பதவி உயர்வைப் பாதிக்கிறது; அவர்கள் எங்களிடம் சொல்கிறார்கள். ஆகவே மேலதிகாரிகளின் சொந்த விருப்பு வெறுப்புணர்ச்சி, சமய உணர்ச்சிக்கே இடமளிக்காத வகையில் சீக்ரட்ஃபைல் முறையையே எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முதியோர் ஒய்வு ஊதியங்களைப்பற்றி இங்கே சொல்லப்பட்டது. இந்த அரசு மக்கள் நலனிலே முழுமையான அக்கறை கொண்ட அரசு. சில கிராமங்களில் வயது வந்தவர்கள், முதியோர்கள் சந்ததியில்லாதவர்கள் பிச்சையெடுத்து வாழ்கின்ற அவல நிலையில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஒய்வு ஊதியங்களை வழங்க வேண்டும். ஒரு கிராமத்தில் இத்தனை பேருக்குத்தான் ஒய்வு ஊதியம் என்ற அளவு சொல்லாமல், ஒரு எல்லைக்கோட்டை நிர்ணயிக்காமல் வயதானவர்களுக்கு ஒய்வு ஊதியம் வழங்கப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரட்டக்கூடிய பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியிலிருந்தாவது ஒரு சிறிது எடுத்து, ஐம்பது, அறுபது வயதானவர்கள் சந்ததியில்லாத முதியோர்கள் யாராய் இருந்தாலும், நிச்சயமாக அவர்களுக்கு அரசாங்கம் மானியம் அளிக்கும் என்கிற நிலைமையை உண்டுபண்ண வேண்டும் என்று இந்த அரசாங்கத்தை மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். ஒருசிலருக்கு மட்டும் முதியோர் ஒய்வு ஊதியம் கொடுக்காமல், வயதானவர்கள் அனைவருக்கும் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மனு நீதி முறையினால் பலன் இருப்பதாகத் தெரியவில்லை. அதிகாரிகள் கிராமங்களுக்குச் செல்லும்போது, அவர்களிடம் "குடி தண்ணீர் இல்லை, கிணறு ஆழப்படுத்த வேண்டும், பட்டா கொடுக்க வேண்டும்" என்ற முறையில் ஆயிரக் கணக்கான மனுக்களை கிராம மக்கள் கொடுக்கிறார்கள். நாங்கள் கிராமங்களுக்குப் போனபொழுதுகூட சுமார் 200 மனுக்கள் எங்களிடம் கொடுக்கப்பட்டன. கிணற்றில் தண்ணீர் இல்லை யென்றால் நாங்கள் என்ன செய்ய முடிகிறது? நாங்கள் அதிகாரி களைப் பார்த்துக் கேட்கிறோம். கிராமங்களில் இப்படிப்பட்ட கோரிக்கைகள் வருகின்றனவே தவிர, கோரிக்கைகள் தீர்க்கப்பட்ட தாகத் தெரியவில்லை. இப்படி மனுநீதி முறை குறையுள்ளதாகச் செயல்படுவதைவிட, மனுநீதித் திட்டமே தேவைதானா என்ற அளவுக்கு கேள்விக்குறி, தாமதத்தால் ஏற்படும் குறையால் எழுகின்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மனு நீதித் திட்டமே தேவையில்லை என்ற தவறான கருத்தைச் சொல் கிறார். மனுநீதி திட்டத்தினால், நிறையப் பலன் இருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் மனுநீதித் திட்டம் நடத்துகின்ற இடத்தில் ஒருதரமாவது சென்று, அதிகாரிகளின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பார்க்க வேண்டும். நான்கைந்து ஆண்டுகளாகப் பட்டா வழங்காதவை எல்லாம் இப்போது அந்த இடத்திலேயே பட்டா வழங்கப்படுகிறது. அதில் எந்தவிதமான புகாரும் இல்லை. எல்லோரும் மனுநீதித் திட்டத்தைப் பாராட்டுகிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு மட்டும் அதைப் பாராட்ட மனம் இல்லை. மனுநீதித் திட்டம் இல்லாமல் இருப்பது மேல் என்று சொல்கிறார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது எல்லாம், உடனுக்குடன் காரியங்கள் ஆற்றப்பட வில்லையென்று தான், முழுமையாக நீக்கப்பட வேண்டுமென்று சொல்லவில்லை. அங்கத்தினர்கள் சொன்ன குற்றச்சாட்டுகளை



யெல்லாம் அரசு ஆராய்ந்து தக்க முடிவுகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள் கிறேன்.

* திரு. என். கணபதி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய ஆதரவைத் தெரிவித்து, ஓரிரு கருத்துக்களைத் தெரிவித் துக் கொள்கிறேன். இந்த மாவட்ட ஆட்சித் துறையில் சாதாரண மாக முதுகெலும்பாக விளங்கக்கூடியவர்கள் வருவாய்த் துறை அதிகாரிகள் என்ற கருத்து வரவேற்கக்கூடிய கருத்தாகும். அரசின் கொள்கைகளை, குறிப்பாக மாண்புமிகு கலைஞர் அவர்கள் தலைமையில் சமதர்ம சோஷலிசத்தை உருவாக்க வேண்டுமென்ற முயற்சிக்கு, சாதாரண கிராமங்களிலே, மூலைமுடுக்குகளிலே எல்லாம் சென்று பரப்ப கிராம மக்கள் அரசு ஆற்றுகின்ற நற்பலன்களை அனுபவிக்க வேண்டுமானால், கிராம மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டு மானால் அதற்குக் கட்டுக்கோப்பான "அட்மினிஸ்ட்ரேடிவ் மெஷினரி"–நிர்வாக யந்திரம்–செயல்பட வேண்டும். அது ஒரு அச்சாணியாக விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையல்ல. மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். அவருக்குக் கீழே பணியாற்று கின்ற பல்வேறு அதிகாரிகள் அரசாங்கத்தின் கொள்கையை நடை முறைப்படுத்தி வருகிறார்கள். இந்த அதிகாரிகள் அரசாங்கத்தின் திட்டங்களையும், கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தி, அதனால் கிடைக்கிற பலன்களை, நன்மைகளை கிராம மக்களுக்கு ஏற்படுத்தித் தருவதிலும் ஒத்துழைக்கிறார்கள் என்பதை உணர்ந்து நாம் அவர் களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இருந்தாலும், நிர்வாக யந்திரம் மேலும் மேலும் சீர்ப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத் தால் ஓரிரு கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

ஊராட்சி மன்றங்களில் உள்ளாட்சி என்ற துறை இருக்கிறது. கிராம அளவில் உள்ளாட்சிக்கு நிர்வாக அதிகாரி இருக்கிறார். யூனியனைப் பொறுத்த அளவில் பி.டி.ஓ. இருக்கிறார், கமிஷனர் இருக் கிறார். டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்து ஆபீசர் என்பவர் கோட்ட அளவில் இருக்கிறார். மாவட்ட அளவில் ஆய்வாளராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். மாநில அளவில் டைரக்டர் ஆஃப் ரூரல் டெவலெப்மென்ட் என்பவர் இருக்கிறார். இத்தனை பேரும் ஒன்றோ டொன்று கட்டுக்கோப்பாக இயங்க வேண்டுமானால் பஞ்சாயத்து நிர்வாகத்திலே, உள்ளாட்சி நிர்வாகத்திலே பக்குவப்பட்ட, பண் பட்ட, பயிற்சி பெற்ற அதிகாரிகள் மேலும் மேலும் இந்தக் கிளைக்குத் தேவை. அவர்கள் இப் பணிகளில் ஈடுபடுகின்ற நேரத்தில் கிராமங்களில் கிராம அதிகாரி, மாவட்ட அளவிலே மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் போகாமல், மாநில அளவில் டைரக்டர் ஆஃப் ரூரல் டெவலெப்மென்ட் என்பவருக்கு கோரிக்கைகளை அனுப்பலாம். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பதிலாக டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்து ஆபீசர் என்பவருக்கே இந்தப் பணிகளை– உள்ளாட்சித் துறையை–ஒதுக்கித் தந்தால் உள்ளாட்சித் துறைப் பணிகள் சீர்படுத்தப்பட்டு, நல்ல முறையில் நடக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பணியை ஏற்றுக் கொண்டு செயல்படவில்லை யென்று யாரும்

[திரு. என். கணபதி] [1971 ஜூலை 6

தவருகக் கருதிவிடக் கூடாது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பலதரப்பட்ட பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் முற்போக்குக் கொள்கைகள் சம்பந்தமாகப் பல நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. மேலும் மாவட்டத்திற்குத் தலைமை தாங்கி உழைக்க வேண்டியிருக்கிறது. அவருக்கு மேலும் தொல்லைதரக் கூடாது என்ற காரணத்தினுல்தான். இந்த இலாகாவை எடுத்து, உள்ளாட்சித் துறையில் அனுபவமிக்க ஒருவரைப் போடுவது சாலச் சிறந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இப்படிச் செய்தால், கீழ்மட்டத்தில் பணியாற்றுகின்ற அதிகாரிகள் பதவி உயர்வு பெற்று, நல்ல முறையில் சேவை செய்வதற்கான வாய்ப்பும் அவர்களுக்குக் கிடைக்கும்.

கிராம நல ஊழியர்கள், கிராம சேவகர்கள் இருக்கிறுர்கள். அவர்களுக்கு என்று குறிப்பிட்ட பணி ஒன்றும் இல்லை. குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் நடைபெற வேண்டுமானுல், அந்த ஊழியர்கள் கிராமங்களின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று அந்தத் திட்டத்திற்கு ஆதரவு திரட்டுகிறுர்கள். மக்களை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஈடுபடுமாறு அவர்களை அழைத்து வந்து அரசாங்க மருத்துவ மனையிலோ, தனியார் மருத்துவ மனையிலோ சேர்த்து, அறுவை சிகிச்சை செய்வதற்கு ஒத்துழைக்கிறுர்கள். ஆனுல் இவர்கள் செய்கின்ற இந்தப் பணியெல்லாம் இவர்களுடைய கணக்கில் சேருவதில்லை. பி.டி.ஓ. ஆபீசில் ஏஜுகேடார்—குடும்பக் கட்டுப்பாடு பிரசாரகர் என்பவர் ஒருவர் இருக்கிறுர். கிராம சேவகர்கள் செய்யும் பணியெல்லாம் அவருடைய கணக்கில்தான் சேருகிறது. கிராம சேவகர்களுடைய உழைப்பை யெல்லாம் தன்னுடைய உழைப்பாகக் கணக்கு காட்டுகிறுர். (all the credit goes to the block educator) என்று என்னிடத்தில் குறைப்பட்டுக் கொண்டார்கள். கிராம சேவகர்களுக்கு என்று நிர்ணயமான பணிகளை நிர்ணயித்து, குறிப்பிட்ட பணிகளில் அவர்களை ஈடுபடுமாறு செய்தால், அவர்கள் செம்மையாகப் பணியாற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல திட்டப் பணிகளை ஊக்கமாக நிறைவேற்ற அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

கிராமநல ஊழியர்கள் பதவி உயர்வு பெற வாய்ப்புக் கிடையாது. ஊராட்சி மன்றங்களில் கிரேடு–2. எக்சிக்யூடிவ் ஆபீசர் இருக்கிறுர். கிராம சேவகருக்கும் கிரேடு-2. ஆபீசருக்கும் சம்பளத்தில் வித்தியாசம் கிடையாது. இதை யெல்லாம் கவனித்து, அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்க வழி செய்ய வேண்டும்.

அடுத்து, ஐந்து ஏக்கருக்குக் குறைந்த நிலங்களுக்கு வரியை ரத்து செய்திருக்கிறது. அதை நாம் ஆதரிக்கிறேம். வரியைத் தாங்கக் கூடியவர்களுக்குத்தான் போடுவோம் என்பது நம்முடைய அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. (irrespective of holdings) ஐந்து ஏக்கருக்கு வரி கிடையாது என்று சொல்லுகிறுர்கள். ஐந்து ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்களுக்கு வரி விலக்கில்லாமல் வரி விதிக்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு அரசாங்கம் செய்யும் முயற்சிகளைப் பாராட்டுகிறேன்.



1971 ஜூலை 6] [திரு. என். கணபதி]

நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்குகின்ற நேரத்தில் நிலங்களை 3 ஏக்கரிலிருந்து $1\frac{1}{2}$ ஏக்கருக்குக் குறைத்திருக்கிறுர்கள். $1\frac{1}{2}$ ஏக்கரில் விவசாயம் செய்து என்ன பலனைப் பெற முடியும்? ஆகவே, விவசாயிகளுக்கு 3 ஏக்கர் என்ற அளவில் நிலம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புறம்போக்கு நிலங்களை அரசு விவசாயத்திற்கு மற்றவர்களுக்கு—லீஸ்—குத்தகைக்கு விடுகின்ற நேரத்தில் குறைந்த பட்ச "நாமினல் ரேட்" ஆகப் போட வேண்டுமே தவிர, பெரிய அளவில் வரி போட்டு வாங்குகின்ற நிலைமை இருக்கிறது. ஒரு விவசாயி 3 ஏக்கர் நிலம் பெற்றிருந்தால் வாடகை 20 ரூபாய் என்று இருந்தது. இப்போது 240 ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்த விவசாயி 3 ஏக்கர் நிலத்திலே சாகுபடி செய்து, ஆண்டு ஒன்றுக்கு 240 ரூபாய் வரி செலுத்தக் கூடிய நிலைமை இருக்கிறது. இதுபோன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. விவசாயத்திலே நாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி உணவிலே தன்னிறைவு எய்த வேண்டுமென்ற கொள்கைக்கு மாறுக பீனல்ரென்ட் என்ற அளவிலேதான் இது இருக்கிறது. எனவே இதையெல்லாம் நம்முடைய அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு மனை போன்றவைகள் பதிவு செய்யப்படுகின்ற நேரத்திலே குறைந்த மதிப்புள்ள கட்டணத்தைக் கொடுத்துப் பதிவு செய்கிறுர்கள். ஒவ்வொரு ஊரிலும், அல்லது ஒவ்வொரு பகுதியிலும் எவ்வளவு மதிப்பு போட்டுப் பதிவு செய்யவேண்டுமென்று பார்த்து ஒரு கட்டணத்தை நம்முடைய அரசாங்கமே தன்னுடைய வருவாய்த் துறை அலுவலர்களைக் கொண்டு நிர்ணயித்து இருக்கிறது. அந்தக் கட்டணம் சரிவர வாங்கப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதில்லை. எப்படி மாவட்ட நீதி மன்றங்களைத் தலைமை நீதிமன்றத்தைச் சேர்ந்தவர்கள் ஆண்டுக்கொரு முறை வந்து சரிபார்க்கிறுர்களோ அதே போன்று இங்கேயும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் ரிஜிஸ்ட்ரேஷன் அல்லது டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்ட்ரார் அங்கங்கே உள்ள சப் ரிஜிஸ்திரார் ஆபீஸ்களுக்குச் சென்று அடிக்கடி அங்கே ஸ்டாம்ப் கட்டணம் ஏமாற்றப்படாமல் வாங்கப்பட்டிருக்கின்றதா, ஒழுங்கீனங்கள் நடைபெறுமல் இருக்கின்றதா என்பதைக் கண்காணிக்க ஒரு திட்டத்தை ஏற்படுத்தி அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய ஆதரவை இந்தக் கோரிக்கைக்குத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. துரை. கோவிந்தராசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகத்தைப்பற்றி இந்த மன்றத்திலே பேசிய உறுப்பினர்கள் அத்தனைபேர்களும் நல்ல பல கருத்துக்களைச் சொல்லி இருக்கிறுர்கள். குறிப்பாக மாவட்ட ஆட்சி நிர்வாகம் பற்றி பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருந்தாலும் காலத்தாலே வளர்க்கப்பட்ட மாவட்ட ஆட்சி நிர்வாகம் இரண்டையும் உள்ளடக்கிய ஒன்றுக இருக்கின்ற காரணத்தினுலே, குறிப்பாக ரெவின்யூவையும் பஞ்சாயத்துக்களுடைய நிர்வாகத்தையும், ஒன்றுகச் சேர்த்து உள்ளடக்கி இருக்கின்ற காரணத்தினுலே அதனுடைய அலுவல்கள் வரவரப் பெருகிக் கொண்டு வரும்பொழுது, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் [illegible]க்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவருடைய

பொறுப்புகள் எவ்வளவு பெருகியிருக்கிறது என்பதையும், விவசாயப் பெருமக்களைச் சந்தித்து ஒவ்வொரு நேரத்திலும் பல நன்மைகளைச் செய்வதாகக் கருதி விவசாயிகளுக்குப் பல்வகைச் சலுகைகளைச் செய்ய வேண்டுமென்றும், அதே நேரத்திலே ஊராட்சி மன்றங்களின் பல்வேறு காரியங்களிலும் ஈடுபட்டு பல நல்ல பணிகளைச் செய்ய வேண்டுமென்றும் கருதி வருகின்ற நிலைமை இருப்பதால் வரவர வளர்ந்து வருகின்ற அந்தத் துறையின் அலுவல்கள் விரிவாக்கப்பட்டு, அலுவல்கள் அதிகமாக்கப்பட்டு எல்லாவகையான பொறுப்புகளும், ஒரே இடத்திலே இருப்பதால் பல இடையூறுகள் ஏற்படுகின்ற நிலை இருப்பதால், ரெவின்யூ சம்பந்தப்பட்டவற்றையும், பஞ்சாயத்து சம்பந்தப்பட்டவற்றையும், தனித்தனியாகப் பிரித்து இப்பொழுது இருக்கிற தஞ்சையை மேலத் தஞ்சை, கீழ்த் தஞ்சை என்று சொல்கிற அளவிலே, எப்படி டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டங்கள் தனித் தனியாக நடக்கின்றனவோ அதைப்போல்—ஒன்றுக்கொன்று பிரிக்க இயலவில்லை என்றாலும்கூட அந்த நிலைமையைப் போக்க கிராம வளர்ச்சி அதிகமாக ஏற்பட அதிகாரிகளைப் போட்டு முன்னேற்றம் காண்பற்கு அரசாங்கம் முயல வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் முக்கியமான பிரச்னை கிராம அதிகாரிகள்தான். அவர்களுடைய பணி பல நல்ல வேலைகளுக்குக் கிட்டுகின்ற வகையில் அவர்கள் முழு நேர ஊழியர்களாக ஆக்கப்பட்டு அவர்களுக்குப் பதவி உயர்வு அளித்து அந்தந்தக் கிராமங்களிலே வளர்ச்சி ஏற்படுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் கூறியதைப்போன்று நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்து கிராம சேவர்களுடைய நிலைமையைப் பார்த்தால் அவர்களுக்கு என்ன என்ன வேலைகள் என்று குறிப்பிடப்படவில்லை. அந்தக் கிராமத்தில் என்ன வேலை நடந்தாலும், அது ரெவின்யூ வேலையாக இருக்கலாம், பஞ்சாயத்து வேலையாக இருக்கலாம், கூட்டு மன்ற வேலையாக இருக்கலாம், அறுவைச் சிகிச்சை வேலையாக இருக்கலாம், எந்த வேலையாக இருந்தாலும் கிராம சேவகர்கள் ஈடுபடவேண்டுமென்ற நிலைமையை மாற்றி அவர்கள் தங்களுடைய பணிகளைச் செவ்வனே செய்து வந்தாலும், கிராமங்களிலிருந்து பற்பல சலுகைகளைப்பெற்று வந்தாலும் அவர்களுக்குப் பதவி உயர்வு இல்லை என்பதால் பதவி உயர்வு அவர்களுக்கு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்ச நிவாரணம் என்று பேசுகின்றபொழுது—தஞ்சை மாவட்டத்தை குறிப்பாக சோழவளநாடு சோறுடைத்து என்று சொல்லப்படுகின்ற அந்தத் தஞ்சை மாவட்டத்தின் கந்தர்வ லோகத்தினுடைய கந்தர்வ கோட்டையின் சட்ட மன்ற உறுப்பினராக நான் இருக்கின்றேன்—அந்தத் தொகுதியில் பஞ்சம் என்று சொல்கின்றபோது மாவட்ட ரீதியாகப் பஞ்ச நிவாரணத் தொகைகள் ஒதுக்கப்பட்டாலும் பஞ்சைப் பராரியாக இருக்கின்ற அந்தப் பகுதி வளமற்றுக் காணப்படுகின்ற அந்தப் பகுதி, நான் சார்ந்திருக்கின்ற





அந்தப் பகுதி புதுக்கோட்டையில் ஒரு பகுதியையும், திருச்சியில் ஒரு பகுதியையும் இணைத்திருக்கின்ற அந்தப் பகுதி ஒரு வகையிலே மட்டும் பின்தங்கியிருக்கிறது என்று சொல்லிவிட முடியாது.

இன்னும் மன வேதனையோடு நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன், கல்வி வளர்ச்சி குன்றியிருக்கின்றது, அது மட்டுமல்ல, பழைய மனிதன் போராடிய வீரப் பரம்பரை—மனிதனுடைய வீரத்தைச் சோதித்துப் பார்ப்பதற்காக மாடுகளைப் பிடித்துக் கொண்டு வந்தால் வீரம் வெளிப்படும் என்று நினைத்தார்கள்—அப்படிப்பட்ட முறையில் மாடு இன்றும் பிடிக்கப்படுகின்றது, அது ஒரு தொழிலாகவே இருக்கின்ற அந்தப் பகுதியில் தண்ணீர் இல்லாத காரணத்தினாலே கல்வி வளர்ச்சி இல்லாத காரணத்தினாலே ஏறத்தாழ 25 அல்லது முப்பது மைல் சுற்றளவுள்ள 100 அல்லது 150 கிராமங்கள் பின்தங்கிய நிலைமையில் இருக்கின்றன. இதைப்பற்றி நான் பல்வேறு அமைச்சர்களிடமும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். 25—6—1971 அன்று மாவட்ட ஆட்சித் தலைவரையும், மற்ற மற்ற பல்வேறு அதிகாரிகளையும் பார்த்து அந்தப் பகுதிகளின் நிலைமைகளைப் போக்க வேண்டுமென்ற முறையிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. வீரத்திலே விளைந்த தொழிலாக இன்று இருப்பதை மாற்றி முந்திரி முள் நிரம்பிய பகுதியாக இருப்பதை மாற்றி, சோழ வளநாட்டிலே இருக்கின்ற அந்தப் பின்தங்கிய பகுதி நன்கு செழிக்க வேண்டும், ஓங்க வேண்டுமென்பதை மனத்திலே கொண்டு நல்ல பணிகளை அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டம் என்றாலே எங்கும் பச்சைப் பசேலென்று இருக்கின்றது என்ற எண்ணத்தைக் கொண்டுவிடாமல் பரந்து பட்டொளி வீசுகின்ற அந்தச் செம்மண் பகுதியைக் கொஞ்சம் பார்த்து அந்தப் பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தம் என்ற வகையிலே நில வள வங்கிகள் 20 சத விகிதம் தொகையை அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சில பகுதிகளிலே காடு மேடாக இருக்கின்ற பகுதியிலே கல்பாறை நிரம்பியிருக்கின்ற பகுதியிலே அந்தத் தொகை போதாமல் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகின்றது, அது மாவட்ட ரீதியாக அளிக்கப்படுகின்றது, அப்படி அளிக்காமல் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கின்ற முதியோர்களுக்குப் போதுமான அளவில் பயன்படும்படி மாநில ரீதியாக எல்லாவற்றையும், ஒன்றாக்கி அந்தத் தொகையைக் கொஞ்சம் உயர்த்தி அளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு என்று மாவட்ட ரீதியாக அரசாங்கத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்குப் பகுதி பகுதியாகப் பிரித்து மானியக் கிணறுகள், வீட்டு வசதி போன்ற பலவற்றைச் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மேலத் தஞ்சையில் இருக்கின்ற கிராமங்களில் மானியக் கிணறுத் திட்டம் கிடையாது என்றும், கீழ்த் தஞ்சையில் இருப்பவர்களுக்குத்தான்

[திரு. துரை. கோவிந்தராசன்] [1971 ஜூலை 6

இப்போது மானியக் கிணறு திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். தண்ணீர் பெருகி ஆற்று வெள்ளம் ஏற்படுகின்ற பகுதியில் மானியக் கிணறுகளைத் தோண்டிக் கொண்டிராமல், தண்ணீரையே பார்த்திராத விவசாய மக்கள் உள்ள பகுதியை முன்னேற்றும் வகையில் மேலத் தஞ்சையில் உள்ள பகுதிகளுக்கும் குறிப்பாக அறந்தாங்கி, கந்தர்வகோட்டை, பட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு உதவி செய்து கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் மானியக் கிணறுகளைத் தோண்டிக் கொடுப்பதோடு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகப் பல சலுகைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதி மக்கள், அந்தப் பகுதியின் நிலைமைகளையும் பற்றி எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில் ஒவ்வொரு மாவட்டமும் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னதாக இருந்த நிலை மாறி இன்றையதினம் பொறுப்புகள் அதிகரித்திருக்கின்ற நிலையில் ஒவ்வொரு துறைக்கும் தனித் தனி அலுவலர்கள் போடப்பட்டு காரியங்கள் நடந்து வருகின்றன. உணவுப் பொருள் உற்பத்தியில் தன்னிறைவு ஏற்படும் அளவுக்கு விவசாய அபிவிருத்தி ஏற்படும் வகையில் விவசாயப் பெருங்குடி மக்கள் பாடுபட்டு வருகிறார்கள். அரசும் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். அதன் காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவரையும், ரெவின்யூ அதிகாரிகளையும் அனைவரும் நாட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். அதே போன்று பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்தவரை பல்வேறு பணிகள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு ஒதுக்கப்பட்ட தொகை சிறு சிறு காரியங்களைச் செய்ய மட்டுமே போதும் என்ற நிலையில் இருப்பதால் பல்வேறு காரியங்களை உடனடியாகச் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் துணையாக உயர் அதிகாரி ஒருவரைப் போட்டு அப்படிப்பட்ட காரியங்களை விரைவில் செய்து முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சி. வே. வேலப்பன் : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகமும் வருவாய்த் துறையும் என்ற அளவில் பார்ப்போமானால் நாட்டிலே நடைபெறுகின்ற அத்துணை காரியங்களையும் மாவட்ட அளவில் நிர்வாகமும், வருவாய்த் துறையும் செம்மையாகச் செயல்பட்டால்தான் நாட்டில் நல்ல பல காரியங்களைச் செய்ய முடியும். இத்தனை காரியங்களுக்கும் அடிப்படையாக இருப்பது நம்முடைய வருவாய்த் துறைதான். இப்படிப்பட்ட இந்தத் துறையிலே அதிகாரங்கள் பரவலாகப் பிரிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படிப் பார்க்கும்போது என்னுடைய பகுதியில் இருக்கும் நாமக்கல் வட்டமானது பெரிய வட்டமாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை ஏராளமாக வந்து பொறுப்பில் இருப்பவர்கள் அதற்குத் தக்க நடவடிக்கைகளை



1971 ஜூலை 6] [திரு. சி. வே. வேலப்பன்]

எடுத்தும் என்ன காரணத்தாலோ காலதாமதம் ஏற்பட்டு நடைமுறையில் இன்னும் செயல்பட முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். அதனை விரைவில் செய்து தரவேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால் வட்டத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற வட்ட ஆட்சித் தலைவர்கள், கோட்டாட்சித் தலைவர்கள் டூர் புரோகிராம் போட்டுக் கொண்டு ஒவ்வொரு ஆபீசாகச் செல்லுவதற்குத்தான் சரியாக இருக்கிறதே தவிர, சரியான முறையில் பணியாற்ற முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எப்படி விவசாயி நாட்டின் முதுகெலும்பு என்று கருதுகிறோமோ அது போலவே இந்த மாவட்ட நிர்வாகமும் ஒரு நாட்டின் நிர்வாகத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது.

எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் பலர் விவசாயிகளுடைய பிரச்சினையைப் பற்றி அதிகமாக எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய பகுதியில் காவேரியிலும், பிரிவு வாய்க்கால்களிலும் இருந்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்த விவசாயிகளுக்கு அனுமதி இல்லாமல் தண்ணீர் எடுத்தார்கள் என்று தண்டத் தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது. புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அனுபவித்து வருகின்றவர்களுக்கும் பட்டா செய்து கொடுக்கும் நிலையும், குடியிருப்பவர்களுக்கு வீட்டு மனையைப் பட்டா செய்து கொடுக்கும் நிலையும் இருக்கிறது. அப்படி இருந்தும் தண்ணீர் எடுத்துப் பாசனம் செய்த விவசாயிகளுக்குத் தண்டத் தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி அமைச்சர் அவர்களிடத்தில் ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தண்ணீர் எடுத்துப் பாசனம் செய்பவர்கள் அனைவரையும் அனுமதிக்கலாமா கூடாதா என்பதிலே ஒரு கட்டுப்பாடு விதிக்க வேண்டும். கீழ் கிராமங்கள் பாதிப்பு ஏற்படுவதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். எப்படிப்பட்ட சூழ்நிலையில் தண்ணீர் எடுக்கப்படுகிறது என்று பார்த்து கீழ் மட்டங்களில் இருக்கும் அதிகாரிகள் உடனடியாகத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் நாலைந்து ஆண்டுக் காலமாக ஒவ்வொரு விவசாயியும் தங்களுடைய சக்திக்கு மீறிய செலவுகளைச் செய்துவிட்ட பிறகு, எட்டு பத்து ஆண்டுக் காலமாகப் பாசனம் செய்து புஞ்சைகளை நஞ்சைகளாக மாற்றிய பிறகு 20 மடங்கு தண்டத் தீர்வை விதிப்பதால் அவர்கள் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். குரங்கு கையில் பொட்டலத்தைக் கொடுத்தால் அதைப் பிரித்தும் பார்க்காமல், கீழேயும் விட்டெறியாமல் வைத்துக் கொண்டிருப்பதுபோல் அவர்கள் நிலத்தை வைத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்குத் தண்டத் தீர்வை விதிக்கப்படுவதன் காரணமாக அந்த விவசாயிகள் மிகவும் மோசமான நிலைக்கு ஆளாக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே பணக்கார விவசாயிகள்தான் இருக்கிறார்கள் என்பது சரியல்ல. நூற்றுக்கு ஐந்து சதவிகிதம் அல்லது பத்து சதவிகிதம் வேண்டுமானால் பணக்கார விவசாயிகளாக இருக்கலாம். 90 சதவிகிதத்தினர் சிறு விவசாயிகள்தான். எது நியாயம் என்று பார்த்து அந்த விவசாயிகளுக்கு வழி செய்ய வேண்டும். அந்த விவசாயிகள் அந்த நிலத்தை விட்டு விட்டும் போக முடியாது. தொழில் நடத்துபவர்கள் நடத்த முடியவில்லை என்றால்

கடையை இழுத்து மூடிவிட்டுப் போய்விடுவார்கள். ஆனால் விவசாயிகள் அப்படிப் போக முடியாது. ஆகவே, விவசாயிகளுக்கு மிக முக்கியமாக இருக்கின்ற மாடுகள் போன்றவற்றை ஜப்தி செய்யக் கூடாது. உழவு மாடுகளை ஜப்தி செய்துவிட்டால் அவன் மறுபடியும் பணத்தைக் கட்டும் வரையில் உழவு மாடுகளுக்கு என்ன செய்வான்? ஆகவே, உழவு மாடுகளை ஜப்தி செய்யும் நிலைமையோ, மோட்டாரைக் கழற்றும் நிலைமையோ இருக்கக் கூடாது. மற்றத் துறைகளில் இருப்பவர்களுக்குச் சலுகை காட்டவில்லை என்று சொன்னாலும் விவசாயிகளுக்குச் சலுகை காட்ட வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு வருமான வரி என்று போட்டு இருக்கிறோம். விவசாயிகள் எல்லோரும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் அல்ல. அவர்கள் கணக்கு வைத்துக்கொள்ள மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் வருமானம் கம்பௌண்டிங் வரம்புக்குள் வரவில்லை என்று கருதி 10,000–15,000 என்று போடுகிறார்கள். அப்படிப் போடுவது நீக்கப்பட்டு அவர்களுக்கு வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இப்போது கிணறு வெட்ட லோன் கொடுக்கிறோம். அது அரைக்கிணறு தோண்டுவதற்குரிய நிலையில் தான் உள்ளது. கிணறுகள் எந்த இடத்தில் வெட்டினால் தண்ணீர் வரும் என்பதை ஆராய்ந்து சொல்ல, ஒரு ஆய்வாளரை அரசாங்கம் போட வேண்டும். அவர்கள் சொல்கிற இடத்தில்தான் கிணறு வெட்ட வேண்டும். கிணறு வெட்டுவதற்குத் தேவையான அளவு பணம் கொடுக்க வேண்டும். கிணறு வெட்டிய பிறகு தண்ணீர் வரவில்லை என்று சொன்னால், அந்த லோன் தொகை தள்ளிக் கொடுக்கும் நிலை ஏற்படுத்தியாக வேண்டும். இல்லையென்றால் இருப்பதை விட்டுக் கெஞ்சும் நிலைக்கு விவசாயிகள் வந்துவிடுவார்கள். அரசாங்கத்திடம் கடன் கேட்டு மனு போட்டால் அதிக காலதாமதம் ஆகிறது. இந்தக் காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும்.

அரசாங்க நிலத்தில் குடி இருப்பவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க 3–4 ஆண்டுகள் காலதாமதம் ஆகிறது. இப்படிப்பட்ட குறைகள் நீக்கப்பட வேண்டும். மலைப்பிரதேசத்தில் பட்டா செய்யும் போது ஒரு கஷ்டம் இருக்கிறது. மலைப் பிரதேசங்களில் மரங்கள் அதிகமாக இருக்கின்றன. ஒரு இடத்தைப் பட்டா செய்யும்போது, நிலத்திற்கு மதிப்பு ரூ. 1,000 என்று சொன்னால், அந்த நிலத்தில் இருக்கும் மரங்களின் மதிப்பு ரூ. 2,000 என்று சொல்லி, அதையும் சேர்த்து வசூலிக்கிறார்கள். மரத்தின் விலையை நீக்கி விட்டு, பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : துணைச் சபாநாயகர் அவர்களே, இங்கே சபையிலே வைக்கப்பட்டு இருக்கிற 9 மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கான நேரம் மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தால் இங்கே பிரதானமான........





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எவ்வளவு நேரம் வேண்டும்?

திரு. எம். சுரேந்திரன் : ஒரு 10–15 நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 16 நிமிடம் பேசுங்கள் (சிரிப்பு).

* திரு. எம். சுரேந்திரன் : நிர்வாகத்திலேயே சிறந்த துறையாக இருக்கும் வருவாய்த் துறையைப் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வருவாய்த் துறைக்கு மிகவும் பிரதானமாக இருப்பவர்கள் கிராமங்களிலே உள்ள கிராம அதிகாரிகள். இந்தக் கிராம அதிகாரிகள் தான் அந்த வருவாய்த் துறைக்கே அஸ்திவாரமாக இருக்கிறார்கள். இது தான் அன்று முதல் இன்று வரை இருந்து வரும் நிலைமையாகும். அந்தக் கிராம அதிகாரிகளைப் பற்றி நிறையப் பேர் பேசினார்கள். அவர்கள் மீது குற்றம் சொல்ல விரும்பவில்லை. ஒவ்வொருவரும் பேசும்போது அந்தத் துறையைத் தொட்டுப் பேச வேண்டிய நிலைமை ஏற்பட்டது. காரணம் பாரம்பர்யமாக அந்தத் துறை அப்படிப்பட்ட நிலைமையில் இருந்து வருகிறது. ஆகவே, கூடி இருக்கும் மேடுகளைச் சரி செய்யுங்கள், அங்கே இருக்கும் குப்பைகளை விலக்கி ஒழுங்கு படுத்தினால் தான் அந்தத் துறை சரியாக இயங்கும் என்பதால் தான் அதைப்பற்றி ஒன்று இரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

கிராம அதிகாரிகள் என்று சொன்னால் கிராமத்தில் இருக்கும் ஒவ்வொரு நபரும் அவருடைய தயவை நாடாமல் வாழ்வதற்கு முடியாது என்ற நிலைமை இருக்கிறது. ஒரு வீட்டில் மரணம் ஏற்பட்டால், ஒரு வீட்டில் ஜனனம் ஏற்பட்டால், ஒருவருக்கு ஒருவன் சண்டை ஏற்பட்டால், ஒரு நிலத்திற்குத் தரம் தீர்வை போட வேண்டுமானால் எல்லாவற்றிற்கும் இந்த கிராம உத்தியோகஸ்தரின் தயவைத் தான் நாட வேண்டியிருக்கிறது. ஒருவருக்குப் புறம்போக்கு நிலத்தைப் பட்டா செய்யவேண்டுமென்று சொன்னால் அதற்கும் இவரிடம் தான் செல்லவேண்டியிருக்கிறது. இப்படி அந்தத் துறையை எடுத்துக் கொண்டால் அந்த கிராம அதிகாரியின் தயவு இல்லாமல் கிராமத்தில் வாழ முடியாது என்ற நிலைமை இருக்கிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும். அப்படி அமைந்து இருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட வேலைகளுக்காக கிராம மக்கள் அவரிடத்தில் செல்லும்போது, அவருக்கு ஆதரவாக இருக்க வேண்டியிருக்கிறது. அதிலே நல்லவர்கள் இருக்கிறார்கள், கெட்டவர்கள் இருக்கிறார்கள். நல்லவர்கள் கூட கெட்டவர்கள் ஆகும் வாய்ப்பும் இருக்கிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தக் கதையை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1971 ஜூலை 6

திரு. எம். சுரேந்திரன் : நான் இவ்வளவு பேர் கூறியதையும் ஏற்றுக்கொள்கிறேன். அதைச் சொல்லியது குற்றச்சாட்டுக்காக அல்ல. கிராம அதிகாரிகள் ஒழுங்காக இருக்க வேண்டுமென்பதற்காகத் தான் சொன்னேன். அப்படி ஒழுங்காக நடப்பதற்கு என்னென்ன வழிகள், முயற்சிகள் செய்ய வேண்டுமோ அதை யோசித்துச் செய்வது தான் சரியானது. இன்னொன்றும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அப்படி இருப்பதற்குக் காரணம் ஏதாவது தாசில்தார் ஒரு கிராமத்திற்கு முகாம் செய்கிறார், ஆர்.டி.ஓ. முகாம் செய்கிறார் என்றால், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் அவர்களுக்கு வேண்டிய இதர காரியங்கள் எல்லாம் கிராம அதிகாரிகள் தான் செய்ய வேண்டி இருக்கிறது. அதற்காகப் பணத்தை அவர்கள் எங்கே இருந்து கண்டுபிடிப்பார்கள் ? அப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்காக, இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. இது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. வெகு காலத்திற்கு முன்பே இத்தகைய நிலை இருக்கிறது.

இந்தக் கிராம அதிகாரிகள் தான் நிர்வாகத்தின் அஸ்திவாரமாக இருக்கிறார்கள் என்பதற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த தேசத்தில் 5 ஆண்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதற்கு எங்கே இருந்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப் படுகின்றன என்றால், கிராமத்திலுள்ள இந்தக் கிராம அதிகாரிகளிடமிருந்து தான். இந்தப் புள்ளி விவரங்களைத் தயாரிப்பவர்கள் கிராம அதிகாரிகள்தான். அவர்கள் வீட்டில் இருந்தபடியே எல்லாம் செய்து விடுகிறார்கள். இப்படி இருக்கும் நிலையில் அவர்கள் தரும் புள்ளி விவரங்கள் எந்த நிலையில் இருக்கும் என்று பார்க்க வேண்டும்.

அதோடு, வரி விதிக்கும் முறை இருக்கிறது. கிராம ரிகார்டுகளில் பல வருஷங்களாக இருக்கின்றன. கிராம ரிகார்டுகளில், புறம் போக்கு என்றால், அது மந்தைப் புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு, சாலைப் புறம்போக்கு என்று பல விதமாக இருக்கிறது. அப்படி ரிகார்டில் இருந்தாலும், அது வெகு காலத்திற்கு முன் இருந்த நிலைமையைக் குறிக்கிறது. அந்த நிலங்கள் பல்லாண்டுக் காலமாக விவசாயம் செய்யப்பட்டு, பிற்பாடு கிணறுகள் வைத்து, தென்னை, மா மரங்கள் வைத்து வளர்த்து இருக்கிறார்கள். ஆனாலும் ரிகார்டில் புறம்போக்கு என்றே குறிப்பிட்டிருக்கிறது. தடுக்கப்பட்ட நிலங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரிகார்டில் அப்படியிருப்பதால், அன்று முதல் இன்று வரையில் அவற்றிற்குத் தண்டத் தீர்வை போட்டு வருகிறார்கள். அது சரியானது அல்ல. அனுபவத்தில் அவை பல வருடங்களாக விவசாயத்தில் இருந்திருக்கிறது. அப்படி விவசாயம் செய்கின்ற நிலங்களுக்குத் தண்டத் தீர்வை போடுகிறார்கள். அப்படிப் போடும்போது, சிவாஜிமா நிலமாக இருந்தாலும் 5 ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லி, அதற்கு மேல் இருக்கும் நிலத்திற்குத் தண்டத் தீர்வை போடுகிறார்கள். வெகுகாலமாக அனுபவத்தில் இருக்கிறதே என்று அடையாளத் தீர்வையாகவும் போடுவதில்லை. அடையாளமாக ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்றிருந்தால் பரவாயில்லை ........



1971 ஜூலை 6]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தண்டத் தீர்வை போடுவதைக் குறைக்க வேண்டும் என்கிறார்கள். அப்படிச் செய்தால் எல்லோரும் ஆக்ரமிப்பார்கள். ரிகார்டுகளில் புறம்போக்கு என்றிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நிலங்கள் ஒருவருக்குப் பட்டா செய்து கொடுக்கும் வரையில், ரிஜிஸ்டரில் புறம்போக்கு என்றுதான் இருக்கும். அதை மாற்றி அமைக்க உத்தரவுகள் போடும் வரையில் அப்படித்தான் இருக்கும். அதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. தண்டத் தீர்வை போடுவது தவறு இல்லை. அவர்களுடைய இடத்தில் ஒரு புதுச் சிக்கல் இருக்கிறது. 10, 15, 25 ஏக்கர் என்று ஆக்ரமித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதற்குத் தண்டத் தீர்வை போடாமல் எப்படி இருக்க முடியும்? அப்படியே அவர்களுக்கே பட்டா செய்து கொடுப்பது என்பதும் அரசாங்க விதி முறைகளுக்கு முரணானது. 10, 12 வருடமாக உழுது கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அப்படியே பட்டா செய்து கொடுக்க முடியாது. அரசாங்க விதிப்படி எவ்வளவு கொடுக்க முடியுமோ அந்த அளவில் கொடுத்து விட்டு, எஞ்சியதற்குத் தண்டத் தீர்வை விதிக்க வேண்டும். சீக்கிரத்தில் பட்டா கொடுக்க சீக்கிரமாகவே நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. எம். சுரேந்திரன் : அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி கூறுகிறேன். ஆனாலும்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதிலும் "ரிவர்" புறம்போக்காக இருந்தால், பட்டா கொடுக்க முடியாது.

திரு. எம். சுரேந்திரன் : துணைச் சபாநாயகர் அவர்களே, மற்ற காரியத்தைப் போல் என் தொகுதியிலும் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. நிலங்கள் மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதும் எனக்குத் தெரியும். நான் அந்த நிலங்களைப் பற்றி மட்டும் கூறவில்லை. அதிக நிலங்களை வைத்திருப்பது சரி என்று வாதாடவில்லை. ஆனால் தண்டத் தீர்வை போடுவதை ஊக்கப் படுத்துவது சரியாகாது. இன்றைக்கு அவர்கள் 20 மடங்கு தீர்வை போடுகிறார்கள்.

இன்னொரு நிலையும் இருக்கிறது. என் பகுதியில் மராமத்து இலாகா நிலம் ஏராளமாக இருக்கிறது. அணை கட்டும் காலத்தில் பொதுப்பணித் துறையினால் எடுத்திருக்கும் நிலங்கள். அதற்குப் பின்னால் நிலங்கள் தேவையில்லாமல் போய் விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி சின்னகாலூர், தொட்டில் பட்டி, பி.என். பட்டி ஆகிய பஞ்சாயத்துக்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. அவர்களை யெல்லாம் வெளியேற்ற வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டு, அதில் இரண்டு விவசாயிகள் கூட உயர்நீதி மன்றத்தில் ரிட் போட்டிருக்கிறார்கள். மற்ற பகுதிகளிலும் விவசாயம் செய்கிறார்கள். அதற்கெல்லாம் 20 மடங்குத் தண்டத் தீர்வை போட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் ரெவின்யூ அதிகாரிகள் குத்தகைக்கு நிலத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னதற்கு விவசாயிகள் இணங்காமல் இருந்தது

தான் காரணம். தண்டத் தீர்வை குறைவாக இருப்பதால், குத்தகைக்கு எடுக்கவில்லை. அதிகமான தண்டத் தீர்வை போட்டால் தான் குத்தகைக்கு எடுக்கும் வழி ஏற்படும் என்று என்னிடத்தில் சில அதிகாரிகள் சொன்னார்கள். அது நியாயம் இல்லை. அணைகட்டும் காலத்திலிருந்து, அதே நிலத்தில் அவர்கள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வெளியேற்றுவது அவசியமானால் அவர்களுக்கு வனவாசி, பக்கநாடு போன்ற இடங்களில் நிலம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இவை வீடு கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட நிலம். அது 62 விவசாயிகளைப் பாதிக்கிறது. நிலம் இல்லாத விவசாயிகளுக்கு நிலம் கொடுத்து, தண்டத் தீர்வை முறைகளை நீக்கி அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, அணைத் தேக்கம் இருக்கிறது. தேக்கத்தால் அணைக்கு முன்னால் விவசாயம் செய்கிறவர்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மேட்டூரிலிருந்து வெகுதூரம் வரையில் குதிரைவாலி போன்ற சிறு தானியங்களை விவசாயம் செய்து ஏழைகள் ஜீவனம் செய் கிறார்கள். இப்பொழுது நில அரிப்பைத் தடுக்க நடவடிக்கையாக மரங்கள் வைக்க ஏற்பாடு செய்து அதனால் நிலம் இழந்தவர்கள் ஏராளமானவர்கள் அதிகமாகத் தீர்வைப் போடப்பட்டிருக்கிறார்கள். அணையின் தண்ணீர் வடிந்த பின்பு தண்ணீர் தேக்கப் பகுதிகளில் விவசாயம் செய்வது அதைத் தூர்த்துவிடும் என்று தெரிய வருகிறது. பின்னால் விவசாயத்திற்குத் தண்ணீர் கொடுக்க முடியாமல் இருக்கக் கூடாது என்கிற கருத்தும் இருக்கிறது. ஆனாலும், இவர்கள் நீண்ட நெடுங்காலமாக விவசாயம் செய்து கொண்டிருக்கிறவர்கள், இவர் களுக்கு வேறு நிலம் இல்லை. இவர்களுக்குத் தாங்க முடியாத தண்டத் தீர்வை போட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு ஏதாவது உதவி செய்ய வேண்டும், அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த மேட்டூர் தொகுதியிலே இருக்கின்ற "தண்டத் தீர்வை யைப்" பற்றிச் சொல்லும்பொழுது, மூன்று வருஷங்களாக "தடை ஆணை" பெறப்பட்டு அது நின்று கொண்டே இருந்தது. இப் பொழுது சில மாதங்களுக்கு முன்னால், அந்தத் தடை ஆணை நீக்கப் பட்டிருக்கிறது. அந்த மூன்று வருஷங்களாகச் சேர்த்து வைக்கப் பட்டிருக்கின்ற தண்டத் தீர்வையை வைத்து அதை ரத்து செய்ய வேண்டுமென்று அதிகாரிகளிடம் கேட்டோம். ஆனால் அதை நீக்க நடவடிக்கை எடுத்தார்களோ என்னவோ, அது சம்பந்தமாக ஒன்றும் தெரியவில்லை. ஏற்கனவே 20 மடங்கு போட்டு விட்டதால், மீண்டும் அதே அளவுதான் போட முடியுமே தவிர, அதைவிட்டு விட்டு குறைத்துப் போட முடியாது என்று சொல்லுகிறார்கள். எனவே, நிலத்தின் மீது தண்டத் தீர்வை போடுவது அந்தக் குறிப் பிட்ட விவசாயியைத் தண்டிக்கப் போடுவதில்லை. ஒரே இடத்திலே தான் அவர்கள் விவசாயம் செய்கிறார்கள்.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தண்டத் தீர்வை போடுவது தண்டிக்கப் போடுவது தான். நிலத்தைத் தவறாக உபயோகிப்பதால் தான் தண்டத் தீர்வை போடப்படுகிறது என்பதை உறுப்பினர் அவர்கள் உணர வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன்: வெறுமனே கிடக்கும் நிலத்தை விவசாயத்திற்குக் கொண்டு வருவதோ, காலி நிலத்திலே வீடு கட்டுவதோ ஒரு பெரிய குற்றமாக கருதப்படாத நிலையிலேதான் நாம் நடந்து வந்திருக்கிறோம். அப்படித் தான் ஒவ்வொரு பகுதியும், வீடாகவும், விவசாய நிலங்களாகவும் மாறியிருக்கிறது. மற்ற குற்ற காரியங்களைப் பார்க்கும் அளவிலே இதை நாம் பார்ப்பதில்லை; அப்படி பார்க்கவும் கூடாது. அந்த விவசாய மக்கள் தாங்கக் கூடிய தண்டனையாக, சாதாரண தண்டனையாகப் போட வேண்டும். அவர் களுக்கு, வேறு ஏதாவது ஒரு பாதுகாப்பான வழியைக் காட்டி, அதன் மீது அவர்களைப் பாதுகாக்கின்ற முயற்சியை இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, வீடுகள் சம்பந்தமான பிரச்சினை. ஏற்கனவே, மேட்டூரிலே இருக்கின்ற வீட்டு மனைகள் அங்கே இருக்கின்றவர் களுக்கு வழங்க உத்தரவிட்டு, அதற்கான நடவடிக்கை 1954-லே இருந்து தொடர்ந்து வந்திருக்கிறது. அதற்காக ஸ்பெஷல் கலெக்டர், ஸ்பெஷல் தாசில்தார் போட்டாகி வேலைகள் நடந்து வருகிறது. இன்றைக்கு 1971-ஆம் வருஷம் ஆகியும் அந்த வேலைகள் பூர்த்தி ஆகவில்லை. ஆங்காங்கே வீடு இல்லாதவர்கள் தாங்கள் இருந்த இடத்திலே கட்டும் வீடுகளை இடித்து விடுகின்ற டவுன்ஷிப் கமிட்டி, பி.டபிள்யூ.டி. இலாக்கா போன்றவை அங்கிருக்கும் மக்களுக்குச் சங்கடங்களை உண்டாக்குகின்றன. அங்கே இருக்கின்ற வீட்டு மனைகளுக்கு விலை குறைவாக இருக்க வேண்டும் என்று, நமது முதலமைச்சர் அவர்கள் கடந்த வருஷம் மே மாதம் அங்கே வந்த போது கேட்டுக் கொண்டார்கள் அங்கிருந்த மக்கள். அந்த வீட்டு மனைகளின் விலையை நான்கில் ஒரு பங்காகக் குறைப்பது என்றும், அங்கே இருக்கின்ற ஹரிஜனங்களுக்கு வீட்டுமனை வழங்குவதிலே சலுகைகள் கிடைக்கும்படி தாம் செய்வதாயும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொதுக் கூட்டத்திலே பேசும் பொழுது அறிவித்து வந்தார்கள். ஆனால், இதுவரையில் அந்த மனைகளுக்கு விலையைக் குறைத்து உத்தரவு வந்ததா என்றால், இல்லை. எனவே, அங்கே பல பேருக்குப் பட்டா தர அதிகாரிகள் தயாராக இருந்தாலும்கூட, அதற்கெல்லாம் பட்டா வழங்க முடியாத நிலைமை இருக்கிறது. இந்த வேலைகளை விரைவிலே நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். புதிதாக இப் பொழுது நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் வழங்கும் பொழுது புன்செய் நிலமாக இருந்தால் 3 ஏக்கர் என்றும், நன்செய் நிலமாக இருந்தால் $1\frac{1}{2}$ ஏக்கர் என்றும் தரலாம் என்று புதிதாக உத்தரவு போடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் உரையிலே குறிப்பிட் டார்கள். நாம் நிலம் வழங்கும் பொழுது இருக்கும் நிலத்தின் அளவு குறைந்து வருவதால், இம்மாதிரியான உத்தரவு போடப்பட்டிருப் பதாகக் கூறப்படுகிறது. நாம் நிலம் வழங்குவது அவர்கள் வாழ் வதற்கு அந்த நிலம் பயன்பட வேண்டும் என்பதற்காகத்தான் அதை

வழங்குகிறோம். நம்முடைய விவசாயப் புள்ளி விவரக் கணக்குகளைப் பார்த்தால், ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தை எடுத்துக் கொண்டு, பயிரிட்டு அதிலே வருவதை வைத்துக் குடும்பத்தை நடத்த முடிகிறதா என்றால், இல்லை. குறைந்த பட்சம் எவ்வளவு நிலம் இருந்தால், ஒருவன் நிலத்தின் செலவுகளை எல்லாம் கழித்து வரும் வருமானத்திலே குடும்பத்தை நடத்த முடியும் என்பதற்கான புள்ளி விவர மதிப்பீடு நம்மிடம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உறுப்பினர் அவர்கள் அப்படி எவ்வளவு நிலம் ஒருவர் வைத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறார் என்பதை இந்த அவையிலே சொல்லட்டும்.

திரு. எம். சுரேந்திரன் : ஏற்கனவே, நிலம் வழங்குவது என்றால் புன்செய் என்றால் 5 ஏக்கராவும், நன்செய் என்றால் $2\frac{1}{2}$ ஏக்கராவும் தரலாம் என்று உத்தரவு இருக்கிறது. நிலம் இல்லாதவர்களிலே யார், யாருக்குத் தரவேண்டும், எந்தெந்த வரிசைப்படி தரவேண்டும் என்ற விதி முறைகள் இருக்கின்றன. அதை அப்படியே வைத்துக் கொண்டிருப்பதுதான் நல்லது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நிலம் வழங்குவதிலே ஏற்கனவே 5 ஏக்கர் புன்செய், $2\frac{1}{2}$ ஏக்கர் நன்செய் என்றிருந்ததை 3 ஏக்கர் புன்செய், $1\frac{1}{2}$ ஏக்கர் நன்செய் என்று குறைத்திருக்கிறோம். நிலம் என்பது நம்மால் உற்பத்தி செய்யக் கூடிய ஒன்றல்ல. இருக்கின்ற நிலத்தைப் பிரித்து கொடுத்துக் கொண்டே இருக்கிறோம். நிலம் கேட்கின்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகப் பெருகிக் கொண்டே இருக்கிறது. சமுதாய, சமதர்ம கொள்கையோடுதான் எல்லோருக்கும் நிலம் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் 3 ஏக்கர் புன்செய், $1\frac{1}{2}$ ஏக்கர் நன்செய் என்று ஆக்கியிருக்கிறோம். இப்படிக் கொடுப்பதன் மூலம் பலருக்கு நிலம் கொடுக்க முடியும்; அதை விடுத்து அப்படிக் குறைத்திருப்பது அந்த நிலங்களை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல என்பதை உறுப்பினர் அவர்கள் உணர வேண்டும். இப்படிச் செய்தால் ஒருவருக்குக் கொடுப்பதை இரண்டு பேருக்குக் கொடுக்கலாம் என்பதற்காகத்தான் அப்படி மாற்றப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : பணிவுடன் கூறும் என்னுடைய வேண்டுகோளை அமைச்சர் அவர்கள் செவி சாய்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் நிலம் தருவது எல்லோருக்கும் நிலம் தந்தோம் என்ற புள்ளிவிவரங்களைக் காட்டுவதற்காகத் தருவதில்லை. எல்லோருக்கும் நிலம் தருவது என்பது சாத்தியமில்லை. நாம் நிலம் தருவது நிலம் பெறுபவர்கள் பயன் பெற வேண்டும் என்ற அடிப்படையிலேதான் தரவேண்டும். நம்மால் நிலம் கொடுக்க முடியாதவர்களுக்கு வேறு வேலைகளைத் தர முயற்சி செய்ய வேண்டும்; அதற்கான வழி வகைகளைக் காண வேண்டும். இந்த முறையிலே தான் நிலம் வழங்க வேண்டும். நான் சொல்லுவது எல்லாம், எந்த நோக்கத்திற்காக நாம் காரியம் செய்கிறோமோ அந்த





நோக்கம் நிறைவேற வழி இல்லாமல் போகிறது என்பதுதான். எனவே, இது சம்பந்தமாக என்னுடைய கருத்தைப் புனர் ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்த 3 ஏக்கர் புன்செய், $1\frac{1}{2}$ ஏக்கர் நன்செய் என்று உத்தரவிட்டதற்குப் பிறகு, பல இன்னல்கள் விவசாயிகளுக்கு வந்து விட்டது. வனவாசி பக்கநாடு போன்ற இடங்களிலே நிலம் வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, அங்கே யார் யார் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள்? எந்தெந்த விவசாயிகளுக்கு நிலம் வழங்குவது என்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முடிவானதற்குப் பிறகு, அவர்களுக்குப் புன்செய் 5 ஏக்கர், நன்செய் 3 ஏக்கர் என்று தீர்மானம் ஆனதற்குப் பிறகு, இந்தப் புதிய உத்தரவிற்குப் பிறகு மீண்டும் நிலங்களைக் குறைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுவும் 3 ஏக்கர் புன்செய் என்று சொல்லப்படுகின்ற அந்த விஸ்தீரணம் இருக்கிறதே அது சம நிலத்திலே இல்லை. அது காடான பகுதியிலே, கல்லும் முள்ளும் இருக்கும் பகுதியிலே கொடுக்கப்படுவதாகக் கூறுவது, ஏற்கனவே அவர்கள் அனுபவித்து வந்த நிலத்தைவிட மிகக் குறைவான நிலத்தை இப்படிக் கொடுப்பது, அவர்களுக்கு உதவி செய்வதாக இருக்காது. அவர்களுக்குக் கவலையை, துன்பத்தை கொடுப்பதாகத்தான் இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நிலம் கொடுக்கின்ற வனவாசி பக்கநாடு பகுதியிலே ஏற்கனவே அதிக நிலம் கொடுக்க சர்வே செய்யப்பட்டு விட்டது, இப்பொழுது குறைத்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றார் உறுப்பினர் அவர்கள். இப்பொழுது மாற்றப்பட்டிருக்கும் உத்தரவுப்படித் தான் நிலம் கொடுக்கப்படும். கேட்பவர்கள் எல்லோருக்கும் கொடுக்க முடியாவிட்டாலும், எவ்வளவு பேருக்கு அதிகமாகக் கொடுக்க முடியும் என்பதைத்தான் பார்க்கிறோம். எனவே, ஒவ்வொருவருக்கும் புன்செய் என்றால் 5 ஏக்கர் நன்செய் என்றால் $2\frac{1}{2}$ ஏக்கர் என்றிருந்ததை புன்செய் என்றால் 3 ஏக்கர், நன்செய் என்றால் $1\frac{1}{2}$ ஏக்கர் என்று கொடுக்கிறார்கள். வனவாசி பக்கநாடு பகுதிகளிலே பலர் 10 ஏக்கர், 20 ஏக்கர் என்று உழுது கொண்டே இருக்கிறார்கள். அதை எல்லாம் பார்த்துக் கொண்டு அப்படியே இந்த அரசு விட்டுவிட முடியாது. எனவே தான் இந்த மாற்றம். இதை உறுப்பினர் அவர்கள் வரவேற்பார் என்று நான் நம்பியிருந்தேன். அவரே இதை எதிர்க்க ஆரம்பித்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : இந்த அரசின் சம தர்மக் கொள்கையை நான் வரவேற்கிறேன். சமதர்மம் என்றாலே மக்கள் நல்ல வாழ்வு வாழக் கூடிய ஒரு நிலையே ஆகும். எனவே, இப்படிக் குறைத்துக் கொடுக்கப்படும் நிலம் நல்ல வாழ்வு வாழப் போதுமானதாக இல்லை என்பது தான் என்னுடைய வாதம். எனவே, நீங்கள் செய்திருக்கின்ற காரியம் நல்ல காரியமில்லை. அதிகப் பேருக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுப்பது நல்ல காரியம் இல்லை என்று நான் இங்கே சொல்ல வரவில்லை. நான் சொன்னவற்றை கவனத்திலே கொள்ள வேண்டும் அமைச்சர் அவர்கள் என்று கூறிக் கொள்கிறேன்.

[திரு. எம். சுரேந்திரன்] [1971 ஜூலை 6

அடுத்தாற்போல், இந்த மாவட்ட நிர்வாகம் சம்பந்தமாக ஓரிரு வார்த்தைகளைக் கூறிக்கொள்கிறேன். இன்றைக்கு வருவாய்த் துறை என்றால், அந்த வருவாய்த் துறையின் தலைவரான மாவட்ட தலைவரின் கவனத்திற்கு வராமல் எந்த காரியமும் மாவட்டங்களிலே செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. நாம் இன்றைக்கு அதிகாரங்களைப் பரவல் செய்யும் நிலையில் எண்ணிக் கொண்டிருக்கும் காரணத்தினால் இந்த மாவட்ட அதிகாரிகளுக்கு இருக்கும் அதிகாரத்தைப் பரவல் செய்வது மிகத் தேவை என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு கிராமப் பணி என்று எடுத்துக் கொண்டாலும் சரி அல்லது சுகாதாரப் பணி என்று எடுத்துக் கொண்டாலும் சரி அல்லது பாசனப் பணி என்று எடுத்துக் கொண்டாலும் சரி, எந்தப் பணியும் மாவட்ட அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு செல்லாமல், அவருடைய அதிகாரத்திற்கு உட்படாமல் ஒரு காரியமும் செய்வதற்கு சாத்தியமில்லை என்ற முறையிலே ஒரே இடத்திலே அதிகாரம் குவித்து வைக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். அப்படிக் குவித்து வைத்திருப்பது இன்றைய நிலைமைகளுக்குப் பொருந்துவதாக இல்லை. எனவே, அந்த அதிகாரங்களை அந்தந்தத் துறை அதிகாரிகளுக்குப் பரவலாகக் கொடுத்து, மாவட்ட அதிகாரியின் அதிகாரத்தைக் குறைக்க வேண்டியது மிக அவசியமானது என்று சொல்லிக் கொள்கிறேன். அடுத்தாற்போல், நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக இதிலே கூறப்பட்டிருக்கிறது. நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி ஏற்கனவே ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் ஒரு கமிட்டி அமைக்கப் பட்டது. அதற்குப் பிறகு மலைப் பகுதிகளிலே இருக்கின்ற விவசாய நிலங்களையும், மற்ற நிலங்களையும் எல்லாம் எவ்வளவாக வைத்துக் கொள்ளலாம், எப்படி வைத்துக் கொள்ளலாம் என்பது பற்றி அந்தக் கமிட்டி ஆராய்ந்து அதை இந்தச் சர்க்காருக்கு ஆலோசனையாகக் கூறி, அதற்குப் பிறகு சட்டங்கள் கொண்டுவரப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அவைகள் எதுவுமே நடைபெறவில்லை; அதற்காக மேற்கொண்டு நடவடிக்கைகள் எதுவுமே எடுக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். எப்படி இருந்தாலும் கூட, மலைப் பகுதிகளிலே இன்றைக்கு விவசாய நிலங்கள் ஒவ்வொருவர் இடத்திலும் ஏராளமாக இருக்கின்றன. இந்த நிலங்களை, அதுவும் மலைப் பகுதி விவசாய நிலங்களை, இன்னும் அதிக காலம் தனிப்பட்ட முறையிலே வைத்துக் கொண்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டு வருகிறது. கேரளத்திலே கூட அப்படித் தனிப்பட்டவர்களின் காட்டு நிலங்களை அரசாங்கமே எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்திருக்கிறார்கள். எனவே, தனிப்பட்டவர்களின் காடுகள், தேயிலை எஸ்டேட்டுகள், காபி எஸ்டேட்டுகள் இவைகளை எல்லாம் எடுத்துக் கொள்வது பற்றி இந்த அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை செய்ய வேண்டும். (மணி அடிக்கப்பட்டது).

* திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையை இந்த மாமன்றத்து முன்னால் வைத்திருப்பதைப்பற்றி நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.



1971 ஜூலை 6] [திரு. துரைமுருகன்]

முதலில் இந்த மானியக் கோரிக்கையில் எவ்வளவோ நல்ல அம்சங்கள் இருப்பதை நான் பாராட்டித்தான் ஆகவேண்டும். இந்தச் சர்க்காருடைய ஆணி வேராக, நிர்வாகத்தின் கேந்திரமாக விளங்குவது இந்த வருவாய்த் துறை இலாகாதான். இந்த இலாகாவிலே இருந்துதான் பல்வேறு நல்ல திட்டங்கள் செயல் பட்டு வருகிறது. மதிப்பிற்குரிய இந்த மாமன்றத்தின் தலைவராக இருக்கின்றவர் ஒரு காலத்தில் இந்த இலாகாவை நிர்வகித்து வந்த காலத்தில் இருந்து, இன்றைய தினம் பெருமதிப்பிற்குரிய என்னுடைய மாவட்டத்து அமைச்சர் வரையில், நல்ல பல திட்டங்களை இந்த இலாகாவில் செயலாற்றி இருக்கிறார்கள். புஞ்சை நிலங்களுக்கு வரி விலக்கு அளித்து—நஞ்சை நிலங்களுக்கு 5 ஏக்கருக்குக் கீழே உள்ளவர்களுக்கு அடிப்படைத் தீர்வையை ரத்து செய்து—ஜமாபந்தி முறையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்து, கிராம அதிகாரிகளின் சம்பளத்தை உயர்த்தியது, குடியிருப்பு மனை வழங்குதல், நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடாது என்று சட்டம் போட்டது, ஏறத்தாழ ஒரு லட்சத்து எழுபத்து மூவாயிரத்து எண்பத்தெட்டு ஏக்கர் நிலங்களை நிலமில்லாத ஏழைகளுக்குப் பட்டா போட்டுக் கொடுத்தது—என்ற இந்தக் காரியங்களை எல்லாம் சிறப்பான முறையில் செய்தது இந்த வருவாய்த் துறை என்பதைப் பாராட்டியே தீரவேண்டும். தற்போது 1971-ம் ஆண்டுக்கான திட்டங்களில் பல நல்ல அம்சங்கள் இருப்பதை எல்லோரும் பாராட்டிச் சொன்னது போல் நானும் பாராட்டி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு மாவட்டத்தின் நிர்வாகத்தில் கேந்திரமாக விளங்குபவர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்கின்ற கலெக்டர் தான். கலெக்டர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்றால், மத்திய சர்க்காரிலிருந்து அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே அனுப்பப் படுகிறார்கள். இதிலே ஒரு புதிய மாற்றம் செய்ய வேண்டுமென்று யோசனை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். டெல்லி சர்க்கார் தேர்ந்தெடுக்கின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சம்பந்தப்பட்ட மட்டில் மாநில சர்க்காருக்கும் பங்கு இருக்க வேண்டும். மாநில சர்க்காரை அவர்கள் கலந்தாலோசித்து பிறகு தான் தேர்ந்தெடுக்க வேண்டும், அதில் நமக்குப் பிரதிநிதித்துவம் தரவேண்டும். இவ்விதம் தேர்ந்தெடுக்கின்ற முறையை அடுத்த ஆண்டிலிருந்தாவது கையாளுவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுவுமல்லாமல் இன்றைய தினம் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருப்பவர்கள் பெரும்பெரும் பதவிகளில் இருந்தாலும் நல்ல முறையில் நடந்து கொள்கிறார்கள். அவர்கள்மீது நான் குறை சொல்லவில்லை. நன்றாக உபசரிக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர் வந்தால் எழுந்து நின்று வரவேற்க வேண்டுமென்ற ஒரு தாக்கீது வந்திருப்தாகத் தெரிவிக்கிறார்கள். பெரிய பெரிய அதிகாரிகளாக இருப்பவர்கள்—கலெக்டர், ஆர்.டி.ஓ. மற்றும் பெரிய பதவிகளில் இருப்பவர்கள்—இன்முகம் காட்டி வரவேற்கிறார்கள், நாம் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்கிறார்கள், என்ன செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள், முடிந்த அளவிற்கும் செய்கிறார்கள். ஆனால் அதற்குக் கீழே இருக்கிறவர்கள் எம்.எல்.ஏ., எம்.பி. போனாலும் சரி,

[திரு. துரைமுருகன்] [1971 ஜூலை 6

ஏன் வந்தாய் என்று கேட்பதில்லை, காலை நீட்டி உட்கார்ந்து கொண்டு, மின்சார விசிறி ஓடுகிறதா என்று பார்த்துக் கொண்டு, ஒரு மணிக்கு அது எத்தனை சுற்றுச் சுற்றுகிறது என்று பார்த்துக் கொண்டு, எங்கோ பார்த்துக் கொண்டு பதில் சொல்லுகிற நிலையில் இருக்கிறார்களே தவிர, வருகின்ற ஒரு நபர், ஒரு லட்சம், 2 லட்சம் வாக்காளர்களின் பிரதிநிதி என்பதைக் கூட கிஞ்சித்தும் பாராமல் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை மெத்தப் பணிவன்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு, கலெக்டர், ஆர்.டி.ஓ., தாசில்தார் மற்றும் இருக்கின்ற பல்வேறு அதிகாரிகளுக்கு நாங்கள் தருகின்ற கோரிக்கைகளுக்குப் பதில் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களிடம் ஒருவர் வந்து ஒரு மகஜர் தருகிறார். கலெக்டரிடம் கொடுப்பேன், தாசில்தாரிடம் கொடுப்பேன். அதற்குப் பிறகு அது என்ன ஆயிற்று என்ற விவரம் தெரிவதில்லை. நாங்களும் சந்திக்க முடியாது. ஆனால் வீடு தேடி வந்து மனுக் கொடுத்தவன் காத்துக் கொண்டிருந்து விட்டு, "என்ன ஆயிற்று, என் மகஜர்?" என்று கேட்கிறான். அப்படிப்பட்டதற்கு அவர்கள் எங்களுக்கு உங்களுடைய மனு வந்தது, பரிசீலனையில் இருக்கிறது என்ற முறையில் கடிதம் அனுப்பினால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் என்ற தகவலை வருபவரிடம் ஐயா! இந்த நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று விவரித்துச் சொல்லி அவர்களைத் திருப்திப்படுத்த முடியும். அதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புவது என்னவென்றால், அரசாங்க அதிகாரிகளில் யார் யாரிடம் என்னென்ன அதிகாரம் இருக்கிறது என்று தெரியவில்லை. குடிநீர்த் தேவை என்றால், அதற்கு நிதி வேண்டுமென்று பஞ்சாயத்துச் சொல்கிறது. ஆகவே கொஞ்சம் கடன் வேண்டுமென்று கலெக்டரிடம் கேட்டோம். அதைக் கலெக்டர் சிபாரிசு செய்து இங்கே போர்டுக்கு அனுப்பினார்கள். யார் பணம் கொடுப்பது என்பதில் இன்றைக்குத் தகராறு இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் போர்டு மெம்பரைச் சந்தித்தேன். ரெவின்யூ போர்டு செக்கரட்டரியைப் பார்த்தேன். பைனான்ஸ் செக்கரட்டரியைப் பார்த்தேன். ஆர்.டி.எல்.ஏ.-யில் போய்ப் பார்த்தேன். மெத்த மரியாதையோடு, புதியவன் என்றாலும் மிக உற்சாகம் தருகின்ற வகையில் நடந்து கொண்டார்கள். ஆனால் இந்தச் செக்கரட்டரியைக் கேட்டால் இந்த அதிகாரம் இங்கே என்னிடம் இல்லை, அவரிடம் போங்கள் அவரிடம் போனால் அங்கே போங்கள் என்று ஒவ்வொரு செக்கரட்டரியாகப் போய்ப் பார்த்தும், கடைசியில் பைனான்ஸ் செக்கரட்டரி இந்த அதிகாரம் யாருக்கு இருக்கிறது என்று கண்டு பிடிக்க வேண்டும் என்று சொன்னார். நான் யாரிடம் போய் இதை முறையிடுவது? படித்த எம்.எல்.ஏ. ஆக இருக்கிறேன், வழக்கறிஞராக இருக்கிறேன். என்னாலேயே இந்தக் காரியத்தைச் செய்ய முடியவில்லை என்றால் சாதாரண குடிமகன் எப்படிச் செய்ய முடியும்? ஆகையினாலே, அமைச்சர் அவர்களிடம் இந்த மாமன்றத்தில் முறையிடுகிறேன். ஆண்டவனிடம் நம்பிக்கையிருந்தால் அவனிடத்திலே



1971 ஜூலை 6] [திரு. துரைமுருகன்]

போய் முறையிடலாம். எங்களுடைய மாவட்டத்து அமைச்சர் என்பதால் யார் யார் எதை எதை நிர்வகிக்கிறார்கள் என்பதை அருள் கூர்ந்து தெரிவிக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பலர் இங்கு மனு நீதி நாள் பற்றிப் பேசினார்கள். நல்ல திட்டம்; கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த நேரத்தில், கொடுக்கின்ற கோரிக்கைக்கு உடனடியாக "உண்டு" "இல்லை" என்று பதில் சொல்லுகிற திட்டம் ஆக இருந்தது. அருமையான திட்டம். என்னுடைய மாவட்டத்தில் நான் எம்.எல்.ஏ. வாக வந்து 3, 4 மாதங்கள் ஆகின்றன. அப்படி ஒரு திட்டம் இருக்கிறதா என்று கூடத் தெரியவில்லை. அந்தத் திட்டம் என் தொகுதிக்கு எட்டிப் பார்க்காததேன் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில், வேலூரில் இருக்கின்ற "போர்ட்" டில் ஒரு கோர்ட் இருக்கிறது. அது எப்போது கீழே விழும், யார் தலையில் விழும்—ஜட்ஜ் தலையிலா, கிளார்க்குகள் தலையிலேயா, அல்லது வக்கீல்கள் தலையிலேயா என்று தெரியவில்லை. அங்கே டிஸ்டிரிக்ட் கோர்ட், முன்சிப் கோர்ட் என்று பல கோர்ட்டுகள் இருந்தாலும் மரத்தடிக் கோர்ட்டு போல் இருக்கிறது. அந்த நிலைமையில் மோசமாக இருக்கிறது கட்டிடங்களின் நிலைமை. நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வது எல்லாம் அந்தக் கோர்ட்டுகள் இருப்பது பழமையான கட்டிடங்கள், அவற்றைப் புதிய கட்டிடங்களுக்குக் கொண்டு போக, புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவது, வட ஆற்காடு மாவட்டம் விரிந்து பரந்த மாவட்டம். எங்கோ ஒரு மூலையிலே திருவண்ணாமலை, இந்தப் பக்கம் காஞ்சீபுரம், இன்னொரு பக்கம் ஓசூர், இன்னொரு பக்கம் ஆந்திர மாநிலம் என்று எல்லைகள் பரந்திருக்கின்றன. இப்படிப் பரந்த மாவட்டத்தை இரண்டாகப் பிளக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அது முடியாது என்று கூட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது முடியாவிட்டாலும் எல்லைக் கோட்டையாவது ஒரு அளவிற்கு மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1970-ம் ஆண்டில் வட கிழக்குப் பருவக் காற்று பொய்த்ததன் காரணமாகத் தமிழ்நாட்டில் பல பகுதிகளில் வறட்சி நிலை ஏற்பட்டது. அப்படி ஏற்பட்ட நேரத்தில் இராமநாதபுரம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம், மதுரை, திருச்சி போன்ற மாவட்டங்களில் இருக்கின்ற கலெக்டர்கள், குடிநீர் கிணறுகள் வெட்டுவதற்கும் அவற்றை ஆழப்படுத்துவதற்கும் நிதியுதவி கேட்டிருக்கிறார்கள். 36 லட்சத்து 91 ஆயிரம் அந்தப் பணிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் அதைப் பாராட்டுகிறேன். அந்த மாவட்டங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லவில்லை.

[திரு. துரைமுருகன்] [1971 ஜூலை 6

இந்த 1970-ம் ஆண்டு எங்களுடைய மாவட்டத்தில், ஏரிகள் எல்லாம் நிரம்பி வழிந்து, வாய்க்கால் எல்லாம் தண்ணீராக, சேறும் சகதியுமாக, பயிர்கள் எல்லாம் பச்சைப் பசேலென்று நீரில் மூழ்கிக் கிடந்தது போலவா இருந்தது என்று கேட்கிறேன். இன்றைக்கு வட ஆற்காடு மாவட்டத்தில் எந்தக் கிராமத்திற்குப் போனாலும் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. நாங்கள் எல்லாம் எம்.எல்.ஏ.-க்கள் என்ற முறையில் எந்த ஊருக்குப் போனாலும் குடிநீர் என்று கேட்கிறார்கள். இந்தக் குடிநீர் என்பது அந்த நீர் அல்ல. அதற்குக் கலைஞர் அவர்கள் பதிலளிப்பார்கள். நாங்கள் தாகத்திற்குத் தண்ணீர் கேட்கிறோம். குடிக்கின்ற நீர் கேட்கிறோம். இதற்குப் பரிகாரம் தேடுங்கள் என்று கேட்ட நேரத்தில் மாவட்ட அதிகாரி இன்முகம் காட்டினார், வரவேற்றுப் பேசினார். இந்தக் காரியத்திற்காக ஏறத்தாழ 2 லட்சம் ரூபாய் வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை எந்தப் பக்கம் போயிற்று. எந்தப் பக்கம் வந்தது என்று தெரியவில்லை. எங்களுடைய மாவட்ட்டத்தைச் சேர்ந்தவர் இன்று அமைச்சராக இருக்கின்றார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, சொந்த மாவட்டத்திற்குச் செய்துவிட்டார் என்று யாராவது சொல்லுவார்களே என்று நீங்கள் ஒருகால் விட்டு விடாதீர்கள். யாருக்காக இருந்தாலும் நியாயம் இருக்க வேண்டும், வட ஆற்காடு மாவட்டம் வேறு மாவட்டம் என்று பார்க்க வேண்டாம். மற்றவர்களுக்குக் கொடுத்ததுபோல் எங்களுக்கும் தாருங்கள். என் மாவட்டம் மிக மிக பிற்பட்ட மாவட்டம் என்ற காரணத்தாலே இதை நான் கேட்கிறேன் . . .

வருவாய்த் துறை அதிகாரிகள் கண்களிலே, பரிதாபமாக காய்ந்து கிடக்கும் வட ஆற்காடு மாவட்டம் படாதது கண்டு நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அவர்கள் கேட்பது எல்லாம் குடிநீர்தான். ரூ. $2\frac{1}{2}$ லட்சம் என்றில்லாமல், ரூ. 5 லட்சம் இதற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் ஒன்றுதான் ஒரு பெரிய ஊர். சிறைச் சாலைக்குப் பேர் போனதாக இருந்தாலும் சரி, ஆஸ்பத்திரிக்குப் பேர் போனதாக இருந்தாலும் சரி, அந்த ஊரிலே இருக்கின்ற கட்டடங்கள் கிளைவ் காலத்தில் கட்டப் பட்டதோ என்னவோ? வருவாய்த் துறை அமைச்சர் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் காலத்திலேயே வேலூரில் அரசு அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள் இன்னும் பல கட்டிடங்களைக் கட்டி வருவாய்த் துறை அமைச்சரின் காலத்தில்தான் வேலூர் கட்டிடங்கள் மிகுந்த சிறந்த ஊராக மாற்றப்பட்டது என்ற பெயர் ஏற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தருமபுரி, இராமநாதபுர மாவட்டங்கள் மிகவும் பின் தங்கிய பிரதேசமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய மாவட்டம் அவைகளை விட எந்தவிதத்திலும் உயர்ந்த நிலையில் இல்லை.

தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள இடங்களில் மத்திய சர்க்காரின் சிறப்பு நிதி எல்லாம் பெற்று முன்னேற்றத்திற்கான பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். உதாரணமாகச் சாலை போடுதல், குடிநீர் வசதித் திட்டம் கழிவு நீர் அப்புறப்படுத்தும் திட்டம், இப்படிப்பட்ட திட்டங்களை



1971 ஜூலை 6] [திரு. துரைமுருகன்]

இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களுக்கு நான் செய்ய வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அவற்றைவிட எங்கள் மாவட்டம் எந்த விதத்திலேயும் உயர்ந்த நிலையில் இல்லை.

இந்த மாமன்றத்தில் ஒன்றை நான் சவால் விட்டுச் சொல்லிக் கொள்வேன். எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்திலே ஏரிகள் எல்லாம் நிரம்பி, வயல்கள் எல்லாம் நீரில் அமிழ்ந்து, வளைந்து வளைந்து ஓடுகிற ஆறுகள், அவற்றால் வளர்க்கப்படுகின்ற நெல் வயல்கள், அந்த நெல் வயல்களிலே சதிராடும் நெற்கதிர்கள், பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் பச்சைப் பசேல் என்று இருக்கிற காட்சியை எங்கேயாவது எங்கள் மாவட்டத்தில் தொடர்ச்சியாகக் காட்டுவீர்களேயானால், குறிப்பாக என்னுடைய காட்பாடி தொகுதியில் காட்டினால் நான் என்னுடைய பதவியை ராஜினாமா செய்யத் தயார். ஆகையினால் என்னுடைய மாவட்டத்திற்குத் தருமபுரி, இராமநாதபுர மாவட்டங்களுக்குக் கொடுத்து இருக்கக்கூடிய சலுகைகளைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாமன்றத்திலே நான் கூறி இருக்கும் யோசனைகளை ஏற்று என்னுடைய மாவட்ட மக்கள் நல்ல பயனைப் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு கருத்துகளை எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மானியக் கோரிக்கைகள் மீது பேச விரும்பும் உறுப்பினர்கள் யாராவது இருந்தால் அவர்களுடைய கருத்துக்களை நாளை கூறலாம்.

இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

## 6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

@ 141. Annual Report of the Tamil Nadu Public Service Commission, 1967–70 issued with G.O. Ms. No. 958, Public (Services-A), dated the 26th March 1971. [Laid on the Table of the House under Article 323 (2) of the Constitution of India).]

### B. *Reports Notifications and other Papers.*

102. Notification issued with G.O. Ms. No. 1205, Revenue, dated the 23rd April 1971, in regard to remission of stamp duty in respect of a sale deed in favour of the Seethalakshmi Ramaswami College, Tiruchirappalli.

---

@ Laid on the Table of the House on 5th July 1971.

[1971 ஜூலை 6

## இணைப்பு 1.

[40-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## தமிழ் நாட்டில் வீட்டு வசதி—1970–71.

### முன்னுரை.

வளர்ச்சி குன்றிய எந்த நாடும் உணவு, உடை, உறையுள் பற்றிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருப்பது இயற்கையே. நமது நாட்டில் வீட்டு வசதிப் பற்றுக்குறை கடுமையாக இருப்பதை வலியுறுத்த வேண்டிய தேவையில்லை. 1961-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி அந்த ஆண்டில் 60 லட்சம் வீடுகள் பற்றுக் குறையாக இருந்தன. ஐந்தாவது திட்ட இறுதிக்குள், இந்தப் பற்றுக்குறை 90 லட்சமாக அதிகரிக்குமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. கிராம வீட்டு வசதித் திட்டங்களை விழிப்புடன் நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால், அத் துறையில்தான் தேவைகளுக்கும் உண்மை நிலைக்கும் இடைவெளி மிகுந்து காணப்படுகிறது. நகர்ப்புற பகுதிகளில் இப்போது தொழில்கள் வளர்ந்து வருவதால் நாட்டுப்புறங்களிலிருந்து பெரும்பாலான மக்கள் நகரங்களுக்கு வந்து குடியேறுகின்றனர். அதனால் நகர்ப்புறப் பகுதிகளில் வீடுகள் பற்றுக்குறை மிகக் கடுமையாக உள்ளது.

2. விடுதலை அடைந்த பிறகு, இந்திய அரசு மேற்கண்ட நிலைமைகளை ஆய்ந்தறிந்து, பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப வீட்டு வசதிகளை அளிக்க இணைவான முயற்சிகளை மும்முரமாக மேற்கொண்டது. வளங்கெழு அரசு, நிலைத்த குடியாட்சி இவற்றைத் தோற்றுவிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட நமது அரசு, பாமர மக்களுக்கு, பெரும்பாலும் குடிசைப் பகுதியில் வாழ்வோருக்கும், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும் நல்ல சுற்றுப்புறச் சூழல்களில் வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றி எண்ணத் தொடங்கியது. முக்கியமாக, கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக வீடுகள் கட்டுவதற்கு தமிழ் நாடு அரசு முதற்கண் நிதி வழங்கத் தொடங்கியது. 1945-ஆம் ஆண்டில் மாநகர வளர்ச்சிப் பொறுப்புக் கழகம் அமைக்கப்பட்டது. இந்தக் கழகம் அரசு தந்த நிதி உதவியுடன் வீட்டுத் தேவையைப் பெருமளவில் நிறைவு செய்ய முடிந்தது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் போன்ற ஓரிரண்டு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டாலும்கூட, இப்பணித் திட்டங்கள் இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களிலேதான் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டன. இக்கால அளவுகளில் குடிசைப் பகுதி வளர்ச்சி—குடிசைப் பகுதி ஒழிப்புத் திட்டம், மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம், கிராம வீட்டு வசதித் திட்டம் போன்ற பல வீட்டு வசதித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. வீட்டு வசதித் திட்டம் சென்னை மாநகரில் மட்டுமின்றி மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கருதப்பட்டதால், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வீட்டு வசதிப்



1971 ஜூலை 6]

பிரிவாக மூன்று வீட்டு வசதிப் பிரிவுகளுடன், தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் 1961 ஏப்ரல் மாதத்தில் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவும் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்கள் மீது அதிகார வரம்பு உடையதாகும். பல துறைகளின் உறுப்பினர்கள் அடங்கிய இந்த வாரியம் சட்டப்படி அமைந்ததாகும். எனவே, இந்த வாரியம், இம் மாநிலத்தின் வீட்டு வசதித் திட்டங்களை வகுத்து ஒருங்கிணைத்து வேலைத் திட்டங்களை விரைவாகவும், பயனுள்ள வகையிலும் நிறைவேற்ற முடிகிறது. இதற்கிணங்க, பொதுப் பணித்துறை, கிராமவீட்டு வசதிப் பிரிவு, சென்னை மாநகராட்சி, கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர் துறை போன்ற பல துறைகளின் கீழும் பலவகை வீட்டு வசதித் திட்டங்களை வகுப்பதும், நிறைவேற்றுவதும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பணியாகும். முன்பு கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த கூட்டுறவு வீட்டு வசதிப் பிரிவு இப்போது தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய திட்டங்களைத் தவிர நடுத்தர வருவாய் உள்ளோர் வீட்டு வசதித் திட்டம், குறைந்த வருவாய் உள்ளோர் வீட்டு வசதித் திட்டம், நிலத்தைக் கையகப்படுத்தி மேம்படுத்தும் திட்டம், தமிழ் நாடு அரசுப் பணியாளர்கள் வாடகை வீட்டு வசதித் திட்டம் போன்ற பல திட்டங்கள், இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து நிதி உதவிபெற்று, திட்டத்திற்குப் புறம்பான வேலைத் திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டன.

3. சென்னை மாநகரில் குடிசைகளை எந்த வகையில் சிறப்பாகவும் விரைவாகவும் மாற்றியமைக்கலாம் என்பது குறித்துக் கடந்த சில காலமாக அரசு பரிசீலனை செய்து வந்தது. சென்னை மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளைப் படிப்படியானதொரு திட்டத்தின்கீழ் ஏழாண்டுக் கால அளவிற்குள் அறவே மாற்றியமைப்பதென அரசு இறுதியாக முடிவு செய்தது. குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்திற்கு ஒரு புது வடிவம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அரசு முடிவு செய்துள்ளது. இத் தீர்மானத்திற்கேற்ப, அதிகாரிகள், அரசுச் சார்பற்ற அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட குடிசை மாற்று வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. கீழே குறிப்பிட்டுள்ள பணிகள் குடிசை மாற்றுவாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது :—

(1) குடிசை மாற்றுப் பணியின் பருமனை மதிப்பிடுவதோடு குடிசைப் பகுதியை மேம்படுத்துவதற்குப் பதிலாக குடிசைகளை மாற்றியமைப்பதில் நாட்டம் செலுத்தப்படவேண்டும்.

(2) புதிதாகக் குடிசைப் பகுதிகள் தோன்றுவதைத் தவிர்க்க மாற்றியமைப்பதில் நாட்டம் செலுத்தப்பட வேண்டும்.

(3) சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகளை ஏழாண்டுக்கால அளவிற்குள் மாற்றியமைக்கும் நோக்கத்துடன், குடிசை மாற்றும் பணிகள் குறித்துத் திட்டமிடும் அந்த நடவடிக்கைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்தல்.

(4) நிலத்தைக் கையகப்படுத்தி அதை மேம்படுத்தி அங்கு குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் குடிசைப் பகுதிகளை அகற்றுவதற்குத் தேவைப்படும் அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளுதல்.

(5) வாரியத்தின் குடியிருப்புகள், மனைகள், பிற சொத்துக்கள் ஆகியவற்றைப் பேணுதல், ஒதுக்குதல், குத்தகைக்கு விடுதல் அல்லது மற்றபடி அவற்றைப் பயன்படுத்துதல்.

(6) சென்னை மாநகரில் குடிசை மாற்றும் பணியைச் செயல் படுத்துவதற்கான பிற நடவடிக்கைகள் அனைத்தையும் மேற் கொள்ளுதல், தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் இது வரை கவனித்து வந்த குடிசை மாற்றும் பணியாளர்கள் இருப்புகள், பொறுப்பு களுடன் குடிசை மாற்றும் வாரியத்தினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது. குடிசை மாற்று வாரியம் சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கும் பணியை தற்சமயத்திற்குக் கவனிக்கும். இப்பணியைச் செயல்படுத்த தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல்—அகற்றுதல்) சட்டத்தையும் அரசு இயற்றியுள்ளது.

4. ஒவ்வொரு வீட்டு வசதித் திட்டம் குறித்தும் சுருக்கமான அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதி திட்டம்.

5. 1. ஐந்தாண்டுத் திட்டங்களை மேற்கொண்ட பிறகு தனியார்த் துறையிலும், பொதுத் துறையிலும் விரைவான தொழில் வளர்ச்சி ஏற்பட்டதன் விளைவாக தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அவர்களில் பெரும் பாலோருக்கு வீடுகட்டிக்கொள்ள இயலாது அல்லது வேலை செய்யும் இடத்திற்கு அப்பால் மிகத் தொலைவிலுள்ள இடங்களில் வசிக்க இயலாது. சில தொழிற்சாலை நிர்வாகத்தினர் தங்களது தொழிலாளர்கட்கும் பணியாளர்கட்கும் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கின்றனர். ஆனால், இதனாலேயே சிக்கல் தீர்ந்துவிடாது. எனவே, வேலை செய்யும் இடங்களுக்கு அருகிலேயே நல்ல சூழலில் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி அளிப்பதற்கு இயலும் பொருட்டு இந்திய அரசு இத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

5.2. இத்திட்டத்தின் கீழ், தொழிற்சாலைகள் சட்டம் பொருந்துகிற தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக மாநில அரசுக்கும் வீட்டு வசதி வாரியங்கள், உள்ளாட்சி மன்றங்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கான கூட்டுறவுச் சங்கங்கள், தொழில் முனைவர்கள் ஆகியோருக்குப் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

5.3. ஓரறைக் குடியிருப்புகளுக்கு ரூ. 4,850, இரண்டறைக் குடி யிருப்புகளுக்கு ரூ. 5,100 என்று இந்திய அரசு உச்ச வரம்பினை வரை யறுத்துள்ளது. மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை



யுள்ள இடங்களில் குடியிருப்பு ஒன்றுக்கு ரூபாய் 1,100 கூடுதலாக அனுமதிக்கப்படுகிறது. ஒரு லட்சம் முதல் 3 லட்சம் வரை மக்கள் தொகையுள்ள இடங்களில் குடியிருப்பு ஒன்றுக்கு ரூ. 450 கூடுதலாக அனுமதிக்கப்படுகிறது:—

| | மாநில அரசு. | கூட்டுறவுச் சங்கங்கள். | தனியார் தொழிலதி பர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| *இந்திய அரசு தரும் கடன் .. | 50 | 65 | 50 |
| *இந்திய அரசு தரும் உதவித் தொகை. | 50 | 25 | 25 |
| திட்டச் சாதனைகள்— | | | |
| முதல் திட்டக்கால அளவி லிருந்து மூன்றும் திட்டக் கால அளவு வரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 2,062 | 2,055 | 278 |
| முதல் திட்டக் கால அள்வி லிருந்து மூன்றும் திட்டக் கால அளவு வரை பயன் படுத்திய தொகை. | ரூ. 182·43 லட்சம். | ரூ. 94·27 லட்சம். | ரூ. 7·34 லட்சம். |
| 1966–67 முதல் 1968–69 வரை ஆண்டுத் திட்டக் கால அளவுகளில் கட்டி முடிக்கப் பட்ட வீடுகளின் எண் ணிக்கை. | 327 | 561 | .. |
| 1966–67 முதல் 1968–69 வரை ஏற்பட்ட செலவுத் தொகை. | ரூ. 28·62 லட்சம். | ரூ. 25·46 லட்சம். | .. |
| நான்காம் திட்டம்— | | | |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம். | | ரூ. 150 லட்சம் மூன்று துறை கள் அனைத்திற் கும். | |
| நான்காம் திட்டக் குறிக்கோள் அளவு. | | 2,075 குடியிருப்பு கள் மூன்று துறைகள் அனைத்திற்கும். | |
| 1969–70-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | .. | 308 | .. |

*எல்லா மாநிலத் திட்டங்களுக்கும் சேர்த்து இந்திய அரசால் கொடுக்கப்பட்ட மொத்தக் கடன்—மானியத்தில் இது இப்பொழுது சேர்க்கப்பட்டுள்ளது.

[1971 ஜூலை 6

| | மாநில அரசு. | கூட்டுறவுச் சங்கங்கள். | தனியார் தொழிலதிபர்கள். |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| | | (சதவீதத்தில்) | |
| 1969–70-ஆம் ஆண்டில் செய்த செலவுத் தொகை. | ரூ. 2·75 லட்சம். | ரூ. 5·50 லட்சம். | .. |
| 1970–71-இல் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 12 வீடுகள். | 55 வீடுகள். | 8 வீடுகள். |
| 1970–71-இல் செய்த செலவுத் தொகை. | ரூ. 0·28 லட்சம். | ரூ. 3·73 லட்சம். | ரூ. 0·24 லட்சம். |
| 1971–72 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | ரூ. 9 லட்சம். | ரூ. 3·73 லட்சம். | ரூ. 2 லட்சம். |
| 1971–72 திட்டக் குறிக்கோள் அளவு. | 112 வீடுகள். | 65 வீடுகள். | 45 வீடுகள். |

5.4. அரசு திட்டங்கள்.—1971–72-ல் 112 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 9 லட்சம் செலவுத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

5.5. தனிப்பட்ட தொழிலதிபர் திட்டங்கள்.—தனிப்பட்ட தொழில் திட்டங்களுக்கு உதவியளிக்க 1971-72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 45 வீடுகள் கட்டி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

5.6. கூட்டுறவு வேலைத் திட்டங்கள்.—தேசீய நெருக்கடி காரணமாக, தொழிலாளர் வீட்டு வசதிச் சங்கங்களுக்கு மானியம் அளிப்பது 1962-ஆம் ஆண்டு முதற்கொண்டு நிறுத்தப்பட்டது. அது முதல் நிதியுதவி கடனுக மட்டுமே வழங்கப்படுகிறது. மனை, கட்டிடம் குறித்த மதிப்பீட்டுச் செலவில் 80 சதவீதம் கடனுக வழங்கப்படும். எஞ்சிய தொகை உறுப்பினர்கள் பங்கு மூல தனத்தின் வாயிலாகச் சரிக்கட்டப்படும். 1971–72-ல் 65 வீடுகளைக் கட்டுவதற்காக ரூ. 3.73 லட்சம் பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

6.1. தோட்டத் தொழிலாளர்க வீட்டு வசதித் திட்டம்.—தோட்ட அதிபர்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக அவர்களுக்குக் கடன் உதவி அளிப்பதற்கென இத் திட்டம் இந்திய அரசால் வகுக்கப்பட்டது. 1966-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் நாள் முதற்கொண்டு உதவி பெறும் வீட்டு வசதித் திட்டத்தின் அடிப்படையில் இத் திட்டம் தொழிலாளர்களுக்கான உதவி பெறும் வசதித் திட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தை 1970–71 முதற்கொண்டு மத்திய அரசுத் திட்டமாகக் கருதுவதென இந்திய அரசு தற்போது முடிவு செய்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் ஒரு வீட்டைக் கட்டுவதற்கான உச்ச வரம்புச் செலவு ரூ. 3,000 ஆகும். மாற்றியமைக்கப்பட்ட மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் தோட்டத் தொழிலதிபர்கள் உச்ச வரம்புச் செலவில் 50 சதவீதம் கடனுகவும் $37\frac{1}{2}$ சதவீதம் உதவித் தொகையாகவும் பெற உரிமையுள்ளவர்களாவர்.



1971 ஜூலை 6]

இரண்டாவது, மூன்ருவது திட்டக் கால அளவுகளில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை.—195 வீடுகள்.

இரண்டாவது, மூன்ருவது திட்டக் கால அளவுகளில் பயன் படுத்தப்பட்ட தொகை.—ரூ. 3.72 லட்சம்.

நான்காம் திட்ட நிதி ஒதுக்கீடு.—ரூ. 10 லட்சம்.

நான்காம் திட்டக் குறிக்கோள் அளவு.—440 வீடுகள்.

1971–72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.—ரூ. 2 லட்சம்.

1971–72 திட்டக் குறிக்கோள் அளவு.—60 வீடுகள்.

6.2. வீடுகள் கட்டுவதற்காகக் ஐந்து நிர்வாகத்தினரிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவை தொழிலாளர் நல ஆணையரால் முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

7.1. குறைந்த வருவாய் உள்ளோர்க்கான வீட்டு வசதித் திட்டம்.—இத் திட்டம் முதன் முதலில் 1955–56-ல் கொண்டு வரப்பட்டது. ஓராண்டில் ரூ. 7,200-க்கு மேற்படாத, ஆண்டு வருவாய் உள்ளவர்களின் பயனுக்காகவே இத் திட்டம் கொண்டு வரப்பட்டது. (நிலத்திற்கான விலை உட்பட) கட்டிடம் கட்டும் செலவில் 80 சத வீதத்திற்கு மேற்படாமல், ஆனுல் ஒரு வீட்டுக்கு ரூ. 12,500 என்ற பேரளவுத் தொகைக்குட்பட்டு கடன்கள் வழங்கப்படுகின்றன. மாநில வீட்டு வசதி வாரியத்தின் மூலம் மாநில அரசு இத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இத் திட்டத்திற்காக நான்காவது திட்டத்தில் ரூ. 520 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

7.2. கூட்டுறவுச் சங்கங்கள்.—நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 220 லட்சம் அளவுக்குக் கடன் வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது. 1971–72-ல் 350 வீடுகள் கட்ட ரூ. 30 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

7.3. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.—நான்காம் திட்டத்தில் ரூ. 300 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1970–71-ல் 500 அங்கணங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1971–72-ல் 560 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

| திட்டச் சாதனை. | கூட்டுறவுச் சங்கங்கள். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| இரண்டாவது, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 3 223 | 2,142 |
| இரண்டாவது, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் பயன்படுத்திய தொகை (ரூ. லட்சத்தில்). | 215·10 | 169·67 |

| திட்டச் சாதனை. | கூட்டுறவுச் சங்கங்கள். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1966–67 முதல் 1968–69 வரையிலான ஆண்டுத் திட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 737 | 1,126 |
| 1966–67 முதல் 1968–69 வரை செலவிட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | 60·50 | 76·19 |
| **நான்காவது திட்டம்.** | | |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கம் (ரூ. லட்சத்தில்). | 220 | 300 |
| நான்காவது திட்டத்திற்கான திட்டக் குறிக்கோள் அளவு. | 6,300 | வீடுகள் (இரு துறைகளுக்கும்.) |
| 1969–70-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 150 | 600 |
| 1969–70-ல் செலவிட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | 22·79 | 52·69 |
| 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 386 | 500 |
| 1970–71-ல் செலவிடப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | 33·13 | 22·60 |
| 1971–72 வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்). | 30 | 30 |
| 1971–72 குறிக்கோள் அளவு (வீடுகள்) .. | 350 | 560 |

8.1. நடுத்தர வருவாயுள்ளோர் வீட்டு வசதித் திட்டம்.—இந்திய அரசால் வகுக்கப்பட்ட நடுத்தர வருவாயுள்ளோர் வீட்டு வசதித் திட்டம் இம் மாநிலத்தில் 1959–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வீடுகள் கட்டுவதற்காக ஆண்டு வருவாய் ரூ. 7,200-க்கு மேற்பட்டு ரூ. 18,000-க்கு மேற்படாமல் வருவாயுடையோருக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

8.2. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் கூட்டுறவுப் பிரிவும் இத் திட்டத்தை நிறைவேற்றுகின்றன. நிலம் உட்பட கட்டுமானச் செலவு 80 சத வீதத்திற்கு மேற்படாமல், வீடு ஒன்றுக்கு ரூ. 25,000 என்ற அதிக அளவு வரையறைக்குட்பட்டு கடன்கள் வழங்கப்படுகின்றன. கட்டுமானச் செலவு ரூ. 30,000-க்கு மேற்படக் கூடாது. தகுதியான நபர்களுக்கு விற்பனை செய்வதற்காக அல்லது தகுதியானவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்காக வீடுகள் கட்ட இந்தக் கடன்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வீடுகள் கட்டுவதற்காகத் தனி நபர்களுக்குக் கூட்டுறவுத் துறை கடன்கள் கொடுக்கிறது. இத் திட்டத்திற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 500 லட்சம் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.





| திட்டச் சாதனை. | கூட்டுறவுச் சங்கங்கள். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 838 | 776 |
| இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் பயன்படுத்திய தொகை (ரூ. லட்சத்தில்). | 139·50 | 209·15 |
| 1966-67 முதல் 1968-69 வரையிலான ஆண்டு திட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 146 | 489 |
| 1966-67 முதல் 1968-69 முடிய செலவிட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | 37·50 | 8 01 |
| **நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.** | | |
| நான்காவது திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் (ரூ. லட்சத்தில்). | 500 | இரு துறைகளுக்கும். |
| 1969-70-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 50 | 450 |
| 1969-70-ல் செலவிட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | 10·00 | 64·48 |
| 1970-71-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 100 | 550 |
| 1970-71-ல் செலவிட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | 20·01 | 89·57 |
| 1971-72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்). | 10·00 | 55 |
| 1971-72 திட்டக் குறிக்கோள் அளவு (வீடுகள்). | 50 | 700 |

9.1. குடிசை மாற்றுத் திட்டம்.—நகர்ப்புறப் பகுதிகள் அனைத்திலும் உள்ள கணிசமான ஒரு பகுதியினர், நகர்ப்புறப் பகுதிகளில் வீடுகளுக்குக் கேட்கப்படும் அதிக வாடகைகளைத் தங்களது குறைந்த வருவாயில் கொடுக்க இயலவில்லை என்பதாலும், விரைவான போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால், அல்லது தொலைவு காரணத்தினால் அந்தந்த இடங்களுக்கு அருகிலேயே தங்கள் குடியிருப்புகள் இருக்க வேண்டிய அவசியம் உள்ளதாலும் இந்தக் குடிசைப் பகுதிகளில் குடியேறியுள்ளனர். இந்த வகைப் பிரிவினரில் பெரும்பாலானவர்கள் வீட்டு வேலைக்காரர்கள், பால்காரர்கள், அன்றாட ஊதியம் பெறும் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், குப்பைக்காரர்கள், துப்புரவுப் பணியாளர்கள், பெட்டிக் கடைக்காரர்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் ஆவர். காலியாக உள்ள இடத்தில் அவர்கள் கட்டிக்கொள்ளும் குடிசைகள் நெருக்கமாகவும், காற்றோட்ட வசதியில்லாமலும், சுகாதார வசதியில்லாமலும், இருக்கின்றன. இந்தக் குடிசைப் பகுதிகள் ஒழுங்கற்ற, முறையற்ற வகையில் அமைந்துள்ளன. இந்தக் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் தொகை மிக அதிகம். ஆனால், சுகாதாரச் சூழ்

நிலை மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளது. 1961-ல் நடத்திய ஆய்வின்படி, சென்னை மாநகரில் மட்டும் சுமார் 491 குடிசைப் பகுதிகள் இருந்தன. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் சமூக-பொருளாதார ஆய்வு ஒன்று தற்போது நடத்தப்பட்டு வருகிறது. குடிசைப் பகுதிகளின் எண்ணிக்கை சுமார் 600 இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. நெருக்கடியைக் குறைக்கும்பொருட்டு, குடிசை வாழ்வோர் மேம்பாடு செய்யப்பட்ட காலி மனைகளில் குடியமர்த்தப் படுகின்றனர். அல்லது முறையான குடியிருப்புகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்தப் பணி தற்போது, சென்னை மாநகரில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினாலும், வெளியூர்களில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தினாலும் செயல்படுத்தப்படுகிறது.

9.2 செப்பனிட்ட காலி மனைகள்.—இந்த வகையின்கீழ் சுமார் 1,000 சதுர அடி மேம்பாடு செய்த மனை ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படுகிறது. மேலும் ரூ. 253 மதிப்புள்ள குடிசை போடு வதற்கான பொருள்கள் வழங்கப்படுவதுடன், தாமே குடிசை அமைத்துக்கொள்வதற்காக ரூ. 32.50 ரொக்க மானியமும் வழங்கு கின்றது. ஒவ்வொரு மனையிலும் குளியலறை ஒன்றையும், நீரடிக் கழிப்பிடம் ஒன்றையும் வாரியம் அமைத்துக் கொடுத்துள்ளது. குடி யிருப்புத் தொகுதியில் தெரு விளக்கு, சாலைகள், நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றும் வசதி, நிழற்சாலைகள் முதலிய அனைத்திற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. மனை ஒன்றுக்கு ரூ. 5 முதல் ரூ. 11 வரையில் வாடகை விதிக்க இந்திய அரசு அனுமதித்திருந்த போதிலும், திங்க ளொன்றுக்கு ரூ. 3 என்ற குறைந்த அளவு வாடகையே வசூலிக்கப் படுகிறது. செப்பனிட்ட காலி மனையில் ஏக்கர் ஒன்றுக்கு 20 முதல் 75 குடும்பங்கள் வரை வசிக்கின்றன.

9.3. குடியிருப்புகள்.—இந்த முறையின்கீழ் ஒரு மாடி, இருமாடி, அல்லது பல மாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டு குடிசைப் பகுதியில் வாழ்வோரில் தகுதியுள்ளோருக்கு வாடகை அடிப்படையில் கொடுக் கப்படுகின்றன. ஒவ்வொரு குடியிருப்பிலும் 120 சதுர அடி தாழ் வாரமும், 84 சதுர அடி சமையல் அறையும், 16 சதுர அடி குளியல் அறையும், 12 சதுர அடி கழிப்பிடமும் இருக்கும். இந்திய அரசு வரையறுத்துள்ள வாடகை திங்களொன்றுக்கு ரூ. 12 முதல் ரூ. 30 ஆகும். ஆனால், மாநில அரசு வாடகையை ரூ. 10 ஆகக் குறைத் துள்ளது. வாடகையின் எஞ்சிய தொகை மாநில நிதிகளிலிருந்து உதவித் தொகையாக வழங்கப்படும். மொத்தமாக ஒவ்வொரு ஏக்கரிலும் 20 முதல் 60 குடும்பம் வரை இந்த மாடிக் குடியிருப்பு களில் வாழலாம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

9.4. மேல்வரம்புச் செலவு— ரூ.

(1) செப்பனிட்ட காலி மனை ... ... ... 1,850

(2) வீடு மட்டும் கட்டுவதற்கு ... ... ... 2,900





(3) ஒரு மாடிக் குடியிருப்புகள் ... ... ... 4,850

(4) இரு மாடிக் குடியிருப்புகள் ... ... ... 5,100

(5) பல மாடிக் குடியிருப்புகள் ... ... ...... 6,750

(1) முதல் (4) வரை உள்ள இனங்களுக்காக் மூன்று லட்சத் திற்கு மேல் மக்கள் தொகையுள்ள நகரங்களில் குடியிருப்பு வீடு ஒன்றுக்குக் கூடுதலாக ரூ. 1,100-ம் ஒன்று முதல் மூன்று லட்சம் வரை மக்கள் தொகை உள்ள நகரங்களில் குடியிருப்பு வீடு ஒன்றுக்கு கூடுதலாக ரூ. 450-ம் அனுமதிக்கப்படுகிறது. கரிசல் நிலப் பகுதியில் அல்லது பண்படுத்தப்பட்ட நிலப் பகுதியில் அல்லது மலைப் பகுதியில் ஆழமாகவும். வலுவாகவும், கடைக்கால் அமைக்க வேண்டியிருப்ப தாலும், கூடுதல் போக்குவரத்துச் செலவு காரணமாகவும், வீடு மட்டும் கட்டுவதற்கும், வசதியுடன் முழு வீடு கட்டுவதற்கும் செல வின் மேல் வரம்புக்கு மேல் ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 550 கூடுத லாக அனுமதிக்கப்படுகிறது.

9.5. உதவி விவரம்.—(1966-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளுக்கு முன்னர் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்டங்களுக்கு)

* இந்திய அரசிடமிருந்து $37\frac{1}{2}$ சதவீதக் கடன்.

* இந்திய அரசிடமிருந்து $37\frac{1}{2}$ சதவீத உதவித் தொகை.

மாநில அரசிடமிருந்து 25 சதவீத மானியம்.

(1966-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளுக்குப் பின்னர் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்டங்களுக்கு)—

*இந்திய அரசிடமிருந்து 50 சதவீதக் கடன்.

* இந்திய அரசிடமிருந்து $37\frac{1}{2}$ சதவீத உதவித் தொகை.

மாநில அரசிடமிருந்து $12\frac{1}{2}$ சதவீத உதவித் தொகை.

மேல் வரம்புச் செலவுக்கு மேல் கூடுதலாக ஆகும் செலவை மாநில அரசு கூடுதல் உதவித் தொகை அளித்துச் சரிக்கட்டுகிறது.

திட்டச் சாதனை.

| | |
|---|---|
| இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 3,849 குடியிருப்புகள். ,332 செப்பனிட்ட காலி மனைகள். |
| இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை. | ரூ. 380·16 லட்சம். |
| 1966–67 முதல் 1968–69 வரையிலான ஆண்டுத் திட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 5,938 செப்பனிட்ட காலி மனைகள். 4,746 குடியிருப்புகள் |
| 1966–67 முதல் 1968–69 வரை செலவிட்ட தொகை. | ரூ 295.64 லட்சம் |

* எல்லா மாநிலத் திட்டங்களுக்கும் சேர்த்து இந்திய அரசால் கொடுக்கப்பட்ட மொத்தக் கடன்—மானியத்தில் இது இப்பொழுது சேர்க்கப்பட்டுள்ளது.

[1971 ஜூலை 6

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.

| | |
|---|---|
| நான்காவது திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் .. | ரூ. 800 லட்சம் |
| நான்காவது திட்ட இலக்கு .. .. .. | 15,000 குடியிருப்புகள் |
| 1969–70-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 1,800 குடியிருப்புகள் |
| 1969–70ல்-செலவிட்ட தொகை .. .. | ரூ 83·29 லட்சம் |
| 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 1,400 குடியிருப்புகள் |
| 1970–71-ல் செலவிட்ட தொகை .. .. | ரூ. 99·67 லட்சம் |
| 1971 72ல் வரவு-செலவு திட்ட மதிப்பீடு .. | ரூ. 300 லட்சம் |
| 1971–72 குறிக்கோள் அளவு .. .. | 5,000 குடியிருப்புகள். |

10.1. நிலம் கையகப்படுத்தல்—மேம்படுத்துதல் திட்டம்.—நிலத்தின் விலை ஏறுவதைத் தடுப்பதற்காக முன்னதாக நிலத்தைக் கையகப்படுத்துவதும், வீடு கட்டும் காரியங்களுக்குக் குறைந்த செலவில் நிலம் கிடைக்கச் செய்வதும், வளர்ந்து வரும் பெரிய நகரங்களில் இட நெருக்கடியைக் குறைப்பதும் இத் திட்டத்தின் நோக்கங்களாகும்.

10.2. இத் திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஆதாய—விரயமற்ற அடிப்படையில் நடத்தப்படுகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நகரிலும், நகரைச் சுற்றிலும், பெரிய நிலப் பகுதிகளைக் கையகப்படுத்தி, அவற்றை எல்லா வசதிகளும் நிரம்பிய சிறு சிறு நகர்களாக உருவாக்குகின்றது. பொது வசதிகளாகிய பள்ளிக் கூடங்கள், மருத்துவ மனைகள், கடைகள், விளையாட்டுத் திடல்கள் முதலியவற்றுடன் சாலைகள், தெரு விளக்குகள், நீர் வழங்கல், கழிவு நீரகற்று வசதி, விளையாட்டுத் திடல், பூங்கா ஆகிய வசதிகள் இந்த நகர்களிலே ஏற்படுத்தப்படும். இத் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட பொதுமக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு வீடுகள் கட்டும் மனைகள் ஒதுக்கப்படுகின்றன. வீடுகளும் குடியிருப்புகளும், அங்கணங்களும் முழு உரிமை அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இவர்கள் மூலதன முதலீட்டை 15 முதல் 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துகின்றனர். ஒதுக்கப்பட்ட அல்லது பொது ஏலத்தில் விற்கப்பட்ட மனைகளை ஐந்து ஆண்டுக் காலத்திற்குள் வேறு எவரிடமும் திரும்ப விற்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் அவை கொடுக்கப்படுகின்றனர். அதாவது அக்கால அளவிற்குள் அவர்கள் அங்கு வீடு கட்டிக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர்களுக்கு உரிமை ஏற்படுவதனால், நிலத்தையோ, வீட்டையோ அவர்கள் விற்க விரும்ப மாட்டார்கள். இதனால் நிலங்களின் விலை அதிகரிப்பது தடைப்படுகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மேம்பாடு செய்யப்பட்ட மனைக் கட்டுகளை மனை ஒன்றுக்கு ரூ. 5,500 முதல் ரூ. 6,500 வரை விற்கின்றது. இத்துடன்கூட மூலை மனைக் கட்டுகள் பொது ஏலத்தில் விற்கப்படுகின்றன. இத் திட்டத்திற்கு வேண்டிய நிதி வசதி ஆயுள் காப்புறுதிக் கழகத்தால் வழங்கப்பட்ட நிதிகளிலிருந்தும் விற்பனைத் தொகையும் மீண்டும் பயன்படுத்தப் படுவதன் மூலமும் பெறப்படுகிறது.



1971 ஜூலை 6]

திட்டச் சாதனைகள்.

| | |
|---|---|
| இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் மேம்பாடு செய்யப்பட்ட நிலங்களின் அளவு. | 2,759·54 ஏக்கர். |
| இரண்டாவது, மூன்றாவது திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட தொகை. | ரூ. 383·23 லட்சம். |
| 1966–67-லிருந்து 1968–69 வரை ஆண்டுத் திட்டக் காலங்களில் மேம்பாடு செய்யப்பட்ட நிலங்களின் அளவு. | 796·15. |
| 1966–67-லிருந்து 1968–69 வரை செலவிடப்பட்ட தொகை. | ரூ. 419·14 லட்சம். |

நான்காவது திட்டம்.

| | |
|---|---|
| நான்காவது திட்டத்துக்கான நிதி ஒதுக்கம் .. | ரூ. 500 லட்சம். |
| 1969–70-ம் ஆண்டில் மேம்பாடு செய்யப்பட்ட நிலங்களின் அளவு. | 251·90 ஏக்கர். |
| 1969–70-ம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை. | ரூ. 187·42 லட்சம். |
| 1970–71-ம் ஆண்டில் மேம்பாடு செய்யப்பட்ட நிலங்களின் அளவு. | 161·86 ஏக்கர். |
| 1970–71-இல் செலவிடப்பட்ட தொகை .. | ரூ. 284·50 லட்சம். |
| 1971–72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. | ரூ. 35 லட்சம். |
| 1971–72 குறிக்கோள் அளவு .. .. | 500 ஏக்கர். |

11. தமிழ் நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டம்.—முக்கியமாக, குறைந்த வருவாயுடைய மாநில அரசுப் பணியாளர்களுக்கு வாடகை அடிப்படையில், அங்கணங்கள் கட்டிக் கொடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். வீடு ஒதுக்கப்பட்டவர்களின் சம்பளத்தில் 10 சத வீத வாடகையையே மாநில அரசு வசூலிக்கிறது. அவர்களுக்கு வீட்டு வாடகைப் படி கொடுக்கப்படுவதில்லை. இந்த அடிப்படையில் வசூலிக்கப்படும் வாடகை கட்டுப்படியாகக்கூடிய வாடகையைவிடக் குறைவாக இருக்கிறது. கட்டுப்படியாகக்கூடிய வாடகைக்கும், சலுகை வாடகைக்கும் உள்ள வேறுபாட்டை மாநில அரசு ஈடு செய்வதால், அரசுப் பணியாளர்களுக்குக் குறைந்த வாடகையில் இந்த அங்கணங்கள் கிடைக்கின்றன. இத் திட்டத்தை நிறைவேற்றவும், நிறைவேற்றியபின், வீடுகளைப் பேணுவதற்கும், மாநில அரசின் முகவராகத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் விளங்குகிறது. சொத்துக்களின் உரிமை மாநில அரசிடம் நிலைபெறுகிறது. பொதுவாக, இத் திட்டத்தின்கீழ், வீடுகள், அரசு நிலங்களில்தான் கட்டப்பட்டு வருகின்றன :—

திட்டச் சாதனைகள்.

| | |
|---|---|
| இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள். | 2,228 வீடுகள். |
| இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை. | ரூ. 187·15 லட்சம். |
| 1966–67-லிருந்து 1968–69 வரை ஆண்டுத் திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள். | 2,560 வீடுகள். |
| 1966–67-லிருந்து 1968–69 வரை செலவு செய்யப்பட்ட தொகை. | ரூ. 130·82 லட்சம். |

[1971 ஜூலை 6

## நான்காவது திட்டம்.

| | |
|---|---|
| நான்காவது திட்டத்துக்கான நிதி ஒதுக்கம் .. | ரூ 500 லட்சம் |
| 1969–70-ல் கட்டப்பட்ட வீடுகள் .. .. | 502 வீடுகள். |
| 1969–70-ல் செலவு செய்யப்பட்ட தொகை .. | ரூ. 53·10 லட்சம். |
| 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகள் .. .. | 500 வீடுகள். |
| 1970–71-ல் செலவு செய்யப்பட்ட தொகை .. | ரூ. 75·78 லட்சம். |
| 1971–72-ல் திட்ட மதிப்பீடு .. .. .. | ரூ. 100 லட்சம். |
| 1971–72 குறிக்கோள் அளவு .. .. | 1,800 அங்கணங்கள். |

12.1. கிராம வீட்டு வசதித் திட்டம்.—தமிழ்நாட்டில் சமுதாய வளர்ச்சிப் பகுதியிலும், தேசிய வளர்ச்சிப் பணிப் பகுதியிலும் உள்ள தெரிந்தெடுத்த கிராமங்களின் வளர்ச்சிக்கான இத் திட்டம் மத்திய அரசின் உதவி பெறும் திட்டமாகும். "தன்னிறைவு" அடிப்படையில், தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளக் கிராமவாசிகளை ஊக்குவிப்பதற்கு ரூ. 3,000-க்கு மிகாமல் மூன்று தவணைகளில் கடன் வழங்கப்படுகிறது. அவ்வாறு கடன் வழங்கப்படும் நபர்கள் சொந்த நிலம் வைத்திருப்பதோடு, கடன் தொகையை வட்டியுடன் இருபது சம ஆண்டுத் தவணைகளில் திருப்பித் தரும் திறனுடையவராகவும் இருக்க வேண்டும். வீட்டிற்கு ரூ. 3,000 கடன் தொகையானது, கட்டடத்திற்காகும் மதிப்பீட்டுச் செலவில், 80 சதவீதமாகும். எஞ்சிய 20 சதவீதம் பயன் துய்ப்பவர்களால் உழைப்பு, உள்ளூரில் கிடைக்கும் பொருள்கள், பணியின்போது ஏற்படும் சேமிப்பு ஆகியவற்றின்மூலம் கொடுக்கப்படவேண்டும். "தன்னிறைவு" அடிப்படையில் உதவிபெற்று கட்டப்பட்ட வீடு இருபது ஆண்டுகளில் அவருக்குத் தங்குமிடமாகவும், சொத்தாகவும் ஆகின்றது.

12.2. தமிழ்நாட்டில் 12,400 கிராமங்களுக்கு மேல் உள்ளன. 208 கிராமங்களில் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1,401 கிராமங்களுக்குப் பெரும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத் திட்டம் மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுகிறது. இத் திட்டத்தை மேலும் பல கிராமங்களில் நிறைவேற்ற வேண்டும் என கிராம மக்களிடமிருந்து ஏராளமான விண்ணப்பங்கள் வந்த வண்ணம் உள்ளன.

12.3. வீடு கட்டப்படும் கிராமங்களில் கிராமவாசிகளுக்குத் தெருக்கள், சாக்கடை முதலிய வசதிகளுக்கும் இத்திட்டம் வகை செய்கின்றது. இதற்காகக் கிராமம் ஒன்றுக்கு ரூ. 10,000-க்கு மிகாமல் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. தெருக்கள், சாக்கடைகள் இவற்றை அமைக்க ஒவ்வோராண்டும் ரூ. 50,000 ஒதுக்கப்படுகிறது.

## திட்டச் சாதனைகள்.

| | |
|---|---|
| இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள். | 2,053 வீடுகள். |
| இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை. | ரூ. 54·91 லட்சம். |
| 1966–67-லிருந்து 1968–69 வரை ஆண்டுத் திட்டக் காலங்களில் வீடுகள். | 472 வீடுகள். |
| 1966–67-லிருந்து 1968–69 வரை செலவிடப்பட்ட தொகை. | ரூ. 29·73 லட்சம். |



V2;1,31'N71

1971 ஜூலை 6]

## நான்காவது திட்டம்.

3|N71-6

| | |
|---|---|
| நான்காவது திட்டத்துக்கான நிதி ஒதுக்கம் .. | ரூ 50 லட்சம். |
| 1969–70-ல் கட்டப்பட்ட வீடுகள் .. .. | 218 வீடுகள். |
| 1969–70-ல் செலவிடப்பட்ட தொகை .. .. | ரூ 7·75 லட்சம். |
| 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகள் .. .. | 240 வீடுகள். |
| 1970–71-ல் செலவிடப்பட்ட தொகை .. .. | ரூ 10·93 லட்சம். |
| 1971–72 ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு .. | ரூ 10·52 லட்சம். |
| 1971–72 ஆண்டுக்கான குறிக்கோள் அளவு .. | 240 வீடுகள். |

13. கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்.—இத் திட்டம் 1950-ஆம் ஆண்டிலிருந்தே நிறைவேற்றப்படுகிறது. கிராமப்புறச் சூழல் நிலவுகிற பெரிய, சிறிய ஊராட்சிகளில் வீடுகள் கட்டுவதற்குக் கடன் வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கூட்டுறவுப் பிரிவின்மூலம் இத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. திட்டத்தின்கீழ் வராத மாநில நிதிகளிலிருந்து இத்திட்டத்திற்கான நிதி வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், கட்டுமானச் செலவில் 80 சதவீதம் வரையில் (செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தைப்போல நான்கு மடங்குத் தொகைக்கு இது மேற்படக்கூடாது); ரூ. 10,000 கடன் மேல் வரம்பிற்குட்பட்டு, கடன்கள் வழங்கப்படுகின்றன. வீட்டிற்கான செலவு மதிப்பீடு ரூ. 15,000-க்கு மேற்படக்கூடாது. கடனைப்போல இரு மடங்கு மதிப்புடைய வில்லங்கமற்ற நிலங்களைச் சொந்தமாக வைத்திருக்கும் உறுப்பினர்கள் அதை இணைப்பிணையமாகக் கொடுக்கும் நேர்வுகளில், பங்கு மூலதனத்தைப்போல் ஏழு மடங்குத் தொகை கடனுதவியாக அளிக்கப்படும். 1971–72-ல் 120 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக, திட்ட மதிப்பீட்டில் ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## திட்டச் சாதனைகள்.

6/514

| | |
|---|---|
| முதல் மூன்று திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள். | 20 வீடுகள். |
| முதல் மூன்று திட்டக் காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை. | ரூ. 56·87 லட்சம். |
| 1966–67-லிருந்து 1968–69 வரை ஆண்டுத் திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள். | 321 வீடுகள். |
| 1966–67-லிருந்து 1968–69 வரை செலவிடப்பட்ட தொகை. | ரூ. 26·16 லட்சம். |
| 1969–70-ல் கட்டப்பட்ட வீடுகள் .. .. | 153 வீடுகள். |
| 1969–70-ல் செலவிடப்பட்ட தொகை .. .. | ரூ. 10·41 லட்சம். |
| 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகள் . .. | 140 வீடுகள். |
| 1970–71-ல் செலவிடப்பட்ட தொகை .. | ரூ. 10·27 லட்சம். |
| 1971–72-ம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு .. | ரூ. 10·00 லட்சம். |
| 1971–72-ம் ஆண்டுக்கான குறிக்கோள் .. | 120 வீடுகள். |

14. நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம்.—இத் திட்டம் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் கூட்டுறவுப் பிரிவின்மூலம் நிறைவேற்றப்பட்டது. இதற்கென திட்ட ஒதுக்கீட்டிற்குப் புறம்பான நிதி ஒதுக்கத்திலிருந்து இது நிறைவேற்றப்பட்டது. இத் திட்டம், 1963-ஆம்

ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் கைவிடப்பட்டது. இத் திட்டத்தின் கீழ், ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிற பேரளவுக் கடன் ரூ. 12,000 என்று வரையறுக்கப்பட்டுள்ளது. வருமான வரம்பு எதுவும் குறிப்பிடப்படவில்லை. 5,525 வீடுகள் கட்டுவதற்காக ரூ. 483.73 லட்சம் தொகை பயன்படுத்தப்பட்டது.

15. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் புழைக்கற்கலவைத் தொழிற்சாலை (Cellular Concrete Plant).— இந்திய அரசுக்கும் போலந்து குடியரசுக்கும் இடையில் 1962-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார ஒத்துழைப்பிற்கிணங்க, சென்னைக்கு அருகில் எண்ணூரில் புழைக்கற்கலவைத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக 23—9—1966-ஆம் நாளன்று தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்துக்கும் போலந்து நாட்டைச் சேர்ந்த திருவாளர்கள் செகாப் நிறுவனத்துக்கும் இடையே உடன்படிக்கை ஒன்று கையொப்பமாகியது. இது காரணமாக போலந்து வங்கிக்கு, இந்திய அரசு நிதி அமைச்சரகத்தினரால் ரூ. 1.04 கோடிக்கு அதிகாரக் கடிதம் (Letter of authority) வழங்கப்பட்டது. ரூ. 230 லட்சம் என்ற மூல மதிப்பீட்டின் அடிப்படையில், மாநிலத் திட்ட வரம்பிற்குப் புறம்பாக இத்தொழிற்சாலைக்குத் தேவையான கடனுதவி அளிப்பதற்கு இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இத்தொழிற்சாலைக்கான திருத்த மதிப்பீடு ரூ. 365 லட்சமென்று மதிப்பிடப்படுகிறது. இதற்கு இசைவு அளிக்குமாறு இந்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. இதற்கான அந்நியச் செலாவணி ரூ. 115 லட்சமாகும். தொழிற்சாலைக்குப் பக்கத்தில் இருப்புப் பாதைகள் அமைக்கும் வேலை நடந்தேறி வருகின்றது. சுண்ணும்புச் சூளையின் கடைக்கால் அமைப்புப் பணி முடிக்கப்பட்டவுடன் சூளைக்குத் தேவையான கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. சூளை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது. சுண்ணும்புக்கல் வெட்டுமிடம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. போலந்து நாட்டிலிருந்து எல்லா இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. கட்டுமான வேலையில் சுமார் 80 சதவீதம் முடிந்து விட்டது. நீராவிக் குழாய்களுக்காகவும், காற்றுடைக் குழாய்களுக்காகவும், மின்சாதனங்களை நிறுவுவதற்கும், எண்ணெய்க் குழாய் அமைப்புக்காக ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்டுவிட்டன. சுண்ணும்புச் சூளை 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. தலைமைத் தொழிற்சாலை 1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் சோதனை அடிப்படையில் உற்பத்தி தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. சோதனை உற்பத்தியிலிருந்து 6 வாரத்திற்குள் முறையான உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இயந்திரங்களுக்காக போலந்தின் கடனையும் சேர்த்து, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் 1970–71 வரை ரூ. 236.52 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்கு, இந்திய அரசிடமிருந்து இதுவரை ரூ. 245 லட்சம் கடனுகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்காக ரூ. 100 லட்சம், 1971–72 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

16. செங்கல் சூளை.—தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், செங்கல் இயந்திர சூளை ஒன்றை செக்கோஸ்லோவோகிய நாட்டு உடனமைப்புடன் தொடங்குவதற்கான செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டது.



இயந்திரங்களுக்கான விலைகுறித்து இயந்திரம் வழங்கும் நிறுவனத்திற்கு ரூ. 18.00 லட்சம் தொகைக்கு உத்தரவாதமும் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான முதலீட்டுச் செலவு சுமார் ரூ. 98.30 லட்சமாகும். அதற்கான அந்நியச் செலாவணி ரூ. 21.09 லட்சமாகும். இத்தொழிற்சாலையைத் தற்பொழுது தொழில் துறைக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், இயந்திரங்களை மாநில வீட்டு வசதி வாரியம் இறக்குமதி செய்து அத் துறைக்கு அனுப்பும்.

17. பொதுக் கடன்.—பங்குச் சான்றிதழ்களும், புரோ நோட்டுகளும் வழங்குவதற்காக, 1970–71-ல் ரூ. 100 லட்சம்வரை பொது மக்களிடமிருந்து கடன் திரட்ட தமிழ்நாடு அரசு மாநில வீட்டுவசதி வாரியத்திற்கு அதிகாரமளித்தது. பங்குச் சான்றுகள், புரோ நோட்டுகளின்மீது வட்டி அசல் தொகைகுறித்து மாநில அரசு உத்தரவாதமளித்தது. 1971-ஆம் ஆண்டு ஜனவரியில் திரட்டிய கடனுக்கு, தேவையான அளவுக்கு அதிகமாகவே தொகை கிடைத்துள்ளது.

18. அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டுவதற்கான முன்பணம் வழங்கல்.—அரசுப் பணியாளர்களுக்குப் புதிதாக வீடு கட்டுவதற்காகவும், புது மனை விலைக்கு வாங்குவதற்காகவும், கட்டப்பட்டுள்ள வீட்டை விலைக்கு வாங்குவதற்காகவும், முன்னரே அவர்களுக்குச் சொந்தமாகவுள்ள வீடு இடவசதியை அதிகப்படுத்துவதற்காகவும் முன்பணம் வழங்கப்படுகிறது. அரசின் நிரந்தரப் பணியாளராக இருப்பவர்களும், அல்லது ஐந்து ஆண்டு தொடர்ந்து அரசின்கீழ்ப் பணி புரிபவர்களும், இந்த மாநிலத்தில் பணிபுரிகின்ற அனைத்திந்தியப் பணி அதிகாரிகளும் இந்த முன்பணம் பெறத் தகுதியுடையவர்களாவார்கள். அரசுப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய சம்பளத்தைப் போன்று 45 மடங்கு தொகை அல்லது 45,000 ரூபாய் இவற்றில் எது குறைவாகவுள்ளதோ அத்தொகை முன்பணமாக வழங்கப்படுகிறது. கடன் தொகையைப் பணியாளர்கள் தங்கள் பணிக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துவதற்குள்ள திறன் அடிப்படையில் நிச்சயிக்கப்படுகிறது. இது விதிகளையொட்டிக் கணக்கிடப்படுகிறது. முன்பணத்திற்கான உச்சவரம்பு, ஊதியத்தைப் போன்று 60 மடங்கு அல்லது ரூ. 55,000 ஆகிய இவ்விரண்டில் எது குறைவாகவுள்ளதோ அத்தொகையாக அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. தாங்கள் சொந்த வீடுகள் கட்டிக்கொள்ளத் தாராளமாக நிதி வசதி அளிக்க வகைசெய்வதால், இத்திட்டத்தை அரசு ஊழியர் அனைவரும் பெருமளவில் வரவேற்கின்றனர். இத்திட்டத்திற்காக 1971–72-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 65 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

19. முடிவுரை.—இம் மாபெரும் திட்டங்களை நிறைவேற்ற இயலாமைக்குப் போதிய நிதி வசதி இல்லாததே முக்கிய தடையாக உள்ளது. இத் திட்டத்திற்கான தேவைகளையும், அவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியையும் ஒப்பிட்டுப் பார்ப்பின் ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறைவு எனத் தெரியவரும். பல்வேறு திட்டங்களின் அவசியத்தைக் கருதிப் பார்க்கையில் இன்னும் 10 ஆண்டுகளுக்கு ஒவ்வோர்

ஆண்டும் ரூ. 10 கோடி தேவைப்படும். வீடுகளின் தேவைகளைக் கணிசமான அளவு நிறைவு செய்ய இத்தொகை தேவைப்படும். மாநிலத்தில் உள்ள பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களை செயல் படுத்துவதற்காக சுழல் நிதியிலிருந்து ரூ. 23 கோடி பெறுவதற்கான செயற்குறிப்புகள் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. நிதிப் பற்றாக் குறை காரணமாக மாநில அரசின் திட்டங்கள் அனைத்தையும் நிறை வேற்ற இயலாததால் மிக இன்றியமையாத திட்டங்கள்மட்டும் அடங்கிய திருத்த செயற்குறிப்பினை அனுப்புமாறு இந்திய அரசு கேட்டது. அதன்படி ரூ. 9.85 கோடி செலவில் 6 திட்டங்களைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட செயற்குறிப்பு வீட்டுவசதி, நகர வளர்ச்சி நிதிக் கழகத்திற்கு (தனியார்) அனுப்பப்பட்டது. ஆனால் அக்கழகம் ரூ. 177.40 லட்சம் செலவாகும் ஒரே ஒரு திட்டத்திற்கு மட்டுமே நிதி வசதி அளிக்க இசைந்தது. அந்தத் தொகையில் ரூ. 25 லட்சம்மட்டுமே அது வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள திட்டங்களுக்கு களுக்கும் ஒப்புதல் அளிக்குமாறு கழகம் கேட்கப்பட்டுள்ளது. இந்த வீட்டு வசதி, நகர வளர்ச்சி நிதிக் கழகம் மாநிலத்தின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றுமேயாகில் நாம் அதன்மூலம் பெருமளவில் முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம்.



**1971-72-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வீட்டுவசதிக்கான நான்காவது திட்ட (தாற்காலிக) நிதி ஒதுக்கம்.**

| திட்டத்தின் பெயர். | நான்காவது திட்டச்செலவு. | 1971-72-ஆம் ஆண்டுக்கான திட்டச்செலவு. | 1971-72-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்). | |
| 1. மத்திய உதவி பெற்றது— | | | |
| (1) தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டம்— | | | |
| (அ) அரசுத் திட்டம் .. .. .. .. .. | | 30·00 | 9·00 |
| (இ) கூட்டுறவுத் திட்டம் .. .. .. .. | 150·00 | 2·00 | 3·73 |
| (உ) தனியார் தொழில் திட்டம் .. .. .. | | 10·00 | 2·00 |
| | | 42·00 | 14·73 |
| (2) தோட்டத் தொழிலாளர் வீட்டுவசதித் திட்டம் .. .. | 10·00 | 2·00 | 2·00 |
| (3) குறைந்த வருவாய் பெறுவோர்க்கான வீட்டுவசதித் திட்டம்— | | | |
| (அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் .. .. .. | 300·00 | 50·00 | 30·00 |
| (இ) கூட்டுறவுச் சங்கங்கள் .. .. .. .. | 220·00 | 55·00 | 30·00 |
| | 520·00 | 105·00 | 60·00 |

1971–72-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வீட்டுவசதிக்கான நான்காவது திட்ட (தாற்காலிக) நிதி ஒதுக்கம்—தொடர்ச்சி.

| திட்டத்தின் பெயர். | நான்காவது திட்டச் செலவு. | 1971–72-ஆம் ஆண்டுக்கான திட்டச் செலவு. | 1971–72-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| மத்திய உதவி பெற்றது—தொடர்ச்சி. | | | |
| (4) நடுத்தர வருவாய் பெறுவோர்க்கான வீட்டுவசதித் திட்டம்— | | | |
| (அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் .. .. .. .. | 1,500 | 300 | 55·00 |
| (இ) கூட்டுறவுச் சங்கங்கள் .. .. .. .. .. | | | 10·00 |
| (5) நிலம் கையகப்படுத்துதல் மேம்பாட்டுத் திட்டம் .. .. .. .. | | | 35·00 |
| (6) தமிழ்நாடு அரசுப் பணியாளர் வீட்டு வாடகைத் திட்டம் .. .. | | | 100·00 |
| (7) குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம் .. .. .. .. .. .. | 800·00 | 175·00 | 300·00 |
| (8) இராம வீட்டுவசதித் திட்டம் .. .. .. .. .. .. | 50·00 | 10·00 | 10·52* |
| | 3,030·00 | 622·00 | 587·25 |
| II மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டங்கள்— | | | |
| (9) புழை கற்கலவைத் தொழிற்சாலை .. .. .. .. | .... | .... | 100·00 |
| III திட்டத்தில் சேராப் பணிகள்— | | | |
| (10) இராமப் புற வீட்டுவசதித் திட்டம் .. .. .. .. .. | .... | .... | 10·00 |

* தெருக்களுக்காகவும், சாக்கடைகளுக்காகவும் திட்டத்தில் சேர்க்கப்படாமல் அனுமதிக்கப்பட்ட ரூ. 0·50 லட்சமும் இதில் சேர்ந்துள்ளது.



| | | | |
|---|---|---|---|
| (11) அரசு ஊழியர்களுக்கு வீடுகட்டக் கொடுக்கப்படும் முன்பணம்— | | | |
| (அ) அகில இந்தியப் பணி அதிகாரிகள் .. .. .. .. .. | .... | .... | 5·00 |
| (இ) பிறர் .. .. .. .. .. .... .. .. | .... | .... | 60·00 |
| | .... | .... | 762·25 |

பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட வீடுகள்/அங்காடிகள்/குடியிருப்புகள் பற்றியவைகளைக் காட்டும் விவர அறிக்கை.

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | துறையின் பெயர். | இரண்டாவது, மூன்றாவது திட்டம். | ஆண்டுத் திட்டம். 1966–67. | 1967–68. | 1968–69. | நான்காவது திட்டம். 1969–70. | 1970–71. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| (1) தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டம்— | | | | | | | |
| (அ) பொதுத் துறை .. .. | தொழில் நலத்துறை ஆணையாளர் .. | 2,062 | 159 | .. | 168 | .. | 12 |
| (இ) தனியார் துறை .. .. .. | ஷை .. | 278 | .. | .. | .. | .. | 8 |
| (உ) கூட்டுறவுத் துறை .. .. .. | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு). | 2,055 | 238 | 219 | 104 | 308 | 55 |
| (2) தோட்டத் தொழிலாளர் வீட்டுவசதித் திட்டம். | தொழிலாளர் நலத்துறை ஆணையாளர்... | 195 | .. | .. | .. | .. | .. |
| (3) குறைந்த வருமானம் பெறுவோர்க்கான வீட்டு வசதித் திட்டம். | (அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் .. | 2,142 | 274 | 415 | 437 | 600 | 500 |
| | (இ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (கூட்டுறவு பிரிவு). | 3,223 | 256 | 222 | 259 | 150 | 386 |
| (4) நடுத்தர வருமானம் பெறுவோர்க்கான வீட்டுவசதித் திட்டம். | (அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் .. | 776 | 96 | 168 | 225 | 450 | 550 |
| | (இ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு). | 338 | 60 | 59 | 27 | 50 | 100 |

பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட வீடுகள்/அங்காடிகள்/குடியிருப்புகள் பற்றியவைகளைக் காட்டும் விவர அறிக்கை—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | துறையின் பெயர். | இரண்டாவது, மூன்றாவது திட்டம். | ஆண்டுத் திட்டம். 1966–67. | 1967–68. | 1968–69. | நான்காவது திட்டம். 1969–70. | 1970–71. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| (5) நிலம் கையகப்படுத்துதல் மேம்பாட்டுத் திட்டம். | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் .. .. | 2,759·54† | 399·89† | 249·90† | 146·36† | 251·90† | 161·86† |
| (6) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு வாடகை வீட்டுவசதித் திட்டம். | ஷை | 2,228 | 42 | 1,716 | 802 | 502 | 500 |
| (7) குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | ஷை | 3,849 | 224 | 1,524 | 2,998 | 1,800 | 1,400 |
| | | 7,332* | | 5,938* | | | |
| (8) கிராம வீட்டுவசதித் திட்டம் .. .. | கோட்டப் பொறியாளர் (கிராம வீட்டு வசதிப் பிரிவு). | 2,053 | 58 | 214 | 200 | 218 | 240 |
| (9) கிராம புற வீட்டுவசதித் திட்டம் .. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு). | 720 | 75 | 85 | 164 | 153 | 140 |
| (10) மாநில நகர வீட்டுவசதித் திட்டம் .. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு). | 5,525 | தொடங்கப்பட்டதிலிருந்து 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை செயல்பட்டு அதற்குப் பிறகு கைவிடப்பட்டது. | | | | |

பல்வேறு வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் சாதனைகளைக் காட்டும் விவர அறிக்கை.

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | துறையின் பெயர். | இரண்டாவது, மூன்றாவது திட்டம். | ஆண்டுத் திட்டம். 1966–67. | 1967–68. | 1968–69. | நான்காவது திட்டம். 1969–70. | 1970–71. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்). | | | |
| (1) தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டம்— | | | | | | | |
| (1) பொதுத் துறை .. .. .. | தொழிலாளர் நலத்துறை ஆணையாளர். | 182·43 | 10·30 | 7·59 | 10·73 | 2·75 | 0·28 |
| (2) தனியார் துறை .. .. .. | ஷை. | 7·34 | .. | .. | .. | .. | 0·24 |
| (3) கூட்டுறவுத் துறை .. .. .. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு). | 94·27 | 11·57 | 5·09 | 8·80 | 5·50 | 3·73 |
| (2) தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம். | தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் | 3·72 | .. | .. | .. | .. | .. |
| 3) குறைந்த வருவாய் பெறுவோர்க்கான வீட்டு வசதித் திட்டம். | (அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் .. | 169·67 | 34·38 | 25·85 | 15·96 | 52·69 | 22·60 |
| | (இ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு). | 215·10 | 20·99 | 17·20 | 22·31 | 22·79 | 33·13 |
| (4) நடுத்தர வருவாய் பெறுவோர்க்கான வீட்டு வசதித் திட்டம். | (அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் .. | 209·15 | 36·39 | 27·30 | 19·32 | 64·48 | 89·57 |
| | (இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு). | 139·50 | 15·00 | 10·00 | 12·50 | 10·00 | 20·01 |
| (5) நிலம் கையகப்படுத்துதல் மேம்பாட்டுத் திட்டம். | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் .. | 383·23 | 145·97 | 127·12 | 146·05 | 187·42 | 284·50 |
| (6) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு வாடகை வீட்டு வசதித் திட்டம். | ஷை | 187·15 | 57·70 | 37·32 | 35·86 | 53·10 | 75·78 |
| (7) குடிசைப் பகுதி, சீரமைப்பு, மாற்றுத் திட்டம். | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் .. | 380·16 | 73·67 | 106·84 | 115·13 | 83·29 | 99·97 |
| (8) கிராம வீட்டுவசதித் திட்டம் .. .. | கோட்டப் பொறியாளர் (கிராம புற வீட்டு வசதி பிரிவு). | 54·91 | 7·11 | 7·76 | 14·86 | 7·75 | 10·93 |
| (9) கிராம புற வீட்டுவசதித் திட்டம் .. | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு). | 56·87 | 10·00 | 6·03 | 10·13 | 10·41 | 10·27 |
| (10) மாநில நகர் வீட்டுவசதித் திட்டம் .. | ஷை | 483·73 | தொடங்கப்பட்டதிலிருந்து 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை செயல்பட்டு அதற்குப் பிறகு கைவிடப்பட்டது. | | | | |

†சீர்செய்த வெற்று மனைகள். *ஏக்கர்.

[1971 ஜூலை 6

## இணைப்பு 2

[42-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### நிலவரி மான்யக் கோரிக்கை.

1. இக் குறிப்பில் மானியக் கோரிக்கை எண்கள் 1. "நிலவரித் துறை", 9. "மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்" ஆகியவை முக்கியமாக விளக்கிக் கூறப்பட்டுள்ளன. மற்றும் கோரிக்கை எண்கள் 31. "பஞ்ச நிவாரணம்"; 36. "ஏனைய பல்வகை இழப்பீடுகளும் நிதி ஒப்படைகளும்", 37. "ஜமீன்தார்களுக்கு இழப்பீடு"; 47. "மாநில அரசு தரும் கடன்களும் முன் பணங்களும்"; 4. "முத்திரைத் தாள் நிர்வாகம்" முதலியன தொடர்புள்ள பிற மான்யக் கோரிக்கைகளாகும்.

2. பொது வருவாயின் மிகத் தொன்மையான வாயிலாகிய நில வரியே தொன்றுதொட்டு அரசுக்கு முக்கியமான அடிப்படை வருவாயாக இருந்து வந்துள்ளது. அரசுக்கு வருவாயில் நில வரியின் பங்கு அவ்வளவு முக்கியமாயிருந்ததால், நில வரித் துறை மாநில நிர்வாகத்தின் அச்சாணி போன்று விளங்கியது. காலப் போக்கில் வருவாய்த் துறை பொது நிர்வாகத் துறையாக உருப் பெற்றது. அரசுச் செலவுக்கான நிதி வழங்கும் வாயில் என்ற அதன் தொன்மைப் பெருமையை நிலவரி இப்போது இழந்துவிட்டதென்றாலும், மாநில நிர்வாகத்தில் வருவாய்த் துறையே இன்னும் முன்னணியில் இருக்கிறது. மக்கள் ஆதரவு பெற்ற அரசின் கொள்கைகள் வருவாய்த் துறை மூலமாகவே அமைதியாகச் செயல் படுத்தப்பட்டு அவற்றின் பயனைப் பொதுமக்கள் துய்க்கின்றனர். வெள்ளம், சூறாவளி, கடுமையான வறட்சி போன்ற நெருக்கடி நிலைகளை உடனடியாகவும், திறம்படவும் சமாளித்து நெருக்கடியை நீக்குவதும் இத் துறையே.

3. இந்த அரசு 1967-ஆம் ஆண்டில் பதவி ஏற்ற சிறிது காலத்துக்குள், புன்செய் நிலங்கள் மீதான நிலவரி வசூலை நீக்கிவிட்டது. நிலங்களை உடைய சிறு விவசாயிகட்கும் இந்த நன்மை அளிக்கப்பட வேண்டுமென அரசு இப்போது முடிவு செய்துள்ளது. இதற்கேற்ப, ஒருவர் வைத்துள்ள மொத்த நிலம் எவ்வளவு பரப்புள்ளதாக இருப்பினும், ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த அளவுள்ள நன்செய் நில உடமைகள் மீதான மொத்த நன்செய்த் தீர்வையில் அடிப்படை நிலவரிப் பகுதியை மட்டும் வசூலிக்க வேண்டாமென அரசு முடிவெடுத்துள்ளது. இந்த முடிவு இவ் விளைவாண்டு முதல், அதாவது 1—7—1971 முதற்கொண்டு செயலுக்கு வரும். ஆனால், இந்த அடிப்படை நன்செய் நில வரித் தீர்வை நீக்கப்பட்டிருந்த போதிலும், ஊராட்சி ஒன்றியங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய உள்ளூர் செஸ், உள்ளூர் செஸ் மேல் வரி, தண்ணீர்த் தீர்வை ஆகியவை தொடர்ந்து வசூலிக்கப்பட்டு வரும். சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதே நோக்கமாகக் கொண்ட இந்த அரசின் கொள்கைக்கிணங்கவே, இம் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேளாண்மை உற்பத்தி, குறிப்பாக சிறு நில உடமைகளில் வேளாண்மை உற்பத்தி பெருகுவதற்கு இச் சலுகைகள் தூண்டுகோலாக அமையுமென நம்புகிறோம்.



1971 ஜூலை 6]

4. அரசு தீட்டியுள்ள, மக்கள் ஆதரவு பெற்ற கொள்கைகள் விரைந்து செயல்படுத்தப்பட வேண்டுமானால், அது மாவட்ட நிர்வாகத்தையே பெரிதும் பொறுத்துள்ளது. மாவட்ட நிர்வாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரே அச்சாணியாக விளங்குகிறார். முன்னதாகவே தயாரிக்கப்பட்ட தங்கள் சுற்றுப் பயணத் திட்டத்திற்கிணங்க, கோட்ட அலுவலகங்களுக்குச் சென்று பார்வையிடுமாறும், அப்போது பொதுமக்கள் தரும் மனுக்களைப் பரிசீலிக்குமாறும், உள்ளூர் தேவைகளைக் கவனித்து ஆவன செய்யுமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள வட்டத் தலைமையிடங்கள் அனைத்தையும் ஆறு திங்களுக்கு ஒரு முறையேனும் சுற்றிப் பார்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

5. கடந்த ஆண்டில் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட "மனுநீதித் திட்டம்" பொதுமக்களின் குறைகளை அந்தந்த இடத்தில் நேரில் கேட்டறிந்து, திறம்படத் தீர்ப்பதற்காக, கூடுதல் ஆர்வத்துடன் இந்த ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

6. கடந்த ஆண்டு வருவாய் மானியக் கோரிக்கை விளக்கக் குறிப்பில் ஜமாபந்தி முறையைப் படிப்படியாகக் நீக்குவது குறித்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மாற்றத்தைப் படிப்படியாகவும் எளிதாகவும் செயல் படுத்தும்பொருட்டு கடந்த ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டத்தில் ஜமாபந்தி முறை நீக்கப்பட்டது. பதிலாக, கணக்குகள் தக்கவாறும், சரியாகவும், எழுதப்படுவதை சரி பார்க்கவும், அவற்றைக் குறித்த காலத்துக்கொரு முறை ஆய்வு செய்யவும் இந்த வட்டங்களுக்கென சிறப்பு துணைத் தாசில்தார்கள் நியமிக்கப்பட்டனர். இது இப்போது அரசின் மறு ஆய்வில் உள்ளது.

7. பரம்பரை கிராம அதிகாரிகள் சட்டம் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து கிராம அதிகாரிகளை நியமிப்பதில் பின்பற்றப்பட்டு வந்த பரம்பரை உரிமை முறை இப்போது கைவிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 309-ஆவது பிரிவின் மூலம் பிறப்பிக்கப்பட்ட பணி விதிகளின் கீழ் கிராம அதிகாரிகளின் பணியும் இப்போது முறைப்படுத்தப்பட்டுள்ளது. 16—12—1970 முதல் இவ் விதிகள் செயலுக்கு வந்துள்ளன.

8. தங்கள் ஊதியங்களை உயர்த்த வேண்டுமென கிராம அதிகாரிகள் விடுத்த வேண்டுகோளைப் பரிவுடன் ஆலோசிப்பது அவசியமென இந்த அரசு உணர்ந்து, அதனை 1971-ல் நியமிக்கப்பட்ட இரண்டாவது சம்பள ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்தது. இது

குறித்துச் சம்பள ஆணைக்குழு செய்த பரிவுரைகளை அரசு ஏற்றுக் கொண்டு, கிராம அதிகாரிகளின் ஊதியங்களைக் கீழே காட்டி யுள்ளபடி கணிசமாக உயர்த்துவதற்கு ஆணை பிறப்பித்துள்ளது :—

| | | பழைய ஊதியம். | புதிய ஊதியம். |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| கிராம மணியக்காரர் | ... ... | 51 | 70 |
| கணக்குப் பிள்ளை | ... ... ... | 53 | 72 |
| தலையாரி, வெட்டியான் முதலிய கிராமக் கடைநிலை ஊழியர் | ... ... | 45 | 60 |

ஊராட்சி வரிகளை வசூலிப்பதற்காகக் கிராமப் பணியாளர் களுக்குக் கொடுக்கப்படும் ஊராட்சி வளர்ச்சிப் படிக்குக் கூடுதலாக இந்த உயர்வு அளிக்கப்படுகிறது. ஊராட்சிப் படியும் சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் உயர்த்தப் பட்டுள்ளது. கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த ஒருங்கிணைந்த ஆண்டுப் பயணப் படியும் சம்பள ஆணைக்குழு செய்த பரிந்துரைகளை ஒட்டி உயர்த்தப்பட்டுள்ளது.

9. இம்மாநிலத்தில் நிலச் சீர்திருத்த சட்டங்கள் இயற்றப் படுவதன் அடிப்படை நோக்கங்கள் சமதர்ம சமுதாயத்தை உரு வாக்குதல், நிலக்கிழார்கள் குத்தகைதாரர்களின் உழைப்பை சாதக மாக பயன்படுத்திக் கொள்வதை அறவே நீக்கி, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க வகை செய்தல், உண்மையில் பாடுபட்டு உழைக்கும் உழவர்க்கு குத்தகை உரிமை முறை குறித்து இன்னும் அதிக பாதுகாப்பு அளிக்க வகை செய்தல், ஒரு சில பெரிய நிலக் கிழார்களிடம் நிலங்கள் குவிந்திருத்தலைத் தவிர்த்தல் ஆகியவை யாம்.

10. 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதார்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பு அளித்தல்) சட்டத்தின் கீழ் 31—3—1959 அன்று குடியிருப்புகளை அனுபோகத்தில் உடைய உழவர்களும் பண்ணைத் தொழிலாளர்களும் அக்குடியிருப்புகளி லிருந்து வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாக்கப்பட்டுள்ளனர். குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்து வருபவர்கள் அனைவருக்கும், அவர்கள் எந்த நாளில் குடியிருப்புகளை அனுபவிக்கத் தொடங்கி யிருந்தாலும், இப் பாதுகாப்பை நீட்டிக்க அரசு இப்போது முடிவு செய்துள்ளது. 1—2—1969-க்குப் பிறகு, ஒரு குடியிருப்பிலிருந்து அத்தகைய அனுபோகதாரர் வெளியேற்றப்பட்டிருந்தால், அவருக்கு அனுபோக உரிமை மீண்டும் கொடுக்கப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான சட்டமும் கொண்டுவரப் பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளது.

11. உழவர்களும் பண்ணைத் தொழிலாளர்களும், தங்களது நிலக் கிழார்களுக்குச் சொந்தமான மனைகளில் தங்களது செலவில் கட்டப் பட்ட அல்லது தங்களுக்கு முன் உரிமை பெற்றிருந்தவர்களால் கட்டப்பட்ட குடியிருப்பு வீடுகளில் குடியிருந்தால், நிலக்கிழார்களுக்கு இழப்பீடு கிடைக்கும் வகையிலும், அந்த வீட்டு மனைகளின் சுவாதீன உரிமையை உழவர்களும் பண்ணைத் தொழிலாளர்களும் பெற





இயலும் வகையிலும் நடப்புக் கூட்டத் தொடரில் சட்டமியற்ற அரசு கருதியுள்ளது. இப்புதிய சட்டத்தின் வாயிலாக இம்மாநிலத் திலுள்ள எண்ணற்ற ஏழை உழவர்களும், வேளாண்மைத் தொழி லாளர்களும் அவர்களுக்கு மிகவும் தேவையான பொருளாதாரப் பாதுகாப்பையும் மன நிம்மதியையும் பெறுவர் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது. இதன் மூலம், வேளாண்மைத் துறையில் சமூக உறவுகள் நிலைபெற்று முறையான வேளாண்மைப் பொருளா தார வளர்ச்சிக்கும் இது வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

12. 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேடுகள் சட்டம், குத்தகை உரிமைகள் குறித்த முழுமையான நம்பகமான பதிவேட்டைத் தயாரித்துப் பேணி வர வகைசெய்கிறது. இந்தப் பதிவுமுறை குத்தகை உரிமை குறித்த எழுத்து மூலமான ஆவணமாகும். வாய்மொழி வடிவில் உள்ள குத்தகை ஒப்பந்தங்களால் ஏற்படும் பல தீங்குகளை இதன் மூலம் தவிர்க்கலாம். இச்சட்டம் 19—12—1969 அன்று செயலுக்கு வந்தது. இச்சட்டம் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப் பட்டும் வருகிறது. இச்சட்டத்தைப் பிற மாநிலங்களுக்கும் நீட்டிப் பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

13. 1970-ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக, தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வறட்சிநிலை ஏற்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுப்பிய அறிக்கைகளின் அடிப்படை யில், இராமநாதபுரம், கோயமுத்தூர், திருநெல்வேலி, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, மாவட்டங்களில் குடிநீர்க் கிணறுகளை வெட்டுவதற்கும் ஆழப்படுத்துவதற்கும் ரூ. 36.91 லட்சம் அளவிற்குத் துயர் தணிப்புத் தொகைக்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. பாதிக் கப்பட்ட மாவட்டங்களில் வறட்சி நிலைமைகள் குறைவதற்கான அறி குறிகள் காணப்படவில்லையாதலால், திருநெல்வேலி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து கூடுதல் நிதிகள் கேட்டு வேண்டுகோள் வந்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒப்பளிக்கப்பட வேண்டிய வறட்சித் துயர் தணிப்புத் தொகையின் மொத்த அளவைக் குறித்து இறுதி முடிவெடுப்பதற்காக வறட்சி நிலைமைகளின் தன்மை யும் அளவையும் பற்றிய விரிவான, ஒருங்கிணைந்த ஆய்வு தேவையென அரசு கருதியது. அரசு கேட்டுக் கொண்டதன் பேரில், வறட்சித் துயர் தணிப்புக்காகச் செயற்குறிப்புகள் அனுப்பியிருந்த மாவட்டங் கள் ஒவ்வொன்றையும் வருவாய்த்துறை வாரிய உறுப்பினர்கள் சுற்றிப்பார்த்தனர். இம்மாவட்டங்களின் பல பகுதிகளையும் நேரடி யாக பார்வையிட்ட பிறகு பல்வேறு மாவட்டங்களில் தேவைப்படும் உதவியின் அளவைக் குறிப்பிட்டு, அவர்கள் அரசுக்கு அடங்கல் அறிக்கைகளை அனுப்பி வைத்தனர்.

வருவாய்த்துறை வாரியத்தின் செயற் குறிப்புகளை அரசு கவன மாகப் பரிசீலனை செய்து, வறட்சித் துயர் தணிப்புப் பணிகளில் குடி நீர் வழங்கல் பணிக்கு முதன்மை இடம் அளிக்கப்படவேண்டும் என்று

[1971 சூலை 6

அரசு கருதியது. பல்வேறு மாவட்டங்களில் துயர் தணிப்புப் பணிகளுக்காக ரூ. 24.84 லட்சத்திற்கு மேற்படாத தொகையை அரசு வழங்கியுள்ளது. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| மாவட்டத்தின் பெயர். | நோக்கம். | தொகை (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|
| 1. திருச்சிராப்பள்ளி .. | குடிநீர்க் கிணறுகளை ஆழப் படுத்துதலும் வெட்டுதலும். | 5·00 |
| 2. மதுரை ... .. | ஷை | 3·76 |
| 3. திருநெல்வேலி .. | ஷை | 1·08 |
| 4. கோயமுத்தூர் .. | ஷை | 5·00 |
| 5. சேலம் .. .. | ஷை | 5·00 |
| 6. தஞ்சாவூர் .. | இணைப்புச் சாலைகள், சமுதாய கிணறுகள் முதலியவை. | 5·00 |
| | | 24·84 |

இவ்வாறாக, 1971 ஜனவரி முதற்கொண்டு, வறட்சித் துயர் தணிப்புக்காக மொத்தம் ரூ. 61.75 லட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

14. இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களுக்காக, சிறப்புக் கிராமப்புற பணிகள் திட்டமொன்றுக்கு இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும், மொத்தம் ரூ. 2 கோடி செலவில் 1970–71ல் தொடங்கி 1973–74 வரையில் உள்ள நான்காண்டுக் கால அளவில் (அதாவது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதி வரையில்) நிறைவேற்றப்படவிருக்கும் இத் திட்டம் "திட்டப்பணி அல்லாத மத்திய அரசுப்பணி" யாக இவ்வரசினால் மேற்கொள்ளப்பட்டு இதற்கான செலவு முழுவதையும் இந்திய அரசு ஏற்கும். இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்கள் அடிக்கடி வறட்சி நிலைமைக்கு உட்படுவதால் ஏற்பட்டுள்ள துயர நிலைமைகளைத் தணிக்கும் வகையில் இச்சிறப்பு கிராமப் பணிகள் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அடிக்கடி நேரும் வறட்சியினால் ஏற்படும் துயரத்தையும் இடர்ப்பாட்டையும் அறவே களைய முடியா விடினும் ஓரளவிற்காவது மக்களது துயர் தணிக்க உதவும் நாட்டியல் பணிகள் அல்லது பிற பணிகளை நிலையாக நிறைவேற்றுவது குறித்து இப்புதிய திட்டத்தில் வலியுறுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ் வகை செய்யப்பட்டுள்ள மும்முர உழைப்புத் திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. சீரான சாலைகளை அமைத்தலும், தற்போது சீர் கேடுற்றுள்ள சாலைகளில் அவசியமானவிடத்து சரளைக் கற்களை பரப்புவதன் மூலம் சீரான சாலைகளாக அமைத்தலும்.

2. நீர் வழங்கு கால்வாய்களில் தூரெடுத்தல், ஏரிகளைப் புதுப்பித்தல் உட்பட பெரும் பாசனப் பணிகளும், சிறுபாசன பணிகளும்.

3. நீர்க் கசிவுக் குட்டைகள், தடுப்பு அணைகள், நிலவளைவுக்கு ஏற்ப கரை கட்டுதல் போன்ற பணிகள் உட்பட மண்வளப் பாதுகாப்பு வேலைகள்.



1971 சூலை 6]

4. காடுகள் வளர்த்தல் முதலியன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி, இராமநாதபுரம், முதுகுளத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், திருப்பத்தூர் ஆகிய 5 வட்டங்களிலும், தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தருமபுரி, ஹரூர், ஊத்தங்கரை ஆகிய 4 வட்டங்களிலும் மட்டுமே இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து இந்திய அரசு அனுமதி அளித்தது. இருப்பினும் இவ்வரசு, பொருத்தமான கூறுகளைக் கவனமாகப் பரிசீலித்தபின், இந்த ஏற்பாட்டிற்கு இந்திய அரசு ஒப்புதல் அளிக்குமென எதிர்பார்த்து தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள எல்லா வட்டங்களையும் இத்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்வதென்று முடிவு செய்தது. ஏனைய வட்டங்களில் நிலவும் நிலைமைகள் ஏற்கெனவே தெரிந்தெடுக்கப்பட்டு இந்திய அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட வட்டங்களில் நிலவும் நிலைமைகளைவிட மாறுபடவில்லை என்ற காரணத்தினாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. இவ்விரு மாவட்டங்களைச் சேர்ந்த எல்லா வட்டங்களிலும் இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வேலையைத் தொடங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

15. நிலமற்ற ஏழைமக்களுக்குக் கூடியமட்டும் நிலம் ஒதுக்கி தருவதே இவ்வரசின் ஏற்புடைக் கொள்கையாக இருந்து வருகிறது. நில மற்ற ஏராளமான ஏழை எளியோருக்கு இயன்ற வரையில் மறு வாழ்வு அளிக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டும் இம் மாநிலத்தில் நிலத்துக்கும் மனிதனுக்கும் உள்ள விகிதாச்சாரம் படிப்படியாக குறைந்து வருவதைக் கருதியும் நிலமற்ற ஒவ்வொருவருக்கும் கொடுக்கக் கூடிய அதிக அளவு நிலத்தை ஏற்கனவே இருந்த வரம்பாகிய 5 ஏக்கர் புன்செய் அல்லது 2½ ஏக்கர் நன்செய் என்பதிலிருந்து 3 ஏக்கர் புன்செய் அல்லது 1½ ஏக்கர் நன்செயாக அண்மையில் அரசு குறைத்துள்ளது.

16. 1969–70-ஆம் ஆண்டில் 1,55,813 ஏக்கர் நிலம் நிலமற்ற ஏழைகட்கு ஒப்படை செய்யப்பட்டது. ஒப்படை செய்யப்பட்ட பட்டாக்களின எண்ணிக்கை 71,738 ஆகும். பெருமிதம் அடையக் கூடிய இந்த சாதனையின் அடிப்படையில், நிலமற்ற ஏழையருக்கு நிலம் ஒதுக்க 1970–71-ல் இதைவிட உயர்ந்த இலக்கு முடிவு செய்யப்பட்டது. அவ்வாண்டில் 1,73,558 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. 1971-ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து மார்ச்சு மாதம் முடிய வருவாய்த் துறை அலுவலர்கள் அனைவருமே தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த போதிலும், 1969–70-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட குறிப்பிடத் தக்க பணியையும் மிஞ்சிய இச்சாதனை 1970–71-ல் நிகழ்த்தப்பட்டது.

17. சொந்த வீடு இல்லாத பாமர மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்கி, ஆட்சேபணையற்ற நிலவெளவுதல்களை முறைப்படுத்தவும் சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மொத்தம் முறைப்படுத்தப்பட வேண்டிய நிலவெளவுதல்களின் எண்ணிக்கை 3,04,118 ஆகும். இவற்றில், 1971 மார்ச்சு வரை 2,32,131 நில வெளவுதல்கள் வீட்டுமனை வடிவில் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

18. முத்திரைத்தாள் சட்டத்தைத் திருத்திய 1967-ஆம் ஆண்டு 24-வது சட்டத்தின் மூலம் நிலவர மதிப்பைப் பரிசீலனைக்குரிய அடிப்படை மதிப்பாகச் செய்து, ஆவணங்களின் மதிப்பைக் குறைத்துப் பதிவு செய்வதனைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இத் திருத்தச் சட்டத்தின்கீழ் உரிமை மாற்றத்துக்கு உள்ளான சொத்தின் நிலவர மதிப்புக் கிணங்க முத்திரைத்தாள் தீர்வை செலுத்த வேண்டுமென்று பத்திரப் பதிவுத் துறை அதிகாரிகள் வற்புறுத்தவியலும். உரிமை மாற்றத்துக்கு உள்ளாகும் சொத்துக்களின் நிலவர மதிப்பைப் பொருத்தமான வகையில் தீர்மானிப்பதை உறுதி செய்யத் துணைப் பதிவாளர்களுக்கு இயலும் பொருட்டு "நெறிமுறைகள்" வருவாய்த்துறையால் வரையறுக்கப்பட்டுத் துணைப் பதிவாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த வழிகாட்டிக் கொள்கைகளை நடைமுறையில் செயல்படுத்துவதற்காக பத்திரப் பதிவுத்துறைத் தலைவரின்கீழ் பணிபுரிவதற்கென அரசு, சிறப்பு வருவாய்த்துறைப் பணியாளர்களை நியமிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. சொத்து மதிப்பீடு செய்வதற்காக பத்திரப் பதிவு நேர்வுகளை வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் அவசியத்தாலெழுகின்ற தாமதங்களுக்கான வாய்ப்புகளை இது குறைக்கும்.

19. சென்னை மாநகரிலுள்ள துணைப்பதிவாளர்கள் நீங்கலாகப் பிற துணைப் பதிவாளர்கள் சாதாரண முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக ரூ. 500 வரை பணமாகவே பெற்றுக் கொண்டு ஆவணங்களைப் பதிவு செய்து தர அதிகாரமளிக்கப்பட்டுளனர். இத்திட்டத்தை சென்னை மாநகருக்கு விரிவு படுத்தும் ஒரு செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

20. சிறு பரப்புள்ள நகரப்புறச் சொத்து உடைமையாளர்களுக்கு சிறிது பரிகாரமளித்து, அதே நேரத்தில் பெருமளவு நகர்ப்புற சொத்துடைமையாளர்களிடமிருந்து அரசுக்குத் சேரவேண்டிய உரிமை தொகையை வசூல் செய்யும் வகையில் ஒரு மனைக்கு மேற்படாத நிலங்களுக்கு நகர்ப்புற நில்வரியிலிருந்து விலக்களிக்கவும் இந்த அளவுக்கு மேற்பட்ட நிலங்களின் மீது படிப்படியாக உயரும் விதத்தில் வரிவிதிப்பு செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு மனைக்குக் கூடுதலான ஆனால் இரண்டு மனைகட்கு மேற்படாத நிலங்களுக்கு 0.5 சதவீதமும், இரண்டு மனைகட்கு மேற்பட்டு ஆனால் ஐந்து மனைக்கட்டு மேற்படாத நிலங்களுக்கு 0.7 சதவீதமும், ஐந்து மனைகட்கு மேற்பட்டு ஆனால் 10 மனைகட்கு மேற்படாத நிலங்களுக்கு 0.8 சதவீதமும், 10 மனைகட்கு மேற்பட்ட நிலங்களுக்கு 1.0 சதவீதமும் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படும்.

நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ் பல்வேறு பொறுப்புக்கழகங்களால் பெறப்பட்ட விதிவிலக்குகள் அனைத்தையும் இரத்து செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில், உத்தேசவரிவிலக்கின் மூலம் ஒரு மனைக்கு மேற்படாத நிலமுடைய 66,000 பேர் பயன் பெறுவர்.

மேலும், தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தினை மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயமுத்தூர் ஆகிய நகர்களுக்கும் விரிவு படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.



21. தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் அமைப்பை சீரமைக்க அரசு முடிவு செய்துள்ளது. நிலவகைப்பாட்டிற்கும் இவ்வரிக்குமுள்ள தொடர்பைக் காட்டிலும் நில வருவாய்க்கும் இவ்வரிக்கும் உள்ள தொடர்பு நெருங்கியதாக அமையும் வகையில் இச் சட்டம் சீரமைக்கப்படும். தேயிலை, காப்பி, ரப்பர், பாக்கு, ஏலக்காய், சின்கோனு ஆகியவை தவிர மற்ற எல்லாப் பயிர்களையும் பொறுத்தவரையில் நிலத்தின் வகையைப் பொறுத்து வருமான வரி விதிக்கும் நிலையே தற்போது உள்ளது. தற்போது வருமான வரி வரம்பிற்கு உட்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் கணிசமான அளவுக்கு அதிக விவசாயிகளை இவ் வரம்பின் கீழ்க் கொண்டுவரவும், வரிவீதங்களை உயர்த்தவும் இவ் வாய்ப்பு பயன்படுத்திக் கொள்ளப்படும். அப்போதுதான் இச் சட்டம் மேலும் பொருளுள்ளதாவதுடன், வளர்ச்சித் திட்டங்கள் குறித்து மாநில அரசுக்கு ஏற்படும் செலவில் மிக நியாயமானதொரு பங்கை வேளாண்மைத் துறை ஏற்றுக்கொள்ளவும் இயலும்.

22. பெருவாரியான மக்களுக்கு சமுதாய நிலையிலும் பொருளாதார நிலையிலும் நியாயம் வழங்க வேண்டுமென்கிற சீரான பணியை இவ்வரசு சிரமேற்கொண்டுள்ளது. இப்பணியில் அரசுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன், வருவாய்த்துறை தனது பொறுப்பின் கீழ் உள்ள சட்டங்கள் அனைத்தையும், அது அரசு நிலங்களை ஒப்படை செய்தல் பற்றிய அதிகாரங்களாக இருந்தாலும் சரி, நிலச் சீர்திருத்தங்கள் பற்றிய சட்டமாக இருந்தாலும் சரி, அல்லது வரி விதிப்பது பற்றிய சட்டங்களாக இருந்தாலும் சரி, அவற்றை நியாயமாகவும் முறையாகவும் செலுத்தி வந்துள்ளது என்பது சுருக்கமான இவ் வறிக்கையிலிருந்து புலனாகும்.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

### புதன்கிழமை, 1971 ஜூலை 7.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்பு

#### முன்னாள் உறுப்பினர் திரு. கே. எஸ். லட்சுமிபதி அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒட்டன்சத்திரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1952-ஆம் ஆண்டிலிருந்து 1957-ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப் பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. கே. எஸ். லட்சுமிபதி அவர்கள் 4—7—1971-ஆம் நாளன்று மறைந்ததைக்குறித்து இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

### 2. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

#### மாயவரத்திலுள்ள ஏ. வி. சி. கல்லூரிக்கு மானியம் வழங்கல்

* 146 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

*மாயூரம் ஏ. வி. சி. கல்லூரிக்கு 1970–71-ஆம் கல்வி ஆண்டில் அரசு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு?*

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1970-ஆம் ஆண்டு மாயூரம் ஏ. வி. சி. கல்லூரிக்கு கீழ்க்கண்ட மானியங்கள் வழங்கப்பட்டன.—

ஆசிரியர்களுக்கான மானியம்—

(1) முன்பணமாக—ஆசிரியர் மானியம் ரூ. 37,300.

(2) முன்பணமாக—கட்டண ஈட்டுத்தொகை ரூ. 1,24,200.

(3) இறுதியான—ஆசிரியர் மானியம் ரூ. 38,401.

கட்டட மானியம்—இல்லை.

தளவாட மானியம்—ரூ. 4,755.

கட்டடம் கட்டுவதற்காக எந்தவித மானியமும் வழங்கப்படவில்லை.

[1971 ஜூலை 7

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும்போது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை சரியாக அமல் நடத்தப்படுவதில்லை, குறிப்பாகப் பிற்பட்ட சமூகத்தினரை அதிக மார்க் வாங்கியிருந்தாலும் சேர்த்துக்கொள்வதில்லை என்கிற நிலைமை அங்கு இருப்பதாகச் சொல்லப்படுவது அரசுக்குத் தெரியுமா? மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்காக உள்ள அட்மிஷன் கமிட்டியில் அரசுச் சார்பில் ஒரு பிரதிநிதியை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரிகளெல்லாம் பல்கலைக்கழகத்தின் மேற்பார்வையின் கீழே இயங்கிவருகின்றன. மாணவர்களைச் சேர்ப்பது போன்றவற்றுக்கு கல்லூரியினுடைய முதல்வர் உரிமை பெற்றவராவார். அதையெல்லாம் சரிபார்ப்பது பல்கலைக்கழகத்தினுடைய பணியாக அமைந்திருக்கிறது. ஆனால், கல்லூரிகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய சத வீதத்தையும், பிற்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்பட வேண்டிய சத வீதத்தையும் அளிக்கவேண்டும் என்ற முறை இருக்கிறது. அதில் தவறுவார்களானால் அதுபற்றி நடவடிக்கை எடுக்க அரசுக்கு உரிமை இருக்கிறது. அப்படித் தவறு எங்காவது நடைபெற்றதுபற்றி இதுவரை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதுபற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட சில கல்லூரிகளில் குறைவான மார்க்குகள் வாங்கியவர்களையும் கல்லூரியிலுள்ளவர்களின் இஷ்டத்திற்கு எடுத்துக் கொள்ளுகிறார்கள். 400-க்கும் அதிகமாக மார்க் வாங்கியிருந்தாலும் அவர்களை எடுத்துக்கொள்வதில்லை, 260 மார்க் வாங்கிய மாணவர்களுக்கு இடம் கொடுக்கப்படுகிறது. ஆகவே, இதுபோன்ற கல்லூரிகளுக்குக் கொடுக்கக்கூடிய மானியத் தொகையை நிறுத்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டதுபோல், கல்லூரிகளைக் கட்டுப்படுத்துவதற்கான முழுப் பொறுப்பு பல்கலைக்கழகத்திற்கு இருக்கிறது. ஆனால், பல்கலைக்கழகம் அடானமஸ் பாடி, என்ற தன்மையில் இயங்கிக்கொண்டு வருகிறது. மானியம் வழங்குவதென்பது சில சட்டதிட்டங்களுக்குட்பட்டது. யாராவது முறைகேடாக நடந்து கொண்டால்தான் நாம் நடவடிக்கை எடுக்கலாம்; மானியத்தையும் நாம் நிறுத்தலாம். ஆனால், மாணவர்களை எப்படிச் சேர்த்துக் கொள்வது எந்த வகையில் சேர்ப்பது என்பதெல்லாம் பல்கலைக் கழகம்தான் முடிவு கட்டவேண்டும். பல்கலைக்கழகம்தான் கல்லூரிகளை இயக்குவிக்கவேண்டியதாக இருக்கிறது.

திரு. என். இராஜாங்கம் : தலைவர் அவர்களே, கல்லூரிகளில் உள்ளவர்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்பட்டவர்களுக்கும் உரிய சத வீதத்தை ஒதுக்கியதாகப் பல்கலைக்கழகத்திற்குக் கணக்குக் கொடுக்கிறார்கள். எங்காவது தவறாக இருந்தால் அரசு வேண்டிய



1971 ஜூலை 7]

நடவடிக்கை எடுக்கும். ஆனால், தனியார்க் கல்லூரிகளில் இந்த சத வீதத்தை நியாயமான முறையில் கடைப்பிடிக்கிறார்களா என்று கண்காணிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட சதவீதம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்களா என்று பார்க்கும்படியாக கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். ஆண்டுதோறும் ஒவ்வொரு கல்லூரியும் அந்தக் கணக்கைத் தரவேண்டும் என்று கூறப்படுகிறது.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவர் அவர்களே, நம்முடைய அரசு மதச் சார்பற்ற அரசாகும். ஆனால், தனியார் நடத்தும் கல்லூரிக்கு மானியம் நாம் வழங்குகிறோம். இருந்தாலும், ஜாதியின் பேராலும் மதத்தின் பேராலும் அங்கே அட்மிஷன் கொடுக்கப்படுகிறது. இதைத் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி எந்த ஒரு வகுப்பினரையும் யாரும் புறக்கணிக்க முடியாது. ஆகவே, அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிற முறையில் பல்வேறு முறைகளைக் கையாளுகிறார்கள். அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் சேர்க்கிறார்கள். அவர்களைக் கேட்டால், "நாங்கள் ஜாதி அடிப்படையில் சேர்க்கவில்லை" என்றுதான் பதில் சொல்லுகிறார்கள். யாராவது ஜாதி அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள நமக்கு உரிமை இருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, புகுமுக வகுப்புக்கு இலவசக் கல்வி என்று அரசு சட்டம் செய்திருந்தும் அதை மதியாமல் சில கல்லூரிகள் புகுமுக வகுப்புக்கும் சம்பளம் வாங்கியதாகக் குற்றச்சாட்டு சென்ற ஆண்டு இருந்தது. அம்மாதிரி கல்லூரிக்கு அரசு வழங்கும் மானியத்தை நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புகுமுக வகுப்புக்கு மாணவர்களிடமிருந்து சம்பளம் வாங்கக் கூடாது. அப்படி வாங்கியிருந்தால் அதைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். திருப்பிக் கொடுத்தால்தான் அந்தக் கல்லூரிக்கு அரசு மானியம் வழங்கும். திருப்பிக் கொடுக்காதவரையில் அந்தக் கல்லூரிக்கு அரசு மானியம் வழங்காது. அந்த அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education, the percentage of grants that this Government give to private colleges towards salaries and also for equipments?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கல்லூரிக்குப் பொதுவாக வருகின்ற செலவினத்தையும் அதில் வருகின்ற வருமானத்தையும் கணக்கிட்டு, வருமானத்தையும் கழித்து, கூடுதலாக ஆகும் செலவில் மூன்றில் இரண்டு பங்கினை அரசு

[1971 ஜூலை 7

தருகிறது. மூன்றில் ஒரு பங்கு செலவினை அந்தந்தத் தனியார் கல்லூரி நிர்வாகத்தினர் மேற்கொள்ள வேண்டும். கட்டடச் செலவைப் பொறுத்தவரையில், அதிகப்படியாக அரசு 50 சத வீதத்தைத் தரும். அந்த 50 சதவீதம் என்பது 75,000 ரூபாய்க்கு அதிகமாக ஆகக் கூடாது. தளவாடங்களைப் பொறுத்தவரையில் 50 சத வீதத்தை அரசு தரும். அதனுடைய உச்ச வரம்பு 10,000 ரூபாய் ஆகும்.

திரு. கா. காளிமுத்து : அரசாங்கத்திடம் மானியம் பெறக் கூடிய கல்லூரிகளின் பெயர்கள் ஜாதியின் பெயரால் இருக்கக் கூடாது என்று அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஜாதியின் பெயரில் இருக்கக்கூடாது என்று பொதுவாகச் சொல்லுகிற முறை இருந்தாலும், பல நன்கொடையாளர்கள், மற்றவர்கள் ஆகியோர்கள் பெயர்களை வைத்துக் கல்லூரிகளை அமைக்கின்றார்கள். அந்தப் பெயர்களில் சிலபல ஜாதிகள் இணைந்து விடுகின்றன. பெயருடன் இணைந்திருக்கும் ஜாதிப் பெயர்களை விட்டு விட்டால் பெயர்கள் நிற்கா. பொதுவாக, ஜாதிகளின் பெயரில் வைக்கக்கூடாது என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. கூடுமான வரையில் பெயருக்குமட்டும் இடம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் பல்கலைக்கழகம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். 494 மார்க் வாங்கினாலும்கூட, அவர்களுக்குக் கல்லூரிகளில் இடம் இல்லை என்று தைரியமாகச் சொல்லி அனுப்புகிறார்கள். கல்லூரிகள் பல்கலைக்கழகத்தின் கீழ்தான் வருகின்றன.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி, "மாயூரம் ஏ. வி. சி. கல்லூரி" யைப்பற்றியது.

திரு. அ. ஆறுமுகம் : தனியார் கல்லூரியில் குறைவான மதிப்பு எண் வாங்கியிருந்தால்கூட, கட்டட நிதிக்கோ மற்ற நிதிக்கோ ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்று "டொனேஷன்" தருகிறார்களே, அது சம்பந்தமாகப் புகார் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா?

(விடை இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். முருகையன் அவர்கள் துணைக் கேள்வி கேட்கலாம்.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற புகார்கள் அடிக்கடி வந்துகொண்டே இருக்கின்றன. இவற்றினை விசாரிக்க ஒரு குழுவை நியமிப்பதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா?



1971 ஜூலை 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூடுமானவரை மூலக் கேள்விக்குத் தொடர்புடைய துணைக் கேள்விகள் கேட்டால் எல்லாக் கேள்விகளுக்கும் துணைக் கேள்விகள் அதிகமாகக் கேட்க வாய்ப்பு அளிக்கமுடியும். பரந்த அளவில் கேட்டுக்கொண்டே போனால், விடைகளும் சரியாக வராது; நம்முடைய நேரமும் குறைந்துகொண்டே போகிறது.

## கோவை நகரில் பொதுப் பேருந்து நிலையம்

* வினா 147.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கோவை நகரில் பொது "பேருந்து நிலையம்" ஏற்படுத்தும் வேலைகள் எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே தொடங்கப்பட்டு தற்பொழுது தேக்க நிலையில் உள்ளது. வேலைகள் மறுபடியும் விரைவில் தொடங்கப்படும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று நான்கு ஆண்டுகளுக்குமுன் அந்த வேலை துவங்கப்பட்டு, அஸ்திவாரத்தோடு நின்றிருக்கிறது. கோவை நகரம் பெரிய நகரம் பல இடங்களில் பஸ்கள் நிறுத்தப்படுகின்றன. போக்கு வரத்துப் பாதையிலே நிறுத்துகிறார்கள். இந்தச் சங்கடங்களை எல்லாம் போக்க உடனடியாக அந்த பஸ் நிலையத்தைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோவையில் ஒரு மத்திய பேருந்து நிலையம் அமைக்க முயற்சி எடுக்கப்பட்டு, இரண்டு நிலையில் அதை நிறைவேற்றுவது என்று முடிவு எடுக்கப்பட்டது. முதல் கட்டமாக 3 மேடைத் தளங்கள், சுகாதார வசதி, பயணிகள் பதிவு செய்துகொள்கிற அறை, 23 பேருந்துகள் தங்கும் அமைப்பு உடையதாக 5 லட்சத்து 80 ஆயிரத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதற்கு ஒருவரிடத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த ஒப்பந்தக்காரர் தங்குமிடம் மேற்கூரை அஸ்திவாரம் எல்லாம் போட்டார். இதற்கிடையில் கட்டடப் பொருள்களின் விலை ஏறி விட்டது என்றும், மதிப்பீட்டுத் தொகை கூட்டித்தரப்படவேண்டும் என்றும், உருக்கு கிடைக்காததால் உருக்கினை அரசாங்கமே வாங்கித் தரவேண்டும் என்பதாகவும் கடிதப்போக்குவரத்தை ஆரம்பித்து விட்டார். அரசாங்கம் அதை எல்லாம் பரிசீலனைசெய்து உருக்கினை வாங்கித் தருவது என்று முடிவுசெய்து இந்துஸ்தான் உருக்கு நிறுவனத்தாருடன் தொடர்புகொண்டு 126 டன் கோரினோம். 46 டன் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. உருக்கு வந்தவுடன் முதல் கட்டவேலை மீட்டும் துவங்கப்படும்.

இரண்டாவது கட்டமாக பயணிகள் தங்கும் அறைகள், நான்காவது மேடைத் தளம் ஆகியவை 4 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் எஸ்டிமேட்டில் ஒரு ஒப்பந்தக்காரரிடம் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இதிலும் உருக்குத் தகராறு ஏற்பட்ட காரணத்தினால்

அரசாங்கமே உருக்கு வாங்கித்தரவேண்டும் என்று கோரப்பட்டது. இதுபற்றியும் அரசாங்கம் இந்துஸ்தான் உருக்கு நிறுவனத்தாருடன் தொடர்பு கொண்டது. இதற்காக 46 டன் உருக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. அது வந்துசேர்ந்தவுடன் வேலை விரைவில் தொடங்கும்.

திரு. எம். சுரேந்திரன் : இந்தக் கோவை மத்திய பஸ் நிலையம் பல வருஷங்களுக்கு முன்பாகத் துவங்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒப்பந்தம் செய்துகொள்கிறபோது ஒப்பந்தக்காரரர் கட்டடப் பொருள்களின் விலை உயர்வு, உருக்கு ஆகியவைபற்றி எல்லாம் யோசித்துத்தானே ஒப்பந்தம் செய்து கொள்கிறார். பிறகு இதுபோலத் தகராறு எழுவதற்கு ஒப்பந்த விதிகளில் ஏதாவது குறைபாடு காரணமா? இம்மாதிரியான நிலையில் டெண்டர் ஏன் விடப்பட்டது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கூடுமானவரையில் ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்படி நடந்துவிடுகிறார்கள். சில நேரங் களில் தகராறு வந்துவிட்டால், நடந்தவரையில் விட்டுவிட்டு ஓடி விடுவதாகச் சொல்கிறார்கள். அந்த வேலையை வேறு யாரும் எடுத்து முடிக்க முன்வருவதும் இல்லை. ஆகவே தகராறு எழாத வகையில் சிலவற்றைப் பேசியே தீர்க்கவேண்டிய நிலைமை இருக் கிறது: உருக்கு கிடைக்கவில்லை என்று வேலையைப் போட்டுவிட்டு ஓடிவிடாதிருக்க அவர்களுக்குத் தேவையான உருக்கைப் பெற்றுத் தர அரசாங்கம் முயன்றது. எப்படியோ அந்த வேலையை விரைவில் முடிக்கக்கூடிய சூழ்நிலை இப்போது உருவாகியிருக்கிறது:

திரு. ஆ. கு. சுப்பையா : கட்டடப் பொருள்களின் விலை அதிக மாக உயர்ந்திருக்கிறது, ஆனால் ஒப்பந்தம் பழைய ரேட்டிலேயே செய்துகொள்ளப்படுகிறது. இந்தப் பொருள்களின் விலை உயர்வை அனுசரித்து, மதிப்பீடுகளை உயர்த்த அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதை எந்த அள வுக்கு நிர்ணயிப்பது என்பதை வல்லுநர்கள் ஆராய்ந்து முடிவு செய்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் கருத்தையும் அவர்கள் பரி சீலிப்பார்கள்.

DR. H. V. HANDE : Is it not a fact that one of the causes of delay was because originally the municipalities submitted a proposal to the Government and the Government refused to accept that proposal. There was some misunderstanding between the municipality and Government. On that account the original starting of the work was delayed. May I know from the Hon. Minister for Education whether he would be pleased to tell us the details of that difference of opinion?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வேறு சில நிர்வாகக் காரணங்களாலும் என்பதாகக் குறிப்பு இருக் கிறது. முழுவிவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது





போன்ற ஒரு காரணமும் இருந்திருக்கலாம். ஆனால் பின்னர் அனுமதி அளிக்கப்பட்டு, வேலை துவங்கப்பட்டுவிட்டது. பின்னர் ஏற்பட்ட சங்கடங்களும் இப்போது நீங்கி வேலையை மீட்டும் துவங்கி முடிக்கக்கூடிய சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

### தில்லையாடியிலுள்ள வள்ளியம்மை நகர்

* வினா 148.—திரு. சி. கணேசன் : மாண்புமிகு கல்வி—உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காந்தி நூற்றாண்டு விழா நினைவாக தில்லையாடியில் அமைக்கப் பட்டு வரும் வள்ளியம்மை நகர் திட்டத்திற்கு செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியம் பொது நிதியிலிருந்து செலவழித்துள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : காந்தி நூற்றாண்டு விழா நினைவாக தில்லையாடியில் அமைக்கப்பட்டு வரும் வள்ளியம்மை நகர் திட்டத்திற்கு செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியம் பொது நிதியிலிருந்து இதுவரையில் செலவழித்துள்ள தொகை ரூபாய் 2.64 லட்சம்.

திரு. சி. கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, 58 ஊராட்சிகளைக் கொண்டது செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம். அது ஒரு கிராமத்திற்குமட்டும் ஏறக்குறைய 2.64 லட்சம் செல வழித்துவிட்ட காரணத்தினால் அதன் பொதுநிதி குறைந்து, அதன் காரணமாகப் பாக்கியுள்ள 57 பிற்பட்ட கிராமங்களுக்கு சாலை அபிவிருத்தி வேலைகள், மற்ற் மற்றச் சமுதாயப் பணிகள் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருப்பதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சிறப்பு நிதி ஏதேனும் வழங்க அரசாங்கம் முன்வருமா என்று அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, காந்தி நூற்றாண்டு விழாவைச் சீரிய முறையில் கொண்டாட வேண்டுமென்ற நோக்கத்தோடு காந்தி அவர்களோடு கூட தென்னாப்பிரிக்காவில் சிறந்த முறையில் போராடித் தமிழகத்தின் தனிப்பெருமையை நிலைநாட்டி பெரும் புகழைத் தேடித் தந்துள்ள வள்ளியம்மை, நாகப்பன், நாராயணசாமி ஆகியவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பது பொருத்தம் என்று கருதப்பட்டது. வள்ளி யம்மையின் ஊராகிய தில்லையாடியையே நினைவுச் சின்னமாக இந்த மாநிலத்தில் அமைக்க முடிவு செய்யப்பட்டது. நமது மாநிலத்தில் உள்ள தில்லையாடி சிற்றூரை எடுத்துக்கொண்டு—அங்கேயுள்ள சாலைகள், தாய்-சேய் நலவிடுதி போன்ற சகல வசதிகளையும் இந்த மாநிலத்தில் உள்ள ஒரு சிறப்பான கிராமமாக—கிராமங்கள் சிறப்பான முறையில் அமைவதே நாட்டின் முன்னேற்றத்திற்கு எடுத்துகாட்டு என்று காந்தி அவர்கள் கூறியதைப்போல—வள்ளி யம்மை நகரை அமைப்பது என்று முடிவுசெய்து செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதி இருந்த காரணத்தினால் 2.64 லட்சம் செலவிட முடிவு செய்யப்பட்டது. மற்ற ஊராட்சிகளிடம்

இருந்தும் வள்ளியம்மை நகர் நன்கு நினைவுச் சின்னமாக அமைக்கப் பட மூன்று லட்சத்து பத்தாயிரத்து எண்ணூறு ரூபாய் நன்கொடை யாக தரப்பட்டிருக்கிறது. அரசு மானியமாக 2 லட்சம் அளித்திருக் கிறார்கள். அரிசன நலத்துறையில் இருந்து ஒரு லட்சத்து அறுபதா யிரம் ஒதுக்கப்பட்டு—வள்ளியம்மை நகரில் அரிசனங்களுக்கு இரட்டை வீடுகள் 4 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 158 வீடுகள் கட்ட 75 ஆயிரம் ரூபாயும், இரண்டு அரிசன விடுதிகளுக்காக 75 ஆயிரம் ரூபாயும், உயர்நிலைப்பள்ளிக்காக 75 ஆயிரம் ரூபாயும், வள்ளியம்மை ஓவியம், சிலை ஆகியவற்றுக்காக 35 ஆயிரம் ரூபாயும், நிலையீட்டுச் செலவுக்காக 35 ஆயிரமும்—இப்படியாக அந்த கிராமத்தையே ஒரு நினைவுச் சின்னமாக அமைக்கப் பல்வகை ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

உறுப்பினர் குறிப்பிட்டதுபோல இதனால் மற்ற ஊராட்சிகளின் பணிகளுக்குத் தடை இருக்காது என்ற காரணத்தினால்தான், நிதி வசதி இருந்த காரணத்தினால் செம்பனார் கோயில் ஊராட்சி ஒன்றியம் இதற்கு 2.64 லட்சம் ஒதுக்க ஊராட்சித்துறை வளர்ச்சி இயக்குந ரால் அனுமதி அளிக்கப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தில்லையாடி வள்ளி யம்மை நகர் அமைப்புக்காக நமது அரசு மத்திய அரசிடம் மானியம் ஏதாவது கோரியுள்ளதா? அவ்வகையில் மத்திய அரசு எவ்வளவு நிதி வழங்கியுள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு மானியம் எதுவும் தரவில்லை. காந்தி நூற்றாண்டு விழாவை அகில இந்திய அளவிலே கொண்டாடுகின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பல மாநிலங்களும், பல தனிப்பட்ட குழுவினரும் பல்வேறு முயற்சிகளிலே ஈடுபட்டு, பல்வேறு திட்டங்களை மேற்கொண்டன. காந்தி நூற்றாண்டு விழாவின்போது தில்லையாடி வள்ளியம்மைக்காக ஒரு நினைவுச் சின்னமாக வள்ளி யம்மை நகர் அமைக்கலாம் என்று சிறப்பு யோசனை சொல்லப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது. காந்தி நூற்றாண்டு விழாவை எல்லா நகரங்களும், சிற்றூர்களும், பேரூர்களும் அவற்றின் வசதிவாய்ப்பு களுக்கேற்பக் கொண்டாடின. சில இடங்களில் நினைவுச் சின்னங்கள் அமைக்கும் முயற்சிகள் வெற்றிபெற்றன. அந்த வகையில்தான் தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டு மென்ற எண்ணத்திலேதான், வள்ளியம்மை நகர் அமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக மத்திய அரசிடமிருந்து தனி மானியம் எதுவும் கிடைக்கவில்லை.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தில்லையாடி வள்ளி யம்மை நகர்ப் பணி எப்போது முடியும்? இம்மாதிரியான நல்ல காரியங்களைத் தமிழக அரசு செய்ய முன்வந்து திட்டமிட்டதை "ஓ. காங்கிரஸ்" பாராட்டியுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த நகர் திட்டங்கள் எல்லாம் முடிந்துவிட்டன. அதனைத் துவக்கி வைப்பதற்கும், திறப்பு விழா நடத்துவதற்கும், விழாவை இனிதாக



நடத்துவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்து கொண்டிருக்கிறார்கள். அரும்பெரும் செயலைச் செய்கின்ற நேரத்தில் யாரும் பாராட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு நாம் எதையும் செய்வதில்லை. நாம் செய்கின்ற செயல்கள் பலருடைய பாராட்டுதல் களைப் பெறுகின்றன.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தில்லையாடி வள்ளி யம்மையின் வாழ்க்கை வரலாற்றினை நூலாக எழுதி, அந்த நூலைப் பள்ளிகளில் பாடப் புத்தகமாக வைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வள்ளியம்மையின் வரலாற்றைப்பற்றி ஒரு தனி நூல் இருப்பதாக எனக்கு நினைவு. அவர்களுடைய வாழ்க்கை வரலாறு பாடப் புத்தகங்களில் சில இடங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. என். இராஜாங்கம் : தலைவர் அவர்களே, தில்லையாடி வள்ளியம்மை காந்தியோடு இருந்து போராடி, சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தார்கள். மகாத்மா காந்தியின் சீடர்கள் அவரைப் பாராட்டிச் சிறப்புகள் செய்யாவிட்டாலும், காங்கிரஸ் கட்சிக்கு விரோதமானவர்கள் என்று நம்மை நினைத்தார்களே, நாம்—தமிழக அரசு—வள்ளியம்மைக்குச் சிறப்பு நினைவுச் சின்னம் அமைத்ததற்காக நான்கு கோடி மக்களின் சார்பாகப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. என். இராஜாங்கம் : இதுபோல அரசியல் சட்டத்தை எழுதிக் கொடுத்த டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கும் நினைவுச் சின்னம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் ஆங்காங்கு எழுப்பப்பட்டு இருக்கின்றன. ஆங்காங்கு உருவச் சிலைகளும், உருவப் படங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. சென்னை மாநக ராட்சியின் சார்பாக டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் வைக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களிலும் அவருக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தில்லையாடி வள்ளி யம்மைக்குச் செய்ததைப்போல செய்ய வேண்டுமென்றால், அவருடைய பிறந்த ஊரைச் சேர்ந்தவர்கள் தக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டால் செய்யலாம்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம் இந்த விசேஷப் பணியைச் செய்ததன்மூலமாக, மற்ற ஊராட்சி அபிவிருத்தி வேலைகள் செய்வதற்குப் பணம் இல்லை யென்று உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினார்களே, அது சம்பந்தமாக அமைச்சர் அவர்களுடைய பதில் என்ன?

[1971 ஜூலை 7

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த ஊராட்சி ஒன்றியத்திலே நிதிவசதி இருந்த காரணத்தால்தான் ஊர்வளர்ச்சித் துறை அதிகாரி நிதி ஒதுக்கினார். வசதியில்லாமல் இருந்திருந்தால் நிதி ஒதுக்கியிருக்க முடியாது. அந்த ஊராட்சி ஒன்றியம் இந்தச் செலவைத் தாங்கக்கூடிய காரணத்தால்தான் 2 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய், தனிச் சிறப்புத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, அண்ணல் காந்தி அடிகளால் பாராட்டப்பட்ட தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவுச் சின்னம் அமைத்ததுபோல பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பட்ட நெல்லிக்குப்பம் மஜீத் அவர்களுக்கும் நினைவுச் சின்னம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த ஊரில் இருக்கிறவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சியைப் பொறுத்திருக்கிறது. அவர்களுடைய குடும்பத்தினருக்கு உதவி செய்வதற்கும், பாதுகாப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வது அரசின் பொறுப்பாக அமையும்.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, சுதந்திர இயக்கத்தில் தேசப் பிதா மகாத்மா காந்தியோடு ஈடுபட்ட வள்ளியம்மையின் குடும்பத்தினர் யாராவது இப்போது இருக்கிறார்களா? அவர்களுக்கு உதவித் தொகை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை.

திரு. சோ. கருணைநாதன் : தலைவர் அவர்களே, வள்ளியம்மை நகர் திட்டத்திற்காக இவ்வளவு தொகை செலவாகுமென திட்டமிடப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 2 லட்சத்து 64 ஆயிரம் ரூபாயும், மற்ற வகைகளில் எல்லாம் சேர்ந்து 6 லட்சத்து 70 ஆயிரம் ரூபாயும் இந்தத் திட்டத்திற்குக் கிடைக்கும்.

திருப்பூரில் அரசினர் ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனை

* 149 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில், அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) திருப்பூர் நகரில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசாங்கத்திடம் இல்லை.



1971 ஜூலை 7]

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அங்கே பத்தாயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருப்பதன் காரணமாக மருத்துவமனை தேவைப்படுகிறது. கடந்த ஆண்டு 150 லட்சம் ரூபாய் மக்களின் நல்வாழ்வுக்காக மருத்துவத் துறையிலே நாம் செலவழித்திருக்கிறோம். ஆகவே, அங்கே மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் கட்டுவதற்காக ஏறத்தாழ 31 லட்சம் ரூபாய் செலவாகும் என்கிற காரணத்தால், நிதி வசதி ஏற்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தை அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவர் அவர்களே, அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவமனையைக் கட்டுவதற்கும் இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்கும் அடிப்படையாக உள்ள அம்சங்கள் என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதிகளில் தொழிற்சாலைகள் இயங்கி வந்து, தொழிலாளர்களும் அதிகமாக வசிக்கிறார்களென்றால், அதன் அடிப்படையில் அப்பகுதி தேர்ந்தெடுக்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அந்த நகரத்திற்கு மருத்துவமனை மிக இன்றியமையாததாக தேவைப்படுவதனால், நம்முடைய அரசாங்கத்தின் நிதியிலிருந்து சிறிதளவு செலவழித்தாவது தற்போது இருக்கும் மருத்துவமனையை விஸ்தரிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும்.

தொழிலாளர்களுக்கு உருக்கி நோய் மருத்துவமனைகள்

* 150 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், தற்போது தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உருக்கி நோய்க்கு படுக்கையுடன் கூடிய மருத்துவமனைகள் எங்கெங்கு உள்ளன?

(இ) இவ்வாண்டு, இத்திட்டத்தின்கீழ் என்புருக்கி நோய் சிகிச்சைக்கென கட்டப்படவிருக்கும் மருத்துவ நிலையங்கள் எவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உருக்கி நோய்க்கென்று தனியாக மருத்துவமனைகள் இம்மாநிலத்தில் தற்போது ஏதும் இல்லை. ஆனால் ஈட்டுறுதி செய்துகொண்ட பிணியாளர்களின் சிகிச்சைக்காக

தாம்பரம் அரசினர் என்புருக்கி நோய் மருத்துவமனையிலும், நாகர் கோவில் அரசினர் என்புருக்கி நோய் மருத்துவ மனையிலும் படுக்கைகள் கொண்ட வார்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. மற்றும் ஆங்காங்கு அரசினர் மருத்துவ மனைகளிலும் தனியார் மருத்துவ மனைகளிலும் படுக்கைகள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

(இ) தற்போது ஏதும் இல்லை.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, அந்த ஊரில் இருக்கிற தொழிலாளர்கள் பஞ்சாலைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். பஞ்சாலைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இந்த நோய் வருகிறது. இதைத் தடுப்பதற்கு கோவை மாவட்டத்தில் பெருந்துறை, அல்லது கோயம்புத்தூர் பகுதியில் மருத்துவ மனையைக் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, தனியாக இதற்கு மருத்துவமனை இல்லாவிட்டாலும், வேறு மருத்துவமனைகளில் அதற்காக இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் பதிவு செய்துகொண்டிருக்கிற தொழிலாளர்களுக்கு உருக்கி நோய் சிகிச்சை செய்வதற்கு மாநிலத்திலே எவ்வளவு படுக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன அல்லது அவ்வப்போது எழுகின்ற நிலைமைக்குத் தக்கவாறு செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, மாநிலத்தின் அடிப்படையில் முக்கிய நகரங்களில் எல்லாம் உருக்கி நோய் சிகிச்சைக்காகப் படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள தாம்பரம் மருத்துவமனையில் 52 படுக்கைகள், திருப்பூர் 3 படுக்கைகள், உடுமலைப்பேட்டை 4 படுக்கைகள், ஈரோடு 3 படுக்கைகள், பொள்ளாச்சி 1 படுக்கை, மேட்டுப்பாளையம் 2 படுக்கைகள், பல்லடம் 1 படுக்கை, திண்டுக்கல் 2 படுக்கைகள், தோப்பூர் (மதுரை, திண்டுக்கல், விருதுநகர் சேர்ந்து) 28 படுக்கைகள், திருமங்கலம் 1 படுக்கை, மேட்டூர் அணை 3 படுக்கைகள், சேலம் 3 படுக்கைகள், சிவகாசி 4 படுக்கைகள், இராஜபாளையம் 3 படுக்கைகள், விருதுநகர் 1 படுக்கை, புதுக்கோட்டை 3 படுக்கைகள், குடியாத்தம் 1 படுக்கை, திருப்பத்தூர் 1 படுக்கை, வேலூர் 1 படுக்கை, ஆரணி 1 படுக்கை, பெண்ணாத்தூர் (குடியாத்தம், வாணியம்பாடி சேர்ந்து) 2 படுக்கைகள், கும்பகோணம் 1 படுக்கை, நாகப்பட்டினம் 1 படுக்கை, செங்கோட்டை 1 படுக்கை, திருநெல்வேலி 4 படுக்கைகள், நாகர்கோயில் 1 படுக்கை, நாகர்கோயில் டி.பி. ஆஸ்பத்திரி 45 படுக்கைகள், கடலூர் 3 படுக்கைகள். இம்மாதிரியாகப் படுக்கை வசதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

Dr. H. V. HANDE: From the answer of the Hon. Minister it looks as though there are totally roughly about 100 beds for these T.B. patients. Is it not a fact that some time ago the problem of giving proper medical facilities for T.B. patients



and workers in E.S.I. Corporation was examined? The Centre is also prepared to help provide a scheme is submitted by the State Government. Will the Hon. Minister be pleased to tell what steps had been taken in this direction? Will there be at least one central hospital for T.B. infected workers in E.S.I.? Will such a scheme be properly evolved? Will the Hon. Minister give us an indication whether the work has commenced and whether a beginning has taken place?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கூறுவதைப்போல் எண்ணம் அரசுக்கு இருந்தாலும் நிதி வசதி ஏற்படும்பொழுதுதான் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இயலும்.

திரு. க. நாகராஜன்: தலைவர் அவர்களே, தொழிற்சாலை சட்டத்தின்கீழ் வராத சிறு தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் கிடைக்கும் மருத்துவ வசதிகள் போன்ற மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் பதிவு செய்துகொண்டவர்களுக்குத்தான் அந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

திரு. கோவை செழியன்; பஞ்சாலைத் தொழிற்சாலையில் வேலை செய்யும் பணியாளர்களை ஏறத்தாழ இந்த நோய் பற்றிக்கொள்கிறது. இந்த நோய் வராமல் முன்கூட்டியே தடுக்குமாறு முகமூடி அணிந்து கொண்டு பணியாற்றக்கூடிய திட்டத்தை அரசாங்கம் கொண்டுவருமா? ஏனென்றால் மேலைநாடுகளிலே சில இடங்களிலே அப்படிச் செய்கிறார்கள்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதைப்பற்றியும் பரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, இந்த ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்தில் மூன்று படுக்கைகள் ஈரோட்டிலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கோவை தொழிலாளர்கள் நிரம்பிய மாவட்டம் ஆக இருப்பதால் 3 படுக்கைகள் போதாது. எனவே பத்துப் படுக்கைகளாவது ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி செய்யுமா? அங்கே மூன்று படுக்கைகளுக்காக அரசாங்கம் எவ்வளவு பணம் கொடுக்கிறது? அந்தப் பணம் குறைவாக இருந்தால் உயர்த்தி அதிகமாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: கோவை நகர மருத்துவ மனையில் இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் 24 படுக்கைகள் ஏற்கனவே இருக்கின்றன. அதேபோன்று சென்னையிலும் இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் 24 படுக்கைகள் இருக்கின்றன.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்திலேயும் அதைச் சுற்றியும் உள்ள பகுதிகளிலேயும் நூற்பாலைகள் அதிகமாக இருக்கின்றன. அங்கே உள்ள தொழிலாளர்களை இந்த உருக்கு நோய் அதிகமாகப் பற்றிக்கொள்கிறது. இதை அனுசரித்து இ.எஸ்.ஐ. படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப் படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைத் தொழிலாளத் தோழர்கள் அனைவருக்கும் விரிவு படுத்தவேண்டும் என்ற எண்ணம்தான் அரசுக்கு இருக்கின்றது. ஆனால் நிதி இல்லை. மத்திய அரசிலிருந்து நிதி வசதி குறைவாகக் கிடைக்கிறது. அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று நாம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். நிதி வசதி கிடைத்தவுடன் அதிகமாக விரிவுபடுத்துவதற்கு ஆவன செய்யலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, நிதி வசதிக் குறைவு காரணமாக அதிகமான படுக்கைகள் நோயாளிகளுக்கு ஏற்படுத்தித் தரக்கூடிய நிலைமை இல்லாமல் இருப்பதால் டொமிசெல்லரி ட்ரீட்மெண்ட் அதாவது வீடுகளுக்குச் சென்று மருத்துவ உதவி செய்கின்ற முறையைக் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: கனம் உறுப்பினருடைய யோசனையைக் கருத்தில் வைத்து அதைப்பற்றியும் ஆலோசனை செய்யலாம்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: தலைவர் அவர்களே, பஞ்சாலைத் தொழிலாளர்களும் பீடித் தொழிலாளர்களும்தான் இந்த நோயால் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். பீடித் தொழிலாளர்களும் பஞ்சாலைத் தொழிலாளர்களும் அதிகமாக உள்ள பகுதிகளில் படுக்கைகளை அதிகப்படுத்த அரசாங்கம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப்போல் இப்பொழுதே ஏறத்தாழ $1\frac{3}{4}$ கோடி ரூபாய் அளவிலே மாநில அரசு இந்தத் திட்டத்திற்காகச் செலவழித்து வருகிறது. கனம் உறுப்பினர் சொல்வதைப்போன்று இன்னும் விரிவுபடுத்தவேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. நிதி வசதி கிடைக்கும்பொழுது அரசு திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல்: இந்த உருக்கு நோய் உப்பளத் தொழிலிலே ஈடுபடுகின்றவர்களையும் பற்றிக்கொள்கிறது. வேதாரண்யம், அதிராம்பட்டினம் போன்ற பகுதிகளிலே இந்த நோயால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கும் இந்த உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அப்படிப்பட்ட மருத்துவ உதவி, ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் பதிவு செய்து கொண்டவர்களுக்குத்தான் அளிக்கப்படுகிறது.





திரு. மா. பா. சாரதி: வேலூரைப் பொறுத்தவரையில் பத்தாயிரம் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த நோய் கண்டிப்பாக வந்திருக்கிறது. வேலூருக்குப் பக்கத்தில் உள்ள அடுக்கம்பாறையில் உள்ள டி.பி. சானிடோரியத்தில் 5 படுக்கைகள் இதற்காக ஒதுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: 26 படுக்கைகள் கொண்ட பெண்ணத்தூர் அரசினர் மருத்துவமனைக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் மத்திய நிதி உதவி கிடைக்காததால் தடையாக இருக்கிறது.

*Disposal of accumulated Handloom clothes.*

* 151 Q.—Thiru N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to find out suitable markets for the disposal of blankets and other Handloom clothes lying with producers?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கடந்த ஆண்டில் படுக்கை விரிப்புகள், போர்வைகள் ஆகியவற்றின் ஏற்றுமதி மனநிறைவளிப்பதாயிருந்தது. 1969-ம் ஆண்டில் ஏற்றுமதி செய்த போர்வைகள், படுக்கை விரிப்புகள் ஆகியவற்றின் மதிப்பு ரூ. 1.98 கோடியாயிருக்க 1970-ம் ஆண்டில் ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 2.15 கோடியாக உயர்ந்துள்ளது. 1970-ம் ஆண்டின் மொத்த ஏற்றுமதியளவு முந்திய ஆண்டு ஏற்றுமதியளவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதிகரித்துள்ளது தெரியவரும். போர்வைகள் அல்லது ஏற்றுமதி செய்யத்தக்க கைத்தறி இனங்கள் எதுவும் தங்களிடம் தேக்கமடைந்து விட்டதாக தங்களது உறுப்பினர்களிடமிருந்து புகார் எதுவும் வரவில்லை என்று ஏற்றுமதி வளர்ச்சிக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, வண்ணம் மாறும் கைத்தறித் துணிகளுக்கு அமெரிக்க நாட்டிலே அதிகமாக வரவேற்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த வகையில் தமிழகத்திலிருந்து அந்தத் துணியை அதிகமாக ஏற்றுமதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது பல ஆண்டுகளுக்கு முன்னாலே சொல்லப்பட்டதாகும்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்கா போன்ற மேலைநாடுகளில் தமிழ்நாட்டின் கைத்தறித் துணிக்கு அதிகமான கிராக்கி இருக்கிறது. அவற்றைக் கண்டு அறிந்து வாய்ப்புக்களைக் கண்டறிவதற்காக நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தூதுக்குழுவை அனுப்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினருடைய ஆர்வத்தைப் பாராட்டுகிறேன்.

திரு. இ. எஸ். தியாகராாசன்: தலைவர் அவர்களே, நூல் விலை ஏறியிருப்பதால்தான் துணித் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கைத்தறித் துணிக்கு ஆண்டு தோறும் இப்படிப்பட்ட இழப்புகள் வருகின்ற சூழ்நிலை ஏற்படும் பொழுது அரசாங்கம் தலையிட்டு உதவி செய்கின்றது. நூல் விலையைப் பொறுத்தவரையில் கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கவேண்டுமென்ற வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஏற்பாடு செய்கிறோம். மற்றவர்களுக்கு அவ்வப்பொழுது அரசாங்கம் தலையிட்டு, கிடைப்பதற்கு ஏற்பாடு செய்கிறது. கைத்தறித் துணி ஏற்றுமதி 1959 ஆம் ஆண்டிலே 11 கோடியே 72 லட்சமாக இருந்தது 1970 ஆம் ஆண்டிலே 11 கோடியே 98 லட்சமாக உயர்ந்திருக்கிறது. அதற்குப் பின்னாலே 13 கோடி வரை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தறித் துணி விற்பனையில் எந்த எந்த அளவுக்கு எந்த எந்த நாடுகளிலே அல்லது வெளி மாநிலங்களிலே வாய்ப்புக்கள் இருக்கின்றனவோ அதைப் பார்த்து நாம் ஏற்பாடு செய்துவருகிறோம்.

THIRU K M. SUBRAMANIAM. Is the Hon. Minister aware of the fact that blankets produced in Karur and other places are facing severe competition from raised blankets produced from various mills? If that is so, will the Hon. Minister think of providing a raising machine for people who are producing these coarse blankets in Karur and other blanket producing areas ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மராட்டிய மாநிலத்திலே உற்பத்தியாகும், ஆலைகளில் உற்பத்தியாகும் இதுபோன்ற துப்பட்டிகள் நம்முடைய துப்பட்டிகளோடு போட்டி போடுவது உண்மை. ஆனால் நடந்து முடிந்த ஆண்டில் நம்முடைய துப்பட்டிகளுக்கு ஏராளமாகக் கிராக்கி இருந்தது. கரூரிலே ஒரு சமயத்தில் அவர்களுக்கு வேண்டிய நூல் கிடைக்காததால் சங்கடங்கள் ஏற்பட்டன. உடனடியாக அரசாங்கம் தலையிட்டு அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நூல்களைக் கிடைக்கச் செய்தது.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: தலைவரவர்களே, வெளி நாட்டிற்கு விற்பனைக்குக் கொள்முதல் செய்யக்கூடிய துணிகளை, தனியார் உற்பத்தி செய்யக்கூடிய துணிகளைக் கொள்முதல் செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் மாநில சங்கம் இதுபோன்ற முயற்சிகளைச் செய்து வருகிறது. ஆனால் தனியார் துறையையும் சேர்ப்பது மத்திய சர்க்காரிலே அவர்கள் தங்களுடைய Export Promotion Council மூலமாக ஏற்பாடு செய்து வருகிறார்கள். இங்கேயே மவுண்ட் ரோடிலே கண்காட்சி மாதிரி வைத்து அதிலே பல பொருள்களுக்கு, ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அதிலே கைத்தறியும் இடம் பெறுகிறது.





திரு. எஸ். ஆறுமுகம்: தலைவரவர்களே, தற்சமயம் எந்தெந்த வெளிநாடுகளுக்கு நம்முடைய கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன? இந்த வெளிநாடுகளில் நல்ல மார்கெட்டைப் பெற்றுத் தருவதற்கு ஏற்றுமதிக் கழகம் தமிழக அரசைக் கலந்தாலோசித்து வழி செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முன்னாலே கூறியபடி Handloom Export Promotion Council மூலமாக மத்திய சர்க்காருடைய உதவியோடு செய்யப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் மலேயா, சிலோன், பர்மா போன்ற நாடுகளுக்கு நம்முடைய சரக்குகள் அனுப்பப்பட்டன. ஆனால் இப்பொழுது இப்படிப்பட்ட நாடுகளிலே அங்கேயே உற்பத்தி செய்ய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. நம்முடைய அரசாங்கம் கூடியவரையில் முயற்சியெடுத்து நம்முடைய மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சி நிலையம் ஏற்படுத்தி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ரகங்களை உற்பத்தி செய்ய கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி கொடுத்து வருகிறோம். என்னென்ன நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. மா. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, வேஷ்டி நெய்து வந்த கூட்டுறவுச் சங்கங்களெல்லாம் தற்போது படுக்கை விரிப்புகள் நெய்து, படுக்கை விரிப்புகள் ஏராளமாகத் தேங்கிவிட்டன என்பது அரசுக்குத் தெரியுமா? தற்போது நடந்த கைத்தறித் கண்காட்சியில் நிரம்ப விற்பனை செய்தாலும் இன்னும் தேக்கம் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அந்தத் தேக்கத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதைக்குத் துப்பட்டியைப்பற்றி எந்த அளவிற்குத் தேக்கம் இருக்கிறது என்ற விவரத்தை எங்களிடத்திலே அனுப்பவில்லை என்று முன்பே குறிப்பிட்டேன். ஆனால் அந்தத் தேக்கங்கள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படும்பொழுது நம்முடைய மாநில சங்கம் அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வாய்ப்பிருந்தால் செய்யலாம்.

திரு. சோ. கருணைநாதன்: தலைவரவர்களே, கைத்தறியில் நல்ல தரமான துணிகளைத் தயாரிப்பதற்கு அரசு ஆலோசனை வழங்கியுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த இருபதாம் நூற்றாண்டிலே இன்றைய நிலையில் கைத்தறிக்கு ஏராளமாக வாய்ப்பிருக்கிறது என்பதற்கு 13 கோடி வரை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பைச் சுட்டிக் காட்டினேன்.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே கைத்தறி நெசவாளர்கள் ஒரு ஆண்டில் நல்ல வாழ்க்கை வாழ்ந்தால் மறு ஆண்டில் நிம்மதியற்ற வாழ்க்கையாக அவர்களுக்கு இருக்கிறது. ஆதலால் நல்ல ஒரு திட்டம் தீட்டி நல்ல உயர்ந்த ரகத் துணிகளை

[1971 ஜூலை 7

உற்பத்தி செய்ய வாய்ப்பினை ஏற்படுத்தி அவர்களது வாழ்க்கையை நிரந்தரமான நல்ல வாழ்க்கையாகச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நெசவாளர்கள் பிரச்சினையைப் பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு நோக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஆகவே ஏற்கெனவே சொன்னபடி ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சி கொடுத்து எந்தெந்தச் சரக்குகள் விற்பனையாகின்றதோ, வாய்ப்பிருக்கிறதோ அது உற்பத்தியாகின்ற வாய்ப்புக் கூறுகளை தமிழ்நாடு முழுவதும் உண்டாக்கி வருகிறது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கம் கைத்தறி நெசவாளர்களுக்கு எவ்வளவுதான் ஊக்கம் அளித்தாலும், மானியம் வழங்கினாலும் அவர்கள் மில் முதலாளிகளோடு போட்டி போட முடியவில்லை. எனவே, அவர்களுக்கு மாற்றுத் திட்டம் அரசாங்கம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கைத்தறியில் உற்பத்தி செய்யும் ரகங்களைத் தனியாக ஒதுக்கி அதற்குப் பூரண பாதுகாப்புக் கொடுக்க மத்திய அரசாங்கம் முன்வந்தாலொழிய இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

திரு. மு. இரத்தினசபாபதி: தலைவரவர்களே, கைத்தறித் துணிகளில் எந்தெந்த தயாரிப்புகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி, செய்யப்படுகின்றன? அத்தகைய தயாரிப்புகள் தயாரிக்கப்படாத பின்தங்கிய பகுதியான கோவில்பட்டி தாலுக்காவிலுள்ள நெசவாளர்கள் அந்த தயாரிப்புகளைத் தயாரிக்கப் பயிற்சியளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது உண்மை. தென் மாவட்டங்களிலே, இப்படி வெளிநாடுகளுக்கு அல்லது வெளிமாநிலங்களுக்கு கிராக்கியுள்ள துணிகளைத் தயாரிக்க வேண்டுமென்ற நிலை ஏற்படாமல் இருக்கிறது. மாவட்டத்திற்கு ஒரு பயிற்சி நிலையம் என்று முயற்சிக்கிறோம். கனம் அங்கத்தினர் போன்றவர்கள் உற்பத்தியாளர்களுக்கு இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தும்படி சொல்லலாம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, இப்படித் தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை விற்க, விற்பனைக் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் ரிபேட் தரப்படுவதைப்போல் தனிப்பட்டவர்களிடம் தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை விற்க அவர்களுக்கும் தரப்பட்டால் உதவிகரமாக இருக்கும் என்பதை அரசு அறியுமா? மேலும் அதிகம் கைத்தறித் துணிகளை விற்கும் துணிக்கடைக்காரர்களுக்குச் சிறப்புப் பரிசு கொடுக்கும் திட்டத்தை இந்த அரசு உருவாக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதே கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நாம் ரிபேட் கொடுத்து வருகிறோம். ஏராளமான ரிபேட் வழங்கப்படுகிறது. தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கும் அளவில் அரசாங்கத்திலே பணம் இல்லை.



1971 ஜூலை 7]

திரு. ஆ. பரந்தாமன்: பேரவைத் தலைவரவர்களே, வெளிநாடுகளில் நமது கைத்தறி ஆடைகளின் மீது இருந்த மோகம் குறைந்தற்குக் காரணம் நமது நாட்டிலுள்ள ஒப்பந்தக்காரர்கள் நம்பிக்கையானவர்களாக நடந்து கொள்வதில்லை என்று கூறுகிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட செய்தியை நான் கேள்விப்பட்டதில்லை கைத்தறியைப் பொறுத்தவரையில். இருக்கின்ற குறையெல்லாம் வெளிநாடுகளுக்கு எது தேவை என்று அப்பொழுதைக்கப்பொழுது உணர்ந்து அதற்கேற்ற முறையிலே சரக்குகளை இங்கே தயாரித்து அனுப்ப வேண்டும். அந்த வசதியை மத்திய அரசாங்கம் செய்து தர வேண்டுமென்று நாம் கேட்கிறோம்.

திரு. ஏ. க. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, பல்லாண்டுகளாகக் கூட்டுறவுத் துறைக்கு அப்பாற்பட்ட நிலையில் பல நெசவாளர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நீண்டகாலத் திட்டத்தின் முறையில் கடன் வழங்க அரசாங்கம் முன்வருமா? இல்லையென்றால் அவர்களுக்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இடம் அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவுத் துறையிலே நெசவாளர்கள் வருவதை நாம் எப்போதும் தடுத்ததில்லை. எந்த அளவிலே வருகிறார்களோ அந்த அளவிற்கு அமைக்கிறோம். நாமே முன்னின்று நடத்தும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் நெசவாளர்களுக்கு எல்லா இடங்களிலும் ஆக்கபூர்வமான வேலையில் உதவி செய்திருக்கிறோம். இப்படிப்பட்ட பிரச்னையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வந்ததற்குப் பிறகு இப்படிப்பட்ட சங்கங்களுக்குத் தாங்கள் நெய்ததைக் கொடுக்க வேண்டுமென்றில்லாமல் கூட்டுறவுச் சங்கங்களிலே ஒரு காலையும், தனியாரிடத்திலே ஒரு காலையும் வைத்திருக்கும் போக்கையும்தான் காண்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண் 152.

திரு. சோ. அழகர்சாமி: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. பழனிசாமி அவர்கள் மூலக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நாங்கள் 2, 3 பேர் கைதூக்கிக்கொண்டேயிருந்தும் ஒரு உப கேள்விகூட கேட்க அனுமதிக்கப்படவில்லை. அது சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சியின் அடிப்படையிலே பங்கீடு செய்வதில்லை. ஒரு கேள்வி ஒரு உறுப்பினர் போட்டார் என்றால் அது அந்தக் கட்சிக்கே பாத்தியதை என்பதல்ல. சபாநாயகருக்கு யார் தெரிகிறார்களோ, எந்தெந்த அளவில், எந்தெந்தக் கேள்விக்குத் துணைக் கேள்வி போடலாமோ அந்த அளவிற்குத்தானே தவிர, ஒரு கேள்வியின் முக்கியத்துவத்தைக் கருதி அதிகத் துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படலாம், அதுதானே தவிர இதிலே ஒழுங்குப்பிரச்சினை எதுவுமில்லை. எனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியது சரியானது அல்ல.

## Cess fund for handloom weavers

* 152 Q.—THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the manner in which the Cess Fund is distributed among the handloom weavers?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : "செஸ் நிதி" என்று தனியாக எதுவும் இல்லை.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that the plight of the handloom weavers is very pathetic, will the Hon. Minister give us some hints as to how exactly he is going to rehabilitate them. Also, will it not be possible to have exhibitions like the one we had recently in Madras City, in major towns like Madurai and also in places outside the State like Bangalore, Trivandrum and Hyderabad, and see that the sales are increased and a portion of it is passed on as cess to the handloom weavers?

மாண்புமிகு. திரு. செ. மாதவன் : இப்போதே அதுபோன்று எல்லா இடங்களிலும் வைக்கிறார்கள். மாவட்டத் தலைநகரங்களிலே வைக்கிறார்கள். குறிப்பிட்ட நாட்களிலே, அப்பொழுது நாம் ரிபேட் கொடுக்கிறோம். நம்முடைய மாநிலச் சங்கத்தின் மூலமாக வெளி மாநிலங்களுக்கு விற்பனையை ஏற்படுத்த முடியுமானால், விற்பனைக்கூடங்கள் ஏற்படுத்தி எக்சிபிட் செய்து கண்காட்சியாக வைத்து விற்பனை செய்கிறார்கள்.

THIRU K. M. SUBRAMANIAN : Is it not a fact that in the excise duty collected by Government of India, there is a portion called "excise duty in lieu of cess collected". Is that money re-funded to the State Government?

THE HON. THIRU S. MADHAVAN : That was abolished in 1953.

## கோவை மாவட்டத்தில் கனி வளங்கள்

* 153 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் என்னென்ன கனி வளங்கள் எந்தெந்த பகுதியில் கிடைக்கும் என அரசு ஆராய்ந்து கண்டுபிடித்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன் : நீலகிரி மாவட்டத்தில் ஆடுதுறை என்ற இடத்தில் தங்கம் கிடைப்பதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. அதைப்பற்றி ஆய்வு நடத்தப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அதைப் பற்றி அரசுக்குத் தெரிந்திருந்தால் விளக்க முன் வருவார்களா?

@ 212-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது கோவை மாவட்டத்தைப் பற்றியது. நீலகிரி மாவட்டத்தில் தங்கம் கிடைப்பது பற்றி ஆய்வு செய்யப்பட்டது. எகனமிக் வயபிலிடி இல்லையென்ற காரணத்தால் அது கைவிடப்பட்டது.

திரு. அ. சின்னசாமி : ஜெயங்கொண்டம் பகுதியில் சோழமாதேவி என்ற இடத்தில் நிலக்கரி கிடைப்பதாகச் சொல்லப் படுகிறது. அது குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக் கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஜெயங்கொண்டம், கோவையில் இருந்து ரொம்ப தூரம் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

திரு. நா. வீராசாமி : கோவை மாவட்டத்தில் கோபிசெட்டிப் பாளையம், பவானி வட்டங்களில் பச்சைநிறப் படிவக் கற்கள் கிடைப் பதாகச் சொல்லுகிறார்கள். இதைக் கொண்டு தமிழ்நாட்டிலுள்ள மார்வாடிகள் பெண்களுக்கான அணிகலன்களைச் செய்து நிறையப் பணம் சம்பாதிக்கிறார்கள். இந்தக் கற்களை அரசாங்கத் துறையின் மூலம் எடுத்தால் அரசாங்கத்திற்கு நல்ல வருவாய் கிடைக்குமென்ப தால் அதைப் பயன்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ஒரு யோசனை.

திரு. கோவை செழியன் : காங்கேயம் பகுதியிலுள்ள ஊதியூர் என்ற இடத்தில் இருக்கும் கற்கள் சிமெண்ட் தொழிற்சாலை அமைப் பதற்கு ஏற்றதாக இருக்கிறதென்று அரசாங்கக் குறிப்பில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அங்கு ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிமெண்ட் தொழிற்சாலைபற்றி ஏற்கனவே சட்டமன்றத்தில் கூறி இருக்கிறேன். இப்போதுள்ள பிரச்சினை தமிழ்நாட்டில் நடைபெறுகிற சிமெண்ட் ஆலைகளில் உற்பத்தியாகிற சிமெண்டுக்கு சந்தை கிடைக்காத இக்கட்டான நிலை இருக்கிறது. மேலும் புதிய சிமெண்ட் ஆலை என்பது இப்போது இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : கோபி வட்டத்தில் இரும்புத் தாது கிடைப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவும் 1.5 மிலியன் மெட்ரிக் டன் அளவுக்கு 33-ல் இருந்து 37 சதவிகிதம் வரை அதில் இரும்புத் தாது இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, சிறிய அளவில் ஒரு இரும்பு உருக்காலை ஏற்படுத்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா? 33-ல் இருந்து 37 சதவிகிதம் இரும்புத் தாது கிடைக்கிறது என்பது நம்முடைய சேலத்தில் கிடைப்பதாகச் சொல்லப்படுவதை விட அதிகமா அல்லது குறைவா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சேலத்தில் 33-ல் இருந்து 35 சதவிகிதம் வரை இரும்புத் தாது எதிர்பார்க்கிறோம். இதுவும் அதே அளவில்தான் இருக்கும். சேலம் உருக்காலைக்குத் தாதுப் பொருள் கஞ்சமலையில் மட்டுமல்லாமல் வட ஆற்காடு மாவட்டத்தில்

[1971 ஜூலை 7

திருப்பத்தூர் பகுதியிலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் பல இடங்களில் சிறிய அளவு இரும்பு கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. சேலத்தில் போதுமான அளவு பூர்த்தியான பிறகு "மினி ஸ்டீல் பிளாண்ட்" உருவாக்குவது பற்றி யோசிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : North Coimbatore and Dharmapuri district have similar geographical features. May I know from the Hon. Minister for Industries whether he will extend the geological survey to Dharmapuri district also?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படிப்பட்ட முயற்சிகளை எடுத்து வருகிறோம். நாமும் செய்கிறோம், ஐ. நா. ஸ்தாபன உதவியுடன் யு.என்.டி.பி. மூலமும் சர்வே செய்து வருகிறார்கள். தர்மபுரி பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரங்களைக் கொடுக்கலாம்.

திரு. சு. துரைசாமி : ஜிப்சம் பல்லடம், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, தாராபுரம் வட்டங்களில் எட்டு லட்சம் டன்கள் இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஏற்கனவே அந்த இடங்களில் வெட்டி எடுக்கப்பட்ட ஜிப்சம் வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எங்கெங்கு ஜிப்சம் எடுக்கலாம் என்று மனுப் போடுகிறார்களோ அவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர் அளவில் பரிசீலிக்கிறார்கள். இந்தப் பகுதியில் எவ்வளவு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரம் இல்லை.

திரு. நா. வீராசாமி : கோவை மாவட்டத்தில் போகம்பட்டி என்ற கிராமத்தில் "குவார்ட்ஸ், ஃபெல்டுஸ்பார்" இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பாரி கம்பெனி போன்ற தனியார் அவற்றைப் பயன்படுத்தி நிறையப் பணம் சம்பாதிக்கிறார்கள். இதை அரசாங்கம் எடுத்து நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபோன்ற கனிப் பொருள்கள் தொழிற்சாலைக்குப் பயன்பட வேண்டுமென்பது கொள்கை. யார் அனுபவிக்கிறார்கள் என்பது பிரச்சினை அல்ல. இதுபோன்ற கனிப் பொருள்களை வியாபார நோக்கத்தோடு யாராவது எடுத்து வெளியே அனுப்ப முயற்சித்தால் அது அனுமதிக்கப்படக்கூடாது என்பது கொள்கை. தமிழ் நாட்டிலேயே தொழிலை நடத்த முன்வருகிறார்களா என்பதுதான் பார்க்கப்படுகிறது.

*Intensive Agricultural Area Programme in Tiruchirappalli District.*

*154 Q.—THIRU O. N. SUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) whether Thiruchirappalli District has been included in the Intensive Agricultural Area Programme;



1971 ஜூலை 7]

(b) the circumstances under which this District has been selected; and

(c) the details of the programme?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) பாசன வசதிகள் உறுதியாக உள்ள பகுதிகளின் மீது நாட்டம் செலுத்துவதும், விளைச்சலையும் உற்பத்தியையும் அதிகரிக்கும் நோக்குடன் செயல்படுத்தப்படும் முனைப்பு முறைகளை உழவர்கள் பின்பற்றுமாறு செய்வதும் மும்முர வேளாண்மைப் பகுதித் திட்டத்தின் நோக்கமாகும். 5,40,900 ஏக்கர் நன்செய் நிலப் பரப்பைக் கொண்டுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டம் மேற்கொண்டு முன்னேற்றம் செய்வதற்கான வாய்ப்பைப் பெற்றிருப்பதால் மும்முர வேளாண்மைப் பகுதித்திட்டம் இம்மாவட்டத்திற்கு 1970–71-ல் இருந்து நீடிக்கப்பட்டுள்ளது.

(உ) உழவர்களுக்கு தகுதியான பயிற்சி அளிப்பதற்கும், விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றை வழங்குவதற்குமான முயற்சிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். (1) நெல் (2) பாசனச் சோளம் (3) பாசன கேழ்வரகு (4) பாசன கம்பு (5) வேர்க்கடலை (6) பருத்தி ஆகியவை இத்திட்டத்திற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட பயிர்களாகும். முனைப்புத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட நடைமுறைகளை பின்பற்றுவதால் கிட்டும் பயன்களை உழவர்கள் அறியும்படி செய்வதற்கு எல்லா வட்டாரங்களிலும் கூட்டுச் செய்முறை விளக்கங்கள் செய்து காட்டப்படும்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister the other areas selected under intensive agriculture programme in our State ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1965–66-ல் இருந்து மதுரை, செங்கற்பட்டு, கோவை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்கள் குறுகிய காலத்திற்குள்ளே நல்ல பயனை அளிக்கக்கூடிய அளவுக்குப் பாசன வசதியுள்ள பெருமளவு பரப்பளவை இந்த மாவட்டங்கள் பெற்றுள்ளதால் இந்த மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மும்முர வேளாண்மைத் திட்டத்தால் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மட்டும் எவ்வளவு டன் உற்பத்தி கூடுதலாகக் கிடைக்கும் என்று அரசு எதிர் பார்க்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த மேம்பாடு திட்டத்தை ஒட்டிச் செயல்படுத்தியதன் விளைவாக 1970–71-ல்தான் திருச்சி மாவட்டத்திற்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அதன் செயல் முறைத் திட்டம் இந்த ஆண்டுதான் தெரியும். ஆனால் குறிப்பிட்ட செங்கல்பட்டு, கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இதனால் பெருமளவு உற்பத்தி பெருகி இருக்கிறது. அரிசி

உற்பத்தி செங்கற்பட்டு மாவட்டத்தில் 4,99,000 டன்; கோவை மாவட்டத்தில் 2,33,300 டன்; மதுரை மாவட்டத்தில் 2,76,900 டன்; திருநெல்வேலி மாவட்டத்தில் 2,88,800 டன். இது கடந்த ஐந்தாண்டு காலத் திட்டத்தைப் பார்க்கிறபோது செங்கற்பட்டு மாவட்டத்தில் 25 சதவிகிதம் அதிகமாகவும், கோவை மாவட்டத்தில் 35 சதவிகிதம் அதிகமாகவும், மதுரையில் 8 சதவிகிதம் அதிகமாக வும், திருநெல்வேலியில் 29 சதவிகிதம் அதிகமாகவும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கு. காமாட்சி : மும்முரத் திட்டத்தின்கீழ் திருவெறும்பூர் பகுதியில் உய்யக்கொண்டான் பாசன வாய்க்கால், உயர்மட்டக் கால்வாய் ஆகிய பகுதியையும் இருபோக சாகுபடிப் பகுதியாக ஆக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : திருச்சி மாவட்டத்தில் இப்போது 29 பிளாக்குகள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வட்டங்களில் திருவெறும்பூரும் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது மும்முர வேளாண்மை திட்டத்தின் கீழ் உணவுப் பொருள்களுக்கு மட்டும்தான் அக்கறை செலுத்துவது போல் தெரிகிறது. அதே போல் கரும்பு, மஞ்சள் போன்ற பயிர்களுக்கும் இந்த மும்முர வேளாண்மை திட்டத்தின் கீழ் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு இருக்கிறதா? அல்லது இனிமேலாவது முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நெற்பயிர்களுக்கு மாத்திரம் அல்லாமல், கேழ்வரகு, பருத்தி, சோளம், கம்பு, வேர்க் கடலை போன்ற பயிர்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட் டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தை இன்னும் சிறிது நேரம் நீடிக்க பேரவையின் அனுமதி கோருகிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்திலுள்ள அரவங்குறிச்சியில் பாசன வசதி குறைவாக இருக்கிறது. அந்த இடத்தில் இந்த மும்முனைத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா? இல்லையென்றால், இனி மேலாவது எடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இது நீர் வளம் அதிகமாக உள்ள பகுதிகளில் தான் செயல்பட்டு வருகிறது. குறிப்பிட்ட அந்தப் பகுதியைப் பற்றி, தனிக்கேள்வி போட்டால் விளக்கம் சொல்கிறேன்.





திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டுக்குத் தேவையான பருத்தி தமிழ்நாட்டில் விளைவது இல்லை. வெளி மாநிலத்திலிருந்துதான் வரவழைக்கப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டுப் பஞ்சாலைகளில் நெருக்கடி ஏற்படுகிறது. ஆகவே, தமிழ்நாட்டில் பருத்தியை அதிகமாக உற்பத்தி செய்யத்தக்க நட வடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் இப்போது தமிழ் நாட்டில் அமுலில் இருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1 லட்சம் ஏக்கர் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 1,35,000 ஏக்கர் இந்தத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு இருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை பகுதியில் 50,000 ஏக்கர் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் எடுக்கப் பட்டு இருக்கிறது. இப்போது அதிகமாக பருத்தி உற்பத்தி செய்வதில் அரசாங்கம் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது.

திரு. அ. சின்னசாமி : தலைவரவர்களே, செயம்கொண்டான் பகுதி இந்தத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : செயம்கொண்டான் தீவிர முந்திரி சாகுபடித் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டிருக்கிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, Dharmapuri is a dry district where intensive cultivation is needed. So, will this Government introduce dry farming in the Dharmapuri district at least this year?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்போது இல்லை.

THIRU K. M. SUBRAMANIAN : Sir, with regard to intensive cultivation of cotton, may I know whether any preference will be given to fine cotton which is very essential in the modern days ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : எம்சி 5 ஃபைன் காட்டன் ரகத்தில் சேர்க்கப்பட்டு, அதிகமாக உற்பத்தி செய்யப் படுகிறது.

திரு. சோ. கருணைநாதன் : தலைவரவர்களே, இந்த மும்முர சாகுபடித் திட்டத்தின்கீழ் சேர்த்துள்ள பகுதிகளைத்தான் அமைச்சர் கவனிப்பார், மற்றவற்றை விட்டுவிடுவாரோ என்று அஞ்சுகிறோம். கெஞ்சுகிறோம் அவற்றையும் சேர்த்துக்கொள்ளும்படி.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்வதற்காக ஒரு திட்டம் இன்டோ-ஜெர்மன் நீலகிரி மேம்பாட்டுத் திட்ட ஆதரவில் நடைபெறுகிறது.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவரவர்களே, மதுரை மாவட்டம் இந்தத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அங்கே உள்ள விவசாய உழவர்கள் எந்த முறையில் இந்தத் திட்டத்தின் மூலமாக ஊக்குவிக்கப்படு வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தத் தீவிர சாகுபடித் திட்டம் இருக்கிற பகுதிகளில் குடியானவர் களால் பின்பற்றப்பட வேண்டிய மேம்படுத்தப்பட்ட முறைகளைப் பின்பற்ற வகை செய்யக்கூடிய தகவலைக் கொடுக்கும், பண்ணை உற்பத்தித் திட்ட அட்டவணை தயாரித்தல், தல நிலைமைகளின் அடிப்படையில் ஒவ்வொரு முக்கிய பயிர்க்காகவும் முனைப்பு முறைகளை மேம்படுத்துதல், உழவர்கள் முனைப்பு நடவடிக்கைகளைப் பாங்கான முறையில் இணைப்பது, இயலும் வகையில் தேவையான பணிகளுக்கு வகை செய்தல், மேம்படுத்தப்பட்ட வேளாண்மை முறைகளைப் பரப்புவதற்காக ஒருங்கிணைந்த கட்புலவிள்க்கத்தின் மூலம் முயற்சிகளை மேற்கொள்ளுதல், உரிய காலக் கடன்களையும் போதுமான அளவு உற்பத்திக்கான இன்றியமையாத் தேவைகளையும் பெற நடவடிக்கை மேற்கொள்ளுதல், நீரைத் திறமையாகப் பயன் படுத்துவதற்கும் கையாளுவதற்கும் மற்றும் குறைந்த அளவு நீரில் பயிரிட இயலும் என்பதையும் கற்பித்தல், தொழில் நுட்ப அறிவை உரிய நேரத்தில் கிடைக்கச் செய்தல், ஆகியவை தான்.

பின்தங்கிய வகுப்பினர் நல தின விழா

* 155.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரிசன நல தின விழா கொண்டாடப்படுவதைப் போல பிற் பட்டோர் நல தின விழாக்கள் கொண்டாட ஏதேனும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை. பின்தங்கிய வகுப்பினரைப் பொறுத்த வரையில் இத்தகைய விழாக்கள் தேவைப் படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அரிசனங்களைப் போலவே சில இடங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையிலே உள்ள, அழுத்தப்பட்ட நிலையிலே உள்ளவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது அத்தகைய விழாக்களைக் கொண்டாட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, பெரியாரின் அன்றாடக் கூட்டங்களும், பேரறிஞர் அண்ணாவின் பிறந்ததின விழாவும், கலைஞர் அவர்களின் பிறந்த தின விழாவும் அநேகமாக பிற்படுத்தப்பட்டோர் நல்வாழ்வுக்காகவே கொண் டாடப்படுகின்றன. ஆகவே, விழா தனியாகத் தேவையில்லை என்று கருதுகிறேன்.





திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, முதல்வர் கலைஞர் பிறந்த தின விழாவை பிற்பட்டோர் நல விழாவாகக் கொண்டாட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, கலைஞரின் பிறந்த தின விழா பின்தங்கியோர் நல விழாவாகத்தான் நடைபெறுகிறது என்று கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பிற்பட்டோர் நலனுக்கு என்று தனியாக பிற்பட்டோர் நல அதிகாரிகளை மாவட்ட அளவில் (District Welfare Officers for Backward Classes) நியமிக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படிப்பட்ட கருத்து அரசின் எண்ணத்தில் இல்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நீண்ட காலத்திற்குப் பிறகு இப்போதுதான் பிற்பட்டோர் நலத்துறைக்கு என்று தனியாக ஒரு துறை அமைக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக ஒரு அமைச்சர் நியமிக்கப்பட்டு, ஒரு தலைமைத் துறை அலுவலகம் அமைக்கப்பட்டு இருக்கிறது. போகப்போக, தேவைப்பட்டால் மாவட்ட அளவில் அது கவனிக்கப்படும்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, பிற்பட்டோர் நல வாழ்விலே அக்கறை கொண்டுள்ள இந்த அரசால், நீலகிரி மாவட்டத்திலுள்ள தோதவர், குறவர்கள், இருளர்கள் சேர்க்கப் பட்டுள்ளனரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனிக் கேள்வி போடவும்.

Dr. H. V. HANDE : Sir, a couple of days ago a report by Thiru Sattanathan on Backward Classes was placed on the table of the House and may I know from the Hon. Minister, what are the salient points contained in that report and what are the recommendations which are going to be implemented?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, பிற் பட்டோர் நல இலாகா மான்யம் தனியாக வருகிறது. அப்போது அதைப்பற்றி விரிவாகப் பேச இருக்கிறோம். இருந்தாலும் பெரிய அளவான கேள்வியாக இருப்பதால் தனிக்கேள்வி போடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஆர். கண்ணன் : தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக்கழகம் ஜாதி, மதத்தை விரும்பவில்லை. எல்லோரும் ஒரே இனம் என்ற எண்ணம் இருந்தாலும், முன்பு இருந்த மந்திரி சபையானாலும் சரி, இப்போதிருக்கும் முன்னேற்றக்கழக மந்திரிசபை யாக இருந்தாலும் சரி, ஜாதி அடிப்படையில் மந்திரி பதவி வகித்து வருகிறார்கள். தமிழகத்தில் யாதவ மக்கள் 50 லட்சம் பேர் இருக் கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. காங்கிரஸ் ஆட்சியிலும் சரி, திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலும் சரி, அவர்களுக்குப் பிரதி நிதித்துவம் மந்திரிசபையில் அளிக்கப்படவில்லை. இனிமேலாவது அரசு அதைக் கவனிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு மாநாட்டில் யாதவர்கள் என்றால் அமைச்சர்கள் என்று பொருள் கூறி இருக்கிறார்கள். ஆகவே, நாங்கள் எல்லோரும் யாதவர்கள் தான்.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, பிற்பட்டோர், அதாவது பேக்வார்ட் கம்யூனிடி லிஸ்டிலே சேர்ப்பதற்கு பொருளாதார அடிப்படை பார்க்கப்படுகிறதா அல்லது சமுதாயத்திலே அவர்கள் பரம்பரையைப் பார்த்து சேர்த்துக் கொள்ளப்படுகிற நிலை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, பொருளாதாரத்துறையும் சமுதாயத் துறையும் இரண்டுமே பார்க்கப்படுகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, will this Government come forward to include the Mukkulathor Community in the list of Most Backward Community ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையாரைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை!

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இராணிப் பேட்டைக்கு அருகிலே மந்திரிகள் என்ற ஒரு இனத்தவர் இருக்கிறார்கள். அவர்கள் பிற்பட்ட வகுப்பினர் லிஸ்ட்டில் சேர்க்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மந்திரிகள் என்றாலே மாண்புமிகு உறுப்பினர்களால் பிற்பட்டவர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

திரு. என். இராஜாங்கம் : தலைவரவர்களே, மோஸ்ட் பேக்வார்ட் கிளாசுக்கும், பேக்வார்ட் கிளாசுக்கும் இடையே எந்த விதமான பாகுபாடும் இல்லை. ஆகவே, அந்த மோஸ்ட் பாக்வார்ட் கிளாசையும் பாக்வார்ட் கிளாஸ் என்று சொல்லி விட்டால் என்ன என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இரு வேறுபட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன. எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து ஒரே சமுதாயமாக்குவதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கம்.

THIRU M. A. LATHEEF : The Hon. Minister has just now stated that for the purpose of treating a caste as backward the economic and social particulars are taken into view. May I request theHon. Minister to consider whether the Urdu speaking Muslims, who are most backward economically and socially, will also be considered as "most backward" for the purpose of these concessions? Will all the Muslims be treated as backward irrespective of the language they speak?



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுதுள்ள சூழ்நிலையில் பிற்படுத்தப்பட்டோர் என்பது பொருளாதாரத் துறையில் பிற்படுத்தப்பட்டிருப்பது இல்லை. இப்பொழுது பெரும்பாலான அளவில் சமுதாயத் துறையில்தான் பிற்படுத்தப்பட்டோர்கள் நிலைமைகள் ஆராயப்படுகிறது. அவர்களுக்குக் கல்வித் துறையில் தமிழ்நாடு அரசால் பி.யு.சி. வரையில் இலவசமான கல்வி கொடுக்கப்படுகிறது என்பதால், பொருளாதாரத் துறையில் பிற்படுத்தப்பட்ட வருக்கும் நல்ல வசதிகள் ஏற்படுகின்றன. பொருளாதாரத் துறையிலும் இப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்த, காலம் கனிந்து வரவில்லை என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், பொருளாதாரத் துறையில் பின் தங்கியவர்களை உயர்த்துவதன் மூலம், சமுதாயத்தில் பின்தங்கியவர்களும் உயர்ந்து விடுவார்கள் என்பதால் அவர்களைப் பொருளாதாரத்தில் உயர்த்துவதுதான் சரி என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பொருளாதாரத் துறையில் முன்னேறுவதால் சமுதாயத்தில் முன்னேறியதாக சமுதாயம் ஏற்றுக் கொள்வதில்லை. அதனால் தான் இப்படிப்பட்ட ஏற்பாடுகள்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, பொருளாதாரத் துறையில் பின்தங்கிய அரிசனக் கிருத்துவர்களுக்கும் இந்தச் சலுகைகள் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் கவுண்டர்கள், எஞ்சினியரிங் தொழில், சலவைத் தொழில் (ப்ளீச்சிங்) போன்றவற்றை 100-க்கு 95 பேர்கள் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் கல்லூரிகளில் சேரும்போதும், உத்தியோகத்திற்கு வரும்போதும் இப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்கப்படுவதில்லை. அவர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது இந்த அரசு அமைத்த பிற்பட்டோர் நலக் குழு புதிதாகப் பிற்பட்டோர் யார், யார் சேர்க்க வேண்டும், இருப்பவர்களில் யார் யார் விலக்கப்பட வேண்டும் என்பதற்கான அதிகாரம் பெற்றிருந்த குழு இல்லை. இருக்கும் நிலையில் எப்படி எப்படி உதவிகள் செய்யலாம், சலுகைகளைத் தரலாம், நன்மைகளைப் பெருக்கலாம் என்பதை ஆராய்ந்து ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : முன்னேறிய வகுப்பினர்களும், பிற்பட்ட வகுப்பினரும் கலப்புத் திருமணங்கள் செய்து கொள்கிறார்கள். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிய விரும்புகிறேன் (சிரிப்பு).

[1971 ஜூலை 7

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அவர்களைப் பின்தங்கிய வகுப்பில் எடுக்க அரசு தயார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த பிற்பட்டவர்கள் ஏதாவது புதிதாகத் தொழில் ஆரம்பிக்க முன் வந்தால், அரசு பொருளாதார உதவிகள் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தப் பரிந்துரையில் இதைப் பற்றி எல்லாம் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அரசு அவற்றை எல்லாம் பரிசீலனை செய்து, எல்லாப் பரிந்துரைகளையும் ஒரேயடியாக எடுக்க முடியாவிட்டாலும், படிப்படியாக எடுத்து செயல் படுத்த முயற்சிகள் செய்யும்.

திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, கல்வித் துறை ஜி.ஓ. எம்எஸ். 922, 1—7—1954 தேதியிட்ட அந்த ஜி.ஓ.வில் "பரவன்" என்ற சமுதாயத்தைப் பின்தங்கிய சமுதாயத்தில் சேர்த் திருந்தார்கள். ஆனால், அந்தச் சமுதாய மாணவர்கள் தொழில் பயிற்சி கல்லூரிகளில் சேர்வதற்கு, சம்மந்தப்பட்ட வட்ட ஆட்சித் தலைவர்களிடம் நற்சான்றிதழ் வாங்கச் சென்றால் அவர்கள் மறுக் கிறார்கள். கல்வித் துறையில் வைத்தியக் கல்லூரி போன்றவற்றிற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, இவர்களைப் பின்தங்கிய சமுதாயமாக ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். இந்த ஜி.ஓ. விற்குப் பிறகு அதை மாற்றியமைத்து அரசாங்க உத்தரவு வந்திருப்பதாகவும் தெரியவில்லை. ஆகவே, இதை அமுல் நடத்தத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டு வந்ததற்காக நன்றி. தக்க நடவடிக்கைகள் மேற் கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) ஒற்றிவைப்புத் தீர்மானம் :

கோவை பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டமும் முதல் அமைச்சர் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படாததும் குறித்து.

MR. SPEAKER : The hon. Member Dr. H. V. Hande has given notice under Rule 42 of the Assembly Rules the following adjournment motion :—

"I move that the business of the House be adjourned to discuss a matter of urgent public importance, i.e., the unrest prevailing among Coimbatore textile workers who are agitating



[Mr. Speaker]

for opening of textile mills and rejection of the Hon. Chief Minister's appeal for calling off of the agitation, by the Joint Action Committee".

DR. H. V. HANDE : Sir, I have given notice of a motion : that the business of the House do stand adjourned for the reasons mentioned in the statement just now read out by the Hon. Speaker. Only yesterday this matter was brough into the House and the Hon. Chief Minister had given a statement requesting the workers to call off the strike. He had also given some assurances. Now we understand that those assurances, according to the workers, are unsatisfactory and they want clear-cut assurances and in the absence of those assurances there is a possibility of workers starting an agitation. Especially the leaders of various Mill Workers Unions, Presidents and Secretaries of these Unions, had decided to start an agitation right in front of Collector's office and also picketing the Collector's office. That possibility is there on the 9th. They had programmed to strike and a total all-out strike is likely to take place from 21st of this month. In view of the fact that thousands of workers are affected and also in view of the fact that this Government and other parties are also concerned and that some sort of peaceful atmosphere has to settle down in Coimbatore and also in view of the fact that we want workers to get re-employed and our sympathies are there with the workers, I request that the business of the House do stand adjourned so that we could discuss how best we can solve this problem and also persuade the Hon. Chief Minister to depute the Hon. Minister for Labour straight to Coimbatore, today or tomorrow, if it is possible today itself, so that he could meet the trade union leaders and bring about a calm atmosphere and so that industrial peace in Tamil Nadu reigns permanently ? Thank you, Sir.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் சில ஆண்டுகளாக ஜவுளித் தொழிலுக்கு, குறிப்பாக நூற்பாலைகளில் ஏற்படுகின்ற கஷ்ட நிலையை இந்த அரசாங்கம் கூர்ந்து கவனித்து வந்திருக்கிறது. தொழிலாளர் தலைவர்களையும், தொழில் அதிபர்களையும் சேர்த்து அழைத்து, பேச்சு வார்த்தைகள் நடத்தி, அதன் மேல் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதைப்பற்றி யெல்லாம் இந்த மன்றத்தில் சொல்லி வந்திருக்கிறோம். இதன் தொடர்பாக மாண்புமிகு முதல் அமைச்சர் தொழிலாளர் தலைவர் களுக்கு வேண்டுகோள் ஒன்று விடுத்து, பரிவோடு தொழிலாளர் களுக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டும் என்றும் தொழிற்சாலைகள் திறக்கப்பட வேண்டும் என்றும் அறிவித்தார்கள். அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று செய்தி வந்திருக்கிறது.

பிரச்சினைகளை ஆராய வேண்டும் என்று செய்கிறபோது, இப்படிப் பட்ட 169 ஆலைகளில், 26, 27 சில ஆண்டுகளுக்கு முன் மூடப்பட்டுவிட்டன. மேலும் 14 ஆலைகள் இப்பொழுது மூடப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் "ஃபைனான்சியல் டிபிகல்டிஸ்", பொருளாதார வசதிக் குறைவு என்பதை அறிந்து,

அதற்கான திட்டமிட்டு, வங்கிகள் மூலம், பணம் பெற்றுத் தந்து உதவி செய்ய முடிவு செய்தோம். அந்த முடிவின் பயனாக ரூ. 225 லட்சத்திற்கு 12 நூற்பாலைகளுக்குக் கொடுக்க முயற்சி செய்து " காரண்டி " கொடுத்தோம். அதில் ரூ. 119 லட்சம் சில ஆலைகள் பெற்றுக்கொண்டும், தொடர்ந்து நடத்த முடியாமல் மூடிவிட்டன.

(திரு. எம். ஏ. லத்திப்—தலைமை)

நம்முடைய அரசாங்கம் இதற்காக ஒரு டெக்ஸ்டைல் கார்ப்ப ரேஷன் மாநில அளவிலே அமைத்திருக்கிறோம். மத்திய அளவிலே "நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன்" மத்திய அரசு அமைத் திருக்கிறது. அவர்களிடத்திலே 59 சதவிகிதம் பெறுகிறோம்; நாம் 41 சதவிகிதம் போடுகிறோம். அப்படி ஐந்து ஆலைகளை இன்றைக்கு ஏற்று நடத்துகின்ற திட்டத்தை ஓரளவுக்கு வெற்றியோடு நாம் நடத்தி வருகிறோம். இன்னும் மூடப்பட்டிருக்கும் மீதி இருக்கின்ற ஆலைகளிலே எந்தெந்த ஆலைகளை நஷ்டம் இல்லாமல் நடத்த முடியுமோ அவைகளை எல்லாம் எடுத்து நடத்த வேண்டுமென்று நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலமாகப் பணம் பெற வேண்டு மென்று மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தி வருகிறது.

பொருளாதார வசதியற்ற நிலைமைகளிலே உள்ள மில்களையும், மிஸ்மேனேஜ்மென்ட், முதலாளி—தொழிலாளர்களிடையே ஒற்றுமை இல்லாத தன்மை இவைகளால் மூடப்பட்டிருக்கும் மில்களையும், மூடும் தருவாயில் இருக்கும் மில்களையும் நாமே ஏற்று நடத்த வேண்டு மென்று முயற்சித்து வருகிறோம். ஆனால், சில ஆலைகளை எப்படியும் திறந்து நடத்த முடியாது. காரணம், அதனுடைய இயந் திரங்கள் " வயபில் யூனிட்டாக " நடத்த போதுமான சக்தியற்ற நிலைமையிலே இருப்பதைப் பார்க்கிறோம். அந்த ஆலைகளை எல்லாம் ஏற்று நடத்தினால் மக்களின் வரிப் பணம் விரயம் ஆகிவிடும். ஆகவே, நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை அப்படிப்பட்ட மில்களுக்குப் பண உதவியைச் செய்வதும், இலாபகரமாக நடத்தக் கூடிய மில்களை ஏற்று நடத்தவும் பரிசீலித்து வருகிறோம்.

உதாரணமாக, திருச்சி மாவட்டத்திலே இருக்கும் நமண சமுத்திரத்திலே புதுக்கோட்டை டெக்ஸ்டைல் மில் என்று ஒன்றிருக்கிறது. அந்த மில்லிலே அதிக நஷ்டம் வருகிறது. அது மூடும் தருவாயில் இருக்கிறது. எனவே, அங்கிருக்கும் தொழிலாளர் கள் எல்லாம் இதை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும், நாங்கள் வேண்டுமானால் எங்களுடைய சம்பளத்தையும், பஞ்சப்படியையும் குறைத்துக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். அதைப் பற்றி இந்த அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது. இப்படிப் பல ஆலைகளிலே தொழிலாளர்களும், தொழிலாளர் தலைவர்களும் நம்முடன் இப்படிப்பட்ட காரியங்களிலே ஒத்துழைக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களிலே இருக்கும் மில்களை எல்லாம் அரசாங்கம் ஏற்று நடத்த இன்னமும் வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.



இதைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக நான் கோவை மாவட்டத்திலே இருக்கின்ற பல சங்கங்களின் தொழிலாளர் தலைவர்களை வருகின்ற 12 ஆம் தேதி மாலை 4½ மணி அளவில் நமது முதலமைச்சரும் நானும் சந்தித்து இங்கே பேசுவது என்றும், அப்படிப்பட்ட பேச்சு வார்த்தையின் போது எந்தெந்த ஆலைகளை நமது அரசாங்கம் ஏற்று நடத்த முடியுமோ அவைகளை ஏற்று நடத்துவது என்றும் அல்லது நம்மால் ஆன உதவிகளை எந்தெந்த மில்களுக்குத் தருவது என்பது பற்றியும் பேசவிருக்கிறோம். இந்த வாய்ப்பைத் தொழிலாளர் தலைவர்கள்—அதுவும் கோவை மாவட்டத்திலே இருக்கும் தலைவர்கள்—ஏற்றுக் கொண்டு, முதல் அமைச்சரோடும் என்னோடும் பேச்சு வாத்தை நடத்த விருக்கிறார்கள். அந்தப் பேச்சு வார்த்தையின் மூலம் பயனுள்ள முடிவுகளை எடுத்து, தொழிலாளர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நிலையிலே இந்த அரசாங்கம் இருக்கிறது. இப்படிப்பட்ட போராட்டங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவ தோடு நிறுத்திக் கொண்டு, ஏதோ இதை எல்லாம் பெரிய போராட்டமாக நடத்த வேண்டாம் என்றுதான் முதலமைச்சர் அவர்கள் பேசும் பொழுது சொன்னார்கள். அதைத்தான் நான் இங்கே வலியுறுத்தி சொல்லிக்கொள்கிறேன். அந்த வேண்டுகோளை ஏற்று உடனடியாக அந்தப் போராட்டத்தை நிறுத்தி வருகின்ற 12-ஆம் தேதி மாலை முதல் அமைச்சரையும் என்னையும் அந்தத் தலைவர்கள் சந்தித்து, கருத்துக்களை பரிமாறிக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த அவசரத் தீர்மானம் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானம் அவசியமில்லை என்று சொல்லி, இதற்கு அனுமதி மறுக் கிறேன்.

(4) அரசினர் சட்டமுன் வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்ச வரம்பை முடிவு செய்தல்) திருத்த சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்ச வரம்பை முடிவு செய்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்ச வரம்பை முடிவு செய்தல்) திருத்த சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

[1971 ஜூலை 7

(ஆ) தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்டமுன் வடிவு.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக்கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக்கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

1971–72-ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கைகளின் மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

(5) 1971–72-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 31—பஞ்சத்தணிப்பு—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண். 32—ஓய்வூதியங்கள்—தொடர்ச்சி.

(ஈ) கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்—தொடர்ச்சி.

(உ) கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு—தொடர்ச்சி.

(ஊ) கோரிக்கை எண் 45—ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல்—தொடர்ச்சி.

(எ) கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்—தொடர்ச்சி.

(ஏ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.—தொடர்ச்சி.

(ஐ) கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்.—தொடர்ச்சி.

* திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, நடைபெற்று கொண்டிருக்கின்ற வருவாய்த்துறை மானியத்தின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தமிழக அரசின் வருவாய்த்துறை கழக அரசு பொறுப் பேற்றுக் கொண்ட பின்னுல் ஆற்றியிருக்கின்ற பணிகளை மூன்று சிறப்பான காரணங்களால் நாம் பாராட்டியே தீரவேண்டும். இந்த அரசு உருவானத்திற்குப் பின்னுல்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்



1971 ஜூலை 7] [திரு. கா. வேழவேந்தன்]

கோட்டாட்சித் தலைவர்கள், வட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோரை எல்லாம் சின்னஞ் சிறிய கிராமங்களிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் நேரடியாகச் சந்தித்து தங்களுடைய குறைபாடுகளைச் சொல்லு வதற்கு நல்ல ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இது முதற் காரணம்.

இரண்டாவது காரணம், ஒரு காலத்திலே கட்டபொம்மன் "வானம் பொழிகிறது, பூமி விளைகிறது, கும்பினிக்காரனுக்கு ஏன் கப்பம் கட்டவேண்டும்" என்று குரல் கொடுத்ததாக நாடக மேடை யிலே நடித்துக் காட்டிய பழைய ஆட்சியினர் செய்யாத திறமையான பணியை இந்த ஆட்சி ஏற்றுக் கொண்டு புஞ்சை நிலத்திற்கு வரி விலக்கு அளிப்பது மாத்திரமில்லாமல், இந்த ஆண்டு ஜூலை முதல் தேதி முதல் நஞ்சை நிலத்திலே ஐந்து ஏக்கராவுக்கு இனிமேல் வரி வசூல் இல்லை என்று ஆக்கியிருக்கும் பெருமையை நாம் பாராட்ட வேண்டும். வருவாய்த்துறை என்றுல், வருவாயைப் பற்றி மட்டுமே கவலைப்படுவது என்றில்லாமல், இந்த முறை ஏழை, எளிய மக்களும் நடுத்தர மக்களும், விவசாயத் தோழர்களும் பயன் பெற வேண்டும் என்ற அளவிலே கழகத் தலைவரான நமது முதலமைச்சரும், மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்களும் பல அருமையான திட்டங்களை அமுல்படுத்தி இருப்பதால், தமிழக மக்களின் பாராட்டுதலுக்கு இந்த அரசை ஆளாக்கியிருக்கிறுர்கள்.

இதற்கு அடுத்து மிகப் பெரிய பாராட்டுக்குரிய செய்தி என்ன வென்றுல், வரலாற்றிலே இல்லாத அளவுக்கு கழக அரசு ஏற்பட்டதற்கும் பின்னுல் இலட்சக்கணக்கான நிலப் பட்டாக்களை யும், குடிமனைப் பட்டாக்களையும் ஏழை எளியவர்களுக்கு வழங்கி யிருப்பதாகும். சாதாரணமாக நாட்டிலே இருக்கும் கவிஞர்கள் சொல்லுவார்கள். நண்டுக்குக்கூட சொந்தமாக வளை இருக்கிறது, பாம்புக்குக் கூட புற்று இருக்கிறது, ஆனுல் இந்த நாட்டிலே இருக்கும் ஏழை எளியவர்களுக்குத் தங்க குடிசை கூட இல்லாமல் இருக்கிறுர்கள். எனவே அந்தநிலை போக்கப்பட வேண்டும் என்றுர்கள். அந்த வகையில் இந்த அரசு பொறுப்பேற்றதும் நாடு எங்கிலும் குடிமனைப் பட்டாக்களை வழங்கி, இன்றைக்கு அடி மட்டத்திலே இருக்கின்ற ஏழை, எளியவர்கள் கூட, "எனக்குக் கூட சொந்தமாக மனை இருக்கிறது" என்று கூறிக்கொள்கிறுர்கள் என்றுல், அதனுல் இந்த அரசு மிகப் பெரிய பெருமையைப் பெற்றிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

மற்றும், தஞ்சை மாவட்டம் போன்ற பகுதிகளில் இருக்கின்ற மிராசுகளிலே எல்லாம் பண்ணைத் தொழிலாளர்கள் குடியிருப்பு மனைகளை பெறக் கூடிய நிலைமை உருவாகி இருக்கிறது. அதே போன்று, நாடு முழுவதும் இருக்கின்ற ஏழை எளிய விவசாயிகள் பண்ணைக்குச் சொந்தமான நிலத்திலே குடியிருப்பார்களானுல் அந்த இடங்களை விலை கொடுத்து வாங்கக்கூடிய திட்டத்தை தீவிரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மிகச் சிறப்பான பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்ற வருவாய்த் துறைக்கு என்னுடைய சில ஆலோசனைகளை கூறிக்கொள்கிறேன். நம்முடைய தமிழ் நாட்டிலே பல மாவட்டங்கள் இருக்கின்றன. அதிலே சில மாவட்டங்கள் பெரியதாகவும், இன்னும் சில மாவட்டங்கள் சிறிய தாகவும் இருக்கிறது. ஆனுல், எல்லா மாவட்டங்களுக்கும் ஒரே

[திரு. கா. வேழவேந்தன்] [1971 ஜூலை 7

வகையில் தான் அதிகாரிகள் இருக்கிறார்கள். பெரிதாக இருக்கின்ற மாவட்டங்களிலே அங்கே இருக்கின்ற மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியோ அல்லது கோட்டாட்சித் தலைவர்களோ மாவட்டத்தின் எல்லாப் பகுதிக்கும் போய்ப் பார்க்க முடியாத நிலைமை இருக்கிறது. எதிர்காலத்திலே ஒரு நல்ல திட்டத்தை அமைத்து இவற்றை எல்லாம் சரி செய்து சீராக எல்லா மாவட்டங்களும் சற்றேறக் குறைய ஒரே பரப்பளவில் இருக்க நீண்டகாலத் திட்டம் தீட்டக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள், ஏறக் குறைய குட்டி பாராளுமன்றக் கூட்டங்களாக நடை பெற்றுக் கொண்டிருந்தாலும் அவற்றின் அமைப்பை மாற்றியமைத்து, அதன் அதிகாரங்கள் விரிவு படுத்தப்பட்டு, அதைச் சக்தி வாய்ந்ததாக ஆக்க வேண்டும். அதிலே இங்கே இருக்கின்ற மாண்புமிக்க சட்ட மன்ற உறுப்பினர்களும் ஒன்றியப் பெருந்தலைவர்களும் நகராட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு அளிக்கும் யோசனைகளைத் தீவிரமாக அமுல் படுத்தும் விதத்திலே அதை மாற்றி அமைக்கக் கோருகிறேன். இதற்காக மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டத்தைத் திருத்திச் செம்மையாக அமைக்க வேண்டும். இதன் தலைவராக மராட்டிய மண்டலத்திலே இருப்பதுபோல், உத்தியோகப்பற்றற்ற ஒருவர் இந்த வளர்ச்சி மன்றக் கூட்டத்தின் தலைவராக இருந்து பணியாற்ற வழி செய்தால் நலமாக இருக்கும்.

அதற்கு அடுத்து, கழக அரசு வந்த பின்னால் மனுநீதித் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கலைஞர் அவர்களுக்கு மிகப் பெரிய பெருமை தந்திருக்கிறது, மற்ற மாநிலங்கள் இந்தத் திட்டத்தைப் பாராட்டிருக்கின்றன. அதோடு இந்தத் திட்டத்தில் உள்ள ஒரு சில குறைபாடுகளையும் களையவேண்டும். கொடுக்கப் படுகின்ற மனுக்கள் வருவாய்த் துறை அதிகாரிகளுக்குச் செல்கிறது. அந்த மனுக்களைப் பரிசீலனை செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று நேற்றைய தினம் கூட பல உறுப்பினர்கள் கூறினார்கள், பல மனுக்களுக்குச் சரியான முடிவுகள் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். இந்தக் குறைபாட்டை நீக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக முதலமைச்சர் அவர்களையும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் கிராம ராஜ்யம் மலர வேண்டுமென்று சொல்லுகின்ற நாம் அதற்கான மாற்றங்களை நாம் கொண்டுவரவேண்டும். 4, 5 ஆண்டுகளாக சட்ட மன்ற உறுப்பினனாக நான் இருக்கின்ற காரணத்தால் ஒரு புதிய முறையை அமுல் படுத்தினால் மிகச் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதாவது மாதத்திற்கு ஒரு நாள் வருவாய்த் துறை அதிகாரிகள் மட்டுமல்லாமல், பொதுப்பணித்துறை, மின்சாரத்துறை—பெரிய அதிகாரி வரா விட்டாலும் ஒரு அசிஸ்டெண்ட் இஞ்சினியர் அளவிலாவது—ஊராட்சித்துறை, இத்தகைய துறைகளில் இருக்கின்ற அதிகாரிகள், மாதம் ஒரு முறை ஒரு குறிப்பிட்ட கிராமத்திற்கு அழைத்துக் கொண்டு போய், மக்களின் பிரச்சினைகளைக் கேட்டுக் குறித்துக் கொண்டு வேண்டிய பரிகாரம் காணுவதற்கு முனைந்தால் நிச்சயமாக உதவிகரமாக இருக்கும்.



1971 ஜூலை 7] [திரு. கா. வேழவேந்தன்]

வருவாய்த் துறை அதிகாரிகள் மட்டும் போனால், அங்கே மதகுகளை ரிப்பேர் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள், ஊரில் விளக்கு எரியவில்லை என்று சொல்லுகிறார்கள். அவற்றைப்பற்றி வருவாய்த் துறை அதிகாரிகள், மற்றத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்குத் தெரிவித்து பரிகாரம் கிடைப்பதற்கு அதிககால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே இப்போதாவது, ஒரு புதிய திட்டத்தை வகுத்து, அதிகாரிகள் மாதம் முழுவதும் அவர்கள் வேலையைச் செய்யட்டும்—மாதத்திற்கு ஒரு நாள் அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு நாளாவது ஒரு தொகுதியில், ஒரு "சைகிள் சிஸ்டம்" வைத்து எல்லா அதிகாரிகளையும் அழைத்துக் கொண்டு போய், அந்தப் பகுதியில் உள்ள மக்களின் குறைகளைக் கேட்டு, அவர்கள் கொடுக்கின்ற மனுக்களைப் பெற்று அதற்கான பரிகாரங்களைச் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த மனுநீதித் திட்டம் என்பது வருவாய்த்துறையைச் சேர்ந்த பணி என்று ஒதுக்கிவிடாமல், மாவட்டத்தில் உள்ள எல்லாத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் இதில் பங்கெடுத்தால் எந்த விதக் குறையும் ஏற்படாது. ஒரு துறையைச் சேர்ந்த அதிகாரி போனால் மக்கள் வருவதில்லை, அவர்கள் போனால் வருகிறார்கள் என்ற குறைக்கு இடமில்லாமல் எல்லாத் துறையினரும் அங்கு போய் பரிகாரம் காணுகின்ற வகையில் இந்த மனுநீதித் திட்டத்தை அமுல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்து, சென்னையைச் சுற்றியுள்ள "பெல்ட் ஏரியா"வில், ஒரு குறிப்பிட்ட மைல்களுக்குள் உட்பட்ட பகுதிகளை யாருக்கும் பட்டாச் செய்து கொடுப்பதில்லை என்ற ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. அந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி, தகுதியானவர்களுக்கு, நிலங்களைப் பட்டாச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பக்கத்து நிலங்கள் பட்டா போட்டுக் கொடுக்கப்பட்டிருப்பதால், தனக்கு பட்டா கிடைக்கவில்லையே என்று கிடைக்காத விவசாயி ஏங்கிக் கொண்டிருக்கிறான். ஆகவே, விதியை ஒரு அளவிற்கேனும் தளர்த்தி முடிந்த அளவுக்கு பட்டா கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று ஊராட்சி ஒன்றியங்களில் என்ன காரணத்தாலோ வரி வசூல் சரிவர நடைபெறவில்லை என்று அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எந்த எந்த ஒன்றியங்கள், எந்த எந்த கிராம அதிகாரிகள் இந்தத் தவறுகளைச் செய்கிறார்கள், ஏன் அவர்கள் வரி வசூல் செய்யவில்லை என்பதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சி மன்றங்கள் தங்கள் பங்குத் தொகைகளைக் கட்டமுடியாமல், தெரு விளக்குகள் கூட எரியாத நிலைமை இருக்கிறது. ஆகவே வரிவசூலைத் தீவிரப் படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிப்பது பற்றி நேற்று சொன்னார்கள். குறைந்த பட்சம் "கோட்டா" அளவிலாவது அவர்கள் தமிழர்களாக இருந்தால் மிகவும் நலமாக இருக்கும். சாதாரணமான ஒரு ஏழை, ஒரு அரிசனக் கோமர் சென்று

[திரு. கா. வேழவேந்தன்] [1971 ஜூலை 7

தன்னுடைய குறையைச் சொல்ல வேண்டுமென்றால், அவரோடு ஆங்கிலத்தில் தான் பேசவேண்டிய நிலை இருக்கிறது. அதிகாரியும் ஆங்கிலத்தில் பேசினால்தான் புரிந்து கொள்ள முடிகிறது. தமிழ் தெரிந்தவர்களை மட்டும் தான் அந்த இடங்களில் போடுவது என்பதும் சிரமம் தான். முடிந்த அளவிற்கு "கோட்ட" அளவில் நியமிக்கப்படும் அதிகாரிகளாவது, தமிழில் நன்றாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தால் நல்லது. தமிழ் தெரிந்தால் மட்டும் போதாது, உதாரணமாக இரண்டு கிராமங்களுக்கு இடையே சர்ச்சை வந்தால், அதைத் தீர்த்து வைப்பதற்கு "கோட்ட அதிகாரி கள் செல்கிறார்கள். தமிழ் நன்றாகத் தெரிந்தவர் சென்றால்தான் விவகாரத்தை நல்ல முறையில் கேட்டுத் தீர்த்து வைக்க முடியும். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறு கிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரம் காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்ட நேரத்தில், மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு காரணம் கூறினார்கள். காஞ்சிபுரம் தொன்மை வாய்ந்த நகரம் என்று சொன்னார்கள். கும்மிடிப்பூண்டி, பொன்னேரி போன்ற பகுதி களிலிருந்து காஞ்சிபுரம் செல்வதென்றால் ஏறத்தாழ 80 மைல்கள் போகவேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு தனி மாவட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னேன். தற்போது ஒரு தனி மாவட்டம் ஏற்படுத்துகின்ற வாய்ப்பு இல்லாவிட்டாலும், அந்தப் பகுதிகளை எல்லாம் இணைத்து, ஒரு "கோட்டம்" ஆக்கி அதில் ஒரு கோட் டாட்சித் தலைவரை பொன்னேரியிலோ அல்லது ஆரணியிலோ நிய மிக்கவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு உருக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கும்மிடிப்பூண்டி துணைவட்டம் அதிக நிலப்பரப்பு உள்ளது. அது தற்போது துணைவட்டமாக இருக்கிறது. அதை வட்டமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பென்னலூர்ப்பேட்டைத் துணைவட்டத்திற்கு வட்ட அலுவலகம் நடைபெற ஒரு தனிக் கட்டிடம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களை மேம்படுத்த இணைப்புச் சாலைகள் அமைக்க வேண்டுமென்ற திட்டம் கொண்டு வரப்பட விருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். அதே மாதிரி பல மாவட்டங்களில் பல பகுதிகள் பிற்பட்ட நிலையில் இருக்கின்றன. அத்தகைய பகுதிகளை ஆராய்ந்து தேர்ந் தெடுத்து அவைகளுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் உதவியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வருவாய்த் துறை மானியத்தில் குறிப்பிட்டிருக்கின்ற செய்திகள் மிகச் சிறப்பாக இருக் கின்றன. நாம் எல்லாம் பெருமை கொள்ளத் தக்க அளவில் இருக் கின்றன. அவற்றை எல்லாம் வரவேற்று, என்னுடைய நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அவையின் முன் உள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1971 ஜூலை 7] [திரு. என். கிட்டப்பா]

இந்த மானியக் கோரிக்கையில், புஞ்சை நிலத்திற்கான அடிப்படை வரி ரத்துச் செய்யப்பட்டிருப்பதையும், 5 ஏக்கர் அதற்குக் குறைவான நஞ்சை நிலத்தின் அடிப்படை வரியை ரத்து செய்திருப்பதையும், மனுநீதித் திட்டத்தின் கீழ் மக்களின் கோரிக்கைகளைக் கவனிப்பதற் கான வழிமுறைகளையும், கிராம அதிகாரியின் சம்பளத்தை ரூபாய் 51லிருந்து ரூபாய் 70 ஆகவும், கணக்கப்பிள்ளை சம்பளத்தை ரூபாய் 53-லிருந்து ரூபாய் 72 ஆகவும், தலையாரி வெட்டி இவர்கள் சம்பளத்தை ரூபாய் 45-லிருந்து ரூபாய் 60 ஆக உயர்த்தி இருப்பதை யும், இதுபோன்ற நல்ல காரியங்களை எல்லாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். உண்மையில் நிலத்திலே பாடுபடுகிறவனுக்கு, குத்தகை விவசாயிக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்ற முறையில் நம்முடைய அரசு நடவடிக்கைகள் எடுத்திருப்பது குறித்து நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அதோடு நிலக்கிழார் களுக்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்பு மனைகளில் வீடுகள் கட்டிக் குடியிருக்கின்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு அந்த குடி யிருப்பு மனைகளைச் சொந்தமாக்குவது என்று சொல்லுவது அரசு மேற்கொண்டுள்ள சிறப்பான மற்றொரு அம்சம் ஆகும். விவசாயிகள் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு உறுப்பினன் என்ற முறையில் நான் இதை மனமாரப் பாராட்டி வரவேற்கிறேன்.

1—2—1969-க்குப் பிறகு நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்ட விவசாயிகளுக்கும் கூட, பாதுகாப்பு அளிக்கின்ற முறையில் காரியங் கள் செய்திருப்பதை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். குடியிருப்பு மனைகளிலிருந்து விவசாயிகளை வெளியேற்றுவதைத் தடுப் பதற்காக நமது அரசு மேற்கொண்டிருக்கும் சிறப்பான சட்ட வடிவங்களைப் போல், நிலத்தை உழுது பயிரிடுகின்ற விவசாயிகளை நிலத்தை விட்டு அகற்றப்படும் அநீதியைத் தடுத்துநிறுத்திட நல்ல அம்சங்கள் கொண்ட ஒரு சட்ட வடிவை உருவாக்க வேண்டுமென்று மிகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். 1969-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவுச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன் மூலமாகத் தஞ்சை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த ஏழை எளிய விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளித்ததற்காக நாம் கழக அரசுக்கு நன்றிக் கடன் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே போல நில உச்ச வரம்புச் சட்டத்தில் பல விதிவிலக்குகள் முதலில் அளிக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பிறகு புனராலோசனை செய்ய ஒரு குழு அரசு அமைத்தது. அந்தக் குழு அவற்றைப் பரிசீலனை செய்து, தேவை இல்லாத விதிவிலக்குகளை அகற்றுகின்ற ஒரு நிலை உருவாக்கப்பட வேண்டும். அதற்கான காரியங்களை நமது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் பணிந்து கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே, கோயில், மடம் ஆகியவற்றுக்கு இருக்கின்ற ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை, அந்தந்த நிலங்களை உழுது கொண்டிருக்கிற விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டு, கோயில், மடத்திற்கு என்ன தேவையோ அந்த அளவுக்கு ஒரு தொகையைக்

[திரு. என். கிட்டப்பா] [1971 ஜூலை 7

கொடுத்துவிடலாம். இவ்விதம் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயன்தரத்தக்க வகையில், அந்த நிலங்களைக் கொடுப்பதற்குச் சட்டப் பூர்வமான நடவடிக்கையை உருவாக்கித் தர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளம், தீ இவற்றினால் பாதிக்கப் படுகிற குடிசை வாழ்வோருக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறதைப் பாராட்டுகிற அதே நேரத்தில், அந்தத் தொகை போதவில்லையாகையால் சிறிது கூட்டித் தர வேண்டுமென இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நிலவரியைப் பொறுத்த மட்டில், நிலத்தினுடைய தாரதம்மியத்தைப் பொறுத்து நில வரி வசூலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல விளை நிலத்திற்கு வரியை உயர்த்தலாம்; விளையாத நிலங்களுக்கு ஓரளவுக்கு வரியை குறைக்கலாம். எனவே, இந்த அடிப்படையில் நில வரி நீக்கம் பற்றிய திட்டத்தில் புனர் ஆலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோட்ட அளவில் சமுதாய நிலத் துறை அமைப்புகளை, வருவாய்த் துறையிலிருந்து பிரித்து அதை ஒரு தனி நிறுவனமாகச் செயல்பட நம்முடைய அரசு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த அரசு நஞ்சை நிலத்திற்கு வரி விலக்கு கொடுத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். இது விவசாயிகள் மத்தியிலே ஒரு நல்ல எண்ணத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும் என்று நான் எதிர் பார்க்கிறேன். புஞ்சை நில வரி விலக்கை விட நஞ்சை நிலத்திற்குக் கொடுத்திருப்பது இன்னும் கொஞ்சம் அதிகம் உற்சாகம் கொடுக்கக் கூடியது. ஆனால் அதிலே சில விவரங்கள் தேவைப் படுகின்றன. அடிப்படை வரி எடுத்து விடப்படுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. சாதாரணமாக செட்டில்மெண்டிலே எல்லா நிலத்திற்கும் தரம் தீர்வை என்றுதான் நிர்ணயிக்கப்படுகிறது. நஞ்சைக்கு அடிப்படை வரியை எடுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது. நஞ்சைக்குத் தண்ணீர் வரி என்று தனியாக விதிப்பது கிடையாது. இப்பொழுது தனியாகத் தண்ணீர் வரி விதிக்கப்பட்டால் விவசாயிகள் மிகவும் சங்கடப் படுவார்கள். புதிய பாசன நிலங்களுக்குத் தண்ணீர்த் தீர்வையாக ஏக்கருக்கு ரூபாய் 15 வசூல் செய்கிறார்கள். இன்னும் தஞ்சை மாவட்டத்தில் நன்செய்க்கு நிலவரி அதிக பட்சமாக ரூ. 16 வரி ஆகிறது. எந்த முறையில் அடிப்படை வரி நீக்கப்படுகிறது என்பது பற்றிய விளக்கம் தேவை. நில வரி நீக்கப் பட்டுவிட்டது என்று சொல்லி விட்டு, வேறு வகையில் விவசாயிகள் பணம் கட்டுகிற நிலைமை ஏற்பட்டு விடக் கூடாது என்பதைத் தான் சொல்கிறேன். அந்த நிலைமை ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுகிறேன்.



1971 ஜூலை 7] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இது வரை வசூலித்த வரி எல்லாம் தரம் தீர்வை சேர்த்துத் தான். எனவே அடிப்படை வரி நீக்கம் என்பதன் நிலையை விளக்க வேண்டுகிறேன்.

சிறு நிலச் சொந்தக்காரர்களுக்குச் சில நேரங்களிலே சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. அவர்களுக்குச் சில சௌகரியங்களை இந்த அரசு செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிறுநிலச் சொந்தக்காரர்களுக்குத் தங்களுடைய நிலங்களின் சரியான விஸ்தீர்ணம் என்ன, எந்த எந்த நிலங்களுக்குத் தீர்வை, எவ்வளவு, அடமானம் வைக்கப்பட்டிருந்தால் எப்பொழுது வைக்கப்பட்டது என்பன போன்ற விவரங்கள் எல்லாம் சரிவரத் தெரிவதில்லை. இதற்காக ஒவ்வொருவருக்கும் ஒரு பாஸ் புத்தகம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவரங்கள் பூரா கைவசம் இருந்தால் அவர்களுடைய கஷ்டங்கள் மிகவும் குறையும். ஒவ்வொன்றுக்கும் அதிகாரிகளைப் போய்க் கேட்பதும் சிரமம். கேட்டாலும் சரியானபடி விவரங்கள் கிடைப்பதில்லை. வில்லங்க சர்டிபிகேட்டுக்காக அலைய வேண்டியதில்லை.

என்னுடைய சொந்த அனுபவத்தை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். நான் எந்த வரியையும் பாக்கி வைத்துக் கொள்வது கிடையாது. அந்த அந்த வரியை அப்பொழுது அப்பொழுது கட்டி விடுவது வழக்கம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் திடீரென்று நான் ரூ. 260 வரி பாக்கி செலுத்த வேண்டும் என்று எனக்கு நோட்டீஸ் வந்தது. இந்த விஷயம் பற்றி நான் இன்னும் விசாரிக்கவில்லை. விசாரிக்கப்போகிறேன். இந்த மாதிரிச் சங்கடங்கள் இல்லாமல் கணக்கு சுத்தமாக இருப்பதற்கு இந்த பாஸ் புத்தகம் மிகவும் அவசியம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நில வரி, தண்ணீர் தீர்வை, செஸ், சர்சார்ஜ், சர்சார்ஜுக்கு சர்சார்ஜ் என்று இப்படி 24 கணக்குகள் இருக்க வேண்டியதில்லை. ஏக்கருக்கு இவ்வளவு என்று மொத்தமாக வரி போட்டால் போதுமானது. அதை நீங்கள் பிரித்துக்கொள்ளுங்கள், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு எவ்வளவு எடுத்துக்கொள்வது சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டியது எவ்வளவு என்பதை நீங்களே பிரித்துக் கொள்ள வேண்டும். இவ்வளவு ரூபாய் வரி என்று விவசாயிகளிடத்தில் வசூலித்தால் அவர்களுக்குத் தொந்தரவு மிகவும் குறையும். இதை அரசாங்கம் பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தினால் நிச்சயம் பயன் கிடைக்கவில்லை என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும். சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பாக நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இந்த அரசு ஏன் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். 15 ஏக்கருக்கு மேல் ஒருவர் வைத்திருக்கக் கூடாது என்று உச்சவரம்பு வைத்திருக்கிறார்கள். ஆனால் பினாமி டிரான்ஸாக்ஷன் மூலம் அந்த அளவுக்கு மேற்பட்ட நிலங்களை தம்மிடத்திலேயே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டத்தையும் நியாயத்தையும் ஏமாற்றி 200 ஏக்கர் கூட வைத்திருக்கிறார்கள். இவர்களுக்கு அரசு பாதுகாப்புக் கொடுக்கிறது. இந்த அடிப்படைப் பிரச்சினையை உடனடியாக அரசு.....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கிறது என்று சொன்னார்கள். யாருக்கு அப்படிப் பாதுகாப்பு அரசு அளித்திருக்கிறது என்பதை விளக்கினால், அரசு நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: என்னிடத்தில் நூறு ஏக்கரா இருக்கிறது என்றால் 15 ஏக்கரா உச்சவரம்பு என்றால் பாக்கியை பினாமியாக எழுதி வைத்து ஒருவரே சாகுபடி செய்கிற நிலைமையைத் தடுக்க வேண்டும். ஆனால் இன்றைய தினம் அரசாங்கம் சட்டப்படி அவர்களிடம் உள்ள அதிகமான நிலத்தை எடுத்துக் கொள்ள முடியவில்லை. இதன் காரணமாக விவசாயிகள் போய் உழுதால் நிலக்காரர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளிக்காதிருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சட்டப்படி பினாமிதாரர்களை அகற்ற ஏற்பாடு செய்யலாம். ஆனால் சட்டப்படி ஒருவர் நடந்து கொண்டிருந்தால் அதை எடுத்துக் கொள்ள சட்டத்தில் வழியில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் சொல்வதைச் சுருக்கமாகச் சொன்னால் நிலப்பறி இயக்கத்தைத் தடுக்கக்கூடாது என்று சொல்கிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மைதான். இது சமுதாயப் பிரச்சினை. இப்போது எடுத்துக் கொண்டால் பெரிய ஸ்மக்லர்ஸ், ப்ளாக்மார்க்கெட்டியர்ஸ் இருக்கிறார்கள், எப்படித் தடுப்பது? சட்ட பூர்வமாகத் தடுக்க வேண்டும் என்ற நிலையைக் கொண்டாலும் பினாமியாக சட்டப்படி ஆக்கி வைத்துக் கொண்டிருப்பவர்களை எப்படித் தடுப்பது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சட்டத்தை இப்போது யார் கையில் எடுத்துக்கொள்வது என்பதுதான் பிரச்சினை. சட்டத்தை விவசாயிகள் கையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறாரா? அல்லது அரசாங்கமே இன்னும் புரட்சிகரமான சட்டத்தைக் கொண்டுவந்து இந்த பினாமிதாரர்களின் நிலத்தை எடுத்து உழுபவர்களின் கையில்போய்ச் சேரும்படியாகச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரா?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: ஒவ்வொருவரும் சட்டத்தைத் தனித் தனியாக எடுத்துக்கொள்வதை நான் ஆதரிக்கவில்லை. அரசாங்கமே விரிவான புரட்சிகரமான சட்டத்தைக் கொண்டுவந்து இந்த மாதிரியான பினாமிகளைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் புரட்சிகரமான முறையில் கொண்டு வர அரசாங்கம் முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குத்தகைதாரர்கள் பற்றியும் பலமாகப் பேசப்பட்டு வருகிறது. நான் சொந்தமாகச் சாகுபடி செய்கிறவன். சொந்தமாகச் சாகுபடி செய்கிறபோதே எனக்கு மிஞ்சுவது மிகமிகக்





குறைவு. ஆனால் நிலக்காரருக்கு குத்தகை வேறும் அளக்க வேண்டும் என்கிறபோது சாகுபடி செய்கிறவருக்கு ஒன்றும் கிடைக்க வழியில்லை. ஆகவே, அவரால் சரியான முறையில் நிலத்திற்கு உரம் முதலியவைகள் போட வழியில்லை. ஆகவே குத்தகை நிலங்கள் பூராவும் சரியான முறையில் விளைச்சல் இல்லாத நிலைதான் ஏற்படும். அப்படித்தான் இருக்கிறது. ஆகவே நிலக்காரருக்கு காம்பென்சேஷன் கொடுங்கள்—ஆனால் நிலத்தை குத்தகைதாரருக்கே சொந்தமானதாக ஆக்க வேண்டும். கூடுமானவரையில் ஆப்சென்டி லாண்டுலார்டே இல்லாத வகையில் செய்ய வேண்டும். இன்னும் வலிவலம் தேசிகரைப் பற்றி சர்வோதய சங்கத்தினர் விடுத்த அறிக்கையைப் பார்த்திருக்கலாம். அவர் பினாமி குத்தகைதாரர் பெயரைப் போட்டுக் கொண்டு அவரே சாகுபடி செய்து வருவதாகச் சொல்கிறார்கள். இத்தகைய பினாமிகளையும் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மனைக்கட்டுகள் வழங்குவது சம்பந்தமாக அரசாங்கம் ஒரு முயற்சியை எடுத்துக் கொண்டிருப்பதற்குப் பாராட்டுகிறேன். வெகு காலமாக தாங்கள் குடியிருக்கிற நிலம் தங்களுக்குச் சொந்தமில்லாத நிலையில், நிலக்காரர்களுக்கு பல அடிமை வேலைகளைச் செய்து கொண்டு அவர்கள் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அந்த மக்களுக்கு எல்லாம் விமோசனம் ஏற்படுகிற வகையில் தஞ்சை மாவட்டத்தில் அந்த மனைக்கட்டு அவரவர்களுக்கே சொந்தமாக்கப் படுவதை வரவேற்கிறேன். இதை மாநிலம் பூராவுக்கும் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கன்சாலிடேஷன் ஆப் லாண்ட் ஹோல்டிங் என்பது பற்றி நான் பலமுறைகளாகச் சொல்லி வருகிறேன். நிலங்கள் அங்கங்கே துண்டு துண்டாக இருக்கின்றன. அவற்றை எல்லாம் ஒரே இடமாக தொகுத்துக் கொடுத்தால் இப்போது விளைவிப்பதைப்போல மூன்று நான்கு மடங்கு உற்பத்தி செய்யலாம். நிலங்கள் அங்கங்கே துண்டு துண்டாக இருப்பதனால் பலர் நிலத்திற்கே போவதில்லை. பஞ்சாப் போன்ற மாநிலத்தில் முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே நிலங்கள் ஒன்றுபடுத்தப்பட்டு இருப்பதனால் எத்தனையோ நன்மைகள் ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப்போல இங்கும் செய்ய முயற்சிக்க வேண்டும். இது ஒரு பெரிய புரட்சி—மத்திய சர்க்காரிலே இதற்காக மானியத் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் அது செலவழிக்கப்படாமலேயே இருக்கிறது. ஆகவே அதைப் பயன்படுத்தி, நமது மாநிலத்திலும் நிலத்தை மொத்தமாக்க முன்வர வேண்டும். இதுதான் அடிப்படை புரட்சி—பெரிய புரட்சி. நான்கு ஏக்கரா நிலம் நான்கு இடத்தில் இருந்தால் பத்தாயிரம் செலவு செய்து பம்பு செட்டு போட முடியாது. ஆனால் அந்த நான்கு ஏக்கரும் ஒரே இடத்தில் தொகுக்கப்படுமானால், யாரும் துணிந்து பத்தாயிரம் செலவு செய்து பம்புசெட்டு போட்டுவிடுவான்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துண்டு துண்டாக இருக்கும் நிலங்களை ஒன்றாகச் சேர்ப்பதுபற்றிச் சொன்னார்கள். ஓரிடத்தில் ஒருவருக்கு ஒரு ஏக்கரா இருக்கும், இன்னொருவருக்கு 4 ஏக்கரா

இருக்கும், நான்கு ஏக்கராகாரருக்கு தன்னுடைய ஒரு ஏக்கராவை விட இந்தச் சிறுநிலக்காரர் முன்வர வேண்டும். அல்லது நான்கு ஏக்கராக்காரர் ஒரு ஏக்கராகாரரிடத்தில் தன் நிலத்தைவிடத் தயாராய் வரவேண்டும். இன்றுள்ள நிலைமையில் இது சாத்திய மில்லை. அதோடு பஞ்சாப் மாநிலத்தில் முப்பதாண்டுகளுக்கு முன் செய்துவிட்டார்கள். ஆனால் இன்றையதினம் ஒரு குடும்பத்தில் இரண்டு மூன்று பிள்ளை பிறந்து பாகப் பிரிவினை ஏற்படுகிறபோது பலவிதமான சிக்கல்கள் ஏற்பட்டுவருகின்றன என்பதாக பஞ்சாப் மாநில அதிகாரியே இங்கு தெரிவித்த காரணத்தினால், இங்கு அது ஒத்து வராது என்று விடப்பட்டது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இவ்வாறு ஒன்று சேர்க்கப்பட்ட பின் இரண்டு பிள்ளை, மூன்று பிள்ளை என்று பிறந்து, பாகப்பிரிவினை ஏற்படுகிறபோதும் நிலம் உடைந்துபோகாதிருக்க தடை இருக்க வேண்டும். இப்படி நிலத்தை எல்லாம் எப்படி ஒன்று சேர்ப்பது என்பது யோசிக்கப்பட வேண்டும். அதனால்தான் இது பெரிய பிரச்சினை என்று சொன்னேன். இதற்காகத்தான் விவசாயிகள் தாங்களாகவே இப்படி ஒன்று சேர்க்கும் வகையில் தங்கள் தங்கள் நிலங்களைப் பரிவர்த்தனை செய்துகொள்ள முன்வரும்படியாக சில இன்சென்டிவ்கள் கொடுக்கலாம். பிரச்சாரத்தின் மூலம் அப்படிச் செய்து கொள்வது நல்லது என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லலாம். குறிப்பாக, பரிவர்த்தனை செய்து கொள்வதானாலும் நிலத்தின் மதிப்புக்கு ஸ்டாம்ப் ட்யூட்டி கட்ட வேண்டியிருக்கிறது. பரிவர்த்தனை செய்து கொள்வதற்கு இன்சென்டிவ் கொடுத்தால் ஸ்டாம்ப் ட்யூடியிலிருந்து விலக்கு கொடுக்கலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அதனால்தான் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் இந்த மாநிலத்தில்—மூலதனம் போட்டு இறைவைக் கிணறு அமைப்பதே பிரச்சினையாக இருப்பதால் —ஐம்பது ஏக்கரா சுற்றளவுக்கு— விவசாயிகளே ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கொண்டால் கூட்டுறவு இறைவைப் பாசனக் கிணறை ஏற்படுத்திக் கொடுப்பது என்பதாக அரசு முடிவு செய்திருக்கிறது. செங்கல்பட்டு மாவட்ட கிராமத்தில் அப்படிப்பட்ட கூட்டுறவு இறைவைப் பாசனக் கிணறு ஒன்றைத்தான் முதல் அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இதுபோல பல இடங்களிலும் கிணறுகள் ஏற்பட விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துக்கொள்ள மாண்புமிகு உறுப் பினர்கள் பிரச்சாரம் செய்யலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, இந்தப் பரிவர்த்தனை செய்துகொள்வதற்கு இன்சென்டிவ் கொடுத்தால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்து மாதிரி, பத்து, பதினைந்துபேர் சேர்ந்து இரிகேஷன் சொசைடி வைத்துக்கொள்வது நல்லது.



அடுத்தபடியாக, புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்வது. நிலங்களை ஒப்படை செய்யும் வேலை வேகமாக நடக்க வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை போன்ற பகுதிகளில் நில ஒப்படை வேலை வேகமாக நடைபெறவில்லை. அதிகாரிகள் வேகமாகச் செய்ய முற்பட வேண்டும். இன்னும் ஸ்பெஷல் ஸ்டாஃப்களைப் போட்டு, இந்த வேலையை துரிதமாகச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, சாகுபடிக்கேற்ற அநேக நிலங்கள் தரிசாகப் போடப்பட்டிருக்கின்றன. சாகுபடி செய்யாமல் நிலத்தை தரிசாகப் போடுவதை அனுமதிக்கக் கூடாது. அப்படி தரிசாகப் போடுபவர் களைக் கட்டாயப்படுத்தி, சாகுபடி பண்ணச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அந்த நிலங்களை எடுத்து சாகுபடி செய்யக்கூடிய நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுத்துவிட வேண்டும்.

அடுத்தபடியாக, நிலப்படை சம்பந்தமானது. ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம் ஏக்கர் நிலங்கள் இருக்கிற இடங்களில் எஸ்.எஸ்.எல்.சி. பெயில் ஆனவர்களைக் கொண்டு நிலப்படை அமைத்து, அந்த நிலத்தை யந்திரங்களின் உதவியால் பண்படுத்தி பம்ப் செட் மூலமாக சாகுபடிக்கு லாயக்குள்ள நிலமாக மாற்றி, விவசாயம் செய்யலாம். அப்படிச் செய்த பின்னர் ஆளுக்கு 3 ஏக்கர், 5 ஏக்கர் என்ற அளவில் ஒவ்வொருவருக்கும் நிலத்தை அசைன் மென்ட் பண்ணிக் கொடுத்தால், அவர்களுக்கு வேலையில்லாப் பிரச்சினையும் தீர்ந்துவிடும், சாகுபடி செய்வதனால் உணவுப் பிரச்சினை யும் தீர்ந்துவிடும். அப்படி பிரித்துக் கொடுத்த நிலத்தை விற்கக் கூடாது என்ற நிபந்தனை போட வேண்டும். நிலம் கைமாறக் கூடாது. இவைகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டு, உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப் பினர்கள் தங்களுடைய பேச்சை ஐந்து நிமிடங்களுக்கு மேல் நீட்டிக்க வேண்டாமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* திரு. நா. நாச்சியப்பன்: தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியத்தை வரவேற்று, என்னுடைய ஆதரவையும் நன்றியை யும் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய கழக அரசு இதுவரை 3 லட்சத்திற்கு மேற்பட்ட நிலப்பட்டாக்களையும், லட்சக்கணக்கான வீட்டு மனைகளையும் ஏழை மக்களுக்கு வழங்கி, பல நன்மைகளைச் செய்து வருகிறது. நஞ்சை, புஞ்சை நிலங்களுக்கான அடிப்படைத் தீர்வையை நீக்கி, மக்களுக்கு நன்மைகளைச் செய்து வருகின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் தமிழக மக்கள் பாராட்டுகிறார்கள். நானும், என்னுடைய தொகுதியின் சார்பாகப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது ஜமாபந்தி முறை ஒழிக்கப்பட்டு, டெபுடி தாசில்தார் அளவிலே தணிக்கை செய்யப்படுகிறது. ஏற்கெனவே இருந்ததைப் போல கிராம மணியக்காரர் வசூல் செய்கிற ரிகார்டுகளை ஒரே நாளிலே பல கிராமங்களைத் தணிக்கை செய்கின்ற நிலைமைதான்

இருக்கிறது. ஒரு கிராமத்திலே இருக்கிற விவசாயி, படிப்பு இல்லாத காரணத்தால் தன்னுடைய நிலத்திற்கு எவ்வளவு வரி போடப் பட்டிருக்கிறது, எந்த அளவுக்கு தீர்வை கட்டுகிறோம் என்று தெரியாமல் இருக்கிறான். கூட்டுப் பட்டா என்றால் நான்கைந்து பேர்கள் வரி கட்ட வேண்டியிருக்கும். ஒருவரிடத்தில் குறைவாகவும், ஒருவரிடத்தில் அதிகமாகவும் வரி வசூலிக்கின்ற நிலைமைகளும் இருக்கின்றன. விவசாயி கிராம மணியக்காரர் சொல்வதைத்தான் கட்ட வேண்டும். இந்த நிலைமைகள் எல்லாம் மாற்றப்பட வேண்டும். கிராமத்தில் நிலவரி செலுத்துகிற விவசாயிக்கென்று ஒரு தனி லெட்ஜர்—பதிவேடு வைத்துக்கொண்டு, நிலங்களுக்கு எந்த அளவுக்குத் தீர்வை இருக்கிறதென்ற கணக்கையும், விவசாயி கட்டுகின்ற கணக்கையும் காட்டுகின்ற வகையில் பதிவு செய்யப்பட்டு, அவற்றை ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குகளை ஆடிட் செய்வதுபோல, ஆடிட் இலாகாவிலிருந்து வருபவர்கள் தணிக்கை செய்ய வேண்டும் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும். அப்படிச் செய்தால் இப்படிப்பட்ட குறைபாடுகள் எதுவும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஏழை எளிய மக்களுக்கு, விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு "மனுநீதி" திட்டத்தை ஏற்படுத்தினார்கள். இந்தச் சீரிய திட்டம் ஆரம்பத்திலே எந்த வகையில் செயல்பட்டதோ, அந்த அளவில் இல்லாமல் இருக்கிறது. அதிகாரிகள் எல்லாம் சுறுசுறுப்பாக இல்லாமல் மந்தமான நிலையில் இருக்கும் போக்கை மாற்றி, வருடத்திற்கு ஒரு முறை மனுநீதி நாள் என்பதை, ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது அதிகாரிகள் கிராமத்திற்கு வந்து குறைகளைக் கேட்கும்படியாகச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, புறம்போக்கு நிலங்களை ஒதுக்கப்படுகிற நேரத்தில் சில குறைப்பாடுகள் இருக்கின்றன. பட்டா செய்து கொடுத்த பிறகு கிணறு வெட்டுவதற்காக கடன் பெற வகை செய்யப் பட்டிருக்கிறது. சிலர் நிலத்தைப் பெற்றுக்கொண்டு, கிணறு வெட்டுவதற்காக கடனையும் பெற்றுக்கொண்டு, கிணறு வெட்டாமலே போய் விடுகிறார்கள். பிறகு கடன் வாங்கியதற்கு தவணைத் தொகை கட்ட வேண்டியிருக்கிறது. சிலர் பணத்தைப் பெற்றுக்கொண்டு கிணறை வெட்டாமல் ஏமாற்றுகிற நிலைமை இருக்கிறது. அதனால், நாம் கொடுக்கின்ற நிலங்கள் காட்டு நிலங்களாக இருந்தாலும், அந்த நிலங்களை சர்க்காருடைய பொறுப்பிலே புல்டோசர்களை வைத்து சீர்திருத்தி, கிணறுகளை வெட்டி, பம்ப் செட் வைத்து விவசாயிகளிடம் கொடுத்து, பத்து வருடங்களில் அல்லது பதினைந்து வருடங்களில் தவணை முறையில் கூட்டுறவு வங்கியின் மூலம் கடனைத் திரும்ப வசூலிக்கின்ற நிலைமை இருந்தால், சாகுபடி செய்வதற்கு வசதியாக இருக்கும், அவர்களும் கடனை ஏமாற்ற முடியாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, பட்டா வழங்கும் நேரத்தில் கிராம அதிகாரிகளின் தொல்லை அதிகமாக இருக்கிறது. கிராம அதிகாரிகளுக்கு 30 ரூபாய் சம்பளம் என்று இருந்ததை இன்றைய தினம் 70 ரூபாய், 75 ரூபாய் என்ற அளவில் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இருந்தாலும் அவர்கள் மாறியதாகத் தெரியவில்லை. கிராமத்திலுள்ள விவசாயி போய் சிட்டா நகல் வேண்டுமென்று கேட்டாலும், 50 ரூபாயைப் பெற்றுக்கொண்டுதான் அதைக் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் மாற்றுவதற்கு வழி செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு பாஸ் புத்தகம் வைக்கிற முறையைப் பயன்படுத்தினால் மிகவும் நலமாக இருக்கும். என்னுடைய தொகுதியில் மூங்கில்துறைப்பட்டு என்ற இடத்தில் வீடுகள் கட்டுவதற்காக 250 மனைகளை கிராம அதிகாரிகள் அந்த ஏழைகளிடத்தில் 100 ரூபாய், 200 ரூபாய் என்ற அளவில் பெற்றுக்கொண்டு இன்னும் ஜாரி செய்யாமல் இருக்கிறார்கள். இதுபோன்ற குறைபாடுகளையெல்லாம் போக்க வேண்டும். இந்த மாதிரியான குறைகளையெல்லாம் கவனித்து விரைவாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. பி. பொன்சொக்கலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம், வருவாய்த் துறை ஆகிய மானியங்களை ஆதரித்து, பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்ட நிர்வாகப் பணிகள் தென்னார்க்காடு மாவட்டத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல வட்டத்திலும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம மணியக்காரர், கர்ணம் போன்றவர்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுத்தால் மட்டும் சரியாக வேலையைச் செய்கிறார்களா என்று பார்த்தால், ஒரு, சில இடங்களில்தான் நல்ல முறையில் வேலைகளைச் செய்கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையில் உழவுப் பெருங்குடி மக்களுக்கு நல்ல முறையில் ஊக்கம் அளித்திருப்பதைப் பாராட்டுகிறேன். உழவர்களுக்கு ஐ.எம்.எஸ். லோன் வகைகள் அத்தனையும் உரமாகக் கொடுக்கிறார்கள். ஏக்கருக்கு 350 ரூபாய் வீதம் தருகிறார்கள். ஜூலையில் தந்தால் அடுத்த பிப்ரவரியில் பணம் கட்டச் சொல்கிறார்கள். அப்படிக் கட்டத் தவறிவிட்டால் அதற்கும் வட்டியைச் சேர்த்து பெறுகிறார்கள். ஜூன் மாத இறுதிக்குள் கட்டவில்லையானால் அடுத்த ஆண்டு கட்டணத்தையும் அபராதமாக விதிக்கிறார்கள்.

இந்த நிலைமையை மாற்றினால்தான் வருவாய்த்துறை என்பது அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, பொதுமக்களுக்கும் ஏழைகளுக்கும் வருவாய் தேடித் தரக்கூடிய துறையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி. பொன்சொக்கலிங்கம்] [1971 ஜூலை 7

அடுத்து, எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்குத்தான் கர்ணம், மணியம் வேலை இப்பொழுது கொடுக்கப்படுகிறது. எப்படி எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு ஆசிரியர்கள் வேலைக்கு வர வேண்டுமென்ருல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயின்று வருகின்ருர்களோ அதைப்போன்று கர்ணம், மணியம் வேலைக்கு வருகின்றவர்களுக்கென்று ஒரு பயிற்சிப் பள்ளியை ஏற்படுத்தி, அவர்களை நியமிக்க வேண்டும். சில பல இடங்களில் செல்வாக்குப் படைத்தவர்கள் வேலைக்கு வந்துவிடுகின்ற காரணத்தினுல் கிராமங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களை சர்வேயருடன் சென்று அளப்பதற்குக்கூடக் கஷ்டப்படுகிருர்கள், எனவே இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் போக்குவதற்கும் அப்படியொரு பயிற்சிப் பள்ளியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மிகப் பின் தங்கிய மாவட்டம் என்பதை மாண்புமிகு அமைச்சர்கள் அறிவார்கள். மற்ற மாவட்டங்களுக்கு குடிநீர்த் திட்டங்களுக்கு என்று ஏராளமான தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒதுக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். தென் ஆற்காடு மாவட்டத்திலிருந்து கரும்பு மூலமாக அரசுக்கு ஏராளமான வருவாய் கிடைக்கிறது. அப்படி வருவாய் கிடைக்கின்ற ஒரு சில கோடி ரூபாயில் ஒரு பகுதியையாவது ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு வட்டங்களுக்கு ஒரு கோட்டாட்சித் தலைவர் நியமிக்கப் படுகின்ருர். வேலை அதிகமாகியிருக்கிறது. கிராமப்புறங்களுக்குச் சென்று மக்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமை இருப்பதால், ஒரு வட்டத்திற்கு ஒரு கோட்டாட்சித் தலைவர் என்ற முறையில் ஏற்படுத்தித் தரவேண்டும். சிதம்பரம் வட்டத்தில் காட்டுமன்னர்கோயிலில் ஒரு துணைத் தாசில்தார் அலுவலகம் இருக்கிறது. அங்கே தாசில்தார் வைத்து விட்டு துணைத் தாசில்தாரை ஜீப்பைக் கொடுத்து கிராமப்புறங்களுக்கு அனுப்பி மக்களிடம் குறைகளை அவர்கள் கேட்டறிந்து வேண்டியவற்றைச் செய்தால், மனுநீதி நாள் இன்னும் தீவிரமாக நடைபெறுவதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறிய விவசாயிகளுக்கு, சிறு நிலச்சுவான்தார்களுக்கு இந்த மானியத்திலே பாதுகாப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். சிறு நிலவுடைமையாளர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் 4 ஏக்கர், 3 ஏக்கர் என்று நிலம் வைத்திருக்கக்கூடியவர்கள், அவர்கள் குத்தகைதாரர்களிடம் விட்டால் அவர்களுக்குத் திரும்பிச் சேர வேண்டிய பணம் இன்னும் திரும்பி வந்து சேராத நிலைமை எல்லாம் இருக்கிறது. எனவே அவர்கள் பாதுகாப்பு இல்லாமல் இருக் கிருர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்களிடத்திலே இந்த நேரத்திலே நான் மீண்டும் நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தில் வீராணம் ஏரியை அதிகமாக ஆழப்படுத்த வேண்டும். தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் வட்டம் அதிகமாக உணவு உற்பத்தியைப் பெருகிக் கொடுக்கின்ற நிலைமையில் இருக்கின்ற காரணத்தினுலே அங்கே உள்ள ஏரிகள் வீராணம் முதலியவற்றை ஆழப்படுத்தி, சீர்படுத்தி, செம்மைப்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1971 ஜூலை 7] [திரு. பி. பொன்சொக்கலிங்கம்]

விவசாயிகளுக்குப் பாஸ் புத்தகம் கொடுப்பதுபோல்—எனக்கு முன்னுலே பேசிய உறுப்பினர் எடுத்துத் தெரிவித்ததைப்போன்று—நிலவுடைமையாளர்களுக்கு பாஸ் புக் கொடுத்து விட்டால் அவர்கள் லோன் வாங்கிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும், அதோடு லோன் வாங்கக்கூடிய விவரங்களையும் எங்கே வாங்குவது எப்படி வாங்குவது என்ற வழிகளையும் அதிலே குறித்து விட்டால் மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்ருல் 350 ரூபாய் ஐ.எம்.எஸ். லோன் வாங்குகிருர் என்ருல், அதிலே 150 ரூபாய்க்கு உரம் வாங்கிவிட்டு மீதம் உள்ள 200 ரூபாயில் 20 ரூபாயைத் தள்ளிவிட்டு 180 ரூபாய்க்கான உரத்தை வாங்கிக்கொள்கிருர்கள், சில சொஸைடிகளிலே நல்ல தரமான உரம் இல்லாததால், வேறு இடங்களுக்குச் சென்று வாங்கவேண்டிய கஷ்டம் இருக்கிறது. இந்த நிலைமைகளையெல்லாம் போக்குவதற்கு சிறு நிலச்சுவான்தார் களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். என்னை எடுத்துக்கொண் டாலும் கூட, 1,200 ரூபாய் என்று நான் உரத்திற்கு வாங்கினேன். ஒரு ஆண்டில் 300 ரூபாய் அதிகப்படியாக நான் வட்டித் தொகையைக் கட்டி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய வருவாய்த் துறை 1967-ஆம் ஆண்டிற்குப் பிறகு மிக சிறப்புமிக்க மாறுதலை மேற்கொண்டிருக்கிறது. புஞ்சைக்கு வரி ரத்து, இப்பொழுது நஞ்சைக்கும் வரியை ரத்துச் செய்கின்ற நிலைமையில் கழக அரசு விவசாயிகளின்பால் கொண்டுள்ள அன்பின் காரணமாக நல்ல பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது, அதற்காக நான் நம்முடைய அரசைப் பாராட்டுகிறேன். அதிகாரிகளைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சித் தலைவர், வட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்களின் முன்பு இருந்த நிலைமையையும் இன்றைக்கு இருக்கின்ற நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் புரியும். முன்பெல்லாம் வட்ட ஆட்சித் தலைவரைப் பார்க்க வேண்டுமென்று சொன்னுல் ஒரு பிரமுகரை அல்லது செல்வந்தரை அழைத்துக்கொண்டு போகவேண்டிய நிலை இருந்தது. இன்றைக்கு ஏழை எளிய மக்கள் உடனுக்குடன் அதிகாரிகளைச் சந்தித்துக் குறைகளைச் சொல்லலாம் என்ற நிலையை ஏற்படுத்தியுள்ள கலைஞரின் அரசை எவ்வளவு பாராட்டினுலும் தகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனு நீதித் திட்டம் தோன்றிய பிறகு பல நல்ல காரியங்கள் சிறப்பாக நடந்திருக்கின்றன. நிலங்கள் சப் டிவிஷன் போன்ற

காரியங்கள் எல்லாம் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் நடைபெறுமல் இருந்தவையெல்லாம் செய்யப்பட்டு இருக்கிறது. அதைத் தவிர நிலமில்லாத ஏழைகளுக்கு லேன்ட் அசைன்மெண்ட் செய்யப்பட்டிருக் கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வேலைப் பளு அதிகமாக இருக் கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் டவுன்ஷிப் அதாவது நகரியங் களின் கூட்டங்களுக்கும் தலைமை வகிக்க வேண்டியவராக இருக் கிருர். வேலைப் பளு காரணமாக அவர் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. என்னுடைய இராமேஸ்வரம் பகுதியிலே கடந்த ஆண்டிலே ஒரே ஒரு நகரியக் கூட்டம்தான் நடந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் இந்தச் சபைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நகரியங் களின் கூட்டத்திற்குத் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பதை மாற்றி, கோட்டாட்சித் தலைவரே நடத்தலாம் என்று போட்டுவிட்டால் அடிக்கடி கூட்டங்கள் நடத்தப்பட்டு, மக்களுக்கு நன்மைகள் விரைவாகக் கிடைக்க வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் பண்ணைத் தொழிலாளர் குடியிருப்புச் சட்டத்தைக் கொண்டுவந்ததற்காக நான் நம்முடைய அரசைப் பாராட்டுகிறேன். என்னுடைய இராமநாதபுரம் பகுதியிலே குளங் கோர்வைப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அங்குள்ள வர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னுல் இருந்து பட்டாக்களை வைத் திருந்தாலும்கூட சில சூழ்நிலைகளின் காரணமாக அவர்களுடைய நிலங்களையெல்லாம் குளங்கோர்வைப் பகுதிகள் என்று நிகுதி செய்து பட்டாக்கள் ரத்து செய்யப்பட்டன. அதற்கும் மேலாக தண்டத் தீர்வையும் விதிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது அந்த நிலை மாறி தண்டத் தீர்வை ரத்து செய்யப்பட்டது. நம்முடைய அரசு அவர் களுக்குப் பட்டா அளிக்கின்ற அளவுக்கு முன்னேற்றத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பகுதியிலே மட்டும் உள்ள தனிப் பிரச்சினையாக அது இருக்கிறபடியால் அரசு தனி கவனம் செலுத்தி, அங்குள்ள குளங்கோர்வை விவசாயிகளுக்கு பட்டா கொடுக்கப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மனுநீதி நாள் திட்டத்தைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கொண்டுவர வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். சட்ட மன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற கோரிக்கைகளை அதிகாரிகள் உடனுக்குடன் கவனித்து ஆவன செய்வதற்கு இது வழிவகுக்கும். அதோடு கோரிக்கைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டது என்ற எண்ணம் எங்களுக்கும் இருக்கும். எங்களுடைய கோரிக்கைகளை அதிகாரிகளும் கவனத்துடன் செய்வார்கள் என்ற கருத்தையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இராமனுதபுரம் மாவட்டத்திற்கு 2 கோடி ரூபாய்க்குத் திட்டம் என்ற அளவில் திட்டம் தீட்டி, ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வந்தது. ஆனுல் அந்தத் திட்டத்தில் ஏற்பட்ட வெட்டுக்களின் காரணமாக 2 கோடியே 96 லட்சம் ரூபாய் என்று திட்டம் தீட்டப் பட்டு வேலைகள் நடந்துகொண்டிருந்தன. ஆனுல் திடீரென்று



அநேக வேலைகளை ரத்து செய்யும் சூழ்நிலை இருக்கிறது. அதற்கு மேலாக இதுவரை வேலை பார்த்து வந்த ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் சரிவர அளிக்காத சூழ்நிலை இருக்கிறது. இதையெல்லாம் உடனடியாக கவனித்து ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் அளித்து, வேலைகளைத் துரிதமாக நடத்த அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இராமனுதபுரம் தொகுதி யைப் பொறுத்தவரையில் 3 ஒன்றியங்கள் இருக்கின்றன, அதில் ஒன்றில்கூட சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஒரு ஏற்பாடு கூட செய்யப்படவில்லை என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பொதுவாக ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கு ஊதியம் தருவதுபற்றி என்னுடைய கருத்துக்களை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஓய்வு பெற்ற அதிகாரிகள் தாங்கள் ஓய்வு பெற்ற இரண்டு மாதங்களுக்குள்ளாக அவர்களது ஓய்வூதியத்தை அவர்கள் பெற வேண்டுமென்ற நிலையை நம்முடைய உயர்மட்ட அதிகாரிகளுடைய ஆலோசனைகளைப் பெற்று, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அதை, செய்து, உடனடியாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. தங்கமணி அவர்கள் இராமனுதபுரம் மாவட்டத்தின் தலைநகரம் இராமநாதபுரம் மாவட்டத்தில் மத்தியில் உள்ள ஒரு இடத்தில் இருக்க வேண்டு மென்ற கோரிக்கையைக் கொடுத்துள்ளார்கள். டெல்லி இந்தியா வின் மத்தியில் இல்லை என்பதை உணர்வோம், அதுபோன்றே தமிழகத்தின் தலைநகரம் தமிழகத்தின் மத்தியில் இல்லை என்ற நிலையை யும் உணர்கிருேம். ஆகவே, மத்தியில் இருக்க வேண்டும் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல் இராமனுதபுரத்தின் சிறப்புகளைக் கருத்திற்கொண்டு இராமனுதபுரம் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் கள் அத்தனைபேர்களையும் கலந்து, இராமனுதபுரம் மாவட்டத்தின் தலைநகரமாக இராமனுதபுரமாகவே இருக்கும் அளவிற்கு அரசு செயல்படும் என்று உறுதியாக எண்ணி, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த உதவித் தலைவரவர்களுக்கு நன்றிகூறி விடை பெறுகிறேன்.

திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர் களே, வருவாய்த்துறை மானியத்தை வரவேற்றுப் பேசுகின்ற நேரத்தில் இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இங்கே பாலில் சர்க்கரையைப் போட்டுக் கொடுத்ததைப்போல, புஞ்சைக்கு வரிவிலக்கு பூரணமாக அளிக்கப்பட்டிருக்கிற நேரத்தில் சர்க்கரை போட்டதுபோல நஞ்சைக்கு 5 ஏக்கருக்கு வரி இல்லை என்பதை விவசாயப் பெருங்குடி மக்கள், அதிலும் சிறிய விவசாயப் பெருங்குடி மக்கள் வரவேற்கக்கூடிய திட்டம் என்பதால் நான் மனப் பூர்வமாக வரவேற்கிறேன்.

அதே நேரத்திலே இன்னும் பாலோடு பழமும் சேர்த்துத் தர வேண்டுமென்ற முறையிலே இப்படிப்பட்ட நில வரிகளின்மூலம் 1 கோடியே சொச்ச ரூபாய் வருவதாகச் சொல்கிருர்கள். ஆகவே இந்த அரசுக்கு நல்ல பெயர் ஏற்பட வேண்டுமென்று கருதுகிற

[திரு. கே. எ. வகாப்] [1971 ஜூலை 7

காரணத்தால், அந்தச் சிறிய தொகையைக் கருதாமல் நஞ்சை நிலம் அத்தனைக்குமே வரி இல்லை என்று எதிர்காலத்திலே திட்டத்தை அரசு அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மனுநீதி நாளைப்பற்றிக் குறிப்பிடும் நேரத்தில் அதனால் பல்லாண்டுகளாக இருந்த குறைகள் களையப்பட்டன. அதேபோல் ஜமாபந்தி முறையும். அதை ரத்து செய்ய வேண்டுமென்று பலர் பேசும்பொழுது கூறினார்கள். என்னைக் கேட்டால் அது நிச்சயமாக ஏழை விவசாயிகளுக்கெல்லாம் பயன்தரத்தக்க நல்லமுறை. அவர்கள் வருஷத்திற்கு ஒரு முறையாவது பெரிய அதிகாரிகளைச் சந்தித்துத் தங்களுடைய ஊர்களிலேயுள்ள குறைகளைச் சொல்ல நல்ல வாய்ப்பு இருப்பதால் அதை ரத்து செய்யக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு அதிகாரிகளைப் பொறுத்தவரையில் இன்று கிராம அதிகாரிகளுக்கு இன்னும் நல்ல உயர்ந்த அந்தஸ்துகளை அளிக்க வேண்டும். அவர்கள்தான் அடிப்படையான கடைக்கால் போன்றிருப்பவர்கள். எனவே அவர்களை முழுநேர ஊழியர்களாகச் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாலுக்காபீஸ்களில் அதிக வேலைகள் குவிந்திருப்பதால் அங்கே இரவு பகலாக வேலை செய்யும் நிலையில் அலுவலர்கள் இருக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். அதையெல்லாம் சீர்திருத்துகின்ற முறையில் மாண்புமிகு கலைஞர் அவர்கள் கூறியதைப்போல, வெற்றி முகட்டிற்கு விரைந்தோடிட, பந்தயக் குதிரை வேகத்தில் போய்க் கொண்டிருக்கும் இந்த அரசு சென்று கொண்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். இந்த அரசு அப்படிச் செல்கிறது, அதைப் போல வருவாய்த்துறையை ஏற்றிருக்கும் அமைச்சரவர்களும் சுறுசுறுப்பும், நல்ல திறமையும் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அந்தச் சுறுசுறுப்பு என்பது சென்ற ஆண்டு எப்படியிருந்தாலும், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அரசாங்கத்தின் வேலைகள் சிகப்பு நாடா முறையிலே நடந்து கொண்டிருந்தன. உதாரணமாக தெனாலிராமனின் குதிரையை ஒப்பிடலாம். முன்னேயிருந்து இரண்டு பேர் இழுக்க, பின்னே நான்குபேர் தள்ள, என்னே விசாரம் மாதம் போம் காதவழி என்ற முறையில் நடந்து கொண்டிருந்தது. இன்று ஓரளவு பந்தயக் குதிரை அளவில் இல்லையென்றாலும் இராணுவக் குதிரை என்ற அளவிற்குச் சொல்லலாம். எதிர்காலத்தில் அது பந்தயக் குதிரை அளவிற்குச் செல்லும் என்று நம்புகிறேன்.

அதிகாரிகள் உற்சாகமாக வேலை செய்ய அவர்களது இரகசியக் குறிப்பு முறைகளை எடுத்துவிட்டால், நல்லமுறையிலே செயல்பட முடியும். அதை அரசு நன்றாக ஆலோசிக்க வேண்டும். அப்படிச் செய்தால் அலுவலர்களுக்கு நல்ல உற்சாகமூட்டும் முறையாக இருக்கும், வேலை சுணங்காமல், சிக்கல் இல்லாமல், தயங்காமல் நடக்கும் நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி அதன்மூலம் சிறு விவசாயிகளுக்கு நிலங்கள் தரும் ஒரு திட்டத்தை இந்த அரசு ஏற்படுத்தியிருப்பதை உண்மையிலே சிறு விவசாயிகள்



1971 ஜூலை 7] [திரு. கே. எ. வகாப்]

மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுத் துறை என்றாலே முன்பெல்லாம், இங்கே பேசிய மதிப்பிற்குரிய திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒருமுறை சொன்னார்கள், கூட்டுறவு என்றால் கூட்டு மோசடி என்று சொன்னார்கள், அது உண்மைதான், ஆனால் இப்போது அல்ல, 1967-ம் ஆண்டுக்கு முன்பிருந்தது என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கருதுகிறேன். கூட்டுறவுத் துறையில் எல்லாமே நல்ல முறையில் நடக்கிற நேரத்தில் விவசாயிகள் கூட்டுறவு முறையில் இருப்பதால் அவர்களுடைய பொருளாதார வளர்ச்சி நல்ல முறையிலே வளர்ச்சி அடைய வாய்ப்பிருக்கிறது.

நீர் பாசன கூட்டுறவு இன்னும் பல மாவட்டங்களுக்கு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். குறிப்பாக வறட்சியாக உள்ள வடார்க்காடு மாவட்டத்திற்கு, திரு. துரைமுருகன் அவர்கள் நேற்று பேசியபோது சவால்விட்டுக்கூடச் சொன்னார்கள். அந்த அளவிற்கு நான் சொல்லவில்லை, ஆனால் வறட்சி உண்மையிலேயே இருக்கிறது, அதைப் பரிசீலனை செய்து நீர்ப்பாசனக் கூட்டுறவுத் திட்டத்தை வடார்க்காடு மாவட்டத்திற்கும், வறட்சியாக இருக்கும் மற்ற மாவட்டங்களுக்கும் இதை நல்ல முறையிலே அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்து கொள்கிறேன்.

* திரு. பி. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறேன் என்ற தத்துவக் கருத்தும், ஜனநாயக சோஷலிசத்தைக் கோடிட்டுக் காட்டும் நம்முடைய முதலமைச்சரின் ஆட்சித் திறனும் இந்த ஏழைச் சமுதாயத்தின் முன்னேற்றத்தில், நம்முடைய முதலமைச்சருக்குள்ள ஆர்வத்தினைப் போற்றத்தக்க முறையில் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. இந்த வருவாய்த்துறை மானியக் கோரிக்கையை நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும், இந்த அரசின் சாதனைகளை எடுத்துக் காட்டும் வகையில் உருவாக்கியுள்ளார்கள். இந்த நிலவரி மானியக் கோரிக்கையை ஆதரித்து வரவேற்று, என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்கிறேன்.

நிலவரித் துறை, மாநில நிர்வாகத்தில் அச்சாணி போன்று விளங்குகிறது. நிதி வழங்கு வாயில் என்றும் அழைக்கப்பட்டது. வெள்ளம், சூறாவளி, கடுமையான வறட்சி போன்ற நெருக்கடி நிலைகளை உடனடியாகவும், திறம்படவும் சமாளித்து நெருக்கடியை நீக்குவது நிலவரித் துறையாகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இத்துறையின் கண் எண்ணற்ற மாற்றங்கள், ஏற்றத் தாழ்வுகளைச் சமுதாயத்தில் குறைக்கவும், எளிய மக்கள் வாழ்வு மலரவும், செய்யப்பட்டிருக்கின்றது நமது அரசால். ஆகவே, அதற்காகப் பெருமைப்படுகிறோம்.

இந்த அரசு முக்கியமாக 1967-ல் பதவியேற்ற சிறிது காலத்தில் புன்செய் நிலவரி நீக்கம் குறிப்பிடத்தக்கது. சிறிய விவசாயிகட்கும் இதன் பலன் கிட்டும்படி அமைந்தது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மனமகிழ்ச்சி தருகிறது. இதை விவசாயப் பெருங்குடி மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

[திரு. பி. கோபால்] [1971 ஜூலை 7

மேலும், ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த அளவுள்ள நன்செய் நில உடைமைகள் மீதான மொத்த நன்செய்த் தீர்வையில் நிலவரிப் பகுதியை மட்டும் நீக்கியிருப்பது அடுத்ததொரு மகிழ்ச்சி யான செய்தி. அது போன்ற மகிழ்ச்சியான செயல் நமது தமிழ் நாட்டிலே இதுவரையில் ஏற்பட்டதில்லை என்பதை நினைத்து நாம் பெருமைப்பட வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள வட்டத் தலைமையிடங்கள் அனைத்தையும் ஆறு திங்களுக்கு ஒரு முறை யேனும் சுற்றிப் பார்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. மாவட்ட மக்கள் குறைகளைக் கண்டு கேட்டு, . காலதாமதமின்றி நடத்த நல்வழி ஏற்படுகிறது. இதற்காக அரசின் சாதனையை நாம் போற்றாமல் இருக்க முடியாது.

இதனினும் சிறப்பான மனுநீதித் திட்டம் இன்னும் சாலச் சிறந்தது, கவர்ச்சியாக உள்ளது. இந்த ஆண்டும், இதை நீடித்திருப் பதை அறிந்து நமது சர்க்காரை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறோம்.

கடந்த ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டத்தில் ஜமாபந்தி முறை நீக்கப்பட்டது. இதற்காக சிறப்புத் துணைத் தாசில் தார்கள் நியமிக்கப்பட இருப்பது அரசின் புரட்சித் திட்டங்களில் முன்னோடித் திட்டமாகும்.

பரம்பரை கிராம அதிகாரிகள் சட்டம் ரத்து செய்யப்பட்டிருப் பதால் பரம்பரை உரிமை முறைக்கு முற்றுப்புள்ளி இடப்பட்டுள்ளது இது அரசின் சமுதாய சீர்திருத்த நோக்கினைக் கோடிட்டுக் காட்டும் பாங்கினைத் தெளிவுபடக் காட்டுகின்றது.

கிராம அதிகாரிகளின் ஊதிய உயர்வு கோரிக்கைக்குச் செவி மடுத்து, செயல்படுத்த சம்பள ஆணைக்குழுவின் பரிவுரை ஏற்று, கிராம மணியக்காரருக்கு ரூ. 51-ல் இருந்து ரூ. 70 வரையும், கணக்குப் பிள்ளைக்கு ரூ. 53-ல் இருந்து ரூ. 72 வரையும், தலையாரி வெட்டியான் போன்றோருக்கு ரூ. 45-ல் இருந்து ரூ. 60 வரையும் உயர்த்தி, முறை யாகக் கேட்போருக்கு முறை செய்யும் அரசின் திறம் வியந்து போற்றுகிறேன்.

சமதர்ம சமுதாயம் உருவாக்கும் உயர்ந்த பணியில் ஈடுபாடு கொண்டுள்ள நமது கழக அரசு, உழைப்புக்கு உயர்வு தரும் வகையில் உழைக்கும் உழவர்க்கு குத்தகை உரிமை முறையை நன்கு சீர்மைப் படுத்தியும், பெரிய நிலக்கிழார்களிடம் நிலங்கள் குவிந்திருப்பதைப் போக்கியும் உள்ளது, உண்மையில் உவகைப் பெருக்கை ஏற்படுத்தி யுள்ளது.

சொந்த வீடற்ற, வாடகை வீட்டுக்காரார்களுக்கு வகை செய்யும் பொருட்டு, வழி வகுப்ப, அனுபோக உரிமையை அதிகப்படுத்தி யுள்ளது. இது வாடகை வீட்டில் வாழும் வசதியற்றவர்கட்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும்.



1971 ஜூலை 7] [திரு. பி. கோபால்]

குத்தகை உரிமைப் பதிவேடுகள் சட்டத்தை 1969-ம் ஆண்டு கொண்டு வந்து தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங் களில் செயல்படுத்தப்பட்டு வருவது சிறப்பான முறையாகும். இத் திட்டத்தை விரைவாக மற்ற மாவட்டங்களுக்கு நீட்டித்தால், நீள் மூச்சுவிடும் குத்தகைகாரர்களுக்கு நிலவொளி நடைபோல் நிம்மதி கிடைக்கும். அவ்வப்போது வறட்சியின் காரணமாக வளமிழந்த காலங்களில், வளமிழந்த மக்களுக்கு வாழ்வளிக்கும் வகையில் வறட்சித் துயர் தணிப்புத் தொகை தந்து, வாழ்வு கொடுக்கிறது இந்த அரசு. இதற்காக 1971 ஜனவரி முதல் மொத்தம் ரூ. 61.75 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதற்காகப் போற்றத் தலைப்படுகிறோம்.

சிறப்பு கிராமப்புறப் பணித் திட்டத்தை மத்திய அரசு ஏற்று நடத்துவதுபோல், மாநில அரசும் மாவட்ட வாரியாகத் துவக்கினால் அவ்வப்பகுதிகளில் சீரான சாலைகள் இன்னும் சீர்பெறும். சீரற்ற நீர் வழங்குக் கால்வாய்களில் தூர் எடுக்கப்படும். ஏரி, குளங்கள் சீர்பெறும். சிறுபாசனம் சிறப்புப் பெறும், காடு வளர்க்கப்படும், நாடு வளம் பெறும்.

நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் ஒதுக்கித் தருவதற்காக 1969–70-ல் 1,55,813 ஏக்கரும், பட்டாக்களின் எண்ணிக்கை 71,783-ம், 1970–71-ல் 1,73,558 ஏக்கரும் வழங்க சர்க்கார் திட்டம் வகுத்துள்ளது. இது போன்று பாமர மக்களுக்கு வீட்டு மனை வழங்கும் பொருட்டு 1971 மார்ச்சு வரை 2,32,131 நில வெளவுதல்கள் வீட்டுமனை வடிவில் வழங்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் ஏழை எளியவர்களின் ஏற்றத்தையே முதன்மையாக எண்ணும் அரசின் பெருநோக்கைப் பெரிதுபடுத்திக் காட்டி, நம்மைப் பெருமை கொள்ளச் செய்கிறது.

நகர்ப்புற மக்களுக்கும் நல்லது செய்யும் பொருட்டு உத்தேச வரி விலக்கு செய்தது. இதனால் சென்னை நகரவாசிகள்தான் பயன் பெறுகின்றனர். இதையே கோவை, திருச்சி, சேலம், மதுரை போன்று மற்ற நகரவாசிகளும் நன்மை அடையும்படி விரைவில் விரிவுபடுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

நிலத்தின் வகையைப் பொறுத்து, வருமான வரி விதிக்கும் நிலை போன்று எத்தனையோ சிறப்புக்களை சீர்மைப்படுத்தி, நிலச் சீர்திருத்தச் சட்டம் இயற்றியும் பல சாதனைகளைச் செய்த இந்த அரசுக்கு விவசாயப் பெருங்குடி மக்களும், ஏனைய மக்களும் கடமைப் பட்டிருக்கிறார்கள். இந்த அரசைப் போன்று க்ஷேமநல சர்க்கார் வேறு இல்லை என்ற அளவுக்கு பொதுமக்களுடைய நன்மைக்காகவே காரியங்களைச் செய்துள்ளது என்று கூறி, இந்த வருவாய்த் துறை மானியத்திற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்து, மேலும் பல நல்ல செயல்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மணியக்காரர்கள் பிரச்சினையில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எம். கோபால்: தலைவர் அவர்களே, இன்று வருவாய்த் துறை மானியத்தின்மீது பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு

[திரு. எம். கோபால்] [1971 ஜூலை 7

நன்றி தெரிவித்துக் கொண்டு ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு 1967-க்குப் பிறகு வருவாய்த் துறையினை சீரும் சிறப்புமாக அமைத் திருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்ல ஆசைப்படுகிறேன். அது தனியாக இயங்கி வந்த ஒரு இயக்கமாகும். அதை மக்கள் மத்தியில் தொடர்பு கொள்ளச் செய்தது நம்முடைய மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள். பிறகு கலைஞர் பெருந்தகை அவர்கள் அதை விரிவுபடுத்தி, மக்களோடு தொடர்பு கொள்ளச் செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு செய்து வந்தார்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய நாட்டில் மிகப் பெரிய வறட்சி ஏற்பட்டது. அதிலே தமிழ் நாட்டில் ஒருவர் கூடச் சாகாத அளவுக்கு கலைஞர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி திட்டமிட்டு, ஆங்காங்கு உள்ள எல்லா மக்களுக்கும் வேலை வாய்ப்பு, அளிக்கும் வகையிலும், வறட்சியைப் போக்கும் வகையிலும் ஏரிகள், குளங்களை வெட்டத் திட்டமிட்டு மக்களை அந்த வறட்சிப் பிணியில் இருந்து தப்ப வைத்தார்கள். அந்தச் சமயத்தில் வருவாய்த் துறைச் செயலாளரும், மற்ற அதிகாரிகளும் நல்ல முறை யில் செயல்பட்டார்கள். நம்முடைய மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு மனுநீதித் திட்டம் என்று ஏற்படுத்தி அதன் மூலம் ஒரு நாள் மக்களோடு தொடர்பு கொண்டு மக்களுடைய குறைகள் உடனுக்குடன் நீக்கப்பட்டு வருகின்றன. அதன் மூலம் மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்பதை அறிந்ததன் விளைவாகத் தான் இன்றையதினம் புஞ்சை, நஞ்சை நிலங்களுக்கு அடிப்படைத் தீர்வை ரத்து செய்யப்பட்டது மட்டுமல்லாமல், ஏழை எளிய மக்களுக்கு லட்சக் கணக்கில் பட்டா கொடுக்கப் பட்டிருக்கிறது.

இன்று கணக்குப் பிள்ளைகளுக்கு நல்ல ஊதியம் கொடுக்கப் படுகிறது. கணக்குப் பிள்ளைகளும், மணியக்காரரும் அந்தந்தப் பஞ்சாயத்துக்களுக்கு வரி வசூலைச் செய்ய மறுக்கிறார்கள். ஜட்ஜ் எல்லோருக்கும் மேலதிகாரி, தாங்கள் கடைசி அதிகாரி என்று கிராம முன்சீப்புகள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பஞ்சாயத்து வரிகளை வசூலிக்கக் கூடாது என்று இருக்கிறார்கள். இன்று பல ஆயிரக் கணக்கான வாலிபர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு சும்மா வேலை இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது ஏற்கனவே மணியக்காரர்களாக இருக்கக் கூடியவர்கள் 50 வயது, 60 வயது 70 வயது என்ற அளவிலே இருந்து கொண்டிருக் கிறார்கள். அவர்களை எல்லாம் ஓய்வு பெறச் செய்து படித்த இளைஞர் களைப் போட்டால் கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் 50,000 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். படித்தவர்கள் வேலை இல்லாமல் இன்று சும்மா இருக்கிறார்கள். இவர்கள் அடங்கலைக் கையில் வைத்துக் கொண்டு அக்கிரமம் செய்து வருகிறார்கள். பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னால், இது மேய்கால் புறம் போக்கு, இது தண்ணீர் புறம்போக்கு என்று சாக்குப் போக்குச் சொல்லுகிறார்கள். இவர்களால் மக்களுக்கு அரசு செய்யக்கூடிய தொண்டு வீணாகிறது.



1971 ஜூலை 7] [திரு. எம். கோபால்]

சென்னையிலிருந்து 20 மைல் சுற்றளவுக்கு மேல்தான் பட்டா கொடுக்க வேண்டும். அதற்குள் கொடுக்கக் கூடாது என்ற விதி இருக்கிறது. என்னுடைய தொகுதியான அம்பத்தூர், ஆவடி சென்னையை ஒட்டியுள்ளது. அங்கு பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் இருக்கும் சிறு நிலத்திற்குப் பட்டா கேட்டால் சட்டப்படி கொடுக்க முடிவதில்லை. அவர்களுக்குப் பட்டா கொடுத்தால் அந்த நிலத்தில் சிறு சிறு வீடுகள் கட்டிக் கொஞ்சம் சவுகரியமாக வாழ முடியும். ஆகவே, இந்தச் சட்டத்தைக் கொஞ்சம் தளர்த்தி அந்த மக்களுக்குப் பட்டா வழங்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய சர்க்கார் வந்த பிறகு தான் ஆங்காங்கு உள்ள ஹரிஜன மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் நஞ்சை புஞ்சை நிலங்களைப் பட்டா செய்து கொடுத்து வருகிறது. ஆனால், அரசு கொடுக்கச் சொல்லி உத்தரவு போட்டாலும், அங்கே உள்ள கிராம அதிகாரிகள் அதை அவர் களுக்கு மாற்றித் தர மறுக்கிறார்கள். கிராமத்திலுள்ள மக்கள் இந்த அரசு ஏழை எளிய மக்களுக்குச் செய்யும் திட்டங்களை நன்கு உணர்ந்து இருக்கிறார்கள். இப்படி ஏழைகளுக்குச் செய்யும் காரியங்கள் நல்ல முறையில் இருக்க வேண்டுமானால், கீழே இருக்கும் அதிகாரிகள் சரிவர வேலை செய்ய வேண்டும்.

இந்தக் கணக்குப்பிள்ளைகளையும், மணியக்காரர்களையும் மாற்றி யமைத்தால் தான் நிலைமை சரி வர வரும். அரசின் பட்டா வழங்கும் திட்டமும் நல்ல முறையில் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பட்டா தரும் திட்டத்தை கணக்குப்பிள்ளை மணியக்காரர்கள் தான் கெடுத்து விடுகிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு எங்கும் பட்டா வழங்கவில்லை. உழவு நிலங்களைக் கூட, விவசாயம் செய்யும் நிலங்களைக் கூட இன்னும் பட்டா செய்து கொடுக்கவில்லை. தண்டத் தீர்வை வாங்குகிறார்கள். இதற்கெல்லாம் காரணம், முட்டுக்கட்டையாக இருப்பது; கணக்குப்பிள்ளை, மணியக் காரர்கள் தான்.

எனக்கு முன்னால் பேசிய நண்பர் தெளிவாகச் சொன்னது போல், ஒரு பயிற்சி மாதிரி தந்து அந்த கணக்குப் பிள்ளைகளை, மணியக்காரர் களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு என்று ஒரு பயிற்சி முகாம் அமைத்து, அதிலே படித்தவர்களுக்கு இந்தக் கணக்குப்பிள்ளை, மணியக்காரர் பயிற்சி கொடுக்கலாம். கிராமத்தில் வரி வசூல் சௌகர்யமாக நடக்கும். பஞ்சாயத்து போர்டுகளில் வரி வசூல் செய்யப்படவில்லை. அதனால் பஞ்சாயத் துக்கள் மின்சாரக் கட்டணம் கட்ட முடியவில்லை. அதனால்தான் படித்த வாலிபர்களை அமர்த்தக் கேட்டுக் கொள்ளுகிறேன். தவிர, இன்றைய அரசில், 183 சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்து எடுக்கப் பட்டோம் என்றால், அதற்குக் காரணம், ஏழை எளிய மக்களுக்கு இந்த வாரியம் செய்த நன்மைகள்தான், அதை யாரும் மறக்க முடியாது. சில கிராமங்களுக்கு மின்சார வசதி இல்லை. அதை செய்து தரவேண்டும். இந்த வருவாய்த்துறை மான்யத்தை ஆதரித்து, உளமாற, மனமாற போற்றி வரவேற்கிறேன். வணக்கம்.

[1971 ஜூலை 7

Dr. H. V. HANDE : Hon. Deputy Speaker, Sir, in support of the cut motons moved on behalf of our Party, I wish to offer a few remarks.

Sir, I would like particularly to stress one aspect of the matter, namely, the Tenancy Act. In this House sometime ago we passed the Record of Tenancy Rights Act. The purpose of the Act is to record properly the names of persons who actually cultivate as tenants and the extent of lands cultivated by them so that it can be of some help to the cultivating tenants. But in the report submitted by the Director in charge of the record of tenancy rights—we came across an extract of the report published in the press and I do not know whether it has reached the Government—he made some observations after going through the whole problem very carefully and after having discussion with the small tenants. The sum and substance of the report is that the Record of Tenancy Rights Act has not done substantial good to the tenants to the extent anticipated and it has not encouraged a large number of tenants to come forward and record the extent of lands they are cultivating. In other words, the response which we expected from the tenants is not commensurate with the plans and the amount of expenditure we alloted for that purpose, namely about Rs. 27 lakhs. The response from them has been poor.

There is also another pertinent point mentioned in that report. The point is that a number of tenants have holdings of less than 5 acres, say two acres, one acre and even half an acre and that means that the tenants who are cultivating these lands do not get any substantial income which is enough to look after their basic needs. According to our calculation, at least a sum of Rs. 100 or 150 is absolutely necessary even to keep body and soul together. But as pointed out by my hon. Friend, Thiru Marimuthu, the holdings in Tamil Nadu in particular and in other parts of the country in general, are becoming smaller and smaller and they have become non-viable units. In other words, even to produce certain quantity of paddy, we require at least a minimum holding. Let us forget party politics or ideologies and let us discuss it from the point of production itself.

We have brought land ceiling and fixed the maximum holdings. As a result of it, the lands have been parcelled out as five acres, two acres and even half an acre and it is a difficult matter and it causes as much concern to the Government a sto the members of the Opposition Parties. Now we must see how exactly we can have optimum production and production is not affected and that is a very vital point which we should consider. In the report it is also mentioned that it would be better to have a completely different agency which would really assist in producing more foodgrains and also assess the farmers' and the tenants' needs. We are all concerned with the increased production and we are also trying to import tractors to increase production.



1971 ஜூலை 7] [Dr. H. V. Hande]

So, ultimately it is a question of production for which a lasting solution has to be arrived at. I hope and trust the Hon. Minister for Food and all Opposition Leaders will all sit together and find out a method by which the production in this State will be commensurate with the alarming increase in population. We should bear in mind that the graph showing the food production must be at the same level as that of the graph showing the increased population. It is not enough if we say that last year the production was 60-lakh tonnes and this year it has increased to 62-lakh tonnes because it must be proportionate to the population explosion which is going on at a very rapid rate. So, we should evolve a comprehensive method, according to which the food production should be the primary concern of the State and the tenancy laws should be based on that.

Then I come to Pensioners. It is a well-known fact that pensioners have been agitating for their demands for the last several years. In fact our Hon. Minister for Education and Hon. Minister for Labour themselves had attended some meetings held under the auspices of the Pensioners' Associations and they had also promised some relief to them. Sir, it is a known fact that the cost of living is increasing day by day and it becomes difficult to manage a famliy. What about the small pensioners? This is a universal problem facing the country as also several parts of the world. But certain countries like the United Kingdom have taken up this problem very seriously.

The point is that there is depletion of income after retirement. A person who might be drawing a basic salary of Rs. 300 at the time of retirement would get only 3/8 of that amount after retirement. So this is a very serious problem especially because after retirement multifarious family commitments will also have increased. Therefore, I request the Government to seriously consider the best method of solving their problem.

Sir, a large number of brilliant men have been attracted to the field of administration and if their condition is not improved, that attraction would be lost completely. Of course, the Government cannot come up to the extent the private companies would pay and it is a question of finance. At least if the retirement benefit is increased, it would be something. After all, the expenditure may not be much. If the Government were to increase the pay commensurate with that in private enterprise, it will be a heavy load on the exchequer. Instead of that let them at least give what is given in private enterprise with regard to other benefits like pension, etc., I mean retirement benefits. If that is given, we can attract better men. If in addition to better security there is attraction in retirement benefit in Government service. many bright men may come to Government service. Really smart and intelligent men whom we want to enter the executive in Government service might come in provided there are good

retirement benefits. This is an aspect that has to be discussed on a different footing.

It is true that the Pay Commission went into the pensioners' problem. But they did not go into that deeply. I practically demand on the floor of the House with all the emphasis at my command that the Government could constitute a small Commission of 2 or 3 people to go into the problem of pensioners immediately and submit their findings as to how best they could help the pensioners. It need not be a protected Commission but it could be a small Commission which could give its report immediately within a short time. At present what one gets after retirement is 3/8th of last pay drawn. He is not eligible for D.A., H.R.A. and C.C.A. It virtually means that he would draw 1/8th or 1/4th of what he got last before retirement. This is one important point which I would request the Hon. Minister to consider.

Now with regard to delay in getting pension, we invariably find that there is some problem or other at some point. At some point some issue is raised in the department and unless the query is answered, the pension is not granted. There is delay. On one side the pensioners is disappointed that there is reduction in his emoluments. His family burden is also three. He has t ogo from pillar to post insearch of his pension papers and he has to wander from office to office for sanction of his pension. This is common and it has been going on since a number of years. I would request the Hon. Minister to give an indicatino of the steps he is going to take to see that the delay is reduced.

Coming to old age pension, the hon. Member Thiru Vezhavendan made a pertinent point that it should not be based area-wise. If you take the number of people, old people, in my constituency, those above 60, there are not many. The total State number is also limited. Unless one becomes very old, 65 or 70 and his son or daughter is unemployed, he gets pension. What I say is, anybody above 60, who has no son or daughter earning, should be given some sustenance to live. I concede that the position now, is much better, than what it was some years ago. That we must frankly accept. I would request Government to examine the whole thing, *de novo*, afresh, so that all old persons, above 60, without anybody to support them, are given old age pension to enable them to live.

With regard to L.T. teachers I have given a cut-motion. I have moved only that cut motion under 'pensions'. The way in which pension is calculated in respect of teachers in aided schools local bodies who had retired before 1958 is not correct. Instead of calculating pension on the pay last drawn during three years prior to date of retirement, it is calculated at the rate of Re. 1 per year of service up to a maximum of 30 years. There is no link to the pay. There is invidious distinction in respect of those who retired after 1st July 1960. The new rates were announced



on 24th January 1961 and retrospective effect was given from 1st July 1960. In fact those who agitated for it were those who retired before 1st July 1960. Those people should be allowed the same rate as those who retired after 1st July 1960; Most of them have become old 65, 70 or 75. Let the effect be given from the date of original announcement, viz., April 1958. It is only rectification of a defect made earlier. I hope and trust the Hon. Minister will take into consideration and give the relevant answers in reply, in respect of teachers who had retired before 1960.

There is anomaly in respect of pension of L.Ts. who retired before 1st July 1960. They get only Rs. 30 p.m. Those who retired after 1st July 1950 get Rs. 60/p.m. Similarly Headmasters who retired before 1st July 1960 get Rs. 35/p.m. Those who retired after 1st July 1960 get Rs. 75/p.m. I hope and trust this anomaly will be set right. If their cases are examined and needful done, it would be nice.

Secondary grade teachers who had retired before 1970 get Rs. 35/p.m. Those who retired after October 1970, get Rs. 90 plus D.A. Similarly in respect of L.Ts retiring after October 1970, they get Rs. 105 and D.A. Headmasters retiring after October, 1970 get pension of Rs. 250/p.m. and D.A. Those who retired before October 1970 do not get these benefits. Pay Commission's recommendation even though accepted, had not been implemented fully. I would request Government to see all the recommendations of the Pay Commission are properly gone into and implemented fully. I hope the Government will set right the anomalies.

Now these LIG and MIG flats are sold to low income group families. They are mostly Lower and Upper Division clerks. They are asked to pay something in lumpsum first and then pay the balance in instalments. The very fact that they are asked to pay in instalments is because of their meagre salary. When that is the case, it is fair that we should not burden them with any other thing. But what is now done is they are being asked to pay the stamp duty. That means a heavy sum in the begining. I hope the Hon. Minister would examine this aspect and exempt them from paying stamp duty.

Now I come to ration card holders. There is some confusion here. The decision taken at ministerial level had not percolated to the officers' level. These poor people are asked to get MLA's certificate, this and that. Let definite rules be laid down. Government is already subsidising this. Let these poor people be given some rice, 'sambar rice' or something and let them not be driven from pillar to post. Let them not make the life of these card holders miserable. Let the instructions be put not only at the office of Director of Supplies but in all ration offices. Then there would be some advantage.

In the hope that what all I had said would be properly examined and the Hon. Minister would give proper answer to all those points, I resume my seat. Thank you.

திரு. சி. மணலி கந்தசாமி : மாண்புமிகு உப சபாநாயகர் அவர்களே, இந்த மானியங்கள் மீது சில கருத்துக்களை நான் சொல்லலாம் என்று நினைக்கிறேன். குறிப்பாக, இந்த அரசு விவசாயத் துறையில் பல சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்திருப்பது போற்றத் தக்கது. எந்த நோக்கத்துடன் அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவோ அந்த நோக்கங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றனவா என்று பார்த்து, ஏன் ஊனங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் பரிசீலனை செய்து அவற்றை ஒழுங்காகச் செய்ய வேண்டியது அத்யாவசியமாக இருக்கிறது. எனக்கு முன்பு பேசிய அந்தப் பகுதி அங்கத்தினர், சர்க்கார் எடுக்கும் நடவடிக்கைகள் எப்படி அதிகார வர்க்கத்தினால் சரிவர நிறைவேற்றப்படாமல், எப்படி அவை பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னதை நான் மகிழ்ச்சியோடு கவனித்துக் கொண்டிருந்தேன்.

இந்த அடிப்படையில் பார்த்தோமானால், இனாம் சட்டம், அடுத்தபடியாக குத்தகை பதிவுச் சட்டம், நிலச் சீர்திருத்தச் சட்டம் போன்றவைகளை அமுலுக்கு கொண்டு வருவதற்காக கிராமங்களுக்கு வரக் கூடிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எந்த அளவுக்கு அந்தச் சட்டங்களின் நோக்கங்களுக்குப் புறம்பாகச் செயல்படுகிறார்கள் என்பதை நான் வருத்தத்துடன் சொல்லிக் கொள்கிறேன். இது ஒன்றிரண்டு இடம்களிலே நடந்தால், குறிப்பிட்டுச் சொல்லிவிடலாம் இம்மாதிரியான போக்கே பல இடங்களிலே உத்தியோகஸ்தர்களிடையே உருவாகி இருப்பதாலே இந்த நிலைமை இருக்கிறது. அவர்கள் இந்தப் பிரச்சினைகளைப் பார்க்கும்பொழுது சர்க்கார் எந்த நோக்கத்துடன் இந்தத் திட்டங்களை கொண்டு வந்திருக்கிறது என்பதைப் பார்ப்பதை விட்டு, அதற்கு முரணான வகையிலே காரியங்களைச் செய்து வரக் கூடிய நிலைமை இருக்கிறது. எனவே அடிக்கடி இந்தச் சட்டங்கள் எல்லாம் கீழ்த் தட்டிலே இருக்கும் சமுதாயத்திற்குப் பயன்படாமல் போகக் கூடிய நிலைமை ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மானிய கோரிக்கையின் மீது எழுதியுள்ள ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

"The basic objectives of land legislation in the State have betn to usher in asocialistic Order and to stimulate agricultural production through the elimination of exploitation of tenants by landlords, the provision of greater security of tenure to the actual tiller and the prevention of concentration of lands in the hands of a few big landholders.''

என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வரும்பொழுது குறிப்பாக இனாம் சட்டத்தை எடுத்துக்கொண்டாலும், இனாம் விவசாயிகளுக்கு நோட்டீஸ், சம்மன் போன்றவைகளைக் கொடுக்காமலேயே, தீர்ப்புக் கொடுத்து விடுகிறார்கள். இன்றைக்கு நம் தமிழ் நாட்டிலே இருக்கும் விவசாயிகளிலே பலர் படிக்காதவர்கள். அது மிகவும் துர்பாக்கியமான நிலைமை, மைனர் குழந்தைகளைப் பாதுகாப்பதுபோல் சர்க்காரும், அதிகாரிகளும் இந்த விவசாய மக்களுக்குத் துணையாக உதவியாக இருந்தால்தான், இருக்கக் கூடிய உரிமைகளை அவர்கள் பெற





முடியும். இந்த நிலைமையிலே அவர்களை ஏமாற்றுவது, அவர்களுக்குத் தெரியாத புது விஷயங்களைச் செய்துவிட்டு அவர்கள் மீது தீர்ப்புச் சொல்லுவது, வருகிற சட்டங்கள் அவர்களுக்குப் பிரயோசனம் இல்லாமல் போகிறது என்பதற்கு நான் பல நூற்றுக்கணக்கான இடங்களிலே உதாரணம் காட்ட முடியும். இந்த அளவிலே இனாம் சட்டம், இனாம் விவசாயிகளுக்கு உதவி இல்லாமல் செய்வதற்கு அதிகார வர்க்கம் தலையிட்டு ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி ஏதாவது விதி முறைகளைக் காட்டித் தடுக்கிறார்கள். இதை நிச்சயமாக இந்த அரசு நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இனாம் நிலங்கள்—கோயிலுக்கும் மடங்களுக்கும் இருக்கும் நிலங்களுக்கு விதி விலக்குக் கொண்டு வந்தால், 500 கிராமங்களிலே வசிக்கும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் அந்த உரிமையைப் பெற முடியாமல் இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தை நீக்குவது பற்றிச் சிந்திக்க வேண்டும். இந்தச் சட்டத்தின் குறிக்கோள் பூராவும் ஏழை விவசாயிகள் புனர் வாழ்வு வாழ வேண்டும் என்பது தான். அவர்கள் வாழ்வு வளம் பெற்றால், தேசத்தின் வாழ்வு வளம் பெறும் என்பதை நாம் ஒப்புக் கொண்டால், இதை எல்லாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். குத்தகை பதிவு இயக்கத்தைப் பற்றி இந்த அவையிலே ஹாண்டே கூடக் குறிப்பிட்டார்கள். அதிலே உற்சாகம் இல்லை என்று குறிப்பிட்டார். உற்சாகம் இல்லாமல் இல்லை. அதிலே இருக்கும் விஷயம் என்னவென்றால், விவசாயிகளுக்கு நாம் வழங்கும் தஸ்தாவேஜுகளை அவர்கள் வாங்கத் திறமையற்றவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே சாட்சியங்களை விசாரித்து அந்த நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்று விதி இருந்தாலும் கூட, அதை புறக்கணிக்க அதிகாரிகள் விவசாயிகளுக்கு விரோதமான நிலைமையிலே காரியங்களைச் செய்கிறார்கள். இதை எல்லாம் புனர் ஆலோசனை செய்ய வேண்டும். குத்தகை பதிவு செய்வதற்காக வேண்டியவற்றைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேபோல், நிலம் கொடுப்பது சம்பந்தமாக, ஊரிலே இருக்கின்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு முதலில் நிலம் கொடுக்க வேண்டும். ஆனால், பல இடங்களிலே அப்படி நடக்கவில்லை. ஒவ்வொரு ஊரிலேயும் நிலம் வழங்கும் பொழுது அந்த ஊரிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்பட்டதா என்பதை பார்த்துக் கொண்டு, அவர்களுக்கு "முதல் இடம்" கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வழங்கியதற்குப் பிறகு தான், மற்றவர்களுக்கு நிலம் கொடுக்கப்படும் என்ற கொள்கையைக் கையாள வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். உபரி நிலங்களை குத்தகைக்கு விடும் பொழுது, அதை எடுப்பவர்கள் முன் பணம் கொடுக்க வேண்டும். பணம் உள்ளவர்கள் தான் அதை எடுக்கிறார்கள். இதனால், ஏற்கனவே குத்தகை விவசாயம் செய்பவர்களின் உரிமை பாதிக்கப்படுகிறது. இது அந்த விஷயத்திற்குப் புறம்பான விஷயம் என்று சொல்லிக் கொள்கிறேன். எனவே, அந்தக் குத்தகை தொகையை வேறு வகைகளிலே வசூல் செய்யும் விதத்திலே தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. சி. மணலி கந்தசாமி] [1971 ஜூலை 7

அடுத்தபடியாக நில ஆர்ஜிதம் சம்பந்தமாக சில பல இடங்களிலே பல தயக்கங்கள் ஏற்பட்டிருப்பதால், பள்ளிக்கூடம் கட்ட அல்லது ஹெல்த் சென்டர்கள் கட்ட சைட்டுகளை எடுக்க வேண்டுமானால் அது முடிவதில்லை. எனவே, துரிதமாக நிலங்களை கலெக்டர் அவர்கள் ஆர்ஜிதம் செய்யும் வகையிலே அவர்களுக்கு அதிகாரங்களை வழங்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னொன்று நான் பொது விவாதத்தின் போது சொன்னது தான். இந்த நாட்டிலே கடனைப் பற்றி பரிசீலனை செய்யக் கூடிய நிலைமை வந்துவிட்டது. என்னுடைய ஊரைச் சுற்றி புதிதாகப் பல வட்டிக் கடைகள் வந்துவிட்டது. கடன்பட்ட விவசாயிகள் மேலும் கடன் பட்டு அதனால் தொந்தரவுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி பரிசீலனை செய்து, எந்த அளவுக்குக் கடனைக் குறைக்கலாம் என்பதற்கு ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, பென்ஷன் சம்பந்தமாக உறுப்பினர் ஹாண்டே சொன்னதை ஒப்புக்கொள்கிறேன். பல பேருக்கு ரிட்டயர் ஆனதற்குப் பிறகு ஒரு வருஷம் அல்லது $1\frac{1}{2}$ வருஷம் ஆகியும் எந்தவிதமான பணமும் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ரிட்டயர் ஆனதற்குப் பிறகு ஒரு காலணா கூட வருமானம் இல்லாமல் அவர்கள் வருஷக் கணக்கில் இருப்பது என்றால், அவர்கள் குடும்பம் அதனால் பாதிக்கப்படுகிறது. எனவே, உடனடியாகப் பென்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றொன்று, ஹாண்டே அவர்கள் "கன்சாலிடேஷன்" என்று சொல்லி நம்முடைய நிலங்கள் துண்டு துண்டாகப் போய் விட்டால் நவீன விவசாயம் செய்ய முடியாது என்று கூறினார்கள். துண்டு, துக்கடா என்றால் அதிகமாக நிலம் வைத்திருப்பவர்கள் எல்லாம் ஒரே இடத்திலே இருப்பதாகக் கனவு காண்கிறார்கள். 100 ஏக்கர் என்றால் அது ஒரே நிலமாக இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். ஒருவர் 100 ஏக்கரா வைத்திருக்கிறார் என்றால், 100 குழி, 150 குழி என்ற அளவிலே தான் வைத்திருக்கிறார். எனவே, நாம் நிலச் சீர்திருத்தம் கொண்டு வரும்பொழுது உற்பத்தி குறைந்துவிடும், விவசாயப் பலன் குறைந்து விடும் என்பது சரியானதல்ல. இதை வைத்துக்கொண்டு நிலச் சீர்திருத்தத்தைச் செய்யாமல் விடவேண்டியதில்லை என்று சொல்லிக் கொள்கிறேன். எனவே, நான் சொன்னவைகளை அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு பல விவசாயச் சட்டங்கள் விவசாயிகளுக்குப் பயன்படும் அளவில் அமுல் நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம் பற்றியும் இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கின்ற மற்றும் மானியக் கோரிக்கையின் மீதான வெட்டுத் தீர்மானங்களின் மேல் சில கருத்துக்களைக் கூறுகிறேன்.

முதன் முதலாக, பல ஆண்டுகளாகக் கூறப்பட்டு வருகின்ற மாவட்ட அமைப்புகளையும் சிறு மாவட்டங்களாக மாற்றியமைக்க வேண்டும். பல உறுப்பினர்கள் இதுபற்றிக் கூறியிருக்கிறார்கள்,



1971 ஜூலை 7] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இது வரையில் ஒரு மாறுதலும் அதில் வரவில்லை. அமைச்சர்கள் அடிக்கடி கூறுகின்றார்கள், மாவட்டங்களை மாற்றி அமைப்பதால் நிதி நிலை அதிகமாகப் பாதிக்கப்படுகின்றது, அதனால்தான் அதை இன்னும் செயல்படுத்த இயலாமல் இருக்கிறதென்று கூறுகிறார்கள். இன்று மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றை நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கும்போது, இந்தத் திட்டங்களினால் உண்மையிலேயே வருகின்ற நன்மைகள் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டுமென்றால், இந்த அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும். நிதிநிலை சரியில்லை என்று கூறும் இதே அரசு, செய்யும் விளம்பரங்களைப் பார்க்கும் போது எவ்வளவு அதிகமான ரூபாய்கள் அதற்காக "வேஸ்ட்" பண்ணுகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். விளம்பரத்திற்காக இவ்வளவு "வேஸ்ட்" செய்யும்போது மக்கள் நலக் கொள்கைகளை அமுல் நடத்துவதற்காக மட்டும் ஏன் பணத்தை செலவு செய்யத் தயங்க வேண்டும் என்று கேட்கிறேன்.

அடுத்ததாக, என்னுடைய ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன். இன்று இருக்கும் தாலூக்கா அமைப்பை நிச்சயமாக மாற்றி அமைக்க வேண்டும். ஒரு பஞ்சாயத்து யூனியன் அதிகாரி, தாசில்தார் போன்று இருவர் இருப்பதைக் காட்டிலும் ஒருவர் மட்டுமே இருந்தால் போதும். இப்போது இருக்கும் அமைப்பு "டூப்பிளிக்கேஷன்" என்ற நிலையிலேதான் இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு தாலூக்கா என்று வரையறுக்கும்போது அது ஒரு யூனியன் அடிப்படையில் இருந்தால் போதும். அங்கேயிருக்கும் தாலூக்கா அதிகாரி செய்யும் வேலைகளைப் பஞ்சாயத்து அதிகாரியே செய்துவிட முடியும். இன்று இருக்கும் நிலையில் ஒரு கம்யூனிட்டி சர்டிபிகேட் வாங்க வேண்டுமானாலும் தாலுக்கா "ஹெட் குவார்ட்டர்ஸுக்கு" 30, 40 மைல் பஸ் பிரயாணம் செய்து வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அடுத்தபடியாக, மாவட்ட நிர்வாகத்தில் ஆளுங்கட்சி அங்கத்தினர்கள் அதிகமாகத் தலையிடுகிறார்கள். மாவட்ட அதிகாரிகள் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு வகையின்றி இருக்கின்ற நிலை இன்று படுமோசமாக இருக்கிறது என்பதை இந்த அரசுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆளுங்கட்சி அங்கத்தினர்களின் விருப்பத்திற்கு மாறாக அதிகாரிகள் செயல்பட்டால், அவர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுகிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் எந்த இடத்தில் அப்படி நடந்தது, எந்த அதிகாரி மாற்றப்பட்டார், எந்த உறுப்பினர் செய்தார் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். பொத்தாம் பொதுவில் சொல்லி விட்டுப் போனால் பத்திரிகை விளம்பரத்திற்குப் பயன்படும் என்ற நோக்கத்தில் சொல்லுவது நல்லதல்ல. இத்தகைய செய்திகள் விளம்பரத்திற்குப் பயன்படுமே தவிர, இந்த அவையின் மரபுக்கு உகந்ததல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: விளம்பரத்துக்காகச் சொல்லவில்லை. நெஞ்சில் கை வைத்துக் கூறுங்கள், இந்த நிலைமை இந்த மாநிலத்தில் இருக்கிறதா இல்லையா என்று. . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: இது குறித்து இந்த மாமன்றத்தில் பல தடவைகள் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட முறையில் இன்னார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அங்கத்தினர் பெயர் குறிப்பிட்டுச் சொன்னால் அன்றி இப்படிப் பேசுவது இந்த மாமன்றத்தின் மரபுக்கு உகந்ததாகாது. பொதுவான குற்றச்சாட்டுகளைச் சொல்லாமல் இருப்பது நல்லது.

திரு. ஜே. ஜேம்ஸ்: அமைச்சர் அவர்கள் கேட்டால் நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். அதை இப்போது விட்டு விடுகிறேன். "மனுநீதி முறை" நல்ல திட்டம் தான். ஆனால் கொடுத்த எந்த மனுவும் நல்ல முறையில் விசாரிக்கப்பட்டு பரிகாரம் கிடைக்கவில்லை. காரணம் கேட்டால், நிதிநிலை இடம் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இந்த மனுநீதி முறையானது ஒரு நாடகமாகத் தான் இருக்கிறது. மக்களுக்கு நன்மை பயக்கவில்லை. ஆகவே, இந்தத் திட்டத்தின் மூலம் அதிகப் பணம் வழங்கி மக்களின் குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கே சர்வே செட்டில்மெண்ட் நடைபெறுகிறது. அது இன்னும் முற்றுப் பெறவில்லை. அதிலே பல கோளாறுகள் இருக்கின்றன. நிலங்களுக்குப் பட்டா வழங்குவதில் பல்வேறு குறைகள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான வழக்குகள் கோர்ட்டுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அவற்றைப் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டா வழங்குவது லட்சக்கணக்கான பேர்களுக்கு, 1969-ல் இத்தனை லட்சம், 1970-ல் இத்தனை லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டா வழங்கு முறையில் முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்று பல குற்றச்சாட்டுகளைப் பல அங்கத்தினர்கள் கூறியிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்தில் எத்தனை பேருக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அவர்களின் பதிலுரையில் கூறினால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். நிச்சயமாக இதுவரை யாருக்கும் கொடுக்கப்படவில்லை. அதோடு கூட என்னுடைய மாவட்டத்தில் ஏழை விவசாயிகள் பல ஆண்டுகளாக 1, 3, 5 ஏக்கர் என்று புறம்போக்கு நிலங்களைப் பயிர் செய்து வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை அவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்ற எல்லா மாவட்டங்களிலும் லட்சக்கணக்கில் பட்டாக்கள் கொடுத்திருக்கும்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ஏன் வழங்கவில்லை என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

இப்போது நஞ்சைக்கு 5 ஏக்கர் வரை வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் நஞ்சைக்கோ, புஞ்சைக்கோ வரி விலக்கு செய்யப்படவில்லை. காரணம் என்ன என்று கேட்க விரும்புகிறேன். சர்வே செட்டில்மெண்ட் வேலை முடியவில்லை என்று கூறலாம். அது வரை 4, 5 ஆண்டுகளுக்கு ஏழை விவசாயிகள் வரி கொடுக்க வேண்டிய நிலையில் இருப்பதை அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





கடைசியாக ஒரு வார்த்தை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன். ஆண்டு தோறும் தயாரிக்கப்படும் இந்த நிதி நிலை அறிக்கையில் மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கப்பட வேண்டும். அப்படி ஒதுக்கப்பட்டால், ஆங்காங்கு இருக்கின்ற வட்டார வளர்ச்சி மன்றங்களைக் கூட்டி, கலெக்டர்கள் ஒதுக்கப்பட்ட தொகையை வைத்துக் கொண்டு எந்தெந்த திட்டங்கள் போட வேண்டும் என்பதைக் கண்டறிந்து நல்ல முறையில் பயன்படுத்த முடியும். இனிமேலாவது, இப்போது இருக்கின்ற முறையை மாற்றி, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இத்தனை லட்சம், கோடி என்று ஒதுக்கினால் தற்போது இருக்கின்ற குறை நீங்கும். ஒரு ஜில்லாவுக்கு அதிகம், இன்னொரு ஜில்லாவுக்கு குறைவு என்ற குறை இருக்காது. நான் கூறுகின்ற முறையைக் கையாண்டால் அந்தக் குறையைக் களைய முடியும் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த மானியத்தில் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஓரிரு கருத்துக்கள் நான் இங்கு கூறுவதற்கு விரும்புகிறேன்.

முதலில் நிலவரியை 5 ஏக்கருக்கு மேல் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. நில வரியை ரத்து செய்யவேண்டுமென்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் எடுத்துக் கூறியிருக்கிறது. பொதுவாக வெளி மாநிலங்கள், குறிப்பாக உத்தரப்பிரதேசத்தில் இந்த நில வரி $6\frac{1}{2}$ ஏக்கர் வரை ரத்து செய்திருக்கிறார்கள். நஞ்சைக்கு முழுமையாக நிலவரியை ரத்து செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 5 ஏக்கருக்கு மட்டும் தான் ரத்து என்பது பொருத்தமல்ல என்பதையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் வேளாண்மை வருமான வரி போடுவதற்கு அரசாங்கம் திட்டம் தீட்டியிருக்கிறது. நிச்சயமாக இது ஒரு "சிலாப்" முறையில் வரும். அது ஒரு நேர் முகவரியாக இருக்கிறது என்பதை ஆட்சேபிக்கவில்லை. இந்த வேளாண்மை வருமான வரியைப்போட திட்டம் போட்டு விட்டு, அதே நேரத்தில் நில வரியும் போடவேண்டுமா என்பதை அரசாங்கம் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். அப்படி செய்வதென்றால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்ற கருத்தினை மட்டும் நான் கூற விரும்புகிறேன். எப்படி இந்தச் சட்டம் திருத்தியமைக்கப்பட போகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கமாக கூறுவார்கள் என்று கருதுகிறேன்.

இப்போது கன்னியாகுமரியில் வேளாண்மைத் துறையில் பழைய திருவாங்கூர்-கொச்சி அரசு முறையில் வருமான வரி விதிக்கப்பட்டு வருகிறது, இனியும் அதே முறையைக் கையாளப்போகிறார்களா, அல்லது சென்னை மாநிலத்தின் ஏனைய பகுதிகளுக்கு உள்ள முறையை அமல் படுத்தப்போகிறார்களா என்பதை விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த "கம்பவுண்டிங்" முறையை நீடித்து வைத்திருப்பீர்களா அல்லது அதைத் திரும்பப் பெற்றுக்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூலை 7

கொள்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஏன் நிலவரி கூடாது என்பதைப்பற்றி இங்கு முன்பு பேசியவர்கள் எல்லாம் கூறினார்கள். சர்க்காருக்கு ஒரு கோடி ரூபாய் வருவாய் வருகிறது. இந்த வரியை ரத்து செய்வது பொருத்தமா, அல்லவா என்று பின்னால் ஆலோசனை செய்யவேண்டும். எப்போது புஞ்சைக்கு வரி இல்லை என்று சொல்லுகிறோமோ, அதே நியாயம் தான் நஞ்சைக்கும் பொருந்தும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தங்கள் தங்கள் மாவட்டம் பிற்பட்ட மாவட்டம் என்று உத்வேகமாக, உணர்ச்சி வசப்பட்டு பல அங்கத்தினர்கள் அவர்களுடைய கருத்துக்களை கூறினார்கள். பொதுவாகப் பார்க்கின்ற போது, ஒரு சில மாவட்டங்களைத் தவிர, எல்லா மாவட்டங்களிலும் பல வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு அரசாங்கம் முனைந்துள்ளது. ஒரு சில மாவட்டங்கள்தான் பிற்பட்ட மாவட்டங்கள் என்று கருதப்பட்டாலும், இன்று மற்ற பகுதிகளிலும் வறட்சி மிகுந்திருக்கிறது. வட ஆற்காடு, திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற ஜில்லாக்கள் முழுமையான அளவில் வறட்சிப் பகுதிகளாக இருக்கலாம். எந்த எந்த ஜில்லாக்களில், எந்த எந்த பகுதிகளில் வறட்சி நிலை இருக்கிறது என்று ஆராய்ந்து அங்கெல்லாம் பஞ்சத்துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். எந்தப் பகுதியில் எந்த ஜில்லாவில் இருந்தாலும் நியாயமான முறையில் இப்பணிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த மாவட்டங்களின் எல்லைகளை எல்லாம் திருத்தி அமைப்பதற்கு பல அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். எல்லைக் கோடுகளை திருத்தியமைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். நிர்வாகச் செலவு ஒரு வேளை அதிகமாக இருந்தாலும், சில சமயம் மத்திய அரசாங்கத்தின் கிராண்ட்களை சரியான அடிப்படையில் பெற முடியாமல் போய் விடுகிறது. போதிய அளவில் மாவட்டங்களுக்கு நியாயம் வழங்க முடியவில்லை என்பதை அமைச்சர் பெருமக்களே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து ஒரு நல்ல அமைப்பு ஏற்படுத்தினால், மிகவும் வசதியாக இருக்கும். இப்போது கலெக்டர், டி.ஆர்.ஓ. இவர்கள் எல்லாம் அதிகாரத்தைப் பிரித்து வைத்துக்கொள்ளலாம். சிறு சிறு அமைப்புகளாக இருந்தால், வளர்ச்சிப் பணியிலே அதிகமான அக்கறை செலுத்த முடியும்.

ஜமா பந்தி பற்றி எங்களுடைய கருத்து, அது மிகவும் தொன்று தொட்டு வந்த முறை, அது நல்லது, தேவைதான் என்பதாகும். கிராமந்தர மக்களுக்கு இருக்கிற குறைகளை எல்லாம் தீர்த்துக் கொள்வதற்கும், பட்டாக்களை திருத்தி மாற்றி அமைத்துக் கொள்வதற்கும் இது மிகவும் வசதி. அது மட்டுமல்ல. Demand collections, balance கணக்கு வழக்குகளை அங்கேயே தீர்த்துக் கொள்வதில் ஒரு சௌகரியமும் உண்டு. ஜமாபந்தி முறையை அடியோடு எடுக்கப் போகிறார்களா என்ற கொள்கை விளக்கம் தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1971 ஜூலை 7] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

ரெவினியூ போர்டு முறை ஒழிக்கப்படுமென்று கூறியதை புனர் பரிசீலனை செய்யப்போகிறார்களா, அது இருக்கப் போகிறதா, இல்லையா என்பதற்கு விளக்கம் தேவை. ரெவின்யூ போர்டு சூப்பர் செகரடேரியட்டாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த அமைப்பு தேவை இல்லை என்ற கருத்தை இங்கே பலர் எடுத்துக் கூறினார்கள். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் இதை ஒயிட் எலிபென்ட்டாக இருக்கிறது என்று கூட எடுத்துக் கூறினார்கள். இந்தமாதிரி நிர்வாக அமைப்பு திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அரசாங்கம் அவ்வாறு மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமாந்தரங்களிலே ஏழை எளிய மக்களுக்கு மனு நீதி நாள் எல்லாம் இருக்கிறது என்று சொன்னார்கள். கூட்டுறவு வங்கிகளில் லோன் போட வேண்டுமென்றால், மிகவும் கஷ்டமாக இருக்கிறது. கூட்டுப் பட்டா இருந்தால், மற்றவர்களும் போட்டால்தான் பணம் பெற முடிகிறது. இந்த மாதிரி கஷ்டங்களை நிவர்த்தித்து விவ்சாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

டெம்பரரியாகப் பல்லாண்டு காலமாக வேலை செய்து கொண்டிருக்கிறவர்கள் வேலை நீக்கம் செய்யப்படக் கூடாது. அவர்களை உடனடியாக வேறு ஏதாவது போஸ்ட்களிலே பர்மனென்டாக அமர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பல இடங்களிலே புறம்போக்கு நிலங்களை எல்லாம் பட்டா போட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்க ரிகார்டுகளில் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இடங்களுக்கு அதிகமாகவே, புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து கொண்டிருக்கிறார்கள். ஒருவருக்கு 69 ஏக்கருக்குப் பட்டா இருக்கிறது என்றால், அவர் அனுபோகத்தில் இருப்பது மேலும் ஒரு 10, 15 ஏக்கர் பக்கத்து புறம்போக்கு நிலங்கள். இப்படி ஆக்கிரமித்து வைத்திருப்பவர்களிடமிருந்து நிலங்களைப் பிரித்து வேறு நபர்களுக்கு கொடுக்க வேண்டும், அல்லது அவர்கள் பேருக்கே கொடுக்க வேண்டுமென்றால், அவர்கள் பேருக்கே கொடுக்க வேண்டும்! என்னைப் பொறுத்தவரை அவைகளை ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்பது தான் பொறுத்தம் என்று சொல்வேன்.

போர்ட் ஸ்டான்டிங் ஆர்டர்ஸ் எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப் படவேண்டும். 1956-க்குப் பிறகு தமிழ்நாட்டுடன் இணைந்த பிரதேசத்திற்கு அந்த விதிகள் விஸ்தரிக்கப்படாததால், அந்த மக்களுக்கு சில சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எங்கள் பகுதியில் குத்தகை பாட்டம் என்ற விதிமுறை இருக்கிறது. பாட்டம் தான் கொடுக்க முடியும்.

தக்கலை என்ற ஒரு பகுதியிலே உதயகிரி என்று ஒரு கோட்டை இருக்கிறது. அங்கே சர்க்காருக்குச் சொந்தமான பூமி இருக்கிறது. சுமார் 150 ஏக்கருக்கும் மேலாக. முன்பு திருவாங்கூர்-கொச்சி அரசாங்கம் ஒரு தனிப்பட்ட நபருக்கு குத்தகைக்கு பாட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அங்கே விவசாயக்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூலை 7

கல்லூரி வைக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டோம். ஆனல் தனியார் கையிலே இருக்கிற அதை கையகப்படுத்த கஷ்டமாக இருக்கிறது. அதை உடனடியாக கையகப்படுத்த அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பஞ்சத் துயர் துடைப்பு விஷயத்தில் மாவட்ட கலெக்டர்களுக்கு ரூ. 30, ரூ. 80 இவ்வளவுதான் கொடுக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. எமர்ஜென்சி விஷயத்தில் இந்தத் தொகையை அதிகமாகக் கொடுக்க அரசாங்கம் மாவட்டக் கலெக்டர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்.டி. ஆசிரியர்கள் பென்ஷன்பற்றி திரு. ஹண்டே அவர்கள் கோடிட்டுக் காட்டினர்கள். இப்போது கொடுத்திருக்கிற டி.ஏ.-யை வாழ்க்கைப் புள்ளி அடிப்படையிலே அதிகரித்துக் கொடுக்க வேண்டும். முன்பு நிச்சயித்த பென்ஷன் இன்று அதே கணக்கில் கொடுக்கப்பட்டு வருகிறது. இரண்டாம் சம்பள ஆணைக் குழுவிலே பல பரிந்துரைகள் இருக்கின்றன. போதிய அளவில் நிதி வழங்கப் படவில்லை என்று பல முறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

திருவாங்கூர்-கொச்சியிலே இருந்து மாற்றப்பட்ட ஒரு சில உத்தியோகஸ்தர்கள் அன்று இருந்த திருவாங்கூர்-கொச்சி ரூல்ஸ்படி அவர்களுக்கு பென்ஷன் மிகவும் குறைவாகக் கிடைக்கிறது. இப்போது கேரளத்தில் விதி முறைகள் மாற்றப்பட்டு விட்டன. இங்கும் மாற்றப்பட்டு விட்டன. எனவே, அவர்கள் இன்னும் குறைந்த பென்ஷன் வாங்க வேண்டுமா என்பதைப்பற்றி அரசு புனர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் உழைப்பின் மதிப்பை இந்த இக்கட்டான சூழ்நிலையில் நாம் மறந்து விடக் கூடாது.

ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் அத்தகையோர் பலர் இருக்கிறார்கள். தனியார் துறை ஆசிரியர்களுக்கு எந்த விதமான பென்ஷனும் இல்லை. முன்பு இருந்த அடிப்படையில்தான் இப்போதும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு பென்ஷன் அளிக்கப்படுகிறது. இந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒரு மாவட்டத்திற்கு இவ்வளவு பேருக்குத்தான் முதியோர் பென்ஷன் என்று ஒரு கணக்கு இல்லாமல், யாருக்கு எல்லாம் தகுதி இருக்கிறதோ, அவர்களுக்கு எல்லாம் பென்ஷன் என்ற அடிப்படை பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைக் காலாகாலங்களில் கொடுக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தை நான் இங்கே எடுத்துக்கூற வேண்டு மென்று நினைக்கிறேன். பொதுவாக நிலச்சீர்திருத்தச் சட்டத்தில் பல மாறுதல்கள் ஏற்படப் போகின்றன என்பதை இந்த அறிக்கையில் பார்த்து அறிகின்றேன். முன்பு ரெவின்யூ அமைச்சர் தலைமையில்



1971 ஜூலை 7] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

ஒரு கமிட்டி இயங்கிக்கொண்டிருந்தது. அந்தக் கமிட்டி பல பரிந்துரைகளை அளித்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகளுக்கேற்ப மாற்றங்களைச் செய்யப்போகின்றார்களா? வேறு ஒரு கமிட்டி அமைத்து புனராலோசனை செய்யப் போகின்றார்களா என்பதை எடுத்துக்கூறுவது பொருத்தமாக இருக்கும்.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அதிக தீவிரமானதாகக் கொண்டு வரவேண்டுமென்று இங்கே பேசின உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். நிலச்சீர்திருத்தத்திலே என்ன என்ன விதிவிலக்கை ரத்து செய்ய முடியும் என்பதை ஆழ்ந்த முறையில் சிந்திக்க வேண்டும். நிலச்சீர்திருத்தம் வருகிற காரணத்தினால், சிறு நிலங்கள் வைத்திருக் கிறவர்கள் எப்படி பாதிக்கப்படுவார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். சிறுசிறு நிலங்களை குத்தகைக்குவிட்டுவிட்டு பலர் வேறு அலுவல் காரணமாக நகரங்களுக்கு வந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் என்ன பாதுகாப்பு அளிக்கப்பட இருக்கிறது என்பதை விளக்கவேண்டுமென்று கோருகிறேன். அவர்கள் எல்லாம் சீலிங் லிமிட்டுக்கு மிகக் குறைந்த நிலத்தை வைத்திருக்கிறவர்கள். ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கரா 3 ஏக்கரா என்பதாக தங்கள் நிலத்தை மீட்டும் அவர்கள் ஓய்வுபெற்று கிராமங்களில் போய்த் தங்குகிற போது மீட்டுக் கொள்வதற்கான வசதி இந்தச் சட்டத்தில் செய்து தரப்படவேண்டும். அப்படி இருந்தால் தான் ஓய்வுபெற்று மிகக் குறைந்த ஓய்வு ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு கிராமம் போகிற போது விவசாயத்தில் அவர்களே நேரிடையாக ஈடுபடவும் வாய்ப்பு ஏற்படும். பதினைந்து ஏக்கரா வைத்திருக்கிறவர்களைப்பற்றி பிரச்னை இல்லை. சிறுநிலக்காரர்கள் பிரச்சினையைத்தான் கவனிக்க வேண்டு மென்று கருதுகிறேன்.

நிலச்சீர்திருத்தம் வருகிறபோது அர்பன் லாண்ட் உடமைக்கும் வரம்பு கட்டப்பட வேண்டும். கிராமப் பகுதிகளில் உள்ளவர்கள் மட்டும் பதினைந்து ஏக்கராவுக்கு மேல் வைக்கக்கூடாது என்று உச்ச வரம்பு கட்டியிருக்கிறோம். அதேசமயம் பட்டணங்களில் உள்ளவர்கள் பலரும் தாராளமாக நிலங்கள் வைத்திருக்கிறார்கள். பெரிய பெரிய மாடிக் கட்டடங்கள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். வருவாய் வருகிறது. விவசாயிகள் மட்டும் இந்த அளவுக்கு மேல் நிலம் வைத்துக்கொள்ளக்கூடாது என்று உச்சவரம்பு கட்டிவிட்டு நகரங்களில் உள்ளவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று இருப்பது சமுதாய நியதிக்கு மாறு பட்டதாக இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆதலால் அர்பன் லாண்டுகளுக்கும் உச்ச வரம்பு நிர்ணயிப்பது அவசியம்—அதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். முத்திரைத்தாள் சட்டத்தைத் திருத்தியிருக்கிறார்கள். அதற்காக அதிகாரிகள் எல்லாம் நியமனம் செய்திருக்கிறார்கள். அதற்காக போடப்பட்ட ஸ்பெஷல் தாசில்தார்கள் எல்லாம் வால்யுவேஷன் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக சில பகுதி

களில் ஏற்படுகிற கஷ்டத்தை நாம் பார்க்கவேண்டும். அதிகமாக வால்யுவேஷனை நிர்ணயித்துவிடுவதால், சாதாரண ஏழை எளிய விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பெரிய நிலம் படைத்தவர்களுக்கு ஒருகால் கஷ்டம் இருக்காது. ஏழைகள் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே மதிப்பீடுகள் நிர்ணயிப்பதில் கவனித்துப்பார்த்து செயல் படவேண்டும். பொதுவாக ஒரு கிராமத்தில் அருகில் இருக்கும் நிலம் தள்ளி இருக்கக்கூடியவை இவை எல்லாம் பார்த்து சலுகை காட்ட வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சிறுதொகை ஸ்டாம்ப் பேப்பர்கள் கிடைப்பது மிகமிகக் கஷ்டமாக இருக்கிறது. முன்பு ஸ்டாம்ப் பேப்பர் கிடைக்காவிட்டாலும் சலான் முறைப்படி பணத்தைக் கட்டிவிட்டால், ரிஜிஸ்ட்ரேஷனில் தங்குதடை இருக்காது என்று ஆணை பிறப்பித்தார்கள். சிறுதொகை ஸ்டாம்ப் கிடைப்பதுதான் கஷ்டமாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதுபோல சிறுதொகைக்கான முத்திரைத்தாள் எந்த இடத்தில் கிடைக்கவில்லை என்கிற விவரத்தைச் சொல்ல வேண்டும். காரணம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் முத்திரைத்தாள் எந்த இடத்திலும் கிடைக்கவில்லை என்கிற புகாருக்கே இடம் இல்லாதபடி எல்லா இடங்களிலும் கிடைக்க ஏற்பாடு நல்லமுறையில் செய்யப்பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலும் தாராளமாகக் கிடைக்கிறது என்பதுதான் என்னிடத்தில் உள்ள தகவல்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எங்கள் மாவட்டத்தில் இருக்கிற சில சப்ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்களில் கிடைப்பதில்லை என்பதைத்தான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அர்பன் லாண்டு டாக்ஸ் ஒரு க்ரவுண்டுக்கு விலக்கு என்பது இல்லாது $1\frac{1}{2}$ க்ரவுண்டுக்கு விலக்கு என்பதாக அளிக்க வேண்டுமென்று பலரும் எடுத்துச் சொன்னார்கள். இன்னும் அதை $1\frac{1}{2}$ க்ரவுண்டுக்குப் பதிலாக 2 க்ரவுண்டு என்று வைத்தாலும் ஆட்சேபணையில்லை. அதற்குமேல் ஸ்லாப் வைத்திருக்கிறார்கள். நாங்கள் மறுக்கவில்லை.

மனுநீதி நாள் வைத்திருக்கிறோம், காலதாமதமாகாது பல காரியங்கள் கவனிக்கப்படும் என்றார்கள். ஒரு மனுக் கொடுத்தால் இத்தனை நாளைக்குள்ளாக பைசல் செய்ய வேண்டும், அவர்களுக்கு பதில் அனுப்பப்படவேண்டும் என்கிற விதிமுறை இருந்தால்தான் அதுசரியான முறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுடைய பிரதிநிதிகள் கலெக்டருக்கு, ஆர்.டி.ஓ.-க்கு மனுக்கள் கொடுத்தால், உடனடியாக அதற்கு ஒரு ரிப்ளை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.



ரெவின்யூ இலாக்கா அதிகாரிகளே ஆக்கப்பணிகள் அனைத்திலும் ஈடுபடுகிற காரணத்தினால், அங்கு ஏற்படுகிற காலதாமதம் மக்கள் மனத்தைப் புண்படுத்தும். அங்கே காலதாமதத்தைத் தவிர்க்க அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்னும் பஞ்ச நிவாரணத்தைப்பற்றி நான் முன்பு எடுத்துக் கூறினேன். பஞ்ச நிவாரணமாக இன்னும் பல பகுதிகளிலே அதிகமான பணத்தைச் செலவழிக்க வேண்டும் என்பதை நான் இங்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். உதாரணமாக ராதாபுரம், சங்கரன்கோயில் போன்ற பகுதிகளில் வறட்சி நிலைமை நீடிக்கிறது. அந்தப் பகுதியில் அதிகமாகக் கடன்களை வசூல் செய்யாமல் தள்ளிப்போட வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரிய ரெவின்யூ கிராமங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

நான் முக்கியமாகக் கூறுவது நிலவரியை அப்படியே எடுத்துவிட வேண்டும் ஐந்து ஏக்கரா என்று வைத்தால் கூடப் போதாது. வேளாண்மைக்கு வருமான வரிச் சட்டம் வருகிற காரணத்தினால், நிலவரியை முழுமையாக எடுத்துக்கொள்வது பொருத்தமாக இருக்கும். இதை நியாயத்தின் அடிப்படையில் செய்ய வேண்டும். எல்லாக் கட்சிகளும் தேர்தல் அறிக்கையில் இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதில் டைரெக்ட் டாக்ஸ் போட வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், நிலவரி அனைத்தையுமே எடுப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றும், இன்றும் ஏறக்குறைய 9 மானியங்களின் மீது மாண்புமிகு அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நிறைய வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆதலாலே மாண்புமிகு அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது—கொடுக்கப்பட்ட அத்தனை வெட்டுத் தீர்மானங்களின் கருத்தையும் நிச்சயம் அரசு பரிசீலிக்கும் என்கிற உத்தரவாதத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அங்கத்தினர்கள் இங்கு பேசினார்கள். எல்லோருடைய கருத்துக்களையும் நான் கவனித்து இருக்கிறேன். சில கருத்துக்களுக்கு மட்டும் நான் பதில் சொல்கிறபோது மற்றவர்கள் பேச்சு அலட்சியப்படுத்தப்பட்டுவிட்டது என்று கொள்ளக் கூடாது. எல்லோருடைய கருத்துக்களையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாகப் பேசிய மதிப்பிற்குரிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் வேளாண்மைக்கு வருமானவரி இருக்கிற காரணத்தினால் 5 ஏக்கருக்குள் என்று இல்லை—நில வரி முழுமையுமே எடுத்துவிட

வேண்டுமென்று சொன்னார்கள். அதைப் பற்றி எல்லாக் கட்சிகளும் அழுத்தந் திருத்தமாகச் சொல்லியிருக்கின்றன என்றார்கள். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இப்போது அதைப்பற்றிப் பரிசீலிப்பதற்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்வதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

மாவட்ட எல்லைக் கோடுகளையெல்லாம் மாற்றியமைப்பதைப் பற்றி பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். தற்பொழுதுள்ள எல்லைக்கோடுகளை மாற்றியமைக்கின்ற செயற்குறிப்பு எதுவும் இல்லை. பெரிய மாவட்டங்களை இரண்டு மாவட்டங்களாகப் பிரித்துச் செயல்பட வேண்டுமென்று சிலர் கூறினார்கள். ஏற்கனவே நிர்வாக வசதிக்காகத்தான் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கலெக்டர், டி.ஆர்.ஓ. இன்னும் அவர்களின்கீழ் பி.ஏ.க்கள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றனர். சில நேரங்களில் அவர்களுக்கேகூட உரிய வேலை இல்லை என்ற நிலைமையும் வருகின்றது. எனவே மாவட்டங்களை இரண்டாக்குவது தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

ஜமாபந்தி பற்றிப் பல உறுப்பினர்கள் கூறினார்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய மாவட்டத்திலே இருக்கின்ற முறையை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். சென்ற ஆண்டே ஜமாபந்தி ஒழிப்புத் திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலேயும் அந்த முறையை ஒழித்துவிட்டு பைலட் ஸ்கீமாக ஏற்படுத்தினோம். அதைப் பற்றிய அறிக்கைகள் இப்பொழுது வந்துகொண்டிருக்கின்றன. ஜமாபந்தி முறை பழைய முறை, அதை ஒழிக்க வேண்டுமென்று கருதாமல் ஜமாபந்தி முறையில் உள்ள குறைகளைக் களைவது நல்லது என்று நினைக்கிறேன். இங்கே பேசியவர்களில் கூட சிலர் ஒழிக்க வேண்டுமென்று பேசினார்கள், சிலர் ஒழிக்கக் கூடாது என்று பேசினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களும்கூட முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த முறையை ஒழிக்கக் கூடாது, வேறு ஏதாவது சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சில அதிகாரிகளிடமிருந்தும் இன்னும் அறிக்கைகள் கிடைக்கவில்லை. அவையெல்லாம் வந்த பிறகு அரசு நிதானமாக முடிவு செய்யலாம். ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்திற்குத் தாண்டும்பொழுது பொறுமையோடு செய்ய வேண்டும், அவசரப்பட்டுச் செய்வதால் வரும் பின்விளைவுகளையும் கவனிக்க வேண்டும். எனவே, அரசு நிதானமாக இதிலே ஒரு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே பட்டாக்கள் கொடுக்கப்படவில்லை என்றும் ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்னும் அங்கே சர்வே நடந்து முடியவில்லை. இப்பொழுதுதான் சர்வே நடந்து முடிந்திருக்கிறது. 30—6—1971-ல்தான் முடிந்து இருக்கிறது. அந்த சர்வே படி இம்ப்ளிமெண்ட் பண்ணுவதாக இருக்கிறோம். அங்கேயுள்ள அதிகாரிகள் தமிழ்நாட்டு சர்வே முறை பற்றித் தெரியாதவர்களாக......



திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஏற்கனவே திருவிதாங்கூர் சர்க்காரால் அங்கே சர்வே செய்யப்பட்டு அந்த சர்வே ரிக்கார்டுகள் எல்லாம் அங்கேயுள்ள ரெவின்யூ அதிகாரிகளிடம் இருக்கின்றன. அதன் அடிப்படையிலாவது பட்டாக்கள் அளிக்க என்ன சங்கடங்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்பொழுது சர்வே முடிந்து விட்டது என்று சொன்னேன். அங்கேயுள்ள ரெவின்யூ அதிகாரிகளுக்கு இங்கே உள்ள முறை தெரியாததால் அவர்களை இங்கேயுள்ள வேறு மாவட்டங்களுக்குக் கொண்டுவந்து 6 மாதம் 3 மாதம் என்று டிரெயினிங் கொடுத்து, அந்த முறையை அதற்குப் பிறகு அங்கே அமலாக்கலாம் என்ற நிலைமை பரிசீலனையில் இருக்கிறது. நிச்சயம் அங்கேயுள்ளவர்களுக்குப் பட்டாக்கள் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தம் பற்றிய குழு மீண்டும் புதுப்பிக்கப்படுமா என்று கேட்டார்கள். ஏற்கனவே நியமிக்கப்பட்ட குழு சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரோடு முடிந்துவிட்டது. மீண்டும் அந்தக் குழு புதுப்பிக்கப்படுவதற்கு யார் யார் அந்தக் குழுவிலே உறுப்பினர்களாக இருப்பார்கள் என்ற தீர்மானம் இங்கே வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தச் சட்டத்தைப்பற்றிப் பேசும்பொழுது விதிவிலக்குகளில் எதை எதை விலக்கலாம் என்பதை ஏற்கனவே போடப்பட்டிருந்த குழு ஆராய்ந்து முடிவுகள் தெரிவிக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே இருந்த குழு இடைக்கால அறிக்கையாக கரும்புத் தோட்டத்திற்கும் மேய்ச்சல் காட்டிற்கும் உள்ள விதிவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று சிபாரிசுகள் செய்தது. அதைப்பற்றிய சட்டமும் இந்தக் கூட்டத்தொடரிலே வர இருக்கிறது.

கைட்லைன்ஸை கிராம அதிகாரிகள் சரியாகப் பின்பற்றுவதில்லை என்று குறிப்பிட்டார்கள். கைட்லைன்ஸ் படி சரியாக நடக்கிறதா என்பதைப் பார்க்க அதிகாரிகள் இருக்கிறார்கள். அதைக் கவனித்து வருகிறார்கள்.

எம்.எல்.ஏக்கள், கலெக்டர்களுக்கு, கோட்டாட்சித் தலைவர்களுக்கு, வட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கடிதங்கள் எழுதினால் பதில் எழுதுவதில்லை என்ற புகார் வந்திருக்கிறது. எம்.எல்.ஏ.-க்கள் அப்படி அதிகாரிகளுக்குக் கடிதங்கள் எழுதினால் அவர்கள் பதில் எழுதவேண்டுமென்று இப்பொழுதே கூட உத்திரவு இருக்கிறது. இருந்தாலும் அது மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினத்தில் பேசிய சில உறுப்பினர்கள் கிராம அதிகாரிகள் ஏதோ ஒரு சட்ட விரோதமான கூட்டம் என்பதுபோல் பேசினார்கள். முதலமைச்சர் அவர்கள் அப்படிப் பேசுவது சரியல்ல என்று தெரிவித்தார்கள். அதற்குப் பிறகும்கூட அப்படியே குற்றஞ்சாட்டிப் பேசினார்கள் சிலர். கணக்குப்பிள்ளை, மணியக்காரர், தோட்டி,

[திரு. ப. உ. சண்முகம்] [1971 ஜூலை 7

தலையாரி யாராய் இருந்தாலும் தவறு செய்திருந்தால் அதைப் பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாகக் குற்றம் சாட்டுவது சரியாகாது.

நேற்றைய தினம் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் லோக்கல் போர்ட்ஸ், குறிப்பாக கார்ப்பரேஷனுக்குக் கொடுத்த கடனை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். தாராளமாகக் கேட்டார்கள். சட்ட மன்ற உறுப்பினராக அவர்கள் இருந்து பேசவேண்டும், கார்ப்பரேஷன் உறுப்பினராகப் பேசக் கூடாது. இங்கே இருக்கிற பொறுப்பிலே இருந்து பேசும்பொழுது கார்ப்பரேஷனுக்குக் கொடுத்திருக்கிற கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொல்வது சரியல்ல ......

THIRU K. M. SUBRAMANIAM: I represent a constituency, T. Nagar Assembly constituency.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, எல்லோரும்தான் ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். சென்னையிலே 12 தொகுதியிலிருந்தும் வந்து இருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்வதில் தவறு இல்லை. கடனை எப்படி வசூலிப்பது என்று சொல்லாமல் கார்ப்பரேஷன் திவால் ஆகிவிட்டதுபோல கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். எப்படி கொடுக்கப்பட்டு இருக்கின்ற கடனை வசூலிக்க வேண்டுமென்று சொல்ல வேண்டுமென்றுதான் சொன்னேன். எனவே, கடனை ரத்து செய்வதற்கு அரசாங்கத்திற்கு யோசனை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு மாவட்டத்திற்கு இரண்டு கலெக்டர்கள் போடவேண்டுமென்று சில உறுப்பினர்கள் சொன்னார்கள். ஏற்கனவே ரெவின்யூக்கென்று தனி அதிகாரி, விஸ்தரிப்புக்கென்று தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருப்பதால், அதற்கு அவசியமில்லை.

பட்டாக்கள் கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது என்று திரு. பரந்தாமன் அவர்கள் குறிப்பிட்டார்கள். காலதாமதம் ஏற்படக் கூடாது என்று அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது, எனவே காலதாமதம் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் அவர்கள் மாவட்ட வளர்ச்சி குழுவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருக்கக் கூடாது என்றும் வேறு பிரதிநிதியைப் போடவேண்டுமென்றும் சொன்னார்கள். மாவட்ட வளர்ச்சிக் குழு அந்த மாவட்டத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றி விவாதிக்கின்ற குழுதானே ஒழிய செயல்படுகின்ற குழுவல்ல. எனவே அதை மாற்றி நான்-அபிஷியலைத் தலைவராக போடுவதாக இல்லை. காரணம் செயல்படுகின்ற குழுவல்ல அது, என்ன என்ன வேலைகள் அந்த மாவட்டத்திலே நடந்திருக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்க்கும் ஆலோசனைக் குழுதான் அது. எனவே அதற்கு அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1971 ஜூலை 7] [திரு. ப. உ. சண்முகம்]

கடன்களை ஒத்திவைக்க வேண்டுமென்றும் ரத்துச் செய்ய வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. நாம் வாங்கியிருக்கிற இடங்களில் அவர்களும் ஒத்திவைக்க வேண்டுமென்று நாம் சொல்ல முடியாது. அரசாங்கம் கொடுத்திருக்கிற கடன்களையும் ரத்துச் செய்ய முடியாது. பஞ்சத்தின் காரணமாக இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து மழை பெய்யாமல் இருந்தால் அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்தால் அரசாங்கம் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீப்பிடித்து எரிந்த வீடுகளுக்கு ஐநூறு ரூபாய் கொடுக்க வேண்டுமென்று திரு. அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிக் கொடுத்தால், சாதாரண வீடுகள் தானாக எரிய ஆரம்பித்து விடும் (சிரிப்பு) முன்னால் இருந்த அரசு 30 ரூபாய் வீட்டுக்காகவும், 10 ரூபாய் துணிக்காகவும் என்று மொத்தம் 40 ரூபாய் கொடுத்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு வீட்டுக்காக 30 ரூபாய் என்று இருந்ததை 60 ரூபாயாகவும், துணிக்காக 10 ரூபாய் என்று இருந்ததை 20 ரூபாயாகவும் உயர்த்தியிருக்கிறார்கள். அங்கிருக்கும் கோட்டாட்சித் தலைவரவர்களே அங்கே புறம்போக்கு நிலமோ, மரங்களோயிருந்தால் வெட்டிக் கொள்ளவும் அனுமதிக்கிறார்கள். 80 ரூபாய்க்கு மேல் உயர்த்துவதாக இல்லை, மற்றவர்களுக்கு அந்தத் திட்டத்தை விரிவு படுத்துவதாகவும் இல்லை.

திரு. கருணாநாதன் அவர்கள் குந்தாவினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பட்டா வழங்கவில்லை, நிலம் சொந்தமாக இல்லை என்று குறிப்பிட்டார்கள். அந்தப் புகாரைப்பற்றி விசாரிப்போம். அவர்களுக்கு உள்ளபடியே நிலம் வழங்கப்படாமல் இருந்தால், வேறு நிலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நில அடைமானம். ஏற்கனவே 5 ஏக்கர் புஞ்சையும், 3 ஏக்கர் நஞ்சையும் செய்யலாம் என்று, நிலமற்ற ஏழைகளுக்குச் செய்யலாம் என்று சட்டம் விதித்திருந்தோம். இப்பொழுது நிலத்தின் பரப்பளவு குறைந்து கொண்டே வருவதாலும், பரவலாக நிறைய பேர்களுக்குக் கொடுக்க வேண்டி இருப்பதாலும் 5 ஏக்கர், 3 ஏக்கர் என்றிருப்பதை 3 ஏக்கர், $1\frac{1}{2}$ ஏக்கர் என்று குறைத்திருக்கிறது. வயபிள் யூனிட் வராது என்று சொல்கிறார்கள். 3 ஏக்கர் புஞ்சையும், $1\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சை நிலத்தையும் வைத்துக்கொள்ளாமல் 1 ஏக்கர் வைத்திருப்பவர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் அந்த வயபிள் யூனிட் இல்லை என்பதற்காக விற்றுவிட்டுப் போவதில்லை, வேறுவழியில்லாமல் குறைவாகக் கொடுப்பதில் தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர்.டீ.ஓ. தலைமை வகிக்கும் அட்ஹாக் கமிட்டி பற்றி விவாதிப்பது நேற்றுமுன்தினம் உள்ளாட்சி மானியத்தில் விவாதிக்கப்பட்டிருக்க வேண்டிய பிரச்சினையாகும். அது உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட விவகாரம்.

மாவட்டங்களின் அளவை மக்கள் தொகைக்கு ஏற்றவாறு அமைக்க வேண்டுமென்றெல்லாம் நண்பர் திரு. சுவாமிதாஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். இருக்கின்ற மாவட்டங்களைப் பெரிய

தாகவோ அல்லது சிறியதாகவோ ஆக்கும் யோசனை, செயற்குறிப்பு தற்போதைக்கு இல்லை. ஆனாலும் அது ஆலோசிக்கப்பட வேண்டிய விஷயம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வெட்டப்பட்ட குழாய்கிணறுகள் வேலை செய்யவில்லை, பழைய குழாய்களைப் போட்டு ஏமாற்றியது போன்ற கருத்தை திரு. சுவாமிதாஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எப்படிப் போடப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. எனவே ஒரு இடத்தில் அப்படி நடந்திருந்தால், அந்தத் தவற்றைக் குறிப்பிட்டு அங்கத்தினர் அவர்கள் எழுதினால் விசாரிக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எ. சுவாமிதாஸ்: ஓர் இடம் என்று சொல்லவில்லை. பரவலாக, பஞ்ச நிவாரணத்தின்பொழுது போடப்பட்ட எல்லாக் குழாய்களும் அப்படி இருக்கின்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எல்லாயிடங்களிலும் தண்ணீர் வரவில்லை என்று சொன்னால் ஆட்சி மன்றத் தலைவரிடம் விசாரிக்கிறேன். அப்படி இருப்பதற்கு நியாயமில்லை, இருக்க முடியாது என்று நம்புகிறேன்.

நேற்று பேசும்பொழுது அரசு அலுவலர்கள் வேலை செய்யாது கட்சிக் கண்ணோட்டத்தில் சுற்றி உட்கார்ந்து கொண்டு செய்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. எப்பொழுது, எங்கே என்று கேட்டதற்குக் குறிப்பாகச் சொல்லவில்லை. கட்சிக் கண்ணோட்டத்துடன் அதிகாரிகள் நடந்து கொள்ளவில்லை. வெட்டுத் தீர்மானம் கூட ஒருவர் கொடுத்திருக்கிறார், மாவட்ட ஆட்சித் தலைவர் கட்சிக் கண்ணோட்டத்தோடு நடந்து கொள்ளக் கூடாது என்ற கருத்தில். அவர் மட்டுமல்ல, அரசு அலுவலில் உள்ள எந்த அதிகாரியும் கட்சிக் கண்ணோட்டத்துடன் நடந்து கொள்ளக் கூடாது, அது எந்தக் கட்சிக் கண்ணோட்டமாகயிருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும்தான் அவர் ஆதரவாக இருக்கக் கூடாது என்று விதி அல்ல. எந்த ஒரு கட்சிக்கும் ஆதரவாக அவர் இருக்கக்கூடாது. தனிப்பட்ட கொள்கை இருந்தால், அதை மனத்திலே வைத்துக் கொள்வதில் தவறு இல்லை, ஆனால் கட்சிக் கண்ணோட்டத்தோடு எந்த அதிகாரி ஈடுபட்டாலும் அதுபற்றி நிரூபிக்கப்பட்டால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனுநீதி முறையைப்பற்றி எல்லா அங்கத்தினர்களும் பாராட்டிப் பேசினார்கள். ஆனால் சிலர், திரு. ஜேம்ஸ் அவர்களும் மற்றபடி திரு. ஜப்பார் அவர்கள் என்று நினைக்கிறேன், இவையெல்லாம் நாடகம், சரியாக வரவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டார்கள். மனுநீதி திட்டம் எல்லாம் நாடகம் அல்ல, மக்களுக்கு நீதி வழங்க, மனுக்களை வாங்கி உத்தரவு போடச் சொல்லுகிறோம். அது நாடகமாக அவர்களுக்குத் தெரிந்தால் நான் வருத்தப்பட மாட்டேன். பார்க்கிறவர்களின் கண்களின் கோளாறே தவிர, திட்டத்திலே கோளாறு கிடையாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தண்டத் தீர்வையைப் பற்றி எல்லா அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்பட்டுக்





கொண்டிருக்கிறது. தண்டத் தீர்வையில் பல ரகங்கள், பல விதங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. தண்ணீர் எடுப்பது ஒருவிதம், புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது ஒருவிதம், தண்ணீர் எடுத்து யாருக்காவது விற்பது ஒருவிதம். இப்படிப் பல விதமாகப் பலயிடங்களில் இருக்கின்றன. தண்டத் தீர்வை விதிப்பதைக் குறைக்க வேண்டுமென்றால், தண்டனைத் தீர்வையாக இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். குற்றம் செய்பவர்களுக்கு விதிக்கும் தண்டனைத் தீர்வை என்று நான் தெரிவித்திருக்கிறேன். யாரையும் கேட்காமல் அரசாங்கத்தின் தண்ணீரை, சம்பந்தப்படாதவர்கள், தண்ணீர் உள்ள இடத்திலே எடுத்துக் கொள்கிறார்கள். அதனால் கீழ் ஆயக்கட்டுக்காரர்களுக்குத் தண்ணீர் போகவில்லை, அவர்கள் நீதிமன்றங்களுக்குப் போகிறார்கள். எனவே அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. இன்றைக்கு வந்திருக்கின்ற செய்திப்படி சேலம் மாவட்டத்திலே தண்ணீர் தீர்வை கொடுக்கக்கூடாது என்று சிலர் செய்கிறார்கள் என்றெல்லாம் கூறுவதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. நான் அவர்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ள விரும்புவது தண்டத் தீர்வைபற்றி ஏற்கனவே முதலமைச்சர் அவர்களோடு பேசப்பட்டுள்ளது. யார் அதைத் தடுத்தாலும் தவறுதான்.

சேலம், மற்ற மாவட்டங்களில் இப்பொழுது நடந்து வருகின்றன. இதிலுள்ள கோளாறுபற்றி வற்புறுத்திக் கூறுவது நல்லது என்று கருதுகிறேன். முன்கூட்டியே அங்கத்தினர்கள் தெரிந்து வைத்திருப்பது நல்லது என்பதற்காகக் கூறுகிறேன். சேலம், கோவை மாவட்டங்களிலே ஓடும் காவிரியாற்று நீரை எடுத்து விற்கிறார்கள். சிலர் 5 செண்ட் பூமிதான் வைத்திருக்கிறார்கள். ஒரேவொரு குழாயைப்போட்டு, படுகையாற்றுக்கும் குழாய்க்கும் இடையே பைப்பு போட்டு, 50 ஹார்பஸ்பவர் மோட்டார் வைத்து 60 அடிக்கு உயரத்திற்கு டேங்க் கட்டி அங்கு டிஸ்ட்ரிபூட்டர் மூலம் 3 மைல், 15 மைல் தூரத்திற்குக் குழாய்மூலம் கொண்டுபோய் விலைக்கு விற்கிறார்கள். சேலம் மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும் சில இடங்களில் நடந்து கொண்டிருக்கிறது. சேலம் மாவட்டத்தில் பார்த்தால் பெரிய தொழிற்சாலை போன்று காட்சியளிக்கும். பெரிய படங்களையெல்லாம் கொண்டுவந்து, அதை முதலமைச்சரவர்கள் பார்த்தார்கள். பார்ப்பதற்குப் பயங்கரமாக இருக்கிறது.

மூலதனமாக 3 லட்சம், 4 லட்சம் என்று போட்டு தண்ணீரை விலைக்கு விற்கிறார்கள். அதிலுள்ள சங்கடம் என்னவென்றால் தண்ணீரை விலைக்கு விற்கும்பொழுது தண்ணீரை உபயோகிக்கும் விவசாயிகள் அவர்களுக்கு ஒரு விலை கொடுக்கிறார்கள். அந்த விவசாயிகள் உபயோகிக்கும் தண்ணீருக்கும் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. ஆனால் தண்ணீரை விற்பவர்கள் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஹைவேஸ் ரோடாகயிருந்தாலும், நேஷனல் ஹைவேஸ் ரோடாகயிருந்தாலும் குறுக்கே வெட்டிவிடுகிறார்கள். நேஷனல் ஹைவேஸ் ரோடில் நாம்கூட வெட்டுவதற்கு உரிமை இல்லை, டெல்லியைக் கேட்டுக் கொண்டுதான் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் இவர்கள் நேஷனல் ஹைவேஸ் ரோட்டிலும்

குறுக்கே வெட்டி பைப்புகளை வைத்து மூடிவிடுகிறார்கள். இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். இப்படிப் பட்ட ஒரு நிலை சேலம் மாவட்டத்திலே ஒரு தொழிலாக இருக்கிறது. இதைத் தடுக்கக் கடுமையான நடவடிக்கை எடுத்தாக வேண்டியிருக்கிறது. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுப்பணித் துறைக்கும், மாவட்ட ஆட்சி மன்றத் தலைவருக்கும் தாக்கீது அனுப்பியிருக்கிறது. பொதுப்பணித் துறை சீக்கிரமாக நடவடிக்கை எடுப்பார்கள்.

தண்டத் தீர்வை விதிப்பது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு விதமாக விதிக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்படி 1-இலிருந்து 20 மடங்கு வரை, உயர்ந்த பட்சமாக 20 மடங்கு வரை தண்டத் தீர்வை விதிக்கலாம் என்று உத்தரவு இருக்கிறது. அதன்பேரில் சிலயிடங்களில் 20 பங்காக இருக்கலாம், சில இடங்களில் 15 பங்காக இருக்கலாம், சிலயிடங்களில் 5 பங்காகவும் இப்படி மாறிமாறி இருக்கிறது. இதற்காக அரசு புதிய யோசனை செய்து, தனித் தனி சிஸ்டத்திற்கு, மோட்டார் சிஸ்டத்திற்கு, காவிரி சிஸ்டத்திற்கு அல்லது வாய்க்கால் சிஸ்டம் என்று இப்படியிருந்தால் தனித் தனியாக ஆராய்ந்து, போர்டு மெம்பர்களை அனுப்பி சரியாக இருக்கிறதா, என்ன தீர்வை விதிக்கலாம் என்று ஆராய இருக்கிறோம். எனவே, தண்டத் தீர்வையைக் குறைக்க வேண்டுமென்று சொல்வதில் அர்த்தமேயில்லை. தண்டத் தீர்வையைக் குறைப்பதன் மூலம் இன்னும் சிலர் திருட்டுத்தனமாக உபயோகிக்க துணையாக அமையும். அரசுக்கு வருமானம் வருகிறது என்பது பிரச்சினை அல்ல. கீழ் ஆயக்கட்டுக்காரர்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்பது முக்கிய காரியம். போடப்பட்டிருக்கும் தண்டத் தீர்வையை வசூலிப்பதற்கு அரசு வழிவகைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. சுரேந்திரன் அவர்கள் பேசும்பொழுது அவர்கள் பகுதியிலே
பி.ப. 1-00 தண்டத் தீர்வை பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கு பூமிக்குச் சொந்தம் இல்லாதவர்கள், காட்டுப் பகுதி நிலங்களை 15 ஏக்கர், 20 ஏக்கர், 30 ஏக்கர் என்று பிடித்து வைத்திருப்பவர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். அந்த நிலங்களை இதுவரை அடமானம் செய்யக் கூடாது, குத்தகைக்குத்தான் விட வேண்டுமென்று இருந்தது. மேட்டூர் பகுதிக்கு முதலமைச்சர் அவர்கள் சென்றிருந்தபோது அந்தப் பகுதி விவசாயிகள் முதலமைச்சரிடம் மனுக் கொடுத்தார்கள். குத்தகையைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் பெரிய மனது வைத்து குத்தகையாகக் கூட வேண்டாமென்று சொல்லி அந்த நிலத்தை அவர்களுக்கே பட்டா செய்துகொடுக்கும்படி உத்தரவிட்டு வந்தார்கள். அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. "ஏற்கனவே ஒரு ஆளுக்கு புஞ்சை நிலமாக இருந்தால் 5 ஏக்கர் என்றும் நஞ்சை நிலமாக இருந்தால் 3 ஏக்கர் என்றும் சர்வே செய்து முடிவு செய்யப்பட்டிருந்தது. முதலமைச்சர் அவர்கள் வந்துவிட்டுப் போன பிறகு அது 3 ஏக்கர் 1½ ஏக்கர் என்ற அளவிலே குறைக்கப்பட்டிருக்கிறதே" என்று சொன்னார்கள். ஒவ்வொருவரும் அரசாங்க நிலத்தை 15 ஏக்கர் 20 ஏக்கர் என்று



வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்க நிலத்திலே ஏழாண்டுக் காலம், பத்தாண்டுக் காலம் உழுதிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவ்வளவையும் பட்டா செய்து கொடுக்க முடியாது. அரசாங்க உத்தரவுப்படி நிலமற்ற ஏழைகளுக்கு எப்படி பட்டா செய்து கொடுக்கப்படுகிறதோ, அதே அளவுக்குத் தான் பட்டா செய்து கொடுக்கப்படும். இதுவரை உழுது வந்தார்கள், பணம் செலவழித்திருக்கிறார்கள், கிணறுகளை தோண்டியிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் இதுவரை அதிலிருந்து சம்பாதித்திருப்பது போதும் என்று கருதி அது மற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும். அவர்கள் ஏற்கனவே பணத்தைச் செலவழித்திருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக ஒருவருக்கே 20 ஏக்கர் பிரித்துக் கொடுப்பது என்று சொன்னால், மேட்டூர் பகுதிக்கு மட்டும் அவ்வாறு செய்வது என்று சொன்னால் அது நீதியாகாது.

திரு. எம். சுரேந்திரன்: அமைச்சர் கூறியிருப்பது வனவாசி, பக்கநாடு ஃபாரஸ்ட் ஏரியாவைப் பற்றியது. தண்டத் தீர்வைப் பற்றி நான் கூறியபோது அந்தப் பகுதியை நினைத்துக் கூறவில்லை, என்னுடைய தொகுதியிலுள்ள நிலை பற்றித்தான் கூறினேன்.

திரு. சோ. அழகர்சாமி: அமைச்சர் அவர்கள் பேசும்போது கீழ் ஆயக்கட்டுக்குப் பாதகமாக இருப்பதால், தண்டத் தீர்வை போட்டிருப்பதாகக் கூறினார்கள். எந்த விதமான ஆயக்கட்டுக்கும் போகாமல் வீணாக ஓடையிலே போய் வீணாக சமுத்திரத்தில் போய்ச் சேருகிற தண்ணீரைப் பயன்படுத்தியவர்களுக்கும் தண்டத் தீர்வை விதித்திருக்கிறார்களே.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதுபற்றி ஆராய போர்டு மெம்பரை அந்தந்த இடங்களுக்கு அனுப்ப அரசு முடிவு செய்திருக்கிறது. சீப்பேஜ் வாட்டரை, வேறு வழி இல்லாமல் வருகிற தண்ணீரை, நிலத்தின் மீது போய்த்தான் தீரும் என்ற அளவுக்கு உள்ள இடங்களுக்கு தண்டத் தீர்வை விதிக்கப்பட்டிருப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சிஸ்டமாக தனித் தனியாக எடுத்து ஆராய வேண்டுமென்பதற்காக போர்டைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். விரைவில் இந்தக் காரியத்தை அவர்கள் முடித்துத் தருவார்கள்.

மேட்டூர் பகுதி தண்டத் தீர்வை அதே போன்றதுதான். சேலத்தில் நடப்பது போல்தான் மேட்டூரிலும் நடந்திருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் இதிலே உறுதுணையாக எடுக்க வேண்டும். அப்படி நடக்கின்ற காரியத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும் போது சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளுக்குக் குறுக்கே போய் நடவடிக்கை எடுக்க வேண்டாமென்று சொல்லக் கூடாது.

தண்டத் தீர்வை கடந்த நான்கு ஆண்டுக் காலமாக வசூலிக்கப்படாமல் இருந்ததை வசூலிக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. விவசாயிகள் நான்கு ஆண்டுகளுக்குச் சேர்த்துக் கொடுக்க சங்கடப்படுவார்கள் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. "மொத்தமாகக் கொடுக்க முடியவில்லை என்று சொன்னால் தவணை முறையில் கொடுப்பதாக

எழுதிக் கொடுக்கட்டும். அரசு பரிசீலித்து உத்தரவு போடத் தயாராக இருக்கிறது" என்று சட்ட மன்ற உறுப்பினர்கள் என்னிடத்தில் வந்து சொன்னபோது சொன்னேன். போனவர்கள் இதுவரை திரும்பி வரவில்லை. அந்த இடங்களுக்குப் போடப்பட்ட தண்டத் தீர்வையை ஒருகாலும் ரத்து பண்ண முடியாது. அதைக் கட்டித்தான் திரவேண்டும். வேறு வழி இல்லை. இதில் மறு பரிசீலனைக்கு இடம் இல்லை. அதுவும் காவிரியின் ஓரத்தில் தண்ணீர் எடுத்துப் பாய்ச்சுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இருக்கிறது. அதேபோன்று தண்ணீர் எடுத்து விற்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பது பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வேழவேந்தன் அவர்கள் பேசும்போது பெல்ட் ஏரியாவில் பட்டா கொடுக்கப்படாது நிறுத்தப்பட்டிருப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. திடீர் திடீரென்று குடிசைகள் தோன்றுகின்றன. நேற்றையதினம் காமராஜர் நகர் என்று இருந்தது இன்று கருணாநிதி நகர் ஆகக் காட்சியளிக்கிறது. ஒருசிலர் கையடி வாயடி செய்து 40, 50 குடிசைகளைப் போட்டு பட்டா செய்து கொடுக்கிறேன் என்று சொல்லி அரசாங்க அதிகாரிகளையும், அமைச்சர்களையும் முற்றுகையிட ஆரம்பிக்கிறார்கள். அதனால்தான் முதலமைச்சர் அவர்கள் இவற்றைப் பட்டா செய்து கொடுக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி புதிய புதிய குடிசைகள் தோன்றிக் கொண்டே போகுமானால், பின்னால் அரசாங்கத்தின் தேவைக்கு நிலத்தை விலை கொடுத்து வாங்கக் கூடிய நிலைமை ஏற்படும் என்ற காரணத்தினால்தான் முதலமைச்சர் அவர்கள் இந்த உத்தரவைப் போட்டிருக்கிறார்கள்.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கோட்டாட்சித் தலைவராக வருவதைப் பற்றி ஆட்சேபணை தெரிவித்தார்கள். அவர்கள் பின்னால் கலெக்டராக வருவதற்கு ரெவின்யூ டிவிஷனில் டிரெயினிங் வேண்டும். அவர்கள் தமிழர்களாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அப்படி நினைத்துப் பார்க்க முடியாது. பரந்த பாரதத்தில் எங்கிருந்தாவது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மத்திய அரசு போடும். வேறு வழி இல்லை. ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தவறு செய்தால் புகார் எழுதி அனுப்பலாம். முதலமைச்சரவர்களை விசாரிக்கும்படி கேட்டுக் கொள்ளலாம்.

திரு. மாரிமுத்து அவர்கள் பேசும்போது அடிப்படைத் தீர்வையைப் பற்றிச் சொல்லும்போது "நஞ்சைக்கு ஐந்து ஏக்கருக்குத் தீர்வை இல்லை என்று சொல்லிவிட்டீர்கள், புஞ்சைக்கு எல்லாவற்றுக்கும் அடிப்படைத் தீர்வை இல்லையென்று சொன்னீர்கள்; புஞ்சைக்கு அடிப்படைத் தீர்வை என்று ஒன்று இருந்ததை ரத்து செய்தீர்கள்; நஞ்சைக்கு அடிப்படைத் தீர்வை என்று ஒன்று இல்லை. தண்ணீர்த் தீர்வை என்பதை எப்படிப் பிரித்து அடிப்படைத் தீர்வையை நிர்ணயிக்கப் போகிறீர்கள்" என்று கேட்டார்கள். அதற்கும் உத்தரவு அரசாங்கத்திலிருந்து தயாராகி அனுப்பப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். பக்கத்திலுள்ள புஞ்சைக்கு என்ன தீர்வை விதிக்கப்பட்டிருந்ததோ, அதை அடிப்படைத் தீர்வை





யாக நஞ்சைக்கு வைத்துக் கொள்ளவேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த வகையில் வரி நஞ்சைக்கு நீக்கப்படும். சில சிஸ்டத்தின்கீழ் இருக்கும் நிலங்களில் சாத்தனூர், கிருஷ்ணகிரி போன்ற அணைப் பகுதிகளில் போடப்படும் வரிகள் தண்ணீர்த் தீர்வை அப்படியே இருக்கும். அங்கு ஏற்கனவே புஞ்சையாக இருந்த காலத்தில் என்ன தீர்வை இருந்ததோ, அந்தத் தீர்வையை மட்டும் அரசாங்கம் ஐந்து ஏக்கருக்கு ரத்து செய்ய உத்தேசித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்சாலிடேஷன் பற்றிக் குறிப்பிட்டார்கள். கன்சாலிடேஷன் பஞ்சாப் மாநிலத்தில்கூட சரிவர வரவில்லை. நிலத்தினைப் பிரிக்கக் கூடாது என்று உத்தரவு போட அதிகாரம் இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும். கன்சாலிடேஷன் தமிழகத்தைப் பொருத்தமட்டில் சரியாக வராது.

நிலத்தின் மீதுள்ள வரிகளை எல்லாம் பல வரிகளாகப் போடப்பட்டிருப்பதையெல்லாம் ஒரே வரியாக ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவைகளைப் பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டுமே தவிர, அவசரப்பட்டு முடிவு எடுத்துவிட முடியாது.

குத்தகைதாரர், நிலத்தைச் சாகுபடி செய்கின்றவர்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றிய திட்டத்தை தஞ்சை மாவட்டத்திற்கு மட்டுந்தான் அறிவித்திருக்கிறார்கள், தமிழ்நாடு முழுவதும் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். முதல் கட்டமாக தஞ்சை மாவட்டத்தில் என்றுதான் முதலமைச்சர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில்தான் பெரும்பகுதி இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் இருப்பது கொஞ்சந்தான். அப்படிக் குடியிருக்கின்றவர்களுடைய நிலத்தை சொந்தக்காரர்களிடமிருந்து அரசாங்கம் ஒப்படை செய்து அதை குடியிருப்பவர்களிடமிருந்து 15 மாதத் தவணைகளில் வசூலிக்க வேண்டுமென்று சட்டம் போட்டிருக்கிறோம். சட்டம் இந்தச் சட்டமன்றத் தொடரிலேயே வந்து நிறைவேற்றப்பட இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே விவசாயிகளுக்கு அதிக பாரம் இருக்காது. ஏற்கனவே ஒரு சட்டம் நிறைவேற்றியிருக்கிறோம். ஏற்கனவே நிலத்தில் குடியிருக்கின்றவர்களை அகற்றக்கூடாது என்ற முறையில் பாதுகாப்புச் சட்டம் போட்டிருக்கிறோம். அதன்கீழ் பாதுகாக்கப்பட்டவர்களுக்குப் புதிய சட்டத்தின்கீழ் அந்த நிலம் அவர்களுக்கே சொந்தமாக்கப்படும். அதற்கு முன்பு நிலச் சொந்தக்காரர்களுக்கு அரசாங்கம் பணத்தைக் கொடுத்து அந்த நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு நிலத்தைப் பட்டா செய்து கொடுத்துவிட்டு அவர்களிடமிருந்து அந்தத் தொகையை 15 தவணைகளில் வாங்க திட்டமிடப் பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாஸ் புக் பற்றி இங்கே பேசப்பட்டது. இதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. விவசாயிகளுக்கு பாஸ்புக் கொடுப்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது.

டைரக்டர் ஆப் செட்டில்மெண்ட் அது எப்படி அமைய வேண்டுமென்று ஒரு மாடல் தயாரித்து இருக்கிறார்கள். எல்லா விவசாயிகளுக்கும், நிலச் சொந்தக்காரர்களுக்கும் தாலுக்கா அலுவலகத்தின் மூலமாக கொடுக்கப்படும். இதை இனாமாக கொடுக்க முடியாது. இதை புத்தக வடிவில் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்குண்டான விலை எவ்வளவு குறைத்து வைக்க முடியுமோ, அவ்வளவு குறைத்து வைக்கப்படும். அதில் எல்லா விவரங்களும் அடங்கியிருக்கும். இன்னொருவருக்கு விற்றால் கூட, எப்படி காரை விற்றால் அதில் டிராபிக் ஆபீசில் பதிவு செய்து கொடுக்கிறார்களோ, அதைப்போல், இந்தப் பாஸ் புக்கையும் தாலுக்காபீசுக்கு எடுத்துச் சென்று பதிவு செய்து கொள்ளலாம்.

திரு. த. ந. அனந்தநாயகி: அந்த் பாஸ் புக்கில் என்கம்பரன்ஸ் என்டர் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எது எது செய்யமுடியுமோ, அதைச் செய்ய முடியும்.

மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்களுக்கு வேலை பளு அதிகமாக இருக்கிறது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத் தொடருக்கு வரவேண்டாம் என்று சொல்லிக் கொண்டார்கள். வேலை பளு அதிகமாக இல்லை. இருக்கிற வேலை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு போதுமானதாக இருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத் தலைநகரை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அது அரசின் பரிசீலனையில் இல்லை. அப்படி ஒரு செயற் குறிப்பும் அரசிடம் இல்லை. எல்லாக் கட்சிகளும் ஒரு மனதாக ஏற்றுக் கொள்வதாக இருந்தால், தலைநகரை மாற்ற அரசாங்கம் யோசிக்கும், அதற்குத் தயாராக இருக்கிறது. குறிப்பிட்ட இடத்திற்கு எல்லாக் கட்சிக்காரர்களும் ஒப்புக்கொள்வதாக இருந்தால், யாருக்கும் ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடு) அந்தத் தொகுதியில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கே இருக்கும் மற்றத் தலைவர்களும் ஒப்புக்கொள்வார்களானால், இராமநாதபுரம் மாவட்டத்தை எங்கே வேண்டுமானாலும் மாற்றுவதைப் பற்றி அரசு யோசிக்கும்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது ஒரு டெனன்சி ரிகார்டைப் பற்றி பத்திரிக்கையில் வந்து இருப்பதைப் பற்றி சொன்னார்கள். அப்படிப்பட்ட அறிக்கையை தயாரிக்க யாரையும் அரசு சொல்லவில்லை. அரசின் ஆலோசனை இல்லாமல், அரசு ஆணை இல்லாமல், அரசைக் கேட்காமல் ஒரு அதிகாரி செய்து விட்ட வேலையாகும். அவர் வெளி நாட்டுக்கு போவதற்கு முன்பு பத்திரிக்கையில் அதைப்போட்டு விட்டுப் போய் விட்டார்கள். அவர் மீது நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார். அவர் அந்த அறிக்கையில் கூறி இருக்கும் கருத்துக்கள் எல்லாம் சொந்த அபிப்பிராயம் ஆகும். அரசின் கொள்கை யல்ல. அப்படிப்பட்ட அறிக்கையை அரசு பார்த்ததே தவிர, அதை ஏற்றுக்கொள்ளவில்லை.



ரேஷன் கார்டுகள் விஷயத்தைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். ஏழை எளிய மக்களுக்கு வழங்கும் ரேஷன் கார்டுகளைப்பற்றிச் சொன்னார்கள். ரேஷன் ஆபீசர்கள், ஸோனல் ரேஷன் ஆபீசர்கள் போகஸ் கார்டுகளைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். கார்டுகள் விஷயத்தில் சென்னையில் இருக்கும், புதிய சென்சஸ் கணக்குப்படி, மக்கள் தொகை 23 லட்சம். நாம் வைத்து இருக்கும் ஒரு படி அரிசித் திட்டம், அதாவது ரூ. 300-க்கு கீழ் வருமானம் உள்ளவர்களுக்கு ரேஷன் வழங்கும் திட்டம், அதனால் பயனடையும் ஏழை மக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தால் கிட்டத்தட்ட 23 லட்சம் வருகிறது. இந்த 23 லட்சம் மக்களுக்கும் படி அரிசித் திட்டத்தின் கீழ் அரிசி அளித்து வருகிறோம். அதேபோல் கோயம்புத்தூரிலும் உள்ள மக்களின் மொத்த எண்ணிக்கை 3,10,000. ஆனால் இந்த படி அரிசித் திட்டத்தால் பயனடைபவர்கள் 3 லட்சம் பேர். இப்படி ஊரிலுள்ள எல்லோருமே இந்த ரூ. 300-க்குக்கீழ் சம்பளம் வாங்குபவர்கள்தானா? இதிலே போலிக்கார்டுகள் எத்தனை என்பதைக் கண்டுபிடிப்பதிலே அரசு கொஞ்சம் கடுமையாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. சமீபத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு போலிக் கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுப்பதில் அளவைக் குறைத்து இருப்பது அரசின் கவனத்தில் இருந்து வருகிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்படி போலிக் கார்டுகள் கண்டுபிடிப்பதில் அரசு கொஞ்சம் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. ஏழைகளுக்கு என்று தரப்படும் அரிசியை யாரோ சில பேர் மத்தியில் வாங்கி ஏழைகளுக்கு விற்றுக்கொண்டு இருப்பதை அரசாங்கம் கடுமையாகக் கண்காணித்து நடவடிக்கை எடுத்து வருகிறது. சமீப காலத்தில் சென்னையில் அரசாங்கம் விநியோகிக்கும் அரிசியை கடைகளில் விற்பது இல்லை என்று எனக்கு கடிதம் வந்து கொண்டு இருக்கிறது. அரசாங்கம், சென்னையைப் பொறுத்தவரையில், நல்ல அரிசியாகக் கொடுத்து இருக்கிறது. சில இடங்களில் புழுத்த அரிசியாக இருக்கிறது. நாம் கொடுக்கிற அரிசியை வழியிலே விற்று விட்டு வேறு அரிசியைக் கொண்டு வந்து கடைகளில் விற்றுவிடுகிறார்கள். அவர்கள்தான் இப்படி அரசாங்கத்தின் மீது பழி சுமத்தி விடுகிறார்கள்.

சில அதிகாரிகளின் துணையோடு சில வியாபாரிகள் வெளி மாநிலத்திற்கும் லாரிகள் மூலம் அரிசியைக் கடத்திச் செல்கிறார்கள். ஒரு முறை லாரிச் சொந்தக்காரர்களைக் கூப்பிட்டு, லாரிகள் எந்த விதமாகப் போகிறது என்று கணக்குக் காட்டுங்கள் என்று கேட்டபோது, என்னிடத்தில் குறித்துக் கொண்டு காண்பித்தார்கள். எல்லா லாரிகளும் கோவை மாவட்டத்தை நோக்கிப் போவது போல், சிகப்பு நிறத்தால் கோடு போட்டு காண்பித்தார்கள். அப்படியானால் கோவையில் அரிசி ரூபாய்க்கு 3 படி அல்லவா விற்க வேண்டுமென்று நான் கேட்டேன். அதேபோல், கோயம்புத்தூர், கன்னியாகுமரி,

[திரு. ப. உ. சண்முகம்] [1971 ஜூலை 7

மதுரை மாவட்டத்திலும், அரிசியை கள்ளக் கடத்தல் மூலம் கொண்டு செல்கிறார்கள். இதற்கு அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள். சில அதிகாரிகள் பிடிக்கப்பட்டு இருக்கிறார்கள். பிடிக்கப்படாமல் இருந்தால், கூடிய சீக்கிரம் பிடிக்கப்படுவார்கள். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இப்படி கள்ளக்கடத்தல் செய்யும் லாரிகள் எங்கெங்கே தமிழ் நாட்டில் ஓடுகின்றன என்பதைத் தேடிக்கண்டுபிடித்து, சென்ற வாரத்தில் கோவை மாவட்டத்தில் 5 லாரி நிறைய அரிசி கடத்திச் செல்லப்பட்டதை விஜிலென்ஸ் இலாகா கண்டுபிடித்து இருக்கிறது. அது போதாது.

தமிழ்நாட்டிலிருந்து தலை மூட்டை வழியாக அரிசியைக் கடத்துகிறார்கள். அங்கே இருக்கும் உழவர்களைப் பயன்படுத்தி, வேலையில்லாத கிராமத்து மக்களைப் பயன்படுத்தி, கெட்ட வழிகளில் மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு போடுங்கள் என்று சொல்கிறார்கள்.

அதோடு, கழுதைகள் மூலமாகவும் மூட்டைகளை கடத்தல் செய்கிறார்கள். கிட்டத்தட்ட 200–300 கழுதைகளை இதற்காகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு கழுதை மீதும் ஒரு மூட்டையை ஏற்றி அனுப்புகிறார்கள். அந்தக் கழுதைகள் எங்கே போகிறது என்று பார்த்தால் கேரள மாநிலத்திற்குச் செல்கின்றன. ஆட்கள் யாரும் உடன் வருவதில்லை. கழுதைகளை கைது செய்து மூட்டைகளை பறிமுதல் செய்து இருக்கிறோம். ஆட்கள் யாரும் கழுதையை மீட்க வராத காரணத்தால் ஏலம் போடும் நிலை வருகிறது.

தமிழக மக்களை இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன். எங்கெங்கே அரிசி கள்ளக்கடத்தல் செய்யப்படுகிறதோ அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். தமிழ் நாட்டை பட்டினி போட்டு விட்டு வெளி மாநிலத்திற்கு அரிசியை அனுப்பி விட்டு, தன்னுடைய இரும்புப் பெட்டி நிரம்பினால் போதும் என்று இரும்பு மனம் கொண்டவர்களை அரசு கண்டுபிடித்துத் தண்டிக்க உதவி செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் மக்களைப் பட்டினி போட்டு விட்டு தாங்கள் மட்டும் வாழலாம் என்ற மனம் கொண்டவர்களைத் தண்டிக்க அரசு தயங்காது. ஆகவே, அவர்கள் யார் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். வெளி மாநிலத்திற்கு அரிசியை லாரிகளில் எடுத்துச் செல்ல உதவுவது ஏழைத் தொழிலாளிகள்தான். வயிற்றுப் பிழைப்பிற்காக இப்படி நீங்கள் செய்தாலும், மூட்டைகளை தூக்கிப் போட்டவுடனே அரசாங்கத்திற்கு தகவல் கொடுங்கள். அப்படி நீங்கள் தகவல் கொடுக்கத் தவறிவிட்டால் தாறுமாறாக விலைகள் ஏறும். ஏழைகள் இதற்கு உடந்தையாக இருக்க வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மணலி கந்தசாமி அவர்கள் பேசுகிற நேரத்தில் கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களில் உழவர்கள் உழுகிறார்கள், அவர்களுக்கு அந்த நிலத்தை சொந்தமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். எது எதற்கு விதிவிலக்கு அளிக்கலாம் என்று



1971 ஜூலை 7] [திரு. ப. உ. சண்முகம்]

பரிசீலிக்க சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் குழு இவற்றை ஆராய்ந்து முடிவு எடுக்கும்.

பென்ஷன் ஸ்கீமைப் பற்றி மதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் வலியுறுத்திப் பேசினார்கள். அது பலமுறை அரசாங்கத்தாலே பரிசீலிக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டுள்ள ஒன்றாகும். இருந்தாலும் கூட இந்த அரசாங்கம் பொதுவாக அமைத்த பே-கமிஷன் மூலம் ஏற்பட்டு இருக்கும் அனுமலியை விசாரிக்கச் சொல்லியிருக்கிறோம். கல்வித் துறை இலாகாவும் கவனித்துக் கொண்டு இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

குத்தகை பதிவேடுகள் சரிவர இருக்க வேண்டும், தமிழ் நாட்டு விவசாயிகள் படிக்காதவர்கள் என்று குறிப்பிட்டார்கள். சரிவர இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், திருத்தி அமைத்து, அப்பீல் உரிமையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் மேல் ட்ரிப்யூனலுக்கும் போகலாம். அப்பீல்கள் முடிந்த பிறகு பட்டா வழங்கப்படுகிறது. அதில் ஒன்றும் தவறு ஏற்படாது என்பதைத் தெரிவிக்கிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது, விளம்பரத்திற்காக அரசாங்கம் ஏராளமாகத் தொகைகளைச் செலவழிக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இருக்கும் சுவரொட்டிகளையெல்லாம் பார்த்து விட்டு, இவையெல்லாம் அரசாங்கம் ஒட்டுகிறது என்று நினைக்க வேண்டாம். தனித் தனியாக அவரவர்கள் கூட்டம், விழா இவைகளை நடத்துகிறவர்கள் போடுகிறார்கள், ஒட்டுகிறார்கள். அதற்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை. இதனால் அரசாங்கத்திற்குச் செலவு என்று மயங்கி விடக்கூடாது. இப்படி விளம்பரம் செய்து, சுவரொட்டிகளைப் போட்டு, தலைவரை வளர்த்துவிடவும் முடியாது. அப்படி நினைப்பது தப்பான எண்ணம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஸ்லம் கிளியரன்ஸ் போர்டிலிருந்து வெளியிடுகிறார்கள். பத்திரிகைகளிலும், சுவரொட்டிகளாகவும் வந்ததை நாம் பார்த்தோம். அது அரசாங்கத்தின் செலவு என்று நினைத்துச் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஸ்லம் க்ளியரன்ஸ் போர்டு செய்வது சரிதான். குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் செய்வதால் அதில் தவறு ஒன்றும் இல்லை. அப்படிப்பட்ட விளம்பரச் செலவைக் குறைத்து, மிச்சப்படுத்தி, வேறு காரியத்திற்கு உபயோகிக்கலாம். என்பது யானைப் பசிக்கு சோளப் பொரி போலத்தான் இருக்கும்.

தாலுகாக்களிலும், யூனியன்களிலும் செய்வது டூப்ளிகேஷன் என்று குறிப்பிட்டார்கள். அதில் டூப்ளிகேஷன் இல்லை. யூனியன் வேலை தனி, தாலுகா வேலை தனி, ஒன்று வளர்ச்சித் திட்டம், மற்றது வேறு திட்டம். ஆகவே, அவ்விரண்டையும் ஒன்றாகப் பிணைக்க வேண்டாம்.

[திரு. ப. உ. சண்முகம்] [1971 ஜூலை 7

விளக்கங்கள் தந்துள்ளேன். உறுப்பினர்களுடைய சந்தேகங்களுக்கு விளக்கங்கள் கூடியவரையில் கொடுத்திருக்கிறேன். வருவாய்த் துறை, மற்ற மானியங்கள் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருக்கும் அத்தனை அங்கத்தினர்களும், தங்கள் வெட்டுப் பிரேரணைகளை வாபஸ் வாங்கிக் கொண்டு, மானியக் கோரிக்கைகளை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: சார், பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். தலைவர் அவர்களே, நான் கூறும்போது, பட்டா சம்பந்தமாகச் சொன்னேன். எங்கள் மாவட்டத்தில் ஏழை எளிய விவசாய மக்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களை பல்லாண்டுக் காலமாக, "அன்-அப்ஜக்ஷனபிள் எங்க்ரோச்மெண்ட்" என்ற அளவில் பயிரிட்டுக் கைவசம் வைத்திருக்கிறார்கள். அவைகளை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்பது ஒன்று.

மற்றொன்று, இந்த மனுநீதித் திட்டம் பற்றிச் சொன்னது நான் மிகைப்படுத்திச் சொன்னதாக அமைச்சர் கூறினார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன? எத்தனை மனுக்களுக்கு அரசாங்கத்திலிருந்து நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது? அந்தக் கணக்கை அமைச்சர் கலெக்டரிடமிருந்து வரவழைத்துப் பார்த்தால் நன்றாக இருக்கும் என்றுதான் குறிப்பிட்டேன். "கண்ணின் கோளாறு" என்று சொன்னார்கள். அது தரமுள்ள வார்த்தையா என்பது தெரியவில்லை. இப்படியே நாம் மாறி, மாறிச் சொல்லிக் கொண்டிருந்தால், சட்டமன்றத்தில் நம் தரந்தான் குறையும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மனு நீதித் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபேர் பேசியதாகவும், நாடகமாக இருக்கிறது என்று சந்தேகமாக இருக்கிறது என்று சொன்னதாகவும் அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுது பேசும்போதும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள விவரம் உங்களிடம் இருக்கிறதா என்றார்கள்.

மனு நீதித் திட்டம் என்பது 1969-ம் ஆண்டு, செப்டம்பர், 15-ம் தேதியன்று தொடங்கப் பெற்றது. மனுக்களைப் பெற்று, உடனடியாக நீதி அங்கேயே வழங்குவது என்ற அடிப்படையில், மக்கள் தங்களுடைய முறையீடுகளைத் தந்ததும் கூடுமானவரையில் மனுக்களைப் பார்த்து பரிகாரம் காணவேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம். இந்தத் திட்டத்தின்படி, மக்கள் அதிகாரிகளைத் தேடி, சிறு சிறு காரியங்களுக்கெல்லாம் செல்ல வேண்டிய அவசியத்தைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இருந்தவர்களை, அதிகாரிகளே மக்களை நாடிச் சென்று, அவர்களுடைய குறைபாடுகளைக் கேட்டு, சொல்லப்பட்ட குறைகளைக் களைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் வகுக்கப்பட்டது.

அதன்படி, ஒவ்வொரு மாதமும் தமிழ் நாட்டில் 1,500 கிராமங்களில், மாதத்தின் 5-ம் தேதியன்று நம்முடைய மாவட்டத்திலே உள்ள அதிகாரிகள் கிராம மக்களைச் சந்தித்து, அவர்களுடைய முறையீடு



1971 ஜூலை 7] [திரு. மு. கருணாநிதி]

களைப் பெறுகிறார்கள். அப்படிப் பெறுகிற நேரத்தில், அதிலே மிக முக்கியமாக இடம் பெறக்கூடிய விஷயங்களை—விவசாய நிலங்களுக்கு பட்டா செய்து கொடுத்தல், வீட்டு மனைகளுக்கு பட்டா செய்து கொடுத்தல் போன்றவை இதில் அடங்கும்—உடனடியாகக் கவனிக்கிறார்கள்.

இப்பொழுது இதுவரையில், மனு நீதித் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டதன் காரணமாக, 1970–71 மார்ச் வரையில், 4,04,072 ஏழை எளியவர்களுக்கு, நிலமற்றவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. 1969–70 மார்ச்வரை வீட்டு அடைமானம் செய்யப்பட்டுள்ளதன் எண்ணிக்கை 2,32,131 ஆகும். நத்தம் புறம்போக்கிலும், மற்ற புறம்போக்கிலும் அடைமானம் செய்ய வேண்டிய வீட்டு மனைகளின் விவரம்: நத்தம் புறம்போக்கு 1,64,078; மற்ற புறம்போக்கில் 1,40,040. ஆக மொத்தம் 3,04,118 அடைமானம் செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது. இவைகளையெல்லாம் மனு நீதித் திட்டத்தின் கீழ் விரைவாக அடைமானம் செய்ய முயற்சிகளை எடுத்திருக்கிறோம்.

குறிப்பாக இந்தத் திட்டத்தின்கீழ் என்னென்ன காரியங்கள் கவனிக்கப்படுகின்றன என்றால், நில அடைமானம், மனை அடைமானம், பட்டா மாற்றம், பட்டா நகல் கேட்டல், சர்வே எண் கேட்டு மது, சப்-டிவிஷன் செய்தல், நிலத்தை அளந்து அத்து காட்டுதல், ஆக்கிரமிப்புக்களை காலி செய்தல், 2-சி பட்டாவை நீக்கக் கோருதல், மரப் பட்டா செய்தல், நிலமாற்ற மற்றும் ஆர்ஜிதம் செய்தல், தண்டத் தீர்வை தள்ளுபடி, கடன் தொகை செலுத்தக் கெடு, நீர்ப்பாசன வசதி செய்தல், கால்நடைக்கு பவுண்டு கட்டுதல், முதியோர் உதவித் தொகை, சாதிச்சான்று வழங்குதல், வேலை வாய்ப்பு, ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு நஷ்ட ஈடு, வரிவஜா, கிராம அதிகாரிகள், தீவிபத்து நிவாரணம், பூதானம், செட்டில்மெண்ட், சாவடிகள் சம்பந்தமாக, தியாகிகள் மானியக் கோரிக்கை, இப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் மனு நீதித் திட்டத்தில் வருகின்றன. அதிகாரிகளிடம் சிறு சிறு விஷயங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றை அவ்வப்பொழுது அவர்கள் கவனிக்கிறார்கள்.

திருச்சி மாவட்டத்தில் மாத்திரமின்றி, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தாங்கள் செய்திருக்கும் காரியங்களை புத்தகமாகப் போட்டு, பொது மக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், இன்னும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களுக்கு இப்படிப்பட்ட புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

திருச்சியில், பட்டா நகல் கேட்டவர்கள் 431 பேர்கள்; 431 மனுக்கள் வந்தன. அவற்றில் முடிவு செய்யப்பட்டவை 387. இன்னும் நிலுவையில் உள்ளவை 44. அதேபோலத்தான் ஒவ்வொரு ஜட்டத்திலும் எண்ணிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். திருச்சி மாவட்டத்தில் 1970-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட புத்தகங்கள் கணக்கு இது.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 7

கன்னியாகுமரி மாவட்டத்தைப்பற்றிக் கேட்டார்கள். அங்கே பெறப்பட்ட மொத்த மனுக்கள் 6,082; அவற்றிலே முடிவு செய்யப் பட்டவை 5,513, நிலுவையில் இருக்கிறவை 569. இது 1970-ம் ஆண்டுக் கணக்கு. அதிலே பட்டா நகல் கேட்டுள்ளவை 15, முடிவு செய்யப்பட்டவை 11; நான்கு இன்னும் முடிவு செய்யப்படாமல் இருக்கின்றன. அதேபோல் உட்பிரிவு உள்ள பட்டா மாற்றம் கேட்டவர்கள் இரண்டு மனுக்கள், முடிவு செய்யப்பட்டவை இரண்டு. அதேபோலத்தான் நீர்ப்பாசன சிறு திட்டங்கள், முதியோர் உதவித் தொகை, குத்தகைப்பாட்டம் இவைகளெல்லாம் கவனிக்கப்பட்டிருக்கின்றன.

மொத்தத்தில், மனுக்கள் ஆங்காங்கே நல்ல வகையில் முடிவு காணப்படுகின்றன. நிதி நிலையைப் பொறுத்த பல காரியங்களை ஒத்திப்போடுகிறார்கள். இல்லாவிட்டால், அந்த இடத்திலேயே பட்டா வழங்குவது போன்றவைகள், இன்னும் சில்லரைக் காரியங்கள் தீர்க்கப்படுகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்து அவர்கள் வெளி யிட்டிருக்கும், "மக்கள் குறை தீர மனு நீதித் திட்டம்" என்ற புத்தகத்தில், பல கிராமங்களில் செய்த வேலைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அதில் 5, 6 படிக்க விரும்புகிறேன். மனுதார் பெயர், அப்துல் ஹையூப், மனு விவரம் பட்டா மாறுதல். எடுக்கப் பட்ட நடவடிக்கை, பட்டா வழங்கப்பட்டது. பஞ்சாயத்துத் தலைவர், சிட்டாகோட்டை, கேட்டது தெருவிளக்கு பல்பு; அது அங்கீகரிக்கப்பட்டது. சைபுதீன் என்பவர் கேட்டது பட்டா மாறுதல், அது வழங்கப்பட்டது. மரியந்தாஹா என்பவர் கோரியது பட்டா மாறுதல், அது வழங்கப் பட்டது. இன்னும் சிலவை தாசில்தார் நடவடிக்கையில் உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி மாவட்டந்தோறும் நடவடிக்கைகள் எடுக்கிறார்கள்.

ஆகவே, இந்த மனு நீதித் திட்டம், கிராம மக்களை சர்க்கார் அதிகாரிகள் நேரிலே சந்தித்து குறைகளை அறிவதற்கு ஏற்ற வகையில், நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்ட ஒரு திட்டமாகும். ஏதோ சில மாவட்டங்களில் சில கிராமங்களில் இந்தக் குறைபாடுகள் இருந்தால், அதைக் கண்காணிப்பதற்காகத்தான் சட்டமன்ற உறுப் பினர்கள் இருக்கிறார்கள். எங்கேயாவது அப்படித் தவறு நடந்திருந்து உறுப்பினர்கள் அதை உடனடியாக இந்த அரசின் கவனத்திற்கு எழுதி அனுப்பப்படுகின்ற நேரத்தில், அப்படிப்பட்ட அதிகாரிகள் நிச்சயமாக நடவடிக்கைக்கு உள்ளாவார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மக்களின் நன்மைக்காக இருக்கும் இந்தத் திட்டத்திலே குறை பாடுகள் இல்லாமல் நடக்க வேண்டிய அவசியத்தை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அதற்கு உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைப்பு தரவேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன். எனவே, "மனு நீதித் திட்டம்" ஒரு நாடகம் என்று கூறிவிடுவதால், இதுசம்பந்தமான புள்ளிவிவரங்கள் பொய்த்துவிடாது. அங்கங்கே இருக்கும் கிராம மக்களைச் சந்தித்து,



1971 ஜூலை 7] [திரு. மு. கருணாநிதி]

எந்தெந்த கிராமங்களிலே மனு நீதித் திட்டம் அமுல்படுத்தப்பட் டிருக்கிறதோ, அங்கெல்லாம் விவசாய மக்களுக்கும், பொது மக்களுக்கும் நல்ல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது தெரியும்.

நாங்கள் இதுவிஷயமாக புள்ளிவிவரங்களைக் கேட்கும்பொழுது, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்தக் கணக்குகளை தந்து கொண்டுதான் இருக்கிறார்கள். நாங்களும் அப்படிக் கொடுக்கும்படி அடிக்கடி வலியுறுத்திக் கொண்டு, அந்தத் திட்டம் செம்மையாக நடைபெற ஆவன செய்து வருகிறோம். எனவே, இந்தத் திட்டத்தை ஒரு "நாடகம்" என்று கூறிவிட்டால் மாத்திரம் போதாது. எங்கேயாவது குறைபாடு இருந்து, அதை எடுத்துத் தெரிவித்தால் அதை நீக்க ஆவன செய்வோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு நடக்கும்.

The cut motions of Thiru R. Ponnappa Nadar, Thiru A. K. Subbiah, Dr. H. V. Hande and Thiru M. Surendran to Demand No. 9 were, by leave, withdrawn.

MR. SPEAKER: The question is—

"That Government be granted a sum not exceeding Rs. 18,37,72,200 under Demand No. 9—District Administration and Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of Thiru N. Marudhachalam to Demand No. 31 was, by leave, withdrawn.

MR. SPEAKER: The question is—

"That Government be granted a sum not exceeding Rs. 16,48,400 under Demand No. 31—Famine Relief."

The Demand was put and carried and the Grant was made.

The cut motions of Thiru R. Ponnappa Nadar, Thiru S. Alagarswamy, Dr. H. V. Hande and Thiru M. Surendran to Demand No. 32 were, by leave, withdrawn.

MR. SPEAKER: The question is—

"That Government be granted a sum not exceeding Rs. 4,78,73,300 under Demand No. 32—Pensions."

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of Dr. H. V. Hande to Demand No. 36 was, by leave, withdrawn.

MR. SPEAKER: The question is—

"That Government be granted a sum not exceeding Rs. 7,76,26,500 under Demand No. 36—Other Miscellaneous Compensations and Assignments."

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of Dr. H. V. Hande to Demand No. 37 was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

"That Government be granted a sum not exceeding Rs. 77,15,000 under Demand No. 37—Compensation to Zamindars."

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of Dr. H. V. Hande to Demand No. 45 was, by leave withdrawn.

MR. SPEAKER : The question is—

"That Government be granted a sum not exceeding Rs. 9,05,000 under Demand No. 45—Commuted value of Pensions."

The Demand was put and carried and the Grant was made

Thiru S. Alagarswamy rose.

MR. SPEAKER : The hon. Member could only say whether he is pressing his cut motion or not. He cannot make any other speech. Are you pressing or not pressing ?

THIRU S. ALAGARSWAMY : Not pressing, Sir.

The cut motion of Thiru Alagarswamy to Demand No. 47 was, by leave, withdrawn.

The cut motions of Dr. H. V. Hande and Thiru K. M. Subramaniam to Demand No. 47 were, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

"That Government be granted a sum not exceeding Rs. 43,10,01,500 under Demand No. 47—Loans and Advances by the State Government"

The Demand was put and carried and the Grant was made.

The cut motions of Thiru R. Ponnappa Nadar, Thiru A. K. Subbiah, Dr. H. V. Hande and Thiru M. Surendran to Demand No. 1 were, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

"That Government be granted a sum not exceeding Rs. 2,79,37,700 under Demand No. 1—Land Revenue Department."

The Demand was put and carried and the Grant was made.

The cut motions of Thiru R. Ponnappa Nadar, Thiru S. Alagarswamy and Dr. H. V. Hande to Demand No. 4 were, by leave, withdrawn.



MR. SPEAKER : The question is—

"That Government be granted a sum not exceeding Rs. 31,86,900 under Demand No. 4—Stamps Administration."

The Demand was put and carried and the Grant was made.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்று நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 6. பேரவையின் முன்வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

@ 142. Notification issued with G.O. Ms. No. 770, Rural Development and Local Administration, dated the 2nd May 1970 in regard to dissolution of the Sithayankottai Town Panchayat with effect on and from the 5th May 1970 and reconstitution of the panchayat with effect on and from 3rd August, 1970. [Laid on the Table of the House under section 179 (1) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 143. Tamil Nadu Government's Review and the Third Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Agro Industries Corporation Limited for the year ended 31st March 1969. [Laid on the Table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

@ 144. Tamil Nadu Government's Review and the Fourth Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Agro Industries Corporation Limited for the year ended 31st March 1970. [Laid on the Table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

### *B. Reports, Notifications and Other Papers.*

£ 103. The Policy note on Demand No. 1. Land Revenue and Other allied demands (English and Tamil).

& 104. Brochure on the Cauvery River Waters Dispute with Mysore (English).

---

@ Laid on the Table of the House on 6th July 1971.

£ Dsepatched to Members on 5th July 1971.

& Despatched to Members on 6th July 1971.

## இணைப்பு.

13[illegible] -ம் பக்கத்தில் உள்ள 153-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

கோவை மாவட்டத்தில் மாநிலப் புவி இயல்துறை சமீபத்தில் நடத்திய ஆராய்ச்சியில் கீழ்க்கண்ட இடங்களில் கனிவளங்கள் இருப்பதாகக் கண்டுபிடித்துள்ளது—

(1) சுண்ணும்புக்கல்.—கோவை மாவட்டம் எட்டிமடை கிராமம்—4.5 மில்லியன் மெட்ரிக் டன்கள் இரும்புக்கு உபயோகமாகும் தரமுடையது. கோபால்புரம், நரசிங்கபுரம், பொள்ளாச்சி வட்டம்—72,000 மெட்ரிக் டன் சிமெண்டிற்கு உபயோகமாகும் தரமுடையது.

(2) ஜிப்சம்.—கரிசல் நிலப்பகுதிகளான பல்லடம், உடுமல் பேட்டை, பொள்ளாச்சி, தாராபுரம் வட்டங்கள்—வெட்டி எடுக்கப் படாத நிலப்பரப்பில் 8 லட்சம் டன்கள்.

(3) பாரியக்கந்தகை (Barytes). பவானி வட்டம் குறிச்சி யிலும் அதன் சுற்றுப்புறங்களிலும்—படிகக்கல் கலந்த பாரியக் கந்தகை அளவு 35,000 மெட்ரிக் டன்கள்.

(4) பச்சை நிற படிகக் கற்கள் (Green coloured quartzites) அணிகலன்களுக்கு உபயோகமான கற்கள். கோபிசெட்டிப் பாளையம் பவானி வட்டங்களில் சத்தியமங்கலத்தைச் சுற்றிலும், மலயாண்டிப்புத்தூர் குமாரப்பாளையம், ஆலத்துக்கொம்பை, பெரிய கொடிவேரி, நாகலூர் ஆகிய இடங்கள். இக்கற்கள் அவற்றின் மெருகுத்தன்மையறிய ஆய்வு செய்யப் பட்டிருக்கின்றன.

(5) படிகக் கற்கள் (Quartz), செம்புறுக்கிக் கற்கள் Felds par). கோவையில் போகம்பட்டி என்ற கிராமத்தினருகில் பல குவார்ட்ச், பெல்ஸ்பர் போன்ற படிவங்கள் ஆய்வுசெய்யப்பட்டு வருகின்றன.

(6) இரும்புத்தாது.—கோபிசெட்டிப்பாளையம், தொப்பம் பாளையத்தில் காரிதொட்டம்பாளையம், சின்னபவிபுதூர், எடகஞ்சி ஆகிய இடங்கள் 1.5 மில்லியன் மெட்ரிக் டன் 33–37 சதவீதம் அளவினதான இரும்புத்தாது இருப்பதாக அளவிடப்பட்டுள்ளது.

The investigation undertaken by the State Geology Branch in recent years in Coimbaore District, have revealed the existence of the following minerals :—

1. Limestone : Ettimadai village, Coimbatore District. Reserves : 4.5 million tonnes of iron making grade. Gopalapuram and Narasingapuram, Pollachi Taluk, Coimbatore District. Reserves : 72,000 tonnes of cement making grade.



2. Gypsum : In the black cotton soils of Palladam, Udumalpet, Pollachi and Dharmapuram taluks. Reserves : 8 lakh tonnes in the areas not worked out so far.

3. Barytes : Barytes associated with quartz in and around Kurichi village, Bhavani taluk, Coimbatore District. Reserves : 35,000 tonnes.

4. Green Coloured Quartzites : (useful as ornamental stones) Around Sathyamangalam, Malayandipudur, Kumarapalayam, Alathukombai, Periyakodiveri, Nagalur in Gobichettipalayam and Bhavani taluks. (The stones have been tested for their polishing characteristics.)

5. Quartz and Feldspar A number of bodies and feldspar are at being investigated at Bogampatti, Coimbatore district.

6. Iron ores : Toppampalayam, Karidoddampalayam, Chinnabhavipudur, Edakanji etc., in Gobichettipalayam taluk. A reserve of 1.5 million tonnes of ore analysing to about 33 to 37 per cent Fe has been estimated in these areas.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

### வியாழக்கிழமை, 1971 ஜூலை 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Sound and light spectacle in Madurai*

* 2 *S.N. Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon'ble the Minister for Backward Classes be plaeased to state—

(*a*) wheher it is a fact that the sound and light spectacle will be set up in Madurai; and

(*b*) if so, at what place and when?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இந்திய அரசுடன் இப்பொருள் பற்றி கடிதப்போக்கு வரத்து நடந்து வருகிறது.

(இ) தற்போது எழவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்த ஒலி-ஒளி ஸ்பெக்டகிள் என்று சொல்லக்கூடிய son-et-lumerie என்கிற இந்தக் காட்சியானது டில்லி செங்கோட்டையில் நடைபெற்று, அது வெளிநாட்டவர்களும் உள்நாட்டவர்களும் விரும்பிப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. அம்மாதிரி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் இருக்கிற காரணத்தால், இப்பொழுது மதுரை-இராமனுதபுரம் சேம்பர் ஆஃப் காமர்ஸ்ஸும் மற்ற பொது ஸ்தாபனங்களும் இந்த ஒலி-ஒளிக் காட்சியை அங்கு வைத்துத்தான் ஆகவேண்டும் என்று கேட்கிறார்களே அதுபற்றி அரசின் கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்த ஒலி-ஒளி ஏற்பாடுகளை அரசு முதலில் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில்தான் வைப்பது என்று தீர்மானித்திருந்தது. ஆனால், சேலத்திலிருக்கும் தமிழ்நாடு ஹிந்து டெம்பிள் ப்ரொடெக்ஷன் ஸ்டேட் கமிட்டியும், தமிழ்நாடு ஹிந்து மிஷனும் இதை எதிர்த்து மத்திய அரசுக்குக் கடிதங்கள் எழுதின. அது தவிர, 100 பேர் உண்ணாவிரதம் இருப்பதாகச் சொல்லி, ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்ததாகவும் அரசுக்குத் தகவல் வந்தது. இப்படிப்பட்ட ஒலி-ஒளிக் காட்சி அமைப்பால் கோவிலின் புனிதமே கெட்டுவிடும், மீனாட்சி அம்மனின் மகத்துவம் மங்கி, அந்த ஒலி-ஒளிக் காட்சியின் முக்கியத்துவம் பெருகிவிடும் என்றும் பக்தர்கள் கருதுகிற காரணத்தால் அதைப்பற்றி மத்திய அரசு, மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று மாநில அரசைக்

கேட்டுக் கொண்டது. அதனால் இந்த விவகாரம் இன்னும் கடிதப் போக்குவரத்திலும் பரிசீலனையிலும் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : இந்த ஒலி-ஒளிக் காட்சியை அமைப்பதால் அரசுக்கு எந்த அளவு லாபம் கிடைக்கும், பொது மக்களுக்கு எந்த வகையில் பயன் கிடைக்கும் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்த ஒலி-ஒளி ஏற்பாட்டின் மூலமாக அரசாங்கத்திற்கு லாபம் கிடைக்குமா இல்லையா என்ப தல்ல; ஒலி-ஒளி ஏற்பாட்டின் மூலமாக தமிழ்நாட்டின் கலை, கலாச் சாரம், பண்பாடு ஆகியவற்றை உலகறியச் செய்வதற்கான நல்ல ஏற் பாட்டை இதன் மூலமாகச் செய்ய முடியும். அதுதான் நமக்குக் கிடைக்கும் பெரிய லாபம் ஆகும்.

திரு. என். கிட்டப்பா: பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த இல்லத்தில் இம்மாதிரி ஒலி-ஒளிக் காட்சிகள் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஒலி-ஒளி ஏற்பாடுகளுக்காக மத்திய அரசு சுற்றுலாத் துறைக்குக் கொஞ்சம்தான் நிதி தந்திருக் கிறது. அதிலே ஏதாவது ஒன்றை பெரிய அளவில் செய்ய வேண்டும், வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகளைக் கவரத்தக்க அளவில் செய்ய வேண்டும் என்பது திட்டம். ஒலி—ஒளிக் காட்சி என்ன என்பதைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். மதுரைக் கோவிலில் இந்த ஒலி-ஒளிக் காட்சியை வைக்கலாம் என்று நாங்கள் எண்ணியதற்குக் காரணம், அதிலே 27 கோபுரங்கள் இருக்கின்றன. அந்த 27 கோபுரங் களில் கலை, சிற்பங்கள் ஏராளமான இருக்கின்றன. அந்தக் கலை, சிற்பங்களையெல்லாம் வைத்து ஒரு அழகிய பின்னணியாக உருவாக்கி, அந்த ஒலி—ஒளி ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று எண்ணினோம். முதலில் தமிழக அரசு அப்படி நினைத்தது. அதற்கு மாறுபாடான கருத்துக்கள் வந்ததால்தான் கொஞ்சம் யோசனை யில் இருக்கிறது.

திரு. கா. காளிமுத்து : ஒலி—ஒளிக் காட்சிக்கான முழுச் செலவை யும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுகிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்த ஒலி-ஒளிக் காட்சியை மதுரை கோயிலில் ஏற்பாடு செய்யவேண்டுமானால் அந்தக் காட்சிக் கான செலவு ஏறக்குறைய 18 லட்சம் ரூபாய் ஆகும். அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்வதாக இருந்தது.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரை நகரத்தில்—குறிப்பாக மதுரை மீனாட்சியம்மன் கோயிலில்—இம்மாதிரியாக ஒலி-ஒளிக் காட்சியை ஏற்பாடு செய்வதைப்பற்றி முதலில் சேலத்தில் இருப்பவர் கள் ஆட்சேபித்தாலுங்கூட, மதுரையில் இருக்கக்கூடிய பெரும்பகுதி மக்களும் இதை ஆதரிக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அங்கு சென்றிருந்தபோது அவரிடம் மகஜர் கொடுத்துப் புலப்படுத்தினார்கள்,





அப்பொழுது அமைச்சரவர்கள், அதை எப்படியாவது மதுரையில் கொண்டு வருவோம் என்று வாக்குறுதி கொடுத்தார்களே, அதைப் பற்றி இப்பொழுது நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மதுரை மாநகராட்சி மன்றமும் இதே கருத்தைக் கொண்டிருக்கிறது என்று நான் அறிவேன். அதேபோல், மதுரை சேம்பர் ஆப் காமர்ஸ் அண்டு இண்டஸ்ட்ரீஸினுடைய தலைவரும் என்னைச் சந்தித்து இதுபற்றிக் கேட்டார்கள். பல தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் முக்கியஸ்தர்களும் என்னைச் சந்தித்து, ஒலி-ஒளிக் காட்சி ஏற்பாட்டை எப்படியும் மதுரையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். மேலவை எதிர்க் கட்சித் தலைவர் திரு. இராஜாராம் நாயுடு அவர்கள்கூட அதை மதுரையில் வைக்கவேண்டும் என்று என்னிடத்தில் மேலவையிலேயே சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் மீண்டும் அரசு பரிசீலனை செய்கிறது. கடிதப் போக்கு வரத்தையும் நாங்கள் மீண்டும் தொடர்ச்சியாக நடத்திக்கொண்டு வருகிறோம்.

திரு. நா. வீராசாமி: ஒலி-ஒளிச் சித்திரம் பார்க்கின்ற நேரத்தில் நம்முடைய மனத்திலே பதிந்து விடுகிறது. எத்தனை முறை நம்முடைய வரலாற்றைப் படித்தாலும் நினைவு இருப்பதில்லை. கண்ணால் பார்ப்பதுதான் மனத்திலே பதிகிறது. நினைவிலும் பதி கிறது. எனவே, மதுரையில் அமைப்பதற்கு ஆட்சேபணை இருந்தால் மாமல்லபுரத்தில் அமைக்கக்கூடிய ஏற்பாடு இருந்ததாக நான் அறிகிறேன். அப்படிப்பட்ட ஏற்பாடு இருக்கிறதா? மதுரையில் இல்லையென்றாலும், மாமல்லபுரத்தில் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மதுரையில் இல்லாவிட்டால் மாமல்லபுரத்தில் வைக்கலாம் என்றுதான் மத்திய அரசுகூட கருத்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் ஏதாவதொரு இடத்தில் இந்த ஒலி-ஒளி ஏற்பாட்டைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது மதுரையில் இல்லை என்று சொன்னவுடன் மதுரையில் உள்ள அனைவருக்கும் ஒரு ஆசை வந்திருக்கிறது, இதை எப்படியும் கண்டிப்பாக வைக்கவேண்டும் என்று. மதுரைக் கோயிலில்தான் நம்முடைய கடைச்சங்கம் இருந்தது என்பதாக வர லாறு இருக்கிறது. திருக்குறள் அரங்கேற்றத்திலிருந்து, சிலப்பதி காரக் கடைசி கட்டம் வரையில் அந்த ஒலி-ஒளி ஏற்பாட்டின் மூலம் காட்ட முடியும். அவ்வளவு சிறப்புக்களையும் காட்ட முடியும் என்று கருதுகிறேன். அந்த ஏற்பாடுகளெல்லாம் மதுரைக் கோயிலில் மிகச் சிறப்பாகச் செய்து காட்ட முடியும். ஆகவேதான் மதுரையில் வைக்கவேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு, அது குறித்து யோசிக்க வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சி அம்மன் கோயில் ஆலயத்தில் ஒலி-ஒளிக் காட்சி ஏற்படுத்தினால் அம்மையின் மகிமை குறைந்து விடும் என்று சேலத்துக்காரர்கள்

[1971 ஜூலை 8.

திரு. என். கிட்டப்பா: என்.சி.சி.-க்காக நமது மாநில அரசு ஆண்டுக்கு 65 லட்சம் ரூபாய் செலவிடுகிறது. தேசிய மாணவர் படை என்பது இந்தியா முழுமைக்கும் ஆனதால் முழுச் செல்வையும் மத்திய அரசே மேற்கொள்ள வேண்டுமென்று நமது அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: என்.சி.சி.க்காகும் மொத்தச் செலவில் 35 சதவீதத்தை மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. மற்ற 65 சதவீதத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும் இப்படித்தான் கொடுக்கிறது. முழுச் செலவை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராய் இல்லை.

திரு. கா. காளிமுத்து: என்.சி.சி. கட்டளைச் சொற்கள் முழுக்க முழுக்க தமிழில் சொல்லப்படுகிறதா? இல்லை என்றால் இனிமேலாவது அப்படிச் சொல்ல அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இங்கே கட்டளைச் சொற்கள் ஆங்கிலத்தில்தான் சொல்லப்படுகின்றன, அகில இந்திய ரீதியில் பணியாற்றுகிறவர்கள் இராணுவத்தில் இருந்து வந்து பயிற்சி அளிப்பதனால்.

திரு. கோவை செழியன்: நம்முடைய எதிர்காலச் சந்ததியினர் ராணுவ முறை தெரிந்தவர்களாக இருந்தால்தான் தமிழகத்திற்கு ஒரு வல்லமை கிடைக்கும். ஆகவே, ஒவ்வொரு மாணவனும் கண்டிப்பாக என்.சி.சி. கற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: முன்பு கட்டாயமாக இருந்தது. இப்போது மாணவர்கள் விருப்பத்திற்கு விடப்பட்டிருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு நிதி ஒதுக்கித் தரப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு மதுரைப் பல்கலைக்கழகப் பகுதியிலும், சென்னை பல்கலைக்கழகப் பகுதியிலும் விருப்பமாகச் சேருகிற மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. எஸ். ஆறுமுகம்: என்.சி.சி.யில் சேரும் மாணவர்களுக்கு ஒரே ஒரு உடை கொடுக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் புதியதாகச் சேரக்கூடிய மாணவனுக்கு புதிய உடைகள் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவர்களுக்குத் தேவையான அளவு உடை கொடுக்கப்படுகின்றன. ஒரு உடையா, இரண்டு உடையா என்பது தெரியவில்லை.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவர் அவர்களே, எத்தனை பள்ளிகளில் என்.சி.சி. இப்பொழுது நடைபெறுகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.



1971 ஜூலை 8]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, எம்.பி.பி.எஸ். போன்ற கோர்ஸுகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறபோது, என்.சி.சி.யில் சேர்ந்திருந்தால், அதற்கென்று தனியாக மார்க் போடுவதாக அறிகிறேன். இம்மாநிலத்தில் மொழிப்பிரச்சினைத் தகராறு ஏற்பட்டபோது, என்.சி.சி. நிறுத்தி வைக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் மாணவர்களுக்கு மார்க் போடுவதற்கு வேறு ஏதாவது திட்டம் இருந்ததா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, என்.சி.சி மட்டுமல்ல, வேறு கேம்ஸ், ஸ்போர்ட்ஸ்களில் தங்களுடைய திறமையை மாணவர்கள் காட்டுவார்களானால் அதற்கும் எண்கள் தரப்பட்டு, அவர்களுடைய திறமை கணக்கிடப்படும்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, பெண்களுக்கென்று தனியாக என்.சி.சி. பயிற்சி அளிக்கப்படுகிறதா? அதற்காக அவர்களுக்கு தனி உடைகள் அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பெண்களுக்கென்று தனியாக என்.சி.சி. பயிற்சி பெண்கள் கல்லூரியில் இருந்து வருகிறது. அவர்களுக்கும் தனி உடைகள் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தனி உடைகள் அளிக்கப்படுகின்றன.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, என்.சி.சி. அகில இந்திய அடிப்படையில் அமைந்திருக்கிற காரணத்தால், கட்டளைச் சொற்களை தமிழிலே சொல்லித் தர முடியாது என்கிறார்கள். ஆனால் வட மாநிலங்களில் இந்தியில் சொல்லிக் கொடுக்கிறார்கள். நாம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தொடர்ந்து அவர்கள் இந்தியிலேயே சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மட்டும் இந்தியிலேயே சொல்லிக் கொடுக்கும்போது, நாம் மட்டும் ஏன் ஆங்கிலத்திலே சொல்லிக் கொடுக்கவேண்டும்? தமிழிலே சொல்லக்கூடாதா? ஆகவே, வட மாநிலங்களையும் ஆங்கிலத்திலே சொல்லிக்கொடுக்க தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அகில இந்திய அளவில் ஆங்கிலம், இந்தி இரண்டு மொழிகளிலும் கட்டளைச் சொற்களைப் பயன்படுத்தலாம் என்றும், இந்தி அல்லாத மாநிலங்கள் ஆதரவு தெரிவிக்கிற வரையில் ஆங்கில சொற்களைப் பயன்படுத்த வேண்டுமென்றும் சொல்லப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் நாளுக்குநாள் மொழிப்பிரச்சினை வளர்ந்துகொண்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும் அறிவர். கட்டளைச் சொற்கள் இந்தியிலே இருக்க வேண்டுமென்றும், எல்லா மாநிலங்களிலும் அதைக் கொண்டுவர வேண்டுமென்றும் முயற்சிகள் நடந்த நேரத்தில் இந்த அரசு எதிர்ப்பு தெரிவித்து, இந்தி மொழியில் இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லி, சுமார் ஒன்றரை ஆண்டுக்காலம் என்.சி.சி. பயிற்சியை நிறுத்தி வைத்தது. அதன் பின்னர்தான் அதை ஆங்கிலத்திலே வைத்துக்கொள்ள அனுமதி தந்தார்கள். தமிழகத்திலே மட்டும் என்.சி.சி. பணிகள் ஆற்றுகின்ற சூழ்நிலை இருக்கு

மானால் நாம் தமிழிலேயே வைத்துக்கொள்ளலாம். அகில இந்திய அடிப்படையில் இந்தி வராமல் ஆங்கிலம் மட்டும் இருக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, மொழித் தகராறின் காரணமாக என்.சி.சி. தமிழகத்திலே நிறுத்தி வைக்கப்பட்டபொழுது வேறு ஒரு திட்டம் அமலுக்கு வந்ததே, அது நடைமுறையில இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வேறு எந்தத் திட்டமும் வரவில்லை. பல்வேறு திட்டங்களை நாமே மேற்கொள்ளலாமா என்றும், சாரணர் இயக்கம் போன்ற திட்டங்களை மேற்கொள்ளலாமா என்றும் கருத்துக்கள் சொல்லப் பட்டன. ஆங்கிலத்தில் என்.சி.சி. பயிற்சி அளிக்கலாம் என்ற நிலை உருவானபோது, வேறு திட்டங்கள் எதுவும் அமல்படுத்தப்பட வில்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில் என்.சி.சி. விருப்பப் பாடமாக இருக்கிறதென்று குறிப்பிட்டார். என்.சி.சி. பயிற்சியை உயர்நிலைப் பள்ளி மாணவர் களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் கட்டாயமாக அளித்தால், அது நம்முடைய தமிழ் நாட்டிற்கு ஒரு தற்காப்புப் படை என்ற அளவிற்குப் பயன்படும். ஆகவே, வருங்காலத்தில் என்.சி.சி. பயிற்சியை உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர் களுக்கும் கட்டாயமாக அளிக்க அரசு முன்வருமா? இப்போது வாரத்தில் ஒரு நாளைக்கு, இரண்டு நாட்களுக்குத்தான் இந்தப் பயிற்சியைக் கொடுக்கிறார்கள். அதை மாற்றி, வாரத்தில் ஏழு நாட்களிலும் இந்தப் பயிற்சியை அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலிலே சீனப் போர் ஏற்பட்டபோது, என்.சி.சி. பயிற்சி கட்டாய மாக வைக்க வேண்டுமென்ற நிலை கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் இருந்து வந்தது. பிறகு அதை விருப்பப் பாடமாக வைத்துக்கொள்ளலாம் என்று அகில இந்திய அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டது. அதை கட்டாயப் பாடமாக்கினால் பெரும் செலவு ஏற்படும் என்கிற காரணத்தால்தான், அது விருப்பப் பாடமாக ஏற்பட்டது. மாணவர்கள் வேறு பந்தயங்களில், சோஷியல் சர்வீஸ் களில் ஈடுபடலாம் என்றும் திட்டம் அமைக்கப்பட்டது.

### *Posts of Joint Director of Education*

* 157 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the posts of Joint Director of Collegiate Education and the Joint Director of School Education have been vacant for the past two months;

(*b*) if so, the reasons thereof; and

(*c*) whether this Government has any proposal to abolish these posts?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் என்ற ஒரு பதவி இல்லை. பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் உள்ள இரண்டு இணை இயக்குநர் பதவி வகித்தவர்களில் ஒருவர் 7—12—1970 முதல் 23—12—1970 வரை விடுப்பில் சென்றதாலும் மற்றொருவர் தமிழகப் பாட நூல் குழுவின் நிர்வாக இயக்குநராக நியமனம் செய்யப்பட்டதாலும் காலியாக இருந்த பதவியைப் புதிய இணை இயக்குநர் பதவியில் சேரும் வரை துணை இயக்குநர் ஒருவர் கூட்டுப் பொறுப்பேற்று அன்றாட அலுவல்களைக் கவனித்து வந்தார்.

(உ) இல்லை.

Dr. H. V. HANDE : Sir, may I know the reasons for which these posts were originally created and why the Government after creating these posts have kept them vacant?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்படிக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் என்கிற பதவி உரு வாக்கப்படவில்லை. அப்படி உருவாக்காததன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு விடை இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் ஒரு லட்சத்திற்கு அதிகமான மாணவர்கள் படிக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. போர்டு இருக்கிறது. ஜாயின்ட் டைரக்டர் ஒருவரைப் போட்டு, மதுரையில் ஒரு ரீஜினல் டைரக்டரேட் அமைப்பதுபற்றி ஏதாவது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா? அந்தப் பதவிக்கு ஜாயின்ட் டைரக்டராக யார் நியமிக்கப்படுவார்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

Dr. H. V. HANDE : Sir, may I know whether it is a fact that there is a post of of Joint Director of School Education or Collegiatte Education and whether that post has been filled up now and what is the work that is assigned to that particular post?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில் இயக்குநர் இருக்கிறார், பிறகு டெப்டி டைரக்டர் இருக்கிறார். ஜாயின்ட் டைரக்டர் பதவி இல்லை. பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில் இரண்டு டெப்டி டைரக்டர்கள் இருக்கிறார்கள். இரண்டு ஜாயின்ட் டைரக்டர்கள் இருக்கிறார்கள். ஜாயின்ட் டைரக்டர் டெக்ஸ்ட்புக் கமிட்டிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார். ஆகவே, 2 மாத காலமாக காலியாக இருக்கிறது. மதுரைப் பல்கலைக்கழகத்திலிருந்து திரு. பெருமாள் என்பவர் சீனியராக இருக்கிற காரணத்தால் இணை இயக்குநர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்ஸ்டிட்யூட் ஆஃப் எஜுகேஷனில் ஒரு ஜாயின்ட் டைரக்டர் பதவி காலியாக இருக்கிறது. அது அபெயன்சில் வைக்கப்பட்டிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, ஜாயின்ட் டைரக்டர், டெப்டி டைரக்டர் என்று போடும்போது பெண் கல்வியாளர்கள் இருக்கிறார்களே, அவர்களை ஏன் அப்பதவிகளுக்குக் கன்சிடர் செய்வதில்லை? பெண்களையும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெண்களையும் கன்சிடர் செய்கிறோம். ஒரு பெண்மணி டெப்டி டைரக்டராக இருக்கிறார். மற்றொருவர் டெப்டி டைரக்டராக இருந்து, இப்போது க்வீன் மேரீஸ் கல்லூரியில் பிரின்ஸிபாலாக பதவி ஏற்றிருக்கிறார்.

*Survey on incidence of Diabates*

* 158 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any survey into the incidence of Diabates in this State has been undertaken by the Diabetic Research Cell of the Kilpauk Medical College, Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாக் கேள்விகளுக்கும் துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட வேண்டுமென்பதல்ல. கேள்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, முக்கியமான உறுப்பினர்கள் அதிகமாக பங்குகொள்ள வேண்டுமென்கிற காரணத்தாலும், கேள்வி நேரத்தைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், சில வேளைகளில் துணை வினாக்களை அனுமதிப்பது பற்றிய விஷயம், பேரவைத் தலைவரின் முடிவுக்கு விடப்படுகிறது.

*Advisory Committee of Perundurai Tuberculosis Sanatorium*

* 159 Q.—Thiru N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to nomina'e more members for the Advisory Committee of Perundurai Tuberculosis Sanatorium?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பெருந்துறை காசநோய் மருத்துவமனை அரசினருக்குச் சொந்தமான நிறுவனம் அல்லாததால், அதற்கு ஆலோசனைக் குழு அமைக்கப்படவில்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தின் காச நோய் மருத்துவமனைக்கு மானியம் தருகிறோம். அதன் காரணமாகச் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களை அந்த ஆஸ்பத்திரியின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினர்களாகச் சேர்க்க அரசாங்கம் முன்வருமா?





மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனை ஓரளவுக்கு அரசாங்கத்தின் மானியத்தைப் பெறுகிறது என்பது உண்மையானாலும், பெரும் செலவு செய்து கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது தானாக இயங்குகின்ற ஒரு குழுவினரால் நடத்தப்படுகிறது. மாவட்ட சுகாதார அதிகாரி அவர்களும், மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்களும், மாவட்ட ஆட்சியாளரும் ஏற்கெனவே இந்தக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள். ஐந்தாயிரம் ரூபாய் நன்கொடை அளித்தவர்களும் இக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள். எம்.எல்.ஏ-க்களும், எம்.பி-க்களும் "எக்ஸ்-அபிஷியோ" என்ற முறையில் நிர்வாகக் குழுவிலே இடம் பெறவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் நேரிடையாக ஆலோசனைக் குழுவை நியமிக்கவில்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே பெண்ணாத்தூரிலே ஒரு காச நோய் மருத்துவ மனை...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி பெருந்துறையைப் பற்றியது. நீங்கள் பெண்ணாத்தூரைப்பற்றிக் கேட்கிறீர்கள். இந்த துணைக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, பெருந்துறை காச நோய் மருத்துவ மனையிலிருந்து சிங்காநல்லூர் மருத்துவ மனைக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் துணைக் கேள்வி கூட அனுமதிக்கப்படவில்லை. இது ஆலோசனைக் குழு அமைக்கப்படுவதைப்பற்றிய கேள்வி.

திரு. கே. டி. கே. தங்கமணி : அரசாங்கம் இதற்கு மானியம் கொடுக்கக்கூடிய காரணத்தினாலே குறைந்த பட்சம் அந்தப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினராவது அந்தக் குழுவிலே இடம் பெற ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இங்கே உள்ள குறிப்பிலே

"Provision was made to include a local M.L.A. as an ex-officio Member of the Governing Body".

என்றுதான் இருக்கிறது. இடம் பெற்று விட்டார்களா என்பதை இப்பொழுது நான் கூறுவதற்கு இல்லை.

*Supply of rice to Sri Guruvayoorappan Temple*

* 160 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether rice is being supplied by this Government to Guruvayoorappan Temple in Kerala State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) கோயில் அதிகாரிகள் தாம் வெளிச்சந்தையில் இருந்து வாங்கிய நெல்லிலிருந்து 200 டன் நெல்லை தமிழ் நாட்டிலிருந்து கேரள மாநிலத்திற்கு ஏற்றி அனுப்ப 1970-ஆம் ஆண்டு அக்டோபர்-நவம்பர் திங்களில் அரசு அனுமதித்துள்ளது.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவர் அவர்களே, அந்த குருவாயூரப்பன் கோவிலுக்கு விசேஷமாக அரிசி எடுத்துச் செல்வதில் என்ன பொருள் இருக்கிறது என்று தெரியவில்லை. எதற்காக குருவாயூரப்பன் கோயிலுக்கு மாத்திரம்? கேரளாவிலே பத்மனாபசாமி கோவில் இருக்கிறது, புகழ்பெற்றதுதான் அதுவும். பல கோயில்கள் அப்படி இருக்கும்பொழுது அந்த குருவாயூரப்பன் கோயிலுக்கு மட்டும் அரிசி எடுத்துச் செல்லப்படுவது ஏன் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திருவனந்தபுரத்திலுள்ள பத்மனாபசாமி கோயிலுக்கும் அரிசி கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து நல்ல அரிசி வேண்டுமென்று கேரளத்திலிருக்கின்ற குருவாயூரப்பனே மனுச் செய்து கொண்டாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அங்கிருந்த தர்மகர்த்தாக்கள் மனுச் செய்துகொண்டார்கள். பேரறிஞர் அண்ணா இருந்தபொழுது இது அனுமதிக்கப்பட்டது. இப்பொழுது தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இதுபற்றி கேரள அரசாங்கத்திடமிருந்து ஏதாவது விண்ணப்பம் வந்திருக்கிறதா? அல்லது அங்கேயிருக்கின்ற நிர்வாக போர்டு விண்ணப்பம் செய்ததா? எந்த அடிப்படையிலே கொடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அங்கே இருக்கின்ற கோழிக்கோடு ஸாமொரின் ராஜா அவர்களிடமிருந்து வந்தது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஆண்டவன் மக்களுக்கு படைப்பதாகத்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்பொழுது நம்முடைய அரசாங்கம் ஆண்டவனுக்கு அளித்துக்கொண்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கப்படுகின்ற அரிசியும் இடையிலே போய் விடுகின்றது என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசாங்கம் மக்களுக்குப் படைக்கிறது, ஆண்டவனுக்குப் படைக்கவில்லை, மக்கள்தான் ஆண்டவனுக்குப் படைக்கிறார்கள். இடையிலே எதுவும் போவதாக தகவல் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: கேரளத்திலிருக்கின்ற பத்மனாபசாமிக்கு அரிசி அனுப்பப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடவுள்களை நிலையாக வைத்தவர்கள் மனிதர்கள்தான். ஆனால் அப்படிப்பட்ட மனிதர்கள் அங்கே பட்டினி கிடக்கிறார்கள் என்ற தகவல் வருகிறது. எனவே அவர்களுக்கும் கொடுக்க அரசு முன் வருமா?





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இரண்டு அரசாங்கத்திற்கும் உள்ள பிரச்னை இது. தனி உணவு மண்டலம் என்று மத்திய அரசு வைத்திருக்கிறது. அங்கிருக்கின்ற மக்களுக்கு அரிசி தேவைப்படுகிறது என்று சொன்னால் மத்திய அரசு சென்ட்ரல் பூலிலிருந்து கொடுக்கவேண்டும். இடையிலே கள்ள வியாபாரிகள் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். இதைப்பற்றி நேற்றைய தினமே நான் விளக்கிக் கூறியிருக்கிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவர் அவர்களே, கேரளத்திலிருக்கின்ற கோயிலுக்கு அனுமதிக்கப்படுகின்றது. வங்காள தேசத்தின் அகதிகளுக்கும் அரிசி அனுப்பப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

திரு. எம். தேவராசன்: காவிரி நீர் நமக்குக் கிடைக்க குருவாயூரப்பன் அருள் கிடைக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது பக்தர்கள் வேண்டிக் கொள்ள வேண்டியது.

## *Sugar stocks*

* 161 Q.—Thiru N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state whether this Government has requested the Centre during 1971, to lift the sugar stock in the Sugar Factories in the State ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தற்போதுள்ள லெவி கோட்டா (Levy Quota) சர்க்கரை 12,000 டன்னுக்குக் குறைவாயிருப்பதை 15,000 டன்னாக உயர்த்தும்படியும் எடுத்துச் செல்லப்படாமலிருக்கும் லெவி கோட்டாவை விசேட லெவி கோட்டாவாக ஒதுக்கும்படியும் இந்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட சர்க்கரையை அவைகள் எடுக்காததினால்தான் இவ்விதச் சர்க்கரைத் தேக்கமேற்பட்டது. சில தனியார் சர்க்கரை ஆலைகள் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் (Writ petitions) தாக்கல் செய்தன. உயர்நீதிமன்றம் சட்டப்படியுள்ள காலவரைக்குப்பின் எடுத்துச் செல்லப்படாத சர்க்கரையை விற்க அனுமதித்துள்ளது. இந்த மாநிலத்தில் இவ்விதம் 70,000 மூட்டை சர்க்கரை வைத்திருக்கும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் இந்திய அரசு இம்மாதிரி பரிகாரம் கொடுத்தாலன்றி அவைகளும் சட்டபூர்வமான பரிகாரம் காணக்கூடுமென்று இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 1971-ம் ஆண்டு மே திங்களில் இந்திய அரசு தமிழ் நாட்டின் லெவி கோட்டாவை மேற்கொண்டு 1,650 டன் அதிகப்படியாக உயர்த்தியுள்ளது. மத்திய சர்க்கரை கையிருப்பு (Buffer stock of sugar) ஒன்றை நிறுவும்படி இந்த அரசாங்கம் இந்திய அரசை வற்புறுத்தியுள்ளது. சர்க்கரைக் கட்டுப்பாடு இப்பொழுது ரத்து செய்யப்பட்டுள்ளது. சர்க்கரை ஒதுக்கப்பட்ட மாநிலங்கள் அவை எடுத்துச்செல்லவில்லை என்ற சிக்கல் தற்போது எழாது.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவர் அவர்களே, சர்க்கரை கோட்டாவை ஒதுக்குவதில் மத்திய அரசாங்கம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும் தனியார் சர்க்கரை ஆலைகளுக்கும் ஏதாவது பாரபட்சம் காட்டுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது இந்த கோட்டா முறை இல்லாத காரணத்திஞலே இந்தப் பிரச்னை எழவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: கூட்டுறவு ஆலைகளில் எவ்வளவு சர்க்கரை தற்பொழுது ஸ்டாக் இருக்கிறது, தனியார் ஆலைகளில் எவ்வளவு சர்க்கரை ஸ்டாக் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அந்த ஸ்டாக்குகள் வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்ற நிலைமையில் எந்த முறையில் பங்கீடு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: டிகன்ட்ரோல் செய்யப்பட்டதற்குப் பிறகு 30—6—1971 அன்று தனியார் துறையிலே உள்ள ஆலைகளில் கிட்டத்தட்ட 1 லட்சத்து 53 ஆயிரம் டன்னும் கூட்டுறவு ஆலைகளிலே 74 ஆயிரம் டன்னும் இருக்கிறது. இப்பொழுது இருக்கின்ற முறைப்படி ஒவ்வொரு ஆலையும் எவ்வளவு சர்க்கரையை விற்கலாம் என்று முடிவு செய்திருக்கிறது. லெவி சர்க்கரையை எந்த எந்த மாநிலங்களுக்கு அனுப்பவேண்டுமென்று மத்திய சர்க்கார் உத்தரவிடுகிறார்களோ அங்கேதான் அனுப்பவேண்டும். இப்பொழுது அப்படி இல்லாத காரணத்திஞலே எங்கேயும் விற்றுக்கொள்வதற்கு உரிமை இருக்கிறது.

Dr. H. V. HANDE: Sir, are the Government aware that most of the sugar mills are in a very pathetic condition because of their inability to sell sugar? They are like the Coimbatore Textile Mills and there is a serious possibility of some of the sugar mills becoming sick. Apart from the steps already taken by the Government, may I know whether the Government contemplate to take any further steps to see that the possibility of the mills becoming sick, is completely removed?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முன்னாலே நான் கூறியபடி சர்க்கரையை யார் யாருக்குக் கொடுக்கவேண்டுமென்று அனுமதிக்கப்பட்டமுறை நமக்குப் பாதகமாக இருந்தது. மத்திய சர்க்கார் உத்திரவுப்படி வேறு மாநிலங்கள் எடுத்துச் செல்லவில்லையென்றால் என்ன செய்வது என்ற இக்கட்டான நிலை இப்பொழுது இல்லை. டிகன்ட்ரோல் செய்ததற்குப் பிறகு ஒரு முன்னேற்றம் இருக்கிறது. சுமார் 2 லட்சத்து 94 ஆயிரம் டன்னாக இருந்த நிலை 30—6—1971 அன்று 2 லட்சத்து 27 ஆயிரம் டன்னளவுக்குக் குறைந்திருக்கிறது. இந்தப் புதிய திட்டத்தின்படி ஏராளமாக விற்கமுடியும் என்று நான் கருதுகிறேன். அது மட்டுமல்ல. லெவி சர்க்கரை, ப்ரீ மார்க்கட் சர்க்கரை என்று இரண்டு விதம் இருக்கிறது. நாம் இப்பொழுது மத்திய சர்க்காரிடம் எடுத்துத் தெரிவித்திருக்கின்ற யோசனை எக்ஸைஸ் டியூட்டி குறைக்கப்படவேண்டும், அதே சமயத்திலே ரெக்கவரியைக் குறைத்து, 9 சதவீதம் ஆக ரெக்கவரி இருப்பதை அடிப்படையாக வைத்து விலையை நிர்ணயித்தால் ரெக்கவரி



குறைவாக இருக்கின்றது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு விற்பனை செய்வதில் கஷ்டம் இருக்காது என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு போன்ற ரெக்கவரி குறைந்த மாநிலங்களுக்கு அந்தச் சலுகையைக் காட்டினால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவரவர்களே, ஏராளமான சர்க்கரை தேங்கியிருப்பதால் கரும்பு கொடுத்த விவசாயிகளுக்கு நிறையப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைவிட தனியார் துறை ஆலைகளிலேதான் அதிகம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எனவே அவர்கள் விவசாயிகளுக்கு உரிய பணத்தைக் கொடுக்க உண்டான வழிவகைகள் அரசாங்கம் எடுத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தனியார் சர்க்கரை ஆலைகள் ஆகியவைகளில் எங்கெங்கு இப்படி சர்க்கரை தேக்கப்பட்டு விற்க முடியாமல், பணம் கொடுக்கப்படாமல் இருந்தால் நாம் யோசித்துச் செயல்பட வேண்டும். ஆனால் காரணமில்லாமல் பணம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படாமலிருந்தால் அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. க. நாகராஜன்: தலைவரவர்களே, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலே உள்ள சர்க்கரைத் தேக்கத்தைப் போக்க அந்த ஆலைகளிலே உள்ள சர்க்கரையை மூலப்பொருளாகக் கொண்டு மிட்டாய் போன்ற பொருள்களைத் தயாரித்து விற்க பரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒவ்வொரு ஆலையும் அந்த முயற்சியை எடுக்கலாம். நான் முன்பே சொன்னபடி அதுவல்ல காரணம். விலை நம்முடைய மாநிலத்திற்கும் மற்ற மாநிலத்திற்கும் வித்தியாசமிருப்பதால் நம்முடைய மாநில சர்க்கரையை விற்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. மத்திய அரசு ஓரளவிற்கு இப்பொழுது ஏற்றிருக்கிறது. ஆனால் முழுதும் ஏற்றுச் செயல்பட்டால்தான் நன்றாகயிருக்கும். மராட்டியம் போன்ற மாநிலத்தில் ரெக்கவரி அதிகமாகயிருப்பதால் அதிகச் சலுகை ஏற்படக் காரணமாக இருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, கண்ட்ரோலை எடுத்துவிட்டதால் சர்க்கரையை யாருக்கு வேண்டுமானாலும் விற்க அனுமதித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். வெளிநாடுகளுக்கு விற்க அனுமதித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதை நம்முடைய உணவு அமைச்சரவர்களிடத்திலே கேட்க வேண்டும்.

திரு. எஸ். முருகையன்: தலைவரவர்களே, சர்க்கரைக் கட்டுப்பாடு எடுக்கப்பட்டு விட்டது. யாருக்கு வேண்டுமானாலும் விற்கலாம் என்று அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். அப்படியிருந்தாலும் சர்க்கரை எவ்வளவு விற்க வேண்டுமென்ற அனுமதியை மத்திய

அரசு கொடுக்கிறது. அதை மாற்றி எல்லா சர்க்கரை ஆலைகளிலும் அந்தந்த ஆலைகள் விற்றுக்கொள்ளலாம் என்பதற்குத் தேவையான அனுமதியை மத்திய அரசிடமிருந்து மாநில அரசு பெற்றுத் தருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சர்க்கரை ஆலைகளில் தலைவர்களுக்கு நாம் பாதகமான யோசனையைச் சொல்லக்கூடாது. நான் முன்பே சொன்னேன். அப்படிக் கொடுத்து விட்டால் விலை குறைவாக, ரெக்கவரி அதிகமாக இருக்கும் மாநிலங்கள் மிஞ்சிவிடும். நம்முடைய சர்க்கரை ஆலைகள் பாதிக்கப்படும். அதனுல் ஒவ்வொரு ஆலையும் எவ்வளவு உற்பத்தி செய்து அந்த உற்பத்தியின் அடிப்படையில் எவ்வளவு விற்கலாம் என்ற கட்டுப்பாடு இப்பொழுது தேவை என்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

Thiru B. VENKATASWAMY: Sir, the Hon. Minister has stated that our State recovery is very poor when compared to other States. So, may I know whether any survey has been made to improve our State recovery or introduce any new kind of sugar-cane?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதை விவசாய அமைச்சரவர்களிடத்திலே கேட்க வேண்டும். நம்முடைய அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு இதைப்பற்றி ஆராய்ந்து சென்ற ஆண்டு அதற்கு முன்னிருந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 9 சதவிகிதம் ரெக்கவரி கூடியிருக்கிறது. முன்னேற்றம் இருக்கிறது. புதிய ரகங்கள் கரும்பையெல்லாம் நம் கிளைமேட்டிற்குத் தகுந்தபடி நாம் உற்பத்தி செய்தால் இந்தப் பிரச்னை ஓரளவிற்குத் தீரும். அதை நம்முடைய வேளாண்மைத்துறை செய்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மற்ற மாநிலங்களில் உற்பத்தியாகும் சர்க்கரைக்கும் நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகும் சர்க்கரைக்கும் விலையிலே வித்தியாசமிருக்கிறது என்று சொன்னுர்கள். அது எவ்வளவு தொகை வித்தியாசமிருக்கிறது? ஆனுல் கரும்பு சம்பந்தப்பட்டவரை அந்த மாநிலங்களிலும் இந்த மாநிலத்திலும் ஒரேமாதிரியான விலை கொடுக்கிருர்கள் ஆலை முதலாளிகள் என்று நினைக்கிறேன். அப்படியிருக்க வித்தியாசத்திற்குக் காரணமென்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ரெக்கவரியின்மீது பொதுவாக இந்த விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ரெக்கவரி இதுவரை குறைவாக இருந்தது. சமீபத்தில் கொஞ்சம் கூடுதலாகக் கிடைத்திருக்கிறது என்ருலும்கூட அது நிரந்தரம் அல்ல. ரெக்கவரி அதிகமாகயிருந்தால்தான் உற்பத்திச் செலவு குறையும். அப்பொழுதுதான் மூட்டையின் காஸ்ட் குறையும். ஆனுல் எல்லா மாநிலங்களுக்கும் ஒரு விலையை நிர்ணயித்திருக்கிருர்கள். ரெக்கவரிக்குத் தகுந்தாற்போல் நிர்ணயிக்கப்பட்டால் நமக்குப் பாதகம் ஏற்பட்டிருக்காது. தமிழ்நாட்டில் ரெக்கவரி குறைவாக இருக்கிறது. 9.6 அல்லது 9.7 அல்லது 11.7 என்றெல்லாம் ரெக்கவரி இருக்கும் மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களிலும் இதேவிலைதான் உள்ளது. இதனுல்





பாதிக்கப்படுபவர்கள் மகாராஷ்டிர விவசாயிகள். அங்கிருக்கும் விவசாயிகளுக்கு ரெக்கவரியின் அடிப்படையில் விலை கொடுக்கும் பொழுது அவர்கள்தான் இந்தப் பிரச்னையைக் கிளப்ப வேண்டும். விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் விலை நியாயமாக இருக்கலாம். ஆனுல் பொதுச்சந்தைக்கு விற்பனையில் நாம் போட்டி போட முடியவில்லை. ஸ்லாப் ரேட் பிரகாரம் ரெக்கவரி வைக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிருேம்.

*Diet of Prisoners in Central Jail at Madras.*

* 162 *Q.*—Thiru A. SWAMIDHAS: Thiru N. KITTAPPA: } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the diet of the prisoners has been changed in the Madras Central Jail;

(*b*) if so, the details thereof; and

(*c*) the reasons thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) 'சி' பிரிவு கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு, அதன் காலரி அளவினை 2,650 லிருந்து 3,300 ஆக உயர்த்துவதற்காக மாற்றப்பட்டுள்ளது. அரிசி, கோதுமை, சோளம், வெங்காயம், கடலெண்ணெய், வேர்க்கடலை, வெல்லம் ஆகியவைகளின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. காய்கறிகளின் அளவு 230 கிராமிலிருந்து 250 கிராமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் வைட்டமின்களும் தாது சத்துக்களும் அடங்கிய அகத்திக்கீரை அல்லது முருங்கைக் கீரை 100 கிராம் அளவுக்கு சேர்க்கப்படுகிறது. காலை உணவுக்கு கஞ்சிக்கு பதிலாக கோதுமை அல்லது சோளம், இட்டிலி, உப்புமா அல்லது புட்டு வழங்கப்படுகிறது.

(உ) கைதிகளுக்குத் தரப்படும் உணவில் காலரிகள், சுண்ணும்புச் சத்து, "ஏ" வைட்டமின் ஆகியவை குறைவாக இருந்ததால் அதிக ஊட்ட சத்துள்ள உணவு அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மத்திய சிறைச்சாலையில் கைதிகள் ஏ, பி, சி என்று 3 வகுப்பினராகப் பிரிக்கப்பட்டு அவர்கள் வகுப்புக்கேற்ற அடிப்படையில் படி, உணவுக்கான தொகை ஒதுக்கப்படுகிறது. எந்தெந்த வகுப்புக் கைதிகளுக்கு எவ்வளவு தொகை அளவிற்கு ஒதுக்கப்படுகிறது என்பதையும், சமதர்ம சோஷலிசத்தைக் காண விழையும் நமது அரசு சிறைச்சாலைகளில் எல்லாக் கைதிகளையும் ஒரே வகுப்புக் கைதிகளாக நடத்த ஆலோசிக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கைதிகள் வெளியிலேயிருக்கும் பொழுது எப்படிப்பட்ட வழிமுறைகளை அனுசரித்து வந்தார்களோ, அந்த அடிப்படையிலே இந்தப் பிரிவு செய்யப்படுகிறது. அதைத் தவிர வேறு ஏழை பணக்காரர் என்ற அடிப்படையில் அல்லாமல் வெளிவாழ்க்கை எப்படி அமைந்ததோ அதற்கேற்ற உணவு கொடுக்க இப்படிப்பட்ட பிரிவு அமைக்கப்படுகிறது.

திரு. எ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, கைதிகளுக்குக் காலையிலே எந்தமாதிரியான உணவு கொடுக்கப்படுகிறது, நடுப்பகலிலே எந்தமாதிரியான உணவு கொடுக்கப்படுகிறது, சாயங்காலம் எந்த மாதிரியான உணவு கொடுக்கப்படுகிறது, இரவில் எப்படிப்பட்ட உணவு கொடுக்கப்படுகிறது, எந்தெந்த வகையிலே கொடுக்கப்படுகிறது என்பதை அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: காலையிலே, நான் முதலில் வாசித்தபடி, ஏற்கனவே கஞ்சி கொடுத்து வந்தார்கள். அந்தக் கஞ்சியை உப்புமா, இட்டிலி என்ற முறையில் மாற்றிக் கொடுக்கலாமா என்று பரீட்சார்த்தமான முறை இப்பொழுது பின்பற்றப்படுகிறது. மதியத்திலே சோறு, களி, கோதுமைக்களி கொடுக்கிறார்கள். இரவிலே அதிலே ஓரளவிற்குப் போடப்படுகிறது.

*Vigilance Cell in High Court.*

* 163 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Vigilance Cell has been set up in the High Court; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) நீதித்துறை அதிகாரிகள், பணியாளர்கள் மீது சாட்டப்பட்ட லஞ்சக் குற்றச்சாட்டுகள் குறித்து நடவடிக்கைகள் எடுப்பதற்காக, சென்னை, உயர்நீதிமன்றத்தில் ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவு ஒன்று அமைப்பதற்கு 1965, மே திங்களில் அரசு ஒப்பளித்தது. இந்த ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவு, மாவட்ட செஷன்ஸ் நீதிபதியின் தரத்தில் உள்ள தனி அதிகாரி ஒருவரின் பொறுப்பில் உள்ளது. புகார்கள் குறித்துப் புலன் ஆய்வு செய்வதில் இத் தனி அதிகாரிக்கு காவல்துறையிலிருந்து அனுப்பப்படும் முறையான காவல்துறைப் பணியாளர்கள் உதவுகின்றனர். உயர்நீதிமன்ற, ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றாக நான்கு பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவும், காவல்துறை இன்ஸ்பெக்டர் ஒருவர் தலைமைக் காவலர் ஒருவர், காவலர் ஒருவர் ஆகியோரைக் கொண்டுள்ளது. இந்த நான்கு பிரிவுகளுக்கும் பொதுவாக காவல் துறை டெபுடி சூப்பிரின்டெண்டெண்ட் ஒருவர் தலைமை அதிகாரியாக உள்ளார். இவர் ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவின் தலைமையிடமாகிய சென்னையில் உள்ளார். துப்புகளையும், புலன்களையும் முனைப்பாகச் சேகரிக்கும் பொருட்டு, மேலும் ஒரு காவல்துறை டெபுடி சூப்பிரின்டெண்டெண்ட் சிறப்பு உதவியாளர் ஒருவர் 4 காவல்துறை இன்ஸ்பெக்டர்கள், 4 தலைமைக் காவலர்கள், 6 காவலர்கள் ஆகியோரை நியமிக்க அரசு அண்மையில் ஒப்பளித்தது.

Thiru R. PONNAPPA NADAR: Mr. Speaker, Sir, is there any proposal to extend the Cell to all the District Head-quarters?



மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை அலுவலகம் இருக்கிறது. எங்கெங்கு அந்த வேலையிருக்கிறதோ அங்கேயெல்லாம் போலீஸ் அதிகாரிகள் கண்காணித்து முடிவிலே உயர்நீதிமன்ற அளவிலேதான் முடிவெடுக்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இம்மாதிரி கண்காணிப்பதன் மூலம் அந்த ஊழியர்கள் மேல் பல நடவடிக்கைகள் எடுத்ததற்குப் பிறகு கூட அவர்கள் மேல் எப்போதும் கேஸ் இருந்தால் குறைந்த பட்ச தண்டனையே 2 வருஷம் இருக்கிறதே, அதை மாற்ற ஏதாவது முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தண்டனைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் பொதுச்சட்டம் இருக்கிறது. சட்டத்தின் அடிப்படையில் நீதிமன்றங்கள் நிர்ணயிக்கின்றன. அந்தச் சட்டத்தில் மாறுதல் செய்ய வேண்டுமென்று நினைத்தால்தான் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

Thiru R. PONNAPPA NADAR: Sir, may I know from the Hon. Minister the number of cases that have been taken up by this Cell and the number of cases disposed of by them?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுபற்றித் தகவல் இல்லை.

*Petitions from employees of Tamil Nadu Record Office*

* 166 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be please to state—

(*a*) whether petitions dated 22nd May 1970 and 3rd June 1970 have been received by the Government from employees of hte Tamil Nadu Record Officer;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) சார்பு நிலைப் பணியாளர்களைக் துன்புறுத்தவதாகவும், நிரப்பப்படாத பதவிகளில் பணியாளர்களை நியமனம் செய்வதில் முறை கேடாக நடப்பதாகவும், அரசு ஜீப், பொதுப்பணம், அவருடைய அதிகாரங்கள் ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதாகவும், ஆவணக் காப்பக இயக்குநரின் மேல், அந்த முறையீடுகளில் குற்றம் சாட்டப்பட்டிருந்தன.

(உ) அரசுச் செயலர் ஒருவர் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டு, அவரின் பரிந்துரைகளுக்கு ஏற்ப, இயக்குநரால் அவருடைய பணியாளர்களின் மீது சுமத்தப்பட்ட தண்டனைகள் மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் சில குற்றச்சாட்டுக்கள், குறித்து விசாரணை அதிகாரியின் பரிந்துரைக்கு ஏற்ப, இயக்குநர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

[1971 ஜூலை 8

*Rifle clubs in Madras City.*

* 167 *Q*.—Thiru N. DENNIS: Will the Hon. the Chief Minister be please dto state—

The number of Rifle Clubs that have been started in Madras City during 1969–70-71?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சென்னை மாநகரில் 1969, 1970, 1971-ஆம் ஆண்டுகளில் துப்பாக்கி சுடும் பயிற்சிக் கழகம் எதுவும் தொடங்கப்படவில்லை.

திரு. என். டென்னிஸ்: இந்தப் பயிற்சிக் கழகங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பயிற்சிக் கழகங்கள் என்பது வேறு, டிரெயினிங் சென்டர்ஸ் என்பது வேறு. ரைஃபிள் கிளப்ஸ் என்று இருக்கின்றன. ஏற்கனவே அவை அரசாங்க அனுமதியோடு சென்னை, கோவை, மதுரை, சேலம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நடைபெற்று வந்தன. சேலத்திலும், கன்னியாகுமரியிலும் இப்போது நடைபெறவில்லை. சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றன. டிரெயினிங் சென்டர்ஸ் 30 இடங்களில் ஏற்கனவே இயங்கி வந்தாலும் போதிய அக்கறை காட்டி பயிற்சி பெற வரவில்லை எனத் தெரிகிறது. சென்னையில் மட்டும் பயிற்சி நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டது போல் இந்தப் பயிற்சி நிலையங்களை விரிவுபடுத்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி அளிக்க ஏதேனும் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சட்டமன்ற உறுப்பினர்கள் துப்பாக்கிப் பயிற்சி பெறலாம்; ஆனால் சட்டசபைக்குள்ளே துப்பாக்கியோடு வரக் கூடாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சேலத்திலும், குமரியிலும் மூடிய கிளப்புகளை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அங்கு ஏற்கனவே இருந்த கிளப்புகள் மூடப்பட்டதற்குக் காரணம் போதிய அளவுக்குப் பயிற்சி பெறுவதற்கு வராத காரணத்தால்தான் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. போதிய அளவுக்கு உறுப்பினர்கள் வருவார்களானால், அதற்கு, அந்தப் பகுதி மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்களானால், மீண்டும் அரசு ஆவன செய்யும்.



1971 ஜூலை 8]

திருப்பூரில் அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டம்.

* 164 விஞ—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், திருப்பூரில், அரசு ஊழியர்கள் வாடகைத் திட்டத்தின் கீழ் வீட்டு வசதி வாரியம் 1970-ம் ஆண்டில் வீடு கட்ட அரசு பணம் ஒதுக்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய்?

(உ) மேற்படி வேலை துவக்கப்பட்டு விட்டதா?

(எ) இல்லை எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (இ); (உ) & (எ) ஆம். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர், திருப்பூரில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ரூ. 9.94 லட்ச செலவில் 96 அங்கணங்கள் கட்டுவதற்கான திட்டத்தை அனுப்பினர். அவர் இத் திட்டத்திற்குரிய வேலைகளை அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து முன்னதாகவே ஆரம்பித்து விட்டார்.

திரு. சு. துரைசாமி: மேற்படி இடத்தில் வீடு கட்டும் திட்டத்திற்காக கடந்த ஆண்டு 3 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டத்தை முடிக்க 9 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இந்த நடைமுறை ஆண்டில் அதற்கு வேண்டிய பணத்தை ஒதுக்கி வீடுகளை அரசு விரைவில் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதற்கான அடிக்கல் நாட்டு விழா சமீபத்தில் நடைபெற்றிருக்கிறது. திட்டப்படி அந்த வேலைகள் முடியும். அர்சாங்கச் செலவுகள் வேலைமுறைப்படி செய்யப் படும்.

சென்னை மாநகரில் மின்சார பஸ்கள்.

* 165 விஞ—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் மின்சார பஸ்கள் விடுவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இர்ாமச்சந்திரன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தற்போது ஓடிக் கொண்டிருக்கும் பஸ்களினுல் நகரத்தில் அதிகமான புகை சூழவும், இரைச்சல் ஏற்படவும் காரணமாக இருப்பதால் புதிதாக மின்சார பஸ்கள் விடப்பட்டால் அத்தகைய தொல்லைகள் போக்கப்படுவதோடு கூட அதிக வேகத்திலும் செல்ல வகை ஏற்படும் என்ற காரணத்தால் அத்தகைய பஸ்களை விட அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மின்சார பஸ்கள் விடுவது என்பது இப்போது நம் நாட்டில் சாத்தியமில்லை. அயல்நாடுகளில் கூட மின்சாரத்தைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துவது பற்றிய

[1971 ஜூலை 8

ஆய்வினை இப்போதுதான் மேற்கொண்டிருக்கிறார்கள். இலண்டனில் பால் வழங்கும் ஊர்திகளுக்குத்தான் இந்த மின்சாரம் பயன்படுத்தப் படுகிறது. ஆகையால் அதற்குக் காலம் கனிந்து வரவேண்டும். விஞ்ஞானத்தில் மேம்பாடு அடைய வேண்டும். அப்படி எல்லாம் ஏற்படுமானால் ஒரு காலத்தில் மின்சாரத்தைக் கொண்டு இப்பேருந்துகளை ஓட்டும் நாள் வரலாம்.

திரு. கோவை செழியன்: மின்சார பஸ்கள் என்று சொல்லு கிறார்கள். அப்படியானால் அது பாட்டரியில் ஓடுகிற பஸ்களா அல்லது டிராம்களைப் போல் டயர்களை எடுத்துவிட்டு ஒரே லைனில் ஓடுகிற பஸ்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இப்போது லண்டனில் ஓட்டுவதெல்லாம் பாட்டரியில்தான் ஓட்டுகிறார்கள். இரவு நேரங் களில் பாட்டரியை சார்ஜ் செய்து பகலில் ஓட்டுகிறார்கள். குறைந்த தூரத்திற்குத்தான் பயன்படுத்துகிறார்கள். மற்ற வகையான சக்திகளைப் பயன்படுத்த விஞ்ஞான வளர்ச்சி தேவை.

திரு. இராம. அரங்கண்ணல்: ஜெனீவா போன்ற முன்னேற்ற மடைந்த நாடுகளில் இப்போது மின்சார பஸ்கள் விடப்பட்டு வருகின்றன. இவைகளில் உள்ள ஒரு சாதகம் தற்போது எந்த இடத்தில் வேண்டுமானாலும் பஸ்கள் ரோடுகளில் செல்லலாம் என்று இல்லாமல் ஒரே பாதையில்தான் செல்ல முடியும் என்ற சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அரசு இதுகுறித்து தீவிரமாக ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசு இது குறித்தும் தீவிரமாக ஆலோசிக்கும்.

திரு. முனு ஆதி: சென்னை நகரத்தில் மக்கள் நெருக்கடி அதிகமாக இருப்பதால் பழையபடி டிராம்களை விடும் யோசனை உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: டிராம்களை விடும் யோசனை எதுவும் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: டிராம்கள் நிறுத்தப்பட்ட உடனே பல நாடுகளில் நகரங்களில் டிராலி பஸ்கள் விடுகிறார்கள். டிராலி பஸ்கள் மின்சாரத்தில் ஓடுகின்றன. அது சவுகரியமாக இருக்கிறது. பெரிய ரோடுகளில் டிராலி பஸ்கள் விடுவது உதவிகரமாக இருக்கு மென்ற காரணத்தால் அதுபற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: டிராலி பஸ்கள் விடுவ திலும் மாண்புமிகு அரங்கண்ணல் அவர்கள் தெரிவித்த யோசனை தான் இடைஞ்சலாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியன்: கல்கத்தாவில் இப்போது பாதாள ரயில் விட ஆலோசனை செய்து வருகிறார்கள். சென்னையிலும் அது பற்றிய ஆலோசனை இருப்பதாக கூறப்பட்டதே. இப்போது எந்த நிலையில் இருக்கிறது?



1971 ஜூலை 8]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதுபற்றி தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரலாம்.

DR. H. V. HADDE: Sir, is it not a fact that after we got rid of the trams, we are not able to solve the transport problem? Now that the Engineer--Minister has come into the field, may I know what concrete steps he is going to take to solve the awful transport problem especially in view of the fact that we do not have trams and consequently a considerable amount of transport facilities has been cut down?

THE HON. THIRU S. RAMACHANDRAN: The contention of the hon. Member that the services rendered by the State Transport are not sufficient, is not correct because we have taken long term as well as short term measures. As regards long term measures, a Maintenance Wing has been organised with the assistance of an Assistant Engineer of Ashok Leyland who has been studying the various aspects of the matter including the staff pattern and the way in which the depot has to be organised. According to it, each depot will have about 100 vehicles which will be divided into four groups of 25 vehicles each and these 25 vehicles also will be sub-divided into 12 and 13 so that 12 vehicles will form one group and it will be maintained by the Maintenance Wing. As regards traffic, we have recently constituted a Committee with Prof. Ayyaswami, Head of the Department of Traffic Engineering, Guindy, to be assisted by one Deputy Director from the Transport Department and another officer from the Statistical Wing so that the traffic intensity in the various routes and different regions and the traffic intensity in the various timings of the day can be rationalised and effective and optimum use of the vehicles can be made. To-day, I think out of about 1,000 buses only 123 buses are under repairs and we all hope to achieve cent per cent efficiency by August 31st.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அரசினர் தீர்மானம்.

காவிரி நீர்த் தகராறுகளை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடுதல் குறித்தும், மைசூர் அரசு தொடர்ந்து திட்டங்களை நிறைவேற்று வதைத் தடை செய்வதன் அவசியம் குறித்தும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்கிற ஒரு வரலாற்றுப் புகழ் பெற்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து அனைத்துக் கட்சியினுடைய

அமோகமான ஆதரவோடு அந்தத் தீர்மானம் இங்கே நிறைவேற்றப் பட்டது. நாட்டுக்குப் பெயர் தேவை என்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இன்று அந்த நாட்டினுடைய எதிர்கால வாழ்வு பாதிக்கப்படாமல் இருப்பதற்காகத் தமிழ்நாட்டு மக்கள் எதிர் காலத்திலே வளம் இழந்து, வாழ்விழந்து நிற்கக்கூடிய பயங்கரமான சூழ்நிலையில் இருந்து அவர்களை விடுவிப்பதற்காக இந்த தீர்மானத் திற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தில் வடிவம் அமைக்கப்பட்டு இந்த மாமன்றத்தில் உங்கள் அனுமதியோடு நான் அதை வைத்திட முன் நிற்கிறேன்.

"தமிழ்நாடு, மைசூர் அரசுகளுக்கிடையே 1892, 1924-ஆம் ஆண்டுகளில் கையெழுத்தான ஒப்பந்தங்களின் விதிகள் அனைத்தையும் மீறி மைசூரில் ஹேமாவதி, கபினி, ஹரங்கி, சொர்ணவதி அணைத் திட்டங்களையும் வேறு சில முக்கிய அணைத் திட்டங்களையும் அவைகளுக்கான திட்ட விவரங்களைப் பற்றித் தமிழ் நாடு அரசுக்கு மைசூர் அரசு முறைப்படி முன்னதாக அறிவித்து, தமிழ் நாடு அரசின் முன் ஒப்புதல் பெறுமலும், இந்திய அரசின் அனுமதியை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளாமலும், இதனால் இந்திய ஒருமைப் பாட்டுக்கு ஊறு நேரிடுவதுபற்றிப் பொருட்படுத்தாமலும் தன் போக்கில் நிறைவேற்றி வருவது குறித்து இப் பேரவை தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது.

காவிரி ஆற்றின் கீழ்ப் பகுதிகளில் உள்ள உழவர் பெருமக்களின் பாசன உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தைக் கருதி, 1956-ம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான நீர்த் தகராறுகள் சட்டத்தின் கீழ் முறையாக அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் ஒன்றிற்குக் காவிரி நீர்த் தகராறைத் தீர்ப்புக்கு விடுமாறு தமிழ் நாடு அரசு 1970 பிப்ரவரித் திங்களிலேயே இந்திய அரசைக் கேட்டுக் கொண்டிருந்தும் கூட, தமிழ்நாட்டிற்குத் தொன்றுதொட்டு ஏற்பட்டு வந்துள்ள பரம்பரைப் பாசன உரிமைகள் பாதிக்கப்படும் வகையில் இந்திய அரசு தமிழ் நாட்டின் வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாத இப் பிரச்சினை குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்காமல் அளவு கடந்து கால தாமதம் செய்து வருவதை கண்டு இம் மன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இதில் இந்திய அரசு மேலும் காலந் தாழ்த்தினால், மைசூர் அரசு தனது திட்டங்களை விரைவுபடுத்தி அவற்றைக் கட்டி முடிக்கும் விரும்பத் தகாத விபரீத நிலை உருவாவதற்கே அது வழி கோலு மென்றும், அதனால் பன்னெடுங் காலமாகத் தமிழ் நாடு அனுபவித்து வந்த பாசன உரிமைகள் பறி போய்விடும் என்றும் இப்பேரவை பெரிதும் அஞ்சுகிறது.

வேதனைமிக்க இத்தகைய சூழ்நிலையில், இந்திய அரசு 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நீர்த் தகராறுகள் சட்டத்தின் கீழ் நடுவர் மன்றம் ஒன்றை அமைத்து: இத் தகராறுகளுக்குத் தொடர்புள்ள தரப்பினர் அனைவருடைய நலன்களையும் கருதித் தமிழக அரசு ஏற்கனவே கேட்டுக்கொண்டுள்ளபடி காவிரி நீர்த் தகராறை அம் மன்றத்தின் தீர்ப்பிற்கு விட்டு நியாயம் வழங்குமாறும் நடுவர் மன்றம் இத் தகராறு குறித்து ஆய்ந்து முடிவு செய்து தனது தீர்ப்பை அளிக்கும் வரையில் மைசூர் அரசு தன் போக்கில் மேற் கொண்டுள்ள இத் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றக் கூடாதென அதற்குக் கட்டளையிடுமாறும், இந்திய அரசை இப் பேரவை வலியுறுத்துகிறது." *



தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் நம்முடைய தமிழ் நாட்டுக்கே உரிய பண்போடும், தமிழ்நாட்டு மக்கள் இந்திய ஒருமைப்பாட்டில் கொண்டிருக்கிற சிறப்பான நம்பிக்கையின் அடிப் படையிலும் எள்ளளவும் பிற மாநில மக்களுக்கும் நமக்குமிடையே பகை உணர்வுகள் தோன்றக் கூடாது என்ற உணர்ச்சியோடும் தயாரிக்கப்பட்டுள்ளதாகும்.

காவிரி நதியில் தமிழ்நாட்டுக்குப் பரம்பரை பரம்பரையாக இருந்து வருகிற பாத்ய உரிமைகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதுதான் இந்தத் தீர்மானத்தினுடைய இன்றி யமையாத நோக்கமாகும்.

காவிரி நதி இந்தியாவிலே இருக்கிற மிகப் பெரிய நதிகளில் நான்காவது நதியாகும். கிட்டத்தட்ட 804 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த ஆறு தமிழ்நாட்டில் மாத்திரம் 321 கிலோமீட்டர் அளவுக்கு ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த ஆற்றில் மைசூர் மாநிலத்தின் வடக்குப் பகுதியில் இதனுடைய துணை நதிகளாகிய ஹேமாவதி, லோகபவானி, ஹரங்கி, சிம்ஸா, அர்க்காவதி, லட்சுமண தீர்த்தம், கபினி, சுவர்ணவதி ஆகிய துணை ஆறுகளும் கலந்து, இவைகள் எல்லாம் காவிரியோடு கலக்கும் வரை தனித்தனிப் பெயர் கொண்டிருந்தாலும் காவிரியோடு கலந்தவுடன் காவிரி என்கிற ஒரே பெயரோடு விளங்கிக் கொண்டிருப்பதை வரலாறு கூறுகின்றது. அந்த நதியில் தமிழகத்திற்குரிய பங்கு, தமிழர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காக தமிழகம் உரிமைக் குரல் கொடுத்த நேரத்தில் எல்லாம் அன்றையதினம் ஆட்சியில் இருந்தவர்கள் தலையிட்டு 1892-ஆம் ஆண்டு ஒரு முறையும், 1924-ஆம் ஆண்டில் ஒரு முறையும் இரண்டு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப் பட்டன.

இந்த இரண்டு ஒப்பந்தங்களிலும் குறிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் கிருஷ்ணராஜசாகர் அணை இயங்குவது காவிரி டெல்டா பாசனத்திற்கு எந்தவிதத்திலும் குந்தகம் விளைவிக்குமாறு குறுக்கிட்டுவிடக் கூடாது என்பதாகும். இரண்டா வது தமிழக மேட்டூர் அணை 3 லட்சத்து 60 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதிக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் மைசூர் அரசு அணைகள் கட்ட விரும்பினால் தமிழக அரசின் முன் சம்மதம் பெற்றே கட்ட வேண்டும். தமிழக அரசின் முன் சம்மதம் இல்லாமல் மைசூர் அரசு எந்தவித அணைகளையும் கட்டிவிடக் கூடாது. உத்தேசித்திருக் கிற திட்ட விவரங்கள் முழுமையையும் தமிழக அரசுக்கு அளிக்க

* 306–321-ம் பக்கங்களில் "காவிரி நீர் குறித்து மைசூர் மாநிலத்துடன் உள்ள தகராறு" என்ற சிறு வெளியீடு இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 8

வேண்டும். அணை கட்டுவதில் வேலை தொடங்குவதற்கு முன்பு. தமிழக அரசின் ஒப்புதல் பெற்றாக வேண்டும் என்பதாகத் தமிழகத்தின் பாசனத்திற்குத் தண்ணீர் வருகிற அளவு பாதிக்கப்படக் கூடாது என்கிற நோக்கத்தில் அமைந்துள்ள ஷரத்துக்கள் அடங்கிய அந்த ஒப்பந்தங்கள் மீறப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறதென்பது தமிழகத்திற்கு அதிர்ச்சி தருகின்றது.

இதில் ஹேமாவதி அணை கட்ட வேண்டுமென்று 1964-ம் ஆண்டு மைசூர் அரசால் தயாரிக்கப்பட்டு அது வெளியிடப்பட்டது. அந்தத் திட்ட அறிக்கையை மைசூர் அரசு பெற்றுக் கொண்ட பிறகு 1968-ல் ஹேமாவதி அணைக்கான அடிக்கல் நாட்டு விழாவினை மைசூர் மாநில முதல்வர் அவர்கள் நடத்தி வைத்தார்கள். அந்தச் செய்தி தமிழக அரசுக்குக் கிட்டியதும் உடனேயே தன் மறுப்பை வெளியிட்டதோடு மாத்திரம் இல்லாமல் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு நல்ல தீர்வினைக் காணவேண்டுமென்று 1968-ஆம் ஆண்டில் மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்திக் கேட்டுக் கொண்டது.

அப்படிக் கேட்டுக் கொண்டதற்கேற்ப, மத்திய அரசு 1968-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் தமிழ் நாட்டு அரசுக்கு எழுதிய கடிதத்தில் தமிழகத்தோடு இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு காணுகிற வரையில் திட்டத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று மைசூருக்கு மத்திய அரசு தெரிவித்திருக்கிறது, என அந்தக் கடிதத்திலே மத்திய அரசு நமக்குக் குறிப்பிட்டிருந்தார்கள். இதற்கிடையிலே கபினி நதியில் 1959-ஆம் ஆண்டு 2½ கோடி ரூபாய் செலவில் ஒரு சிறிய அணை கட்டுவதற்கான ஒப்புதலைப் பெற்று, அப்படி 2½ கோடி ரூபாய் செலவில் கட்டுவதாக இருந்த அணையை இப்போது 25 கோடி ரூபாய் அணைத் திட்டமாக மாற்றி அந்த வேலையையும் அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள். கபினி மாத்திரமல்லாமல், சொர்ணவதியில் ஒரு அணைக்கட்டுத் திட்டத்தை அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள். குடகு பகுதியில் லட்சுமணதீர்த்தம் நதியிலும், ஒரு அணைக்கட்டுத் திட்டத்தை தொடங்கி இருக்கிறார்கள். ஆக, கபினி, ஹரங்கி, சொர்ணவதி, இன்னும் வேறு பல உபநதிகளில் காவிரியோடு கலக்கிற உப நதிகளிலேயெல்லாம் பாசனத் திட்டங்களுக்காக அணைக்கட்டுத் திட்டங்களை அவர்கள் இன்றைக்குத் தொடங்கி அந்த வேலைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதிலே இந்த லட்சுமணதீர்த்தம் என்ற நதி குடகு தனி மாநிலமாக இருந்தபோது அந்தத் தனி மாநிலமான குடகிலே இந்த லட்சுமண தீர்த்தம் நதியில் ஒரு அணை கட்டுவதாக 1943-ம் ஆண்டு முயற்சி எடுத்துக் கொண்டது. அப்படி குடகு மாநிலத்தில் லட்சுமண தீர்த்தம் அணை கட்டப்படுமானால் மைசூர் மாநிலம் பாதிக்கப்படும் என்று மைசூர் அரசு ஆட்சேபம் தெரிவித்தது. அந்த ஆட்சேபத்தை முன்னிட்டு அப்போதிருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் உடனடியாக இந்தப் பிரச்னையில் தலையிட்டு குடகு மாநிலத்தில் மைசூருக்கு விரோதமாக மைசூரினுடைய பாசனத்தை பாதிக்கக்கூடிய அளவிலே லட்சுமண தீர்த்தத்தில் கட்டுவதாக இருந்த அணையைக் கட்டுவது கூடாது என்று அதைத் தடுத்து



1971 ஜூலை 8] [திரு. மு. கருணாநிதி]

விட்டார்கள். அப்படிப்பட்ட குடகு மாநிலம் இன்றைக்கு மைசூர் மாநிலத்தோடு இணைக்கப்பட்டு விட்டது. அவர்கள் ஹரங்கி அணைக் கட்டு திட்டத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, அவர்களுடைய மாநிலம் பாதிக்கப்படும் என்பதற்காக அவர்களுக்கு மேலே உள்ள குடகு தனி மாநிலமாக இருந்த நேரத்தில் அங்கே கட்டப்பட இருந்த லட்சுமண தீர்த்தம் அணைக்கட்டைத் தடுப்பதற்கு மைசூர் அரசுக்கு உரிமை இருந்தது. அதே அடிப்படையில் தான் இன்றைக்கு நம்முடைய மாநிலம் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக நம்முடைய பரம்பரை பாத்தியதைகள், நம்முடைய உரிமைகள், நம்முடைய பாசன வசதிகள் இவைகளுக்காக 1892-ம் ஆண்டு 1924-ம் ஆண்டு ஒப்பந்தங்களின்படி நமக்குத் தரவேண்டிய லிமிட் ஃப்ளோ குறையக் கூடாது என்பதற்காகத் தான் இன்றைக்கு மைசூர் அரசு கட்டுகிற ஹேமாவதி, கபினி, ஹரங்கி, சொர்ணவதி போன்ற அணைக் கட்டுத் திட்டங்களை இன்றைக்கு ஆட்சேபிக்கிறோம்.

இதையே பல முறை சட்டப் பேரவையில் எடுத்துக் காட்டியிருக்கிறேன். இந்த அணை கட்டுவதையே நாம் மறுக்கிறோம் என்பதல்ல பொருள். இந்த அணைகளை அவர்கள் கட்டுவதானால் அதற்கான விவரங்கள் நமக்குத் தரப்பட்டாக வேண்டும். இந்த அணைகளை எழுப்புவதன் மூலமாக நமக்கு—தமிழ் நாட்டிற்கு—தரப்பட வேண்டிய தண்ணீர் அளவு பாதிக்கப்படக் கூடாது: அதற்கான உத்திரவாதம் அளிக்கப்பட்டு உள்ளது. ஆனால் நிலைமை என்ன? ஒப்பந்தத்தில் இருப்பது போல நமக்கு விவரங்கள் அளிக்கப்படவில்லை. நமக்கு விவரங்கள் அளிக்கப்படாதது மாத்திரமல்ல. மத்திய அரசினுடைய முன் அனுமதியும் பெறப்படவில்லை. இந்த இரண்டுமில்லாமல் இன்றைக்கு மைசூர் அரசு, தீர்மானத்திலே நாம் குறிப்பிட்டிருப்பதைப் போல, தன் போக்கில் இந்த அணைகளைக் கட்டிக் கொண்டு வருகின்றனர்.

இந்த ஹரங்கியைப் பற்றி மாத்திரம் சொல்கிற நேரத்தில் இது பட்டியலில் சேர்க்கப்படாத ஆறு, ஒப்பந்தத்தில் வராத ஆறு என்று சொல்கிறார்கள். இங்கே தான் நம்முடைய வாதம் வலுவடைகிறது. ஒப்பந்தத்தில் வராத ஆறு, ஆகவே நாங்கள் விவரங்களைக் கொடுக்க முடியாது என்று கூறுகிறார்களே, ஒப்பந்தத்தில் வராத ஆறுக்கு விவரங்கள் இல்லையென்றால் ஒப்பந்தத்தில் இருக்கிற ஆறுகளுக்கு விவரங்களை அறிவித்தாக வேண்டும் என்பதை அவர்களை அறியாமலே ஒப்புக் கொள்கிறார்கள். அவர்கள் இந்த ஆறுகளில் கட்டப்படுகிற அணைகளுக்கான விவரங்களை அறிவித்தார்களா என்றால் இல்லை. விவரங்களை அறிவிக்காமல், பேச்சுவார்த்தைகள் எதிலுமே சந்தித்து விவாதிக்காமல், மத்திய அரசினுடைய முன் அனுமதி பெறாமல் நடைபெறுகிற இந்தக் காரியத்தை, 1968-ம் ஆண்டு மைசூரினுடைய முதலமைச்சர் திரு. வீரேந்திர பாடில் அவர்கள் அடிக்கல் நாட்டு விழா என்றைக்கு நாட்டினாரோ, அதைத் தொடர்ந்து தமிழ் நாட்டு அரசாங்கம் அதை ஆட்சேபித்து வந்திருக்கிறது. அப்படி ஆட்சேபித்து வந்த நேரத்திலேயெல்லாம் தமிழ் நாட்டு அரசாங்கம் இதிலே கட்சி சார்பற்ற முறையில் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டி வைத்து நிலைமைகளை விளக்கி அவர்களுடைய அரிய

கருத்துக்களையெல்லாம் பெற்று ஒவ்வொரு முறையும் மைசூர் முதல்வரோடோ, கேரள முதல்வரோடோ அல்லது திரு. கே. எல். ராவோடு பேசுகிற நேரத்திலோ அப்போதெல்லாம் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டி முடிவுகள் எடுக்கப்பட்ட அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே இந்த அரசுக்கு அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்கள் அனைவரும் தங்கள் அன்பான ஒத்துழைப்பு தமிழ் நாட்டு மக்களின் நலனை உத்தேசித்துத் தந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான பாராட்டுதலை இந்த அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிலைமையில் நாம் கடைசியாக அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களுடைய கூட்டத்தை கோட்டையில் கூட்டினோம். இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள், நாம் மத்திய அரசு இதிலே காட்டுகிற நிதானப் போக்கை, ஏறத்தாழ 18 மாத காலமாகக் காட்டுகிற நிதானப் போக்கை, கண்டிக்கிற வகையிலே தமிழ் நாடு முழுவதும் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை நடத்துவது என்பது ஒரு தீர்மானம். தமிழகத்தினுடைய நாடாளு மன்ற உறுப்பினர்கள் டில்லிப் பட்டணத்தில் இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்து நம்முடைய தமிழ் நாட்டின் எதிர்காலத்தினுடைய நிலைகளை யெல்லாம் விவரமாக விளக்கியும், மைசூர் மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெறாமல் தமிழ் நாட்டிற்கு விரோதமாக அணைகளைக் கட்டுவதை உடனடியாக நிறுத்தி வைக்குமாறு முறையீடு ஒன்றைத் தரவேண்டுமென்பது இரண்டாவது தீர்மானம். மூன்றாவது, இன்றைக்கு மாநில சட்டப் பேரவையிலும், மேலவையிலும் இந்த அணைகள் கட்டுகிற விஷயத்திற்காகத் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டுமென்பதாகும். இதிலே இரண்டினை நாம் செய்து முடித் திருக்கிறோம். தமிழ் நாடு முழுவதும் அனைத்துக் கட்சித் தலைவர் களும் கலந்து கொண்ட கண்டனக் கூட்டங்கள் மிக எழுச்சி நிறைந்த தாக, உணர்ச்சி மிக்கதாக, உருக்கம் கலந்ததாக நடைபெற்று முடிந்து இருக்கின்றன. அதனைத் தொடர்ந்து, நாடாளு மன்ற உறுப்பினர்கள் இந்திய தலைமை அமைச்சரை டில்லியில் அவருடைய இல்லத்தில் கண்டு நம்முடைய நியாயமான உரிமைகளை வற்புறுத்தி யிருக்கிறார்கள். இப்போது மூன்றாவது கட்டமாகத்தான் இந்தத் தீர்மானத்தை நாம் ஏற்கெனவே முடிவு செய்தவாறு இந்த மாமன்றத்திலே நிறைவேற்றுவதற்கு இங்கே நாம் கூடியிருக்கிறோம். ஆகவே, இதிலே எந்தவிதமான கட்சி மாச்சரியங்களுக்கும் நிச்சய மாக இடம் கிடையாது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் தமிழர்களாகக்கூட அல்ல, தமிழ் நாட்டுக் காரர்கள் என்ற நிலைமையில், தமிழ் நாட்டின் வருங்காலம் பாதிக்கப் படக் கூடாது என்ற அளவில் அனைவரும் பங்கு பெற்றிருப்பதை உள்ளபடியே பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த வகை யில் பங்கு பெற்று ஒத்துழைத்து வருகிற அனைத்துக் கட்சித் தலைவர்கள் மேலும் இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தருவார்கள்



என்கின்ற நிறைந்த நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தை இந்தப் பேரவையின் முன் நான் முன்மொழிந்து, இந்த அளவிலே அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச் சரவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானம் இப்பொழுது பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, 1955-க்குப் பின்னாலே தமிழகத்திற்கு நாடு தழுவிய ஒரு பெரும் பிரச்னை இப்போது மீண்டும் வந்திருக்கிறது. 1955இலே தமிழகத்திற்குச் சேர வேண்டிய பகுதிகள் சில மாநில புனரமைப்பின்போது சேர்க்கப் படாமைக்காக இந்த மாநிலத்திலே தமிழகத்தின் நலன்களைப் பேணிக் காப்பதில் அக்கறை கொண்ட அத்துணை கட்சிகளும் சேர்ந்து ஒரு பெரும் போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. மீண்டும் இப்போது தமிழகத்தின் 4 கோடி மக்களுடைய நெற்களஞ்சியங்கள் வரண்டு போகாமல் பாதுகாக்க ஒரு போராட்டத்தில் இறங்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டு வருகிறோம் என்று கருதுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய நிலையின் நியாயத்தை மிக அழகாக எடுத்துரைத்தார்கள். இங்கே கேட்பது புதிய கோரிக்கை எதுவும் அல்ல. ஏற்கெனவே 1924-ஆம் ஆண்டில் ஏற்பட்டுவிட்டது. அப்படி மைசூர் அரசுக்கும் அன்றைய சென்னை அரசுக்கும் ஏற்பட்டுவிட்ட உடன்படிக்கையின் அடிப்படையிலே அந்த உடன்படிக்கையை மீறாது அந்த அரசு நடந்துகொள்ள வேண்டும். நடந்துகொள்ள மத்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும் என்று கேட்கிறோம்.

இப்போது மைசூர் அரசு இந்த ஒப்பந்தத்திற்கு விரோதமாக ஹேமாவதி, கபினி, ஹரங்கி, சொர்ணவதி போன்ற நதிகளில் அணைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறது. இதனாலே தமிழகத்திற்குக் கிடைக்கிற நீர் பெருமளவு பாதிக்கப்படும். பாதிக்கு மேலே குறைந்துவிடும் என்பதிலே யாருக்கும் கருத்து வேற்றுமையில்லை. மத்திய அரசுக்கும் இதிலே கருத்து வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் முதலமைச்சர் குறிப்பிட்டார்கள் 1968-ல் அவர்கள் மைசூர் அரசுக்குத் தெரிவித்து இருப்பதாக, இந்தப் புதிய அணைகள் கட்டுவதை நிறுத்திவைக்க வேண்டுமென்று மைசூர் அரசுக்கு மத்திய அரசு தெரிவித்து இருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் நம்முடைய நியாயத்தை அவர்கள் ஒப்புக்கொண்டிருக் கிறார்கள் என்பதுதான் அதற்குப் பொருள். ஆனாலும் மைசூர் அரசு, மத்திய அரசினுடைய ஆலோசனைகளை ஏற்காது, தொடர்ந்து அணைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறது. இதனாலே பாதிக்கப்படு கிறோம்.

1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் 15-வது ஷரத்திலே இதுபோன்ற தகராறு எழுமானால் அதனை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். மைசூர் அரசு கிருஷ்ணராஜசாக ரத்தில் அணை கட்டிக்கொள்வதற்கு இந்த சென்னை அரசின் ஒப்புதலைப் பெற்றிருக்கிறது. அதற்குப் பல நிபந்தனைகளையும் அது ஒப்புக்

கொண்டிருக்கிறது. ஏதேனும் புதிதாக அணை கட்டிக்கொள்ள சென்னை அரசின் அனுமதியைப் பெற வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. 1,10,000 ஏக்கருக்கு மேல் காவேரி நீரைக் கொண்டு பாசனத்திற்கு வழி செய்யக் கூடாதென்று வரையரை வைக்கப்பட்டிருக்கிறது. இதனையும் மீறி மைசூர் அரசு செய்து வருகிறது என்று சொன்னால் அதுபற்றி நாம் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதனைச் சொல்லும்போது நான் ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இதுபோன்ற பிரச்சினைகள் நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்லாமல் பல்வேறு மாநிலங்களுக்கிடையேயும் எழுந்துகொண்டிருக்கின்றன. எல்லைகளைப் பிரிப்பதிலோ, நதி நீரைப் பங்குடுவதிலோ சர்ச்சைகள் எழுந்துகொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் மத்திய அரசு அந்தப் பிரச்சினைகளின் தராதரத்தைக் கொண்டு மதிப்பிடாமல் அரசியல் கண்ணோட்டத்துடன் மதிப்பிடுகின்றது. இன்றைக்கு இந்தப் பிரச்சினையிலே மத்திய அரசு மெத்தனமாக இருக்கின்றது. அதனைச் சொன்னால் திரும்பத் திரும்ப அது நம்முடைய கோரிக்கையை ஏற்க மறுக்கிறது.

அதுமட்டுமல்ல ; தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு மத்திய அரசு இதனை ட்ரிப்யூனலுக்கு விடுவதற்கே தயாராக இல்லை என்றும், பேசிப் பாருங்கள் என்றும், பிரதம மந்திரி ஏதோ பேசித் தீர்வு காண முயற்சிப்பார்கள் என்பது போல அவர்கள் கருத்து கொண்டிருப்பதாகப் பத்திரிக்கைகளிலே செய்தி வருகின்றது. எந்த இரண்டு மாநிலங்களுக்கிடையே பிரச்சினைகள் வந்தாலும் தராதரத்தைக் கொண்டு தீர்மானிக்காமல், இரண்டு மாநில மக்களும் ஒருவரோடொருவர் மோதி, பிரச்சாரங்கள் செய்து, போராட்டங்கள் நடத்தி, அதற்குப் பிறகு தீர்க்கும் முறை இருந்து வருகிறது. இதனால் என்னுடைய கட்சி, பிரஜா சோஷலிஸ்டு கட்சி வெகு காலமாகச் சொல்லி வருகிறது, நதிநீர்ப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, எல்லைகளைப் பிரிக்கும் பிரச்சினையாக இருந்தாலும் சரி, இப்படித்தான் தீர்க்க வேண்டுமென்று வரைமுறை வகுத்து அப்படித் தீர்க்க வேண்டும். அப்படி முடியாவிட்டால் அதனை நடுவர் தீர்ப்புக்கு விட்டு அந்த முடிவினை இரு தரப்பாரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நியதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசினிடத்திலே இதுபோன்ற பிரச்சினையிலே இத்தகைய கொள்கைகளை, சில அடிப்படைகளை வகுத்து அதன்படிதான் எந்தப் பிரச்சினையும் தீர்வு காண வேண்டுமென்று ஏற்படுத்தி, அப்படித் தீர்வு காணவில்லையென்றால் தானாகவே நடுவர் தீர்ப்புக்குச் சென்றுவிட வேண்டும். அதனை இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வழியைச் செய்ய வேண்டும்.

இந்தப் பிரச்சினையிலே தமிழகம் முழுமையுமே ஒன்றாக இருக்கிறது. இது மைசூருக்கும் நமக்கும் இடையே இருக்கின்ற ஒரு போராட்டமாக மாற்றுவதற்கு வழி செய்கிறது என்று நான் அஞ்சுகின்றேன். அங்கு நடைபெறப் போகின்ற இடைத் தேர்தலை மனதிலே வைத்து பிரதம மந்திரி அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறார்கள் என்று நான் கருது



கிறேன். ஆகவே நாம் மத்திய அரசு மீது நிர்ப்பந்தம் செலுத்தியாக வேண்டுமென்று நான் கருதுகிறேன். நாம் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். அவர்கள் சமாதானம் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். அமைச்சர்களை அழைத்துப் பேசி அனுப்பி விட்டார்கள். பத்திரிக்கைகளிலே வேறுமாதிரி செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதற்கிடையே அணை கட்டும் வேலை தங்கு தடையின்றி நடைபெறுகின்றது. ஆளுநர்கூட அரசியல்வாதிகளைவிட வேகமாகப் பேசியதாக பத்திரிக்கைகளிலே செய்திகள் வந்திருக்கின்றன.

இந்த நிலையிலே தீர்மானம் போடுவது மட்டுமல்ல ; அதற்கு மேலே செயல்படத் தயாராக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தேவைப்பட்டால் மத்திய அரசு இரண்டு வாரங்களுக்குள்ளே ஒப்புதல் தந்து இந்தப் பிரச்சினையிலே தீர்வு காணவில்லையென்று சொன்னால், இந்தப் பிரச்சினையிலே நியாயமாகப் போராடுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். மத்திய அரசு தவறான பாதையிலே செல்லுகிறது என்று சுட்டிக் காட்டுவதற்காக அந்த அரசுக்கு எதிராக ஒரு போராட்டத்தைத் துவங்குவதற்குக் கூட நாம் தயாராக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கேயிருக்கின்ற மத்திய அரசு அலுவலகங்களிலே ஒரு மறியல் போராட்டத்தை நடத்தியாவது அவர்களுக்கு நல்ல எண்ணத்தை உண்டாக்க முயல வேண்டுமென்று கூட நான் கேட்டுக் கொள்வேன். அந்த முயற்சிக்குப் பின்னால்தான் மத்திய அரசு நல்வழிப்படும் என்று என்னுடைய பிரஜா சோஷலிஸ்டு கட்சி கருதுகிறது. "அழுகின்ற பிள்ளைதான் பால் குடிக்கும்" என்ற நிலைமை இப்போது போய்விட்டது. இப்போது உதைக்கின்ற பிள்ளைக்குத் தான் பால் கிடைக்கும் என்ற நிலைமை வந்து விட்டது. தேவைப்பட்டால் சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும் இந்தப் பிரச்சினையில் ராஜினுமா செய்வதற்குக்கூட தயாராக இருக்க வேண்டும். இது நம்முடைய உணவுப் பிரச்சினை, வயிற்றுப் பிரச்சினை, வாழ்வுப் பிரச்சினை. வயிற்றிலே மண் அடிக்கிறார்கள் என்று சொன்னால் அதனைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதற்குத் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அப்படி எடுக்கப்படும் எவ்வித மேல் நடவடிக்கைகளுக்கும் என்னுடைய கட்சியின் முழு ஒத்துழைப்பும் ஆதரவும் இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன். வணக்கம்.

* THIRU M. A. LATHEEF : Mr. Speaker, Sir, I rise to associate myself with the sentiments expressed by the Hon. Chief Minister in connection with the resolution moved by him. It is rather unfortunate that we have been compelled to the necessity of passing a resolution of this nature on account of the utter indifference shown by the Central Government and certain unilateral actions taken by the Mysore Government.

It is rightly pointed out by the Hon. Chief Minister that this Resolution is neither an expression of animosity towards the State of Mysore nor a declaration of war against the Central Government. It is only an expression of the deep-seated abhorrence and

resentment and the grave concern of the people of Tamil Nadu and the Government of Tamil Nadu and also of this House. Therefore it should not be considered that this House is against the State of Mysore or against the Central Government. It is only an assertion of a right, the inalienable right that Tamil Nadu has been enjoying uninterruptedly for centuries together, I would even say, from time immemorial. The lower riparian rights of Tamil Nadu have been enjoyed by us uninterruptedly, exclusively and continuously from time immemorial and from the days of Karikala Chola and such other great historical figures.

Mysore Government is no doubt taking certain steps. It is *per se* not sustainable either in law or in fact. It may be for the purpose of developing the possibility of irrigation in Mysore. But, under the agreement of 1892 and 1924 it has been categorically agreed to by the parties concerned that the irrigation requirments of the State of Mysore should be subject to the agreement and should be secondary and that the lower riparian rights of Tamil Nadu should not in any way be jeopardised by any action of the State of Mysore. Now it is rather unfortunate that the State of Mysore should do something unilaterally which would undermine the character and the basis of the State of Tamil Nadu. A State I would submit, includes not only the natural boundaries but also such other factors which are essental for the proper functioning and for the proper sustenance of the particular State.

Now, Tamil Nadu is that State wherein this particular river flows and gives a character to the State of Tamil Nadu. Tamil Nadu includes not only the recognised boundaries but even such other factors which are essential for the subsistence and sustenance of the State of Tamil Nadu. Therefore I would submit that whichever is basically important, which is a life source and which gives sustenance to Tamil Nadu is part of Tamil Nadu. That is a recognised question of law, either municipal law, national or international law, intra-State or inter-State law. Tamil Nadu has been using this riparian right from time immemorial. Law of easement also gives this elementary right, because this right has been enjoyed since a long time. Because of the continuous enjoyment of the particular right, because of the enjoyment of that particular riparian right from time immemorial, it is a question of easementary right. That cannot be questioned and taken away. Subject to agreement of 1892 and 1924 we are entitled to certain riparian rights which we have been enjoying from time immemorial.

I would submit that this question or inter-State water, scheme of sharing of water between States and the subsequent Act of 1956 which contains certain loopholes does not meet the requirement of the States fully. There are certain legal loopholes. In the draft constitution there was a provision to refer the matter,



wherever there were disputes, to the then Governor-General. Then in the draft Constitution it was visualised that whenever there were inter-State disputes, the disputes should be referred to the Supreme Court for its opinion and for proper adjudication. But later on that provision in the draft onstitution was substituted by Article 262.

Under Article 262 read with Section 11 of Inter-State Water Disputs Act of 1956, the Supreme Court had been denied the jurisdiction of taking legal cognisance of the dispute between States concerned. Under Article 262 of the Constitution it is the duty of Central Government to come forward and take timely action to settle he dispute, particularly dispues which would affect the very sustenance and character of any particular State. Central Government's duty is there to take timely action by bringing the parties together. The Hon. Chief Minister has put it that the Central Government had done it as early as 1968.

Later on, the dispute had gone a little furher when the Mysore Government had chosen it proper to construct certain reservoirs in the scheduled streams which Mysore Government has no right to construct under national or inter-national or any law. The Mysore State Government has no right whatever to construct dams or reservoir in scheduled streams without there being the prior consent and knowledge of the State of Tamil Nadu. What has happened is rather unfortunate. Why it happened, we do not know.

Government of Mysore had chosen unanilaterally to construct reservoirs without getting prior consent of Tamil Nadu, without getting any clearance from the Central Government. Therefore we are here to express our displeasure of the action of the State of Mysore. It means a crisis of confidence and betrayal of the people of Tamil Nadu. We are sorry to note that the State Government of Mysore had chosen to do this. I would submit that if the Central Government does not come forward to help us and to undo the wrong done by the Mysore Government, we will have to consider as to what other recourse we could take.

A suggestion has been made that we must do picketing and resort to direct action. I would submit that before going to such last methods, this resolution should be forwarded to the Central Government and we will wait and see whether the Central Government does not come forward with concrete proposals to settle the matter. I submi to you, Sir, that the entire State of Tamil Nadu, whatever may be their religious denomination, political denomination, caste or creed, political differences, etc., they will stand as one man behind the lawfully constituted Government of Tamil Nadu and behind the popular Chief Minister of our State to assert their rights.

I would also suggest one more thing for Central Government. We could request the President of India to invoke Article 263 of the Constitution so that a Council may be constituted. The President is entitled to constitute such a Council to settle disputes arising out of some important matter between two States or between States. Therefore on behalf of the party to which I belong, I fully support the resolution. I would submit that this is not against the Central Government or any State Government.

We are all for United India. We are all 'Bharathis'. There is a sloka in Padmapurana which says :

Utharam Yathasamudrasya
Himadravia Dhakshinam!
Varshathava Bharatam Nama
Bharathi Yathra Santhathi Haha!!

The land which is north of sea and the land which is in the South of Himalayas is called "Bharat," and people living in this stretch of land are all "Bharathis" and this is not therefore a matter against Central Government or Government of Mysore. When you are indulging in parochial acts, it is but fair that we assert our right. We are not parochial but we are only asserting our rights.

The Central Government should take timely action so that the feelings of Tamil Nadu people are not roused. If it happens the sole responsibility will have to be shouldered by the Central Government alone and the Central Government shall alone be responsible for any lapse or wrong or any lethargy on their part. We are all 'Bharathis'. When people in one part of the country are being affected, are being denied of their legitimate right, it is but right they assert their right and request the Central Government to take timely action.

Therefore, Mr. Speaker, with these words I fully associate myself with the purpose and aim of the resolution proposed by the Hon. hief Minister. Thank you.

திரு. ஏ. ஆர். பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையிலே முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து என்னுடைய கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

இந்தக் காவிரி நீர்த் தகராறு சமீப காலமாக மிகப் பெரிய பிரச்சினையாக தமிழகத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு பிரச்சினையை நாமாக புதிதாக உருவாக்குவது வேறு, இயற்கை யாகவே புதிய பிரச்சினை உருவாவது வேறு. காவிரி நீர்த் தகராறு ஒரு பெரிய பிரச்சினையாக, ஒரு பெரிய விவகாரமாக இன்றைக்கு உருவாகியிருக்கிறது. இந்தப் பிரச்சனையினால், இயற்கையாக, சட்ட ரீதியாக, நியாய ரீதியாக தமிழகத்து உழவர் பெருங்குடி மக்கள்





பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 1892, 1924-ம் ஆண்டு ஒப்பந்தங்கள் தமிழக அரசுக்கும் மைசூர் அரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தங்களாகும். இப்பொழுது இந்த ஒப்பந்தங்கள் இரண்டும் மீறப்பட்டிருக்கின்றன. இரண்டு அரசுகளுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களை மைசூர் அரசு மீறியிருக்கிறது. அதுமட்டுமல்ல, ஹேமாவதி, சுவர்ணவதி, ஹரங்கி, கபினி இன்னும் சில இடங்களிலும் அணைகள் கட்ட மைசூர் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

"இப்படி யெல்லாம் நாங்கள் அணைகளைக் கட்ட இருக்கிறோம்" என்று மைசூர் அரசு நமக்கு அறிவிக்கக்கூட இல்லை. முன்கூட்டியே அணைகளைப்பற்றிய விவரம் அறிவிக்கவில்லை, மைசூர் அரசு. நமக்கு அறிவிக்காதது மாத்திரம் அல்ல, மத்திய அரசுக்குக்கூட முன் கூட்டியே அறிவிக்கவும் இல்லை, அனுமதி பெறவும் இல்லை. ஆகவே, இப்படி ஒன்றன்பின் ஒன்றாக மைசூர் அரசு தவறுதல்களைச் செய்து கொண்டு வருகின்றது. முதலாவதாக ஒப்பந்தம் மீறப்பட்டிருக் கிறது. இரண்டாவதாக, முன்கூட்டியே அணை கட்டும் திட்டம் பற்றி நமக்கு அறிவிக்கவில்லை. மூன்றாவதாக, மத்திய அரசுக்கு அறிவித்து, அதன் அனுமதியைப் பெறவில்லை. இப்படி வரிசையாக மைசூர் அரசு தவறுதல்களைச் செய்தும், கட்டப்படுகின்ற அணைகளை நிறுத்த வேண்டுமென்றுகூடக் கேட்கவில்லை. "செய்தது எல்லாம் சரிதானா? அணை கட்டுவதால் தமிழகத்திற்குப் பாதகம் ஏற்படுமே, இதை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று" தான் கேட்கிறோம். அதுதான் நம்முடைய கோரிக்கை.

சாதாரணமாகக் கிராமத்தில் தெருவில் ஏதாவது விவகாரம் நடந்துவிட்டால் நான்கு பெரிய மனிதர்களை வைத்துக் கொண்டு பஞ்சாயத்து செய்கிறோம் அல்லவா? அந்த அளவுக்குக்கூட மைசூர் அரசு நினைத்துப் பார்க்கவில்லை. இரண்டு அரசுகளுக்கும் 1956-ம் ஆண்டு நீர்ப்பாசன திட்ட அடிப்படையில்தான் நம்முடைய உரிமைகளைக் கேட்கிறோம், அதற்காக இந்தப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று கூறி வருகிறோம். "இதிலே கூட மத்திய அரசு நிதானம் காட்டுகிறது" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார். நான் இன்னும் வேகமாகவே சொல்ல விரும்புகிறேன், அதாவது "மத்திய அரசு இதிலே மந்தம் காட்டுகிறது" என்று. அதற்குக் காரணம் என்ன என்று புரிய வில்லை. இந்த அணை தொடர்ந்து கட்டப்பட்டு, முடிக்கும் நிலை வருமானால் இது தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் இருக்கலாம். பெரும் தகராறு மூண்டுவிடக்கூடிய அளவுக்கு மத்திய அரசு போகக் கூடாது, துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு மாநில அரசுகளுக்கும் தகராறு வந்தால், மாநில அரசுகள் தவறு செய்தால் அதைத் திருத்த வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு. மத்திய அரசு பொறுப்புடன் அந்தத் தகராற்றைத் தீர்த்து வைக்க வேண்டும். தவறு செய்கிற மாநிலத்தைத் திருத்த வேண்டும். அப்படி யில்லாமல், மத்திய அரசு பேசாமல் இருந்தால் எப்படி தேசிய ஒருமைப்பாடு வளரும்? "மங்கை சூதக

மானால் கங்கையிலே முழுகலாம், ஆனால் கங்கையே சூதகமானால் எங்கே போய் முழுகுவது" என்பார்களே, அதுபோல மத்திய அரசு இதிலே நாட்டம் காட்டாமலிருக்கிற போக்கில் இருக்கிறது. மாநில அரசு தவறு செய்கிறது என்றால் அதை மத்திய அரசு கண்டிக்க வேண்டும். மத்திய அரசு தவறு செய்யக் கூடாது. மாநில அரசு தவறான போக்கில் போகலாம். ஆனால் அதைத் திருத்தி வைக்கக்கூடிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. நிலைமை இப்படியே போனால் இந்தியாவில் தேசிய ஒருமைப் பாட்டுக்கு ஊறு விளைப்பதற்கு மத்திய அரசுதான் பொறுப்பு என்பதை நாட்டுமக்கள் கருதுவார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் மிகவும் நிதானமாகச் சொன்னார்கள், ஒருவேளை, மற்ற வர்கள் தன்னை அவசரக்காரரர்.என்று சொல்வார்கள் என்ற அச்சத் தாலோ, என்னவோ—நம்முடைய வேண்டுகோள் எவ்வளவு நியாயமானது என்பதை இந்திய மக்கள் அத்தனை பேருக்கும் உணர்த்துகின்ற வகையில், மத்திய அரசின் கவனத்தைக் கவரக் கூடிய வகையில் முதலமைச்சர் அவர்கள் நிதானமாக, நுணுக்கமான அறிவுகொண்டு, திறமையுடன் செயலாற்றுகிறார் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில்தான் தீர்மானம் இப் பேரவையில் இப்போது வந்திருக்கிறது. நாம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர், மத்திய அரசு நடுவர் தீர்ப்புக்கு விடுவதில் காலம் தாழ்த்தினார்கள் என்றால், அதனால் விபரீத விளைவுகள் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

மத்திய அரசு நடுவர் தீர்ப்புக்கு விடுகின்ற வரையில் அணைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட வேண்டும். மைசூர் அரசு மறுபடியும் தவறு செய்தால் மத்திய அரசை எதிர்த்து நம்முடைய நியாயத்தை உணர்த்துகிற வகையில் போராட்டம் நடைபெறு மானால், அந்தப் போராட்டத்திற்கு எங்களுடைய கட்சியின் சார்பாக முழு ஆதரவைத் தருகிறோம் என்று கூறிக் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய தீர்மானத்தை வழிமொழிந்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, தமிழகச் சட்ட மன்றத்தில் தமிழக மக்களுடைய கருத்துக்களை யெல்லாம் பிரதிபலிக்கின்ற வகையில், எல்லாக் கட்சிகளும் ஒன்று கூடி நம்முடைய நியாயமான கோரிக்கைக்காக வாதாடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசு கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக இந்தப் பிரச்சினை உருவான விதத்திலேயிருந்து எந்த அளவிற்கு அக்கறை காட்டி வருகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். இந்தப் பிரச்சினையை நாங்கள், ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் உள்ள, சண்டை மூட்டக்கூடிய பிரச்சினை யாக அன்றைய தினத்திலிருந்து இன்றைய நாள்வரை—தமிழக அரசைப் பொறுத்த வரையில் எண்ணவில்லை. இது ஒரு தேசியப் பிரச்னையாகும்.





நண்பர் திரு. லத்திப் அவர்கள் சொன்னதுபோல, மைசூர் மாநிலத்தில் இருப்பவர்களைப்போல தமிழகத்தில் இருப்பவர்களும் இந்தியக் குடிமக்கள்தாம். இந்தியக் குடிமக்களாக இருக்கிற தமிழகத்துப் பகுதியினருக்கு என்ன நியாயம் வழங்கப்படுகிறது என்பதை நாம் 18 மாதங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். காவிரி நமக்கு வாழ்வளிக்கின்ற ஒரு பெரிய நிதியாக இருந்து கொண்டிருக்கிறது. காவிரி உற்பத்தியாகும் இடம் மைசூர் மாநிலத்தில் உள்ளது. அதேபோல் ஆந்திர மாநிலத்தில் பாய்கின்ற துங்கபத்திரா நதி மைசூர் மாநிலத்தில்தான் உற்பத்தியாகிறது. அதேபோல் தாமோதர் நதி, கங்கை, பிரம்மபுத்திரா, சிந்து முதலான எந்த நதிகளானாலும், இந்தியாவுக்குள் இருக்கிற ஒரு மாநிலத்தில் உற்பத்தியாகி இன்னொரு மாநிலத்தில் போய் சங்கம மாகிறது. அதேபோலத்தான் ஜீவநதிகளும் ஓரிடத்தில் உற்பத்தி யாகி, வேறொரு மாநிலத்தில் சங்கமமாகின்றன. இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகத்தில் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க நாடுகள் எங்கேயானாலும் சரி, அங்கெல்லாம் நதிகள் இரண்டு, மூன்று மாநிலங்களைக் கடந்து சென்று கடலில் விழுகின்ற காட்சியைப் பார்க்கிறோம். இயற்கையில் மேடான பகுதியிலிருந்து சமவெளிப் பக்கமாகச் சென்று கடலோரம் சென்று கலப்பதுதான் நதிகளுடைய முறையாக இருக்கிறது. அதுதான் நடக்கக்கூடிய இயற்கைத் தத்துவம். அந்த வகையில் இந்தியாவைப் பார்த்தால் பாகிஸ்தான் பிரிந்த நேரத்திலே சிந்து நதி நீரை எப்படிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற பெரிய பிரச்சினை வந்தது. பாகிஸ்தானுக்கு எவ்வளவு, இந்தியாவுக்கு எவ்வளவு என்று பேசப்பட்ட நேரத்தில் அதை வெகு சாமர்த்தியமாகவும் வெகு லகுவாகவும் அன்றைய தினம் பொறுப்பிலேயிருந்த பண்டித நேரு அவர்கள் சமாளித்தார் கள். இப்படிப் பிரச்னைகள் உருவாகின்ற நேரத்திலே நாம் அவற்றை எப்படித் தீர்க்கிறோம் என்பதைப் பார்க்கவேண்டும்.

ஒவ்வொரு பகுதியிலே உள்ள மக்களுக்கும் உணர்வுகள் இருக்கத்தான் செய்யும். மைசூர் மாநிலத்து மக்களுக்கு நமக்குத் தான் எல்லாம் வேண்டும் என்ற உணர்வுகள் இருக்கும். தமிழகத் திலுள்ள நமக்கு, நமக்கும் வேண்டும் என்ற உணர்வுகள் இருக்கும். இந்தியத் துணைக் கண்டத்திலே இப்படிப்பட்ட பிரச்னைகள் வருகின்ற நேரத்திலே அவற்றை எப்படித் தீர்ப்பது என்ற சூழ்நிலை வருகின்ற நேரத்திலே நம்மை யெல்லாம் ஆண்டுவிட்டுச் சென்ற வெள்ளைக்காரன் காலத்தில் இப்படிப்பட்ட பிரச்னைகள் வரவில்லையா என்றால், இப்படிப்பட்ட நீர்ப் பங்கிடுப் பிரச்னைகள் நம்முடைய மாநிலத்திலே மட்டுமல்ல, இந்தியாவிலே உள்ள மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையிலும் கூட வந்திருக்கின்றன.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் காவிரி நீரைத் தேக்கி மேட்டூர் அணையைக் கட்டி அந்த அணையின் வாயிலாக பாசன ஒழுங்கு செய்ய வேண்டுமென்று திட்டம் தீட்டப்பட்ட நேரத்திலே அதற்குப் போட்டியாக கிருஷ்ணராஜ சாகரம் என்ற அணையைக் அவர்கள் கட்ட முயற்சி செய்தார்கள். அவர்கள் அந்த அணையைக்

கட்டுவது தவறு என்று அப்பொழுது இங்கிருந்த அரசு சொல்ல
வில்லை. உடனே டெல்லியிலிருந்த வைஸ்ராய் அதை ஒரு நடுவரை
நியமித்து அவருடைய தீர்ப்புக்கு விட்டு தீர்ப்பை அறியலானார்.
அவருடைய தீர்ப்பு தமிழகத்திற்குச் சாதகமாக இல்லை என்ற நேரத்
திலே நாம் இங்கிலாந்தில் நம்முடைய நாட்டினுடைய காரியதரிசி
யாக இருக்கின்றவருக்கு நாம் விண்ணப்பித்துக் கோரிக்கை எழுப்பி
னோம். இப்படித் தகராறுகள் எழுகின்ற நேரத்திலே வெள்ளைக்காரன்
காலத்திலேயே நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டும், அந்தத் தீர்ப்புக்கு
இரண்டு பேர்களும் ஒத்துப்போக வேண்டுமென்ற முறை கையாளப்
பட்டிருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் முன்னேற்றக்
கழக அரசைப் பொறுத்தவரையில் நடுவர் தீர்ப்புக்கு இதை
விடவேண்டுமென்ற கோரிக்கை மிக மிகச் சாதாரணமான
கோரிக்கை மனித நீதியை ஒத்துக் கொண்டவர்கள் யாரும்
ஏற்றுக்கொள்ளக்கூடிய கோரிக்கை, இதை ஏற்றுக்கொள்ள மத்திய
அரசு தயக்கம் காட்டுகிறது என்பதை நினைக்கும்பொழுது நாம்
மிகுந்த வேதனைப்படுகின்றோம்.

தென் மண்டலக் கவுன்ஸில் கூட்டத்தைப் பெங்களூரிலே கூட்டி,
கூட்டத்திற்கு வாருங்கள் என்று அழைத்தார்கள். அப்பொழுது
தமிழகத்தின் சார்பாக நம்முடைய முதல்வர் அவர்கள் போயிருந்
தார்கள். ஆந்திரத்திலிருந்து ஆந்திர முதல்வர் அவர்கள்
வந்திருந்தார்கள். கேரளத்திலிருந்து கேரள முதல்வர் அவர்கள்
வந்திருந்தார்கள். புதுவையிலிருந்து அந்த முதல்வர் அவர்கள்
போயிருந்தார்கள். அங்கே இந்தப் பேச்சு எழுப்பப்பட்ட
நேரத்திலே, இதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம், சுமுகமாகப்
பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டு கைவிடப்
பட்டது.

பிறகு கோட்டையிலே பேசலாம் என்று சொன்னார்கள். மத்திய
அரசு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கே. எல். ராவ் அவர்களும்
வந்திருந்தார்கள். நாம் பேசினோம். பேசியதற்குப் பிறகு என்ன
நடந்தது? இங்கே பேசிவிட்டு மைசூர் முதல்வர் வீரேந்திரப்
பாட்டீல் அவர்கள் அங்கே சென்றார்கள், சென்ற பிறகு அந்த
அணையைக் கட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டார்கள். நாம் நம்பிக்
கொண்டிருந்தோம். நம்முடைய தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளும்,
மைசூர் மாநிலத்துப் பிரதிநிதிகளும், மத்திய அரசினுடைய
எஞ்சினியர்களும் எல்லோருமாகப் பேசி சுமுகமான முடிவைக்
கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்த நேரத்தில், கூடிக் கலந்து
பேசுவதில், பரஸ்பரமாக விட்டுக் கொடுத்துப் பேசுவதில் பலன்
ஏற்படும் என்று நாம் நம்பிக் கொண்டிருந்த நேரத்தில் பேச்சு
வார்த்தைகள் மூலமாகப் பிரச்னைகளைத் தீர்த்துவிடலாம் என்று
நாம் முயன்று கொண்டிருந்த நேரத்திலே இன்றைய தினம் மத்திய
அரசுடைய குறிப்பாகச் சொன்னால் கே. எல். ராவ் அவர்களுடைய
நிழலிலேயே மைசூர் அரசு தைரியமாக, நம்மிடத்திலே பேசுவதைப்
போலப் பேசிக் கொண்டு, காரியத்தில் முனைந்துவிட்டது. என்ன
செய்வது?



நாம் ஒழுங்காக நம்முடைய கோரிக்கைகளை எழுப்ப வேண்டு
மென்ற முறையில் நம்முடைய முதல்வர் அவர்கள் நாம் ஏராளமான
தந்திகளை இந்தியப் பிரதம அமைச்சர் அவர்களுக்கு அனுப்ப
வேண்டுமென்று சொன்னார்கள். அதையொட்டி நம் நாட்டு
மக்களிடமிருந்து ஏராளமான தந்திகள் போயின. தந்தி இலாகா
வுக்குத்தான் பணம் போய்ச் சேர்ந்ததேயொழிய மத்திய அரசு
இந்தப் பிரச்னையை ஒரு சாதாரணப் பிரச்னையாகக் கருதிவிட்டது.

அதற்குப் பிறகு சர்வ கட்சிக் கூட்டம் தமிழ்நாட்டில் உள்ள
எல்லா மக்களையும் பிரதிபலிக்கின்ற கட்சித் தலைவர்களும் கூடிப் பேசி
முடிவு எடுத்து தமிழ்நாட்டிற்கு வர இருக்கின்ற ஆபத்தை இந்திய
அரசுக்கு கண்டன நாள் என்பது மூலமாகவும், கோரிக்கை நாள்
என்பது மூலமாகவும் நடத்தித் தெரிவிக்கலாம் என்று முடிவு
செய்யப்பட்டு அவ்வாறே நடத்தினோம். அப்படி நடத்திய பிறகும்
டெல்லியிலே பொறுப்பை ஏற்றுக் கொண்டு நடத்துகிறவர்கள்
செய்யவேண்டியதைச் செய்யவில்லை.

அதற்குப் பிறகு தமிழ்நாட்டைச் சேர்ந்த நாற்பது பாராளுமன்ற
உறுப்பினர்கள் நடந்து சென்று இந்தியத் தலைமை அமைச்சர்
வீட்டுக்குப் போய்க் காத்துக் கிடந்து அவர்களிடத்திலே நம்முடைய
கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இங்கேயும் நாம் பார்க்கிறோம்,
இங்கேயும் எதிர்க் கட்சிகள் இருக்கின்றன. எதிர்க் கட்சியின்
கோரிக்கைகள் வருகின்ற நேரத்திலே தமிழ்நாட்டை ஆளுகின்ற
நம்முடைய முதல்வர் அவர்கள் எந்தக் கட்சி, அந்தக் கட்சியினுடைய
பலாபலன் என்ன, அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையெல்லாம்
பார்க்காமல் அவர்களுடைய கோரிக்கை நியாயமானதாக இருந்தால்
ஏற்றுப் பணிசெய்ய வேண்டுமென்ற ஜனநாயக மரபை ஏற்றுக்
கொண்டு செயல்படுகிறார்கள். தமிழக அரசைப் பொறுத்த வரையில்
அப்படித்தான் நடந்து கொண்டு வருகிறது. ஆனால் உலகத்திற்கே
ஜனநாயகக் கோட்பாடுகளைப் போதித்தவருடைய புதல்வியார்
திருமதி இந்திரா காந்தி அம்மையார், பாராளுமன்ற உறுப்பினர்
40 பேர்கள் நம்முடைய கோரிக்கையை எடுத்துச் சென்ற
நேரத்திலே—அவர்கள் சொந்தக் காரியத்திற்காகச் செல்லவில்லை,
லைசென்ஸ் வேண்டுமென்று கோரவில்லை, சீட் வேண்டுமென்று
கோரிச் செல்லவில்லை—தமிழ்நாட்டின் ஐந்து கோடி மக்களுடைய
எதிர்காலம் பாதிக்கப்படுகின்றது என்று எடுத்துச் சொன்ன
நேரத்திலே—இந்தியத் தலைமையமைச்சரோடு அவருடைய நிர்வாகி
களோ அல்லது நீர்ப்பாசனத் துறை அமைச்சரோ அப்பொழுது
இருந்தாரா என்றால் இல்லை, யாருமே இல்லை—இந்தச் சாதாரணக்
கோரிக்கையை அவர்கள் வைத்த நேரத்திலே கோரிக்கையை வாங்கி
வைத்துவிட்டு, ஆகட்டும் பார்க்கலாம் என்று சாதாரணப் பதிலைச்
சொல்லியிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர்
சட்டத் துறை அமைச்சர் ஆகியவர்கள் அங்கே போயிருக்கிறார்கள்.
நான் இவ்வளவையும் கூறுவதற்குக் காரணம் நாம் எவ்வளவு
நிதானமாகவும் இதிலே வேகம் வந்து விடக் கூடாது, அமைதியாக

[திரு. இராம. அரங்கண்ணல்] [1971 ஜூலை 8

இருக்க வேண்டுமென்ற முறையிலே சண்டை மூட்டக்கூடிய பிரச்னை இல்லை என்ற எண்ணத்தில் தமிழக அரசு அன்போடு நடந்து கொண்டும் இன்றைய தினம் வரையிலே—நம்முடைய சட்ட மன்றம் அதைப்பற்றி இன்றைக்கு விவாதிக்கப் போகிறது என்ற செய்தி டெல்லியிலுள்ள தலைமையமைச்சருக்குத் தெரியாமல் இருக்க முடியாது—நாம் எல்லாம் கேட்கிறோம், சட்ட மன்றம் கூடி விவாதிக்கப் போகிறது, டெல்லியில் உள்ளவர்கள் எந்தவிதமான கருத்தையும் இதுவரையில் தெரிவிக்கவில்லை. நடுவர் தீர்ப்பு வேண்டுமென்று கேட்கின்ற இந்தச் சாதாரணக் கோரிக்கையை நாம் எழுப்புகிறோம். மத்தியஸ்தம் செய்துவிட வேண்டுமென்ற கோரிக்கையை நாம் சொல்லுகிறோம், இதைக் கோரிக்கை என்று கூடச் சொல்ல முடியாது.

இரண்டு பேர்களுக்கு இடையிலே ஏற்படும் சிக்கலைத் தீர்க்க வேண்டுமென்றால் அதை ஒரு நடுவர் தீர்ப்புக்குத்தான் விட வேண்டும். நடுவர் தீர்ப்பு வழங்கும் வரையில் அணைக்கட்டு கட்டுகின்ற வேலையைக் கொஞ்சம் அங்கே நிறுத்தப்பட வேண்டும். கோர்ட்டிலே இரண்டு பேர்களுக்கிடையே வழக்கிருந்தால் அது ஃபைசலாகும் வரையில் ஸ்டே கொடுப்பதுண்டு. அதுபோல இங்கேயும் நம்முடைய வழக்கும், மைசூரின் வழக்கும் முடியும் வரையில் கொஞ்ச நாளைக்கு அணைக்கட்டு கட்டுவதை நிறுத்த வேண்டுமென்பது நம்முடைய கோரிக்கையாகும். சாதாரணமாக இந்த இரண்டு கோரிக்கைகளையும் இன்றையதினம் அங்கேயிருப்பவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கும் நேரத்திலேதான் நமக்குக் கவலையெல்லாம் ஏற்படுகிறது. திரு. கே. எல். ராவ் அவர்கள் என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால் தீர்த்துவிடலாம், ஆனால் மைசூர் கேட்பதிலும் நியாயமிருக்கிறது, தமிழகம் கேட்பதிலும் நியாயமிருக்கிறது, என்று சொல்கிறார்கள். இரண்டு பக்கமும் நியாயம் இருக்கிறது இல்லை யென்று சொல்லவில்லை. மைசூர் மக்களுக்கெல்லாம் தண்ணீரே கொடுக்கக் கூடாது, அணைக்கட்டுகளை யெல்லாம் உடைத்து அங்கேயிருக்கும் தண்ணீரை யெல்லாம் தஞ்சைக்கும், திருச்சிக்கும் கொண்டு வர வேண்டுமென்பது நம்முடைய கோரிக்கை அல்ல.

ஒன்றை மட்டும் முதலமைச்சரவர்கள் தெளிவுபடுத்தினார்கள். அதை நானும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மைசூர் மாநிலத்திலே வாழ்பவர்களும் நம்முடைய சகோதரர்கள், நாமும் அவர்களுடைய அண்ணன் தம்பிகள், கேரளாவில் இருப்பவர்களும் நம்முடைய அண்ணன் தம்பிகள். கேரளாவைப் பொறுத்த வரையிலும் இந்தப் பிரச்னைப் பற்றி அங்கேயும் சூழ்நிலை இருக்கிறது. கேரளம் கேட்பதிலும் நியாயமிருக்கலாம். அவர்களையும் அழைத்து டெல்லி சர்க்கார் பேசுவதில் தவறில்லை. இப்படி ஒவ்வொரு அரசுக்கும் பிரச்னை ஏற்படும்பொழுது அதைத் தீர்த்து வைக்கும் இடத்திலே இருப்பவர்கள் தீர்த்து வைக்க, பழைய நிலையை மறந்து, பழைய நிலையை மறந்தது மட்டுமல்ல, சாதாரண கோரிக்கையைக்கூட ஏற்றுக் கொள்ளாமல் ஏன் இருக்கிறார்கள் என்று எண்ணும்பொழுது தான் நமக்கு ஆபத்து அதிகமாகிச் சங்கடமாக இருக்கிறது.



1971 ஜூலை 8] [திரு. இராம. அரங்கண்ணல்]

ஃபார்வர்ட் பிளாக் தலைவரவர்கள் சொன்னார்கள், "இதை எதிர்த்து டெல்லியின் போக்கை எதிர்த்து தமிழக அரசு போர்க் கொடி உயர்த்தினால் அந்தப் போரிலே ஈடுபட நாங்களெல்லாம் தயாராகயிருக்கிறோம்" என்று சொன்னார்கள். போர்க் கொடி உயர்த்துவது பெரிய காரியம் அல்ல. மத்திய அரசை எதிர்த்து ஒரு போராட்டம் துவங்குவது பெரிய காரியமல்ல. முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசை எதிர்த்து எத்தனையோ போராட்டங்களை நாங்கள் நடத்தியிருக்கிறோம். ஆனால் இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில் மத்திய அரசு இதைத் திசை திருப்பி விடுமோ என்ற பயம் ஏற்படுகின்ற காரணத்தால் நாம் கொஞ்சம் அமைதியாகச் செல்ல வேண்டியிருக்கிறது.

இங்கே நாம் பேசிக் கொண்டிருக்கும் இதே நேரத்தில் டெல்லியிலிருந்து செய்தி வருகிறது, தமிழ்நாட்டிலே இருப்பவர்கள் காவிரி நீரில் பங்கு கேட்கிறார்கள். தமிழகத்தில் இது சம்பந்தமாக ஒரு கிளர்ச்சி இருக்கிறது, இதேபோல மைசூரிலும் ஒரு கிளர்ச்சி இருக்கிறது என்று மைசூரிலிருந்து செய்தி வரவில்லை, டெல்லியிலிருந்து வருகிறது. அப்படி யென்றால் என்ன அர்த்தம்? பிரித்தாளும் சூழ்ச்சியில் வல்லவர்கள் பிரிட்டிஷ்காரர்கள், என்று நினைத்துக் கொண்டிருந்தோம், அந்தப் பிரிட்டிஷ்காரர்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் டெல்லி சர்க்கார் ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இடையே பிரித்தாளும் சூழ்ச்சியை உண்டாக்கப் பார்க்கிறது. அப்படி உண்டாக்கி, மாநிலங்களுக்கிடையே உள்ள உறவை முறித்து தங்களுடைய ஆதிக்கத்தைச் செலுத்தலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறது என்ற பயம் மற்றவர்களுக்கு ஏற்பட்டால் வியப்பில்லை. சாதாரணமான பிரச்சினையில் மைசூர் அரசுக்கும் தமிழக அரசுக்கும் சண்டை என்பதுபோல பேசப்படுகிறதேயொழிய இந்த இரண்டு மாநிலங்களும் சகோதர மாநிலங்கள், இந்த இரு சகோதர மாநிலங்களும் பொதுவான பிரச்னையிலே ஈடுபட்டு நியாயம் தேட முற்படுகின்றன. அதைத் தேடித் தருவோம் என்று அனுசரணையாகவோ அல்லது அன்பான வழியிலோ அல்லது இதை எப்படியாவது தீர்க்க வேண்டுமென்ற ஆர்வமோ மத்திய சர்க்காரிலே இல்லை யென்றால் இதைப்பற்றி நாம் வேதனைப்படுவதைத் தவிர வேறு என்ன செய்யலாம். தீவிர வாதம் மற்றவர்களுக்கு ஏற்பட்டால் எதிர்காலத்திலே தமிழ்நாட்டை யாரும் குறை சொல்லக் கூடாது. ஏனென்றால் தமிழக அரசைப் பொறுத்தவரையில் என்னென்ன செய்ய வேண்டுமோ சாத்தியமான முறையில், அன்பான முறையில், வா என்றால் போய் அங்கே போய் உட்கார்ந்து, பேச வேண்டுமென்றால் பேசி இதைத் தீர்க்க எல்லா விதமான முறைகளையும் கையாள்கிறது.

அவர்கள் என்ன சொல்கிறார்கள்? மைசூரில் தேர்தல் வரவிருக்கிறது என்று. எதற்கெடுத்தாலும் அரசியல்தானா? மைசூரில் எந்தக் கட்சி வந்தால் என்ன? இன்று இந்திய தலைமை அமைச்சரைப் பொறுத்தவரையில் எந்தக் கட்சி வந்தால்தான் அவர்களுக்கு என்ன ஆபத்து? என்ன காரணத்தினால் இப்படிப் பேசிக்கொண்டிருக்கிறார்

களோ என்று எண்ணும்பொழுது நம் எண்ணம் வெகுதூரத்திற்குப் போகிறது. இப்படிப்பட்டவர்கள் ஜனநாயக உணர்வை மதியா மலும், மக்களின் எண்ணத்தை மதியாமலும், பாராளுமன்ற உறுப் பினர்களின் கோரிக்கையை உதாசீனப்படுத்துவதுமாக இப்படிப் பட்ட சூழ்நிலையிலிருப்பவர்கள் டெல்லியிலேயிருந்துக் கொண்டு இருந்தால் எதிர்காலத்திலே இந்தியாவின் கதி என்னவாகும்?

இருந்து கொண்டிருப்பவர் இந்திரா காந்தி. பெண்களுக்கு அமைதியான சுபாவம் உண்டு என்கிறார்கள். ஆனால் இந்திராவின் தந்தையார் பண்டித ஜவஹர்லால் நேரு இப்படிப்பட்ட பிரச்னையிலே முன்பு ஒரு ஆற்று நீர் பங்கீடு பிரச்சினை வந்த நேரத்தில் அழகாகச் சொன்னார்கள். இது உணர்ச்சி வசத்தோடு தீர்க்கப்பட வேண்டிய பிரச்னை அல்ல. உட்கார்ந்து பேசித் தீர்க்க வேண்டிய பிரச்னை, ஆறுகளெல்லாம் இலக்கியங்கள், அந்த இலக்கியங்களைப் பற்றி ஆத்திரத்தோடு பேசக் கூடாது என்று நல்வழியைக் காட்டினார்கள். அந்த நல்வழியை இன்று இந்தியாவின் தலைமைப் பொறுப்பை யேற்றிருக்கும் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் ஏன் உணர வில்லை என்பதே நம் கேள்வி. இந்தக் கேள்வியின் விடை எதிர் காலத்திலே விபரீதமாகப் போனால் அது டெல்லியை எதிர்த்துத் தான் விபரீதமாகப் போகுமேயொழிய மாநில அரசுகளுக்குள் மைசூர் அரசுக்கோ அல்லது நம்முடைய தமிழக அரசுக்கோ அல்லது கேரள அரசுக்கோ அல்லது ஆந்திர அரசுக்கோ இடையிலே பூசலை உண்டு பண்ணுது. அந்தப் பூசலிலே குளிர்காயலாம் என்று டெல்லி யிலே இருப்பவர்கள் கருதினால் எதிர்காலம் நிச்சயமாக அப்படி ஆகாது என்பதை தமிழ்நாட்டிலே இருப்பவர்கள் நிரூபிப்பார்கள். இந்தக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் தமிழக அரசு எடுத் துள்ள நடவடிக்கைகளில் நம்முடைய எதிர்க் கட்சியைச் சேர்ந்த அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து இந்தக் கோரிக்கையை எழுப்பி இருப்பதால் உள்ளபடியே இதற்குப் பெருமை அதிகமாகி உள்ளது. நம்முடைய முதலமைச்சரவர்கள் வழிகாட்டுகிறார்கள். அந்த வழி யிலே நடக்க நாமெல்லாம் தயாராக இருக்க வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.

* திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகரவர்களே, இன்றைய தினம் கனம் முதலமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட காவிரிநீர்ப் பிரச்னை திர்மானத்தை எங்கள் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் சார்பாக முழுமனதோடு வரவேற்று அவர்களுக்கு எவ்வளவு எங்களால் ஒத்துழைப்புக் கொடுக்க முடியுமோ அத்தனையும் கொடுக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதிலே தமிழக அரசு சற்றுத் தாமதமாகி விட்டது என்ற குற்றச்சாட்டைச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். காவிரி நீர்ப் பிரச்னையைப் பொறுத்தமட்டில் தமிழக மக்களுக்குத் தனி உரிமை உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. காரணம் கரிகால் பெருவளத்தான் காலத்திலிருந்து காவிரி நீரைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்குச் சான்றாக கல்லணையும், அணைக்கட்டும் இருக்கின்றன. 1892-இலிருந்து மட்டு



மல்ல, அதற்கு முன்பிருந்தே பயன்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார் கள். ரைப்பேரியன் ரைட்ஸ் என்பதுபோல் பயன்படுத்தி வந்த தண்ணீர் மீது தனி உரிமை உண்டு. அந்த உரிமை நமக்கு உண்டு என்பதை நான் முதலிலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். கரிகால் பெருவளத்தான் காலத்திலிருந்து நாம் பயன் படுத்திக் கொண்டு வந்திருக்கின்ற காரணத்தால் அன்றைக்கு ஹென்றி கிரிப்பிள்கூட என்ன சொன்னார் என்றால் தமிழ்நாட்டில் காவிரியை முன்பிருந்தே பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள் என்று சொன்னார். "pre-existing irrigation projects" என்று சொன்னார். இப்படி நாம் தண்ணீரைப் பயன்படுத்தி வந்திருக்கிறோம். வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி என்று புகழ்பெற்ற காவிரி இன்றைக்குப் பொய்த்துவிடுமோ என்று பயம் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அந்தப் பிரச்னையை நாம் துரிதமாகத் தீர்க்க முன்வந்திருந்தால் இந்தப் பயம் வந்திருக்குமா என்று என்னுடைய மனத்தில் தோன்றுகிறது.

1968-லே இந்தப் பிரச்னையைப்பற்றி அரசின் கவனத்திற்கு, முன் பிருந்த சட்டசபையில் பல அங்கத்தினர்கள் தீர்மானம் கொடுத்து அவசரப் பிரச்னையாக எடுத்துச் சொல்லி, ஹேமாவதி அணை கட்டப் படுகிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 24—8—1968, 12—9—1969, 11—3—1969, மற்றும் 6—3—1970 போன்ற நாட் களிலே விவாதம் வந்தபோதெல்லாம், நாங்கள் கவனித்துக் கொள் கிறோம், பேச்சு நடத்திக் கொண்டிருக்கிறோம், கட்டாயம் பாதுகாப் போம் என்று வாக்குறுதி கொடுத்து வந்தார்களேயொழிய இப் பொழுது எடுக்கும் தீவிரத்தை அப்பொழுதே காட்டியிருந்தால் சாலச் சிறந்ததாக இருந்திருக்கும். ஏனென்றால் பழைய நடவடிக்கை களைப் படிக்கும் பொழுதெல்லாம் அப்பொழுது பி.டப்ள்யூ.டி. மினிஸ்டராக இருந்த நம்முடைய முதலமைச்சரவர்கள் வெகு சாமார்த்தியமாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். லிமிட் ஃப்ளோ பார்த்துக் கொள்கிறோம், என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய நடைமுறை விதிமுறைகளை வகுக்கிறோம் என்றெல்லாம் பதில் சொல்லி இருக்கிறார்கள். ஆகஸ்ட் மாதத்திலே சொன்னபொழுது

"without prejudice to our limit flows, you can go ahead with your construction . . . .'

என்று சொல்லியிருப்பதைப் பார்க்கும்பொழுது கிளீயரன்ஸ் ஏதாவது கொடுத்து விட்டார்களோ என்னவோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அப்படிக் கொடுத்திருந்தால் அது ஆபத்து. உங்களுக்குத் தண்ணீரை கொடுக்கிறோம் என்று சொன்னாலும் மேலும் அணைக் கட்டுகளைக் கட்டித் தேக்கிவிட்டால் என்ன செய்வது, கேட்டால் மழை பெய்யவில்லை என்று ஒரு வார்த்தையிலே தப்பித்துக்கொள்ளலாம்.

அதற்குமேலே "வேகரிஸ் ஆஃப் நேச்சர்" இருக்கிறது. அது மனித சக்திக்கு அடங்கியது அல்ல. அதற்கும் அப்பார்ப்பட்ட சக்தி அல்லவா? ஆகையால், மழை பெய்யவில்லை, என் தேக்கத்திற்குத் தான் தண்ணீர் இருக்கிறது, உன் தேக்கத்திற்குத் தண்ணீர் இல்லை

என்று சொல்லிவிட்டால் என்ன செய்வீர்கள்? அதனால் நெஞ்சை அள்ளும் தஞ்சை பஞ்சப் பிரதேசமாகிவிடும் என்பதை அரசாங்கம் மறந்து விடக் கூடாது. நமக்கு வருகிற தண்ணீரை எந்தக் காரணத்தைக் கொண்டும் தடுக்காதிருந்தால் போதும், லிமிட் ஃப்ளோ இருந்தால் போதும். பரந்த மனப்பான்மையோடு சொன்னால் அவர்களை அணையைக் கட்டிவிட்டு தண்ணீர் விடவில்லை என்று சொன்னால் என்ன செய்வார்கள்? நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அங்கே என்ன சொன்னார்களோ எனக்குத் தெரியாது. மத்திய அரசினர் என்ன சொன்னார்களோ, நம்முடைய அதிகாரிகள் என்ன கையெழுத்துப் போட்டு வந்தார்களோ, எனக்குத் தெரியாது.

இந்த விஷயத்திலே இன்னும் கொஞ்சம் விரைவாகத் தீவிரமான நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும். அவர்கள் 100 அடி உயரம் அணை கட்டி முடிக்கும் வரை விட்டு விட்டு இன்று தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்தத் தீவிரத்தை அன்றே காட்டியிருக்க வேண்டாமா? மைசூர் முதலமைச்சர் மத்திய அரசின் க்ளியரன்ஸ் சர்டிபிகேட்டும் இல்லாமல், தமிழ் மாநிலத்தின் சம்மதமும் பெறுமல் அணையைக் கட்டியே தீருவோம் என்று அவர் சொல்லும்போது தமிழக மக்கள் அதே போன்ற வேகத்தினைக் காட்டத் தெரியாதவர்களா? மைசூர் அரசு தமிழக மக்களுக்கு அநீதி விளைக்கத்தக்க அளவுக்கு எப்படி அணையைக் கட்டலாம்? இன்று அணையைக் கட்டிய பிறகு டிரிப்யூனலுக்குப் போனால் கூட அவர்கள் என்ன சொல்ல முடியும்? பல கோடி ரூபாய் செலவழித்து அணையைக் கட்டியாகிவிட்டது, கொடுத்ததை வாங்கிக் கொள்ளுங்கள் என்ற மனிதாபிமான உணர்ச்சியுடன்தான் சொல்லுவார்கள். 1971-ல் நீங்கள் எடுத்திருக்கும் தீவிர நடவடிக்கையை 1968-ம் ஆண்டிலேயே எடுத்திருக்க வேண்டும். இவ்வளவு நாட்களுக்குப் பேச்சு வார்த்தைக்கு இடம் கொடுத்திருக்கக் கூடாது. பேச்சு வார்த்தைக்குப் பிறகும் அவர்கள் அணையைக் கட்டுவதை நிறுத்தவில்லை என்று சொன்னால் நீங்கள் பேச்சை முறித்து அன்றே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். வள்ளுவன் குறளை எதற்கும் பயன்படுத்தும் நீங்கள் இதற்கு அதைப் பயன்படுத்தவில்லையா?

"பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது."

பொழுது பார்த்துக் காரியமாற்றி இருக்க வேண்டும். அன்றைக்கே தீவிர நடவடிக்கையை நீங்கள் எடுத்திருக்க வேண்டும். அன்று உங்களுடைய 25 பாராளுமன்ற அங்கத்தினர்களை நம்பி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அரசாங்கத்தை நடத்தி வந்தார்கள். இன்றைக்கு ஊர்வலமாகச் சென்ற பாராளுமன்ற எம்.பி.-க்கள் அன்றைக்கே ஊர்வலமாகச் சென்றிருந்தால் டிரிப்யூனலுக்கு விடவேண்டுமென்று கோரியிருந்தால் வெற்றி கிடைத்திருக்கும். 1971-ல் நடந்த பொதுத் தேர்தலின்போது அவர்கள் உங்களுடைய தயவை நம்பியிருந்தபோது நீங்கள் நன்றாகப் பயன்படுத்தி இருக்கலாம். காவிரித் தகராறை டிரிப்யூனலுக்கு விடுவதாக ஆணை பிறப்பித்தால் பொதுத் தேர்தலில் ஒத்துழைக்கிறோம் என்று நீங்கள் சொல்லியிருந்தால் அது தமிழகத்திற்குப் பயன்பட்டிருக்கும்.



இப்போது தமிழகத்தின் பிரதிநிதியாக திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அங்கே திட்ட அமைச்சராக இருக்கிறார். மைசூர் இடைத் தேர்தல் முடிந்த பிறகுதான் இந்தப் பிரச்சினைக்கு ஏதாவது ஒரு முடிவு செய்யப்படும் என்று அவர் சொல்லுகிறார். இது நியாயமா? அன்றைக்குப் பதில் சொல்லும்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு கருணையோடு பேசினார்? ஒரு தமிழர் அங்கே அமைச்சராக இருப்பதைத் தடுக்க மாட்டேன்; தமிழர் என்ற காரணத்தால் அவருக்கு ஒத்தாசை செய்வோம் என்று சொன்னார்கள். இன்று அந்தத் தமிழர் எப்படிப் பேசுகிறார்? மைசூர் தேர்தல் முடியும் வரை இந்தப் பிரச்சினையிலே முடிவு எடுக்க முடியாது என்று ஒரு தமிழர், தமிழர் பிரதிநிதி தமிழர்களின் நலன்களுக்குப் புறம்பாகப் பேசுகிறார். தாம் கிருஷ்ணகிரியில் தேர்தலுக்கு நிற்கப் போகிறோமே என்பதையும் மறந்துவிட்டு அவர் இப்படிப் பேசுகிறார். இந்திரா அம்மையாரையும் சொல்லிவிடமாட்டேன் என்கிறார்.

எனக்கு முன்பு பேசிய அரங்கண்ணல் அவர்கள் சொன்னார்கள்—"இந்தப் பிரச்சினைக்கும் மைசூர் தேர்தலுக்கும் என்ன சம்பந்தம்? இனிமேல் எப்படிப் போனால் இவர்களுக்கு என்ன? மத்திய அரசை இது எந்த வகையிலும் பாதிக்கப் போவதில்லை அப்படி இருக்க இந்தப் பிரச்சினையிலே முடிவு எடுப்பதை ஏன் தள்ளிப் போட்டுக் கொண்டே போக வேண்டும்" என்று கேட்டார்கள். ஏற்கனவே டிரிப்யூனலுக்கு விட்டிருந்தால் 18 மாதங்கள் ஆகியிருக்கும். 18 மாதங்களாகக் கண்ணாமூச்சி விளையாடுகிறார்கள், நாமும் நம்முடைய அமைச்சர்களை அனுப்பிக் கொண்டே இருக்கிறோம். முந்தாநாள் கூட டில்லிக்குப் போய் வந்தார்கள். என்ன பேச்சு வார்த்தை நடந்தது என்று தெரிவிக்கவில்லை. ஒருவேளை பதில் சொல்லும்போது சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன். அமைச்சர்களை டில்லிக்கு அனுப்பிக் கொண்டிருப்பதால் பிரச்சினையை எப்படித் தீர்க்க முடியும்? இது நமக்கு வாழ்வுப் பிரச்சினை. தமிழகத்தில் ஜீவநதி காவிரி ஒன்றுதான். காவிரியில் தண்ணீர் வராவிட்டால் செங்கற்பட்டிலுள்ள பாலாறு மாதிரி மண்ணாறு ஆகிவிடும். தமிழக மக்களின் வாழ்க்கையில் மண்ணடித்துவிடும்.

இந்தப் பிரச்சினையிலே நடவடிக்கை எடுத்துக் கொள்வதிலே தமிழக அரசு ஏன் இவ்வளவு காலதாமதம் செய்தது? 1968-ல் இருந்து 1971 வரை பேச்சு வார்த்தையிலேயே சென்றிருக்கிறதே. பொதுத் தேர்தல் நடந்த காலத்திலாவது வாக்குறுதி வாங்கியிருக்க வேண்டாமா? மிகவும் சாமர்த்தியமான முதலமைச்சர் எப்படி இதை விட்டுவிட்டார்? இப்போது இவ்வளவு துடிப்பைக் காட்டுகின்றவர், தேவையான நேரத்தில் சரியான கவனத்தைச் செலுத்துவதற்குத் தவறி விட்டார்கள் என்றே கூற ஆசைப்படுகிறேன்.

இப்போது கேரளாவையும் இதிலே சேர்த்துப் பேச வேண்டுமென்று கோருகிறார்கள். கேரளாவிற்கும், காவேரித் தண்ணீருக்கும் எந்தவிதமான பந்தமோ, பாசமோ இல்லை. பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்திலே பேச்சு வார்த்தை நடத்தும்போது அப்பர் பவானியில் தண்ணீர் எடுத்துக்கொள்ள அவர்களுக்கு விட்டுக்

கொடுத்து விட்டோமோ என்ற பயம் கூடத் தோன்றுகிறது. காவிரி தண்ணீரில் கேரளாவுக்கு எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. இப்போது அவர்கள் குறுக்கே தலையை நீட்டி இரண்டு பேருக்கும் இடையே இருக்கக்கூடிய சண்டையில் புகுந்து ஏதாவது கிடைக்குமா என்று பார்க்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. அவர்கள் இதிலே தலையிடுவதற்கு எந்தவித உரிமையும் கிடையாது. காவிரித் தண்ணீர் முழுவதையும் நாம்தான் பயன்படுத்துகிறோம். இவ்வளவு நல்ல முறையில் பயன்படுத்தி வந்த காவிரித் தண்ணீரை அக்கறைக் குறைவினாலோ, திறமையாகச் சமாளிக்கத் தெரியாத காரணத் தாலோ விட்டுக் கொடுத்தோம், ஏமாந்தோம் என்று பேசுவதற்கு தமிழகம் ஆளாகக் கூடாது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஏதோ நாங்கள் அவசரப்பட்டு தீவிரமாக எதையும் செய்யவில்லை என்று அம்மையார் அவர்கள் குற்றம் சாட்டினார்கள். இதைப்பற்றி ஒரு விவாதம் 1969 செப்டம்பர் 13-ம் தேதி இந்த மாமன்றத்தில் நடைபெற்றபோது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு திரு. பி. ஜி. கருத் திருமன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள்—

"...... உணர்ச்சி வசப்பட்டுப் பேசாமல், உணர்ச்சியைக் காட்டிக் குழப்பாமல், சில பேர்கள் சில வேளைகளில் பேசுவது போல் 'அதெல்லாம் தவறு என்று நினைக்கிறேன், இதைச் செய்தால் நாங்கள் அதைச் செய்வோம்' என்றெல்லாம் பேசாமல் உட்கார்ந்து சுமுகமாகப் பேசி முடிக்க வேண்டும். இது விஷயத்தில் முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தமிழகத்திலுள்ள எல்லா மக்களும், எந்த விதமான அபிப்பிராய பேதமும் இல்லாமல், நாங்கள் கேட்டுக் கொள்கிறோம் என்ற நிலையிலேயே கேட்டுக்கொள்வோம்" என்று திரு. கருத்திருமன் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ரொம்ப நிதானமாகப் போக வேண்டும்; உணர்ச்சி வசப்படக் கூடாது, அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்றெல்லாம் பேசக் கூடாது என்று அப்போதே திரு. கருத்திருமன் பேசியிருக்கிறார். நாங்கள் எல்லா அரசியல் கட்சிகளின் முடிவை அறிந்துதான் செயலாற்றி வருகிறோம். இந்த அரசு செயலாற்றி வருகிறது. எதிர்க் கட்சியில் இருந்து அதன் தலைவர் கருத்திருமன் பேச்சுக்கு மரியாதை கொடுக்கும் வகையில், எல்லாத் தலைவர்களும் சொன்ன அபிப்பிராயத்திற்கு மரியாதை கொடுக்கும் வகையில் எல்லோரும் சேர்ந்து எந்த முடிவை எடுத்தோமோ அந்த முடிவின்படிதான் செயல்பட்டு வருகிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: 'சில பேர் பொறுப்புள்ள முறையில் பேசுகிறார்கள், நான் பொறுப்பற்ற முறையில் பேசுகிறேன்' என்று முதலமைச்சர் அவர்கள் மறைமுகமாகப் பேச வேண்டாம். திரு. கருத்திருமன் அவர்கள் இந்தியாவின் ஒற்றுமைக்குக் குந்தகம் விளையக் கூடாது என்று எந்த அளவுக்கு அக்கறை கொண்டிருந்தார் களோ அதை நானும் கொண்டிருக்கிறேன். நான் சொல்லுவது என்னவென்றால் பேச்சு வார்த்தை நடத்துவது என்றால் எத்தனை ஆண்டுகளுக்குப் பேச்சு வார்த்தை நடத்துவது என்பதுதான்.



பேச்சுவார்த்தை சரியான முறையில் செல்லவில்லை என்றால் அதை விட்டுத் திரும்பி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா? மைசூர் முதலமைச்சர் அணையைக் கட்ட ஆரம்பித்துவிட்ட பிறகும் நாம் பேச்சு வார்த்தையிலேயே காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தால் எப்படி?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உறுப்பினர் அவர்கள் என்ன செய்திருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். தேர்தலுக்கு முன்னாலேயே டிரிப்யூனலுக்கு விடுவதற்கு இந்திரா அரசாங்கத்திட மிருந்து உத்தரவு வாங்கி இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அன்றைக்கு நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு அவர்களுக்குத் தேவை என்ற நிலையில் வற்புறுத்தியிருந்தால் தற்போது நடந்த பொதுத் தேர்தலை ஆறு மாதத்திற்கு முன்னால் ராஜினாமாச் செய்து விட்டு நடத்தி இருக்க முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இனிமேலும் இந்தப் பிரச்சினையிலே ராஜினாமாச் செய்துவிட்டுப் பொதுத் தேர்தலை நடத்தத் தயாராக இருக்கிறோம், தமிழகம் வாழ, தமிழ் நாட்டு மக்கள் வாழ ராஜினாமா செய்து விட்டுத் தேர்தலுக்கு நிற்கத் தயாராக இருக்கிறோம் என்ற அந்த நிலையை...........

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் சொல்லுவதைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். தமிழ்நாட்டில் ராஜினாமாச் செய்வோம் என்று சொல்லுகிறார்கள். ராஜினாமாச் செய்துவிட்டு மறுபடியும் வந்தால் ஒரு கட்சியின் எண்ணிக்கையில் வித்தியாசம் ஏற்படலாம் என்ற கருத்தில் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன்.

அரசியல் பற்றிக் குழப்பாமல் பேச வேண்டிய பிரச்சினை இது. அன்றையதினம் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத் திலேயே தலைவர்கள் மட்டிலும் பேசினால் போதும் என்று முடிவு செய்யப்பட்டது. இன்றையதினம் இதை முழுக்க முழுக்க அரசியலுக்குக் கொண்டு போவதாக இருந்தால் அதற்கும் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில அரசு தாமத மாகச் செயல்படுகிறது, தீவிரமாகச் செயல்பட வேண்டுமென்று கூறினாலும் ஏற்றுக்கொள்கிறேன். அப்படிக் கூறுவதை வாய்ப்பாக எடுத்துக் கொண்டு மேலும் மத்திய அரசோடு போராடப் பயன் படும் என்று எடுத்துக் கொள்கிறேன். ஆனால் உண்மையில் அப்படி நம்பிக் கொண்டு பேசாதீர்கள்.

இந்த அரசு 1968-ம் ஆண்டிலிருந்து இதுவரை செய்திருக்கிற முயற்சிகளையெல்லாம் இந்த மாமன்றத்தில் இப்போதிருந்த எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். அப்போது எதிர்க்கட்சித் தலைவர்களெல்லாம் பாராட்டப்பட்டு, மேலவை எதிர்க் கட்சித் தலைவர் ராஜாராம் அவர்களும், பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும் அண்மையில் நடைபெற்ற கண்டன கூட்டங்களில் கூட முதலமைச்சர் அவர்களை நம்பி பொறுப்பை ஒப்படைக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த மன்றத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளை யெல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களேயல்லாமல் யாரும் இதுதவறான முயற்சிகள், அரசு தீவிரமாக நடைபெறவில்லை, முயற்சி எடுக்கவில்லை என்று சொல்லவேயில்லை. தமிழ்நாடு அரசாங்கம் ராஜினுமா செய்து விடுவது என்பது பெரிய காரியமல்ல. மறு தேர்தலை சந்திக்க முடியுமா என்ற பயத்தையும் அச்சத்தையும் ஆட்படுத்திக் கொண்டு அல்ல இந்தப் பிரச்னையைப்பற்றிப் பேசுவது. ராஜினுமா யார் யார் செய்வது எப்படிச் செய்வது என்பதை யெல்லாம் கடைசிக் கட்டத்தில் யோசிக்கப்பட வேண்டிய பிரச்னைகள். பதவியை விட்டு விலகுவது என்பதற்காக நிச்சயமாக மனதார கண்ணீர் விட மாட்டோம் என்பதை அம்மையார் உணர வேண்டும். நான் சொல்ல வந்தது, அப்போதிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தர முடியாது என்று கூறிவிட்டிருப்பார்களானல் இப்போது நடந்த தேர்தலை 6 மாதங்களுக்கு முன் கூட்டி செய்திருக்க வேண்டுமென்று சொன்னேனேயல்லாமல் வேறு அல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி : உபதலைவர் என்ற பொறுப்போடு பேசுகிறேன். அரசியலைக் கொண்டு வந்து குழப்ப மாட்டேன். செய்த காரியங்களைப் பேதமில்லாமல் ஒப்புக்கொள்கிறோம். நிலையை இன்னும் தீவிரமாக நடத்த வேண்டுமென்று சொல்வதில் அரசியல் கிடையாது. பொறுப்பு தவறிவிட்டோம் என்று சொல்ல வேண்டாம். இன்னும் வேகமாகக் காரியங்களைச் செய்திருந்தால் இன்னும் பாராட்டுகளைக் குவித்திருப்போம். இது போதாது, இன்னும் வேகத்தை அதிகரிக்க வேண்டுமென்று சொன்னேம். அதை நல்ல எண்ணத்தில் "குட் ஸ்பிரிட்" சொன்னதை, அரசியல் கண்ணேட்டத்தோடு பார்க்காதீர்கள். நல்ல பாவத்தோடு சொல் கிறோம். நல்ல நோக்கத்தோடு சொல்லப்படும் இந்தக் கருத்தைக் கொண்டு இனிமேல் தீவிரமாகச் சென்று இந்தத் திட்டங்களைத் திட்டுங்கள். ஊர்வலம் பலிக்கவில்லை, கண்டனக் கூட்டம் எடுபட வில்லை. அடுத்தது என்ன? தீவிரமாக நடவடிக்கை எடுத்தால் கட்டாயம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். தமிழர்களின் வளமை என்ற பிரச்னை அதே சமயத்தில் இந்திய ஒற்றுமை பாதிக்காத அளவிலே இருக்க வேண்டுமென்று சொல்லி அமைகிறேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வரலாற்று முக்கியத்துவமான ஒரு தீர்மானத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன் மொழிந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானம்தான் கடைசித் தீர்மான மாக இருக்க வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். தீர்மானம் போட்டு மத்திய அரசை நம்முடைய எண்ணத்திற்குத் திருப்புகிற நிலைமை இனிமேல் இருக்கக் கூடாது என்று நான் விரும்புகிறேன்.

காவிரி என்பது தஞ்சை மாவட்டத்திற்கு இன்றியமையாத ஒன்று என்பதை எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டம் தமிழகத்தினுடைய இதயம் என்பதை எல்லோரும் சொன்னார்கள். இந்த இதயத்தில் இன்றைக்கு ரத்தம் வடிந்து கொண்டிருக்கிறது.



இதயம் நின்று விட்டால் உயிர் நின்று விடும். இன்றைக்குத் தமிழகத் தினுடைய உயிர் இருப்பதா வேண்டாமா என்ற நிலையில் இருக்கிறது. ஏற்கனவே, தமிழகத்தில் இருக்கிற பல ஜீவ நதிகள் அனைத்தும் வறண்டு விட்டன. கண்ணம்பாடியில் அணை கட்டியதன் மூலமாக பாலாறு இன்று தண்ணீர் இல்லாமல் பாலைவனமாகக் காட்சியளிக் கிறது. நம்முடைய இலக்கியத்தில் கூறப்பட்டிருக்கிற எல்லா ஜீவ நதிகளும் இன்றைக்கு வறண்டு போய்விட்ட இந்த நேரத்தில்தான் காவிரி வறண்டு போகக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாம் தீர்மானம் போட்டோம். சர்வ கட்சிகளைக் கூட்டி ஆலோசனை நடத்தினேம். ஊர்வலம் நடத்தினேம். நம்முடைய பாராளு மன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்களெல்லாம் பிரதமரிடத்திலே விண்ணப்பம் செய்தார்கள். இவைகளுக்குப் பின்னலேயும் காரியங் கள் நடைபெறவில்லையென்றல் அடுத்து என்ன செய்வது என்பதைப் பற்றி மிகத் தீவிரமாக இந்த மன்றத்தில் இருக்கிறவர்கள் சொல்ல வேண்டும்.

இன்றைக்கு அரசியலிலே தலைமைப் பீடத்தில் உட்கார்ந்து இருக்கிறவர்கள் ஒரு நாடு அழிந்து போவதைப்பற்றிக் கவலைப் படாமல் தங்களுடைய அரசியல் லாபத்திற்காகத்தான் எந்தக் காரியத்தையும் அந்தக் கண்ணேடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் 1,500 ஆண்டுகளுக்கு முன்னலே யிருந்து, இந்த நாட்டில் நாகரீகம் தோன்றிய காலத்திலிருந்து காவிரி நீரை நாம் மட்டும்தான் பயன்படுத்தி கொண்டுவந்தோம். ஆனல், 1892-ம் ஆண்டுக்குப் பின்னலேதான் மைசூர் மாநிலத்திலே இருக்கிறவர்கள் இந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியுமாவென்று ஆராய்ச்சி செய்தார்கள். ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பயன்படுத்தி வந்த இந்த நீரை இன்றைக்கு நமக்குத் தர முடியாது என்று சொல்லக் கூடிய ஒரு நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். இந்த நிலைமையைப் பார்க்கிறபோது மைசூர் அரசாங்கம் இந்தியாவிலிருந்து தனியாகப் பிரிந்து விட்டதோ என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்ட மாதிரி 1968-லே இந்தப் பிரச்னை வரவில்லை. 1960-61-லேயே இந்தப் பிரச்னை எழுப்பியிருக்கிறது. அன்றைக்கிருந்த அரசியல் தலைவர்கள் இதைப்பற்றிப் பேசிக்கொண்டு வந்திருக் கிறார்கள். 1968-லேதான் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறார்கள், மைசூர் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். இன்றைக்குத் தனியாக ஒரு நாடாகப் பிரிந்து அவர்களுடைய சுதந்திர நிர்வாக சாம்ராஜ்யம் நடைபெற்றுக்கொண்டிருந்தால் என்னென்ன காரியங்கள் நடை பெறுமோ அதைப்போலவே காரியங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. ஏறத்தாழ 61 கோடி ரூபாய்க்கு மேலாகத் திட்டங் களைத் தீட்டியிருக்கிறார்கள். 61 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டியவர்கள் மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியைக் கேட்க வில்லை. அதுமட்டும் அல்ல. திட்டக் குழுவினுடைய அனுமதியை யும் கேட்காமல் அவசர அவசரமாக இன்றைக்கு அவர்கள் அணைக்கட்டு கட்டுவதைத் தீவிரப்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

நான் இங்கே இந்த மன்றத்தின் தலைவர்மூலமாக அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இனிமேல் எடுக்கப் போகிற முடிவு, எடுக்கப் போகிற நடவடிக்கை தீவிரமானதாக இருக்க வேண்டும். எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களுடைய வழி வந்தவர்கள். அண்ணா அவர்கள் அவர்களிடத்திலே பொறுமையைக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அதனால் முதலமைச்சர் அவர்கள் தீர்மானம் போட்டார்கள். கோடிக்கணக்கான தந்திகளை அனுப்பச் சொன்னார்கள். ஊர் ஊராகக் கண்டனக் கூட்டங்களைப் போடச் சொன்னார்கள். இவ்வளவு போட்டதற்குப் பின்னாலேயும் மத்திய அரசாங்கம் மிகவும் மெத்தனமாகவும் இதைப்பற்றிக் கவலைப்படாமலும் மைசூரில் நடக்கவிருக்கிற தேர்தலைப்பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்கிறது. இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் மைசூர்க்காரர்கள் அவசர அவசரமாக, மிக வேகமாக அணைகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதை நிறுத்தியே தீரவேண்டும். இதை நிறுத்துவதற்கு எந்தத் தியாகத்தைச் செய்வதற்கும் நாமெல்லாம் தயாராக இருக்கவேண்டும்.

இங்கே பேசியக் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அனைவரும் சொன்னார்கள். எந்தத் தியாகத்திற்கும் மைசூர்க்காரர்களைவிடத் தமிழர்கள் எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர் என்ற அவர்களுடைய ஆவேசமான பேச்சுக்குத் தலை வணங்குகிறேன். என்ன செய்யப் போகிறோம்? பேரறிஞர் அண்ணா அவர்கள் 67-ல் சொன்னார்கள். ஜூன் மாதம் 15-ம் தேதி என்று நினைக்கிறேன். பட்ஜெட் கூட்டத்தில் சொன்னார்கள். திராவிட நாடுப் பிரச்னையை விட்டு விடுங்கள். உள்ளே இருந்து போராடுவோம் என்று சொன்னார் என்று சுப்பிரமணியம் சொல்கிறார்கள். அவர் சொன்னதைக் கேட்டு விட்டு விடவில்லை. நாட்டினுடைய நிலைமையைப் புரிந்து நாங்கள் விட்டு விட்டோம். திராவிட நாடுப் பிரிவினையைத்தான் விட்டு விட்டோமேதவிர பிரிவினைக்கான காரணங்கள் விட்டுவிடவில்லையென்று சொன்னார்கள். இந்தி வேண்டும், தமிழ் வேண்டாம் என்று சொன்னால் அதற்காக இந்த ஒற்றுமையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்னார்கள். தூத்துக்குடி வேண்டாம், கண்ட்லா வேண்டும் என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்னார்கள். இன்றைக்குக் காவிரி வேண்டாம், கங்கை வேண்டும் என்று சொன்னால் இந்த திராவிட நாடுப் பிரச்னை, இந்த நாட்டுப் பிரிவினைப் பிரச்னை அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டமாதிரி மீண்டும் எடுத்துக் கொள்ளவேண்டிய நிலைமை வந்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. நமக்கிருக்கிற அச்சம் மத்தியிலே கொலுவீற்றிருக்கிற ஆட்சியாளர்களுக்குக் கிடையாது. அவர்களுக்கு மட்டுமல்ல, மைசூரில் வீற்றிருக்கிறவர்களுக்கும் அந்த அச்சம் கிடையாது. நாட்டின் ஒற்றுமையிலே அவர்களுக்கு நம்பிக்கையில்லை. அவர்கள் அவசர அவசரமாக இன்றைக்கு அணையைக் கட்டிக் கொண்டு வருகிறார்கள். நம்முடைய உரிமையையெல்லாம் எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.



இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்னாலே சூயஸ் கால்வாயில் எகிப்தியர்கள் தடை போட்டவுடன் இங்கிலாந்திலே இருக்கிற அண்டனி ஈடன் சூயஸ் கால்வாயைப் பிடிக்க குண்டு மாரி பொழிந்தான். தன் உரிமை பறி போகிறது என்று சொன்னவுடன் அங்கே இருக்கிறவர்கள் ஆர்ந்து எழுந்தார்கள். நாம் இன்றைக்குத் தீர்மானம் போடுகிறோம். சட்டமன்றத்தில் பேசுகிறோம், என்ற நிலை இருக்கக் கூடாது. நான் இங்கே இருக்கிற அங்கத்தினர்களுக்கும் மற்றவர்களுக்கும் தலைவர் மூலமாக வேண்டுகோள் விடுகிறேன். தஞ்சை தரணி இனிமேல் பாலைவனமாகப் போகிறது. மைசூரில் அணை கட்டினால் சகாரா பாலைவனம் போல், இராஜஸ்தான் பாலைவனம் போல் தஞ்சாவூர் பாலைவனமாகி விடும்.

வெள்ளைக்காரன் காலத்திலேயாவது பிழைப்பதற்கு சிலோனுக்கு, பர்மாவுக்குச் சென்றோம். இன்றைக்கு அவனெல்லாம் நம்மைத் திருப்பியனுப்புகிறான். எங்கே போவோம்? வடநாட்டுக்கும் போக முடியாது. சிலோனுக்கும் போக முடியாது. பர்மாவுக்கும் போக முடியாது. தமிழகத்திலே செத்து மடிவதைவிட நாம் ஒரு போராட்டத்தை நடத்தி வாழ்வா, சாவா என்பதைப்பற்றி முடிவுக்கு வரவேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சரவர்கள் பொதுக்கூட்டத்திலே சொன்னார்கள் "மைசூரைப்போல எங்களுக்கும் மத்திய அரசை எதிர்ப்பதற்குத் தெரியாதா, ராஜ ராஜ சோழனுடைய சிலையை மத்திய அரசினுடைய அனுமதியில்லாமல் இங்கே வைக்க முடியாதா" என்று சொன்னார்கள். "தீவுத் திடலிலே மத்திய அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் கட்டடம் கட்ட முடியாதா" என்று கேட்டார்கள், நான் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலே சொல்லிக் கொள்வேன். அவைகளையெல்லாம் செய்யுங்கள். மத்திய அரசாங்கத்தை என்றைக்கு எதிர்க்கிறோமோ அன்றைக்குத்தான் அவர்களுக்கும் நம்மைப்பற்றிக் கவலை வரும், இன்றைக்கு அவர்களுடைய கவலையெல்லாம் மைசூரிலே எத்தனை சீட்டுகள் வருமென்ற கவலையேதவிர தஞ்சாவூர் பாழாய்ப் போகிறதே என்ற கவலையில்லை. இங்கே வரும் மத்திய அமைச்சர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டுங்கள். இங்கேயிருந்து அனுப்பும் வரிப்பணத்தை நிறுத்தி வையுங்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் போர் முறை என்று சொன்னார்கள். அப்படியே இருக்கட்டும். தனி நாடு பிரச்சினையாக வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளட்டும். போர் நடந்தால்தான் உண்மை உணரப்படும். உதைக்கின்ற காலுக்கு முத்தமா? நாமும் உதைப்போம் என்று உணர்த்த வேண்டும். தஞ்சைத் தரணி போய்விட்டதென்று சொன்னால் இனிமேல் வாழ்வதிலே பிரயோஜனமில்லை. வாழ முடியாது என்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வெறும் தீர்மானத்தினாலே எந்தக் காரியமும் நடைபெற முடியாது. மத்திய அரசாங்கத்தோடு போர் தொடுங்கள். அந்தப் போருக்கு எத்தனை ஆயிரம் இளைஞர்கள் தேவை என்று சொன்னாலும் நாங்கள் வரத் தயார். வாழ்வு எங்களுக்கு பொருட்டல்ல. குழந்தை குட்டி இவைகளையும்பற்றிக் கவலைப்படவில்லை.

மதிப்புக்குரிய அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள் 'எப்படி யாவது அணைக்கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்" என்று எப்படி நிறுத்துவது? பாம் போட்டுத் தகர்ப்பதா? தற்கொலைப் படை வேண்டுமா? சொல்லுங்கள் தயாராய் இருக்கிறோம். எதைச் சொன்னாலும் அதைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். தற் கொலைப் படை தயாராக இருக்கிறது என்று முதலமைச்சருக்கு நான் சொல்லிக் கொள்வேன். தற்கொலைப் படை அமைப்பதற்குத் தயார். தமிழ்நாட்டின் தன்மானத்தைக் காப்பாற்றுங்கள், ஏழைகளைக் காப் பாற்றுங்கள், எதைக் கேட்கிறீர்களோ அதைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று கூறி என் உரையை முடித்துக் கொள் கின்றேன்.

* திரு. நா. கணபதி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, வரலாற்று சிறப்புமிக்க ஒரு தீர்மானத்தில், தமிழ் நாட்டின் எதிர்காலத்தை உறுதியடையச் செய்யுமாறு இருக்கக்கூடிய ஒரு தீர்மானத்தில், தமிழ்நாட்டின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் ஒரு தீர்மானத்தில் பேசக்கூடிய வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலில் நான் தஞ்சை மாவட்டத்துக்காரன் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமைப்படுகிறேன். தஞ்சை மாவட்டத்திலேதிலே பாபநாசம் தொகுதி காவிரி டெல்டா பகுதியிலே ஒரு முக்கியமான தொகுதியாகும். காவிரியிலிருந்து 6 கிளை நதிகள் இங்கு பாய் கின்றன. அதன் பயனாகத் தஞ்சை மாவட்டத்தில் ஒரு வளமிக்க பகுதியாக பாபநாசம் பகுதி இருக்கின்றது. தஞ்சைத் தரணியைப் பஞ்ச பூமியாக மாற்றும் விதத்தில் மற்ற மாநிலங்களுக்கு உணவு அளிக்கும் தஞ்சையை மாற்றி மற்ற மாநிலங்களைவிட மோசமாகச் செய்யும் ஒரு நடவடிக்கையை எதிர்த்துப் போராட வேண்டிய சூழ் நிலையில் நாம் இருக்கிறோம்.

இந்தப் பிரச்சினையை நினைக்கின்ற நேரத்தில் தனி மனிதனுக்குத் தரப்பட்டுள்ள உரிமை எப்படி அமைந்திருக்கின்றது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தனி மனிதன் தன்னுடைய நிலத்திற்குத் தண்ணீர் விடுவதைத் தடுத்து விடாமல் இருப்பதற்கு நீதி மன்றம் இருக்கிறது. வழக்காடு வதற்கு வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அப்படி அவனுக்கு வழக்காட வசதியில்லாமலிருந்தால், அவனுடைய உரிமையைப் பாது காப்பதற்கு நீதிமன்றம் தானே முயற்சி எடுத்து அவனுக்கு நீதி வழங்குகிறது. ஈஸ்மெண்ட் ஆக்ட் என்று சொல்லுகிறார்கள். அதன்படி தனி மனிதனுக்குள்ள உரிமையைப் பாதுகாத்துக் கொடுப் பதற்கு அந்த ஈஸ்மெண்ட் ஆக்ட் இருக்கிறது. ஈஸ்மெண்ட் என்பது அவனுடைய வீட்டையோ நிலத்தையோ அவன் அனுபவித்து வருவதற்கு இடையூறு செய்தால், அதை வழக்காடி அவன் தன்னுடைய உரிமையை நிலைநாட்டிக்கொள்ள நீதி மன்றம் இருக் கிறது. அந்த உரிமை நம்முடைய தமிழக அரசுக்கு நம்முடைய தமிழ் மக்களுக்கு இல்லையென்று நினைக்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகி



யிருக்கின்றது. ஒரு நாட்டுக்காரன் தண்ணீரைப் பிற நாட்டுக்காரன் தடுத்து நிறுத்தக் கூடாதென்றும் இருக்கிறது. இந்த நேரத்தில் அவைத் தலைவர் அவர்களின் அனுமதியின் பேரில் ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்குமிடையே இருக்கின்ற தண்ணீர் பிரச்சினையைப் பற்றி நம்முடைய இன்டர் நேஷனல் கன்வென்ஷன் என்ன சொல்லி, இருக்கிறது என்பதைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

. . . . ..But the flow of non-national boundary, and international rivers is not within the arbitrary power of one of the riparian States, for it is a rule of International Law that no State is allowed to alter the natural conditions of its own territory to the disadvantage of the natural conditions of the territory of a neighbouring State. For this reason a State is not only forbidden to stop or to divert the flow of a river which runs from its own to a neighbouring State, but likewise to make such use of the water of the river as either causes danger to the neighbouring State or prevents it from making proper use of the flow of the river on its part.

இண்டர்நேஷனல் கன்வென்ஷன்படி ஒரு நாடு இன்னொரு நாட்டின் தண்ணீரை குறைக்கக்கூடிய அளவிலோ அல்லது பாதகம் விளை விக்கக்கூடிய அளவிலோ அந்த நாட்டின் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ள அணைக்கட்டிக் கொள்ளக்கூடாதென்று அகில உலக ரீதியில் உள்ள ஒரு கன்வென்ஷனை வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்த அகில உலக ரீதியிலே இருக்கின்ற கன்வென்ஷன் இண்டர் ஸ்டேட் ரிவர்ஸ் என்று சொல்லக்கூடிய நம்முடைய காவிரி நீர்ப் பிரச்சினைக்கு எந்த அளவு பொருந்தும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு நாடும் இன்னொரு நாடும் எவ்வளவு கடமைப்பட்டிருக்கின்றதோ அவ்வளவு கடமைப்பட்டிருக்கின்றது ஒரு மாநிலமும் இன்னொரு மாநிலமும். அதை நம்முடைய மைசூர் மாநிலம் மதிக்காமல் தொன்றுதொட்டு ஏன்சியன்ட் யூசர் என்று சொல்லுவர். அப்படி தொன்றுதொட்டு நடை பெற்று வரும் வழக்கத்தை மாற்றி மைசூர் மாநிலம் ஹேமாவதி போன்ற பல அணைகளைக் கட்டிக்கொண்டு வருகிறது.

மத்திய அரசைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். மத்திய அரசு நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத் தின்படி இயங்கிவருகிறது. மத்திய அரசுக்கு எந்த அளவுக்கு ஒரு மாநிலத்தைக் கட்டுப்படுத்த அதிகாரம் இருக்கின்றது என்பதை நம்முடைய அரசியல் கட்டத்திலே சொல்லியிருக்கின்றார்கள். ஆர்ட்டிகிள் 365 என்று கான்ஸ்டிட்யூஷனிலே இருக்கின்றது. அந்த 365-படி ஒரு மாநில அரசு மத்திய அரசின் கட்டளையை மதிக்கவில்லை என்றால், உடனே அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலே அந்த மாநிலத்திலே அரசு இயங்கவில்லை எமர்ஜென்சி டிக்ளேர் செய்து விட்டு உடனே அங்கே குடியரசுத் தலைவர் அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டு நிர்வாகம் செய்யக்கூடிய ஒரு நிலைமை ஏற்படு கின்றது. அதன்பேரில் இன்றைய தினம் மைசூர் மாநிலத்திலே ஒரு சாதாரண முடிவுக்கு வரக்கூடிய சூழ்நிலைக்கு அங்கே குடியரசுத் தலைவருடைய ஆட்சி நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

[திரு. நா. கணபதி] [1971 ஜூலை 8

ஒரு மாநில அரசு மத்திய அரசின் கட்டளைக்குக் கீழ்ப்படியாக நேரத்தில் குடியரசுத் தலைவர் ஒரு பிரகடனம் மூலம் பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாம் என்ற சட்டமே எதற்காக ஏற்பட்டது என்றால் பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளில் மத்திய அரசு, மாநில அரசு சரிவர நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றக் கட்டுப் படுத்துவதற்குத்தான் அந்த அதிகாரம். அப்படிப்பட்ட நேரத்தில் அங்கே கவர்னருக்கு அதிகாரம் கிடையாது. அந்த அதிகாரம் குடியரசுத் தலைவருக்குத்தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இன்றைய தினம் மைசூர் மாநிலத்தில் நடைபெறுகின்ற குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பாருங்கள். குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறுகிறது. கட்டப்படுவது ஹேமாவதி அணைக்கட்டு. என்ன வினோதமான நிலை. வேலியே பயிரை மேயும் நிலை. மத்திய அரசு தன்னுடைய செல்வாக்கையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி மைசூரில் ஹேமாவதி அணைக்கட்டுக் கட்டுவதை ஆதரித்து வருவதைப் பார்க்கிற நேரத்தில் வருந்தக்கூடிய சூழ்நிலை வேதனைப் படுகின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தது, நமது அரசியலமைப்புச் சட்டத்தின்படி இண்டர்- ஸ்டேட் வாட்டர்ஸ் டிஸ்பியூட் ஆக்ட் என்ற சட்டத்தின்படி ஒரு ஒப்பந்தத்தில் ஏற்படுகின்ற தகராறு காரணமாக அல்லது ஒரு ஆற்றின் தண்ணீரை எப்படிப் பயன் படுத்திக்கொள்வது என்பதுபற்றித் தகராறு ஏற்படுகின்ற நேரத்தில் ஒப்பந்தப்படி இரண்டு மாநிலமும் இயங்கவில்லை என்ற நேரத்தில் அந்தச் சட்டத்தின்படி நடுவராக சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவரை நியமித்து அவரிடம் தீர்ப்புக்கு விட்டு அந்தத் தீர்ப்பின்படி நடக்க வேண்டியது அந்த இரண்டு அரசுகளின் கடமையாகும். நாம் இந்தச் சாதாரணக் கோரிக்கையை எழுப்புகிறோம். இதற்குச் செவி சாய்க்காமல் ஏதோ அரசியல் காரணங்களுக்காக இன்றைய தினம் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் தமிழகம் எப்படிப் போனால் என்ன என்று அவர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கிற நேரத்தில் மிகவும் வருந்த வேண்டி இருக்கிறது.

இதை எல்லாம் சிந்தித்துப் பார்க்கின்ற நேரத்தில் ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது. ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் வந்த பிறகுதான் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு விட்டதுபோலவும் இப்படி ஒரு தீர்மானத்தைப் போடுவதைப்பற்றி ஒரு சிலர் கருதிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். 1968-ல் மைசூர் மாநில முதல்வர் திரு. வீரேந்திர பட்டீல் பேச்சு வார்த்தை நடத்த வந்த நேரத்தில் திருமலைப்பிள்ளை தெருவில் உள்ள சிண்டிகேட் தலைவர் காமராசர் அவர்களைச் சந்தித்து விட்டுத்தான் பேச்சு வார்த்தைக்கு வந்தார். அந்த காமராசர் அவர்களுக்கு தமிழகத்தின் வாழ்வில் நல்லெண்ணம் இருந்தால்.........

* திரு. ஆர். பொன்னப்ப நாடார்: என்னுடைய கட்சியின் தலைவர் பேரில் ஏதோ குற்றத்தை வேண்டுமென்றே கூறுகிறார்கள். அவர்கள் என்ன பேசினார்கள் என்பதைப்பற்றி எல்லாம் இங்கு கூறாமல் இருப்பது உசிதமாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன். எங்களுடைய



1971 ஜூலை 8] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

தலைவர் இந்தப் பிரச்சினையில் எந்த நிலையைக் கொண்டு இருக் கிறார்கள் என்பதை முதலமைச்சர் அவர்களே பல மேடைகளில் எடுத்துக்கூறி இருக்கிறார்கள். ஏதோ வீரேந்திர பட்டீல் கட்சியைச் சேர்ந்தவர் காமராசர். அக்காரணத்தால் காமராசர் தமிழகத்திற்கு விரோதமான நிலை எடுத்திருக்கிறார் என்ற விதத்தில் களங்கம் கற்பிக்க வேண்டாம் என்று அன்னாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. கணபதி: தனிப்பட்ட காமராசர்மீது குற்றச்சாட்டு வதாக நம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். காமராசர் அவர்கள் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். இன்றைய தினம் சிண்டிகேட் காங்கிரசுக் கட்சித் தலைவர். அவர் அன்று நினைத் திருந்தால் வீரேந்திர பட்டீலிடம் அவருக்கு இருக்கும் செல்வாக்கை உபயோகப்படுத்தித் தமிழகத்திற்கு நீதி கிடைக்கச் செய்திருக்க முடியும் என்ற கருத்தில் சொன்னேன்.

ஜூலை இரண்டாம் தேதி டில்லி நகரத்தில் எங்கள் உறுப்பினர்கள் ஊர்வலம் சென்ற நேரத்தில் அதில் கலந்து கொள்ள காமராசர் அவர்களுக்கு எண்ணம் இல்லை. அவர்கள் தந்த மகஜரில் கையெழுத்துப் போடவும் எண்ணம் இல்லை. அப்படிப்பட்ட அரசியல் தலைவர்களைக் கண்டு வருந்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லிக்கொண்டு தமிழகத்தைப் பாதிக்கின்ற எந்தத் திட்டமாக இருந்தாலும் ஹேமாவதி அணைக்கட்டாக இருந்தாலும் அதைக் கண்டு மத்திய அரசு தூங்கினாலும் தூங்குவதுபோலப் பாசாங்கு செய்தாலும் நம் கழகத் தலைவர் தமிழக அரசின் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் போராடித் தமிழகத்தின் உரிமையைப் பாதுகாக்கக் கடமைப்பட்டு இருக்கிறோம் என்பதை இன்றைய தினம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசு இந்த விவகாரத்தில் நல்லதோர் நடவடிக்கை எடுத்து உடனடியாக நடுவர் தீர்ப்புக்கு விடாமல் அலட்சியமாக இருந்தால் அதனால் ஏற்படுகிற விளைவுகள் எந்த விளைவாக இருந்தாலும் அதைத் தாங்கிக்கொள்ள இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். நம் தமிழகம் என்றென்றும் வளமிக்க பூமியாக இருக்க வேண்டும் என்று எண்ணத்தின் அடிப்படையில் இந்தத் தமிழக மக்களுக்குப் பாது காப்பு அளிக்க, தொண்டாற்ற, வாழ்க்கை முன்னேற உறுதிப் பிரமாணம் ஏற்றுக்கொண்டு இந்தச் சட்ட மன்றத்தில் அமர்ந் திருக்கும் நாம் எந்த நடவடிக்கையிலும் எந்தப் போராட்டமாக இருந்தாலும்சரி கர்நாடக மாநிலத்திற்குச் சென்று போராட்டம் செய்ய வேண்டியதாயிருந்தாலும் சரி, டில்லியில் சென்று மறியல் போராட்டம் நடத்த வேண்டியிருந்தாலும்சரி நாம் தயார் தயார் என்ற உறுதிமொழியை தமிழக அரசின் முதல்வர், கழகத்தின் தலைவர், மாண்புமிகு கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு என் ஆதரவை இந்தத் தீர்மானத்திற்குத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[1971 ஜூலை 8

*திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், நான் சார்ந்து இருக்கின்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தமிழக முதல்வர் அவர்கள் இங்கே சமர்ப்பித்த தீர்மானத்தை, ஆதரிக்கக்கூடிய அடிப்படையில் உங்களுக்கு முன்னால் நான் நிற்கின்றேன்.

இந்தத் தீர்மானம் எளிய முறையில் தயாரிக்கப்பட்டு கடைசியில் நாம் கூறி இருப்பதெல்லாம் இன்று மைசூர் அரசு தன் போக்கில் மேற்கொண்டுள்ள இந்தத் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றக் கூடாது என்று கட்டளையிடவேண்டும், ஒரு ஸ்டே ஆர்டர் மாதிரியாகப் போடவேண்டும் என்பதும் சட்ட ரீதியில் நமக்கு ஒரு ட்ரிபியூனல் கொடுக்கப்படவேண்டும் என்பதுதான் இந்தத் தீர்மானத்தில் இருக்கின்ற உள்ளடக்கமாகும்.

இந்தத் தீர்மானத்தை விளக்கிச் சொல்லக்கூடிய நேரத்தில் பல விஷயங்களை எல்லாம் முதல்வர் அவர்கள் வெளிப்படுத்தினார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நேற்றுச் சட்டசபைக்கு முன்னால் வைக்கப் பட்ட காவிரி நீர்த் தகராறு என்று சிறு வெளியீட்டில் இறுதியாக குறிப்பிடப்பட்டிருப்பதை நான் இங்கே வாசிக்கலாம் என்று நினைக் கிறேன்.

"எனவேதான், காவிரி நீர்ப்பிரச்சினைக் குறித்துத் தமிழ்நாடு பெரிதும் கவலையும் கலக்கமும் கொண்டுள்ளது என்பதில் வியப்பில்லை. இந்தப் பிரச்சினை இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், அதன் வாழ்வுப் பிரச்சினையாகும். மைசூர் நலமுடன் வாழவேண்டும் என்று விழையும் அதே நேரத்தில், தமிழ்நாடு பன்னெடுங் காலமாக அனுபவித்து வந்ததால் உறுதிப்படுத்தப்பட்டு, ஒரு ஒப்பந்தமல்ல, இரு ஒப்பந்தங்களால் முழு நிறை ஒப்புதல் அளிக்கப்பட்ட தனது நியாயமான உரிமைகளைக் கட்டிக்காத்துக்கொள்ள விரும்புகிறது." இது எவ்வளவு நிதானமாகவும் பொறுப்புடனும் போடப்பட்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு தனிப்பட்ட கட்சிப் பிரச்சினையாக இல்லாமல் தமிழ்நாட்டு மக்களுடைய பிரச்சினையாகப் பார்க்கவேண்டும், தவிர, 1968-ம் ஆண்டு முதற் கொண்டே எடுத்த நடவடிக்கைகளைப்பற்றி எல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். சமீபத்தில் எடுக்கப்பட்ட நட வடிக்கைகளும் அத்தன்மை வாய்ந்தவைதான், கிளர்ச்சி தினமாக இருந்தாலும்சரி அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் அவர்களைச் சந்திப்பதாக இருந்தாலும்சரி இந்தத் தீர்மானமாக இருந்தாலும்சரி ஓரளவு எல்லா கட்சிகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில் திட்டமிட்டு நடத்தப்பட்ட காரியங்களாகும். அடுத்துக்கூட ஏதாவது ஒரு வகையான போராட்டமே நடத்தப்பட வேண்டும் என்று சொன்னாலும்கூட எம்முறையில் அப்போராட்டம் இருக்கும் என்பதைக்கூட கூட எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்து கொண்டுதான் வெளியிடுவேன் என்று அன்று நடந்த பொதுக்கூட்டத்தில் முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். இது இப்பிரச்சினையைப் பொறுத்தவரை இருக்கிற நிலை.



1971 ஜூலை 8] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இந்த நாட்டில் குறிப்பாக சுதந்திரத்திற்குப்பிறகு ஒரு புதிய உணர்ச்சியானது ஏற்பட்டு இருக்கிறது என்பதை எல்லாரும் ஏற்றுக் கொள்ளுவார்கள். இதை வேறு முறையில் சொல்லுவதாக இருந் தால் ஒரு ஸப் நேஷனல் கான்ஷியன்ஸ் எல்லா மக்களுக்கும் ஏற்பட்டு இருக்கிறது. இது தமிழ்நாட்டில் மொழி சம்பந்தமாக கிளர்ந்தெழுந்தது நமக்கு எல்லாம் தெரியும். அதேமாதிரி வங்கத்திற்குப் போதுமான அளவுக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்று சொல்லி எல்லாக் கட்சி வங்க மக்களும் பேரியக்கம் நடத்தியதை நாம் அறிவோம். அஸ்ஸாம் மாநிலம் பின்தங்கியதாக இருக்கிறது என்பதற்காக எண்ணை சுத்திகரிப்பு ஆலை இரண்டு வேண்டுமென்று அந்த மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிகளைக்கூட ராஜினாமாச் செய்யத் தயாராய் இருந்தார்கள். அவர்கள் எல்லாம் நாடாளுமன்றத்திற்கே தூது கோஷ்டியாக வந்ததை நாடு அறியும். அஸ்ஸாம் மக்கள் எடுத்த அந்தப் பிரச்சினை வேறு எந்த மாநிலத்திற்கோ எதிராக எடுத்தது அல்ல. வங்க மக்கள் எடுத்த நடவடிக்கை வேறு எந்த மாநிலத்திற்கோ எதிராக எடுத்த நடவடிக்கை அல்ல. நமது மாநிலத்தில் தோன்றிய மொழி இயக்கம் வேறு எந்த மாநிலத்திற்கோ எதிராக எடுத்தது அல்ல. அதே மாதிரியாகத்தான் இந்த காவிரிப் பிரச்சினையையும் பார்க்க வேண்டும். இது வருகிறபோது எங்கள் கட்சி இரண்டு விஷயத்தை முன்பே எடுத்து வற்புறுத்தியது. மாநிலங்கள் மொழி அடிப்படையில் பிரிக்கப்படுகிற காலத்தில் எல்லைச் சச்சரவுகள் ஏற்படலாம். கிராமத்தை ஒரு யூனிட்டாகக்கொண்டு அந்த கிராமத்தில் உள்ள மெஜாரிடி மக்கள் எந்த மொழியினரோ அந்த மொழி மாநிலத்தில் அது சேர்க்கப்பட வேண்டும் என்றும், தகராறு ஏற்பட்டால், மத்யஸ்தத்திற்கு விடவேண்டும் என்றும் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அதுபோல பாசன சம்பந்தமாக நீர் பங்கீடு சம்பந்தமாக வரக்கூடிய விஷயம் நாடு பூராவும் ஒரு யூனிட்டாகக் கருதி கவனிக்கப்பட வேண்டும். எந்த நதியை எடுத்தாலும் பல மாநிலங்களை இணைக்கக்கூடியதாகவே இருக்கும். துங்கபத்திரையை எடுத்துக்கொண்டால் மகாராஷ்டிரம், மைசூர், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் வழியாகத்தான் போகின்றது. சில மாநிலங்களில் மலைகள் இருக்கிற காரணத்தினால் அங்கே உற்பத்தியாவதும், அங்கிருந்து பள்ளத்தாக்கான சில மாநிலங்களின் வழியாகக் கடல் நோக்கிப் போக வேண்டியும் இருக்கிறது. ஆகவேதான் நதிகள் என்கிறபோது நாடே ஒரு யூனிட்டாகக் கருதப்படவேண்டும். அந்த அடிப்படையில்தான் கங்கை—காவிரி இணைக்கப்படவேண்டுமென்றே சொல்கிறோம். ஒரு நதி ஒரு மாநிலத்தில் உற்பத்தியாவதனாலேயே அந்த மாநிலத்தில் உள்ளவர்கள் அணைக்கட்டி அதைத் தேக்கிக் கொள்ள உரிமை உண்டு என்பதில்லை. பல்லாயிரம் ஆண்டுகளாக அந்த நதியினால் பாசனம் பெற்ற பகுதிகளின் உரிமைகளும் கவனிக்கப்பட வேண்டும் என்பதைப் பொறுப்புணர்ச்சியோடு உணர்ந்து பொதுவாக மாநில அரசு செயல்பட நதிகளை ஒரு யூனிட்டாகக் கருதிப் பிரச்சினைகளை அணுகவேண்டும் என்பதை எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் வற்புறுத்திக் கொண்டிருக் கிறார்கள்.

இனி இங்கு ஏற்பட்ட விஷயத்தைப் பார்த்தால் தமிழ் இலக்கியத்தில் இருந்து பல மேற்கோள்கள் காட்டினார்கள். பொதுவாக இந்திய நாட்டு மன்னர்களைக் குறிப்பிடும்போது வடநாட்டு அரசர்களை, கங்கைநீர் நாட என்று அழைத்திருக்கிறார்கள். தமிழக மன்னர்களை காவிரிநீர் நாட என்றே போற்றியிருக்கிறார்கள். இந்திய சரித்திரத்தில் எட்டாவது நூற்றாண்டு முதல் 12-ம் நூற்றாண்டு வரையில்—கோல்டன் ஏஜ் ஆப் தி சோளாஸ்—சோழ மன்னர்களின் பொற்காலம் என்று போற்றப்படுகிறது. தென்னிந்திய சரித்திரத்தை எந்த அளவுக்கு விவரமாக எழுதவேண்டுமோ அந்த அளவுக்கு எழுதப்படவில்லை வடநாட்டு சரித்திரத்தைப்போல என்பதாக ஒரு சரித்திரப் பேராசிரியரே குறிப்பிட்டிருக்கிறார். இப்போதுதான் நீலகண்ட சாஸ்திரி போன்றவர்கள் தென்னாட்டுச் சரித்திரத்தை எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். எங்களுடைய கட்சித் தலைவரும் சரித்திரப் பேராசிரியருமான ஹிரேன் முகர்ஜி அவர்கள் தமிழ் நாட்டின் பொற்காலம் என்பதாகச் சோழப் பேரரசின் வரலாற்றை எல்லாம் சிறப்பாகத் தொகுத்திருக்கிறார்கள். இப்போது நாம் சோழப்பேரரசன் ராஜராஜனுக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்த நினைக்கிறோம். ஆனால் பிரகதீசுவரர் கோயில், கங்கைகொண்ட சோழபுரம் எல்லாம் அவர்களுடைய பெருமைக்கு நிரந்தரமான நினைவுச் சின்னங்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டுக்கு எங்கள் தலைவர் ஹிரேன் முகர்ஜி வர விரும்பிய காலத்தில் கங்கைகொண்ட சோழபுரத்தைப் பார்க்கவேண்டும் என்று சொன்னார்கள். அந்த இடத்தில் ராஜேந்திரன் தனக்குச் சிலை வைக்க வேண்டுமென்று விரும்பவில்லை. ராஜேந்திரன் என்ற பேரரசன் முடியில் ஈஸ்வரன் மகுடம் சூட்டுவதாக ஒரு சிலை இருக்கிறது. அப்போது அந்த மன்னன் குறிப்பிட்டானாம்.

"The houses of Kings may perish, but the houses of Gods do not e[illegible]ly perish"

என்பதாக. அத்தகைய சிறந்த கருத்தின் அடிப்படையில் ராஜராஜன், ராஜேந்திரன் எல்லாம் தங்களுடைய வாழ்க்கையை நடத்தியிருக்கிறார்கள். அதுபற்றிய பல விவரங்களை எல்லாம் சரித்திர ஆசிரியர்கள் கண்டுகண்டு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாமன்னன் ஆண்ட பகுதியில்தான் காவிரி நதி ஓடுகிறது.

எனக்குக்கூட கொஞ்சம் கொஞ்சம் தமிழ் இலக்கியத்தில் மற்றவர்கள் படிக்காத விஷயத்தைப் படிக்க வேண்டுமென்று ஆசை. அதற்காகத்தான் சிறைச்சாலையில் இருக்கும்போது மணிமேகலை படிப்பது—அது பவுத்த காவியம்—சாதியைச் சாடுகின்ற இலக்கியமாக அமைந்திருக்கிறது. அதில்கூட சாலி என்ற பெண் கர்ப்பிணியாக இருந்தாள். வாரணாசியில் இருந்து கன்னியாகுமரிக்குப் போய் கொண்டிருந்தபோது காவிரி நதிக்கரையில் பிரசவித்தாள். அப்போது பிறந்தவன்தான் மனிதருள் மாணிக்கமாகிய ஆபுத்திரன் என்று சொல்லப்படுகிறது. காவிரியைப் பொறுத்தவரையில் இப்படி தமிழ் மக்களுக்கு ஒரு தனி ஆசை இருக்கிறது என்றால் மக்களுடைய இந்த சென்டிமெண்ட், உணர்ச்சியையும் மதித்தாக வேண்டும். வெறும் கணக்குப்போட்டுப் பார்த்தால் போதாது. பல்லாண்டு



காலமாக இந்த மாநிலத்தில் காவிரி போற்றிப் புகழப்பட்டு வந்திருக்கிறது. எங்கள் கட்சிக்கு என்றால் சில கஷ்டம் உண்டு. தமிழ் நாட்டுப் பிரச்சினையை எடுத்துச் சொன்னால் இது கர்நாடக மக்களுக்குச் சிரமம் ஏற்படாதா என்று கேட்கலாம். கர்நாடக மக்களுக்கு இடைஞ்சல் பண்ணவேண்டுமென்று சொல்லவில்லை. குறுகிய அரசியலை வைத்து எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களும் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சொல்கிறோம்.

கர்நாடக மக்கள் பலவகையிலும் முன்னேறி வருகிறார்கள். அவர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காகத்தானே கிருஷ்ணராஜ சாகர் $1\frac{1}{4}$ லட்சம் ஏக்கராவுக்குப் பாசன வசதி அளிக்க நாம் விட்டுக் கொடுக்கத் தயாராய் இருந்தோம். நாட்டு ஒற்றுமை—நாட்டு மக்களின் பொது நலன்-கருத்தில் கொண்டு செயல்பட வேண்டுமே தவிர தன்னிச்சையாக யாரும் செயல்பட, இருக்கக்கூடிய சட்ட திட்டங்களை மதிக்காது நடந்துகொள்ள யாரையும் அனுமதிக்கக் கூடாது.

மத்திய அரசு வாட்டர் பவர் கமிஷன் வைத்திருக்கிறது. இது க்ளியரன்ஸ் சர்டிபிகேட் கொடுத்தால்தான் மத்திய அரசு அந்த அந்தத் திட்டங்களுக்குப் பணம் கொடுக்கும். ஆனால் மத்திய அரசின் பணமும் வேண்டாம், இந்த வாட்டர் பவர் கமிஷன் க்ளியரன்ஸ் சர்டிபிகேட்டும் வேண்டாம் என்கிற நிலையில் மைசூர் மாநிலம் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு சில உதாரணங்களைக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

இன்று காலையில் வந்த இந்துப் பத்திரிகையில்கூடச் சில விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மைசூர் அரசு மூன்று பெரிய திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். ஒன்று ஹேமாவதித் திட்டம், இரண்டு ஹரங்கித் திட்டம், மூன்றாவது கபினித் திட்டம்.

ஹேமாவதித் திட்டத்திற்கு அவர்கள் ஒதுக்கியிருப்பது 25 கோடி ரூபாய். இந்த 25 கோடித் திட்டத்தில் இந்த ஆண்டு—இந்த ஆண்டு என்கிறபோது 1970–71-க்கு—173 லட்சம் செலவழிப்பதாக இருந்தார்கள். பிறகு அதை மாற்றி 401 லட்சம் செலவழிக்கத் திட்டமிட்டார்கள். ஆனால் செலவழித்திருப்பது 413 லட்சமாகும்.

அதே மாதிரி ஹரங்கித் திட்டம் ரூ. 11 கோடியில் தயாரிக்கப்பட்டது. இந்த ஆண்டு அதற்கு ரூ. 10 லட்சம் செலவழிப்பதாக இருந்தார்கள். பிறகு ரூ. 89 லட்சம் செலவழிக்க முடிவு செய்தார்கள். ஆனால் அவர்கள் செலவழித்திருப்பது ரூ. 92 லட்சம்.

அதே மாதிரி ரூ. 25 கோடிக்குத் தயாரிக்கப்பட்ட கபினித் திட்டத்தில் அவர்கள் இந்த ஆண்டு செலவழிப்பதாக இருந்தது ரூ. 3 கோடி. பின்னர் அதை ரூ. 3 கோடியே 36 லட்சமாக உயர்த்தினார்கள். ஆனால் செலவழித்திருப்பது ரூ. 3 கோடியே 52 லட்சமாகும். இப்படி வேகம் வேகமாகச் செலவழிப்பதைப் பார்க்கிறபோது சில காரியங்கள் முடித்துவிட்டு இந்தக் காரியங்கள் முடிந்துவிட்டன, இனிமேல் என்ன செய்ய முடியும் என்கிற நிலைமையை

உண்டாக்க வேண்டும் என்றே முயல்வதாகத் தெரிகிறது. Better a rogue than a fool. என்பார்கள். இப்படி நம்மை எல்லாம் பைத்தியக்காரர்களாக ஆக்க நாம் அனுமதித்துவிடக்கூடாது. அதற்குக் கண்டிப்பாகத் தடைக்கல் போடவேண்டும். இதே கருத்தை மேடையில் சொன்னேன். இன்றைக்கு எந்த அரசாக இருந்தாலும்சரி நமக்குத் தேவையான விஷயங்களை எடுத்துச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. தேவையான விஷயங்களை மத்திய அரசுக்கு நாம் எடுத்துச் சொல்லாமலேயே அந்த அரசுக்குத் தெரிய வேண்டும். தெரிந்து அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும். அப்படியிருந்தும் தேவையான காரியங்களை நாம் எடுத்துச் சொன்னவுடனும் உடனடியாக நடவடிக்கை எடுக்காது என்ன செய்யலாம் என்று பார்க்கிறார்கள்.

பிறகு இயக்கம் நடத்தவேண்டியிருக்கிறது. அது வலுவாகப் போக வேண்டியிருக்கிறது. வேறு வழியில்லை. தலையிட்டுத்தான் வேண்டுமென்ற நிலைமை ஏற்படுமானால், தலையிட்டுப் போக்க அரசு இருக்கிற காரணத்தால், அதே இலக்கணத்தை நாமும் கையாள்கிற நிலைமை இருக்கிறது. 1892-வது ஆண்டு ஒப்பந்தத்தை 1924-வது ஆண்டு ஒப்பந்தம் மாற்றவில்லை. அதற்கு ஒரு சப்ளிமெண்டாகத் தான் இது இருக்கிறது. மேலும் உத்தரவாதம் அளிப்பதாகத்தான் இருக்கிறது. வருஷந்தோறும் 5 லட்சம் 10 லட்சம் ஏக்கர்களுக்குப் பாசனமாக இருந்தது பாதுகாக்க வேண்டுமென்பதுதான் வரக்கூடிய அரசாங்கத்திற்கு இருக்க வேண்டுமென்ற நிலை. இன்றைக்கு இருக்கக் கூடிய வளர்ச்சியிலே கிடைக்கக்கூடிய தண்ணீரை நாம் அதிகமான அளவுக்குப் பயன்படுத்த முடியும்.

அதற்கு மாறாக, இப்போது மைசூர் அரசு செய்துகொண்டிருக்கிறது. மைசூர் அரசு என்று சொல்வதைவிட மத்திய அரசு என்று தான் சொல்ல வேண்டும். மத்திய அரசுதான் மைசூர் அரசை இப்போது நடத்திக்கொண்டிருக்கிறது. குடியரசுத் தலைவர்தான் அதனுடைய தலைவராக இருக்கிறார்கள். குடியரசுத் தலைவரின் பிரதிநிதியாக அங்கே கவர்னர் இருக்கிறார். இப்போது இருக்கக் கூடிய கவர்னரைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். வங்கத்திலே என்ன என்ன செய்தார் என்பதெல்லாம் தெரியும். கவர்னரைப்பற்றி நாம் குறைவாகப் பேசக்கூடாது. இதே சட்டமன்றத்திலே கவர்னரைப்பற்றி, கவர்னரே வேண்டாம், தேவையில்லை என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். அது வேறு பிரச்சினை. அரசு என்ன சொல்லுகிறதோ, அதைச் சொல்லவேண்டுமேதவிர, சர்ச்சையை உண்டுபண்ணக்கூடியவராக கவர்னர் மாறக் கூடாது. அரசியலிலும் ஈடுபடக்கூடாது.

மைசூரில் கவர்னராக இருக்கக்கூடியவர் சர்ச்சை, கிளர்ச்சி துவக்குவதையே வேலையாகக்கொண்டு நடத்தியவர். வங்கத்திலே சர்ச்சைக்குரிய விஷயங்களைக் கிளப்பி, அதன் காரணமாக வங்க மக்கள் அல்லல்படும்படி ஆட்சியை நடத்தியவர். அவரை மைசூரிலே கவர்னராக ஆக்கியிருக்கிறார்கள். அவர் நமக்குத் தலைவலியாக இருக்கிறார். சம்பந்தமில்லாத அறிக்கைகளை விடுகிறார். அவர் குட்டையைக் குழப்புவது மட்டுமல்லாமல் சர்ச்சைகளைக் கிளப்புகிறார்.



மைசூரிலுள்ள மூன்று கோடி மக்களும், தமிழகத்தில் உள்ள நான்கு கோடி மக்களும் நல்வாழ்வு பெற வேண்டும். ஒரு பகுதி மக்களை இன்னொரு பகுதிக்கு எதிராகக் கிளப்புகிறார். மைசூர் கவர்னர் இந்த மாதிரிச் சர்ச்சைகளில் ஈடுபடாமல் மௌனமாக இருக்கும்படியான ஏற்பாடு செய்ய வேண்டும்.

நான் பல காலமாகத் தொழிற்சங்கத்தில் ஈடுபட்டிருப்பவன். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் நேரடியாக இருக்க வேண்டும். நாமும் மைசூர் அரசும் சேர்ந்து பேசுவோம். அதற்கு வேண்டுமென்றால் மத்திய அரசு உதவி செய்யட்டும். அப்படியும் நேரிடையாகப் பேசித் தீர்க்க முடியவில்லையானால் கடைசியில் மத்தியஸ்தக்கு விட்டு, அதன் தீர்ப்புச் சாதகமாயிருந்தாலும், பாதகமாயிருந்தாலும் ஏற்றுக்கொண்டு விடுவதுதான் சாலச் சிறந்தது. இந்தத் தகராறைப் பொறுத்தவரையில் ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் ஏதாவது, ஆறு சம்பந்தமாக தகராறு வந்துவிட்டால், இந்தியாவில் இருக்கக்கூடிய எந்தக் கோர்ட்டும் தலையிடுவது கிடையாது. அதற்கு மாறாக, இன்டர் ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட்ஸ் ஆகட், 33/1956-ல் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் கண்டுள்ள 3-வது, 4-வது பிரிவுகளை அப்படியே வாசிக்கலாம் என்று கருதுகிறேன்.

Inter-State Water Disputes Act 1956, Act XXXIII of 1956.

*Section 3* :

" *Complaints by State Government as to water disputes.*—If it appears to the Government of any State that a water dispute with the Government of another State has arisen or is likely to arise by reason of the fact that the interest of the State, or of any of the inhabitants thereof, in the waters of an inter State river or river valley have been, or are likely to be affected prejudicially by :—

(*a*) any executive action or legislation taken or passed or proposed to be taken or passed, by the other State; or

(*b*) the failure of other State or any authority therein to exercise any of their powers with respect to the use, distribution or control of such waters or

(*c*) the failure of the other State to implement the terms of any agreement relating to the use, distribution or control of such waters.

The State Government may, in such form and manner as may be prescribed, request the Central Government to refer the dispute to a Tribunal for Adjudication.

இது மூன்றாவது பிரிவு. இனி நான்காவது பிரிவைப் பார்க்கலாம்.

*Section 4—Constitution of Tribunal* :

(1) When any request under Section 3 is received from any State Government in respect of any water dispute and the Central Government is of opinion that the water dispute cannot be settled by negotiation, the Central Government shall, by notification in the Official Gazette, constitute a Water Disputes Tribunal for Adjudication of Water Dispute.

(2) The Tribunal shall consist of one person duly nominated in this behalf by the Chief Justice of India from among persons who are, or have been Judges of Supreme Court or are Judges of a High Court.

(3) The Tribunal may appoint two or more persons as assessors to advise it in the proceedings before it. "

என்று மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த டிரிப்யூனல் எம்மாதிரி உட்கார வேண்டும், எம்மாதிரியான தீர்ப்புகளைக் கொடுக்க வேண்டும் என்ற விவரங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். சொல்லப் போனால் எல்லாப் பகுதிகளையும் சேர்த்து வைத்துப் பார்த்தாலும், நம்முடைய ஸ்டேட்மெண்ட் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருக்கிறது. இப்போது எங்களுக்குப் பாதகமாக இருக்கக்கூடிய முறையிலே நீங்கள், அதாவது மைசூர் அரசு செய்யும் காரியங்களை நிறுத்துங்கள். இரண்டாவதாக மத்திய அரசு உடனடியாக டிரிப்யூனலை அமைக்க வேண்டும். இந்த இரண்டே இரண்டு கோரிக்கைகள்தாம். இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற முறையில் போராட்ட முறைகளைப்பற்றியெல்லாம் அன்றைக்கு இருக்கக்கூடிய உணர்ச்சிகள், உணர்வுகள் எப்படியிருக்கிறதோ அதற்குத் தகுந்த முறையில். எப்படி எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்களோ அந்த முறையில் போராட்ட முறை உருவாகும். நாம் மத்திய அரசுக்கும் மைசூர் அரசுக்கும் கெடு கொடுக்க வேண்டும். அதாவது, இந்த மாத இறுதிக்குள் நமக்கு அதனுடைய முடிவு தெரிய வேண்டும். ஒன்று, அவர்கள் கட்டிக்கொண்டிருக்கிற அணையை எந்தெந்த அணையை நிறுத்த வேண்டுமென்று நாம் சொல்லாமலேயே அவர்களாகப் பார்த்து, நம்மவர்களுக்குப் பாதகம் இருக்கிறதென்று நம்மவர்கள் சொல்கிறார்கள் என்றால் அதை நிறுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்து, டிரிப்யூனல் அமைக்கப்படும் என்று அறிவிக்க வேண்டும். புதிய அறிக்கைக்கு மதிப்பு அதிகம்.

நமது பிரதம மந்திரி அவர்கள் பிப்ரவரியில் பெங்களூரிலே நடந்த கூட்டத்தில் இதைப் பேசியிருக்கிறார். அவருடைய அந்த வார்த்தையின் மதிப்பை ஒரு மாதத்திற்குள் நிறைவேற்ற வேண்டும். அப்படியில்லாமல் போனால் வேறு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப்பற்றி, எல்லாக் கட்சியின் தலைவர்களும் சேர்ந்து, தீவிரமான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதாக, அந்த அரசுக்குச் சொல்ல வேண்டும். இந்தக் கருத்தை மக்களுக்கும், குறிப்பாக மத்திய அரசுக்கும், எடுத்துக்காட்டியாக வேண்டும். மக்களுடைய நடவடிக்கைகளைப் பூராவும் புறக்கணிக்கக்கூடிய போக்காக இருக்கிறதென்பதை வருத்தத்துடன் இந்தச் சட்டசபை தெரிவிக்கிறது. இந்திரா காங்கிரஸைச் சேர்ந்தவர் செல்வாக்குள்ளவர், 'இந்தப் பிரச்சினையில் சரியாக கவனம் செலுத்தப்படாவிட்டால், எங்கள் கட்சிக்குத் தமிழகத்தில் வேலையில்லை' என்று பொறுப்புள்ள உறுப்பினர் ஒருவர் பேசினார். இந்தச் சூழ்நிலையில் அவர்களைப் புரிந்துகொள்ள வைக்க வேண்டும். நாம் மிக அமைதியாக இருக்கிறோம். அங்கே கூட்டம் நடத்துகிறபோது, அங்கே நம் அமைச்சர்களுடைய கொடும்பாவிகளைக் கட்டியிழுக்கிற நிலைமை



இருக்கிறது. அவர்களைத் தூண்டிவிடுகிற போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டும். நியாயம் வழங்குகிற முறையில் இந்த இந்தக் காரியங்களைச் செய்கிறோம் என்று இந்த நாடாளுமன்றக் கூட்டத்திலேயே பிரதமர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு வைத்துள்ள தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரிக்கிறேன் என்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய முதல்வர் மத்திய அரசாங்கத்தினுடைய போக்கை வலிமையாகக் கண்டித்துக் கொண்டு வந்திருக்கக்கூடிய காவிரி நீர் பற்றிய தீர்மானத்தைச் சுதந்திராக் கட்சியின் சார்பாக முழுமனதோடு ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு மக்களுக்கும் மைசூர் மாநிலத்து மக்களுக்கும் இடையே இருக்கக்கூடிய நல்ல உறவினைக் கெடுக்கக்கூடிய அளவுக்கு மைசூர் மாநிலத்திலே—என்து அருமை நண்பர் திரு. தங்கமணி அவர்கள் கூறியதைப்போல—சிலர் சிறு கூட்டமாகச் சேர்ந்து கொண்டு நம்முடைய முதல்வர் அவர்களுடைய படத்தையெல்லாம் அவமானப்படுத்தக்கூடிய முறையிலே நடந்து வருகிறார்கள். இதையே ஒரு சான்றாக எடுத்துக்கொண்டு பார்த்தால் அவர்கள் அரசியலில் வலிமை தேடிக்கொள்வதற்காக இப்படிப் பிரச்சினைகளை எழுப்புகிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. மைசூர் மாநில மக்களைப் பயங்கரமாகத் தூண்டிவிட்டு இங்கே தவறு நடத்தினார்கள் என்று காட்டுவதற்காக முயற்சியெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இங்கேயுள்ள நிலைமையைப் பார்த்தால் இந்த அவையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்திலும்சரி, வெளியிலே பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுத்த அறிக்கைகளிலும்சரி, மிகத்தெளிவாக, கண்ணியத்துடன், அடக்கத்துடன் கூறியிருக்கிறார்கள். சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசுகின்ற பொழுதும் எந்தவிதமான உணர்ச்சியையும் தூண்டாமல் நல்ல முறையிலே பேசி இருக்கிறார்கள். அந்த மாநிலத்திலே நடைபெறுகின்ற அந்தக் காட்சியையும் இந்த மாநிலத்திலே நடைபெறுகின்ற இந்தக் காட்சியையும் பார்த்தால் அது பொருளாதாரப் பிரச்சினையாச வேறு எந்தப் பிரச்சினையாகவும் கொள்ளாமல் தண்ணீர் வராத நிலைமையிலே மைசூர் மாநிலம் நம்முடைய மாநிலம் இரண்டும் இந்தியாவைச் சேர்ந்தது என்ற நிலையில் நம்முடைய முதல்வர் அவர்கள் பேசியவை சான்றுகளாக இருக்கின்றன.

ஆனால் மைசூர் மாநிலத்திலோ—இன்று அரசியல் நிலைமை மாறியிருக்கிறது—1971-க்கு முன்பாகவே அங்கே வீரேந்திர பாட்டீல் மைசூர் மாநிலத்தில் காங்கிரஸ் (ஓ) தலைவராக இருந்து முதலமைச்சராகவும் இருந்தார், அப்பொழுது நம்முடைய முதல்வர் எடுத்துச் சொன்ன எந்தக் கருத்தையும் ரெஸிஸ்டன்ஸ் என்ற அளவிலே என்ன சொன்னாலும் ஏற்றுக் கொள்ள முடியாது, ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிப் புறக்கணித்த நிலைமையைப் பார்த்திருக்கிறோம்.

இன்றைக்குப் புதிதாக நிலைமை மாறிய பிறகும் சூழ்நிலை மாறவில்லை, இன்னும் அந்த நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. அங்கே இருக்கக் கூடிய பல்வேறு கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு மனதாக அங்குள்ள மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடக்கூடிய நிலைமையில் வரக்கூடிய தேர்தலில் மீன் பிடிக்கக்கூடிய அளவிலே இதைப் பிரச்சினையை ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அங்கே பல்வேறு உறுப்பினர்கள் பேசியிருக்கக்கூடிய பேச்சுக் களைப்பார்த்தால்—என்னிடத்திலே இருக்கின்றன—உணர்ச்சிவச மாகப் பேசியிருக்கிறார்கள். என்னிடத்திலே இருப்பது மைசூர் லெஜிஸ்லேச்சர் டிபேட்ஸ் 1970-ஆம் ஆண்டு மார்ச் 12-ம் தேதியை உடையது, பேசியவர்கள் உணர்ச்சி வசப்பட்டுத்தான் பேசியிருக் கிறார்கள், கருத்தின் அடிப்படையிலே பேசவில்லை என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். திரு. சென்னபெசப்பா என்பவர் அங்கே பேசியிருக்கிறார்கள்:

Now I shall speak about the agreement. There are several vital points supporting my argument that it is not respectable. This agreement cannot be respected because the basic material on which the agreement is based is admittedly incorrect. The Madras Government cannot say that we have violated it. The facts say the data was not available. I do not blame the Madras Government.

தமிழ்நாடு அரசைக் கண்டிக்க ஆரம்பித்திருக்கிறார்கள், கண்டிக்கக் கூடிய கருத்து அவருக்குத் தெரியாததாலே பிறகு இப்படிப் பேசியிருக் கிறார்கள்.

The facts say the data was not available. I do not blame the Madras Government. I do not say they have got belligerent attitude. After all they have got to serve the people. They say their stand is correct. I do not find anything with them. The hon. Member Mr. Ghorpade was speaking about availability of 45 T.M. Cft. of water. It is a wrong impression to say that there is not sufficient qualitity of water than is required. We can get more than 45 T.M.Cft. of water and it is possible to meet the requirements of the Government and also the Government of Tamil Nadu. We can get even more water than is required.

என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வீரேந்திர பாட்டீலை வலிமையாகக் கண்டித்து இன்னொரு உறுப்பினர் பேசி இருக்கிறார். அவர்கள் பேசியிருக்கின்ற ஒவ்வொரு வாதத்தையும் பார்த்தால் ஒரு வாதமாவது நல்ல வகையிலே அமைந்திருக்கிறதா என்றால் இல்லை. அந்த அளவுக்கு அவர்கள் சொல்லக்கூடிய கருத்துக்களிலே வலிமை யில்லை. வீரேந்திர பாட்டீல் ஆயிரம் தடவை மத்திய அரசாங்கத் திடம் சென்றார்கள். ஒன்றும் செய்யவில்லை என்று பேசியிருக் கிறார்கள். என்னுடைய அருமை நண்பர் திரு. கணபதி அவர்கள் வீரேந்திர பாட்டீலையும், மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களையும் குற்றம் சாட்டினார்கள். என்னைப் பொறுத்தவரையில் யார் மேலேயும்



குற்றம் சாட்டவில்லை. அங்கேயுள்ளவர்கள் இதிலே தீவிரம் போதாது, இன்னும் தீவிரமாக இருக்க வேண்டுமென்று கூறி வரு கிறார்கள்.

ஏப்ரல் மாதத்திலே அங்கேயிருக்கின்ற கவர்னர் தர்மவீரா அவர்கள் திடீரென்று ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அவர்கள் ஐ.சி.எஸ். ஆக இருப்பதாலோ அல்லது அரசியல்வாதியாக இல்லாது இருக்கின்ற காரணத்தினாலோ சொல்லி விட்டார்கள். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், 1924-ஆம் ஆண்டு அக்ரிமெண்ட் தெளிவாக இருக்கிறது, அதற்கு உட்பட்டுத்தான் எந்தக் காரியத்தையும் செய்யத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள், ஏனென்றால் அரசியலில் அப்பொழுது அவரது மூளையிலே, மண்டையிலே இல்லை. சொல்லி மாட்டிக்கொண்டு விட்டார்கள். அங்கேயுள்ள மற்ற அரசியல்வாதிகள், அவர் அப்படிப் பேசுவதற்கு என்ன உரிமை இருக் கிறது, அரசியலே அவருக்குத் தெரியவில்லை, மக்கள் உணர்ச்சிகள் அவருக்குத் தெரியாது என்றெல்லாம் அவரைக் கண்டித்தார்கள். உடனடியாக அவர்கள் மாற்றியமைத்துக் கொண்டு விட்டார்கள். கவர்னர் பதவியில் இருப்பதாலோ என்னவோ மாற்றியமைத்துக் கொண்டு விட்டார்கள். மே மாதம் 14-ஆம் தேதி சொல்லியிருக் கிறார்கள்:

The Mysore Governor denied here today that he had given an undertaking to the Government of India that Mysore would abide by the 1924 agreement.

என்று சொல்லி நான் அப்படிச் சொல்லவில்லை என்று மாற்றிக் கொண்டார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமை எந்தக் கட்சியாக இருந்தாலும் தமிழ்நாட்டினுடைய போக்கு தவறு என்று சொல்லி அங்கே அரசியலில் வலிமை பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். திருமதி டி. என். அனந்தநாயகி அவர்கள் சொன்னதுபோல் உடனடியாக இதிலே முடிவெடுக்க வேண்டும், இல்லாவிட்டால் எதிர்காலம் பயங்கரமாக இருக்கும் என்று சொன்னதைப்போல இதிலே உடனடியாக முடிவு செய்ய வேண்டும். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இதை அடக்கத்துடன் சமர்ப் பித்து இருக்கிறார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னதைப்போல் இன்றைக்கே நாம் எந்த அளவுக்கு இதிலே போகலாம், நம்முடைய எதிர்ப்பை எப்படித் தெரிவிக்கலாம், எந்த அளவுக்கு ஒரு வரம்பை நாம் வைக்கலாம் என்பதைச் சொல்லிவிட லாம். 1914-ஆம் ஆண்டிலே கே. ஆர். சாகர் கட்டப்பட வேண்டுமா இல்லையா என்று அப்பொழுதே ஆரம்பித்தார்கள். அதைக் கட்டு கின்ற நேரத்திலே, இங்கே இருக்கக்கூடியவர்கள் எங்களுக்கு லிமிடெட் ஃப்ளோஸ் கொடுத்துவிட்டுக் கட்டுங்கள் என்று சொன்னார்கள். அந்தப் பிரச்சினை பிறகு 1924-ம் ஆண்டு தீர்க்கப் பட்டு ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்கள்.

After protracted negotiation the dispute regarding construction of Krishnarajasagar was referred to arbitration as provided in the 1892 agreement. The arbitrator Sir Henry Griffin however held that

Mysore Krishnarajasagar was permissible subject to the maintenance of certain limt flows.

இப்பொழுது அங்கே அவர்களுடைய சட்டமன்றத்திலே விவாதிக்கும் நேரத்தில் நீர்ப்பாசனத்திற்காக முயற்சி எடுத்துக் கொண்டதை நம்முடைய அரசாங்கம் தடுத்து நிறுத்தி விட்டது என்று வாதாடிக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது, நிச்சயமாக நீங்கள் நீர்ப்பாசனத் திற்குக் கட்ட உரிமை கொடுக்கிறோம், ஆனால் கட்டுகின்ற நேரத்தில் நமக்கு ஏற்கனவே இங்கேயிருக்கும் அடிப்படையாக வரக்கூடிய அந்த நீர்ப்பாசனத்திற்குக் குந்தகம் வராமல் கட்ட வேண்டுமென்ற இந்த வாதம் வலிமையடைந்து இறுதியாக அந்த ஒப்பந்தத்தின் அடிப் படையில் நல்ல நிலைமையில் சொல்லப்பட்டது. இப்பொழுது மீண்டும் இன்னொரு வாதத்தைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நாம் கேட்கிறோம், மத்திய சர்க்கார் நியாயம் தர வேண்டு மென்று. இப்பொழுது மைசூர் மாநிலத்திலுள்ள பல நண்பர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரேயொரு பிரச்னையை இந்த அவையின் வாயிலாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மகாஜன் கமிஷன் என்று ஒன்றைப் போட்டார்கள். அதற்கு அப்பொழுது மைசூர் அரசு தயாராக இல்லை. ஆனால் இப்பொழுது மகாஜன் கமிஷன் சொன்ன வார்த்தை களுக்கு, பெல்காம் விஷயத்தில் கட்டுப்பட்டு இருக்கிறோம் என்று சொல்லி, மகாஜன் கமிஷன் போட்ட அடிப்படை அம்சத்தை அமலுக்குக் கொண்டு வரவில்லை என்றால் மத்திய சர்க்கார் சரியாகச் செல்லவில்லை என்று சொல்கிறார்கள். மகாஜன் கமிஷன் கருத்துக்கள் தங்களுக்குச் சாதகமான கருத்துக்களாக இருக்கிறது என்ற அடிப்படையில் அதை மட்டும் மத்திய சர்க்கார் சொன்னதை ஏற்றுக்கொண்டது. அதேபோல் இங்கே இது விஷயத்தில் நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று சொல்வதை ஒத்துக்கொள்ளவில்லை யென்றால் What is sauce for the goose is also sauce for the gander என்று சொல்லும் அந்தப் பழமொழியை நினைவுப்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இரண்டு விஷயங்களைச் சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். கியூசெக்ஸ் வாட்டரிலே மைசூரிலே வரக் கூடிய நிலைமை என்ன, மைசூரில் அணை கட்டுகிற நேரத்தில் அங்கு என்ன நிலை ஏற்படுகிறது, அங்குள்ள பாசனம், உற்பத்தி ஆகியவை களில் எவ்வாவு நன்மைகள் ஏற்படுகிறது என்று பார்க்கிற நேரத்தில், நம்முடைய கட்டுரையில், இந்தச் சிறு நூலில் மிகத்தெளிவாகப் போட்டிருக்கிறார்கள், அப்பர் ரீச்சஸ், அங்கே மலைகள், ஆனால் தஞ்சை மாவட்டத்திலே ஒரு கியூசெக்ஸ்க்கு 4, 5 மடங்கு உற்பத்தி செய்துகொடுக்க முடியும் ஒரு க்யூசெக்ஸை அங்கே தடுத்து நிறுத்தினால் அங்கே அந்த அளவிற்கு நிச்சயமாக நன்மை கிடைக் காது. நான்கில் ஒரு பங்குகூட நன்மை கிடைடக்காது. எப்படி யிருந்தாலும் தமிழ் நாட்டை வேறு மாநிலமாகவும், தங்கள் மாநிலத்தை வேறு மாநிலமாகவும் கருதுகின்ற நிலை ஏற்படும்.





தமிழ்நாட்டிலுள்ள அரசையும், மைசூர் அரசையும் ஒரே மாநிலமாக வைத்திருந்தால் எப்படிப்பேசுவார்கள் என்று வாதத்திற்கு வைத்துக் கொண்டு பார்க்க வேண்டும். எப்படி கோவை மாவட்டம், நெல்லை மாவட்டம், சேலம் மாவட்டம், தென்னார்க்காடு மாவட்டம் என்று இருந்தாலும் எந்த மாவட்டத்திற்கு ஜாஸ்தி நன்மை கிடைக்கிறது என்று பார்த்து பல விஷயங்களை நாம் நடத்தி வருகிறோமோ அதே போல் அகில இந்திய ரீதியிலே எந்த மாநிலத்திறகு ஜாஸ்தி நன்மை கிடைக்கும் என்று பார்க்கும் நேரத்தில்

They are wasting the water.

அணை கட்டினாலும் பயன் இல்லாமல் போய்விடக்கூடும் என்று புரிந்துகொள்ளாமல் தண்ணீர் இருக்கிறது என்பதற்காகக் கட்ட வேண்டுமென்ற அந்த வாதத்தைப் பொதுமக்களின் சார்பாக நாங்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக் கிறோம்.

Why does Mysore resist tribunal?

டிரிப்யூனல் வேண்டாமென்று சொல்லும் நேரத்தில் ஏதோ மனத்தில் கோளாறு இருக்கிறது என்றுதான் அர்த்தம். இரண்டு பேர் சண்டைபோட்டுக் கொண்டால் அதில் ஒருவர் சொல்கிறார் நடுவர் தீர்ப்புக்கு விடுங்கள், அவர் என்ன கட்டளையிட்டாலும் ஏற்றுக்கொள்ளத் தயார் என்று சொல்கிறார். ஆனால் இன்னொருவர் ஏற்றுக் கொள்ளத் தயாராகயில்லை என்று சொல்லும் நேரத்தில் அவருடைய வாதத்தில் ஏதோ குந்தகம் இருக்கிறது என்றுதான் பொருள்படும்.

You are not yourself confident of your cause.

என்று சொல்வதாகயிருக்கிறதே தவிர வேறொன்றுமில்லை. அவர்கள் களின் வாதத்தின் அடிப்படையில் " நீங்கள் செய்தது தவறு என்று சொல்கிறோம்.

possession is nine points in law.

என்று ஆங்கிலத்திலே சொல்லுவார்கள். திரு. தங்கமணி அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல வாட்டர் அண்ட் பவர் கமிஷனின் ஒப்புதல் இல்லாமல் கட்டிக் கொண்டு வருகிறார்கள். தவறு நடந் திருக்கிறது, நியாயத்தின் அடிப்படையில் உங்கள் செயல் எழாது என்று நீங்களே அஞ்சிக்கொண்டு நடுவர் வேண்டாமென்று சொல்லக் கூடிய நிலை இருக்கிறது.

This is a global problem, all-India problem.

இறுதியாக இந்த மன்றத்தில் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்பு கிறேன். தஞ்சை மாவட்டத்திலே ஏராளமாக, இலட்சக்கணக்கான ஏக்கர்களுக்கு நீர்ப்பாசனத்திற்கு நன்மை ஏற்படும் நேரத்தில் இங்கே ஒரு பயங்கரமான நிலைமையிலே, ஹேமாவதி மற்றும் சிறுசிறு ஆறு களிலே அணை கட்டுவதன் விளைவாக இங்கே பயங்கரமான நிலைமை ஏற்பட்டால் நாட்டுக்கே பயங்கரமான நிலைமை ஏற்படும், நஷ்டம் ஏற்படும்.

பங்களாதேசம் எங்கோ இருக்கிறது. நம் நாட்டுக்குச் சேதம் இல்லை. அந்த நாட்டில் ஏற்பட்ட பயங்கரத்தின் விளைவாக நாம் எந்த அளவிற்கு அல்லற்பட்டுக்கொண்டிருக்கிறோம். எனவே குறுகிய மனப்பான்மையில்லாமல், நாட்டின் ஒருமைப் பாட்டிற்குக் குந்தகமில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் எடுத்த முடிவுகளுக்கு நிச்சயமாகச் சுதந்திராக் கட்சியின் சார்பில் முழு மனதாக ஆதரவைத் தருகிறோம், இதன்மேல் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயாராகயிருந்தாலும் அதற்கும் எங்கள் முழு ஆதரவைத் தருகிறோம் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* THIRU R. PONNAPPA NADAR : I wish to support the motion tabled by the Hon. Chief Minister. While supporting the motion I would like to offer certain remarks regarding the problem before us. This is an important resolution that has been tabled in this House and this affects the entire Tamil Nadu. All party considerations should be dispelled in regard to this issue. I have been listening to the learned speeches made on the floor of this House and various aspects that have been pressed into service and I may say with respect that the issue has assumed alarming proportions. It is a crisis now and the crisis will have to be averted. The Central Government has adopted a lethargic attitude. They have to take timely action to dispel the fear in the minds of Tamilians as a whole. Tamilians are affected by these constructions in Mysore. We seek justice. It is not a war cry against Mysore Government or Central Government. This is a problem that is worrying us very often.

How we are going to solve this problem is a matter that will have to be decided here and now. Many members have given their valuable suggestions and some of them have made certain charges and levelled criticisms against leaders. We are not here to say that one party is very intolerant and other party is slow. We have to face this problem as a national issue and in that background I shall offer some remarks.

A brochure has been prepared on the Cauvery river water dispute. That is a useful work done by the department. I have read that brochure and I find that the granary of Tamil Nadu, namely Tanjore and other deltaic areas would be divested of their fertility and would become and if Hemavathi project becomes a *fait accompli*. It has been stated that the Hemavathi project has been built with hot haste and progress of the scheme has assumed such a height (nearly 100 feet had been constructed and only a few feet remains), that they had done this without getting clearance from Central Government or the prior consent of Tamil Nadu. Mysore had taken this unilateral decision to proceed with these dams. This is a matter which this House will have to consider. There have been several disputes and this dispute is not new. When Mysore was a princely State and Madras State was under



British Raj, there was a dispute and some agreements were entered into and these agreements were the 1892 and 1924 agreements. These are two agreements, unanimous agreements, which have been adopted as the basis for the future. If there is any other view, we will have to ransack the provisions of 1892 as well as the agreement of 1924. Mysore cannot do anything without concurrence of Tamil Nadu Government and affecting the latter's rights. There has now been a breach of agreement and we now far, reasonably fear, that our limit-flows will be affected. We hope and trust in all good conscience that the centre would take prompt steps to persuade the Mysore Government not to do anything affecting the rights of Tamil Nadu. It is not as if the Central Government is acting with circumspection and doing this wantonly. Mysore Government could not unilaterally rescind a bilateral agreement.

The Central Government could have given the verdict then and there. Instead of that, they have been purposely protracting the whole issue. The dispute has cropped up as early as 1968 and steps have been taken by this Government. Several letters have been addressed and the matter has been discussed on the floor of the House. What is the effect? The Central Governmet turned a deaf ear to all our requests. They ought to have taken prompt steps. What is the constitutional provision regarding the dispute? I would just refer to Article 262 relating to water disputes. Article 262 of the Constitution reads as follows :—

'(1) Parliament may by law provide for the adjudication of any dispute or complaint with respect to the use, distribution or control of the waters of, or in, any Inter-State river or rives valley.

(2) Notwithstanding anything in this onstitution. Parliament may by law provide that neither the Supreme Court nor any other court shall exercise jurisdiction in respect of any such dispute or complaint as is referred to in clause (1).

So, the relevant provision is Article 262 of the Constitution. Article 262 of the Constitution postulates that whenever there is a dispute and the dispute relates to the control of river water, a law has to be made by the Parliament. What is the law made by the Parliament, is the next question. The law which has been made by the Parliament is the inter-State Water Disputes Act, 1956.

My hon. Learned Friend, Thiru K. T. K. Thangamani referred in his speech to Section 3 of the Act. Section 3 provides for the complaint to be made before the Central Government by the State Government. Section 4 is the next relevant section which

deals with the dispute and how it should be dealt with by the Central Government Section 4 reads thus—

'When any request under Section 3 is received from any State Government in respect of any water dispute and the Central Government is of opinion that the water dispute cannot be settled by negotiations the Central Government shall constitute a Water Disputes Tribunal for adjudication of the water dispute.'

So it is clear from the statutory provisions that the Central Government should take prompt and immediate action and they shall not delay action. If there is delay it will mean failure of justice. It would be an advantage so far as Mysore is concerned but it would be a disadvantage so far as Tamil Nadu is concerned. Keeping that in mind, I would say that the Central Government have failed in their statutory duty in not appointing a tribunal then and there. So, I would once again emphasise that this is a matter which is of urgent importance and this may be solved before the bye-election to the Krishnagiri constituency takes place. So, I would once again urge the Central Government through our State Government that immediate steps should be taken, failing which dire consequences would ensue. So far as Tamil Nadu is concerned we are not making it as a threat but we are making it in a legal manner. We should respect the law and the Central Government are as much bound by the law as the State Government are.

Then there is another Section 11 of the Inter-State Water Disputes Act. Section 11 reads as follows:—

'Bar of jurisdiction of Supreme Court and other Courts. Notwithstanding anything contained in any other law neither the Supreme Court nor any other court shall have or exercise jurisdiction in respect of any water dispute.'

So, the jurisdiction of the Supreme Court and the High Court is ousted by this Statute. The only way open to Tamil Nadu is to refer the matter to the Central Government and the Central Government are bound to refer the matter to the tribunal. That is one of the arguments which I want to advance in this regard.

Then we will pass on to the other things that have been stated in the brochure. What is the right that has been enjoyed by Tamil Nadu? In the brochure it is mentioned that the Cauvery starts from Coorg and enters our State near Hogenekal near Mettur. It has a number of important tributaries such as the Hemavathi, Lakshmanathirtha, Kabini, Swarnavathi, Shimsa and the Arkavathy, constituting the Akhanda Cauvery. The waters have been utilised by us from time immemorial. More than a million acres in Tamil Nadu has used these waters for irrigation purposes and that has been mentioned in this brochure. Tamil Nadu has been very careful and prudent enough to utilise every drop of water that we got for irrigation and that is why we are



able to say that the deltaic areas are the granaries of Tamil Nadu and we have also associated ourselves with the historical background so far as the Cauvery water is concerned. Cauvery is considered to be a mother and it is a sacred river and that is a life-source so far as Tamil Nadu is concerned.

So far as the various irrigation projects undertaken by the Mysore Government are concerned, details have been given in page 11 of the brochure. In the case of the Hemavathi Project, the ayacut is 1,00,000 acres, in the case of the Harangi Project 75,000 acres, Kabini Project 1,26,000, Swarnavathy Project 7,000 acres. So the total extent of lands the Mysore Government are goinn to utilise is 3,08,000 acres. These 3 lakhs of lands are to be irrigated by the construction of the new dams and the impounding of waters is a permanent menance. The Mysore Government should impound the waters subject to the conditions set forth in the 1892 agreement as well as the 1924 agreement. Without prejudice to the rights that have been conferred under these two agreements, we will have to consider this issue. Now let us take into consideration the 1924 agreement. I would just read some portions of the agreement. The 1924 agreement is binding on the successor State even though it was entered into by the Princely States as well as the British India or the Madras Presidency at that time. Sir, I invite your attention to clause 10 of the 1924 agreement. Clause 10 reads as follows:—

'Now these presents witness that the Mysore Government and the Madras Government do hereby agree and bind themselves, their successors and representatives ... ...'

The words 'their successors' and 'representatives' are important because it is a continuous thing. The Mysore Government is a jurisdic person. There is a continuance so far as these two States are concerned. So we will take it that the agreement that has been entered into on 18th February 1924 is binding on the successor States. The Mysore State is as much bound by it as Tamil Nadu. I would also just refer to one or two sub-clauses of clause 10. Sub-clause (viii) says—

'The Mysore Government further agree that full particulars and details of such reservoir schemes and of the impounding therein shall be furnished to the Madras Government to enable them to satisfy themselves that the conditions in clause (vii) above will be fulfilled. Should there arise any difference of opinion between the Madras and Mysore Governments as to whether the said conditions are fulfilled in regard to any such scheme or schemes, both the Madras and Mysore Governments agree that such difference shall be settled in the manner provided in clause (xv) below.'

Sir, whenever there is any dispute, Mysore Government and Madras Government are open to refer the matter to arbitration and the procedure that is contemplated is set forth in Clause 15

What does Clause 15 say? That is the next point. Clause 15 reads as under :—

"Madras Government and Mysore Government hereby agree that if at any time there should arise any dispute between Madras Government and Mysore Government, on such interpretation or portion or carrying out of this agreement, such dispute shall be referred for settlement to arbitration or if the parties do agree shall be submitted to the Government of India."

If we read all these provisions and the relative provisions, they would go to show that the Central Government is the arbiter of the destinies and the Central Government will have to intervene. They will have to take necessary action. If the Central Government had not intervened and if they had not taken timely action, that is a matter which this House will have to consider. Of course it may be contended that the Central Minister Dr. K. L. Rao attended several conferences. But what is the result? The conference has all ended in a fiasco. It has also been said that it is the bounden duty of the Central Government to refer the matter to a tribunal.

They have miserably failed in that and that is a matter which this House should take note of. Another point which I would like to impress upon this House is, what is the limit flow, that has been allowed. As per the 1924 agreement, what is the limit flow allowed to us. That is the next point which this House will have to consider. If we apprehend that our limit flows are impaired, if Tamil Nadu's limit flows were adversely affected then the granary of our State, viz., Tanjore and other deltaic areas will be converted into another 'Sahara' and those areas will become arid and there shall be no vegetation and everything would become dark and grim.

Now what does page 22 appendix I of 1892 agreement between Tamil Nadu and Mysore Government say? It is the limit flow that has been mentioned there.

Now the two Governments have agreed in lieu of an award in that behalf to adopt finally for all regulation subsequent to 1st July 1929, the following discharges for the respective months in place of the averages referred to in Clause 8 of Annexure I :—

For June 6½ feet guage 29,800 cusecs.
For July-August 7-1/2 feet guage 40,100 cusecs.
September 7 feet guage 35,000 cusecs.
October 6-1/2 guage 29,800 cusecs.
November 6 feet guage 25,033 cusecs.
December 3-1/2 feet guage 8,913 cusecs.
January 3 feet guage 6,170 cusecs.

These are limit-flows that have to be regulated and there is material to show that both Governments will have to operate the Krishnarajasagar irrigational system. Our engineers are also



there. Tamil Nadu engineers are also there. With the concurrence of the Tamil Nadu Government only, Mysore Government is entitled to construct any new dams and I would stress in this House that the construction of the Kabini is more dangerous than Hemavathi Project. That does not mean that there is less evil from Hemavathi Project. But Hemavathi also would adversely affect us. If these two projects are allowed to be constructed, the irrigation riparian rights which we have been enjoying from time immemorial will be adversely affected. What is the remedy? That is a matter which we will have to consider. We will have to maintain status quo.

Whenever there is a dispute between two States, the Central Government is bound to refer it to the Tribunal. In the meanwhile what should Central Government do? That is a matter which this House will have to consider. If Mysore Government is allowed/to construct these dams, what is the remedy? I shall say that *status quo ante* should be maintained. Stay orders should be issued so that Mysore Government would be restrained from further construction of these works in Hemavathi and other places. They should not be allowed to construct any new dams on the tributaries, either in scheduled streams or other streams. This is a matter which we have to take up with the Central Government. What this background we have to consider that law should be respected not only by our Government, but by Mysore Government as well as Central Government.

Any unilateral act or decision taken by the Mysore Government will not be binding on this Government. We will have to rise as one man, rise to the occasion. We are only seeking justice and I would like incidentally to say that justice delayed is justice denied and so the Central Government should take prompt steps so that necessary action is taken. They have to consider our stand. I think our learned Chief Minister would give details as to how many times he had approached the Central Government and how many times he had written to Central Government. These are vital things to us and it is up to the Central Government and Mysore Government to respect our feelings.

We are not on war with Mysore. We are all citizens of one India. We speak of national integrity. We should respect feelings of others. But at the same time our rights, rights of Tamil Nadu, should not be jeopardised; our rights will have to be protected. It is with that view that this resolution has been brought forth. This is not for abusing Mysore or Central Government. It is a reflection of feelings of Tamilians. Tamilians apprehend, erasonably apprehend that it would be much disadvantageous to them if these dams are undertaken by Mysore and they are allowed to proceed with the construction of the same. That is the reason why, on behalf of the Organisational Congress that we support this Government in all its legal steps.

[Thiru R. Ponnappa Nadar] [1971 ஜூலை 8

If any other detail is forthcoming from the Hon. Chief Minister, we will consider it and give our co-operation.

On this occasion I would also say that this House may seriously consider whether it would not be proper if a time limit is fixed within which the Centre should refer the matter to arbitration. I think reasonable time may be given to Central Government so that they may take proper and immediate action so that the injustice that was likely to be meted out to Tamil Nadu is averted. With this background we have once again to consider whether we cannot fix a date within which the Centre could refer the matter to arbitration. If that is done, I am sure that Central Government would respect the feelings and sentiments of our people. We are not carried away by emotion. We are quite reasonable and what we want is only justice. We are seeking justice. I am sure the Central Government would render justice to us. With these words I conclude my speech.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் இந்த மாமன்றத்தின் முன்னால் நான் முன் மொழிந்த தீர்மானத்தை வழி மொழிந்து அனைத்து கட்சிகளுடைய தலைவர்களும் தங்களுடைய மனப்பூர்வமான ஆதரவை தமிழ் நாட்டு மக்களின் சார்பாகத் தந்தமைக்கு அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் மிகுந்த பணிவன்போடு மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு ஆளும் கட்சித் தரப்பிலும் மற்றக் கட்சிகள் தரப்பிலும் பேசிய உறுப்பினர் கள், இந்தப் பிரச்னையில் நாம் இன்னும் வேகம் காட்ட வேண்டு மென்று கூறியிருந்தாலும், வேகம் காட்டவில்லையென்று கூறியிருந் தாலும் இரண்டையும் நான் மத்திய அரசை வலியுறுத்துவதற்கேற்ற நல்ல படைக் கலன்களாக எடுத்துக்கொண்டு, அவர்கள் பேசிய அந்த வார்த்தைகளை மத்திய அரசோடு இந்த அரசு வாதிடுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைத்துக் கொண்டு நிச்சயமாக அரசு வாதிடும் என்ற உறுதியை மீண்டும் ஒரு முறை இந்த மன்றத்திற்கு நான் தெரி வித்துக் கொள்கிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் குறிப்பிட்டதைப் போல இந்தப் பிரச்னை மைசூர் மாநில மக்களுக்கும் தமிழ் நாட்டு மக்களுக்கும் இடையிலே ஒரு மனக்கசப்பை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதில் 1968-ம் ஆண்டு முதல் இது வரையிலே இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களும், தலைவர்களும் மிகுந்த அக்கறை காட்டி வந்திருக்கிறார்கள் என்பதை நாடு நன்றாக அறியும். ஆனால் நாம் காட்டி வருகிற இந்த அக்கறையும், போற்றி வளர்த்து வருகிற இந்தப் பண்பாடும், நாம் உருவாக்கியிருக்கிற இந்த நல்லெண்ண முயற்சிகளும் மைசூர் மாநில அரசின் சார்பிலே காட்டப்படவில்லை யென்பதை மாண்புமிகு சுதந்திராக் கட்சியினுடைய தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே சில பல ஆதாரங்களின் மூலமாக எடுத்துக் காட்டினார்கள்.

தமிழக முதலமைச்சருடைய கொடும்பாவி மைசூர் மாநிலத்திலே கொளுத்தப்பட்டதையும் அவர்களும் சுட்டிக் காட்டினார்கள்,



1971 ஜூலை 8] [திரு. மு. கருணாநிதி]

மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். முதலமைச்ச ருடைய கொடும்பாவி மைசூர் மாநிலத்திலே கொளுத்தப்படுவதைப் பற்றிக்கூட நான் வருத்தப்படவில்லை. நான் அதைப்பற்றிக் கவலைப் படவில்லை. ஆனால் அந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் அளித்து அதைச் சில பேர் நம்முடைய தமிழ்நாட்டிலே விளம்பரப்படுத்து கிறார்களே என்பதை எண்ணித்தான் நான் வருத்தப்படுகின்றேன். தமிழ் நாட்டில் "காவிரி நீர்ப் பிரச்சினையை நீ சீக்கிரம் தீர்க்க வில்லை, இன்னும் தீவிரமாகச்செயல்பட வேண்டும்" என்று சுட்டிக் காட்ட அதற்கு அடையாளமாக என்னுடைய கொடும்பாவியைத் தமிழக மண்ணிலே தமிழக மக்கள் கொளுத்தினால்கூட நான் வருத் தப்பட மாட்டேன். நாம் வேகமாகச் செயல்படவில்லை இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டுமென்று இப்படிச் செய்கிறார்கள் என்று எண்ணி மகிழ்ச்சியடைவேன். ஆனால் இம்மாதிரி செய்திகளைப் போடுகின்ற நேரத்திலே மகிழ்ச்சியுடன் போடுவது மாதிரி போடு கிறார்களே என்றுதான் வேதனைப்படுகிறேன். நான் ஒருமுறை சொன்னேன், நமக்குள்ளே ஆயிரம் தகராறுகள் இருந்தாலும் வெளி மாநிலங்களுக்கு நம்முடைய மாநில உரிமைகளை விட்டுக்கொடுப் பதிலும் நம்முடைய மாநிலத்தின் மான உணர்ச்சியை விட்டுக் கொடுப்பதிலும் நாம் கிஞ்சிற்றும் கட்சி மாச்சர்யங்களுக்கு ஆட் பட்டுவிடக் கூடாது என்பதை நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன். அதை இங்குள்ள உறுப்பினர்கள் எல்லோரும் எடுத்துச் சொன்னார் கள். ஆனால் ஒரு பத்திரிகையில்—பத்திரிகையின் பெயரை வெளியிட விரும்பவில்லை—அந்தச் செய்தி எப்படி வெளியிடப்பட்டிருந்தது என்பதைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"பெங்களூர்: 500 கன்னடத்தவர் ஒருவருடைய தலைமையில்—அவருடைய பெயரை படிக்க விரும்பவில்லை—முதன் மந்திரி கருணாநிதியின் மைசூர் எதிர்ப்பு கொள்கையை எதிர்த்து அவருடைய கொடும்பாவியை ஊர்வலமாக எடுத்துச்சென்று எரித்தார்கள்."

நான் மைசூர் எதிர்ப்புக் கொள்கையை உடையவனாக அவர்கள் கற்பனை செய்துகொண்டு செய்தியை வெளியிட்டிருந்தாலும் நான் அதைப்பற்றிக் கவலைப்பட்டிருக்கமாட்டேன். நான் மைசூர் எதிர்ப்புக் கொள்கையை உடையவனாக இருக்கிறேன் என்று அவர்கள் சுட்டிக்காட்டிய குற்றச்சாட்டை இங்குள்ள பத்திரிகைக்காரர்கள் ஏற்றுக்கொண்டு அந்தக் கருத்தினை ஏற்றுக் கொண்டு கருணாநிதியின் மைசூர் எதிர்ப்புக் கொள்கையை எதிர்த்து அவனுடைய கொடும் பாவி அங்கே கொளுத்தப்பட்டது என்று போடும்போது நான் வருத்தப்படுகிறேன்.

கட்சி மாச்சர்யங்களை மறந்துவிட்டு எல்லாக் கட்சிகளும் இதிலே ஒருமித்த கோரிக்கையினை எழுப்பவேண்டுமென்று 1968-லே இருந்து பேசப்பட்டு வருகின்றது. அதன்படி எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசுவதும், பிறகு பேச்சு வார்த்தைகள் நடத்துவதும், நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து 18 மாதங்கள் கழிவதும், பிறகு மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டுவதும், நாடாளுமன்ற உறுப்பினர்கள்

ஊர்வலமாகப் போவதும், சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டுவிட்டு அதை மத்திய அரசுக்கு அனுப்பிவிட்டு அதன் பிறகும் எந்தவித முயற்சியும் எடுக்காமலிருந்தால் என்ன செய்வது? அதற்கு ஒரு கால கட்டம் வேண்டாமா? என்றெல்லாம் இங்கு பேசிய எதிர்க் கட்சித் தலைவர்களும் மற்ற உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

இன்றையதினம் இங்கே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கின்றது. மேலவையிலும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட இருக்கின்றது. இந்தத் தீர்மானத்தின்மீது மேலவையிலும் பேரவையிலும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் பேசிய பேச்சுக்களின் சுருக்கங்களையும், நான் ஆற்றிய உரையின் சுருக்கங்களையும், அனைத்தையும் இந்தத் தீர்மானத்தையும் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து அவர்கள் இந்த மாதம் 15 நாட்களுக்குள்ளாகப் பதில் அனுப்பாவிட்டால் அதற்குப் பிறகு மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி நாம் எந்தவித கிளர்ச்சியை நடத்துவதாக இருந்தாலும் அதற்கு ஒரு கூட்டணியை மத்திய அரசுக்கு அறிவித்துவிட்டு நடத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்பதை இந்த மன்றத்திலே உங்கள் முன்னால் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மைசூர் மாநில மக்களுக்கு எதிரியாக நம்மை அவர்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது என்கிற வேண்டுகோளை என்னுடைய சார்பாக மாத்திரமல்ல, இந்த மன்றத்திலே இருக்கின்ற எல்லாக் கட்சிகளின் சார்பாக மைசூர் மாநிலத்திலேயிருக்கின்ற பெருங்குடி மக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள், மகஜன் கமிட்டி அறிக்கையைப் பரிசீலித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லும் மைசூர் அரசு இதை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கேட்டார்கள். நான் டெல்லிக்கு $1\frac{1}{4}$ ஆண்டுகளுக்கு முன்பு சென்றிருந்தபோது மைசூர் மாநில நாடாளுகின்ற உறுப்பினர்கள் எல்லாம் என்னைச் சந்தித்தார்கள். அந்தச் சந்திப்பின் நோக்கம் மைசூர் அரசினுடைய நியாயமான வாதங்களுக்குப் பின்னால் நானும் நிற்கவேண்டும் என்பதாகும். அவர்கள் அப்போது பேசும்போது மகஜன் கமிட்டி நிறுவப்பட்டு அந்தக் கமிட்டி தீர்ப்பளித்த பிறகு அதற்குப் புறம்பாக நடத்தலாமா என்று கேட்டார்கள். நான் சொன்னேன், இந்தத் தீர்ப்புக்குப் புறம்பாகவோ ஒப்பந்தத்துக்குப் புறம்பாகவோ யாரும் நடக்கக் கூடாதென்பது நியாயம்தான் என்று சொன்னேன். நான் மைசூர் ஒப்பந்தத்தை மீறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்பதைப் புரிந்து கொண்டு சிரித்தார்கள். அதற்குப் பிறகு ஹண்டே அவர்கள் குறிப்பிட்டதைப் போல இன்னும் அவர்கள் மகஜன் கமிட்டியின் ரிப்போர்ட்டை அங்கீகரிக்கவேண்டுமென்று எப்படி மத்திய அரசை நிர்ப்பந்திக்க மைசூர் அரசுக்கு உரிமை இருக்கிறதோ அதைப்போல நம்முடைய மாநில அரசுக்கு,



தமிழக அரசுக்கு ஒரு நியாயமான கோரிக்கையில் இந்தப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்பதிலே ஏராளமாக உரிமைகள் இருக்கின்றன.

1943-லிருந்து இதுவரையிலும் மைசூரின் பல அறிக்கைகளில் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அப்போது குடகு மாநிலத்திலே லக்ஷ்மண தீர்த்தா அணை கட்டப்படும்போது அப்போது மைசூர் மாநிலத்தில் அந்த அணைக்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்டது. நீங்களும் சேர்ந்து குடகிலே அமைக்கப் போகிற லக்ஷ்மண தீர்த்தா அணைக்கட்டுக்கு எதிராகக் குரல் எழுப்புங்கள் என்று மைசூர் அரசாங்கம் கேட்டது. இப்போது மைசூரும் குடகும் ஒன்றாகப் போனதும் தமிழ்நாட்டுக்குப் பாதகமாக ஹரங்கி அணைக்கட்டை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஹேமாவதி திட்டத்திற்கு 1924-ல் ஒரு அறிக்கைத் தயாரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டதென்று சொன்னார்கள். 1924-ல் மைசூர் அன்று தயாரித்த ஹேமாவதி பற்றிய அறிக்கையில் நமக்குச் சாதகமான பல விஷயங்கள் இருக்கின்றன. நடுவர் தீர்ப்பு என்றால் ஏன் பயப்படுகிறார்கள் என்று ஹண்டே அவர்கள் கேட்டார்கள். இதுதான் காரணம். அதிலே என்ன இருக்கிறது என்றால், அவர்கள் ஹேமாவதி அணையைக் கட்டினால்

'It is not possible to utilise the entire quantity as the Hemavathi river is a scheduled river governed by the Cauvery Agreement of 1924 between Mysore and Madras.

என்று அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல; இன்னும் ஒரு முக்கியமான விஷயம்

'The project does not affect utilisation or inter-State interests. The Project is designed keeping in view 1924 agreement of Madras and Mysore Governments. The project comes under the purview of 1924 agreement'.

என்று இருக்கிறது. ஹேமாவதி அணையைப்பற்றி 1924-ம் ஆண்டு தயாரித்து ஹேமாவதி ரிசர்வாயர் பிராஜக்ட் என்ற இந்தப் புத்தகம் மைசூர் அரசால் அச்சடிக்கப்பட்ட புத்தகம். இதிலே 1924-ம் ஆண்டு ஒப்பந்தப்படிதான் ஹேமாவதி அணை கட்டப்படும், கட்டப்பட வேண்டும், தமிழ்நாட்டுக்குத் தரப்பட வேண்டிய லிமிடேஷன் ப்ளோ ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்ஸ் இவ்வளவுக்கு பாதிக்காமல் அணை கட்டப்பட வேண்டும் என்கிற உறுதி அளிக்கப்பட்டிருக்கிற புத்தகம் ஆகும். இது மைசூர் அரசினிடமிருந்து மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகும்.

அடுத்து 1967-ம் ஆண்டு இன்னொரு சம்பவம் நடைபெற்றது. நம்முடைய தமிழ்நாட்டுடைய நீர்ப்பாசனத்துறை பொறியாளரும், மைசூர் நீர்ப்பாசன பொறியாளரும் மத்திய அரசின் நீர்ப்பாசன பொறியாளர் தலைமையில் கூடி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தில் மத்திய அரசு. சி.டபிள்யூ.பி.சி. நீர்ப்பாசனத் துறை பொறியாளர் டி. பி. ஆனந்த் கையெழுத்திட்டு

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 8

இருக்கிறார். மைசூர் அரசின் சார்பாக மேக்டோம் கையெழுத்திட்டு இருக்கிறார். தமிழகத்தின் சார்பாக ஜே. ஈ. வாஸ் கையெழுத்திட்டிருக்கிறார். அதிலே சொல்லி இருப்பது

'The Chief Engineer, Mysore, explained that the Mysore Government was fully prepared to honour the 1924 agreement and that the limit flow that is guaranteed therein would not be affected in any way by the Hemavathi Project'.

என்று சொல்லி கையெழுத்து போட்டிருக்கிறார். அடுத்தபடி அரசின் பொறியாளர் சொல்லுகிறார் :—

'The Chairman stated that this examination would be done by the C.W. and P. C. and that the contribution of Hemavathi river in the impoundable quantity will be determined from the available inflow data from 1940–41 onwards consistent with the conditions of the 1924 agreement. Suitable proportion factors will have to be fixed by joint gaugings between Mysore and Madras. Rules of regulation should also be framed by the two Governments in due course.

இந்த அளவுக்கு நல்ல ஆதாரங்கள் நம்மிடத்தில் இருக்கின்றன. அந்தக் காரணங்களாலேதான் நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் மைசூர் அரசு தன்னிடத்தில் நியாயங்கள் இல்லாத காரணத்தாலே 1967-ம் ஆண்டு வரையில் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை நாங்கள் மதிக்கிறோம், அதற்குப் பாதகம் இல்லாமல்தான் இந்த அணைகள் கட்டப்படும் என்று கூறியவர்கள், 1968-ல் ஹேமாவதி அடிக்கல்நாட்டு விழாவைத் தமிழக அரசின் இசைவையும் முன் ஒப்புதலையையும் பெறாமல், மத்திய அரசின் முன் அனுமதியையும் பெறாமலும் நடத்தினார்கள். அந்தச் சமயத்தில் கட்சிக் கண்ணோட்டத்தில் தமிழக அரசு இதைக் காணவில்லை.

மதிப்பிற்குரிய ஹண்டே அவர்கள் கூறியபடி அன்றைக்கு மைசூரில் முதலமைச்சராக இருந்தவர் வீரேந்திரபட்டீல். அவர்கள் காங்கிரசு கட்சியைச் சேர்ந்தவர்கள். கழக அரசு அப்போதும் அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டாம் என்ற அளவில்தான் தமிழக அரசு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி மிகுந்த நிதானத்தோடும், இரண்டு மாநிலங்களுக்கும் உள்ள உறவுகளுக்கு எந்தவிதமான ஊனமும் ஏற்படக்கூடாது என்ற முயற்சியோடும் பல்வேறு காரியங்களில் ஈடுபட்டது, பேச்சு வார்த்தை நடத்தியது. அதை இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களும் பொதுமக்களும் மிக நன்றாக அறிவார்கள். இதற்கு பிறகு 1968-ல் அணைக்கட்டுக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தியதற்குப் பிறகு மைசூர் சட்ட மன்றத்தில் பேசிய முதலமைச்சர் வீரேந்திர பட்டீல் அவர்கள் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை மைசூர் அரசு மதிக்காது என்று சொன்னார்கள். இந்த அணைக்கட்டு அடிக்கல் நாட்டு விழா வரை மதிக்கப்பட்டு வந்த 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை, 1962-ல் மத்திய அரசின் பொறியாளர் முன்னிலையில் தமிழக மைசூர் மாநிலங்களின் பொறியாளர்கள் கையெழுத்திடுகின்ற நேரத்தில் மதிக்கப்பட்ட



1971 ஜூலை 8] [திரு. மு. கருணாநிதி]

1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை மைசூர் சட்டசபையில் முதலமைச்சர் இனி அது மதிக்கப்படமாட்டாது என்று தட்டிக்கழிக்கிறார். இதைக் கேட்டு திடுக்கிட்ட அதிர்ச்சிக்குள்ளான தமிழக அரசு உடனடியாக மத்திய அரசிற்கு எழுதி அதன் உதவியை நாடியது. நம் முறையீடுகள் மத்திய அரசிற்கு சென்றன. அதற்குப் பிறகு மத்திய அரசு உடனே தலையிட்டு மைசூர் அரசு இந்த அணைகளைக் கட்டக்கூடாது, நிறுத்தி வையுங்கள், பேச்சுவார்த்தையில் முடிவு காணுகிற வரையில் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று எழுதியிருப்பதாகத் தகவல் தந்தார்கள்.

அப்போதுகூட சென்னையில் உள்ள பத்திரிக்கைகள் மத்திய அரசு மைசூர் அரசிற்கு உத்தரவு போடுவதை எதிர்க்கிறோம் என்ற அளவில் எழுதியதை மறந்து விடவில்லை. பெங்களூரில் அந்தப் பத்திரிக்கை விற்பனையாக வேண்டும் என்ற விற்பனை நோக்கத்தோடு எழுதியது. அதைப்பற்றி எல்லாம் அதிகமாகப் பேச விரும்பவில்லை.

அப்போது மைசூர் அரசிற்கு மத்திய அரசு இட்ட ஆணை தொடர்ந்து மீறப்பட்டு வந்தது. ஒவ்வொரு முறையும் நானும், நம் அமைச்சர் பெருமக்களும், கேரளத்து முதல்வரும், மைசூர் முதல்வரும் மத்திய அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்களோடு பேசுகிற நேரத்தில் எல்லாம் எல்லாவற்றையும் பேசி விட்டு கடைசியாக வீரேந்திர பட்டீல் அவர்கள் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்றுதான் கூறுவார். நான் சொன்னது இப்போது இருக்கிற ஒப்பந்தத்தின்படி இன்றுள்ள சூழ்நிலைப்படி எங்களுக்கு வரையறுக்கப்பட்ட லிமிட் ப்ளோஸ் தந்தாக வேண்டும், அந்த லிமிட்ஃப்ளோஸுக்கு ஆபத்து இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதை நான் வலியுறுத்தி இருக்கிறேன் இந்த மாமன்றத்திலும் சரி, அனைத்துக் கட்சித் தலைவர்கள் இதுபற்றி பேச கூடி இருந்த நேரங்களிலும் சரி.

லிமிட் ஃப்ளோஸ் ஏதோ கோட்டை விட்டு விட்டு வந்தது போல தெரிகிறது என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். லிமிட் ப்ளோவில் தவறு ஏற்பட முடியாது. மைசூர் ஒன்றும் ஆப்பிரிக்கா கண்டத்தில் இல்லை. நாமும் வெகுதூரத்தில் இல்லை. இன்றைக்கு கிருஷ்ணராஜசாகரில் உள்ளது போல் நம் பொறியாளரும் இருப்பார். அவர்கள் மாநிலத்தைச் சேர்ந்த பொறியாளரும் இருந்துகொண்டிருப்பார். ஆகவே யாரும் அதிலே பொய் கூறி தப்பித்துக்கொள்ள முடியாது. தவறு செய்து விட முடியாது. அந்தக் காரணத்தாலே நமது லிமிட் ப்ளோஸ் அங்கீகரிக்கப்பட்டு அதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த லிமிட் ப்ளோஸுக்கு எந்த ஊனம் வந்தாலும் இந்த அணைக்கட்டு திட்டங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்று திட்டவட்டமாக கூறி இருக்கிறோம்.

இங்கே ஆளும் கட்சித் தரப்பிலும் எதிர் கட்சித் தரப்பிலும் பேசியவர்கள் தேர்தலுக்காக மைசூர் பிரச்சினையில் மத்திய அரசு காலம் கடத்துகிறது என்று சொன்னார்கள். அது உண்மையாகவும் இருக்கலாம். உண்மை அல்லாமலும் இருக்கலாம், ஆனால்

இதிலே நான் கருதுவது எல்லாம் தேர்தல் நடந்த நேரத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி கூறுயது போல, மைசூர் மாநிலத்தில் பெங்களூருக்கு வந்து பேசிய இந்திரா காந்தி அவர்கள் மைசூர் தமிழ்நாடு காவிரி நீர் பங்கீட்டு பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடுவதாக இருக்கிறேன் என்று சொன்ன பிறகுதான் மைசூர் நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தி காங்கிரஸ் பெரும் வெற்றி பெற்றது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. தேர்தல் சமயத்தில் ட்ரிப்யூனலுக்கு விடப் போகிறேன் என்று சொன்ன பிறகும் அவர்கள் இவ்வளவு பெரிய வெற்றி பெற்ற பிற்கும் ஏன் பயப்படுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை; அவர்கள் பெற்ற வெற்றியில் அவர்களுக்கே நம்பிக்கை இல்லையா என்று நாம் சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது. ட்ரிப்யூனலுக்கு விடப்போகிறேன் பெங்களூரில் எடுத்துச் சொன்ன பிறகும் அங்கே மறுபடி தேர்தலுக்குப் பயப்படுகிறார்கள் என்ற வாதத்தில் பொருள் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதைப் பற்றி சொல்லுகிறார்கள். நான் சி. எஸ்.க்காக வக்காலத்து வாங்கவில்லை. அவரே வக்கீல். சி. எஸ். என்ன சொல்லி இருக்கிறார் என்றால் தேர்தல் முடிந்த பிறகுதான் கவனிக்கப்படும் என்றார். ஏதோ இது மத்திய அரசிலிருந்து இந்திரா காந்தி பேசியது போல நான் கருதவில்லை. அவர் சொல்லி இருப்பது தேர்தல் முடிந்த பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்த பிறகு அவர்களோடு பேசி முடிவு காணலாம் என்ற கருத்தில்தான் சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அனைத்துக் கட்சி தலைவர்களும் இதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. நாங்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தக் கருத்தை அவர்கள் தன்னுடைய கட்சிக்காக பேசிய கருத்தாகத்தான் எடுத்துக்கொள்கிறேன்.

கட்சி சார்பற்ற முறையில் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்று டாக்டர் ஹாண்டே குறிப்பிட்டதை அடுத்து சொன்ன கருத்து இன்றைக்கு புதிய காங்கிரசு கட்சியினுடைய அரசு ஏற்பட்ட பிறகு மைசூர் மாநிலத்தில் ஒரு தர்மசங்கடமான நிலை ஏற்படலாம். மத்தியில் புது காங்கிரசுடைய ஆட்சி. மைசூரில் பழைய காங்கிரசுடைய ஆட்சி. இந்திரா காந்தி அரசு தி.மு.க. ஆதரவுடன் இயங்கி வருகிறது. ஆகவே இந்திரா காங்கிரசுக்கு எதிராக பழிச் சொல் வருமே என்று தேர்தலுக்காகக் காத்திருந்தால் அதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இன்றையதினம் நம்முடைய நிலைமை என்ன? மத்திய அரசின் உத்தரவை மத்திய அரசே மீறுகிற துர்ப்பாக்கியமான நிலைமை. டில்லியில்தான் போட்ட உத்தரவை மைசூரில் அவமதித்துக்கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம்.

இப்போதுதான் நாம் இந்தியாவின் ஒருமைப்பாட்டில் இவர்களுக்கு எல்லாம் உண்மையில் நம்பிக்கையிருக்கிறதா என்ற சந்தேகத்திற்கு ஆளாக வேண்டியவர்களாக இருக்கிறோம்.



திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றவர்களும் சொன்னார்கள். இந்தியாவின் ஒற்றுமைக்குப் பாதகம் இல்லாத வகையில் நீங்கள் பெரிய போராட்டம் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். போராட்டம் என்பதாக திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கினால் எங்கே அது ஒரு பெரிய போராட்டமாக எழுச்சி பெற்று பிரிவினையில் போய் அமைந்து விடுமோ என்ற எண்ணத்தில் சொன்னார்கள்.

பிரிவினை பேசிய நாம் இன்றைக்கு மத்திய சர்க்காரின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்கிறோம். மத்திய அரசின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி வருகிற நேரத்தில், மத்திய அரசின் அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்ற முழக்கம் எழுப்புகிற நேரத்தில் முறைப்படி எந்த எந்த வகையில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதை ஆராய ராஜமன்னார் குழுவை அமைத்தோம். அவர்கள் சில சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள். அதை நாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

ஆனாலும் அதே நேரத்தில் இன்று இருக்கின்ற சட்டத்திட்டங்களின்படி மத்திய அரசின் அதிகாரங்களுக்கு கட்டுப்பட்டே நடக்க வேண்டுமென்ற பண்பை நாம் பெற்றிருக்கிறோம். இந்த அரசு பெற்றிருக்கிறது. அதற்கு அடையாளம்தான் மேலவையில் கூட எடுத்துச் சொன்னேன். வீராணம் திட்டத்திற்கு $1\frac{1}{2}$ ஆண்டு காலம் மத்திய அரசின் அனுமதி கிடைக்கிற வரையில் காத்துக் கொண்டிருந்தோம். இது எந்த மாநிலத்தையும் பாதிக்கவில்லை, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தது, நாங்களே ஏற்படுத்திக் கொள்கிறோம் என்பதாக அவசரப்பட்டு அந்தக் காரியத்தில் ஈடுபடவில்லை.

அதேபோல மேலவையில் சொன்னேன்—அந்தக் கோட்டையைச் சுற்றி புல் பூண்டுகள் செதுக்கப்பட வேண்டும் என்று சொன்னதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெற்றே செய்ய வேண்டும் என்று அதிகாரி சொன்னார். ஆகவே மத்திய அரசின் உதவி அமைச்சர் இங்கே வந்திருந்தபோது அவரை அழைத்துப்போய் அந்தப் புல் பூண்டுகளைக் காட்டி, அதைச் செதுக்க அனுமதி தரவேண்டும் என்று கேட்டு, நான்கைந்து கடிதம் எழுதி, ஞாபகப்படுத்தி, "புல்பூண்டுகளைச் செதுக்க அனுமதி கொடுத்தோம் போ" என்று அவர்கள் அனுமதி அளித்த பிறகுதான் புல்பூண்டுகள் இப்போது செதுக்கப்பட்டு, கண்ணைக் கவரும் வண்ண மலர்கள் கொண்ட பூங்கா தோன்றிக் கொண்டிருக்கின்றது என்கிற நிகழ்ச்சியை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு பணிந்து நடக்கிறோம். அடங்கி நடக்கிறோம். அடக்க உணர்ச்சியைக் காட்டிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் 25 கோடி, 30 கோடி என்பதாக—ஹேமாவதி, கபினி, ஹாரங்கி, சொர்ணவதி ஆகிய பல்வேறு அணைக்கட்டுத் திட்டங்களை, தமிழ் நாட்டைப் பாலைவனம் ஆக்கக்கூடிய பயங்கரமான திட்டங்களை

மைசூர் அரசு மத்திய அரசின் ஒப்புதலைப் பெறாமலே, மத்திய அரசின் சிபார்சின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஆட்சி நடந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் செய்கிறார்கள் என்றால் நாட்டு நிலைமை என்ன?

பாலாறு மைசூர் அணைக்கட்டால் பாழாய்ப் போய்விட்டதை மறந்துவிடக்கூடாது. ராணிப்பேட்டில் பாலாறு படுகை ஓரத்தில் 9 லட்சம் மரங்கள் இருந்தன என்று கணக்கிட்டு, நடந்த மகாயுத்தத்தின்போது 3 லட்சம் மரங்கள் வெட்டப்பட்டு விறகாகக் கொடுக்கப்பட்டன என்றெல்லாம் சரித்திரம் படித்தவர்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பாலாறு இன்றையதினம் பாழாறாக மாறியிருக்கிறது.

காவிரியில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறபோது பலபேருக்கு இது எவ்வளவு பயங்கரமான பிரச்சினை என்று புரியாமல் இருக்கலாம். அதன் உண்மைத் தத்துவம் தெரியாமல் இருக்கலாம். பாலாற்றை எண்ணிப் பாருங்கள். அதில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிய காலம் ஒன்றுண்டு. இன்றைக்கு வெறும் மணல் வெளியாகக் கிடப்பதைப் பார்க்கிறோம். அதைப்போல இன்றைக்கு மைசூர் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறபடி அணைக்கட்டுகளை எல்லாம் கட்டிவிட்டால் சகாரா பாலைவனத்தைப்போல காவிரி நதியும் மணல் ஆறாகப் போய்விடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இலக்கியங்களில் எல்லாம் காவிரியைப் பற்றி வருணித்திருக்கிறார்கள். அது சம்பந்தப்பட்ட வரலாறுகளை எல்லாம் உறுப்பினர்கள் சொன்னார்கள். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங் கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி

என்று அழகுறப் பாடிக் காட்டினார்கள். மைசூர் அரசு இந்த அணைகளைக் கட்டிவிட்டால் அங்கே மருங்கு வண்டு சிறந்தார்ப்பதைப் பார்க்க முடியாது. மணிப்பூ வாடையை நுகர முடியாது.

கிழக்கு பாகிஸ்தான் அகதிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று திருமதி இந்திரா காந்தி அம்மையார் உலக நாடுகளை எல்லாம் உதவி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாமோ நாளைக்கு அகதிகளாக மாறிவிடக்கூடிய தமிழ்நாட்டு மக்களை ஆபத்தில் இருந்து காக்க உங்கள் உதவியைத் தாருங்கள் என்று அந்த அம்மையாரைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த உணர்ச்சியை அம்மையார் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளும் கட்சியின் சார்பில் பேசிய திரு. கோவை செழியன், திரு. கணபதி அவர்கள் சொன்னார்கள். "நாம் தற்கொலைப் படையாக இருப்பதற்கும் தயாராய் இருக்கிறோம். எந்த யுத்தத்திற்கும் தயாராய் இருக்கிறோம்" என்றார்கள். அப்படி ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் இதுபோல சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் போட வேண்டிய அவசியம் இல்லை. அனைத்துக்கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டிப் பேச வேண்டியதில்லை. அவை அவர்களுடைய உள் உணர்ச்சிக்கு அடையாளமான வார்த்தைகளே தவிர



வேறு ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன். எதிர்கால தமிழகத்தை எண்ணிப்பார்த்து, கவலையால் குமைந்த உள்ளத்தில் பிறந்த நல்முத்துக்கள் என்ற அளவில் அவைகளை நான் எண்ணுகின்றேனே அல்லாமல் இந்த உணர்ச்சிகள் மத்திய அரசின் மீது பகைமையோ, அண்டைய மாநில அரசின் மீது பகைமையோ ஆகத் திருப்பப்படும் என்று பொருள் இல்லை. பேசிய உறுப்பினர்களே அப்படி நினைத்துப் பேசியிருக்கமாட்டார்கள்.

ஆனாலும் இது சாதாரணப் பிரச்சினை அல்ல என்று திரு. இராம அரங்கண்ணல் குறிப்பிட்டதுபோல, நமது திரு. பெருமாள் அவர்கள் குறிப்பிட்டதுபோல இயற்கையிலே இது பயங்கரமான உருவம் எடுத்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மறைக்க முடியாது. நமது அம்மையார் அவர்கள் எடுத்துக்காட்டியதுபோல இன்றைக்கு மத்திய அரசு மாநில அரசின் சில கொள்கைகளை கொஞ்சம் கசப்போடுதான் அணுகுகிறார்கள் என்பதை நான் மறைக்க விரும்பவில்லை. அப்படிச் சில நடைமுறைகள் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால் அத்தனை பிரச்சினைகளையும் தேர்தல், தேர்தல் கால ஒப்பந்தங்கள் ஆகியவற்றோடு—ஒன்றோடொன்று இணைத்துப் பார்ப்பது சரியான வாதமாகாது.

இவை எல்லாம் ஒரு அரசுக்கும் இன்னொரு அரசுக்கும் இருக்கக்கூடிய கருத்து வேறுபாடு என்று பார்க்கவேண்டுமே தவிர ஒரு கட்சிக்கும், இன்னொரு கட்சிக்கும் இருக்கிற வேறுபாடாகப் பார்க்கக்கூடாது.

ஹேமாவதி திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியவர் திரு. வீரேந்திர பட்டீல்—அவர் பழைய காங்கிரஸைச் சேர்ந்தவர்—ஆகவே அதற்காக இங்கே உள்ள பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களைக் குறை சொல்ல வேண்டுமென்று குறை சொன்னதில்லை. அது தமிழக அரசுக்கும், மைசூர் அரசுக்கும் இடையே ஏற்பட்டிருக்கிற தகராறு என்ற அளவில்தான் பார்த்தோம். உண்மையில் இது மைசூர் அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள தகராறே தவிர மைசூர் மாநில மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் ஏற்பட்டுள்ள தகராறு அல்ல. இந்த இரு அரசுகளுக்கும் இடையே எழுந்துள்ள தகராறில் மத்திய அரசு தலையிட்டு உடனடியாக நியாயம் வழங்க வேண்டுமென்று நாம் கோருகிறோம். இந்தத் தகராறில் தலையிட மத்திய அரசு மறுக்கிறது. மாநில அரசின் கருத்துக்களை அலட்சியப்படுத்துகின்றது. பிறகு பார்க்கலாம், பிறகு பார்க்கலாம் என்பதாக பிரச்சினைகளை ஒத்திவைக்கின்றது. நமது உணர்ச்சிகளைச் சரியான முறையில் புரிந்துகொள்ள முடியாத நிலைமை அங்கே இருக்கிறது.

அமைச்சர் மாதவன் அவர்களும், சாதிக் பாட்சா அவர்களும் டெல்லிக்குச் சென்று திரு. கே. எல். ராவ் அவர்களைச் சந்தித்துப் பேசினார்களே, அங்கே என்ன பேசப்பட்டது, அதை முதல் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கோருகிறேன் என்பதாக ஓர்

உறுப்பினர் சொன்னார். அதை நான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விளக்கி இருக்கிறேன். அதைப்பற்றி வேறு விவரங்களை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை.

திரு. கே. எல். ஆர். அவர்கள் அப்போது சொன்ன கருத்துக்களை யாவது மறுபடியும் இதுவரை எழுத்து மூலம் ஊர்ஜிதப்படுத்தியிருக் கிறார்களா என்றால் இல்லை. அப்படி எதுவும் செய்யாது காலம் தாழ்த்தி வருகிறார்கள். அதன் காரணம் நமக்குப் புரியவில்லை.

ஆனால் இன்றையதினம் வேறு ஒரு செய்தி பத்திரிகையில் வந்திருக் கிறது. மாநில அரசு தவறு செய்தது, முதல் அமைச்சர் தவறு செய்துவிட்டார், இந்திரா காந்தி அம்மையார் முதல் அமைச்சர்களை எல்லாம் கூட்டி மாநில சுயாட்சி பற்றி விவாதிப்பதாகச் சொல்ல வில்லை—அவர்கள் கடிதம் எழுதியது ஏ. ஆர். ஸி. கமிஷனைப் பற்றித் தான் என்பதாக ஒரு அதிகாரி சொல்லியிருக்கிறார். நண்பர் ஹாண்டே அவர்கள் கூடச் சொன்னார்கள். உண்மையைச் சொல்லி விட்டு இன்றைக்கு அரசியல்வாதிகள் அதில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ள அதிகாரிகளை விட்டு மறுப்பு விடச் சொல்கிறார் களோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

திருமதி இந்திரா காந்தி அம்மையார் எழுதிய கடிதத்தை வைத்துப் பேசுகின்றேன். அந்தக் கடிதத்தில் என்ன இருக்கிறது? சந்தேகம் இருந்தால் யார் வேண்டுமானாலும் இந்தக் கடிதத்தை வாங்கிப் பார்க்கலாம்.

These are important issues and we intend to consult all Chief Ministers

என்று சொல்லும்போது எவை எல்லாம் முக்கியமான பிரச்னைகள்? அவர்கள் கடிதம் எதற்காக எழுதினார்கள்?

I have received your letter of 15th June with which you have sent me a copy of the report of Centre-State Relations, Enquiry Committee

என்பதாக அவர்களே நாம் அனுப்பி வைத்த ராஜமன்னார் குழு அறிக்கைக்குப் பதில் எழுதினார்கள். அதில்

Your Government will probably examine the recommendations of this Report

என்று குறிப்பிட்டு விட்டு,

As you know the Administrative Reforms Commission also went into this question

என்று சொல்லிவிட்டு

It has already submitted a report and it is under consideration. If the views of your Government are made available to us, they will also be taken into account.

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களே, These are important issues.



என்று குறிப்பிட்டிருப்பது, ராஜமன்னார் கமிட்டி அறிக்கையைப் பற்றியா, அட்மினிஸ்ட்ரேட்டீவ் ரிபார்ம்ஸ் கமிட்டி அறிக்கை என்று பத்திரிகையில் வந்திருக்கிறதே, அதைப்பற்றியா?' ஒரு வேளை நான் குறைந்த ஆங்கில அறிவு பெற்றவன் என்ற காரணத்தால் அந்த வகையில் கூறுகிறார்களோ, என்னவோ? கடிதத்தை எழுதிவிட்டு, டெல்லி வட்டாரத்து அதிகாரிகள் இப்படிச் சொல்கிறார்கள் என்றால், நம்முடைய பத்திரிகைகளுக்கெல்லாம் ஒரே குஷி. இந்திரா காந்தி அவர்களின் கடிதத்தைக்கூட அவர்கள் போடுவதில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் தர்மவீராவைப்பற்றிச் சொன்னார்களே, அது போல இந்திரா காந்தி அம்மையார் "முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டுகிறோம்" என்று சொல்லிவிட்டு, பின்னர் அதிகாரிகள், அப்படியெல்லாம் இந்திரா காந்தியம்மையார் முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டப் போவதில்லையாம் என்று சொல்வது நம்முடைய பத்திரிகைகளுக்கெல்லாம் ஒரே குஷி. "முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டப் போவதில்லையாம், கருணாநிதிக்கு ஆப்பு" என்றெல்லாம் பத்திரிகைகள் போடக்கூடும். ஒரு பத்திரிகையை மட்டும் சொல்லவில்லை, பல பத்திரிகைகள் இதை ஒரு பெரிய விழாவாகவே கொண்டாடியிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE: The Prime Minister might have said that she wanted to consult the Chief Ministers. But that does not mean that she wants to have a Chief Ministers' conference. Probably that is the misunderstanding.

<u>மாண்புமிகு திரு. மு. கருணாநிதி</u>: தலைவர் அவர்களே, முதலமைச்சர்களைக் கலந்து பேசுவதென்றால், தனித்தனியாகப் பேசுவது என்று அர்த்தம் அல்ல. அவர்களே மறுத்தால்கூட நான் கவலைப்படப் போவதில்லை. இந்திரா காந்தியம்மையாரே மறுத் திருந்தாலும் என்னுடைய வாதம் இன்னும் வலுப்பெறுமே அல்லாமல், குறைவுபடாது. மாநிலங்களுக்குக் கடிதம் எழுதுகின்ற உரிமைகூட கொடுக்கவில்லை என்று அதைப் பயன்படுத்திக் கொள்வேனே தவிர, வருத்தப்படப் போவதில்லை. நேற்று முன்னாள் பாராளுமன்றத்தில் பெட்ரோலிய அமைச்சராக இருந்தவர் திரு. சேத்தி, மத்திய அரசு மாநில அரசுகளை எவ்வளவுதூரம் மதிக்கிறது என்பதைக் கூறுகிறார். அதாவது,

Refuting the charge that the State Chief Minister was not shown due respect during inauguration of the Madras Refinery

என்று திரு. சேத்தி, பெட்ரோலிய அமைச்சர் கூறியிருக்கிறார்.

அப்போது அமைச்சராக இருந்தவர் திரு. திரிகுணசென் என்பவர். அக்டோபர் இரண்டாம் தேதியன்று, அதாவது மகாத்மா காந்தி பிறந்த நாளன்று 1969-ம் ஆண்டு அவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதாவது,

October 2, 1969.

While I am looking into how misunderstanding arose which had given you reason to believe that those who organised the function had failed to inform you and other Ministers of your

State, I am writing once again to convey my most sincere apologies for your having had occasion to feel that you were not invited whatever may be the reasons for this, I now try to assure you and your Government of my highest consideration at all times.

With regards,

Yours sincerely,
(Signed) Triguna Sen.

என்று கடிதம் எழுதியிருக்கிறார். இவைகளையெல்லாம் நான் கூறுவதற்குக் காரணம், மாநில அரசின் உணர்வுகளை, மத்திய அரசில் இருப்பவர்கள், தாங்கள் மத்திய அரசில் இருப்பதால் அவற்றையெல்லாம் மறுத்துவிடுவ்து, மட்டப்படுத்திவிடுவது என்ப தெல்லாம் சரியான போக்கு அல்ல என்பதைக் கூறிக்கொள்கிறேன். அவர்களைப்போல நாம் நினைத்தாலும் செய்யலாம். இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேருமே என்பதைப் பொருட்படுத்தாமல், மைசூரைப்போல் 25 கோடி ரூபாய் செலவிடரவிட்டாலும், சின்னஞ் சிறு விஷயங்களை மத்திய அரசைக் கேட்காமலேயே நாம் நினைத் தால் செய்துவிட முடியும். அப்படிச் செய்ய முடியும். நாம் ஏன் பொறுமையைக் காட்டுகிறோம்? இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கக்கூடாதே, ஒருமைப்பாடு கெட்டுவிடக் கூடாதே, மைசூர் மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் வன்மையான போர் ஏற்பட்டுவிடக்கூடாதே என்பதால்தான் நாம் இவ்வளவு பொறுமை காட்டுகிறோம்.

மைசூர் மாநிலத்தில் மக்கள் ஏற்றுக்கொள்கிற வகையில் விஷயங்கள் விளக்கிச் சொல்லப்படாத காரணத்தால்தான் சில உணர்வுகள் மைசூர் மாநில மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். மைசூரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு அரசு இன்றைக்கு இல்லாவிட்டாலும், இந்திரா காங்கிரஸைச் சேர்ந்தவர்கள், மற்ற கட்சிகள் எல்லாம் ஒருங்குகூடி 1924-ம் ஆண்டு ஒப்பந்தம், 1892-ம் ஆண்டு ஒப்பந்தம் இருக்கிறது. எந்தெந்த அளவுக்கு நாம் கட்டுப்பட்டிருக்கிறோம்? 1964-ல் ஹேமாவதி அணைக் கட்டுவதற்காக உடனடியாக தயாரித்த அறிக்கை என்ன என்பவற்றையெல்லாம் மைசூர் மக்களிடத்தில் சொன்னால் அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்களா? மைசூர் மாநிலத்தில் உள்ளவர்களை அரசியல் வியாதிகளுக்குப் பயன்படுத்துகிற காரணத் தால் அம்மக்களுக்கு தமிழகத்தைப் பற்றியும், தமிழ்நாட்டு கட்சிகளைப் பற்றியும், தமிழக மக்களைப் பற்றியும் கசப்பான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. தயவுசெய்து கர்நாடக மக்கள்—மைசூர் மாநில மக்கள்—தங்களுடைய எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று அனைவரையும் மிகுந்த பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம் முன்னால் வைத்திருக்கிற தீர்மானத்தை நாளை மறுநாள் டெல்லிக்கு அனுப்ப இருக்கிறோம். இதுவரையில் நம் எண்ணங்களை, நம்முடைய வேண்டுகோளை அலட்சியப்படுத்தியதுபோல் அல்லாமல், காலங்கடத்தியதுபோல் அல்லாமல் மிகுந்த பரிவோடும், பெருமிதத்



தோடும் உணர்ந்து இந்திய சர்க்கார் நீர்ப்பாசன அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்களும், மத்திய அமைச்சர்களும், இன்னும் மைசூரிலிருந்து வந்து மத்திய அமைச்சர்களாக இருக்கிறவர்களும் நன்கு ஆராய்ந்தறிந்து, தமிழகத்திற்குப் பாதகம் ஏற்படாத அளவில் முடிவை எடுத்து அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன். இன்னும் அவர்களிடமிருந்து நமக்குச் சாதகமான பதிலை, "நடுவர் தீர்ப்புக்கு விடப்படும்" என்ற பதிலை எதிர்பார்க்கிறேன்.

அந்தக் காரணத்தினால்தான் நண்பர்கள் எல்லாம் பேசிய கோபத்தை, ஆத்திரத்தை, வெடிகுண்டு வைத்து தகர்த்தெறிவோம் என்பவைகளையெல்லாம் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அந்த முறைக்கு நாம் ஏற்றவர்கள் அல்ல. தமிழ்நாட்டு மக்கள் காட்டுமிராண்டிகளாக ஆகிவிடக்கூடிய அளவுக்கு அவை போய்விடக்கூடாது. தமிழ்நாட்டு மக்கள் வேதனைப் புழுதியில் எறியப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக இந்த முயற்சிகளை எடுத்துக் கொள்கிறோம். எங்கள் பொறுமையைச் சோதிக்காதீர்கள். எங்கள் அடக்கத்தை அலட்சியப்படுத்தாதீர்கள். எங்களுடைய பண்பை பரிகாசத்திற்கு உட்படுத்தாதீர்கள். மத்திய அரசிட மிருந்து நல்ல முடிவினை, நல்லவிதமான தீர்ப்பினை, தமிழ்நாடு எதிர் பார்க்கிறது என்று கூறி, வழிமொழிந்து பேசிய அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். இந்த மன்றத்தின் சார்பில் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக ஏற்றுக்கொள்ள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேறுகிறது என்று கருதுகிறேன்.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இந்த அளவில் முடிவுற்று, மீண்டும் பேரவை நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.

3. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

* 145. Notification issued with G.O. Ms. No. 1109, Revenue, dated the 16th April 1971, in regard to exemption from liability to sales-tax on the sales made by Canteen Stores (India) to the Civilian employees. [Laid on the Table of the House under section 533 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 146. Notification issued with G.O. Ms. No. 1010, Home, dated the 12th April 1971, in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

147. Notification issued with G.O. Ms. No. 1315, Home, dated the 17th May 1971 in regard to exemption from liability to tax in respect of certain vehicles belonging to the Co-operative for American Relief Everywhere Incorporated, Tamil Nadu. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

148. Notification issued with G.O. Ms. No. 1343, Home, dated the 19th May 1971 in regard to exemption from payment of tax in respect of certain vehicles belonging to His Holiness Jagadguru Sankaracharya of Sringeri Sharada Peedam, during his visit to Tamil Nadu. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

149. Notification issued with G.O. Ms. No. 1350, Industries, dated the 25th May 1971 in regard to an amendment to the Tamil Nadu Small Scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956. [Laid on the Table of the House under section 19 (d) of the Tamil Nadu State Aid to Industries Act, 1922 (Tamil Nadu Act V of 1923).]

150. Notification issued with G.O. Ms. No. 1027, Agriculture, dated the 26th March 1971 in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

*B. Reports, Notifications and Other Papers.*

* 105. Report of the action taken on the recommendation No. 53 made by the Public Accounts Committee in its Report on the Appropriation Accounts of the State of Tamil Nadu for the year 1962-63 and Audit Report 1964.

Laid on the Table of the House on 7th July 191.7



@ 106. Brochure on the Cauvery River Waters Dispute with Mysore (Tamil).

@ 107. The Tamil Nadu Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1971 (L.A. Bill No. 14 of 1971) (with Annexure).

@ 108. Note on Progress of Education in Tamil Nadu, 1971-72 (English).

% 109. Note on Progress of Education in Tamil Nadu, 1971-72 (Tamil).

@ Despatched to Members on 6th July 1971.
o/o Despatched to Members on 7th July 1971.

இணைப்பு I

[2 9 ம் பக்கத்தில் 156-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

தேசிய மாணவர் படைக்காகச் செலவிடப்படும் தொகையில் கீழ்க்கண்ட இனங்களுக்கான செலவினை மைய அரசு ஏற்று வருகிறது:—

(1) தேசிய மாணவர் படை இயக்குநரின் அலுவலகத்திற்கான இடவசதி அல்லது வாடகையும், நாற்காலி, மேசை முதலியன;

(2) தேசிய மாணவர் படையில் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக அனுப்பப்படும் இராணுவ அலுவலர்கள், அலுவலக பணிக்காக அனுப்பப்படும் இராணுவ அலுவலர்கள், அலுவலக பணிக்காக அனுப்பப்படும் இராணுவத்தின் இதர மைய அரசு ஊழியர்கள் ஆகியோரின் ஊதியச் செலவுகள்;

(3) பயிற்சிக்கான உந்து வண்டிகள்;

(4) மாணவர் படையினரின் உடை முதலியன;

(5) போர்த்தளவாடங்கள் மற்றும் விஞ்ஞான நுட்பவியல் கருவிகள்.

2. மாநில அரசு ஏற்றுவரும் செலவினங்கள் பின் வருமாறு:—

(1) இயக்குநர் அலுவலகம் நீங்கலாக மற்றைய தேசிய மாணவர் படை அலுவலகங்களுக்கான இடவசதி, நாற்காலி, மேஜை வகையறுக்கள்;

(2) எழுது பொருள்கள்;

(3) பெட்ரோல், எண்ணெய், மசகு;

(4) தேசிய மாணவர் படை அலுவலகங்களில் பணிபுரியும் சிவிலியன் அலுவலர்களுக்கான ஊதியம்;

(5) படையைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அலுவலர்களுக்கும் படி;

(6) தேசிய மாணவர் படைக்கான இதர வசதிகளுக்கும் பயிற்சிக்கும் பொருளுதவி (விமானம் மற்றும் கப்பல் மாதிரி கருவிகள் வாங்குதல் போன்ற செலவுகள்).

3. இவையன்றி பயிற்சி முகாம்களுக்கு செலவிடப்படும் தொகையை மைய அரசும் மாநில அரசும் சரிபாதியாக பங்கேற்றுக் கொள்ளுகின்றன.

4. தேசிய மாணவர் படைக்காக ஆண்டொன்றுக்கு சுமார் 65 லட்ச ரூபாய் தமிழக அரசு ஒதுக்கி வருகிறது. மொத்தச் செலவில் இத்தொகை 35 சதவீதமே. மீதி 65 சதவீத செலவினை மைய அரசு ஏற்று வருகிறது.



இணைப்பு II

[239-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

காவிரி நீர் குறித்து மைசூர் மாநிலத்துடன் உள்ள தகராறு, சிறு வெளியீடு

முகவுரை.

தமிழ்நாட்டிலும், மைசூரிலும் காவிரியின் பாசன ஏற்பாடுகள் குறித்த பின்னணி விவரங்கள் மைசூருக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே 1892, 1924-ம் ஆண்டுகளில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் முக்கியக் கூறுகள், இந்த ஒப்பந்தங்கள் கையெழுத் தாவதற்கு வழிகோலிய நிலைமைகள், மைசூரில் காவிரியின் கிளை நதிகளில் மைசூர் அரசு எவரையும் கலந்தாலோசித்து அனுமதி பெறுமல் தன் போக்கிலேயே பாசனத் திட்டப் பணிகள் சிலவற்றை நிறைவேற்றியதால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள், இப்பாசனப் பணிகளால் காவிரியின் கீழ்ப்பகுதியிலுள்ள தமிழ்நாட்டின் முக்கியப் பாசன நலன்களுக்கு ஏற்பட்டுள்ள பேராபத்து, தமிழ் நாட்டின் நெற் களஞ்சியங்களாகத் திகழ்கிற திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களுக்குத் தொன்றுதொட்டுப் பயன்பட்டு வருகிற, வழக்கப்படியான பாசன நலன்களை முழுதும் பாதுகாப்பதற்குத் தமிழ்நாட்டிற்குள்ள தெளிவான நிலை ஆகியவை இச்சிறு வெளியீட்டில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப்பட்டுள்ளன.

காவிரி நீரினைப் பங்கிட்டுக்கொள்வதில் தமிழ்நாட்டிற்கும் மைசூருக்கும் நடந்த பேச்சுவார்த்தைகள், கடிதப் போக்குவரத்து இவற்றின் பொதுவான பின்னணி விவரங்கள், இது குறித்து இணக்க மான உடன்பாடுகாண எடுத்துக்கொண்ட முயற்சியில் மத்திய அரசின் பங்கு ஆகியவற்றையும் இச் சிறு வெளியீட்டில் காணலாம். இத்தன்மையதான தண்ணீர்த் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கு 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர்த் தகராறுகள் சட்டம் எந்த அளவுக்குப் பயன்படும் என்பதும் இதில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இச் சிக்கலை விரிவாக ஆழ்ந்து ஆராய் வதானல், பல்வேறு நீர்கோள் பகுதிகளிலிருந்தும் வடிந்து விழுகிற தண்ணீர், மைசூர் நீர்த்தேக்கங்களின் தண்ணீர்ப் பங்கீட்டை முறைப்படுத்தும் விதிகள், அவற்றில் நீர் தேக்கி வைப்பதற்குரிய நெறிமுறை, மொத்தப் பாசன ஏற்பாட்டில் தேவைப்படுகிற தண்ணீர், பயன்படுத்தப்படுகிற தண்ணீர் பற்றிய முழுமையான புள்ளி விவரங்கள் ஆகியவற்றை அலசி ஆராய வேண்டியிருக்கும். இவை யெல்லாம் மிகவும் தொழில் நுட்பத் தன்மை வாய்ந்தவை; எனவே, பொதுவான நீர் அளவு விவரங்கள் மட்டுமே இதில் கொடுக்கப் பட்டுள்ளன.

காவிரிப் பாசன ஏற்பாடு.—காவிரி ஆறு முன்னுள் சமஸ்தான மாகிய குடகிலுள்ள மெர்க்காராவில் உற்பத்தியாகிறது. மேட்டூருக் கருகில் ஹோகனக்கல்லில் தமிழ் நாட்டிற்குள் நுழைவதற்குமுன், காவிரி ஆறு மைசூர் மாநிலத்தில் சுமார் 150–200 மைல் நீளத்திற்கு ஓடுகிறது. மைசூர் மாநிலத்திலே, ஹேமாவதி, லட்சுமண தீர்த்தம், கபினி, சுவர்ணவதி, சிம்ஸா, அர்க்காவதி ஆகிய முக்கியமான பல

கிளை நதிகள் காவிரியில் கலக்கின்றன. தமிழ் நாட்டிலே காவிரியின் முக்கியமான கிளை நதிகள் பவானி, அமராவதி, நொய்யல் ஆகியவைகளாகும்.

காவிரியின் கிளை நதிகளின்கீழ் உள்ள பாசனப் பரப்பைத் தவிர, தமிழ்நாட்டிலே காவிரியின் மூலம் பாசனம் பெறும் பரப்பளவு பத்து லட்சம் ஏக்கருக்கு மேல் உள்ளது. இதில் பாதிக்கு மேற்பட்ட பரப்பளவு, கரிகால சோழன் காலத்திலிருந்து 1,500 ஆண்டுகளுக்கு மேலாக வெண்ணாறு, காவிரி மூலம் பயன்பெறும் தஞ்சை மாவட்டப் பழைய கயவாய்ப் பகுதியில் (D lta) அமைந்துள்ளது. 1934-ல் மேட்டூர் அணை கட்டப்பட்ட பிறகு, பழைய ஆயக்கட்டைப் போல், 1/5 பங்குள்ள பரப்பளவு இப்போது "புதிய கயவாய்" (New Dal) என வழங்கப்படுகிற கூடுதல் பகுதிப் பாசனத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. இதற்கு வேண்டிய தண்ணீர் காவிரியில் கல்லணையிலிருந்து பிரிந்து செல்கிற கல்லணைக் கால்வாய், மன்னார்குடி வட்டத்தில் வடவாறு விரிவுக் கால்வாய், மைசூருடன் செய்து கொள்ளப்பட்ட 1924 உடன்படிக்கையின்படி அதிகாரம் அளிக்கப்பட்ட மேட்டூர் தென்கரை விரிவுக் கால்வாய்கள் இவற்றிலிருந்து கிடைக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஆயக்கட்டைத் தவிர, திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களில் காவிரி, கொள்ளிடம் நதிகளின்கீழ் ஏராளமான நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இந்த நிலங்களும் பன்னெடுங் காலமாகவே இப்பாசன வசதியைப் பெற்று வருகின்றன.

மைசூர் மாநிலத்தில் காவிரியின்கீழ்ப் பாசனம் பெறும் பரப்பளவு குறைவாகத்தான் இருக்கிறது. ஏற்கெனவே, பாசனம் பெற்றுவரும் பரப்பளவு ஏறத்தாழ 2 லட்சம் ஏக்கர்தான். 1924-ம் ஆண்டு வாக்கில் மைசூர் கட்டிமுடித்த கிருஷ்ணராஜசாகரம் அணை மூலமாக, 1,25,000 ஏக்கர் பாசனம் பெறுவதால், இப்போது பாசனம் பெறும் பரப்பளவு கூடியுள்ளது.

காவிரியின் கீழ் பாசன பாங்கு.—தமிழ் நாட்டில் கயவாய்ப் பகுதிதான் காவிரி பாசனப் பயனைப் பெரிதும் பெறுகிறது. பயிர் விளைவுக்குக் கயவாய்ப் பகுதி வாய்ப்பாக அமைந்துள்ளதால், பல நூற்றாண்டுகளில் இப்பாசன அமைப்பு முறை வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் கயவாய்ப் பகுதி மேடு பள்ளமின்றி சமநிலமாக உள்ளது; பாசனம் பெறக்கூடிய நிலப்பரப்பும் அதிகமாக உள்ளது. இயற்கையாய் அமைந்த கிளைக் கால்வாய்கள் பல இருக்கின்றன. சரிவு அதிகமாக இராததால், இக்கால்வாய்களின் மூலம் பயனடையும் பரப்பளவு மிகுதி. ஆற்றோட்டத்தில் வழிந்து வரும் வண்டலெல்லாம் கயவாய்ப் பகுதியிலேயே படிகிறது. உலகிலே ஆற்றுப் பாசன அமைப்பு எதிலும் இயல்பாக உள்ள நிலையே இது. நைல் நதியானாலும், மிஸிஸிபியானாலும், கோதாவரியானாலும், சிந்து நதியானாலும், கங்கையானாலும் நிலைமை இதுதான். ஆற்றின் தொடக்கப் பகுதிகளில் அல்லாமல், கயவாய்ப் பகுதிகளில் பாசன வசதி பெருகுவதன் இயல்புக்கு இதுவே காரணம். இம் மாநிலத்திலே சோழர்களின் மகோன்னத காலத்தில் தமிழர்கள் மேற்கொண்ட ஆர்வம் மிக்க முயற்சி, அவர்களின் மேதகு மேதை, கடும் வெயிலிலும் அயராது உழைக்கும் ஆற்றல் ஆகியவை இம் மாநிலத்தின் பாசன ஏற்பாட்டினை வளர்ப்பதற்குப் பெரிதும்





காரணமென்றாலும், இவ்வாறே மைசூர் மாநிலத்தில் பெரிய அளவில் பாசனப் பரப்பளவைப் பெருக்குவதற்கு அம் மாநில இயற்கை அமைப்பும் இயல்பாய் அமைந்துள்ள இடர்பாடுகளும் முட்டுக்கட்டையாக விளங்கி வந்துள்ளதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

காவிரியின் கீழ் கயவாய்ப் பாசனத்துக்குள்ள பாதுகாப்புகள்.—காவிரி நீர் வாயிலாகப் பாசனம் பெறுவதற்குத் தமிழ் நாட்டிற்குப் பன்னெடுங்காலமாக உள்ள உரிமைகளுக்கே முதலிடம் தரவேண்டும் என்பதை மைசூரும், தமிழ்நாடும் எப்போதும் ஏற்றுக்கொண்டுள்ளன. எனவே, தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய தண்ணீர்ப் பெருக்கினை எவ்வகையிலும் பாதிக்கும் முறையில் மைசூரில் முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படக்கூடாது என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. 1850-ஆம் ஆண்டு வரையில், மைசூர் மாநிலத்தில் ஒரு சிறிய பரப்பளவே காவிரியின் மூலம் பாசனம் பெற்றுவந்தது. சிறு கால்வாய்கள் மூலம் பாசன வசதி பெற்றுவந்த பரப்பளவு அதுவரை கணிசமான அளவு அதிகரிக்கவில்லை. 1850-ஆம் ஆண்டு முதற்கொண்டே, நீர்த் தேக்கங்கள், அணைக்கட்டுகள், பொறி மதகுகள் முதலான சிறு பாசனப் பணிகள் கட்டுவதன் மூலம் காவிரியின்கீழும் அதன் கிளை நதிகளின்கீழும் பாசனம் பெறும் பரப்பளவை அதிகப்படுத்த மைசூர் அரசு முயற்சிகளை மேற்கொண்டது.

தொடக்க காலத்தில் மைசூரிலும், தமிழ்நாட்டிலும் காவிரியின் தண்ணீரைத் தேக்கி வைத்து, பயிர்த் தேவைகளுக்கேற்ப திட்டவட்டமான அளவுகளில் தண்ணீர் விடுவதற்கு பொறி மதகு அமைப்புகளோ நீர்த் தேக்கங்களோ இராததால், காவிரி ஆற்றுப் பெருக்கின் அடிப்படையிலேயே, ஆறு பெருக்கெடுத்து ஓடும் பகுதிகளின் அடிப்படையிலேயே மைசூரிலும், தமிழ்நாட்டிலும் தொடக்க காலத்தில் காவிரிப் பாசன வசதி அமைந்தது. 1850-ஆம் ஆண்டு முதற்கொண்டே பாசனப் பணிகளைச் சிறிய அளவில் இருந்தாலும் சீராகவும் தொடர்ந்தும் மைசூர் அரசு கட்டிவரத் தொடங்கியது. இவ்வாறு பாசனப் பணிகள் கட்டி முடிக்கப்பட்டதால், மைசூரில் காவிரியின்கீழ் பாசனம் பெறும் பரப்பளவு அதிகமாயிற்று. அதன் காரணமாகத் தமிழ்நாட்டிற்கு வரும் காவிரி நீரின் அளவு குறைந்து போயிற்று. இதனால், தமிழ்நாட்டிற்கு வாலாயமான பாசன உரிமைகள் நாளாவட்டத்தில் பாதிக்கப்படுமோ என்று அப்போதிருந்த சென்னை மாகாணப் பொறியாளர்கள் கவலை கொள்ளத் தொடங்கினர். எனவே, தமிழ்நாட்டின் பாசன நலன்களுக்குப் போதிய பாதுகாப்புகள் ஏற்படுத்துவதற்காக, இது குறித்து மைசூர் அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

இரு மாநிலங்களிலும் ஓடுகிற ஆற்றின் நீரினைப் பயன்படுத்துவதற்குத் தமிழ்நாடும் மைசூரும் முதன்முதலாக 1892-ஆம் ஆண்டில் நிலையான ஒப்பந்தம் செய்துகொண்டன. தமிழ்நாட்டிற்குப் பன்னெடுங் காலமாக வழக்கமாகவே இருந்துவரும் பாசன உரிமைகள் மைசூரில் புதிதாகப் பாசனம் அளிக்கத் தண்ணீர் எடுக்கப்படுவதால் எவ்வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பதே இந்த ஒப்பந்தத்தின் மையப் பொருளாகும். இந்தக் குறிக்கோளை

எய்துவதற்காக, இரு மாநிலங்களுக்குத் தண்ணீர் தரும் வகையில் மைசூரிலுள்ள முக்கிய நதிகள் இன்னவையென்று குறிப்பிடப்பட்டன. இந்த நதிகளில் உள்ள தண்ணீரை மைசூர் அரசு தடுத்து நிறுத்தினால், தமிழ்நாட்டில் இப்போதுள்ள பாசன வசதிக்கு வேண்டிய நீர்ப் பெருக்கு வராது போகும். இந்த ஆறுகளில் இடையீடற்ற நீர்ப் பெருக்கு இருப்பது தமிழ் நாட்டிற்கு மிக மிக முக்கியம். இத்தகைய ஆறுகள் "பட்டியல் ஆறுகள்" என்று குறிப்பிடப்படுகின்றன. தமிழ் நாட்டின் இசைவும் ஒப்புதலும் இன்றி, இப்பட்டியல் ஆறுகளில் புதிய பாசனப் பணி எதையும் மைசூர் கட்டக்கூடாதென 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆறுகளில் புதிய பாசனப் பணி எதையேனும் மைசூர் அரசு கட்ட விரும்பினால், திட்டப் பணியின் முழு விவரங்களைத் தமிழ் நாட்டு அரசுக்கு மைசூர் அரசு கொடுக்க வேண்டும். அப்போதுதான், தமிழ் நாட்டிற்கு வழக்கமாக உள்ள பாசன உரிமைகள் புதிய பணியால் பாதிக்கப்படாது இருக்குமா என்பதைத் தமிழ்நாட்டு அரசு உறுதிப் படுத்திக்கொள்ள முடியும். எனவே, தமிழ்நாடு இசைவளித்தால் தான், மைசூர் புதிய பாசனப் பணிகளை மேற்கொள்ள முடியும். பன்னெடுங்காலமாக வழக்கமாக இருந்துவரும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவல்லாமல் மற்றப்படி தமிழ்நாடு இசைவு தர மறுக்கக்கூடாது என்றும் இந்த ஒப்பந்தத்தில் விதித்துறை உள்ளது. காவிரி நீர்ப் பள்ளத்தாக்கில் பட்டியலிட்டு அவ்வாறு வகைப்படுத் தப்படாத ஏனைய ஆறுகளில் இத்தகைய பாசனப் பணி கட்டுவதற்குக் குறிப்பான தடை எதுவும் விதிக்கப்படவில்லை என்றாலும், ஆற்றின் கீழ்ப் பகுதி மக்கள் என்ற முறையில் தமிழ் நாட்டு மக்களுக்குப் பன்னெடுங்காலமாக காவிரி நீர்ப்பாசன வசதி பெறுவதற்கு இருந்துவரும் உரிமைகளைப் பாதிக்கும் வகையில் மைசூர் எதையும் செய்யக்கூடாது என்பதே 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் உட்கிடைப் பொருளாகும்.

கிருஷ்ணராஜசாகர்—மேட்டூர் நீர்த் தேக்கங்கள்.—1909-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்த அரசு தமிழ்நாட்டிலே மேட்டூரில் காவிரிக்குக் குறுக்கே எதிரீட்டு நீர்த்தேக்கம் கட்டுவதற்காக இந்திய அரசுக்குச் செயற் குறிப்புகளை அனுப்பியது. இதனால், கயவாய்ப் பகுதியில் பாசன வசதியைச் சீர்படுத்தவும் முறைப்படுத்தவும் முடியும், இதனால், தண்ணீரை நல்ல வகையில் பயன்படுத்தவும் பாசன வசதியைத் திறம்பட முறைப்படுத்தவும் முடியும். இவ்வாறு தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதால், ஏற்கெனவே இருந்துவரும் பாசன உரிமைகளின்படிக்கான தண்ணீர் அளவுக்குள், காவிரி பாசன ஏற்பாட்டின்கீழ் கூடுதலாக 3 லட்சம் ஏக்கர் பரப்புக்குப் பாசன வசதி அளிக்கக் கருதப்பட்டது.

இதே சமயத்தில், மைசூர் மாநிலத்தில் காவிரியின்கீழ் பாசன வசதியை 1,25,000 ஏக்கருக்குப் புதிதாக அளிக்கவும் சிவசமுத்திரத்தில் மின்சக்தி எடுக்கவும் கிருஷ்ணராஜசாகரத்தில் காவிரியின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டத்தை மைசூர் அரசு வகுத்தது. இத் திட்டத்தின் விவரங்களைத் தமிழ்நாட்டு அரசுக்கு அனுப்பி 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்கீழ் தமிழ்நாட்டின் இசைவினைக் கோரியது மைசூர் அரசு. மைசூர் திட்டம் குறித்துக் கிடைத்த விவரங்களை ஆராய்ந்து பார்த்ததில், மைசூர் அரசு வகுத்



திருந்த திட்டம் 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மீறுகிறது என்றும், தமிழ்நாட்டிற்கு முறைப்படி உரித்தான தண்ணீர் வசதியை மோசமாகப் பாதிக்குமென்றும், அப்போதிருந்த தமிழ்நாட்டு அரசு கருதி, அத் திட்டத்திற்கு ஒப்புதலளிக்க மறுத்தது.

நீண்டகாலப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு, கிருஷ்ணராஜ சாகரம் கட்டுவது குறித்த தகராறு 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் ஏற்பாடு செய்துள்ளவாறு நடுவர் தீர்ப்புக்கு 1914-ல் விடப்பட்டது. நடுவராகிய ஸர் ஹென்றி கிரிப்பின், தமிழ் நாட்டிலே ஆண்டின் பற் பல மாதங்களில் கல்லணையில் குறிப்பிட்ட ஆழத்துக்குத் தண்ணீர் இருக்கும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் காவிரியில் தண்ணீர் விடுவதற்கு உட்பட்டு, கிருஷ்ணராஜசாகரத்தில் நீர்த் தேக்கம ஒன்றை மைசூர் அரசு கட்டுவது அனுமதிக்கப்படத் தக்கதே என்று தீர்ப்பளித்தார். இவ்வாறு தண்ணீர் விட்டு, குறிப்பிட்ட ஆழம் தண்ணீர் இருப்பதை உறுதிப்படுத்தினால், தமிழ்நாட்டில் காவிரி கயவாய்ப் பகுதியின் தலைப்புப் பகுதியாகிய கல்லணையில் தமிழ் நாட்டுப் பாசனத்திற்கு வேண்டிய அளவு தண்ணீர் இருக்கும். நடுவர் தீர்ப்பினை எதிர்த்து இங்கிலாந்திலுள்ள இந்தியா மந்திரிக்கு அப்போதைய தமிழ்நாட்டு அரசு மேல் முறையீடு செய்தது. காவிரித் தண்ணீர் குறித்த எத் தகராறிலும் கீழ்க்கண்ட கோட்பாடு களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஸர் ஹென்றி கிரிப்பின் வகுத்துவைத்தார்.

( ) தமிழ்நாட்டில் பாசன வசதி பன்னெடுங்காலமாகவே இருந்து வருகிறது. இனிமேல் மைசூரில் ஏற்பட இருக்கிற பாசன வசதி நீட்டிப்புக்கு எதிராக, தமிழ்நாட்டில் ஏற்கெனவே இருந்து வரும் உரிமைகளுக்கு முதலிடம் அளிக்கவேண்டும்.

(ii) பட்டியல் ஆறுகள் எதிலும் மைசூர் அரசு பாசன நீர்த் தேக்கம் கட்ட விரும்பினால், முழுமையான விவரங்களைத் தமிழ் நாட்டிற்குக் கொடுக்க வேண்டும். மைசூர் அரசு அவ்வாறு கொடுக்கத் தவறினால், முழு விவரம் கொடுக்கப்படவில்லை என்று காரணம் காட்டியே, தமிழ்நாடு அரசு அதற்கு இசைவு அளிக்க மறுத்து விடலாம்.

iii) உரிமை யாருக்கு உள்ளது என்ற ஐயப்பாடு எழுந்தால், அது குறித்துத் தமிழ்நாட்டிற்குச் சாதகமாகவே தீர்ப்பளிக்க வேண்டும். காவிரியின்கீழ் தமிழ்நாட்டிற்கு ஏற்கெனவேயுள்ள அதிக அளவிலான பாசன நலன்களைக் கருதிப் பார்த்து இவ்வாறு தீர்ப்பளிக்க வேண்டும்.

ஸர் ஹென்றி கிரிப்பின் அளித்த தீர்ப்பினைத் தள்ளிவிட வேண்டும் என்று இந்தியா மந்திரிக்குத் தமிழ் நாடு அரசு மேல் முறையீடு செய்தபின், உடன்பாடு காணுவதற்காக, மைசூர், தமிழ்நாடு அரசுகள் மீண்டும் கூடிப் பேசவேண்டும் என்று ஸர் ஹென்றி கிரிப்பின் கருத்தறிவித்தார். கிருஷ்ணராஜசாகரம் குறித்து உடன்பாடு ஏற்படுகிற வரையில் மேட்டூரில் காவிரியின் குறுக்கே நீர்த் தேக்கம் கட்டுவதற்கு இந்திய அரசு அனுமதி அளிக்க மறுத்தது, இது நிலைமையை மேலும் சிக்கலாகிவிட்டது. மேட்டூர் நீர்த் தேக்கத் திட்டம் மைசூரை எவ்வகையிலும் பாதிக்காது என்றும், கூடுதலாக

தண்ணீர் எடுக்காமல், ஏற்கெனவே வழக்கமான உரிமையுள்ள நீர் வசதியைப் பயன்படுத்தவே மேட்டூர் நீர்த்தேக்கம் கட்டப்படுவதால் கிருஷ்ணராஜசாகர நீர்த் தேக்கம் குறித்துக் கருத வேண்டியதே யில்லை என்றும் இந்திய அரசுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. இருப் பினும், தமிழ்நாட்டு அரசின் இக் கருத்தினை இந்திய அரசு ஏற்க மறுத்துவிட்டது. கிருஷ்ணராஜ சாகரம், மேட்டூர் இரு இடங் களிலும் நீர்த்தேக்கம் கட்டுவது என்ற கூட்டு ஒப்பந்தம் ஒன்றை மைசூர், தமிழ்நாடு மாநிலங்கள் செய்து கொள்ளவேண்டுமென இந்திய அரசு விருப்பம் தெரிவித்தது.

மேலணையில் தமிழ்நாட்டிற்கு முறைப்படி உரிமையுள்ள தண்ணீர் வசதியைக் குறித்து நீண்ட நெடுங்காலமாக மைசூருடன் பேச்சு வார்த்தை நடத்தியபின், அந்த உரிமை அடிப்படையில் மட்டுமே கிருஷ்ணராஜசாகரம் அமைக்கப்படுவதற்கு இசைவு அளிக்கப்படும் என்றுகூறி, 1924-ஆம் ஆண்டில் மைசூரும் தமிழ்நாடும் ஒப்பந்தம் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தம் 1892-ஆம் ஆண்டு நிலையான ஒப்பந்தத்தின் இணைப்பு என்ற முறையிலேயே செய்துகொள்ளப் பட்டது.

1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம்.—1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளவை தவிர மற்றவற்றில் 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தமே செயல்படும் என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டு, செய்து கொள்ளப்பட்ட 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் முக்கியக் கூறுகளாவன:—

(1) ஒப்பந்தத்தில் விதித்துள்ள வகையில் தமிழ் நாட்டுப் பாசனத்துக்கு வேண்டிய நீர் வசதி முதற்கண் கண்டிப்பாகத் தரப்பட வேண்டும் என்ற நிலையான நிபந்தனைக்கு உட்பட்டு 1,25,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் அளிக்கும் வகையில் கிருஷ்ணராஜசாகரம் திட்டத்தை மேற்கொள்வதற்கு மைசூர் அனுமதிக்கப்பட்டது, தமிழ் நாட்டிற்கு வேண்டிய இத் தண்ணீர் வசதியை அளித்த பின்னரே கிருஷ்ணராஜசாகர நீர்த் தேக்கத்தில் நீரைத் தேக்கிவைக்கலாம் (அதன்பின் கிருஷ்ணராஜசாகர அணை கட்டப்பட்டு, இவ்விதிகளின் படிச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.)

(2) மேட்டூர் திட்டத்தின்கீழ் மேற்கொண்டும் 3 லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்க மேட்டூர் நீர்த் தேக்கம் கட்டு வதற்கு 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 10 (iv) பகுதியின்கீழ் தமிழ் நாடு அனுமதிக்கப்பட்டது.

(3) கிருஷ்ணராஜசாகரம் தவிர காவிரியின் கீழும் அதன் பட்டியல் ஆறுகளின்கீழும் 4,500 கோடி கன அடி நீர் கொள்ளும் வகையில் நீர்த் தேக்கங்கள் கட்டி 1,10,000 ஏக்கர் பரப்புக்கு மேற் கொண்டு பாசன வசதி அளிப்பதற்கு ஏற்பாடு செய்ய மைசூர் அரசு அனுமதிக்கப்பட்டது. இதுவும், கிருஷ்ணராஜசாகரம் கட்ட வேண்டுமானால், விதிகளின் கீழும் ஒழுங்குமுறைகளின்படியும் தமிழ் நாட்டிற்கு உரித்தமான தண்ணீர் வசதியை எவ்வகையிலும் பாதிக்கவோ குறைக்கவோ கூடாதென்கிற கண்டிப்பான நிபந் தனைக்கு உட்பட்டதாகும். இதை உறுதிப்படுத்துவதற்காக, மைசூர் பாசனப் பணித் திட்டத்தின் முழு விவரங்களையும் தமிழ்நாட்டிற்கு



அளிக்கவேண்டும். அப்போது தான் தமிழ்நாடு மேற்கூறியதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். சில ஒழுங்குமுறை ஏற்பாடு களின்கீழ் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் விதித்துள்ளபடி தமிழ் நாட்டிற்கு உறுதியாகத் தரவேண்டிய தண்ணீர் அளவு "வரையறைப் பெருக்கு" (limit flows) எனக் குறிப்பிடப்படுகிறது. எனவே, இந்த வறையறைப் பெருக்கு, கிருஷ்ணராஜசாகரம் மட்டும் செயல் பட்டு வந்த காலத்தில் தமிழ்நாடு பெற்று வந்த தண்ணீர் அளவாகும்.

(4) தமிழ்நாட்டில் பவானி, அமராவதி அல்லது நொய்யல் போன்ற காவிரியின் கிளை ஆறுகளுக்குக் குறுக்கே நீர்த் தேக்கம் ஒன்றைக் கட்டினால், தமிழ்நாட்டில் கட்டப்படும் நிர்த் தேக்கத்தின் 60 சத வீதத் திறனுள்ள எதிரீடு நீர்த்தேக்கம் ( Offset Reservoir ) ஒன்றைக் கட்டுவதற்கு மைசூர் அரசுக்கு உரிமை உண்டு. ஆனால், மேற்படி ஒப்பந்தத்தில் முற்சொல்லப்பட்டுள்ள பகுதிகளின்கீழ் தமிழ் நாட்டுக்கு அல்லது மைசூருக்குச் சேர வேண்டிய நீரின் அளவு எவ்விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது.

1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி மைசூரும் தமிழ் நாடும் முறையே கிருஷ்ணராஜசாகர் நீர்த் தேக்கத்தையும், மேட்டூரில் ஸ்டான்லி நீர்த் தேக்கத்தையும் கட்டின. ஆனால், மைசூர் அரசு அதன் பின்னர் உடனடியாக, மேலே 3-ஆவது நிபந்தனையில் கூறி யுள்ளபடி, எதிரீடு நீர்த் தேக்கங்கள் மூலமாக 4,500 கோடி கன அடி நீர் ( 45 T. M. C. ) வரையில் 110,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கத் தவறியது. தமிழ்நாடு பவானி, அமராவதி ஆறுகளின் குறுக்கே நீர்த் தேக்கங்களைக் கட்டியது.

(5) 50 ஆண்டுகள் கழிந்தவுடன் அதாவது 1974-ல் மைசூர், தமிழ்நாடு ஆகியவற்றின் பாசன வசதிகள் விரிவு படுத்தப்பட்டமை குறித்து 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் சில பகுதிகளை மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டதற்கு மேல், மைசூர், தமிழ் நாட்டில் மேற்கொண்டும் பாசன வசதிகளை விரிவுப்படுத்துவதற்காக உபரி நீரைப் பயன்படுத்துவது குறித்த 4 முதல் 8 வரையில் உள்ள பகுதிகள் மறு ஆய்வு செய்யப்படுவதற்குட்பட்டவையாகும். பரஸ் பரம் ஒப்புக்கொள்ளத்தக்க அடிப்படையில் ஒப்பந்தத்தைச் செயல் படுத்துகையில் நடைமுறையில் கிடைத்த அனுபவத்தின் அடிப்படை யிலும் மேற்சொன்ன மறு ஆய்வு செய்யப்படும். இவ்வாறாக, இவ் வொப்பந்தம் 1924-ஆம் ஆண்டிலிருந்தே 50 ஆண்டுகள் முடிவடை கையில் செயல்திறனற்றுப் போவதில்லை. ஆனால், அப்போது இருக்கக்கூடிய உபரி நீரைப் பயன்படுத்தி பாசனத்தை மேற் கொண்டும் விரிவுப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை மறு ஆய்வு செய்வதுபற்றியே இந்த ஒப்பந்தம் 50 ஆண்டுகளுக்குப் பிறகு பரிசீலனை செய்யப்படும்.

மைசூருடன் தமிழ்நாட்டுக்குள்ள தகராறு.—மைசூர் அரசு, தமது பகுதியில் உள்ள, பட்டியல் ஆறுகளின் குறுக்கே சில பெரிய பாசனத் திட்டங்களை அமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. அவர்களது திட்டங்கள் பொதுவாக மூன்று வகைப்படும்.

(a) 4,500 கோடி கன அடி வரை கொள் அளவுள்ள நீர்த் தேக்கங்களின் மூலம் 110,000 ஏக்கர் பரப்பளவு நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பது குறித்து 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் 4-ஆவது பகுதியின்கீழ்ப் பாசன வசதியை விரிவு படுத்துவதற்கான நீர்த் தேக்கங்கள், இப் பகுதியின்கீழ் ஹேமாவதித் திட்டம் மைசூர் அரசால் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

(b) தமிழ்நாட்டின் பவானி, அமராவதித் திட்டங்களுக்குப் பதிலாக அந்த நீர்த் தேக்கங்களின் திறனில் 60 சத வீதம் வரை திறனுள்ள எதிரீடு நீர்த் தேக்கங்கள். இத் திட்டங்கள் மைசூர் அரசினால் கபினி, சுவர்ணவதி ஆறுகளின் குறுக்கே கட்டப்பட்டு வருகின்றன.

(c) மைசூரில் பட்டியலின்கீழ் வராத ஆறுகளிலிருந்து (அதாவது பட்டியலின்கீழ் வகைப்படுத்தப்படாத ஆறுகள்) வரன் முறையற்ற வகையில் விரிவுப்படுத்தப்படும் பாசன வசதிகள் 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் இந்த ஆறுகளைப்பற்றி ஒன்றும் சொல்லப் படாததைக் காரணமாகக் காட்டி தமிழ்நாட்டிற்கு உத்தரவாதமாகக் கிடைக்கக்கூடிய வரையறைப் பெருக்கு அளவிற்கு நீர் விடவேண்டிய கடமையையும் புறக்கணித்து மைசூர் அரசு இத்தகைய செயல்புரிந்து வருகிறது.

இத் திட்டங்கள் மைசூர் அரசினால் தமிழ்நாடு அரசின் இசைவின்றியும் இந்திய அரசின் தொழில் நுட்ப ஒப்புதலைக் கூடப் பெறுமலும் கட்டப்பட்டு வருகின்றன. திட்ட ஆணைக்குழு அமைக்கப் பட்டதிலிருந்தும் மத்திய மாநில அரசுகளிடையே தற்போது உள்ள நிர்வாக ஏற்பாட்டின்கீழும், பெரும் பாசனத் திட்டம் எதுவும், குறிப்பாக மாநிலங்களுக்கிடையே சிக்கல்களை விளைவிக்கக்கூடிய திட்டம் எதுவும் திட்ட ஆணைக் குழு, இந்திய அரசு ஆகியவற்றின் தொழில் நுட்ப ஒப்புதலைப் பெறுமல் நிறைவேற்றப்படக் கூடாது.

இத் திட்டங்கள் குறித்து, அடிப்படைச் சிக்கல்கள் பற்றிய கருத் தொருமைப்பாடு எதுவுமின்றி பல ஆண்டுகளாகக் கடிதப் போக்கு வரத்து நடந்துவந்த போதிலும் மைசூர் அரசு 1961 முதற்கொண்டே இத்திட்டங்களை முனைந்து நிறைவேற்றத் தொடங்கியது. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்கீழ் மைசூருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பாசன விரிவுப்பணிகள் தமிழ்நாட்டிற்குச் சேரவேண்டிய குறைந்த அளவு நீர் கட்டாயமாக விடப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட் பட்டவையாகும், குறைந்த அளவுத் தண்ணீர் விடப்படவேண்டு மென்பது 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் உத்தரவாதமளிக்கப் பட்டுள்ளது. தமிழ்நாட்டின் பாசன உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படை விதி யாகும். 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1892-ஆம் ஆண்டு ஒப்பந் தத்தின் பிற்சேர்க்கையாகும் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. மைசூர் அரசு கிருஷ்ணராஜசாகர் நீர்த் தேக்கம் கட்டுவதற்கு தமிழ் நாடு அரசு 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்கீழ் இசைவளித்தது. 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 3-ஆவது பகுதியின் கீழும் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழும் மேற்சொன்ன இசைவு அளிக்கப் பட்டது. 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 3-ஆவது பகுதி தமிழ் நாட்டிற்குப் பன்னெடுங்காலமாக உள்ள பாசன உரிமைகளைப்



பாதுகாக்க வகை செய்கிறது என்பது இதிலிருந்து புலனாகிறது. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒருபடி அதிகமாகவே சென்று 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள வாலாயமான உரிமைகளை அளவிட்டு வரையறுத்துள்ளது. 110,000 ஏக்கர் பரப் பளவுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி வழங்குவதற்காக 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் 10 (iv) பகுதியின்கீழ் மைசூர் அரசு ஹேமா வதித் திட்டத்தைக் கட்டுவதற்குமுன் தமிழ்நாட்டிற்குச் சேர வேண்டிய குறைந்த அளவு நீர் கண்டிப்பாக அனுமதிக்கப்பட வேண்டும் என்று வரையறுக்கும் நிபந்தனைகள் முதலில் நிறைவு செய்யப்பட வேண்டுமென்று தமிழ்நாடு மீண்டும் மீண்டும் தெளிவு படுத்தியுள்ளது. மைசூர் அரசு இந்த உத்தரவாதங்களை அளிக்க ஒப்புக்கொள்ளவில்லை. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் சொல்லி யுள்ளவாறு தமிழ்நாட்டின் பாசன உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வரையறுக்கும் ஒப்பந்தத்தைச் செயல்படுத்தும் வகையில் ஹேமாவதித் திட்டம் பற்றிய முழு விவரங்களையும் கொடுக்கவில்லை. மேலும் ஹேமாவதி நீர்த் தேக்கத்தின் நடை முறை விதிகளுக்கும் மைசூர் இணங்கவில்லை. தமிழ்நாட்டிற்குச் சேர வேண்டிய நீர் எவ்வாறு பாதிக்கப்பட்டாலும் கவலை கொள்ளாமலே ஹேமாவதி நீர்த் தேக்கப் பணியைத் தொடர்ந்து நிறைவேற்றத் தனக்கு உரிமை உண்டென மைசூர் சொல்வதாகத் தெரிகிறது.

கபினி, சுவர்ணவதி திட்டங்கள் பற்றிய விவரங்களையும் மைசூர் அரசு கொடுக்கவில்லை. தமிழ்நாட்டின் பாசன உரிமைகள் பாதிக்கப் படும் என்ற கவலையில்லாமல் மைசூர் அரசு இத்திட்டங்களைத் தன் போக்கில் நிறைவேற்றி வருகிறது. நமது பாசன உரிமைகள் எந்த விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டே இந்த நீர்த் தேக்கங்களுக்கு 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டது என்பது தமிழ்நாட்டின் வாதமாகும். இந்த அடிப்படைத் தேவை நிறைவேற்றப்படாவிடின், மைசூர் அரசு இப் பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றக் கூடாது என்பது தமிழக அரசின் கருத்தாகும். பட்டியலில் வராத ஆறுகளைப் பொறுத்த வரையில், மைசூர் அரசு இந்த ஆறுகளிலிருந்து தன் மனம் போன போக்கில் பாசன வசதிகளைச் செய்து கொள்ளலாம் என்பது 1892, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின் கருத்தல்ல என்பதைத் தமிழ்நாடு அரசு சுட்டிக் காட்டியுள்ளது. "வரையறுக்கப்பட்ட நீர்ப் பெருக்கு" தமிழ்நாட்டிற்குக் கட்டாயமாக அளிக்கப்பட வேண்டும் என்ற வாலாய உரிமைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். தமிழ் நாட்டிற்குச் சேர வேண்டிய நீர், பட்டியலில் சேர்ந்துள்ள ஆறு களிலிருந்தும் பட்டியலில் சேர்க்கப்படாத ஆறுகளிலிருந்தும் கிடைக்கின்றது. பின்னர் சொல்லப்பட்ட ஆறுகள் முன்னர் சொல்லப்பட்ட ஆறுகளின் கிளைகளாகும். பட்டியலில் சேர்க்கப் படாத ஆறுகளில் அணை கட்டினால் அது பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ள ஆறுகளின் போக்கைக் கண்டிப்பாகப் பாதிக்கும். இதனால் மொத்தமாகப் பார்க்குமிடத்து தமிழ்நாட்டிற்குச் சேர வேண்டிய நீரின் அளவு பாதிக்கப்படுகிறது. மைசூர் அரசு தன் போக்கில்

அணைகள் கட்டுவதனால் ஏற்படும் விளைவு இது என்பது மறுக்க முடியாததொரு உண்மையாகும். ஆயினும், மைசூர் அரசு இந்த உண்மையை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டது.

காவிரியின் கிளை ஆறாகிய ஹாரங்கியில், மைசூர் அரசு தற்போது கட்டி வரும் பெருந் திட்டத்தை இங்கு குறிப்பிட வேண்டும். இந்த ஆறு முதலில் குடகு மாநிலத்தில் இருந்தது. குடகு மாநிலம் 1892, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திடவில்லை. இத் திட்டத்தினால் ஏறத்தாழ 75,000 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி விரிவு படுத்தப்படுகின்றது. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 10 (iv) பகுதியில் மைசூரில் காவிரி அதன் கிளை ஆறுகளின் கீழ் பாசன வசதி அளிக்கப்பட்டுள்ள பரப்பளவிற்கு இது நிகரான பரப்பளவாகும். ஹாரங்கி நீர்த் தேக்கத் திட்டம் நிறைவேற்றப் படின், தமிழ்நாட்டிற்கு வரும் நீரின் அளவு பாதிக்கப்படும். ஹாரங்கி ஆறு 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் திட்டவட்டமாகச் சேர்க்கப் படாததால், அது பட்டியலில் சேர்க்கப்படாத ஆறாகும் என்பது மைசூர் அரசின் வாதமாகும். நாம் முன்னரே சுட்டிக்காட்டியதைப் போல, ஹாரங்கி 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட சமயத்தில் அப்பொழுதிருந்த குடகு மாநிலத்தில் இருந்தது. எனவே மைசூர், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் அப்போது செய்துகொண்ட ஒப்பந்தத்தின் செயல் வரம்பிற்குள் அது வராது. ஹாரங்கி ஆற்றிலிருந்து காவிரிக்குக் கணிசமான நீர் வருவதால் அதனைப் பட்டியலில் சேர்க்கப்பட்ட ஆறாகவே கருதவேண்டும்.

பட்டியலில் சேர்க்கப்படாத ஆறுகளின் குறுக்கே மைசூர் அரசு மேற்கொண்டுள்ள ஹாரங்கி திட்டத்தையும் பிற திட்டங்களையும் கருதிப் பார்க்கும்போது, இந்த ஆறுகளின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்கள் வரன்முறையின்றி விரிவடைந்தால் தமிழ்நாட்டின் பாசன உரிமைகள் பாதிக்கப்படும் என்றும் தமிழ்நாட்டிற்குச் சேரவேண்டிய வரையறுக்கப்பட்ட நீர் கிடைக்காது என்றும் தமிழ்நாடு அரசு அச்சம் தெரிவித்துள்ளது.

மேலும், பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ஆறுகளில் நீர்த் தேக்கம் கட்டுவதன் மூலமாகத் தேக்கிவைக்கப்படும் நீரின் அளவு 4,500 கோடி கன அடி என்றும், பாசனப் பரப்பளவு 1,10,000 ஏக்கர் என்றும் வரையறுக்கப்பட்டு தமிழ் நாட்டிற்கு அனுமதிக்கப்படும் வரையறை நீர்ப் பெருக்கினை 5 சதவிதத்திற்குமேல் மைசூர் நீர்த் தேக்கங்களில் நீரைத் தேக்கி வைக்குமாறு நிபந்தனை இருக்கும்போது 2,39,000 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களுக்குப் பாசனம் அளிப்பதும் 5,480 கோடி கன அடி நீரைத் தேக்கி வைப்பதும் பட்டியலின் கீழ் சேர்க்கப்படாத ஆறுகளின் கீழ் கண்டிப்பாக அனுமதிக்கப்படக் கூடாது. பட்டியலின்கீழ் வராத ஆறுகளில் ஆயக்கட்டுப் பரப்பளவை அதிகரிப்பது என்பது உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும்.

நமக்கு இதுவரை தெரிந்துள்ள வரை மைசூர் அரசு நிறைவேற்றக் கருதியுள்ள் செயற்குறிப்புகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு பார்த்தால், காவிரிப் பள்ளத்தாக்கில் தேக்கப்படும் நீரின் மொத்த





அளவு ஆயக்கட்டு மேம்பாடு குறித்த விவரங்கள் பின் வருவனவாக அமையும் :—

| | திட்டத்தின் பெயர். | ஆயக்கட்டு. (ஏக்கர்கள்.) | தேக்கப்பட்ட நீரின் அளவு. (மி.க. அடி) |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | ஹேமாவதித் திட்டம் .. .. | 1,00,000 | 21,700 |
| 2 | ஹாரங்சி திட்டம் .. .. | 75,000 | 15,800 |
| 3 | கபினித் திட்டம் .. .. | 1,26,000 | 60,000 |
| 4 | சுவர்ணவதித் திட்டம் .. .. | 7,000 | 3,400 |
| | | 3,08,000 | 1,00,900 |
| | பட்டியலில் சேர்க்கப்படாத ஆறுகளில் கட்டப்பட்டுவரும் பணிகள்— | | |
| (a) | முடிக்கப்பட்டுள்ள் பணிகள் .. | 1,05,000 | 24,600 |
| (b) | நிறைவேறி வரும் பணிகள் .. | 9,900 | 2,000 |
| (c) | நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ள பணிகள். | 1,24,000 | 28,100 |
| | மொத்தம் .. | 5,46,900 | 1,55,600 |

கடந்த சில ஆண்டுகளாக, குறிப்பாக 1961-ம் ஆண்டிற்கு பிறகு இந்தச் சிக்கலுக்குத் தீர்வுகாண தமிழ்நாடு மைசூர் அரசுடன் முனைந்து பேச்சுவார்த்தை நடத்திவந்த போதிலும், இதற்குத் தீர்வு காண வழி இருப்பதாகத் தெரியவில்லை. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதைப்பற்றி மைசூர் அரசு தீர்மான முடிவு ஒன்றுக்கு 1960-ஆம் ஆண்டிலிருந்தே வந்திருப்பதே இதற்குக் காரணமாகும். தமிழ்நாட்டிற்குக் குறைந்த அளவு நீர் வழங்கப்பட வேண்டிய தேவையே அவசியமில்லை என்று அவர்கள் வாதித்ததுடன் மைசூரில் பாசனத்தை விரிவுபடுத்துவதற்கான பணிகளையும் நிறைவேற்றி அதன் மூலம் அனுமதிக்கப்படும் நீரின் அளவையே குறைக்கும் நிலைக்கு வந்துள்ளது.

இத் தடைகளைக் களைவதிலும், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மைசூர் அரசிற்குள்ள கடமைகளை நிறைவேற்றும் வகையில் மைசூர் திட்டங்களின் விவரங்களை வகுப்பதிலும் மைசூர் அரசுக்கு உதவ தமிழ்நாடு அவ்வப்போது முன்வந்தது. ஆனால், மைசூர் அரசு இந்த உதவியை ஏற்க முன்வரவில்லை.

இதற்கிடையில் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள, காவிரியின் கிளை ஆறுகளின் குறுக்கே ஹேமாவதி, கபினி நீர்த் தேக்கத் திட்டங்களை மைசூர் அரசு முனைந்து நிறைவேற்றத் தொடங்கியுள்ளதாகத் தெரிய வந்தது. இத் திட்டங்களைப் பற்றிய முழு விவரங்களும் தமிழ் நாட்டுக்கு அனுப்பப்படவில்லை. 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் குறிப்பிட்டுள்ளபடி தமிழ்நாட்டின் இசைவும் பெறப்படவில்லை. மேலும் இத்திட்டங்களுக்கு மத்திய நீர்–மின்சக்தி ஆணைக் குழுவின் தொழில் நுட்ப ஒப்புதலும் கிடைக்கவில்லை. ஆயினும், மைசூர் இத் திட்டங்களை நிறைவேற்றத் தொடங்கியுள்ளது. இந்திய அரசின்

ஒப்புதலுடனோ ஒப்புதலின்றியோ, தமிழ் நாட்டுக்குத் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளை, 1892, 1924-ஆம் ஆண்டுகளின் ஒப்பந்தங்களை அறவே புறக்கணித்து மைசூர் அரசு இத் திட்டங்களைத் தன் போக்கில் நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது என மைசூர் அரசு பத்திரிகைகளில் வெளியிடும் அறிக்கைகளிலிருந்தும் அவர்களது சட்ட மன்றப் பேரவையில் வெளியிடும் அறிக்கைகளிலிருந்தும் தெளிவாகத் தெரிந்தது.

1968 ஆகஸ்ட் திங்களில் அமைச்சர் நிலையில் நடந்த மாநாடு.

இரு மாநிலங்களுக்கிடையேயும் இச் சிக்கல் குறித்து நிலையான தீர்வு ஏற்படுவதற்காக மத்தியப் பாசன மின்சக்தி அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் 1968 ஆகஸ்ட் திங்களில் மாநாடு ஒன்றைக் கூட்டினர். இம் மாநாட்டில் தமிழகத்தின் தற்போதைய முதல் அமைச்சரும் அப்போது மைசூர் முதலமைச்சராக இருந்த திரு. வீரேந்திர பட்டீல் அவர்களும் கலந்து கொண்டனர். ஆயினும் டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் ஹேமாவதித் திட்டம் பற்றியே விவாதம் நடத்தப்பட வேண்டுமென்ற வரையறையை விதித்தார். கபினி, சுவர்ணவதி, ஹாரங்கி திட்டங்கள் பற்றிய சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் பின்னரே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று அவர் நிபந்தனை விதித்தார். டில்லியில் நடந்த விவாதத்தின்போது 1892, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின் வரையறைக்குள் விவாதம் நடத்தப்படுவது சாத்தியமாக இருப்பதற்காக மைசூர் தமிழ்நாட்டிற்கு ஆற்றவேண்டிய கடமைகளை ஒத்துக் கொள்வதாக மைசூர் முதலமைச்சர் கருத்துத் தெரிவித்தார். ஹேமாவதி நீர்த் தேக்கத்தின் செயல் முறையை கிருஷ்ணராஜசாகர் திட்டத்துடன் சேர்த்து அவற்றிற்கான விதி முறைகளையும் நீர்த் தேக்க அளவையும் கூட மாநாடு விவாதிக்க முற்பட்டது.

இந்த விவாதங்களின்போது அழைக்கப்பட்ட ஆலோசனைகளை யொட்டி ஹேமாவதித் திட்டத்தின் விவரங்களை மேற்கொண்டும் வகுக்கப்பட வேண்டும் என்றும், ஆற்றின் நீர்ப் பெருக்கை இரண்டு மாநிலங்களும் சேர்ந்து கணிக்க வேண்டும் என்றும் விவாதங்களின் இறுதியில் ஒப்புக்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு இத் திட்டத்திற்குத் தமது இசைவளிக்கும் முன்னர் சில முக்கியமான விளக்கங்களும் உறுதிமொழிகளும் தனக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது. இச்சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்குரிய வாய்ப்புகள் மிக அருகில் இருப்பதாகவே அந்நிலையில் தோன்றியது.

இந்த விவாதங்களுக்குப் பிறகு, மைசூர் முதலமைச்சர் டில்லியிலிருந்து திரும்பி வந்தவுடன், பத்திரிகை நிருபர்களிடம் கூறியவை மிகவும் துரதிர்ஷ்டவசமானவையாகும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள வேண்டியுள்ளது. மத்திய அரசின் இசைவு பெற்றோ அல்லது பெறாமலோ ஹேமாவதி திட்டத்தை மைசூர் நிறைவேற்றும் என்று அவர் அறிவித்தார். மைசூர் சட்டமன்றப் பேரவையில் செய்யப்பட்ட அறிக்கைகள், மைசூர் முதல் அமைச்சரின் போக்கினை மேலும் உறுதிப்படுத்தின. மேலும், 1968 ஆகஸ்ட் திங்களில் ஹேமாவதி திட்டம் குறித்து புதுடில்லியில் நடத்தப்பட்ட விவாதங்களையொட்டி இம் மாநிலம் வேண்டிய உறுதி மொழிகளையும்



விளக்கங்களையும் மைசூர் அரசு தெரிவிக்கவுமில்லை. இதற்கிடையில், ஹேமாவதியில் மட்டுமின்றி, தகராறில் உள்ள பிற மைசூர் திட்டங்கள் குறித்தும் ஒருதலையாக மைசூர் அரசு பணிகளை அவசர அவசரமாக மேற்கொண்டது: அதாவது கபினி, ஹாரங்கி, சுவர்ணவதி ஆகிய திட்டங்களும் மைசூர் அரசால் மேற்கொள்ளப்பட்டன. இத் திட்டங்கள் குறித்து தனியாகப் பின்னர் விவாதங்கள் நடத்தப்படும் என்று மத்திய அமைச்சர் கூறியிருந்துங்கூட, மைசூர் அரசு செவி சாய்க்கவில்லை. இத் திட்டங்கள் பற்றிய விவரங்கள்கூட தமிழ் நாட்டிற்கு அனுப்பப்படவில்லை. இன்னும் மோசமான நிலை என்னவெனில், மைசூர் அரசு தனது வசதிக்கும் தன்போக்கான நலன்களுக்கும் ஏற்றபடி இத்திட்டங்களின் கொள்ளளவுகளை அவ்வப்போது மாற்றியமைத்து வந்தது.

தமிழ்நாடு இது குறித்து இந்திய அரசுக்கு அறிவித்தது. தீர்வு காணப்படுகிற வரையிலாவது, இதில் தலையிட்டு, இத்திட்டங்கள் குறித்த பணிகளை நிறுத்திவைக்க ஏற்பாடு செய்யுமாறு இந்திய அரசு வேண்டப்பட்டது: மாநிலங்களுக்கிடையிலான ஒப்பந்தங்களை மீறும் வகையில் இத் திட்டங்களை நிறைவேற்ற மைசூர் அரசு முனைவது முறைகேடான செயல் என்பதுடன், இம் மாநிலத்திற்கு காவிரித் திட்டத்தின்கீழ் உள்ள பாசன நலன்கள் பெரிதும் பாதிக்கப்படுவதற்குக் காரணமாக அமையும். இரு மாநிலங்களாலும் நல்லெண்ணத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைப் பின்பற்ற வேண்டியதன் தேவையை மைசூர் அரசுக்கு இந்திய அரசு வலியுறுத்தி மைசூர் அரசு இத் திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றுவது தடுக்கப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டது. பத்திரிகை நிருபர்களிடமும், சட்டமன்றப் பேரவையிலும், மைசூர் முதல்வரும் பிற அமைச்சர்களும் அளித்த விளக்கங்கள் மத்திய அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டன. தமிழ்நாடு தொடர்பாக மைசூர் அரசுக்குள்ள பொறுப்புகளுக்குப் பொருத்தமான வகையில் இந்தப் பிரச்சினைகள் குறித்து இணக்கமான ஒரு தீர்வு காணவேண்டும் என்ற விருப்பத்தை அவர்களுடைய அறிக்கைகள் காட்டவில்லை என்பதுடன், அவ்வாறு தீர்வு காண்பதற்குச் சாதகமாகவும் அமையவில்லை. மத்திய அரசும் நல்லெண்ணத்துடன் இது குறித்து மைசூருடன் தொடர்பு கொண்டது. 1892, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்களைப் பின்பற்றுமாறு மைசூர் அரசை வேண்டிக்கொண்டு மைசூர் முதல்வருக்குத் தாம் எழுதப்போவதாகவும் மத்திய அரசு தமிழ்நாட்டிற்குத் தெரிவித்தது. மைசூர் அரசு அந்த ஒப்பந்தங்களை அனுசரித்து நடந்தால்தான் அவர்களது திட்டங்களுக்கு இசைவு அளிக்கப்படுவது குறித்து ஆலோசிக்கப்படும் என்றும் மத்திய அரசு குறிப்பிட்டது. இந்தியத் தலைமை அமைச்சரே தமிழ்நாட்டு முதல்வருக்கு எழுதிய நேர்முகக் கடிதத்தில் இந்தத் திட்டவட்டமான உறுதிமொழியை அளித்துள்ளார்.

எனினும், மத்திய அரசின் முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. மைசூர் அரசின் போக்கோ மேலும் மேலும் மோசமாகி வந்ததுடன் எதிர்த்து நடக்கும் வகையிலும் மாறியது. மைசூர் முதல்வர் மைசூர் சட்ட மன்றப் பேரவையில் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை வெளிப்படையாகக் குறை கூறினர். அதாவது,1972–73-ஆம் ஆண்டுக்குள்

[1971 சூலை 8

மைசூர்த் திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்படும் என்று அவர் தெளிவாகக் கூறினர். 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் மறு ஆய்வுக்கு வருவதற்கு முன்பு மைசூர் அரசு திட்டங்களை நிறைவேற்றிவிட்டு அவற்றைத் தமிழ்நாடு அரசும் மத்திய அரசும் ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ் நிலையை மைசூர் அரசு உருவாக்கி வருகிறது என்பது தெளிவாயிற்று.

மைசூர் அரசின் திட்டவட்டமான தப்பெண்ணப் போக்கு காரண மாகவும், பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கான வாய்ப்புகள் அறவே இல்லையென்று உணரப்பட்டதாலும், இத் திட்டங்களை மைசூர் அரசு ஒரு தலையாக நிறைவேற்றுவதால் தமிழ் நாட்டின் பாசன நலன்களுக்கு ஊறு விளையும் என்பதாலும், தமிழ் நாடு அரசு 1970 பிப்ரவரியில் 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடை யிலான நீர்த் தகராறுகள் சட்டத்தின் விதித் துறைகளின்கீழ், அச் சட்டத்தின்படி நியமிக்கப்படும் ஒரு நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு இத்தகராறை அனுப்ப வேண்டுமென்று இந்திய அரசுக்கு எழுத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனினும், இந்த நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் இப்பிரச்சினை குறித்துத் தீர்வு காண்பதற்காக மேலும் உள்ள வாய்ப்புகளை ஆய்வு செய்ய விரும்பி, முதலமைச்சர் நிலையில் மைசூருடன் உரையாடல்கள் நடத்த ஒப்புக்கொள்ளுமாறு தமிழ்நாடு அரசுக்கு இந்திய அரசு அறிவுரை கூறியது. மைசூர் அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதில் ஏதேனும் பொருள் இருக்க வேண்டுமானல் கீழ்க்கண்ட இரண்டு முன்நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியது இன்றியமையாதன என்று தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்குச் சுட்டிக் காட்டியது.

(a) மேற்கொண்டும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படும் வரை மைசூர் அரசு தனது திட்டங்கள் தொடர்பான பணியை நிறுத்த ஒப்புக்கொள்ள வேண்டும்.

(b) 1892, 1924-ஆம் ஆண்டு மாநில ஒப்பந்தங்களை அனுசரித்து நடப்பதாக மைசூர் அரசு உறுதியான வாக்குறுதியை அளிக்க வேண்டும்.

அதற்குப் பதிலளிக்கையில் இவ்விரு நிபந்தனைகளும் மைசூர் அரசுக்கு விதிக்கப்படும் என்றும், அப்பொழுதுதான் ஏற்கெனவே உள்ள மாநில ஒப்பந்தங்களின் செயல் வரம்புக்குள் மட்டும் மைசூர் அரசுடன் விவாதங்களை நடத்த இயலுமென்றும் தமிழ்நாட்டுக்கு இந்திய அரசு சுட்டிக் காட்டியது. அதன்மேல், இந்திய அரசுடன் ஒத்துழைப்பதற்காகவும், இருமாநிலங்களும் ஒன்றுக்கொன்று ஏற்கத் தக்க உடன்பாட்டைக் காண வேண்டியும் தமிழ்நாடு அரசு பேச்சு வார்த்தைகளுக்கு ஒப்புக்கொண்டது.

மத்தியப் பாசன—மின்சார அமைச்சரின் தலைமையில் தமிழ்நாடு, மைசூர், கேரளா முதலமைச்சர்களிடையே நான்கு முறை பேச்சு வார்த்தைகள் நடந்தன. தமிழ்நாட்டிற்குப் பின்வந்த மாநிலம் என்ற முறையில் காவிரி நீருக்கு கேரளாவும் உரிமை கொண்டாடியது என்ற காரணத்தை முன்னிட்டு, கேரள அரசு இந்த விவாதங்களில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டது.



1971 சூலை 8]

இந்தக் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும், தமிழ்நாடு முதல் அமைச்சர் மாநில ஒப்பந்தத்தின் விதித்துறைகளுக்குள் உயர்ந்த அளவுக்கு மைசூருடன் ஒத்துப்போவதற்கும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை யுடன் இருப்பதற்கும் முயன்றர். என்றலும், 1892, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின்கீழ் மைசூர் அரசு தனது பொறுப்புகளை முழுமையாக மறுத்ததால், உடன்பாடு எதையும் காண இயலவில்லை. இந்தக் கூட்டங்கள் எதிலும் அது முடிவுற்றபோது ஒப்புக் கொள்ளப் பட்ட நடவடிக்கைக் குறிப்புகளில்கூட கையொப்பமிட இயலவில்லை என்பது அப்போதைய அவல நிலைமையினைக் காட்டுகிறது.

1970 அக்டோபர் 27-ஆம் நாள் அன்று சென்னையில் இறுதிப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. இந்த நிலையில், பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காண்பது என்பது இயலுமா என்பதை மதிப்பிடும் பொருட்டு, இந்திய அரசு மத்தியச் சட்டத் துறைச் செயலாளரை அக் கூட்டத்திற்கு அழைத்திருந்தது. ஆனல், உடன் பாடு எதுவும் காணப்படுவதாக இல்லை. அதற்கு மாறக, கருத்து வேற்றுமைகள் அதிகரித்தன. இரு மாநிலங்களுக்கிடையிலான கருத்து வேற்றுமை தீர்க்க இயலாதனவென்று மத்திய பாசன-மின் சக்தி அமைச்சருக்குத் தெளிவாகியது. மாநாடு முறிந்தபிறகு மத்திய அமைச்சர், அவரது நிலையில் இத் தகராறு தீர்க்கப்படும் என்பது இயலாது என்று தாம் உணர்வதாகவும், எனவே பேச்சு வார்த்தை கள் முறிந்துவிட்டது பற்றித் தாம் மத்திய அரசுக்கு அறிவிக்கப் போவதாகவும் கூறினர்.

இந்த நிகழ்ச்சிகள் காரணமாக இப் பிரச்சினையை நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்குவிட இந்திய அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமென்று தமிழ்நாடு எதிர்பார்த்தது. பேச்சு வார்த்தை கள் பலனளிக்காத காரணத்தால் இப்பிரச்சினையை நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு விடவேண்டியதன் அவசியத்தை இந்திய அரசுக்கு முறையாக நினைவுபடுத்தப் பட்டது. இதற்கிடையில் மைசூர் தனது திட்டங்களை விரைவாக நிறைவேற்றிவருவதாகத் திடுக்கிடும் அறிக்கைகள் பெறப்பட்டன. மோசமாகி வரும் நிலைமையைக் குறித்தும் தமிழ் நாட்டின் பாசன நலன்களைப் பேண அவசர நடவடிக்கைகள் எடுப்பதற்கான தேவை பற்றியும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமை அமைச்சருக்கு எழுதினர். இந்த நிலையில், மேலும் ஒருமுறை கூடிப் பேச வேண்டுமென்று மைசூர் முதல்வர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் தெரிவித்த புதிய கருத்துபற்றி தமிழ்நாடு முதலமைச்சரின் கருத்துக்களைத் தலைமை அமைச்சர் அறிய விழைந்தார். மைசூர் அரசின் கருத்தைத் தமிழ்நாடு அரசு மறுத்தது. ஏனெனில், தமிழ்நாட்டின் இரண்டு அடிப்படைக் கோரிக்கைகளை ஏற்க மைசூர் அரசு மறுக்கிறது. அதாவது, இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரையில், இத் திட்டங்கள் தொடர் பான பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டும். 1892, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்களை அனுசரித்து நடப்பதாக மைசூர் அரசு வாக்குறுதி அளிக்க வேண்டும். மேற்கொண்டும் பேச்சுவார்த்தை கள் நடத்துவதால் எந்தப் பலனும் கிட்டாது என்று தமிழ்நாடு உணர்ந்தது. அவ்வாறு பேச்சுவார்த்தை நடந்தால் மைசூர் தனது திட்டங்களை விரைவாக முடிக்க அதற்கு அவகாசம் அளிப்பதேயாகும்.

தமிழ்நாடு முதல்வர், இந்த நிலைமை அவசர முக்கியத்துவம் வாய்ந்ததென்பதையும், பன்னெடுங் காலமாக நிலவும் பாசன நலன்கள் பாதிக்கப்படுவதையும் தலைமை அமைச்சருக்கு மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி வந்துள்ளார். இதுவரை இந்திய அரசிடமிருந்து மன நிறைவளிக்கும் பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இப்பிரச்சினை குறித்து தற்போது உண்மையாகவே கவலையும் அச்சமும் ஏற்படக் காரணம் உண்டு. ஏனென்றால், இத் தகராறைத் தீர்த்து வைக்க ஒரு நடுவர் மன்றத்தை நியமிக்க வேண்டுமென்று தமிழ்நாடு கேட்டுக்கொண்டு பதினெட்டுத் திங்களுக்கு மேலாகி விட்டது. இந்த இடைக் காலத்தில் மைசூர் தனது திட்டங்களை விரைவாக நிறைவேற்றி வந்துள்ளது. நடுவர் மன்றத்திற்கு இப் பிரச்சினையை விடுவதில் மேலும் தாமதமானால், மைசூர் அரசு தனது திட்டங்களை விரைவாக நிறைவேற்றி முடித்து விடும். அந்த நிலையில் நடுவர் மன்றம் நியமிக்கப்பட்டால், அதனுடைய ஆய்வு வரம்பு சுருக்கப்பட்டிருப்பதை அது உணரும். எந்தப் பிரச்சினை குறித்துத் தீர்ப்புக் கூற வேண்டுமோ அது அற்றுப் போய், நிறைவேற்றி முடிந்துவிட்ட ஒரு காரியத்திற்கு அது இசைவளிக்க வேண்டிவரும். அதனால் ஏற்படக்கூடிய துயரவிளைவுகள் சொல்லில் அடங்கா.

தமிழ்நாடு அரசால் வேண்டப்பட்ட நடவடிக்கை முறை, எல்லாத் தரப்பினரின் நலன்களையும் பாதுகாப்பதற்காக நியாயமானதும் கௌரவமானதும் நீதிக் கோட்பாடுகளுக்கு இணக்கமானதுமாகும். 1892, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின்கீழ் தமிழ் நாட்டுக்கு உரிய தனது பொறுப்புகளை மைசூர் ஒப்புக்கொண்டுள்ளதாக மைசூர் ஆளுநரே கருத்து தெரிவித்துள்ளார். ஆனால், மைசூர் மீண்டும் அதற்குள்ளாகவே தனது போக்கை மாற்றியுள்ளது.

மைசூர் அரசு தனது திட்டங்களை நிறைவேற்றி, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள நலன்களை அனுபவிப்பது இயலுவதற்காக மைசூருடன் ஒத்துழைக்க வேண்டுமென்பதே எப்போதும் தமிழ்நாட்டின் எண்ணமாகும். ஆனால், மாநிலங்களுக் கிடையிலான இரண்டு ஒப்பந்தங்களின் மூலம் உத்தரவாதமளிக்கப் பட்ட நீண்ட நாளைய பாசன நலன்கள் குறித்த மைசூர் அரசின் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. மைசூர் அரசின் திட்டங்களை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணம் தமிழ்நாட்டிற்கு எப்போதுமே இல்லை. மைசூர் மாநிலம் நலமுடன் வாழ வேண்டுமென்பதே தமிழ்நாட்டின் விருப்பம். சட்ட மன்றப் பேரவையில் நமது முதல்வர் பல தடவைகள் இதைத் தெளிவாக்கியுள்ளார். மைசூர், தான் நிறைவேற்ற இருக்கும் திட்டங்கள் பற்றிய முழுத் தகவல்களைத் தமிழ்நாட்டிற்குக் கொடுக்காமலும், நமது இசைவைப் பெறுமலும், திட்ட ஆணைக்குழுவிட மிருந்தும் இந்திய அரசிடமிருந்தும் ஒப்புதலைப் பெறுமலும் அத் திட்டங்களை மைசூர் தன்போக்கிலும் எதிர்க்கும் வகையிலும் நிறைவேற்றி வருவதைத்தான் தமிழ்நாடு அரசு ஆட்சேபிக்கிறது.

இப்பிரச்சினையில் தமிழ்நாட்டை ஒரு தரப்பினராகக் கூட ஏற்பதற்கு மைசூர் அரசு தயாராக இல்லை என்பது தற்போதைய நிலையாகும். இது மிகவும் கவலை அளிப்பதொன்றாகும். உண்மையில்





எந்தத் தகராறுமே இல்லையென்று கூட மைசூர் கூறுகிறது. மைசூர் மாநிலத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் வேண்டுவ தெல்லாம் தங்களது திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டுமென்பதே என்றும், தமிழ்நாட்டை அவர்கள் அது குறித்துக் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் அப்போதைய மைசூர் முதல்வர் கூறியுள்ளார். இந்தப் பிரச்சினை குறித்து மைசூரின் மனப்போக்கு இவ்வாறு இருப்பின், இப்பிரச்சினை குறித்துத் தீர்வு காண வாய்ப்பில்லை என்பதுடன், பரஸ்பரப் பேச்சு வார்த்தைகளால் எந்தவிதப் பலனும் கிட்டாது என்பதும் நாம் உடனே உறுதியாக உணர்ந்துகொள்ளலாம்.

பன்னெடுங்காலமாகவே, அதாவது, முற்காலச் சோழர்கள் ஆட்சிக் காலத்திலிருந்தே காவிரி ஆற்றின் பாசன நலன்களை தமிழ்நாடு துய்த்து வருவதனால் அதில் தமிழ்நாட்டிற்கு உரிமையுண்டு. இவ்வுரிமை, வாலாயமாகப் பலன் துய்த்து வந்தவர்கள் என்பதாலும் கீழ்ப்பகுதிகளில் நிர்ணய ஆற்றுநீர் உரிமைகளைப் பெற்றிருந்தவர்கள் என்பதாலும் மேலும் உறுதிப்படுகின்றது. மைசூர் திட்டங்கள் கட்டி முடிக்கப்பட்டால், தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் நீரின் அளவு குறைந்துவிடும். சுமார் 160 கோடி கன அடி நீர், அதாவது, ஆண்டுதோறும் பாசனத்திற்காக தற்போது நாம் பெற்றுவரும் அளவில் பாதிக்கு மேலாகக் குறைந்துவிடும். இதன் விளைவாக தமிழ்நாட்டில், முக்கியமாக, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ள 5 லட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் வறண்டு போய்விடும். மேலும், கயவாய்ப் பகுதிகளில் வேளாண்மைப் பணிகளைத் தொடங்குவதில் பெரிதும் தாமதமேற்படும். நவீன வேளாண்மை முறைகள், ஆராய்ச்சி இவற்றின் மூலம் இரு போக விளைச்சல் திட்டம் படிப்படியாக நீட்டிக்கப்பட்டு வருகிற இந்த நேரத்தில், ஒரே ஒரு போகம் மட்டுமே தமிழ்நாட்டு உழவர்கள் விளைவிக்க வேண்டிவரும். அப்போது, பசுமைப் புரட்சி அதன் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டுவிடும். தமிழ்நாட்டு நெற்களஞ்சியம் என்று புகழப்படும் தஞ்சை மாவட்டமானது முற்றிலும் நசித்துப் போய்விடாவிட்டாலும் அதற்குப் பன்னெடுங் காலமாகக் கிடைத்துவரும் விளைச்சல் குன்றிவிடும்.

எனவேதான, காவிரி நீர்ப் பிரச்சினை குறித்துத் தமிழ்நாடு பெரிதும் கவலையும் கலக்கமும் கொண்டுள்ளது என்பதில் வியப்பில்லை. இந்தப் பிரச்சினை இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், அதன் வாழ்வுப் பிரச்சினையாகும். மைசூர் நலமுடன் வாழ வேண்டும் என்று விழையும் அதே நேரத்தில், தமிழ்நாடு பன்னெடுங் காலமாக அனுபவித்து வந்ததால் உறுதிப்படுத்தப்பட்டு, ஒரு ஒப்பந்தமல்ல, இரு ஒப்பந்தங்களால் முழு நிறை ஒப்புதல் அளிக்கப் பட்ட தனது நியாயமான உரிமைகளைக் கட்டிக்காத்துக்கொள்ள விரும்புகிறது.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1971 ஜூலை 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### துவக்கப் பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகள்

* 170 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளுக்கு வானொலிப் பெட்டி வாங்கித் தரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சு. துரைசாமி: வானொலி நிகழ்ச்சிகள் இளைஞர்களுக்கு நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்வதன் மூலம் அவர்களுக்கு ஊக்கம் ஊட்டக்கூடிய முறையில் இருப்பதால் ஆரம்பப் பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வாங்கிக் கொடுக்க அரசு உதவி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வானொலிப் பெட்டியில் இன்றியமையாமையை அரசு உணருகிறது. ஆனால், அதற்காக உயர்நிலைப் பள்ளிகளுக்கு மானியம் வழங்குவது இல்லை. உயர்நிலைப் பள்ளிகள் கூட, வானொலிப் பெட்டியை கல்வி தனிக் கட்டண நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம் என்ற அனுமதி அளிக்கப் பட்டிருக்கிறது. கல்விச் சீரமைப்பு மாநாட்டின்போது பலரும் நன்கொடைகள் வழங்குவதிலிருந்து வானொலிப் பெட்டிகள் உயர்நிலைப் பள்ளிகளில் வைத்துக் கொள்ளப்படுகின்றன. அதைப் போலவே துவக்கப் பள்ளிகளுக்கும் வானொலிப் பெட்டிகள் நன்கொடையாக வழங்கப்படும் சூழ்நிலை ஏற்படும்போது அவற்றை அந்தந்தப் பள்ளிகளுக்கு உரிமையாக்கலாம். இப்பொழுது பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் வழங்கப்படும் நன்கொடைகளைக் கொண்டு பள்ளிகளுக்கு உரிமையாக்கலாம். இப்பொழுது பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் வழங்கப்படும் நன்கொடைகளைக் கொண்டு துவக்கப் பள்ளிகள் கூட வானொலிப் பெட்டிகளைப் பெறும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி : வானொலி மூலம் ஆங்கிலக் கல்வி போன்ற கல்வி போதனையெல்லாம் நடைபெறுகிறது. அவை மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுமாதலால், அரசாங்கமே வானொலிப்

[1971 ஜூலை 9

பெட்டிகளை வாங்கி பள்ளிகளுக்கு வழங்க இயலாவிட்டாலும், தொடர்புடைய ஊராட்சி மன்றங்கள் அந்தந்தத் தொடக்கப் பள்ளிகளில் வானொலிப் பெட்டிகளை வாங்கி வைக்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியபடி, பள்ளிகள் கட்டாயமாக வானொலிப் பெட்டிகளை வாங்கித் தீரவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிப்பதற்கில்லை. ஆனால், எல்லாப் பள்ளிகளும் வானொலிப் பெட்டிகளைப் பெறத்தக்க அளவுக்கு உதவிகளைச் செய்ய வேண்டும் என்றும் அதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்றும் ஊராட்சி ஒன்றியங்கள், மன்றங்கள் எல்லாம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

கல்விச் சீரமைப்பு மாநாட்டின் போது ஆசிரியர்கள் செல்லும் போது, அந்தந்தப் பள்ளிகளின் தேவைகள் என்ன என்ன என்று நன்கொடையாளர்களிடம் அறிவிக்கும்போது எந்தந்தப் பள்ளிக்கு வானொலிப் பெட்டிகள் தேவை என்று அறிவிக்கப்படுகிறது. பல இடங்களில் வானொலிப் பெட்டிகளும் வாங்கித் தந்திருக்கிறார்கள். அது மேலும் கேட்டுக் கொள்ளப்படுகிற நிலையில் வானொலிப் பெட்டி வாங்கப்படுகிறது.

திரு. இ. எஸ். தியாகராசன் : ஹையர் எலிமெண்டரி பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வாங்கிக் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியபடி, அதற்காக அரசு நிதி ஒதுக்குவதில்லை. "கல்வி தனிக் கட்டண நிதி" யிலிருந்து வாங்கிக் கொள்ள வேண்டு மானால் அதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்கும்.

திரு. நா. வீராசாமி : பல பள்ளிகளில் வானொலிப் பெட்டிகள் வைத்திருக்கிறார்கள். ஆனால், அதற்குத் தேவையான மின்சாரம் கிடைக்கவில்லை. எல்லாப் பள்ளிகளிலும் முதலில் மின்சார வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மின்சாரம் இல்லாத ஊர்களில் பாட்டரியைத்தான் பயன்படுத்த வேண்டும். பல பள்ளிகளில் மின்சாரம் இருந்தும், வானொலிப் பெட்டி இருந்தும், அதைப் பயன்படுத்தாத நிலை இருந்து வருகிறது. அதைப் பயன்படுத்த வேண்டும் என்று நாம் அவர்களுக்கெல்லாம் ஊக்கம் தர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : வானொலி நிகழ்ச்சிகளில் இப்பொழுது ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க நிகழ்ச்சி என்ன என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி முழு விவரம் இல்லை. ஆனால், உயர்நிலைப் பள்ளியில் ஆறுவது வகுப்புக்கும், மற்ற வகுப்புகளுக்கும் எல்லாப் பாடங்களுக்குமே வாரத்திற்கு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் அளிக்கலாம்.



1971 ஜூலை 9]

## மேல் விஷாரத்தில் கோஷா மருத்துவ மனை.

*171 வின.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மேல் விஷாரம் நகரில் ஒரு கோஷா ஆஸ்பத்திரி ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தற்போது அங்குள்ள ப்ரைமரி ஹெல்த் சென்டர் சரியாக நிர்வகிக்கப்படாமலும் மருந்துகள் சரியாக இல்லாமலும் இருக்கிறது. அதை இன்னும் நல்ல முறையில் அபிவிருத்தி செய்து, ஒரே டாக்டர் இருக்கும் நிலையை மாற்றி, மேலும் டாக்டர்களை நியமித்து, படுக்கை வசதியையும் அதிகப் படியாகச் செய்துதர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கிருக்கும் மருத்துவ மனை பஞ்சாயத்து யூனியன் டிஸ்பன்ஸரி என்கிற முறையில் அமைக்கப் படுவதாகும். அதற்கான டாக்டர் மட்டும் அரசாங்கத்தின் சார்பில் அங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார். அவ்வாறு நியமிக்கும் முறையை "ப்ரொவின்ஷியலைஸேஷன்" என்று ஆங்கிலத்தில் குறிப்பிட வேண்டும். வேறு திட்டங்களை நிறைவேற்றுவது பஞ்சாயத்து யூனியனுக்கு இருக்கும் ஆர்வத்தையும் அக்கறையையும் பொறுத்ததாகும்.

திரு. நா. வீராசாமி : கோஷாப் பெண்கள் பொதுவாக அங்கிருக்கக் கூடிய ப்ரைமரி ஹெல்த் சென்டர், தாலுக்கா தலைமை ஆஸ்பத்திரி முதலியவைகளுக்கு வருவது சிரமமாக இருக்கும் என்ற காரணத்தால், மேல் விஷாரத்தில் தனிப்பட்டவர்கள் வாலண்டரி ஹெல்த் சர்விஸஸின் கீழ் ஒரு மருத்துவ மனை துவக்க முன்வந்தால் அரசு உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வாலண்டரி ஹெல்த் சர்விஸ் என்பது அங்குள்ள மக்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து—சுமார் ஒரு ஆயிரம் குடும்பங்கள் சேர்ந்து—நடத்துவதற்கு முன்வருவதாகும். அப்படி வருகிறபோது அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தேவைப்படாது. அப்படி ஒரு தேவை ஏற்படுமானால் அதுபற்றி கவனிக்கப்படும்.

திரு. கே. ஏ. வகாப் : ஓரிடத்தில் ஆஸ்பத்திரி அமைக்க வேண்டுமானால் அதற்கு உரிய அடிப்படை என்ன? ஜனத்தொகை அடிப்படையிலா? அல்லது, சுற்றுவட்டாரத்தில் ஆஸ்பத்திரி எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்ற அடிப்படையிலா? இதைக் குறித்து ஆராய்ந்து, மேல் விஷாரம் ஜனத்தொகை மிகுந்த இடம் என்பதையும், பல கிராம மக்கள் அங்கு வருகிறார்கள் என்பதையும் கருத்திற்கொண்டு, அரசு கருணையோடு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதுபற்றி சட்டமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் மிக நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இந்தக் கேள்வியை நான் வரவேற்கிறேன். மாவட்டத் தலைநகரில் ஒரு மருத்துவ மனை; வட்டத் தலைநகரில் அதற்கு அடுத்த நிலையில் ஒரு மருத்துவ மனை. அடுத்து பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றுக்கும் அவர்களால் விரும்பப் படுகிற ஓரிடத்தில் ப்ரைமரி ஹெல்த் சென்டர் அமைக்கப்படுகிறது. அதற்கு ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாய் கட்டடத்திற்காகவும், நடப்புச் செலவுக்காக ஆண்டுக்கு 35,000 ரூபாயும் ஒதுக்கப்படுகிறது. இவ்வளவும் ஒரு யூனியனுக்கு. இப்படி 374 ஒன்றியங்களில் இருக்கின்றன. இவை தவிர, தனிப்பட்டவர்கள் நன்கொடையினால், அவர்கள் மூன்று லட்சம், ஐந்து லட்சம் என்று நன்கொடை அளித்து கட்டடம் கட்டித் தந்தால் அங்குள்ள மக்கள் தொகையை ஒட்டி, அதை ஒப்புக் கொண்டு அரசாங்கம் ரிகரிங் எக்ஸ்பெண்டிச்சர் என்னும் நடைமுறைச் செலவுக்கான தொகையை அளிக்க முன்வரும்.

திரு. ஆ. கு. சுப்பையா : ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டரை மையமாக வைத்து, அதன்கீழ் பத்து சப்-சென்டர்களை இணைத்து, அந்த டாக்டர் பத்து சப்-சென்டர்களுக்கும் சென்று வரக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்போதே பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கும் இடத்தையொட்டி ஒரு குடும்பக் கட்டுப்பாடு நிலையமும் அமைக்கப்படுகிறது. பிரைமரி ஹெல்த் சென்டரும், அதைச் சார்ந்து சப்-சென்டர்களும் இருக்கின்றன. குடும்பக் கட்டுப்பாடு நிலையமும், மகப்பேறு மருத்துவத் துணை நிலையமும் ஒவ்வொரு யூனியனிலும் மூன்று அல்லது நான்கு இடங்களில் அமைக்கப்படுகின்றன. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் டிஸ்ட்ரிக்ட் போர்டு என்ற உள்ளாட்சி மன்றத்தால் மருத்துவ மனைகள் நடத்தப்பட்டன. அந்த மருத்துவ மனைகளை நிர்வகிக்கும் புதிய பொறுப்புகள் அரசாங்கத்திற்குச் சுமையாக வந்து சேர்ந்துள்ளன. அந்தச் சுமையைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் அரசு தாங்க முடியும்.

திரு. எம். செல்வராஜ் : அமைச்சரவர்கள் மாவட்டத்திற்கொன்றும், வட்டத்திற்கொன்றும் என்று அறிவித்தார்கள். வட்டத் தலைநகரில் இருக்கும் பல மருத்துவ மனைகள் ஜில்லா போர்டு காலத்தில் அமைக்கப்பட்டன. படுக்கைகள் கூட இன்னும் விஸ்தரிக்கப்படாமல் இருக்கின்றன. 16, 18 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகள் ஏராளமாக இருக்கின்றன. இவற்றினை விரிவுபடுத்த சிறப்புத் திட்டம் தனியாக ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது நாடு முழுவதும் உள்ள ஒரு பெரிய பிரச்சினையாகும். எல்லா வட்டத் தலைநகரிலும் உள்ள மருத்துவ மனைகளை விரிவுபடுத்த வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். அதேபோல் எல்லா மாவட்ட மருத்துவ மனைகளையும்கூட இன்னும் பல பகுதிகளில் விரிவுபடுத்த வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் அரசாங்கத்திற்குக் கிடைக்கும்



வெல்பேர் பண்டு என்னும் அந்தப் பெரும் தொகையிலிருந்து ஓராண்டுக்கு 60 லட்சம், 70 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அவற்றிலிருந்து மாவட்டத்திற்கு இரண்டு லட்சம், மூன்று லட்சம், என்று இந்த ஆண்டு முதல் ஒதுக்கவேண்டும் என்று அரசாங்கம் எண்ணிக் கொண்டிருக்கிறது. அந்தத் தொகையும்கூட, அந்தந்தப் பகுதியில் உள்ளவர்கள் தரும் நன்கொடைக்கு ஈடாக "மாட்சிங் கிராண்ட்" என்ற முறையில் தருவது நல்லது என்று எண்ணுகிறோம். ஒரு மருத்துவ மனை அமைக்க இரண்டு லட்ச ரூபாய் யாராவது நிதி திரட்டித் தந்தால் இந்த நல நிதியிலிருந்து அதற்கு ஈடாக இரண்டு லட்ச ரூபாய் கொடுத்து, அதற்கேற்ப மருத்துவமனை அமைக்கலாம் என்பது எண்ணம். ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனைக்கும் ஏறக்குறைய இருபது லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. ஒவ்வொரு வட்ட மருத்துவ மனைக்கும் ஏறக்குறைய ஐந்து லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட பெரிய திட்டத்திற்குப் பொதுமக்களுடைய ஒத்துழைப்பையும் தேடித் தர உறுப்பினர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே பல இடங்களில் அத்தியாவசியமான மருந்துகள் இல்லாமல் இருக்கிறது. அதை நிவர்த்திப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்பொழுதும்கூட அதற்காக ஒதுக்கப்பட்ட பண அளவில் மருந்துகள் யாவும் வாங்க முடியாத அளவிலே மருந்துகளின் விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் மக்களுக்கு ஓர் ஆண்டுக்குப் போதுமான மருந்துகள் வாங்க முடிவதில்லை. எனவே என்ன என்ன மருந்துகள் குறைந்த விலைகளுக்குப் பெறப்பட்டு, அவை நீண்ட காலத்திற்கு சிகிச்சைக்குப் பயன்படும் என்பதைப் பற்றி ஆலோசனை செய்து சொல்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது. அந்த ஆலோசனைக் குழு கூறும் கருத்தை ஆலோசித்து ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, திருத்தணி வட்டத்தில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே ஒன்றியத்தின் தீர்மானம் இல்லாமலே ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டப்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதன் விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானம் இல்லாமல் இருந்தால் அரசாங்கத்திற்கு ஒரு இடத்தில் கட்டுவதற்கு உரிமை இருக்கிறது.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் மருத்துவ மனை அமைக்கின்ற நேரத்திலே, பொதுமக்கள் பணம் திரட்டித் தந்தால் அதோடு அரசாங்கமும் பணம் போட்டு மருத்துவ மனை கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்தார்கள். திருப்பூர் நகரத்திலே

[1971 ஜூலை 9

பொதுமக்களிடம் இருந்து 5 லட்ச ரூபாய் நிதி திரட்டித் தந்தால் அதோடு அரசாங்கமும் பணம்போட்டு மருத்துவ மனை அமைத்துத் தர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அந்த ஊரிலே உள்ளவர்கள் 5 லட்சம் தொகை தருவதற்கு 6 மாதம் ஆகும் என்ருல் அரசாங்கம் தன்னுடைய நல நிதிகளிலிருந்து அதற்கான நிதி ஒதுக்குவதற்கு 6 மாத காலம் ஆகும். இதிலே ஒரு ஆண்டு கடந்துவிட்டாலும் மூன்று ஆண்டுகளுக்குள்ளாக அது கட்டப்படலாம்.

திரு. என். இராஜாங்கம்: பிரதம சுகாதார நிலையங்கள் லோக்கல் பண்ட் ஆஸ்பத்திரிகளாக முன்பு இருந்த இப்பொழுது யூனியன் ஆஸ்பத்திரிகளாக இருக்கின்ற இந்த இரண்டு வகை ஆஸ்பத்திரிகளும் யூனியன்களுக்கு உட்பட்டவையா அல்லது அரசாங்கத்திற்குத் தொடர்புள்ளவையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படிப்பட்ட மருத்துவ மனைகள் பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்டவைதான். அவற்றிற்கு அந்தந்த மருத்துவ மனையின் நிலையை நோக்கி ஐந்தாயிரம், ஏழாயிரம் என்ற விகிதாச்சாரத்தில் அரசாங்கத்தினுடைய கிராண்ட் சில மருத்துவ மனைகளுக்கு வழங்கப்படுகின்றது.

திரு. இ. எஸ். தியாகராசன்: அந்த புரவின்ஷியலைஸ்டு ஆஸ்பத்திரிகளுக்குத் தனியாக பெண் டாக்டர்கள் போடும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மகப்பேறு மருத்துவ மனைகளாக இருந்தால் முடிந்த அளவுக்குப் பெண் டாக்டர்கள்தான் போடப்படுகிருர்கள். டாக்டர்களில் ஆண்கள் 75 சதவீதமும் பெண்கள் 25 சதவீதமும் என்ற அளவுக்கு இருக்கிருர்கள். ஆகவே அவர்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கும். முடிந்தவரையில் அவர்களை வெவ்வேறு இடங்களில் அமைக்கின்ருேம்.

*Fire accident at Virudhachalam*

*168 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there was any blaze in Virudhachalam on or about 8th February, 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: (அ) ஆம்.

(ஆ) இத் தீவிபத்தில் சுவாமி பழமலைநாதர் கோவில் தேர் ஒன்றும், கூரை வேயப்பட்ட 12 குடியிருப்புக் குடிசைகளும், சிறு கடைகள் இருந்த 12 கூரைக் குடிசைகளும், இதைத் தவிர 2 மண்டிகள், 3 டாக்சி கொட்டகைகள், ஒரு சைக்கிள் கடை ஆகிய இவையும் முற்றிலும் நாசமடைந்தன.



1971 ஜூலை 9]

திரு. ச. சங்குமுத்து தேவர்: தீ விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றனவா, தாஞகவே தீப்பிடிக்கிறதா? அல்லது யாராவது திட்டம் போட்டுச் செய்து கொண்டிருக்கிருர்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: இந்தத் தீ விபத்தைப் பொறுத்தவரையில் விருத்தாசலத்திலே சாம்பமூர்த்தி ஐயர் வீட்டிலிருந்து ஒரு தீப்பொறி கூரையிலே பட்டதால் ஏற்பட்டது என்று காரணம் தெரிய வந்திருக்கிறது.

திரு. எம். செல்வராஜ்: தலைவர் அவர்களே, இந்த தீ விபத்துக்கள் எதிர்பாராத விதத்தில் ஏற்படுகின்ற காரணத்திஞல் முனிசிபல் நகரங்களில் தீ அணைப்புப் படைகள் அமைக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: மாநிலத்தில் தீ அணைப்புப் படை நிலையங்கள் எப்படி ஏற்படுத்துவது என்று வரிசைப் படுத்தப் பட்டு இருக்கின்றன. அந்த வரிசையிலே விரைவிலே விருத்தாசலத்திற்கும் ஒரு பிரிவு வர இருக்கிறது.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய நகரங்களிலே தீ விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன என்று செய்திகள் வருகின்றன. அப்படி ஏற்படாமல் தடுப்பதற்காக முன்னெச்சரிக்கையாகத் தடுப்பதற்கு தடுப்புப் படை அமைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: தீ விபத்துக்கள் ஏற்படும் இடங்களில் எந்த எந்தக் காரணங்களிஞலே தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதைக் குறித்துக் காவல் துறையினர் ஒலிபெருக்கி மூலம் அடிக்கடி பிரச்சாரம் செய்து வருகிருர்கள். அதன் மூலமாகத் தீ விபத்துக்கள் தடுக்கப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: விருத்தாசலத்திலே ஏற்பட்ட தீ விபத்திஞலே சில குடிசைகளும் சேதப்பட்டதாக முதலமைச்சர் அறிக்கையிலிருந்து அறிகிறேன். குடிசைகள் சேதப்படுகின்ற காரணத்திஞல் அங்கேயுள்ள கலெக்டர் நிதி கொடுக்கின்ருர்களே, அதை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: அந்த நிவாரணத் தொகை இதற்கு முன்பு ரூபாய் 40 என்ற அளவுக்குத்தான் இருந்தது. பிறகு அது உயர்த்தப்பட்டு வீட்டைச் சீர்திருத்துவதற்கு 60 ரூபாயும் துணிகளுக்கு என்று 20 ரூபாயும் ஆக 80 ரூபாய் வரையிலே கொடுக்கப்படுகிறது. எனவே இப்பொழுது அதிகப்படுத்தித்தான் கொடுக்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தர பாண்டியன்: தலைவர் அவர்களே, வீடுகளிலே தீப்பிடிக்கின்ற காலங்களிலே வீட்டிலிருக்கின்ற உணவுப் பொருட்கள், பணம் போன்ற செல்வங்கள் எல்லாம் அழிந்துவிடு

10 by 8 feet to resettle hut owners who have been living in these burnt houses and have the Government also fixed the minimum plinth area for construction of such fire proof houses?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது அந்த எரியாத வீடுகள் கட்டப்படுகின்ற திட்டம் கைவிடப்பட்டு வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

Dr. H. V. HANDE : May I know from the Hon. Minister whether Government have gone into the report of Mr. Krishnaswamy fully? Have they taken into consideration the preventive measures suggested there and the cost factors mentioned there? May I know the steps taken by this Government to reduce to the minimum, the large-scale fires that had taken place before and which are taking place now to a certain extent?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த அறிக்கையும் கருத்திற் கொள்ளப்பட்டு, அதோடு அரசும் காவல்துறையினரிடம் கலந்து பேசி முன்கூட்டியே இந்தத் தீ விபத்துகள் ஏற்படாது தடுக்க எல்லா விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, சென்னை மாநகரத்திலுள்ள காவல்துறையினர் ஆங்காங்குள்ள குடிசைப் பகுதிகளில் நிரம்ப கண்காணிப்போடு இருப்பதோடு, தீ விபத்தைத் தடுக்க பிரச்சாரங்களையும் அந்த மக்களிடத்திலே செய்து வருகிறார்கள். இவைகளுக்கெல்லாம் மேலாக அப்படித் தீவிபத்து ஏற்படாமல், வெள்ளத்தால் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஆயிரக்கணக்கான குடியிருப்புகளை அவர்களுக்கு கட்டிக் கொண்டு வருகிறோம்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, சென்னை நகரைப் போன்று தஞ்சை மாவட்டத்திலே, தஞ்சை நகரத்திலே ஒரு வார காலமாகத் தொடர்ந்து தீவிபத்து ஏற்படுவது சம்பந்தமாக அரசின் கவனத்திற்கு வந்ததா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு உடனடியாக அதற்கேற்ற நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட வேண்டுமென்று காவல்துறையினருக்குக் கூறப்பட்டிருக்கிறது. அங்கு போதுமான அளவிற்கு தீ அணைப்பு வண்டிகள் செல்ல வேண்டுமென்று கூறப்பட்டு அந்த வண்டிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, சென்னை நகரத்திலே தீப்பற்றி எரியும் வீடுகளுக்குப் பதிலாக அந்த மக்களுக்கு வேறு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இது நல்ல காரியம். ஆனால் மாவட்டங்களில் அடிக்கடி தீவிபத்துக்கள் ஏற்பட்டு மிகச் சாதாரண, ஹரிஜன மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு 80 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அந்தத் தொகையை அதிகரிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு 40 ரூபாய் கொடுக்கப்பட்டது. அது போதாது என்று இப்பொழுது 80 ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலே கட்டிக் கொடுப்



பதைப் போன்ற வீடுகளைத் தமிழகம் முழுவதும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற ஆசை அரசுக்கு இருந்தாலும், முதல் கட்டமாக சென்னை மாநகரத்திலே குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக இப்படிப்பட்ட காரியத்தைச் செய்து விட்டு, பிறகு பரவலாக அடுத்தடுத்த கட்டங்களில் தமிழகம் முழுவதும் உள்ள ஏழை எளிய மக்களுக்குக் கட்டித் தருகின்ற முயற்சியில் அரசு ஈடுபடும்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, அடிக்கடி ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுக்க ஆங்காங்கிருக்கும் சீரணிப்படையினருக்குப் பயிற்சி தந்து அதற்காகக் கருவிகள் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தீ விபத்து ஏற்படாமல் இருக்க என்னென்ன உபாயங்களைக் கையாளவேண்டும், எந்தெந்த வகையில் தடுப்பு முறைகள் இருக்க வேண்டும் என்றெல்லாம் எச்சரிக்கை செய்யும் வேலையில் சீரணிப்படையினரைப் பயன்படுத்தலாம்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, சென்னை குடிசைவாசிகள் அனைவரும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டுப் போட்டார்கள் என்ற எரிச்சலின் காரணமாகச் சிலர் அந்தக் குடிசைகளை எரிப்பதாகச் சொல்கிறார்களே, அதை அரசு அறியுமா?

திரு. கே. எம். சுப்பிரமணியம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார் ...

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அறியாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : என் தொகுதி மக்களின் குடிசைகளுக்குக்கூட 80 ரூபாய்தான் கொடுக்கப்பட்டது. ஆனால் 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு 40 ரூபாய் கொடுக்கப்பட்டது. இன்றைக்கு 80 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். 4, 5 ஆண்டு காலத்தில் 3 மடங்காக விலைகள் எல்லாம் உயர்ந்திருப்பதால் இதைக் குறைந்த பட்சம் 100 ரூபாயாகவாவது கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மைலாப்பூர் தொகுதியிலே, நம்முடைய திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதைப்போல 80 ரூபாய் கொடுக்கிறோம் என்றாலும், புதிய வீடுகள் அங்கேதான் நிறையக் கட்டப்படுகின்றன.

Thiru B. VENKATASWAMY : Is it not a fact that fire hydrants in slum areas are not working properly? Will this Government take action so that these fire hydrants in slum areas may work properly?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி ஏதாவது குறைபாடுகளிருந்தால் அவை திருத்தி அமைக்கப்படும்.

திரு. எம். செல்வராஜ் : தலைவரவர்களே, இந்தத் தீ விபத்துக்கள் ஏற்படும் நேரத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள் என்பதையும், காசிமேடு பக்கத்தில் என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1971 ஜூலை 9

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பொதுவாக நிதிநிலை அறிக்கையிலே நான் சுட்டிக்காட்டியிருப்பதைப்போல 7 ஆண்டுகளுக்கு 40 கோடி ரூபாய் திட்டத்தில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக ஏழை எளிய மக்களுக்கு நல்ல வீடுகள் கட்டித்தர திட்டமிடப்பட்டு, இந்த ஆண்டு மாத்திரம் 4 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டு 1971–72-ல் மாத்திரம் தொகுதி வாரியாக, வண்ணாரப்பேட்டை தொகுதியிலே 534 குடியிருப்புகளும், பேசின் பிரிட்ஜ் தொகுதியிலே 300 குடியிருப்புகளும், பெரம்பூர் தொகுதியில் 1,075 குடியிருப்புகளும், புரசைவாக்கம் தொகுதியிலே 200 குடியிருப்புகளும், எழும்பூர் தொகுதியிலே 1,342 குடியிருப்புகளும், தியாகராயநகர் தொகுதியிலே 698 குடியிருப்புகளும், சைதாப்பேட்டை தொகுதியிலே 1,458 குடியிருப்புகளும், திருவல்லிக்கேணி தொகுதியிலே 472 குடியிருப்புகளும், மயிலாப்பூர் தொகுதியிலே 2,374 குடியிருப்புகளும், ஆக மொத்தம் 8,453 குடியிருப்புகளைக் கட்ட குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மேற்கொண்டிருக்கிறது.

திரு. சோ. கருணைநாதன்: தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத் திட்டத்தின்மூலம் சென்னை மாநகரத்தில் எத்தனை ஆண்டுகளுக்குள் முடியும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதற்குத்தான் ஏழாண்டுத் திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறோம்.

திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, பட்டாசுத் தொழிற்சாலை போன்றவைகளில் தீ விபத்து ஏற்பட்டு இறந்து போகின்றவர்களின் குடும்பங்களுக்கு அரசு ஏதேனும் உதவி செய்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, முன்பு சென்னை மாநகரத்திலே பெருமளவில் தீ விபத்து ஏற்பட்டு குடிசைகள் எரிந்த பொழுது பெரிய போலீஸ் அதிகாரியை வைத்துக் கண்டுபிடிக்கச் சொன்னார்கள். அவர்கள் என்ன கண்டுபிடித்தார்கள்? அறிக்கை ஏதேனும் சமர்ப்பித்தார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதைத்தான் மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்களும் கேட்டார்கள். அதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன். அந்த அறிக்கை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டு விட்டது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஒரு ஆண்டுக்கு 3 தீ அணைப்பு நிலையங்கள்தான் ஏற்படுத்த முடியும் என்று சொன்னார்கள். பொதுவாக எடுத்துக்கொண்டால் ஒரு மாவட்டத்தில் 4, 5 தீ அணைப்பு நிலையங்கள்தான் இருக்கின்றன. அப்படிக் கணக்கிடப்படும்பொழுது நம்முடைய திட்டப்படி பத்தாண்டுக்காலம் சென்றால் கூட எல்லா இடத்திற்கும் தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்த முடியாது. அதை உத்தேசித்து உடனடியாக எல்லா வட்டத்திற்கும் காவல் நிலையம் ஏற்படுத்த நம்முடைய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1971 ஜூலை 9]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உடனடியாகச் செய்ய முடியாது. 3 என்பதை 5 ஆக மாற்றிக் கொண்டாலும்கூட 10 ஆண்டுக் காலத்தில், 8 ஆண்டுக் காலத்தில் முடியாது. நிதி நிலையை உத்தேசித்து இந்த நிலைமையில்தான் தீ அணைப்புப் படை ஏற்படுத்துவதில் முன்னேற முடியும்.

திரு. ப. முத்துசாமி: தலைவரவர்களே, குடிசைகள் மிகவும் நெருக்கமாக இருப்பதால் தீ விபத்துக்கள் ஏற்படும் நேரத்தில் அவற்றை அணைப்பதற்கு உடனடியாக இயலாமல் போயிருக்கிறது. ஆகையால் அதைப் பரவலாக்க அரசு முயற்சியெடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஏற்கனவே கட்டப்பட்டு, அங்கு தீ அணைப்பு வண்டிகள் செல்ல இயலாத நிலை இருப்பதை அரசு உணர்கிறது. அதற்காக அவைகளைப் பிரிக்க முடியாது. மொத்தமாக, இந்தக் குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்க ஒரு வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். முத்தையா: சில சமயங்களில் சில இடங்களில் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது என்று வீண் வதந்திகளைக் கூறி தீ அணைப்புப் படைக்குத் தெரிவித்து அவர்கள் வந்து பார்த்து விட்டு அப்படி ஒரு சம்பவம் ஏற்படவில்லை என்று திரும்பிச் செல்லும் நிலை ஏற்படுகிறது. அப்படி நடந்தால் அந்த வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சில நேரங்களில் இதுபோன்ற தொலைபேசிச் செய்திகள் தீயணைப்புப் பிரிவுக்கு வந்து விடுகின்றன. சம்பவம் நடந்திருக்கிறதா, இல்லையா என்று தொலைபேசி மூலம் கேட்டுத் தெரிந்துகொண்டு தீ அணைப்பின் பிரிவினர் போவதாக இருந்தால் தாமதமாகிவிடும். இப்படிப்பட்ட குறைபாடுகளைத் தவிர்க்க ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: அமைச்சர் அவர்கள் மூன்று தீயணைப்பு நிலையங்கள் இவ்வாண்டு வரும் என்றார்கள். ஒன்று ஸ்ரீரங்கத்தில் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஸ்ரீரங்கத்தில் அமைக்கப்படமாட்டாது. அங்கு ஏற்கனவே ஒருமுறை கோயில் எரிந்து அணைக்கப்பட்டு விட்டது.

Thiru K. M. SUBRAMANIAM: Have this Government received any complaints from Nungambakkam that because they have voted for the Congress, the D.M.K. people tried to set fire to huts in Nungambakkam?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கோவை செழியன் அவர்கள் கேட்ட கேள்விக்குச் சொன்ன பதிலைத்தான் இதற்கும் தர முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுமாதிரி குறிப்பிட்டு ஆதாரம் இல்லாமல் சொல்லக்கூடாது.

[1971 ஜூலை 9

திரு. கே. எம். சுப்பிரமணியம்: ஆதாரத்தோடுதான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை செழியன் பொதுவாகச் சொன்னார். திரு. கே. எம். சுப்பிரமணியம் தீ வைத்தார் என்றோ, அல்லது காங்கிரஸ்காரர்கள் தீ வைத்தார்கள் என்றோ சொல்லவில்லை. இந்த மன்றத்தில் ஆளும் கட்சியாக இருக்கும் கட்சியைப் பற்றி குற்றம் சொல்லும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தீ வைத்தார்கள் என்று சொல்லும்போது அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். பொறுப்பேற்றுக் கொண்டு இன்னார் வைத்தார்கள் என்று ஆதாரத்தின் அடிப்படையில்தான் கேள்வி கேட்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் இதுபோன்ற கேள்விகளைக் கேட்காமல் இருப்பது நல்லது.

THIRU K. M. SUBRAMANIAM: May I answer with your permission, Sir? I want to make a representation. I do not generally indulge in unnecessary repartees, like this and I speak with responsibility. I know definitely that on a certain day a few number of people went to the Nungambakkam police station and made this representation. I raised it because one hon. Member raised the point. I am far from it. I said it because such a representation has been made. I said that only a representation has been made.

MR. SPEAKER: The hon. Member may avoid such insinuations.

THIRU K. M. SUBRAMANIAM: No insinuation at all.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்தத் தீ அணைப்பு நிலையங்களை எல்லாம் குடிசைப் பகுதிகள் இருக்கும் இடத்தில் வைத்தால் தீ விபத்து அதிகமாக ஏற்படுகின்ற நிலையில் உடனடியாக அணைப்பதற்கு வழி ஏற்படுமாதலால் அரசு அத்தகைய ஏற்பாட்டைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிப்பட்ட குடிசைப் பகுதிகளுக்கு அருகாமையில் காலி மனைகள் இல்லாமல் இருப்பதால் அமைக்க முடியவில்லை. இருந்தாலும் இதையும் கருத்தில் கொண்டு அதற்கான ஏற்பாடுகள் கவனிக்கப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல்: கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு சென்னை மாநகரத்தில் தீ விபத்துக்கள் அதிகரித்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: குறைந்துள்ளதாகத்தான் கணக்கு வந்துள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தற்போது தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 80 ரூபாய் கொடுப்பதை உயர்த்தாவிட்டாலும் அந்த வீடுகளைக் கட்டிக் கொள்ளும் வகையில் ஏதாவது சொத்து மதிப்பை வைத்தோ அல்லது சொந்த மனை வைத்திருந்தார்களானால், அந்த மனையின் மீதோ ரூ. 5.00 வரை கடனைக் கொடுக்க அரசு முன் வருமா?



1971 ஜூலை 9]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் ஏற்கனவே சொன்னேன். ஆங்காங்குள்ள நிலைமைகளுக்கேற்பவும், அந்த நிகழ்ச்சி எப்படி ஏற்பட்டது என்பதற்கேற்பவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் வேறு வேறு மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதை அடிப்படையாக வைத்துத்தான் இந்த உதவிகள் செய்யப்படும்.

திரு. ஆ. கருப்பையா: இந்தத் தீ விபத்துக்கள் ஏற்படுவதை உடனடியாகத் தீயணைக்கும் படையினருக்குத் தெரிவிக்க வாய்ப்பில்லாத கிராமங்களில் ஆங்காங்குள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் டெலிபோன் வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவை எல்லாம் படிப்படியாகச் செய்யப்பட வேண்டிய காரியங்கள்.

திரு. மா. சுப்பிரமணியம்: தீ விபத்தினால் பாதிக்கப்பட்டு வீடு இழந்தவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதில் ஆங்காங்குள்ள பணவசதியுள்ள ஊராட்சி மன்றங்கள், நகர மன்றங்கள் அதிகப்படியான உதவித் தொகையை தர முன் வந்தால் அரசாங்கம் அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பண வசதி நிரம்ப இருக்கின்ற ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் அதிகப் பணம் தருவதானால் அரசு குறுக்கே நிற்காது.

திரு. நா. வீராசாமி: சென்னையில் தீப்பற்றிய வீடுகள் 601 என்று சொன்னார்கள். அவை தனியார் நிலத்தில் கட்டப்பட்ட வீடுகளா அல்லது அரசாங்கப் புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்ட வீடுகளா? தனியார் நிலத்தில் கட்டப்பட்ட வீடுகளாக இருந்தால் அவர்களைக் காலி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு தீ வைக்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்படும் வீடுகள் திருமதி அனந்தநாயகி அம்மையார் தொகுதியில் 2,000 என்றும், அமைச்சர் தொகுதியில் 200 என்றும் இருக்கிறதே, இது எந்த அடிப்படையில்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: முதல் கேள்வி கார்சிமேடு பகுதியில் உள்ள இடத்தைப் பற்றியது. அது தனியாருக்குச் சொந்தமான இடம். இப்போது குடிசை மாற்று வாரியத்தினால் அது வாங்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தனியார் நிலத்தில் குடியிருப்பவர்களைக் காலி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு கொளுத்தி விடப்படுகிறதா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. வீட்டு வாரியத்தினால் கட்டப்படுகின்ற வீடுகள் அம்மையார் தொகுதியில் அதிகமாகவும், அமைச்சர் தொகுதியில் குறைவாகவும் இருக்கிறதே என்று கேட்டார்கள். அதுதான் நாம் போற்றி வளர்க்கும் ஜனநாயகம்.

[1971 ஜூலை 9

டாக்டர் ச. அ. சின்னராசு: தருமபுரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில்தான் தீயணைக்கும் நிலையங்கள் இருக்கின்றன. அங்கு தீ விபத்துக்கள் அதிகமாக இருப்பதால் ஒரு தீயணைக்கும் நிலையம் தருமபுரி மாவட்டத்தில் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆவல் கருத்தில் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 172, 173, 174 ஆகியவை தொழிலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

*Multiple Cropping Scheme*

*175 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether Multiple Cropping is to be tried in this State with Central assistance; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ): ஒரு விவர அறிக்கை @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: அதற்குப் பணம் எவ்வளவு செலவழிக்கப்படுகிறது? மத்திய அரசின் உதவி எவ்வளவு? மாநில அரசின் உதவி எவ்வளவு?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தமிழ் நாட்டின் வேளாண் நிலப் பரப்பை அதிகரிக்க முடியாததால் பன்முறை சாகுபடித் திட்டத்திற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. வழக்கமாகப் பயிரிடப்படும் பயிர்களுக்குப் பதிலாகக் குறுகிய காலப் பயிர்களைப் பயிரிடும் முறையைப் புகுத்துவதும் நிரந்தரமாக நீர்ப்பாசன வசதிகள் உள்ள பகுதிகளில் ஒருபோக விளைச்சலை இருபோக விளைச்சலாக்குவதும், இருபோக விளைச்சல் உள்ள பகுதிகளில் முப்போக விளைச்சலை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். பருப்பு வகையை இத்திட்டத்தில் சேர்த்துக் கொண்டது முக்கிய மாறுதலாகும். பன்முறை சாகுபடித் திட்டம் தமிழ் நாட்டில் 1967-68-ம் ஆண்டில் வேளாண்மையைப் பெருக்குவதில் உறுதுணையாகக் கொண்டுவரப்பட்டது. சென்ற நான்கு ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் கிட்டிய சாதனைகள் 1967–68-ம் ஆண்டில் 1.15 லட்சம் ஏக்கர்; 1968–69-ல் 5.53 லட்சம் ஏக்கர்; 1969–70-ல் 9.95 லட்சம் ஏக்கர்; 1970–71-ல் 12.99 லட்சம் ஏக்கர். 1971–72-ம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு 13 லட்சம் ஏக்கர்களாகும். நான்காவது திட்டத்தின் முடிவில் இத்திட்டத்தின் கீழ் 15 லட்சம் ஏக்கர்களில் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும், திருச்சி மாவட்டத்தில் முசிரியிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூரிலும் பன்முறை சாகுபடி முன்னோடித் திட்டம் செயல்படுத்த மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

@ 417–418 பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1971 ஜூலை 9]

தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் பன்முறை சாகுபடித் திட்டத்தை விரிவாக மேம்படுத்துவதே முன்னோடித் திட்டத்தின் நோக்கமாகும். பயிர் வள ஆராய்ச்சி குறித்து ஒருங்கிணைந்த செயல் திட்டம் ஒன்றை அமைத்தல், அறிவியல் செய்முறை விளக்கங்கள், நன்கமைந்த வளர்ச்சி நடவடிக்கைகள், சீரான அளவில் பயிரிடும் தேவைப் பொருட்கள், கடன் வசதிகள், முறையாக ஏற்படுத்தப்பட்ட விற்பனை வசதி, மற்றும் மேற்கண்டவற்றிற்குத் துணையாக உள்ள நடவடிக்கைகள் மூலமாக இத்திட்டத்தின் நோக்கம் எய்தப்படும். இத்திட்டம் ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவில் ஒவ்வொரு பகுதியிலும் செயல்படுத்தப்படும். இதற்காகும் செலவு முழுவதும் மத்திய அரசினால் ஏற்கப்படும். மூன்று ஆண்டுகளுக்கான ரூ. 12 லட்சம் தொகைக்கு மத்திய அரசினால் ஒப்புறுதியளிக்கப்பட்டுள்ளது. 1971–72-க்கு ரூ. 3.93 லட்சம்; 1972-73-க்கு ரூ. 4.01 லட்சம்; 1973-74-க்கு ரூ. 4.09 லட்சம்; ஆக மொத்தம் ரூ. 12.03 லட்சம் இதற்காகச் செலவிடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விவரங்கள் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விவர அறிக்கையிலேயே இருக்கின்றன.

திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்த பன்முறைத் திட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டம் சேர்க்கப்பட்டுள்ளதா? அங்கே வேளாண்மையை சீர்படுத்த என்ன திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான திட்டங்கள் செயல்படுகின்றன. அதற்காக இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கோவை செழியன்: சார், இங்கிலாந்து நாட்டில் மொத்த பூமியில் நான்கில் ஒரு பங்கு "ஃபேலோ" வாகப் போடவேண்டும் என்ற சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பன்முறைத் திட்டத்தால், மண்வளம் குறையாமல் இருக்க என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இங்கே நிலத்தை வீணாக்காமல் வைக்க, நிலத்தைத் தரிசு போட்டால், அரசாங்கம் அதை ஏற்று பயிர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது.

Thiru R. PONNAPPA NADAR: Sir, may I know from the Hon. Minister whether there is any proposal to extend the scheme to other districts and if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தற்சமயம் இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்தப் பன்முறை சாகுபடி திட்டத்தால், விவசாயிகள் என்னென்ன நன்மைகள் அடைகிறார்கள் என்பதை அறியலாமா?

[1971 ஜூலை 9

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அறிக்கையில் விவரங்கள் குறிப்பிட்டிருக்கிறது. இப்பொழுது என்னுடைய பதிலிலும் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அமைச்சரவர்கள் உப கேள்விக்கு பதில் சொல்லும்போது, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதில் எவ்வளவு செலவாகியிருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுது அதற்கான விவரம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இந்தப் பன்முறைத் திட்டத்தில் விவசாயிகளுக்கு கடன் வசதிகள் போன்றவை கொடுக்கப்படுவதுபற்றித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறதுது. வரி வஜா—பேஸிக் டாக்ஸ் மட்டுமின்றி, வாட்டர் டாக்ஸும் சேர்த்து ரத்து செய்ய ஏதாவது வழிவகை உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படியொன்றும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், அமைச்சர் பதில் சொல்லும்போது, தரிசு போட்டால் அதை அரசாங்கம் எடுக்க சட்டம் இருக்கிறது என்றார்கள். அப்படி தரிசாகப் போட்டிருந்த நிலத்தில் எங்கெங்கே எடுக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, பன்முறைத் திட்டத்தில் ஐ.ஆர். 8 என்ற நெல்லை அடுத்தடுத்து பயிரிடுவதால் நிலம் பாதிக்கப்படுகிறது. அதிக விளைச்சல் கொடுப்பதில்லை " என்று சொல்லுகிறார்கள். அதன் உண்மை என்ன? அதற்கான நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஏற்ற அளவில், பயிரிடக் கூடிய அளவில், இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றியமைக்க வேண்டும் என்று அதிகாரிகள் யோசனைகள் கூறி வருகிறார்கள். விவசாயிகளும் அதன்படி விவசாயம் செய்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்தப் பன்முறைத் திட்டத்தின் கீழ், மூன்று ஆண்டுகளுக்கு மத்திய சர்க்கார் ரூ. 12 லட்சம் செலவிடும் என்ற விவர அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். வெறும் சாகுபடிக்கு பணம் செலவிடுவதால் மட்டும் வெற்றி காண முடியாது. ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்க வேண்டும். அந்த வகையில் மத்திய சர்க்காரை நம் அரசு வற்புறுத்துமா? ஒரு ஏக்கருக்கு எவ்வளவு செலவிடுகிறார்கள் மத்திய சர்க்கார்?



1971 ஜூலை 9]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தனியாக இல்லாமல், ஒவ்வொரு பொருளுக்கும் ஏற்ற வகையில், பொருள்களை வேளாண்மை செய்ய, வேளாண்மை கல்லூரியிலும், ஆராய்ச்சி நிலையத்திலும் ஒருங்கிணைந்த செயல் திட்டமாக செயல் படுத்துகிறார்கள். ஒவ்வொரு வட்டாரத்திலும் 20 ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்படுத்தி ஒவ்வொன்றும் இவ்வளவு செலவிடுவது என்று சொல்லுகிறது. செயல்முறை விளக்கங்களுக்காக வட்டாரத்திற்கு ரூ. 30,000 செலவிடுகிறது. போக்குவரத்துக்கு 10,000 ரூபாய்; பயிற்சி, ஒலிப்பட உபகரணங்களுக்கு 9,000 ரூபாய் ஆக, ரூ. 1,39,000 ஒரு வருஷத்திற்கு, ஒரு வட்டாரத்திற்கு என்று, மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 12 லட்சம் என்று செலவிடுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : மூன்று ஆண்டுகளாகவே இந்த பன்முறைத் திட்டம் இருந்தும், இதில் பருப்பு வகைகள் உற்பத்தி ஆகுமா? இருந்தும் ஏன் ரூ. 4 ஒரு படி என்று பருப்பு வகைகள் விற்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இது 1967–68-ம் ஆண்டில் துவக்கப்பட்டாலும், 1970–71-ம் ஆண்டில்தான் நடைமுறைக்கு வந்திருக்கிறது. 1971–72-ம் ஆண்டில் ஏறத்தாழ 23 லட்சம் ஏக்கரில் தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. எனவே, அடுத்த ஆண்டில், அல்லது அடுத்த இரண்டு ஆண்டுகளில் பருப்புப் பஞ்சமே இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Agriculture whether the multiple-cropping system would be introduced only in respect of the wet crops or dry crops also?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுது " வெட் கிராப்பு" க்குத்தான். நீர்வளப் பகுதிகளில் செயல்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் ஐ.ஏ.டி.பி. பகுதியிலும், மற்றும் சில மாவட்டங்களில் ஐ.ஏ.ஏ.பி. பகுதியிலும் செயல்படுகிறது.

## வட ஆற்காடு மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்ட டிராக்டர்கள்

* 176 வினா.—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் சென்ற ஆண்டு எத்தனை டிராக்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 61 டிராக்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

திரு. மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, வடாற்காடு விவசாயிகள் மனுப்போட்டு ஒரு வருஷத்திற்கு மேலாகியும், ட்ராக்டர் ஒன்றும் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். சீக்கிரமாகக் கொடுக்க அரசு முனையுமா?

[1971 ஜூலை 9

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்திற்கு 125 ட்ராக்டர்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதில் 1971–72-ல் 61 ட்ராக்டர்கள் வழங்கப்பட்டிருக்கிறது. துரிதமாக நடவடிக்கை எடுக்க அக்ரோ–இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பொரேஷனோடு தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, 125 ட்ராக்டர்கள் வடாற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதில் 61 தான் வழங்கப்பட்டன என்றார்கள். வேறு யாரும் அவற்றிற்கு மனுப்போடவில்லையா? அல்லது மனுப் போட்டு கொடுக்கவில்லையா? வடாற்காடு மாவட்டத்திற்கு GDR- லிருந்து வந்த டிராக்டர்கள் ஒதுக்கியதால், அதை எடுக்காமல் யாரும் விட்டு விட்டார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இந்த ட்ராக்டர்கள் அக்ரோ–இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பொரேஷனுக்கு மத்திய சர்க்காரிலிருந்து ஒதுக்கப்படுகின்றன. ஒதுக்கும் அளவைப் பார்த்து, பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இப்பொழுது அளிக்கப்பட்டுவரும் ட்ராக்டர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவை? இவை விவசாயிகளுக்கு நல்ல முறையில் பயன்படவில்லை என்று குறிப்பிடப்படுகிறது. அதனால்தான் அதை எடுப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. நல்ல முறையில் பயன்பட "மாஸி ஃபர்கூஸன்" ட்ராக்டர்களை அளிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இப்பொழுது இறக்குமதி ஆகும் ட்ராக்டர்கள், டி.டி. 14, யு. 500, கலாரம், ஆர்.எஸ்.ஒ. 9, ஸெடார், யு. 69 போன்றவைகள். இதில் ஆர்.எஸ்.ஒ. 9 விவாதத்திற்குள்ளாகி, யாரும் எடுக்காமல், அப்படியே நிறுத்தப்பட்டிருக்கிறது. நவீன முறையில் விற்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கிறது. இந்த ட்ராக்டர்கள் கைவசத்தில் இருக்கின்றன. விவசாயிகள் குறிப்பிட்ட நிறுவனத்தின் ட்ராக்டர்கள் வேண்டும் என்று விரும்புகிறார்கள். இதனால்தான் தாமதமும் ஏற்படுகிறது. யாராவது உடனடியாக வேண்டுமென்றால், ஆர்.எஸ்.ஒ. 9 ட்ராக்டரைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்திலிருக்கும் விவசாயிகள் சிறு சிறு விவசாயிகள், அவர்களால் யு. 500 போன்ற 50 எச்.பி. (குதிரைத் திறன்) ட்ராக்டர்களை வாங்கிப் பயன்படுத்த முடியாது. செடார், பர்கூஸன் போன்றவற்றை அந்த மாவட்ட விவசாயிகளுக்கு அளிக்க அரசாங்கம் முன் வருமா? அதோடு அவர்கள் பயன்படுத்தும் ட்ராக்டர்களை சரி பார்க்கத்தக்க அதற்குத் தேவையான ஒர்க்ஷாப் அங்கேயில்லை. ஆகவே, அவர்கள் சென்னைக்கு வரவேண்டியது இருக்கிறது. வடாற்காட்டிலேயே ஒரு ஒர்க்ஷாப் நிறுவ ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



1971 ஜூலை 9]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சமீபத்தில்தான் வடாற்காடு மாவட்டத்தில் ஒரு வாடகைக்கு அளிக்கும் நிறுவனம் அக்ரோ–இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷனால் நிறுவப்பட்டிருக்கிறது. அதில் பழுது பார்க்கும் தொழிற்சாலையும் நிறுவ யோசனை கூறப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா : அந்நிய நாடுகளில் இருந்து டிராக்டர்களை இறக்குமதி செய்ய ஒரு குழு பரிசீலனை செய்கிறதா? யாராவது சிலபேர் முடிவு செய்கிறார்களா? காரணம் இன்றையதினம் வந்திருக்கிற டிராக்டர்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றனவே, இது போல் இனி நடவாதிருக்க டிராக்டர்கள் இறக்குமதியைக் கவனிக்க ஒரு குழு அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பொதுவாக மத்திய சர்க்காரால் இறக்குமதி செய்யப்பட்டு மாநிலங்களுக்கு வழங்கப்படுகிறது. நமது மாநிலத்தில் அக்ரோ–இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலம் வழங்கப்படுகிறது.

திரு. த. சோனையா : சில பஞ்சாயத்து ஒன்றியங்களில் டிராக்டர்கள் இல்லாமல் இருக்கிற குறையை அரசாங்கம் கவனிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பஞ்சாயத்து ஒன்றியங்கள் தங்கள் பொது நிதியில் இருந்து டிராக்டர்கள் வாங்கிக் கொள்ளலாம் என்கிற அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிறது. நான் தலைவராக இருந்த லால்குடி ஒன்றியத்தில் கூட ஒன்று இருந்தது. போதாது என்று இரண்டாவதும் வாங்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : டிராக்டர்களை வாங்குவோருக்கு என்ன என்ன தகுதி இருக்கவேண்டுமென்று அரசாங்கம் விதிமுறைகள் வகுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : உண்மையான உழவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் தகுதி.

திரு. பெ. மலைச்சாமி : வேளாண்மைத் துறையில் டிராக்டர்களைப் பயன்படுத்துவது விவசாயத் தொழிலாளர்களைப் பாதிக்கும் என்பதாக சில அரசியல் கட்சித் தலைவர்கள் சொல்லி வருகிறார்களே, இது பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கனவே அப்படிப்பட்ட கருத்து இருந்தது. இப்போது அப்படி இல்லை. டிராக்டர்கள் கிடைக்கவில்லையே என்று சொல்கிறார்களே தவிர, தேவையில்லை என்று சொல்லவில்லை.

திரு. சோ. அழகர்சாமி : அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலம் டிராக்டர்கள் விற்பனை செய்வதில் கூட்டுறவு சங்கங்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றுக்கு முன்சலுகை–ப்ரயாரிடி–கொடுத்து சப்ளை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : யூனியனுக்கு இப்போதே அப்படிப்பட்ட சலுகை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. ரா முனுசாமி: அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலம் வழங்கப்படுகிற டிராக்டர்கள், நிலவள வங்கிகளில் லோன் சாங்ஷன் ஆகியிருக்கிறவர்களுக்கு முதலாவதாகக் கொடுக்கப்படுமா? அப்படி இல்லாத காரணத்தினால், லோன் சாங்ஷனாகி, டிராக்டர் கிடைக்காது பின்னர் இந்த லோனை கான்சல் செய்ய வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போதே ஹயர் பர்சேசில் 256 டிராக்டர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் நிலவள வங்கிகள் மூலம் வழங்க அவர்கள் வைத்திருக்கிற சில விதிமுறைகளுக்கு ஒத்துவந்தால் உடனடியாகக் கொடுக்கிறார்கள்.

திரு. க. பழனிவேலன்: தலைவர் அவர்களே, இறக்குமதி செய்யப்படுகிற வெளிநாட்டு டிராக்டர்களுக்கு உதிரி உறுப்புகள் கிடைக்கவில்லையே, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நான் முன்பு சொன்னது போல அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலம் பழுது பார்க்க வகை செய்யப்பட்டிருப்பதோடு, துணைக் கருவிகளும் வாங்கப்பட்டு விற்கப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. தேவேந்திரன்: அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலமாக வாங்கப்பட்ட ஜெர்மன் டிராக்டர்கள் 1967-ல் இருந்து விற்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கனவே சொன்னேன். ஆர்.எஸ்.ஓ. 9 என்கிற ரக டிராக்டர்கள் விற்கப்படாமல் 129 கைவசம் இருக்கிறது.

திரு. கோவை செழியன்: ஒரு மாதத்திற்கு முன்னால் மத்திய சர்க்கார் அமைச்சர் திரு. ஸி. சுப்பிரமணியம் அவர்கள் டிராக்டர்களைத் தடை செய்ய வேண்டுமென்று பேசியிருக்கிறார்களே, இது சம்மந்தமாக மத்திய சர்க்காரிடம் இருந்து நமக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி ஒன்றும் இல்லை. நமக்கு ஒதுக்கப்பட்டிருப்பது போதாது, அதிகம் வேண்டுமென்றுதான் எழுதப்பட்டிருக்கிறது.

THIRU K.M. SUBRAMANIAM: Is it not a fact that the German tractors which are lying idle are found to be below standard? Have representations been made to the German Consul concerned that these tractors should be taken back? May I know whether any action has been taken by the Agro Industries Corporation in this connection?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட டிராக்டர்கள் கூட தேவையில்லை என்ற நிலைமையில் ஆங்காங்கே சாலையிலேயே நிறுத்தப்பட்டன என்பதை பத்திரிக்கையில் அறிந்திருப்பீர்கள். ஏதோ ஒன்று





பிடிக்கவில்லை என்றால், உடனே எல்லோரும் அது பிடிக்கவில்லை என்கிறார்கள். விதையைக் கொடுத்து பயிரிடுங்கள் என்றாலும் உடனே ஏற்றுக்கொள்வதில்லை. வாங்கி விதைத்து வெள்ளாமை அதிகம் வந்துவிட்டால் அந்த விதைதான் வேண்டும் என்கிறார்கள். அது போல இந்த ஜெர்மன் டிராக்டர்கள் வருவதற்குள்ளேயே என்ன காரணத்தினாலோ இது சரியில்லை என்ற பேச்சு வந்துவிட்டது. இது பற்றி மத்திய சர்க்காரும் ஜெர்மன் நிறுவனத்தாருடன் கடிதப் போக்குவரத்து கொண்டு இவற்றை எல்லாம் பழுது பார்த்து குறைந்தவிலையிலும் இவற்றைக் கொடுக்க அவர்கள் தயாராக இருப்பதாக கடிதம் வந்திருக்கிறது. இன்னும் பழுது பார்க்கப்படாத காரணத்தினால்தான் விற்கப்படாமல் இருக்கிறது. இந்த ஆர்.எஸ்.ஓ. 9 தான் வாங்கப்படாமல் இருக்கிறது.

திரு. து. சோனையா: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு எல்லாம் டிராக்டர்கள் வழங்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய திருபுவனம் பஞ்சாயத்து ஒன்றியத்திற்கு டிராக்டர் வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பஞ்சாயத்து ஒன்றியங்கள் தங்கள் பொதுநிதியில் இருந்து தேவையானால் டிராக்டர்கள் வாங்கிக் கொள்ளலாம் என்பதாக அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னேன். இதற்கு முன் இருந்த திருபுவனம் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் என்ன காரணத்தினாலோ டிராக்டர் வாங்கவில்லை என்றாலும், இப்போதுள்ள தலைவர் சோனையா அவர்கள் பொதுநிதியில் இருந்து தேவைப்பட்டால் திருபுவனம் பஞ்சாயத்து ஒன்றியத்திற்கும் டிராக்டர் வாங்கிப் போடலாம். சம்பந்தப்பட்டவர்களுக்கு அதற்காக சிபார்சும் செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஆங்காங்கு தரமான மினி-சிறு-டிராக்டர்கள் வழங்க அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது? அதுபோல இன்னும் வழங்கப்படாமல் இருக்கிற பகுதிக்கு வழங்க ப்ரையாரிடி கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

THIRU B. VENKATASWAMY: Members of Legislature are being given preference in the quota of cars. Many M.L.As. are engaged in agriculture. Will this Government come forward to give priority for purchase of tractors to those M.L.As who apply for tractor.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: விவசாயிகளுக்கு என்று டிராக்டர்கள் கொடுக்கிறோமே தவிர, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எதுவும் கொடுப்பதாக இல்லை.

அறநிலையங்களைச் சேர்ந்த நிலங்களைப் பயிரிடும் விவசாயிகள்

* 177 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயில், மடம் மற்றும் தர்ம ஸ்தாபனங்களில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அந்த நிலங்களைச் சொந்தமாக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கோயில், மடம் மற்றும் பப்ளிக் டிரஸ்ட் ஆகியவற்றின் நிலங்களை நீண்டகாலமாக சாகுபடி செய்து வருகிறவர்களுக்கு, நிலக் கிரயத்தை நீண்ட கால தவணை முறையில் வாங்கி அவற்றுக்கு அளித்துவிட்டு நிலத்தை சாகுபடிக்காரர்களுக்கே சொந்தமாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இப்போது இருக்கிற 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து மத அறநிலைய பாதுகாப்புச் சட்டத்தின்படியும், 1961 பப்ளிக் டிரஸ்ட் ஆக்ட்படியும் சாகுபடிக்காரர்களுக்கே சுவாதீன உரிமை வழங்க இடமில்லை.

திரு. எஸ். கணேசன் : தர்மபுரம், திருவாடுதுறை ஆதினங்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பயிரிடும் விவசாயிகள்—கடந்த இரண்டாண்டு பெருமழையின் காரணமாக சாகுபடி பாதிக்கப்பட்டதனால் பாக்கியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரி அரசுக்கு மனுச் செய்துள்ளார்களா? அதன்மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதுபற்றிய விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : கோயில், மடங்களுக்குச் சொந்தமான நிலங்கள் மொத்தம் எவ்வளவு ஏக்கரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். சுரேந்திரன் : கோயில் மடம் மற்றும் தர்ம ஸ்தாபனங்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது, எவ்வளவுபேர் சாகுபடி செய்கிறார்கள் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்வி கேட்கப்பட்டு விட்டது. வேறு கேள்வி போடுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கிற பல ஆலயங்களுக்குத் தங்களுடைய சொத்துக்கள் எவ்வளவு என்ற விவரம் தெரியவில்லை. மாண்புமிகு அற நிலைய அமைச்சர் அவர்கள் உடனடியாக ஒவ்வொரு கோயிலுக்கும் தனித்தனியாக எவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றன என்ற விவரத்தை ஒழுங்காக தயார் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களையெல்லாம் தனிப்பட்ட நபர்கள் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். அவைகளையெல்லாம் கண்டு பிடித்து ஆலயங்களுக்குச் சொந்தமாக்குவதற்கு ஒரு தனி அதிகாரி டி.ஆர்.ஓ. அளவில் நியமித்து அவருக்குக் கீழே சில டெபுடி கலெக்டர்களை நியமித்து அரசாங்கம் இன்றையதினம் அப்படிப்பட்ட நிலங்களையெல்லாம் கண்டு பிடித்துக் கொண்டு வருகிறார்கள். இது வரை அப்படி சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நிலங்களைக் கண்டு பிடித்து இருக்கிறார்கள். மேலும் தீவிரமாகக் கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, கோயில் நிலங்களைப் பயிரிடும் உண்மையான விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் குத்தகை வசூல் செய்வதன் மூலம் அவர்களுக்கு உள் குத்தகைதாரர்களிடமிருந்து விடுதலை கிடைக்க அரசாங்கம் வழி வகுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : உறுப்பினர் அவர்கள் கூறிய புகாரும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட உள் குத்தகைதாரர்களை எவ்வாறு நீக்குவது என்பது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவர் அவர்களே, ஆண்டவனுக்குச் சொந்தமான நிலங்களை குத்தகை எடுப்பவர்கள் உண்மைக்குப் புறம்பான கணக்குகளையும் குத்தகையினுடைய அளவையும் குறைத்துக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இவைகளைத் தடுப்பதற்குக் குத்தகைதாரர்களை மாற்றியும், மற்ற நடவடிக்கைகள் எடுக்கவும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நியாயமான குத்தகை கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மண்ணாசை, பொன்னாசை, பொருளாசை—இந்த மூன்றும் ஆண்டவனுக்குக் கூடாது என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட ஆண்டவனுக்கு வேலிக் கணக்கில் நிலங்கள் இருப்பதில் பிரயோசனம் இல்லை. இவற்றையெல்லாம் எடுத்து நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் தனிச் சட்டம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆண்டவன் பெயரால் நிலங்கள் இருந்தாலும் இப்போது உழைக்கிற ஏழைகள்தான் அதை விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கோயில் நிலங்களை மற்றவர்கள் வைத்திருப்பதில் 40 ஆயிரம் ஏக்கர் நிலங்களைக் கண்டு பிடித்திருப்பதாகச் சொன்னார்கள். கண்டு பிடித்த நிலங்களைத் திரும்பப் பெறச் செய்வதில் எந்த அளவிற்கு அரசாங்கம் வெற்றி பெற்றிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, கண்டுபிடித்திருக்கிற நிலங்களை மீண்டும் கோயில்களுக்குச் சேர்ப்பதற்கு, தனியாக அதிகாரிகளை நியமித்து, பரிசீலனை செய்ய ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறோம்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை டிரஸ்டிகள் பயன்படுத்தி பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைச் சாப்பிட்டு விட்டதைக் கண்டறிந்த ஆண்டவன் ஒரு பையன் உருவத்தில் வந்து டிரஸ்டிகளை மிரட்டியதாகச் செய்தி, அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அப்படி ஆண்டவன் ஆற்காட்டில் வந்ததாக நான் கேள்விப்படவில்லை.

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, இந்த இந்து மத அற நிலைய சட்டத்தின் கீழ் வராமல், தனியார் பொறுப்பு கழகங்கள், பிரைவேட் டிரஸ்ட் பேரில் மடங்கள், சத்திரங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. அவைகளை ஏழை விவசாயிகள் பயிரிடுகிறார்கள். அந்த விவசாயிகளுக்கும் அந்த நிலங்களை வாங்கித் தர ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பொது பொறுப்புக் கழகங்கள்–பப்ளிக் டிரஸ்ட் ஆக்டின் கீழ் உள்ள கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் மட்டுமல்லாது, மடம், மசூதி, மாதா கோயில் அல்லது சமுதாயத்தில் ஒரு பிரிவினரின் நன்மைக்காக உள்ள பொது இடங்கள், வழிபாட்டிற்காக பயன்படுத்தும் இடங்களும், அறக்கட்டளைகளும், கல்வி நிறுவனங்களும் இதற்குக் கட்டுப்படும்.

திரு. கோ. சிவபெருமாள்: தலைவர் அவர்களே, பெரிய கோயில்களில் முக்கால பூஜை என்ற பெயரில் ஏராளமான உணவுப் பொருள்கள் படைக்கப்படுகிறது. அவற்றை ஏழை எளிய பிள்ளைகளுக்கு மதிய உணவாகக் கொடுக்கப்படுமா அல்லது அங்குள்ள பெரியவர்கள்தான் சாப்பிட வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இது நல்ல யோசனை.

திரு. அ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை விடும் முறையை அரசாங்கம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, 1963-ம் ஆண்டு இனாம் சட்டப்படி அந்த ஆண்டுக்கு முன்னாலேயிருந்து பூமி வைத்திருக்கிறவர்களுக்கு அந்த நிலங்களைச் சொந்தமாக்கியிருக்கிறார்கள். அதேபோல 12 ஆண்டுகளுக்கு முன்னாலே இருக்கிறவர்களுக்கு



10 சதவீதம் லேண்டு வேல்யூவிலே பட்டா செய்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே இருக்கிறவர்களுக்கு அதே முறை பின்பற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ரெவின்யூ அமைச்சரிடம் கேட்க வேண்டிய கேள்வி.

திரு. த. சோனையா: தலைவர் அவர்களே, ஆண்டவனுக்குச் சொந்தமான நிலங்களை ஒத்திடு வைக்கிறார்களே, அதைப் பற்றி தகவல் அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மடங்கள் பராமரிப்பில் உள்ள கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்க அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மடம் சம்பந்தமானவைகளுக்கும் அறங்காவலர்களை நியமிக்கிறோம்.

திரு. எஸ். கணேசன்: தலைவர் அவர்களே, நிலத்திற்கு உச்ச வரம்பு கொண்டு வந்திருக்கிறோம். பஸ்களுக்கு உச்ச வரம்பு கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் தருமபுரம், திருவாடுதுறை போன்ற மடங்களும் இவ்வளவு நிலங்கள் தான் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற உச்ச வரம்பு கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஏற்கெனவே நில உச்ச வரம்பு சட்டத்தில் கோயில் நிலங்களுக்கு விதி விலக்கு தரப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிற குழு தான் முடிவெடுக்க வேண்டும்.

திரு. சொ. காவேரிமணியம்: தலைவர் அவர்களே, நிலங்கள் இல்லாத கோயில்கள் இருக்கின்றன. நிலங்கள் அதிகமாக இருக்கக் கூடிய கோயில்களிலிருந்து நிலங்களைப் பிரித்து, நிலமில்லாத கோயில்களுக்குக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நிலத்தைப் பிரித்துக் கொடுக்காவிட்டாலும் அதிகமான வருவாய் உள்ள கோயில்கள் நிதியிலிருந்து எடுத்து, நிதியில்லாத கோயில்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, கோயில்களுக்கும் மடங்களுக்கும் இருக்கிற நிலங்கள் அறக்கட்டளைகளைப் பராமரிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. இது வெகு காலத்திற்கு முன்னால் ஏற்பட்ட ஒரு ஏற்பாடாக இருப்பதனால், புது நிலைமைகளுக்கேற்ற முறையில் அறக்கட்டளைகளைப் பராமரிப்பதற்கு ஒவ்வொரு மடத்திற்கும் எவ்வளவு நிலங்கள் தேவை, அவைகளுக்கு எவ்வளவு வருமானம் என்பதைப் பற்றி ஒரு சர்வே செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அப்படிப்பட்ட எண்ணம் இல்லை.

திரு. என். இராஜாங்கம்: தலைவர் அவர்களே, அற நிலைய பாதுகாப்புத் துறையின் கீழ் இதுவரைக்கும் எடுக்கப்பட்ட பட்டியல் போக, அநேக இடங்களில் மடங்கள், கோயில் சொத்துக்கள் பிறரால் அனுபவிக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட புகார்கள் குவிந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும் இப்படி பொது சொத்து எவ்வளவு, கோயில்களின் பேரால் சொத்து எவ்வளவு என்பதை கிராம அதிகாரிகள் மூலம் கண்டு பிடித்து முறையான பட்டியலைத் தயாரிக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நான் ஏற்கெனவே ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். தனியாக டி.ஆர்.ஓ. அளவில் அதிகாரி நியமித்து ஒவ்வொரு மாவட்டத்திலேயும் கணக்கெடுத்து குறிப்பிட்ட தேதிக்குள்ளாக அனுப்பிவைக்க வேண்டுமென்று உத்திரவை அரசாங்கம் அனுப்பியிருக்கிறது. தீவிரமான முறையில் இப்படிப் பட்ட நிலங்களை யார் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கண்டுபிடித்து, கணக்கு தந்து கொண்டிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, திருவள்ளுவரைப் பாராட்டுகிற இந்த அரசாங்கம். என் தொகுதியில் ஒரு வள்ளுவர் கோயில் இருக்கிறது. அது வறுமையில் வாடிக் கொண்டிருக்கிறது. வளம் படைத்த கோயில்களின் நிதியிலிருந்து இந்த கோயிலுக்கு நிதியைத் திருப்புவதற்கு அரசாங்கம் முன் வருமா, அந்தக் கோயில் முன்னேறுவதற்கும், உலகப் புகழ் பெறுவதற்கும் ஆவன அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அங்குள்ள அறங்காவலரிடமிருந்து இந்த கோரிக்கை ஏற்கெனவே முதல்வர் அவர்களுக்கு வந்திருக்கின்றது. அதுபற்றி விரைவிலே பரிசீலனை செய்து இந்த உலகப் புகழ் பெற்ற வள்ளுவன் கோயில் நல்ல முறையில் சீர்திருத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].





## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை இரப்பர் தொழிற்சாலை தொழிலாளர்களின் பத்து வாரப் போராட்டம் சட்டப் புறம்பானது என்று அறிவிக்கப்பட்டதினால் தொழிலாளரிடையே ஏற்பட்டுள்ள அமைதியின்மை

MR. SPEAKER: Dr. H. V. Hande has given notice of an Adjournment Motion, namely,

"I move that the business of the House stands adjourned to discuss a matter of urgent public importance, namely the unrest prevailing among the workers of the Madras Rubber Factory on account of the declaration of the ten weeks' old strike as illegal."

Thiru K. T. K. Thangamani, Thiru A. Subramaniam, Thirumathi T. N. Anandanayaki and Thiru Wahab have also given similar Adjournment Motions.

DR. H. V. HANDE: Sir, I request the Hon. Speaker to adjourn the business of this House for about half an hour or one hour......

MR. SPEAKER: The hon. Member will please explain briefly how it comes under an Adjournment Motion.

DR. H. V. HANDE: I am explaining it. I request the Hon. Speaker to adjourn the business of this House for the following reasons: This is a very important subject and this may not brook the delay of having a discussion during the Labour Demand which is a little far off. In the meantime we will have to discuss and see that the unrest prevailing among the workers is, to a certain extent, solved because even today though the workers are reported to have resumed work through the Press, there is also an order by the Deputy Superintendent of Police, Thiruvottiyur, prohibiting the assembly of five or more persons in that area, probably for fear that there may be some sort of unrest or violence that may break, which means that the unrest is still there and it has not been solved.

The workers there have gone on strike about 10 weeks ago and it is true that the Hon. Chief Minister and the Hon. Minister for Labour tried to bring about a settlement through a compromise formula and they failed. Finally the matter has been referred to adjudication. Sir, the unrest is still there. The Hon. Chief Minister and the Hon. Minister for Labour can once again call trade union leaders and also those who are in the Union and sit across the table and discuss the matter. Even now it is not too late to solve the problem and bring about an amicable settlement and see to it that the workers are satisfied and the factory also runs on a smooth footing. Another point is that since the strike has been declared illegal the workers have been forced to rejoin. Instead of the strike being declared illegal, it would be better if the Hon. Chief Minister and the Hon. Minister sit across the table and discuss the matter. It is to discuss these details that I want that the business of the House do stand adjourned.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த எம்.ஆர்.எப்.-இல் பணியாற்றக்கூடிய ஒரு இரண்டாயிரம் தொழிலாளர்கள் சில கோரிக்கைகளை வைத்து தங்கள் சங்கத் தலைவர்கள் மூலமாக பேச்சு வார்த்தைகள் நடத்தினர். அந்தப் பேச்சு வார்த்தை நீண்டு கொண்டே போன காரணத்தினால், சட்டப்படிதான் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அந்த வேலை நிறுத்தத்தின்போது இவ்வளவு நாள் நீடித்த வேலை நிறுத்தம் செய்திருக்க வேண்டுமா என்பது வேறு விஷயம். அது சிக்கிரத்திலே முடிந்திருக்கலாம். 80 நாட்களுக்கு மேலாக வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. 80 நாட்களாக இரண்டாயிரம் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுடைய நிலைமை பரிதாபமானதாகும்.

அதுமாத்திரம் இல்லாமல் இந்தத் தொழிற்சாலை நல்ல முறையிலே சம்பாதித்துக்கொண்டு நாட்டுக்குத் தேவையான "மேன்ஸ் பீல்ட்" ரப்பரை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். இப்படிப்பட்ட இந்தத் தொழிற்சாலை 80 நாட்களாக இயங்காமல் செயலற்றிருப்பதும் தொழிலாளர்கள் வாடுவதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக எழுப்பப்படும் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், சென்னைக்கு அருகே இருக்கும் மிக முக்கியமான தொழிற்சாலையில் இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருப்பதிலிருந்தே இந்த அரசாங்கம் எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கிறது தொழிலாளர்கள் பிரச்சினையிலே என்பது தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதிருக்கும் நிலைமை இந்த தீர்மானத்தை அவையில் அனுமதிக்கலாமா, வேண்டாமா என்பதுதான். வழக்கறிஞர் நீங்கள். 10 வருடங்களுக்கு மேலாக இந்த அவையில் இருந்திருக்கிறீர்கள். ஒற்றிவைப்புத் தீர்மானம் இந்த அவைக்கு வந்ததற்குப் பிறகு சொல்லவேண்டிய வாதங்களைத் தாராளமாகச் சொல்லலாம். (திருமதி அனந்தநாயகி அவர்கள் எழுந்து நின்றார்) உட்காருங்கள். இதிலே அரசாங்கத்தினுடைய பொறுப்பு என்ன இருக்கிறது? சாதாரண ஆர்டினரி அட்மினிஸ்ட்ரேஷனுக்கு, நடைமுறைக்கு மீறி இதில் என்ன இருக்கிறது என்பதை மட்டும்தான் சொல்ல வேண்டும். பல ஆண்டுகளாக இங்கு நீங்கள் இருந்திருக்கிறீர்கள். முதலில் இதை அனுமதிக்கலாமா என்பதற்கு எந்தச் சட்ட விதிகளின் கீழ் வருகின்றது என்பதைப் பற்றித்தான் விவாதிக்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சபாநாயகர் அவர்களே, நான் அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் ஏதோ அவசரப்படுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப்படுகிறேன் என்பதை வித்ட்ரா பண்ணிக்கொள்ளுங்கள்.



திருமதி த. ந. அனந்தநாயகி: வேண்டுமென்றால் வித்ட்ரா பண்ணிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : I am so sorry. The Hon. Member must withdraw that word. "வேண்டுமென்றால்" என்பதையும் திருப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : திருப்பிப் பெற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன் நான். நான் சொன்னதிலே என்ன தவறு இருக்கிறது என்பதை எனக்குச் சொல்ல வேண்டும். நான் சொன்ன சொல்லிலே தவறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறு ஒன்றும் இல்லை. நீங்கள் இப்படிச் செய்ய வேண்டுமென்று விளக்கிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் பொறுமையோடு விவாதிக்க வேண்டும். ஒற்றி வைப்புத் தீர்மானம் சபையில் வரும்போது அதைச் சபையிலே அனுமதிக்கலாமா என்பதைப் பற்றி விவாதிக்கலாம். அதிலே அரசாங்கத்தின் பொறுப்பு என்ன என்பதைப் பற்றி பின்னால் தீர்மானம் சபைக்கு வந்தபின் விவாதிக்கலாம். நீங்கள் ரொம்ப நாட்களாக சபையில் இருக்கிறீர்கள். ஆகவே இப்படியெல்லாம் பேசக்கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன். எப்படி இது ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கான விதிகளின்கீழ் வருகிறது என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சபாநாயகர் அவர்களே, நான் அந்த தீர்மானத்தைப் பற்றித்தானே பேசிக் கொண்டிருக்கிறேன். 80 நாட்களாக வேலை நிறுத்தம் நடக்கிறதே அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதை ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்தீர்மானத்தை இந்த அவையிலே எப்படி அனுமதிக்கலாம் என்பதைப் பற்றித்தான் இப்பொழுது பேச வேண்டும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, On a point of order. No member of this House has got any right to attribute motives to the Hon. Speaker or to explain the reasons for having spoken something which is not in order.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I too know about it. I have been a Member for about 10 years and I have also seen a number of Hon. Speakers and the Chair need not think that I am attributing motive to the Chair. I am only explaining the reasons why this House should be adjourned. . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் பேசுகிறபோது இந்த அரசாங்கம் எப்போதும்போல மிகவும் தாமதமாக இயங்குகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். அது ஒரு அவசரத் தீர்மானத்திலே முன்கூட்டி சொல்லக்கூடிய

வார்த்தை அல்ல. அந்த வார்த்தையை இந்த அவை ஏற்றுக் கொள்ளக்கூடாது. தவிர அவையின் நடவடிக்கையிலேயிருந்து அந்த வார்த்தையை எடுக்க வேண்டுமென்று சபாநாயகர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவையின் தலைவர் அவசரப் படுகிறார்கள் என்று சொன்னதை வாபஸ் வாங்கவில்லை. அப்படியே இருக்கலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை. எல்லோருக்குமே நான் சொல்லிக் கொள்கிறேன். கூடுமானவரையில் 42-வது விதியின்கீழ் இருக்கும் ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்பற்றி, அதில் என்ன சொல்லியிருக்கிறது என்றால் :

It states as follows :—

' (viii) The matter to be discussed must involve more than the ordinary administration of the law.

(ix) The motion must not refer to grievances which can be remedied only by legislation.

(x) The motion must refer to a matter in which the responsibility of the Government is clearly involved.'

So, the responsibility of the Government must be clearly involved and not likely to be involved. Also, it should involve more than the ordinary administration of law.

இந்த இரண்டு மூன்று விதிகளிலே வரும் வரம்புக்குள்ளேயிருந்து தான் சொல்லவேண்டும். அனுமதித்ததற்குப் பிறகு ரொம்பத் தாராளமாகப் பேசுவதற்கு உரிமைகள் அவையிலே எல்லா உறுப்பினர்களுக்கும் உண்டு. இந்த அவச்ரத் தீர்மானத்தை அவையிலே அனுமதிக்கலாமா வேண்டாமா அதற்கு வேண்டிய மேலெழுந்தவாரியான காரணங்கள் இருக்கின்றனவா என்பதை விவாதிக்கையில் ரொம்ப ஆழமாகப்போய் மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதிக்கக் கூடாது என்பதைத்தான் சொன்னேன். இப்போது இந்தத் தீர்மானம் எப்படி விதிகளின்கீழ் வருகிறது என்று சொல்லுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த ரெசலூஷனிலே என்ன எமர்ஜென்சி என்பதைத் தெரிந்துதான் சொன்னேன். 80 நாடகளாகப் பேசாமலிருக்கிறீர்கள். இதைவிட வேறு என்ன அர்ஜென்சி வேண்டும்.

If the privilege of the member to bring forward an adjournment motion is not there, there is no use of remaining in this House. I therefore walk out.

(The hon. Member Thirumathi T. N. Anandanayaki then walked out of the House).



Thiru R. PONNAPPA NADAR : The hon. Member should have the right to say what she wants to say. We are not to be insinuated. That is not the way in which we should be treated.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பொன்னப்ப நாடார், கொஞ்சம் அமருங்கள். இத்துடன் இந்த விவகாரத்தை முடித்து விடலாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

Thiru R. PONNAPPA NADAR : One of our party members had walked out. It is not fair that we should remain here. With due respect to the Hon. Chief Minister let me say there is no meaning in our continuing here. Every member should be able to represent his or her grievartance. We are also walking out of the House.

(The Members of the Organisation Congress then walked out of the House.)

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இங்கே மெட்ராஸ் ரப்பர் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்பற்றி இந்த ஒத்திவைப்புத் தீர்மானம். இந்த அரசு தொழிலாளர்கள் நலனைப் பாதுகாக்கிறது என்ற காரணத்தாலே 80 நாட்களாகப் பல தொல்லைகளை அனுபவித்துக்கொண்டு வருகிற தொழிலாளர்களுக்குப் பல முறை கருணையோடு தொழிலாளர்கள் நலனைப் பாதுகாத்து வருகிறது அரசு, இந்தக் குறிப்பிட்ட தொழிலாளர்கள் பிரச்சினையில் நல்ல தீர்வு காணவேண்டும், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகப்படியாக அக்கறை செலுத்துமாறு அவரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூரிலிருக்கும் மெட்ருஸ் ரப்பர் பாக்டரியில் ஏறக்குறைய 1,600 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் ஊதிய உயர்வு, பஞ்சப்படி உயர்வு, மற்றும் பல கோரிக்கை களை எழுப்பி அதற்கு ஆதரவாக 17—4—1971 முதல் வேலை நிறுத் தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இந்தத் தகராறில் எழுந்த பிரச்சினைகளை நிர்வாகத்தினரும் தொழிலாளர்கள் சார்பில் மெட்ருஸ் ரப்பர் பாக்டரி எம்ப்ளாயிஸ் யூனியனும் சில காலம் நேரிடைப் பேச்சு வார்த்தையில் விவாதித்து வந்தனர். அதன்மூலம் தீர்வு காணாததால் தொழிற் தகராறு சட்டத்தின்படி தொழிலளார் துறை அலுவலர் முன்னிலையில் சமரச நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்மூலமும் உடன்பாடு ஏற்படாததால் தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் ஜூன் மாதம் 10-ம் தேதி முதல் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு ஜூன் மாதம் 21-ம் தேதிவரை நடந்தன. இறுதி யில் ஜூன் மாதம் 22-ம் தேதி தொழிலாளர் நல அமைச்சர் அவர்களே இந்தப் பிரச்சினையில் தலையிட்டு இரு தரப்பாருடன் பேச்சு வார்த்தை நடத்தினர். நிர்வாகத்தினர் அடிப்படை ஊதியத் திலும் பஞ்சப்படியிலும் ரூ. 22 உயர்வு கொடுப்பதாகவும் ஊக்குவிப்பு ஊதியத்தில், இன்செண்டிவ் போனஸ் ரூ. 30 உயர்வும் கொடுப்பதாக

முன்வந்தனர். யூனியன் தரப்பில் அடிப்படை ஊதியம் பஞ்சப்படியில் ரூ. 45 ஆவது உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். இறுதியாக ஜூன் மாதம் 29-ம் தேதி அமைச்சர், அடிப்படை ஊதியம், பஞ்சப்படியில் ரூ. 32-ம், ஊக்குவிப்பு ஊதியத்தில் இன்சென்டிவ் போனசில் ரூ. 25-ம் உடனடி உயர்வாகவும் இரண்டு வருடம் கழித்து பஞ்சப்படியில் மேற்கொண்டு ரூ. 3 உயர்வும் கொடுக்கலாம் என்றும் அந்த அடிப்படையில் இரு தரப்பாரும் இந்தத் தொழிற் தகராறைச் சுமுகமாக முடித்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினர். அமைச்சரின் அறிவுரையை நிர்வாகத்தினர் ஏற்றுக் கொண்டனர். தொழிற் சங்கத் தலைவர் ஜூலை மாதம் 5-ம் தேதிவரை தவணை வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அமைச்சரும் அதற்கு இணங்கி ஜூலை மாதம் 5-ம் தேதி ஒரு முடிவு ஏற்படாவிட்டால் தகராறைத் தொழிற் கோர்ட்டுக்கு அனுப்பிவைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறினர். ஜூலை 5-ம் தேதி அன்றும் அமைச்சரின் அறிவுரையைத் தொழிற்சங்கம் ஏற்றுக் கொள்ளாததினால் மேலும் உற்பத்திக்கு பங்கம் நீடிக்காமல் இருக்கவும் தொழிலாளர் வேலையின்மையால் பாதிக்கப்படாமல் இருக்கவும் இந்தத் தொழிற் தகராறு தொழிற் கோர்ட்டுக்கு அனுப்பப்படவும் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதைத் தடை செய்தும் அரசு உத்தரவு பிறப்பித்தது.

ஜூலை மாதம் 7-ம் தேதி அன்று மெட்ரூஸ் ரப்பர் பாக்டரி யூனியன் தலைவரும் அதன் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினரும் என்னைச் சந்தித்து அடிப்படைச் சம்பளத்திலும் பஞ்சப்படியிலும் தொழிலாளர் நல அமைச்சர் கூறியதைவிட முதல் ஆண்டில் ரூ. 10-ம் பின்னர் ஆண்டுதோறும் ரூ. 3-ம் அதிகமாக வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றும் ஊக்குவிப்பு ஊதியத்தில் உயர்வு கொடுப்பதைப்பற்றித் தங்களுக்கு அவ்வளவு அக்கறையில்லை என்றும் தெரிவித்தனர்.

நமது மாநிலத்தில் மெட்ரூஸ் ரப்பர் ப்பாக்டரி தவிர, டயர் தயாரிக்கும் தொழிற்சாலை டன்லப் பாக்டரி ஒன்றுதான். அதில் அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி பகுதிக்கும் ஊக்குவிப்பு ஊதியப் பகுதிக்கும் உள்ள விகிதம் 52 : 48. ஆனால் மெட்ரூஸ் ரப்பர் பாக்டரியில் தொழிலாளர் நல அமைச்சர் கூறிய அடிப்படையில் அந்த விகிதம் 76 : 24 என்று அமையும். திருவொற்றியூரில் உள்ள மற்றத் தொழிற்சாலைகள் சிலவற்றை எடுத்துக் கொண்டால், இந்த விகிதம் அசோக் லேலண்டில் 60:40 விகிதமும், விம்கோவில் 66:34 விகிதமும், என்ஃபீல்டில் 75:25 என்றும் அமைந்திருக்கிறது.

ஒரு தொழிலாளிக்குக் கிடைக்கும் மொத்த மாத வருமானத்தை எடுத்துக்கொண்டால், தொழிலாளர் நல அமைச்சரின் அறிவுரையின் அடிப்படையில் மெட்ரூஸ் ரப்பர் பாக்டரி தொழிலாளிக்குச் சராசரி ரூ. 370 கிடைக்கும். இன்னும்கூட ஊக்குவிப்பு ஊதியத்தில் சற்று அதிகமாகக் கொடுப்பதற்கு நிர்வாகத்தினர் தயாராக இருந்தனர். ஆனால் ஊக்குவிப்பு ஊதியத்தை அதிகரிப்பதில் தொழிற்சங்கத்தினர் அக்கறை காட்டாததால் அதை மேலும் பரிசீலிக்கவில்லை. இதை மற்றத் தொழிற்சாலைகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் டன்லப்பில்



ரூ. 375, என்பீல்டில் ரூ. 330, விம்கோவில் ரூ. 255, கார்பரேண்டத்தில் ரூ. 300, நேஷனல் கார்பனில் ரூ. 380 என்று தெரிய வருகிறது. டயர் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் டன்லப் பாக்டரியைவிட 35/40 சத விகிதம் குறைந்த உற்பத்தியுடன் இயங்கிவரும் மெட்ரூஸ் ரப்பர் பாக்டரி நிலையைக் கணக்கிலெடுத்துக் கொண்டால், தொழிலாளர் நல அமைச்சரின் அறிவுரையில் காணும் ஊதிய அடிப்படை தொழிலாளருக்கு மிகவும் அனுகூலமாகவே அமைந்திருக்கிறது என்பது தெளிவாகும்.

மேற்கூறிய சூழ்நிலையில் தொழிலாளர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்புவது சாலச்சிறந்ததாகும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர் நல அமைச்சரின் அறிவுரையின் அடிப்படையில் ஒரு உடன்பாடு அமைத்துக் கொள்வது மிகவும் நல்லது. அல்லது தொழில் கோர்ட்டில் பிரச்சினை இருப்பதால் அதைத் தொழிற் கோர்ட்டின் தீர்ப்புக்கே விட்டுவிடுவது நல்லது என்று தொழிலாளர்கள் கருதினால் அதற்கும் ஆட்சேபணை இல்லை. இவ்விரண்டில் எந்த முறையை ஏற்றுக் கொண்டாலும் தொழிலாளர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்பவேண்டும் என்றும் அதற்குத் தடையாக எந்த நடவடிக்கை எழுந்தாலும் அதற்கு அரசின் ஆதரவு இருக்காது என்றும் தெளிவாக்க விரும்புகிறேன்.

இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்த மதிப்பிற்குரிய சுதந்திராக் கட்சித் தலைவர் டாக்டர் ஹண்டே அவர்கள் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல இயலாத சூழ்நிலை உருவாகி இருப்பதாகச் சொன்னார்கள். தொழிலாளர்களில் பெரும்பாலோர் வேலைக்குச் செல்லத்தயாராக இருக்கிறார்கள். ரப்பர் பேக்டரியில் அவ்வளவு பலம் வாய்ந்த தொழிற்சங்கம் இல்லை, இங்கே வேலைக்குச் செல்லத் தயாராக இருக்கிற தொழிலாளர்களைத் தடுக்க அந்தத் தொழிலாளர்களைப் பயமுறுத்த வேறு பல தொழிற்சாலைகளிலிருந்து, அந்த தொழிற்சங்கங்களிலிருந்து கொண்டு வரப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறார்கள். அதனால் எந்த விதமான அசம்பாவிதமும் ஏற்படாமல் இருக்கக் காவல் துறையினர் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் முஸ்லீம் லீக் சார்பில் நம்முடைய வகாப் அவர்களும் இங்கே எடுத்துக் காட்டியதுபோல அமைச்சர்கள் மட்டத்தில் அதிகாரிகள் மட்டத்தில் எந்த அளவு பேசி இருக்கிறோம் என்று நான் இன்னும் விளக்க வேண்டியதில்லை. இந்த 80 நாளும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கட்டும் என்று வேடிக்கை பார்த்துக்கொண்டு சும்மா இருக்கவில்லை. அதிலே தீவிரவாதிகள் அரசின்மீது வீண் பழி சுமத்தவேண்டும் என்று அதில் நுழைந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வருவதன்மூலம் அந்தத் தீவிரவாதிகளைப் பலப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தீர்மானத்தைத் தந்தவர்களுக்கு நிச்சயமாக இருக்காது என்று எனக்கு நன்றாகத் தெரியும். வேலை நிறுத்தம் சில காலம் நடக்கும், அரசுக்கு இதன்மூலம் இடையூறு கொடுக்க வேண்டும் என்று இந்தக் காரியத்தில் தீவிரவாதிகள் ஈடுபட்டு இருக்

கிறார்கள். அரசு மிகுந்த அக்கறையோடு கவனித்து வருகிறது என்பது மட்டுமல்ல, அமைதிக்கும் பங்கம் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் காவல் துறை கண்காணிப்போடு எச்சரிக்கை யோடு இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு, இது அன்றாடப் பிரச்சினை, இதற்காக இந்த அவையின் அலுவல்களை ஒத்திவைக்கத் தேவை இல்லை. இத்தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதற் கான அனுமதி மறுக்கப்படுகிறது.

## (3) கவன ஈர்ப்பு

### (அ) குமரி மாவட்டத்தில் உணவுப் பொருள் வழங்கும் துறைமூலம் வழங்கப்பட்ட அரிசியின் விலை உயர்வுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் மாண்புமிகு உணவு–வணிக வரித் துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்கு ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Revenue to a matter of urgent public importance, namely, the rapid rise in prices of rice supplied through the Civil Supplies Agency in the month of June 1971 in Kanyakumari district.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே 1964-ம் ஆண்டு தென் மாநிலங்கள் (அரிசி ஏற்றுமதியை முறைப்படுத்தல்) ஆணையின் விதித்துறைகளுக்கிணங்க, 15 மைல் சுற்றளவுக்குள், இம் மாநிலத்துக்கும், கேரள மாநிலத்துக்கும் இடைப்பட்ட எல்லைப் பகுதிகளில் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு நெல், அரிசி எடுத்துச் செல்வது, அனுமதிச் சீட்டுகள்மூலம், முறைப்படுத்தப்படுகிறது. நகரைச் சுற்றியுள்ள இந்தப் பகுதிகளில் தானியங்களைச் சேமித்து வைத்து, முடிவாகக் கேரள மாநிலத்துக்குக் கள்ளத்தனமாக ஏற்றி யனுப்புவதைத் தடுப்பதே இந்தக் கட்டுப்பாட்டு விதிமுறையின் நோக்கமாகும். ஒரு பகுதியின் தேவைகளையொட்டி, அனுப்பப்பட வேண்டிய அளவுகள் உள்ளூர் உற்பத்தியையொட்டி முடிவு செய்யப் படுகின்றன. இவ்வாறு மதிப்பிடப்பட்ட மொத்த வரம்புக்குட்பட்டு, அந்தப் பகுதியிலுள்ள வணிகர்களுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கப் படுகின்றன.

இந்த முறையினையொட்டி, கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங் கோடு வட்டத்தில் அனுமதி பெற்ற சில்லறை வணிகர்களுக்கு அரிசியைப் பகிர்ந்தளிப்பதில் மொத்த வணிகர்களாகச் செயல்பட இரண்டு கூட்டுறவு நிறுவனங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிக்குள் அரிசி இருப்புக்களை எடுத்துச் செல்ல மொத்த





வணிகர்களே அனுமதிக்கப்படுகின்றனர். நகரைச் சுற்றியுள்ள பகுதி யில் அரிசி இருப்புகளை ஏற்றியனுப்ப பெருவாரியான சில்லறை வணிகர்கள் அனுமதிக்கப்பட்டால், இவ்வாறு அரிசி ஏற்றியனுப்பப் படுவதைத் தடுக்க இயலாது. அனுமதியின்றி அரிசி இருப்புகளை ஏற்றியனுப்புவதைச் செவ்வையாகத் தடுப்பதே இதன் நோக்க மாகும்.

மொத்த வணிகர்கள் ஏனைய மாவட்டங்களில் வெளிச்சந்தையி லிருந்து, தங்களுக்குத் தேவைப்படும் அளவிற்கு அரிசி கொள்முதல் செய்கின்றனர். அடக்க விலையையொட்டி அவ்வப்போது அரிசி விலைகளை முடிவு செய்வதன்மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இதைக் கட்டுப்படுத்துகிறார். ஆகவே, விளவங்கோடு வட்டத்தில் அரிசிப் பங்கீட்டை உணவுப் பொருள் வழங்குதுறை செய்வதில்லை. மேலும், உணவுப் பொருள் வழங்கு துறை நியமித்துள்ள எந்த நிறுவனத்தின் வாயிலாகவும் அரசின் அரிசி இருப்புகளிலிருந்து இந்த வட்டத்தில் அரிசிப் பங்கீடு செய்யப்படுவதுமில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்து அரிசியை வழங்குவதில் தற்காலிக இடையீடு ஏற்பட்டு அதனால் இடர்ப்பாடு ஏற்படும்போதுமட்டுமே அரசு அரிசி இருப்புகள் கிடைப்பதைப் பொறுத்து அனுப்பப்படுகின்றது. ஆனால் வழக்கமாகவே இவ்வாறு அனுப்பப்படுவதில்லை.

விளவங்கோடு வட்டத்தில் முடிவு செய்யப்பட்ட அரிசி விற்பனை விலைகள் பின்வருமாறு :—

| ... | 75 கிலோகிராம் கொண்ட மூட்டையின் மொத்த விற்பனை விலை. | ஒவ்வொரு கிலோ கிராம் அரிசியின் சில்லறை விலை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 21—4—1970லிருந்து | 81·75 | 1·12 |
| 7—5—1970லிருந்து | 77·75 | 1.08 |
| 14—4—1971லிருந்து | 74·75 | 1·04 |
| 16—5—1971லிருந்து | 77·25 | 1·07 |
| 25—5—1971லிருந்து | 83·00 | 1·15 |

விலைகளில் காணும் வேறுபாடுகள் பருவங்களுக்கேற்ப வேறு படும். முக்கிய அறுவடையைத் தொடர்ந்து விலைகள் சரிந்தன. ஜூலை–செப்டம்பரில் ஏற்பட்ட விலை உயர்வு பருவ மாறுபாட்டினால் ஏற்பட்டதாகும். இந்த வேறுபாடும் ஆண்டுதோறும் ஏற்படுவ தாகும். கடந்த ஆண்டு மே திங்களில் நிலவிய மிக உயர்ந்த விலை களையொட்டித் தற்போதுள்ள விலைகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. ஆகவே, கடந்த ஆண்டின் விலைகளைவிட இவை மிக அதிகமானவை யல்ல. (நாகர்கோவிலில்) நடப்பாண்டில் வெளிச்சந்தையில் உள்ள விலைகள் பின் வருமாறு :—

| | | | கிலோ ஒன்றுக்கு |
|---|---|---|---|
| | | | ரூ. |
| வசரமுண்டன் | .. | .. | 1 19 |
| கோவை-25 | .. | .. | 1·19 |
| கார் சம்பா | .. | .. | 1·16 |
| ஐ. ஆர். 8 | .. | .. | 1·16 |

இதிலிருந்து விளவங்கோடு வட்டத்தில் உள்ள விலைகள் இம் மாவட்டத்தில் ஏனைய இடங்களில் காணப்படும் விலைகளைவிட அதிக மில்லை என்பதைக் காணலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் தந்த புள்ளி விவரத்திலிருந்து மே மாதத்திலிருந்து ரூ. 83 என்ற அளவிற்கு விலை கூடியிருப்பதாகக் கூறினார்கள். அதிலும் குறிப்பாக விளவங்கோடு தாலுக்காவில் அடையாளக் கார்டு வினியோகிக்க வேண்டுமென்று கலெக்டர் அரசாங்கத்திற்கு எழுதி யிருப்பதாகச் சொன்னார்கள். அதன்பேரில் அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் விளக்குவாரா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரம் என்ன வென்றால், அங்கு அரசாங்க சார்பில் அடையாளக் கார்டு கொடுப்பது இயலாது, ஆங்காங்கு இருக்கும் சில்லரை வியாபாரி களே அங்கே இருக்கும் வாங்குவோர்களுக்கு அடையாளக் கார்டு கொடுத்து விற்பனை செய்ய வேண்டுமென்று உத்தரவு போடப் பட்டிருக்கிறது. அதையொட்டி, அவர்களே இந்த ஏற்பாட்டைச் செய்து இருக்கிறார்கள். அந்த ஏற்பாட்டில் எந்த குந்தகமோ, கேடோ வந்துவிட்டதாக மாவட்ட ஆட்சி மன்றத் தலைவரிடமிருந்து அரசுக்கு தகவல் வரவில்லை. இந்த நேரத்தில் நான் ஒன்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அண்டை மாநிலத்திற்கு கள்ளத்தனமாக அரிசி கடத்திச் செல்வதை தடுப்பதற்கு அரசாங்கத்தோடு துணை நின்று உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வேண்டு கோளை இந்த நேரத்தில் நான் விடுவது பொருத்தம் என்று கருது கிறேன்.

(ஆ) கல்லூரிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும் இடம் பெறுவதில் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாட்டைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து.

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the difficulty of a large section of the students in getting admission into colleges and High Schools and the need to take immediate and adequate steps to tackle this problem.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவரவர் களே, கல்லூரி அளவில் கல்வி வசதிகளை விரிவுபடுத்து வதற்குப் போதுமான நடவடிக்கைகளை அரசு எடுத்துவந்துள்ளது; அண்மை ஆண்டுகளில் இத்தலைப்பின் கீழ் திட்ட இலக்குகளும் நிதி ஒதுக்கீடும் படிப்படியாக உயர்த்தப்பட்டு வந்துள்ளன. 1966–67 இல் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 105 (அரசுக் கல்லூரிகள் 27, மானியம் பெறும் கல்லூரிகள் 78) 1966–67 முதல் 1969–70



முடிய கடந்த மூன்றாண்டுகளில் 36 கல்லூரிகள் அதிகமாகத் திறக்கப் பட்டன. இவ்வாறு கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 141 ஆகியது. (அரசுக் கல்லூரிகள் 39, மானியம் பெறும் கல்லூரிகள் 102) 1970-71 இல் 4 அரசுக் கலைக் கல்லூரிகள் திறக்கப்பட்டன. அரசு நிதியிலிருந்து மானியம் பெறுவதற்கு மானியம் பெறும் புதிய கல்லூரிகள் 15 அனுமதிக்கப்பட்டன. இவ்வாறு, இம் மாநிலத்தில் உள்ள கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 161 ஆகியது. (அரசுக் கல்லூரிகள் 43, மானியம் பெறும் கல்லூரிகள் 118.)

இம்மாநிலத்திற்குரிய 4-வது ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்ட பொழுது மொத்தம் ஐந்தாண்டுக் காலத்திற்கும், 40 புதிய கல்லூரிகள் மட்டுமே (மானியம் பெறும் கல்லூரிகள் 20, அரசுக் கல்லூரிகள் 20) தொடங்குவதற்கு அத்திட்டம் வகை செய்தது. ஆயினும் கடந்த மூன்றாண்டுகளிலேயே இம்மாநிலத்தில் 46 புதிய கல்லூரிகள் திறக்கப்பட்டுவிட்டதால் இக் குறிக்கோள் அளவை நாம் ஏற்கனவே மிஞ்சிவிட்டோம்.

இம்மாநிலத்திலுள்ள கலை, அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1969–70-ல் 1.5 லட்சமாக இருந்தது. இது 1970–71-ல் (பட்ட மேற்படிப்பு மாணவர்கள் உட்பட) 1.63 லட்சமாக உயர்ந்தது. கல்லூரிக் கல்வி வசதிகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளதைக் கீழே கொடுத்துள்ள புள்ளி விவரங்கள் குறிப்பிட்டுக் காட்டும் :—

| | 1967–68. | 1968–69. | 1969–70. | 1970–71. |
|---|---|---|---|---|
| புகுமுக வகுப்பு .. | 57,000 | 60,000 | 64,000 | 74,058 |
| பி.ஏ., பி.எஸ்.ஸி .. | 53,000 | 59,106 | 65,991 | 75,668 |

1971–72 ஆம் ஆண்டில் அரசு நிதியிலிருந்து உதவி பெறுவதற்கு தனியார் கல்லூரிகளை அனுமதிக்கவும், 3 அரசுக் கல்லூரிகளைத் தொடங்கவும் அரசு கருதியது. ஆனால், இத்தனியார் கல்லூரி களுக்கு வழக்கமான உள்ளூர் நன்கொடைகள் அளிக்கப்பட வேண்டும் என்று அரசு விதித்தது. முறையான கல்லூரிகளுக்கும் மேலாக 1965–66 ஆம் ஆண்டிலிருந்தே கலை, அறிவியல் பாடங்களில் மாலை நேர வகுப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் பல பாடப் பிரிவுகளும் தொடங்கப்பட்டு வந்துள்ளன. 1970–71-ல் கல்லூரிகளில் 10 மாலை நேர வகுப்புகள் தொடங்கப்பட்டன. தற்போது மாலை நேர வகுப்புகளை நடத்தும் கல்லூரிகளின் எண்ணிக்கை 20 ஆகும். (அரசுக் கல்லூரிகள் 15, மானியம் பெறும் கல்லூரிகள் 5) 1970–71-ல் இந்த 20 கல்லூரிகளில் 6,242 மாணவர் கள் பயின்றனர். அரசுக் கல்லூரிகளில் மாலை நேர வகுப்புகளில் பயிலுவோருக்குரிய கட்டண வீதங்கள் முறையான பட்டப்படிப்பு வகுப்புகளின் கட்டண வீதங்களுக்கு நிகராக அமையும் வகையில் குறைக்கப்பட்டும் உள்ளன.

இதற்கு முன்னர், அரசுக் கல்லூரிகளில் சேர விரும்பும் மாணவர் கள் தாம் எந்தக் கல்லூரியில் சேர விரும்புகிறார்களோ அந்தக் கல்லூரி ஒவ்வொன்றுக்கும் தனித் தனி விண்ணப்பங்களை அனுப்ப

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 9

வேண்டியிருந்தது. இதன் வாயிலாக மாணவர்களுக்கு தவிர்க்கப் படக்கூடிய பெருமளவு வேலையும், செலவும் ஏற்படுகின்றன, எனவே, சோதனை ஏற்பாடாக சென்னை மாநகரம், தென்ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களிலுமுள்ள ஆண்கள் கல்லூரி களுக்கும் மகளிர் கல்லூரிகளுக்கும் விண்ணப்பங்களைத் தொகுக்கும் முறை ஒன்றைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மூன்று மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும், ஆண்கள் கல்லூரி களிலும், மகளிர் கல்லூரிகளிலும் மாணவ, மாணவியரைச் சேர்த்துக்கொள்ள இரண்டு தேர்வுக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. மாணவர்கள் தாம் சேர விரும்புகிற கல்லூரிகளைத் தமது விருப்பு வரிசை முறையில் குறிப்பிட்டு ஒரே ஒரு விண்ணப் பத்தை மட்டும் பொதுத் தேர்வுக் குழுவிற்கு (ஆண்கள் கல்லூரிக் காவது, மகளிர் கல்லூரிக்காவது) அனுப்பிவைக்க வேண்டியிருக்கும். ஒரே சமயத்தில் பல்வேறு கல்லூரிகளுக்கு விண்ணப்பம் செய்வதில் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய தொல்லைகளை இந்த ஏற்பாடு பெரு மளவில் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நடப்புக் கல்வி ஆண்டில் இத்திட்டம் செயல்படுவதில் ஏற்பட்ட அனுபவத் தைக்கொண்டு, வரும் கல்வி ஆண்டில் ஏனைய மாவட்டங்களுக்கும் இம்முறையை விரிவுபடுத்தும் வாய்ப்புகளைப் பரிசீலிக்க அரசு கருது கிறது.

சென்னை மாநகரிலும், பிற பெரிய நகரங்களிலும் உள்ள தெரிந் தெடுத்த ஒரு சில பள்ளிகளில்தான் சேர வரும் மாணவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. அதற்கு முக்கிய காரணம், பெற்றோர்கள் குறிப்பிட்ட சில பள்ளிகளில்தான் தமது பிள்ளைகளைச் சேர்க்க வேண்டுமென்று கருதுவதும், இப்பள்ளிகளில் போதிய இட வசதியின்மையுமேயாகும். உண்மையில், இம்மாநிலத்தில் பல உயர்நிலைப் பள்ளிகளில் கடந்த ஆண்டில் மாணவர்களின் எண்ணிக்கை ஆதாயமற்ற அளவிற்குக் குறைந்திருந்தது.

ஒரு பள்ளியில் ஒரு வகுப்புப் பிரிவில் இருக்க வேண்டிய மாணவர் களின் உயர்ந்த அளவு எண்ணிக்கை 40 ஆகும். ஆயினும், அந்த எண்ணிக்கைக்கு மேற்பட்டு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள பள்ளிகள் அனுமதிக்கப்படுகின்றன. ஒரு வகுப்புப் பிரிவில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்து அப்பிரிவை இரண் டாகப் பிரிப்பது தேவையானல் அது அவ்வாறே பிரிக்கப்படுகிறது. ஆனல், போதிய இடவசதியின்மையே பெரும் பிரச்சினையாக உள்ளது. அதிக எண்ணிக்கையுள்ள மாணவர்களின் இடவசதிக்காக இயன்ற இடங்களில் எல்லாம் தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப் படுகின்றன.

கல்வித் துறையைச் சேர்ந்த ஆய்வு அதிகாரிகள் தங்கள் அதிகார வரம்பிலுள்ள பள்ளிகளில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவது குறித்து விழிப்புடன் கண்காணித்து தேவையான இடங்களில் எந்த மாணவர்களுக்கும் அனுமதி மறுக்கப்படாதவாறு பார்த்துக் கொள்ள அவர்கள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள் கின்றனர்.



1971 ஜூலை 9] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இவ்வாறு, நமது மாநிலத்தில் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுக்கத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் அரசு மேற் கொண்டுள்ளது என்பது புலனுகும்.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister in his answer had not given an indication as to what steps were taken by this Government to exactly assess the problem of the increase in the admission to colleges and high schools. I want to know whether that problem has been assessed and whether remedial measures proportionate to that problem have been taken. Of course, the Hon. Minister gave statistics which shows that there are increasing opportunities for students this year than last year. But the problem has also become commensurately much more than last year. Even for the VI Standard students are not able to get admission. That is the position. Because of the serious situation, several parents are also feeling why their sons and daughters are Passing. The moment they pass, the probler begins t ocrop up. Will the Hon. Minister give soue indication before the addission period is over because still it is possible to admit some boys and girls? What steps have been taken by this Government to assess the problem and then institute remedial measures?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரி கள் போன்றவற்றில் பிரிவுகள் அதிகப்படுத்தப்பட்டு, விரிவுபடுத்தப் பட்டு இடவசதிகள் செய்யப்பட்டு, நெருக்கடி தீர்க்கப்பட்டு வருகின்றது. முன்கூட்டியே எவ்வளவு பேர் வரக்கூடும் என்பதைத் தீர்மானித்து அந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் விரிவுபடுத்தப் படுகின்றன. அதில் நெருக்கடி ஏற்படுவதற்கு முக்கிய காரணம் சில குறிப்பிட்ட பள்ளிகளில்தான், சில குறிப்பிட்ட கல்லூரிகளில்தான், சில குறிப்பிட்ட பிரிவுகளில்தான் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டுமென்று பெற்றோர்கள் விரும்புகிறார்கள். அதனல்தான் சில குறிப்பிட்ட பள்ளிகளில் இட நெருக்கடி ஏற்படுகின்றது. பிறகு ஒரு மாதம் கழித்துப் பார்த்தால், பல இடங்கள் காலியாகவே இருக் கின்றன. சென்ற ஆண்டுகூட 74 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங் கள் காலியாக இருந்தன.

அடுத்தபடியாக, சென்னை நகரைப் பொறுத்தவரையில் 8-வது படித்துவிட்ட பிறகு 9-வது வகுப்பில் சேருகின்றபொழுது கஷ்டங் கள் இருக்கின்றன. ஒரு பள்ளியில் 6, 7, 8-வது வகுப்புகள் வரை படித்துவிட்டு, பின்னர் உயர்நிலைப்பள்ளியில் 9-வது சேர வேண்டு மென்றல் அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. தங்கள் பள்ளியில் 6, 7, 8-வது வகுப்பு படித்துவிட்டு வருகின்ற பிள்ளைகளை 9-வது வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும். தங்களுடைய பள்ளியின் மாணவர்களுக்கு இடம் கொடுத்துவிட்டு மீதி இடமிருந்தால், பின்னர்தான் மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும். ஆகவே, 9-வது வகுப்பில் இட நெருக்கடியைப் போக்க, 9, 10, 11-வது வகுப்புகள்

கொண்ட அளவிலே சில குறிப்பிட்ட இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளை அமைக்கலாம் என்றும், அப்படிப்பட்ட பள்ளிகளில் 6, 7, 8-வது வகுப்புகள் இருக்காமல் செய்யலாம் என்றும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, இயக்குநர் அவர்களிடம் ஆலோசனை கேட்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தை ஆராயும்படி கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். எந்தெந்த இடங்களில் வசதி ஏற்படுகிறதோ அங்கெல்லாம், சென்னையில் எல்லாப் பகுதிகளிலும் 9, 10, 11-வது வகுப்புகள் கொண்ட உயர்நிலைப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்தால் இட நெருக்கடி தீரும், ஓரளவுக்கு இட நெருக்கடியைத் தவிர்க்கலாம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

## (4) அரசினர் தீர்மானம்.

## தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, "1959-ம் ஆண்டு தமிழ்நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் ( f ) பகுதியின்கீழ், வேளாண்மைத் துறையில் 1968, பிப்ரவரி, 21-ம் நாளன்று வெளியிட்ட 438-ம் எண் ஆணையில் கண்டுள்ளபடி அரசினர் அமைத்த தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் உறுப்பினர்கள் பதவியில் ஏற்பட்ட வெற்றிடங்களில் நியமனம் செய்வதற்கு–1. திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.ஏ., 2. திரு. எஸ். ஜே. ராமசாமி, எம்.எல்.ஏ., 3. திரு. பி. ஜி. கருத்திருமன், எம்.எல்.ஏ. ஆகிய உறுப்பினர்களை மேற்படி வாரியத்தின் உறுப்பினர்களாக இப்பேரவை தேர்ந்தெடுத்தபடியினுலும்,

5—1—1971-ம் நாளன்று சட்டப் பேரவை கலைக்கப்பட்டதன் காரணமாக மேற்கண்ட பிரிவின் (2) உட்பிரிவைச் சேர்ந்த (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 5—1—1971-ம் நாளன்று முடிவடைந்துவிட்டபடியாலும்,

1959-ம் ஆண்டு தமிழ்நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் f, பகுதியையொட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று மேற்கண்ட வாரியத்தின் உறுப்பினர்களாக இருக்கும்படி சட்டப்பேரவையின் மூன்று உறுப்பினர்களை இப்பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## (5) அறிவிப்பு.

## தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர்





நியமனத் தாள்கள் 13—7—1971 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குச் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 14—7—1971 புதன்கிழமை காலை 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 15—7—1971 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்றுக்கு மேற்படுமாயின் 16—7—1971 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## (6) 1971–72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

## கோரிக்கை எண் 13—கல்வி.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 83,12,49,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, to discuss about the need to give free education upto the Degree Courses to all, I move the cut motion standing in my name:

"That the allotment of Rs. 83,12,49,200 under Demand No. 13—Education, be reduced by Rs. 100."

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, தனியார் கல்வி நிறுவனங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 83,12,49,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, to discuss the need for providing security of tenure of service for the tutors of Government as well as Aided Colleges, I move the cut motion standing in my name, namely,

"That the allotment of Rs. 83,12,49,200 under Demand No. 13—Education, be reduced by Rs. 100."

[1971 ஜூலை 9

THIRU A. SUBRAMANIAM: Sir, to discuss the need to reorient the educational policy of the Government, I move the cut motion standing in my name, namely,

"That the allotment of Rs. 83,12,49,200 under Demand No. 13—Education, be reduced by Rs. 100."

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss about the changes to be made in the Elementary and High School Education to make them more useful, I move the cut motion standing in my name, namely,

"That the allotment of Rs. 83,12,49,200 under Demand No. 13—Education, be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் தீர்மானமும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு விடப்படுகின்றன.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது அளிக்கப்பட்டிருக்கின்ற விளக்கக் குறிப்புகள், @ ஏனைய குறிப்புகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அவற்றின் மீது விவாதத்தைத் தொடங்குவதற்கு வசதி இருக்கின்ற காரணத்தினால் நடவடிக்கைக் குறிப்பிலே அவற்றையும் இணைத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக் கொண்டு விவாதத்தைத் தொடங்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்வியமைச்சர் அவர்கள் இந்த அவையின் முன்பாக வைத்திருக்கின்ற மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களையொட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த ஆண்டில் கழிந்த ஆண்டைவிட சில கோடி ரூபாய் கல்வி மானியத்திற்காக அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 83 கோடி ரூபாய் வரையில் மொத்தத்தில் 23 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல தன்மை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் 1966–67-ம் ஆண்டுகூட 44 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டு இருந்தது. நிதிநிலை அறிக்கை அப்போதிருந்த அடிப்படையிலே 22 சதவிகிதம் ரூபாய் கல்விக்காக அப்பொழுது ஒதுக்கப்பட்டிருந்தது. 1966–67-ம் ஆண்டிலே புகுமுக வகுப்பில் இலவசக் கல்வித் திட்டம் அமலாகாத நிலைமை இருந்தபொழுது கூட கல்விக்காக 22 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு 23 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது அதிகமாக இப்பொழுது இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கூறுவதற்கு இல்லை. இருந்தாலும்கூட எவ்வளவு நிதியை ஒதுக்கினாலும் நம்முடைய நாட்டிலே

@ 418–479 பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1971 ஜூலை 9] [திரு. ஜே. ஜேம்ஸ்]

கல்வி எந்த நிலைமையில் இருக்கிறது என்று சிந்தித்துப் பார்க்கின்றபொழுது கல்வியின் தரம் வரவரக் கீழ்நிலையில் போய்க்கொண்டிருக்கிறது. இதை நான் கூறவில்லை.

நம் மாநிலத்தினுடைய சர்வீஸ் கமிஷன் அறிக்கையைப் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதிலே கல்வியின் தரம் எப்படி இருக்கிறது என்பது எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். தமிழ்நாட்டில் உயர் பட்டதாரிகளின் ஆங்கில அறிவு போதுமான அளவிற்கு இல்லை, தமிழ்மொழி அறிவும் போதுமானதாக இல்லை, அடிப்படையான விதிமுறைகள்கூடத் தெரியவில்லை, மற்றும் பல பாடங்களிலும் நிலைமை அதுதான் என்று அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுக்காண்டு கல்வியின் தரம் குறைந்துகொண்டே வருகிறது; எனவே இதிலே நல்ல நிலைமையில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றுள்ள நிலையில் நாம் ஆரம்பப் பள்ளிவரையிலும்தான் கட்டாயக் கல்வித் திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். எங்கள் பிரதேசத்திலே 1947-ம் ஆண்டிலே இருந்து கட்டாயக் கல்வித் திட்டம் நிலவியிருக்கின்றது. வளர்ந்து வருகின்ற சமுதாயத்திலே 1971-ம் ஆண்டுக்குப் பிறகும்கூட ஆரம்பக் கல்விதான் கட்டாயக் கல்வியாக இருக்கின்றது. அதனை எஸ்.எஸ்.எல்.சி. வரையிலும் என்று உயர்த்த வேண்டுமா இல்லையா என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்றைக்குள்ள கல்வியின் தரம் குறைவதற்குக் காரணம் ஆரம்பப் பள்ளியின் நிலைமைகள் மோசமாக இருப்பதுதான் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த அறிக்கையிலே பார்த்தால் ஆண்டுக்காண்டு பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. 1966–67-ம் ஆண்டில் பயிற்சிப் பள்ளிகள் 145 இருந்திருக்கிறது. இன்றைக்கு சிறுர் பள்ளிகள் ஐந்தையும் சேர்த்து 139 பள்ளிகள் தான் இருக்கின்றன என்பது இந்த அறிக்கையிலே காணப்படுகின்றது. அது மட்டுமல்ல.

1965–66-ம் ஆண்டில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை என்ன, இன்றுள்ள மாணவர்க்ளின் எண்ணிக்கை என்ன என்பதைப் பற்றிய விவரங்கள் இங்கே குறிப்பிடப்படவில்லை. 1966–67-ம் ஆண்டில் இருந்ததைவிட இப்போது எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். கல்வி பயில்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தாலும் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை அதிகரித்து இருந்தாலும் பயிற்சிப் பள்ளிகளில் பயில்கின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைந்துவருகிறது என்று சொன்னால் கல்வியின் தரம் நம்முடைய நாட்டில் உயர்வதற்கு வழியில்லை. எனவே பயிற்சிப் பள்ளிகள் அதிகரிக்கப்பட வேண்டும். மாணவர்கள், ஆசிரியர்கள் ரேஷியோவை மாற்றியமைக்க வேண்டும். இப்பொழுது இருப்பதை மாற்றியமைத்து 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1971 ஜூலை 9

இந்த கழிந்த ஆண்டைவிட பல தலைப்புகளில், மதிய உணவு, படிப்பு உதவித் தொகை, ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் இயக்கம், கட்டட வேலை, தொடக்கப் பள்ளி நூலகம் இப்படிப் பல்வேறு தலைப்புகளில் நிதி குறைக்கப்பட்டிருக்கிறது. ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் இயக்கத்திற்கு உள்ள மானியத்தை அதிகப்படுத்த வேண்டும், அதோடு தொடக்கப்பள்ளி நூலகத்திற்கு உதவித் தொகை கொடுப்பது கடந்த சில ஆண்டுகளாக இருந்தது, இப்பொழுது அது கைவிடப்பட்டிருக்கிறது; எனவே அதை மீண்டும் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் பழகு ஆசிரியர்கள் திட்டம் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே தொழில்பழகு ஆசிரியர் திட்டம் பற்றிச் சொல்லி 6,500 பேர்களுக்கு வேலை கொடுக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது என்று கூறியுள்ளார்கள். ஆனால் கல்வி அமைச்சர் அவர்கள் அறிக்கையைப் பார்க்கும்பொழுது 1970–71-ம் ஆண்டில் அரசு ஒப்புதல் அளிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின்படி 3,400 ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலைக் காண்கிறோம். ஏன்? 6,500 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டு இருக்கிறது என்றால் இந்த அறிக்கையிலே 3,400 பேர்களுக்குத்தான் வேலை கிடைத்திருக்கிறது என்றால் மீதி 3,500 பேர்களுக்கு வேலை கொடுக்காததன் காரணம் என்ன? பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லையா? கல்வியமைச்சர் அவர்கள் சொல்லலாம் நிதி வசதி சரியாக இல்லாததினால் படிப்படியாகத்தான் செய்ய வேண்டுமென்று சொல்லலாம். நிதிநிலை சரியாக இல்லையென்றால் இந்தத் திட்டம்தான் எதற்கு? 1970–71-ம் ஆண்டிலே அமலாக்கப்படும் என்று விளம்பரப்படுத்தப்பட்டது. 1971–72 ஆம் ஆண்டிலேகூட அதைப்பற்றி நாம் விளம்பரம்தான் கொடுத்திருக்கிறோம். 1970–71-ம் ஆண்டிலே சொல்லியபடி 1971–72 லேகூட 6,500 பேர்களுக்கும் வேலை வாய்ப்புக் கொடுக்காத நிலையில் 1971–72-ல் மேலும் 6,500 ஆசிரியர்களுக்கு இந்தத் திட்டத்தின் அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட விளம்பரம் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

கல்லூரிப் பயிற்சி மொழித் திட்டத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டு பயிற்சி மொழிபற்றி ஆராய முதலியார் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையின்படி அரசாங்கம் நிறைவேற்றியிருக்கிறது. அதைப் பாராட்டுகிறோம். ஆனால் அரசு ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். மாணவர்களிடையே தமிழ் பயிற்று மொழிக்கு ஆதரவு இருக்கிறதா அல்லது ஆங்கிலப் பயிற்றுமொழிக்கு ஆதரவு இருக்கிறதா என்று பார்த்தால் கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்பாக பத்திரிகையிலே வந்த தகவலைப் பார்த்தால் தெரியும். சென்னை நகரிலே 1 சதவீதம் மாணவர்கள்கூட தமிழைப் பயிற்றுமொழியாக எடுக்கத் தயாராக இல்லை. மேலும் 5 ஆயிரம், 6 ஆயிரம் மாணவர்கள் ஒரு கல்லூரியில் மனுக்கள் கொடுத்திருக்கின்றனர். அதிலே ஒருவர்கூட தமிழ் பயிற்றுமொழியை எடுத்துக்கொள்ள முன்வரவில்லை என்றும் செய்தி



1971 ஜூலை 9] [திரு. ஜே. ஜேம்ஸ்]

வந்திருக்கிறது, அதை அமைச்சர் அவர்களும் அறிந்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொள்வதற்குத்தான் நூற்றுக்கு நூறு மாணவர்களும் முன்வருகிறார்கள். எனவே அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும். மறைமுகமாகத் தமிழைத் திணிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளக்கூடாது. தமிழிலே பட்டப்படிப்பு எடுத்துப் படிக்கின்றவர்களுக்கு ஆண்டுக்கு 150 ரூபாய் மானியமும் புகுமுக வகுப்பிலே தமிழை எடுத்துப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஆண்டுக்கு 50 ரூபாய் மானியமும் கொடுப்பதாக விளம்பரம் செய்தும்கூட மாணவர்கள் தமிழ் பயிற்று மொழித் திட்டத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்றால் அரசு அந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

ஆட்சிமொழித் திட்டத்தைப்பற்றியும் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இருமொழித் திட்டத்தைத்தான் இந்த அரசு கையாண்டு இருக்கிறது. ஆனால் இந்தியாவை எடுத்துக் கொண்டால் அரசியல் சாஸனத்தின்படி இன்று நாட்டின் ஆட்சி மொழி இந்தியாக அமைந்திருக்கிறது. ஆனால் நேரு அவர்கள் அளித்த வாக்குறுதி நமக்கு இருக்கிறது. நாம் ஒரே முகமாக, ஒரே குரலாக, ஒரே கோரிக்கையாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். நேரு அவர்களின் வாக்குறுதியைச் சட்டமாக்கிவிட வேண்டுமென்று. அதற்காக அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அரசியல் சட்டம் திருத்தப்படாத வரையிலும் இந்திதான் இந்த நாட்டின் ஆட்சி மொழி. கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக வருங்கால சந்ததிகளின் வாழ்க்கைக்கு இடைஞ்சலாக இருக்கிற ஆட்சிமொழித் திட்டத்தைப் பற்றியே இந்த அரசாங்கம் சற்றும் சிந்திக்கவில்லை.

நேரு அவர்களின் வாக்குறுதியைச் சட்டமாக ஆக்க அரசியல் சட்டத்தைத் திருத்த கழிந்த 4 ஆண்டுகளிலே இந்த அரசு எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை. அது வருங்கால சந்ததியினருக்குப் பெரிய தீங்காக விளையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய உள்துறை அமைச்சரவர்கள், சமீபத்தில் ஒரு சுற்றறிக்கை வெளியிட்டிருந்ததை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். அதாவது, உள்துறை அமைச்சரவர்கள், இந்தி தெரியாத அதிகாரிகளும்கூட தங்கள் சிப்பந்திகளிடம் தங்களுக்கு அனுப்பும் ஃபைல்கள் இந்தியில் இருந்தால் அதற்கு ஆங்கில ஆக்கம் கூட அனுப்ப வேண்டுமென்று நிர்ப்பந்திக்கக்கூடாது, அப்படிச் செய்தால் கண்டிக்கத்தக்கது என்று சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். இந்த நிலையில் மத்திய சர்க்கார் இந்த நாட்டிலே இந்தி விரைவில் வந்துவிட வேண்டுமென்றும், எல்லா நிர்வாகமும் இந்தியில்தான் இருக்க வேண்டுமென்றும் முயற்சியெடுக்கும்பொழுது நமது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலுள்ள வருங்கால மக்களின் வாழ்க்கையைப் பொறுத்தவரையில் இவர்களுக்கு இந்த மொழிக்கொள்கையினால் என்ன தீங்கு விளைகிறது,

[Thirumathi Alda M. Fowler] [1971 ஜூலை 9

with an axe in his hand and looks for any faults in schools. For example, a school might have received permission to employ a certain type of teacher. In the following year the school is given permission to continue the services of the same teacher and this happy condition continues for a few years. Then comes the Government Auditor. He finds out that this school has been employing this teacher for many years and then down comes the axe. He orders that the school should lose its grant of Rs. 8,000, Rs. 10,000, Rs. 11,000 or any figure he likes. Sir, the punishment should fit the crime and where the employment of a teacher and the cutting of a grant, find a common meeting ground is hard to discover. So, Sir, some precaution should be taken so that schools do not find themselves in this awkward position of losing their grants because at some previous time they had received the permission to employ such and such teachers.

With regard to our examinations we find that whereas Rs. 25,000 was previously sanctioned, we only have Rs. 21,000 and that represents a cut of Rs. 4,000. These examinations have been run on very little money and I do know that the Department has found it most difficult to manage on what they receive. In fact they run two examinations now, including the April supplementary examination. So, Sir, I feel that this amount should not be taken away.

Also, Sir, the Chief Superintendent and the Assistant Superintendent should be paid on a par with their S.S.L.C., counterparts. I am told that they are paid less.

A word about the 'destitute' grant. Some of our orphanages, perhaps all, receive "the 156 Grant" for destitute children, that is, children who are entirely in the care of the schools. These children, if they fail, lose their grants. Yet, Sir, these orphanages were built for such children. The Government stretches out its long and timely arm to provide "the 156 Grant." Being a destitute child, he has been brought up perhaps under certain great disadvantages. Malnutrition is no doubt there.

Therefore, a child like this cannot give his best performance and that is why the child cannot keep up with the rest of his class. I feel very strongly, Sir, that some other method should be thought out in order to deal with this type of case. That grant should not be cut when he has failed, but rather give him the grant (as it were). An age limit may be prescribed, perhaps. I think that it should be talked out by a few expert people who are dealing with these cases. But it has been brought to my notice that so many children suffer because of this cutting of the grant at the stage when the child fails. The child must either be sent out of school which is not advisable or he has to be an entire liability on the school, which the school already finds difficult to bear. So, Sir, I would urge that something should be done in this matter.



1971 ஜூலை 9] [Thirumathi Alda M. Fowler]

Before I close, I would like to state one more thing. That is, the selection grade which applies to Government schools should be made available for the Anglo-Indian Schools also. Senior teachers, when they come to a certain grade are put on to this selection grade. This does not hold good in our schools. So, I would urge that it is a matter for your kind consideration later on.

Sir, I feel that in our schools you have something of which the State should be proud. The schools should have encouragement and confidence so that the progress of the whole State could go hand in hand with the other education system along side the school under the Anglo-Indian Code of education. I feel, Sir, that you can receive so much more from these schools if they have confidence, instead of having a fear complex, wondering if at some time a big axe will come down upon them and they be asked to go without their grants. I feel, Sir, that a happy atmosphere should prevail and I hope that the Hon. Minister for Education would do all he can to encourage this. Thank you, Sir.

* திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கல்விக் கோரிக்கை சம்பந்தப்பட்ட அறிக்கைகளைப் பார்க்கும்போது 1959–60-ல் கல்விக் காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 15.15 கோடி என்றும், 1971–72-ல் ரூ. 81.84 கோடி என்றும் காண்கிறோம். இந்தப் பெரு மளவுக்குக் கல்விக்காகச் செலவிட இந்த அரசு முன்வந்துள்ள மைக்காக நிச்சயமாக நாம் பாராட்டத்தான் வேண்டும். மொத்த நிதிநிலை அறிக்கையில் கல்விக்காகச் செலவிடப்படக்கூடிய தொகை யில் 23 விழுக்காடு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்பு கிறேன். உண்மையிலேயே இது ஒரு நல்ல முன்னேற்றம் என்றாலும்கூட இன்னமும் இது போதாது என்ற குறையையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால், கல்விதான் ஒரு சமுதாயத்தை உருவாக்கக் கூடியது. கல்வியைக் கொண்டுதான் ஒரு சமுதாயம் முன்னேற்றம் அடைந் திருக்கிறதா, பிற்போக்கில் இருக்கிறதா என்பதை நாம் கவனிக்க வேண்டும். மேலைநாடுகளோடு நமது நாடும் பீடுநடை போட்டு முன்னேற்றம் அடைய வேண்டுமென்று சொன்னால் நூற்றுக்கு நூறு கல்வியறிவு பெற்றவர்களாக ஆகவேண்டும். ஆகவே, கல்விக்காக எத்துணை செலவு செய்தாலும், அது நியாயமான செலவு, வரவேற் கத்தக்க செலவு என்று சொல்ல விரும்புகிறேன்.

சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு 39 சதவிகிதந்தான் நம் மாநில மக்கள் கல்வி பெற்றுள்ளார்கள் என்பதையும் நான் இங்கு சுட்டிக் காட்டி, இது போதாது, நிச்சயமாக வெகு விரைவிலேயே நமது மாநில மக்கள் அனைவரும், நூற்றுக்கு நூறு கல்வி பெற்றவர்களாக இருக்க வேண்டும்; அப்போதுதான் நம்முடைய நாடு உயர்ந்த முன்னேற்றத்தை அடையும், நம்மிடையே புது மறுமலர்ச்சி ஏற்படும் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1971 ஜூலை 9

கல்வி இலாகாவில் அதிகமான ரெட் டேபிசம் இருக்கிறது, சிகப்பு நாடாத் தன்மை இருக்கிறது. கல்வியமைச்சர் வருத்தப்படக் கூடாது. கல்வி இயக்குநரின் அலுவலகத்திற்கு நானும் திருவரம்பூர் சட்டமன்ற உறுப்பினரும் சென்று இருந்தோம். விசிடிங் கார்ட் கொடுத்து ¾ மணி நேரம் ஆன பிறகுதான், அவர் எங்களை பேட்டி காண கூப்பிட்டார். இப்படி நாங்கள் ¾ மணி காத்துக்கிடக்க வேண்டுமானால், அதுவும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இந்த கதி என்றால், சாதாரண ஆள் ஒரு விண்ணப்பம் கொடுத்தால் ஒரு ஆண்டு காலம் ஆனால்கூட பதில் வருவது இல்லை. அவர்கள் வேலை செய்யாமல் இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. செய்யக்கூடிய வேகம் மக்களின் மனதுக்கு திருப்தி அளிப்பதாக இல்லை. சிகப்பு நாடாத் தன்மை இருக்கிறது என்று தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்வியமைச்சர் ஏதேனும் ஒழுங்கு முறை ஏற்படுத்தி வேலைகள் துரிதமாக நடத்த உத்தரவிடுவார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

ஸ்ட்ரைக் பற்றிச் சொன்னார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே கடந்த ஆண்டிலே மாத்திரம் புகுமுக வகுப்பு மாணவர்கள் 4–5 மாதங்கள் ஸ்ட்ரைக் என்ற பெயரால் பள்ளிக்குச் செல்லவில்லை. இதனால் 30 மாணவர்கள் புகுமுக வகுப்பில் தேறியிருக்கிறார்கள். சுமார் 20 சதவிகிதம் மாணவர்கள்தான் பர்ஸ்ட் கிளாசில் தேறியுள்ளார்கள். சுமார் 20 மாணவர்கள் செகண்ட் கிளாசில் தேறியுள்ளார்கள். அந்த மாணவர்கள் மருத்துவ கல்லூரிக்குப் போக வேண்டுமானால் எப்படிப் போவார்கள்? இந்த ஸ்ட்ரைக் செய்ததால், நல்ல மாணவர்களும் குறைவான மார்க்குகள் வாங்கியுள்ளார்கள். ஏதோ சில மாணவர்கள் துஷ்டத்தனம் செய்தார்கள் என்பதால், எல்லா மாணவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி சிலபேர் செய்யும் விஷமதனத்திற்காக கல்லூரியையே மொத்தக் கணக்காக மூடிவைப்பது நல்லதல்ல என்று பணிவன்போடு சொல்லிக் கொள்கிறேன். மாநிலம் பூராவும் விஷமத்தனம் செய்யும் மாணவர்களை தனியாக எல்லாம் பிரித்து, அவர்களுக்காக ஒரு தனி கல்லூரி அமைத்தால் நல்லது. ஒழுங்காக படிக்கும் மாணவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியைப் பற்றி சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பள்ளப்பட்டியில் ஏறத்தாழ 5,000 முஸ்லீம்கள் வசிக்கிறார்கள். அவர்கள் மத அனுஷ்டானத்தில் அதிக பற்றுக் கொண்டவர்கள். அவர்களுடைய பெண்களை தூரத்திலுள்ள பள்ளிக்கு அனுப்புவதற்கு அவர்கள் விரும்புவது இல்லை. அதோடு அந்தப் பள்ளியில் ஆண், பெண் சேர்ந்து படிக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, அங்கே உள்ள பெண்கள் கல்வி அறிவு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இந்தக் குறையைப் போக்க அரசு அங்கே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்த சட்டமன்ற துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.



1971 ஜூலை 9]

* திரு. தோப்பூர் திருவேங்கடம் : சட்டமன்ற பேரவைத் துணைத் தலைவர்வர்களே, இந்த கல்வி மான்யத்தின்மீது பேசுவதற்கு வாய்ப் பளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

கல்வி பற்றி நம்முடைய தமிழக அரசு நல்ல திட்டம் வைத்து இருப்பதாலும், கல்விச் செல்வம் எல்லோரும் பெறவேண்டுமென்கிற ஒரு நல்ல நோக்கத்தாலும், கல்விக்காக நம்முடைய கல்வி மான்யத்திலே அதிக தொகை ஒதுக்கியிருப்பதை உள்ளபடியே பாராட்டி, வரவேற்கத் தயாராக இருக்கிறோம். கல்வி பற்றி பழங்கால புலவர்கள்கூட பாராட்டி, கல்விச் செல்வத்தின் இன்றியமையாமையை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். "வெள்ளத்தால் போகாது, வெந்தணலால் வேகாது, கள்வர்க்கோமிக அரிது; காவலுக்கோ மிக எளிது" என்று சொல்லியிருக்கிறார்கள். கல்வியின் பெருமையைப் பற்றி புறநானூற்றிலே கூறப்பட்டிருக்கிறது "உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும், பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" என்று தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்து நம்முடைய தமிழக அரசு கல்விக்காக 1971–72-ம் ஆண்டு பட்ஜெட்டிலே ரூ. 81 கோடிக்கும் மேலாக தொகை ஒதுக்கியிருப்பதைப் பார்த்து அனைவரும் வரவேற்று பாராட்டவேண்டியதொன்றாகும். அப்படிக் கல்விக்காக அதிகத் தொகையை ஒதுக்கியிருக்கின்ற தமிழகத்தில், 1961-ம் ஆண்டுக் கணக்குப் பிரகாரம், படித்தவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், அது 31.4 சதவிகிதம் இருந்தது. இன்றைக்கு அது 39.4 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்பது நம்முடைய தமிழக அரசின் சாதனைகளில் அதையும் ஒன்றாகக் கொள்ள வேண்டும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலேயே இரண்டாவது மாநிலமாக இருக்கின்ற அளவில் உயர்ந்திருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தக் கல்வி மானியத்தில் பல்வேறு நல்ல பல அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. 1970–71-லிருந்து எட்டாம் வகுப்புக்கு வினாத்தாள்கள் பொதுவான அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன; விடைத்தாள்கள் மாணவர்கள் படிக்கும் பள்ளிகளிலேயே திருத்துவது என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பொதுவாக வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு, பள்ளிகளிலேயே திருத்துவதாக இருந்தால், அது உண்மையிலேயே மாணவர்களுக்கு வாய்ப்பாக அமையும். அந்த விடைத்தாள்களைத் திருத்துவதும் பொதுவான பல பள்ளிகளில் திருத்தும்படி செய்ய வேண்டும் என்பதைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர்கள் நலனுக்காக பல்வேறு நல்ல பல காரியங்களை நம்முடைய தமிழக அரசு செய்துவருகிறது. அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தியும், இன்னும் பல சலுகைகளைக் கொடுத்தும் அவர்களுக்கு உதவி செய்திருக்கிறது. அதே போல, ஆசிரியர்கள் நலனுக்காக ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும், பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் உதவியளிக்கும் திட்டம் போற்றத் தக்கதாக இருக்கிறது. இன்னும் ஆசிரியர்களுக்கு என்று ஒவ்வொரு

மாவட்டத்திலும், ஆசிரியர் இல்லம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. இப்பொழுது வடாற்காடு மாவட்டத்தில் ஆசிரியர் இல்லம், ஆசிரியர்களுடைய முயற்சியாலேயே அமைக்கப்பட்டு நடந்து வருகிறது. மற்ற மாவட்டங்களிலும் அப்படிச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கழக உயர்நிலைப் பள்ளிகளிலே பணிபுரியும் 20,000 ஆசிரியர்கள், மற்ற பணியாளர்கள் ஆகியோர்களை 1970 ஏப்ரல் முதல் அரசுப் பணியாளர்களாக சேர்க்கும் திட்டம் உள்ளபடியே ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் மன நிறைவையும் கொடுக்கும்; அவர்களிடமிருந்து வரவேற்பையும் அளிக்கும்.

484 கல்விச் சீரமைப்பு மாநாடுகள் நடைபெற்று, பொது மக்களும் மற்றவர்களும் நன்கொடையாக ரூ. 12 கோடிக்கு மேல் கொடுத்திருப்பது, பொது மக்கள் தாராளமாக கல்விக்காக எவ்வளவு கொடுக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

மாணவர்களுக்கு புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி தொடர்ந்து அளிக்கப்படும் என்ற திட்டமும் போற்றிப் பாராட்ட வேண்டிய ஒன்று.

பயிற்சி மொழியைப் பொறுத்தவரையில், தமிழக அரசு நடந்து கொண்ட முறையை அனைவரும் போற்றிப் பாராட்டி வரவேற்கிறார்கள் என்றே நிச்சயமாக நம்புகிறேன். பயிற்சி மொழி விஷயத்தில் மாணவர்களுக்கு முழு உரிமை அளித்து, எதுவேண்டுமானாலும் எடுத்துப் படிக்க தமிழக அரசு திட்டம் கொடுத்திருக்கிறது. மாணவர்கள் ஆங்கிலத்தில் படிக்க விரும்பினாலும், அல்லது தமிழிலே படிக்க விரும்பினாலும், அவர்கள் விருப்பப்படி படிக்கலாம் என்பதற்கு நம் தமிழக அரசு வழிவகை செய்திருக்கிறது. அதைத் தெளிவாக டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் தன் பரிந்துரையில் குறிப்பிட்டிருப்பதை தமிழக அரசு செயல் படுத்தியிருக்கிறது. எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் அதைப் பற்றிக் குறைபட்டார்கள். அதில் குறைப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

தெளிவாக நம் தமிழக அரசு குறிப்பிட்டிருக்கிறது. மாணவர்கள் எந்த மொழியிலே படிக்க விரும்புகிறார்களோ அந்த அந்த மொழியில் படிக்க வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசின் நோக்கம், தமிழகத்திலே ஆங்கிலமும், தமிழும் மட்டும்தான் போதிக்கப்பட வேண்டுமென்பதாகும். மேலும் இருமொழிக் கொள்கை தான் அரசின் நோக்கம் என்பதை திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அதைத் தெரிந்து கொள்ளாமல், தமிழக அரசின் திட்டம் என்ன என்பதைத் தெரிந்துக் கொள்ளாத முறையில், இந்தியை ஆதரிப்பவர்கள் போல் கருதிக் கொண்டு பேசினார்கள்.

நாங்கள் என்றைக்கும் இந்தியை எதிர்த்துக் கொண்டு வருகிறோம். அறிஞர் அண்ணா முதல் கலைஞர் வரை நாங்கள் எப்பொழுதும் இந்தியை எதிர்த்து வந்திருக்கிறோம். தமிழும், ஆங்கிலமும் இரு மொழிகளாக இருக்கும் என்றும், அதுவே நம் கொள்கையாகும் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரையில்" என்ற நேரு தந்த வாக்குறுதியின் அடிப்படையில் மத்திய அரசு நடந்து கொள்ள வேண்டுமென்று தமிழக அரசு அடிக்கடி முயற்சி எடுக்கிறது. அடிக்கடி தன் கண்டனத்தை மத்திய சர்க்காரிடம் பொழிந்து கொண்டிருக்கிறது என்பதையும் அனைவரும் அறிவார்கள். ஆக அப்படி பயிற்சி மொழித் திட்டத்திலே தமிழக அரசு திட்டவட்டமான கொள்கை வைத்திருப்பதை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.



தனியார் துறையில் ஆரம்பப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், மாணவர்கள், ஆசிரியர்கள் படும் தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அதை அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆகவே, அவற்றை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய பள்ளிகளையெல்லாம் அரசே ஏற்று நடத்த முன் வரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

வேலூரிலே இப்பொழுது இருக்கின்ற அரசினர் கலைக் கல்லூரியில் பி.ஏ. வரையில் இருக்கிறது. அங்கே எம்.ஏ., எம்.எஸ்.ஸி. வகுப்புக்கள் துவங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே போல, வேலூரில் பெண்கள் கல்லூரியில்லை. அப்படி ஒரு கல்லூரி இல்லாதது நீண்ட நாளாகக் குறையாக இருக்கிறது. ஆகவே பெண்கள் கல்லூரி ஒன்று உடனடியாக துவங்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய கனியம்பட்டித் தொகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டட வசதி இல்லாத நிலையிருக்கிறது. இன்னும் விரிஞ்சிப்புரத்தில் கட்டடம் இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் கட்டட வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தக் கல்வி மானியத்திலே இன்னும் பல பல்வேறு நல்ல அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே வெளியாகும் சிறந்த நூல்கள் ஆண்டுதோறும் 20 பொருள்களில் வெளியாவதை பாராட்டி, ஊக்கம் அளிக்கும் வகையில், முன்பிருந்ததை மாற்றி, இரண்டு பரிசுகளாக 1,000, 2,000 என்று உயர்த்தியிருப்பது பாராட்டத்தக்கது.

அனாதை இல்லங்கள் கல்வியறிவு ஊட்டும் விதத்தில் பணியாற்றுபவற்றிற்கு மாநில நிதியிலிருந்து உதவியளிக்கப்படும் என்ற திட்டத்தையும் பாராட்டி, வரவேற்று, இந்த வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

திரு. வீ. கே. இராஜப்பிள்ளை: மாண்புமிகு மன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் மன்றத்திலே கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. வீ.கே. இராஜப்பிள்ளை] [1971 சூலை 9

ஆனால் அதே சமயத்தில் கருத்துக்களைக் கூறும்போது, நிர்வாகத் திலே உள்ள சில சிக்கல்களை அல்லது எங்கள் தொகுதியில், அல்லது மாவட்டத்தில் உள்ள சில தவறுகளை எடுத்துக் கூறினால் ஒரு சில நண்பர்கள் முரண்பாடாக இருக்கிறதே என்று கூறுவது சரியில்லை என்கிற என் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில், எனது நண்பர் திரு. ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டது நாம் இந்தியை எதிர்க்கவில்லை என்றல்ல. மறைமுகமாக அவர்கள் குறிப்பிட்டது நாம் இந்தியைப் படிக்க வேண்டும், இந்தியைப் படித்தால்தான் இந்தியாவில் பிற மாநிலங்களோடு தொடர்பு கொள்ள முடியும், ஒத்துழைக்க முடியும் என்ற அர்த்தத்தில் கூறினார்கள் என்று நான் நினைக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய நண்பர் கூறியது போல், மொழிக் கொள்கையைப் பொறுத்த வரையில் நம் அரசு திட்டவட்டமான கொள்கையை வைத்திருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். அப்படி ஏதாவது நமக்கு மத்திய அரசினால் தொல்லை ஏற்பட்டால், அதைத் தவிர்க்க வேண்டும் என்று நாம் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று வலியுறுத்தி வருகிறோம் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

இனி, அடுத்தபடியாக இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்த வரையிலே நாம் பார்க்கிறோம். 1966–67-ல் சுமார் 4,428 லட்சம் ரூபாய்கள் கல்விக்காக செலவிடப்பட்டு வந்தது. இப்போது 1971–72-ல் சுமார் 8;313 லட்சம் ரூபாய்கள் செலவிடப்படவிருக்கின்றன வென்று அறியும்போது உண்மையிலேயே பெருமைப்படுகிறோம்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எடுத்துக் கொண்டால் இந்த அரசு ஆட்சிக்கு வந்தபிறகு பல நல்ல திட்டங் களையும், பல நல்ல காரியங்களையும் கல்வியில் செய்திருக்கிறதென்றால் அது மிகையல்ல. சென்ற வருஷம் கூட எங்கள் மாவட்டத்திற்குத் தகுந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இடைநிலைப் பள்ளிகள் உயர் நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். அதோடு கூட, பல பள்ளிகளுக்கெல்லாம் கட்டிடங் களும் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதையும் நாம் அறிவோம்.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்பு கல்விக்காக பல நல்ல திட்டங் களைச் செய்திருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். உதாரணமாகப் பார்த்தால், திருவிதாங்கூர்–கொச்சி யிலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் 1956-ல் பிரிந்து தாய்த் தமிழகத் துடன் சேர்ந்த பின்பு 1971-ம் ஆண்டு வரை தீராமல் இருந்த பட்டதாரி ஆசிரியர்களின் பிரச்சினை நல்ல முறையில் மாத்திரமல்ல, அவர்கள் எதை விரும்பினார்களோ அந்த முறையிலே சமீப காலத்தில் அதுவும் சென்ற இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு நல்ல முறை யில் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அவர்கள் மகிழ்ச்சி யடைந்து சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் எழுதியிருக் கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1971 சூலை 9] [திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை]

தமிழ் வித்வான்கள் பிரச்சினை 1956-லிருந்து இது வரை தீர்க் கப்படாமல் இருந்தது. அதையும் இந்த அரசு சுமார் ஒரு மாதத் திற்கு முன்பு தீர்த்து வைத்திருக்கிறது. அதிலே ஒரு சில குறைபாடு கள் மாத்திரம் இருக்கின்றன. அவற்றையும் அமைச்சர் அவர்கள் கூடிய விரைவிலே தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் வித்வான்கள் பிரச்சினை அரசாங்க பள்ளிகள் பொறுத்த வரையிலே தீர்க்கப்பட்டு விட்டது. அதே சமயத்தில் தனியார் பள்ளிகளில் வேலை பார்ப்பவர்களுக்கு இந்த அரசாங்க உத்திரவை நீட்டிக் கொடுத்துவிட்டால் பிரச்னை முழுமையாகத் தீர்ந்துவிடும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இடை நிலைப் பள்ளி ஆசிரியர்கள் சம்பளங்களெல்லாம் உயர்த்தப் பட்டு அவர்கள் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டன. ஆனால் அதே சமயத்தில் இப்படியெல்லாம் நன்மை செய்திருக்கிற இந்த அரசாங்கம்–ஏதோ கவனமின்மை காரணமாகவோ அல்லது என்ன காரணத்தினாலோ தெரியவில்லை—இந்த ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியான கன்னியாகுமரி தொகுதி யில் இன்றிருக்கிற நிலைமை தவிர புதிதாக எந்த திட்டத்தையும் அமுல் நடத்தப்போவதாகத் தெரியவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போதுகூட இரண்டு நடு நிலைப் பள்ளிகளை உயர் நிலைப் பள்ளிகளாக ஆக்க வேண்டுமென்று மாவட்ட கல்வி அதிகாரியும், சி.ஈ.ஓ. உயர் கல்வி அதிகாரியும் அந்தப் பள்ளிகளை ஏற்று நடத்துபவர்கள் 10 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டு மென்று சொல்லி, கட்டிவிட்டு நல்ல சிபாரிசோடு வந்த நேரத்தில் கல்வி இயக்குநர் அவர்கள் என்ன காரணம் கொண்டோ அதற்கு மாறாக எழுதி ஒரு பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக மாற்ற முடியாது என்று உத்திரவிட்டுவிட்டார்கள். அந்த இடை நிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை அனுதாபத்துடன் கவனித்து ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பார்த்தால் சென்னை நகரத்திற்கு அடுத்தபடியாக கன்னியாகுமரி மாவட்டம் தான் கல்வியில் இரண்டாவதாக நிற்கிறது என்பதை அறிவோம். அது போலவே ஜனத்தொகையை எடுத்துக் கொண்டாலும்கூட சென்னை நகருக்கு அடுத்ததாக ஒரு சதுர மைலுக்கு இவ்வளவு மக்கள் தொகை என்ற கணக்கில் கன்னியாகுமரி தொகுதிதான் இடம் பெற் றிருக்கிறது. இரண்டு கிலோ மீட்டர், மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு பள்ளி என்று இருக்கும் சட்டத்தை அப்படியே கடைப்பிடிக்காமல் நகர்ப்புறங்களுக்கு எப்படி கடைப்பிடிக்கிறார் களோ அந்த முறையில் கடைப்பிடித்து நடு நிலைப் பள்ளிகளை உயர் நிலைப் பள்ளிகளாக்கவும், புதிய பள்ளிகளைத் துவங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அரசாங்கப் பொறுப்பில் இருக்கிற பல ஆரம்ப, இடை நிலை பள்ளிகள் ஓலைக் கூரைகளில் நடக்கின்றன. இடமின்மையினால் மாணவர்கள் மெத்த சிரமப்படுகிறார்கள். அங்கேயெல்லாம் கட்டடங்கள் கட்டிக் கொடுத்து பள்ளி மாணவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. வீ. கே. இராஜப்பிள்ளை] [1971 ஜூலை 9

மதிய உணவைப் பொறுத்த வரையில் சொல்லிக் கொள்ள விரும்புவது, பஞ்சாயத்து ஒன்றியத்தில் இருக்கிற பஞ்சாயத்துக்களின் நிதி நிலைமை மோசமாக இருக்கிறது. அதோடு கூட, ஒரு பஞ்சாயத்தில் இருக்கிற பள்ளிகளில் அடுத்த பஞ்சாயத்தில் இருக்கிற மாணவர்கள் படிக்கிறபடியால், சம்பந்தப்பட்ட பள்ளிகள் இருக்கிற பஞ்சாயத்துக்கள் மதிய உணவிற்காக இரண்டு பைசா கொடுப்பதற்கில்லை என்று கூறுகிறார்கள். அந்த இடத்தில் உள்ள தலைமை ஆசிரியர்கள் விரும்பி வேண்டிக்கொண்டால், எந்தப் பகுதியிலிருந்து மாணவர்கள் வந்து படிக்கிறார்களோ அந்த பஞ்சாயத்திலிருந்து நிதி கொடுப்பதற்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி வசதி இருக்குமானால் அவை நிதி கொடுப்பதற்கும் அரசாங்கம் உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சில பள்ளிகளுக்கு வேண்டிய புத்தகசாலை, யூரினல் போன்ற வசதிகளைச் செய்து தர நிதியை யூனியனிலிருந்து கொடுக்க உத்திரவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மானியத்தை முழு மனதோடு ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. சு. துரைசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மானிய கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலில் நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் குறிப்பாக திருப்பூர் நகரத்தில் இந்த ஆண்டு பெண்கள் கல்லூரியைத் துவங்கியதற்காக கடந்த மாதம் 8-ம் தேதி கல்வியமைச்சரை சந்தித்து அதற்கான விண்ணப்பதைக் கொடுத்தோம், நேற்றைய தினம் (7-ம் தேதி அன்றைக்கு) கல்வியமைச்சர் அவர்களும், அதே போல முதலமைச்சர் அவர்களும், கல்வி இலாகாவிலே இருக்கிற எல்லோரும் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியின் காரணமாக ஒரே மாத காலத்தில் திருப்பூர் நகரத்தில் பெண்கள் கல்லூரி துவங்குவதற்கு அனுமதி தந்தமைக்காக, இந்த அரசாங்கத்திற்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல கடந்த 4 ஆண்டு காலத்தில் திருப்பூர் நகரத்தில் ஏற்கெனவே கல்லூரி துவங்குவதற்கான அனுமதி கிடைத்திருந்தாலும் 1966-ல் தேர்தல் நேரத்தில் கல்லூரியைத் துவக்கினார்கள். அதற்கான நிலையான கட்டடம் இல்லாத குறைபாடு இருந்தது. அந்தக் குறைபாட்டை போக்கக் கூடிய முறையில் தமிழ்நாடு அரசாங்கம் திருப்பூர் ஆண்கள் கல்லூரியை அமைத்துக் கொடுத்தமைக்காக இந்த அரசாங்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த இரண்டு கல்லூரிகளும் துவங்குவதற்கு நன்கொடை கொடுத்துதவிய, ஆண்கள் கல்லூரிக்காக கொடுத்த திருப்பூர் சித்தன்ன செட்டியார் குடும்பத்திற்கும், பெண்கள் கல்லூரிக்காக கொடுத்த எல். ஜி. பாலகிருஷ்ணன் சகோதரர்களுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1971 ஜூலை 9] [திரு. சு. துரைசாமி]

அதே போல திருப்பூர் தொகுதியில் ஐயங்காளி பாளையத்தில் உயர் நிலைப் பள்ளி கட்ட அனுமதி கொடுத்தும் 1,20,000 ரூபாய் மதிப்பில் கட்ட அனுமதித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் 1967-ம் ஆண்டுக்கு முன்பு தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற பொறுப்பினை ஏற்றுக் கொண்டால் கல்லூரிகளைத் துவக்க மாட்டார்கள், உயர் நிலைப் பள்ளிகளை மூடி விடுவார்கள், கல்வி வளர்ச்சி பாதிக்கப்படும் என்று பேசியதை நாடு அறியும். ஆனால் ஆளுகின்ற பொறுப்பேற்ற நம் அரசாங்கம் கடந்த 4 ஆண்டு காலமாக கல்விக்காக படிப்படியாக ஆண்டுக்காண்டு நிறைய செலவழித்து வருவதையும் இந்த நடைமுறை ஆண்டில் 81.84 லட்சம் செலவழிப்பதாக இருக்கிறோம். 1966–67-ல் 44 கோடி செலவழிக்கப்பட்டது. இன்றைக்கு 81 கோடியாக வளர்ச்சி பெற்றிருப்பதைப் பார்க்கிறோம்.

இது மட்டுமல்லாமல் 1967-ம் ஆண்டுக்கு முன்பாக தமிழகத்தில் 105 கல்லூரிகள் இடம் பெற்று இருந்தன. ஆனால் இன்றைக்கு 161 கல்லூரிகளாக, ஏறத்தாழ 56 கல்லூரிகள் இந்த 4 ஆண்டு காலங்களில் நாட்டு மக்களுக்காக தமிழ் நாட்டு அரசாங்கம் துவக்கியிருப்பதைப் பார்க்கிறோம்.

பல்வேறு துறைகளிலே தமிழ் நாட்டு அரசாங்கம் கல்விக்காக மிகச் சிறந்த பணிகளையாற்றி வருவதைப் பார்க்கிறோம். அதன் காரணமாக இந்த மன்றத்தில் பேசுகிற எல்லோரும் இந்த அரசாங்கம் கல்விக்காக செலவழிக்கிற தொகையைப் பாராட்டுவதை நாம் பார்க்கிறோம்.

இதே சந்தர்ப்பத்தில் கல்வியமைச்சரிடத்திலேயும், முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். கோவை நகரத்தில் அரசாங்கத்தின் தரப்பில் ஒரே ஒரு கல்லூரி தான் இருக்கிறது. தனியார் துறையை எடுத்துக் கொண்டாலும் கலைக் கல்லூரிகள் என்ற முறையில் ஒரு கல்லூரி தான் இருக்கிறது. அந்த நகரம் பெற்றிருக்கிற வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் ஏராளமான மாணவர்கள் கோவை நகரத்தில் இடம் கிடைக்காத காரணத்தினால் சிரமப்படுகிற குறைபாடு இருக்கிறது. இந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு கோவை நகரத்தில் அரசாங்கத் தரப்பில் கல்லூரி துவக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

திருப்பூர் நகரத்தில் இன்றைக்கு ஆண்கள் கல்லூரியில் பி.காம். பட்டப் படிப்பு வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கத்திற்கும் சர்வகலாசாலைக்கும் தெரிவித்திருக்கிறோம். மிக விரைவிலே, இந்த நடைமுறை ஆண்டிலேயே பட்டப் படிப்பு படிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

திருப்பூர் நகரத்தில் அமைந்திருக்கிற ஆண்கள் கல்லூரிக்கான மாணவர்கள் விடுதிக்காகவும், பெண்கள் கல்லூரிக்காகவும் இடத்தைக் கொடுத்திருக்கிறோம். பணத்தையும் கொடுத்திருக்கிறோம். நிரந்தரமான கட்டடம் கட்டுவதற்கான காரியத்தையும் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பெருமாநல்லூரில் உள்ள உயர்நிலைப் பள்ளி சாதாரண உயர் நிலைப் பள்ளியாக இருக்கிறது. தகுந்த மாற்றங்களைச் செய்து நல்ல உயர் நிலைப் பள்ளியாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல என் தொகுதியைச் சேர்ந்த ஐயங்காளி பாளையத்தில், விஜயபுரத்தில், பெருமாநல்லூரில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான கூடங்கள் இல்லை. அவைகளையும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருப்பூர் நகரத்தைப் பொறுத்தவரையில் அந்த நகரசபை 5 உயர்நிலைப் பள்ளிகளை நடத்தி வருகிறது. அவ்வளவு பெரிய நகரத்தில் 2,500, 2,400 என்று சொல்லத் தக்க அளவிற்கு மாணவர்கள் எண்ணிக்கை பெருகியிருப்பதைப் பார்க்கிறோம். எல்லா உயர்நிலைப் பள்ளிகளில் முழுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அந்த நகரசபை யினர் நிர்வகித்து வருகிறார்கள். நகராட்சி மன்றத்திற்கு உதவித் தொகை கிடைத்தது போக 3 லட்ச ரூபாய் அதிகச் செலவு ஏற்படு கிறது. அதைப் போக்கக்கூடிய முறையில் அந்த உயர்நிலைப் பள்ளி களில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத் தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டியில் ஆர்வம் உண்டாக்க வேண்டிய முயற்சி களை, உயர் நிலைப் பள்ளிகளுக்கு வேண்டிய விளையாட்டு சாதனங்களை அந்த இலாகா மூலமாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இறுதியாக ஒரு கருத்தினை தெரிவிக்க விரும்புகிறேன். என் தொகுதிக்கு நூல் நிலையம் வேண்டுமென்று கடந்த பல ஆண்டுகால மாக வற்புறுத்தி வந்திருக்கிறேன். திருப்பூர் தொகுதியைச் சேர்ந்த மங்கலம், கணக்கம் பாளையம் போன்ற இடங்களில் மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. அங்கு நூல் நிலையம் தொடங்குவதற்காக அந்த இலாகா மூலமாக தொடக்க விழாவை நடத்தி இதுவரை நூல் நிலையம் துவக்கப்படவில்லை. விரைவாக நூல் நிலையத்தைத் துவக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, மானியக் கோரிக்கையை ஆதரித்து உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. கே. பி. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானிய கோரிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பாக கொடுத்த வெட்டுப் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக்கூற வாய்ப்பு கொடுத்தமைக்கு என்னுடைய வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.





சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்றி, அறிவொளியை பாய்ச்சிடவல்லது கல்வியேயாகும் என்ற விளக்கத்துடன் இந்த அரசு 82 கோடிக்கும் அதிகமாக ஒதுக்கி இருப்பதை நான் வரவேற் கிறேன். அதே நேரத்தில் ஆசிரியர்களிடத்திலே ஏற்றத் தாழ்வு இருக்கக்கூடாது என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பி.டி. பட்டதாரி ஆசிரியர்கள் ரூ. 275 சம்பளம் பெறுகிறார்கள். பி.எஸ்ஸி. பட்டம் பெற்ற டெமான்ஸ்ட்ரேடர்களுக்கு ரூ. 375 சம்பளம். டிப்ளமா பெற்றவர்களுக்கு இதற்கு முன் சம்பளம் ரூ. 140 ஆக இருந்தது இப்போது ரூ. 375 ஆகியிருக்கிறது. முன்பு ரூ. 140 சம்பளமாக இருந்த பி.டி. ஆசிரியர்களுக்கு இப்போது ரூ. 275. செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு ரூ. 210. அதே தகுதி பெற்று 5 மணி நேரம் பணியாற்றும் அப்ரன்டிஸ் ஆசிரியர்களுக்கு ரூ. 175. தொழிற் பயிற்சி ஆசிரியர்களுக்கு ரூ. 210. அதே தகுதியுடைய ஆசிரியர்கள் 18 வகுப்புக்களுக்குக் குறைவாக வேலை செய்ய நேரிட் டால் அவர்களைப் பகுதி நேர ஆசிரியர்கள் என்ற பெயருடன் அவர் களுக்கு கொடுக்கப்படும் ஊதியம் ரூ. 30 ஆகும். தேர்வுத்தாளைத் திருத்த வரும் ஆசிரியர்களுக்கு இரண்டாவது வகுப்பு பிரயாணப்படி கொடுக்கப்படும். மற்றும் சிலருக்கு 3-வது வகுப்பு கொடுக்கப்படும். அரசினர் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கு என்.ஜி.ஓக்களுக்கு அளிக்கப்படுகிற மாதிரி சலுகைகள் அளிக்கப்படுவதில்லை. தனியார் துறையில் அந்தச் சலுகை மறுக்கப்படுகின்றது. இதேபோன்ற ஏற்ற தாழ்வுகள் இருக்கக்கூடாதென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்ரண்டிஸ் ஆசிரியர் திட்டத்தை, மறுபரிசீலனை செய்து கைவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு மீண்டும் பயிற்சி என்று சொல்லுவதோ இல்லாவிட்டால் ரூ. 275 என்று நிர்ணயித்துவிட்டு ரூ. 175 கொடுப்பதோ, அதேமாதிரி செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு ரூ. 210 என்று நிர்ணயித்து விட்டு ரூ. 125 வழங்குவதோ நியாயம் இல்லை.

இந்தத் திட்டத்தினல் 55 வயதிற்கு மேலும் இருந்தாலும் ஆசிரி யர்களுக்கு ஒரு வாய்ப்பைத் தர பல பள்ளிகள் தயங்குகிறார்கள். இந்த அப்ரண்டிஸ் ஸ்கீமின் திட்டத்தினல் இன்னொரு பகுதி ஆசிரிய சமுதாயம் பாதிக்கப்படுகிறது. செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக தனியார் துறை பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டு தங்களுடைய சொந்த முயற்சியினல் பி.டி. ஆவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளும் ஆசிரியர்கள் இந்தத் திட்டத்தினல் பாதிக்கப்படுகிறார்கள். பி.டி. ஆசிரியர்களாக அவர்கள் நேரடியாகப் பணியாற்ற முடியாது. ஏனென்றால் அவர்கள் இந்தப் பட்டியலிலே இடம் பெறவில்லை. இந்த ஆசிரியர்களின் நிலையைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, மாணவர்—ஆசிரியர் விகிதாசாரத்தைக் குறைக்க வேண்டுமென்று பலபேர் பலமுறை வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்தப் பட்டியலில் 24—10—1970-க்கு முன்பு மனு செய்தவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அதற்கு முன்பும் பின்பும் பயிற்சி பெற்ற

ஆசிரியர்கள் பலபேர் இருக்கிறார்கள். இந்த வேலையின்மையைத்
தவிர்க்கவும் கல்வியின் தரத்தை உயர்த்தவும் ஆசிரிய மாணவ
விகிதாசாரத்தை 30 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற முறையை
அடுத்த ஆண்டிலிருந்தாவது குறைக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மதிய உணவு திட்டத்திற்கு ரூ. 198 லட்சமும், கேர் நிறுவன
வகையில் ரூ. 58 கோடிக்கும் அதிகமாக நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் குறைபாடுகளை தவிர்க்கும்
பொருட்டு, ஊராட்சி ஒன்றியங்களில் மைய சமையல் கூடங்கள்
அமைத்து கண்டிப்பான முறையில் அமல் நடத்த வேண்டும்.

அடுத்து எஸ்.ஈ.ஓக்கள் என்று சொல்லப்படும் கல்வி விஸ்தரிப்பு
அதிகாரிகள் பதவிக்கு பி.டி. பட்டம் பெற்றவர்களை நியமித்து அவர்
களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

ரூ. 82 கோடி கல்விக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். கல்வியின் தரம்
உயர அதிகக் கவனம் செலுத்தவேண்டும். ரூ. 20,000 முதலீடு செய்
பவர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படும் என்ற நிபந்தனை இருக்கிறது.
இதைக்கொண்டு முன்பு அங்கீகாரம் வழங்கிய பள்ளிகள் அரசாங்
கத்தின் இந்த நிபந்தனைகளுக்கு உட்படாமலிருந்தால் அந்தப்
பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த முன்வரவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். மாணவர்களின் தகுதி சரியாக இருப்ப
தில்லை. அதற்காக ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 5-வது
வகுப்பை பொதுத்தேர்வு முறையாக ஆக்க முன்வர வேண்டும்.
ஜூனியர் டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் போன்ற பதவி
களுக்கு பி.டி. ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளி
களின் கல்வித் தரத்தை உயர்த்த ஆண்டுத் தணிக்கையின்போது
மாவட்ட கல்வி அதிகாரி அவர்கள் மேற்பார்வையிடும்போது கூறப்
படும் குறையினை நிவர்த்தி செய்ய முன்வராத பள்ளிகளை 3 ஆண்டு
களுக்குள் முன்வர இல்லையென்றால் அரசாங்கமே அந்தப் பள்ளிகளை
ஏற்று நடத்த வேண்டும். ஏற்கனவே அரசாங்கம் ஏற்று நடத்தும்
முன்வரும் பள்ளிகளில் முன்பு பில்டிங் கமிட்டி என்று சொல்லப்படும்
குழுக்களின் வற்புறுத்தலால்தான் ஏற்படுத்தப்பட்ட பள்ளிகள்,
அவைகள் கேட்பாரற்ற நிலைமையில் இருக்கின்றன. அந்தப் பள்ளிகள்,
வருவதற்கு யார் பொறுப்பாக இருந்தார்களோ அந்த பில்டிங்
கமிட்டி உறுப்பினர்கள் அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்
கொள்ள வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய
உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு பேரவையின் துணை
சபாநாயகர் அவர்களே, கல்வி மானிய கோரிக்கையின் மீது பேசு
கின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் என்னுடைய நன்றி கலந்த
வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு கல்வித்துறையின்
அமைச்சர் நாவலர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற இந்த
மானியத்தை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். 1971–72-ல்
ரூ. 81.84யை கல்விக்காக ஒதுக்கியிருப்பது உள்ளபடியே போற்றத்
தக்க ஒன்றாகும். கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்டால் இது





போன்ற பள்ளிக்கூடங்களை, கல்லூரிகளை இடித்து விட்டு அங்கங்கே சினிமா கொட்டகைகளை நாடகக் கொட்டகைகளைக் கட்டுவார்கள் என்று பேசப்பட்டவர்களுடைய வாய்கள் எல்லாம் அடைக்கிற வகையில் இவ்வளவு பெரிய தொகையை இதற்காக ஒதுக்கியிருப்பது உள்ளபடியே எல்லோராலும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். கல்லூரிகளுக்காக 658.8 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருப்பது உள்ளபடியே கல்வியில் நாம் எந்த அளவுக்கு கவனம் செலுத்துகிறோம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

பிறகு பள்ளிகளைப் பொறுத்தவரையில் எந்த நாட்டிலும் இல்லாத அளவு 31,881 தொடக்கப் பள்ளிகளையும் 2,635 உயர்நிலைப் பள்ளிகளையும் இன்றைய தினம் துவக்கியிருப்பது உள்ளபடியே பாராட்டத்தக்க ஒன்றாகும். தொடக்கப் பள்ளிகளுக்காக 50 சதவிதம் வருமானத்திலிருந்து ஒதுக்கி இருப்பது போன்று வேறு எந்த மாநிலமாவது கவனம் செலுத்தி இருக்கிறதா என்று அந்த மாநிலங்களின் வரவு–செலவு திட்டத்தைப் பார்க்கிறபோது இந்த அளவு செலவு செய்ததாக, ஒதுக்கீடு செய்திருப்பதாக நிச்சயம் இல்லை என்ற குறிப்புத்தான் கிடைக்கிறது. அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதை விட ஆலயம் பத்தாயிரம் கட்டுவதை விட ஏழை எளியவர்களுக்கு கல்வி அளிப்பது சிறந்தது என்ற கருத்தை மாண்புமிகு நாவலர் அவர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் சொன்னதன் விளைவு, இந்த நாட்டில் உள்ள பணம் படைத்த மக்கள் கல்விக்காக அதிகமாக பணம் கொடுப்பது அதிகப் பள்ளிகளை துவக்க ஏதுவான சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

அது மட்டுமல்லாமல் பரிசுச் சீட்டைப் பொறுத்தவரை அது சூதாட்டம், அதனால் எந்த இலாபமும் இல்லை என்று சொல்லுகிற நிலை இருந்தது. ஆனால் இன்றைக்கு 50 லட்சம் ரூபாய் அதிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு கல்விக்காக ஒதுக்கி இருப்பது உள்ளபடியே பாராட்டத்தக்க ஒன்றாகும். ஆரம்ப பள்ளி ஆசிரியர்கள் கிராமப்புறங்களில் குடியிருப்பு இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை கவனிக்கின்ற வகையில் அவர்கள் குடியிருப்புக்காக 5 லட்சம் ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

இந்த நல்ல நேரத்தில் என் தொகுதியைப் பற்றியும் ஒரு சில வார்த்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பேரளம் பகுதியில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்று ஏற்படுத்தித் தரப்படவேண்டும் என்று நீண்ட நாட்களாக இந்த சட்டமன்றத்தில் வலியுறுத்தி வந்திருக்கின்றேன். பெண்மக்கள் படிப்பதற்காக தனியாக ஒரு பெண்கள் பள்ளி தேவை என்பதை தெரிவித்துக்கொண்டு அதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏனங்குடி பகுதியில் உயர்நிலைப்பள்ளி என்று ஒன்று இருந்தாலும் அங்கே கோ எஜுகேஷன் என்ற முறையில் ஆண்களும், பெண்களும் படிக்கின்ற அந்த பள்ளிக்கூடம்தான் அங்கே இருக்கிறது. ஆனால் அங்கே பெண்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அங்கேயும் பெண்கள் பள்ளிக்கூடம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று மனதார விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. அ. தேவேந்திரன்] [1971 ஜூலை 9

நன்னிலத்தைப் பொறுத்தவரையில் அது எல்லா வகையிலும் பின் தங்கிய நிலையில் உள்ளது என்பது இந்த மாமன்றம் அறிந்த ஒன்றாகும். ஆகவே அங்கு ஒரு கல்லூரி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப் போலவே பல பள்ளிக்கூடங்களுக்கு விளையாடுகிற இடங்கள் இல்லை. பள்ளிகள் பல இன்னும் கீற்றுக்கொட்டகையில் இருக்கின்றன. இந்த வரவு–செலவு திட்டத்தில் கட்டடங்களுக்காக பல ஆயிரக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தாலும் பல கட்டடங்கள் கீற்றுக் கொட்டகையில் இருப்பதால் மழைக்காலத்தில் தஞ்சையில் அடிக்கடி வெள்ளம் போன்ற விபத்துகள் உண்டாவதால் கீற்றுக்கொட்டகைகள் கீழே விழுந்துவிடுகின்றன. சில சமயங்களில் இதன் காரணமாக மரத்தடியில் வகுப்புகள் நடத்தப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் கல்வி நிலை பாதிக்கப்படுகிறது. ஆகவே இப்படி இருக்கிற பள்ளிக்கூடங்களுக்கு எல்லாம் கட்டடங்கள் கட்டித் தர வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு அங்கத்தினர்கள் ஜேம்ஸ் போன்றவர்கள் இந்த நாட்டில் கல்வியின் தரம் உயரவில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புவது எல்லாம் 1960–67 வரை உள்ள நிலையையும் 1967 லிருந்து 1971–72 வரை உள்ள நிலைமையையும் அச்சடித்து புத்தகமாக கொடுத்து இருக்கிறார்கள். அதைப் பார்த்த பிறகும் இப்படி பேசுகிறார்கள் என்றால் உள்ளபடியே எனக்கு வேதனையாக இருக்கிறது. ஒரு நாட்டின் வருமானத்தில் பெரும்பங்குத் தொகையை கல்விக்காக செலவழிக்கிற நாடு இருந்தால் அது உள்ளபடியே தமிழ் நாடு என்று நாம் பாராட்டுகிற வகையில் இருக்கும்போது இப்படிப்பட்ட பேச்சுகள் பேசுவது உள்ளபடியே வேதனையாக இருக்கிறது என்பதை சொல்லி இந்த கல்வி மான்ய கோரிக்கையை நான் முழு மனதோடு வரவேற்று இப்படி பின் தங்கி இருக்கிற பகுதிகளுக்கு அதிக நிதி ஒதுக்கி, மேலும் கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, when I went through the Note on the Education Demand, I came across one important sentence. It runs as follows :

"Investment in education is truly the most abiding investment in progress and prosperity."

This is an obvious truth which everybody knows but what has been achieved by this Government during the last four years? During the last four years, 1967–71 the total number of elementary schools started is about 720. Compared to the year 1967, we find that there is an increase of two per cent only. It is only 69 lakhs of pupils who are attending the schools in the enlightened year 1971. The Government of Tamil Nadu have stated that their aim is to improve both the quantity and the quality of education. So far as the quantity of education is concerned, it does



1971 ஜூலை 9] [திரு. கே. எம். சுப்பிரமணியம்]

not go far enough to strengthen the schools. They are going to spend about Rs. 83 crores this year but most of the amount would go to the increased salary of teachers. I do not say that they should not get it. At the same time the provision made for the other educational needs is much less.

Coming to the quality of education, I have received a copy of the report given by the Association of Managers of the Non-recognised Kindergarten Schools, wherein it is stated that there is huge rush for admission to these schools. Why should the students rush to these schools? That is because a higher standard of education is imparted there. Even if a parent is poor, he wants his child to be educated in such schools, by paying very high fees. So, the only remedy is to improve our standard.

Now coming to admissions to elementary schools, a number of parents came to me in connection with the admissions because I happen to be an M.L.A. They want admission to a good school. I do not say that a particular school is good or bad. We have come to a stage where admission could be got only through influence. That is because there is shortage of schools and that too good schools. Even this morning the Hon. Minister for Education told this House that the students are very enxious to go to particular colleges, because thty consider that the type of education imparted in those colleges is high. To obviate all these things, we must improve the quality of education everywhere.

Now, I come to the Backward and Harijan communities. Sir, it is all right that we have given a lot of scholarships to them and I entirely agree that we should give all encouragement to them but this is tinkering with the problem. We must educate particularly Harijan students in separate schools like the public school in Lovedale and whatever may be spent on it, it is worthwhile spending. Unless we improve their standard of education, they cannot compete with the students belonging to the richer sections of the society who pay high fees of Rs. 200 or Rs. 300. There must be such schools in every district.

In this connection, I wish to point out that ordinary Harijan students should not be selected but only the first 400 brilliant students. Such brilliant students should be given vitaminised food and there should be a playground of at least 50 acres to enable them to play about. Let them be given the same training as was given to the Maharajahs during the British regime.

Then I come to a very serious matter. South India and particularly Tamil Nadu is having a wonderful Sanskrit culture. Now it has to come to a stage when Sanskrit is completely neglected. People from Russia, Prussia, Japan and Germany and from so many countries in the world are encouraging the study of Sanskrit. But in this State somehow Sanskrit is neglected. I do not want that anything should be done at the expense of Tamil. Like the olden days when we had T1 and T2

[திரு. கே. எம். சுப்பிரமணியம்] [1971 ஜூலை 9

sections and for T2 one could take either Urdu, Arabic or Sanskrit, why not this Government provide help to the students to take Sanskrit for T2, if they so desire. I do not say it should be forced.

Even if this is not done, I would request that greater attention be paid to oriental schools. Oriental schools for Tamil and Sanskrit are there. But in these schools there is a feeling that the syllabus is not good enough and the students passing out of these schools find it difficult to pursue, P.U.C., etc. I would suggest to the Education Minister to introduce science and other subjects in these oriental schools so that the public who are anxious to develop certain languages and start oriental schools may have a sense of relief. Such a step will encourage the starting of more oriental schools. Students passing out of these schools may be able to pursue higher studies also in the colleges. I claim this not only for Sanskrit but for Arabic, Tamil and any oriental language. Then students passing out of these schools may also be fit to take jobs also outside, if they so desire.

So far as Tamil teachers are concerned, I want to say a word or two. We have got two classes here, one getting a higher grade of pay and another lower grade of pay. Both are teaching the same class. I wish the Government considers that these two class system of Tamil Pandits is not necessary. It gives an inferiority complex to the second class. It is better to have one class of Tamil teachers. Becase of the limited time, I reserve my other points for a future occasion. Thank you.

* திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அளிக்கப்பட்டிருக்கிற கல்வி மானியக் கோரிக்கைபற்றி என்னுடைய கருத்துக்கள் ஒன்றிரண்டினை சொல்லலாம் என்று கருதுகிறேன். "விலங்கொடு மக்கள் அனையர்" என்பதாக தெள்ளத்தெளியச் சொன்னார். வள்ளுவப்பெருந்தகை. போதிய கல்வி அறிவு பெறாவிட்டால் மக்களாகப் பிறந்தாலும் அவர்கள் மாக்களாகவே—விலங்குகளாகவே கருதப்படுவார்கள் என்பதாக தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அதனை உணர்ந்த தமிழக அரசு கல்விக்காக அதிகப்பணம் ஒதுக்கியிருக்கிற தன்மையை நான் உளமாரப் பாராட்டுகிறேன். 1959–60-ஆம் ஆண்டில் கல்விக்காக அன்றிருந்த அரசு ஒதுக்கிய பணம் ஏறத்தாழ 15.15 கோடியேதான். அதே நேரத்தில் 1970–71-ஆம் ஆண்டில் இன்றைய அரசு கல்விக்காக ஒதுக்கியிருக்கிற பணம் 81.84 கோடி ரூபாய் என்று சொல்கிறபோது இருக்கின்ற அந்த அரசு கல்விபற்றி எந்த அளவுக்கு கவலை கொள்கிறது என்று பார்க்கிறபோது உண்மையில் உறுப்பினர்கள் எல்லாம் இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

கல்வியை எடுத்துக்கொண்டால் தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி என்று மூன்றுவகைப்படுத்தப்பட்டிருக்கிறது. தொடக்கக் கல்வி என்று எடுத்துக்கொண்டால் 6 வயது முதல் 11



1971 ஜூலை 9] [திரு. கோ. இளங்கோவன்]

வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் ஏறத்தாழ நூற்றுக்கு 94.1 சதவிகிதம் பிள்ளைகள் இன்றையதினம் பயில்கின்றனர். அந்த நிலைமையை மாற்றி நூற்றுக்கு நூறு குழந்தைகளும் கல்வி பயிலவேண்டுமென்ற ஆர்வத்தோடு இந்த அரசு செயல்பட முன்வந்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

அதேபோல 11 வயதுக்கு மேற்பட்டு 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இன்றையதினம் 55.1 சதவிகிதமே பள்ளிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு மாறாக ஏறத்தாழ 80 சதவிகிதம் பிள்ளைகள் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்க இந்த அரசு முன் வந்திருப்பதை மிக்க மகிழ்வோடு வரவேற்கிறேன்.

அதேபோல 14 வயதுக்கு மேற்பட்டு 17 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் இப்போது 35.3 சதவிகிதம்தான் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள், குறைந்தது இதை 55 சதவிகிதமாவது சேர்த்துக் கொள்ளப்படும் இலக்கினை அடைய இந்த அரசு முயன்று வருவதைப் பாராட்டுகிறேன்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

இந்த நேரத்தில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது போதாது, ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்த வேண்டுமென்று உறுப்பினர்கள் சொன்னார்கள். அப்படிச் சொல்கிற நேரத்தில் பயிற்சிப் பள்ளிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன, பயிற்சிப் பள்ளிகளில் சேர்க்கப்படுகிற மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அவர்களுக்கு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக உண்மை நிலையை எடுத்துணர்த்த ஆசைப்படுகிறேன். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டாலும், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிற மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டாலும் ஆசிரியர்களுடைய எண்ணிக்கை உயர்த்தப்பட்டே இருக்கிறது. இந்த அரசு தொடக்கப்பள்ளிகளில் ஏறத்தாழ 3,000 ஆசிரியர்களை புதியதாக நியமிக்க முன்வந்திருப்பதை நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது. உயர்தொடக்கப்பள்ளிகளில் புதியதாக 2,000 ஆசிரியர்களையும், உயர்நிலைப் பள்ளியில் 1,500 ஆசிரியர்களையும் புதியதாக நியமிக்க முன்வந்திருப்பதை உளமார வரவேற்கிறேன்.

பயிற்சிப்பள்ளி பற்றி ஒரு கருத்தினை நான் சொல்ல விரும்புகிறேன். 8-வது படித்துவிட்டு ஆசிரியர் பள்ளியில் சேர்ந்து ஆசிரியராக வரலாம் என்ற நிலைமையை மாற்றி பள்ளி இறுதி வகுப்பு படித்து இருக்க வேண்டும் ஆசிரியராக வருவதற்கு என்ற சூழ்நிலையை உருவாக்கியிருப்பதை உளமார வரவேற்கிறேன்.

அடுத்து, கல்வித்தரம் உயரவேண்டுமென்று சொல்கிறார்கள். மாணவர்களின் கல்வித்தரம் உயர்வதற்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறபோதே தரமான மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்த

வேண்டும். இந்த அரசு முன்பு பயிற்சிப் பள்ளியில் சேருவதற்கு 250 மொத்த மதிப்பெண் பெற்றிருக்கவேண்டும் என்று இருந்ததை மாற்றி குறைந்தது 300 மதிப்பெண் பெற்றிருக்க வேண்டுமென்று செய்திருப்பதை வரவேற்கிறேன். அப்போதுதான் தரமான ஆசிரியர்கள் ஏற்பட முடியும்.

அதே நேரத்தில் பள்ளிக்கூடங்களில் பெண்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருக்கிறது. பெண்களின் எண்ணிக்கையை மிகுதிப்படுத்த முன்வரவேண்டும்.

படியாத பெண்ணினால் தீமை—என்ன
பயன் விளைப்பாள் அந்த ஊமை

என்று பாடினர் பாவேந்தர் பாரதிதாசன். எங்கள் தொகுதியில் கூட இரண்டாயிரம் மாணவர்கள் படிக்கிற உயர்நிலைப்பள்ளி ஒன்று இருக்கிறது. அங்கே 500-க்கு மேற்பட்ட மாணவிகள் இருக்கிறார்கள். அங்கே மகளிர்க்காக தனிப்பள்ளி இல்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆசிரியர்களுடைய ஊதியத்தை உயர்த்த அரசு முன்வந்திருப்பதை நாம் எல்லாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அதே நேரத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் தங்களுக்கு ஊதியம் சரியான முறையில் உயர்த்தப்படவில்லை என்று குறைபடுகிற உணர்வுடன் இருக்கிறார்கள். எனவே, கல்வி அமைச்சர் அவர்களுடைய கோரிக்கையில் நியாயம் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். இல்லை என்றால் அந்தக் கோரிக்கையில் நியாயம் இல்லை என்பதை அவர்களுக்கு விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பயிற்றுமொழிப் பிரச்சினைபற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். கல்லூரிகளில் தனியார் கல்லூரிகள் மிகுதியாக இருக்கின்றன. அரசு கல்லூரிகள் குறைவாகவே இருக்கின்றன. அதனால்தான் மொழிப் பிரச்சினை உருவாகிறது. எனவே அரசு கல்லூரிகளை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. சுப்பு: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையை வரவேற்கிறேன். கல்வி பற்றிய இந்த அறிக்கையை வரவேற்கிற அதேநேரத்தில், "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று சொல்லிக்கொண்டிருக்கும் நேரத்தில் இன்றையதினம் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் சாதிகளின் பெயராலும், மதங்களின் பெயராலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நாம் படிப்பது ஒன்றாக இருக்கிறது, ஆனால் நடைமுறையில் வேறு ஒன்றாக இருக்கிறது. இம்மாதிரி கல்விக்கூடங்கள் சாதியின் பெயராலும் மதங்களின் பெயராலும் இயங்குவதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப்படும் போது அதிகமான அளவில் சேர்க்கப்படுவதன் காரணமாக, கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்க பலருக்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது. கல்லூரி விடுதியில் இடம் கிடைக்காத காரணத்தால்தான் மாணவர்கள் வெளியே தங்கிப் படிக்கிறார்கள். அப்படி வெளியே தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்படுவதில்லை. எவ்வளவோ சிரமப்பட்டு கல்லூரியில் சேருவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்கிறோம். அப்படிச் சேர்ந்த பிறகு கல்லூரி விடுதியில் இடம் கிடைப்பதில்லை. அப்படி கிடைக்காத மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்களும் கிடைப்பதில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே கொஞ்சம் கவனத்தைச் செலுத்தி ஏழை மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, சில கல்லூரிகளில் சேருகிறபொழுது நன்கொடை பெறுகிறார்கள். அப்படி நன்கொடை பெறுவது கல்லூரிகளில் சேருகிறபொழுதுதான் பெற வேண்டும் என்பதில்லை. ஆனால் தனியார் கல்லூரி நிர்வாகிகள் மாணவர்களைக் கட்டாயப்படுத்தி நன்கொடையைப் பெறுகின்ற நிலைமை இருக்கின்றது. இது ஒரு வகையில் லஞ்சம் கொடுப்பதுபோல்தான் இருக்கிறது. ஆகவே, மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான வகையில், மாணவர்களுக்கு இடம் ஒதுக்குவதில் எல்லாம் நாம் மாற்றம் கண்டு புதிய வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இன்றையதினம் மாணவர்களின் மத்தியிலே அமைதியின்மை இருக்கிறது. நாம் அவர்களுடைய குறைகளை நல்ல முறையில் கேட்டு, களைந்தால் மாணவர்களிடையே அமைதி ஏற்படும். மாணவர்களுக்கு பல்கலைக் கழகத்திலே ஒரு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கௌஹத்தி பல்கலைக் கழகத்திலேகூட மாணவர்களுக்கு அங்கம் வகிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அம்மாதிரியான ஏற்பாடு கேரள மாநிலத்திலும் இருக்கிறது. கஜேந்திர கட்கர் கமிஷனும் இதைப் பற்றி நல்ல முறையில் சிபாரிசு செய்திருக்கிறது. கோத்தாரி கமிஷனும் மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்பதைப்பற்றி எடுத்துக் கூறியிருக்கிறது. மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுப்பது பற்றி இந்த சட்டமன்றத்திலே பேசப்பட்டு, ஆலோசனை செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். ஆகவே, மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுத்து அமைதியையும் ஒழுங்கையும் மாணவர்களின் மத்தியிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உயர்நிலைப்பள்ளியிலே வேலை பார்க்கிற பி.டி. ஆசிரியர்களுக்கு இடையேயுள்ள தாரதம்மியங்கள் போக்கப்பட வேண்டும், வித்தியாசங்களை நீக்க வேண்டும். திருச்சியிலே நமது கல்வி அமைச்சர் அவர்கள் பேசும்போதுகூட, இந்த வித்தியாசங்களை நீக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார். அரசு இதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசு உதவி பெற்று நடத்தப்பட்டு வரும் தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களை நிர்வாகிகள் தங்களுடைய இஷ்டத்திற்கு ஏற்றாற்போல் நீக்கிவிடுகிறார்கள். அப்படி நீக்கப்பட்ட சில வழக்குகள் நீதிமன்றங்களில் அப்பீல் செய்யப்பட்டு, இன்னும்

பெண்டிங்காக இருக்கிறது. இதன் காரணமாக ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதையெல்லாம் நீக்க அரசாங்கம் வகை செய்ய வேண்டும். ஆசிரியர்களையும் ஒரு "பொருள்" என்று கருதி விடக்கூடாது. அரசாங்க உதவிபெறும் தனியார் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பதும், ஆசிரியர்களை நியமிப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்க வேண்டும்.

அடுத்து, தனியார் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்கள் திடீரென்று வெளியேற்றப்பட்டு, வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். அப்படிச் செய்யும்போது அவர்கள் அப்பீல் செய்ய வேண்டிருக்கிறது. அப்பீல் செய்து ஹைகோர்ட்வரைக்கும் ஆசிரியர்கள் போக வேண்டியிருக்கிறது. தனிப்பட்டப் பள்ளிகளின் நிர்வாகிகள் விதிகளுக்குப் புறம்பாக நடந்துகொள்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் மாற்றுவதற்கு அரசாங்கம் வழிவகை காண வேண்டும். தவிர, ஒரு பள்ளியிலிருந்து ஆசிரியரை வேறு பள்ளிக்கு மாற்றக்கூடிய அதிகாரத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு ஆசிரியர் அதே பள்ளியில்தான் இருக்க வேண்டுமென்ற நிலைமை இருக்கக்கூடாது. மேலும், குற்றம் நிரூபிக்கப்படுகிற வரையில் ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்கக்கூடாது.

அடுத்து, மாணவர்களுக்கு பள்ளிகளில் கான்வென்ட் படிப்பு, சாதாரண படிப்பு என்ற வகைகள் இருக்கின்றன. பணக்காரப் பிள்ளைகள் கான்வேன்ட் படிப்புப் படிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. பணம் இல்லாத ஏழைகள் சாதாரணப் படிப்பை படிக்கும்படியான நிலைமை ஏற்படுகிறது. பணக்காரர்களுக்கு ஒரு படிப்பு, ஏழைகளுக்கு ஒரு படிப்பு என்ற வேறுபாடு இருக்கக்கூடாது. வேற்றுமையைக் களைய வேண்டும். எல்லோருக்கும் சிறந்தக் கல்வி கிடைக்க வழி செய்ய வேண்டும்.

அடுத்து, பள்ளியிலே வேலைபார்க்கும் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுப்பதற்கு வகை செய்ய வேண்டும். ஆசிரியரை ஒரு பள்ளியிலிருந்து இன்னொரு பள்ளிக்கு மாற்ற வேண்டுமென்கிற நிலைமை இருக்கவேண்டும். ஆசிரியைகளாக இருந்தால் அவர்களுடைய பாதுகாப்புக்கும், குடியிருப்புக்கும் வழிவகைச் செய்ய வேண்டும். ஆசிரியர்களை நல்ல முறையில் வைத்திருந்தால் மாணவர்கள் சிறந்த கல்வியை அவர்களிடமிருந்து பெற முடியும். நிர்வாகிகள் ஆசிரியர்களை அடக்குகிற சூழ்நிலை போக வேண்டும். தனியார்ப் பள்ளி நிர்வாகிகள் பொருள் சேர்க்கும் எண்ணத்தைக் கைவிட்டு, கல்வித்தொண்டு அளிக்கும்படிச் செய்ய வேண்டும்.

சீருடை என்ற தத்துவம் நல்லதுதான். இது எல்லாத் துறையிலும் கொண்டுவரப்பட வேண்டும். இதற்கெல்லாம் பணத்திற்கு என்ன செய்வது என்று கேட்கலாம். இதற்கு ஒரு சிறந்த வழியைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். சம்பாதிக்கக்கூடியவர்கள் ஓரளவுக்குத் தியாகம் செய்யலாம். "எஜுகேஷனல் லெவி" என்பதாக ஒரு திட்டம் கொண்டு வரலாம். அதாவது, வேலை செய்து சம்பாதிக்கக்கூடியவர்களுக்கு 100 ரூபாய்க்கு மாதம்



ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்ற அளவில் எஜுகேஷனல் லெவி விதிக்கலாம். சம்பாத்தியத்திற்குத் தகுந்தாற்போல் கொடுக்கலாம். ஆகவே, அரசாங்கம் இதைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்டத் திட்டத்திலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கல்வி இன்றையதினம் நாம் படிப்பதற்கும் நடைமுறைக்கும் சம்பந்தமே இல்லாமல் இருக்கிறது. "நாம் சத்துள்ள உணவு வகைகளைச் சாப்பிட வேண்டும்" என்று பாடத்திலே சொல்லிக் கொடுக்கிறோம். ஆனால் இந்தப் பாடத்தைச் சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களும், படிக்கின்ற மாணவர்களும் சத்துள்ள உணவு வகைகளைச் சாப்பிட முடியாத நிலை இருக்கிறது. காரணம், அவர்களுக்கு அது கிடைப்பதில்லை. ஆகவே, கல்வியை நடைமுறைக்கு ஒத்ததாகச் செய்ய வேண்டும். மாணவர்கள் சில நேரங்களில் தவறுதலாக நடந்தாலும் அதைத் திருத்த வேண்டும்.

அடுத்தபடியாக, புலவர் கல்லூரியிலே புலவர் பட்டம் பெற பயிற்சிக்கு வருகிறார்கள். அவர்களுக்கு வைத்திருக்கும் பாடமும், செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சிக்கு வைத்திருக்கும் பாடமும் ஒன்றாக இருக்கிறது. புலவருக்கும், செகண்டரி கிரேடுக்கும் பாடம் ஒன்றாக இருப்பதில் அர்த்தம் இல்லை. நாம் சிறு பையன்களுக்கு ஆரம்பத்தில் மணலில் "அ", "ஆ", "இ" எழுதிக் காட்டுவோமே, அவையெல்லாவற்றையும் அங்கே கற்றுக்கொடுக்கிறார்கள். இது வேண்டாதது.

சில பாடங்கள் உண்மைக்கு மாறான வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றி பூகோள நூல் நான்காம் வகுப்புக்கு என்று ஒரு பூகோள நூல் வைக்கப்பட்டிருக்கிறது. அது 1965-ல் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ள புதிய பாடத் திட்டத்தின்படி எழுதப்பட்டுள்ளது. இந்த நூல் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றது. அதில் "அருப்புக்கோட்டை மாவட்டத்தில்" என்று இருக்கிறது. அருப்புக்கோட்டை தாலுகாதான், மாவட்டம் அல்ல. அதுமட்டுமல்ல, "மல்லாங்கிணறு முதலிய கிராமங்களுக்குக் கவுண்டன் ஆற்றிலிருந்து நீர்ப்பாசன வசதி அளிக்கும் வேலை நடைபெற்றுள்ளது. இவற்றிற்குப் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழிந்துள்ளது. ஆயிரக்கணக்கான (மெட்ரிக்) டன் உணவுத் தானியங்கள் அதிகமாக விளைந்துள்ளது" என்று அந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட திட்டமே கிடையாது. காங்கிரஸ் அரசாங்கம் இருந்த நேரத்தில் அப்படி சொல்லப்பட்டது உண்மை, அப்படிப்பட்ட நதி அங்கே கிடையாது. இந்தப் பாடத்தை அந்த ஊரில் சொல்லிக்கொடுத்தால், மாணவர்கள் "அந்த நதி எங்கே இருக்கிறது" என்றுதானே கேட்பார்கள். இந்தப் புத்தகத்தை அரசாங்கமும் அங்கீகரித்து இதுவும் பாடத் திட்டத்தில் இருக்கிறது. அந்த ஊர் ஆசிரியர் எவ்வளவு இக்கட்டான நிலைமையிலே இருப்பார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, சரியான புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கக்கூடியக் குழுக்களை அரசு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எத்தனையோ இடையூறுகள் இருந்தாலும் தமிழைப் பயிற்சி மொழியாக்க, ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று நாம் நல்ல முறையில் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். மாணவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை எனக் காரணம் காட்டக் கூடாது. இன்றைக்கு அது மாணவர்களுக்கு விருப்பப் பாடமாக இருந்தாலும், பயிற்சி மொழி, ஆட்சி மொழி இவைகளில் நாம் எடுத்துக்கொள்ளக்கூடிய நல்ல முயற்சிகளினால் விரைவில் நீதி மன்றங்களிலும் தமிழ் முழு அளவில் வந்துவிடும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். தமிழ் உயர் நீதிமன்றங்களில் வந்து விட்டதை நான் வரவேற்கிறேன். தமிழை ஆட்சி மொழியாக, நீதி மன்ற மொழியாக கொண்டுவர வேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்க முடியாது.

அடுத்து, கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொள் கின்றவர்களுக்குச் சில சலுகைகள் அளிக்கப்படுகின்றன. தனியார் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கும் அந்தச் சலுகையை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புலவர் கல்லூரிக்கும் அந்தச் சலுகை வசதிகளை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புலவர் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்காக வருகின்றபோது, பயிற்சியாளர்கள் ஆசிரியராக வேலைபார்த்த கல்லூரிதான் அவர் களுக்கு அரை மாதச் சம்பளம் கொடுக்க வேண்டும். ஏனெனில், அவர்கள் டெப்யுடேஷனில் வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அப்படிச் சம்பளம் கொடுப்பதில்லை. புலவர் பயிற்சிக்குப் போகும் போதே, அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டுத்தான் அனுப்பு கிறார்கள். இதனால் அவர்களுடைய வருவாய் இழந்து, கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, புலவர்களுக்கெல்லாம் நன்மை செய்ய வேண்டும் என்ற அளவில் கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித் தமைக்கு நன்றியைத் தெரிவித்து, உரையை முடிக்கிறேன்.

* திரு. செ. பெருமாள் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1971–72-ம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின் பேரில் இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

இந்த அரசானது இதுவரையில் தமிழகத்தை ஆண்டுவந்த அரசுகள் கல்வியில் ஆற்றிய பணிகளைவிட மிகச் சிறப்பான கல்வி அம்ச திட்டங்களை நடைமுறையில் செயல்படுத்தி வருகின்றது. குறிப் பாக நமது முதல் அமைச்சர் அவர்கள் சமீபத்தில் 1969–70-ஆம் ஆண்டுகளில் புகுமுக வகுப்பில் கட்டணம் இல்லையென்ற சலுகை அளித்ததன் காரணமாக ஏழை எளிய மக்கள் அதிகமான அளவில் படிக்கும்படியான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. "கல்தோன்றி, மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி" என்ற பழமொழிக்கிணங்க அன்றையதினம் நமது முதலமைச்சர் அவர்களைக் கல்விக்கு மூத்த தந்தை என்று கூடச் சொல்லலாம். குறிப்பாக, தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி, சிறப்புக் கல்வி, பிற இனங்கள் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, தொழில் பயிற்சிக் கல்வி இதுபோன்ற பற்பல நல்ல அம்ச கல்வித்





திட்டங்களுக்கும், திட்டத்தில் சேராத நற்பலனளிக்கும் பணிகளுக்கும் நமது அரசு 81.84 கோடி ரூபாய் அதிக அளவில் ஒதுக்கித் தந்துள்ளது என்பதைக் கண்டு நான் பாராட்டுகிறேன்.

தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்த்தல், பள்ளியை விரிவுபடுத்தல், கிராமப்புறங்களில் தேவைகளுக்கேற்ற கட்டடங் களைக் கட்டி பள்ளியின் தரத்தை உயர்த்துதல், தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் பதவிகளை இடைநிலைப் பள்ளி ஆசிரியர் பதவிகளாக மாற்றுவித்தல், கிராமப்புறங்களில் ஆசிரியர் குடியிருப்பு, வசதி வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல், பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர் களுக்கு நண்பகல் உணவு வழங்க வழிவகை செய்தல், குறிப்பாக பெண் குழந்தைகளின் கல்வி பயிலும் எண்ணிக்கை அதிகரிக்கும் வகையில் அதிக அளவில் கிராமங்களில் பெண் ஆசிரியர்களுக்கு தங்க வகை செய்யும் வகையில் வீடுகள் அமைத்துத் தருதல் போன்ற காரியங்களில் ஈடுபட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளி பணியாளர்களை அரசுப் பணி யாளர்களாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல், விவசாயம், உடற்கூறு ; ஆகிய பற்பல பிரிவுக் கல்வி முறைகளை நல்ல முறையில் அமைத்துத் தந்திருக்கிறது.

இந்த முறையிலே ஆசிரியர்கள் இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து போட்டி விளையாட்டுகளை ஏற்படுத்தி, அதேபோன்று ஒவ்வொரு பள்ளியிலும் சாரணர் இயக்கங்களைக் கட்டாயப் பாட மாக வைத்து ஏற்பாடு செய்திருக்கின்ற அரசுக்கு நாம் நன்றி தெரி வித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம்.

உடல் ஊனமுற்றவர்கள், கண் பார்வையற்றவர்கள், குறைபாடுற் றோர் இவர்களுக்காக தொழிற் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பித்திருக் கின்ற அரசுக்கு நான் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைத் தவிர புகுமுகத் தொழில் பயிற்சி நிலையங்கள், முதியோர் கல்வி நிலையங்கள், குழந்தைகள் இல்லம் (அனாதை), நூலகங்கள் இவற்றிற்காகவும் அரசு அநேக நல்ல முயற்சிகளை மேற்கொண்டிருக் கின்றது. சிறைச்சாலையிலே இருக்கின்ற கைதிகள் படிப்பதற்கு ஏற்பாடுகள் செய்வது, மருத்துவநூலகப் பணிகளை மேம்படுத்துவது, காவல் துறை அதிகாரிகள் பயில்கின்ற வாய்ப்பினைச் செய்வது ஆகிய இப்படிப்பட்ட நல்ல பணிகளை நம்முடைய தமிழக அரசு கல்வியிலே செய்திருக்கிறது. பல அரும்பெரும் வசதிகளைச் செய்திருக்கிறது. இருப்பினும் அதைப் பாராட்டிவிட்டு, என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொண்டுவிட்டு விடை பெறலாம் என்று நினைக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே மிகவும் பிற் பட்டத் தொகுதி என்று நான் அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறேன். சிறு சிறு தொடக்கப் பள்ளிகள் ஏற்படுத்துவதற்கு, குறிப்பாக என்னுடைய

பகுதியில் உள்ள நடுத்திட்டு, இடையாறு என்ற கிராமங்களிலே ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதிக்கு அருகாமையிலேதான் சிதம்பரம் இருக்கிறது. அங்கேயிருக்கிற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அதிக அளவுக்கு, எங்கள் பகுதியிலுள்ளவர்களுக்குச் சேருவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனவே காட்டுமன்னார் கோயிலில் ஒரு அரசினர் கல்லூரி ஏற்படுத்தித் தந்தால் ஏழை எளியவர்களுக்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கேயே ஒரு தொழிற் பயிற்சி நிலையமும் ஏற்படுத்தித் தந்தால் அங்குள்ள மக்களுக்கு வாய்ப்பாக இருக்கும். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை சென்ற ஆண்டைவிட 15 கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஆரம்பக் கல்விக்காகவும் செகண்டரி கல்விக்காகவும், 12½ கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

அரசியல் சட்டத்தின் டைரக்டிவ் பிரின்ஸிபிள், அதாவது ஆணைக் கொள்கை எண் 45, 1960 ஆம் ஆண்டுக்குள் 14 வயதுவரையில் உள்ள பிள்ளைகளுக்குக் கட்டாய இலவசக் கல்வி தரப்பட வேண்டுமென்பதாகும். ஆனால் கணக்கிட்டுப் பார்த்தால் 6 முதல் 11 வயது வரையிலும் 94.1 சதவிகிதம் பேருக்கும் 11 முதல் 14 வரையிலும் 55.1 சதவிகிதம் பேருக்கும்தான் அந்த வசதி கிட்டியிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக்குள்ளேயும் 6 முதல் 11 வரையிலும் 100 சதவிகிதமும் 11 முதல் 14 வரையிலும் 80 சதவிகிதமும் தான் வரும் என்று காட்டியிருக்கிறார்கள். இது பெரும் குறைபாடானது. இந்தக் குறைபாடுகளுக்கு எல்லாம் பெரும் பொறுப்பு முன்னே இருபது ஆண்டுகள் ஆண்டவர்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றாலும்கூட, நல்ல முறையிலே கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, அரசியல் சட்டத்தின் டைரக்டிவ் பிரின்சிபிளை இந்த அரசு நிறைவேற்றிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன்.

ஏற்கனவே வகுத்துவிட்ட கல்வி முறையே நீடிக்கிறது. மாணவர்கள் கல்வியை முடித்தப் பிறகு தங்களுடைய சொந்த வாழ்க்கையைச் செம்மையாக நடத்துவதோடு சமுதாயத்திற்குப் பயன்படுகின்ற முறையிலேயும் வாழ்ந்திட வேண்டும். அந்த முறையில் கல்வி அமைந்திட வேண்டுமென்று கல்வி நிபுணர்களும் பேராசியர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்கேற்றவாறு கல்வியை, கல்வி முறையை, பாடத் திட்டங்களை மாற்றியமைத்திட வேண்டுமென்ற முறையில் இந்த அரசு வழி செய்திட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன்.





இந்த அரசு சோஷலிச லட்சியத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கேற்றவாறு மாணவர்கள் அந்த லட்சியத்தில் உள்ளபடியே பற்றுக்கொண்டவர்களாக, அதற்கேற்ற பண்பாடுடையவர்களாக, தேசியம், ஜனநாயகம், சமதர்மம், மதச்சார்பின்மை, ஜாதி சார்பற்ற தன்மை இவை பொருந்தியவாறு கல்வி பெறக்கூடிய அளவிலே மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன்.

கல்லூரிகள் திறக்கப்படுகின்றன, பள்ளிகள் திறக்கப்படுகின்றன. அவற்றிலே படித்துவிட்டு ஆயிரக்கணக்கான மாணவர்கள் வெளியே வருகின்றார்கள். வெளியிலே வரும்பொழுது அவர்கள் திக்குத் தெரியாத காட்டில் விடப்பட்ட நிலையில்தான் இருக்கிறார்கள். தம்முடைய வாழ்க்கையைச் செம்மையாக்கவும், சமுதாயத்திற்கு தாம் என்ன செய்யவேண்டுமென்பதையும் அவர்கள் கற்றுக்கொண்டு வெளியிலே வருகின்ற நிலைமையிலே கல்வித் திட்டத்தோடு அதைப் பற்றியத் திட்டமும் கூடவே வந்திடவேண்டும்.

கல்வியின் தரம்பற்றிப் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அறிக்கையிலே, மாணவர்களுக்குக் கிராமர்கூட தெரியவில்லை, தம்முடைய கருத்துக்களை எடுத்துக் சொல்வதற்குத் தெரியவில்லை, என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். தரத்தை உயர்த்த வேண்டுமானால் டீச்சர்–பியூப்பிள் ரேஷியோவை—இப்பொழுது 40 அல்லது 50 மாணவர்கள் இருக்கிறார்கள்—20 அல்லது 25 என்ற அளவுக்குக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

அட்மிஷனைப் பொறுத்தவரையிலே முதலியார் கமிஷன் அறிக்கையை அரசு ஏற்றுக்கொண்டுவிட்டதாக அறிவித்து இருக்கிறது. இது பற்றி என்னுடைய தனிக் கருத்து ஒருபுறமிருக்க, அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், ஆனால்-ஆங்கிலக் கல்வி வேண்டுமென்று கேட்கின்றவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அந்த அறிக்கையிலே மாணவர்களுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதை அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் அதற்கேற்றாற்போல் நடைபெறவில்லை. ஆங்கிலம் முதலாவதாகவும், தமிழ் இரண்டாவதாகவும் கேட்டால்கூட, ஆங்கிலப் பயிற்சிமொழிக்கு இடம் இல்லை என்றாலும் தமிழ் பயிற்சி மொழிக்கு இடம் வேண்டுமென்றால்கூட இல்லை என்ற நிலைமை இருக்கிறது. இதைத் தவிர்க்கவேண்டும்.

மாணவர்களுடைய கிளர்ச்சிபற்றி உலகமுழுதும் பேசப்பட்டு வருகின்றது. மாணவர்கள் பல்கலைக் கழக நிர்வாகத்திலே இடம் பெறவேண்டும் என்று யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன்கூட கூறியிருக்கிறது. திரு. கஜேந்திர கட்கர் அவர்கள் தலைமையில் உள்ள கமிட்டி ஆன் கவர்னன்ஸ் ஆப் யுனிவர்சிடிஸ் கூட ஸ்டூடன்ஸ் கவுன்சில் அமைக்கவேண்டுமென்று சொல்லி இருக்கிறது. ஒவ்வொரு ஃபேக்கல்டியிலும் ஒரு மாணவர் அட்வைசரி கமிட்டிகூட ஏற்படுத்த வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. இப்படிப்பட்ட பரிந்துரைகளை அமலாக்கவேண்டுமென்று நம்முடைய அரசு பல்கலைக் கழகங்களை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. தனியார் பள்ளிகளையும், கல்லூரிகளையும் பொறுத்தவரையில் அது ஒரு ஃபார்ஸ் ஆகத்தான், நாடகமாகத்தான் இருக்கிறது. கட்டணத்தை விட்டுவிட்டார்கள்

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1971 ஜூலை 9

ஆனால் ஸ்பெஷல் பீஸ் என்ற முறையில் வாங்குகிறார்கள். ஒரு கல்லூரியில் முன்பு மூன்று டெர்ம்களுக்கும் சேர்த்து 240 ரூபாய் கட்டணம் வாங்கினார்கள் என்றால் இன்றைக்கு ஸ்பெஷல் பீஸ் மட்டும் 270 ரூபாய், 280 ரூபாய் வசூலிக்கிறார்கள். இந்த நாடகத்திற்கொரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். தனியார் பள்ளிகள், கல்லூரிகள் எதற்கு? இவைகளையெல்லாம் அரசு ஒரு ஃபேஸ்டு ப்ரோகிராமாக எடுத்துக்கொள்ள வேண்டும். முதலில் தனியார் பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும், பிறகு தனியார் கல்லூரிகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் தனியார் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு அரசே நேரடியாக சம்பளம் வழங்கிட வேண்டும்.

கல்லூரிகளிலே இடம் ஒதுக்குகின்ற முறையிலே பின்தங்கிய வகுப்பு என்பதைப் பல முன்னேற்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர் என்ற சர்டிபிகேட் வாங்கி அட்மிஷன் பெற்றுவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. அரிசனங்கள், மிகவும் பின்தங்கியவர்கள், இவர்களைத் தவிர மற்றவர்களுக்குப் பொருளாதார அடிப்படையை வைத்து கொடுக்குமாறு செய்திடல் வேண்டும். அரிசனங்கள், மிகவும் பின்தங்கியவர்கள் இந்த இரண்டு பிரிவினருக்குத்தான் ரிசர்வேஷன் இருந்திடல் வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்வுகளைக் கைவிடவேண்டும் என்று பல அறிஞர்கள் கமிட்டிகள் சொல்லியிருக்கிறார்கள். தற்பொழுது ஆந்திரப் பிரதேசத்திலே இனிஷியேடிவ் எடுத்து, தேர்வுகளை 7 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு தவிர எடுத்திருக்கிறார்கள். நாமும் தேர்வு என்ற சனியனை ஒழித்துவிட்டு மாணவர்களை சரிவர முன்னேற்றிட அந்த முறையை ஒழித்திடவேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

ஆசிரியர்கள் டிரான்ஸ்பர்களை ஊராட்சி ஒன்றியங்களிலும் நகரமன்றங்களிலும் ஆண்டுக்கொரு முறை செய்துவிடுகிறார்கள். இதிலே பல தவறுகள், ஊழல்கள் நடைபெறுகின்றன. குறிப்பாக காரணமில்லாது 3 ஆண்டுகள் வரையில் டிரான்ஸ்பர் செய்யக்கூடாது என்று நம்முடைய கல்வித் துறையமைச்சர் அவர்கள், அவர்களே உள்ளாட்சித் துறையமைச்சராகவும் இருக்கின்ற காரணத்தினால் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

கட்டடம், லேபரட்டரி இல்லாத நிலைமை பரவலாக இருக்கிறது. 1971–72 ஆம் ஆண்டிலே மொத்தம் இருக்கிற பள்ளிகளிலே மூன்றில் ஒரு பங்குதான் லேபரட்டரி வசதிகளைப் பெற்றிருக்கும். கிராமப்புறங்களிலே உள்ள பள்ளிகளில் லேபரட்டரி வசதிகள் மிகமிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், அங்கே பயிலும் மாணவர்களின் கல்வியின் தரம் குறைகிறது. அது தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொரள்கிறேன்.

அரிசன மக்களுக்குப் பல சலுகைகள், அட்மிஷன்களில், மார்க்குகளில் கொடுக்கிறோம். அதுகூடப் போதாது. அவர்கள் கல்வியின் தரம் உயர வேண்டும். இதற்காக ஒவ்வொரு அரிசன சேரி



1971 ஜூலை 9] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

யிலும் குறைந்தபட்சம் ஒரு ஆசிரியரையாவது, ஸ்பெஷல் டியூட்டராக நியமித்து பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் வகையில்; அரிசனக் குழந்தைகளுக்குத் தனியாக கோச்சிங் கொடுக்க ஏற்பாடு வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சிலவற்றை மட்டும் சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். சிங்காநல்லூர் நகராட்சி ஃபர்ஸ்ட் கிரேட் முனிசிபாலிட்டியாக இருக்கிறது. அரசாங்கம் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்து வீட்டு வாடகைப்படியைப் பொறுத்தவரையில் சில நகரமன்றங்களில் 5, 7, 9 என்றும், சில நகரமன்றங்களில் 10, 15, 20 என்றும் இன்னும் சில நகரமன்றங்களில் 3 ரூபாய் என்றும் வீட்டு வாடகைப்படியை நிர்ணயித்திருக்கிறார்கள். சிறிய நகர மன்றங்கள் கூட சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே ஃபர்ஸ்ட் கிரேட் முனிசிபாலிடியான சிங்காநல்லூர் முனிசிபாலிட்டியையும் இதிலே சேர்த்து 5, 7, 9 வீட்டு வாடகைப்படி கிடைக்கும் வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புவேன்.

அடுத்தபடியாக, கோவையிலே பெண்கள் கல்லூரிகள் இரண்டு இருக்கின்றன. இரண்டும் தனியார் கல்லூரிகள். இதுபோக அரசினர் பெண்கள் கல்லூரி திறக்க வேண்டும்.

சிங்காநல்லூர் நகராட்சியில் நூலகம் ஒன்றை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன். இதுகாறும் இல்லை. குற்றம் சொல்ல வரவில்லை. ஏனென்றால் 5 ஆண்டுகள் தானாகிறது நகராட்சிமன்றமாகி.

மேட்டூர் டவுன்ஷிப்பைப் பொறுத்தவரையில் சேலம் கேம்பில் இரண்டு தனியார் ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. மேட்டூரிலே வைத்தீஸ்வரன் ஹைஸ்கூல் என்று வைத்திருக்கிறார்கள். அங்கே அட்மிஷன் கிடைப்பது சிரமமாகயிருக்கிறது. அமைச்சரவர்கள் 8, 9, 10 என்று தனியாகப் பிரிப்பதாகச் சொன்னார்கள். அப்படிப் பிரித்து சேலம் கேம்ப் பிள்ளைகளுக்கு அட்மிஷன் கிடைக்காத குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு தலைவரவர்களே, கல்வியின் பெருமையைப் பற்றிக் கவிதையெழுதிய புறநானூற்றுப் பாண்டியனின் பெயரைத் தாங்கியிருக்கக்கூடிய நமது கல்வியமைச்சரவர்கள் அவையின் முன்னால் வைத்த அறிக்கையின் விழுமிய சிறப்பினைப் பாராட்டிக் கூறுவதற்கு விரும்புகிறேன். ஏழைகளுக்கு எட்டாக் கனியாகயிருந்த கல்வியை இந்த அரசு இலவசக் கல்வியாக மாற்றியிருப்பதை எவரும் பாராட்டாது இருக்க முடியாது. இல்லாமையை அகற்ற வேண்டுமென்று சமதர்ம நோக்கத்தோடு செல்ல விரும்பும் நமது அரசு கல்லாமையைப் போக்குவதிலேயும் கணிசமான அளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறது என்பதை இந்த மானியக் கோரிக்கையின் குறிப்பினைப் படிப்பவர்கள் புரிந்து கொள்ள முடியும். புள்ளி விவரப் புத்தகத்தைப் பார்த்து மட்டும் அல்ல, நாடு முழுவதும் பெருகியிருக்கும் கல்லூரிகளைப் பார்ப்பவர்கள். 300 மக்கள்

தொகைக்கு மேற்பட்ட ஊர்களிலே உருவாகியிருக்கின்ற கல்விக் கூடங்களைப் பார்ப்பவர்கள் கல்வி பெருகியிருக்கிறது என்பதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளுவார்கள்.

பத்தாண்டுகளுக்கு முன்பு கல்விக்காகச் செலவிடப்பட்ட தொகையைக் காட்டிலும் 5, 6 மடங்கு அதிகமாக இப்பொழுது செலவிடப்படுகிறது. ரெவின்யூச் செலவில் ஏறத்தாழ 23 விழுக்காடு செலவிடப்படுவதாகத் தெரிகிறது. இதை நோக்கும்போது எந்த அளவிற்கு இந்த அரசு கல்வியில் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. அதுவும் கல்வியின் அடிப்படையாக இருக்கக்கூடியது தொடக்கக் கல்வி. அந்தத் தொடக்கக் கல்விக்கு, கல்விக்காக செலவிடப்படும் தொகையில் 50 விழுக்காடு செலவிடப்படுகிறது.

நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், கல்விக்கூடங்கள் முறையாக அமைக்கப்பட, கட்டடங்கள் முறையாக அமைக்கப்பட, அதைக் கட்டித் தருவதற்கு அரசு தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதிலேயும், சில பழைய கட்டடங்களை மராமத்துச் செய்வதில் அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், கள்ளிப்பட்டி என்ற கிராமத்திலுள்ள கல்விக்கூடத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே விட்டமே முறிந்து போய் எந்த நேரத்திலே கீழே விழுந்துவிடுமோ என்ற நிலை ஏற்பட்டிருப்பதைப் பார்த்தேன். தளங்கள் பெயர்ந்து போயிருப்பதைப் பார்த்தேன். இதைப்பற்றித் தொடர்புடைய அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறேன். அந்தக் கல்விக்கூடங்கள் சீர்கெட்டிருப்பதை சீர் செய்ய அரசு முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

உயர்நிலைப்பள்ளிகளிலே 11-ஆம் வகுப்பில் வெற்றிபெறும் மாணவர்கள் அத்தனைபேருமே கல்லூரியில் புகுமுக வகுப்பில் சேரத் தகுதியுடையவர்கள். ஆனால் இத்தனை மதிப்பெண்கள் இருந்தால் தான் எடுத்துக்கொள்வோம் என்ற கட்டுப்பாட்டைக் கல்லூரிகளிலே வைக்கிறார்கள். இதனால் பல மாணவர்கள் ஒவ்வொரு கல்லூரிக்கும் சென்று சுவற்றில் அடித்த பந்தைப்போன்று மீண்டும் மீண்டும் திரும்பி வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் 300 மதிப்பெண்கள் மாத்திரம் என்ற கட்டுக் கோப்பை வைத்திருப்பதைப் போல இத்தனை மார்க்குகள் பெற்ற மாணவர்கள்தான் கல்லூரிகளிலே சேர முடியும் என்ற முறையை யாவது வைத்தால் அனைவரும் சேருவதற்கான சூழ்நிலை உருவாகும்.

பாடத்திட்டத்தில் அரசு அறியாமலே சில குறைபாடுகள் ஏற்படு கின்றன. 11-ஆம் வகுப்புத் தமிழ்ப்பாடபுத்தகத்தில் வீரச்சுவை என்ற பாடம் இருக்கிறது. திரு. வேங்கடசாமி நாட்டார் எழுதியது என்று கருதுகிறேன். இதேபாடம் புகுமுக வகுப்புப் புத்தகத்திலும் இருப்பதைப் பார்த்தேன். மாணவர்களுக்கு வீரச்சுவை அதிகமாக ஏற்பட வேண்டுமென்ற எண்ணத்தினாலோ என்னவோ 11-ஆம்



வகுப்பிலேயிருந்த அதேபாடம் புகுமுக வகுப்பிலும் இடம் பெறுகிறது. ஆகவே, இத்தகைய குறைபாடுகளைப் பாடத்திட்டக்குழு கவனித்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்வுத்தாள்களைத் திருத்தும் முறையை இன்னும் இறுகலாக ஆக்க வேண்டும். எங்கே தேர்வுத்தாள்களைப் பின்தொடர்ந்து செல்லலாம் என்று சுரங்க வழியைக் கண்டுபிடிக்கின்ற சபல நிலையை மாணவர்கள் அடையாவண்ணம், தேர்வுத்தாள்களை ஊடுருவ இயலாத அளவில் இன்னும் இறுகலாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பயிற்சிமொழியைப் பொறுத்தவரையில் இந்த அரசு சரியான முடிவை எடுத்திருக்கிறது. என்றாலும் தமிழ்ப்பயிற்சி மாணவர்களுக்கு இன்னமும் அதிக உதவி செய்யுமளவில் அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்ப்பயிற்சி மொழித்திட்டத்தை விரிவுபடுத்த, தமிழ்ப்பயிற்சி மொழி இடம் பெறும் அளவில், ஆங்கிலப் பயிற்சி மொழியை அகற்றுவது அரசின் நோக்கமாக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆங்கிலப் பயிற்சிமொழியை எடுக்க வேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில் எவருடைய முணுமுணுப்பையும் பொருட்படுத்தக்கூடாது. இரண்டுவிதமான கருத்துக்களுக்கு இடமில்லாமல் இந்த நாட்டிலேயிருப்பவர்கள் அனைவரும் பயிற்சி மொழித்திட்டத்தை ஆதரிக்கிறார்கள். இந்த நாட்டு மக்களை அறவழியிலே அழைத்துச் செல்ல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்மொழிதான் இருந்தது. அத்தகைய தமிழ்மொழியை அரியாசனத்தில் ஏற்றும் முறையில் பயிற்சிமொழித்திட்டம் சிறப்பாக நடைபெற முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தக் கல்வி மானியக் கோரிக்கையை முழுமையாக ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. பி. வெங்கடசாமி தெலுங்கில் உரையாற்றினார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன். கல்வி அமைச்சரவர்களுக்குத் தெலுங்கு தெரியுமா? தெரிந்தால்தானே அவர் பேசுவதைப் புரிந்துகொண்டு பதில் சொல்ல முடியும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தெலுங்கு தெரியாதது மட்டும் அல்ல, அவர் பேசும் பேச்சு சட்டசபை நடவடிக்கைக் குறிப்பிலும் பதிவு ஆகாது.

THIRU B. VENKATASWAMY: Sir, then I would be deprived of the privilege of a Member. So, I want a ruling from the Chair.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த அவையினுடைய நடவடிக்கைக் குறிப்புகள் ஆங்கிலத்திலும் தமிழிலும்தான் பதிவாகின்றன. தெலுங்கில் பேசுவதாகயிருந்தால் அதனுடைய நகலை

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 9

யாவது மொழிபெயர்த்து முதலிலேயே நம்முடைய பேரவைத் தலைவரவர்களிடம் கொடுத்துவிட்டால்தான் அது பதிவு செய்யப் படும்.

THIRU B. VENKATASWAMY: One of my friends, Thiru Kothandaramiah has spoken in Telugu.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): தெலுங்கிலே நீங்கள் பேசக்கூடாது என்று சொல்லவில்லை. பேசினால் அதன் நகலை மொழிபெயர்த்து தலைவரிடம் முன்னதாகவே கொடுத்து விட்டால் அது அச்சாகும்.

THIRU B. VENKATASWAMY: How can I expect that I am going to speak this thing only? I cannot . . . .

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெலுங்கிலே பேசத் தடையில்லை. ஆனால் தெலுங்கிலே பேசப்போகும் செய்தியை—பேசப்போகும் பொழுது என்னென்ன பேசப்போகிறோம் என்று தீர்மானிக் கிறீர்கள்—அதை ஆங்கிலத்திலே எழுதி முன்கூட்டியே பேரவைத் தலைவரவர்களிடத்திலே கொடுத்துவிடலாம். இப்பொழுது வேண்டு மானால் தாங்கள் பேசியதற்குப் பிறகு அதனுடைய குறிப்புகளை ஆங்கிலத்தில் எழுதிக் கொடுத்துவிட்டால் இந்தத் தடவை நாம் ஏற்றுக்கொள்ளலாம். இதற்குப் பிறகு தெலுங்கிலே பேச வேண்டு மென்ற நிலை ஏற்படும்பொழுது தங்களுடைய குறிப்புகளை முன் கூட்டியே கொடுத்துவிட்டால் பதிவு செய்ய ஏற்றதாக இருக்கும், பதில் சொல்லவும் ஏற்றதாக இருக்கும்.

MR. CHAIRMAN (THIRU N. VEERASWAMY): In our Rules, we have got a specific provision as follows:

"The business of the Assembly shall be transacted in English or in Tamil, provided that any member may address the Assembly in any recognised language of the State or in Hindi and provided further that the Speaker may permit any member who cannot adequately express himself in any of the aforesaid languages to address the Assembly in his mother-tongue".

So, you can address in your mother-tongue, but you will have to submit a translation of your speech to the Chair.

திரு. பி. வெங்கிடசாமி தெலுங்கில் உரையாற்றினார்.

திரு. ஆ. கருப்பையா: தலைவர் அவர்களே, கல்வியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

இன்று இந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப் பேற்று $4\frac{1}{2}$ ஆண்டு காலத்தில் கல்விக்காக எவ்வளவு முற்போக்கான காரியங்களைச் செய்திருக்கிறது என்பது இந்தப் புள்ளி விவரங்களில் இருந்து நன்றாக உணர்த்தப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் நாம் ஆட்சிக்கு வந்தால் கல்விச்சாலைகளை எல்லாம் மூடிவிடுவோம் என்று



1971 ஜூலை 9] [திரு. ஆ. கருப்பையா]

பிரசாரம் செய்ததற்கு எதிராக 1967-ல் இருந்த ஆரம்பப் பாடசாலை களைவிட 724 ஆரம்பப் பாடசாலைகளை நம்முடைய அரசு அதிகமாக நிறுவி இருக்கிறது. நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை 263 நடு நிலைப் பள்ளிகளை அதிகமாக நிறுவி இருக்கிறது. கல்லூரிகளைப் பொறுத்தவரை 66 கல்லூரிகளை அதிகமாக இந்த அரசு ஏற்படுத்தி யிருக்கிறது. இவ்வளவு செய்திருந்தும் கூட மாற்றார் நம்மைப் பற்றி ஒருவார்த்தை கூட பாராட்டித் தெரிவித்ததாகக் காணவில்லை. அப்படி யாரைப் பற்றியும் கவலைப்படாது மக்கள் நல்வாழ்வில் கவலை கொண்டு இந்த அரசு நல்லபல பணிகளைச் செய்து வருவதைக் கண்டு உண்மையிலேயே இந்த அரசைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். என்னுடைய தொகுதி யில் போன ஆண்டில் ஒரு உயர்நிலைப் பள்ளி மானூரில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதற்கான பொறுப்புக் கட்டணம் பாதி கட்டியும், பாதி கட்டாமலும் நின்று விட்டது. அதைக் கட்ட வேண்டுமென்று முழு முயற்சி எடுத்து கமிட்டியார் பணத்தைப் பிரித்துக் கொண்டிருக் கிறார்கள். பருவ மழை பொய்த்ததன் காரணமாக பணம் பிரிக்கும் நிலையில் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு ஒருசில மாதங்கள் தவணை நீடித்துத் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஐந்தாறு ஆண்டுகளாகவே பருவ மழை பொய்த்து வருவதால் மக்களிடத்தில் பெரிய அளவு கஷ்டம் இருப்ப தால் இந்தத் தவணையை நீடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் முறையைப் பொறுத்தவரை திருநெல்வேலி பகுதியை எடுத்துக் கொண்டால் அதிகமான மார்க்குகள் வாங்கிய மாணவர் களுக்கு மட்டுமே மதச் சார்புள்ள கல்லூரிகளில் இடம் கொடுக் கிறார்கள். குறைந்த எண்ணிக்கையுள்ள மாணவர்களுக்கு அவர்கள் இடம் கொடுப்பதில்லை. இது மாணவர்களிடையே ஒரு பீதியை உண்டாக்கியிருக்கிறது. "உனக்கு என்ன மார்க் கிடைத்தது? நீ எடுத்திருக்கும் இந்த மார்க்குக்கு அந்தக் கல்லூரியில் இடம் கிடைக் காது; ஸ்ரீவைகுண்டம் கல்லூரிக்கு ஓடிப்போ அல்லது தூத்துக்குடி கல்லூரிக்குப் போ" என்று பேசிக் கொள்ளக்கூடிய நிலை இருக் கிறது. குறைந்த மார்க் எடுத்துள்ளவர்களை இந்த கல்லூரி போன்ற கல்லூரிகளில்தான் எடுத்துக் கொள்ளும் நிலை இருக்கிறது. மதச் சார்புள்ள் கல்லூரிகளில் குறைந்த மார்க் பெற்ற மாணவர்களை எடுத்துக் கொள்ள மறுக்கிறார்கள். இன்று அரிசன மாணவர்களை 18 சதவிகிதம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று திட்டமிட்டிருந் தாலும் கூட அவர்கள் என்ன செய்கிறார்கள்? 450 மார்க்குக்கு அதிகமாகப் பெற்ற அரிசன மாணவர்களைத் தேடிப் பிடித்து சேர்த் துக் கொள்ளுகிறார்கள். மதச் சார்புள்ள மாணவர்களாக இருந்தால் 250 மார்க், 300 மார்க்கு எடுத்தவர்களையும் கூட அவர்கள் சேர்த் துக் கொள்ளுகிறார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

[1971 ஜூலை 9

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

* திரு. வ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று கல்வி மான்யத்தின் மீதும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கையின் மீதும் நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே தெரிவித்தார்கள். நம்முடைய அரசு ஏற்பட்டதற்கு பிறகு கல்வித் துறையிலே ஒரு பெரும் மாறுதலை ஏற்படுத்தி ஏற்கெனவே இருந்த அரசு செய்ய முடியாத காரியங்களை எல்லாம் நாம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு செய்து முடித்து இருக்கிறோம். நாம் புள்ளிவிவரங்களை இன்றையதினம் எடுத்துக்காட்டினால் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக்கூடங்கள், அதற்கு செலவழிக்கப்பட்ட தொகைகள் எவ்வளவு என்ற கணக்கை விட படித்துத் தேறியவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதை இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. காரணம், எத்தனைப் பள்ளிக்கூடங்கள் கட்டினார்கள், செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதை விட, படித்துத் தேறியவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதுதான் நம்முடைய சரியான கணக்கைக் காட்டும். ஆகவே, அண்மையில் நடந்து முடிந்த எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்கள் 1,91,853 ஆகும். சென்ற ஆண்டுக் கணக்குப்படி தேறியவர்கள் 1,30,974. ஆகவே, இந்த நடப்பு ஆண்டில் கணக்குப் பார்த்தால் அனுமதிக்கப்பட்டவர்கள் 1,93,509 ஆகும். தேறியவர்கள் 1,11,823 ஆகும். ஆகவே, இந்த அரசு கல்வித் துறையில் மேற்கொண்ட முயற்சிகளையும், நல்ல பணிகளையும் இது எடுத்துக் காட்டுகிறது.

ஏற்கெனவே, 1959–60-ல் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 15 கோடி. இதை படிப்படியாக உயர்த்தி இன்றையதினம் அதாவது 1971–72-ம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின் கீழ் ரூ. 83 கோடிக்கு மேல் ஒதுக்கியிருக்கிறோம். எந்தத் துறைக்கும் இல்லாத ஒரு சிறப்பு, நாம் மற்றத் துறைகளில் எடுத்துக் கொண்ட கவனத்தை விட கல்வித் துறையில் எடுத்துக் கொண்ட முயற்சி மிக அதிகமாகும். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்", என்பது போல் கற்றறிந்த அமைச்சர்கள், தலைவர்கள் உள்ளதாலே இன்றையதினம் இத்தகைய ஒரு சிறப்பு மிக்க நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்தின் முன் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

ஆசிரியர்கள் நிலை எள்ளிநகையாடப்படும் அளவுக்கு இருந்தது. வக்கற்றவர்கள் வாத்தியார் வேலைக்கும், போக்கற்றவர்கள் போலீஸ் வேலைக்கும் போவார்கள் என்று பழமொழி சொல்வார்கள். அன்றையதினம் வாழ முடியாத ஆசிரியர்கள் இன்றையதினம் வாய்ப்பும் வசதியும் பெற்று நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். இன்றையதினம் ஆசிரியர்கள் பணி மிக்வும் மதிப்பாக இருக்கிறது. கணக்குப் பாடம் சொல்லிக்கொடுங்கள் என்றால் அவருக்கு வீட்டில் போடுகிற பால் கணக்கு, பிற கணக்குகள் தான் பள்ளிக்கூடத்தில் ஞாபகத்திற்கு வரும். ஆனால் இன்று ஒரு அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தி ஆசிரியர்களுக்கு நல்ல நிலைமையைத் தந்து இருக்





கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு ஆசிரியர்களுக்கு என்று அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஏராளம். அவர்களுக்கு ஊதியம் உயர்த்திக் கொடுத்தார்கள். குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தார்கள். வேறு பல சலுகைகளைத் தந்தார்கள். அதை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அந்த அடிப்படையில் கிராமத்தில் இருக்கும் ஆசிரியர்களுக்கு என்று ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 லட்சம் செலவில் குடியிருப்புகள் கட்டித் தர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வளவு நன்மைகள் செய்திருந்தும், இங்கே இருக்கும் சில குறைபாடுகளையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. தமிழ் போதிக்கும் ஆசிரியர்களில் இரண்டு நிலை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். முதல் நிலை ஆசிரியர், இரண்டாம் நிலை ஆசிரியர்கள் என்று இரண்டு வகை இருக்கிறது. இந்த இரண்டு நிலைப் பதவிகள் அகற்றப்படவேண்டும். அனைவருக்கும் ஒரே நிலை வைத்து, ஒரே சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியைப் பொறுத்தவரையில் பெண்கள் கல்லூரிகள் இரண்டு தான் இருக்கின்றன. இதனால் இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்காக மக்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள் வீட்டிற்கு அதிகமாக வருகிறார்கள். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல், மாணவர்கள் ஒரே கல்லூரியில் சேரவேண்டுமென்ற காரணத்தால்தான் இந்த நிலை ஏற்படுகிறது. அந்தந்த கல்லூரித் தேர்வுக் குழுவில் சட்டமன்ற உறுப்பினருக்கும் இடம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, திருச்சியில் ஒரு அரசினர் பெண்கள் கல்லூரி ஏற்படுத்தவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கையை வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, 1971–72-ம் ஆண்டுக்கான கல்வி மான்யக் கோரிக்கை மீது எனது கட்சியைச் சார்ந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியம். அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தால்தான் கல்விக்காகக் கொடுக்கப்படும் தொகை சரியாக இருக்கும். கல்விக்காகக் கொடுக்கப்படும் பணம் போதாத காரணத்தால் அங்கே எந்த விதமான நன்மையும் செய்ய முடியவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். ஆண்டிப்பட்டி தொகுதியில் இருக்கும் ஆசிரியர்கள், 1966-ல் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஊராட்சி ஒன்றியப் பெரும் தலைவர்கள் நினைத்தால் 1970-ல் பாஸ் செய்து விட்டு வந்தவர்களுக்குக் கூட வேலை போட்டுக் கொடுத்து விடுகிறார்கள். ஆனால் 1966-ல் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகையால், டிரான்ஸ்பர் கமிட்டியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு

[திரு. நா. வெ. குருசாமி] [1971 ஜூலை 9

இடம் கொடுப்பது போல், ஆசிரியர்கள் நியமிக்கும் கமிட்டியிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் பென்ஷன் மிகக் குறைவு அவர்கள் டிரஷரிக்குச் சென்றுதான் பென்ஷன் வாங்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு எம்.ஓ. மூலம் பென்ஷன் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் டிரஷரிக்குப் போனால் இன்று போனால் நாளை வா என்று இழுத்தடிக்கிறார்கள். ஆகவேதான் எம்.ஓ. மூலம் அனுப்பவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வித்வான் தேர்வு வருஷம் ஒரு முறைதான் நடக்கிறது. மற்றத் தேர்வுகள் வருஷத்திற்கு இரண்டு முறை நடப்பதுபோல், இந்தத் தமிழ் வித்வான் தேர்வும் வருஷத்திற்கு இரண்டு முறை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, டாக்டர் ஹாண்டே அவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. அ. சின்னசாமி: மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவரவர்களே, 1971–72-ம் ஆண்டுக்கான கல்வி மான்யத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

1967-க்குப் பின்னால் தமிழகத்திலே ஏழை எளிய நடுத்தர மக்கள் ஆட்சிக்கு வந்த காரணத்தாலே தமிழகத்திலே உள்ள பல்வேறு துறைகளில் உள்ள மக்கள் உணர்கிற அளவுக்கு, சாதாரண மக்கள் பாராட்டுகிற அளவுக்கு பல மாற்றங்களைக் கண்டு இருக்கிறோம். குறிப்பாகவும், சிறப்பாகவும் கல்வியைப் பொறுத்தவரையில் மாற்றங்கள் மிக அதிகமாகத் தேவைப்படுகின்றன. நாம் இதுவரை செய்து இருக்கும் காரியத்தை விட கல்வித் துறையில் இன்னும் கொஞ்சம் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மான்யத்தை வரவேற்றுப் பேசும் போது அதில் ஏற்படும் கஷ்டங்கள் சிலவற்றையும் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

ஆரம்பப்பள்ளி நிர்வாகத்தைப் பற்றி ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் பல உறுப்பினர்கள் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். பஞ்சாயத்துகளிலே இருக்கிற ஆரம்பப் பள்ளிகளுக்கு இந்த அரசு ஏறத்தாழ ரூ. 37 கோடி செலவு செய்கிறது. இப்படிச் செலவு செய்யும் பணம் இந்த ஆரம்பக் கல்விக்காகப் பயன்படுத்துகிற நேரத்தில் ஆரம்பக்கல்வி பயிலுகிற மாணவர்கள் ஒரே ஆசிரியரிடத்தில் பயில வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களை மாற்றும் அதிகாரத்தை பஞ்சாயத்து யூனியனில் கொடுத்து இருப்பதால், அந்த மாற்றங்களைத் தவிர்ப்பதற்காக சட்ட மன்ற உறுப்பினர்கள் வீட்டு வாயிலில் இராப்பகலாக காத்துக்கிடக்கிறார்கள். கிட்டத்தட்ட 200—300 மாற்றங்கள் போட்டு இருக்கிறார்கள். ஆகையால், அங்கேயுள்ள ஆசிரியர்கள் அச்சத்தோடு வேலை செய்கிறார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1971 ஜூலை 9] [திரு. அ. சின்னசாமி]

உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் சயன்டிபிக் எக்விப்மென்ட்ஸ் வாங்குவதற்காக அதிகமான தொகையை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் நவீன முறையில் பயிற்சி அளிக்க சௌகரியமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

குறிப்பாகவும், சிறப்பாகவும், கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் "10.எ.1" ஆகவே இருக்கிறார்கள். அந்த அபாய நிலை நீண்ட காலமாக இருக்கிறது. ஐந்தாண்டுக் காலம், ஆறு ஆண்டுக் காலம் பணியாற்றுபவர்களும் "10.எ.1" என்ற அத்தகைய நிலையிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த ஒரு ஆசிரியரும் ஐந்தாண்டுக் காலம் பண்யாற்றியிருக்கிறார் என்றால், அவர் இன்னமும் "10.எ.1."-ல் இருக்கிறார் என்றால், அவருக்கு எப்படி உற்சாகம் இருக்கும். நானே நான்கு ஆண்டு காலம் அப்படி 8 கல்லூரிகளில் பணியாற்றியிருக்கிறேன்.

மெடிகல் டிபார்ட்மெண்டில் ஸ்டாடிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்ட் என்று ஒரு பிரிவு இருக்கிறது. அந்த டிபார்ட்மெண்டில் எம்.பி.பி.எஸ். முதல் வகுப்பு மாணவர்களுக்கு பாடம் நடத்துகிறது. இறுதி ஆண்டில் ஓரல் பரிட்சைக்காக மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அது ஒரு எக்ஸாமினேஷன் சப்ஜக்டாக இல்லாததால், அதில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வேலை குறைவு. மாணவர்களும் அவர்களை ஏற்றுக் கொள்வதில்லை. கட்டுப்பாடு செய்ய முடிவதில்லை. பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அங்கே நிறைய பணியில்லாததால் வேறு வேலைக்குப் போகலாம் என்று போகிறார்கள். ஆகவே, ஸ்டாடிஸ்டிக்ஸ் பிராஞ்சு என்பதை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக சைக்காலஜி என்ற சப்ஜக்டை வைத்தால் வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படும். சைகாலஜிக்கும் வைத்தியத் துறைக்கும் நிறைந்த தொடர்பு இருக்கிறது என்று கல்வி வல்லுநர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, சைகாலஜியை ஒரு சப்ஜக்டாக வைத்தியக் கல்லூரியில் புகுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஸ்டேட் ரிவார்டுகள் கொடுக்கப்படுகின்றன. அப்படிக் கொடுக்கும்போது, திறமை என்ன என்பதைப் பார்த்துக் கொடுக்க வேண்டும். நான் 8-வது படிக்கும்போது ஒரு ஆசிரியர் வகுப்புக்கு வருவார். வாய் திறக்கமாட்டார். நான் 11-வது வகுப்பிற்கு வந்த பிறகு அவரே ஹெட்மாஸ்டராக வந்தார். அவருக்கு 2, 3 ஆண்டுகட்கு ஸ்டேட் அவார்டுகள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இப்படிக் கொடுக்கும் போது, திறமை அடிப்படையில் கொடுத்தால், கல்வியின் தரம் முன்னேறும்.

கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு க்வார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்க வேண்டும். கல்லூரிக் கட்டடம் கட்டும்போதே இதையும் சேர்த்துச் செய்ய வேண்டும். மகளிர் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியைகளுக்கு க்வார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கிறார்கள். அப்படியே மற்ற மற்ற ஆசிரியர்களுக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும். கல்லூரி ஆசிரியர்களுக்கு இருப்பதற்கு வீடு இல்லாத

தால், அவர்கள் பக்கத்து ஊருக்குப் போகிறார்கள். நான் பணியாற்றிய ஒரு கல்லூரியில் பிரின்சிபால், 12 மணிக்கு வந்துவிட்டு, 2½ மணிக்குப் போய்விடுவார். காரணம், தங்குவதற்கு வீடு இல்லை. இப்படிச் சிலபல குறைகள் இருந்தாலும், இந்த அரசு நடுத்தர மக்களுடைய முன்னேற்றத்திற்கு பாடுபட்டு, ஏழை எளிய மக்களுடைய முன்னேற்றத்திற்குப் பாடுபடுகிறது என்பதற்காக இந்த அரசைப் பாராட்டி, இந்த மானியத்தை வரவேற்று விடை பெறுகிறேன், வணக்கம்.

திருமதி. த. ந. அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மிக முக்கியமான மானியத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்லி, என்னுடைய வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேச விரும்புகிறேன்.

என்னுடைய வெட்டுப் பிரேரணையே இப்பொழுது பி.யு.சி. வரையில் இலவசப் படிப்பு என்பதை பட்டப் படிப்பு வரை கொடுக்க வேண்டும் என்பதுதான். எனக்கு முன்னே பேசிய அங்கத்தினர்கள் சொல்லியது போல், இலவசம் என்று சொன்னாலும், ஸ்பெஷல் பீஸ், ஸ்பெஷல் பீஸ் என்று சொல்லி இதற்கும் அதற்கும் வாங்குகிறார்கள். அதைப் பார்த்தால், இது இலவசமா, இல்லையா என்கிற சந்தேகம் ஏற்படுகிறது. அந்த வகையில் நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 81 கோடி ரூபாய் செலவழிக்கிறோம். கல்வித் துறையில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

தொடக்கப் பள்ளிகளை ஆங்காங்கே நகராண்மைக் கழகங்களும், பஞ்சாயத்து யூனியன்களும் நடத்துகின்றன. நகராண்மைக் கழகத்தால் நடத்தப்படும் பள்ளிகளில் அரசியல் விருப்பு, வெறுப்புக்களுக்கு நிறைய இடம் வந்துவிடுகிறது. இந்தத் தேர்தலுக்குப் பிறகு அமைச்சர் அவர்கள் ஒரு கணக்குப் பார்க்க வேண்டும், எத்தனை ஆசிரியர்கள் எப்படி எப்படி மாற்றப்பட்டிருக்கிறார்கள் எத்தனை முறை மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று. அரசியல்வாதிகள் இதைத் தங்கள் பிரச்சினையாக ஆக்கிக் கொண்டு, இந்த ஆசிரியர் அந்தக் கட்சிக்கு வேலை செய்தார், அந்த ஆசிரியர் இந்தக் கட்சிக்கு வேலை செய்தார் என்று சொல்லி, பல முறைகள் இங்கும் அங்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் விட மிகப் பாவமானது, கணவன் மனைவிகளைப் பிரித்து, அந்தப் பாவத்திற்கு இந்த அரசாங்கம் ஆளாகியிருக்கிறது. கணவனும் மனைவியும் ஆசிரியர்களாக இருந்து, ஒன்றாகக் குடும்பம் நடத்தலாம் என்றவர்களை, அரசியல் விருப்பு வெறுப்புக்கு இடமாக்கி, எங்கெங்கேயோ மாற்றியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஊராட்சி மன்றங்களில், பள்ளிகளில் கணவன் மனைவியைப் பிரித்திருப்பதாகச் சொன்னார்கள். ஒரு இடத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால், அவர்களைச் சேர்த்து வைக்க ஏற்பாடு செய்து, அந்தப் புண்ணியத்தையாவது உறுப்பினர் அடையலாமே.





திருமதி த. ந. அனந்தநாயகி: புண்ணியத்தை அரசாங்கம் தேடிக் கொள்ள வேண்டும் என்றுதான் இதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதை ஆராய்ச்சி செய்து, ஒரு ஆண்டுக் காலத்தில் எத்தனை பேர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு ஆண்டில் 4, 5 இடங்களுக்குத் தூக்கியெறியப்பட்டிருக்கிறார்கள். எப்படியாவது முயற்சி செய்து, ஒரு ஆண்டில் மாற்றப்பட்டவர்களுக்கு, அதற்கான சரியான காரணம் இல்லாமல் இருந்தால், அவற்றை ரத்து செய்து, ஆசிரியர்கள் மூன்று ஆண்டுக் காலத்திற்கு மாற்றப்படக்கூடாது என்கிற நிலைமையை உண்டு பண்ண வேண்டும். அப்பொழுதுதான் நல்ல முறையில் ஆசிரியர்களுடைய குடும்பங்கள் சிறப்பாக வாழ முடியும்.

துவக்கப் பள்ளிகளில் தரம் மிகக் குறைவாக இருப்பதால், பல தனியார் பள்ளிகள் துவங்கப்படுகின்றன. அந்தப் பள்ளிகளில் நடுத்தர மக்களும் தங்கள் பிள்ளைகளை அழைத்துச் செல்லும்போது, அவர்கள் "கமர்ஷியல் பேஸிஸ்"-ல், வியாபாரம் நடத்துவது போல் செய்வதால், பல பள்ளிகளில் இங்கிலீஷ் மீடியம் என்று ப்ரைவேட் ஸ்கூல்கள் வைத்து, ஆரம்பித்திருக்கிறார்கள். அதிலே பார்த்தால், லோயர் கே.ஜி.-க்கு 20, 25 ரூபாய் என்றும், அப்பர் கே.ஜி.-க்கு 30, 40 என்றும் வாங்குகிறார்கள். அதைப் பார்த்தால் கல்லூரிச் சம்பளத்தைவிட அதிகமாக இருக்கிறது. அப்படிப் பட்ட பள்ளிகள் அரசாங்கத்திடம் கிராண்ட் வாங்கவில்லை என்றாலும் கூட, அவர்களைக் கேட்க நமக்கு அதிகாரம் இல்லை என்றாலும் கூட, இப்படி வியாபார முறையில் நடத்துவதை விட்டு விடுவது சரியல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன். நடுத்தர மக்களும் அவதிப்படுகிறார்கள், வேறு பள்ளிகளுக்கு அனுப்பவும் பயப்படுகிறார்கள். ஏனென்றால், பிள்ளைகள் தகாதவற்றையெல்லாம் கற்றுக்கொண்டு வீட்டுக்கு வரும் என்ற பயம் இருக்கிறது. இந்த முறையில் நடக்கும் பள்ளிகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

எனக்கு ஒரு யோசனை இருக்கிறது. நாம் பேரண்ட்-டீச்சர் அஸோஸியேஷன் என்று வைத்திருக்கிறோம். மாவட்டங்களில், அதுபோன்று தாலுகா அளவில் அமைத்து, குழந்தைகளுடைய முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்கள் இருக்க வேண்டும். ஆபீசர்கள் இன்ஸ்பெக்ட் செய்கிறார்கள் என்றாலும், தனிப்பட்ட முறையிலும் கவனிக்க வேண்டும். என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் கண்டறிந்து, அவற்றைத் தவிர்க்க வழி வகைகள் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நலமாக இருக்கும். அந்த வகையில் முயற்சிகள் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும். ப்ரைவேட் ஸ்கூல்களில் சென்று பெற்றோர்கள் திணறிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொன்று. நாம் எப்படி செகண்டரி டீச்சர்கள் ஹையர் கிரேடில் வேலை செய்தாலும், செகண்டரி கிரேட் சம்பளம் என்று செய்திருக்கிறோமோ அதே போல், பி.ஏ., பி.டி. பயின்றவர்கள் செகண்டரி கிரேடில் வேலை செய்தால், அவர்களுக்கும் பி.டி. சம்பளம் கொடுக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியனில் வேலை செய்யும் ஆசிரியர்கள், பி.யு.சி., பி.ஏ. படித்து மேலே வந்தால்,

அரசாங்கப் பள்ளிகளில் வயது குறுக்கீடாக இருக்கிறது. ஆகவே, 30 வயதுக்குள் அவர்கள் படித்து விடுகிறார்கள். திறமையினாலும், முயற்சியினாலும் முன்னுக்கு வருகிறவர்களை எடுக்கும் முறையில் வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போன்று நடு நிலைப் பள்ளிகளில், 400 மாணவர்கள் இருக்கும் பள்ளியில் என்றிருப்பதை மாற்றி, எல்லா நடுநிலைப் பள்ளிகளிலும், கல்வித்தரத்தை கவனத்தில் கொண்டு, பி.ஏ., பி.டி. இருந்தால் அவரையே ஹெட்மாஸ்டராகப் போட்டால் அது பிறருக்கும் ஊக்கம் அளிப்பதாக இருக்கும். அதற்கு வசதியாக இருக்கும் முறையில், அதே நேரத்தில், பி.ஏ., பி.டி. இவர்களுடைய சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது என்றால், அந்தக் குறையையும் தீர்க்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு பகல் உணவுக்காக நாம் பல லட்சம் ரூபாய்களைச் செலவழிக்கிறோம். அது ஒழுங்காக நடக்கிறதா என்று பார்த்தால், சென்னை நகரத்திலேயே அதில் இருக்கும் ஊழல்கள் கொஞ்சநஞ்சமல்ல. நகராட்சி ஆணையர் அவர்களே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, உப்பு, பருப்பு, மிளகாய் முட்டை இவையெல்லாம் போகவேண்டிய இடத்திற்குப் போகாமல், திராவிட முன்னேற்றக் கழகக் கிளை ஸ்தாபனத்திற்குக் கொண்டுபோகப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்கு மேயர் சொல்லியிருக்கிறார். அழுகின காய்கறிகளை வியாபாரிகள் அனுப்பியிருக்கிறார்கள். இதைக் கண்டித்தாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:</u> தலைவர் அவர்களே, பத்திரிகையில் வந்ததைப் பற்றிப் பேசுகிறார்கள். படிக்கவில்லையா என்று கேட்டார்கள். பத்திரிகையில் வருவதையெல்லாம் பேசுவது அவைக்கு மரபு அல்ல. எதற்கும் ஆதாரம் இருக்க வேண்டும். பத்திரிகையில் கண்டது வருகிறது. கண்ட செய்திகளை வைத்துக் கொண்டு பொறுப்புள்ள அங்கத்தினர்கள் பேசக் கூடாது. உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு சொல்வார்களானால் நல்லது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> பத்திரிகையில் வருகிற செய்திகளை வைத்துப் பேசக் கூடாது.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி:</u> தலைவர் அவர்களே, நகராண்மைக் கழக உறுப்பினர் கேள்வி கேட்டு ஆணையர் பதில் சொல்லியிருக்கிறார்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> நீங்கள் சொன்னதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:</u> தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கவுன்சிலில் கேள்வி கேட்டு பதில் சொன்னதாகச் சொல்கிறார்கள். அதை பின்னாலே வெரிஃபை செய்து கொள்ளலாம்.



<u>திருமதி த. ந. அனந்தநாயகி:</u> ஆகையினாலே, இன்றைக்கு மதிய உணவு கொடுக்கும்போது பணம் ஒழுங்காகச் செலவழிக்கப் படுகிறதா, நல்ல தரமான உணவு தரப்படுகிறதா என்று பார்க்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. இன்றைக்கு நாம் ஏதோ கொடுத்துவிட்டோம், அவர்கள் கொடுத்து விடுவார்கள் என்ற போக்கில் இருப்பதனால், உணவு தரக் குறைவான முறையில் கொடுக்கப்படுகிறது. இதைத் தடுப்பதற்கு சமூக சேவகிகளைக் கொண்ட கமிட்டிகளைப் போடுங்கள். நாங்கள் உணவில் ருசி இருக்கிறதா, ஒழுங்காக சமைக்கிறார்களா என்று பார்க்கிறோம். ஆண்களால் இந்த வேலையைச் செய்ய முடியாது. பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையில் தாய்மார்களுக்கு மிகப் பெரிய பங்கு உண்டு. இந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் மேல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன். உணவில் தவறு நடந்தால் உயிருக்கு உலை வைத்து விடும். அந்த அக்கறையினால் இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோன்று அனாதைக் குழந்தைகளுக்கு 12 ரூபாய் எஜுகேஷன் கிராண்டு வழங்குகிறார்கள். 12 ரூபாயில் கஞ்சி ஊற்ற முடியுமா, இதை வைத்து எப்படி அனாதை இல்லத்தை நடத்த முடியும். என்ன தான் மற்றவர்கள் முன் வந்தாலும் அவர்கள் ஓரளவிற்கு பொறுப்பேற்க முடியுமே தவிர முழுப் பொறுப்பையும் ஏற்க முடியாது. அரிஜனப் பிள்ளைகளுக்கு உதவித் தொகையில் உயர்வு கொடுத்திருக்கிறோம். அதேபோன்று ஆர்ஃபன்ஸுகளுக்கு, அனாதைப் பிள்ளைகளுக்கு, எஜுகேஷன் கிராண்டில் அதிகத் தொகை கொடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அவர்களுக்கு அதிகமாகக் கொடுத்தால் உண்மையில் அவர்களுக்கு உதவி செய்தவர்களாவோம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அனாதைப் பிள்ளைகள் பள்ளிகளில் ஒரு ஆண்டு ஃபெயில் ஆனாலும் கூட பள்ளிகளிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். அவர்கள் அனாதைப் பிள்ளைகள், ஏற்கெனவே துரதிருஷ்டமான குழந்தைகள், அவர்களிடமும் எல்லாத் தரமும் குறைவாக இருக்கும். ஒரு வருஷம் ஃபெயில் ஆகிவிட்டால் அவர்களை வெளியே அனுப்பிவிட்டால் அவர்கள் வேறு எங்கு செல்ல முடியும்? அவர்கள் தொடர்ந்து மூன்று வருஷம் ஃபெயில் ஆனாலும் நிறுத்திவிடலாம். ஒரு வருஷம் ஃபெயில் ஆனால் நிறுத்திவிடுவது சரியல்ல என்று சொல்ல ஆசைப் படுகிறேன்.

டாக்டர் ஏ.எல். முதலியார் கமிட்டி ரிப்போர்ட் படி யார் ஆங்கிலப் பயிற்சிமொழியை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறார்களோ அதை அவர்கள் கேட்கும்போது அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய நிலையை அரசாங்கக் கல்லூரிகளில் ஏற்படுத்தவேண்டும். இன்றைக்கு நிலை என்னவென்றால், எங்களுக்குப் புகார் வருகிறது, ஆங்கிலப் பயிற்சி மொழி கேட்டிருந்தால் தமிழ் பயிற்சி மொழி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த வசதி அதிகரித்து, உலகத்தோடு போட்டிபோட வேண்டிய நிலையை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும். அந்த நல்லெண்ணத்தில் இந்த அரசாங்கம் விருப்பு வெறுப்பின்றி

ஆங்கிலப் பயிற்சி மொழிப்பிரிவில் எத்தனை பேர் இடம் கேட்டாலும் அதைத் தருகின்ற நிலையை அரசாங்கம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மாலை நேரக் கல்லூரிகளை அதிகமாக ஆரம்பித்தால் மாணவர்களுக்குப் பல வசதிகளைச் செய்து தர முடியும். காரணம், கல்லூரிகளில் இன்றைக்கு இடம் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. புதிய பஞ்சத்தை ஏற்படுத்துகிறார்கள். பி.ஏ. கோர்ஸ்க்கு இடம் கிடைப்பது கஷ்டமாகயிருக்கிறது. பி.காம்., பி.எஸ்ஸி. இவைகளில் இடம் இல்லை. மேலும் இடம் கொடுத்தது பற்றிய முடிவுகளை காலதாமதமாக வெளியிடுகிறார்கள். இப்படிக் காலதாமதமானவுடனே, எந்த சட்ட மன்ற உறுப்பினரைப் பிடிக்கலாம், யாரைப் பார்க்கலாம் என்று மாணவர்கள் அந்தக் காரியத்தில் இறங்கிவிடுகிறார்கள். இப்படியிருந்தால் நாங்கள் எப்படி எங்கள் வேலையைப் பார்க்க முடியும். காலையில் எங்களுக்கு சட்டசபைக்கு வருவதற்கே கஷ்டமாக இருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

20 கல்லூரிகளில் மாலை நேர வகுப்புகளை ஆரம்பித்திருக்கிறார்கள். எங்கெங்கெல்லாம் அரசாங்கக் கல்லூரிகள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் மாலை நேரக் கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கான வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு நேரமில்லாத காரணத்தால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கு. காமாட்சி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளைய மறு நாள் நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய பிறந்த நாளில் நாம் அத்துணை பேரும் அவரைப் பார்த்து பரிசு வழங்குவதற்கு முன்னதாக, இன்று இந்த மாமன்றத்தில் இந்த மானியத் தொகையை சமர்ப்பித்ததன் வாயிலாக இந்த நாட்டிற்கு ஒரு நல்ல பரிசை அவர் வழங்கியிருக்கிறார் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் அத்துணை பேரும் நமது நாட்டில் கல்வியினுடைய நிலைமை எத்தகைய அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதை மிகத் தாராள மனப்பான்மையோடு இங்கே சொன்னார்கள். இங்கே பள்ளிக்கூடங்கள் எத்தகைய அளவிற்கு வளர்ந்திருக்கிறது, அதன் காரணமாக மாணவர்கள் எத்தகைய அளவிற்கு வளர்ந்து அவர்கள் எண்ணிக்கை வளர்ந்திருக்கிறது என்பவையெல்லாம் நல்ல முறையில் எடுத்துச் சொல்லப்பட்டது. ஆசிரியர்களுக்கு எத்தகைய நன்மை பயத்திருக்கிறது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள், ஏதோ நாங்களெல்லாம் கணவன் மனைவிகளைப் பிரித்து விடுகிறோம் என்று. என்னுடைய ஊராட்சி ஒன்றியத்தில் அவர்கள் இருந்த காலத்தில் பிரிக்கப்பட்ட கணவன் மனைவிகளை, 6 ஜோடிகளை நாங்கள் இணைத்து வைத்திருக்கிறோம் என்பதை இங்கே அம்மையார் அவர்கள் கவனத்திற்கு தங்கள் சார்பாகக் கொண்டுவர விரும்புகிறேன். அது மட்டுமல்ல, திருமணங்கள் கூட ஆசிரியர்களிடத்திலேயே செய்து வைத்திருக்கிறேன் என்பதையும் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





நமது நாட்டில் துவக்கப் பள்ளிகள் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன. ஆனால் இந்தத் துவக்கப் பள்ளிகளைத் தொடங்குவதில் சில காலதாமதங்கள் ஏற்படுகின்றன. அவைகளை நாம் போக்கி வைக்க வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு துவக்கப் பள்ளி வைக்கவேண்டுமென்று சொன்னால் அதற்கு அரசினர் அளவிலே அனுமதி பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதைத் தயவுகூர்ந்து மறுபரிசீலனை செய்து இதற்கு சி.ஈ.ஓ. அளவிலேயே அனுமதி அளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இன்றைக்கு தொடக்கப் பள்ளிகள் எல்லாம் ஒரு மைலுக்கு ஒரு பள்ளி இருக்க வேண்டுமென்ற நிலையை மாற்றி ½ மைலுக்கு ஒரு பள்ளி இருக்கவேண்டுமென்ற முறையை நாம் வகுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், என்னுடைய தொகுதியிலே கொளத்தூர் பஞ்சாயத்தில், சின்னாலம்பட்டி, பெரியாலம்பட்டி என்ற இரண்டு கிராமங்கள் 6 பர்லாங் இடை வெளியில் இருக்கின்றன. இடையில் ஒரு இரயில்வே லைன் போய்க் கொண்டிருக்கிறது, இடையில் குளம் இருக்கிறது. பெரியாலம்பட்டியில் பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கே போய்ப் படிப்பதற்கு வசதியற்ற முறையில் அந்தப் பள்ளிக்கூடம் இருக்கிறது. சின்னாலம்பட்டியில் பள்ளிக்கூடம் வேண்டும் என்று மூன்று தடவையாக இயக்குநர் அவர்களுக்கு வந்தும், அது திருப்பப்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்தோடு குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்றைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்கள் அத்தனை பேரும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவுடனே வேலை வேண்டுமென்று எங்களையெல்லாம் ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு நாம் ஏதாவது ஒரு வழிவகை காண வேண்டும்.

அதோடு நம் நாட்டில் டெக்னிகல் ஹைஸ்கூல்களை அதிகமாக அமைக்கவேண்டும். டெக்னிகல் ஹைஸ்கூலில் படித்த மாணவர்கள் ஏதாவது ஒரு தொழிலை அவர்கள் நல்ல முறையில் கற்றுக் கொள்கிறார்கள். ஆகவே, அவர்கள் வேலைக்கு வரவேண்டிய அவசியமில்லாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, நமது அரசு கூடுமான வரையிலே டெக்னிகல் ஹைஸ்கூல்களை அதிகப்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வதோடு இந்த நாட்டில் இருக்கிற உயர்நிலைப் பள்ளிகள் அத்துணையையுமே டெக்னிகல் ஹைஸ்கூல்களாக மாற்றி அமைப்போமானால் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு நாம் போக்க முடியும் என்று நம்புகிறேன்.

இன்னும் நம்முடைய உயர்நிலைப் பள்ளிகளில் என்.சி.சி. வகுப்பு மூன்று பிரிவுகளாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆகாய விமானம், கடல், தரை என்ற அளவிலே பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது.

[திரு. கு. காமாட்சி] [1971 ஜூலை 9

ஆனால் இவை மூன்றும் ஒரு பள்ளிக்குத் தரப்படுவதில்லை. ஆகாய விமானப் படைப் பிரிவை ஒரு பள்ளிக்குக் கொடுத்தால் அடுத்த பிரிவை அந்தப் பள்ளிக்குத் தருவதில்லை. கூடுமான வரையில் இந்த மூன்று பிரிவுகளையும் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். நம்முடைய கல்வியிலே ஜாதி மதப் பிரச்சாரங்கள் அதிகமாக தலை தூக்காத அளவிற்குப் பார்த்துக் கொள்ள வேண்டும். காரணம், நம்முடைய அடிப்படைத் தத்துவம் ஜாதி மத பேதமற்ற சமுதாயம் என்பது தான்.

MR. K. T. K. THANGAMANI: Sir, now it is 1-30 p.m.

MR. DEPUTY SPEAKER: I hope the House will give permission to sit for 5 more minutes.

திரு. கு. காமாட்சி: இன்றைக்கு சரித்திர பாடத்தில் ஒரு பகுதி வருகிறது. கஜனி முகமது சோமநாதபுர ஆலயத்தின் மீது 17 முறை படையெடுத்தான், கொள்ளையடிப்பதற்கு என்று இருக்கிறது. இதைப் பார்க்கிறபோது இந்த நாட்டிலே இருக்கிற இந்துக் களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இருக்கிற ஒரு தொடர்பு அறுபட்டு போகக் கூடாது என்பதற்காகத்தான் இந்தமாதிரியான ஜாதி உணர்ச்சியை, மத உணர்ச்சியை உண்டு பண்ணுகிற வார்த்தைகள் தடைப்படுத்தப்படவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில் மேலைநாடுகளிலேயெல்லாம் பள்ளிகளுடைய நேரம் காலையிலே இருந்து மதியத்திலே முடித்துவிடுகிறார்கள். அந்த முறையை நாம் ஏன் அனுசரிக்கக் கூடாதென்று நமது அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 10 மணிக்கு வந்து அங்கேயே இருந்து 4 மணி 5 மணிக்கு வீடு செல்லு கின்ற மாணவர்கள் அவர்களால் எதுவும் செய்ய முடியாத நிலையிலே களைப்படைந்திருக்கிறார்கள். ஆகவே காலையிலே 8 மணிக்குத் துவங்கி எல்லாப் பள்ளிக்கூடங்களும் 1 மணி அளவிலே முடிந்து விட்டால் அந்த ஒரு உணர்ச்சி மாணவர்களுக்கு நல்ல சுறுசுறுப்பாக இருக்குமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு எனக்கு அளிக்கப்பட்ட நேரத்திற்கு நான் நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## (7) பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

'Nil'

B. *Reports, Notifications and Other Papers*

110. Report of the Tamil Nadu Police Commission, 1971. (Volumes I to III English) (Volume I—Tamil).



1971 ஜூலை 9]

## இணைப்பு

[338-ம் பக்கத்தில் 175-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினு விற்குரிய விடையைக் காண்க.]

பன்முறை சாகுபடித் திட்டம் ஓர் அனைத்திந்திய திட்டமாகத் தமிழ் நாட்டில் 1967–68-ம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது. 1967–68-ல் 2.15 லட்சம் ஏக்கர்களிலும், 1968–69-ல் 5.53 லட்சம் ஏக்கர் களிலும், 1969–70-ல் 9.95 லட்சம் ஏக்கர்களிலும் இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. 1970–71-ல் 12.99 லட்சம் ஏக்கர்களில் செயல்படுத்தப்பட்டது.

மாவட்ட தீவிர சாகுபடித் திட்டம் செயல்பட்டுவரும் தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும், பகுதி தீவிர வேளாண்மைத் திட்டம் செயல்பட்டுவரும் திருச்சி மாவட்டத்தில் முசிறியிலும், சிறு விவசாயிகள் அபிவிருத்தித் திட்டம் செயல்பட்டுவரும் தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூரிலும், பன்முறை சாகுபடி முன்னோடித் திட்டம் செயல்படுத்த இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டம் மத்திய அரசுத் திட்டமாக ஏற்பளிக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் பன்முறை சாகுபடித் திட்டத்தை விரைவாக மேம்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கம். பயிர் வள ஆராய்ச்சி குறித்து ஒருங்கிணைந்த செயல் திட்டம் அமைத்தல், அறிவியல் செயல்முறை விளக்கங்கள், நன்கமைந்த வளர்ச்சி நடவடிக்கைகள், சீரான அளவில் பயிரிடு தேவைப் பொருட்கள், கடன் வசதிகள், முறையாக ஏற்படுத்தப்பட்ட விற்பனை வசதிகள், மேற்கண்டவற்றிற்குத் துணையாக உள்ள நடவடிக்கைகள் ஆகிய வற்றின் மூலமாக பன்முறை சாகுபடித் திட்டம் விரிவுபடுத்தப் படும். ஒவ்வொரு பகுதியிலும் ஒரு லட்சம் ஏக்கர்களில் இத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காகும் செலவு முழுவதும் மத்திய அரசினால் ஏற்கப்படும்.

கீழே குறிப்பிட்டுள்ளபடி மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 12 லட்சம் மத்திய அரசினால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது :—

| | | ரூ. |
|---|---|---|
| 1971–72 | .. | 3,93,000 |
| 1972–73 | .. | 4,01,000 |
| 1973–74 | .. | 4,09,000 |
| (அல்லது ரூ. 12 லட்சம் மட்டில்) | | 12,03,000 |

The Multiple Cropping Programme was introduced in Tamil Nadu as an All-India Scheme during the year 1967-68. As against the achievement of 2.15 lakh acres during 1967–68 and 5.53 lakh acres during 1968–69, an area of 9.95 lakh acres was covered during 1969–70. The achievement in 1970–71 is 12.99 lakh acres.

The Government of India have since sanctioned a Pilot Project on Multiple Cropping in Tamil Nadu as a Centrally-Sponsored Scheme for implementation in the following three Agricul-

tural Divisions representing Intensive Agricultural District Programme Scheme, Intensive Agricultural Area Programme Scheme and Small Farmers Development Scheme areas :—

1. Pudukkottai .. Thanjavur district
2. Musiri .. Tiruchirappalli district.
3. Cuddalore .. South Arcot district.

The objective of the project is to accelerate the development of Multiple Cropping in selected areas through establishment of an integrated action programme of adaptive research trails, scientific demonstrations, well organised extension efforts, streamlined inputs supplies and credit facilities and organised marketing and allied activities. The programme will be implemented in an area of one lakh acres in each division. The entire expenditure on the scheme will be borne by the Government of India and they have sanctioned a sum of Rs. 12.00 lakhs for three years as indicated below :—

| | (Rupees in lakhs) |
|---|---|
| 1971-72 .. .. | 3·93 |
| 1972-73 .. .. | 4·01 |
| 1973-74 .. .. | 4·09 |
| (12·00 roundly). | 12·03 |

இணைப்பு—2.

[366ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

1. கல்விச் செலவினமும் மாநில வரவு-செலவுத் திட்டமும்.

ஒரு நாட்டின் பல்வளப் பொருளாதார முன்னேற்றத்திற்கு கல்வி வளர்ச்சி இன்றியமையாததாகும். கல்விக்காகச் செய்யும் முதலீடு நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளமான வாழ்விற்கும் செய்யப்படுகிற மிகச் சிறந்த முதலீடாகும். தமிழ் நாடு அரசு இதை முற்றிலும் உணர்ந்து, எல்லா நிலைகளிலும் அளவிலும் தரத்திலும் கல்வி வளர்ச்சி பெற்றிட இடைவிடாது பாடுபட்டு வருகிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களுக்கும் கல்வி வாய்ப்புகளை நல்கும் முயற்சியில், பள்ளி நிலையிலும், கல்லூரியில் புகுமுக வகுப்பு நிலையிலும், தொழில் நுட்பப் புகுமுக வகுப்பு நிலையிலும் இலவசக் கல்வி செயற்படுத்தப்பட்டுள்ளது. 1959–60-ல் வருவாய்க் கணக்கிலான கல்விச் செலவு ரூ. 15.15 கோடியாயிருந்ததற்கு மாறாக, 1971–72 திருத்திய வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 81.84 கோடிக்கு உயர்ந்துள்ளது. 1971–72 ஆம் ஆண்டிற்கான கல்வி வரவு–செலவுத் திட்டம் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள பணிகளைப் பேணி வரவும், அப்பணிகளை மேலும் விரிவுபடுத்தி வளர்க்கவும் வகை செய்கிறது.

2. கல்வி வளர்ச்சியில் தனியார் பங்கும் பொறுப்பும் சிறப்பானவை. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலமாக சமுதாயத்தினரிடமிருந்து நிதி முதலிய பலவகை உதவிகளைத் திரட்டுதல்,



திட்டப்பணிகளுக்கு இணை மானியம் வழங்கல் போன்றவை கல்வித் துறையில் நமது குறிக்கோள்களை அடையப் பெரிதும் துணை செய்துள்ளன.

3. 1970–71 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூபாய் 66,83.09 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, "28—கல்வி" என்பதன்கீழ் 1971–72 வரவு–செலவுத் திட்டத்தின்கீழ் திட்டப் பணிகள், திட்டத்தில் சேராத பணிகள் எல்லாவற்றுக்குமாகச் சேர்ந்த மொத்தச் செலவுக்கு ரூ. 81.84 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1971–72 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட புள்ளிவிவரங்கள் தனித்தனியே கீழே பிரித்துக் காட்டப்பட்டுள்ளன :—

| | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (1970–71). | | | திருத்த மதிப்பீடு (1971–72). | | |
|---|---|---|---|---|---|---|
| | திட்டத்தில் சேராத பணிகள். | திட்டப் பணிகள். | மொத்தம். | திட்டத்தில் சேராத பணிகள். | திட்டப் பணிகள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| தொடக்கக் கல்வி. | 29,73·63 | 1,23·09 | 30,96·72 | 36,84·35 | 1,05·77 | 37,90·12 |
| இடைநிலைக் கல்வி. | 19,23·48 | 1,80·46 | 21,03·94 | 22,66·05 | 3,00·68 | 25,66·73 |
| பல்கலைக் கழகக் கல்வி. | 4,22·56 | 67·98 | 4,90·54 | 5,47·02 | 77·78 | 6,24·80* |
| சிறப்புக் கல்வி. | 1,12·26 | 5·08 | 1,17·34 | 1,22·63 | 7·17 | 1,29·80 |
| பிற இனங்கள். | 5,00·06 | 26·81 | 5,26·87 | 5,39·58 | 1,49·03 | 6,88·61 |
| தொழில் நுட்பக் கல்வி. | 1,93·63 | 55·08 | 2,48·71 | 2,22·79 | 49·73 | 2,72·52 |
| தொழில் பயிற்சிப் பள்ளிகள். | 97·33 | 1·64 | 98·97 | 1,09·09 | 2·33 | 1,11·42 |
| | 62,22·95 | 4,60·14 | 66,83·09 | 74,91·51 | 6,92·49* | 81,84·00 |

* "103. மூலதனச் செலவு"; "50 கட்டடப் பணிகள்"; கடன்கள் ஆகிய தலைப்புகளின்கீழ் காட்டப்பட்டுள்ள திட்டச் செலவு இதில் அடங்காது.

† "பிற இனங்கள்" என்னும் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ள கல்லூரிக் கல்விக்கான செலவு ரூ. 34.05 லட்சம் இதில் சேர்க்கப்படவில்லை. எனவே "28.—கல்வி" என்னும் கணக்கில் கல்லூரிக் கல்விக்கான மொத்தச் செலவு ரூ. 658.85 லட்சமாகும்.

1970–71 திட்ட மதிப்பீட்டைக் காட்டிலும் 1971–72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டில் ஏற்பட்டுள்ள தொகை அதிகரிப்பு ரூ. 15,00.91 லட்சமாகும். 1971–72-ல் தமிழ் நாட்டின் மொத்த ரெவின்யூ செலவினமாகிய ரூ. 358.52 கோடியில் ரெவின்யூ கணக்கில் கல்விச் செலவு மட்டும் ரூ. 81.84 கோடியாகும். இது மொத்தச் செலவில் சுமார் 23 விழுக்காடாகிறது.

4. கல்விக்காக ரூ. 81.84 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பது தவிர, கீழே காட்டியுள்ளபடி தேர்வுகள், தொல்பொருள் ஆராய்ச்சி, அரும்பொருட் காட்சிச் சாலைகள் முதலியவற்றிற்கான நிதி ஒதுக்கமும், 1971–72 ஆம் ஆண்டுக்குரிய கல்வி மானியக் கோரிக்கையில் அடங்கும்.

(ரூபாய் லட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| 26. பல்வகைத் துறைகள் (அரசுத் தேர்வுகள்) .. | | 62·93 |
| 27. அறிவியல் துறைகள்— | | |
| தொல்பொருள் ஆராய்ச்சிகள் .. .. | 3·73 | |
| அரும் பொருட்காட்சிசாலைகள் .. .. | 11·55 | |
| | | 15·28 |
| 28. கல்வி (பொது, தொழில் நுட்பக் கல்வி). .. | | 81,84·00 |
| பிற இனங்கள் .. .. .. .. .. | | 50·28 |
| மொத்தம்—கோரிக்கை 13—1971–72 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. | | 83,12·49 |

கடந்த ஐந்தாண்டுகளாக "கோரிக்கை 13—கல்வி" என்பதன் கீழ் படிப்படியாக நிதி ஒதுக்கீடு கூடியிருப்பதைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம் :—

(ரூபாய் லட்சத்தில்.)

| | |
|---|---|
| 1966-67 கணக்குகள் .. | 44,27·92 |
| 1967-68 ,, .. | 54,03·81 |
| 1968-69 ,, .. | 58,10·94 |
| 1969-70 ,, .. | 66,56·03 |
| 1970-71 திட்ட மதிப்பீடு .. | 67,73·14 |
| 1971.72 திருத்த திட்ட மதிப்பீடு .. .. .. | 83,12·49 |

5. 1971–72 திட்ட மதிப்பீட்டில் கல்விக்கான ஒதுக்கீடாக மேலே 3-ம், பத்தியில் கூறப்பட்டுள்ள ரூ. 81.84 லட்சத்தில், "28—கல்வி" நீங்கலாக ஏனைய கணக்குத் தலைப்புகளில் பற்று எழுதப்பட்டு, மானியக் கோரிக்கை 13 நீங்கலாக மற்ற மானியக் கோரிக்கைகளில் 1971–72 திட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள (பொது-தொழில் நுட்ப) கல்வி குறித்த செலவினங்களுக்கு செய்யப்பட்ட கீழ்க்காணும் நிதி ஒதுக்கீடுகள் அடங்கா.



இணைப்புகள்.

| (1) | பொதுக் கல்வி. திட்டப் பணிகள். (2) | பொதுக் கல்வி. திட்டத்தில் சேராத பணிகள். (3) | தொழில் நுட்பக்கல்வி. திட்டப் பணிகள். (4) | தொழில் நுட்பக்கல்வி. திட்டத்தில் சேராத பணிகள். (5) | மொத்தம். திட்டப் பணிகள். (6) | மொத்தம். திட்டத்தில் சேராத பணிகள். (7) | மொத்தம். மொத்தம். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| ரெவின்யூ கணக்கில் செலவு— | | | | | | | |
| 50 (a) மூலப்பணிகள்—கட்டிடங்கள் (இச் செலவுக்கு வேண்டிய தொகை நடப்பு வருவாயிலிருந்து பெறப்படுகிறது)—அரசுக் கல்விக் கூடங்களுக்கான கட்டிடச் செலவு. | 0·40 | 1·91 | 13·69 | 1·00 | 14·09 | 2·91 | 17·00 |
| 52. பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு—(a)—H | 0·50 | 2·15 | .. | .. | 0·50 | 2·15 | 2·65 |
| 39. பல்வகை .. .. .. .. .. | .. | 0·07 | .. | .. | .. | 0·07 | 0·07 |
| ரெவின்யூ கணக்கிற்குப் புறம்பான செலவு— | | | | | | | |
| 103. பொதுப் பணிகள்—கட்டிடங்கள் ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு (இச் செலவுக்கு வேண்டிய தொகை நடப்பு வருவாய் நீங்கலான பிறவாயில்களிலிருந்து பெறப்படுகிறது)—அரசுக் கல்விக் கூடங்களுக்கான கட்டிடச் செலவு. | 2,37·11 | 4·67 | 22·44 | 1·00 | 2,59·55 | 5·67 | 2,65·22 |
| கடன்கள்— | | | | | | | |
| தேசியக் கடன் படிப்புதவிச் சம்பளங்கள் .. .. | .. | 53·50 | .. | .. | .. | 53·50 | 53·50 |
| தமிழ்நாடு கல்விக் கடன்கள்— (பொறியியல் கல்லூரி, பல்தொழிற் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்காக). | .. | .. | 10·00 | .. | 10·00 | .. | 10·00 |
| மொத்தம் .. | 2,38·01 | 62·30 | 46·13 | 2·00 | 2,84·14 | 64·30 | 3,48·44 |

6. மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவை குறித்த செலவு, அரிசன நலப் பள்ளிகள், அரிசன நல—பின்தங்கிய வகுப்பினர் படிப்புதவிப் பணங்கள் குறித்த செலவு, சமுதாய வளர்ச்சித் திட்டப் பணத்திலிருந்து, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள், சமூகக் கல்வி ஆகியவை குறித்துச் செய்யப்படும் செலவு, சீர்திருத்தப் பள்ளிகள், போன்று கல்வி குறித்த ஏனைய செலவினங்கள் மேற்குறிப்பிட்ட பத்திகளில் உள்ள புள்ளி விவரங்கள் எதிலும் அடங்கா. கல்வி குறித்த இத்தகைய செலவினங்களும் கருத்தில் கொள்ளப்படுமாயின், ரெவின்யூ, கணக்கில் மொத்தச் செலவுக்கும், கல்வி குறித்த செலவுக்கும் உள்ள சதவீத வீதாச்சாரம் மேலே மூன்றுவது பாராவில் சொல்லியுள்ள 23 விழுக்காட்டைக் காட்டிலும் மிக அதிகமாகவே இருக்கும்.

...

2. கல்வி வளர்ச்சிக்கான திட்டப் பணிகளின் செலவுப் பெருக்கம்.

7. கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும், ஆண்டுத் திட்டக் காலங்கள் மூன்றிலும் பொதுக் கல்வியில் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட திட்டச் செலவையும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டையும் அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணை ஒருங்கே காட்டுகிறது :—



| (1) | முதல் திட்டம். (2) | இரண்டாவது திட்டம். (3) | மூன்றாவது திட்டம். (4) | 3 ஆண்டுத் திட்டங்கள் 1966–69. (5) | நான்காவது திட்ட மதிப்பீடு. (6) | 1969–70 கணக்குகள். (7) | 1970–71 திட்ட மதிப்பீடு. (8) | 1971–72 திட்ட மதிப்பீடு. (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் லட்சத்தில்.) | | | | |
| தொடக்கக் கல்வி .. | 3,02·00 | 8,29·72 | 20,80·00 | 10,74·61 | 26,60·47 | 1,72·00 | 2,71·72 | 3,92·89 |
| இடைநிலைக் கல்வி .. | 54·00 | 2,64·04 | 9,20·00 | 6,50·05 | 15,95·25 | 1,39·86 | 1,65·62 | 2,47·73 |
| ஏனைய கல்வித் திட்டங்கள் | 19·60 | 32·57 | 3,75·00 | 85·33 | 2,11·50 | 37·96 +0·17 | 43·05 +0·52 | 1,60·43 +0·52 |
| பல்கலைக் கழகக் கல்வி | 5·40 | 14·66 | 34.00 | 1,48·39 | 8,50·00 | 99·53 +1·00 | 1,54·52 | 2,41·83 +6·00 |
| மொத்தம்—பொதுக் கல்வி | 3,81·00 | 11,40·99 | 34,09·00 | 19,58·38 | 53,17·22 | 4,49·35 +1·17 | 6,34·91 +0·52 | 10,42·88 +6·52 |

மேற்சொன்ன புள்ளி விவரங்களில், "50. கட்டடப் பணிகள், 103. மூலதனச் செலவுகள்—கடன்கள்" என்னும் தலைப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ள கல்வி குறித்த திட்டச் செலவு அடங்கும். "+ ...." எனக் குறியிடப்பட்ட புள்ளி விவரம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கீட்டினைக் குறிக்கிறது.

8. திட்டப் பணிகளில் தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்விக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் கல்வித்தரம் உயர்த்தப்படுவதைக் குறித்ததாகும். இப்போது 31,881 தொடக்கப் பள்ளிகளும், 2,635 உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற சதவீதம் தொடர்ச்சியாகவும் சீராகவும் அதிகரித்து வருகின்றது. 6—11 வயதுத் தொகுதியில் 94.1 சதவீதமும், 11—14 வயதுத் தொகுதியில் 55.1 சதவீதமும், 14—17 வயதுத் தொகுதியில் 35.3 சதவீதமும் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். நான்காவது திட்டக்கால முடிவிற்குள், 6—11 வயதினரில் 100 சதவீதமும், 11—14 வயதினரில் 80 சதவீதமும், 14—17 வயதினரில் 55 சதவீதமும் சேர்த்துக் கொள்ளப்படும் இலக்கினை அடையக் கூடுமென நம்பப்படுகிறது.

### 3. கல்விக் கூடங்களின் எண்ணிக்கைப் பெருக்கம்.

9. கடந்த சில ஆண்டுகளில், கல்வி வசதிகள் பெருகியுள்ளதைக் கீழ்க் காணும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன :—

| கல்விக்கூடத்தின் இனம். | கல்விக்கூடங்களின் எண்ணிக்கை. | | | | |
|---|---|---|---|---|---|
| | 1966–67 | 1967–68 | 1968–69 | 1969–70 | 1970–71 1-8-71 அன்று இருந்தபடி. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| தொடக்கப் பள்ளிகள் .. | 31,157 | 31,429 | 31,712 | 31,823 | 31,881 |
| * உயர்நிலைப் பள்ளிகள் .. | 2,372 | 2,449 | 2,513 | 2,580 | 2,635 |
| பயிற்சிப் பள்ளிகள் .. | 145 | 143 | 142 | 140 | 139 † |
| ஊனமுற்றோருக்கான பள்ளிகள். | 22 | 22 | 23 | 24 | 24 |
| கல்லூரிகள் .. .. | 105 | 116 | 126 | 140 | 16† |
| பயிற்சிக் கல்லூரிகள் .. | 19 | 20 | 23 | 23 | 23 |
| பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள். | 35 | 35 | 35 | 35 | 34 |
| பொறியியல் கல்லூரிகள் .. | 12 | 12 | 12 | 12 | 12 |
| தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிகள். | 14 | 15 | 15 | 15 | 14 |

* மெட்ரிகுலேஷன், மைய அரசுப் பள்ளிகள் உட்பட.

† ஆங்கிலோ-இந்தியர்களுக்கான பயிற்சிப் பள்ளி ஒன்று சிறுர் பள்ளிகளுக்கான பயிற்சிப் பள்ளிகள் ஐந்து உட்பட.



## அத்தியாயம் .

### பள்ளிக்கல்வி.

பள்ளிக் கல்விக்கான 1971–72 ஆம் ஆண்டு "செயலாற்றல் ஆய்வுக் குறிப்பு" பேரவை முன் தனியாக வைக்கப்பட்டுள்ளது. 1971–72-ம் ஆண்டு பள்ளிக் கல்விக்கு வேண்டிய நிதித் தேவைகளைப் பற்றிய கீழ்க்காணும் விவரங்கள் அதில் அடங்கியுள்ளன :—

. வேலைத் திட்ட, நடவடிக்கை வகைப்பாடு ;

. செல்வின வகைப்பாடு.

. நிதி ஒதுக்க விவரங்கள்.

புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வசதியாக, பொருத்தமான புள்ளி விவரங்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது :—

| | 1970–71 திருத்த மதிப்பீடு. | 1971–72 திட்ட மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| I. வேலைத் திட்ட, நடவடிக்கை வகைப்பாடு— | | |
| 1 நிர்வாகமும் மேற்பார்வையும் .. | 105·94 | 113·41 |
| 2 தொடக்கக் கல்வி .. .. . | 31,85·42 | 37,57·20 |
| 3 மதிய உணவுத் திட்டம் .. .. | 259·52 | 256·46 |
| 4 பாடநூல்களும் கரும்பலகைகளும் இலவசமாக வழங்குதல். | 12·44 | 13·24 |
| 5 இடைநிலைக் கல்வி .. .. .. | 21,73·82 | 25,67·79 |
| 6 அறிவியல் போதனை வசதிகளைப் பெருக்குதல். | 23·95 | 30·01 |
| 7 தனிப் பள்ளிகள், பயிற்சிப் பள்ளிகள், ஊனமுற்றோருக்கான பள்ளிகள், ஓரியண்டல் பள்ளிகள், சிறுர் பள்ளிகள் | 118-59 | 134·23 |
| 8 ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் .. | 6·28 | 7·07 |
| 9 முதியோர் கல்வி .. .. | 2·19 | 1·33 |
| 10 குழந்தைகள் இல்லங்கள் .. .. | 45·00 | 50·00 |
| 11 நூலகங்கள் .. .. .. .. | 52·43 | 53·35 |
| 12 உடற்பயிற்சிக் கல்வி .. .. .. | 15·45 | 16·39 |
| 13 தேசீய மாணவர் படை .. .. | 59·16 | 65·27 |
| 14 படிப்பு உதவித் தொகைகள் .. .. | 6·08 | 6·05 |
| 13 மாநிலக் கல்வி நிறுவனம் .. .. | 2·02 | 2·79 |
| 16 தமிழ்நாடு ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் இயக்கம். | 2·87 | 2·87 |
| 17 புகுமுகத் தொழிற்பயிற்சி நிலையங்கள் | 2·65 | 1·60 |
| 18 சைனிக் பள்ளி .. .. .. | 9·60 | 9·45 |
| 19 தொழில் பழகு ஆசிரியர் திட்டம் .. | 32·50 | 97·50 |
| 20 பல்வகை .. .. .. .. | 76·83 | 17·88 |
| மொத்தம் .. | 61,92·74 | 72,03·89 |

| | (1) | 1970–71 திருத்த மதிப்பீடு. (2) | 1971–72 திட்ட மதிப்பீடு. (3) |
|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| II. | செலவின் வகைப்பாடு— | | |
| 1 | அலுவலர் ஊதியம் .. .. | 397·67 | 477·50 |
| 2 | பயணப்படி .. .. .. | 5·69 | 6·39 |
| 3 | பிற செலவுகள் .. .. .. | 150·97 | 147·52 |
| 4. | உதவி பெறும் பள்ளிகளுக்கு மானியம். | 1,387·44 | 1,701.96 |
| 5 | ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு மானியம், | 2,425·00 | 2,787·70 |
| 6 | நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும மானிய உதவி. | 209·99 | 272·38 |
| 7 | முன்னாள் மாவட்டக் கழக உயர்நிலைப் பளளிகளுக்கு மானிய உதவி. | 1,051·46 | 1,214·38 |
| 8 | கட்டட வேலைகள் .. .. | 152·00 | 148·98 |
| 9 | கருவிகள் .. .. .. | 44·64 | 57·71 |
| 10 | பலவகை .. .. .. | 367·88 | 389·37 |
| | | 6,192·74 | 7,203 89 |
| III. | நிதி ஒதுக்க விவரம்— | | |
| | 28. கல்வி .. .. .. | 6,139·23 | 7,141·20 |
| | 50· பொதுப் பணிகள் .. .. | 1·40 | 0·40 |
| | 52. பொதுப் பனிகள் .. .. | .. | 0·50 |
| | 103. பொதுப் பணிகளின் மேலான மூலதன முதலீடு. | 52·11 | 61·79 |
| | | 6,192·74 | 7,203·89 |

## அ. நிர்வாக அமைப்பு.

பள்ளிக் கல்வி இயக்குநர் பள்ளிக் கல்வித் துறையின் தலைவராவார். இவரே அரசுத் தேர்வு ஆணையாளராகவும் பொது நூல் நிலைய இயக்குநராகவும் உள்ளார். தற்போது வருவாய் மாவட்ட அளவில், 10 தலைமைக் கல்வி அதிகாரிகள் உள்ளனர். இவர்களுக்குக் கீழ் நிலையில் கல்வி மாவட்ட அதிகாரிகள் பணியாற்றுகின்றன.ர். இந்த அதிகாரிகளின் அதிகார வரம்பு வருவாய் மாவட்டத்தில் 2 அல்லது 3 வட்டங்கள் வரையிலாகும். தற்போது 45 கல்வி மாவட்ட அதிகாரிகள் உள்ளனர். தற்போது ஆறு (பெண்) ஆய்வாளர்கள் இருக்கின்றனர். பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளிலும், பயிற்சிப் பள்ளிகளிலும் ஆய்வு நடத்தும் பொறுப்பு இவர்களுடையதே.

சரக நிலையில், இப்போது 344 பள்ளித் துணை ஆய்வாளர்களும், 126 இளநிலை பள்ளித் துணை ஆய்வாளர்களும் உள்ளனர். ஆய்வாளர் அலுவலகத்தை விரிவுப்படுத்துவதற்காக, 1971–72-ல் பள்ளித் துணை ஆய்வாளர் சரகங்கள் 15-ஐக் கூடுதலாக ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.





மேற்சொல்லியவர்களைத் தவிர, ஆங்கிலோ–இந்தியப் பள்ளிகளை ஆய்ந்து நிர்வகிப்பதற்காக ஆங்கிலோ-இந்தியப் பள்ளி ஆய்வாளர் ஒருவரும், பள்ளிகளில் உடற்பயிற்சிக் கல்வி வளர்ச்சிக்காக உடற்பயிற்சிக் கல்வித் தலைமை ஆய்வாளர் ஒருவ்ரும், உடற்பயிற்சிக் கல்வி வல்லுநர் ஒருவரும் உள்ளனர்.

கல்வியில், குறிப்பாகத் தொடக்கக் கல்வித் தர உயர்வுக்கென, ஆசிரியர் பணிக்காலப் பயிற்சித் திட்டங்களுக்கு, மாநிலக் கல்வி நிறுவன இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார்.

## ஆ. தொடக்கக் கல்வி.

### 1. கூடுதல் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் பள்ளியை விரிவாக்கலும்.

பள்ளி செல்லும் வயதுடைய சிறுவர்கள் அனைவரையும் பள்ளிகளில் சேர்ப்பித்துப் போதிய சிறந்த வசதிகளுடைய கட்டிடங்களையும் துணைக் கருவிகளையும் பள்ளிகளுக்குப் படிப்படியாக வழங்குவதே தொடக்கக் கல்வியின் தலையாய நோக்கமாகும். இம் மாநிலத்தில் மக்கள் தொகை 300-க்கு மேலுள்ள எல்லாப் பகுதிகளிலும் தொடக்கப் பள்ளி உள்ளது. 6—11 வயதுள்ள சிறுவர் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கப்படுகிறது. 6—11 வயதினரில் மாணவர் சேர்க்கையின் சதவீதம் மூன்றாவது திட்ட முடிவில் 88 சதவீதமாயிருந்ததற்கு மாறாக 1970–71 முடிவில் 94.1 சதவீதமாக உயர்ந்தது. இந்த வய்துத் தொகுதியினரில் 100 சதவீத மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதே நான்காவது திட்டத்தின் இலக்காகும். இந்தத் திட்ட இலக்கை அடையும் பொருட்டு நான்காவது திட்டக் காலத்தில் ஒவ்வோர் ஆண்டிலும் 6—11 வயதுள்ள 1.5 லட்சம் சிறார்களை மேற்கொண்டும் சேர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1969–70-ல் 6—11 வயதினருக்காக 2,650 ஆசிரியர்கள் மேற்கொண்டு நியமிக்கப்பட்டனர். 1970–71-ல் 2,350 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த வயதுத் தொகுதியினருக்காக 1971–72-ல் மேலும் 3,000 ஆசிரியர்களை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

6—11 வயதினர் கூடுதலாகப் பள்ளியில் சேர்ந்ததன் பயனாக, அடுத்த நிலையில் அதாவது 11—14 வயதுள்ள சிறுவர்களைப் பள்ளிகளில் சேர்க்க வேண்டிய அவசியம் அதிகரித்தது. பல தொடக்கப் பள்ளிகள் உயர் தொடக்கப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. இதைத் தவிர, புதிய உயர்நிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டன. மூன்றாவது திட்டக் கால முடிவில் இந்த வயதுத் தொகுதி மாணவர்களின் சதவீதம் 47.30 ஆக இருக்கையில் 1970–71 முடிவில் (1970-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி) சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் 55.10 சதவீதமாகும். 1969–70-ல் 11—14 வயதுத் தொகுதியினருக்காக 1,300 ஆசிரியர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டனர். 1970–71-ல் 1,400 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். ஆசிரியர், மாணவர் விகிதாச்சாரத்தைச் சீராக்கவும் கல்வித் தரத்தை உயர்த்தவும், 1971–72-ல் மேற்கொண்டும் 11—14 வயதுள்ள 1,20,000 மாணவர்களைச் சேர்த்து 2,000 ஆசிரியர்களை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

[1971 சூலை 9

தொடக்கக் கல்வித் துறையில் கடந்த சில ஆண்டுகளில் கண்ட முன்னேற்றத்தைக் கீழே கொடுத்துள்ள அட்டவணை விளக்குகிறது :—

| | 1966-67. | 1967-68. | 1968-69. | 1969-70. | 1970-71. |
|---|---|---|---|---|---|
| இடைநிலைப் பள்ளிகள் (Middle Schools) உட்பட தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை. | 31,157 | 31,429 | 31,712 | 31,823 | 31,881 |
| உயர்நிலைப் பள்ளிகளின் இடைநிலைப் பள்ளிப் பிரிவுகளிலுள்ள மாணவர்கள் உட்பட, பெயர்ப் பட்டியலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை (லட்சத்தில்). | 57·67 | 60·89 | 61·45 | 63·01 | 64·63 |

பள்ளி செல்லும் வயதுடைய பிள்ளைகள் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிப்பது அரசின் அடிப்படைப் பொறுப்புகளில் ஒன்றாகும். எனவே, கல்விக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் பெரும் பங்கு (ஏறத்தாழ 50 சதவீதம்) தொடக்கக் கல்விக்காகச் செலவிடப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் விதித் துறைகளின்கீழ் ஊராட்சி ஒன்றியப் பகுதி ஒவ்வொன்றிலும் உள்ள தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரை, தனியார் பள்ளிகளுக்கு மானியம் வழங்குவது உட்பட, தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குதல், பேணுதல், விரிவுபடுத்துதல், மேம்படுத்தல் ஆகியவை தொடர்பாக, ஊராட்சி ஒன்றியத்தின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கு நியாயமான அளவு நிதி ஒதுக்கம் செய்வது அந்தந்த ஊராட்சி ஒன்றியக் குழுவின் கடமையாகும். சில ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் நிதிநிலை முற்றிலும் மன நிறைவளிப்பதாக இல்லை. ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் நிதிநிலை உறுதிப்பாட்டைச் சீர்படுத்தும் நோக்கத்துடன், ஊராட்சி ஒன்றியப் பகுதியில் தொடக்கக் கல்விக்கு நிதியளித்தல் தொடர்பான அனைத்தையும் குறித்து ஆய்வு செய்யும் பொருட்டு ஊராட்சி நிதி விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை அரசிடம் அளித்துள்ளது. அவ்வறிக்கை கூர்ந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## 2. பள்ளிகளின் தரத்தை உயர்த்துதல்.

I கட்டிடங்கள்.—குறிப்பாக, கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிகளின் அடிப்படைத் தேவைகளிலொன்று ஏற்ற கட்டிடங்களுக்கு வகை செய்வதாகும். 1971–72-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் மீதான செலவிற்காகக் கீழ்க்கண்ட நிதி ஒதுக்கங்களைச் செய்கிறது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் அல்லாத பகுதிகளில் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் (புதிய திட்டங்கள்). | 15·80 (1970-71ல் 10·00) |
| ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கும், மானியம் பெறும் பள்ளிகளுக்கும் கட்டிட மானியங்கள். | 34·30 (1970-71ல் 27·00) |



1971 சூலை 9]

மேற்சொன்ன மானியங்களுக்குக் கூடுதலாக, 1971–72-ல் சமுதாய வளர்ச்சிப் பணிகள் வரவு–செலவுத் திட்டத்திலிருந்து ரூ. 18.30 லட்சம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்குப் பள்ளிக் கட்டிட மானியங்களாக வழங்கப்படும். மேலும் 6—11 வயது தொகுதியிலுள்ள பிள்ளைகளைக் கூடுதலாகப் பள்ளியில் சேர்த்துக் கொள்வதற்கான திட்டப் பணிகளின்கீழ் கொட்டகைகள் கட்டுவதற்காக, மேற்கொண்டும் ஓரளவு நிதி ஒதுக்கப்படும்.

பள்ளி நிர்வாகங்கள் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட இயலும் வகையில், கட்டிட மானியங்களின் வீதம் பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது :—தொடக்கப் பள்ளிக்குரிய மானியம் ரூ. 4,000-த்திலிருந்து ரூ. 8,000-த்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது ; இதற்கு பள்ளி நிர்வாகத்தின் செலவுப் பங்கு ரூ. 4,000 ஆகும் ; இடைநிலைப் பள்ளிக்குரிய மானியம் ரூ. 7,000-த்திலிருந்து ரூ. 13,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது ; இதற்குப் பள்ளி நிர்வாகத்தின் செலவுப் பங்கு ரூ. 6,000 ஆகும்.

தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காகப் பரிசுச் சீட்டுத் திட்டத்தின் வருவாயிலிருந்து ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது ; இத் தொகை 1971–72-இல் பயன்படுத்தப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

II கருவிகள்.—தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்குத் தேவையான சிறந்த கருவிகளையும் துணைக் கருவிகளையும் அளிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்பப் பள்ளிகள் (அல்லது கீழ்நிலைத் தொடக்கப் பள்ளிகள்) ஒவ்வொன்றுக்கும் ரூ. 300 வீதமும், இடைநிலைப் பள்ளிகள் (அல்லது உயர் தொடக்கப் பள்ளிகள்) ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 வீதமும், சாதனங்களை வாங்குவதற்கு ஆகும் செலவு முழுவதையும் கொடுப்பது என்ற அடிப்படையில் அறிவியல் சாதனங்கள் வழங்குவதற்கான திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின்கீழ் இது வரை 6,400 ஆரம்பப் பள்ளிகளும், 1,550 இடைநிலைப் பள்ளிகளும் பயன் பெற்றுள்ளன. 1971–72-இல் 2,000 தொடக்கப் பள்ளிகளுக்கும், 650 இடைநிலைப் பள்ளிகளுக்கும் இத் திட்டத்தை விரிவு படுத்தக் கருதப்பட்டுள்ளது. 1971–72-ஆம் ஆண்டுக்கு இத் திட்டத்திற்காக ரூ. 12.50 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்னவற்றுக்குக் கூடுதலாக, 6—11, 11—14 வயதுத் தொகுதியிலுள்ள பிள்ளைகளைக் கூடுதலாகப் பள்ளியில் சேர்க்கும் திட்டத்தின்கீழ் தொடங்கப்படவிருக்கும் கூடுதல் வகுப்புகள் தொடர்பாக சாதனங்கள் வாங்குவதற்காகவும் 1971–72-இல் நிதி ஒதுக்கம் செய்யப்படும்.

III தொடக்கப் பள்ளி நூலகங்கள்.—மாணவர்கள் நூல்கள் படிக்கும் பழக்கத்தை வளர்த்திடச் செய்யும் நோக்கத்துடன் ஒவ்வொரு தொடக்கப் பள்ளியிலும் ஒரு சிறிய நூலகம் நிறுவும் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல் படுத்தப்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 13,545 தொடக்கப் பள்ளிகளும், 3,241 இடைநிலைப் பள்ளிகளும் இத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. 1966–67-இல், 11,000

[1971 சூலை 9

தொடக்கப் பள்ளிகளும், 4,000 இடைநிலைப் பள்ளிகளும் இத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. இத் திட்டம் 1967–68, 1968–69 ஆண்டுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 1969–70-இல் 10,000 தொடக்கப் பள்ளிகளும், 2,500 இடைநிலைப் பள்ளிகளும் இத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டன; அந்த ஆண்டில், தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்கப் பள்ளிகள், இடைநிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும், இணை மானிய அடிப்படையில் முறையே ரூ. 30, ரூ. 60 வீதத்தில் மானியம் வழங்கப்பட்டது. இதற்கு, பள்ளி நிர்வாகமும் நிகரான தொகையை அளிக்கவேண்டும்.

(IV) தொடக்கநிலை ஆசிரியர்கள் பதவிகளை இடைநிலை ஆசிரியர்களாக நிலையுயர்த்துதல்.—III-ஆம் வகுப்பு முதலே ஆங்கிலம் கற்பிப்பது உட்பட, தொடக்கப்பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையாக, தொடக்க நிலை ஆசிரியர் பதவிகளை இடைநிலை ஆசிரியர் பதவிகளாக மாற்றுவதற்கு அரசு அனுமதித்துள்ளது. இவ்வாறு மாற்றம் செய்ததானது தொடக்கநிலை ஆசிரியர் பதவிகளில் பணிபுரிந்து வந்த, கடைநிலை ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்ற ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர் பதவித் தரச் சம்பளம் பெறுதற்கு உதவி புரிந்தது. இதுவரை, தொடக்கநிலை ஆசிரியர் பதவிகளில் பணி புரிந்து வந்த 14,000 இடைநிலை ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றவர்கள் இடைநிலை ஆசிரியர் பதவிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்; இவ்வெண்ணிக்கையில், 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதியிலிருந்து ஒப்பளிப்பு வழங்கப்பட்ட 3,000 பதவிகளும் அடங்கும். மீண்டும் சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் மேல், 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியிலிருந்து 5,500 தொடக்க நிலை ஆசிரியர் பதவிகளை இடைநிலை ஆசிரியர் பதவிகளாக நிலையுயர்த்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

V ஆசிரியர் குடியிருப்புகள்.—பள்ளிகளில் சேரும் பிள்ளைகளின், குறிப்பாகப் பெண் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டும், கிராமப் பகுதிகளில் ஆசிரியைகள் வசிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டும், கிராமப் புறங்களில் ஆசிரியைகளுக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் முறையே 164 குடியிருப்புகளும், 726 குடியிருப்புகளும் கட்டப்பட்டன. கடந்த 4 ஆண்டுகளில், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 432 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடரப்படுகிறது. இதற்காக, 1969–70, 1970–71 ஆண்டு ஒவ்வொன்றிலும் ரூ. 5 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டது. 1971–72-ல் ரூ. 5 லட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

### 3. நண்பகல் உணவும், நண்பகல் உணவுத் திட்டத்துக்குக் 'கேர்' ( C. RE ) நிறுவனத்தின் உதவியும்.

தொடக்கப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பயிலும் ஏழை மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இத் திட்டத்தால் ஏறத்தாழ 18 லட்சம்



1971 சூலை 9]

மாணவர்கள் பயனடைகின்றனர். இத் திட்டத்திற்கு 1971–72-இன் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 198 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது, இதில், திட்டத்தில் சேராப் பணிகளின்கீழ் ரூ. 162.89 லட்சமும், திட்டப் பணிகளின்கீழ் ரூ. 35.11 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் மேலும் 67,000 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ளனர்.

1967–68-இல் "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் சேக்காட்டில் தொடங்கப்பட்ட மையச் சமையற்கூடத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டுள்ளது. 1969–70-இல் 30 மையச் சமையல்கூடங்களைப் புதிதாகத் தொடங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அவை, வாயு அடுப்புச் சாதனத்துடன் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மையச் சமையல் கூடத்துக்கும் ரூ. 2 லட்சம் வீதம் தொடரா இனச் செலவை "கேர்" நிறுவனம் ஈடு செய்கிறது.

1970–71-ல் கூடுதலாக 30 மையச் சமையல் கூடங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது; 1971–72-இல் மேலும் 30 மையச் சமையல் கூடங்களை நிறுவக் கருதப்பட்டுள்ளது.

வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்தி, அளவை அதிகரிக்கும் நோக்கத்துடன் "கேர்" நிர்வாகம் இலவசமாக, தானியங்கள், எண்ணெய், புரதச் சத்துள்ள உணவு முதலியவற்றை அளிக்க முன் வந்தது. உணவளிக்கப்படுகின்ற 200 நாட்களில் 100 நாட்களுக்கு "கேர்" நிறுவனம் தானியம் வழங்குகிறது; அந் நிறுவனம் உணவு அளிக்கப்படும் எல்லா நாட்களிலும் எண்ணெய், சோளமாவு (C.S.M.) இவற்றை வழங்கி வருகின்றது.

நண்பகல் உணவுத் திட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு, இத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உணவு தானியங்களைச் சேமித்து வைக்கத் தமிழ் நாட்டில் 10 வட்டாரச் சேமிப்புக் கிடங்குகள் கட்டித் தரவும், அவற்றின் கட்டுமானச் செலவில் 90 சத வீதத்தைக் கொடுக்கவும், "கேர்" நிறுவனம் தற்போது முன்வந்துள்ளது. மொத்தச் செலவான ரூ. 30 லட்சத்தில், அரசு ரூ. 3 லட்சம் செலவை ஈடுசெய்ய இசைந்து இத் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### 4. புத்தகங்களையும் பலகைகளையும் இலவசமாக வழங்குதல்.

வகுப்புகளில் பயின்று, நண்பகல் உணவு பெறுகின்ற, ஏழை மாணவர்களுக்கு, 1966–67-ஆம் ஆண்டிலிருந்து பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1-ஆம் வகுப்பில் படிக்கும் பிள்ளைகளுக்குப் பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஏறத்தாழ 10 லட்சம் மாணவர்களுக்குப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன; ஏறத்தாழ 3.55 லட்சம் பிள்ளைகளுக்கு பலகைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பள்ளியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபொழுது, நண்பகல் உணவையும் புத்தகங்கள், பலகைகளையும் இலவசமாகப் பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் உயர்கின்றது. 1971–72-இல், I-III ஆம் வகுப்புகளில், கூடுதலாக 33,000 மாணவர்கள்

இத் திட்டத்தின்கீழ் பயன் பெறுவர். கடந்த சில ஆண்டுகளில், வழங்கப்பட்ட புத்தகங்கள், பலகைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | வழங்கப்பட்ட பாடப் புத்தகங்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | 1968–69. | 1969–60. | 1970–71. |
| தமிழ்ப் பாடப் புத்தகங்கள்— | | | |
| வகுப்பு I .. .. | 2,66,300 | 3.28,376 | 3,59,013 |
| வகுப்பு II .. .. | 3,21,900 | 3,45 941 | 3,50,843 |
| வகுப்பு III .. .. | 2,73,600 | 3,01,750 | 3,09,518 |
| கணக்குப் பாடப் புத்தகங்கள்— | | | |
| வகுப்பு III .. .. | 2,72,600 | 3,01,750 | 3,09,518 |
| பலகைகள்— | | | |
| வகுப்பு I .. .. | 3 15,330 | 3,11,760 | 3,54,171 |

(புத்தகங்களும், கற்பலகைகளும் வழங்கப்படுகையில் கையிருப்பும் கணக்கில் கொள்ளப்பட்டது.)

## இ. இடைக் கல்வி நிலை.

### 1. கூடுதலாகப் பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்த்தலும், விரிவுப் படுத்தலும்.

கீழே கொடுத்துள்ள புள்ளிவிவரங்கள், கடந்த சில ஆண்டுகளில் இடைநிலைக் கல்வித் துறையில் எய்தியுள்ள முன்னேற்றத்தைக் காட்டும் :—

| | 1966-67. | 1967–68. | 1968–69. | 1969–70. | 1970–71. |
|---|---|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை. | 2,372 | 2,449 | 2,513 | 2,580 | 2,635 |
| பட்டியலிலுள்ள மாணவர் எண்ணிக்கை (லட்சத்தில்) (IX—XI வகுப்புகளில்). | 6·08 | 6·26 | 6·37 | 6·69 | 6·97 |

1970–71-ல் தொடங்கப்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்ட உயர் நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | |
|---|---|
| அரசுப் பள்ளிகள் .. .. | 40+1 |
| மானியம் பெறும் பள்ளிகள் .. | 12+2* |
| நகராட்சிப் பள்ளிகள் .. .. | 1 |
| | 53+3 (ஒரு பள்ளி இந்த ஆண்டில் மூடப்பட்டது.) |

* புதிதாகத் தொடங்கப்பட்ட மானியம் பெறும் பள்ளிகள் 14-இல், 2 பள்ளிகள் மத்திய அரசுப் பள்ளிகளாகும்; அவற்றுக்கு புது டில்லியிலுள்ள மத்தியக் கல்வி வாரியத்தால் அனுமதி வழங்கப் பட்டது.

1964–65-ம் ஆண்டிலிருந்து, மாணவர்களின் சாதி, வகுப்பு, அவர்களது பெற்றோர்கள் அல்லது காப்பாளர்களின் வருவாய் என்னவாக இருப்பினும், அவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் எதுவும்



வசூலிக்கப்படுவதில்லை. பள்ளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது; பள்ளிகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் சத வீதமும் உயர்ந்து வருகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் 14–17 வயது தொகுதியைச் சேர்ந்த பிள்ளைகளைப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளும் சத வீதம் 29.65 ஆகும். 1970–71-ல் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் சத வீதம் 35.30 ஆகிறது. 1970–71-ஆம் ஆண்டில் 14–17 வயதுத் தொகுதியில் உள்ள பிள்ளைகளில் பள்ளியில் சேர்த்துக்கொண்ட பிள்ளைகளின் எண்ணிக்கை 6.97 லட்சம் ஆகும்.

1969–70-ல், 1,225 பட்டதாரி ஆசிரியர்கள் மேற்கொண்டும் நியமிக்கப்பட்டனர்; 1970–71-ல் 1,257 பட்டதாரி ஆசிரியர்கள் அவ்வாறு நியமிக்கப்பட்டனர். 1971–72-ல் இத் திட்டத்தின்கீழ் மேலும் 1,500 ஆசிரியர்கள் கூடுதலாக நியமிக்கப்படுவர்.

### 2. கல்வித்தரத்தை உயர்த்துதல்.

#### (i) உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள்.

பள்ளிகளுக்கு, குறிப்பாக அரசினர் (மாவட்ட வாரியப்) பள்ளி களுக்கு புதிய கட்டிடங்களுக்கு வகை செய்ய வேண்டிய தேவை நீண்ட நாட்களாக இருந்துள்ளது. எனவே, 1970–71-ல் முன் ஆண்டுகளில் ஒப்பளிக்கப்பட்ட கட்டடவேலைகளுக்காக நிதி ஒதுக்கம் செய்ததற்குமேல், புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1971–72-ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 35 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. முன் ஆண்டுகளில் ஒப்புதலளிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்காக 1971–72-ல் செலவிடவிருக்கும் தொகைக்குத் தனியாக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

#### (ii) உயர்நிலைப்பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்தல்.

அறிவியலையும் அறிவியல் விருப்பப் பாடங்களையும் கற்பிப்பதற்கு இம்மாநிலத்திலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளுக்கும் போது மான சாதனங்களை அளிக்கும் நோக்கத்துடன், உயர்நிலைப் பள்ளி களுக்கு, அறிவியல் மானியங்கள் வழங்கப்படுகின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆய்வுக்கூடக் கட்டிடங்கள் கட்டவும் அறிவியல் சாதனங்கள் வாங்கவும், 54 பள்ளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. ஆண்டுத் திட்ட காலங்கள் மூன்றில் இத் திட்டத்தின்கீழ் 340 பள்ளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. பள்ளிகளின் அடிப்படை வசதிகளுக்கான மானியம் மூன்றாவது ஐந் தாண்டுத் திட்டக் காலத்தில் 288 பள்ளிகளுக்கும் 1966–67-ல் 60 பள்ளிகளுக்கும் கொடுக்கப்பட்டது. இந்திய அரசு மேற்கொண்ட விரைவுத் திட்டத்தின்கீழ், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத் தில், 385 பள்ளிகள் பயன் பெற்றன, 1966–67, 1967–68-ம் ஆண்டு களில் 646 பள்ளிகள் பயன் பெற்றன.

அறிவியல் கல்விக்குரிய வசதிகளை மேம்படுத்துவது பற்றிய திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடரப் படுகிறது. இத் திட்டத்தின்கீழ் 1969–70-ல் 108 பள்ளிகளும், 1970–71-ல் 66 உயர்நிலைப்பள்ளிகளும் பயன் பெற்றன. 1971–72-ல் ரூ. 30 லட்சம் செலவில் 75 பள்ளிகளை இத் திட்டத்தின்கீழ்க் கொண்டு வரக் கருதப்பட்டுள்ளது.

மாயூரம் கல்வி மாவட்டத்தில், "கேர்" நிறுவனத்தின் உதவி யுடன், உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான எல்லா அறிவியல் கருவிகளும் கொண்டுள்ள இழுவை வண்டி இணைக்கப்பட்ட இரண்டு இயல் ஆய்வுக்கூட வண்டிகள் (Mobile laboratory vans) முன்னோடித் திட்டமாக இயக்கப்பட்டன. இவ்விரு வண்டிகளும் தற்போது, மாயூரம், பட்டுக்கோட்டை கல்வி மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இம் முன்னோடித் திட்டத்தின் விளைவுகளை முழுமை யாக மதிப்பிட்டறிந்த பின்னர், இத் திட்டத்தை மேலும் விரிவு படுத்துதல் பற்றிக் கருதப்படும்.

பள்ளிகளில் அறிவியல் கல்வி முறையின் தரத்தினை உயர்த்தும் நோக்கத்துடன் பயிற்சிக் கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும் மாநில அறிவியல் கல்வி நிறுவனத்திற்கும் விஞ்ஞான கருவிகளை வழங்க யூனிசெஃப் நிறுவனம் முன்வந்துள்ளது. யூனிசெஃப் நிறுவனத்தின் இத் திட்டத்தை சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் ஒரு முன்னோடித் திட்டமாகக் கொண்டுவரவும், மாநிலக் கல்வி நிறுவனம், எழும்பூர் அரசு ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி, கடலூர் அரசு அடிப்படை பயிற்சிப் பள்ளி ஆகிய நான்கு முக்கிய நிறுவனங்களைத் தேர்ந் தெடுப்பதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டத்திற் கான புதிய அறிவியல் பாடத் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி களில் 1-ம் வகுப்பு முதல் மூன்றும் வகுப்பு வரைக்கும் 6-வது வகுப் பிற்கும் 1971 ஜூன் முதல் கொண்டு வரப்படும். தற்போதுள்ள பாடத் திட்டத்தை ஆய்வு செய்யவும் புதிய பாடத் திட்டத்தையும், அரசுப் பாடப் புத்தகங்களையும் தயாரிக்கவும் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் வேலைக்கமர்த்தப் படும் ஆசிரியர்களுக்குப் பணிக்காலப் பயிற்சி (in Servie Training) நடத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் களுக்கு மறுபயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. யூனிசெஃப் நிறுவனத் தின் இத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக 50 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும், 30 உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர் களுக்கும் பணிக்காலப் பயிற்சி தற்போது நடத்தப்பட்டு வருகின்றது.

### ( iii ) உயர்நிலைப் பள்ளிகளுக்கு நூலகங்கள்.

நூலக வசதிகளைப் பெருக்கும் நோக்கத்துடன், நூலகங்களுக்குப் புத்தகங்கள் வாங்குவதற்காக மானியம் கொடுக்கப்படுகிறது. மூன்றும் திட்டக் காலத்தில் 508 உயர்நிலைப் பள்ளிகள் இத் திட்டத் தினால் பயனடைந்தன. ஆண்டுத் திட்டக் காலங்கள் மூன்றில் மேலும் 513 பள்ளிகள் பயனடைந்தன. நான்காம் திட்டக் காலத் திலும் இத் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படுகிறது. 1969–70 ஆம் ஆண்டில் 159 பள்ளிகளில் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டன.





1970–71-ஆம் ஆண்டில் இத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இத் திட்டத்தினை மறுபடியும் செயல்படுத்தவும் 1971–72-ல் ரூ. 1 லட்சம் செலவில் ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளிக்கு ரூ. 1,000 வீதம் 100 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளிலும் இத் திட்டத்தினை நிறைவேற்றவும் கருதப் பட்டுள்ளது.

### 3. மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிப் பணியாளர்களை அரசுப்பணியில் எடுத்துக் கொள்ளுதல்

மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகள் 1,476 இருக்கின்றன. இவை அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகள் என வழங்கப்படு கின்றன. இப் பள்ளிகளில் பல்வேறு பதவித் தரத்தைச் சேர்ந்த 25,000-க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் ஆசிரியரல்லாத பிற பணி யாளர் சுமார் 6,000 பேரும் பணியாற்றி வருகின்றனர். இப் பணியாளர்கள் அனைவரும் 1970 ஏப்ரல் 1-ஆம் நாள் முதல் அரசுப் பணியில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் இவர்கள் தமிழ்நாடு கல்விச் சார்நிலை (B) பணி எனப்படும் தனிப்பட்டதொரு பதவித் தொகுதியில் சேர்க்கப்படலாம் என்றும் அரசு ஆணை யிட்டுள்ளது. இப் பதவித் தரம் மாவட்ட அடிப்படையில் அமைக் கப்பட்டு, ஒவ்வொரு வருவாய் மாவட்டமும் ஒரு தனிப் பிரிவாக அமையும். 1970 ஏப்ரல் 1-ஆம் நாளுக்குப் பின்னர் கல்வித்துறை நிர்வாகத்தின்கீழ் தொடங்கப்பட்ட புதிய பள்ளிகள் அனைத்தும் முறையான அரசுப் பள்ளிகளாகப் கருதப்படுகின்றன. தற்போதுள்ள அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் 1970 ஏப்ரல் 1-ம் நாள் அன்று அல்லது அதற்குப் பின்னர் நியமிக்கப்பட்ட ஆசிரியர் அனைவரும் தமிழ்நாடு கல்விச் சார்நிலை (A) பணியைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியரல்லாத பிற பணியாளர்களும் ஆசிரியர்களைப் போலவே தனியானதொரு பதவித் தரத்தில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆயிரம் மாணவர்களும் அதற்கு மேற்பட்டும், உள்ள அரசு (கழக) பள்ளிகளில் அரசிதழ்ப் பதிவு பெற்ற 80 தலைமை ஆசிரியர் பதவிகளுக்கும், அரசு (கழக) பள்ளிகளில் (B) பணியில் உள்ள பி.டி. ஆசிரியர்களுக்காக 1,200 தேர்வுநிலைப் பதவிகளுக்கும் முதல் நிலை தமிழ் வித்துவான்களுக்காக 300 தேர்வுநிலைப் பதவிகளுக்கும், அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

அரசுப் பள்ளிகளில் அதாவது (A) பணியில் உள்ள ஆசிரியர் களுக்காக 4 பிரிவுகள் அதற்கு மேற்பட்ட பிரிவுகள் உள்ள அரசு பயிற்சி பள்ளிகளில் அரசிதழ் பதிவுபெற்ற 25 தலைமை ஆசிரியர் பதவிகளுக்கும், 1,000 மாணவர்களும் அதற்கு மேற்பட்டும் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் அரசிதழ்ப் பதிவு பெற்ற 15 தலைமை ஆசிரியர் பதவிகளுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அரசு உயர்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் முதல் நிலை தமிழ் வித்துவான் களுக்காக 45 தேர்வுநிலைப் பதவிகளுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கி யுள்ளது.

[1971 சூலை 9

### 4. மருத்துவ இயல் ஊர்தி.

உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மருத்துவச் சோதனை செய்து அவர்களுக்குத் தேவையான தொடர் சிகிச்சை அளிக்கும் பொருட்டு, மருத்துவர் ஒருவரும், பிற பணியாளரும் உள்ள மருத்துவ இயல் ஊர்திப் பிரிவு ஒன்றை வட ஆர்க்காடு மாவட்டத் தலைமையாசிரியர்கள் உள்ளூர் மக்களிடமிருந்து பொருளுதவி திரட்டி அதன் மூலம் தொடங்கி வைத்துள்ளனர். இதுபோன்ற மருத்துவ இயல் ஊர்திகள் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, ஈரோடு, நாமக்கல் கல்வி மாவட்டங்களிலும் பணியாற்றத் தொடங்கியுள்ளன. இந்த இயல் ஊர்திகளைச் செயல் படுத்தி வருவதற்கான தொடர் செலவுக்கு வேண்டிய தொகை, மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் மருத்துவக் கட்டணத்தி லிருந்து பெறப்படுகிறது.

## ஈ. தொடக்கக் கல்விக்கும் இடைநிலைக் கல்விக்கும் பொதுவாகவுள்ள சில கூறுகள்

### (i) சமுதாயத்தினர் பங்கு பெறல் (பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்).

நமது மாநிலத்தில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளினால் சமுதாயத்தினர் கல்வியில் கொள்ளும் பங்கு படிப்படியாகப் பெருகி வருகிறது. நமது பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளினால் நமது மாநிலம் இந் நாட்டில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமைந் துள்ளது. இம் மாநிலத்தில் இதுவரை 474 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடைபெற்றுள்ளன. இவ்வுதவியின் மூலம் கிடைக்கப் பெற்ற உதவியின் மொத்த மதிப்பு ரூ. 12.51 கோடிக்கு அதிகமாகும். பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெற்றும் தாங்களாகவே முயன்றும் 1971 பிப்ரவரித் திங்கள் வரை சுமார் 13.53 லட்சம் வறிய மாணவர்களுக்குப் பள்ளிகள் நிகராடைகள் வழங்கியுள்ளன. இலவசமாக வழங்கப்பட்ட இந்த நிகராடைகளுக்கான செலவு ரூ. 88.04 லட்சம் ஆகும். பள்ளிகளில் பெண்கள் ஆர்வத்துடன் சேர் வதற்கு இது பெரிதும் உதவியுள்ளது.

### (ii) பள்ளித் தொகுதி அமைப்பு

பள்ளித் தொகுதி அமைப்புத் திட்டத்தின்கீழ், உயர்நிலைப் பள்ளியும் தொடக்கப் பள்ளியும் ஒன்றுக்கொன்று பயனுறும் வகை யில் இவையிரண்டையும் இணைக்கலாம் எனக் கல்வி ஆணைக்குழு கருத்துத் தெரிவித்தது. இந்த அமைப்புத் திட்டத்தின்கீழ் ஓர் உயர்நிலைப் பள்ளியைச் சுற்றி 10 முதல் 20 தொடக்கப் பள்ளிகளும், 3 முதல் 4 உயர் தொடக்கப் பள்ளிகளும் உள்ள ஒரு தொகுதி, கல்வி சீர்திருத்த வகையில், திட்டமிடுதல், ஆலோசனை நல்குதல், மேம் பாடு செய்தல் ஆகிய வாய்ப்புக்களைக் கொண்ட தனித்து இயங்கக் கூடிய ஒரு பிரிவாகக் கருதப்படுகிறது. இம் மாநிலத்தில் இதுவரை 116 பகுதிகளில் இப் பள்ளித் தொகுதி அமைப்புத் திட்டம் நிறை வேற்றப்பட்டுள்ளது.



1971 சூலை 9]

### (iii) கல்வி நிறுவனங்களுக்கான திட்டங்கள் தீட்டுதல். (Institutional Planning)

புது டில்லியில் உள்ள ஆசியக் கல்வித் திட்ட-நிர்வாக நிறுவனம், தேசியக் கல்வி ஆராய்ச்சி-பயிற்சி மன்றம் ஆகியவற்றின் ஒத் துழைப்புடன், கல்வி நிறுவனங்களுக்கு திட்டங்கள் தீட்டுதல் குறித்து மாநிலக் கருத்தரங்கு ஒன்று கோயம்புத்தூரில் 1971-அம் ஆண்டு மே திங்களில் நடைபெற்றது. கல்வித் துறையைச் சார்ந்த எல்லா அதிகாரிகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலை, பயிற்சிப் பள்ளிகளிலுள்ள தலைமை ஆசிரியர்களும் அக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

ஆசியக் கல்வித் திட்ட நிறுவனத்தின் ஆதரவில் தொடங்கப் பட்ட திட்டத்தின்படி, ஏனைய மாநிலங்களில் கல்வித் துறையில் நடத்தப்படுகின்ற சோதனைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக, இத் துறையைச் சேர்ந்த சில அதிகாரிகள் அம் மாநிலங்களுக்கு முகமையில் அனுப்பப்பட்டனர்.

### (iv) மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம்

பள்ளி அளவில் கல்வி மேம்பாட்டை ஆய்வு செய்யும் பொறுப்பை இம்மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம் ஏற்றுக் கொள் கிறது. இது மாநில அளவிலான ஒரு கல்வி நிறுவனமாகும். இது தேசிய அளவிலான தேசிய கல்வி, ஆராய்ச்சி-பயிற்சி நிறுவனத்தைப் போன்றதாகும். கல்வியின் தரத்தை—குறிப்பாகத் தொடக்கக் கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்கான பணிகளையும் இந்தக் கல்வி நிறுவனம் கவனித்து வருகிறது. பணிக்காலத் திட்டங்கள், கருத் தரங்குகள் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்தல், ஆராய்ச்சிகள், வெளியீடு வளர்ச்சிப் பணிகள் ஆகியவை இந்தக் கல்வி நிறுவனத்தின் பணிகளாகும். ஏராளமான ஆசிரியர்களுக்குப் பணிக்கால பயிற்சியை நடத்த வகை செய்ய இந்த நிறுவனத்திலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை 1971–72-ல் உயர்த்தக் கருதப்பட்டுள்ளது.

இந்தக் கல்வி நிறுவனம் நடத்திவரும் பணிக்காலப் பயிற்சிகள் பின்வருமாறு :—

இடைநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்பு கள்.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புகள்.

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு விருப்பப் பாடங்களில் நினைவுகூர் சிறப்பு பயிற்சி.

உயர்நிலைப்பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர்களுக்குக் கருத்தரங்கு கள்.

பயிற்சிப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரிய வல்லுநர்களுக்குக் கருத்தரங்குகள்.

பள்ளியிறுதித் தேர்வில் மாணவர்கள் அதிகமாக வெற்றிபெற வேண்டி, மேற்படி பள்ளியிறுதி வகுப்புகளை நடத்தும் ஆசிரியர் களுக்குக் கருத்தரங்குகள்.

பார்வையிடும் அதிகாரிகளுக்கும், பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும் மறு பயிற்சிக் கருத்தரங்கு.

உயர்நிலைப் பள்ளி, இடைநிலைப் பள்ளி, தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்குக் கருத்தரங்குகள்.

விஞ்ஞானப் பயிற்சி வகுப்புகள்.

தொடக்கக் கல்வி குறித்து மாநில அளவிலான கருத்தரங்கு ஒன்று சென்னையில் 1971 பிப்ரவரி திங்களில் நடத்தப்பட்டது.

(v) தேசியக் கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக் கழகத்தின் கருத்தரங்கு உரை.

தேசியக் கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக் கழகம், பயிற்சிக் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டுள்ள வளர்ச்சிப் பணித் துறைகள், மாநிலக் கல்வித் துறை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் பேருரை கருத்தரங்குத் திட்டத்தைத் தொடங்கியது. ஆசிரியர்கள் தங்கள் தொழிலிலும், கல்வி பற்றிய சிக்கல்களையும் ஆராய்ந்து அவை குறித்துப் பயனுள்ள வகையில் சிந்திப்பது மூலமாகவும் தாங்கள் அடைந்த அனுபவங்களையும், பெற்ற அறிவினையும் எழுதுவதற்கு அவர்களுக்கு ஊக்கமளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1970–71-ம் ஆண்டில் 9-வது அனைத்திந்திய கருத்தரங்கு உரைப் போட்டியில் இம்மாநிலமும் பங்கேற்றது. ஐந்து கட்டுரைகள் தேசிய கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டன.

(vi) தொழில் பழகு ஆசிரியர் திட்டம்.

நம்முன் உள்ள வேலை வாய்ப்பு நிலைமையைக் கருத்திற்கொண்டு, அதற்கேற்ப, பயிற்சிப் பள்ளிகளில் இருக்க வேண்டிய பிரிவுகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் முடிவு செய்யப்பட்டாலுங்கூட, பயிற்சி பெற்று வெளிவரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை, பணியில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கையை விடப் பெரிதும் அதிகமாகவே இருந்தது. பயிற்சி பெற்றும் வேலையற்றிருக்கும் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன், தொழில் பழகு ஆசிரியர் திட்டத்தின்கீழ் 1970–71-ல் 6,500 தொழில்பழகு ஆசிரியர் பதவிகளுக்கு (500 பி.டி. ஆசிரியர் பதவிகள், 5,000 இடைநிலை ஆசிரியர் பதவிகள், 1,000 தொடக்கநிலை ஆசிரியர் பதவிகள்) அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. திங்கள் ஒன்றுக்கு இவர்களது மொத்தச் சம்பளம் முறையே ரூ. 175, ரூ. 125, ரூ. 100 ஆகும். 1970–71-ம் ஆண்டு முடிவடைவதற்கு முன்பே தொழில் பழகும் 3,400 ஆசிரியர் பதவிகள் நிரப்பப்பட்டு விட்டன. 1971–72-ம் ஆண்டிலும் இத் திட்டம் செயலில் இருக்கும். கூடுதலாக ஆசிரியர்களை வேலைக்கமர்த்தும் திட்டங்களின் கீழ் 1971–72-ல் ஒப்பளிப்பு வழங்கப்படும் சாதாரண ஆசிரியர் பதவிகளுக்குக் கூடுதலாக, 1971–72-ல் நிரப்பப்படவேண்டிய தொழில் பழகு ஆசிரியர் பதவிகள் இருக்கும். 6—11 வயதுத் தொகுதி மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 3,000; 11—14 வயது மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 2,000; 14—17 வயது மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,500—ஆக மொத்தம், சாதாரண ஆசிரியர் பதவிகளின் எண்ணிக்கை 6,500.



மேற்சொன்னவாறு கூடுதல் பதவிகளுக்கு அரசு ஒப்புதல் அளிப்பதால் 1971–72-ம் ஆண்டில் நிரப்பப்படவேண்டி இருக்கும் 6,500 சாதாரண ஆசிரியர் பதவிகள் போக, சாவு, ஓய்வு பெறுதல், பதவி விலகல் முதலிய காரணங்களினால் 1971–72-ல் காலிவிழும் சாதாரண ஆசிரியர் பதவிகளுக்கும் 1971–72-ம் ஆண்டில் நியமனங்கள் செய்யப்படவேண்டியதிருக்கும். மேற்சொன்ன இருவகை காலியிடங்களும் சாதாரண ஆசிரியர் பதவிகளாகவே நிரப்பப்படும்; தொழில்பழகு ஆசிரியர்கள் பதவிகளாக அல்ல. மேற்சொன்ன சாதாரண ஆசிரியர் பதவிகளுக்கு நியமனம் செய்யும்பொழுது ஏற்கெனவே தொழில் பழகு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு எடுத்துக் கொண்ட பின்னர், மேற்கொண்டு நிரப்ப வேண்டிய சாதாரண ஆசிரியர் பதவிகளை நிரப்ப அந்தந்தப்பள்ளி நிர்வாகத்தினரே 1970-லோ அதற்கு முன்னரோ ஆசிரியர் பயிற்சி தேர்வில் வெற்றி பெற்றவர்களிலிருந்து தங்களுக்கு விருப்பமானவர்களைத் தேர்ந்தெடுத்து நியமித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு தலைமைக் கல்வி அலுவலரின் கீழும் தற்போது உள்ள தொழில்பயில் ஆசிரியர்கள் அனைவரும் மேற்சொன்ன நடைமுறையின்படி 1971–72-ல் சாதாரண ஆசிரியர் பதவிகளில் நியமனம் பெற்றுவிட்ட பின்னர், 1971–72-ல் இம் மாநிலத்தில் 6,500 தொழில் பழகு ஆசிரியர்களை நியமிக்க அரசு தந்துள்ள ஒப்பளிப்பின்கீழ் ஒவ்வொரு தலைமைக் கல்வி அலுவலரும் தொழில் பழகு ஆசிரியர் பதவிகளைப் பல்வேறு பள்ளிகளுக்கும் ஒதுக்குவார். இவ்வாறு 1971–72-ல் புதிதாக நிரப்புவதற்காகத் தொழில் பழகு ஆசிரியர் பதவிகளைப் பல்வேறு நிர்வாகத்தினர் பள்ளிகளுக்கும், தலைமைக் கல்வி அலுவலர்கள் பகிர்ந்தளித்தபின் அப்பதவிகளை நிரப்ப 1970-லோ அதற்கு முன்னரோ ஆசிரியர் பயிற்சித் தேர்வில் வெற்றிபெற்றவர்களிலிருந்து தங்களுக்கு விருப்பமானவர்களை அந்தந்தப் பள்ளி நிர்வாகத்தினரே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

(vii) எட்டாம் வகுப்பு இறுதியில் பொதுவான வினாத்தாள்கள் தயாரித்தல்.

1970–71-ம் ஆண்டு இறுதித் தேர்விலிருந்து, வருவாய் மாவட்டம் ஒன்றிலும் உள்ள தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் எட்டாம் வகுப்பு ஆண்டுத் தேர்வுக்கு வினாத்தாள்கள் பொதுவான அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. எனினும், விடைத் தாள்கள் அந்தந்த மாணவர்கள் படிக்கும் பள்ளிகளிலேயே திருத்தப்படுகின்றன.

(viii) படிப்பு உதவித் தொகைகள் திட்டம்.

தொழில்நுட்ப புகுமுக வகுப்பு உட்பட கல்லூரியிலும் புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி அளிக்கப்படுவதால் படிப்பு உதவித் தொகைகள் வழங்க வேண்டிய அவசியமில்லை.

எனினும், கல்வித் துறை கீழ்க்காணும் வகுப்பினரைச் சேர்ந்த சிறுர்களுக்குக் கல்விச் சலுகைகளை அளித்து வருகின்றது :—

(1) பர்மா, இலங்கை நாடுகளிலிருந்து வந்த அகதிகள்.
(2) இராணுவப் பணியாளர்.
(3) முன்னாள் இராணுவப் பணியாளர்.

[1971 சூலை 9

அடங்கியவற்றைத் தொடர்ந்து திறனாய்வு செய்தலும், பாடத் திட்டத்தில் குறித்த காலத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்தலும், நமது கல்வி முறையை தற்காலத் தேவைகளுக்கேற்ப கொண்டு வருவதற்கு இன்றியமையாதனவாகும். எனவே, நமது பள்ளிகளில் எல்லாப் பாடங்கள் குறித்தும் பாடத் திட்டங்களை முழுமையாகத் திருத்தியமைக்க அரசு கருதியுள்ளது. இது குறித்து ஆய்வு செய்து, பாடத் திட்டங்களை மாற்றியமைப்பதுபற்றி பரிவுரை செய்ய கல்விக் குழுக்கள் (Academic Committee) அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் சில திங்களில் அவற்றின் பரிவுரைகள் கிடைக்கப் பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஊ. ஆசிரியர்களுக்கான வசதிகள், சலுகைகள்.

### (i) அரசுப் பள்ளி அல்லாத பள்ளியிலுள்ள ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்.

அரசுப் பள்ளிகள் அல்லாத பிற பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்—வருங்கால வைப்பு நிதித் திட்டம்—ஈட்டுறுதித் திட்டம் ஆகிய மூன்று பயன்களும் 1955-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் செயலுக்கு வந்தன. 1955-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளுக்கு முன்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் இத் திட்டம் 1968 மார்ச்சு 1-ம் நாள் முதற்கொண்டு நீட்டிக்கப்பட்டது. ஆசிரியர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையின் குறைந்த அளவு, 1970 மார்ச்சு 1-ம் நாள் முதற்கொண்டு ரூ. 20-லிருந்து ரூ. 30-க்கு உயர்த்தப்பட்டது. ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம், அவர்கள் பணியில் கடைசி 36 திங்கள்களில் பெற்ற ஊதியத்தின் சராசரியைக் கணக்கிட்டு அந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது. ஆனால், 1970 மார்ச்சு 1-ம் நாள் முதற்கொண்டு அவரது பணியில் கடைசி 12 திங்கள்களில் பெற்ற ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் நன்மைகளைப் பெறுவதற்காக ஆசிரியர் ஒருவர் குறைந்த அளவு இருபது ஆண்டுகளாவது பணி புரிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை முன்னர் விதிக்கப்பட்டிருந்தது. குறைந்த அளவு பணிக்கால அளவை 5 ஆண்டுகளாகக் குறைத்து நிபந்தனையைத் தளர்த்தி 1969–70-ல் இத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியத் திட்டம், குடும்ப ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களின் நன்மைகள் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு 1969 ஏப்ரல் திங்கள் முதல் நீட்டிக்கப்பட்டுள்ளன. அரசுப் பள்ளியல்லாத பிற பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் 1970 அக்டோபர் 2-ம் நாள் அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெற்றால் அதே தரத்திலுள்ள அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தக்கூடிய ஓய்வூதியத் திட்டம், குடும்ப ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களின் நன்மைகளைப் பெற அவர்கள் தகுதியுடையவராவர். மேலும், அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தத் தக்க தாராள ஓய்வூதியத் திட்டம் அவர்களுக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டது.



1971 சூலை 9]

### (ii) ஆசிரியர்கள் நலனுக்கான தேசியக் கழகம்.

ஆசிரியர்கள் நலனுக்கான தேசியக் கழக நிதியிலிருந்து, பணியிலுள்ள ஆசிரியர்களுக்கும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும், உதவியளிக்கப்படுகிறது. தகுதியுள்ள ஆசிரியர்களுக்கும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும், இந்த ஆசிரியர்களை நம்பியிருந்த அவர்தம் குடும்பத்தினருக்கும் இக் கழகத்தின் மாநில செயற்குழு திங்கள் தோறும் குறிப்பிட்ட தொகையையும் மொத்தமாக ஒரு தொகையையும் நிதி ஒதுக்கீட்டிலிருந்து அளிக்கிறது.

ஓய்வு பெற்றபின் வசதியற்று வறிய நிலையிலுள்ள ஆசிரியர்களுக்கும், இறந்த ஆசிரியர்களின் மனையருக்கும், அந்த ஆசிரியர்களை நம்பியிருந்த அவர்தம் குடும்பத்தினருக்கும், திங்கள்தோறும் ரூ. 10-லிருந்து ரூ. 100 வரை மாத உதவித் தொகை அளிக்கப்படுகிறது. மருத்துவச் செலவு முதலியவற்றிற்காக, சாதாரணமாக ரூ. 1,000 வரை மொத்த உதவித் தொகை அளிக்கப்படுகிறது. முப்பது ஆண்டுகளுக்குமேல் போற்றத்தக்க பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்குக் கருணைக் கொடையாக ரூ. 1,500 வரை ஒரு மொத்தத் தொகையளிக்கப்பட்டது. முன்னூற்று எண்பத்தெட்டு பேருக்கு மொத்தத் தொகையையும், 442 பேர்களுக்கு திங்கள் தோறும் அளிக்கப்படும் உதவித் தொகையும், இதுவரை அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியின்கீழ் இந்நாள் வரை ரூ. 31.35 லட்சம் வசூலாகியுள்ளது. 1970-ம் ஆண்டு ஆசிரியர் நாள் விழா தொடர்பாக வசூலாகியுள்ள ரூ. 5.01 லட்சமும் இதில் அடங்கும்.

### (iii) ஆசிரியர்கள் இல்லம்.

ஆசிரியர்கள் நலனுக்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் வட ஆர்க்காடு மாவட்ட ஆசிரியர்கள் நலச் சங்கம் ஒன்றை, வட ஆர்க்காடு மாவட்ட ஆசிரியர்கள் அமைத்தனர். ஆசிரியர்கள் இல்லத்தை அமைப்பதற்காக அவர்கள் தாங்களே முன்வந்து அளித்த நன்கொடைத் தொகையைக் கொண்டு வேலூரில் ரூ. 95,000 மதிப்புள்ள கட்டிடம் ஒன்றை வாங்கினர். அதில் நூலகம் ஒன்றும், கலை நிலையம் ஒன்றும், கருத்தரங்கு முதலியன நடத்துவதற்கு அரங்கு ஒன்றும் ஆசிரியர்கள் தங்கி ஓய்வு எடுத்துக் கொள்ளும் வசதியுள்ள அறைகளும், அந்த ஆசிரியரகத்திற்கு இணைப்பாக, ஆசிரியர் கூட்டுறவு அச்சகம் ஒன்றும் உள்ளன. வட ஆர்க்காடு மாவட்ட ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை அரசு பாராட்டி, தற்பொழுதுள்ள கட்டிடத்தை மாற்றியமைக்கவும், நல்ல வசதிகளைச் செய்யவும், கூடுதல் அறைகளைக் கட்டும் பணியை மேற்கொள்ளவும் ரூ. 50,000 தனி மானியம் வழங்கியது. ஏனைய மாவட்டங்களிலும், இத்தகைய ஆசிரியர்களின் கூட்டுறவு முயற்சி வரவேற்கப்பட்டு, அவர்களுக்கு எல்லா உதவிகளும் இயன்ற வரை அளிக்கப்படும்.

### ஊக்க ஊதிய உயர்வு.

இடை நிலைத்தர ஆசிரியர்கள், பி.டி. ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள், தமிழாசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், ஏனைய சிறப்பு ஆசிரியர்கள் தாங்கள் பணிபுரியும் பதவிக்கு

வேண்டிய தகுதிகளைக் காட்டிலும் உயர் கல்வித் தகுதிகளைப் பெற்றால், அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக, 1968 ஜூலை 1-ம் நாள் முதற்கொண்டு இரு ஊதிய உயர்வுகளை முன் கூட்டி அளிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவ்வாறாக, பி.டி. பட்டம் பெற்ற இடைநிலைத்தர ஆசிரியர் ஒருவர் இடைநிலைத் தர சம்பள வீதத்தில் இரண்டு ஊதிய உயர்வுகளை முன்னதாகப் பெறவும், எம்.ஏ. அல்லது எம்.எட். (M.Ed.) பட்டம் பெற்றுள்ள பி.டி. ஆசிரியர் ஒருவர் பி.டி. சம்பள வீதத்தில் இரண்டு ஊதிய உயர்வை முன்னதாகப் பெறவும் தகுதியுடையவராவர்.

(v) ஆசிரியர்களுக்கு அரசு விருதுகள்.

கல்வித் துறையில் ஆசிரியர்களால் செய்யப்படும் சிறந்த பணிகளைப் பாராட்டுவதற்காக, தொடக்கப் பள்ளிகளில் சிறந்த ஆசிரியர்களுக்கு அரசு விருதுகள் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின்கீழ், 45 கல்வி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களுக்கு தகுதிச் சான்றிதழ் ஒன்றும், ரூ. 30 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கமும், ரூ. 200 ரொக்கப் பரிசும் வழங்கப்படுகின்றன. இத் திட்டம் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் 1969–70-லிருந்து நீட்டிக்கப்பட்டுள்ளது. நாற்பத்தைந்து கல்வி மாவட்டங்களில் ஒவ்வொன்றிற்கும் இரண்டு விருதுகள் வீதம் ஒவ்வொரு ஆண்டும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு 90 விருதுகள் வழங்கப்படும்.

(vi) மானியம் பெறும் பள்ளிகள் குறித்த விவரங்கள்.

மானியம் பெறும், தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளின் நிலைமைகள் அனைத்தையும் ஆய்வு செய்வதற்காக, ஆய்வுக் குழு ஒன்றை 1969-ல் அரசு நியமித்தது. 1971 பிப்ரவரியில் அந்தக் குழு தனது அறிக்கையை அரசுக்கு அளித்தது. அந்த அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதற்கிடையில், அரசுப் பள்ளிகளிலும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளிலும் உள்ள ஆசிரியர்களுக்கு நிகராக, மானியப் பள்ளி ஆசிரியர்களைக் கொண்டுவரும் வகையில், அவர்களுக்குப் பல நன்மைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. முன்பே கூறியது போல, 1970 அக்டோபர் 2-ம் நாள் அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறும் மானியப் பள்ளி ஆசிரியர்கள், தாராள ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் அரசுப் பணியாளர்களைப் போல் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது :—

(1) மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களும், அவர்தம் குடும்பத்தினரும் அரசு மருத்துவ மனைகளிலும், மருந்தகங்களிலும் 1970–71-லிருந்து இலவச மருத்துவ வசதி பெறுவார்கள்.

(2) உள்ளாட்சி மன்றப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பொருந்தும் வீதங்களிலேயே, மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு 1970 ஏப்ரல் 1-ம் நாள் முதற்கொண்டு வீட்டு வாடகைப்படி வழங்கவும், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்கு 1970 ஆகஸ்ட் 1-ம் நாள் முதல் வீட்டு வாடகைப்படி வழங்கவும், ஒப்பளிக்கப்பட்டது.



(3) சென்னையிலும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும், மதுரையிலும் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் நகர ஈட்டுப்படி வீதங்களை, மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களும் பெறுகின்றனர்.

(4) மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு கைத்தறித் துணிகள் வாங்குவதற்காக முன் பணமும், பண்டிகை முன் பணமும் அளிக்கப்படுகின்றன. இந்தத் தொகை அவர்களது வருங்கால வைப்பு நிதியில் அவர்கள் கணக்கிலுள்ள தொகையில் 50 சத வீத வரையரைக்குட்பட்டு வழங்கப்படுகிறது.

(5) மானியம் பெறும் பள்ளிகள் அனைத்திலும் உள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும், ஒருவருக்கு ரூ. 500-க்கு மேற்படாமல் திருமணக்கடன் வழங்கவும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இக்கடன் 60 தவணைகளில் திருப்பித் தரத்தக்கதாகும்.

(6) அறிக்கையிடப்பட்ட மலைப் பகுதிகளில் மானியம் பெறும் தொடக்க உயர்நிலைப் பள்ளியாசிரியர்களுக்கு ஓராண்டில் நான்கு திங்கள் வரை (மழைக் கால திங்கள்கள்) குளிர்காலப்படி வழங்கப்படுகிறது.

(7) மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு அவர்களின் ஊதியத்தில் 20 சத வீதம் மலை வாழ் இடப்படி மாதம் ஒன்றுக்கு ரூ. 80 என்ற மேல்வரம்பிற்குட்பட்டு 1970 ஆகஸ்ட் 1-ம் நாள் முதல் வழங்கப்படுகிறது.

(vii) சம்பள வீதத்தை மாற்றியமைத்தல்.

எல்லா வகை நிர்வாகத்தின் கீழுள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் ஆகியோரின் சம்பள வீதங்களை தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகளையொட்டி 1970 அக்டோபர் 2-ம் நாள் முதற்கொண்டு உயர்த்தியது 1970–71-ல் சிறப்பான ஒரு சாதனையாகும். 1970 அக்டோபர் 2-ம் நாளுக்கு முன்பு வழங்கப்பட்ட அகவிலைப்படியின் பெரும்பகுதி மாற்றியமைக்கப்பட்ட இந்த சம்பள வீதத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இது, ஓய்வூதிய பலன்கள் குறித்து கணிசமான அளவிற்குக் கூடுதல் நன்மைகளைப் பெறவும், 1970 அக்டோபர் 2-ம் நாள் முதற்கொண்டு அனுமதிக்கப்பட்ட சம்பளம், அகவிலைப்படி உயர்விற்குக் கூடுதலாக சம்பளத்தின் குறிப்பிட்ட ஒரு சத வீதத்தில் கணக்கிடப்படும். நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி போன்ற படிகளில் உயர்வு பெறுவதற்கும், வகை செய்கிறது. உயர்த்தப்பட்ட சம்பள வீதங்களைச் செயலுக்குக் கொண்டு வந்ததன் விளைவாக, திங்களில் குறைந்த அளவு ஊதிய உயர்வு ஒரு திங்களில் ரூ. 20-லிருந்து ரூ. 100 வரையிருக்கும்.

பள்ளிகளிலுள்ள முக்கியமான பதவித் தரங்கள் குறித்த பழைய சம்பள வீதங்களும் திருத்தியமைக்கப்பட்ட சம்பள வீதங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | 1970-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதிக்கு முன்பு பெற்ற சம்பள வீதமும் சம்பள வீதத்தில் பெற்ற குறைந்த அளவு மொத்த ஊதியமும். ரூ. | 1970-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதியிலிருந்து மாற்றியமைக்கப்பட்ட சம்பள வீதமும் சம்பள வீதத்தில் கொடுக்கத்தக்க குறைந்த அளவு மொத்த ஊதியமும். ரூ. |
|---|---|---|
| 1. ஆரம்ப நிலை (Lower Grade). | 55—1—70 (சம்பளம் 55+ அகவிலைப்படி ரூ. 71+சிறப்பு ஈட்டுப்படி ரூ. 10. மொத்தம் ரூ. 136). | 140—3—155—4—175—5—210. (சம்பளம் ரூ. 140+அகவிலைப்படி ரூ. 15. மொத்தம் ரூ. 155). |
| 2. தொடக்க நிலை .. | ரூ. 65—1—70—2—90. | ரூ. 150—4—170—5—225. |
| (a) சாதாரண நிலை | (சம்பளம் ரூ. 65+அகவிலைப்படி ரூ. 71+சிறப்பு ஈட்டுப்படி ரூ. 10 மொத்தம் ரூ. 146). | (சம்பளம் ரூ. 150+அகவிலைப்படி ரூ. 15 மொத்தம் ரூ. 165). |
| (b) தேர்வு நிலை .. | .. | ரூ. 180—5—260—10—270. |
| 3. இடை நிலைத் தரம்— | ரூ. 90—4—110—3—140. | ரூ. 210—5—245—10—325. |
| (a) சாதாரண நிலை. | (சம்பளம் ரூ. 90+அகவிலைபடி ரூ. 108 மொத்தம் ரூ. 198). | (சம்பளம் ரூ. 210+அகவிலைப்படி ரூ. 15 மொத்தம் ரூ. 225). |
| (b) தேர்வு நிலை .. | .. | ரூ. 250—10—400. (சம்பளம் ரூ. 250+அகவிலைப்படி ரூ. 15 மொத்தம் ரூ. 265). |
| 4. பி. டி. ஆசிரியர்கள்— | | |
| (a) சாதாரண நிலை .. | ரூ. 140—5—180—10—250 (சம்பளம் ரூ. 140+அகவிலைப்படி ரூ. 108 மொத்தம் ரூ. 248). | ரூ. 275—10—375—15—450 (சம்பளம் ரூ. 275+அகவிலைப்படி ரூ. 15 மொத்தம் ரூ. 290). |
| (b) தேர்வு நிலை .. | ரூ. 225—10—275—15—350 (சம்பளம் ரூ. 225+அகவிலைப்படி ரூ. 132 மொத்தம் ரூ. 357). | ரூ. 400—15—475—20—575—25—650 (சம்பளம் ரூ. 400+அகவிலைப்படி ரூ. 30 மொத்தம் ரூ. 430. அரசு பள்ளிகள் அல்லாத பிற பள்ளிகளில் பி. டி. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் தேர்வு நிலை புதியதாகக் கொண்டு வரப்பட்டது). |
| 5. இடை நிலைப் பள்ளி தலைமையாசிரிகள். | (இடை நிலைத்தர சம்பள வீதத்தைப் போன்றதாகும்). | ரூ. 225—5—250—10—350 (சம்பளம் ரூ. 225+அகவிலைப்படி ரூ. 15 மொத்தம் ரூ. 240). |



| | 1970-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதிக்கு முன்பு பெற்ற சம்பள வீதமும் சம்பள வீதத்தில் பெற்ற குறைந்த அளவு மொத்த ஊதியமும். ரூ. | 1970-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதியிலிருந்து மாற்றியமைக்கப்பட்ட சம்பள வீதமும் சம்பள வீதத்தில் கொடுக்கத்தக்க குறைந்த அளவு மொத்த ஊதியமும். ரூ. |
|---|---|---|
| 6. தலைமையாசிரியர்கள்— | | |
| (a) 1,000 மாணவர்களுக்குக் குறைவாயுள்ள உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள். | ரூ. 225—5—250—10—300+சிறப்புச் சம்பளம் ரூ. 20 (சம்பளம் ரூ. 225+சிறப்புச் சம்பளம் ரூ. 20+அகவிலைப்படி ரூ. 132 மொத்தம் ரூ. 377). | ரூ. 450—25—750 (சம்பளம் ரூ. 450+அகவிலைப்படி ரூ. 30 மொத்தம் ரூ. 480). |
| (b) 1,000 மாணவர்களுக்கு மேல் உள்ள உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள். | ரூ. 300—25—800+சிறப்புச் சம்பளம் ரூ. 30 (சம்பளம் ரூ. 300 + சிறப்புச் சம்பளம் ரூ. 30+அகவிலைப்படி ரூ. 132, மொத்தம் ரூ. 462.) | ரூ. 500—25—625—30—745—35—850. (சம்பளம் ரூ. 500+அகவிலைப்படி ரூ. 30, மொத்தம் ரூ. 530). |

அரசுப் பள்ளிகளல்லாத பிற பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு முதன் முறையாகத் தேர்வு நிலைப் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொடக்க நிலைப் பதவிகள், இடைநிலைப் பதவிகள், பி.டி. ஆசிரியர்கள், I-ம் நிலை, II -ம் நிலை தமிழ் வித்துவான்கள், பிற மொழி ஆசிரியர்கள் ஆகியவர்களின் பதவிகளில் 10 சத வீதம் தேர்வு நிலைப் பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. தலைமை ஆசிரியர்கள் உட்பட 4 அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் உள்ள தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் திங்களொன்றுக்கு ரூ. 5 என்ற வீதத்திலும், 300-க்கு மேற்பட்ட மாணவர்களையும், தலைமையாசிரியர் உட்பட 4 ஆசிரியர்களுக்குக் குறையாதவர்களையும் கொண்ட பள்ளிகளைப் பொறுத்த வரையில் திங்களொன்றுக்கு ரூ. 10 என்ற வீதத்திலும் தலைமையாசிரியர்களுக்குப் பணிப்படி (தலைமையாசிரியர் படி) ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அத்தகைய நேர்வில், தலைமை ஆசிரியர் இடைநிலைத்தர ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். மேலும், இடைநிலைத்தர ஆசிரியர்களுக்குப் பொருந்தத்தக்க தேர்வு நிலைத் தரத்தில் அவர் ஏற்கெனவே பணி புரிபவராய் இருக்கக்கூடாது.

நிலை I— பண்டிதர் பதவிகளுக்கு நியமிக்கப்பட முழுதும் தகுதி உடைய நிலை II —தமிழ் வித்துவான்களுக்கு நிலை I -க்கான சம்பள வீதப்படி ஊதியம் வழங்கும் நோக்கத்துடன், நிலை II—வித்துவான்களை I-ம் நிலையில் அமர்த்திக்கொள்வதற்காக, இடைநிலைப் பள்ளி

களிலும் உயர்நிலைப் பள்ளியின் இடைநிலைப் பிரிவுகளிலும் பணி புரியும் 2,000 நிலை II—தமிழ் வித்துவான் பதவிகளை 1970–71-ம் ஆண்டில் 2,000 நிலை I—தமிழ் வித்துவான் பதவிகளாக மாற்றுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

எ. உடற்பயிற்சி கல்வி, போட்டி விளையாட்டுகள், சாரணர் பணிகள்:—தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் உடற்பயிற்சிக் கல்வி கட்டாயப் பாடங்களில் ஒன்றாக உள்ளது. கல்வி நிறுவனங்களில், உடற்பயிற்சிக் கல்வி தலைமை ஆய்வாளரும், உடற்பயிற்சிக் கல்வியில் சிறப்புத் தேர்ச்சிப்பெற்ற பெண் ஒருவரும் இப்பொறுப்பை கவனிக்கின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் குடியரசு நாள் பந்தயங்கள், விளையாட்டுப் போட்டிகள், சிறுவர்களுக்காக, மாவட்ட, கோட்ட, மாநில அளவிலும், பெண்களுக்காக மாவட்ட, மாநில அளவிலும் நடைபெறுகின்றன. குழந்தைகள் அணிவகுப்புகள் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு முறை நடத்தப்படுகின்றன, ஒன்று காலஞ்சென்ற தலைமை அமைச்சர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக நவம்பர் திங்கள் 14-ஆம் நாள் அன்றும், மற்றது குடியரசு நாளைக் கொண்டாடும் விதமாக ஜனவரி 26-ம் நாளன்றும் நடத்தப்படுகிறது.

இந்தியப் பள்ளி விளையாட்டு கூட்டமைப்பு, ஓராண்டில் இரு முறை, இலையுதிர் காலத்திலும், குளிர் காலத்திலும் ஆகப், பந்தயங்களையும் விளையாட்டுகளையும் நடத்துகிறது. இந்தப் பந்தயங்களிலும், விளையாட்டுகளிலும் எல்லா மாநிலங்களும் பங்கெடுத்துக் கொள்கின்றன. மேலே கூறிய போட்டி நிகழ்ச்சிகளில் இம் மாநிலமும் கலந்து கொள்கிறது. 1970–71-ம் ஆண்டு குளிர் காலத்தில் திருவனந்தபுரத்தில் இந்திய பள்ளி விளையாட்டுகள் கூட்டமைப்பால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் இம் மாநிலம் பங்கெடுத்துக் கொண்டது.

பொதுமக்களிடையே போட்டிப் பந்தயங்கள், விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்காக மாநில மாவட்ட அளவிலுள்ள விளையாட்டுக் குழுக்கள் பயனுள்ள பணிகளைச் செய்கின்றன. மாவட்ட, வட்டார, மாநில அளவில் ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் வார விழாவுடன் இணையும் வகையும் முக்கியமாக மாணவர்கள் அல்லாதவர்களுக்காக விளையாட்டுகள், உடற்பயிற்சி போட்டி நடத்துவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

விளையாட்டு அரங்கம் கட்டுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ. 1 லட்சம் மானியமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி, வட ஆர்க்காடு, நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களுக்கு 1970–71-ம் ஆண்டிற்கு முன்பே மானியங்கள் வழங்கப்பட்டன. திருச்சிராப்பள்ளி, வட ஆர்க்காடு, நீலகிரி ஆகிய இடங்களில் விளையாட்டு அரங்கங்கள் கட்டும் பணி ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளது. மதுரை, தென் ஆர்க்காடு ஆகியவற்றிற்கு 1970–71-ம் ஆண்டில் மானியங்கள்





வழங்கப்பட்டன. மேலும் இரண்டு மாவட்டங்களுக்கு இத் திட்டத்தை நீட்டிப்பதற்காக 1971–72-ம் ஆண்டில் ரூ. 2 லட்சம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## ஏ. சிறப்புப் பள்ளிகள்.

1. சிறார் பள்ளிகள் (Pre-Primary Schools) ஐந்து வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்காக சிறார் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இம் மாநிலத்தில் ஏறக்குறைய 42 பள்ளிகள் உள்ளன. அவை பெரும்பாலும் நகர்ப்புற பகுதிகளில் அமைந்துள்ளன. ஊராட்சி ஒன்றியங்களால் கிராமப் புறங்களில் குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்படுகின்றன.

2. பயிற்சிப் பள்ளிகள்.—(1) நூலகம், ஆய்வுக்கூட வசதிகள்.—தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் நூலக ஆய்வுக்கூட வசதிகள், ஏற்படுத்தித்தர ரூ. 1.80 லட்சம் செலவிடப்பட்டது. பள்ளி ஒன்றுக்கு ஆய்வுக்கூடத்துக்காக ரூ. 2,000, நூலகத்திற்காக ரூ. 1,000 என்ற வீதத்தில் இவ்வாறு செலவிடப்பட்டது. 1971–72-ம் ஆண்டிற்கு ரூ. 1,71,000 நிதி ஒதுக்கம் செய்யக் கருதியுள்ளது.

அறிவியல் கல்விக்கான யூனிசெஃப் திட்டத்தின்கீழ் முன்னோடித் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு அடிப்படை நிறுவனமாக இரண்டு பயிற்சிப் பள்ளிகள், அதாவது எழும்பூர் அரசினர் பயிற்சிப் பள்ளியும், கடலூர் அரசு அடிப்படைப் பயிற்சிப் பள்ளியும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

(2) நினைவூட்டுப் பாட முறைகள் முதலியன.—மாவட்ட கல்வி அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் மாநிலக் கல்விப் பயிற்சி நிறுவனத்தால் ஆசிரியர்களுக்காக நினைவூட்டுப் பாடமுறைகள் நடத்தப்படும்.

(iii) தமிழ்நாடு ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் இயக்கம்.—1959-ம் ஆண்டில் இம் மாநிலத்தில் தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் 5-ம் வகுப்பில் ஆங்கிலக் கல்வி கொண்டுவந்தபோது, பிரிட்டிஷ் கவுன்சிலின் ஒத்துழைப்புடன் 5-ம் வகுப்பு ஆங்கில ஆசிரியர்களுக்குப் பணிக்காலப் பயிற்சிக்கான பெருந் திட்டமொன்றை அரசு வகுத்தது. மூன்று வார தொடக்கப் பாட முறைகளில் 3,750 பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு தொகுதிக்கும் 5 முதல் 6 திங்கள் கால அளவில் 40 நாட்களில் தினம் 2 மணி நேரம் மாலை வகுப்புகளில் புதிய முறையில் ஆங்கிலம் போதிப்பதற்கு இடை நிலைத்தர தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தப் பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சி அளித்தனர். 1959–1964-ம் ஆண்டுகளில் மேற்கூறிய திட்டத்தின்கீழ் ஏறக்குறைய 34,700 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 11 ஆண்டு பள்ளிக் கல்வி முறைக்கு ஏற்பளிக்கப்பட்டபோது, 1963–64-ம் ஆண்டு முதற்கொண்டு 3-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கத் தொடங்கப்பட்டது. 3-ம் வகுப்பு முதல் ஆங்கிலம் கற்பிக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்று கூறலாம்.

ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கிலத்தைத் தற்கால புது முறைகளில் கற்பிப்பதற்குத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டதற்கு மேல் நடவடிக்கையாக, 6-வது முதல் 8-வது வரையுள்ள

வகுப்புகளில் ஆங்கிலப் பாடமெடுக்கும் ஆசிரியர்களுக்கு முன்னோடிப் பயிற்சி அளிக்க அரசு அனுமதித்தது. 50 மாலை நேரப் பயிற்சி வகுப்புகளில் மதுரையிலும், சென்னையிலும் இம் மாநிலத்தின் தேர்ந் தெடுக்கப்பட்ட பிற இடங்களிலும் இப் பயிற்சி நடத்தப்பட்டது. 6, 7, 8 வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் 1,000 ஆசிரியர்களுக்கு இவ்வாறு பயிற்சியளிக்கப்பட்டது. சிறப்பாகக் கிராமப்புறப் பகுதி களில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாலை நேரப் பயிற்சி அளிப்பதில் சிரமங்கள் உள்ளன. முறையான 4 வார மும்முரப் பயிற்சியினைத் தங்கியிருந்து பெறும் வகையில், 6, 7, 8 வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக இம் மாநிலத்தில் ஆங்கில மொழிப் பயிற்சி நிலையங்கள் நான்கு தொடங்கப்பட்டன. ஒவ்வொரு நிலையத்திலும் மூன்று நெறிமுறை ஆசிரியர்கள் ( Tutors ) உள்ளனர். அவர்கள் பெங்களூர் தென் இந்திய வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களாவர். தலைமையிடத்தில் உள்ள சிறப்பு அதிகாரி ஒருவர் இந்தப் பயிற்சி நிலையங்களுக்கு நிர்வாக, தொழில் நுட்ப ஒத்துழைப்பை அளிக்கிறார். தமிழ் நாடு ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் நிலையங்களின் பணிகளையும் பெங்களூர், தென் இந்திய வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தின் பணிகளையும் இவர் ஒருங்கிணைக்கிறார். மேலும் அந்த அதிகாரி பிரிட்டிஷ் கவுன்சில் நிதி உதவித் திட்டத்தின்கீழ் இங்கிலாந்திலுள்ள ரீடிங் பல்கலைக் கழகத்தில் (University of Reading) பயிற்சி பெற்றுள்ளார். இந்த நான்கு நிலையங்களும் (1) அரசு அடிப்படைப் பயிற்சிப் பள்ளி (ஆண்கள்), கடலூர்; (2) அரசு அடிப்படைப் பயிற்சிப் பள்ளி (ஆண்கள்), தஞ்சாவூர்; (3) நகராட்சி உயர்நிலைப்பள்ளி, ஆர். எஸ். புரம், கோயம்பத்தூர்; (4) பிஷப் சார்ஜன்ட் அடிப்படைப் பயிற்சிப் பள்ளி, பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

இந்த நான்கு நிலையங்களில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை 1967–68-ல் 764, 1968–69-ல் 1,383, 1969–70-ல் 1,319, 1970–71-ல் 1,511 ஆக மொத்தம் 4,977 ஆகும்.

இந்த நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியைத் தொடர்ந்து செய்ய வேண்டிய வேலைகளைச் செவ்வனே செய்வதற்காகக் கீழ்க் கண்ட நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது :—

## தென் இந்திய வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் துணை ஆய்வாளர்களுக்கு மறு பயிற்சி அளித்தல்.

தொடக்க அளவில் கல்வித் தரத்தை உயர்த்துவதில் துணை ஆய்வாளர்கள் முக்கிய பங்கு வகிப்பதால், படிப்படியான திட்டத்தின் கீழ் மூன்று வாரங்களுக்குத் தென் இந்திய வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி அளிக்க, துணை ஆய்வாளர்கள் மறுபயிற்சித் திட்டம் ஒன்றிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சுமார் 142 துணை ஆய்வாளர்கள் ஏற்கெனவே மேற்கூறிய பயிற்சி பெற்றுள்ளனர். மீதியுள்ள துணை ஆய்வாளர்களுக்கும் அடுத்துவரும் ஆண்டுகளில் பயிற்சி அளிக்கப்படும். மேற்கூறிய திட்டத்தை நிறைவேற்ற மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் ஆகும் என்று உணரப்பட்டதால், எல்லாத் துணை ஆய்வாளர்களுக்கும் 1970–71-ல் ஆங்கிலக் கல்வியைப் புதிய



முறையில் கற்பிப்பதில் பயிற்சி அளிப்பதற்காக மூன்று நாள் மறு பயிற்சித் திட்டத்தைக் கல்வித்துறை வகுத்தது. மாநிலக் கல்வி நிறுவனம், வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவன பணியாளர்கள், இயக்கப் பணியாளர்கள் ஆகியோருடைய உதவியுடன் அத்தகைய 10 கருத்தரங்குகளை நடத்தியது. தென்னிந்திய வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி பெறாத துணை ஆய்வாளர்களும், இளநிலைத் துணை ஆய்வாளர்களும் மேற்கூறிய விரைவுத் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டனர்.

## கையேடுகளை வெளியிடுதல்.

பல வகுப்புகளுக்கு ஆங்கிலத்தில் ஆசிரியர் கையேடுகள் அச்சடிக் கப்பட்டு, அடக்க விலையில் பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

## பயிற்சிப் பள்ளிகளில் பணி.

புதிய முறையில் ஆங்கிலம் கற்பிப்பதற்கு பயிற்சிப் பள்ளிகளின் புதிய தொகுதி மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, 5 திங்கள் கால அளவு தென் இந்திய வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி பெறுவதற்காகப் பயிற்சிப் பள்ளிகளின் பட்டதாரி ஆசிரியர்களை முகமையில் அனுப்ப அரசு ஒப்பளிப்பு வழங்கியது. மேற் கூறிய பயிற்சியில் இதுவரை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 176 பேர் ஆவர். வருங்காலத்தில் மேலும் பலர் இவ்வாறு பயிற்சி பெறுவர்.

## சமாதனத் தொண்டர் படையின் பங்கு.

பயிற்சிப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிப்பதற்காக அமெரிக்க சமாதானத் தொண்டர் படையினரின் பணியும் பயன்படுத்தப் பட்டுள்ளது. தொண்டர் படையில் அடுத்தடுத்து பல தொகுதியினர் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சிப் பள்ளிகளில், அடிப் படைப் பயிற்சி பள்ளி மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் முறைகளை கற்றுத் தரும் பணி புரிந்து வருகின்றனர். 1968-ம் ஆண்டி லிருந்து தொடக்கப் பள்ளி ஆசிரியர்களிடையே வளர்ச்சிப் பணியை யும் இவர்கள் செய்துவந்துள்ளனர். இம் மாநிலத்தில் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் 25 தொண்டர்கள் பணி புரிகின்றனர்.

## உயர்நிலைப் பள்ளி அளவில் பயிற்சி.

உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும், அரசிதழ்ப் பதிவு பெற்ற ஆய்வு அதிகாரிகளுக்கும் கூட மறுபயிற்சிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. இதுவரை 28 கருத்தரங்குகள் நடத்தப் பட்டுள்ளன. ஏறக்குறைய 1,300 தலைமை ஆசிரியர்களும், அரசிதழ் பதிவுபெற்ற ஆய்வு அதிகாரிகளும் இக்கருத்தரங்குகளுக்கு வந்திருந் தனர்.

வருங்காலத்திற்கான திட்டங்கள்.

3 முதல் 5 வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் கல்வித் துறைக் கையேடுகளைச் செவ்விய வகையில் பயன்படுத்தச் செய்வதை முக்கியமாகக்கொண்டு, 1971–72-ம் ஆண்டில் 15 கருத்தரங்குகள் பயிற்சி வகுப்புகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1971–72-ம் ஆண்டில் பிற திட்டங்களும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

(iv) எம். எட். பயிற்சிக்காகப் பள்ளி ஆசிரியர்களை முகமையில் அனுப்புதல்.

பயிற்சிப் பள்ளிகளில் கற்பிக்கும் தரத்தை உயர்த்தும் நோக்கத் துடனும், அரசுப் பணியிலுள்ள பள்ளி ஆசிரியர்கள், துணை ஆய்வாளர் கள் ஆகியோர் தங்கள் கல்வித் தகுதிகளை உயர்த்திக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் நோக்கத்துடனும், 1970–71-ம் ஆண்டில் எம். எட். பயிற்சி பெறுவதற்காக 10 பள்ளி ஆசிரியர்களை பள்ளித் துணை ஆய்வாளர்களை அரசு தன் செலவில் முகமையில் அனுப்பியுள்ளது. இத்திட்டம் 1971–72-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்படும்.

(v) தொடக்க நிலைப் பயிற்சியை நீக்குதல்.

5. சிறுர் பள்ளிகள், ஆங்கில இந்தியப் பயிற்சிப் பள்ளி ஒன்றைத் தவிர இம் மாநிலத்தில் 133 பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இவை களுள் 75 அரசுப் பயிற்சிப் பள்ளிகளாகும். 58 மானியம் பெறும் பயிற்சிப் பள்ளிகளாகும்.

எட்டாம் வகுப்பு முடித்தவர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட தொடக்கநிலை/இளநிலை ஆதார ஆசிரியர் பயிற்சி முறைகள் நீக்கப் பட்டுள்ளன. 1969–70-லிருந்து அவ்வகுப்புகளில் எவரும் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. பயிற்சியும், தகுதியும் பெற்ற ஆசிரியர் களிடையே, வேலை வாய்ப்பின்மை நிலவுவதன் காரணமாக, பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. 1970-71-ம் ஆண்டில் 200 பிரிவுகளே செயல் பட ஒப்பளிக்கப்பட்டுள்ளன. 1971–72-ல் இது 160 பிரிவுகளாகக் குறைக்கப்படும்.

3. உடல் ஊனமுற்றோர், கண் பார்வையற்றோர், குறைபாடுற்றோர் ஆகியோர்களுக்கான பள்ளிகள்.

இம்மாநிலத்தில், உடல் ஊன முற்ற குழந்தைகளுக்காக 24 பள்ளிகள் உள்ளன. கண் பார்வையற்றவர்களுக்காக 8-ம், காது கேளாதோர்களுக்காக 9-ம், கண் பார்வையற்ற-காது கேட்காத சிறுவர்களுக்காக 2 பள்ளிகளும், இளம் பிள்ளைவாதமுள்ள சிறுவர் களுக்காக ஒரு பள்ளியும், தொழு நோயால் பீடிக்கப்பட்ட குழந்தை களுக்காக 4 பள்ளிகளும் உள்ளன.

1969–70-ல் கண்பார்வை அற்றவர்களுக்கென சிவகங்கையில் ஒரு பள்ளி தொடங்கப்பட்டது. 1970–71-ல் கண்பார்வை அற்றவர்களுக் கான ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் பூவிருந்தவல்லியில் உள்ள வட்டாரப் பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டன.



கண்பார்வையற்றவர்களுக்குத் தொழில் பிரிவுகளில், வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் சாத்தியக் கூற்றினை ஆய்வு செய்வதற்காக, கிண்டி தொழிற்பேட்டை யில் சிறு ரக பொறியியல் தொழிற்சாலையொன்று Light Engineering Projects) அமைக்கப்பட்டுள்ளது. இது வரை கண்பார்வை யற்ற 103 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

நான்கு தென் மாநிலங்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, கண் பார்வையற்றோர் எழுத்துமுறை வட்டார அச்சகம் ஒன்று பூவிருந்தவல்லியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அச்சகம் கண் பார்வையற்றோருக்கான பாடப் புத்தகங்களை அச்சடிக்கும் பணியை மேற்கொண்டு தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய வட்டார மொழிகளில் வெளியிடுகின்றது. இதற்காகும் செலவை இந்திய அரசும், நான்கு தென் மாநிலங்களும் சரிசமமாகப் பகிர்ந்துகொள்கின்றன.

கண் பார்வையற்ற மாணவர்களுக்குப் பாடம் கற்பிப்பதற்கான ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக, நான்கு தென் மாநிலங் களுக்கு உதவி செய்யும் பொருட்டு இந்திய அரசு, தமிழ் நாட்டில் 4-வது வட்டாரப் பயிற்சி நிலையமொன்றை நிறுவ ஒப்பளித்துள்ளது. 1969–70-ல் 7 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது 7 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

4. புகுமுகத் தொழில் பயிற்சி நிலையங்கள்.

தொடக்க நிலைக்குமேல் தொடர்ந்து படிக்காத 11–14 வயதுள்ள சிறுவர்களுக்கு, இந்நிலையங்களில் கல்வி–தொழில் பற்றிய பயிற்சி ஒருங்கிணைந்த முறையில் அளிக்கப்படுகின்றது. இது மத்திய அரசின் ஆதரவு பெற்ற திட்டமாகும். இம்மாநிலத்தில், கீழே குறிப்பிட் டுள்ள இடங்களில் 6 நிலையங்கள் உள்ளன. அவை பல திறப்பட்ட பாடமுறைகளைக் கற்பிக்கின்றன.

1. ஆதாரப் பள்ளிக்கு மேம்பட்ட பள்ளி (Post-Basic School) T. கல்லுப்பட்டி.

2. அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி.

3. K.V. உயர்நிலைப் பள்ளி, விருதுநகர்.

4. நகராட்சி உயர்நிலைப் பள்ளி, கோயம்புத்தூர், வட பகுதி.

5. டாக்டர் அழகப்பா மாதிரி உயர்நிலைப் பள்ளி, காரைக்குடி.

6. அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளி, பட்டுக்கோட்டை (1970–71-ல் தொடங்கப்பட்டது).

ஒவ்வொரு நிலையத்திலும், ஆண்டொன்றுக்கு பயிற்சிக்காக 45 பேர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். பயிற்சிக் கால அளவு மூன்றுண்டு களாகும். 1968–69-ல் 264 பேர்களும், 1969–70-ல் 210 பேர்களும், 1970–71-ல் 270 பேர்களும் பயிற்சிக்காகச் சேர்த்துக்கொள்ளப் பட்டனர்.

## 5. முதியோர் கல்வி நிலையங்கள்.

1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 31.4 சதவீதம் ஆகும். 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி இது 39.39 சதவீதமாகும். (1971-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி எழுதப் படிக்கத் தெரிந்தவர்களில் ஆண்கள் 51.68 சதவீதமென்றும், பெண்கள் 26.83 சதவீதமென்றும் தெரியவருகின்றது.) எழுத்தறிவின்மையைப் போக்குவதற்காக, பல ஆண்டுகளுக்கு முன்னரே, கிராமப்புறங்களில் முதியோர்களுக்கென்று தனியாகப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. தற்போது, இத்தகைய முதியோர் கல்வி சாதாரண நிலையங்கள் 257 உள்ளன.

முதியோர் கல்விச் சிறப்புத் திட்டத்தின்கீழ், 1969–70-ல் 499 முதியோர் கல்வி நிலையங்களில் 10,000 பேர் சேர்க்கப்பட்டனர். ஒவ்வொரு நிலையத்திலும் வகுப்புகள் 4 மாதங்கள் நடத்தப்பட்டன. கிராமப் புறங்களில், கீழே குறிப்பிட்டுள்ள குடியானவர் கல்வி மற்றும் தொழில் எழுத்தறிவுத் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப் பட்டதன் காரணமாக, அச் சிறப்புத் திட்டம் 1969–70-க்குப் பிறகு கைவிடப்பட்டது.

இந்திய அரசு, "யுனெஸ்கோ", "உணவு வேளாண்மை நிறுவனம்" ஆகியவற்றின் உதவியுடன், 1969–70-ல், கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் குடியானவர் கல்வி மற்றும் தொழில் எழுத்தறிவுத் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. அப் பகுதியில் மிகுபயன் தரும் பயிர் விளைச்சல் திட்டத்தில் பங்கு பெறும் குடியானவர்களுக்கு, 60 நிலையங்களில் திட்டத்தின் செயல்முறைகள் கற்பிக்கப்பட்டு வந்தன. இத்தகைய பயிற்சி முறை இதே பகுதியில் 1969 நவம்பர் திங்களில் மீண்டும் நடத்தப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள 60 நிலையங்களுக்காக மூன்றுவது பிரிவு வகுப்புகள் 12 மாத கால அளவுக்கு நடத்துவதற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் தஞ்சாவூர், வட ஆர்க்காடு, திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது. இந்த மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 60 கல்வி நிலையங்கள் உள்ளன.

## 6. குழந்தைகள் இல்லம் (அனாதை இல்லம்).

அனாதை இல்லங்களாக இயங்கி, அங்கு தங்கியிருப்பவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்குப் போதிய வசதிகள் செய்துதரும் நிறுவனங்களுக்கு, மாநில நிதிகளிலிருந்து உதவியளிக்கப்படுகின்றது. அந்த அனாதை இல்லத்தில் உள்ளவர்களில் 50 சத வீதத்தினர் இம் மாநிலத்தைச் சேர்ந்த ஆதரவற்றோர் எனச் சான்றளிக்கப்பட்டிருப்பவர்களாகவும், ஏற்பு பெற்ற பள்ளிகளில் படிப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதே இந்த உதவி பெறுவதற்குள்ள நிபந்தனையாகும். அனாதை இல்லங்களில் தங்கியிருப்பவர்களில் 5–20 வயது வரை உள்ள ஒவ்வொருவருக்கும் மாதத்திற்கு ரூ. 12-க்கு மிகாத தொகை, குன்றுப் பகுதிகளில் உள்ள அனாதை இல்லங்களில் ஒவ்வொருவருக்கும் ரூ. 15-க்கு மிகாத தொகை, அல்லது அனாதை இல்லங்களுக்காகும் மொத்தச் செலவில் ¾ பங்கு, இவற்றில் எது குறைவாக உள்ளதோ, அத்தொகை என்ற மேல் வரம்புக்குட்பட்டு மானியம் வழங்கப்படும்.



வாழ்க்கைச் செலவு அதிகரித்ததன் காரணமாக, 1969 அக்டோபர் திங்கள் 1-ம் தேதியிலிருந்து அனாதை இல்லங்களுக்கு வழங்கப்படும் உணவு மானியத்தொகை நபர் ஒருவருக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 10-லிருந்து ரூ. 12-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## ஐ. நூலகங்கள்.

தமிழ்நாடு 1948-ம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தின் விதித் துறைகள், அதன்கீழ்ச் செய்யப்பட்டுள்ள விதிகள் ஆகியவற்றின்படி நிறுவப்பட்ட மாவட்ட நூலக அதிகார மன்றங்கள், மாவட்டத் தலைமையிடங்களில், மாவட்ட மத்திய நூலகம் ஒன்றும், 5,000-க்கு மேல் மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு நகரம் அல்லது பகுதியில் கிளை நூலகம் ஒன்றும், 1,000 முதல் 5,000 வரை மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு கிராமம் அல்லது பகுதியிலும் அல்லது அடுத்துள்ள மூன்று கிராமங்கள் சேர்ந்த தொகுதிக்கு அதாவது 1,000-க்குக் குறைவாக மக்கள் தொகை உள்ள பகுதிகளிலும் புத்தகம் வழங்கும் நிலையம் ஒன்றும் தொடங்குவதன் மூலம், பொது மக்களுக்கு இலவச நூலக வசதிகளை அளிக்கின்றன.

மாவட்ட மத்திய நூலகங்கள் 12, கிளை நூலகங்கள் 1,430, புத்தகம் வழங்கும் நிலையங்கள் 2,149 ஆகியவற்றுடன் 12 மாவட்ட நூலக அதிகார மன்றங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. 1,430 கிளை நூலகங்களில், 589 நூலகங்கள், II,III,IV ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ்த் தொடங்கப்பட்டுள்ளன. 841 நூலகங்கள் நூலக வரி நிதியிலிருந்து ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிளை நூலகங்களையும், புத்தகம் வழங்கும் நிலையங்களையும் தொடங்குவதோடுகூட, மாவட்டங்களில் நூலகப் பணியை விரிவு படுத்துவதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில சிறப்புத் திட்டங்களையும் மாவட்ட நூலக அதிகார மன்றங்கள் கொண்டுவந்துள்ளன :

1. இயல் நூலகப் பணி.
2. வீட்டிற்குப் புத்தகங்கள் வழங்குதல்.
3. குழந்தைகளுக்கும், மகளிர்க்கும் நூலகப் பணி.
4. சிருலாப் பயணிகளுக்கு நூலகப் பணி.
5. சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்கு நூலகப் பணி.
6. காவல்துறை அதிகாரிகளுக்கு நூலகப் பணி.
7. மருத்துவ மனைகளில் நூலகப் பணி.

நூலக நிதியின் பெரும்பகுதி, வீட்டுவரி அல்லது சொத்துவரி ஆகியவற்றின் மீது ரூபாய்க்கு மூன்று காசு வீதம் விதிக்கப்படும் மேல் கட்டணத்தின் மூலம் வசூலிக்கப்படுகின்றது. புத்தகங்களைக் குறித்த காலத்தில் திருப்பித்தரத் தவறியவர்களிடமிருந்தும், புத்தகங்களைத் தொலைத்து விட்டவர்களிடமிருந்தும் வசூலிக்கப்படும் அபராதத் தொகையும், பழைய செய்தித்தாள்களையும், ஏனைய பழைய ஏடுகளையும் விற்றுவரும் தொகையும் இந் நிதியில் சேர்க்கப்படுகின்றன. வசூலிக்கப்பட்ட வரித் தொகைக்கு நிகரான தொகையுள்ள மானியம் ஒன்றைச் சென்னையில் உள்ள மாவட்ட நூலக அதிகார மன்றம்

தவிர்த்து ஏனைய மாவட்ட நூலக அதிகார மன்றங்களுக்கு அரசு வழங்குகிறது. இதைத் தவிர, திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட நூலகங்களுக்கு ஏற்படும் தொடர் செலவுகளுக்கு (நூலகர், ஏவலாள் ஆகியோர்க்கு ஊதியம், நூலக வாடகை, அஞ்சல் செலவு) அரசு மானியம் வழங்குகின்றது. இந்த நூலகங்கள் புத்தகங்கள் வாங்குவதற்காக அதிக நிதியைச் செலவிட வசதி செய்வதுபற்றி அரசு ஆலோசித்து வருகின்றது.

மாவட்ட நூலக அதிகார மன்றங்களால் தொடங்கப்பட்ட நூலகங்களைத் தவிர, ஊராட்சிகள், கிராம சங்கங்கள், தனியார் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், நகராட்சிகள் போன்ற பல்வேறு நிர்வாகங்களின் கீழ்ச் செயல்படும் நூலகங்களும் உள்ளன. நகராட்சி நிர்வாகத்தின் கீழுள்ள நூலகங்களைத் தவிர, ஏனைய நிர்வாகங்களின் கீழுள்ள நூலகங்களுக்கு, ஒவ்வோராண்டும், மாநில நிதியிலிருந்து மானியம் வழங்கப்படுகின்றது.

## குழந்தை இலக்கிய நூல்களை வெளியிடுதல்.

தமிழ் மொழியில், குழந்தைகளுக்கான நூல்களில் சிறந்த நூலுக்குப் பரிசு வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப் படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் ரூ. 500-க்கு மிகாமல் 10 பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதைத் தவிர, "குழந்தைகள் இலக்கியப் போட்டிகள்" நடத்துவதற்கான திட்டம் ஒன்றை இந்திய அரசு தொடங்கியுள்ளது. தமிழ் மொழியில் சிறந்த நூலுக்கு ரூ. 1,000 ரொக்கப் பரிசு வழங்கப்படுகின்றது.

## ஓ. அரசுத் தேர்வுகள்.

அரசினர் தேர்வுகளுக்கான ஆணையாளரின் செயல் நடவடிக்கைகள்.—அரசுத் தேர்வுகள் நடத்துவதும், முடிவுகளை வெளியிடுவதும், சான்றிதழ்களை அனுப்பிவைப்பதும் இத் துறையின் முக்கிய செயல் நடவடிக்கைகளாகும். ஒவ்வோராண்டும், அரசுத் தேர்வுகள் 22 நடத்தப்படுகின்றன. அவற்றில் சில தேர்வுகள் ஆண்டிற்கு ஒருமுறையும், வேறு சில தேர்வுகள் ஆண்டிற்கு இரு முறையும், நடத்தப்படுகின்றன. இவைகளில், ஒவ்வோராண்டும் மார்ச் திங்களில் நடைபெறும் பள்ளி இறுதி பொதுத் தேர்வில் மட்டும் சுமார் 1,000-க்கும் மேலான தேர்வு நிலையங்களில் 2 லட்சம் மாணவர்கள் கலந்துகொள்கின்றனர்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தேர்வுகளிலும், அரசினர் தொழில் நுட்பத் தேர்வுகளிலும் ஆயிரக் கணக்கான மாணவர்கள் கலந்து கொள்கின்றனர்.

1970 ஏப்ரலில் நடந்த பள்ளி இறுதிப் பொதுத் தேர்வில் கலந்து கொண்ட மாணவர்கள் எண்ணிக்கை 1,91,853; தேறியவர்கள் எண்ணிக்கை 1,03,974. 1971 ஏப்ரலில் பள்ளி இறுதிப் பொதுத் தேர்வில் கலந்து கொண்டோர் எண்ணிக்கை 1,93,059; தேறியோர் எண்ணிக்கை 1,11,823. 1969–70-ல் 56 ஆகவிருந்த தேறியோர் சதவீதம் 1970–71-ல் 59.21 ஆக உயர்ந்தது.



# அத்தியாயம்

## கல்லூரிக் கல்வி.

### 1971–72 வரவு-செலவுத் திட்டம் (நிதி ஒதுக்கீடு.)

கல்விக்கென 1971–72-ம் ஆண்டில் "28. கல்வி" என்னும் கணக்கில் மொத்தமாகச் செலவிடப்படும் ரூ. 81.84 லட்சத்தில், கல்லூரிக் கல்விக்கென ரூ. 659 லட்சம் செலவு செய்யப்படும். இம் மாநிலத்தில், கல்விக்கான மொத்தச் செலவில் ஏறத்தாழ பாதித் தொகை தொடக்கக் கல்விக்கும், சுமார் மூன்றில் ஒரு பகுதி இடைநிலைக் கல்விக்கும் செலவிடப்படுகையில் (தொழிற் கல்வி நீங்கலாக) கல்லூரிக் கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை கல்விக்கான மொத்தச் செலவில் 8 விழுக்காடு ஆகும். "28. கல்வி" என்ற கணக்கில் அல்லாது பிற கணக்குகளின்கீழ் கல்வி நிலையக் கட்டடங்கள் போன்ற இனங்களுக்காகச் செலவிடப்படும் தொகைகளையும் சேர்த்துக்கொண்டால் கல்லூரிக் கல்விக்கான செலவு சுமார் 10 விழுக்காடு ஆகும்.

1971–72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கல்லூரிக் கல்விக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் விவரங்களைக் கீழே காணலாம் :—

| | 1970–71 திருத்த மதிப்பீடு. | 1971–72 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்). | |
| 28. கல்வி .. .. .. .. | 555·95 | 658·88 |
| 50. பொதுப் பணிகள்—(தொழிற் கல்வி நீங்கிய பொதுக் கல்வி]. | 0·74 | 0·91 |
| 52. பொதுப் பணிகளின் மேலான மூலதன முதலீடு. | 2·46 | 2·15 |
| 103. மூலதன முதலீடு .. .. | 126·38 | 174·86 |
| 47. மாநில அரசுக் கடன் .. .. | 47·78 | 53.50 |
| 39. பலவகை .. .. .. .. | 0·07 | 0·07 |
| மொத்தம் .. | 736·38 | 890·34 |

கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பல்வேறு கல்வித் திட்டங்களுக்காக இத்தொகை எங்ஙனம் செலவிடப்படுகிறது என்னும் முழு விவரங்களைக் கீழ்க்காணும் புள்ளிவிவரங்கள் காட்டும் ;—

| | 1970–71 திருத்த மதிப்பீடு. | 1971–72 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்). | |
| 1 நிர்வாகமும், மேற்பார்வையும் .. | 4.79 | 5·40 |
| 2 பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் | 61·58 | 58.66 |
| 3 அரசுக் கல்லூரிகளைப் பேணுதல் .. | 299·32 | 397·42 |
| 4 அரசுத் தொழில் கல்லூரிகளைப் பேணுதல் | 35·20 | 34·29 |

[1971 சூலை 9

| | 1970–71, திருத்த மதிப்பீடு. | 1971–72, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 5 தனியார் தொழில் கல்லூரிகளுக்கு வழங்படும் மானியங்கள். | 247·00 | 302·78 |
| 6 தனியார் தொழில் கல்லூரிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள். | 8·78 | 9·82 |
| 7 படிப்புதவிச் சம்பளம் .. .. | 71·14 | 79·83 |
| 8 பலவகை .. .. .. .. | 8·57 | 2·14 |
| மொத்தம் .. | 736·38 | 890·34 |

## 2. திட்டக் குறிக்கோள் அளவுகள்.

1969–70 கல்வியாண்டு முடிவில், இம் மாநிலத்தில் மொத்தம் 141 கலை-அறிவியல் கல்லூரிகள் (39 அரசுக் கல்லூரிகள், 102 மானியம் பெறும் கல்லூரிகள்) இருந்தன. 1970–71-ஆம் ஆண்டில், திருவாரூர், செங்கற்பட்டு, திருத்தணி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் நான்கு புதிய அரசுக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. இவற்றுடன், 1970–71-ல் தொடங்கப்பட்ட 15 தனியார் கல்லூரிகளுக்கு, அரசு நிதியிலிருந்து மானியம் கொடுக்கப்பட்டது. 1970–71 முடிவில் இம் மாநிலத்திலுள்ள கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை (43 அரசுக் கல்லூரிகள், 118 மானியம் பெறும் கல்லூரிகள் சேர்ந்து) 161 ஆக உயர்ந்தது.

இந்நான்கு புதிய அரசுக் கல்லூரிகளைத் தவிர, அரசினர் கல்லூரிகளில் பட்டப் படிப்பையும், பட்ட மேற்படிப்பையும் விரிவுபடுத்துவதற்காகவும், 1970–71-ஆம் ஆண்டில் கூடுதலான தொகை ஒதுக்கப்பட்டது. இவ்வகையில் 1970–71-ல் ஒன்பது அரசுக் கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புகள் தொடங்கப்பட்டன. 2 அரசுக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்புப் பாட முறைகள் தொடங்கப்பட்டன. பல்வேறு படிப்புத் துறைகளின் மேலும் பல பட்டப் படிப்பு வகுப்புகளையும், பட்ட மேற்படிப்பு வகுப்புகளையும் தொடங்குவதற்கு 1971–72-லும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. கல்லூரிகளில் பயிற்று மொழி குறித்து டாக்டர் ஏ. எல். முதலியார் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டதன் விளைவாக, ஆங்கிலப் பயிற்று மொழியில் ஏற்படுத்தவிருக்கும் புதிய பிரிவுகளுக்குக் கூடுதலாக இப்புதிய வகுப்புகள் தொடங்கப்படும். இம் மாநிலத்திலே, கலைக் கல்லூரிகளிலும், அறிவியல் கல்லூரிகளிலும், 1969–70-ம் ஆண்டில் படித்து வந்த மாணவர்களின் எண்ணிக்கை 1.5 லட்சமாக இருந்தது, 1970–71-ம் ஆண்டில் 1.63 லட்சமாக உயர்ந்தது.

நான்கு புதிய அரசினர் கலைக் கல்லூரிகளைத் தொடங்க 1971–72-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. கல்லூரிகள் தொடங்குவதற்கென பொது மக்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நன்கொடைத் தொகை திரட்டப்பட்டு, சம்பந்தப்



1971 சூலை 9]

பட்ட பல்கலைக் கழகங்கள் இக் கல்லூரிகளுக்கு இணைப்பு வழங்கினால், இப் புதிய அரசுக் கல்லூரிகள் தொடங்கப்படும். தனியார் நிர்வாகத்தின்கீழ் துவக்கப்படவிருக்கும் 9 புதிய கல்லூரிகளுக்கு அரசு மானிய உதவி அளிக்கவும் வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இம் மாநிலத்தில் கல்லூரிக் கல்வியை விரிவு படுத்தும் பணியின் ஒரு பகுதியாக, அரசுக் கல்லூரிகளுக்காக மாணவர் விடுதிகள், நிலையான கூடுதல் கட்டிடங்கள், ஆகியவை கட்டுவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மாணவர் விடுதிகளுக்காக நிலையான கட்டிடங்கள் கட்ட வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 22 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்லூரிகளுக்காக புதிய கட்டிடங்கள் அல்லது கூடுதலாக நிலையான கட்டிடங்கள் கட்ட ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் அரசுக் கல்லூரிக் கட்டிடங்களுக்காக ரூ. 45 லட்சமும், தனியார் கல்லூரிகளின் கட்டிடங்கள் குறித்து உதவி மானியங்கள் வழங்க ரூ. 5 லட்சமும் செலவிடப்படும். மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் அனைத்தும் புதிய கட்டட வேலைகளுக்காகவே செய்யப்பட்டுள்ளன. முந்திய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கட்டட வேலைகளை 1971–72-ல் தொடர்ந்து செய்யத் தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 1971–72-ல் அரசுக் கல்லூரிகளின் கட்டட வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை சுமார் 178 லட்சமாகும்.

இந்தக் கலை-அறிவியல் கல்லூரிகளைத் தவிர, கீழ்த்திசைக் கல்லூரிகள், உடற்பயிற்சிக் கல்விக் கல்லூரிகள், கிராமக் கல்வி நிலையங்கள் உட்பட, இம் மாநிலத்தில் உயர் கல்விக்காக 26 சிறப்பு நிலையங்கள் உள்ளன. 1970–71-ஆம் ஆண்டில் இந்த நிலையங்களின் எண்ணிக்கை அதிகப்படவில்லை. 1971–72-ஆம் ஆண்டில் இவ்வகை நிலையங்களைப் புதிதாகத் தொடங்கும் திட்டம் எதுவுமில்லை.

1970–71-ஆம் ஆண்டில் இம் மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கையில் மாற்றமேதுமில்லை. தற்போது செயல்பட்டுவரும் 23 பயிற்சிக் கல்லூரிகளும் (அரசுக் கல்லூரிகள் 7, மானியம் பெறும் கல்லூரிகள் 16) தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையங்களில் 1969–70-ல் 2,792 பேரும் 1970–71-ல் 2,882 பேரும் பயிற்சி பெற்றனர்.

வேலையில் உள்ளவர்கள் தங்கள் வேலையில் ஏற்றம் பெறுவதற்காகக் கல்லூரிக் கல்வி பயில விரும்பினால், அவர்களின் வசதிக்காக 1965–66-ஆம் ஆண்டில் பல்வேறு கல்லூரிகளில் (அரசுக் கல்லூரிகளிலும் மானியம் பெறும் கல்லூரிகளிலும்) கலை, அறிவியல் பாட முறைகளில் மாலைக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மாலைக் கல்லூரிகளில் வகை செய்யப்பட்டுள்ள பாட முறைகளில் பலர் சேர்ந்ததால், ஆண்டுதோறும் அவற்றில் பல புதிய பாட முறைகள் தொடங்கப்பட்டன. 1970–71-ஆம் ஆண்டில் மேலும் 7 கல்லூரிகளில் 10 மாலை நேர வகுப்புகள் தொடங்கப்பட்டன. இதனால் 1969–70-ஆம் ஆண்டில் 13 ஆக இருந்த மாலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை 1970–71-ல் 20 (அரசுக் கல்லூரிகள் 15, மானியம் பெறும் கல்லூரிகள் 5) ஆக உயர்ந்தது. 1970–71-ஆம் ஆண்டில்

இந்த 20 கல்லூரிகளிலும் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 6,240-ஆக உயர்ந்தது. 1969–70-ல் இந்த எண்ணிக்கை 4,631 என்பதுதான் குறிப்பிடத்தக்கது.

1969–70 முதற்கொண்டு அரசினர் மாலை நேரக் கல்லூரிகளில் பட்டப்படிப்பு பாடமுறைக்காக வசூலிக்கப்படும் கல்விக் கட்டணம் முறையான பட்டப்படிப்பு பாடமுறைக் கட்டணத்திற்கேற்ப குறைக்கப்பட்டுள்ளது.

## இலவச புகுமுகக் கல்வித் திட்டம்.

1969–70 முதற்கொண்டு புகுமுக வகுப்புகளில் படிக்கும் மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. அவர்கள் பெற்றோர்களின் ஆண்டு வருவாய் எவ்வளவிருப்பினும், அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருப்பினும், அதைக் கருத்தில் கொள்ளாமல், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கும் தமிழ்நாட்டில் நிலையாகக் குடியேறிய மாணவர்களுக்கும் இச் சலுகை அளிக்கப்படுகிறது. இத் திட்டம் 1970–71-ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்பட்டு வந்தது. 1971–72-ம் ஆண்டிலும் இது செயலில் இருக்கும்.

## பயிற்று மொழி.

புகுமுக வகுப்பில் (கலைப் பாட முறைகள்) 1966–67-ம் ஆண்டு முதற்கொண்டும், பட்டப்படிப்பு பாடமுறையில் 1967–68 முதற்கொண்டும், புகுமுக வகுப்பு (அறிவியல் பாடமுறையில்) 1968–69 முதற்கொண்டும் மாற்றுப் பயிற்று மொழியாகத் தமிழ் கொண்டு வரப்பட்டது. கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி கற்பிப்பதற்கான வசதிகளை அரசு படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது.

1970–71-ல் பல்கலைக் கழக புகுமுக வகுப்புகள் கொண்ட 41 அரசினர் கல்லூரிகளுள், 28 கல்லூரிகள் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பயிற்றுமொழிகளிலும் வகுப்புகள் நடத்தின. எஞ்சிய 13 கல்லூரிகள் தமிழை மட்டுமே பயிற்றுமொழியாகக் கொண்டு வகுப்புகள் நடத்தின. பி.ஏ. பட்ட வகுப்புகள் கொண்ட 35 அரசினர் கல்லூரிகளுள் 12 கல்லூரிகள் இரு பயிற்று மொழிகளிலும், தமிழை மட்டும் பயிற்று மொழியாகக்கொண்டு 22 கல்லூரிகளும், ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்டு ஒரு கல்லூரியும் வகுப்புகள் நடத்தின. பி.எஸ்சி. பட்ட வகுப்புகள் கொண்ட 30 அரசினர் கல்லூரிகளுள், தமிழை மட்டும் பாடமொழியாகக் கொண்டு 22 கல்லூரிகளும், ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டையும் பயிற்றுமொழிகளாகக்கொண்டு 8 கல்லூரிகளும் பயிற்சி அளித்தன.

மாணவச் சமூகத்தினரிடையே ஒருசில பிரிவினருக்குப் பயிற்று மொழிப் பிரச்சினைபற்றி சில ஐயப்பாடுகள் எழுந்ததால், இதிலுள்ள சிக்கல்களை ஆய்ந்து, தக்க ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு, டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் தலைமையில் வல்லுநர் குழு ஒன்றை



அமைப்பதென்று அரசு முடிவு செய்தது. இக் குழு, 1971 ஜனவரி 5-ம் நாளன்று ஓர் இடைக்கால அறிக்கையை அளித்துக் கீழ்காணும் பரிந்துரைகளைச் செய்தது :—

1. பயிற்றுமொழியை தேர்ந்தெடுக்க மாணவர்களுக்கு வாய்ப்பு இருக்க வேண்டும் என்று இக் குழு கருதுகிறது.

2. தமிழை மட்டுமே பயிற்று மொழியாகக் கொண்ட அரசினர் கல்லூரிகளில், ஆங்கிலத்தின் மூலம் பயில விரும்பும் மாணவர்களுக்கு அரசு வசதிகள் செய்துகொடுக்க வேண்டும்.

3. தமிழ் பயிற்றுமொழியாக இல்லாத தனியார் கல்லூரிகளில், தமிழ்ப் பயிற்றுமொழித் தேவையிருப்பின் அதற்கான வசதிகள் செய்வதைப்பற்றிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்ளப்படலாம்.

டாக்டர் ஏ. எல். முதலியார் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டது. இக் குழுவின் இறுதி அறிக்கை 1971 மே திங்களில் பெறப்பட்டது. இப்போது ஆங்கிலம் பயிற்று மொழியாக இல்லாத அரசினர் கல்லூரிகளில் அம்மொழி மூலம் கல்வியளிக்க வசதிகள் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை அக் குழு மீண்டும் வலியுறுத்தியது. இக் குழுவின் அடிப்படைப் பரிந்துரைக்கிணங்க, தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு இப்போதுள்ள எல்லாப் பாடமுறைகளுக்கும் இணையாக ஆங்கிலப் பயிற்றுமொழிப் பிரிவுகள் தொடங்குவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசுக் கல்லூரிகளில் முறையான வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பாகமாகப் பல்வேறு துறைகளில் தொடங்கவிருக்கிற புதிய வகுப்புகளுக்கு மேலாக, இத்தகைய கூடுதல் பிரிவுகளும் திறக்கப்படும்.

ஆங்கிலப் பயிற்று மொழிக்குரிய வசதிகள் செய்து கொடுப்பது குறித்த ஏ. எல். முதலியார் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்கின்ற அதே நேரத்தில், தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்குக் கல்லூரிகளில் வசதிகளை அளிப்பது அரசின் கொள்கையாகத் தொடர்ந்து இருந்துவரும். பி.ஏ., பி.எஸ்சி. பட்ட வகுப்புகளில் தமிழ்ப் பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்களைப் பொறுத்த மட்டில், அவர்கள் எந்த வகுப்பினராயினும் அல்லது என்ன வருமானமுடையவராயினும், அனைவருக்கும் மூன்று ஆண்டு படிப்புக்கும் ஆண்டுதோறும் மாணவர் ஒவ்வொருவருக்கும் ரூ. 180 படிப்பு உதவிப் பணம் அளிக்கப்படும். உதவிப் பணம் அரசுக் கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் ஏனைய தனியார் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களுக்கும் அளிக்கப்படும்.

1971–72-ஆம் ஆண்டு முதல், அரசினர் கல்லூரிகளிலும் தனியார் கல்லூரிகளிலும் தமிழ்ப் பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கும் புகுமுக வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ்ப் பாடநூல்கள் வாங்குவதற்காக, ஆண்டொன்றுக்கு ரூ. 50 புத்தகப்படி வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. நமது மாநில மாணவர்கள் தங்கள் விருப்பப் பாடங்களில் மட்டுமன்றி, தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றவர்களாகச் செய்து அரசு அலுவலகங்களில் மட்டுமன்றித் தனியார் துறைகளிலும் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்குத் தகுதி பெறச் செய்யவேண்டும் என்பதே அரசின் கொள்கையாகும்.

தமிழில் பாட நூல்களைப் பெருமளவில் வெளியிடுவதற்கான மும்முரத் திட்டம் ஒன்றை அரசு தற்போது மேற்கொண்டுள்ளது. இப்பாட நூல்கள் பலதுறைகளுக்காகவும் அவற்றிற் காணும் பல்வேறு சிறப்புப் பிரிவுகளுக்காகவும் வெளியிடப்படும். ஏற்கெனவே தமிழில் ஏறத்தாழ 250 நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், கல்லூரிகளில் தமிழ் பயிற்று மொழி மூலம் கல்வி பயிலும் மாணவர்களின் பயனுக்கென ஏறத்தாழ 300 நூல்களை வெளியிடக் கருதியுள்ளது.

கல்லூரி அளவில் பி.எஸ்சி. படிப்புகளில் ஆசிரியர்கள் அறிவியல் பாடங்களை தமிழில் கற்பிப்பதற்கென சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில், 1970-ல் சென்னையில் மறுபயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இந்த மறுபயிற்சி வகுப்பில் 262 ஆசிரியர்கள் பங்கு பெற்றனர். வரும் கல்வியாண்டிலும் இத்தகைய மறுபயிற்சி வகுப்புகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கல்லூரி ஆசிரியர்களின் சம்பள வீதங்களும் பணி நிலைகளும்.

இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்மேல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கான திருத்தச் சம்பள வீதங்களை, மானியம் பெறும் கல்லூரி ஆசிரியர்கட்கும் வழங்கவேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. இதனையடுத்து, இக்கல்வியாண்டு முதல் மானியம் பெறும் கல்லூரிகளுக்கு அளிக்கப்படும் ஆசிரிய மானியம், திருத்தச் சம்பள வீதங்களின் அடிப்படையில் கணக்கிடப்படும். அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பொருந்துகின்ற, ஏனைய நலன்களான, திருத்த நகர ஈட்டுப்படியும், வீட்டு வாடகைப்படியும், மானியம் பெறும் கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்களுக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளது.

## 6. எம்.ஏ. (ஆங்கிலம்) மாணவர்களுக்கு உதவித் தொகை.

கல்லூரிகளில் ஆங்கிலக் கல்வித் தரத்தை வளர்க்க வேண்டுமென்றால், ஆங்கிலத்தில் முழுத் தகுதி பெற்று, ஆசிரியர் பணிக்குப் பொருத்தமான தகுதியுடைய ஆசிரியர்கள் போதிய அளவிற்குக் கிடைக்க வேண்டும். கல்லூரிகளின் எண்ணிக்கை பெருகிவருகின்றது; ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் பதவிகளில் நியமிக்கப்படுவதற்கு முழுத் தகுதி பெற்றவர்கள் பொதுவாகத் தேவைப்படும் அளவில் கிடைப்பதில்லை; இவற்றைக் கருத்தில் கொண்டு, 1969–70-ஆம் ஆண்டில் ஒரு புதிய திட்டம் கொண்டுவரப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் ஆங்கில எம்.ஏ. பட்டப் படிப்புப் பயிலும் மாணவர்களில் தகுதிபெற்றோர்க்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது; உதவித் தொகை பெறும் மாணவர்கள், பட்ட மேற்படிப்புப் பட்டம் பெற்ற பின்னர், ஆங்கிலத்துறையில் உதவிப் பேராசிரியர் பதவிகளில், அல்லது அத்துறையில் ஏனைய பொருத்தமான பதவிகளில் நியமனம் செய்யப்படுவதற்கு வாய்ப்புப் பெறுவார்கள். இத் திட்டத்தின்கீழ், ஆங்கிலம் எம்.ஏ. பட்டப் படிப்பு பயிலத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் ஒவ்வொருவருக்கும், அவர் கல்விக் காலத்திற்கு, படிப்புச் சம்பளம், புத்தகச் செலவு





முதலியவை தொடர்பான செலவுகளை ஈடு செய்வதற்காகத் திங்களொன்றுக்கு ரூ. 100 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இத்தகைய உதவித் தொகை ஒவ்வோராண்டிலும், 40 பேருக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இத் திட்டம் 1971–72-ல் தொடர்ந்து செயல்படும்.

## படிப்பு உதவித் தொகைகள்.

திறமையுடைய மாணவர்கள் கல்லூரிக் கல்வியில் பயில்வதற்காக, இந்திய அரசின் மூன்று வகை படிப்பு உதவித் தொகைத் திட்டங்கள், தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன. அவையாவன: (1) படிப்பில் உயர் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் தேசியப் படிப்பு உதவித் தொகைத் திட்டம், (2) தொடக்க, இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகளில் உயர் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் தேசியப் படிப்புதவித் தொகை, (3) படிப்புதவித் தேசியக் கடன் தொகை.

1970–71-ஆம் ஆண்டில் மேற்கண்ட மூன்று திட்டங்களின்கீழ் முறையே 577 பேருக்கும், 49 பேருக்கும், 1,439 பேருக்கும் (மொத்தம் 2,065 பேர்) புதிதாகப் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்பட்டன. இது தவிர, கடந்த ஆண்டில் படிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டவர்களில் 7,600 மாணவர்களுக்கு இந்த உதவித் தொகை 1970–71-ல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. எனவே, இம் மூன்று திட்டங்களில் ஒன்றிலோ, பிறிதொன்றிலோ 9,665 மாணவர்கள் நிதி உதவி பெற்று வருகின்றனர்.

## ஆசிரியர்களின் கல்வித் தகுதிகளை உயர்த்துவதற்கான நடவடிக்கை.

கல்லூரிகளில் தற்போது நெறிமுறை ஆசிரியர் (Tutor) விளக்குநர் (Demonstrator) ஆகிய பதவிகளுக்குப் பட்டதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கல்லூரிகளில் கல்வியின் தரத்தை உயர்த்தும் சிறப்பு முயற்சியாக, அத்தகைய நெறிமுறை ஆசிரியர், விளக்குநர் ஆகியோரின் கல்வித் தகுதியைப் பட்டப்படிப்பு நிதியிலிருந்து பட்டமேற்படிப்பு நிலைக்கு உயர்த்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது.

புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு இவற்றுக்குரிய பாடத் திட்டத்தை உயர்த்தும் நோக்கத்துடன், சென்னைப் பல்கலைக்கழகம் இவற்றிற்காக வரையறுக்கப்பட்டுள்ள பாடத் திட்டத்தினை மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. புதிய பாடத் திட்டங்களை அறிவியல் ஆசிரியர்களுக்கு அறிமுகப்படுத்த அவர்களுக்கு மறுபயிற்சி வகுப்புகள் நடத்துவதற்காகப் பல்கலைக்கழகத்திற்கு அரசு ரூ. 1 லட்சம் சிறப்பு மானியம் அளித்துள்ளது.

அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சிக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன், கல்லூரிகளில் பணியாற்றும் உதவிப் பேராசிரியர் சிலரை 1971–72-ல் எம்.எட். பயிற்சிபெற முகமையில் அனுப்பக் கருதப்பட்டுள்ளது. இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 16,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

[1971 ஜூலை 9

## ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் வளர்ச்சிப்பணி நிலையங்கள்.

மாநிலத்தில் ஏழு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் தற்போது வளர்ச்சிப் பணி நிலையங்கள் ஏழு செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 6 நிலையங்கள் தனியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும், ஒன்று சைதாப்பேட்டை, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் இருக்கின்றன. இந்த ஏழு நிலையங்களுக்கும் தேவையான புத்தகங்களையும், ஒலி, ஒளி அமைப்புக் கருவிகளையும் இடைநிலைக் கல்விக்கான அனைத்திந்தியக் குழு வழங்கியுள்ளது. கல்வி கற்பிப்பதில் புதிய முறைகளில் ஆசிரியர்களுக்குப் பயிற்சிபளிப்பதே இந்நிலையங்களின் நோக்கமாகும். இத் திட்டத்திற்கு 5 ஆண்டுக்கால அளவிற்கு நிதியுதவி அளித்த இந்திய அரசு இந்நிலையங்களுக்கு நிதியுதவி அளிக்கும் பொறுப்பினை மேற்கொள்ளுமாறு மாநில அரசைக் கேட்டுள்ளது. அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் உள்ள வளர்ச்சிப்பணி நிலையங்களைப் பொறுத்தவரையில், 1971–72-ம் ஆண்டில், இந்நிலையங்களுக்காகும் செலவையேற்க அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இதனுல் 1971–72-ல் அரசுக்கு ஏற்படும் செலவு ரூ. 2 லட்சமாகும்.

## தேசிய மாணவர் படை.

தமிழ்நாட்டில் தற்போது தேசிய மாணவர் படையில், அதிகாரிகள் பயிற்சிப் பிரிவு ஒன்று உட்பட, 48 முதுநிலைப் பிரிவுகளும், தேசிய மாணவர்படைக் குழுத் தலைமையிடங்கள் ஐந்தும் இயங்குகின்றன. தமிழ்நாட்டில் கல்வி நிலையங்களிலுள்ள மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதே இதன் நோக்கமாகும். இவையனைத்திற்கும் தேசிய மாணவர்படை கட்டுப்பாட்டு அதிகார மன்றமாக, சென்னையிலுள்ள தேசிய மாணவர்படை இயக்குநர் அலுவலகம் இயங்கிவருகிறது. இம்மாநிலத்தில் 1970–71-ல் தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவில் 31,875 பேர் இருந்தனர்; இளநிலைப் பிரிவில் 73,000 பேர் இருந்தனர். தேசிய மாணவர் படைக்காகும் செலவில் மாநில அரசின் பங்கு ஆண்டொன்றுக்கு ரூ. 60 லட்சம் முதல் ரூ. 70 லட்சம் ஆகும்.

# அத்தியாயம் IV

# தொழில் நுட்பக் கல்வி.

## 1. 1971–72 வரவு-செலவுத் திட்டம்.

### (நிதி ஒதுக்கீடு).

1971–72-ஆம் ஆண்டில் கல்விக்காகச் செலவழிக்கத் திட்டமிட்டுள்ள ரூ. 8,184 லட்சத்தில், "28. கல்வி" என்னும் கணக்கில் தொழில் நுட்பக் கல்விக்காக (தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் சேர்த்து) ரூ. 384 லட்சம் செலவிடப்படும். இது, கல்விக்காகச் செலவிடப்படும் மொத்தச் செலவில் சுமார் 5 விழுக்காடாகும்.



1971 ஜூலை 9]

1971–72 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழில் நுட்பக் கல்விக்கு ஒதுக்கியுள்ள தொகை விவரங்களைக் கீழே காணலாம் :—

| | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 28. கல்வி—E. தொழில் நுட்பக் கல்வி—z. வளர்ச்சித் திட்டங்கள். | 2,72·52* |
| 103. மூலதன முதலீடு—f. தொழில் நுட்பக் கல்வி | 23·44 |
| 50. பொதுப் பணிகள்—திட்ட வேலைகளும் திட்டத்தில் சேராத வேலைகளும்- | 14·69 |
| மாணவர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் .. ... | 10·00 |
| மொத்தம் .. | 320·66 |

* (தொழிற் பயிற்சி நிலையங்களுக்கான ரூ. 1,11.42 லட்சம் இதில் சேர்க்கப்படவில்லை.)

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பல்வேறு கல்வி நடவடிக்கைகளுக்காக இத்தொகை எவ்வாறு செலவிடப்படுகிறது என்னும் முழு விவரங்களைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் தெற்றெனக் காட்டும் :—

| | 1970–71 திருத்த மதிப்பீடு. | 1971–72 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 நிர்வாகமும் மேற்பார்வையும் .. | 13·81 | 14·91 |
| 2 அரசுப் பொறியியல் கல்லூரிகள் .. | 94·43 | 93·46 |
| 3 அரசுப் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் | 80·99 | 1,01·76 |
| 4 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் | 11·31 | 16·71 |
| 5 வட்டாரப் பொறியியல் கல்லூரி .. | 16·72 | 11·65 |
| 6 தனியார் நிறுவனங்களுக்கு மானியமும் படிப்பு உதவிச் சம்பளமும். | 1,01·80 | 81·17 |
| 7 நிலங்களைக் கையகப்படுத்துதல் .. | 3·78 | .. |
| 8 சிறு பணிகள் .. .. .. | 1·00 | 1·00 |
| மொத்தம் .. | 3,23·84 | 3,20·66 |

## 2. திட்டக் குறிக்கோள் அளவுகள்

முதல் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தின்போது இம் மாநிலத்தில் 5 பொறியியல் கல்லூரிகளும், 6 பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளும் மட்டுமே இருந்தன. அடுத்தடுத்த ஐந்தாண்டுத்

[1971 சூலை 9

திட்டங்களில் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக இத்தகைய கல்லூரிகளும் பள்ளிகளும் மேலும் பல ஏற்படுத்தப்பட்டன. இதனால், இப்போது இம் மாநிலத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் ஆளுகையின் கீழுள்ள (3 அரசுக் கல்லூரிகள், 4 மானியம் பெறும் கல்லூரிகள் ஆக) 7 பொறியியல் கல்லூரிகள் உட்பட 12 பொறியியல் கல்லூரிகளும், 35 பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளும் (17 அரசுப் பள்ளிகள், 18 மானியம் பெறும் பள்ளிகள்), 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளும் (11 அரசுப் பள்ளிகள், 3 மானியம் பெறும் பளிகள்) இருக்கின்றன. முன் ஆண்டுகளில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட பல் தொழில் பயிற்சிப் பள்ளிகளில், மகளிர்க்கான 3 தொழில் பயிற்சி பள்ளிகளும், சிறப்புப் பாட முறைகளுக்கெனத் தொடங்கப்பட்ட கீழ்க்காணும் பட்டயப் படிப்பு நிறுவனங்களும் அடங்கும் :—

(1) இரசாயனத் தொழில் நுட்ப நிறுவனம்.

(2) திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனம்.

(3) வணிக நடைமுறை நிறுவனம்.

(4) பஞ்சாலைத் தொழில் நுட்ப நிறுவனம்.

(5) உணவு-உபசரிப்பியல் நிறுவனம்.

1970–71-ஆம் ஆண்டில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் ஆளுகையின் கீழுள்ள 7 பொறியியல் கல்லூரிகளிலும் 961 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பெற்றனர். 1971–72-ஆம் ஆண்டில் முதலாண்டுப் படிப்பில் 1,180 மாணவர்களைப் புதிதாகச் சேர்த்துக்கொள்ள இட வசதி இருக்கும். 1971–72-ம் ஆண்டில் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் 3,692 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் பெற்றனர். 1971–72-ஆம் ஆண்டில் 4,515 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள இடவசதி இருக்கும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இம் மாநிலத்தில், தொழில் நுட்பக் கல்வித் துறையில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதிலேயே முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. ஆனால், கடந்த மூன்றாண்டுகளில், நிலவும் வேலைவாய்ப்பு நிலைமையைக் கருதிப் பார்க்கும்போது, மேலும் மேலும் மாணவர்களைப் புத்தாகச் சேர்த்துக் கொண்டே போவதைவிட, இருக்கின்ற கல்வி நிலையங்களை நிலைப்படுத்தவும் சிறப்பான பாடமுறைகளையும் பலதிறப்பட்ட பாடமுறைகளையும் புதிதாக ஏற்படுத்தவும், முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமெனக் கருதப்படுகிறது. இந்த அடிப்படையில், கிண்டி பொறியியல் கல்லூரியில், பட்ட மேற்படிப்புப் பாடமுறைகள் பல கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1970–71-ஆம் ஆண்டில் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில், பணியிடைப் பயிற்சி முறையிலான வேலை முனைப்பு சிறப்புப் பாடமுறைகள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. கட்டிடக் கலையியல் உதவியாளர் படிப்பு, சர்க்கரைத் தொழிலியல் பட்டயப்படிப்பு, கருவிகள் நுட்பப் படிப்பு (Instrument Technology) ஆகியவை இவற்றுள் அடங்கும். பற்றவைப்புத் தொழில் நுட்ப



1971 சூலை 9]

படிப்பு, உற்பத்தித் தொழில் நுட்பப் படிப்பு, தொழில் பொறியியல், மின் அணுவியல், மருத்துவ மனைத் தொழில் நுட்பப் படிப்பு, பிளாஸ்டிக் தொழில் நுட்பப் படிப்பு உட்பட, புதிய பாடமுறைகள் பல 1971–72-ஆம் ஆண்டிலும் பல் தொழில் பயிற்சிப் பள்ளிகளில் ஏற்படுத்தப்படும். இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 4.4 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பணியிடைப் பயிற்சி முறையிலான பட்டப் படிப்பு முறையைக் கொண்டு வருவது, தொழில் நுட்ப வினைஞர்களைச் செயலறிவு உள்ளவர்களாகவும், வேலை முனைப்புள்ளவர்களாகவும் செய்வதில் செம்மையான நடவடிக்கை ஆகுமெனக் கருதப்பட்டுள்ளது. பட்டயப் படிப்பு நிலையிலும் பட்டப் படிப்பு நிலையிலும் பணியிடைப் பயிற்சி முறையைக் கொண்டுவருவதில் பொதுவான செயல் திட்டமொன்றைப் பரிவுரை செய்வதற்காக, இந்திய அரசின் கல்வித் துறை, செயற்குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் குழு ஆய்வுப் பணியைச் செய்து முடித்துச் சில பரிவுரைகளை வழங்கியுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள பொறியியல் கல்லூரிகளில் இத் திட்டத்தை நடைமுறையில் நிறைவேற்றுவதற்காக, இப் படிப்பு முறைகள் கொண்டுவரக்கூடிய கல்வி நிறுவனங்கள் செயல்படுவதை ஆராயும் பொருட்டு, இந்த அரசு குழு ஒன்றை நியமித்துள்ளது. பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் ஏற்கனவேயுள்ள பணியிடைப் பயிற்சி வேலைத் திட்டங்களும் அந்த ஏற்பாட்டினை மேலும் செம்மையாக்குவதற்காக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

### 3. தனிப்பட்ட நிறுவனங்களுக்கு நிதி உதவி

இம் மாநிலத்தில் உள்ள நான்கு தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கும், 18 தனியார் பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகளுக்கும் 1970–71 ஆண்டு வரை, அரசு உதவி மானியங்கள் வழங்கி வந்தது. இந்த நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் ஏற்படும் நிகரப் பற்றுக் குறையில் 75 சதவீத அடிப்படையில் கணக்கிடப்பட்டு இந்த உதவி மானியம் வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையை, நிகரப் பற்றுக்குறையின் 75 சதவீதத்திலிருந்து 80 சதவீதமாக உயர்த்துவதென இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

### 4. தொழில் நுட்ப நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பள வீதங்கள், பணி நிலைமைகள்.

இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளின்மேல், அரசு தொழில் நுட்ப நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள திருத்தச் சம்பள வீதங்கள், மானியம் பெறும் தொழிற் கல்வி நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. மானியம் பெறும் தொழில் நுட்ப நிறுவனங்களுக்கான ஆசிரிய மானியம் திருத்தச் சம்பள வீதங்களின் அடிப்படையில் வரும் கல்வி ஆண்டிலிருந்து கணக்கிடப் படும்.

### 5. பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்புகள்

பணியில் உள்ளவர்களுக்குத் தொடர்ந்து கல்வி அளிப்பது என்பது முற்போக்கான கல்வி முறையின் அம்சமாக உலகெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக, தொழில் நுட்ப வல்லுநர்கள், பொறியாளர்கள், ஆகியோர் தங்கள் பணியில் ஏற்றம் காண வேண்டுமாயின், அவர்கள் தங்களது கல்வித் தகுதியை மேம்படுத்திக் கொள்ளவேண்டும். எனவே இக் கல்வி முறை இவர்களுக்கு மிகவும் தகுதியுடைத்தாகும். 1971–72-ஆம் ஆண்டிலிருந்து அரசுப் பொறியியல் கல்லூரிகளிலும் தனியார் பொறியியல் கல்லூரிகளிலும் தொழிற் கல்விப் பட்டயம் பெற்றவர்களுக்காகப் பகுதி நேரப் பட்டப் படிப்பு பாடமுறைகள் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. கிண்டியிலுள்ள அரசுப் பொறியியல் கல்லூரியில் இப் பாடமுறைக்காக 60 இடங்கள் ஒதுக்கப்படும். தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் ஆளுகையில் கீழ் உள்ள ஏனைய அரசுக் கல்லூரிகள், மானியம் பெறும் கல்லூரிகள் ஆகியவை ஒவ்வொன்றிலும் 30 இடங்கள் ஒதுக்கப்படும். இவ்வாறாக கட்டுமான (சிவில்), இயந்திர, மின்சாரப், பொறியியல் ஆகிய மூன்று பாடமுறைகளுக்கும் சேர்த்து மேற்சொன்ன 7 கல்லூரிகளிலும் சேர்த்து மொத்தம் 270 இடங்கள் ஒதுக்கப்படும். பொறியியலின் இப் பிரிவுகளில் பட்டயம் பெற்று மூன்று ஆண்டுகள் பணியில் தொழில் அனுபவம் பெற்று இருப்பவர்கள் இப் பாடமுறையில் சேர்வதற்குத் தகுதியுடையவர்களாவர். இப் பாடமுறையைக் கொண்டுவந்ததன் காரணமாக, பொறியியல் படிப்புத் துறைகளில், பட்டயம் பெற்றவர்களின் நீண்ட நாள் தேவைகளில் ஒன்று நிறைவு செய்யப்பட்டுள்ளது.

பொறியியல் பட்டயம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஊக்கமளிப்பதற்கான திட்டம் ஒன்று மதுரையில் உள்ள தமிழ்நாடு பல்தொழிற் பயிற்சிப் பள்ளியில் முதன் முதலாக மாநில அரசினால் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. இத் திட்டம் இப்பொழுது பிற நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் பட்டயம் பெற்றோர் உள்ளூர் தொழிற்சாலைகளிலிருந்து பணிகள் கேட்டு பெற்று, பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் உள்ள கருவிகளையும் பொறிகளையும் பயன்படுத்திப் பணிகளை நிறைவேற்றலாம். பொறிகளைப் பயன்படுத்துவதற்காக அவர்களிடமிருந்து சிறு தொகை வாடகையாக வசூலிக்கப்படுகிறது. இயந்திரப் பொறியியல் பாடமுறையின் இறுதி ஆண்டில் பயிலும் மாணவர்களுக்காக இது போன்றதொரு திட்டம் திருச்சி, தூத்துக்குடியில் உள்ள அரசுப் பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

### 6. ஆசிரியர்களின் தகுதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.

அரசுத் தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் தங்கள் கல்வித் தகுதியை மேம்படுத்திக் கொள்வதற்காக, ஆசிரியர்கள் ஆராய்ச்சிப் பட்டம் பெறும்பொருட்டு, அரசு



அவர்களை இந்தியத் தொழில் நுட்ப நிலையம், பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிலையம், வெளிநாடுகளில் உள்ள சில பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றுக்கு முகமையில் அனுப்ப முடிவு செய்துள்ளது. இத்திட்டம் மூன்று ஆண்டுகள் செயலில் இருக்கும். இக்கால அளவில் இந்திய அரசு ஆசிரியர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 500 படிப்பு உதவித் தொகை வழங்கும். மாநில அரசு இப்படிப்புக் கால அளவை, முகமைக் கால அளவாக் கருதி, முகமைக் கால அளவில் அவர்களது சம்பளம், படிகள், குறித்த செலவை ஏற்கும். 1971–72-ஆம் ஆண்டில் ஐந்து ஆசிரியர்களை முகமையில் அனுப்பக் கருதப்பட்டுள்ளது.

**7. தொழில் நுட்ப நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்குக் கடன்கள்.**—அரசிதழ் பதிவு பெறு அலுவலர்கள், இம்மாநிலத்தில் உள்ள ஏற்புபெற்ற பள்ளிகளின் ஆசிரியர்கள், ரூ. 1,500-க்குக் குறைவான ஆண்டு வருவாய் உள்ளனர் ஆகியோரின் பிள்ளைகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், முழுப் படிப்புக் கட்டணங்கள், பிற கட்டணங்கள் ஆகியவற்றிற்கு நிகரான கடன தொகை, பட்டப் படிப்பு பாடமுறைகளுக்கான பாடப் புத்தகங்களை வாங்குவதற்காக ரூ. 1,000, பட்டயப் பாடமுறைப் புத்தகங்கள் வாங்குவதற்காக ரூ. 500, திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் 10 மாதங்களுக்கு பேணுதற்படி ஆகியவை கொடுக்கப்படுகின்றன. 1970–71-ஆம் ஆண்டில், 1,123 மாணவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கப்பட்டன. 1970–71-ல் மொத்தம் ரூ. 10.37 லட்சம் கடனாக வழங்கப்பட்டது.

## அதிகாரம் V

### தொழிற் பயிற்சி நிறுவனங்கள்.

ஒரு நாட்டில் தொழில் வளர்ச்சி அடையும் வேகம் அந்நாட்டில் தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்கள் கிடைப்பதைப் பொறுத்தேயுள்ளது. இம்மாநிலத்தின் விரைந்த தொழில் முன்னேற்றம் காரணமாக, கைவினைப்பணியாளர் பயிற்சியின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின்போதும் 1966–67, 1967–68, 1968–69 ஆண்டுத் திட்டங்களின்போதும் மாநில வரவு-செலவுத் திட்டத்திலும் மாநிலத் திட்டங்களிலும் இது எதிரொலிக்கின்றது. கைவினைப் பணியாளர் பயிற்சித் திட்டம், 1968–69 வரையில் மத்திய அரசுத் திட்டமாக இருந்து வந்தது. 1969–70 ஆண்டு முதற்கொண்டு இத்திட்டம் மத்திய அரசு திட்டமாக இருப்பது நின்றுவிட்டது. நடப்பாண்டில் இத்திட்டத்தின் கீழ் பெரும்பாலும் முந்திய ஆண்டுத் திட்டங்களில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்களை முடிக்கக் கருதப்படுகிறது. வருவாய்க் கணக்கில் கண்டுள்ள செலவினம் திட்ட நிதி ஒதுக்கத்திற்குப் புறம்பானதாகக் கருதப்படும். இத்திட்டம் தமிழக அரசின் வேலை வாய்ப்பு-பயிற்சி இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது.

1956 நவம்பர் திங்கள் 1-ம் தேதியன்று இந்திய அரசிடமிருந்து கைவினைப் பணியாளர் பயிற்சித் திட்டத்தை மாநில அரசு மேற்கொண்டதிலிருந்து இத்திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டப் பணிகள் குறித்த செலவு கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது :—

| (1) | இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம். (2) | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம். (3) | 1966–67 ஆண்டுத் திட்டம். (4) | 1967–68 ஆண்டுத் திட்டம். (5) | 1968–69 ஆண்டுத் திட்டம். (6) |
|---|---|---|---|---|---|
| 1. தொழிற் பயிற்சி .. | 141·20 | 345·10 | 130·00 | 151·09 | 125·10 |
| 2. வேலை பயில்வோருக்கான பயிற்சி. | 5·02 | 52·00 | .. | .. | .. |
| 3. மாலைநேர வகுப்புகள் நடத்துதல். | 1·45 | 3·90 | .. | .. | .. |
| 4. கிராமப் பயிற்சி நிறுவனங்கள். | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 147·67 | 401·00 | 130·00 | 151·09 | 125·10 |

| (1) | நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (தற்காலிகமானது,) (2) | 1969–70 திட்ட நிதி ஒதுக்கம். (3) | 1970–71 திட்ட நிதி ஒதுக்கம். (4) | 1971–72 திட்ட நிதி ஒதுக்கம். (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| 1. தொழிற் பயிற்சி .. .. | 164·10 | 6·10 | 8·18 | 10·00 |
| 2. வேலை பயில்வோருக்கான பயிற்சி. | 40·00 | 1·83 | 8·21 | 6·05 |
| 3. மாலைநேர வகுப்பு நடத்துதல். | 6·23 | .. | 0·19 | 0·23 |
| 4. கிராமப் பயிற்சி நிறுவனங்கள். | 10·00 | .. | .. | .. |
| 5. தொழில்களைப் பல்வகைப் படுத்துதல். | .. | .. | .. | 0·73 |
| மொத்தம் .. | 220·33 | 7·92 | 16·58 | 17·01 |

"109. மூலதனச் செலவு" என்ற தலைப்பில் சேர்க்கப்பட்ட செலவுத் தொகைகளும் மேற்குறிப்பிட்ட தொகைகளில் அடங்கும்.



மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் அடுத்து வந்த ஆண்டுத் திட்டங்கள் மூன்றிலும் இத்திட்டத்தின் வளர்ச்சி குறித்து வலியுறுத்தலில் ஒரு மாறுதல் ஏற்பட்டுள்ளதை இந்த அட்டவணையின் மூலம் காணலாம்.

இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களிலும் அடுத்து வரும் ஆண்டுத் திட்டங்கள் மூன்றிலும் பயிற்சி வசதிகள் விரிவுபடுத்தப் பட்டதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் காட்டுகின்றன :—

| (1) | இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம். (2) | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம். (3) | 1966–67 ஆண்டுத் திட்டம். (4) | 1967–68 ஆண்டுத் திட்டம். (5) | 1968–69 ஆண்டுத் திட்டம். (6) |
|---|---|---|---|---|---|
| 1. தொழிற் பயிற்சி— | | | | | |
| தொழிற்பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கை. | 10 | 30 | 31 | 31 | 31 |
| இடங்களின் எண்ணிக்கை. | 3,368 | 9,592 | 12,608 | 13,112 | 13,112 |
| 2. வேலை பயில்வோருக்கான பயிற்சி— | | | | | |
| வேலை பயின்றோர் எண்ணிக்கை. | 550 | 2,600 | 2,850 | 1,975 | 2,173 |
| 3. மாலை நேர வகுப்புகளில் பயின்ற பணியாளர்கள். | 400 | 900 | 900 | 900 | 900 |

## தொழிற் பயிற்சி.

இம்மாநிலத்தில் தற்போது 31 தொழில் பயிற்சி நிறுவனங்களில் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவற்றுள் 10 நிறுவனங்கள் இரண்டாவது திட்டக்கால இறுதியில் இருந்தன. 20 நிறுவனங்கள் மூன்றாவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டன. ஒரு நிறுவனம் 1966–67-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. மூன்றாவது திட்டக்கால இறுதியில் 30 தொழிற் பயிற்சி நிலையங்களில் 9,592 மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான இடங்கள் இருந்தன. 1966–67-ம் ஆண்டு 3,016 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்த்துக்கொள்ள வகை செய்யப்பட்டதன் காரணமாகவும், 1967–68 ஆண்டு 504 மாணவர்களை கூடுதலாகச் சேர்த்துக்கொள்ள வகை செய்யப்பட்டதன் காரணமாகவும், 31 தொழில் பயிற்சி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளப்படத்தக்க மாணவர்களின் எண்ணிக்கை 13,112-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. நான்காவது திட்டக்கால அளவில் தற்போதுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் 1,000 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

[1971 சூலை 9

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 1971–72 மாநில வரவு-செலவுத் திட்டத்தில் மானியக் கோரிக்கை "13. கல்வி", மானியக் கோரிக்கை "40. தொழில் வளர்ச்சி குறித்த மூல்தனச் செலவு" ஆகியவற்றில், "28. கல்வி", "109. பிற பணிகள் குறித்த மூலதனச் செலவு" என்னும் பெரிய தலைப்புகளின்கீழ் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ரூ. 111.43 லட்சமாகும். (திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 10.00 லட்சமும், திட்டத்தின்கீழ் வராத பணிகள் குறித்த நிதி ஒதுக்கம் ரூ. 101.43 லட்சமும் ஆகும்.)

## தொழில் பயில்வோருக்கான பயிற்சித் திட்டம்.

1961-ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள தொழில் பழகுவோருக்குப் பயிற்சியளிக்க வேண்டியது தொழில் நிறுவனங்களின் கடமையாகும். தற்போது இச்சட்டத்தின்கீழ் 43 தொழில்கள் வருகின்றன. 316 நிறுவனங்கள் இச்சட்டத்தை முழுவதும் செயல்படுத்தி வருகின்றன. 115 நிறுவனங்கள் ஓரளவிற்கு இச்சட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. தற்போது 2,219 தொழில் பழகுவோர், 431 நிறுவனங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் பல துறைகளை இத்திட்டத்தின்கீழ் கொண்டு வருவதன் மூலமும், நான்காவது திட்டக் காலத்தில் மேலும் பல தொழில்களை இச்சட்டத்தின் வரையறைக்குள் கொண்டு வருவதன் மூலமும் இத்திட்டம் பல வகைப் படுத்தப்பட்டு வருகிறது. நான்காவது திட்டக் காலத்தில் ரூ. 40 லட்சம் செலவில் கூடுதலாக 3,000 தொழில் பழகுவோருக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வடசென்னை, கிண்டி, மதுரை, கோயம்புத்தூர், பேட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள ஏழு தொழில் பயிற்சி நிறுவனங்களில் தொழில் பழகுவோருக்குச் சம்பந்தப்பட்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அம்பத்தூர், சேலம் ஆகிய இடங்களிலுள்ள தொழில் பயிற்சி நிறுவனங்களில் இன்னும் இரண்டு தொடர்பான பயிற்சி நிலையங்களைத் தொடங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கிண்டி, தொழில் பயிற்சி நிறுவனத்திலுள்ள அடிப்படை பயிற்சி நிலையத்தை விரிவாக்க இன்னும் இரண்டு தொழில்களை அதாவது கையால் அச்சுக் கோர்ப்பது, கல்லச்சு வேலை (Ratoucher Lithography) ஆகிய இரு பிரிவுகளைத் தொடங்குவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது. மேலே கூறிய திட்டத்தைச் செயல்படுத்த 1971–72-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம், திட்டப் பணிகளுக்காக ரூ. 6.05 லட்சமும், திட்டத்தில் சேராத பணிகளுக்காக ரூ. 2.82 லட்சமும் நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

## தொழிற்சாலை ஊழியர்களுக்காக மாலை நேர வகுப்புகள்.

தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் பணிகளுக்குத் தேவையான அடிப்படைக் கணக்கு அறிவு, வரைபடங்களைப் படித்து அறிவது, தொழில் பற்றிய தொடக்க நூலறிவு, நுணுக்கமான கருவிகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைப் பற்றிய நூலறிவை மேம்படுத்திக் கொள்வதற்கு வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தற்போது இத்திட்டம், சென்னை



1971 சூலை 9]

மாநகரில் இரு நிலையங்களிலும், அம்பத்தூரில் (சென்னைக்கருகில்) ஒரு நிலையத்திலும், மதுரையில் ஒரு நிலையத்திலும், கோயம்புத்தூரில் ஒரு நிலையத்திலும், ஆக ஐந்து நிலையங்களில் செயல் படுத்தப்படுகிறது. இந்த ஐந்து நிலையங்களில் அம்பத்தூரிலுள்ள நிலையத்தைத் தவிர மற்ற ஒவ்வொரு நிலையத்திலும் 200 தொழிலாளர்களுக்கு வகுப்புகள் நடத்துவதற்கான வசதிகள் உள்ளன. 1970, செப்டம்பரில் அம்பத்தூர் நிலையத்தில் 100 தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. 1971 ஆகஸ்ட் திங்களில் மேலும் 100 தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் வசதிகள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன. தற்போது, மேலே கூறிய ஐந்து தொழிற்பயிற் நிலையங்களிலும் 552 தொழிலாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். நான்காவது திட்டக் காலத்தில் மேற்கொண்டும் ஒரு நிலையத்தில் இந்த வசதிகளைப் பெருக்குவதற்கான செயற்குறிப்புகள் அரசின் ஆய்விலுள்ளன. இதற்காக நான்காவது திட்டச் செலவில் ரூ. 6.23 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1971–72-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் திட்டப் பணிக்காக ரூ. 0.23 லட்சமும், திட்டத்தில் சேராத பணிக்கு ரூ. 1.27 லட்சமும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## தொழில்களைப் பல்துறைப்படுத்துதல்.

அரியலூரிலும், கூனூரிலும் உள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களிலுள்ள பிரபலமற்ற சில தொழில்களிலுள்ள இடங்களை நீக்குவதற்கான செயற்குறிப்புகளுக்கும், தொழில்களைப் பல்துறைப் படுத்துவதற்கான திட்டத்தின்கீழ் முதற்படியாக பிரபலமான தொழில்களில் இடங்களைக் கொண்டு வருவதற்கும் 1970–71-ஆம் ஆண்டில் அரசு ஏற்பளித்துள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் படிப்படியாக மற்ற தொழிற் பயிற்சி நிறுவனங்களிலுங்கூட பிரபலமற்ற தொழில்களுக்குப் பதிலாக, பிரபலமான தொழில்களைக் கொண்டு வருவதற்கான செயற்குறிப்புகள் பரிசீலனையிலுள்ளன. மேலே கூறியுள்ள திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 1971–72-ம் ஆண்டு மாநில வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 0.73 லட்சம் திட்ட நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

## பல்வகைத் திட்டங்கள்.

### பொற் கொல்லர்கள், வடிவமைப்புத் தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள்—முதலியோருக்கான பகுதி நேரப் பயிற்சித் திட்டம்.

வேலையிழந்த பொற்கொல்லர்கள், வடிவமைப்புத் தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள், ஆகியோர் தங்கள் தொழிலைத் திறம்பட அமைத்து, நலம்பெற வகை செய்வதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறப்புத் திட்டமொன்று தொடங்கப்பட்டது. இத்திட்டம் இப்போது திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், பேட்டை (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய நான்கு

[1971 ஜூலை 9

இடங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில் நிறைவேற்றப் பட்டு வருகின்றது. இந்த நிறுவனங்களில் கீழே குறிப்பிட்டுள்ள தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது :—

(1) கருமார் தொழில், இணைப்பு வேலை (Fitting)

(2) செப்புத் தொழில், தகர வேலை.

தற்போது நான்கு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் மொத்தம் 59 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. 1971–72-ஆம் ஆண்டில் இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மாநில வரவு-செலவுத் திட்டம், திட்டத்தில் சேராத பணிக்காக ரூ. 0.18 லட்சம் நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

தொழிற் பயிற்சி நிறுவனத்தில் வணிகப் பிரிவுகளைத் தொடங்குதல்.

தச்சு வேலைத் தொழிலுக்காக வடசென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில் முன்னோடித் திட்டமாக வணிகப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அரசு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்றுத் தேறியவர்களுக்கு உற்பத்தி முறைகளில் போதுமான அளவு நடைமுறைப் பயிற்சி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பயிற்சி அவர்களுக்குத் தாம் தனியாக ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு வேண்டிய நம்பிக்கையையும், சுயேச்சையாக பணி ஆணைகளைப் பெறுவதற்கான வாய்ப்பையும் அளிக்கிறது. இக்கூடுதல் பயிற்சிக் கால அளவு 6 திங்கள் முதல் 12 திங்கள் காலமாகும். இந்த பயிற்சிக் காலத்தின்போது பயிற்சி பெறுபவர்களால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்றுப் பெறும் தொகையிலிருந்து பயிற்சியாளர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 வழங்கப்படும். தற்போது ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள முன்னோடித் திட்டத்தின் விளைவைப் பொறுத்து, இத் திட்டத்தை மற்ற தொழிற் பயிற்சி நிறுவனங்களிலும் மற்றத் தொழில்களிலும் நீட்டிக்கக் கருதப்பட்டுள்ளது.

செயல் ஊக்க உதவித் திட்டம்.

தொழிற் பயிற்சி நிறுவனங்களில் உள்ள வணிகப் பிரிவுகளைப் போல், தொழில் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தவர்கள் தாமே தொழில் நடத்த வாய்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு செயலாக்கத் திட்டம் ஒன்றை திருச்சிராப்பள்ளி தொழிற் பயிற்சி நிறுவனத்தில் நிறைவேற்றுவதற்காக அண்மையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக, திருச்சிராப்பள்ளி பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட் தனது முழு ஒத்துழைப்பையும் தர முன் வந்துள்ளது. இத் திட்டத்தை நிறைவேற்றும் தொடக்க நிலையில் பயிற்சி பெறுபவர்களுக்கு இயந்திர பாகங்களை உற்பத்தி செய்யப் பயிற்சி பெறுபவர்கட்கு வேலையளிப்பதோடு மட்டுமல்லாமல், மூலப் பொருட்களை வழங்குவதற்கும், தொழில் நுட்ப முறைகளில்



1971 ஜூலை 9]

அறிவுரை வழங்குவதற்கும் அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட மூலப் பொருட்களைக் கொண்டு தொழிற் பயிற்சி நிறுவனத்திலிருந்து தேறியவர்கள் அந்நிறுவனத்தின் இயந்திரங்களைப் பயன்படுத்தி, திருச்சிராப்பள்ளி பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திற்காக, இயந்திர பாகங்களை, பயிற்சி வகுப்பு நேரம் முடிந்த பின், தனி முறைப்பணி நேரத்தில் (Special shoft) உற்பத்தி செய்வர். முதன் முதலில் இத் திட்டத்தின்கீழ் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் படித்துத் தேர்ச்சி பெற்ற ஒன்பது பயிற்சியாளர்கள் வேலைக்கு அமர்த்தக் கருதப்பட்டுள்ளனர். அவர்கள் ஓர் ஆண்டுக் காலத்திற்கு வேலையில் இருப்பர். பிறகு அவர்கள் அடுத்த பயிற்சியாளர் தொகுதியால் வேலையிலிருந்து விடுவிக்கப்படுவர். மாதம் ஒன்றுக்கு பயிற்சியாளர் ஒருவருக்கு உயர்ந்த அளவு ரூ. 171 என்ற உயர்ந்த அளவிற்குட்பட்டு, பயிற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திடமிருந்து பெறும் கட்டணங்களிலிருந்து பயிற்சியாளர்களுக்கு பணம் வழங்கப்படும்.

பொது.

பர்மா அகதிகளுக்கும், இலங்கை அகதிகளுக்கும் புது வாழ்வு ஏற்பாடுகள்.

பர்மா அகதிகளுக்கும், இலங்கை அகதிகளுக்கும் புதுவாழ்வு ஏற்பாடுகளில் ஒன்றாக, ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிறுவனத்திலும் உள்ள தொழிற் பிரிவு ஒவ்வொன்றிலும் மொத்தமுள்ள இடங்களில் ஐந்து சத வீதம் இவ்வகதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பெற்றோருடன் வசிக்கும் பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்குப் பயிற்சி உதவித்தொகை ரூ. 15 அளிக்கப்படுகிறது. பெற்றோரிடமிருந்து தனித்து வந்து வசிப்போருக்கு மாதம் ஒன்றுக்கு பயிற்சி உதவித் தொகை ரூ. 55 அளிக்கப்படுகிறது. மேற்சொன்ன காரியத்திற்காக 1971–72-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 20,100 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தொழிற் பயிற்சி நிறுவனங்கள், பயிற்சியாளர்கள் விடுதிகள், பணியாளர் குடியிருப்புகள் ஆகியவற்றுக்கான கட்டிடங்கள் கட்டுதல்.

முப்பது தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் உள்ளன. இருபத்து மூன்று பயிற்சி நிறுவனங்களுக்கு விடுதி வசதிகள் உள்ளன. மீதம் உள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்குப் படிப்படியாக நிறைவேற்றும் திட்ட அடிப்படையில், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்துள் விடுதிகள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் இருபத்திரண்டு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பணியாளர் குடியிருப்புகள் அமைக்கப் பட்டுள்ளன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதிக்குள்ளாக மீதமுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களிலும் பணியாளர் குடியிருப்புகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

[1971 ஜூலை 9

## அனைத்து இந்திய திறமைப் போட்டி.

தொழிற் பயிற்சி நிறுவனங்களிலாயினும் சரி, தொழில் பயிலும் காலத்திலாயினும் சரி, பயிற்சித் தரத்தை மேம்படுத்த அரசு பெரு முயற்சி மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் குறித்த காலத்துக்கொருமுறை வேலைத் திறமை மதிப்பிடுதல், முன்னேற்றச் சோதனைகள், முறையான பயிற்சி அளித்தல் ஆகியவை அடங்கிய வேலைத் திட்டவாயிலாக, தொழிற் பயிற்சி நிறுவனங்களில் அளிக்கப்படும் பயிற்சி போதிய தரமுடையது என்றும் ஒவ்வொரு ஆண்டும் இத்தரம் மேம்பட்டுள்ளது என்றும் உறுதி செய்துகொள்ள முடிகிறது. இதுவரை நடந்துள்ள ஏழு அனைத்து இந்தியத் திறமைப் போட்டிகளில் முதல் ஆறு போட்டிகளில் தொடர்ச்சியாக தமிழ் நாடு ஒன்று அல்லது இரண்டு தொழில்கள் குறித்து முதற்பரிசைப் பெற்றுள்ளது. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன—

| | தொழில்கள். |
|---|---|
| முதலாவது போட்டி .. .. | இயந்திரப் பணியாள். |
| இரண்டாவது போட்டி .. .. | மின்சாரப் பணியாள். |
| மூன்றாவது போட்டி .. .. | பற்ற வைப்பவர், கடைசல் பிடிப்பவர். |
| நான்காவது போட்டி .. .. | இயந்திரப் பணியாள், மின்சாரப் பணியாள். |
| ஐந்தாவது போட்டி .. .. | கடைசல் பிடிப்பவர், மின்சாரப் பணியாள். |
| ஆறாவது போட்டி .. .. | மோட்டார் கம்மியர், மின்சாரப் பணியாள். |

மொத்தமாகப் பார்க்குமிடத்தும், இந்தியாவிலேயே "சிறந்த மாநிலம்" என்று அறிவிக்கப்பட்ட பெருமையும், மூன்று முறை குடியரசுத் தலைவரின் சுழற்கேடயம் பெறும் சிறப்பும் தமிழ் நாட்டிற்குக் கிடைத்துள்ளது.

## மானியம் பெறும் தொழிற் பள்ளிகள்.

வேலை வாய்ப்பு—பயிற்சித் துறை, இம் மாநிலத்திலுள்ள தனியார் தொழில், தொழில் நுட்பப் பள்ளிகளின் பணியை மேற்பார்வையிடுகிறது. இப்பள்ளிகளில் பயிற்சி பெற்றுத் தேறுகிற பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்களை வேலைவாய்ப்பு பயிற்சித் துறை அளிக்கிறது. மானியம் பெறும் 57 தொழிற் பள்ளிகளுக்கு இத் துறையினால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. தொழிற் பள்ளிகளின் "ஒழுங்கு முறை விதிக் கோவையின்" கீழ் இந்தப் பள்ளிகளைப் பேணுவதற்கும், கருவிகளுக்கும், கட்டிடங்களுக்கும் மானியங்கள் அளிக்கப்படுகின்றன. மேலே குறிப்பிட்டுள்ள மானியத்தை வழங்கவும், திட்டஞ்சாராப் பணிகளின்கீழ் இயக்குநர் அலுவலகம் பணியாளர்கள் தொடர்பான செலவுக்காகவும் 1971–72-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3.20 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



1971 ஜூலை 9]

# அதிகாரம் VI

## இசையும் கலைகளும்.

## அரும் பொருட்காட்சி சாலை.

1971–72-ல் அரும் பொருட்காட்சி சாலைக் கலை அரங்கத்துக்கு நவீன மேடை ஒளி அமைப்புச் சாதனம் நிறுவுதல், கலை அரங்கத்துக்குக் குளிர் நிலை வசதி செய்தல் ஆகிய மேம்பாடுகளைச் செய்யக் கருதப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள அரசினர் அரும் பொருட்காட்சி சாலையின், விலங்கியல் பிரிவுக்கும், புகைப்படப் பிரிவுக்கும், 1971–72-ஆம் ஆண்டில் புதிய கட்டிடங்கள் கட்டவும் கருதப்பட்டுள்ளது. 1971–72-ல், இப் புதிய கட்டிடங்களுக்கு ஏறத்தாழ ரூ. 1,15,000 செலவாகும்.

## தமிழ் நாடு சங்கீத நாடக சங்கம்.

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், திரைப் படம், நுண்கலை, இசை, நாடகம் ஆகியவற்றைப் பேணி வளர்க்கும் பணிகளையும், அவற்றின் மூலம் தமிழ் நாட்டில் பண்பாட்டுப் பணிகளை மேம்படுத்தும் செயல்களையும் தொடர்ந்து ஆற்றியது.

சங்கம் திறமையுள்ள இளம் கலைஞர்களை ஊக்குவிக்கின்றது; தனது ஆதரவின்கீழ் நிகழ்ச்சிகளை நடத்த அவர்களுக்கு வாய்ப்புகள் அளிக்கின்றது. இசை, நாட்டிய நாடகம், திரைப்படம் ஆகிய துறைகளில் சிறந்த திறமையுடைய கலைஞர்களுக்கு இச் சங்கம் பரிசுகளும் பாராட்டிதழ்களும் வழங்குகிறது.

1970–71-ல், இச் சங்கம் தனது பணிகளுக்காக, ரூ. 1.66 லட்சம் மானியம் பெற்றது. 1971–72-ம் ஆண்டில் இச் சங்கத்துக்கு மானியம் அளிக்க ரூ. 2,40,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநில அரசு இந்திய அரசுடன் கூட்டாக நிதி உதவி அளிக்கும் ஒரு திட்டத்தின்கீழ் சுமார் 300 சிறந்த கலைஞர்களுக்கு (இசைக் கலைஞர்கள், நடிகர்கள், எழுத்தாளர்கள் ஆகியவர்களுக்கு) தற்போது திங்களொன்றுக்கு ரூ. 50 முதல் ரூ. 150 வரை, ஓய்வூதியம் அளிக்கப்பட்டு வருகின்றது. தத்தம் துறைகளிற் சிறந்து விளங்கிய கலைஞர்கள், அத் துறைகளில் முறையாகப் பங்கு பெறுவதிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், வறிய நிலையில் வாழ்ந்து வருகின்ற சிறந்த கலைஞர்களுக்கு உதவி அளிப்பதற்காக இத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு, ஏற்கெனவே ஒப்பளித்த ஓய்வூதியங்கள் தொடர்பாகத் தங்கள் பங்கினைத் தொடர்ந்து அளித்து வருகின்றது. ஆனால், 1970–71-லிருந்து, இந்திய அரசு புதிய ஓய்வூதியங்கள் எதற்கும் ஒப்பளிப்பு வழங்குவதற்குத் தங்களால் இயலாதென்று, மாநில அரசிடம் தெரிவித்துள்ளது. தங்கள் நிலையை மறு ஆய்வு செய்யுமாறு மத்திய அரசை இவ்வரசு வற்புறுத்திவந்துள்ள போதிலும், இதுவரை இதற்கு எவ்விதப் பயனும் கிட்டவில்லை எனவே, தகுதி வாய்ந்த இசை வல்லுநர்கள், கலைஞர்கள், கலை வல்லார்கள், நடிகர்கள் ஆகியோர் தங்களது முதுமைக் காலத்தில் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இயலாதபோது, அவர்களுடைய

சிறந்த தகுதிகளைக் கருதி அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு, இதற்காகும் செலவைப் பங்கிட்டுக்கொள்ள மாநில அரசு, இந்திய அரசின் இசைவை எதிர்பார்த்து மாநில அரசு இதற்காகும் செலவு முழுவதையும் ஏற்பதென முடிவு செய்துள்ளதோடு இதற்காக 1971–72-ம் ஆண்டில் ஆகும் செலவிற்கென ரூ. 2 லட்சம் வழங்க ஒப்பளிப்பும் வழங்கியுள்ளது. 1971–72-ல் சுமார் 200 பேருக்கு ஓய்வூதியம் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

## கர்நாடக இசை மத்திய கல்லூரி.

கர்நாடக இசையில் மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான கர்நாடக இசை மத்தியக் கல்லூரி (அரசுக் கல்லூரி) தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சங்கீத வித்வான் பட்டம் பெறுவதற்கான இரண்டாண்டுப் பயிற்சி இக் கல்லூரியில் அளிக்கப்படுகிறது. இக் கல்லூரியில் இசை ஆசிரியர் பயிற்சிப் பாடமுறையும் நடத்தப் படுகிறது. ரூ. 3 லட்சம் செலவில் இக் கல்லூரி மாணவர்களுக்கு மாணவர் இல்லம் கட்டுவதற்கான விரிவான திட்டங்களுக்கும் மதிப்பீடுகளுக்கும் 1969–70-ல் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இக் கட்டிடம் முற்றுப்பெறும் தறுவாயில் உள்ளது.

## தொல்பொருள் துறை.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக மேலும் சில பணிகளை மாநிலத் தொல்பொருள் துறை 1971–72-ல் மேற்கொள்ளக் கருதியுள்ளது. மதுரையிலுள்ள திருமலை நாய்க்கர் மகால் படிப்படியாகப் பல நிலைகளில் செப்பனிடப்படும்.

தமிழ் நாட்டில் உள்ள கோயில்கள், தொல்பொருள் சின்னங்கள் ஆகியவற்றில் தமிழிலும் பிற மொழிகளிலும் எழுதப்பட்டுள்ள தொன்மையான கல்வெட்டுக்களைப் படி எடுக்கும் வேலையை 1966-ம் ஆண்டு வரை மைசூரிலுள்ள, இந்திய அரசின் தலைமைக் கல்வெட்டாய்வாளர் மட்டுமே கவனித்து வந்தார். 1966-ல் தமிழ் நாட்டிலுள்ள தொன்மையானவையும் வரலாற்றுத் தொடர்பான வையும் ஆன சின்னங்கள் குறித்த இம் மாநிலச் சட்டம் இயற்றப் பட்டபின் மேற்சொன்ன வேலையை மாநில தொல்பொருள் ஆய்வுத் துறை மூலமாக மாநில அரசும் மேற்கொள்ளலாமென முடிவு செய்யப்பட்டது. ஏற்கெனவே தலைமைக் கல்வெட்டு ஆய்வாளரால் படி எடுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள இம் மாநிலக் கல்வெட்டுக்களின் படிகளை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாமென்றும் இதுவரை அவரால் படி எடுக்கப்படாத கல்வெட்டுக்களை அவை செதுக்கப் பட்டுள்ள இடங்களுக்குச் சென்று படி எடுத்துக்கொள்ளலா மென்றும் முதலில் கருதப்பட்டது. மைசூரிலுள்ள தலைமைக் கல்வெட்டாய்வாளரிடம் இருந்து கல்வெட்டுக்களின் படிகளைப் பெறுவது குறித்து இந்திய அரசு சில தடங்கல்களை எழுப்பியுள்ளது. இது குறித்து நெடுநாள் மைய அரசின் ஒப்புதல் கிட்டாமலிருப்ப தால் இம் மாநில அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறையிலிருந்து கல் வெட்டாய்வாளர் ஒருவரை மைசூருக்கு அனுப்பி அங்குள்ள



தலைமைக் கல் வெட்டாய்வாளரிடமிருந்து படிகளைப் பெற்றுவர ஏற்பாடு செய்யக் கருதப்பட்டுள்ளது. இதுவரை இந்திய அரசுத் தலைமைக் கல் வெட்டாய்வாளராலோ அன்றி மாநிலத் தொல் பொருள் ஆய்வுத் துறையாலோ படியெடுக்கப்படாமல் உள்ள கல்வெட்டுக்கள் பல. அவற்றைப் படி எடுக்கத் திட்டம் வகுத்து மாவட்ட வாரியாக இவ்வேலையைச் செய்து இன்னும் சில ஆண்டு களுக்குள் நிறைவேற்ற மாநிலத் தொல்பொருளாய்வுத் துறை கருதி யுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 1966-ம் ஆண்டு முதல் 1,220 கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன.

# அதிகாரம் VII

## தமிழ் வளர்ச்சி.

கீழ்க்காணும் அமைப்புக்களின் பணியைத் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கவனித்து வருகிறார்; இவர் இப்போது கல்வித் துறையின்கீழ் பணியாற்றி வருகிறார்.

(1) ஆட்சி மொழிக் குழு.

(2) தமிழ் வளர்ச்சி—ஆராய்ச்சி மன்றம்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் அலுவலகம் சீரிய வகையில் சீரமைக் கப்பட்டு, அது மேலும் திறமையாக இயங்கும் வண்ணம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

ஆட்சிமொழிக் குழு, 1957-ஆம் ஆண்டிலிருந்தே, ஆட்சிமொழிச் சட்டத்தின் விதித்துறைகளை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுள்ளது. 1957-லிருந்து 1963 வரையிலான காலத்தில் மாவட்ட நிலை அலுவலகங்களில் தமிழில் கடிதப் போக்குவரத்து முதலில் தொடங்கி வைக்கப்பட்டது. 1963-ல் தமிழ்த் திட்டம் அரசு கடிதப் போக்குவரத்திலும் செயல்படுத்தப்பட்டது. 1966 மேயிலிருந்து (சட்ட, நிதித் துறைகள் நீங்கலாக) தலைமைச் செயலகத் துறைகளில் இது கொண்டுவரப்பட்டது. நிதி, சட்டத் துறைகளிலும் கூட, 1970 ஏப்ரல் 1-ம் நாள் முதற்கொண்டு, தமிழை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் ஒரு தொடக்க முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

இச் சட்டத்தைத் தகுந்தவாறு செயல்படுத்துவதில் அரசுக்கு ஆலோசனை நல்குவதோடு, இந்த ஆட்சிமொழிக் குழு, விதிமுறைக் கோவைகள், நடைமுறை நூல்கள் முதலியவற்றை மொழி பெயர்க்கும் பணியையும் கவனித்து வருகிறது. இத் திட்டம் நிறை வேறுவதில் ஏற்படும் முன்னேற்றத்தைக் கண்காணித்து, ஆங்காங்கே தக்கவாறு ஆலோசனைகள் நல்கி, துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட நிலை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்யும் அதிகாரியாகத் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் பணியாற்றி வருகிறார். தனி (ஆய்வு) அலுவலர் ஏனைய அலுவலகங்களை ஆய்வு செய்யும் பணியைக் கவனித்து வருகிறார். இச் சட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற் காக, மாவட்ட நிலையில் மேலும் ஒன்பது தனி (ஆய்வு) அலுவலர்

களை நியமிக்கும் கருத்துள்ளது. சட்டமுறை விதிக்கோவைகள் முதலியவற்றை விரைவாக மொழிபெயர்த்துக் கொடுக்க மேலும் மொழிபெயர்ப்பு அலுவலர்கள் இருவரையும், படி திருத்துபவர்களை யும் நியமிக்கும் செயற்குறிப்பும் உள்ளது.

தமிழ் வளர்ச்சி-ஆராய்ச்சி மன்றம் 1959-ல் அமைக்கப்பட்டது. தமிழ் எழுத்துக்களுக்கு இணையான ரோமன் எழுத்துக்கள், தமிழ் நாட்டின் பண்டைய சிறப்பு வரலாறு ஆய்வு போன்ற தமிழ்மொழி வளர்ச்சி குறித்தவற்றில் நாட்டஞ் செலுத்தி, இந்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை நடவடிக்கைகளுடன் இப் பணியை ஒருங்கிணைத்துச் செயல்படுகிறது. தமிழக வரலாற்றை ஆதாரங் களுடன் வரைவதற்குக் குழு ஒன்று அமைக்கப்படலாம் என்று அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மன்றம் தீர்மானம் கொண்டுவந்தது. இக் குழுவை அமைத்து அரசு 1971 ஜூனில் ஆணை பிறப்பித்துள்ளது. இப் பணிக்காக 5 ஆண்டுக் காலத்தில் செலவிடுவதற்கு ரூ. 7 லட்சத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தமிழில் சிறந்த நூல்கள் வெளிவருவதற்கு ஆக்கம் தரும் வகை யில் ஆண்டுதோறும் தமிழில் வெளியாகும் சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் அளிக்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. வெவ் வேறு வகையான 20 பொருள்களில் சிறந்த நூல்களுக்கு 1970–71 வரை, ரூ. 1,000 பரிசுத் தொகை அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. 1971–72-லிருந்து, ரூ. 2,000, ரூ. 1,000, என இரு பரிசுத் தொகைள் மேற்சொன்ன 20 பொருள்கள் ஒவ்வொன்றிலும் எழுதப்படும் சிறந்த நூலுக்குப் பரிசு வழங்குவதென்று அரசு முடிவு செய்துள்ளது. தமிழ் நூலாசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில், 1,000 நூல்களை அச்சிடும் செலவில் பாதியை அரசு ஏற்று நிதி உதவி யும் அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்க் கலைக் களஞ்சியமும், சிறுவர் கலைக் களஞ்சியமும் வெளி யிடும் பணியில் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஈடுபட்டுள்ளது. இம் முயற்சியில் மத்திய, மாநில அரசுகள் இக் கழகத்திற்குப் பெரி தும் உதவி வருகின்றன.

தென் மொழிகள் நூல் கழகம், தமிழில் "யூனெஸ்கோ-கூரியர்" என்னும் இதழை வெளியிட்டு வருகிறது. இதற்காக, 1967–68-லிருந்தே மாநில அரசு ஆண்டுதோறும் மானியமாக ரூ. 24,500 அளித்து வருகிறது. இக் கழகம் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் நூல்கள் வெளியிடுவதுடன், தமிழில் பயனுள்ள நூல்களையும் வெளியிடுகிறது. இதற்காக, இவ்வரசு ஆண்டுதோறும் மானியமாக ரூ. 12,000 அளித்து வருகிறது.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1971 ஜூலை 10

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினக்கள்.

*System of Education.*

*180 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether this Government has any proposal to conduct a survey as to whether co-education or single sex education is best suited for our State; and

(*b*) if so, the details thereof?

<u>மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :</u> (அ) இல்லை.

(இ) இவ்வினவுக்கு இடமில்லை.

Dr. H. V. HANDE : Sir, I came to understand that there was a proposal by this Government to examine the various aspects of this co-educatton. Have this Government come to any decision as to whether they should have co-education at the collegiate level or at the high school level or at any particular point single sex education is to be had and later on co-education? Have this Government also examined that better atmosphere for understanding each other and greater opportunities for developing uninhebited personally are also there, if co-education is put into operation and also as some lecturers feel that some attendance performance will be noticed ? Will the Hon. Minister for Education tell us whether all these aspects have been gone into?

<u>மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவர் அவர்களே, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இருபாலாரும் சேர்ந்து பயிலலாமா என்பதைப்பற்றி ஆராய அரசாங்கம் தனிக் குழு எதையும் அமைத்து அதன் வாயிலாகக் கருத்துக்களை அறிந்துகொள்ளவில்லை. ஆனால், பொதுவாக, காலமும் கருத்தும் வளருகிற சூழ்நிலையைப் பார்ப்போ மானால், இரு பாலாரும் சேர்ந்து பயிலவேண்டும் என்ற கருத்துத் தான் பெரும்பான்மையான மக்களிடத்தில் நிலவி வருகிறது. இப்பொழுதிருக்கும் நிலையில், துவக்கப்பள்ளி நிலையில், 1 முதல் 8 வகுப்பு வரையில் இரு பாலாரும் சேர்ந்து படிக்கிறார்கள். பிறகு, எங்கெங்கு பெண்கள் உயர்நிலைப்பள்ளிகள் தனியாக இல்லையோ அங்கே ஆண்களுக்குரிய பள்ளிகளில் இருபாலாரும் சேர்ந்து 11-வது வரையில் பயிலுகிறார்கள். எங்கே தனியாக ஒரு பெண்கள் பள்ளி

வைக்க எண்ணிக்கை வலிவு ஏற்படுகிறதோ அங்கே தனியாகப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி வைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. அப்படி இல்லாத இடத்தில் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் பெண்களும் சேர்க்கப்படுகிறார்கள். பிறகு, கல்லூரிப் பட்டப் படிப்பிலும், மேற்பட்டப் படிப்பிலும் சென்னைப் பல்கலைக்கழகம், மதுரைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் பெண்கள் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். ஆனால், புகுமுக வகுப்பில் மட்டும் பெண்களைச் சேர்க்க சென்னைப் பல்கலைக்கழகமும், மதுரைப் பல்கலைக்கழகமும் மறுத்து வருகின்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எல்லா வகுப்புகளிலும் மாணவ—மாணவியர்கள் சேர்ந்துதான் பயிலுகிறார்கள். ஆனால், அரசைப் பொறுத்த வரையில், இரு பாலாரும் சேர்ந்து பயிலவேண்டும் என்கிற கொள்கையைத்தான் வலியுறுத்தி, அதற்கேற்றபடி கல்லூரிக் கல்வி இயக்குநர் அடிக்கடி எடுத்துச் சொல்லுகிறார். ஆனால், சிண்டிகேட் அவை முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. புகுமுக வகுப்பில் ஆண்கள் கல்லூரியில் பெண்கள் சேர்ந்து பயிலவேண்டாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மதுரைப் பல்கலைக்கழகம் இந்தக் கருத்தை மறுபடியும் ஆலோசிக்கலாம் என்று ஒத்திவைத்திருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், இதுபற்றி முடிவு ஏதும் சொல்லாமல் இருக்கிறார்கள். புகுமுக வகுப்பைப் பொறுத்த வரையில் ஆண்கள் கல்லூரியில் பெண்களைச் சேர்க்க வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். அதனால் ஏற்படுகின்ற இடையூறுகளைப் பற்றி எடுத்துச் சொன்னோம். ஒரு கல்லூரி மட்டும் இருக்கிற ஊர்களில் பெண்களின் பெற்றோர்கள் விரும்பினால் அவர்களைச் சேர்ப்பதிலே எந்தத் தடையும் இருக்க வழி இல்லை. ஆனால், பெண்களுக்கென்றே இருக்கக்கூடிய தனிக் கல்லூரிகளில்—அடுத்துள்ள மற்ற ஊர்களில்—இடம் தேடிச் சென்றால் சேர்க்கட்டும். ஆனால், குறிப்பாக, அரியலூர், விழுப்புரம், திண்டிவனம், விருத்தாசலம் போன்ற ஊர்களை எடுத்துக்கொண்டால் அங்கே ஒரே ஒரு கல்லூரி தான் இருக்கிறது. அங்கே பெண்கள் கல்லூரிப் படிப்பு படிக்க வாய்ப்பு இல்லை. பெண்கள் வேறு ஊர்களுக்குப் போய்ப் படிக்க வேண்டியிருக்கிறது. இந்தக் கருத்தை இன்னும் அரசாங்கம் வலியுறுத்தி வருகிறது. சென்னைப் பல்கலைக்கழகமும், மதுரைப் பல்கலைக்கழகமும் இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலமாக வற்புறுத்தும் நிலையில் இருந்து வருகிறது.

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, எந்த ஒரு பொருள் விலகியிருக்கின்றதோ அந்தப் பொருளின்மீது பற்றுதல் ஏற்படுவது மனித இயற்கை. ஆகவே, ஆண்களையும் பெண்களையும் பிரித்து வைக்கும் காரணத்தால் இளைஞர்கள் மத்தியில் சில தவறான நிகழ்ச்சிகள் நடந்து வருவதால், சிறு வயதிலிருந்தே ஆண்களையும் பெண்களையும் ஒன்றாகப் பழக வைத்தால் இந்த நிலைமை மாறும் என்பதை அரசு உணருகிறதா? அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதுபற்றி இரு வேறு கருத்துக்கள் உண்டு. ஒன்றாகச் சேர்க் கூடாது என்று சில பேர்கள் கூறுகிறார்கள். பெட்ரோலையும் நெருப்பையும் பக்கத்தில் பக்கத்தில் கொண்டுவரக் கூடாது என்ற கருத்தைச் சிலர் கூறுகிறார்கள். ஆகவே, இரு பாலாரும் வாழ்க்கையில் ஒன்று சேர்ந்து பல்வேறு கட்டங்களில் பழக வேண்டிய நிலை இருப்பதால், பள்ளிகளில் பழகாமல் விட்டுவிட்டு, பிறகு பழகுகிற நிலை ஏற்படும்போது முற்போக்குக்கு இடம் தராது. மற்ற நாடுகளில் முற்போக்குக்கு இடம் தரக்காரணம், அடி மட்டத்திலிருந்து இருவரும் சேர்ந்து பயின்று, பழகும் தன்மை ஏற்படுவதன் காரணமாக என்று எடுத்துச் சொல்லப்படுகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் விதிகளில் கூட, இதற்கென்று விதி ஏற்படுத்த அரசு ஆயத்தமாக இருக்கிறது என்று கூறியிருக்கிறோம். ஆண்கள் கல்லூரியில் பெண்களைச் சேர்க்க வேண்டுமென்றால், பெண்கள் ஓய்வெடுத்துக் கொள்வதற்குத் தனியான ஓய்வறை இருக்கவேண்டும் என்றும், யாரேனும் பெண் பேராசிரியர் அதிலே இருக்கவேண்டும் என்றும் கூறினார்கள். அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான். எல்லோரும் ஆடவர்களாக இருப்பார்களானால், அங்கே பெண்கள் தங்குவதற்கு தனியாக ஓய்வறை இல்லாமலிருந்தால் பல சங்கடங்கள் ஏற்படும். அந்த நிபந்தனையை வேண்டுமானால் ஏற்றுக்கொண்டு வற்புறுத்தலாம் என்றும், ஆனால், பெண்களைச் சேர்க்க அனுமதி அளிக்கவேண்டும் என்ற கருத்தைத்தான் அரசு வலியுறுத்தி வருகிறது.



திரு. கே. டி. கே. தங்கமணி: ஆண்களோடு பெண்களும் சமம் என்று உத்தரவாதம் கொடுக்கப்பட்ட பின்னரும் கூட, சென்னை பல்கலைக்கழகமும் மதுரைப் பல்கலைக்கழகமும் புகுமுக வகுப்பில் பெண்களைச் சேர்க்க மறுப்பது சரியல்ல என்று சொல்லி, இந்த ஆண்டு சேர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னபடி, சிண்டிகேட் அவை அதற்கு இசைவு தரவில்லை. கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலமாக மீண்டும் வற்புறுத்துகிற நிலையைத்தான் அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன்: மன்னை, தஞ்சை போன்ற பகுதிகளில் அமைந்துள்ள மகளிர் பள்ளிகளில் பெரும்பாலானவை கிறித்துவ மதத்தினர் நடத்தும் பெண்கள் பள்ளிகளாக இருக்கின்ற காரணத்தால், இந்து மதப் பெற்றோர்கள் தங்கள் பெண்களை ஆண்கள் பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பதை இந்த அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பள்ளிகள் எப்படியிருந்தாலும், ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாணவர்களை ஈர்ப்பதாக இருந்தால்தான் வருந்தத்தக்கதாகும். கிறித்துவப் பள்ளிகள், இஸ்லாமியப் பள்ளிகள், இந்துப் பள்ளிகள், இன்னும் வேறுபல பள்ளிகள் இருக்கின்றன. வேறுபாடு காட்டக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. மதத்தின் காரணமாகவோ ஜாதியின் காரணமாகவோ யாரையும் எந்தப் பள்ளியிலும் சேர்க்க முடியாது என்று சொல்லுவதற்கு இன்றைக்கிருக்கும் சட்டப்படி வாய்ப்பு இல்லை. அப்படி யாராவது தடுத்து நிறுத்தினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வழி இருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி : ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிப்பதைப்பற்றி இருவேறு கருத்துக்கள் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இரு பாலாரும் சேர்ந்து படிப்பதால் ஒழுக்கக் குறைவு ஏற்படுகிறது என்பதை அரசு உணருகிறதா? ஆம் எனில், அதுபற்றி விளக்கம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கென்று ஒரு அளவு கருவி வைத்து அரசாங்கம் ஆராய்ந்து பார்க்கவில்லை. சேர்ந்து படிப்பதாலும் ஒழுக்கக் குறைவு ஏற்படலாம். தனித்துப் படித்தாலும் ஒழுக்கக் குறைவு ஏற்படலாம். சென்னையில் இருக்கிற கலைக் கல்லூரி ஆண்களுக்கென்று தனியாக இருக்கிறது. எத்திராஜ் கல்லூரி பெண்களுக்கென்று தனியாகத் தான் இருக்கிறது. தனித் தனியாக இருப்பதன் காரணமாக ஏற்படுகிற விளைவுகளையும் நாம் பார்க்கிறோம். சைக்காலஜிபடி பார்த்தோமானால், பெண்களைப் பார்க்காமலேயே இருப்பதன் காரணமாக மாணவர்கள் படிப்பிலே கவனம் செலுத்துவதில்லை என்றும், அவர்கள் ஒரு தடவை பார்த்தால் பிறகு படிப்பைக் கவனிப்பார்கள். அப்படிப்பட்ட சைக்காலஜியும் இருந்து வருகிறது. இருவேறு கூறுபாடுகள் இருக்கின்றன. நாட்டின் நிலை, பொருளாதார நிலை, எதிர்கால வாழ்வு, சமுதாய வளர்ச்சி ஆகியவற்றைக் காணும்போது, இரு பாலாரும் சேர்ந்து பயிலுதல் வேண்டும் என்கிற கருத்துத்தான் பெரும்பான்மையோரிடத்தில் நிலவி வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இருபாலாரும் சேர்ந்து படிப்பதற்கு சிண்டிகேட் அனுமதி அளிக்காததால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இரு பாலாரும் சேர்ந்து படிக்கிற இடங்களில் ஆண்கள் ஒழுங்காக கல்லூரிக்கு வரத் தவறுவதில்லை. பெண்களுக்கு எதிரில் ஆசிரியர் கேள்வி கேட்கிறபோது பதில் சொல்லத் தெரியாது விழிக்கக் கூடாது என்று நன்றாகப் படிக்கவும் படிக்கிறார்கள். இருபாலாரின் தரமும், அதே நேரத்தில் ஒழுக்கமும் நன்றாக இருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையில் இருபாலாரும் சேர்ந்து படிக்கவேண்டுமென்ற அடிப்படையில் இக்கருத்தை அரசு வலியுறுத்த முற்படுமா?

Mr. SPEAKER : It is not in good taste. I disallow the question.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆண்களும் பெண்களும் படிக்கிற பள்ளியின் ரிசல்ட் எப்படியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட கணக்கு தனியாக எடுக்கவில்லை. ஆண்களைப் பொறுத்தவரையில் வேறுவகையில் கவனம் அதிகமாகச் செலுத்தப்படுகிறது. படிப்பில் மகளிர் அதிகமாக கவனம் செலுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்தக் காரணத்தினால் ஆண்கள் கல்லூரிகளைவிட, பெண்கள் கல்லூரிகளின் ரிசல்ட் அதிகமாக இருக்கிறது என்பதுதான் ஆங்காங்கு காணப்படுகிற பொதுவான கருத்து.





திரு. ஆர். முனியாண்டி : பின்தங்கிய பகுதியில் மகளிர் கல்வி முக்கியத்தைக் கருதி அரசிற்குப் பொறுப்புத் தொகையாக 15 ஆயிரம் ரூபாய் தரப்படவேண்டும் என்பதை 5 ஆயிரம் தந்தால் போதும் என்கிற வகையில் அரசு ஆலோசனை செய்ததா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. ப. முத்துசாமி : பெண்களும், ஆண்களும், ஒன்று சேர்ந்து படிப்பதன் மூலம் காதல் திருமணம், கலப்புத் திருமணம் ஏற்பட்டு சாதிகள் ஒழிய சந்தர்ப்பம் ஏற்படும் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் கூறுவதைப் போன்ற கருத்து உடையவர்களும் இருக்கிறார்கள்.

*Seminar on Women's Education.*

*181 *Q*—Thiru O. N. SUNDARAM : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any State Level Seminar on Women's Education was conducted at Madras City on or about the 23rd March 1971; and

(*b*) if so, the details thereof.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மாநில மகளிர் கல்விக் கருத்தரங்கு மார்ச்சு மாதம் 23-ஆம் தேதி முதல் 25-ஆம் தேதி வரை சென்னை வில்லிங்டன் சீமாட்டி பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் மகளிர் கல்வி பற்றிய பல முக்கியமான பிரச்சினைகள் விவாதிக்கப் பட்டன. இக்கருத்தரங்கின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தக் கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டு, அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யப்பட்ட பரிந்துரைகள் எவை எவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பெண்கள் கருத்தரங்கில் சில தலைப்புக்களில் எல்லாப் பிரச்சினைகளும் ஆராயப்பட்டு கருத்துக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பெண்கள் கல்வி கற்பதற்குத் தடையாக உள்ள இடையூறுகள் என்ன என்ன, என்பதும், குழந்தைகள் கல்வி சம்பந்தமான திட்டங்களை விரிவாக்குதல் என்பதும், ஆசிரியர்கள் பெரும் அளவில் பணிபுரிய வசதி அளித்தல் என்பதும், ஆரம்பக் கல்வி போதிக்கும் பொறுப்பை முழுக்க பெண்களுக்கே அளிக்கவேண்டும் என்பதும், பயிற்சிப் பள்ளியில் நுழைவு முறையைச் சீர்திருத்தல் என்பதும், பயிற்சி பெற்றோருக்கு வேலையும், வாழ்க்கை வசதிகளையும் அளிப்பதில் உள்ள இன்னல்களும், கிராமத்தில் பெண்கள் கல்வி அறிவினைப்பெற்று

[1971 ஜூலை 10

சுத்தம், சுகாதாரம் போன்றவற்றைப் பாதுகாப்பது என்பதும், பெண்கள் கல்வியில் நவீன முறையைப் பின்பற்றல், மகளிர் மன்றங்கள் அமைத்தல், வண்ண வண்ண சுவரொட்டிகள் மூலம் பெண் கல்வியைப் பரப்புதல் முதலியன ஆகும்.

DR. H. V. HANDE : Sir, there is a general feeling among a large section of the people that the education that is given to women is not utilised fully after they become wives or house-wives and that they only look after their own homes. Of course there is a special subject called 'Home Science' taught in colleges but only a small percentage of them use the education for useful purpose. So, will this Government come forward to bring about a reorientation of the education of women and see that most of the women who have studied upto the graduate or post-graduate level are given opportunities to utilise education for the uplift of women and for the uplift and improvement of the society?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது மிகச்சிரமமான நிலையாக இருக்கும். கூடுமான வரையில் பெண்கள் படிப்பது வாழ்வில் அவர்களுக்கும், சமுதாயத்திற்கும் பயன் அளிக்கக்கூடியதாக அமைவதுதான் சிறந்தது. ஆனால் இன்றையதினம் கெமிஸ்ட்ரி ஆனர்ஸ், பாடனி ஆனர்ஸ் என்பதாக எல்லாம் படித்துவிட்டு, அவர்கள் குடும்ப வாழ்வில் ஈடுபடத் தொடங்கியதும் படித்த படிப்பு அவர்கள் வாழ்வுக்குப் பயனில்லாது போகிறது. இதுபோன்ற நிலையில் இது நாட்டுக்கும் நட்டமாகி விடுகிறது. அதோடு ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் இருப்பதுபோல பெண்கள் நம் நாட்டில் பல துறைகளிலும் பணியாற்றக்கூடிய சூழ்நிலை உருவாகவில்லை. ஆசிரியர் தொழில், மருத்துவத் தொழில், எழுத்தர் தொழில் போன்றவற்றில் ஈடுபடுகிற வாய்ப்புத்தான் இருக்கிறது. ஆக, பெண்கள் கல்வியில் மாறுதல் ஏற்படுவதோடு, சமுதாய மாறுதலும் ஏற்பட்டாக வேண்டும். இன்றையதினம் பெண்களுக்கு ஹோம் சயன்ஸ், க்ராப்ட் பயிற்சி, இசைப்பயிற்சி, இன்னும் டைப்ரைடிங் போன்ற காமர்ஸ் சப்ஜக்ட் பயிற்சி ஆகியவை அளிக்கப்படுகிறது.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, the Hon. Minister has stated that the resolutions passed at the Women's Seminar are under the consideration of the Government. Will the Government come forward to place the resolutions and their decision on the table of the House before the next session?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப் பரிசீலித்ததற்குப் பிறகு வைக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தக் கருத்தரங்கில் திருமணம் ஆன பிற்பாடு எந்தப் பகுதியிலும் வேலையில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு போய்விடக்கூடாது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அதுபற்றி நம் அரசு எடுத்துள்ள முடிவு என்ன?



1971 ஜூலை 10]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பணியாற்றுவதில் அவர்களுக்கு உள்ள இன்னல்களைப்பற்றி எல்லாம் ஆராய்ந்திருக்கிறார்கள். இதுபற்றியும் ஆராய்ந்திருக்கலாம். அவர்களது பரிந்துரைகளைப் பரிசீலனை செய்த பிறகே முடிவு எடுக்க முடியும்.

திரு. கோவை செழியன் : உட்கல், பகல்பூர் போன்ற பல கல்லூரிகளில் பெண்கள் சேர்ந்து படிக்காமலேயே ப்ரைவேட்டாகப் படித்து பரிட்சை எழுதலாம் என்று செய்திருக்கிறார்களே, அதுபோல தமிழ்நாட்டுக் கல்லூரிகளிலும் ஏற்படுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வேறுபல மாநிலங்களில் அத்தகைய வசதி இருப்பதைப்போன்று இங்கும் ஏற்படுத்தப் படவேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்து. இதுபற்றி பல்கலைக் கழகங்களுக்கு யோசனை கூறியுள்ளோம். மதுரை பல்கலைக் கழகம் தபால் மூலம் படிக்க வசதி ஏற்படுத்த அனுமதி கோரியது, அரசும் மதுரை பல்கலைக் கழகத்திற்கு அத்தகைய அனுமதியை அளித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*Tahsildars for posts of Block Development Officers.*

*182 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether there is any proposal to select Tahsildars to fill up the posts of Block Development Officers in Rural Development Department; and

(b) if so, the percentage of such posts to be filled up?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Was there at any time any proposal that the Government would bring about a better understanding between the State Government headquarters here and block development department to see that this work done at block development is more effectively done and in view of the fact that there is another proposal to change the method of appointment which is now in vogue by giving better representation to high cadre officers being appointed to this job, will the Hon. Minister be pleased to tell us whether further reorganisation is going to take place in this department?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையினுடைய அமைப்புகள், பணிகள் ஆகியவற்றையெல்லாம் சீர்ப்படுத்தி, செம்மைப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு நிர்வாக சீர்திருத்தக் குழுவினிடத்தில் விடப்பட்டிருக்கிறது. இந்தப் பணிகளையெல்லாம் நன்கு ஆராயும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தத் துறையில் இருக்கிற வல்லுநர்களும், அதிகாரிகளும் கூடிக் கலந்து பேசி, பொதுமக்களின் ஆலோசனைகளையும் கேட்டு, நிர்வாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அங்கே இருப்பவர்களுடைய திறமையை நூற்றுக்கு நூறு பயன் படுத்துகிற அளவில் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்

கொண்டிருக்கிறோம். உள்ளாட்சித் துறையின் அமைப்புகள் எல்லாம் சுமார் 10, 12 ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்டன. ஆகவே, பத்து, பன்னிரண்டு ஆண்டுகளின் அனுபவங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு சிலபல சீர்திருத்தங்களைச் செய்யலாம் என்றுதான் இந்தக் குழுவினிடத்தில் விடப்பட்டிருக்கிறது. அந்தக் குழு அவற்றையெல்லாம் நல்ல முறையில் ஆராய்ந்து பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்துக்கள் எல்லாம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நேராக பி.டி.ஓ.க்களாக பதவி பெற்று வருகிற நேரத்தில் அங்கே இருக்கிற பணிகளைப் புரிந்துகொண்டு அவர்களால் செய்ய முடியவில்லை. தாசில்தாராக இருக்கிறவர்கள் அந்த வட்டாரங்களைப்பற்றி நன்றாக அறிந்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் பணியாற்ற முடியும். மேலும் அவர்கள் ஆர்.டி.ஓ.க்களாக பிரமோஷன் பெறும் வாய்ப்பும் பெற்றிருக்கிறார்கள். மேலும் ஆர்.டி.ஓ.வின் கீழ் பல பிளாக்குகள் அடங்கி, அவையெல்லாம் அவருடைய கண்ட்ரோலில் இருக்கிறது. தாசில்தாராக இருக்கிறவர்கள் இரண்டு ஆண்டுக் காலம் பி.டி.ஓ.வாக இருந்து பின்னர் ஆர்.டி.ஓ.வாக வருகிற நேரத்தில் நல்ல முறையில் அந்த வட்டாரங்களுக்கு நல்ல பணிகளைச் செய்ய முடியும். ஆகவே, ஆர்.டி.ஓ.வாக நியமிக்கப்படுவதற்கு முன் அவர்கள் கட்டாயமாக இரண்டு ஆண்டுக் காலம் ஒரு பிளாக்கில் பணியாற்ற வேண்டுமென்று அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆரம்பகாலத்திலே இந்தத் துறை அமைக்கப்பட்டபொழுது வருவாய்த் துறையிலிருந்து அதிகாரிகளை ஈர்த்து வைத்து, கண்காணித்து வந்தோம். தாசில்தார் இரண்டு ஆண்டுக்காலம் பி.டி.ஓ.ஆக இருக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டது. இந்தத் துறையில் பயிற்சி பெற்று வருகிறவர்களுக்கு பதவி உயர்வும் கண்காணிக்கின்ற சூழ்நிலையும் தர வேண்டுமென்ற நிலை ஏற்பட்டது. இப்போது ஆர்.டி.ஓ. தலையீடு இருக்கிற காரணத்தினால்தான் உள்ளாட்சித் துறையை தனித்துறையாக ஆக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு, ஆதாரமாக பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி வருகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருடைய பார்வையின்கீழ் உள்ளாட்சித் துறை, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், இருக்க வேண்டும். பி.டி.ஓ.க்களை ஆர்.டி.ஓ.வின் கீழே வைக்கக்கூடாது. பி.டி.ஓ.க்களையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழே வைக்க வேண்டும் என்றெல்லாம் கருத்துக்கள் சொல்லப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் நிர்வாக சீர்திருத்தக் குழு ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படும்.

*Training for Dental Hygienists.*

* 183 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Dental Wing of the Madras Medical College offers a course for Dental Hygienists under compulsory stipendiary training scheme;



(b) if so, the details and aims of the said course; and

(c) the stipend paid to a candidate?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) இப்பாட முறையின் கால அளவு ஓர் ஆண்டாகும், ஒவ்வொரு ஆண்டும் ஆறு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பல் மருத்துவர்கள் பற்கள் சுத்தம் செய்வது போன்ற அன்றாடப் பணிகளைச் செய்கையில் அவர்களுக்கு உதவி செய்வதற்காக பல் நல இயல் வல்லுநர் பயிற்சி அளிப்பதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.

(உ) மாணவருக்குப் பயிற்சி உதவிப் பணமாக திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 கொடுக்கப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE: The course might have been started about four or five years ago. I do not know when. Is it not a fact that for each year about 6 students pass out and there was bottleneck for appointment and nearly 80 per cent of them have not been appointed but only 2 or 3 wert appointed. Is it not a fact that they also submitted a memorandum recently? Of course two or three more might have been appointed afterwards. May I know in the matter of appointment whether any survey has been made and whether this Government will tell us whether any efforts had been made to see that all the boys who pass out are employed since there is no other scope of employment outside for these boys?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு முழு விடையையும் இப்பொழுது அளிப்பதற்கான நேரம் இல்லை. ஆனால் அரசாங்கத்தின் சார்பிலே ஏற்றுக்கொள்ளப்படுகிற இத்தகைய எந்தவிதமான பயிற்சியாக இருந்தாலும், அரசாங்கம் அவர்கள் அனைவருக்கும் வேலை தருவது என்ற உத்தரவாதம் என்றைக்கும் கிடையாது. அப்படி வேலை தர வேண்டுமென்றால் இந்த வகுப்புகளை நிறுத்திவிட வேண்டும். நமக்கு 3 ஆட்கள் தேவையென்றால், மூவருக்குத்தான் பயிற்சி கொடுக்க வேண்டும், 2 ஆட்கள் தேவை என்றால் இரண்டு பேருக்குப் பயிற்சி கொடுக்க வேண்டியிருக்கும். ஆட்கள் தேவையில்லையென்றால், பயிற்சியையே நிறுத்திவிட வேண்டியிருக்கும். பல் வைத்தியர்கள் இருக்கிற காரணத்தால்தான் உதவிப் பணியாளராக இருக்கலாம் என்ற வகையில் பயிற்சி தரப்படுகிறது, அவர்களுக்கு தனியார் துறையிலும் அரசாங்கத் துறையிலும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கருதப்பட்டதால்தான் பயிற்சி அளிக்கிறார்கள். எந்த அளவிற்கு அரசாங்கத்திற்குத் தேவையோ, அந்த அளவிற்கு அவர்கள் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள்.

DR. H. V. HANDE: May I inform the Hon. Minister that when Thiru S. J. Sadiq Pasha was the Minister in charge of this, we represented the matter and he realised the point and saw to it that some were appointed. I accept the theory of Government that all cannot be appointed. But at least will the Government see to it that a hightr percentage of those who pass out are appointed? Will the Government examine this aspect?

The Hon. Thiru K. ANBAZHAGAN : It is only possible as and when new dental units are opened in the District Headquarters Hospital.

திரு. ஏ. ஆர். சுப்பையா: தலைவர் அவர்களே, இப்பொழுதே டெண்ட்டிஸ்டுகளுக்கு வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் போது, அவர்களுக்கு உதவியளிப்பதற்காக உதவியாளர்களுக்கு ஸ்டைபண்ட் கொடுக்கும் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, டாக்டர் இருக்கிறபோது நர்ஸ் இருக்க வேண்டும், டென்ட்டிஸ்டுகள் இருக்கிற போது உதவியாளர்கள் இருக்க வேண்டும், மருந்து இருக்கிறபோது அதைக் கொடுக்க கம்பவுண்டர்களும் இருக்க வேண்டும். இவை எல்லா சந்தர்ப்பத்திலும் எல்லாம் ஒரே விகிதாசாரமாக இருக்க முடியாது.

Dr. H. V. HANDE : Is it not better to have dental wings in several headquarters hospitals ?

The Hon. Thiru K. ANBAZHAGAN : Government is implementing step by step.

*King Institute at Guindy*

* 184 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there are sources of income for the King Institute, Guindy; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(ஆ) சீரம், ஊசி மருந்து விற்பனை மூலமும், மற்றும் அணுக்கள், உடல் நோய் சம்பந்தப்பட்ட பகுப்பாய்வுகள் மூலமும் கிடைக்கின்ற பணமே வருவாயாகும்.

Dr. H. V. HANDE : The King Institute was orginally started when other district headquarters hospitals and general hospital, Stanley hospital, Royapettah hospital and other city hospitals were not having clinical laboratory facilities. Now those hospitals have expanded much and clinical units are functioning there and other district headquarters hospitals. So, will the Government examine the whole thing and see that most of the facilities available at King Institute are made available at headquarters hospitals and major hospitals in cities, so that the loss of time between sending a matter for particular investigation and then getting report from them, which would take at least a week, is minimised. Will the Government see that most of the examinations done at King Institute are done in major hospitals in the city and district headquarters hospitals ? Will they decentralise the work of the King Institute in places like Madurai and Tanjavur ?



The Hon. Thiru K. ANBAZHAGAN : There are three aspects in this King Institute and one aspect is to produce freeze-dried small pox vaccine, bacterial vaccines such as Cholera, T. A. B., Autio, Curative, Anti-Sera such as Anti-Gas Ganerene, Anti-Tetanus, Anti-Diphtheric Serum, Toxoids, Blood Group Sera and Blood Plasma, Saline, etc. These things are not available in headquarters hospitals. Various bacteriological and pathological tests such as blood examination, urine test, Khan Test, Wassorman Test, V.D.R.I. Test, etc., are as far as possible not undertaken at the headquarters hospitals or in General Hospital.

Dr. H. V. HANDE : As an alternative, will this Government at least examine this proposal, namely, to increase the facilities there, to expand this, so that at least some basic requirements like insulin and other things can be manufactured here? Will this Government examine this—they may not commit themselves by giving an answer—will the Government examine the possibiliiy of starting production of certain materials which are scarce in the market, so that directly the Government can get these materials, now that there are modern equipment and things have all advanced.

The Hon. Thiru K. ANBAZHAGAN : This is a highly technical question for which I need not answer now.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த ப்ளட் ஸ்டெயின் போன்றவற்றை ஃபாரன்ஸிக் லேபரட்டரிக்கு அனுப்புகிருர்களே, அம்மாதிரியான லேபரட்டரி ஒன்றும் இந்த கிங் இன்ஸ்டிட்யூட்டிலே இன்ஸ்டால் செய்வதற்கு அரசாங்கத்திற்கு யோசனை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அங்கே அனுப்புவதெல்லாம் சில குற்றச்சாட்டுகள், குறைபாடுகள் அப்படிப்பட்ட நிலைமைகள் உள்ளவற்றை பரிசோதனைக்காக, ஆனல் இது பொதுவாக நோய் மருத்துவத்திற்காக.

காவல் துறையினருக்கு இலவச ரயில் அனுமதிச் சீட்டு.

* 178 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

காவல் துறையினருக்கு அவர்கள் வெளியூர்களுக்குச் சென்று வர இலவச ரயில் பாஸ் வழங்கக் கோரி தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு சிபார்சு செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : ரயில்வே காவல் படையினர் தங்கள் சொந்த அலுவல்களைக் கவனிக்க வெளியூர் செல்வதற்காக அவர்களுக்குக் குடும்ப இலவச ரயில் அனுமதிச் சீட்டுகளை வழங்குமாறு பரிவுரை செய்து 1969 மார்ச்சு திங்களில் இந்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. எனினும் இச்சலுகையைத் தர இயலாமையைப் பற்றி இந்திய அரசு வருத்தத்துடன் தெரிவித்தது.

[1971 ஜூலை 10

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ராணுவத் துறையினருக்கு ரயில்வே பாஸ் கொடுக்கப்படுகின்றது, அதுபோன்று எல்லாக் காவல் துறையினருக்கும் ரயில்வே பாஸ் கொடுக்குமாறு நம்முடைய அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ரயில்வே காவல் துறையினருக்கே நாம் செய்கின்ற பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பிறகு எல்லாக் காவல் துறையினருக்கும் எப்படிக் கொடுப்பார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : எம்.பி.க்களுக்கு ரயில்வே பாஸ் கொடுக்கப்படுவது மாதிரி எம்.எல்.ஏ.க்களுக்கும் முதல் வகுப்பு ரயில்வே பாஸ் வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா? மத்திய அரசு நடவடிக்கை எடுத்தால் அந்த அரசோடு நம்முடைய அரசும் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதுபற்றி இந்த மன்றத்திலே அடிக்கடி பிரச்னைகளை எழுப்பியுள்ளார்கள். இதுபற்றி யோசித்து, தமிழக அரசுப்பேருந்து வண்டிகளில் இலவசமாக உறுப்பினர்கள் செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) ரிப்பேராகி விடும் என்று சொல்கிறார்கள், ரயில்கூடதான் ரிப்பேர் ஆகிவிடுகிறது, ரயில்கூடத்தான் தாமதமாக வருகிறது. ஆகவே இப்படிப்பட்ட யோசனையை கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, காவல் துறையினர் அலுவல் காரணமாக ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதற்கு பாஸ் வாரண்ட் கொடுக்கப்படுகின்றது. ஆனால் வேறு துறையைச் சேர்ந்தவர்கள் அலுவல் காரணமாகச் செல்வதற்கு பாஸ் வாரண்ட் கொடுக்கப்படுவதில்லை . அரசாங்கம் இதை ஆராய்ந்து அலுவல் காரணமாகச் செல்கின்ற எல்லாத் துறையினருக்கும் பாஸ் வாரண்ட் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கேள்வி ரயில்வே காவல் துறையினரைப் பற்றியது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அக்கறை உள்ளவர் என்றால் தனிக்கேள்வி போட்டால் பதில் தயாரித்துத் தரலாம்.

## காவல் துறை அலுவலர்களின் நிகராடை.

* 179 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகப் போலீசார் அணியும் குல்லாய், உடைகள் முதலியவற்றை மாற்றியமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1967-லிருந்து மாநிலக் காவல் துறை அலுவலர்களும் சார்நிலைக் காவல் துறை அலுவலர்களும் தலையணியாக 'பீக்' தொப்பிகளுக்குப் பதிலாக 'பெரட்' தொப்பிகளை அணிய அனுமதிக்கப்பட்டுள்ளனர். 1969லிருந்து இந்தியக் காவல்துறை அலுவலர்களும் "பெரட்" தொப்பிகள் அணிய அனுமதி அளிக்கப்பட்டுள்ளனர். காவல்துறை அலுவலர்களின் நிகராடையை மாற்றும் செயற்குறிப்பு எதுவும் முடிவுறு நிலையில் இல்லை.



1971 ஜூலை 10]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, காவல் துறையினர் யூனிபார்ம் அணிந்துகொண்டிருக்கும்பொழுது நாமம், விபூதிப் பட்டை போன்ற மத சம்பந்தமானவற்றை அணியக்கூடாது என்று தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதா? இல்லையெனில் இனியாவது அப்படிப்பட்ட விதி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது உடையைப்பற்றியது. அணிகின்ற நெற்றிக் குறியைப்பற்றியல்ல.

திரு. கோவை செழியன் : 1966-ம் ஆண்டு தேனாம்பேட்டையிலே நடைபெற்ற ஒரு பொருட்காட்சியில் போலீசார்கள் எந்தவிதமான தொப்பிகள் அணியலாம் என்று வோட்டுக்கு விடப்பட்டு இப்பொழுது இருக்கும் தொப்பியே சரியென்று மக்கள் தீர்ப்பு அளித்திருப்பதாக ஒரு பத்திரிக்கைச் செய்தி வந்ததே அதைப்பற்றி அரசாங்கத்தினுடைய எண்ணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுதுள்ள காவல் துறையினரின் உடையை மாற்றுவதாக உத்தேசம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று மக்கள் தீர்ப்பு இருக்குமானால் அந்த மக்கள் தீர்ப்பையும் இந்த அரசு மதிக்கத் தவறாது.

திரு. மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, காவல் துறையினர் மில் துணியில் உடை அணிகிறார்கள். கைத்தறித் துணிகளை ஆடைகளுக்கு உபயோகப்படுத்தச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : காவல் துறையிடமிருந்து எந்த விதமான முறையீடும் வரவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி :காவல் துறை கமிஷன் ரிப்போர்டை நமக்கு முன்னாலே சமர்ப்பித்திருக்கிறார்கள். குல்லாயை மாற்ற வேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதே, அதைப்பற்றி அரசு கவனிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவைபற்றியெல்லாம் போலீஸ் அதிகாரிகளோடு கலந்து பேசி உரிய நேரத்திலே உரிய ஆலோசனைகள் செய்யப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, காவல் துறையினர் அணிகின்ற உடைகள் வருஷத்திற்கு இரண்டு செட்டுகள்தான் கொடுக்கிறார்கள். அதை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, காவல் துறையினர் அணிகின்ற ஆடையைப் பார்த்து பொதுவாக மக்களுக்கு அச்சம் ஏற்படவேண்டும். ஆனால் அவர்கள் காக்கி உடைதான் அணிகிறார்கள். இப்பொழுது யாரைப் பார்த்தாலும் காக்கி உடைகள் அணிகிறார்கள். ஒன்று போலீஸாருக்கு என்று தனி உடை வேண்டும்

[1971 ஜூலை 10

அல்லது காக்கி உடைகளை மற்றவர்கள் அணியக்கூடாது என்று கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: காவல் துறையினரின் உடையின் நிறத்தை யாரும் தேர்ந்தெடுக்கக்கூடாது என்ற தடையைப் போடுவது இயலாத காரியம். காவல் துறையினர் அணிகின்ற உடையும் மற்றவர்கள் அணிகின்ற உடையும் வெவ்வேறு. நிறம் ஒன்றாக இருக்கலாம், ஆனால் உடையமைப்பு வேறு.

திரு. எம். முத்தையா: போலீஸாருக்கு குல்லாய்கள் செய்யக்கூடிய துணிகள் அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படுகிறது. கால்சட்டை மேல்சட்டை இவற்றை தைத்துக் கொடுக்கிறார்கள். ஒவ்வொருவருக்கு அந்த உடை பொருந்தவில்லை. அவர்கள் அதைப் பிரித்து இரண்டாவது முறையாக தைக்கக்கூடிய சூழ்நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? எனவே தைக்காமலே துணியாகக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கூடுமானவரையிலும் உடலளவுக்கு ஏற்ற உடைகள்தான் தரப்படுகின்றன. ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகள் ஏதாவது இருந்தால் உடனடியாக அவை கவனிக்கப்படுகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: பல நெருக்கடியான கட்டங்களில் போலி உடைகள் போலீஸ் உடைகள் கிடைக்கின்றன, அவற்றை வாங்கி அணிந்துகொண்டு மிரட்டுகிறார்கள். எனவே போலீஸ் உடை, தொப்பி இவை வேறு யாருக்கும் கிடைக்காமல் கட்டுப்படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: போலி உடைகளை கடைகளில் வைத்திருக்கமாட்டார்கள். வேடமிட்டு வரவேண்டுமென்று எண்ணுகின்றவர்கள் அவர்களே தயாரித்துக் கொள்வார்கள்.

*Ground water resources in Dharmapuri District*

* 186 Q.—THIRU B. VENKATASAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any detailed survey has been made in Dharmapuri district to find out the availability of ground water resources; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*Land Development Bank for Kelamangalam Block*

* 187 Q.—THIRU B. VENKATASAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) Whether there is any proposal to start a Land Development Bank at Kelamangaam Block in Denkanikota Taluk; and

(b) if so, when it will be started?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) நாள் குறிப்பிடப்படவில்லை.



1971 ஜூலை 10]

தலைமன்னார்-ராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்து

* 188 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தலைமன்னாருக்கும் ராமேஸ்வரத்திற்கும் இடையே வாரம் எத்தனை முறை கப்பல் போக்குவரத்து நடைபெறுகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ராமேசுவரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையே வாரம் இரண்டு முறை கப்பல் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தக் கப்பல் போக்குவரத்து கட்டுப்படியாகவில்லை என்பதால் நிறுத்தப்போவதாகச் சொல்லப்படுகிறதே உண்மையா? கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பெயரை அந்தக் கப்பல்கள் ஒன்றுக்காவது வைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்தக் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்படுவதாக எண்ணம் இல்லை. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே செல்கின்ற பயணிகள் கப்பலாகும் இது. இடையிலே நான்கு வாரங்கள் செல்லவில்லை. அதற்குக் காரணம் நாமல்ல, இலங்கையும் அல்ல. இலங்கையிலே கலவரம் இருந்ததால் இப்போக்குவரத்து நடைபெறவில்லை. இப்போது வாரத்திற்கு இரண்டு முறைகள்தான் போய்க்கொண்டிருக்கிறது. இந்தக் கப்பல்களுக்கு நாம் பெயர் வைப்பதில்லை. தூத்துக்குடியிலுள்ள வீரபாண்டியன், வீரசோழன் என்று சிறிய சிறிய கப்பல்களுக்கு நாம்தான் பெயர் வைத்திருக்கிறோம்.

திரு. மு. இரத்தினசபாபதி: தலைவர் அவர்களே, இராமேசுவரத்திலிருந்து தூத்துக்குடிக்குச் செல்வதற்கு ஸ்டீமர்கள் செல்வதற்குப் போதுமான அளவுக்கு ஆழமாக செய்யும் வேலை தூத்துக்குடியிலே முடிந்து விட்டதால், அதை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தூத்துக்குடியிலிருந்து இராமேசுவரத்திற்கு உடனடியாக கப்பல் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கு வழியில்லை. தூத்துக்குடியிலே ஒரு பாலம் (Jetty) கட்டப்பட்டு முடிகின்ற தருவாயில் இருக்கிறது. அதன்மூலம் வெளிநாடுகளுக்கு வாழைப்பழம் ஏற்றுமதி செய்ய எண்ணம் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், கடந்த காலங்களில் தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே போக்குவரத்து இருந்து இப்பொழுது அது நிறுத்தப்பட்டு தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே போக்குவரத்து இருக்கிறது. இராமேஸ்வரத்தில் இறங்கும் பயணிகளுக்குப் போதுமான வசதிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்குத் தக்க ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1971 ஜூலை 10

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இராமேஸ்வரத்தில் பயணிகள் இறங்குவதற்கு வசதிகள் பெருக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவரவர்களே, தற்போது இலங்கையிலிருந்து நிறைய அகதிகள் நம்முடைய தமிழ்நாட்டை நோக்கி வருவதால் வாரம் இரண்டு முறைகள் விடும் கப்பலை இன்னும் 2 நாள் கூட்டி விட அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர்வர்களே, தற்போது இரண்டு முறை ஓடிக்கொண்டிருப்பதே போதுமானதாக இருக்கின்றது. தலைமன்னாரிலிருந்து செவ்வாய், வியாழன் இரண்டு நாட்களில் புறப்பட்டு வருகின்றன. பிரயாணிகளுக்கு இடமில்லாமல் போனதாக, அரசுக்குத் தகவல் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, தமிழகத்தில் இருக்கும் எல்லாத் துறைமுகங்களையும், மைனர் போர்ட்ஸ், மேஜர் போர்ட்ஸ் எல்லாவற்றையும் தொட்டுச் செல்லும் முறையில் கப்பல் போக்குவரத்து வசதியைச் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, நமது சேதுக்கால்வாய்த் திட்டம் முடிந்த பிறகு அப்படிச் செய்ய முடியும். தற்சமயம் அப்படிச் செய்ய முடியாது. ஏனென்றால் தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு வர வேண்டுமென்றால் இலங்கையைச் சுற்றிக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. எனவே, அதற்குத் தகுந்த வசதியில்லை.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, இராமேஸ்வரத்திலிருந்து வரும் கப்பல் கடலிலேயே ஏறத்தாழ இரண்டு மைல்களுக்கு அப்பால் நிற்கிறது. கடற்கரை ஓரமாக வருவதற்கு ஏதாகிலும் வசதி ஏற்படுமாறு அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, அதற்கான ஏற்பாடுகள் ஆய்வில் இருக்கின்றன.

## வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள்

* 189. வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, will the Hon. Minister think of starting at least one Agricultural University in Thanjavur district?



1971 ஜூலை 10]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தனியாக அந்தக் கேள்வி வருகிறது. அந்த உத்தேசமும் இல்லை.

திரு. ப. முத்துசாமி: தலைவரவர்களே, தெற்கு மாவட்டங்களை ஒன்றாக இணைத்து மதுரையிலே அக்ரிகல்சுரல் யூனிவர்சிட்டியை அமைப்பதன் மூலம் தென்மாவட்டங்களுக்கு வசதியாக இருக்கும். எனவே மதுரையில் ஏற்படுத்த மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதுரை வேளாண்மைக் கல்லூரி இப்பொழுது கோவைக் கல்லூரியோடு இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே மதுரைக்கு அவசியமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், கோயம்புத்தூரில் பல்கலைக் கழகம் ஏற்கனவே ஆரம்பிக்க இந்தச் சபை முடிவு செய்து சீக்கிரம் ஆரம்பிக்கப்படக்கூடிய நிலையிலே இருப்பதால், தஞ்சை, திருச்சி போன்ற இடங்களில் கல்லூரிகள் துவங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, கோவையில் இப்பொழுது பல்கலைக்கழகம் 1—6—1971 முதல் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மதுரைக் கல்லூரி கோவையோடு இணைக்கப்பட்டிருக்கிறது. திருச்சி, தஞ்சையைப் பொறுத்தவரையில் திருச்சியில் இப்பொழுது கலைஞர் கருணாநிதி ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அமைச்சரவை முடிவு செய்தபடி திருச்சியில் துவக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சையைப்பற்றி அப்படி இப்பொழுது திட்டம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, விவசாயக் கல்லூரி இல்லாத ஜில்லாக்களுக்கு ஏதாவது பிரையாரிட்டி கொடுக்க அரசாங்கத்திடம் செயற்குறிப்பு இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

திரு. வீ. சா. இளஞ்செழியன்: தலைவரவர்களே, திருச்சியிலே ஆரம்பிக்கப்படுகின்ற கல்லூரி பேரறிஞர் அண்ணா அவர்களின் பண்ணையில் ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: கனம் அங்கத்தினருடைய யோசனை கவனிக்கப்படும்.

* 190. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் விவசாயப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்க அரசு ஆலோசனை செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது எங்கு துவக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கே இடமில்லை.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் வேளாண்மையை நம்பியிருக்கும் மாவட்டம். கோவையில் துவக்கப் படும் அந்தப் பல்கலைக்கழகத்தில் தஞ்சை மாவட்ட மாணவர்களுக்கு அதிகச் சலுகை கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தஞ்சையில் இப்பொழுதே ஆடுதுறை ஆராய்ச்சிப் பண்ணையில் தீவிரமான ஆராய்ச்சி நடை பெற்று, அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆராய்ச்சிப் பண்ணையில் சொல்லப்பட்ட யோசனைகளைத் தமிழகம் முழுவதும் சொல்லப்பட்டு வருகிறது. எனவே, இப்பொழுது ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. மாணவர்களைச் சேர்ப்பதைப் பொறுத்த வரையில் தகுதி, திறமை ஆகிய காரணங்களைப்பற்றி முடிவு செய்யப்படும். கோவையில் இருப்பது, தஞ்சைக்கு மட்டும் அல்ல, தமிழகம் முழுவதற்கும் சொந்தம். எனவே எல்லாவற்றிற்கும் ஒரே முறையில் தான் தேர்ந்தெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், சமயபுரத்திற்கு அருகா மையில் போஜேஸ்வர் ஆலயத்திற்கு அருகில் இருக்கும் இடத்தில் அக்ரிகல்சுரல் காலேஜ் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டிருந்தது, அது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சமயபுரத்திற்கருகில் துவக்குவதுபற்றி அப்படி ஒன்றுமில்லை. ஏற்கெனவே அப்படிப்பட்ட குறிப்புகளும் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், கன்னியாகுமரி ஜில்லாவில் அரசாங்கக் கல்லூரி பொதுவாக ஒன்றுமில்லை. அங்கே விவசாயக் கல்லூரியை தொடங்க தேவையான, அரசாங்கம் நிலம் 100 ஏக்கர் அளவில் இருக்கிறது, மற்ற வாய்ப்புகளும் இருக்கின்றன. ஆகவே, அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுது கன்னியா குமரி ஜில்லாவில் பழ ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டிருக்கிறது. தனியாக அங்கே துவக்க எந்தவித யோசனையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், அமைச்சரவர்கள் சமய புரத்திற்கு அருகிலே அந்த அக்ரிகல்சுரல் காலேஜ் ஆரம்பிக்க குறிப்பு ஒன்றும் இல்லை என்று கூறினார்கள். இப்பொழுது ஒரு குறிப்பை ஏற்படுத்தி அங்கே ஆரம்பிக்க அரசு முன்வருமா, என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, குடுமியான்மலைப் பண்ணையில் அறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பண்ணை ஏறத்தாழ 3,000 ஏக்கர் கொண்டது. இப்பொழுது நல்ல விதத்தில் பயன்பட்டு வருகிறது. மேலும் 5,000 ஏக்கர் ஒட்டியிருப்பதால் 8,000 ஏக்கர்களில் அங்கே துவக்கப்படும் அந்தப் பண்ணை ஆரம்ப காலத்திலேயிருந்து இன்றுவரை லாபத்தில் இருக்கிறது. அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள இந்தப் பண்ணை யைப்பற்றி பிற மாநிலத்தவர்களும் அதிசயப்படும் அளவிற்கு வேலை நடைபெற்று வருகிறது. எனவே, திருச்சி மாவட்டத்தில் குடுமியான் மலைப் பண்ணை ஒன்றே போதும் என்பதுதான் என்னுடைய கருத்து.





திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சையில் வேளாண்மை பல்கலைக்கழகம் இல்லாவிட்டாலும் ஒரு வேளாண்மைக் கல்லூரி யாவது துவங்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றும் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, வடார்க்காடு, செங்கற் பட்டு போன்ற மாவட்டங்களில் இருக்கும் மாணவர்களும் கோயம்புத்தூர் செல்ல வேண்டியிருக்கிறது. இராணிப்பேட்டைக்கு அருகில் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம் நவலக் என்ற இடத்தில் இருக்கிறது. அந்த இடத்தில் துவங்கினால் பல மாவட்டங்கள் பயன்பெறும். அப்படிப்பட்ட உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, நவலக் பண்ணையை மேலும் விரிவுப்படுத்தும் திட்டமே இப்பொழுதுதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பொழுதிருக்கும் திட்டம் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதுபோல வடார்க்காடு மாவட்டத்தில் செங்கம் பகுதியில் மத்திய சர்க்கார் ஆராய்ச்சி நிலையம் துவக்க அந்த இடத்தைப் பார்த்து விட்டுப் போய் இருக்கிறார்கள். விரைவில் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொண்டு, இப்பொழுது அதற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன்.

இணைப்புப் பேருந்துகள்

* 191. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்தில் 2 பேருந்துகளை ஒன்றாக இணைத்துவிட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறை, சென்னை மாநகரில் தொடர்ப் பேருந்துகளை (trailor buses) இயக்கி வருகின்றது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, டிரெய்லர் பஸ் இலாப கரமாக இயங்குகிறதா இல்லையா? இலாபகரமாக இயங்குகிறது என்றால் விரைந்து, பல டிரெய்லர்களை இடைஞ்சல் இல்லாத ரோடு களில் விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் தொடர்பேருந்துகள் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இது இலாபகரமாக நடைபெறுகிறதா இல்லையா என்பது கேள்வி அல்ல, ஏனென்றால் கழிக்கப்பட்ட வண்டிகள், "கண்டெம்ட் வெகிகிள்ஸ்" ஐ எடுத்து அதிலே இப்படிப் பட்ட டிரெய்லர் பஸ்கள் தயாரிக்கப்பட்டு அந்தப் பேருந்

துடன் இணைப்பு வண்டிகளாக இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆகையால் இப்படிப்பட்ட வண்டிகள் இப்பொழுது எங்கெங்கு பரவலாக சாலை வசதிகள் இருக்கின்றனவோ அங்கேதான் விட முடிகிறது. காரணம் என்னவென்றால், குறைந்த வேகத்தில் செல்ல வேண்டியிருப்பதால் இதர போக்குவரத்திற்கு இதனால் இடைஞ்சல் ஏற்படாதவண்ணம் அமைய வேண்டுமென்பதற்காக பரந்த சாலைகளிலே மட்டும் இவைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. எம். செல்வராஜ்: தலைவரவர்களே, மாடி பஸ்களுக்கு மாற்றாக இந்தத் தொடர் வண்டிகளை வெளியூர்களுக்குச் செல்லும் துரித வண்டிகளாக விட அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, வெளியூர்களுக்குச் செல்வதில் பயணிகள் விரும்புவது வேகத்தையும், வசதியையும், இந்தத் தொடர் வண்டிகள் அதிக வேகத்துடன் இயங்க முடியவில்லை. மாடிப் பேருந்துகளும் அதிக வேகத்திலே செல்ல முடியவில்லை. ஆகவே, வெளியூர் பேருந்துகளுக்கு இவைகளைப் பயன்படுத்துவதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: இருக்கின்ற பஸ்களிலேயே பல சரியான முறையில் ஓடாமல் ரோடுகளில் நின்று கொண்டிருக்கின்றனவே, அதைச் சரியாக ரிப்பேர் செய்து ஓட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் ஏற்கனவே தெரிவித்தபடி ஆயிரம் பஸ்கள் சென்னை மாநகரத்தில் ஓடுகின்றன. அதிலே கிட்டத்தட்ட 120 வண்டிகள்தான் ஓடாமல் இருக்கின்றன. அவற்றையும் துரிதமாக நடவடிக்கை எடுத்து ஓட்டுகின்ற தன்மையைப் பெறுவதற்கான முயற்சிகளில் விசேஷ அக்கறை எடுத்து இந்த மாதத்திலேயே அந்த வண்டிகள் ஓடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் இப்போது காலவரை ஆகிவிட்ட வண்டிகளை முதலமைச்சர் திட்டத்திற்கு ஏற்ப ஏலத்திற்கு விடுவதில்லை என்று முடிவு செய்யப்பட்டு அந்த வண்டிகளை நல்ல முறையில் பயன்படுத்த தனிப் பிரிவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 223 வண்டிகள் அந்த முறையில் இருக்கின்றன. அவற்றைச் சரிபார்க்க தனி டிவிஷன் ஏற்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதிலே 100 வண்டிகள் ரோட்டிலே ஓடுவதற்குக் கூடுதலாகக் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. வண்டிகள் சரியாக ஓடவில்லை என்று கூறுவது சரியல்ல.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: பஸ்களில் புகை கீழ்நோக்கி செல்லுவதால் பொதுமக்கள் துர்நாற்றத்தைச் சுவாசிக்க வேண்டியிருக்கிறது. அந்தப் புகை மேல்நோக்கிச் செல்ல ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மேல் நோக்கிச் செல்லுவதற்கான வசதிகள் இப்போதே பேருந்துகளில் பொருத்தப்பட்டு வருகின்றன.





திருமதி த. ந. அனந்தநாயகி: அரை மாடி பஸ்ஸில் பிரயாணம் செய்கிறவர்கள் "அம்மாடி" இறங்கினால் போதும் என்று நினைக்கிறார்கள். அரை மாடி பஸ்ஸுக்கு பதிலாக "ஃபுல் டெக்கர்" பஸ்கள் விட உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: "அம்மாடி" என்று யாரும் இறங்குவது இல்லை. அந்தந்த இடத்திற்குச் சென்ற பிறகுதான் இறங்குகிறார்கள். இப்போதும் கூட அதிலே முழு அளவுக்குப் பயணிகள் செல்லுகிறார்கள். பயணிகள் வசதியை ஒட்டி இப்போது நடைமுறையில் இருந்து விலக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது பழைய பேருந்துகளைத்தான் இணைப்பு வண்டிகளாக உபயோகிக்கிறோம் என்று சொன்னார்கள். நாள் ஆக ஆக பழுதாகும் வண்டிகளின் எண்ணிக்கை அதிகமாகுமாதலால் இணைப்பு வண்டிகளின் எண்ணிக்கையும் அதிகமாகுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இணைப்பு வண்டிகளின் எண்ணிக்கை சாலை வசதியைப் பொருத்து இருக்கிறது. பழுதான வண்டிகளை மறுபடியும் முழு அளவுக்கு ரிப்பேர் செய்து விட முடியுமானால் அப்படியும் பயன்படுத்தப்படுகிறது. மற்றவை தொடர் வண்டிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

திரு. எம். செல்வராஜ்: நம்முடைய சர்க்கார் பேருந்துகளில் மேல் நோக்கிப் புகை செல்லுவதற்கு வழி வகுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதே [illegible] துறையிலும் அமல்படுத்த வேண்டுமென்று சர்க்கார் வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தற்போது அத்தகைய உத்தேசம் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா: இந்த இணைப்பு வண்டிகள் விடுவதில் லாபமா நஷ்டமா என்று கேட்டதற்கு லாபமா நஷ்டமா என்று பார்க்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். மேலும் இணைப்பு வண்டிகளுக்கு நிறைய வரி செலுத்த வேண்டுமென்ற நிலை இருப்பதால் அந்த வண்டிகளில் மற்ற வண்டிகளில் நின்றுகொண்டு செல்லுவது போல் நின்றுகொண்டு செல்லுவதற்கு அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த இணைப்பு வண்டிகளில் 100 பேர் பயணம் செய்ய வசதி இருக்கிறது. பயணிகள் உட்கார்ந்து செல்ல வசதி இருக்கிறது. இதிலே பயணிகள் ஏறி நின்றுக்கொண்டு போகத் தொடங்கினால் பஸ் ஓடுவது முடியாத காரியம். ஆகவே பயணிகள் நிற்கக் கூடாது என்ற உத்தரவு போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் இதற்கு வரி அதிகம் கட்ட வேண்டும்.

திரு. நா. வீராசாமி: இணைப்பு வண்டிகளில் மக்கள் ஏறும்போது பின்னால் இருக்கக்கூடிய வண்டியில் மக்கள் ஏறுவதை டிரைவர் பார்க்க முடிவதில்லை, பின்னால் இருக்கும் கண்டக்டர் விசில் கொடுத்தாலும் கேட்பதில்லை. ஆகவே, ரயிலில் பச்சைக் கொடி, சிவப்புக் கொடி காட்டுவது போல் இங்கும் காட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

[1971 ஜூலை 10

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இப்போது இரண்டு கண்டக்டர்கள் இருக்கிறார்கள். தொடர் வண்டிகள் இன்னும் நீளம் அதிகமானால் அந்த முறையைப்பற்றி ஆராயலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தமிழகத்தில் ஓடும் பஸ்கள்தான் அதிகமான புகை விடுகின்றன என்று எஞ்சினியர் ஒருவர் சொன்னார். அந்தக் கெட்ட பெயரைத் துடைக்க நமது அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஒருவேளை பஸ்ஸில் செல்லுகின்றவர்கள் புகையைப் பார்த்துச் சொல்லியிருக்கலாம்.

*Congestion in buses in Madras City*

*192 Q.—Thiru N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken by the Government to ease the congestion in the State Transport buses in Madras City?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த விவர அறிக்கையில் 917 பஸ்கள் ஓடிக் கொண்டிருந்ததற்குப் பதிலாக 63 பஸ்கள் மேலும் விடப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "பீக் ஹவர்சில்" பஸ் புறப்படும் இடத்தில் இருந்து ஒரு பஸ் புறப்படுவதற்குப் பதிலாக இரண்டு பஸ்களாகப் புறப்படுவதற்கும், ஸ்டாண்டு கண்டக்டர்கள் தவிர ஒவ்வொரு பஸ்ஸிலும் இரண்டு கண்டக்டர்கள் இருந்து அந்த பஸ்கள் துரிதமாகச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 63 பஸ்கள் அதிகமாக விடப்படுகின்றன. அது மாத்திரமல்லாமல் இணைப்புப் பேருந்துகள், மாடிப் பேருந்துகள், நின்று பயணம் செய்யும் பேருந்துகள், மகளிர்களுக்கான சிறப்புப் பேருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இப்போது பரீட்சார்த்தமாக எக்ஸ்ட்ரா கண்டக்டர் ஒருவர் நெரிசல் நேரத்தில் நியமிக்கப்படுகிறார்கள். அது மட்டுமல்லாமல் இன்னொரு திட்டமும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. குறிப்பாக சென்னை மாநகரத்தைப் பொருத்தவரை பயணிகள் ஏறுவது, இறங்குவது, விபத்துக்கள் ஏற்படுவது ஆகியவற்றைப்பற்றி ஆராய்ந்து 50 இடங்களை நெரிசல் நிறைந்த பகுதியாகக் கருதி அந்த 50 இடங்களிலும் கம்பல்சரி ஸ்டாப்பிங் சிஸ்டம்—பயணிகள் ஏறினாலும் ஏறாவிட்டாலும், இறங்கினாலும் இறங்காவிட்டாலும் பஸ்கள் அந்த இடங்களில் கட்டாயம் நின்றுதான் செல்ல வேண்டுமென்ற வகையில் ஒரு திட்டம் அமல்படுத்தப்பட இருக்கிறது. மக்களும் வரிசையாக நிற்க வேண்டும். வரிசையில் நிற்கும்போது முன்னரே டிக்கட்டுகளும் கொடுக்க இருக்கிறார்கள். கியூவுக்காக ரெயிலிங்ஸ் போடவும் ஏற்பாடு செய்வதாக இருக்கிறது. பஸ்ஸை ஓட்டுகின்ற தொழிலாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்களைக் கலந்து

---

@ 681-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1971 ஜூலை 10]

பேசியிருக்கிறோம். அந்த ஸ்டாப்புகளில் கட்டாயம் நிற்க வேண்டுமென்று கூறியிருக்கிறோம். பஸ் அந்த ஸ்டாப்பில் நிற்க வேண்டிய இடத்தில் நிற்கும். அப்படி நிற்கும்போது பின்னால் வரக்கூடிய பஸ்கள் நடுரோட்டைத் தாண்டிச் செல்லக் கூடாது. வரிசையில் நிற்கும் மக்களை ஏற்றிச் செல்லும் வகையில் முன் பஸ் சென்றவுடன் அந்த இடத்தில் வந்து ஓரமாக பஸ்ஸை நிறுத்த வேண்டும். இந்தத் திட்டத்தைப் பரிட்சார்த்தமாக சென்னை நகரத்தில் 50 இடங்களில் கையாள வேண்டுமென்று இந்தச் சர்க்கார் கருதுகிறது. தொழிலாளர்களும் ஒத்துழைப்புத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கொஞ்சம் காலந்தான் கூட்டித் தரவேண்டுமென்று சொல்லுகிறார்கள் இந்த முறை வெற்றி பெறுமானால் இதர இடங்களுக்கும் பயன்படுத்தலாம். இதனால் ஓரளவு மன நிறைவு ஏற்படுமென்று கருதுகிறேன்.

Dr. H. V. HANDE: About a year or 1-1/2 years ago when the Hon. Thiru Sadiq Pasha was Minster for Transport, a hue and cry was raised in regard to inconvenience caused to passengers and a conference was convened and a press statement was given later on and it was also fortified by a statement in the House that 200 to 300 new buses would be installed and the amount of money earmarked was also quoted. May I also know whether Government has now taken a different stand and whether assurances already given by Hon. Minister Thiru S. J. Sadiq Pasha would be pursued or would not be given effect to?

The Hon. Thiru S. RAMACHANDRAN: Assurances given by this Government are always honoured.

திரு. கே. டி. கே. தங்கமணி: பம்பாய் போன்ற நகரங்களில் சில குறிப்பிட்ட பஸ்கள் லிமிடெட் ஸ்டாப் என்று போட்டு ஓட்டுகிறார்கள். நெரிசலான நேரத்தில் ஆபீசுக்கோ, ஆபீஸ் விட்டுச் செல்லக்கூடிய நேரத்திலோ நிச்சயமாக நிற்க வேண்டுமென்ற இடங்களைக் குறிப்பிட்டு லிமிடெட் ஸ்டாப் முறையில் பஸ் விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது நல்ல யோசனை. அது கருத்தில் கொள்ளப்படும். பம்பாய் நகரத்தைப் பொறுத்தவரை என்ன சவுகரியம் என்றால், அங்குள்ள பயணிகள் வரிசையில் நல்ல முறையில் பொறுமையாக நின்று வண்டிகளில் ஏறுகிறார்கள். இங்குள்ள கஷ்டங்கள் அவர்களுக்குக் கிடையாது. லிமிடெட் ஸ்டாப் பஸ் ஓட்டவேண்டுமென்ற யோசனை நல்ல யோசனை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி: பொதுவாக பெண்கள் கல்லூரிகள் இருக்கும் பஸ் ஸ்டாண்ட்களில்தான் அதிகம் நெரிசல் காணப்படுகிறது. ஆகவே, அதைத் தவிர்க்க அந்த மாணவிகளும் பெண்களுக்காக இருக்கிற பஸ்களில்தான் ஏற வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாணவிகளைக் கட்டாயபடுத்துவது என்பது சர்க்காருக்கு முறையாக இருக்காது. அது மாணவிகள் விருப்பத்தைப் பொறுத்ததாகும், இப்போதே அவர்

களுக்கு என்று தனியாகப் பிரயாணம் செய்வதற்கென பெண்களுக்கு தனி வண்டிகளும் இருக்கின்றன. இப்போது பெண்களுக்கு என்று தனிப் பகுதிகளைக் கொண்ட வண்டிகளும் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) கவன ஈர்ப்பு

### குமரி மாவட்டத்தில் மிடாலம் என்ற இடத்தில் ஏற்பட்ட கடலரிப்பினால் மீனவர்களுக்கு ஏற்பட்ட இடர்பாடுகள்

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Public Works to a matter or urgent public importance, namely, the violent sea erosion at Midalam, Vilavancode Taluk, Kanyakumari district, on 26th June 1971 resulting in the destruction of the preventive wall and consequent difficulties to the fishermen.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: On the evening of June 26, 1971, due to a violent storm which lasted for about two hours, the anti-sea erosion works which were executed in Midalam village of Vilavancode taluk, Kanyakumari district got damaged partially. To prevent the sea erosion at this place, protective measures were taken up five months back by driving two rows of palmyrah piles for a length of about 4,500 feet and the annular space was dumped with stones, the total cost of the work being about one lakh of rupees. It is reported that due to the storm, one row of piles for a length of about 400 feet together with the stones dumped for this length were washed away. It is reported that the approximate cost of the damage will be about Rs. 5,000 and action has been taken to restore the piles in the damaged portion. It is also reported that the damage has occurred only to a length of 400 feet and that the fishermen have not been put to any inconvenience.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தக் காண்ட்ராக்டர் சரியான முறையில் வேலை செய்யாத காரணத்தினால் இந்தப் பழுது ஏற்பட்டது என்று அங்கு கூறப்படுகிறது. அதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா? அப்படி இருந்தால் அந்தக் காண்ட்ராக்டர் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி ஒரு புகார் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் அப்படி ஒரு புகாரைத் தருவார்களேயானால் நிச்சயமாக அது பரிசீலிக்கப்பட்டு குற்றம் இருக்குமானால் கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



## 3. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்கான தேர்தலுக்காக திரு. கோவை செழியன் அவர்களின் பெயர் நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிரப்பப்பட வேண்டிய ஒரு வெற்றிடத்திற்கு மேற்படி நியமனம் முறைப்படி செய்யப்பட்டுள்ளதால், திரு. கோவை செழியன் அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என நான் அறிவிக்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானம்

### பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, "14–7–1971-ம் நாளன்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் 26–7–1971-ம் நாளன்றும், 26–7–1971-ம் நாளன்று எடுத்துக் கொள்ளப்படவேண்டிய கோரிக்கை எண்கள் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும், நிர்வாகம், 34—எழுதுபொருள் அச்சுத்துறை ஆகியவைகள் 14–7–1971-ம் நாளன்றும், கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத்துறை, கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் கோரிக்கையுடன் 22–7–1971-ம் நாளன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 5. அறிக்கை அளித்தல்.

### சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் முதலாவது அறிக்கை

THIRU P. SEENIVASAN: Mr. Speaker, Sir, I present the first Report (Fifth Assembly) of the Committee on Subordinate Legislation.

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, நான் தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

## (3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

## 7. 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 13—கல்வி—தொடர்ச்சி.

* திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகெழுமிய மாமன்றத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தன்னிகரில்லா மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் இந்தக் கல்வி மானியக் கோரிக்கையை





ஆதரிக்கின்ற வகையில் நானும் சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல நல்கிய வாய்ப்புக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித்துறையில் மிகப் பெரிய திருப்புமுனையை, நல்லதொரு முன்னேற்றத்தை, ஏற்றதொரு மறுமலர்ச்சியை உருவாக்க உறுதி கொண்டிருக்கிற தமிழக அரசு இந்த ஆண்டு கல்விக்காக வாரி வழங்கியிருக்கும் நிறைவான தொகையைக் காண்கிறபோதே கலைஞரது அரசு கல்வித்துறை முன்னேற்றத்தில் எந்தளவிற்கு கவனம் செலுத்துகிறது என்பதை இந்த மானியக் கோரிக்கை கலங்கரை விளக்கமாக அறிவித்துக்கொண்டிருக்கிறது. காண்கிற இடத்திலெல்லாம் கல்லூரிகளையும், கல்விக் கூடங்களையும் உருவாக்கி இந்த நாட்டில் இருக்கிற மாணவர் சமுதாயத்தினுடைய இதயக் கதவுகளைத் திறந்துவிடும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறது தமிழக அரசு. அறியாமை அகல வேண்டும், அறிவொளி வீச வேண்டும் என்ற புனிதமான பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கும் இந்த பொன்னான சந்தர்ப்பத்தில் எனது தொகுதியில் உள்ள ஒரு குறைப்பாட்டையும் நான் கோடிட்டுக் காட்டுவது எனது தலையாய கடமையாகும்.

எனது தொகுதியிலிருந்தும், நான் சார்ந்துள்ள வட்டத்திலிருந்தும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் என் தொகுதியில் கல்லூரி இல்லாத காரணத்தினால் வெளி ஊர்களுக்குச் சென்று கல்வி கற்க வேண்டிய நிலை பல்லாண்டுகளாக இருந்து வருகிறது. இதன் காரணமாக பெரும்பாலான ஏழை மாணவர்கள் கல்லூரியில் காலடி படாத நிலை இருந்து வருகிறது. ஆகவே இந்தக் குறைப்பாட்டைப் போக்குகிற வகையில் எனது தொகுதியில் உடனடியாக கல்லூரி ஒன்றைத் துவக்கிட வேண்டும், அப்படி துவக்கிடும் பொறுப்பை தமிழக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். கல்லூரி அமைப்பதற்கென நல்ல இடவசதி, குடி நீர் வசதி போன்றவை என் தொகுதியில் நிறைந்து காணப்படுகிறது. எனவே இந்த வளமான வாய்ப்புகளைப் பயன்படுத்தி என்தொகுதியில் ஒருகல்லூரியை நிறுவ வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்தில் அமர்ந்து இந்த நாட்டை அரசோச்சத் தொடங்கினால் கல்லூரிகளுக்கு கல்லறை கட்டி விடுவார்கள். கல்வி உலகத்தினை காரிருள் கப்பிக் கொள்ளும் என்றெல்லாம் காமராஜ் தலைமையில் இயங்குகிற கனதனவான்கள் பேசிய பேச்சுக்கள் இன்றும் நம் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: கல்லூரிகளுக்கு எல்லாம் கல்லறை கட்டி விடுவார்கள் என்று காமராஜ் காங்கிரஸைச் சார்ந்தவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். அப்படி ஒரு சமாசாரமே இல்லை. அப்படி இல்லாத தகவல்களை உறுப்பினர் அவர்கள் இந்த மன்றத்திலே கூறுவது சரியல்ல என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. மே. சி. தூயமணி:** கடந்த கால ஏடுகளைப் புரட்டிப் பார்க்கிற நேரத்தில் அந்தச் செய்திகள் எல்லாம் இன்னும் நம் மனக்கண் முன் காட்சி தருகின்றன. சாட்சி சொல்லிக்கொண்டிருக்கின்றன என்பதை நான் தலைவர் அவர்கள் மூலம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப் படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக, இப்படி எல்லாம் பேசிய எதிர்கட்சிகள் கூட இன்றைய தினம் இரும்பூதெய்து-கிற அளவிற்கு கலைஞர் அவர்களின் அரசு கல்வித் துறையில் பெற்றிருக்கிற இமாலய வளர்ச்சி கண்டு எதிரிகளும், மாற்றார்களும் போற்றக் கூடிய அளவிற்கு கல்வித் துறையில் தமிழக அரசு பெரியதொரு முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது என்பதை யெல்லாம் நாம் பார்க்க முடிகிறது. தங்கக் கிண்ணத்தில் உணவு அருந்தும் சீமான் வீட்டுச் செல்லப் பிள்ளைகள்தான் கல்லூரிக்கு செல்ல முடியும்; கல்விச் செல்வம் பெற முடியும் என்கிற இழிநிலை மாறி இன்றைக்கு தகரக் குவளையிலே கஞ்சி பருகும் ஏழை வீட்டுப் பிள்ளைகளும் கல்லூரிகளின் நீண்ட நெடிய படிக்கட்டுகளில் ஏறி இறங்க முடியும் என்பதை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நிருபித்துக் காட்டியிருக்கிறது. இன்றைக்கு பி.யு.ஸி. வரையிலே இலவசக் கல்வி என்று இந்த ஆட்சி அறிவித்ததிலே இருந்து இந்த நாட்டிலே இருக்கிற பல்லாயிரக்கணக்கான ஏழை தாழ்த்தப்பட்ட மக்கள், எண்ணிறந்த பழங்குடி வகுப்பைச் சார்ந்தவர்கள், ஏராள மான பிற்பட்ட சமுதாயத்தினராகிய அத்தனை பேரும் பயனடைய முடிந்தது என்பதைப் பார்க்கிறோம்.

இத்தனைக்கும் மேலாக இந்த ஆட்சி செய்த மகத்தான சாதனை என்னவென்றால், கடந்த அரை நூற்றாண்டு காலமாக உலகத்தின் எந்த மூலை முடுக்கிலும் காண முடியாத, உலக நாடுகளின் வரலாற்று ஏடுகளின் எந்தப் பக்கத்திலும் பார்க்க முடியாத, மிகப்பெரியதொரு மொழிப் போராட்டம் தமிழகத்தில் கொழுந்துவிட்டெரிந்தது. இந்தியை ஏற்க மறுத்து இன்னுயிரை காணிக்கையாக தந்த தியாகி களின் கல்லறைகள் நாடு நெடுகிலும் குவிந்து கிடக்கும் காட்சியை நாம் பார்க்கிறோம். அன்னை மொழியை காப்பாற்ற தமிழகத்தின் செம்மண்ணை சிவந்த மண்ணாக மாற்றிய கோரக் கொடுமையிலிருந்து இந்த நாட்டையும் தமிழ் மொழியையும் பாதுகாக்க தமிழக அரசு இந்த மாமன்றத்திலே இருமொழிக்கொள்கையை தீப்பொறி பறக்கும் தீர்மானமாக நிறைவேற்றி காட்டியிருக்கிறது. அதன் மூலம் "நாடு விட்டு நாடு வந்த இந்திக் கழுகே நீ கேடு கெட்டு, சூடு பட்டு ஓடு வெளியே" எனக்கூறி இந்திக்கு இந்த மாநிலத்திலே சாவுமணி அடித்து தமிழர் சமுதாயத்தை காப்பாற்றியிருக்கிறது. இப்படிப் பட்ட வீர முடிவை மேற்கொண்ட தமிழக அரசுக்கு ஒவ்வொரு தமிழ் மகனும் அவன் கடைசி மூச்சு உள்ள வரையிலும்; அவன் ரத்த நாளத்திலே கடைசி சொட்டு இரத்தம் இருக்கும் வரையிலும் இந்த ஆட்சிக்கும் அறிஞர் அண்ணா வழி நடக்கும் கலைஞர் அமைச்ச ரவைக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்பதை இந்த கல்வி மான்யத்தை ஆதரித்து பேசுகிற இனிய நேரத்தில் எடுத்துச் சொல்லி அமருகிறேன். வணக்கம்.





* **திரு. ஏ. சுவாமிதாஸ்:** மாமன்ற பேரவைத் தலைவரவர்களே, இந்த கல்வி மான்யக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தில் கூற விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சி காலத்திலிருந்து இன்று வரையில் நமக்கு வருகிற மொத்த வருமானத்தின் அடிப் படையில் ஏறத்தாழ 4-ல் ஒரு பகுதி கல்விக்காக செலவழித்து வரு கிறோம். இவ்வளவு தொகை செலவிட்டும் கல்வியின் குவான்டிடி விரிவு படுத்தியிருக்கிறோமே தவிர அதனுடைய தரத்தை உயர்த்திய தாகத் தெரியவில்லை. இனி நாம் செய்ய வேண்டியது கல்வியின் தரத்தை உயர்த்துவது தான். நிறைய கல்லூரிகள் திறந்து இருக் கிறோம். பாடசாலைகள் திறந்து இருக்கிறோம். இது எல்லாம் வர வேற்கக்கூடியது. நாம் செலவழிக்கிற பணம், நம் நாட்டின் கல்வித் தரம் அண்டை நாட்டோடு ஒப்பிட்டுப் பார்த்து, மேல்நாடுகளில் வளர்ச்சியடைந்த நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் அளவுக்கு தரத்தை உயர்த்த என்னென்ன செய்ய வேண்டுமென்பதை சிந்தித்துப் பார்த்து அதற்கான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்—தலைமை)

நான் இங்கே குறிப்பிடுவது, நாம் எந்த சோசலிச சமுதாயத்தை அமைக்க விழைகிறோமோ அந்த சோசலிச நாடுகளில் கல்வி முறை எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அமெரிக்கா போன்ற நாடுகளில் கல்வி முறை எப்படி அமைத்து இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, நம் நாட்டு மக்களுக்கு அது எந்த வகையில் பயனளிக்கும் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வியின் தரத்தை எடைபோட்டு நாம் நிர்ணயிக்க முடியாது. தரம் தரம் என்று கூறும்போது, ஆங்கில அறிவு பெற்றிருப்பதை வைத்தா, தொழில் கல்வித் திறமையை வைத்தா, விஞ்ஞான அறிவை வைத்தா, எதை வைத்து நாம் தரத்தை குறிப்பிடுகிறோம். கட்டாயக் கல்வி, இலவசக் கல்வி காரணமாக தரம் குறைகிறது என்று சொல்லப்படுகிறது. மேல்நாடுகளில் இருக்கும் கல்வித் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம் நாட்டில் கல்வியின் தரம் மிகவும் குறைவாக இருக்கிறது என்று ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகவே இந்த கல்வித் துறையை அடி யோடு மாற்றி அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது, எல்லா அதிகாரங்களும் ஒரு இயக்குநரிடம் குவிந்து கிடக்கின்றன. குவிந்து கிடக்கிற அந்த அதிகாரங்களை பரவலாக்க வேண்டும். அந்த அடிப்படைத்தான் மேல் நாடுகளில் கையாளப் படுகிறது. எனவே, எல்லா அதிகாரங்களையும் ஒரு இயக்குநரிடமே தராமல், ஆரம்பக் கல்வி, இடை நிலை கல்வி, கல்லூரிக்கல்வி என்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இயக்குநர் வைத்து அந்த அதிகா ரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாம் இப்போது இடைநிலைக் கல்விக்காக மொத்தம் கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய் செலவழிக்கிறோம். அந்த 60 கோடி ரூபாய் செல வழிக்கவும் ஒரே ஒரு இயக்குநரைத்தான் வைத்து இருக்கிறோம்.

ஆகவே, தனித்தனியாக இயக்குநரைப்போட்டு, அதிகாரங்கள் குவிந்து கிடக்காமல், பரவலாக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நாடுகளில் கல்வித் தகுதி சான்று இதழ்கள் அந்த கல்லூரி ஆசிரியர்களின் மட்டத்திலேயே கொடுக்கப்படுகிறது. ஒரு உயர்நிலைப்பள்ளி இருக்கிறது என்று சொன்னால் அங்கே கற்கும் மாணவர்களுக்கு தகுதி சான்றிதழ் வழங்குவது என்பது அந்த உயர்நிலைப்பள்ளி மட்டத்திலேயே முடிந்து விடுகிறது. இப்போது தமிழ்நாட்டில் மாநில அளவில் சென்ட்ரல் வேல்யூவேஷன் வைத்து இருக்கிறோம். இது பொருத்தமானது அல்ல. பல நூறு ஆசிரியர்களைக் கொண்டு வந்து ஒரு இடத்தில் வைத்து, அவர்களை மாணவர்களுடைய விடைத்தாள்களை திருத்தச் சொல்லும் முறை இயற்கைக்கு முரண்பாடாக இருக்கிறது. ஆசிரியர்களுக்கு 'ப்ரீடம் ஆப் வேல்யூவேஷன்' வேண்டும். அவர்களுக்கு இந்த திருத்துகிற சுதந்திரம் கொடுத்தால்தான், விடைத்தாள்களை நன்கு ஊன்றிப்பார்த்து திருத்த முடியும். ஆகவே, அந்த முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்திலே 10 சி. இ. ஓ-க்கள் இருக்கிறார்கள். இந்த மாநிலத்தை 10 பிரிவாக பிரித்து, ஒவ்வொரு பிரிவுக்கும் தேர்வு தனியாக நடத்த வேண்டும். அப்படி தேர்வு நடத்தி, விடைத்தாள்களையும் ஆங்காங்கு முன்பிருந்த முறையில் திருத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் திருத்துவதில் ஏற்படும் காலதாமதம் தவிர்க்கப்படும். மாநில அடிப்படையில் விடைத்தாள்கள் திருத்தப்பட்டு, ரிசல்ட் போடுவதால், பி.யு.சி. படிக்கக் கல்லூரியில் சேர்ந்து கொள்வதில் கால விரயமும் தாமதமும் ஏற்படுகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பி.யு.சி. என்று வைத்து இருக்கிறோம். உயர்தர பாடசாலைக்குள்ளும் வராது. இது கல்லூரிக்குள்ளும் வராது. இந்த இடைநிலை பயிற்சி திட்டத்தால் நாம் இடையில் நின்று நசுங்கிக் கொண்டு இருக்கிறோம். பல மாநிலங்கள் இதை கை விட்டு விட்டன. கேரளா கை விட்டுவிட்டது, மைசூர் கைவிட்டு விட்டது. ஆந்திரா கைவிட்டு விட்டது. நாம் மாத்திரம் அதை வைத்துக்கொண்டு இருப்பதில் பயன் இல்லை. முன்பு இருந்தது போல் இன்டர்மீடியேட் வகுப்புகள் வைக்க வேண்டும். அல்லது டிகிரி கோர்சே நான்கு வருஷம் வைக்க வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி.க்கு பிறகு 4 வருஷம் டிகிரி படிப்பு என்று வைக்கலாம், இந்த பி.யு.சி. தேவையில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில் இரு மொழிக் கொள்கையை இந்த அரசு கடைப்பிடித்து வருகிறது என்று சொன்னார்கள். அதாவது, ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து கொடுப்பது என்று இரு மொழிக்கொள்கையை பின்பற்றி வருகிறோம் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டில், தமிழ்தான் போதனா மொழியாக எல்லா அரசினர் கல்லூரிகளிலும் இருக்க வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அதிலே கிளர்ச்சி, போராட்டம்



நடைபெற்றதால், அதை ஆராய்வதற்காக ஒரு குழுவைப் போட்டார்கள். அந்தக் குழு கொடுத்த அறிக்கையின்படி இரண்டு மொழிகளிலும் பயிலும் வாய்ப்பு மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. இந்த ஆண்டு மாணவர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் பயில வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறதா, அரசினர் கல்லூரியில் ஆங்கிலத்தில் பயில திட்டம் புகுத்தியிருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் கற்க வேண்டுமென்கிற விருப்பம் இருக்கிறது. அந்த விருப்பம் மொழி அறிவதற்கு மட்டுமல்ல. ஆங்கிலத்தில் கற்றால், வெளி மாநிலத்திற்கு சென்றாவது வேலை பாக்கலாமே என்றுதான் அப்படிச் சொல்கிறார்கள். அந்த வாய்ப்பைக் குறைக்கக்கூடாது.

ஆங்கிலத்தின் தரம் குறைந்து விட்டது என்று சொல்கிறார்கள். இப்போது சென்னைப் பல்கலைக்கழகத்திலே ஆங்கிலத்திற்கு இரண்டு பாடங்கள் தான் வைத்து இருக்கிறார்கள். முன்னாலே 4 பாடம் இருந்தது. பொயட்ரி, ப்ரோஸ், ஷேக்ஸ்பியர், காம்போசிஷன் என்று இருந்தது. ஆனால், இப்போது மாடர்ன் இங்கிலீஷ் எழுதப் படிக்க ஓரளவு தெரிந்தால் போதும் என்ற அடிப்படையில் இருக்கிறது. அதோடு, இந்த இரண்டு பேப்பர் இருப்பதால் தரம் குறைவதற்கான சூழ்நிலை இருக்கிறது. அப்படி இரண்டு பேப்பர்கள் மட்டும் புகுத்துவதால், ஆங்கில ஆசிரியர்களுக்கு வேலை குறைந்துவிடும். அதே போல தமிழுக்கும் இரண்டு பேப்பர்தான் வைக்கப்பட்டிருக்கிறது. இனி தமிழ் எம்.ஏ. பாஸ் செய்யும் ஆசிரியர்களுக்கும் தமிழ் ஆர்வம் குறைந்துவிடக்கூடும், என்பதையும் இந்த அவைமுன் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி என்று நாம் செய்திருந்தாலும், தனியார் கல்லூரிகளில் "பீஸ்" என்று இல்லாவிட்டாலும், இதர காரியங்களுக்கு என்று தங்கள் மனம்போல் பணத்தை பெறுகிறார்கள். அரசு இதைச் கண்காணிக்க வேண்டும்.

தொழில் நுட்பக் கல்லூரிக்கு தேர்வு நடத்துகிறோம். அதில் "கிரேட்" மட்டும் பார்க்கப்படுகிறது. ஒரு மாணவன் இரண்டு மூன்று டி-ப்ளஸ் இருந்தால் அல்லது, டி, ஏ-ப்ளஸ் எடுத்துவிட்டால், அதனால் தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சி அடையாது. ஆகவே, தொழில் நுட்பக் கல்லூரிக்கு சேர்ப்பதற்கு மாணவர்களுக்கு ஒரு "ஆப்டிட்யூட்" டெஸ்ட் வைக்க வேண்டும். அவர்களுக்கு அந்தக் கலையில் ஆர்வம் இருக்கிறதா என்பதைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். வெறும் கிரேடை மட்டும் வைத்துக் கொண்டு அவர்களை எடுக்கக்கூடாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தொழில் கல்வி வளம் பெற, மாணவர்கள் தேர்ச்சி பெற, இந்தமாதிரியான டெஸ்ட் அவசியம் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

(மணியடித்து அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

* திரு. ஏ. ஆர். சுப்பையா: துணைத் தலைவர் அவர்களே, இந்த கல்வி மானியத்தின் பேரில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. ஏ. ஆர். சுப்பையா] [1971 ஜூலை 10

இப்பொழுது புகுமுக வகுப்புக்கும் இலவசக் கல்வி வரவேற்கக் கூடியதுதான். ஆனால் சில பாகுபாடுகள் செயல்படுகின்றன. "ஃபீ" கன்செஷன் சம்பந்தப்பட்ட வரையில், 1967-ல் ஒரு ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள். ஜி. ஓ. நெ. 1055, 24—6—1967-ல் சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறது. அந்த உத்தரவின்படி இதற்கு முன் வருஷத்தில் என்ன ஃபீ வாங்கப்பட்டதோ அதைக் கொடுக்க வேண்டும் என்று வறையறுக்கப்பட்டிருக்கிறது. பல கல்லூரிகள் ஒழுங்காகச் செயல்பட்டிருக்கின்றன. ஆனால் சிலர் ரூ. 80 வரையில் வசூல் செய்கிறார்கள். அவர்களுக்குச் சாதகமாக சர்க்கார் தன்னுடைய போக்கை மாற்றிக் கொண்டு இருக்கிறது. அந்த வகையில் சலுகை கொடுக்கிறது. அதாவது 1968–69, 1969–70-ல் என்ன ஃபீ வாங்கியதோ, அதையே செயல்படுத்தியிருக்கிறார்கள். இந்தப் பாகுபாடு அநீதியானது என்பது என்னுடைய எண்ணம். ஒழுங்காக சர்க்கார் கொடுத்த விதிமுறைப்படி, முன் ஆண்டு வாங்கப்பட்டதையே தொடர்ந்து சிலர் செய்கிறார்கள். அவர்களுக்குச் சலுகை இல்லாமல், சில கல்லூரிகள் தன்னுடைய போக்கில் போகிறவர்களுக்கு சர்க்கார் தன் போக்கை மாற்றிக்கொண்டு, அவர்களுக்கு சலுகை கொடுத்திருப்பது வருந்தத் தக்கது. ஆகவே, எல்லோருக்கும் ஒரு "டனிபார்ம் ரேட்" கொடுக்கும் நிலையை உருவாக்க சர்க்கார் யோசிக்க வேண்டும். முக்கியமாக கிராமப் பகுதிகளில் ரூரல் ஏரியா கல்லூரிகளில் தரத்திற்குத் தக்கபடி பீஸ் அனுமதிக்கிறார்கள். ஆகையால், அது சம்மந்தப்பட்ட வரையில் நிதிக் கஷ்டம் இருக்கிறது. ஆகவே, ஒரு யூனிபார்ம் ரேட் போட்டு, எல்லோருக்கும் உயர்வு கொடுத்தால் நலமாக இருக்கும்.

பில்டிங் கிராண்ட் சம்மந்தப்பட்ட வரையில், சர்க்கார் கல்லூரிகளுக்கு ரூ. 45 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. தனியார் கல்லூரிகளுக்கு ரூ. 5 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஆக மொத்தம் 50 லட்சம். இதில் வேடிக்கை என்னவென்றால், 118 கல்லூரிகள் தனியார் துறையில் இருக்கிறது. சர்க்கார் மேற்பார்வையில் இருப்பது 43 கல்லூரிகள்தான். இந்த 43 கல்லூரிகளுக்கு 45 லட்சமும், தனியார் கல்லூரிக்கு 118-க்கு 5 லட்சமும்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு விதத்திலும் பொருத்தமாக இல்லை. இதை கவனித்து அதிகப்படியான தொகையை தனியார் கல்லூரிக் கட்டிட நிதிக்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு கல்லூரிக்கு 75,000 ரூபாய் அளவில் 50 பர்சன்ட் கிராண்ட் கொடுக்க திட்டம் இருக்கிறது. இது 20 வருஷத்திற்கு முன் ஏற்பட்ட திட்டம். இதே தான் இன்றுவரையில் அமுலில் இருக்கிறது. அறிக்கைப்படி ஆரம்பப் பள்ளிகளுக்கு கட்டடத்திற்கு ரூ. 4,000 என்றிருந்ததை, இன்றைக்கு இருக்கும் நிலையை அனுசரித்து ரூ. 8,000 என்று மதிப்பு எடுத்து, 100 பர்சன்ட் உயர்த்திக் கொடுக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, கல்லூரிகளுக்கு மட்டும் அதே ரூ. 75,000 என்றிருப்பது பொருத்தமில்லை. அதைக் கொஞ்சம் மாற்றி, ஒரு லட்சம் என்ற அளவில் வைத்தால், இன்றைக்கு இருக்கும் விலை வாசிகளைக் கவனத்தில் கொண்டு செய்ததாக இருக்கும்.

காலேஜ் பஸ் சம்பந்தப்பட்ட வரையில், ஆறு மாதத்திற்கு ஒரு தடவை பிட்னஸ் சர்ட்டிபிகேட் வாங்க வேண்டும் என்றிருப்பதால், பல கஷ்டங்கள் இருக்கின்றன. காலேஜ் பஸ்கள் சம்மந்தப்பட்ட



1971 ஜூலை 10] [திரு. ஏ. ஆர். சுப்பையா]

வரையில் இந்த விதியை மாற்றி, ஒரு வருஷத்திற்கு ஒரு தடவை வாங்கினால் போதும் என்று வைத்தால், விடுமுறை காலத்தில் ரிபேர் செய்து கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

பஞ்சாயத்து யூனியன் டீச்சர்ஸ் டிரான்ஸ்பர்கள் ஒழுங்கீனமாக இருக்கிறது. இவற்றையெல்லாம் சர்க்கார் பொறுப்பில் எடுக்க வேண்டும். டி.இ.ஓ. அல்லது வேறு ரீஜனல் ஆபீசர் கீழே வைத்து, அவர்கள் பொறுப்பில் விட்டு, ஆசிரியர்கள் அரசியல் கண்ட்ரோட்டத்தில் மாற்றங்கள் செய்யப் படுவதைத் தடுக்க வேண்டும். இவைகளெல்லாம் சர்க்கார் பொறுப்பில் இருக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன்களிடம் இருப்பது திருப்தியாக இல்லை. நடுநிலையில் இருந்து சர்க்கார் கண்காணிப்பதாக இருந்தால் நல்லது.

நண்பகல் உணவு விரிவு படுத்தப்பட வேண்டும். சென்ட்ரல் கிச்சன் ஸ்கீமை மற்ற இடங்களுக்கும் விரிவு படுத்தி செயல்பட வேண்டும். அந்த சென்ட்ரல் கிச்சன் ஸ்கீமை மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் ஒழுங்கீனங்களை நிவர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

*திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்தின் மீது, இந்த விவாதத்தில் கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களையும் எடுத்துக் கூற வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழக அரசு கல்வித் துறையில் கணிசமான அளவில் முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்று 81 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கியிருப்பதிலிருந்து நாம் அறிந்துக் கொள்ள முடிகிறது. அதற்காக நாம் இந்த அரசை பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். கல்விக்காகச் செலவிடும் பணம் அரசாங்கம் நல்ல முறையில் செலவிடுகிறது, இந்தப் பணமெல்லாம் வருங்காலச் சந்ததியினருக்கு நல்ல அறிவையும், கல்வியையும் அளித்து அவர்களுடைய வருங்காலத்தை ஒளிமயமாகச் செய்ய வேண்டும் என்கிற அடிப்படையில் அமைந்திருக்கிறது. அது உண்மையாக இருந்தாலும், நிர்வாக முறையில், செயல்படும் முறையில், நாம் ஆங்காங்கே சில குறைபாடுகளைக் காணக்கூடிய துரதிர்ஷ்டமான நிலை இருக்கிறது என்பதை மெத்த வருத்தத்துடன் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, ஊராட்சி ஒன்றியத்தால் நடத்தப்படும் கல்விக் கூடங்கள் மேற்கொண்டும் அவர்களாலேயே நடத்தப்பட வேண்டுமா, அல்லது மாற்றுத் திட்டங்கள் செய்ய வேண்டுமா என்பதனை யோசனை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு நாம் வந்திருக்கிறோம் என்பதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன்.

குறிப்பாக மலைப் பகுதிகளில் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படும் பள்ளிகளைப்பற்றி அன்றுகூட சட்ட மன்றத்தில் குறிப்பிட்டேன். எங்களுடைய பகுதியான ஜவ்வாது மலையில் ஊராட்சி ஒன்றியத்தால் சில ஆரம்பப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. மலைத்திருப்பத்தூர் என்ற ஊரில் கடந்த $2\frac{1}{2}$ ஆண்டுகளாக பள்ளிக்கூடம் மூடிக் கிடக்கிறது. கிராம மக்கள் ஆசிரியரைக் காணவில்லை. மாணவர்கள்

கூட காணவில்லை. மாணவர்கள் இல்லையென்றால், பள்ளிக்கூடம் நடத்தப்படவில்லை. ஆனால் அந்த ஆசிரியர்களுக்கு சம்பளம் மட்டும் மாதா மாதம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதைப் பற்றி நான் யாரையும், அந்த ஆசிரியர்களைக் கூட, குறை சொல்ல விரும்ப வில்லை. அதிகாரிகள் எப்படி இவ்வளவு ஏனோ தானோ என்ற நிலையில் பொறுப்பற்ற தன்மையில் இருந்து வருகிறார்கள் என்பதை நினைக்கும்போதுதான் நான் வேதனை அடைகிறேன். மலைத் திருப்பத்தூர் என்ற மலை ஊர். அங்கு நெல்லிவாசல் என்ற ஒரு இடம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் குறுக்கிடுவது, இதை தவறு என்று சொல்லுவதற்காக இல்லை. இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து இருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் இதைப்பற்றி சப்-கலெக்டர் அவர் களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்து இருக்கிறேன். அவர்களிடமிருந்து நேற்றுதான் ஒரு குறிப்பு எனக்கு வந்தது. சம்பந்தப்பட்ட நான்கு ஆசிரியர்கள் மலைத் திருப்பத்தூரில் மட்டும் அல்ல, புலியூர், இன்னும் சில கிராமங்களில் அப்படி நடந்து வந்திருக்கிறது என்ற காரணத்தால் ஆசிரியர்கள் இரண்டு திங்களுக்கு முன்பு சஸ்பெண்டு செய்யப்பட்டு இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைத்தான் நான் சொல்லு கிறேன். பேசும்போது அதையும் சேர்த்துப் பேசி இருந்தால் நன்றாக இருந்திருக்கும். வெறும் குற்றச்சாட்டுகள் மாத்திரம் அல்லாமல் அவைகளைக் குறிப்பிடுகிற நேரத்தில் அவைகள் களையப்படுகின்றன என்று சேர்த்துப் பேசுவது மற்ற உறுப்பினர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : அதைத்தான் ஒன்றன்பின் ஒன்றாக என் கடமையை உணர்ந்து சொல்லிக்கொண்டு வந்தேன். அதைத்தான் சொல்ல வந்தேன். அதனாலே இப்போது அவர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்திருக்கிறது. சஸ்பெண்ட் செய்யப்பட்ட ஆசிரியர்களுடைய இடத்தை நிரப்பும் வகையில் உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து குறிப்பாக மலைப் பகுதிகளில் வாழுகிற பிள்ளைகள் படிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கம் நம்முடைய அரசுக்கு இருக்கிறது. அந்த வகையில் அவர்களைப்பற்றி தனி அக்கறை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வதோடு மேற்கொண்டு இவ்வாறு நிகழாமல் கண்காணித்து வருவதற்கு—மலைப் பகுதியில் கண்காணித்து வருவது கஷ்டம் தான், அதை உணர்கிறோம்— நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வனத் துறையினரால் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களில் இத்தகைய புகார்கள் வரவில்லை. ஆகை யினாலே கண்காணிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் மிட்டூர் என்ற ஊர் என்





தொகுதியில் இருக்கிறது. அங்கே ஒரு அரசாங்கப் பள்ளி நடத்தப் படுகிறது. உயர்நிலைப் பள்ளி அது. அந்தப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுவதற்கு ஊர் மக்கள் பணம் கொடுத்தால்தான் பள்ளிக்கு அங்கீகாரம் கொடுக்க முடியும் என்று சொல்லப்பட்டதன் காரண மாக கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு வாக்களித்திருக்கிறார்கள். ஆனால் கொடுத்த வாக்கு ஏதோ 10 ஆண்டுகளுக்கு முன்பு நடை பெற்றிருக்கிறது. அதற்காக ஒரு கமிட்டியை அவர்கள் நியமித்திருக் கிறார்கள். அந்தக் கமிட்டியினர் பிள்ளைகளிடத்திலிருந்து பள்ளியில் சேர்க்கும்போது பணம் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணம் எல்லாம் எங்கே சென்றது என்று இன்று வரையில் தெரிய வில்லை. கட்டிடம் கட்டப்படவில்லை. தலைமை ஆசிரியரைக் கேட்டேன். தலைமை ஆசிரியர் அவர்கள் கைப்பட ஒரு குறிப்பை எழுதிக் கொடுத்திருக்கிறார். அந்தக் குறிப்பு என்னிடத்தில் இருக் கிறது. அமைச்சர் விரும்பினால் அதை அவரிடத்தில் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். யார் யார் எவ்வளவு ரூபாய் வசூல் செய்தார்கள் என்ற விவரமும், யாருடைய பெயரில் சேமிப்பு நிதியிலும், வங்கிகளிலும் இருக்கின்றன என்ற விவரமும் இருக்கின்றன. அதிலே வசூல் செய்த சிலர் மறைந்து விட்டார்கள். எப்படி மீட்பது என்று கவலையாக இருக்கிறது. அரசாங்கத்திற்கு எந்த முறையில் பதில் சொல்ல வேண்டுமென்ற நிலையில் நான் இருக்கிறேன். நான் புதிதாக வந்திருக்கிறேன் என்று அந்தத் தலைமை ஆசிரியர் மிகவும் வருத்தத்தோடு அந்தக் குறிப்பைக் கொடுத்திருக் கிறார். அதிலே பெயர்கள் கூட இருக்கின்றன. நான் பெயர்களைப் படிக்க விரும்பவில்லை. அமைச்சர் அவர்கள் விரும்பினால் கொடுத்து விடுகிறேன். அதைப்பற்றி அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும். இத்தகைய சமூக விரோதிகள், சில பெரிய மனிதர்கள் என்று பெயர் வைத்துக் கொண்டு ஊரில் நடமாடும் சமூக விரோதிகள் பள்ளிக் கூடங்களுக்கு பணம் சேர்க்கிறோம் என்று பணத்தைச் சாப்பிட்டு விடுகிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களிடமிருந்து நம்முடைய இந்த அரசாங்கப் பள்ளிகளை, தனியார் பள்ளிகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர் கள் என்ற முறையில் எங்களுக்கும் இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் உள்ள ஜவ்வாது மலையில் 50 கிராமங்கள் இருக்கின்றன. அந்த மலைக்குக் கீழ் சுமார் 42 கிராமங்கள் இருக்கின்றன. இந்த கிராமங்களுக்கெல்லாம் ஆண்டியப்பனூரிலேதான் ஒரு 8-வது வகுப்பு வரை உள்ள பள்ளி இருக்கிறது. அதை உயர்நிலைப் பள்ளியாக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். அங்கே ஒரு உயர் நிலைப் பள்ளியை அமைத்துத் தந்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சில லப்பை முஸ்லீம்கள் கூட உருது பேசுகிறார்கள். கம்யூனிடி சர்டிபிகேட் கேட்டால் பல அதிகாரிகள் கொடுக்க மறுக்கிறார்கள் என்ற புகார் மாநிலம் முழுவதும் இருந்து வந்திருக் கிறது. அதைக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று நான்

அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இதோடு கூட, கடைசியாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, ஆடுதுறையில் ஒரு உயர்நிலைப் பள்ளி வைக்கவேண்டுமென்று மனு செய்திருக்கிறார்கள். அந்தப் பள்ளியை நாங்கள் அமைத்துக் கொள்வதற்கு ஏதோ டெபாசிட் செய்யவேண்டுமென்று முறை வைத்திருக்கிறார்கள். அந்த டெபாசிட்டிலிருந்து விதி விலக்கு தரவேண்டுமென்று முறையீடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அந்த முறையீடுகளைக் கவனிப்பதாகவும், மாணவர்களைச் சேர்க்கும் பள்ளி வேலைகளைத் துவங்கலாம் என்று குறிப்பிட்டதற்குப் பின்பு அந்தப் பள்ளியில் மாணவர்களைச் சேர்க்கத் துவங்கிய பிறகு, இப்போது நேற்றையதினம் அனுமதியில்லையென்று மறுத்திருக்கிறார்கள் என்ற ஒரு வருந்தத்தக்க செய்தி எனக்குச் சொல்லப்பட்டது. இந்த முறையை மாற்றியமைத்து, அப்படி சட்டம் இடம் கொடுக்காவிட்டால், இப்படி உங்களுடைய முறையீடுகள் கவனிக்கப்படும் என்ற எண்ணத்தை உண்டாக்கும் வகையில் அரசாங்க அதிகாரிகள் நடந்து கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதை அமைச்சர் அவர்கள் கண்காணிக்க வேண்டும். இந்த விதி முறைகளை மாற்றி அந்தப் பள்ளிக்கூடம் துவங்க, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, குறிப்பாக, இந்த அரசு கல்விக்காக செய்து வருகின்ற நல்ல பணியினை, கல்வியில் நம்முடைய மாநிலம் கண்டிருக்கிற முன்னேற்றத்தை, 15 கோடி ரூபாயாக இருந்த இந்த மானியம் 81 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு நம்முடைய நாட்டில் படிக்கின்ற அத்தனை மக்களும் படித்து முன்னேற வேண்டும் என்ற நந்நோக்கத்தோடு இந்த அரசு செய்கிறது. அப்படிப்பட்ட முன்னேற்றமான திட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து அவர்களுக்குப் பாராட்டு தெரிவித்து இந்த மானியத்தை ஆதரித்து விடைபெறுகிறேன்.

*திரு. பெ. சௌந்திரபாண்டியன் : சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுகிற நல்ல வாய்ப்பினை அளித்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு நாட்டின் பொருளாதார ஏற்றத்திற்கும், நாகரீகம் படைத்த சமுதாய வளர்ச்சிக்கும், கல்வி இன்றியமையாத ஒரு கருவியாகும். ஆகவே, கல்விக்காக செலவிடப்படும் தொகை ஒரு நாட்டில் எதிர்கால சமுதாயத்திற்காகப் போடப்படும் உரம், மூலதனமாகும். நம்முடைய அரசு ஏற்படுவதற்கு முன்பிருந்த காங்கிரஸ் அரசு 1966–67-இல் கல்விக்காக செலவிட்ட தொகை 44 கோடி ரூபாய். 1967-ம் ஆண்டு முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரான பிறகு நம்முடைய கழக அரசு செலவிட்ட தொகை 54 கோடி. அதற்குப் பிறகு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு படிப்படியாக செலவிடும் தொகையை உயர்த்தி 1971–72-ம் ஆண்டு 81, 84 கோடியை ஒதுக்கியிருப்பது மாபெரும் சாதனை என்று நாடும் நாமும் வரவேற்கிறோம்.





இந்தச் செலவு நம்முடைய மொத்த மாநிலச் செலவில் 23 சதவீதமாகும். இதில் மருத்துவக் கல்விக்காக செலவிடப்படும் தொகை, வேளாண்மைக் கல்விக்காக செலவிடப்படும் தொகை, கால்நடை மருத்துவ கல்விக்காக செலவிடப்படும் தொகை, அரிஜன நலப் பள்ளிகளுக்காக செலவிடப்படும் தொகை, ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பள்ளிகளுக்காக செலவிடப்படும் தொகை இதில் அடங்காது என்பதை எண்ணும்போது மொத்தத்தில் ஏறத்தாழ 30 சதவீதம் நம்முடைய அரசு கல்விக்காக செலவிட்டு வருகிறது.

இதே போல பள்ளிகள் தொடங்கவும், உயர் நிலைப் பள்ளிகள் அமைக்கவும், கல்லூரிகள் கட்டவும் நம்முடைய அரசு ஒரு மாபெரும் வரலாற்றை ஏற்படுத்தியிருக்கிறது. 1966–67-ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 31,157 தொடக்கப் பள்ளிகள் இருந்தன. 4 ஆண்டுகளுக்குப் பிறகு நம்முடைய ஆட்சிக் காலத்தில் 70–71-ல் 2,635 பள்ளிகளாக உயர்ந்து இருக்கின்றன. இதே போல 66–67-இல் 105 கல்லூரிகள் நம்முடைய நாட்டில் இருந்தன. ஆனால் 70–71-இல் 2,635 பள்ளிகளாக உயர்ந்து இருக்கின்றன. இதே போல 66–67-இல் 105 கல்லூரிகள் நம்முடைய நாட்டில் இருந்தன. ஆனால் 70–71-இல் 161 கல்லூரிகள் இருக்கின்றன. கல்லூரிகளின் வரலாற்றையும், உயர் நிலைப் பள்ளிகளின் வரலாற்றையும் எடுத்துப் பார்ப்போமானால் கழக அரசின் இந்த 4 ஆண்டு காலத்தில் 724 தொடக்கப் பள்ளிகள் கூடுதலாகத் தொடங்கியிருக்கின்றன, 263 உயர் நிலைப் பள்ளிகள் கூடுதலாகத் தொடங்கியிருக்கின்றன, 56 கல்லூரிகள் கூடுதலாகத் தொடங்கியிருக்கின்றன.

ஒரு நாட்டில் கல்வி கற்றால் மட்டும் போதாது, கற்கின்ற இடம் நல்ல முறையில் இருந்தால்தான் மாணவர்கள் உற்சாகமாகக் கல்வி பயில முடியும் என்பதை அறிந்த கழக அரசு 1968-ம் ஆண்டுக்குப் பிறகு ஏற்கனவே தொடக்கப் பள்ளிக்கு காங்கிரஸ் அரசு ரூ. 4,000 வழங்கிய மானியத்தை நம்முடைய கழக அரசு, கலைஞர் அரசு ரூ. 8,000 ஆக உயர்த்தியிருக்கிறது. இதேபோல இடை நிலைப் பள்ளிகளுக்கு காங்கிரசு அரசு ரூ. 7,000 மானியம் தந்தது. ஆனால் கழக அரசு ரூ. 13,000 ஆக உயர்த்தியிருக்கிறது. இது உள்ளபடியே நாமும் நாடும் பாராட்ட வேண்டிய ஒன்றாகும். இதேபோல நம்முடைய கலைஞர் அவர்கள் பரிசுச் சீட்டு நிதியிலிருந்து நடப்பு ஆண்டுக்கு ஏறத்தாழ 50 லட்சம் ரூபாயைப் பள்ளிகள் கட்டுவதற்காக ஒதுக்கி இருப்பதை உள்ளபடியே நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இதேபோல கல்வியைப் பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள் அவர்களுடைய குடும்பங்கள் நல்ல முறையில் இருந்தால்தான் நிம்மதியாக வாழ்ந்தால்தான் பள்ளியில் மாணவர்களுக்கு நல்ல முறையில் கல்வியைப் பயிற்றுவிக்க முடியும் என்பதை மனதில் கொண்டு நம்முடைய கழக அரசு ஆற்றியுள்ள சாதனையை நான் இங்கே குறிப்பிடுவது சாலப் பொருந்தும் என்று நினைக்கிறேன். 20 ஆண்டுகாலம் காங்கிரசு அரசுக் காலத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியப் பெருமக்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 தான் ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு ரூ. 20-ஐ ரூ. 30 ஆக ஏற்றி இருப்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

இதேபோலத்தான் ஓய்வு ஊதியத் திட்டத்தின் கீழ் நன்மை பெறுவதற்கு ஆசிரியர்களுக்கு அவர்களுடைய பணிக் காலத்தை 20 ஆண்டுகளாக வரம்பு விதித்து இருந்தது. ஆனால் கழக அரசு ஏற்பட்ட பிறகு 20 ஆண்டு பணிக் காலத்தைக் குறைத்து 5 ஆண்டு காலம் பணியாற்றினால் போதுமென்று ஆணை பிறப்பித்துள்ளது.

இந்த ஓய்வு ஊதியத் திட்டத்தில் உடற் பயிற்சி ஆசிரியர்களும் தனியார் பள்ளிகளிலே பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களும் காங்கிரசு அரசு காலத்தில் சேர்க்கப்படவில்லை. ஆனால் கழக அரசு ஏற்பட்ட பிறகு இந்த நியாயமான கோரிக்கையை ஏற்று அவர்களுக்கும் விரிவு படுத்தப்பட்டு இருப்பதை உள்ளபடியே நாம் அத்தனை பேரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதேபோல தொடக்கப்பள்ளியிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் உற்சாகத்தோடு தங்களுடைய கடமையை ஆற்றவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு நம்முடைய அரசாங்கம் விருதுகளும், ரொக்கப் பரிசுகளும் அளித்து ஊக்குவித்து இருப்பது உள்ளபடியே நாம் அத்தனை பேரும் வரவேற்கவேண்டிய ஒன்றாகும். ஆசிரிய குடிமக்கள் முந்திய காங்கிரசு அரசு காலத்தில் மருத்துவ மனைகளில் சென்று சிகிச்சை பெறுவதற்கு இலவசமாக அனுமதிக்கப்படவில்லை. ஆனால் கழக அரசு, கலைஞரின் அரசு, ஆரம்ப ஆசிரியர்கள் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறுவதற்கும், வீட்டு வாடகைப்படி பெறுவதற்கும், தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் முன் பணம் பெறுவதற்கும், திருமணக் கடன் பெறுவதற்கும் வழி வகை செய்திருப்பது உள்ளபடியே ஆசிரிய சமுதாயத்திற்கு முன்னேற்ற கழக அரசு செய்துள்ள சாதனைப் பட்டியல் என்றுதான் நான் கருதுகிறேன்.

இதைவிட 1970 முதல் இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் சிபார்சுக்கு இணங்க இந்த நாட்டிலுள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதத்தை உயர்த்தி, ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களுடைய நிம்மதியான வாழ்க்கைக்கு இந்த அரசாங்கம் வழி வகை செய்திருக்கிறது என்பதை நாம் அத்தனை பேரும் பாராட்டவேண்டும்.

அதே போல, நம்முடைய கழக அரசு ஆசிரியர்களுக்கு உதவியதைப்போல, மாணவ சமுதாயத்திற்குப் பல நன்மைகளைச் செய்திருக்கிறது. பி.யூ.சி., வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது, இதே போல பி.ஏ., பி.எஸ்.ஸி., போன்ற பட்டப் படிப்புகளில் தமிழ்க் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஜாதி மத வேறுபாடின்றி, பொருளாதார ஏற்றத் தாழ்வின்றி ஆண்டு ஒன்றுக்கு ரூ: 180 அளிப்பதற்கு நம்முடைய கழக அரசு, கலைஞர் அரசு முன்வந்திருக்கிறது.

அதேபோல நம்முடைய ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பள்ளிகளை அரசாங்கம் சீர்திருத்தி, ஆரம்ப தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு நிலையையும், உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒரு நிலையையும், கல்லூரிக் கல்விக்கு ஒரு நிலையையும் மூன்று பிரிவாகப் பிரித்து நிர்வாகத்தைச் சீரமைக்கவேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.



நம்முடைய மாணவ சமுதாயத்தையும், ஆசிரிய சமுதாயத்தையும் ஒருங்கிணைத்து செயல்பட்டால்தான் வருங்காலத்தில் நாமும் இந்த நாடும் பொருளாதாரத் துறையிலும், சமுதாயத் துறையிலும், நாகரீகத் துறையிலும் மற்ற நாட்டோடு போட்டி போட்டுக் கொண்டு முன்னேற முடியும். ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு நம்முடைய கழக அரசின் முதல்வர் கலைஞர் அவர்களும், கல்வி அமைச்சர் நாவலர் அவர்களும் இப்போது நாட்டுக்குப் பயன்படும் வகையில் மேலும் மேலும் நம்முடைய நாட்டில் கல்வியைப் பெருக்குவதற்குப் பல வழிமுறைகளை வகுக்க வேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு பேரவைத்தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*<u>திரு. காதர்பாஷா என்ற வெள்ளைச்சாமி</u> : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, முந்தையநாள் நமது மாமன்றத்தில் கல்வி சம்பந்தமாக நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட கல்வி கோரிக்கை மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்தைச்சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அரசு கல்வியிலே நல்ல பல முன்னேற்றங்களைக் கொண்டு வருகிறது என்பதனை யாரும் மறுக்கமாட்டார்கள் எனக் கருதுகிறேன். 1966–67-ம் ஆண்டிலிருந்து இன்றைய 1971–72 வரையிலும் நல்ல பல முன்னேற்றங்களை பலதரப்பட்ட கல்வியில் கொண்டு வந்திருக்கிறது நமது அரசு.

1966–67-ல் தொடக்கப் பள்ளிகள் 31,157 ஆக இருந்தது, இன்று 1971–72-ல் 31,881 பள்ளிகளாக வளர்ந்திருக்கிறது என்று சொன்னால் அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சரியாக 724 தொடக்கப் பள்ளிகள் இந்தத் தமிழகத்திலே அதிகப் படுத்தப்பட்டு இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகள் 1966--67-ல் 2,372 ஆக இருந்த எண்ணிக்கையை 1971–72-ல் 2,635 பள்ளிகளாக உயர்ந்திருக்கின்றன. 263 உயர்நிலைப் பள்ளிகள் உயர்ந்திருப்பதைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கல்லூரியிலும் 1966–67-ல் 105 கல்லூரியாக இருந்தது இன்று 161 கல்லூரிகளிலும் உயர்ந்திருக்கின்றன. 56 கல்லூரிகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. கல்வித் தரம் உயர்வதற்கும், பின்தங்கிய மக்கள் வளர்ச்சி பெறுவதற்கும் ஏனைய பகுதிகளில் எல்லாம் சீராக, கல்லூரி காணாத பகுதிகளுக்கெல்லாம் கல்லூரிகள் ஏற்படுத்தி, கல்வி வசதிகளைப் பெருக்குவதற்கு நல்ல பல வசதிகளை உருவாக்கியிருக்கிற இந்த அரசை உண்மையில் மக்கள் சார்பாக நாமெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, கல்லூரிகள் தரம் சிறப்பாக நடக்கிற நேரத்தில் நம்முடைய அரசு கண்காணிப்பாகவும், கவனமாகவும் கவனிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தனியார் துறையில் நடத்தப்படுகிற உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சில நிர்வாகக் குறைபாடுகளும் நிர்வாகக் கவனக் குறைவுகளும், நிர்வாக ஊழல்களும் உள்ள முறையில் சில நிர்வாகஸ்தர்கள் அமையப் பெற்றிருக்கிறார்கள்.

[திரு. காதர்பாட்சா என்ற வெள்ளைச்சாமி] [1971 ஜூலை 10

உதாரணமாக, நாங்கள் நீண்ட நெடுங்காலமாக எங்கள் தொகுதியான முதுகுளத்தூரில் கல்லூரி வேண்டுமென்று கேட்டு வந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய திருக்கரத்தால், எங்களுடைய ஒப்பற்றத் தலைவர் மறைந்த மாமேதை திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய பெயரால் கடந்த ஆண்டு ஒரு கல்லூரி தொடங்கப்பெற்றது. அந்தக் கல்லூரி தனியார் கல்லூரியாக அமையப் பெற்று சர்வகலாசாலையும், அரசும் அனுமதி வழங்கி அந்தக் கல்லூரி நடந்து வருகிறது. ஏற்கெனவே பல ஆண்டு காலமாக அரசு நிர்வகித்து வந்த உயர் நிலைப்பள்ளி நிர்வாகத்தையும் அந்தக் கல்லூரி நிர்வாகஸ்தினருக்கே திறமையாக நடக்குமென்ற நம்பிக்கையோடு அரசாங்கத்தால் ஒப்படைக்கப் பட்டது. பின் தங்கியிருக்கின்ற மக்களெல்லாம் கல்லூரியே காணாத, கல்வி வளர்ச்சி அதிகமாக இல்லாத பகுதிகளில் இருந்த அவர்கள் பெருமையோடும் மகிழ்ச்சியோடும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கல்லூரி இன்று மிகவும் கல்வித்தரம் குறைந்திருக்கின்றது; நிர்வாகக் குறைவின் காரணமாகவும், நிதி வசதி இல்லாத காரணத்தினாலும் நல்ல முறையில் இருக்கிற பணத்தையும் சிக்கனமாகச் செலவிட்டு வராத காரணத்தினாலும்—சரியான முறையில் ஆசிரியர்கள் இல்லாது போயிற்று. கல்வித் தரம் வெகுவாகக் குறைந்தது. பெரும் அளவு மாணவர்களின் தேர்ச்சியை இது பாதித்திருக்கிறது. கடந்த ஆண்டு இந்தக் கல்லூரியின் தேர்ச்சி 8 சதவீதம் என்ற அளவுக்கு வந்துவிட்டது. இந்த 8 சதவீதம் ரிசல்ட்டைப் பார்த்து இவ்வாண்டு மாணவர்கள் அங்கே போய்ச் சேருவதற்கே அஞ்சுகிறார்கள். அதற்காக வேறுவேறு கல்லூரிகளைத் தேடி அலைகிறார்கள். அந்தத் தனியார் கல்லூரி நிர்வாகம் சரியான முறையில் அமையாத காரணம் அது. ஆகவே, மாண்புமிகு தமிழக அரசு இதைச் சீர்திருத்த உடனடியாக முன்வந்தாக வேண்டும். மிகமிக எங்கள் பிற்பட்ட பகுதியில் தேவர் கல்லூரி என்று ஏற்படுத்தப்பட்ட போது நாங்கள் எல்லாம் கட்சி வேறுபாடின்றி மிக்க மகிழ்ச்சியுற்றோம். இன்றைக்கு அங்கு ஏற்பட்டிருக்கிற நிலை எங்களுக்கு எல்லாம் மிக்க வேதனை அளிக்கிறது. அரசாங்கம் விதிக்கிற நிதியை கொடுக்கக்கூட நாங்கள் தயாராய் இருக்கிறோம். ஆகவே அங்கே நடக்கின்ற கல்லூரியையும், உயர்நிலைப்பள்ளியையும் அரசாங்கப் பொறுப்பில்—ஒப்பற்ற தலைவர் தேவர் அவர்கள் பெயராலேயே அரசாங்கமே பொறுப்பேற்று நடத்த முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கல்வி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கல்வி மானியத்தை முழுமனதோடு ஆதரித்து இன்னும் பல கல்வி வசதிகளை முதுகுளத்தூர் பகுதிகளுக்குச் செய்துதரவேண்டும், கட்டிட வசதி, விஞ்ஞான கருவி வசதி முதலியவற்றை எல்லாம் செய்துதரவேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. மு. பழனிவேலன்: மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, 1971–72 ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற ஒரு நல்ல சந்தர்ப்பம் கொடுத்தமைக்காக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



1971 ஜூலை 10] [திரு. மு. பழனிவேலன்]

1971–72 ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய முதல் பேச்சினை இங்கே நான் நிகழ்த்த ஆசைப் படுகிறேன். நம்முடைய தமிழக அரசு கல்விக்காக 81 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதற்கு முன்னால் இருந்த அரசு 44 கோடி ஒதுக்கிற்று என்றால் இன்றைக்கு அது 81 கோடியாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் தமிழக அரசின் சாதனையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் சொன்னதைப்போல தமிழக அரசு இவ்வளவு பெரிய சாதனை செய்த பிறகும் மாமன்றத்தில் இருக்கிற சில அங்கத்தினர்கள் கல்வித்துறைக்காக இந்த அரசு என்ன செய்தது என்று குறைப்பட்டுக் கொண்டார்கள். அதே அங்கத்தினர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்து பார்க்க வேண்டும். கல்விக்காக 44 கோடி என்று இருந்ததை 81 கோடிக்கு உயர்த்தியுள்ளது இந்த அரசு ஆட்சிப்பொறுப்புக்கு வந்த பிறகுதான். 20 ஆண்டு காலமாக கல்லூரி எதுவுமே எங்கள் தொகுதியில் இல்லாதிருந்ததை அகற்ற இரண்டு கல்லூரிகளை, ஒன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயராலும், மற்றொன்று கருணாநிதி மகளிர் கல்லூரி என்ற பெயராலும், இரவுக் கல்லூரி ஏற்படுத்துகின்ற வாய்ப்பினோடு அமைத்துத் தந்திருக்கிறார்கள். இதைக் கண்டு என்னுடைய தொகுதி மக்கள் எல்லாம் இந்த அரசைப் போற்றுகிறார்கள். இந்தக் கல்லூரிகளை எங்கள் தொகுதியில் ஏற்படுத்திக் கொடுத்தது இன்றைய தமிழக அரசுதான் என்று சொல்லிக்கொள்வதில் நான் மிக்க பெருமை அடைகிறேன். என்னுடைய தொகுதியில் கல்விக்காக மேலும் பல நல்ல சேவையை இந்த அரசு செய்திருக்கிறது. இன்றைக்கு எங்கள் தொகுதியில் இருக்கிற கல்லூரிக்காக 2 இலவச மாணவர் விடுதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஒருசில குறைகள்—இவற்றைக் குறைகள் என்று சொல்ல முடியாது—ஒருசில விஷயங்களில் அரசு கவனிக்கவேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் இன்றைக்கு ஒரு பள்ளிக் கட்டிடம் இடிந்து அந்தக் கட்டிட இடிபாட்டால் 3 பேர் காலமான செய்தியை பத்திரிகை வாயிலாகத் தெரிந்துகொண்டிருக்கலாம். அப்பேர்ப்பட்ட அந்தக் கட்டிடத்தைக் கட்டிய காண்டிராக்டர்மீதும், அது சம்பந்தப் பட்ட அதிகாரிகள்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு எங்கள் மாவட்டத்தில் ஆசிரியர்களின் பிரச்சினை ஒன்று இருக்கிறது. முன்பு தர்மபுரி, சேலம் இரண்டும் ஒன்றாக இருந்த போது வேலை செய்து வந்தவர்கள் தர்மபுரி பிரிந்தவுடன் இந்தப் பகுதியில் ஒதுக்கப்பட்டவர்கள் இன்றைக்கு சேலத்திற்கு மாற்றி வர முடியாத சூழ்நிலையில் கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக அவதியுற்று வருகிறார்கள். அவர்களுடைய துணைவியார்கள் ஒரு பக்கத்திலும், இவர்கள் தர்மபுரி மாவட்டப் பகுதிகளிலும் பணியாற்றி வருகிறார்கள். இதைத் தவிர்க்க இந்த அரசு ஒரு நல்ல முடிவினை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தாழ்மையான யோசனை என்னவென்றால் இன்றைக்கு புதியதாக சேலம் மாவட்டத்தில் ஆசிரியர்கள் எடுக்கிறார்கள். அப்படி எடுக்கிறபோது தர்மபுரி மாவட்டத்தில் உள்ள இந்த மாவட்டக்காரர்கள் இங்கே வர விரும்பினால் அதற்கு ஒரு சீனியாரிடி லிஸ்ட் வைத்து அவர்களை இங்கே மாற்றிவர வகை செய்ய வேண்டும். புதியதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் சில ஆண்டுகள் தர்மபுரி மாவட்டத்தில் சென்று பணியாற்றப் பணிக்க வேண்டும்.

இறுதியாக என்னுடைய தொகுதியில் பத்துப் பதினைந்து ஆண்டுகளாக ஒரே இடத்தில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அப்படியில்லாமல் அரசு ஊழியர்களைப்போல 3 ஆண்டுக்குக் குறையாமல் 5 ஆண்டுக்கு மேற் போகாமல் ஒரு ஆசிரியர் ஒரேயிடத்தில் பணியாற்ற அனுமதிக்காது மாறுதல் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மாமன்றத்தில் பேச அனுமதி அளித்ததற்கு நன்றி தெரிவித்து என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. குழ. செல்லையா : பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசு ஏழை எளிய மக்களின்மீது வைத்திருக்கிற பற்றின், பாசத்தின் காரணமாக, 1967-க்கு முன்னால் கூட்டங்களில் பேசப்பட்ட கருத்துக்களையெல்லாம் செயல்படுத்தி வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்படுமானால் கல்வியின் தரம் இந்த அளவுக்கு இருக்காது என்று பேசப்பட்ட கருத்துக்களுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கின்ற வகையில் முன்பு கல்விக்காக செலவு 44 கோடி ரூபாய் என்ற நிலைமையை மாற்றி, 81.84 கோடி ரூபாயை இன்றையதினம் கல்வியின் முன்னேற்றத்திற்காகச் செலவழித்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன். நம்முடைய மாநிலத்தின் மொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பகுதியை கல்விக்காகச் செலவழிக்கிறது. இந்த அளவுக்குப் பங்கு பெற்றிருப்பது கண்டு நான் மனதார இந்த அரசைப் பாராட்டுகிறேன். கல்வியில் சிறப்பான திட்டங்களை உருவாக்கி, ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள், பின்தங்கிய மக்கள், அரிஜன மக்கள் ஆகியோர்களின் முன்னேற்றத்திற்காக நல்ல முறையில் கவனத்தைச் செலுத்தி வருகிற இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் கல்வியின் தரம் மேம்பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்வியில் இருக்கிற ஆசிரியப் பெருமக்களை இரண்டு மூன்று பிரிவுகளாக வைத்திருந்தனர். முனிசிபாலிடியில் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு ஒருவித சலுகை, ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு ஒருவித சலுகை, அரசினர் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு ஒருவித சலுகை என்றெல்லாம் ஆசிரியப் பெருமக்களைத் தனித்தனியாகப் பிரித்து வைத்திருந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி, எல்லோரையும் ஒன்றாக இணைத்து, தரப்படுகின்ற





சலுகைகள், ஊதிய உயர்வுகள், மருத்துவ வசதிகள் இன்ன பிறவெல்லாம் ஒன்றாக அமைத்துக் கொடுத்திருப்பதைக் கண்டு ஆசிரியப் பெருமக்கள் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள், நானும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியப் பெருமக்கள் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு கல்வியின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்திருக்கிறது. அநேக தொடக்கப் பள்ளிகளையும், 200-க்கும் அதிகமான உயர்நிலைப்பள்ளிகளையும், 56 கல்லூரிகளையும் தொடங்க இருப்பதைக் கண்டு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய தொகுதியையும் பற்றி ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் கல்லூரி இல்லையென்றாலும், நான்கைந்து உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. கல்வியின் தரம் முன்பு இருந்ததைவிட அதிகமான அளவுக்கு முன்னேறி இருக்கிறது. மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான இலவச விடுதிகளை மூன்று உயர்நிலைப் பள்ளிகளுக்கு அமைத்துக் கொடுத்திருக்கிறது. மீதம் இருக்கும் ஒரு பள்ளிக்கும் இலவச விடுதியை அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். பெருமகளூரில் பின்தங்கிய மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான ஹாஸ்டல் வசதி ஏற்படுத்தித் தரவேண்டும்.

அடுத்து உயர்நிலைப்பள்ளிகளில் கட்டிட வசதி இல்லாததால், விஞ்ஞானப் பரிசோதனைக் கூடங்கள் எல்லா இடங்களிலும் இல்லை. அதன் காரணத்தினால் மாணவர்கள் விஞ்ஞானத்தை விருப்பப் பாடமாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பேராவூரணியில் உள்ள விஞ்ஞானப் பரிசோதனைக் கூடத்தில் நிறைய கருவிகள் இருக்கின்றன. அவை இரண்டு மூன்று பள்ளிகளுக்குத் தேவையான அளவிற்கு இருக்கும். ஆகவே, அந்தப் பள்ளியிலிருந்து விஞ்ஞான பரிசோதனைக் கருவிகளை கொத்தமங்கலம் பள்ளிக்கு பகிர்ந்து அளிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். எல்லா மாணவர்களும் விஞ்ஞானம் படிக்கின்ற வகையில், பரிசோதனைகளை நடத்தித் தெரிந்து கொள்கின்ற வகையில் அரசு கவனித்து மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசினர் பள்ளியில் பணியாற்றுகின்ற நேரத்தில் சம்பள உயர்வு தருகின்ற நேரத்தில் ஒரு சில குறைபாடுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பட்டதாரிகளுக்கு ரூ. 275-ம் ரூ. 15-ம் சேர்த்து 290 ரூபாய் என்று இருக்கிறது. செலக்ஷன் கிரேடு பட்டதாரிகளுக்கு 400 பிளஸ் 30, 430 என்று இருக்கிறது. ஆயிரம் மாணவர்களைக்கொண்ட பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு 450 பிளஸ் 30, 480 என்று இருக்கிறது. கெசடட் ரேங்க் தலைமை ஆசிரியர்களுக்கு 500 பிளஸ் 30, 530 என்று இருக்கிறது. டி.இ.ஓ.க்களுக்கு 550 பிளஸ் 30, 580 ரூபாய் என்று இருக்கிறது. இப்படியாக பட்டதாரி ஆசிரியர்கள் சம்பள உயர்வு பெற்றிருக்கிறார்கள். கீழேயிருந்து பார்த்தால் 500/400 ரூபாய் என்ற விகிதம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும் ரூ. 275 என்று அடிப்படைச் சம்பளம்

வைத்திருக்கிறார்களே, நமக்கு 350 ரூபாய் வைக்க வேண்டாமா என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு ஆசிரியர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசு அதை ஆராய்ந்து பரிசீலனை செய்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. இந்த அரசு எந்த அளவிற்கு தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது என்பதை நாடே அறியும். தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவையாற்றில் உள்ள புலவர் கல்லூரியில் கல்வி கற்பவர்களுக்கு இந்த ஆண்டிலேயிருந்து உணவு விடுதி இல்லையென்று சொல்கிறார்கள். முன்பு இருந்த விடுதியை அரசாங்கமே எடுத்து தொடர்ந்து நடத்தி, ஆக்கம் தந்தால் தமிழ் வளர்ச்சிக்கு வசதியாக இருக்கும். மேலும், இந்த ஆண்டு ஆண்களுக்குத் தனியாக விடுதியை தொடர்ந்து நடத்த வேண்டும். அரசு இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, வீட்டு வாடகைப் படியைப்பற்றியது. 1965-ல் பட்டுக்கோட்டை முனிசிபல் நகரமாகியும், அந்த ஊர் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி கொடுக்கப் படவில்லை. வீட்டுவாடகைப்படி கொடுக்க வேண்டுமென்ற மனுவை ஆசிரியர்கள் கொடுத்திருக்கிறார்கள். அரசு இந்த மனுவைப் பரிசீலனை செய்து, வீட்டுவாடகைப்படி வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் தஞ்சையிலே ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். தமிழகம் முழுவதற்கும் உணவு வழங்கக்கூடிய நெற்களஞ்சியமாக இருக்கும் தஞ்சையில் ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும், மற்ற அமைச்சர் பெருமக்களையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பட்டுக்கோட்டை, ஆலங்குடி, அறந்தாங்கி, பேராவூரணி ஆகிய பகுதிகளில் கல்லூரிகள் கிடையாது. அந்தப் பகுதிகளிலுள்ள மாணவர்கள் கல்லூரிக் கல்வி படிப்பதற்கு வெகு தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, பேராவூரணியில் ஒரு கலைக் கல்லூரியை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்லூரியில் சேர்க்கின்ற நேரத்தில் தஞ்சை நகரில் உள்ளூரில் இருக்கிற மாணவர்கள், கொஞ்சம் விவரம் தெரிந்தவர்கள் முன்கூட்டியே தங்களுடைய முகவரியை மாற்றிக்கொடுத்துவிட்டு, கல்லூரியில் அட்மிஷன் பெற்றுவிடுகிறார்கள். அதனால் எங்களைப் போன்றவர்களுக்குக் கல்லூரியில் இடம் கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. தஞ்சையில் இருக்கிற மாணவர்களுக்கும், கந்தர்வ கோட்டையில் இருக்கும் மாணவர்களுக்கும் வேறுபாடு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் பரிசீலனை செய்து, கல்லூரிகளில் அதிகமான இடங்களை எங்களுக்கு ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, ஆசிரியர் பயிற்சிக்கு 300 மார்க் இருந்தால்தான் மனுப் போடலாம் என்று இருக்கிறது, அரிஜன மாணவர்களுக்கு, மிகவும் பின்தங்கிய மாணவர்களுக்கு ஏதாவது சலுகைகளை அளித்து, கடந்த ஆண்டைப்போல 250 மார்க் என்று அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் அவர்களின் பிறந்தநாள் 11—7—1971-ல் வருகிறது. அதற்கு எனது பேராவூரணி தொகுதி 1,88,685 வாக்காளர் பெருமக்களின் சார்பில் வாழ்த்தி, வரவேற்று என் உரையை முடிக்கின்றேன்.

* புலவர் சி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கலைஞர் அரசு கல்வியின் முன்னேற்றத்திற்காக ரூபாய் 81.84 கோடியை ஒதுக்கி, கல்வித் துறையில் பெரும் பணிகளைச் செய்து கொண்டு வருகின்றது. கல்வியின் முன்னேற்றத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

அடுத்து, இந்த அரசு ஆசிரியர்களுக்குப் பல நன்மைகளைச் செய்திருக்கிறது. ஆசிரியர் சமுதாயத்தின் சார்பாக நான் இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு கல்வி வளர்ச்சிக்கு மேலும் பல நல்ல பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தொடக்கப் பள்ளிகளில் சராசரியாக 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருப்பதை 25 மாணவர்கள் என்று மாற்றியமைக்க வேண்டும். அப்படிச் செய்தால் நாட்டில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் தவிக்கும் நிலையை அகற்றலாம், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும், மாணவர்களுடைய கல்வித் தரமும் உயரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தொடக்கநிலை இடத்தில் பணியாற்றிய 14 ஆயிரம் இடைநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியிலிருந்து 5,500 தொடக்க நிலை ஆசிரியர் பதவிகளை இடைநிலை ஆசிரியர் பதவிகளாக நிலையுயர்த்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதாக அறிகிறேன். அதற்காக ஆசிரியர்கள் சார்பில் நன்றி தெரிவிக்கிறேன். மீதமுள்ள எல்லா ஆசிரியர்களின் தரத்தையும் உயர்த்த வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வித் தொண்டு முழுமையாகச் செயல்பட வேண்டுமானால், ஏழை எளிய மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டம் நன்கு நடைபெற வேண்டும். 1971–72-ல் புதிதாக 30 மைய சமையற்கூடம் இந்த அரசு ஏற்படுத்த இருப்பதாக மானியக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி அமைக்கப்படும்

போது, எனது தொகுதியில் பழனியில் ஒரு மைய சமையற்கூடம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மக்கள் தொகையில் பழனியைவிடக் குறைவாக உள்ள உடுமலைப்பேட்டை, தாராபுரம் போன்ற இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் பழனியில் ஒரே ஒரு உயர்நிலைப் பள்ளிதான் இருக்கின்றது. இன்னும் ஒரு ஆண்கள் உயர்நிலைப் பள்ளி அங்கே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது நடந்துவருகின்ற உயர்நிலைப்பள்ளி நகரவையின் மேற்பார்வையில் இருப்பதை அரசாங்கமே எடுத்துக்கொண்டுவிட வேண்டும் என்று அந்த நகரவையின் தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. எனவே அரசாங்கமே அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழாசிரியர்களில் முதல் நிலை, இரண்டாம் நிலை என்று இரண்டு பிரிவுகள் இருப்பதை ஒரே நிலையாக சமநிலையாக்கி ஒரேவிதமான ஊதியம் அவர்களுக்குக் கொடுக்குமாறு அரசு செய்யவேண்டும்.

அதோடு உடனடியாக பள்ளி இறுதிவகுப்பு வரையில் படித்து புலவர் பட்டம் பெற்ற தமிழாசிரியர்களை 10 ஆண்டு காலம் வரை ஊழியம செய்திருந்தால் அதை வைத்து அவர்களை முதல்நிலைத் தமிழாசிரியர்களாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புலவர் தேர்வு எழுதுகின்ற நிலையில், பட்டப்படிப்புப் படிக்கின்ற மாணவர்கள்போல் மார்ச் மாதத்தில் எழுதுகின்ற தேர்வைத்தவிர அக்டோபர் மாதத்திலும் தேர்வு எழுத நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்தொடக்கப் பள்ளிகளிலேயும் தமிழாசிரியர்களை நியமித்து 5 முதல் 8-ஆம் வகுப்பு வரை தமிழை நல்ல முறையிலே கற்றுத்தர ஏற்பாடுகள் செய்தால் அந்த மாணவர்கள் நல்ல தமிழறிவைப் பெறுவதற்கும் வேலைவாய்ப்பற்ற தமிழாசிரியர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் பயிற்சி ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலும்கூட கீழ்நிலை ஆசிரியர்கள் அவர்கள் 10 ஆண்டுக்காலம் ஊழியம் செய்திருந்தால் அவர்களையும் மேல்நிலை ஆசிரியர்களாகத் தகுதியைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

உயர்நிலைப்பள்ளிகளில் 250 மாணவர்கள் இருந்தால் ஒரு உடற்பயிற்சி ஆசிரியர் போடலாம் என்று இருப்பதை 200 மாணவர்கள் இருந்தால் போடலாம் என்று ஆக்கிவிட்டால், அதைத்தவிர உயர் தொடக்கப்பள்ளிகளிலும் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமித்து விட்டால் மாணவர்கள் இளமையிலேயே, உடல் வலிவோடு இருக்கவும், வேலையின்றி இருக்கும் உடற்பயிற்சி ஆசிரியர்கள் வேலை வாய்ப்புப் பெறுவதற்கும் வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.



ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு இப்பொழுது வழங்கப்படுகின்ற 30 ரூபாய் ஓய்வூதியம் போதாது. எனவே இப்பொழுதிருக்கின்ற விலைவாசிகளுக்கு ஏற்றவாறு அதை 50 ரூபாயாக் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் அரசு அளிக்கின்ற பல சலுகைகள் விரைவிலே கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களை நியமிக்கின்ற வேளையில்—இந்த ஒரே ஒரு கருத்தை மட்டும் கூறி முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்—ஊராட்சி ஒன்றியத்திலே ஆசிரியர்களைத் தற்காலிகமாக நியமித்து விட்டு—வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து அவர்களுடைய பெயர்கள் அங்கே வருகின்றன—அதற்குப்பிறகு அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால் வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஒரு சில மாதங்களிலே மீண்டும் வேலைவாய்ப்பு ஏற்படுகின்ற நிலையில் மீண்டும் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து ஒரு பட்டியல் வரவேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தமாதிரியான நிலைமை இல்லாமல், ஏற்கனவே வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து ஆசிரியர்கள் பெயர்கள் வந்து ஒருமுறை வேலைக்கு அமர்த்தப்பட்டு விட்டால் பிறகு தற்காலிகமாக நீக்கப்பட்டாலும்கூட அவர்கள் பெயர்களை வெயிட்டிங் லிஸ்ட்டில் வைத்து வரிசைக் கிரமமாக ஊராட்சி ஒன்றியங்கள் அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று விரும்பிவேண்டிக் கேட்டுக்கொண்டு இந்த அளவுக்குக் கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேச வாய்ப்புத் தந்தமைக்காக எனது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

*திருமதி ஜோதி வெங்கடாசலம் : உபதலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியத்தின்மீது சில வார்த்தைகளை எங்களுடைய சார்பாகவும் திருமதி டி. என். அனந்தநாயகி அவர்களுடைய வெட்டுப் பிரேரணையை ஆதரித்தும் என்னுடைய அபிப்பிராயங்களைக் கூற விரும்புகிறேன்.

ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை ஏறத்தாழ 82 கோடி, அது மிகவும் வரவேற்கத்தக்கது என்றாலும்கூட தமிழ்நாடு பூராவும் கல்வி தரத்திலே உயர்ந்திருக்கிறதா என்ற நிலைமையைப் பார்த்தால், 39 பெர்சென்ட்டுக்குக் கொஞ்சம் கூட இருக்கிறது. ஆனால் பெருமைப் படுகின்ற அளவிலே நாம் நிதி ஒதுக்கியிருக்கிறதைப் பார்க்கும் பொழுது குறிப்பாக பிரி பிரைமரி ஸ்கூல்ஸ், பிரைமரி ஸ்கூல்ஸ் இந்தப் பள்ளிகளின் பணிகளை எடுத்துக்கொண்டு பார்க்கும்பொழுது பிள்ளைகள் வயது ஐந்திலிருந்து படிக்க வாய்ப்பு உண்டு—இளமையில் கல்வி சிலைமேல் எழுத்து என்று சொல்வதைப்போன்று—அவர்கள் நல்ல முறையிலே சிறந்த கல்வி பெற்று நல்ல மக்களாக ஆக்குகின்ற பொறுப்பு அந்தப் பள்ளிகளுக்குத்தான் இருக்கிறது. நேற்றைய தினம் திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசியதைப்போல பல இடங்களிலே "மஷ் ரூம்" போன்று ஆங்கிலம் கற்பிக்கும் ஸ்கூல்கள் கமர்ஷியல் முறையில், ஒரு வியாபாரம் போல் நடந்துகொண்டிருக்கின்றன

இதற்குக் காரணம் பிரி பிரைமரி ஸ்கூல்ஸ், பிரைமரி ஸ்கூல்ஸ், இவற்றில் ஆங்கிலம் இல்லாமை. மூன்றாம் வகுப்பிலேயிருந்தே ஆங்கிலத்தைக் கற்பித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு இருக்கின்றது. Pre-Primary and Primary பள்ளியில் ஆங்கிலத்தை ஆரம்பித்தால் நலமாக இருக்கும் இன்னும் பல Private பிரைமரி பள்ளிகளுக்குச் சில இடங்களிலே அரசாங்கம் ரிகக்னைஷன் கொடுக்காத காரணத்தினாலே பிள்ளைகளைப் பல High School களில் சேர்ப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது, அதையும் தவிர்க்க வேண்டும். எனவே ஆங்கிலத்தையும் தமிழோடு பிரி பிரைமரி ஸ்கூல்ஸ், பிரைமரி ஸ்கூல்ஸ் இவற்றில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல ஜில்லாக்களிலே கல்லூரிகள் ஆரம்பித்திருக்கிறோம். இன்னும் பல ஜில்லாக்களிலே ஆர்ட்ஸ் காலேஜஸ் ஆரம்பிக்கவில்லை. எனவே அவற்றையும் அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும். சில காலத்திற்கு முன்பே என்னுடைய தொகுதியான ஸ்ரீரங்கத்திலிருந்து அங்குள்ள மக்கள் முக்கியஸ்தர்கள் ஒரு கல்லூரியை அங்கே ஆரம்பிக்க வேண்டுமென்ற முயற்சியெடுத்து தேவையான தகவல்களை எல்லாம் அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் உரையிலே கூற வேண்டும், இல்லையென்றால் அரசாங்கம் உடனே அங்கே கல்லூரி ஏற்படுத்த வேண்டும். மாணவ மாணவிகள் தற்பொழுது ஸ்ரீரங்கத்திலிருந்து திருச்சிக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. பஸ் நெருக்கடிகளும் மற்ற பல நெருக்கடிகளும் இருக்கிற காரணத்தினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

நேற்றைய தினம் திருச்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் அங்கே ஒரு பெண்கள் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். சமயபுரத்திலே ஒரு பெண்கள் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று ஒரு ப்ரப்போஸல் இருந்தது. அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. சமயபுரத்திலே மக்கள் அதற்காக உதவி செய்ய முன் வந்திருக்கிறார்கள், எனவே அங்கேயும் ஒரு கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழாசிரியர்கள் கிரேட் இரண்டு இருக்கிறது. முதல் கிரேடுக்கு மட்டும் பி.டி. கிரேட் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் கொடுக்க முன் வந்து இருக்கிறார்கள். அப்படியில்லாமல் முதல் கிரேட், இரண்டாம் கிரேட் இரண்டையும் டிஸ்பேரிட்டி இல்லாமல் ஒன்றாக்கி ஒரேவிதமான ஊதியம் அளிக்க அரசாங்கம் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

ஆங்கிலத்திலே எம்.ஏ. படித்து அசிஸ்டெண்ட் புரபஸர்களாக வருவதற்கு மாதம் 100 ரூபாய் ஸ்டைபண்ட் கொடுக்கப்படும் என்று கூறியிருக்கிறது. அப்படிச் செய்து அவர்களை உத்தியோகத்திலே வைப்பதாக ஒரு திட்டம் இருப்பதாக இந்த அறிக்கையிலே இருக்கிறது. ஆங்கிலத்திலே எம்.ஏ. படிக்க மாதம் 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால் தமிழ் மீடியம் படிக்கின்றவர்களுக்கு ஆண்டிற்கு 50 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. அது அவர்களுடைய பஸ் ஃபேர்க்குக்கூடக் காணாது, கணக்குப் போட்டுப் பார்த்தால். எனவே,



அதை 300 ரூபாய் என்றாவது உயர்த்தவேண்டும். அதைப்போன்று 100 ரூபாய் என்று ஆங்கில மாணவர்களுக்கு Post-graduate படிப்புக்காகக் கொடுப்பதை வரவேற்று, தமிழ் மீடியம் Degree course படிப்பவர்களுக்கு 180 ரூபாயை '500' ரூபாயாக உயர்த்த வேண்டும். அப்படிச் செய்தால் மாணவர்களுக்கு நல்ல பலன்கள் ஏற்படும்.

அடுத்தபடியாக ஆர்பனேஜஸ் முக்கியத்துவம் வாய்ந்தவை. போர்டிங் கிராண்ட் ஆக அனாதைப் பிள்ளைகளுக்கு ரூபாய் 10-லிருந்து 12 ரூபாய் ஆக உயர்த்திக் கொடுக்கப்படுகிறது.

போர்ட்டிங் கிராண்ட் 15 ரூபாயாக ஹில் ஸ்டேஷன்களில் இருக்கும் orphanage களுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்தக் காலத்திலே எல்லாம் சாமான்களுக்கும் விலை உயர்ந்திருக்கும் பொழுது 10 ரூபாயும், 12 ரூபாயும் வைத்துக்கொண்டு ஒரு குழந்தையைப் பராமரிக்க முடியுமா? அதை நடத்துபவர்களுக்கு எத்தனை கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைப் பார்த்து அவர்களுக்குக் குறைந்தபட்சம் 25 ரூபாயாவது கொடுக்கின்ற வகையில் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில ஆர்பனேஜஸ் எஜுகேஷன் கிராண்ட், ஹரிஜன் வெல்பேர் கிராண்ட், சோஷியல் வெல்பேர் கிராண்ட் என்று இப்படிப் பல கிராண்டுகள் பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் சில ஆர்பனேஜ்களில் மாத்திரம் எஜுகேஷன் கிராண்ட் மாத்திரம் 12 ரூபாய், 10 ரூபாய் என்று கிடைக்கிறது. ஒரு குழந்தையைப் பராமரிப்பதற்குள் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பதெல்லாம் நமக்கு நன்றாகத் தெரியும். எனவே ஆர்பனேஜ்களுக்குக் கொடுக்கும்பொழுது குறைந்த பட்சம் 25 ரூபாயாகவாவது உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, லோகல் லைபரரி. அதைப் பார்க்கும் பொழுது லோகல் லைப்பரிகளுக்குக் கொடுக்கக்கூடிய பணம் மிகவும் குறைவாக இருக்கின்றது. அவர்கள் அதைக்கொண்டு சரிக்கட்ட இயலாத நிலையில் பல லோகல் லைப்ரரிகள் நல்லமுறையில் நடத்த இயலாது போகிறது ஆகையால் தமிழ்நாடு பப்ளிக் லைபரரீஸ் ஆக்ட்டில் அடிப்படையில் சில திருத்தங்களை அரசாங்கம் கொண்டு வந்து நடவடிக்கை எடுத்து லைபரரிகள் நல்லமுறையில் நடக்க வாய்ப்பினை ஏற்படுத்தி நிதியை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை முனிசிபாலிட்டியை இப்பொழுது கார்ப்பரேஷனாக ஏற்படுத்தியிருப்பதால் அங்கே ஸ்டேடியம் ஒன்றை கட்ட குறிப்பிருக்கிறது. அந்த ஸ்டேடியத்தை இவ்வாண்டுக்குள் கட்டி அங்கிருக்கும் மக்கள் பயன்படுத்தும் அளவில் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றபடி, டெக்னிகல் எஜுகேஷனை பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். ரீப்பேட்ரியேட்ஸ், பர்மாவிலிருந்தும், சிலோனிலிருந்தும் வரும் அகதிகளின் பிள்ளைகளுக்கு ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள், அவர்களுக்கு டிரெயினிங் கொடுக்க, அதை நான் வரவேற்கிறேன்.

அதே சமயத்தில், ஏற்கனவே படித்திருக்கின்ற பொறியியல் வல்லுனர்களுக்கெல்லாம் சான்ட்விச் கோர்ஸ் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சான்ட்விச் கோர்ஸில் குறிப்பாக என்ஜினியர்கள் பலர் வேலை கிடைக்காததால் அவர்கள் இந்த சான்ட்விச் கோர்ஸில் சேர்ந்து இருக்கிறார்கள். அதை முடித்து விட்டு அவர்கள் வரும்பொழுது பிரையாரிட்டி இன் கேசஸ் ஆஃப் அப்பாயிண்ட்மெண்ட் என்ற முறையில் அவர்களுக்கு முதலிடம் கொடுத்து, மற்றவர்கள் வெளியிலிருந்து வந்திருக்கிறார்களே என்று கருதாமல், எல்லா நாட்டினருக்கும் பிரையாரிட்டி கொடுக்க வேண்டுமென்று நினைக்காமல் சான்ட்விச் கோர்ஸை ஸ்பெஷல் கோர்ஸாக எடுத்து, வேலையில்லாத காரணத்தால் எடுத்திருக்கிறார்கள், அதை முடித்துவிட்டு அவர்கள் வரும்பொழுது அவர்களுக்கு முதல் வேலை வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும், பல வேலைவாய்ப்புகளுக்கு அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: சட்டப்பேரவைத் துணைத்தலைவரவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

பத்தாண்டுகளுக்கு முன்பு 15 கோடி ரூபாய் செலவிடப்பட்ட இந்தக் கல்வித்துறைக்கு இன்றைய தினம் 81 கோடி ரூபாய் என்ற அளவில் ஆகியிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது எந்த அளவிற்கு நாம் இதில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த 4, 5 ஆண்டுக்காலத்தில் 56 கல்லூரிகளைத் துவக்கியிருக்கிறோம். ஏறத்தாழ 64 இலட்சம் மாணவர்கள் படிக்கக்கூடிய நிலையிலே இன்றிருக்கிறார்கள். ஒரு இலட்சத்து 93 ஆயிரம் பேர் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதும் மாணவர்கள் என்று மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. ஆனாலும்கூட படித்தவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 39.39 என்ற அளவில்தான் இருக்கிறது என்று எண்ணும்பொழுது உள்ளபடியே நாம் வருந்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அரசாங்கம் எவ்வளவுதான் பணம் செலவழித்தாலும், எவ்வளவுதான் பள்ளிகளையும், கல்லூரிகளையும் திறந்தாலும், எவ்வளவுதான் முதியோர் கல்விக்காகச் செலவழித்தாலும் நாட்டின் சராசரிக் கல்வி வளர்ச்சி அடைந்திருக்கும் நிலையைப் பார்த்தால் வருந்தத் தக்கதாகயிருக்கிறது. ஆகவே, அதற்காக நாம் இன்னும் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இன்றைய தினம் பல்கலைக்கழகம் இருக்கிறது என்றால் அதனுடைய அதிகாரங்களையெல்லாம் மாற்றியமைக்கப்பட வேண்டும். என்றோ அமைக்கப்பட்ட அந்த அதிகாரங்களெல்லாம் பரவலாக்கப்பட்டு அது மக்களுக்குப் பயன்படும் வகையில் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமக்குப் பின்னால் ஆரம்பிக்கப்பட்ட பல யூனிவர்சிட்டிகள் புதிய பாடத் திட்டங்களின் மூலம் நல்ல வளர்ச்சியைக் கண்டிருக்கின்றன. ஆனால் நம்முடைய யூனிவர்சிட்டியோ 100 ஆண்டுகளுக்கு முன் என்ன





பாடத்திட்டம் இருந்ததோ அதே பாடத்திட்டம்தான் இப்பொழுதும் இருப்பதால் மாணவர்களின் கல்வித்தரம் உயர வாய்ப்பில்லாமலிருக்கிறது. அதுமட்டுமல்ல, அங்கேயிருக்கும் சிண்டிகேட்—சிண்டிகேட் என்றாலே ஏதாவது நாட்டிற்கு உருப்படக்கூடிய வழிவகைகளைச் சொல்லாமல்—சிண்டிகேட் என்ற பெயரை வைத்துக்கொண்டு அங்கேயும் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். காலையிலே கூடச் சொன்னார்கள், இருபாலரும் சேர்ந்து படிக்க வேண்டுமென்பதை சிண்டிகேட் ஒத்துக்கொள்ளவில்லை என்று. எனவே அந்த சிண்டிகேட் என்ன சொன்னாலும் பல்கலைக்கழகத்திலிருப்பவர்கள் அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் கல்லூரிகளை எடுத்துக்கொண்டோமானால் பலயிடங்களில் பல அக்கிரமங்கள் நடக்கின்றன. எத்திராஜ் கல்லூரியில் 494 மார்க்குகள் வாங்கியவருக்கு இடம் இல்லை என்று சொல்லுகிறார்கள். இதைப்பார்க்கும் பொழுது மாணவர்களின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். அரசாங்கத்திலிருந்து மானியத்தைப் பெற்றுக்கொண்டு இப்படி அக்கிரமங்கள் செய்பவர்களைக் கண்காணிக்க வேண்டும், இல்லையென்றால் அரசாங்கமே அந்தக் கல்லூரிகளை எடுத்து நடத்தத் தயாராக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய பணத்தைப் பெற்றுக்கொண்டு அவர்கள் விருப்பம் போல் அட்மிஷன் கொடுப்பதால் உள்ளபடியே இந்த ஆட்சிக்கு நல்ல பெயராக அது அமையாது. எனவே அமைச்சரவர்களும், அரசாங்கமும் இதிலே அதிக அக்கறை எடுத்துக்கொண்டு இந்தப் பிரச்னையிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்.சி.சி. இருப்பதைக் கட்டாயமாக ஆக்க வேண்டும். ஆறும் வகுப்பிலிருந்து எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயம் சொல்லிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பி.டி. காலேஜ் அட்மிஷனில், பயிற்சி பெறக்கூடிய நேரத்தில், இதற்கு முன் ஆசிரியர்களாக இருந்தவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது ஏதோ ஃபர்ஸ்ட் கிளாஸ் பெற்றவர்களுக்குத்தான் இடம் என்கிறார்கள். அந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதி பாஸ் செய்துவிட்டு எலிஜிபில் ஃபார் காலேஜ் கோர்ஸ் என்று 220 மார்க்குகளுக்கு மேல் இருந்தாலும் கொடுக்கிறார்கள். 220 மார்க்குகளை வாங்கிவிட்டு எங்கள் உயிரை எடுக்கிறார்கள். காலேஜில் இடம் வாங்கிக்கொடுங்கள் என்று. அந்தப் பிரச்னையில் நாம் கவனம் செலுத்த வேண்டும். எலிஜிபில் ஃபார் காலேஜ் கோர்ஸ் என்று 300 மார்க்குகளுக்கு மேல் இருப்பவர்களுக்குப் போட்டுவிட்டு, மீதிப்பேர்கள் வேலைவாய்ப்பை தேடிக்கொள்ள பாஸ் என்று வேண்டுமானால் கொடுக்க நடவடிக்கை எடுக்க முடியுமா என்று அரசாங்கம் பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. நா. வீராசாமி] [1971 ஜூலை 10

டீச்சர் டிரெயினிங்கிற்கு 300 மார்க்குகள் வாங்கினால் இடம் என்று சொல்கிறார்கள். அதை பி.யூ.சி. பரீட்சை தேறியவர்களுக்கு 50 சதவிகிதமும், எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை தேறியவர்களுக்கு 50 சதவிகிதமும் என்று மாற்றியமைத்தால் நன்றாகயிருக்கும். நம்முடைய அரசாங்கம் அதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது எஸ்.எஸ்.எல். சி. விடைத்தாள்கள் ஒரேயிடத்தில் திருத்தப்படுவதால் பல தவறுகள் போக்கப்பட்டிருக்கின்றன. அதே போல பி.யூ.சி. தேர்வு ஏறத்தாழ 70,000 அல்லது 80,000 பேர் எழுதுகிறார்கள். அப்படி எழுதுகின்ற விடைத்தாள்களையும் ஒரே இடத்தில் கொண்டுவந்து திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டெப்டி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் இருக்கிறார்கள். பதவி உயர்வு கொடுக்கும்பொழுது அவர்களை டி.ஈ.ஓ.க்களாக நியமிக்கும் நேரத்தில் சீனியாரிட்டி பிரகாரம் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காலேஜிலே படித்தவர்களுக்கு மட்டும் டி.ஈ.ஓக்கள் பதவி கொடுக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். ஆனால் அந்த இலாக்காவிலுள்ள ஊழியர்களுக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாலைநேரக் கல்லூரிகளில் பட்டப்படிப்புகளுக்கும் வசதி செய்து கொண்டிருக்கிறோம், பொறியியல் துறை பட்டப்படிப்புக்கும் செய்து கொண்டு வருகிறோம். பல மாநிலங்களில் போஸ்டல் டியூஷன் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட வாய்ப்பினை நம்முடைய அரசாங்கமும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலவசக் கல்வியை ஏழைமக்களின் நன்மைக்காக அமல்படுத்துவதாகயிருந்தாலும்கூட எந்த அளவிற்குக் கொண்டுபோய்விட்டிருக்கிறது என்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும். இந்தியாவில் மற்ற மாநிலங்களில் எஸ்.எஸ்.எல்.சி. வரையில் இருக்கிறது. மேற்கத்திய நாடுகளில் 17 வயது வரை இலவசக்கல்வி படிக்க வாய்ப்புண்டாக்கி வருகிறார்கள். ஆனால் கல்லூரியில் பி.யூ.சி. வரை நாம் கொடுத்திருக்கிறோம். அதன்மூலம், உண்மையிலேயே மாணவர்கள் கவனம் செலுத்த முடியாத நிலைக்கு மாறிக்கொண்டு வருகிறது. சத்திரத்திலே சாப்பிட்டுவிட்டு திண்ணையிலே தூங்குவது போல் அது ஆகிவிடக்கூடாது. ஏழைகளுக்குப் பயன்தரத்தக்க விதத்திலே அதிலே மாற்றங்களை உண்டாக்கவேண்டும். குபேரர்களுக்கும் நாம் இலவசக் கல்வி என்று வைத்தால் நாட்டிலே பொருளாதாரத் துறையில் அக்கறை காட்டியவர்களாக ஆவோமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குசேலர்களுக்கு வேண்டுமானால் இலவசக் கல்வியைக் கொடுத்துவிட்டு, குபேரர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு கல்வி தருவதில் எந்தவிதமான கஷ்டமும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆட்சிமொழித்துறையிலே மத்திய சர்க்கார் பல பள்ளிகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் இந்தி சொல்லிக்கொடுக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே படிப்பவர்களுக்கு இந்தி படிக்க வாய்ப்பில்லை,



1971 ஜூலை 10] [திரு. நா. வீராசாமி]

அவர்கள் இந்தியைச் சொல்லிக்கொடுப்பதன் காரணமாக நம்முடைய நாட்டில் படிப்பவர்கள், ஒரே நாட்டிலே படிப்பவர்கள், ஒரு இடத்தில் இந்தி சொல்லிக்கொடுக்கப்பட்டு, இன்னொரு இடத்தில் இந்தி இல்லை என்றால் அவர்கள் அகில இந்திய அடிப்படையில் பல தேர்வுகளை எழுதிப் பல வாய்ப்புகளைப் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முக்கியமாக நான் சொல்ல விரும்புவது, இந்த மன்றத்தில் பல உறுப்பினர்கள் சொல்லாத கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்திலே இன்றையதினம் கவர்ன்மெண்ட் டெக்னிகல் எஜுகேஷன் என்று ஷார்ட்ஹேண்ட், டைப்ரைட்டிங் அந்தத் தேர்வுகளையெல்லாம் கண்டக்ட் செய்துவரும் நிலையிலிருந்து வருவதைப் பார்க்கிறோம்.

மு.ப. 11-30

ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஏறக்குறைய 40,000 மாணவர்கள் பரிட்சை எழுதுகிறார்கள். அந்த அளவுக்கு மாணவர்கள் எழுதக் கூடிய தேர்வுகளை நடத்துவதிலே ஒவ்வொரு முறையும் காலதாமதம் ஏற்படுகிறது. தேர்வு எழுதி ஒரு மாதத்திற்குப் பிறகுதான் இந்த ஆண்டு விடைத்தாள்களைத் திருத்துவதற்கு அனுப்பி இருக்கிறார்கள். கவர்ன்மெண்ட் டெக்னிகல் எக்ஸாமினேஷனை இதுவரை டைரக்டர் ஆஃப் ஸ்கூல் எஜுகேஷன் நடத்தி வந்தது, இப்போது அதை டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷனுக்கு மாற்றி விட்டார்கள். அதனால் காலதாமதம் ஏற்பட்டது என்று அவர்கள் இப்போது காரணம் சொல்லக்கூடும். தேர்வுகளை நடத்துவதை யாருக்கு மாற்றினாலும் தேர்வுகளைக் குறிப்பிட்ட காலத்தில் ஆரம்பித்து நடத்த வேண்டும். அதிலே எந்தவிதமான காலதாமதமும் செய்யக் கூடாது.

இந்தத் தேர்வுகளை நடத்தும் பொறுப்பு டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷனுக்கு மாற்றப்படுகின்ற இந்த நேரத்தில் பல பிரச்சினைகள் எழுப்பப்படுகின்றன. அந்தப் பாடங்களைக் கற்றுத் தருவதில் இனி அரசாங்கமே ஏற்று கற்றுக் கொடுக்குமோ என்ற பிரச்சினை இருக்கிறது. இந்தத் தேர்வை ஆண்டுக்கு ஒருமுறை நடத்தினால் போதும் என்றும் சொல்லப்படுவதாகத் தெரிகிறது. மெகானிசம் பரிட்சையை எடுத்துவிடலாம் என்று யோசித்து வருவதாகவும் அறிகிறேன். இவ்வாறெல்லாம் செய்தால் எதிர்காலத்தில் மாணவர்கள் தங்களுடைய தகுதியை, திறமையை நிர்ணயித்துக் கொள்ள உறுதுணையாக இருக்காது.

இந்தத் தேர்வுகளை இதற்கு முன்பு நடத்தியது போல் ஆண்டுக்கு இருமுறை நடத்தியாக வேண்டும். மெகானிசம் போன்ற தேர்வுகள் தொடர்ந்து இருக்க வேண்டும். டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷன், டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷன் என்று இருப்பது போல் ஆறு மாதத்திற்கு ஒரு முறை 40,000 மாணவர்களுக்கு மேல் தேர்வு எழுதக்கூடிய இந்தத் துறைக்குத் தனியாக டைரக்டர் ஆப் கமர்ஷியல் எஜுகேஷன் என்று ஒரு தனி டைரக்டரை நியமிக்கலாம். இந்த சப்ஜெக்ட் தெரிந்தவர்களை இதற்கு டைரக்டர் ஆக்கலாம். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் படிப்பைப் படிக்கின்ற பிற்பட்ட மாணவர்களுக்கெல்லாம் ஸ்காலர்ஷிப் கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

டிப்ளோமா படிக்கின்றவர்கள், அதாவது டைப்ரைடிங், ஷார்ட் ஹாண்ட், மற்ற கமர்ஷியல் பாடங்கள் எல்லாம் ஹையர் கிரேடு படித்துத் தேர்வு பெறுகிறவர்கள் டி.காம். என்ற டிப்ளோமா பெறுகிறார்கள். இந்த டிப்ளோமா பெறுகிறவர்கள் பி.காம். பட்டப் படிப்பில் படிப்பதற்குச் சரியாக, அதற்கும் அதிகமான பாடங்களைக் கூடப் படித்துத் தேர்வு பெறுகிறார்கள். இதிலே டிப்ளோமா பெற்றவர்கள் பி.காம். தேர்வு எழுதுவதற்கு, பி.காம். பட்டம் பெறுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதையெல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும் இதே நேரத்தில் இறுதியாக நான் சொல்ல விரும்புவது—

நம்முடைய பல்கலைக் கழகத்திலிருந்து பல புரபசர்கள் வெளி நாடுகளுக்குச் செல்லுகிறார்கள். பல பாடங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறார்கள், படித்து வருகிறார்கள். அவர்கள் படித்துவிட்டு இந்த நாட்டுக்குத் திரும்பியவுடன் அவர்கள் எந்தத் துறையில் அனுபவம் பெறச் சென்றார்களோ அந்தப் பாடத்தைச் சொல்லிக் கொடுக்க அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் படித்த படிப்பும், பெற்ற அனுபவமும் இந்த நாட்டுக்குப் பயன்படுகிறதா என்றால் இல்லை, செலவழித்த பணம் வீண் என்ற நிலைதான் இருக்கிறது. பல்கலைக் கழகத்திற்கு இருக்கும் அதிகாரங்களைப்பற்றி நமது அரசாங்கம் பரிசீலனை செய்து சட்ட திட்டங்களை மாற்றி செலவழிக்கும் பணம் நாட்டு மக்களுக்குப் பயன்தரும் வகையில் அமையவேண்டுமென்ற முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. இ. எஸ். தியாகராஜன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின்மீது தமிழரசுக் கழகத்தின் சார்பில் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வித் துறையில் நம்முடைய அரசின் சாதனைகள் பாராட்டுக்குரியவை, கடந்த நான்காண்டு காலத்திலே புதிய கல்லூரிகள் பல துவக்கப்பட்டிருக்கின்றன. புகுமுக வகுப்பு வரை ஜாதி வேற்றுமையின்றி இலவசக் கல்வி அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சாதனைகளுக்காக தமிழக அரசையும், குறிப்பாக நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சரையும் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குச் சில குறைபாடுகளையும் கொண்டுவருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். வெளியார் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்க நன்கொடை கேட்கிறார்கள். இதனால் ஏழை மாணவர்கள் துன்பப்படுகிறார்கள். இந்த நிலையைத் தடுக்க வேண்டும்.





நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்து கால் நூற்றாண்டு ஆகியும் பழைய முறையிலேயே கல்விமுறை இருந்து வருகிறது. சுதந்திர நாட்டுக்கு ஏற்ற முறையில் கல்வி முறையை மாற்ற வேண்டும்.

போதனா மொழிப் பிரச்சினையில் தமிழக அரசு உறுதியான கொள்கையைப் பின்பற்ற வேண்டும். 21—1—1968-ம் நாள் அன்று இந்தப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் 1974-ம் ஆண்டுக்குள்ளாக அனைத்துக் கல்லூரிகளிலும், அனைத்து பாடங்களும் தமிழில் கற்றுக் கொடுக்கப்பட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானம் முழுமையாக அமல் படுத்தப்படவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். கல்வி நிபுணர்களின் குழுவின் பரிந்துரையை ஏற்று மாணவர்களின் விருப்பத்திற்கு அரசு இணங்கியிருக்கிறது. இது விஷயத்தில் மாணவர்களோடு போராட வேண்டுமென்று நானோ, தமிழரசுக் கழகமோ விரும்பவில்லை. சட்டப் பேரவையின் தீர்மானத்தை முழுமையாக அமலாக்காமல் இருப்பது நல்லதல்ல. கான்வென்ட் பள்ளிகள் நாள் தோறும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு தோன்றுவது தமிழ்ப் பயிற்சி மொழிக்கு நல்லது அல்ல என்ற எனது கருத்தினைச் சொல்ல விரும்புகிறேன்.

திருத்தணியில் கலைக் கல்லூரிக் கட்டடம் கட்டப்பட்டு பட்டதாரி வகுப்பு துவங்கப்பட வேண்டும். திருத்தணி வட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகள் கட்டடம் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யவேண்டும்.

புதிய கிளை நூலகங்கள் இன்றைக்கு அனுமதிக்கப்படுவதில்லை. நூலக நிதிநிலைமைகள் மோசமாக இருக்கின்றன. அதற்கும் அரசு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கே. என். குமாரசாமி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த கல்வி மானியக் கோரிக்கையின்பேரில் என்னுடைய கட்சியின் சார்பில் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வியமைச்சர் அவர்கள் 81 கோடி ரூபாய்க்கு மேலாக கல்வி மானியக் கோரிக்கையைச் சமர்ப்பித்திருப்பது கல்வியினுடைய நிலைமை தேசம் சுதந்திரம் பெற்ற பிறகு சரியான முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்பதிலே அக்கறை காட்டப்பட்டு வருகிறது என்பதைத் தெளிவுபடுத்துவதாக இருந்தாலும் கூட, அதிலே பல குறைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

அடிப்படையில் இருந்து ஆராய்ந்து பார்ப்போமானால், தொடக்கக் கல்வியிலிருந்து பார்ப்போமானால் நாட்டு மக்களுக்குக் கல்வி போதிக்கின்ற அளவுக்குப் பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள் இன்னும் போதுமான அளவு இல்லை என்பதுதான் உட்பொருளாக அமைந்திருக்கிறது. மக்கள் எல்லோருக்கும் கல்வி அளிக்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் கட்டாயக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தாக வேண்டும். இன்றும் கிராமங்களில் பெருவாரி

யானவர்கள் கல்வியறிவு பெறுவதில்லை. ஆகவே, கிராமங்களில் பண்பாட்டிலும், பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றம் அடைவதற்கான வாய்ப்புகள் இழக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கட்டாயக் கல்வித் திட்டத்தைப் புகுத்தினால் இதிலே குறிப்பிட்டிருப்பதுபோல் இன்னும் 60 சதவிகிதம் மக்கள் கல்வியறிவற்றவர்களாக இருக்கும் நிலை இருக்காது. ஒரு நாடு முன்னேற வேண்டுமென்று சொன்னால், அந்த நாட்டு மக்கள் எந்த அளவுக்குக் கல்வியறிவு பெறுகிறார்களோ, அந்த அளவுக்குத்தான் அந்த நாடு முன்னேற முடியும். அந்த அடிப்படையில்தான் இங்கே கட்டாயக் கல்வியைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு இடங்களில் மாணவர்கள் 10, 12 மைல்கள் நடந்து வந்து உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சென்று படிக்கும் நிலை இருக்கிறது. பல மாவட்டங்களில் அந்த நிலை இருக்கிறது. அங்கெல்லாம் உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்கவும், உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டவும் அரசாங்கம் முன்வர வேண்டும். என்னுடைய பகுதியான பல்லடம் பகுதியில் வாகராயன் பாளையத்தில் பள்ளிக் கட்டடம் பாதி கட்டப்பட்டு நின்றுவிட்டது. அதைக் கட்டி முடிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பதிலே வருமான வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 2,500 ரூபாய் வருமானம் இருக்குமானால், அவர்களுக்குக் கிடையாது என்று சொல்லப்படுகிறது. அவர்கள் வருஷத்தில் 240 நாட்களுக்கு மேல் வேலைக்கு வந்தால்கூட அந்த வருமானம் கிடைப்பதில்லை. அவர்களுடைய லீவ் நாட்களை எல்லாம் கழித்துவிட்டு அவர்களுக்கு ஆண்டுக்கு 2,500 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரை வருமானம் வருமானால் சலுகை அளிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் தொழிலாளர் குடும்பங்கள் கல்வியில் முன்னேறும் வாய்ப்பு ஏற்படும். அவர்களுடைய வாய்ப்பை தடைப்படுத்த வேண்டாம்.

நம்முடைய நாடு கல்வித் துறையில் முன்னேற வேண்டுமென்று சொன்னால் பொறியியல் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், பல தொழில் பயிற்சிப் பள்ளிகள் எல்லாம் அதிகரிக்கப்பட வேண்டும். இப்போது குறைவாக இருக்கிறது.

பயிற்சிப் பள்ளிகள் 1970-71-ல் 139 என்ற அளவில் இருக்கிறது. 1966-67-ல் 145 ஆக இருந்தது இப்போது இந்த அளவிற்கு குறைந்திருக்கிறது என்றால் அந்தத் துறையில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பதுதான் பொருள்.

பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் கடந்த ஐந்து ஆண்டுகளாக இருந்தது போலவே இப்போதும் இருக்கிறது. பொறியியல் கல்லூரிகள் கடந்த நான்காண்டுகளாக 12 ஆக இருந்து வருகிறது. இப்போதும் அப்படியேதான் இருக்கிறது. தொழில் நுட்ப பயிற்சிப் பள்ளிகள் முன்பிருந்த அதே அளவில்தான் இப்போதும் இருந்து



வருகிறது. இப்படி தொழில் நுட்பக் கல்லூரிகளையும், பள்ளிகளையும் அதிகப்படுத்த முடியாமல், அதில் கவனம் செலுத்தப்படாமல் இருப்பதன் மூலம் தொழில் துறையிலும் மற்றத் துறைகளிலும் இந்த நாடு முன்னேற வேண்டும் என்று சொன்னால், அதற்கான வாய்ப்பு எங்கே இருக்கப் போகிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பட்டப் படிப்பு படித்துவிட்டு அரசாங்கத் துறைகளிலோ அல்லது மற்றத் துறைகளிலோ உத்தியோகம் பார்க்கக்கூடிய அளவில் மட்டும் கல்வி முறையை வைத்துக்கொண்டிருந்தால் எதிர்காலத்தில் எல்லோருக்கும் உத்தியோகம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஏமாந்துதான் போவார்கள். விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் வேண்டிய வல்லுநர்கள் கிடைக்காமல் போகக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே அத்துறைகள் முன்னேற வேண்டுமென்று சொன்னால் அத்துறைகளில் வேண்டிய பயிற்சி அளிக்கப்பட்டு, அத்துறைகள் முன்னேறுவதற்கான வாய்ப்புகளை அளிக்கும் மார்க்கங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்காக தொழில் பயிற்சிக் கல்லூரிகளை எல்லாம் அதிகப்படுத்தி அதில் மாணவர்களைச் சேர்த்து பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வது மிக மிகக் குறைவாகப் போய்விட்டது. ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் நிலை குறைவாகப் போய் விட்ட காரணத்தினால், ஆசிரியர்களுக்கு சமுதாயத்தின் பேரில் ஒரு அக்கறையற்ற போக்கு ஏற்படுகிறது. இது ஒரு விபரீதமான போக்காகும். முன்பு ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் தொடர்பு கொண்டு பிள்ளைகளின் எதிர்கால நல் வாழ்விற்காக திட்டம் போட்டு செயல்படுத்திக்கொண்டு வந்தார்கள். இருவரும் சேர்ந்து முன்பு பணி புரிந்து வந்தார்கள். நாளாவட்டத்தில் அந்தத் தொடர்பு குறைந்து போய் இப்போது பலயிடங்களில் பள்ளிகள் சீர்குலைகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் ஆசிரியர்கள் பெற்றோர்களிடையே உள்ள உறவை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். கட்டாயப்படுத்தி வாரத்திற்கு ஒரு தடவையாவது ஆசிரியர்கள்—பெற்றோர்கள் கூட்டத்தை நடத்துவதற்கான நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து, பல்வேறு கிராமங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு வீடுகள் இல்லாத காரணத்தினால்—பின்தங்கிய வகுப்பினராக இருந்தால் வீடுகள் கிடைக்காத நிலை பலயிடங்களில் இருக்கிறது—அவர்களுக்கு அந்தந்த இடத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வர வேண்டும். அப்படி வீடுகள் கட்டிக் கொடுக்க முன்வந்தால்தான் அவர்கள் அங்கேயே குடியிருந்து பணி புரிய முடியும்.

அடுத்து, உயர்நிலைப் பள்ளிகளில் தொழில் நுட்பக் கருவிகள், லாபரட்டரீஸ் முதலியவை இல்லாத காரணத்தினால் மாணவர்களுக்கு சரியான விஞ்ஞான அறிவைப் போதிக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே பள்ளிகளுக்கு அந்தக் கருவிகளை எல்லாம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. என். குமாரசாமி] [1971 ஜூலை 10

அடுத்து, பேக்வேர்ட் கம்யூனிட்டீஸ், பார்வேர்ட் கம்யூனிட்டீஸ் என்று சொல்கிறார்கள். அதில் கொங்கு வேளாள கௌண்டர் என்ற ஜாதி பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைந்த ஒரு ஜாதி அல்ல. இவர்களிடையே பொருளாதாரத் துறையில் பின்னடைந்து நிற்கும் ஏழைகள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் கல்வி கற்க முன்வந்தாலும், இந்த பார்வேர்ட்—பாக்வேர்ட் என்றிருப்பதால் அவர்கள் கல்வி கற்க முடியாமல் தடை ஏற்படுகிறது. ஆகவே ஏழைகள், பணக்காரர்கள் என்று இரண்டாகப் பிரித்து ஏழைகளுக்கு கல்விச் சலுகைகள் வழங்கும் விதத்தில் கொள்கையை மாற்றியமைக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். பேக்வேர்ட் கம்யூனிட்டியில் உள்ள பணக்காரர்களுக்குக் கல்விச் சலுகை இருக்கிறது, ஆனால் பார்வேர்ட் கம்யூனிட்டியில் உள்ள ஏழைகளுக்கு கல்விச் சலுகை இல்லை என்று சொன்னால், இதை எந்த நேரத்திலும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி எனக்கு இந்த வாய்ப்பை அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான்கு தலைவர்கள் பேசவேண்டியிருக்கிறது. ஆகவே, 15 நிமிடங்கள் என்ற அடிப்படையில் எடுத்துக்கொண்டால், அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பதற்கு வசதியாக இருக்கும்.

Dr. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, in support of the cut motions moved on behalf of the Swatantra Party, I wish to speak a few words.

Sir, at the very outset I would say that the educational policy of the State is in a total mess. I am sorry I have to express my total disappointment with the educational policy and its performances. I shall in the course of my speech enumerate the reasons why I have come to this unpleasant conclusion.

The Government, in the fields of school education, collegiate education and even in technical education have bungled at several stages. The educational policy of the Government has not given satisfaction to the students, the parents, and the teachers including lecturers. The biggest problem of boys and girls to-day is how to find out seats in colleges and schools. In the olden days students used to open newspapers to find out whether their numbers had come in the newspapers or not and they were happy when their numbers were there and they were even thrilled at that. But to-day when they open the newspapers and find out their numbers, they are disappointed because the next problem starts. For the students who pass the S.S.L.C. Examination there is the problem of P.U.C. admission to the colleges and for the students who have passed the P.U.C., there is the problem of admission to the B.A., B.Sc. and B.Com. courses. To-day their parents are not even one-tenth happy as they were in the olden days.

Then there is the heart-breaking sight of the parents running from pillar to post to get admission for their children in colleges. This is the pathetic phenemenon in our State. What is our Hon. Chief Minister doing to put an end to this? I have even given



1971 ஜூலை 10] [Dr. H. V. Hande]

a call attention notice to bring this matter to his notice but absolutely nothing has been done. But it is generally thought that things are going on smoothly and in this House even economiums have been paid pointing out the difference in expenditure incurred by the previous Government and this Government. I am not concerned with the expenditure but I am concerned with the concern of the parents and students. What are the concrete steps taken to mitigate the suffering at least by one per cent? Everything is increased except the ameliorative measures. I hope and trust the Hon. Minister for Education will give serious consideration to this aspect of the matter and do something to augment the number of seats, etc.

Then I come to the language policy. This language policy has completely isolated us. Actually it looks as if we have separated ourselves from the rest of the country. For instance, we want to bring the two-language policy and I am not going into details because short time is allowed to me. I will briefly touch upon some points.

Our communication system with the rest of the country suffers on account of this language policy. We are progressively, steadily and systematically removing or unlearning the English language. We are also driving away Hindi and also Sanskrit from our State. Sir, the words, which are used in the Lok Sabha or in other State Legislatures, like Adyaksha, Vidhan Sabha are all Sanskrit words and not Hindi words. Whether we want it or not, we have to face facts. If we go to the Andhra Pradesh or Kerala States or Mysore we will see that these Sanskrit words are used there. Those States are in an advantageous position and I do not know for what reasons we want to completely be rid of Sanskrit. In this connection, I will refer to one point. For the study of Sanskrit a sum of Rs. 12,000 has been allotted by the Centre to our State. About Rs. 10,000 or Rs. 11,000 would be spent in Standards X and XI and a small amount would be left over for other purposes. There is a provision that it can be passed on to oriental schools. Even that provision is not exploited what is the problem? I do not know. We ask for more funds for this and that. Here a small amount is allotted and even that is not utilised. That is another grievance which I want to bring to the attention of the Hon. Minister.

Now, I come to the standard of education. It has gone down awfully. We are not able to compete in IAS, IIT examinations. We are facing severe competition in the central examination that is being conducted annually by the Indian Council of Medical Research for admission into medical college of boys and girls. Many of our boys and girls are not aware of this and many members here also may not be aware of the same. Indian Institute of Medical Sciences provides the facility. But our boys and girls are not able to compete because of the high standard.

We are not able to compete with Calcutta University, Bombay University, etc. Ultimately we are not able to compete even in the examinations conducted by UPSC. This serious matter I want to bring to the attention of the Hon. Minister and this august House in the interest of our boys and girls. Government must pay heed to what I say and do the needful in the matter for raising the standard of education.

We are in between two horns. We are in a dilemma. What are the two horns? One is infiltration of politics in governmental institutions which we should put an end to. We are nurturing these institutios with money collected from the tax payer. But there is political infiltration. It is progressively increasing. I have some details on hand regardng this. I have no time to go through this in detail. This is on the one hand. On the other hand is the exploiting tendency exhibited in private institutions. That is why I say we are in between two horns. I know that from the lecturers in a college Rs. 100/- is demanded and the person who collects is the correspondent. I know the name of the institution. I know the amount collected. Please do something about this. If the teachers resist, their services are terminated. What can the poor teachers do?

Take the S.I.E.T. College in the City. What has happened? The Hon. Minister last year issued a statement. There was a wordy warfare between Government and the College concerned. But nothing happened afterwards. From girls studying in 1970–71, they had collected money. That money has not yet been refunded. I bring it to the notice of the Hon. Minister. It is like Charles Dicken's Spindlow saying it is Jerkins' responsibility and Jerkin saying it is Spindlow's responsibility, one blaming the other. I wish something is done in this respect. Open receipts are being given for donations for college admission. This is why when the other day the PSP member remarked that free education had become a farce, I agreed with him. That is exactly what is happening there? What is the pay given to these S.I.E.T. teachers? Not the Second Pay Commission's Scale or UGC but what was obtained from the First Pay Commission. They are helpless. If they resist, they would be sent out. I wish Government does something about this.

Now I come to the quality of teachers. How are we going to improve? Increase the emoluments of teachers to attract better quality. That is the only method. I have heard from a very distinguished teacher friend of mine that once there is a brilliant lecture all the rumblings will die away and all the boys and girls would be attracted by the eminent lecture emanating from the mouth of the lecturer. What are the steps we are going to take to get such quality of teachers? I have said so many times that they should be paid UGC scale. I have written to the department and I have got a reply. There are lots of anomalies in it; because of want of time I shall not go into those things now. Please do something about this.



I have time and again pleaded that the education policy of Government should not be changed, once they get some brain-wave due to some political ideology. I want that there should be an Education Board comprised of persons, who do not depend upon Government for their jobs and who would be independent of politicians. Such an independent Board might be appointed and the Board could evolve an education policy for our State. In highly developed countries, teachers are paid very high salaries. Unless you pay the teachers adequately, there is no hope.

Rs. 100 is being collected from everyone who seeks PUC admission in Ambur College. I wish the Hon. Minister for Education does something about this.

Even though Government say they had accepted Dr. A. L. Mudaliar's Committee's recommendations, they had not provided English medium in all colleges. Ooty is one example I have received number of representations. I wish Government does something about this.

I have no time and I am only touching upon some points. Rs. 1,500 is the limit prescribed for grant of stipends for technical students. That limit was fixed several years ago and it should be adequately raised. It has not relevancy to the present day conditions. That means the basic salary of the parent should not be more than Rs. 125. That is very low when compared to present day cost of living. The limit should be increased.

Some local bodies have not paid the salaries of teachers. The Panchayat Unions of Thiruchendur and Sattankulam have delayed payment of salaries of teachers. Salary for May 1970 was paid on 5th July 1970, days six delay. Salary for July was paid on 1st September 1970, 31 days' delay. Salary for September was paid on 19th October 1970, delay of 19 days. February pay was paid after delay of 17 days and that of March after 42 days. May salary had not been paid at all.

Government should appoint B.A., B.T's as headmasters of Government elementary schools. That would give encouragement for graduates and post-graduates. The services of part time teachers also deserve consideration. They receive a pittance of Rs. 30 per mensem.

By the two-language formula, 2,000 Hindi teachers' had been affected. Many had lost their jobs. Anna assured that they would not be affected. But many had not been provided with alternative jobs. This is one instance where this Government had cast to the winds Anna's assurance. I wish they pay attention to rehabilitation of all these Hindi teachers. Please do something in this connection.

There is one more shocking incident. This has particular relevancy to my constituency. There should always be a proper co-ordination between the Government and the local authorities.

the problem of introducing high schools is actualy the Government's
ந.ப. 12-00 problem, but the local authorities help the Government. I have given a number of cut motions. I have given 25 cut motions. If only Government properly examine the cut motions and get proper answers, at least a considerable section of the grievances of the public can be mitigated. I have also given a cut motion with regard to the high school in Choolai. Nothing has been done.

I will give you an example. Afterwards I will give all these papers to the Hon. Minister—39/34, Manickam Chetty St., Choolai, Purasawalkam -R.S. No. 1859/6—5 grounds and 500 sq. feet—this particular place was to be taken over by the Corporation for high school purposes. Then for about 7 or 8 years 'dilly-dallying' was going on. Finaly the Corporation passed a resolution that it has to be taken over. But nothing has been done. Now, it is possible for the Government if only they took a decision in the matter and asked the Corporation also to start a high school. There are two reasons for which I am stressing the point now. One reason is the Hon. Minister for Education is also the Minister for Local Administration. But apart from that, primarily this comes under the Education Demand. I want the Hon. Minister to do something in the matter.

There is another case which is more shocking—5, Veda Vinayagar Road, Choolai, Madras-7 where they want to start a Girls' school. Some years ago the Corporation passed a resolution that this place should be acquired. The matter came to the Government. The Government served 41-A notice inviting objections. Objections were invited. One objection was raised by the landlord. But the objection was overruled by the Government. But then, shockingly, after everything was over, after the Corporation had passed a resolution, after the Government had served the notice calling for objections, after the objection was overruled, again 15 Corporation Councillors some years ago—I have got all the evidence—I do not bother to what parties they belong to—suddenly passed a resolution saying that they want this to be stayed. There is a provision like that. I wonder why it was done. I wonder what the C.I.D. Department is doing, what our Vigilance Department is doing. What business the Councillors have got to pass such a resolution? Why do not the Government ask the Vigilance Department to find out on what consideration they passed such a resolution, when the place was required for a public purpose? If they had indulged in any nefarious activities, it is a '*samooha virodha cheyal*', it is a very, very obnoxious thing. I want the Vigilance Department to find out what made them pass such a resolution, why exactly it was stalled. It is all a very old story. No action was taken by this Government to see that the particular resolution has been finally vetoed. The house was in the hands of that man and that man approached 15 councillors and the whole thing has been kept in abeyance.





High schools could have been started in Ashtabujam Road, Veda Vinayagar Road and Manicka Chetty Street. It is purely an indusrial area where poor workers are there and they cannot contribute even a rupee or two to start a school. It is not an aristocratic area like South Madras. It was a scandal. I want the Government to see that necessary instructions are given to the Vigilance Department to find out on what considerations the 15 councillors passed such a resolution, and to issue instructions to the Education Department to instruct the Corporation to see that that resolution is not immediately implemented. I also want an assurance from the Hon. Minister on the floor of the House that necessary steps will be taken to see that something is being done about it.

Finally, house rent allowance and city compensatory allowance have not been given to teachers of private polytechnics and colleges and they represented to me about this problem. I want the Government to take particular note of it.

Our Minister is a strong man both in the party and outside and everywhere. Finally my only request to the Hon. Minister is this. Unless he takes a strong attitude and sees that no infiltration of politics enters either private or Government Colleges and that Aegean's stables are properly washed and till he sees that proper standard of education is given to our students, I think our Education Department will continue to be in a mess.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர், சார், கல்வி மானியத்தின் பேரில் எங்களுடைய கட்சியின் சார்பில் பல வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருக்கிறோம். குறிப்பாக தனியார் கல்வி நிறுவனங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தும் முறையில், வெட்டுப் பிரேரணை சபையின் முன்னால் சமர்ப்பித்திருக்கிறோம். அதன் அடிப்படையில், எங்கள் கட்சி சார்பில் பேசிய சுப்பு அவர்கள் பல உதாரணங்களை எடுத்துச் சொன்னார்கள். நானும் என்னுடைய பிரசங்கத்தின் இறுதியில் சில உதாரணங்களைக் கொடுக்க இருக்கிறேன். தனியார் நிறுவனம் என்று சொன்னால் சாதாரண ஆரம்பக் கல்விச் சாலை முதல் கல்லூரி வரையில் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நம்முடைய கல்வியைப் பொறுத்தவரையில், அரசியல் சட்டம் 1950-ம் வருடத்தில் நிறைவேற்றப்பட்டு, 1960-ம் வருஷத்திற்குள்ளாக, 14 வயது வரை மாணவர்களெல்லாம் கட்டாயமாகக் கல்வி பயிலவேண்டும் என்று, 45-வது பிரிவின்படி, செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த முறையில் எந்த மாநிலமாவது செய்ததாகத் தெரியவில்லை. நமது மாநிலத்தில் 7 முதல் 11 வயதுவரை உள்ள மாணவர்கள் கட்டாயமாக கல்வி கற்கவேண்டும் என்று செய்திருக்கிறது. 75-க்குள் எல்லோருக்கும் கல்விகற்க வசதி அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கும் வாக்குறுதியை நான் வரவேற்கிறேன்.

அதே நேரத்தில், சாதனைகளைப் பற்றிப் பேசும்போது, இன்னும் நம்மிடையே "டோடல் லிட்டரஸி", தமிழ் நாட்டிலிருக்கும் நாலு கோடி மக்களுக்கும், கல்வி என்று சொல்லக் கூடிய, "ரீடிங், ரைடிங்

அண்ட் (அ)ரித்மெடிக்" என்கிற ஆரம்ப மூன்று "ஆர்"களும் தெரியாது என்ற நிலை இல்லை என்று ஏற்பட்டால்தான், தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாம் சிறப்பாகக் கொண்டு போகிறோம் என்று சொல்லமுடியும்.

அடுத்த விஷயம், கல்வியும் நீதியும் கண்டிப்பாக மக்களுடைய விருப்பத்திற்கும் மாறாக, இன்னும் நியாயத்திற்கு அப்பாற்பட்டு போவதற்கு ஆரம்பித்தால், degeneration begins to set in என்பது என்னுடைய கருத்து; ஏனென்றால், இன்றைய நிலைமை கல்வியில் கூட இப்படி ஏற்பட்டிருக்கிறது என்று வருத்தப் படவேண்டியதாக இருக்கிறது. அதுபற்றியெல்லாம் எங்களுக்குப் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டும் என்று கோரி எழுதியிருக்கிறார்கள். அவை பூராவையும் வெட்டுப் பிரேரணைகளில் கொண்டு வருவது என்பது முடியாத காரியம். எங்களுக்குக் கிடைத்திருக்கும் கடிதங்களை இலாக்காக்களில் பரிசிலனை செய்தால் வெறும் கமிஷன் போட்டுக் கூடக் கிடைக்கக் கூடாத விவரங்கள் அவர்களுக்குக் கிடைக்கும்.

அதேநேரத்தில், சட்ட மன்றத்தைப் பொறுத்தவரையில், பல உறுப்பினர்கள் அதிகமாகக் கேள்விகள் கேட்பதும் கல்வியின் அடிப் படையில்தான். தமிழ் நாட்டில் இன்றைக்கு இருக்கக் கூடிய கல்வி முறையில் திருப்தி இல்லை, அதை மாற்றியமைக்க வேண்டும் என்ற ஒரே கருத்தோடு சொல்லுகிறார்கள் என்றுதான் அர்த்தம். அதைத் தான் பல ஸ்தாபனங்கள், ஆரம்ப ஆசிரியர்கள், இன்னும் பல ஆசிரியர்கள் ஸ்தாபனங்களெல்லாம் கல்வியைப் பொறுத்தவரையில் ஒரு போர்டு அமைக்க வேண்டும் என்று அந்தக் கோரிக்கையை வலியுறுத்துகிறார்கள்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

இப்பொழுது கல்வியைப் பொறுத்தவரையில், எவ்வளவோ கோளாறுகள் இருக்கின்றன. ஒரு சிறு உதாரணம் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். தனியார் கல்விச் சாலைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும், அவர்களுக்கு உற்சாகம் கொடுக்கக் கூடாது என்று சொல்லும்போது, புதிதாக வந்த டைரக்டர் அவர்கள், தனியார் கல்விக்கு, ஆரம்பக் கல்விக்கு கிராண்ட் கொடுப்பதை 10-லிருந்து, 12 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். ஆசிரியர்கள் சம்பளம் அடிப்படைச் சம்பளம் உயருகிறது. இப்பொழுது 12 சதவிகிதம் ஆக இருக்காது; அது 35 சதவிகிதம் ஆக இருக்கும். ஒரு பக்கத்தில் தனியார் கல்விச் சாலைகளை மூடவேண்டும் என்ற கொள்கை வேண்டும் என்கிறோம். ஆனால், அதே நேரத்தில் அதிகமான கிராண்ட்கொடுக்கும், கொடுக்கப்போகும் முறையில் இருக்கிறது. இலாகாவினர் இதைப் பரிசிலனை செய்தால், நான் சொல்லுவது, எவ்வளவு பொருத்த மானது. சரியாக இருக்கிறது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

அடுத்து, கல்வியைப் பொறுத்தவரையில் சில பிரதானமான விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். பல விவரங்களை எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு என்ன படுகிறது என்றால், கல்லூரியில் இடம் கிடைக்க, உயர்நிலைப்





பள்ளியில் இடம் கிடைக்க சிபாரிசுதான் வேண்டும் என்ற நிலை இருக்கிறதே, அதை மாற்றுவதற்கு பெரு முயற்சி எடுக்க வேண்டும். ஒரு கல்லூரிக்கு, அதுவும் சென்னையில் இருக்கும் ஒரு கல்லூரிக்கும் நான் சிபாரிசு கடிதம் அனுப்பவில்லை.

மதுரையில் இருக்கிற கல்லூரிக்கு நிர்ப்பந்தம் காரணமாக டெலிபோன் செய்ய வேண்டியதாயிற்று. கடிதம் எழுதவேண்டிய தாயிற்று. அதன் பேரில் நடவடிக்கை எடுத்தார்கள். இது ரொம்ப சிரமமாக இருக்கிறது. இந்த முறை மேலிருந்து கீழ் வரையிலும் வருகிறபோது சாதாரணமாக படித்த மாணவர்களுக்கு இடம் கிடைக்காமல் போகிறது. அரசியல் சட்டம் தெளிவாகச் சொல்கிறது. "ரைட் ஆப் எஜுகேஷன்" என்பதை காரண்டி பண்ணவேண்டும். சமுதாயத்தில் பின்தங்கிய மக்களுக்குப் போது மான வசதிகளைக் கொடுக்க வேண்டும். பின்தங்கிய மக்களுக்கு 31 சதவீதமும் ஷெட்யூல்ட் கேஸ்டுக்கு 16 சதவீதமும் இருப்பதை உறுதியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். தனியார் கல்லூரிகளெல்லாம் இன்றைக்கு 400 மார்க், 450 மார்க், 500 மார்க் வேண்டும் என்று அந்த அடிப்படையிலே கேட்கிறார்கள். நாம் இன்றைக்கு ஒரு பரீட்சை வைக்கிறோம். அதில் திறம்பட ஜெயித்த வர்களுக்கெல்லாம் இடம் கொடுக்கவேண்டுமென்பதுதான் நியாயம். அந்த அடிப்படையிலே இல்லாமல் அந்தக் கல்லூரிகளிலே 400 மார்க்குக்குக் குறைந்து மார்க் வாங்கியவர்களுக்கு இடம் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்களே, அந்தக் கல்லூரிகளை பிளாக் லிஸ்டு செய்யுங்கள். அவர்கள் என்ன பெரிய காரியம் செய்கிறார்கள் என்று நாம் கேட்கிறோம்.

பலவிதமான ஜாதிமத அடிப்படையிலே கல்லூரிகள் அமையக் கூடாது. ஏதோ சென்ற காலத்தில் நாட்டைப் பிடித்த துரதிருஷ்டம் கிருஸ்துவ கல்லூரி என்றும், இந்துக் கல்லூரி என்றும், முஸ்லீம் கல்லூரி என்றும் மதத்தின் பெயரால் ஏற்பட்டன. படிப்படியாக அவைகள் குறையவேண்டும். அந்தப் பெயர்களில் இருக்கக்கூடிய கல்லூரிகள் தான் மிக மோசமான முறையில் நடந்து கொள்கிறார்கள். அந்தக் கல்லூரிகளில் நல்ல ரிஸல்டு வரலாம். அதனாலே சமுதாயத் திற்கு என்ன நன்மை இருக்கிறது. ஆகவே, அப்பேர்ப்பட்ட கல்விச் சாலைகளுக்கு அதிக ஆதரவு கொடுப்பதை குறைக்கவேண்டும்.

சாதாரணமாக 260 மார்க் வாங்கினாலும் எங்கள் கல்லூரியில் சேரலாம் என்று இருக்கவேண்டும். 300 மார்க் வாங்கினாலும் சேர்த்துக் கொள்கிறார்கள் என்ற நிலையில் அதிகமான வசதியும் வாய்ப்பும் இருக்கவேண்டும். அதே நேரத்தில் கல்லூரியில் இருக்கிற பேராசிரியர்கள்—அவர்கள் போற்றி பாதுகாக்கப்பட வேண்டிய வர்கள்—வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பது வாஸ்தவம் தான். யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் சிபாரிசுகளை பற்றி சொன்னார்கள். 1—4—1964 முதற்கொண்டு யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் சிபாரிசு அடிப்படையில் அவர்களுக்கு எல்லாம் ஊதியம் கொடுக்க வேண்டும்.

அது அல்லாமல் பிசிகல் எஜுகேஷன் சொல்லிக் கொடுக்கிற வர்கள் வேறு கல்லூரிகளில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் பிறகு லைப்ரரியில் வேலை செய்கிறவர்களுக்கு எல்லாம் இந்த யூனிவர்சிடி

கிராண்ட்ஸ் கமிஷன் சிபாரிசு பொருந்தாது என்று சொன்னார்கள். பிறகு தான் 1—4—1968-லிருந்து கொடுக்கலாம் என்று உத்தரவு வந்தது. இதைப்பற்றி பேரைக் கூட சொல்லுவேன். சொக்கையா என்பவர் 14 ஆண்டு காலம் பெரியநாய்க்கன்பாளையம் கல்லூரியில் ஆசிரியராக இருந்தவர். அவர் செய்த தவறு எல்லாம் எனக்கு யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் அடிப்படையில் சம்பளம் கொடுங்கள் என்று கேட்டதுதான். அவருக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அப்படி ஒரு நிலைமை கல்லூரிகளுக்கு ஏற்படும் என்றால், அந்த கல்லூரிகள் எதற்காக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கல்லூரிகள் எதற்காக நடத்தப்படவேண்டும் என்று வேதனையோடு கேட்கின்றேன்.

அதே மாதிரிதான் தனியார் பள்ளிகளில் 10 ஆண்டு காலம் பணியாற்றி வருகிறவர்கள் திடீரென்று நீக்கப்படுகின்ற கேடுகள்—நான் எல்லாம் ஆசிரியர்கள் மத்தியில் அதிகம் செல்லும் வாய்ப்பு இல்லாததால், இப்போது தான் பல விவரங்கள் தெரிகிறது. பத்து வருஷம் ஆசிரியராக இருந்தவர்கள், 12 வருஷம் ஆசிரியராக இருந்தவர்கள், பாதுகாக்கப்பட வேண்டும் என்று அதைப்பற்றி கேள்விகள் கேட்டேன்.

பெண் ஆசிரியர்கள் எந்த முறையில் நடத்தப்படுகிறார்கள். திடீரென்று வேலையிலிருந்து போ என்று சொல்லிவிடுகிறார்கள் தனியார் கல்லூரிகளில் ஆனாலும் சரி, பள்ளிகளில் ஆனாலும் சரி. கேட்டால் திட்டவட்டமாக சொல்லுகிறார்கள் சொந்தக்காரர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்று. அல்லது வேலையை விட்டு போகாமல் இருக்க இவ்வளவு ரூபாய் முன் பணம் கொண்டுவா என்று சொல்லுகிறார்கள். இதை எல்லாம் நான் பொறுப்போடு சொல்லுகிறேன். வேண்டும் என்றால் இன்னின்னார் இன்னின்ன இடங்களில் இவ்வளவு பணம் கேட்கிறார்கள் என்று சொல்ல முடியும். இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்பதற்காக தான் நான் கொஞ்சம் அழுத்தந்திருத்தமாகச் சொன்னேன்.

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் இந்த சர்க்கார் நடத்தக்கூடிய கல்லூரிகள் அதிகமாக்கப்பட வேண்டும். சர்க்கார் நடத்தக்கூடிய கல்லூரி முப்பத்தாறோ முப்பத்தேழோ இருக்கிறது. தனியார் கல்லூரிகள் 110 இருக்கிறது என்று நினைக்கிறேன். அரசு நடத்துவது 43. தனியார் நடத்துவது 118 கல்லூரிகள். அது 118 அரசாங்கம் நடத்துவதாகவும், 43 தனியார் நடத்தும் முறையிலும் இன்னும் ஐந்து வருடத்தில் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எப்படியென்றால் தனியார் நடத்தக் கூடிய கல்லூரிகள் படிப்படியாக நம் கையில் வர வேண்டும். நம் எண்ணிக்கை அதிகமாக ஆக்க வழி வகைகளை வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி டிரெயினிங் காலேஜ்—இதில் போய்ச் சேருவதே கஷ்டம். டிரெயினிங் காலேஜ்களைப் பற்றிய விவரங்களை வைத்திருக்கிறேன். 7 பெண்கள் கல்லூரிகள் தனியார் கையில் இருக்கின்றன. நம் கையில் இரண்டுதான் இருக்கின்றன. பெரும் பகுதியான பெண்கள் டிரெயினிங் கல்லூரிகள் ஏன் அவர்களிடம் இருக்க



வேண்டும்? இதை மாற்றுவதற்கு முடியாதா? இனிமேல் புதிதாகக் கல்லூரிகள் அமைக்கிறபோது அரசு நடத்தவேண்டும். அந்தப் பெண்கள் கல்லூரிகள், தனியார் கையில் இருக்கிற கல்லூரிகளைக் குளோஸ் பண்ணுவதற்கும் நாம் தயாராக இருக்கவேண்டும். ஏனென்றால், கல்லூரிகளில் நடக்கிற தவறுகளை யாரிடம் சொல்வது? 1970-ம் வருஷம் சென்னை, மதுரை பல்கலைக் கழகங்களில் அறிவு படைத்த மேதாவிகள் உட்கார்ந்து கொண்டு பி.யு.சி. ஆண்கள் கல்லூரியில் பெண்களைச் சேர்க்க முடியாது என்றால் அந்த பல்கலைக் கழகங்களில் நிர்வாகம் பண்ணக் கூடியவர்கள் எந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள்மேல் எனக்குக் குறையில்லை. அவர்கள் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அதைப்பற்றி சந்தேகம் கிடையாது.

அடுத்தபடியாக எஸ்.எஸ்.எல்.சி.-யைப் பொறுத்தவரையில் இரண்டு லட்சம் மாணவர்கள் பரீட்சைக்கு உட்கார்ந்தார்கள். அதற்கு ஆயிரம் செண்டர்கள். ஆயிரம் செண்டர்களில் உட்கார்ந்து பரீட்சை எழுதியதை ஒரே இடத்தில் செண்ட்ரலைஸ் பண்ண வேண்டுமா? ஏற்கனவே, கமிஷனர் ஃபார் கவர்ன்மெண்டு எக்ஸாமினேஷன்ஸ் அலுவலகம் ஒன்று மதுரையில் இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டு அந்த விவகாரம் தூங்கிக்கொண்டிருக்கிறது. அங்கு ஒன்று வைப்பதனால் ஆபத்து ஒன்றும் வந்து விடாது.

இன்னொரு ஆலோசனை, இன்றைக்கு 111 ஆயிரம் பேர் வரையிலும் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்கிறார்கள். இங்கே நடந்த பல வாதங்களில் மாணவர்கள் படை, நிலத்தில் போய் உழைக்கக் கூடிய படை, நில மீட்சிப் படை, விவசாயிகளுக்கு உதவி செய்கின்ற படை என்று பல படைகளைப் பற்றியெல்லாம் பேசினார்கள். நான் சொல்கிறேன். எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்த ஆண்கள், பெண்கள் அவர்கள் நேரடியாக பி.யு.சி.-க்கு வருவது என்பது வேண்டாம். ஓராண்டு காலம் அவர்கள் கிராமங்களுக்குச் செல்லட்டும். நல்ல விதைகளை எடுத்துக் கொடுக்கட்டும். கிராம விவசாயிகளுடன் உழைக்கட்டும். பிரான்ஸ் போன்ற தேசங்களில் கான்ஸ்கிரிப்ஷன் இருக்கிறது. 19 வயதானவுடனே அங்கே ஓராண்டு காலம் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அந்த மாதிரி இங்கும் பயிற்சி கொடுக்கப்படவேண்டும். பஞ்சாயத்து யூனியன் சர்டிபிகேட் கொடுக்கட்டும். ஸ்டைபண்டு கொடுக்கட்டும். சர்டிபிகேட் கொடுத்து அப்படி சர்டிபிகேட் வாங்கிய மாணவர்கள் தான் பி.யு.சி.-க்கு வரவேண்டும் என்று இருக்க வேண்டும். அப்படி இடைவெளி இருப்பது நல்லது என்ற ஆலோசனையைத்தான் சொல்கிறேன். கல்லூரியில் உள்ள படிப்பை இன்னும் திறமையாக ஆக்கலாம்.

இன்னொரு ஆலோசனை. வைத்தியக் கல்லூரியில் இருக்கிற மாணவர்கள் எம்.பி.பி.எஸ். பாஸ் செய்தவுடன் ஓராண்டு காலம் ஹவுஸ் சர்ஜன் பயிற்சி பெறுகிறார்கள். அப்படி அவர்கள் பயிற்சி பெறுவதைப் போல என்ஜினியரிங் கல்லூரியிலே படித்தவர்கள், டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்டிலே படித்து பட்டம் பெற்றவர்கள், அல்லது டிப்ளமா வாங்கியவர்களுக்கு தனியார் தராவிட்டாலும், சர்க்காருடைய பல தொழிற்சாலைகளில் பயிற்சி செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 10

இன்னொன்று. ஓரிரண்டு விஷயங்களைச் சொல்ல விரும்பு கிறேன். சபாநாயகர் அவசரப்படுவதால் வேகமாக சொல்லிக் கொண்டு போகலாம் என்று நினைக்கிறேன். என்னவென்றால், பி.டி. ஆசிரியர்கள் சம்பளம் சம்பந்தமாக ஏற்கெனவே நமது கம்பம் தொகுதி உறுப்பினர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 248 கிடைத்தது. இப்போது ரூ. 275 கிடைக்கிறது. மேற்கொண்டு 27 ரூபாய் கிடைக்கிறது. அவர்கள் பெரிய மாநாடு நடத்தி அன்றைக்கு வந்திருந்த அமைச்சர் அவர்களிடமும் சொல்லி யிருக்கிறார்கள். இதை திரு. ராகவன் அவர்கள் ஒன் மேன் கமிஷன் கவனித்து நியாயம் வழங்குமென்று நினைக்கிறேன்.

அதேமாதிரி ஹிந்தி படித்த ஹிந்தி ஆசிரியர்கள் 600 பேர் வேலையில்லாமல் போய்விட்டார்கள். இவர்கள் என்னை வந்து பார்க்கிறார்கள். அவர்களுக்கு சி.ஈ.ஓ. வேலையில்லை என்று சொல்லு கிறார்கள். சி.ஈ.ஓ. அப்பாயிண்டிங் அதாரிட்டி என்ற முறையிலே உத்திரவு இடவேண்டும். அவருக்கு காரியம் செய்யவேண்டு மென்றால் அப்போதுதான் முடியும். மதுரையிலே ஹார்வி மில்லிலே ஸ்ட்ரைக் நடந்தது. அமைச்சர் அவர்கள் எப்படியாவது செட்டில் பண்ணவேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். உடனே செட்டில் ஆகிவிட்டது. அதே மாதிரி இந்த 600 பேருக்கும் வேலை கொடுக்க சி.ஈ.ஓ.-க்குத் தனி அதிகாரம் இருக்கவேண்டும்.

ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் கல்லூரிகளில் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். ஒரு கல்லூரியில் ஆங்கிலம் சொல்லிக்கொடுத்து தமிழ் சொல்லிக்கொடுக்காமல் இருக்கக் கூடாது.

மதுரையில் சட்டக் கல்லூரி கண்டிப்பாக ஏற்படுத்தவேண்டும். சட்டக் கல்லூரியில் கூட அதிகமான பேர்கள் படிக்க விரும்புகிறார் கள் என்ற விஷயம் தெரிகிறது.

செந்தமிழ்க் கல்லூரியை மூடிவிடுவதை நாம் அனுமதிக்கக் கூடாது. அதைக் கலைக்கல்லூரியாக ஏற்படுத்த எண்ணம் இருக் கிறது. அது கூடாது.

பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள ஆசிரியர்கள் கல்லூரியில் உள்ள பல கேடுகளை அகற்றி ட்யூட்டர் முறை இருக்கவேண்டும். இந்த முறை பல நாடுகளில் இருக்கிறது. ட்யூடோரியல் சிஸ்டம் என்றால் கல்லூரியிலே ட்யூட்டர்கள் இருப்பார்கள், அவர்கள் 20, 30 மாணவர்களைத் தயார் செய்வார்கள். அந்த முறையிலே செய்ய வேண்டும்.

ஆசிரியர்கள் எங்கேயிருந்தாலும், தனியார் துறையில் இருந் தாலும் சர்க்கார் துறையில் இருந்தாலும் ஒரு இடத்தில் 5 ஆண்டு களுக்குமேல் இருக்கக்கூடாது. இருப்பவர்கள் தனியார் கல்லூரி யிலே அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மாற்றப்பட வேண்டும்.

செகண்டரி கிரேட் ட்ரெயினிங்கை நல்ல முறையில் வைத்திருக் கிறார்கள். அதிலே விதிவிலக்கு "சேக்ரட் ஹார்ட் ஹைஸ்கூல்", பாளையங்கோட்டை. இது ஏன்? பால் கமிட்டியின் சிபார்சை



1971 ஜூலை 10]

அமல் ஆக்கவேண்டும். உழைப்பையும் தொழிலையும் ஆதாரமாகக் கொள்ளவேண்டும். 5 ஆண்டுகளுக்குள் இந்த மாணவர் ஆசிரியர் கள விகிதாசாரத்தைக் குறைக்கவேண்டும். கல்லூரியோடு சேர்ந் திருக்கும் ஹாஸ்டல் இருக்கிறது. அதிலே சிப்பந்திகள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லாமலிருக் கிறது.

சி. ஈ. ஓ. 10, இ.ஓ. 46 என்று இருப்பதை அதிகப்படுத்தவேண்டும். அவர்களுக்கு அதிகாரத்தை அதிகப்படுத்தவேண்டும். திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் "என்ன உத்தியோகம் பார்க்கிறீர்கள். உங்க ளுடைய உத்திரவுக்கு மதிப்பே இல்லையே" என்று எழுதியிருக்கிறார்

"Bring something which will give some effective control so that your orders can be enforced" என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதே மாதிரி மதுரையிலே சோமசுந்தரபுரம் காலனியிலே ஒரு பள்ளிக்கூடம் மூடப்பட விருக்கிறது. அதற்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். பாரதிதாசன் வீட்டை அரசாங்கம் வாங்கி நினைவுச் சின்னமாக ஆக்கியது. திருமங்கலத்தில் விஸ்வநாததாஸ் என்ற நடிகர், அவர் விடுதலையைப் பார்க்காமலே இறந்து போய்விட்டார். ஏதோ அவரைப்பற்றி எங்களைப் போன்றவர்கள் தான் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர் தங்கியிருந்த வீட்டை அரசு வாங்கி அதை ஒரு சின்னமாக வைத்தால் குறிப்பாக தெற்கே இருக்கும் மக்கள் ரொம்பப் போற்றுவார்கள் என்று சொல்லிக்கொண்டு இந்த மானியத்திலே கல்விக்காக 4-ல் ஒரு பங்கை ஒதுக்கியிருக்கிறோம் என்பது பாராட்டுக்குரியது. ரூ. 83 கோடி என்று நினைக்கவில்லை. மற்ற பகுதியில் இருப்பதைப் பார்த்தால், ரூ. 100 கோடியாக ஆகும். கல்விக்கு நாம் அவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறோம். இப்படி ஒதுக்கியிருக்கின்றபோது அது நல்ல முறையிலே குறைபாடுகள் இல்லாத முறையில் செலவிடுவதற்கு அமைச்சரவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் கட்சியின் சார்பாக இருக்கக்கூடிய இந்தக் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு நான் இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I wish to speak a few words regarding the Demand that is now before the House.

Several cut motions have been tabled on behalf of my party and other hon. Members also participated in the debate. Many of the Members who participated in the debate have praised the Government for allotting more funds in the current year's budget for Education. They have also been accusing that the previous Government did not do their best or they spent only a small amount with regard to Education.

I have got statistics for a few years and I will place them before this House, with your permission. The amount spent by the former Government is as follows. In 1957-58 the expenditure was Rs 1,115.63 lakhs and that worked out to 18.89 per cent of the revenue. In 1958-59 it was Rs.1,221.99 lakhs and it worked out to 17.88 per cent. In 1959-60 it was Rs.1,514.70 lakhs which worked out to 18.80 per cent. In 1960-61 it was Rs.1,838.74 lakhs

and it worked out to 20.19 per cent. In 1961-62 it was Rs.2,346.48 lakhs which worked out to 23.05 per cent. In 1962-63 it was Rs. 2,576.01 lakhs which worked out to 21.15 per cent. In 1963-64 it was Rs.2,741.46 lakhs and it worked out to 20.3 per cent. In 1964-65 it was Rs. 3,173.86 lakhs and it worked out to 20.98 per cent. In 1965-66 it was Rs.3,785.13 lakhs and that worked out to 20.95 per cent. So, by a comparison of these figures, we are able to see that the lion's share of the revenue was expended on education.

Sir, this House may be aware that education is a nation-building activity and whatever amount that is expended for education is for a social purpose and that is a laudable purpose and nobody would say that the amount spent on education is improperly used. But what about the speeches that have been made on the floor of the House? Many Members pressed their local demands and many other Members wanted more colleges, schools and other facilities. This is not all and I am sure that this House will agree with me when I say that some more amount can be allotted so far as the Education Demand is concerned. But are we in a position to allot it? That is a matter for the Government to decide. We, sitting in the Opposition will have to assail the policy of the Government by saying that the amount spent is not properly spent in several fields and with that background my speech may be just appreciated.

Sir, Education has been divided into three heads, school education, collegiate education and technical education. First I would deal with the school education. There are so many troubles besetting this field. Many Members have stated that the standards that have been maintained in our educational institutions are at a low ebb and is far from satisfactory. But that is a matter which the educationists and the Directorate will have to examine and see whether the steps already taken by the Government are commensurate with the growth and progress they have achieved in education. It has been stated on the floor of the House that the percentage of literacy is only 39.39 per cent. Is it a laudable figure and that is a thing which the educationists will have to consider. It has also been stated that we have got 3,881 primary schools. Is that enough? It has been stated that for every village with a population of 300 there is a school. I would say that the figure is static and does not grow. So far as elementary schools are concerned, the number has to be increased.

Certain measures have been taken for imparting English education from III standard. We now have only two language formula and we have given the go by to the three language formula that had been in vogue previously. Has even this two language formula, been accepted and implemented fully by this Government? This is a matter which this Government has to consider. Are they imparting English education fully? Why should we be allergic to English education?





We are for giving top-most priority to Tamil, the regional language. We do not say that Tamil should not be encouraged. Are we having enough text-books in Tamil? This is a matter which this House will have to consider. Of course, certain text books have been brought forth. But are they standard text books? That our educational experts have to examine. I am sure that many of the text books are far from satisfactory. Some incentive may be given to those authors who bring out good text-books. Then there could be some improvement of Tamil as well as improvement of English.

So far as selection of teachers is concerned, there is lacuna in the method of selection. Selection is done by D.E.O. in consultation with the C. E. O. I would say that many selections had been made mostly on recommendations. Performance at the examination may be taken as standard. Such of those who are above average may be given preference over others.

With regard to elementary education, Panchayat Unions are managing them and 87 per cent of the expenditure is borne by Government. Panchayat Unions bear only 13 per cent. Lion's share is borne by Government. Is it not fair and just that the whole education system should be taken over by Government and Panchayat Unions relieved of that burden? Many Panchayat Unions are not able to foot the bill and they are looking to Government to pay the teachers and so on. That is why I say let these institutions be taken over by Government. It is said that compulsory education of children between 6–11 is the aim. Are we enforcing it? Are there Attendance Committees? I say let this be enforced in the districts and at the D.E.O. level. Government may consider this aspect.

For primary schools, B.Ts. may be appointed as headmasters. Even B.Ts. who are without employment can be provided with jobs. As apprentice teachers, new hands are taken. I would say that there has been certain amount of delay in the matter of appointment of these apprentice teachers even when there are vacancies. This may be looked into and prompt steps may be taken. Several requests had been made to the Directorate as well as C.E.O. Let timely action be taken and teachers appointed so that the institutions may not be without teachers. This is a matter for the Education Minister and Government to consider.

There are the private schools' staff. Teachers in those schools are without security of service. Dr. Paul's Committee has, I think, given some recommendations. Let Government consider those recommendations and implement them. Now these teachers are at the mercy of the management. Management flout the orders of Director and Government. Such of those institutions who do not give effect to the orders of Government might be singled out.

I shall mention one instance wherein one B.T. Teacher had been sent away by management. He appealed to the C.E.O. The Chief Education Officer (C.E.O.) allowed the appeal and Government approved the same. The order was communicated to the management, I mean the management of Orappannamalai High School. The management is still to reinstate the teacher. Such Institutions may be suitably dealt with and suitable legislation might be brought forward. They should not flout the orders of the eduction department or Government. The Government or the concernd department should not become powerless. Such callous attitude on the part of management should be discouraged. I am sure the Government would take prompt and effective steps to see that teachers of private schools are not sent out on flimsy grounds.

Now I would come to libraries. Libraries do not have enough space and quality books are not to be found in many libraries. Grant to these libraries have to be increased. Every school should have a well-equiped library. Then only good and excellent education could be imparted to the boys and girls. The department should take prompt and immediate steps to augment the number of books in the libraries both at the school level and at the district level.

Hindi teachers had been affected by the language policy of this Government. The Government is bound to give them alternate employment. Some of them had represented to Government. Their representations were not heeded. I want to know how many Hindi teachers had been given alternate employment and how many were rendered jobless by the two language formula.

We say that we should give encouragement to music. But what about the plight of music teachers? They are part-time and what they get is a pittance. Their pay should be increased and this is a matter for Government to consider. Several representations had been made to Directorate and Government. We are not giving proper encouragement to these music teachers who had qualified themselves and who are without employment.

Now I come to frequent transfers of teachers. Of course the department has got powers to transfer. Let me tell you what had happened at the level of Chief Education Officer in Tirunelveli. I have got three or four instances wherein teachers had been transferred for nothing. There were three orders. One dated 21st June 1971 issued by Chief Education Officer, Tirunelveli notified 21 persons as having been transferred, while the number of those who requested transfer was only 5. Nobody knows the reason for such transfer. What is the reason for this transfer, nobody knows. It is an inscrutable secret which has been kept by the Chief Education Officer. Is it for political consideration or on other basis? That is a matter which this Government will have to consider. In that order one teacher's name has



been described item 10 in that order —as N. S. Subramaniam, Government Primary School, Mahadanapuram and there was no teacher answering that description by name N. S. Subramaniam, Government Primary School, Mahadanapuram. So, the order could not be given effect to and could not be implemented. Then they waited for ten days; after that the name has been corrected and that teacher has also been transferred to some other educational district. What is the reason for all these transfers? That is the thing which will have to be considered.

Then, another list has been issued on the same date and by that order 20 persons have been transferred and out of that only 4 have been transferred on request, the rest on their own. Then the third list covers 20 persons and the number of persons who have been transferrd on request is only, three. Why I make mention about it is this. The Chief Education Officer is about to retire. Is it because that he harbours malice against the teacher community that he is resorting to this extreme method? That is a matter which the Education Minister will have to consider. I am sure, Sir, that this sort of frequent transfers will affect the morale of the teachers. If they have done anything wrong you frame charges and they may be dealt with either departmentally, or if they are corrupt, you proceed against them. But this sort of victimisation and harassment should be put an end to. This is one of the points which I wanted to refer to.

Now I would just go to collegiate education, Sir. So far as the collegiate education is concerned, by the appointment of the Mudaliar Committee it has been decided that the medium of instruction should be left to the choice of the pupils. In several colleges Engish medium classes are not yet open and I am sure that the Department would take effective and immediate steps to see that English medium sections are started in all the private institutions as well as in the Government institutions, which have not hitherto started those divisions. I am sure, Sir, that so far as the collegiate education is concerned, we had a set back. It has been pointed out that the percentage of passes that we get in the I.A.S. Examination is on the decline. Effective steps may be taken to streamline collegiate education. We should take immediate steps, so that the standards in our Universities may be raised and that is a matter for educationists.

(Mr. Speaker in the Chair)

Now, Sir, we have been demanding a law college at Madurai and that has been stressed by the hon. Member Thiru K. T. K. Thangamani. Previously also many members stressed the need for opening a law college at Madurai. Students are put to innumerable difficulties because they could not find adequate accommodation in Madras Law College. So, that should be given a priority. I am sure that this Government will bestow its proper care and attention to this matter.

Then, regarding the students who are staying in the college hostels, facilities are far from satisfactory. Effective steps may be taken to see that the students are housed in good hostels so that they may get good food. This is a matter which this Government will have to take into consideration. Several Arts Colleges have been now started. Four Government colleges and 9 private colleges are to be started. That is what I read from the note that has been circulated. I would say that preference may be given to such of those districts where there are no Government colleges. Top priority may be given to this matter and in that regard the Government should take effective steps and direct the District Collector to take steps to see that such of those districts where there are no Government colleges are given priority.

Regarding admission we are posed with terrible difficulties. The boys who get low marks are faced with difficulties. They are unable to get themselves admitted in the training schools. They are unable to get admission to the Pre-University course. What should be done is a matter which the Government will have to consider. Many of the institutions are denying admission. Such of those institutions which deny admission may be suitably dealt with. The Government have got powers. The Government can arm themselves with all the powers and direct them that all those people who have passed, all those people who have qualified themselves for collegiate education may be admitted in the colleges.

Then, Sir, one word regarding the choice of the Vice Chancellor. In the matter of choosing Vice-Chancellors, from the panel that is submitted, the Governor is selecting. I would say that a rotation method may be adopted in the matter of choice of Vice Chancellor. Preference may be given to leading medical men, leading educationists and leading jurists or lawyers. Such a panel should be made and effective steps should be taken so that collegiate education may be improved at all levels. North India is stealing a march over us. Delhi University, Calcutta University and other Universities are stealing a march over us. We should see that our boys also get effective and good education so that they may come up in flying colours in the I.A.S., I.P.S., and I.F.S. examinations and other All India examinations. That is a matter which the collegiate education authorities may take into consideration.

Then, regarding technical education I have mentioned in this House that so far as technical education is concerned, it should be job-oriented. That is what the note says. But there are many engineers and technicians who are now without any employment. Unemployment is so alraming and it has assumed alraming proportions. But what have you done so far as technical education is concerned. This Government which speaks of progress has not cared to increase the number of seats in the engineering colleges. They have not cared to increase the number of colleges. They have not cared to increase number of B.T. training colleges. They have not cared to raise the number of seats in the teachers'





training colleges. So, we cannot say that we are progressing very well. On the other hand, we say that we are spending a lot. Should we not approach the Central Government and say that the number of seats that have been reduced in the engineering and other technical institutions be now restored and that may be given a go by and the *status quo* be maintained. There should be no stagnation so far as technical education is concerned. There is a brain drain because many of our engineers and technicians go to the foreign countries and they do not return because they get better propects of employment elsewhere. I am sure that this Government will take effective and prompt steps in this matter.

The Government should also take steps to see that a separate university for technical education is started very soon . I think the Hon. Minister in one of his speeches in Tiruchirappalli stressed the need for starting a technical university and there are many things which have to be done in education. There are many flaws in the school education as well as in the collegiate education and technical education.

This Government would be failing in its duty, if it does not bestow proper attention to all the difficulties and defects that have been pointed out by several members. I am sure, Sir, that the plight of the teachers would be improved. Their lot should be improved. There are many teachers who have not got justice at the hands of Second Pay Commission and their cases may be once again examined and they may be given due salary.

The University Grants Commission scales of pay should be implemented at the college level. Such of the institutions who get signature and do not pay the full amount may be suitably dealt with. I am sure that the Hon. Minister will take prompt steps for implementing all these suggestions. With these words, I resume my seat. Thank you, Sir.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்* : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது பேரவையினுடைய உறுப்பினர்கள் சீரிய கருத்துக்கள் பலவற்றை எடுத்துத் தெரிவித்து, இந்தக் கல்வித் துறை வளரவும், கல்வியின் தரம் வளரவும் பலவகையிலே பேருதவி செய்திருப்பதற்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே பல உறுப்பினர்கள் பங்குகொண்டு, தங்கள் தங்கள் கருத்துக்களைச் சீரிய முறையில் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க் கட்சியில் இருப்பவர்கள், எதிர்க்கட்சியில் இருப்பதாலேயே எதிர்க்க வேண்டும் என்று சிலபல கருத்துக்கள் சொன்னாலும், அவர்களுடைய உள்ளுணர்வை என்னால் ஊகித்தறிய முடிகிறது. கல்வித் துறை வளர்ந்து வருகிற பாங்கினை அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். இது மேலும் மேலும் வளர வேண்டுமென்ற காரணத்தால், அதற்காக அவற்றை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அரசாங்கத்தினுடைய கவனத்திற்கோ அல்லது அதிகாரிகளுடைய கவனத்திற்கோ வராமல் ஆங்காங்கு சிலபல குறைபாடுகளும் குற்றங் களும் நிகழ்வதை மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருப்பது வரவேற்கத் தக்க ஒன்றுதான். ஏனென்றால் இந்தத் துறையிலே நூற்றுக்கு நூறு எல்லாமே குறைபாடுகள் இல்லாமல் குற்றங்கள் இல்லாமல் சரியாக இருக்கின்றன என்று என்னை நானே ஏமாற்றிக் கொள்ள விரும்பவில்லை, இந்தப் பேரவையையும் ஏமாற்ற விரும்பவில்லை. சிலபல குறைபாடுகள் ஆங்காங்கே இருக்கத்தான் செய்யும். யானைக்கும் அடி சறுக்கும், இருக்கின்ற துறைகளில் எல்லாம் இந்தக் கல்வித் துறைதான் யானைபோன்று இருக்கிறது. யானைப் பசிக்குச் சோளப் பொறி போதுமா என்று கேட்பார்கள். அதுபோல் கல்வித் துறை என்கின்ற இந்த யானைக்கு ஒதுக்கப் பட்டிருக்கின்ற பொறி, தொகை போதாதுதான், எவ்வளவு இருக் கின்றதோ, அதை வைத்துக்கொண்டுதான் நாம் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்த மன்ற உறுப்பினர்கள் பல குறைபாடுகளையெல்லாம் எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். அவற்றிலெல்லாம் கவனஞ் செலுத்தி எந்த எந்த வகையிலே சீர்திருத்தியமைக்க முடியும் என்பதை அரசு பரிசிலனை செய்யும்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையிலே கல்வித் துறை வளர வேண்டுமென்ற எண்ணம் விடுதலை பெற்றதற்குப் பிறகு வளர்ந்து வந்து இருக்கிறது என்பதை யாரும் மறுக்கவில்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். 1938-39ஆம் ஆண்டிலே 2 கோடியே 60 ரூபாய் அளவுக்குத்தான் ஒதுக்கப்பட்டிருந்தது, பிரிக்கப் படாமல் இரண்டு மாநிலங்கள் ஒன்றாக இருந்த நேரத்தில். ஆனால் இன்றைக்கு அது படிப்படியாக வளர்ந்து 83 கோடி ரூபாய் அளவுக்கு வேறு எந்தத் துறைக்கும் அந்த அளவுக்குச் செலவழிக்காத அளவுக்கு இந்தக் கல்வித் துறைக்குச் செலவழிக்கின்ற முயற்சியிலே நாம் ஈடுபட்டிருக்கின்றோம். அந்த அளவுக்கு நாம் ஒதுக்கியிருக் கின்ற தொகை மொத்தத்தில் 23 சதவீதமாக இருக்கிறது என்று சுட்டிக் காட்டினார்கள்.

பொதுக் கல்விக்கும் தொழில் நுட்பக் கல்விக்கும்—இவ்வளவு தொகை ஒதுக்கப்படுகின்றதே தவிர, இன்னும் பொதுவாக தமிழ கத்திலே உள்ள கல்வித் துறைக்காக நாம் செலவிடுகின்ற தொகை முழுவதையும் எடுத்துக்கொண்டு பார்த்தால்—திரு. தங்கமணி அவர்கள் கூறியதைப்போன்று—ரூபாய் 100 கோடிக்கு வந்து சேரும். பொதுக்கல்விக்கும் தொழில் நுட்பக் கல்விக்கும்தான் நாம் 83 கோடியே 12½ லட்ச ரூபாய் அளவுக்குச் செலவிடுகிறோம். இதைத்தவிர, மருத்துவக் கல்விக்கு 3 கோடி ரூபாய் செலவழிக் கிறோம். வேளாண்மைக் கல்விக்கு 60 லட்சம் ரூபாயும், கால்நடைக் கல்விக்கென்று 40 லட்சம் ரூபாயும், சமூகக் கல்வி, பள்ளிக் கட்ட டங்கள் இவற்றிற்காக 30 லட்சம் ரூபாயும், அரிசன நலப் பள்ளி களுக்கு உதவி மானியம் 6 கோடி ரூபாயும் இன்னும் பிற்பட்ட வகுப் பினர், கள்ளர் மறுவாழ்வு இவற்றிக்காக 4½ கோடி ரூபாயும்





தொழில் கல்வித் திட்டங்கள், கட்டடங்கள் இவற்றிக்காக 2 கோடியே 80 லட்சம் ரூபாயும் ஆக, ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்குப் பல்வேறு வகைக் கல்விகளுக்காக நாம் செலவிடு கின்றோம்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லியதைப்போன்று 18 பர்செண்ட், 20 பர்செண்ட், 21 பர்செண்ட் என்று இப்படி படிப்படி யாக உயர்ந்து இன்றைக்கு 23 பர்செண்ட் ஆகியிருக்கின்றது. இந்த அளவுக்குப் பெருகிச் செலவிடுகின்ற அளவுக்கு நாம் கல்வித் துறை யிலே வந்திருக்கிறோம். எவ்வளவு தொகை செலவழித்தாலும் இந்தத் துறை தாங்கும் என்றாலும் எவ்வளவு நிதி வசதிக்கு இதிலே இடம் கிடைக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் நாம் பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம். அந்த அளவுக்கு வேறு எந்தத் துறையையும்விட இந்தத் துறையிலே வளர்ச்சி குன்றவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பலரும் பல கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். கல்வியின் தரம் வளர வேண்டும், கல்வியின் நோக்கங்கள் வளர வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். உலகத்திலே எந்த நாடாக இருந்தாலும் கல்வித் துறையிலே நாட்டம் எவ்வளவு செலுத்தப்படுகிறதோ, அந்தத் துறையிலே எந்த அளவுக்கு வெற்றி கிடைக்கிறதோ, அதுதான் அந்த நாட்டின் எதிர்காலத்தில் சிறந்த வெற்றியாக அமையும். இன்வெஸ்ட்மெண்ட் இன் எஜுகேஷன் என்ற அளவிலே கல்வித் துறையிலே முதலீடு செய்கின்ற அளவுக்குத் தான் அந்த நாட்டினுடைய எதிர்காலத்திற்கு வெற்றி மாத்திரமல்ல, சிறந்த பெரும் பலன்கள் அளிக்க முடியும் என்ற அளவுக்கு அவர்கள் திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அமெரிக்காவிலேகூட எவ்வளவு வெற்றிபெறத்தக்க அளவுக்குப் பல்வேறு துறைகளிலும் அவர்கள் முன்னேறியிருந்தாலும்கூட இன்னும் போதாது என்று கூறியிருக் கிறார்கள். ஒரு பேரறிஞர்

"Evolution of the creative man will require changes in education; changes as radical as the technological shifts that are causing them; changes tha require boldness, imagination and hard work".

என்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். எனவே அப்படிப் பட்ட நோக்கங்களை நிறைவேற்றுகின்ற அளவுக்குக் கல்வித்துறை பயன்பட வேண்டுமென்றுதான் நாமும் முயன்று வருகின்றோம். சிலபல நாடுகளிலே விரைவான மாறுதல்கள் வேண்டுமென்று கருதுகிறார்கள், கல்வித்துறை செம்மையாக நடைபெறவேண்டு மென்று கருதுகிறார்கள், அதற்கான ஆதரவு அவர்களுக்குக் கிடைக்கின்றது, வசதியும் வாய்ப்பும் கிடைக்கின்றன, அப்படி யிருந்தும் இன்னும் போதாது என்றுதான் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

நான்கூட பர்கிளி பல்கலைக் கழகத்திற்குச் சென்றிருந்தபொழுது அங்கே வெளியிலே ஒரு பலகை வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பலகையில் அந்தப் பல்கலைக் கழகத்தில் எத்தனை பேராசிரியர்கள் பணியாற்றுகிறார்கள், எத்தனை லெக்சரர்கள் பணியாற்றுகிறார்கள்

என்ற விவரங்கள் குறிக்கப்பட்டிருந்தன. அதிலே நோபிள் பரிசு பெற்றவர்கள் 17 பேர்கள் பணியாற்றுகிறார்கள் என்று போட்டிருக்கிறார்கள். அதிலேகூட ஒரு பையன் என்ன எழுதியிருக்கிறான் என்றால்

"Do not follow these fellows. They are behind five years".

என்று எழுதியிருக்கிறான். இவர்களைப் பின்பற்றாதீர்கள், இவர்கள் அறிவு, தேர்ச்சி இவற்றில் ஐந்தாண்டுகளுக்குப் பின்னால் இருக்கிறார்கள் என்று எழுதி இருக்கிறான், 17 நோபிள் பரிசு பெற்ற பேராசிரியர்கள் இருக்கின்ற அப்படிப்பட்ட நிலையிலேயே அவர்கள் இன்னும் வேகம் போதாது என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு இன்னொரு மாணவன் வந்து அவன் எழுதியதை அடித்துவிட்டு 5 ஆண்டுகள் என்பதை 7 ஆண்டுகள் என்று போட்டுவிட்டான்.

"They are not behind five years but they are behind seven years"

என்று குறிப்பிடுகிற அளவுக்கு அவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு மாறுதலை அவர்கள் எதிர்நோக்கி நிற்கின்றார்கள். அந்த அளவுக்கு நாமும் மாறுதல்களைச் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கு அரசாங்கம் மட்டும் முயன்றால் போதாது. எல்லாத் தரப்பினரின் உதவியுடன்தான் செய்ய வேண்டும்.

அரசினுடைய முயற்சி, பேராசிரியப் பெருமக்கள், பெற்றோர்கள், கல்வி நிலையங்களை நடத்துகின்றவர்கள், மாணவர்கள் ஆகியவர்களாகிய அத்தனை பேர்களுடைய பெரு முயற்சியின் அடிப்படையிலேதான் அப்படிப்பட்ட பணிகளை நாம் செய்தாக வேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகளை ஏற்படுத்துவதற்கு நாம் பல்வேறு மாற்றங்களைப் பெற வேண்டும். இப்பொழுது மாற்றங்களைக் கல்லூரிப் படிப்பிலேயும், உயர்நிலைப்பள்ளிப் படிப்பிலேயும் ஓரளவுக்குச் செய்து வருகின்ற முயற்சியிலேதான் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததைப் போன்று நாம் இந்தத் துறையிலே மறுமலர்ச்சி ஏற்பட வழிவகைகள் கண்டு கொண்டிருக்கிறோம். கல்லூரிகளைப் பொறுத்தவரையில் நாம் பெருக்கி வருகின்றோம். இப்பொழுதுள்ள 161 கல்லூரிகளில் 118 தனியார் கல்லூரிகளும் 43 அரசினர் கல்லூரிகளும் இருக்கின்றன. இன்னும் 9 தனியார் கல்லூரிகள், 3 அரசினர் கல்லூரிகள் துவக்க இருக்கின்றோம். இந்த வகையில் மாணவர்களுடைய எண்ணிக்கையும் நாளுக்குநாள் பெருகிக்கொண்டேதான் இருக்கிறது.

கல்வியினுடைய தரத்தினைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்த மாநிலத்திலே மட்டுமல்ல, அகில இந்தியாவிலே உள்ள எல்லா மாநிலங்களைப் பொறுத்தவரையிலும்கூட இது ஒரு குறைபாடாகச் சொல்லப்படுகிறது. அது இந்தியாவைப் பொறுத்தே பொதுவாக இருந்து வருகின்ற ஒன்று. எல்லா இடங்களிலும் தரம் குறைந்து இருக்கிறது என்று கூறப்படுகிறது. சாதாரணமாக எல்லா மாநிலங்களிலும் கல்வி அறிவு, எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது. அதன்படி பார்த்தால், கேரள மாநிலம் முதலிடத்தைப் பெறுகின்றது. தனித்தனி ஊராகப் பார்த்தால் டெல்லியைத் தனியாகக் கணக்கிட்டுக் காட்டியிருக்கிறார்கள். எனவே



அது முதலிலே வருகிறது. நாமும் கூட சென்னை நகரத்தினை மட்டும் தனியாகப் பார்த்தால் டெல்லிக்குச் சரியாகவும் ஓரளவுக்கு அதிகமாகவும்கூட நாம் காட்ட முடியும். நாம் நம்முடைய மாநிலம் என்று சொல்லுகின்றபொழுது பல்வேறு பின்தங்கிய பகுதிகளை இணைத்துக்கொண்டு கணக்கிடுகின்றோம். அப்படிப் பின்தங்கிய பகுதிகளை இணைக்காமல் டெல்லி நகரத்தை மட்டும் தனியாகக் கணக்கிடுகின்ற காரணத்தினால்தான் டெல்லி உயர்ந்ததாகக் காணப்படுகின்றது. நாமும் சென்னையையோ அல்லது கோயம்புத்தூரையோ தனியாக வைத்துப் பார்த்தால், அந்த அளவு சதவீதத்திற்கு வந்து நிற்கக்கூடும். ஆனால் நாம் வளர்ச்சியடையாத பகுதிகளையும் சேர்த்துக் கணக்கிட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆனால் அப்படிக் கேரளாவின் தன்மையிருந்தாலும் இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் பள்ளி இறுதி வகுப்பிலே 36 சதவிகிதம் மாணவர்கள்தான் அங்கு வெற்றி பெற முடிந்திருக்கிறது. அந்த அளவிற்கு 48 சதவிகிதமாகயிருந்து ஆண்டுக்காண்டு குறைந்து இப்பொழுது 36 சதவிகிதம்தான் அனுப்பப்பட்ட மாணவர்களில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆகவே, கல்வியின் தரம் குறைந்துவிட்டது, அதை ஊக்குவிக்க எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று அங்கிருக்கும் கல்வியமைச்சரவர்கள் அண்மையில் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், பொதுவாக தரம் குறைந்திருக்கிறது என்ற எண்ணம் இருக்கிறது. அதைச் சீர்படுத்த, செம்மைப்படுத்த பல்வேறு வழிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

முதலாவதாக, பாடத் திட்டங்களை மாற்றியமைக்கும் அளவில் இன்னும் கொஞ்சம் கடுமையாக ஆக்கும் அடிப்படையிலே நாம் அதற்கான முயற்சிகளை எடுத்து, அதற்கான வல்லுநர்களைப்போட்டு, தனித்தனிக் குழுக்கள் போடப்பட்டு உயர்நிலைப்பள்ளிகளின் பாடத்திட்டத்தை மாற்றிக்கொண்டு வருகிறார்கள். அதைப்போலவே கல்லூரிப் படிப்பிற்கான நிலைகளையும் ஓரளவு மாற்றிக்கொண்டு வருகிறார்கள். காலத்திற்கேற்ற வகையில் கல்வியின் நோக்கம் இருக்க வேண்டுமென்ற தன்மையில் சொல்லப்பட்டு வருகிறது. சொல்லிக் கொடுக்கப்படுவது அவர்களுக்குப் பயன்படுத்தப்படக் சொல்லிக் கொடுக்கப்படுவது அவர்களுக்குப் படும் வகையில் இருக்க வேண்டும். சொல்லிக்கொடுக்கப்படும் கருத்துக்கள் நினைவிலே மட்டுமல்லாமல் நடைமுறையிலும் பயன்படுத்தப்படக் கூடிய முறையில் இருக்க வேண்டுமென்ற அந்தக் கருத்துக்களின்படி பாடத்திட்டத்தில் இடம் பெற வேண்டுமென்பதைப்பற்றி குழுக்கள் ஆராய்கின்றன.

கல்லூரிக் கல்வியிலே புகுமுக வகுப்பிற்கு இலவசக் கல்வியைக் கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கல்லூரி முழுவதும் பட்டப்படிப்பை இலவசமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அதற்குப் பெரும் செலவாகும். அதுமட்டுமின்றி, அடிப்படை நோக்கம் நிறைவேறத்தக்க அளவில் நிலைமைகள் இருக்கின்றன. புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி தருவதால் 1 கோடியே 20 லட்சம் ரூபாயை ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு அரசு முன்வந்து இலவசக் கல்வியைப் புகுத்தி

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 10

யிருக்கிறது. நிதி நிலைமை நன்றாக ஏற்பட்ட பிறகுதான் அவர்கள் கூறிய இப்படிப்பட்ட முறைகள் கவனிக்கப்படவேண்டும். பரவலான கல்வியாக இருக்கிறதேயொழிய உறுதியாக, நிலையாக ஆக்கும் அளவிற்குப் பொருள் செலவழிக்க முடியவில்லை. இரண்டாயிரத்து அறு நூற்றுச் சில்லறை உயர்நிலைப்பள்ளிகளில் கிட்டத்தட்ட 1,000 உயர் நிலைப்பள்ளிகள் நல்ல கட்டடம் இல்லாமல், கூரைக் கட்டடத்தில் மட்டும் தமிழகம் முழுவதும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் கல் கட்டடங்களாக மாற்றி வசதியடைவதாக ஆக்க, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கூறியதைப்போல நூல் நிலையங்கள் அமைக்க ஆய்வுக்கூடங்கள் நிறுவ அதிக நிதி வசதி தேவைப்படுகிறது.

இப்பொழுது பள்ளிகளைப் பரப்பும் அத்தகைய பணியிலே ஈடுபட ஓரளவு கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். 300 மக்கள் இருக்கும் இடத்தில் ஒரு துவக்கப்பள்ளி இருக்க வேண்டும் என்றும், 3 மைல்களுக்குள் ஒரு உயர் துவக்கப்பள்ளி இருக்க வேண்டுமென்றும், 5 மைல்களுக்குள் போதுமான மாணவர்கள், மற்றவர்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருந்தால், பக்கத்திலே இருக்கக்கூடிய பள்ளிகளுக்குத் தீங்கிழைக்காத வகையில் ஏற்படும் சூழ்நிலையில் உயர்நிலைப்பள்ளி அமைக்கலாம் என்றும், 20, 25 உயர்நிலைப் பள்ளிகள் அமையும் இடங்களில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்றும் அந்த அடிப்படையில் பணியாற்றுகிறோம்.

புகுமுக வகுப்பு வரையில் நாம் இலவசக் கல்வி வைத்திருக்கிறோம். அதற்கு மேலே இருப்பவர்கள் அப்படிப்பட்ட வசதிகளைப் பெருமளவிலே இருக்கிறார்களா என்றால், பல்வேறு வகையில் தேவையானவர்கள், திறமையானவர்கள், ஏழை எளிய சாதாரண மாணவர்கள் உபகாரச் சம்பளம் பெற்றுப் படிப்பதற்கு வசதி வாய்ப்புகள் பட்டப்படிப்புத் துறையிலே ஏராளமாக இருக்கின்றன. இந்திய அரசு உதவித் தொகை என்றும், திறமை உதவித் தொகை என்றும், கடன் உதவித் தொகை என்றும், தாழ்த்தப்பட்டோர் உதவித் தொகை என்றும், பிற்பட்ட வகுப்பினர் உதவித் தொகை என்றும் இருக்கிறது, தமிழைப் பயிற்று மொழியாக எடுத்துப் படிப்பவர்களுக்கு உதவி தரும் முயற்சியை இந்த ஆண்டிலேயிருந்து நாம் மேற்கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே புகுமுக வகுப்பிற்கு ஏற்கனவே இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

புகுமுக வகுப்பிலே தமிழைப் பயிற்சிமொழியாகக் கொண்டிருப்பவர்களுக்கு அவர்கள் புத்தகம் வாங்குவதற்காக 50 ரூபாய், அவர்களுக்கு ஊக்கம் தரத்தக்க வகையில் தருவதற்கான முயற்சி இந்த ஆண்டிலேயிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ் பயிற்று மொழி வகுப்புகளைத் தேர்ந்தெடுக்கும் மாணவருக்குப் பட்டப்படிப்பு வகுப்பில் ஆண்டுக்கு 180 ரூபாய் தருகின்ற முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருக்கின்ற வசதி வாய்ப்புகளைக்கொண்டு இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். அப்படிச் செய்யும்பொழுது, இந்த உதவித் தொகை கொடுப்பதைக்கூடக் கேலி செய்யும் அளவிற்குப் பலர் இருக்கிறார்கள். தமிழில் படிப்பவர்களுக்கு உதவித் தொகை தர வேண்டுமா என்றெல்லாம் கேட்கிறார்கள். ஓரளவிற்கு ஆங்கிலத்தில் படிக்கும் மாணவர்



1971 ஜூலை 10] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கள்தான் அதிகமாக வருகிறார்கள், ஆகவே, தமிழில் படிக்கும் மாணவர்கள் அதிகம் வராத சூழ்நிலை இருக்கிறது என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

திரு. ஜேம்ஸ் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள், ஒரு பத்திரிகையிலே குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார்கள், ஒரு சதவிகிதம்கூட தமிழ் வகுப்புகளுக்கு விண்ணப்பிக்காமல் இருக்கிறார்கள், தமிழ் படிப்பதற்கு முன் வராமல் இருக்கிறார்கள் என்ற குறிப்பைக் காட்டினார்கள். சாதாரணமாக ஆங்கிலம் படிக்கின்ற முறையையும் கெடுக்காமல் இந்த அரசு எந்தெந்த அளவிற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ, அந்த அளவுக்கு மேற்கொள்ளும் பாங்கில் பணியாற்றிக் கொண்டு வருகிறது.

மும்மொழித் திட்டம் என்பதை இருமொழிக் கொள்கையாக்கி, தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற கொள்கை உருவாக்கப்பட்டது. அதற்காக அவசரப்பட்டு எந்தவிதமான முடிவையும் எடுக்கவில்லை. எந்த இடத்தையும் குறைக்கவில்லை.

அதுமட்டுமின்றி, ஆங்கிலத்தில் படிப்பது, ஆங்கிலத்தைப் படிப்பது என்ற வகையில் ஆங்கில மொழி என்றென்றும் இருக்க வேண்டுமென்ற அடிப்படையை வைத்துத்தான் ஊக்கம் தரும் முறை இருக்கிறது. ஆனால் தமிழில் படிக்க நாம் முயற்சிகளை எடுக்க வேண்டும். வேறு எந்தவகையிலேயும் கேடு பயக்காத அளவிற்கு இந்த நூற்றாண்டிலேயே கொண்டுவருவதற்கு இந்த ஆண்டிலேயிருந்து துவங்கினால்தான் முடியும். முன்பு திரு. சுப்பிரமணியம் அவர்கள் கல்வியமைச்சராக இருந்தபொழுது தனியார் கல்லூரிகளில் தமிழில் பாடமொழி இல்லையென்றால் கிராண்ட் தரக்கூடாது என்று அரசாங்கத்தின் ஆணையாக இருந்தது. அது நடைமுறைப் படுத்த முடியாத அளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் போக வேண்டுமென்ற எண்ணம்கூடப் பலருக்கு உண்டு. ஆனால் சங்கடங்கள் ஏற்படும் என்று கருதியதால் நிறுத்தி வைக்கப்பட்டது.

அண்ணல் காந்தியார் போன்றவர்கள் தாகூர் போன்றவர்கள், மற்றவர்கள் கருத்துக்களின்படி, 1939-ஆம் ஆண்டுக்குப்பிறகு பலரும் எடுத்துச் சொன்னக் கருத்துக்களின் அடிப்படையில், பல்கலைக்கழகத் துணை வேந்தர்களின் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், ஆக இத்தகைய அடிப்படைகளை வைத்தே, 1931-32-லோ அல்லது 1932-33-லோ என்றே கருதுகிறேன், அப்பொழுது பள்ளி இறுதி வகுப்பு வரையிலே தமிழிலே சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டு, அது வெற்றி பெறவில்லை. எனவே கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகுகூட எடுத்த முடிவு அல்ல இது. 1934-35 வரையிலும் பள்ளி இறுதி வகுப்புவரையிலும் தமிழிலே பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று முயற்சி இருந்தது. பிறகு இண்டர்மீடியட் வரை கொண்டு செல்லும் நிலை இருந்தது. ஆனால் பல்வேறு எதிர்ப்புகளின் காரணமாக அது நடைபெறாமல் இருந்தது. 1957-58-லே முயற்சி எடுக்கப்பட்டு நிறுத்தப்பட்டு, 1962-63-லே மறுபடியும் முயற்சி எடுக்கப்பட்டு நிறுத்தப்பட்டு, 1968-லே அதற்கு உருவம் கொடுத்து எடுக்க

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 சூலை 10

வேண்டிய கட்டத்திற்கு வந்தோம். முன்பிருந்த ஆங்கிலப் பிரிவுகளைக் குறைக்கின்ற முயற்சியை எடுக்கவில்லை. அவைகளையும் வைத்துக்கொண்டு, தமிழிலே பயிற்சிமொழியாக எடுத்துப்படிக்கவும் வகை செய்யப்படுகிறது.

சென்ற ஆண்டு 70,000 இடங்களில் ஆங்கிலத்தில் படிக்க 50,000 இடங்கள் ஒதுக்கப்பட்டுதான் இருந்தது. 20,000 இடங்கள்தான், அதுவும் பெரும்பாலும் அரசாங்கக் கல்லூரிகளிலும், சில தனியார் கல்லூரிகளிலும் ஆக 20,000 இடங்கள் ஒதுக்கப்பட்டன. அரசினர் கல்லூரிகளிலும் ஆக 20,000 இடங்கள்தமிழில் படிக்க ஒதுக்கப் பட்டன. அரசினர் கல்லூரியில் 13,000 இடங்களும், தனியார் கல்லூரிகளில் 7,000 இடங்களும் புகுமுக வகுப்பில் தமிழில் படிக்க வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. பி.ஏ.-வைப்பொறுத்த வரையில் 18,600 மாணவர்கள் மொத்தம் படித்தவர்கள். அதில் தமிழில் படித்தவர்கள் 4,000 பேர்கள். அரசாங்கக் கல்லூரிகளிலே 2,700 பேர்களும் தனியார் கல்லூரிகளில் 1,300 பேர்களும் சென்ற ஆண்டு படித்தவர்கள்.

இந்த ஆண்டுகூட அதிகமான பேர் தமிழில் வரவில்லை என்ற அடிப்படையில் பத்திரிகையில் வந்திருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். தமிழ்நாட்டில் தமிழிலே எடுத்துப் படிக்க ஆர்வம் இல்லை என்று சொன்னால் அந்த ஆர்வத்தை ஊட்டி எதிர்காலத்திலே கொண்டுவர வேண்டிய பொறுப்பு நம்மிடத்தில் இருக்கிறது. ஏனென்றால் தமிழ் வளர வேண்டும், தமிழ் வளம் கொழிக்க வேண்டும், தமிழ் இலக்கியங்களெல்லாம் பாட நூல்களின்மூலமாக வளர வேண்டுமென்ற நோக்கம் இல்லை, அவைகள் கட்டுரைகள், கவிதைகள், நாடகம் போன்ற வழிகளில் கலைத்துறை மூலமாக வளரும். ஆகவே, இயற்கைப் பாடம், உயிர் நூல் பாடம், கணக்கியல் இவைகள் மூலமாகத் தமிழ் வளர வேண்டுமென்பதற்காகப் புகுத்த விரும்பவில்லை. ஆனால் தமிழிலே படித்தால் அறிவு வளர முடியும், விரைவாகக் கற்றுக்கொண்டுச் சிந்திக்க முடியும், சிந்தித்துச் சிந்தித்துச் செயலாற்ற முடியும். கல்வியின் தரம் நூற்றுக்கு நூறு கற்றுக்கொள்ளும் அளவில் இல்லை என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சுட்டிக்காட்டினார்கள். கற்றுக் கொள்ளும் கல்வி நூற்றுக்கு நூறு நிறைவேறாத அளவில் இருக்கிறது. மற்ற நாடுகளில் கல்வியின் அடிப்படையில் சிந்திக்கக் கற்றுக் கொள்கிறார்கள். சிந்திக்க வைத்து, சிந்திக்க வைத்துச் செயலாற்றுகின்ற முயற்சியிருப்பதால் ஜப்பான், அமெரிக்கா, ஜெர்மன், இங்கிலாந்து போன்ற நாடுகளில் கற்றதைச் சிந்தித்துச் சிந்தித்து செயலாற்றுவதில் முனைகிறார்கள். இங்கே என்னவென்றால், மெஷர்மெண்ட்தான் எடுக்கிறோம், மெமரி பவரின் மெஷர்மெண்ட்தான் நடைபெறுகிறது.

அந்த மாணவர்கள் கற்றுக்கொண்டதை எவ்வளவு தூரம் நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைதான் காணப் படுகிறதேதவிர, அவர்கள் கற்றதைப் புரிந்து கொண்டார்களா, தெரிந்து கொண்டார்களா என்றால் இல்லை. பல வகுப்புகளில் தங்களுக்குப் பாடம் புரியாத நிலையில் சந்தேகத்தைக் கேட்கவேண்டுமென்று நினைத்தாலும் வகுப்பில் எழுந்து கேட்க முடியவில்லை.



1971 சூலை 10] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

சந்தேகத்தை ஆங்கிலத்தில் கேட்பதற்கே ஓரளவு ஆங்கில அறிவு தேவைப்படுகின்ற நிலையில், அது இல்லாத காரணத்தால், ஐயப் பாட்டைக்கூடக் கேட்க முடியாமல் உட்கார்ந்து விடுகிறார்கள்.

அறிவு வளரவேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து ஆங்காங்கு தாய்மொழியிலேயே கல்வி கற்றுக் கொடுக்கப் படுகிறது. அண்மையில் நான் மலேஷியா நாட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கு மருத்துவக்கல்லூரியில் மலேஷிய மொழியில் சொல்லிக் கொடுக்கும் முயற்சி வந்துவிட்டது.

தாய்மொழியிலே கற்றுக்கொடுக்கும் திட்டம் மெல்ல மெல்ல வரவேண்டும். உடனே வரவேண்டுமென்று கூறவில்லை. மெல்ல மெல்ல வருவதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறோம். இன்று அந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போடும் அளவிற்கு இங்கே இருக்கிறார்கள். ‘ஒருவர்கூடத் தமிழில் பாடம் படிக்க வரவில்லை’ என்று ஒரு பத்திரிகை எழுதுகிறது. அப்படி எழுதி மகிழ்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த மாநிலத்தில் இருக்கிறார்களே என்று வெட்கப்பட வேண்டும், துக்கப்பட வேண்டும். எந்த ஒரு நாட்டிலும் இந்த நிலை கிடையாது. ஜப்பான் நாட்டில் ஜப்பான் மொழியில் படிக்க ஒருவரும் வரவில்லை என்று சொல்லி யாராவது மகிழ்வார்களா? அதற்காக அவர்கள் வெட்கப்படுவார்கள் அங்கே. இங்கே அதற்காக மகிழ்கின்ற நிலை இருக்கும் காரணத்தால், நான் அந்தப் புள்ளி விவரங்களைக் காட்ட விரும்புகிறேன்.

புகுமுக வகுப்பில் தமிழ்ப் பாடமொழித் திட்டத்தின்படி இருக்கும் இடங்கள் 12,070. இது அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்தவரை உள்ள எண்ணிக்கையாகும். தனியார் துறைக் கல்லூரிகளின் கணக்கு வந்து சேரவில்லை. ஆனால் அதற்காக வந்திருக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை மொத்தமாகச் சேர்ந்து 13,471 ஆகும். சில இடங்களில் அதிகமாக இருக்கலாம், சில இடங்களில் குறைவாக இருக்கலாம், ஆனால் மொத்தமாக அந்த அளவுக்கு வந்திருக்கிறது. மொத்தத்தில் புகுமுக வகுப்பில் தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தை விரும்பி ஏற்றுக் கொள்ளுகின்றவர்கள் 13,471 பேர் ஆகும். தமிழ் பயிற்சி மொழியில் படிக்க பி.ஏ. வகுப்பில் விண்ணப்பித்துக் கொண்டவர்கள் 2,748 பேர்; பி.எஸ்ஸி. வகுப்பிற்கு விண்ணப்பித்துக் கொண்டவர்கள் 2,516 பேர்; ஆக மொத்தம் 5,264 பேர். ஆனால் அந்த இரண்டுக்கும் சேர்த்து ஒதுக்கப்பட்ட இடங்கள் அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்தவரை 4,931 இடங்கள்தான். இது தவிர ஆங்கிலப் பயிற்சி மொழியிலே புகுமுக வகுப்பில் இடம் கேட்டிருப்பவர்களில் 1,158 பேர், ஆங்கிலத்தில் இடம் கிடைக்கவில்லையானால் தமிழ்ப் பிரிவில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே போன்று பி.ஏ.யில் 762 பேர் அவ்வாறு கேட்டிருக்கிறார்கள்; பி.எஸ்ஸி. பிரிவில் 1,375 பேர் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட இடங்களைவிட அதிகமான பேர் சேர விரும்புகிறார்கள். அதே நேரத்தில் ஆங்கிலப் பாட மொழித் திட்டத்தில் பயிலவும் ஏராளமான பேர் இருக்கிறார்கள், இடங்களும் அதிக அளவு இருக்கின்றன. மேலும் இடங்கள் அதிகமாகியிருக்கின்றன. அந்த எண்ணிக்கையையும் குறைக்கவில்லை.

இதிலே சங்கடங்கள் இருக்க வேண்டாமென்ற அடிப்படையிலே தான் இந்த அரசு ஏ.எல். முதலியார் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அது என்ன சொன்னாலும் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்ற அளவிலே அமைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொண்டு அறிக்கை விட்டார்கள். அந்தக் குழுவினர் அறிக்கையிலே என்ன சொன்னார்கள்? இருக்கின்ற 41 அரசாங்கக் கல்லூரிகளிலே 28 கல்லூரிகளிலே தான் இரண்டு மொழியிலும் கற்றுக் கொள்ளும் வகை இருக்கிறது; 13 கல்லூரிகளிலே தமிழிலே பயில மட்டும்தான் வழி இருக்கிறது. எங்கெங்கு தமிழ் பயிற்சித் திட்டம் மட்டுமே இருக்கின்றதோ, அங்கெல்லாம்கூட ஆங்கிலப் பிரிவும் இருக்க வேண்டும்; புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்ஸி. ஆகிய எல்லா வகுப்புகளிலும் ஆங்கிலப் பிரிவும் கட்டாயமாக எல்லா அரசாங்கக் கல்லூரிகளிலும் இருக்க வேண்டுமென்று கூறினார்கள். ஆங்கிலத்திலே எடுத்துப் படிக்க விரும்புகிறவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்று சொன்னார்கள். அதே நேரத்தில் தனியார் துறைக் கல்லூரிகளில் எங்கெங்கு தமிழ்ப் பிரிவு இல்லையோ அங்கெல்லாம் தமிழ்ப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று குழு கேட்டுக் கொள்கிறது என்று கூறினார்கள். அவர்கள் தனியார் துறையைக் கேட்டுக் கொள்ளும் அளவுக்கும், அரசாங்கத்தை வற்புறுத்தும் அளவுக்கும் முடிவைக் கூறினார்கள். அரசாங்கம் குழுவின் வற்புறுத்தலை ஏற்று எங்கெங்கு தமிழ் மட்டுமே இருந்ததோ, அங்கெல்லாம் ஆங்கிலப் பிரிவும் வைக்கப்படும் முயற்சிகளை மேற்கொண்டு அந்த வகையிலே இன்று ஆங்கிலப் பிரிவுக்கான இடங்கள் மாநில அளவில் கூடி வருகின்றனவே தவிர, குறையவில்லை. புதிதாக இந்த ஆண்டு துவக்கப்பட இருக்கிற தனியார் கல்லூரிகள் 9, அரசாங்கக் கல்லூரிகள் 3, அரசாங்கக் கல்லூரிகள் மூன்றிலும் ஒரு பிரிவு ஆங்கிலம், ஒரு பிரிவு தமிழ் என்ற அளவிலே துவங்கப்படுகிறது. ஆனால் இருக்கின்ற 118 தனியார் கல்லூரிகளில் பெரும்பான்மையான கல்லூரிகள் ஆங்கிலத்திலேதான், பிரிவுகளை ஏற்படுத்தும் நிலை இருக்கிறது. ஆகவே, ஆங்கிலத்திற்கும் இடம் ஒன்றும் குறையவில்லை.

ஆந்திரத்தில்கூட தெலுங்கு மொழியில் கல்லூரிப் பாடங்களை நடத்த வேண்டும்; அதன்மூலம் அறிவு பெறச் செய்ய வேண்டுமென்ற முறையில் ஒருசில கல்லூரிகளில் ஆங்கிலத்திலும், மற்றக் கல்லூரிகளில் தெலுங்கிலும் கற்றுக் கொடுக்க முடிவு செய்திருக்கிறார்கள். கேரளத்தில்கூட இந்த ஆண்டு புத்தகங்களை மலையாள மொழியில் தயாரித்து விட்டு அடுத்த ஆண்டு பல்கலைக்கழகப் பாடமொழியாக மலையாளத்தைக் கொண்டுவர இருக்கிறார்கள். இந்த விதத்திலே நம்முடைய மாநிலத்தில் பாதகம் ஏற்படாத வகையில் தமிழுக்கும் இடம் கொடுத்து ஆங்கிலத்திற்கும் இடம் கொடுத்து சீரான முறையைக் கையாண்டு வருகிறோம்.

தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்திலே சேர்ந்து பயிலுகின்றவர்களுக்கு ஊக்கம் தரவேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு முடிவை எடுத்தார்கள். அதன்படி தமிழில் புகுமுக வகுப்பில் படிக்கின்றவர்களுக்குப் புத்தகத்திற்காக 50 ரூபாயும், பட்டப்படிப்பு படிக்கின்றவர்



களுக்கு 180 ரூபாயும் கொடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி ஒரு பெரியவர் "லஞ்சம் கொடுத்து மாணவர்களை இழுக்கிறார்களா?" என்று பேசியிருக்கிறார். சலுகை கொடுப்பதை "லஞ்சம்" என்ற அளவுக்கு அவ்வளவு பெரியவர் பேசியிருக்கிறாரே என்ற வருத்தமும் வேதனையுந்தான் நமக்கெல்லாம் ஏற்படுகிறது. இது லஞ்சம் என்றால் ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு தருகிறோம். அந்தப் பெரியவர் வார்த்தைப்படி அதுவும் லஞ்சம்தான்; சீருடை வழங்குகிறோம். அந்தப் பெரியவர் வார்த்தைப்படி அதுவும் லஞ்சம்தான். மூன்றாவது வகுப்புவரை படிக்கின்ற, மதிய உணவு பெறுகின்ற மாணவர்களுக்கு, 18 லட்சம் பேருக்குப் புத்தகங்கள், கரும்பலகைகள் வாங்கிக் கொடுக்கிறோம். அதுவும் அந்தப் பெரியவருடைய வார்த்தையில் லஞ்சம்தான்.

ஆங்கிலத்தின் நிலைமட்டும் இன்று எப்படி இருக்கிறது? அதற்கும் அந்தப் பெரியவர் பாஷையில் சொல்ல வேண்டுமானால் 'லஞ்சம்' கொடுக்கிறோம். இத்தனை வருஷங்கள் ஆங்கிலத்திலேயே கற்றும்கூட, இப்போது தமிழ்ப்பாடத் திட்டத்தை ஏற்படுத்துகின்ற அந்த நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற நிலையில்கூட, கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக ஆங்கிலத்தில் பயிற்சி பெற்ற, புலமை பெற்ற ஆசிரியர்கள் ஆங்கிலத்தைப் பயிற்றுவிக்கக் கிடைக்கவில்லை. பொருளாதாரம் படித்தவர்கள், கணக்குப் படித்தவர்கள், மற்றப் பாடங்களைப் படித்தவர்களைக் கொண்டுதான் ஆங்கிலம் என்ற தனிப் பாடமும் போதிக்கப்படுகிறது. இப்போது ஆங்கிலத்தில் பொதுவாகத் தகுதி குறைவதற்கு அதுவும் ஒரு காரணம். ஆங்கிலத்தில் பயிற்சி பெற்ற, பயிற்றுவிக்கின்ற ஆற்றல் பெற்றவர்களைத் தேடித் தேடிப் பிடிக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே, ஆங்கிலத்தில் எம்.ஏ. வகுப்பில் படிக்கின்றவர்களுக்கு 100 ரூபாய் உதவித் தொகை கொடுப்பது என்று திட்டமிட்டிருக்கிறோம். பெரியவர் மொழியில் தமிழுக்கு மட்டும் 'லஞ்சம்' கொடுக்கவில்லை; ஆங்கிலத்திற்கும் சேர்த்துத்தான் 'லஞ்சம்' கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே, கூடுமான்வரையில் இரு மொழிக் கொள்கையை நாட்டுக்கும் பாதகம் ஏற்படாமல், மாணவர்களுக்கும் பாதகம் ஏற்படாமல், எதிர்காலத்திலேயும் பாதகம் ஏற்படாமல் இருக்கும் அளவுக்கு, கார்டெட் நேச்சர் என்று சொல்லும் அளவுக்குப் பாதுகாக்கப்பட்ட முறையில் சென்று கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

தனியார் கல்லூரிகள் முழுவதையும் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை திரு. தங்கமணி அவர்களும் மற்றவர்களும் எடுத்துத் தெரிவித்தார்கள். பல்வேறு பிரச்சினைகள், சங்கடங்கள் அதில் வருகின்றன. அரசியல் சட்டப்படிகூட அந்தப் பள்ளிகளை எடுக்க முடியாது. சிறுபான்மையினர் அவர்களது பள்ளிகளை அவர்கள் விருப்பப்படி நடத்தலாம் என்றளவிற்கு அதில் கொடுத்திருக்கிறார்கள். மேலும் அந்தப் பள்ளிகள் முழுவதையும் எடுத்துக் கொள்வதற்கு நம் பொருளாதாரம் இடம் தராது. சில இடங்களில் வியாபார நோக்கோடு செய்தாலும் 118 கல்லூரிகளும் வியாபார நோக்கோடு நடைபெறுகின்றன என்று சொல்வதற்கில்லை. சில கல்லூரிகள் அறநிலையங்களின் அடிப்படையில் ஏராளமான பணத்தை முடக்கி நல்ல கட்டடங்கள் எழுப்பிச் சிறந்த கல்வியை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 10

அளித்து வருகிறார்கள். சிலவிடங்களில் வியாபார நோக்கோடு நடைபெறுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. தங்கமணி அவர்களும், மற்றவர்களும் சுட்டிக் காட்டினார்கள், அது தடுக்கப்பட வேண்டுமென்று. அது தடுக்கப் படவேண்டியதுதான். அதற்கான முயற்சிகளைக் கூடுமான வரையில் முயன்று பார்க்கிறோம்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லியதுமாதிரி நன்கொடை என்ற பெயரால் சீட்டு வழங்கிவிட்டுப் பணத்தை வாங்கிக் கொள் கிறார்கள். அது கோர்ட்டுக்குப் போனாலும் நடக்காது. விரும்பிக் கொடுக்கப்பட்ட நன்கொடை என்பார்கள். அவர்கள் விரும்பிக் கொடுத்ததை நாங்கள் வாங்கிக் கொண்டோம் என்று சொல்வார் கள். கேட்டு வாங்கினார்கள் என்று எழுதித் தாருங்கள் என்றால் அப்படி யாரும் எழுதித் தர மாட்டேன் என்கிறார்கள். அதனால் அவர்களின் பிள்ளைகள், அல்லது பெண்களுக்கு ஏதாவது பாதகம் ஏற்படுமோ என்று அஞ்சுகிறார்கள். செய்தி மட்டும்தான் சொல் கிறார்கள். இருந்தாலும் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு வழிவகை இருக்கிறதா என்றால் இன்றையச் சட்டத்தில் அதற்கான வழிவகைகள் இல்லை என்ற நிலைதான். ஒன்று கொடுக்கிற மானியத்தை நிறுத்தி விடலாம் அல்லது அனுமதியை நிறுத்தி விடலாம் பள்ளிகளானாலும் சரி அல்லது கல்லூரிகளானாலும்சரி. அதனால் என்ன ஏற்படுகிறது என்றால், அங்குள்ள ஆசிரியர்கள், அங்கு படிக்கிற நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் பாதிக்கப்படுகிற அளவிற்கு நிலைமைகள் இருந்து வருகிறது. கல்விமுறையை சீர்திருத்தி அமைக்கிற அளவிற்கு டாக்டர் பால் அவர்கள் தலைமையில் அமைந்த குழு ஒரு அறிக்கை தந்திருக்கிறது. அதில் கல்வி வல்லுநர்கள், ஆசிரியர்கள், மற்றவர்கள் அங்கம் பெற்று சீரிய யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவர் களுடைய யோசனைகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதை விரைவில் பரிசீலித்ததற்குப் பிறகு அதன் அடிப்படையில் இந்த மன்றத்தில் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். அதற்குப் பிறகுதான் நடைமுறைப்படுத்த முடியும். அந்தப் பள்ளிகள் மானேஜ்மென்டை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிற அளவிற்கு சட்டம் இயற்றி அரசாங்கம் அதிகாரத்தைப் பெற வேண்டும். முறைப்படி நடக்காமல் தவறு இழைக்கும் பள்ளிகளை மூடாமல் அதன் முழு நிர்வாகத்தை அரசாங்கமே ஏற்று நடத்துவது என்ற அதிகாரத்தை அரசாங்கம் பெற்றால்தான் முடியும்.

நூற்றுப்பதினேழு கல்லூரிகளில் புகுமுக வகுப்பு நல்ல முறையில் நடந்து வருகிறது. ஆனால் எஸ்.ஐ.இ.டி. கல்லூரி மட்டும் எந்த முறைக்கும் கட்டுப்படாத அளவிற்கு வரம்புகளுக்கும் விதிமுறை களுக்கும் மீறி நடந்துவருகிறார்கள். மாணவிகளின் வாழ்வை கெடுக்கக் கூடாது என்பதற்காக அரசாங்கம் எவ்வளவு சலுகை கொடுக்க முடியுமோ, அவ்வளவையும் காட்டியும் வீண் பிடிவாதம் பிடிப்பதால் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எஸ்.ஐ.இ.டி. கல்லூரிக்கு எவ்வளவு கிரான்ட் வழங்கப்படுகிறது? அந்தக் கிரான்டையாவது நிறுத்தம் செய்து அவர்களை ஒழுங்காக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா?



1971 ஜூலை 10]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: எவ்வளவு கிரான்ட் என்ற புள்ளிவிவரம் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் மாணவி யருக்குத் தரப்படுகிற கிரான்டை நாங்கள் நிறுத்தி வைத்திருக்கிறோம். ரூ. 80 வாங்கியவுடன் அதைத் திருப்பித் தந்தாலொழிய நாங்கள் தர மாட்டோம் என்று கூறியிருக்கிறோம். அந்தக் கணக்குகளை எங்களிடம் தந்துவிடுங்கள், முகவரியைப் பார்த்து நாங்கள் பணத்தை அனுப்பி விடுகிறோம் என்று சொன்னால், அந்தப் பட்டியலை அவர்கள் அனுப்பவில்லை. சிலரது அட்ரஸ் தெரியவில்லை என்று நொண்டிச் சமாதானம் சொல்கிறார்கள். முகவரி இல்லாமல் எந்த மாணவி இருக்கமுடியும்? கணக்கைத் தாருங்கள் அல்லது பட்டியலை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டால் தரவேண்டிய மானியத்தைத் தருவதற்கு அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் என்று சொன்னால், அதை அவர்கள் கேட்கவில்லை. கடந்த இரண் டாண்டுக்குரிய ஈட்டு மானியத் தொகை தரப்படவில்லை.

இந்த ஆண்டும் ரூ. 80 என்று ப்ராஸ்பெக்டஸ்ஸில் போட்டிருந் தார்கள். நாங்கள் சொன்னோம், யாரும் அப்படிச் சேரவேண்டிய அவசியமில்லையென்று. அரசாங்கம் தரப்போவதில்லை என்று சொன்னவுடன் அப்போதும் சொன்னோம், சென்ற ஆண்டுப் பிரச்சினைகளைத் தனியாகத் தீர்த்துக்கொள்வோம், இந்த ஆண்டு பணம் வாங்காமல் சேர்த்துக் கொண்டால்தான் நாங்கள் மானியம் தருவோம் இல்லாவிட்டால் தர மாட்டோம் என்று. டீச்சிங் கிரான்டை நிறுத்திவிடும் நிலை வந்துவிடும் என்றவுடன் பணம் வாங்காமல் சேர்த்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. இப்போது பணம் கட்டவேண்டிய அவசியம் இல்லை. அப்படிக் கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தால் அதை எங்கள் கவனத்திற்கு கொண்டு வந்தால் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அப்படிப் பணம் வாங்காவிட்டால் இந்த ஆண்டு மட்டும் மானியம் தருவோம், பணம் வாங்கினால் தரமாட்டோம் என்று நிறுத்தி வைத்திருக்கிறோம். ரூ. 1,81,000 பி.யு.ஸி. காம்பன்சேஷன் கிரான்டாகத் தரப்படுகிறது. அதை நிறுத்தி வைத்திருக்கிறோம். இந்த ஆண்டு யாரிடமும் பணம் வாங்கவில்லை என்றால் கொடுக்க வேண்டும். தனியார்துறை கல்லூரி ஆசிரியர்களுக்குச் சலுகைகள் வழங்குவது பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். புதிய சம்பள விகிதங்கள், வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகிய சலுகைகள் அவர் களுக்கும் தரப்படுகிறது. ஓய்வு ஊதியத்தைப் பொறுத்தவரை அது அரசின் பரிசீலனையில் உள்ளது. அதில் ஓரளவு பங்கை தனியார் நிர் வாகங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதால் அதையும் மனதில் கொண்டு முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

யூ.ஜி.ஸி. கிரான்ட் பொறுத்தவரையில் பல கல்லூரிகளில் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. எஸ்.ஐ.இ.டி.யில் ஏன் நிறைவேற்றப்பட வில்லை என்று ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். அங்குள்ள ஆசிரி யர்கள் யாரும் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. அப்படிக் கொண்டு வருவார்களேயானால், அப்படித் தரும்படி அரசாங்கம் வற்புறுத்தும். வேறு பல கல்லூரிகளில் அப்படி வற் புறுத்தியிருக்கிறோம்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் யூனிவர்சிடி சென்டர் பாளையங்கோட்டை —நாகர்கோவிலில் வைக்கவேண்டுமென்று சொன்னார்கள். பாளையங் கோட்டையில் ஒரு சென்டர் வைக்க மதுரைப் பல்கலைக்கழகம் சார்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 10

பாக முயற்சி எடுக்கப்படுகிறது. அதற்கு தொடராச் செலவு ரூ. 3,53,000 ஆகிறது. யூ.ஜி.ஸி.யிடமிருந்து ரூ. 9,82,000 எதிர் பார்க்கப்படுகிறது.

அடுத்தபடியாக, மாலை நேரக் கல்லூரிகள் பத்தாக இருந்ததை இருபது கல்லூரிகளாக்கி கல்வி பயில வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. ட்யூட்டேர்ஸ், டெமான்ஸ்ட்ரேட்டர்ஸ் ஆகியோர் எம்.ஏ., எம்.எஸ்ஸி., பட்டம் பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்று இந்த ஆண்டு அரசாங்கம் விதித்துள்ளது. நடுத்தரப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் பி.டி. யாக இருக்க வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப் பட்டது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதனால் செலவு சிறிது அதிகமாகும். எல்லாவற்றையும் பார்த்து முடிவு எடுக்க வேண்டும்.

புதிய பாடத்திட்டத்தை ஆசிரியர்களுக்கு அறிமுகப்படுத்து வதற்குப் பயிற்சி வகுப்புகள் நடத்த ஒரு லட்சம் ரூபாய் மான்யமாக அளிக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் கவுன்சிலின் உதவியுடன் ஆங்கிலத் தில் மறு பயிற்சி நடத்துகிற வகுப்புகளை நடத்துவதற்கான முறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தனியார் கல்லூரிகளை எடுத்துக்கொள்வது பற்றிக் குறிப்பிட்டார் கள். வரவு-செலவு போக மூன்றில் இரண்டு பங்கு நாம் கொடுக் கிறோம், ஒரு பங்கை அவர்கள் ஏற்கிறார்கள். இப்போது கூடுமான வரையில் கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் இவற்றை அரசாங்கமே ஆரம்பிக்க வேண்டுமென்ற நோக்கம் இருக்கிறது. வசதி வாய்ப்பு கள் இருப்பதோடு ஒரு லட்சம் ரூபாய் காஷ் என்டௌமென்டாக கட்டவேண்டுமென்று இருக்கிறது. தொழில் பொறியியல் துறையைப் பொறுத்த வரையில் நம் மாநிலத்தில் இப்போது 12 பொறியியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அதில் 7 தொழில் நுட்பக் கல்லூரிகள் இயக்குநரின் ஆளுகைக்கு உட்பட்டவை. இதில் நான்கு தனியார் கல்லூரிகள். 35 பாலிடெக்னிக்குகள் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் தம் பதிலுரையை முடிக்கும்வரை பேரவையின் அலுவல்கள் தொடர்ந்து நடைபெறும்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மதுரைப் பல்கலைக் கழகத்தில் இந்த ஆண்டிலிருந்து கடிதம் மூலம் பட்டப்படிப்பு படிக்க வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று கேள்வி நேரத்தின்போது விடையளித்தேன். அதை மீண்டும் திரும்பச் சொல்ல விரும்புகிறேன். கடிதப் போக்குவரத்து மூலம் பட்டப் படிப்பு பெறும் வாய்ப்பை நம் மாநிலத்தில் ஏற்படுத்த மதுரைப் பல்கலைக்கழகம் முடிவு செய்து இருக்கிறது. இதுபோன்று கடிதப் போக்குவரத்து மூலம் பல்வேறு மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களால் நடத்தப்படுகிறது. அங்கே நம்முடைய மாநிலத்தைச் சார்ந்த பல மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்களை நாம் தடுக்க முடியாது. அப்படி கடிதத்தொடர்பு மூலம் பட்டம் பெற்றவர்கள், நம் மாநிலத்தில் பட்டம் பெற்றவர்களோடு போட்டி போட்டுக் கொண்டு வேலைக்கு வரலாம். அப்படி இருக்கும்போது கடிதப் போக்குவரத்து மூலம் பயிற்சி தர நம் மாநிலத்தில் ஒரு பல்கலைக்



1971 ஜூலை 10] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கழகமாவது இருக்கவேண்டுமென்று அரசு முடிவு எடுத்து, அதன்படி மதுரைப் பல்கலைக்கழகத்தில் இந்த ஆண்டு முதல் இந்த கடிதப் போக்குவரத்து மூலம் பயிற்சி தொடங்கியிருக்கிறார்கள். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் தந்துள்ளோம். தமிழகத்தில் முதன் முறையாக இது தொடங்கப்படுகிறது.

பொறியியல் பயிற்சியும், தொழில் நுட்பப் பயிற்சியும் பெற்றவர் கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு வசதி செய்யும்பொருட்டு, இப் பயிற்சியை பலமுனைகள் பயிற்சியாக (Diversified Course) ஆக்கவும், நடைமுறைத் தொழிலை ஒட்டிய பயிற்சியாக ஆக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாலிடெக்னிக்குகளின் செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையில் 75 விழுக்காட்டை அரசு மான்யமாக இதுவரை அளித்து வந்தது. இந்த ஆண்டு முதல் இந்த மான்யம் 80 சதவிகிதமாக உயர்த்தப் பட்டுள்ளது. அரசாங்கத் தொழில் பயிற்சி நிலையங்களில் பணி யாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஊதியங்கள் தனியார் நிர்வாகத்தில் நடத்தும் தொழில் ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. ஏற்கனவே, தொழில் நுட்பத் துறையில் பணியாற்றி வருபவர்கள் வேலையில் இருந்து கொண்டே பட்டப்பயிற்சி பெறுவதற்கு வசதி செய்விக்கும் பொருட்டு, இந்த ஆண்டு முதல் பகுதிநேரப் பொறியியல் பட்டப் படிப்பு பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கு வதற்கு ஒரு முயற்சியாக பழகு தொழில் பயிற்சித் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. பொறியியல் பட்டப்பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருப்பவர்களில் 600 பேரை இத்திட்டத்தின்கீழ் நியமனம் செய்ய அரசு வழி செய்துள்ளது. இதில் 236 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் 93 பேர்தான் இதுவரை பதவியில் வந்துள்ளனர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தெரிவித்ததுபோல் பொறியியல் துறையில் படித்தவர்களிடையே ஒரு அபாயகரமான வேலையில்லாத் திண்டாட்ட நிலைமை இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த நிலைமை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. இப்போது அந்த நிலைமை மாறி வருகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் செயல்படத் தொடங்கியதால், ஓரளவு அவர்களை அந்தத்தொழிலில் ஈர்த்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

600 பேர்களுக்கு என்று திட்டம் தீட்டப்பட்டிருந்தும், 236 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டும், 93 பேர்தான் இது வரை சேர்ந்து இருக் கிறார்கள் என்றால், உள்ளபடியே பொறியியல் பட்டதாரிகளிடையே வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை, அவர்கள் வேறு ஏதோ வேலையில் இருந்து வருகிறார்கள் என்பதுதான் தெரிகிறது.

அதேபோல் டிப்ளமா படிப்பு பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருப்பவர்களை இந்த பழகு தொழில் பயிற்சித் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்வதற்காக 1,000 பேருக்கு வசதி செய்யப்பட்டது. இவர்களில் 707 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் 154 பேர் தான் பணியில் அமர்ந்தனர்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 10

பொறியியல் பட்டதாரிகளுக்கு ஸ்டைபண்ட் ரூ 250 என்றும், டிப்ளமா படிப்பு பெற்றவர்களுக்கு ரூ. 150 ஸ்டைபண்ட் என்ற அடிப்படையில் தரப்படுகிறது.

அதுபோலவே, (கிராப்ட்ஸ்மென்) தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கைவினைத் தொழிலாளரில் 800 பேரை பழகு தொழில் பயிற்சித் திட்டத்தின்கீழ் வேலைக்கு எடுத்துக்கொள்ள வசதி செய்யப் பட்டுள்ளது. இவர்களில் 638 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் 239 பேர்தான் வேலையில் அமர்ந்துள்ளனர். இவர்களுக்கு 60 முதல் 90 வரை ஸ்டைபண்ட் தரப்படுகிறது. இந்தப் பொறியியல் பட்டதாரிகளிடையேயும், கிராப்ட்ஸ்மேன் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கைவினைத் தொழிலாளர், டிப்ளமா படிப்பு பெற்றோரிடை யேயும் வேலையில்லாத் திண்டாட்டம் நாம் எண்ணியதுபோல் அவ்வளவு பயங்கரமாக இல்லையென்பது தெளிவாகும். இப்போது ஓரளவுக்கு நிலைமை சரியாகி இருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வணிகத்துறை கல்வி யாவும், அதாவது, தட்டச்சு, சுருக்கெழுத்து போன்ற வணிகத்துறைக்கான கல்வித் திட்டத்திற்கான தேர்வுகள் இனி தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்படும். மாணவர்கள் செய்யும் தொழில் சார்ந்த திட்டங்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கும் வகையில் சிறப்புப் பரிசுகள் வழங்க வருடத்திற்கு ரூ. 4,200 அரசு ஒதுக்கியுள்ளது. முதல் பரிசு ரூ. 2,000, இரண்டாவது பரிசு ரூ. 1,000, மூன்றாவது பரிசு ரூ. 500, ஏழு ஆறுதல் பரிசு ரூ. 100 வீதம் அளிக்கப்படுகிறது. இதன் மூலம் மாணவர்கள் தங்களது திறமைகளைக் காட்ட வாய்ப்பு ஏற்படுகிறது. தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கும், தொழில் நிறுவனங்களுக்குமிடையே நல் லுறவு ஏற்படுத்தி, அதன் மூலம் இருசாராரும் பயன் பெறத்தக்க பயிற்சித் திட்டங்களை உருவாக்கி "தொழில் நிறுவனத் தொடர்புக் குழு" ஒன்று அமைக்க அரசு ஆலோசித்து வருகிறது. ஒரு பக்கத்தில் தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கும், தொழில் நிறுவனங் களில் பயிற்சி பெற்றவர்களுக்கும் உறவு இருந்தால் நன்றாக இருக்கும் என்ற நல்ல நோக்கத்தோடு அதை உருவாக்க அரசு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறது என்று குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

இப்போது டிப்ளமா கோர்சில் சிவில், மெகானிக்கல், எலெக் டிரிகல் போன்ற துறைகளில்தான் பாலிடெக்னிக்கில் பயிற்சி தரப்படு கிறது என்று திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். 1970–71ல் ஆர்கிடெக்சுரல் அசிஸ்டெண்ட், கெமிகல் அண்டு சுகர் டெக் னலஜி, எலெக்ட்ரிகல் இன்ஸ்ருமென்ட்ஸ் டெக்னலஜி போன்ற டிப்ளமா கோர்சும் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. ஆரம்பிக்க திட்டம் போட்டு இருப்பது, 1971–72-ல், அக்ரிகல்சுரல் இன்ஜினீரிங் டிப்ளமா, வெல்டிங் டெக்னலஜி, புரொடக்ஷன் டெக்னலஜி, டிசைன் அண்டு டிராப்டிங் டெக்னலஜி, இன்டஸ்ட்ரியல் இன்ஜினீரிங், எலெக்டிரானிக்ஸ், மெடிகல், எக்விப்மென்ட்ஸ் டெக்னலஜி போன்ற துறைகளில் பயிற்சி அளிக்கலாம் என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1971 ஜூலை 10] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

குமரி மாவட்டத்தில் ஒரு அரசினர் கல்லூரி அமைக்க வேண்டு மென்று திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு. சுவாமிதாஸ் அவர்களும் குறிப்பிட்டார்கள். குமரி மாவட்டத்தில் ஏற்கெனவே 13 கல்லூரிகள் இருக்கின்றன. பெரிய மாவட்டம்களில் கூட இவ்வளவு கல்லூரிகள் இல்லை. 5 கல்லூரிகள்தான் இருக்கின்றன. பக்கத்தில் இருக்கும் திருநெல்வேலி மாவட்டத்தில் 22 கல்லூரிகள் இருக்கின்றன. திருநெல் வேலி-கன்னியாகுமரி இரண்டு மாவட்டத்தையும் சேர்த்து எடுத்துக் கொண்டால் 35 கல்லூரிகள் அந்தப் பகுதிக்கு இருக்கின்றன. அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு இந்தக் கல்லூரிகள் போதும் என்று கருதுகிறேன். அந்தப் பகுதியில் புதிய கல்லூரிகள் ஆரம்பிப்பதை விட, கல்லூரி இல்லாத இடங்களில் ஆரம்பிப்பது நல்லது என்று கருதுகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: அரசாங்கத்திற்குச் சொந்தமான கல்லூரி ஒன்று கூட இல்லை. அதனால்தான் வேண்டுமென்று கேட்கிறோம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கத்தின் கல்லூரி இல்லாவிட்டாலும், தனியார் கல்லூரிகள் அரசாங்கத்தின் கிராண்டில்தான் நடைபெறுகின்றன.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை அரசு ஏற்று நடத்த வேண்டு மென்று இங்கே குறிப்பிட்டார்கள். எல்லாவற்றையும் அரசே ஏற்றுக்கொள்வது என்பது முடியாது. அரசாங்கத்தின் சார்பாக அங்கே துவக்கப்பள்ளிகள் நடத்தப்படுகின்றன. ஏற்கனவே ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் அவர்களுக்கு இருக்கும் உரிமைகளைப் பறித்துக் கொண்டு இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இங்கே பல சட்ட மன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கும் உரிமை களைக் குறைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறார்கள். இது ஒரு சிக்கலான பிரச்சினை. ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டிய பிரச்சினை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கிராமப் பகுதிகளில் கட்டாயக் கல்வி முறையை அமுல்படுத்த வேண்டுமென்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட் டார்கள். நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு 6 வயது முதல் 11 வயது வரை உள்ளவர்களை 94 சதவிகிதம் பள்ளியில் சேர்த்து இருக்கிறோம். இந்த 6 வயது முதல் 11 வயதுள்ள மாணவர்களை 100-க்கு 100 பேர் பள்ளியில் சேர்க்க வேண்டுமென்று அரசு தீர்மானித்துள்ளது. இந்த 6 சதவிகிதம் பேர்கள் ஆசிரியர் கையில் அகப்படாமலும், பெற்றோர்களின் கையில் அகப்படாமலும் எங்கேயோ சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த 6 சதவிதம் பேரையும் பிடித்து பள்ளியில் சேர்க்கவேண்டுமென்று ஆங்காங்கே வேண்டுகோள் விட்டு வருகிறோம். இந்த 11 முதல் 14 வயதுள்ளவர்கள் இப்போது 57 சதவிகிதம் பள்ளியில் சேர்க்கப் பட்டிருக்கின்றனர். 14 முதல் 16 வயதுள்ளவர்கள் 35 சதவிகிதம் பள்ளியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இந்த 11 முதல் 14 வயதுள்ள வர்களை 80 சதவிகிதம் பள்ளியில் சேர்க்கவேண்டுமென்று அரசு முயற்சி எடுத்து வருகிறது. 14 வயது முதல் 16 வயதுள்ளவர்களை 50 முதல் 55 சதவிகிதம் வரை சேர்க்க முயற்சி எடுத்து வருகிறது.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 10

ஆசிரியர்—மாணவர் விகிதாசாரத்தைக் குறைக்க வேண்டுமென்ற யோசனை கூறப்பட்டுள்ளது. இப்போது சென்ற சில ஆண்டுகளாக பல புதிய ஆசிரியர் பதவிகளுக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தொடக்கப்பள்ளிகளிலும் உயர்நிலைப்பள்ளிகளிலும் 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை உருவாகி விட்டது. நம்முடைய மாநிலத்தில் எல்லாப் பள்ளிகளிலும் பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 71 லட்சம். இவர்களுக்கு பயிற்சி அளிக்க நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 2.2 லட்சம் பேர். இவர்களில் 20 ஆயிரம் பேர் சிறப்புப் பாடப்பயிற்சிக்கு என்று ஒதுக்கி அவர்களைக் கழித்து விட்டாலும் கூட, 71 லட்சம் மாணவர்களுக்கு 2 லட்சம் ஆசிரியர்கள் என்ற அடிப்படையில் 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற சராசரி நிலைமை உருவாகியுள்ளது. முந்தைய ஆண்டு இருந்த நிலைமையைவிட இது கணிசமான முன்னேற்றமாகும். நாம் ஒரு முடிவிற்கு வரவேண்டும். புதிய பள்ளிகள் திறக்காமல் இருந்து, இப்போது இருக்கும் ஆசிரியர்களை வைத்துக்கொண்டு எப்படியாவது கல்வி அறிவு பெறவேண்டுமென்ற முறையில் நடவடிக்கைகளைச் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, 1:40 என்ற விகிதத்தில்தான் இருக்கிறது. குறையவேண்டும் என்ற கருத்து இருந்தாலும், மொத்தத்தில் கணக்குப் பார்த்தால், 71 லட்சம் மாணவர்களுக்கு இப்பொழுது உயர் துவக்கப் பள்ளி, துவக்கப் பள்ளி அளவில் 2,20,000 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 20,000 பேர்கள் சிறப்புப் பாடப் பயிற்சிக்குப் செல்லும் ஆசிரியர்கள். இவர்களைத் தள்ளிவிட்டால், ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர் என்ற அளவில்தான் சராசரி விகிதம் வருகிறது. இதையும் குறைக்க வேண்டும் என்றால், வசதி ஏற்பட ஏற்படத்தான் குறைக்க இயலும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

ஆசிரியர்களுக்கு வசதிவாய்ப்புகளைப் பெருக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்பதைப்பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. குறிப்புக்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று, ஊதிய உயர்வுகள் கணிசமான அளவில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தேர்வு நிலைப் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்படி தரப்படும் சலுகைகளை தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் விரிவாக்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்களுடைய வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு, 6,500 பழகு தொழில் ஆசிரியர்கள் பதவிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், ஏறக்குறைய 3,000 ஆசிரியர்கள் ஏற்கெனவே பதவியில் அமர்த்தப்பட்டுள்ளனர். மற்றவர்கள் எடுக்கப்படவில்லை. அரசாங்கம் இவர்களை அமர்த்துவதில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் மட்டும் முயற்சி செய்திருந்தால், 6,500 பேர்களையும் எடுத்திருக்க முடியும். அது நியாயத்திற்கு கட்டுப்பட்டதாக இருக்காது. ரேஷியோ படி, ஊராட்சி மன்றப் பள்ளிகள் எவ்வளவு, தனியார் பள்ளிகள் எவ்வளவு என்று பார்த்து, தனியாரும் சிலரை எடுக்கவேண்டும் என்று செய்யப்பட்டது. ஆனால் தனியார் தங்களுக்கு வேண்டியவர்கள் வருகிற வரையில்



1971 ஜூலை 10] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மற்றவர்களை எடுக்க மாட்டேன் என்று சொன்னதால், இந்தத் தேக்கம் ஏற்பட்டது. அப்பொழுதே எல்லோரையும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் அமர்த்தியிருந்தால், அப்பொழுது தனியார் பள்ளிகளுக்குக் கொடுக்கவில்லை என்ற குறையைச் சொல்லுவார்கள். விகிதாசாரப்படி, எவ்வளவு பள்ளிகள் இருக்கின்றன என்று பார்த்து கொடுக்க ஏற்பாடு செய்தோம். ஓரளவுக்கு அந்தத் திட்டத்தை இப்பொழுது மாற்றி அமைத்திருக்கிறோம். ஏற்கனவே தனியாருக்கு இருந்த அச்சத்தையும், ஐயப்பாடுகளையும் போக்கும் வகையில் இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது. இதன்படி, 1970-ம் ஆண்டிலும், அதற்கு முன்பும் ஆசிரியர்கள் பயிற்சியில் தேறிய ஆசிரியர்கள் எவரையும் தங்கள் விருப்பப்படி தனியார்ப் பள்ளிகள் பழகு தொழில் ஆசிரியர் பயிற்சித் திட்டத்தின் கீழ் நியமித்துக் கொள்ளலாம் என்ற உத்தரவை இட்டு, ஓரளவுக்கு இடங்கள் நிரப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டியிருப்பதால், இந்தச் சங்கடம் தீரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தைக் கொண்டுவரக் காரணம், 1964-லிருந்து பயிற்சி பெற்றவர்கள் வேலைபெறாதவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல், சிபாரிசே கிடைக்காதவர்கள், சிபாரிசு கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் இருப்பவர்கள். ஆகவே, நியாயத்தின் அடிப்படையிலும், சமூக நீதியின் அடிப்படையிலும், வேலை வாய்ப்புத் தந்து, அண்மையில் தேறியவர்களை விட 66, 67, 68 முதலிய ஆண்டுகளில் தேறியவர்களுக்கு வேலை கொடுப்பது என்று சொன்னோம். அதிலே தங்களுக்கு வேண்டியவர்கள் இருப்பார்கள். 1970-ம் ஆண்டு என்று போட்டிருப்பதால், இந்தச் சங்கடம் தீரும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்புத் தரவில்லை என்ற குறைபாடுகளை டாக்டர் ஹாண்டே அவர்களும், உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் குறிப்பிட்டார்கள். கொள்கையளவில் இந்தியை பள்ளிகளில் பயிற்சி மொழியல்ல என்று முடிவு செய்த நேரத்தில் 2,395 இந்தி ஆசிரியர்கள் இருந்தார்கள். அவர்களில் 67 பேர்கள் இந்தி சிறப்புப் பாடம் என்று "ஏ" பாடத் திட்டத்தின் கீழ் வேலையில் அமர்த்தப்பட்டார்கள்; மற்றவர்களுக்கு அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்ப வேறு பணிகள் வழங்கப்பட்டன. அவர்கள் வாங்கிய சம்பளத்தில் எந்த வகையிலும் குறைவு இல்லாமல், அந்த வகையில் பாதுகாப்புத் தந்து, அவர்களுடைய கல்வித் தகுதிக்கு ஏற்ற வகையில், மாற்று வேலைகள் கொடுக்க வேண்டும் என்று செய்ததில், 1,677 பேர்கள் எடுக்கப்பட்டனர். எஞ்சியுள்ள 650 பேர்களில், 20 பேர்கள் மாற்றுப் பணியில் அமர்த்தப் பட்டனர். மற்றவர்களுக்கு மாற்றுவேலை கொடுக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை; சட்டப்படியில்லை; ஏனென்றால், இந்த 650 பேர்களும் பகுதிநேர–பார்ட்–டைம் ஆசிரியர்கள், அதாவது க்வாலிபிகேஷன் இல்லாதவர்கள். ஆகவே, பயிற்சி பெற்று, முழு நேர வேலையித இருந்து, முழுத் தகுதி பெற்று இருந்த எந்த இந்தி

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 10

ஆசிரியரும் வேலையில்லாமல் இல்லை. வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிலபேர்கள் திட்டம் கொண்டு வந்தபோது 'அன்க்வாலிபைட்' ஆக இருந்து, அதன் பிறகு 6 மாதத்தில், 3 மாதத்தில், 'க்வாலிபைட்' ஆகியிருக்கலாம். சட்டப்படி அவசியம் இல்லை என்றாலும், இவர்களுக்கும் வாய்ப்பு ஏற்படும்போது, மெல்ல மெல்ல வாய்ப்புத்தரலாம் என்று செய்யப்படுகிறது. தகுதி அடிப்படையில் யாரையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. வாய்ப்பு ஏற்படும்போது தரப்படுகிறது. (குறுக்கீடு) அனுதாபம் இருந்த காரணத்தால்தான் இந்தி மொழி ஆசிரியர்களுக்கு—இந்தியைக் கட்டாயமாகச் செய்வதைத் தவிர, இந்தி ஆசிரியர்கள் மீது நமக்கு வெறுப்பு இல்லை—1,677 பேர்கள் முன்பும், இப்பொழுது 20 பேர்களும் எடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

மதிய உணவைப்பற்றிப் பலரும் குறிப்பிட்டார்கள். ஆசிரியர்கள் சங்கடங்களைப் பற்றியும் சொன்னார்கள். இப்பொழுது ஆசிரியர்கள் சமைத்துப் போடவேண்டும் என்ற அவசியம் இல்லை. மேற்பார்வை பார்க்கிறார்கள். சமையலுக்கு ஆள் வைத்துக் கொள்ளலாம் என்று வசதி செய்யப்பட்டிருக்கிறது. "கேர்" நிறுவனத்தின் உதவியை அடிப்படையாகக் கொண்டு, 31 மைய சமையற் கூடங்கள் நிறுவியிருக்கிறோம். இன்னும் 66 மைய சமையற் கூடங்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் வேலை செய்யத் தொடங்கும். உணவுக்காகும் செலவில் 6 காசு அரசு கொடுக்கிறது. மீதி 4 பைசாவை ஊராட்சி மன்றங்களும், ஒன்றியங்களும், பொதுமக்களும் கொடுக்க வேண்டும். இப்படி அவர்கள் கொடுக்கும் 4 காசோடு, 10 காசுக்கு சீராகப் போட முடியாது. மேற்கொண்டு "கேர்" நிறுவனத்தின் உதவியால், 15, 16 காசு அளவில். சத்துள்ள உணவு கிடைக்கிறது. அடக்க விலைக்குக் கொடுக்கப்படுகிறது. இந்த வகையில் இரண்டு கோடி ரூபாய் செலவழிக்கிறோம். 18 லட்சம் மாணவர்கள் சென்ற ஆண்டு இதன் மூலம் பயன் அடைந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு மேற்கொண்டு 70 ஆயிரம் மாணவர்கள் பயன் பெறுவார்கள், என்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திருமதி அனந்தநாயகி அவர்கள் நேற்று பேசும்போது, மதிய உணவு பற்றிச் சொன்னார்கள், மாநகராட்சியில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலை பற்றிச் சொன்னார்கள். "நகராட்சி ஆணையர் அவர்களே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது உப்பு, பருப்பு, மிளகாய் மூட்டை இவையெல்லாம் போக வேண்டிய இடத்திற்குப் போகாமல், "திராவிட முன்னேற்றக் கழக கிளை ஸ்தாபனத்திற்குக் கொண்டு போகப்படுகிறது" என்று சொன்னார்கள். ஆனால், இதற்கு மேலும் ஆணையர் அவர்கள் சொன்ன பதிலை அப்படியே அவையில் கூற விரும்புகிறேன். அவர்கள் சொல்லியிருப்பது, பொருள்கள் போன இடம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளை அலுவலகம் போலவும், திராவிட முன்னேற்றக் கழக கவுன்சிலர்கள் மதிய உணவுப் பொருள்களைத் திருடிக் கொண்டு போகச் சொன்னது போலவும், சொல்லி அந்த அளவோடு நிறுத்திவிட்டார்கள். ஏற்பட்டிருக்கிற நிலைகள் பற்றி ஆணையர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். என்ன ஏற்பட்டது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.



1971 ஜூலை 10] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இந்த உணவுப் பொருள்களை அரைப்பதற்கு எடுத்துச் சென்ற இடத்திலிருந்து, அந்த வேலையாட்கள் வியாசர்பாடியில் ஒரு குடிசையில் கொண்டுபோய், 4 மிளகாய் மூட்டைகளையும், ஒரு கொத்தமல்லி விதை மூட்டையையும் போட்டுவிட்டுப் போய் விட்டார்கள். அது கண்டுபிடிக்கப்பட்டு, ஹெல்த் ஆபீசர் சென்று பார்த்து இருக்கிறார்கள். அது ஒரு குடிசையில், கதவுகள் கூட கிடையாது, அங்கே பணம் வேறு ஏதுவும் கிடையாது, தேர்தல் காலத்தில் போடும் "ஹட்" போன்றிருந்தது. அதற்கு முன்னால் "திராவிட முன்னேற்றக் கிளைக் கழகம்" என்ற போர்டு தொங்கியிருக்கிறது. உடனே விசாரணை நடந்திருக்கிறது. அந்தக் கிளைச் செயலாளர், தங்கரத்தினம் என்பவரும், கமிட்டி உறுப்பினர் செல்லக்குட்டி என்பவரும் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள், அதற்கும் தங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று விசாரணையில் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவர்களே அந்த இடத்திற்குப் போய் விசாரணை செய்ததில், ஒரு ட்ரைவரும், ஒரு க்ளீனரும், இரண்டு தொழிலாளர்களும், சூப்பர்வைசர் ஒருவரும், ஆக நாலு பேர்களும் இதில் ஈடுபட்டவர்கள் என்று, உடனே ஸஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். இதுதான் முழு விவரம். அம்மையார் அவர்கள் ஒரு பாகத்தை மட்டும் சொல்லிவிட்டு, வேறு பாகத்தை விட்டுவிட்டார்கள். அவர்கள் சொன்னது முன் பாகம். நான் சொல்வது பின் பாகம். இரண்டையும் பார்த்து அவை முழு விளக்கத்தைப் பெற்றிருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இன்னும் வேறு வேறு குறைபாடுகள் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நேரம் ஆகிறது. மானம், குலம், கல்வி எல்லாம் பசி வந்திடப் பறந்து போகும் என்பார்கள், கல்வி பறந்து போகாமல் இருக்க வேண்டும் என்று எல்லா குறைபாடுகளையும், அத்தனை வெட்டுப் பிரேரணைகளில் உள்ள கருத்துக்களையும், உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய அத்தனைக் கருத்துக்களையும், அரசாங்கம் கவனத்தில் வைத்து, சீர்படுத்த வேண்டும் என்று, குறைபாடுகளை நீக்க வேண்டும் என்று பாடுபடும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சூளையில் உயர்நிலைப் பள்ளி அமைப்பது பற்றி கேட்டுக் கொண்டதை, ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் எந்த அளவிற்கு வசதிகள் செய்யவேண்டுமோ, அதைச் செய்வதிலும் அரசு முயன்று வருகிறது. பள்ளி ஆசிரியர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்களுக்கும், அவைகளில் பணியாற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கும் வசதி வாய்ப்புகளைக் கொடுப்பதில் நாளுக்கு நாள் இந்த அரசு பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட திட்டங்களைப் பற்றிய பல விவரங்கள் அரசாங்க குறிப்பேடுகளில் காணலாம்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 10

இந்த ஆண்டு பல புதிய சலுகைகளை அரசு தர இருக்கிறது என்பதை இந்த அவையில் இப்போது மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும், அவர்கள் குடும்பங்களும் அரசாங்க மருத்துவ மனைகளிலும், மருந்தகங்களிலும் இலவச சிகிச்சை பெறுவதற்கு உரிமை உள்ளவர்கள் என்று 15—5—1971 அன்று கல்வித் துறை உத்திரவு வெளியிட்டுள்ளது. இச்சலுகையை தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அல்லாத சிப்பந்திகளுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் விரிவாக்க இப்போது முடிவு செய்யப்பட்டு, உத்திரவு தனியாக வெளியிடப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 1970 அக்டோபர் 2-ம் தேதிக்குப் பின் பதவியிலிருந்து விலகி ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு இரண்டாவது ஊதிய குழு பரிந்துரைத்துள்ள புதிய விகிதப்படி சம்பள உயர்வும், ஓய்வுச் சம்பளமும் அளிக்கப்படும். 1970 அக்டோபர் 2-ம் தேதிக்கு முன்பு அந்த ஆண்டில் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் இச்சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தன இதை அரசு பரிசீலித்து 2—10—1970-க்கு முன் 1970–71 பள்ளி ஆண்டு தொடங்கிய பின் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் புதிய விகிதப்படி ஓய்வு ஊதியம் வழங்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளது என்பதையும் மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மூன்றாவது, 1—10—1970 அன்று ஓய்வு ஊதியம் பெற்றிருந்த ஆசிரியர்கள் அனைவருக்கும் அவர்கள் அரசாங்கப் பள்ளி, கல்லூரிகளில் பணியாற்றியவர்களாயினும் சரி, தனியார் பள்ளி, கல்லூரிகளில் பணியாற்றியவர்களாயினும் சரி, மற்ற அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டது போலவே அவர்களுக்கும் 1970 செப்டம்பர் மாதத்தில் அவர்கள் பெற்று வந்த ஓய்வு ஊதியத்தை அடிப்படையாகக் கொண்டு, 100 ரூபாய்க்கு மேற்படாத ஒரு மாத ஓய்வு ஊதியத்தை போனஸாக அளிக்க உத்திரவு இடப்பட்டிருக்கிறது. 2—10—1970-க்குப் பிறகு ஓய்வு குடும்ப பென்ஷன் பெற்று வரும் ஆசிரியர்களுக்கு இந்த போனஸ் உரித்தாக இராது. அதற்கு முன்பு உள்ளவர்களுக்குத்தான் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அரசாங்க சார்பில்லாத கல்வி நிறுவனங்களில் பணியாற்றி 2—10—1970-க்கு முன்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, 2—10—1970-க்கு முன்பு தனியார் கல்லூரிகளிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களாயினும் சரி, அனைவருக்கும் 18—2—1971-ல் வெளியிட்ட அரசாங்க நிதித் துறை 285 இலக்கமிட்ட ஆணையின்படி திருவிழா கொண்டாட்டத்திற்கான முன்பணம் பெறும் உரிமையை ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் விரிவாக்கியுள்ளது என்பதையும், இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1971 ஜூலை 10] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கல்வித் துறை மென்மேலும் வளர வேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருந்தாலும், அதிகமான தொகையாக இவ்வளவு தான் ஒதுக்கியிருக்கிறது. இதை வைத்துக்கொண்டுதான் இந்த ஆண்டு கல்வித் துறையை இயக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பல்வேறு பணிகளை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். மென்மேலும் மன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்து நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை, இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசு எவ்வளவு செய்தாலும் பொது மக்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் மற்ற எந்தத் துறையையும்விட இந்த கல்வித் துறைக்கு முக்கியமானது என்ற காரணத்தினால், அதைப் பெற்றால் தான் இந்த கல்வித் துறை சீராகவும் செம்மையாகவும் இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்த வரையில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்றால், 5 லட்சங்கள் வரை பணம் தேவைப்படுகிறது. அதேபோன்று ஓர் உயர்நிலைப்பள்ளி வேண்டுமென்றால், 5 ஏக்கர் நிலமும் 12,500 ரூபாய்களும் தேவைப்படுகிறது. இவைகளை ஏற்படுத்த வேண்டுமானால், அந்த அந்த இடங்களில் உள்ள பேரவை உறுப்பினர்கள் மூலமாகத்தான் வேண்டுகோள் விட்டு, அங்குள்ள பொதுமக்கள், மற்றும் ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இவர்களின் உதவியுடன் மக்களிடம் நன்கொடைகள் வாங்கித்தான் இந்த காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. இப்படி பொதுமக்களின் உதவிகளைப் பெற்றுத்தான், அதன் மூலம் தான், அந்தப் பணிகளை மிக சீரும் சிறப்புமாகச் செய்ய முடியும் என்று இந்த நேரத்தில் இந்த அவையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்த கல்விமானியத்தில் காமர்ஸ் படிப்புக்காக 80 ஆயிரம் ரூபாய் செலவழிக்கிறார்கள். அமைச்சர் அவர்களின் $1\frac{1}{2}$ மணி நேர பதிலில் ஒரு வார்த்தை கூட இதைப்பற்றிக் குறிப்பிடவில்லை. இதையெல்லாம் நிர்வகிக்க தனி டைரக்டர் போடப்படுமா என்பதைப்பற்றியும் அதற்கான நடவடிக்கை என்ன எடுக்கப்படுகிறது என்பதைப்பற்றியும் தயவு செய்து சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனி இயக்குநர் வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி கவனிக்க தயாராக இருக்கிறோம். தனி இயக்குநர் அவசியமென்றால் போடப்படும். ஆனால் இப்போதிருக்கிற இயக்குநரே கவனித்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் இருப்பதால் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்னென்ன நிறைவேற்றப்பட வேண்டுமென்பதை மதிப்பிற்குரிய அங்கத்தினர் என் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதைப்பற்றி பரிசீலித்து ஒரு முடிவு எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 10

இந்தச் சந்தர்ப்பத்தில், இந்த கல்வித் துறை செம்மையாக இயங்குவதற்கு உதவி புரிந்த இந்தத் துறையைச் சார்ந்த இயக்குநர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும், நல்ல கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த பல யோசனைகளைக் கருத்தில் கொண்டு ஆற்ற வேண்டிய பணிகளை பரிசீலித்து, அரசு நடவடிக்கைகள் எடுக்கும் என்ற உறுதியினையும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் ஏ பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். அமைச்சர் அவர்கள் கூறும்போது, நான் பத்திரிகைச் செய்தியை வைத்துக் கூறிய ஒரு தகவலைச் சொன்னார்கள். நான் கூறியதெல்லாம் சென்னை நகரில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டுள்ளவர்கள் ஒரு சதவீதம் கூட இல்லையென்ற பத்திரிகைச் செய்தியைச் சொன்னேன். அதுகூட தினமணி போன்ற அரசியல் சார்பற்ற பத்திரிகையில் வந்த செய்தி என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எல்லா இடத்திலும் இருக்கிறது என்று சொல்ல வரவில்லை. இதைக் கடைப்பிடிக்காத கல்லூரியைக் கேட்டால், அப்படிப்பட்ட விவரம் தான் வரும். அதை வைத்துக்கொண்டு பத்திரிகையில் போட்டு மகிழ்கிறார்கள் என்பதைத்தான் சொல்ல விழைகின்றேன். எல்லா இடங்களிலும் அப்படியிருந்தால் உறுப்பினர் பத்திரிகையில் வந்தது என்று சொல்லலாம்.

As the hon. Member Thiru T. N. Anandanayaki was not in her seat, her cut motion was deemed to have been withdrawn.

THIRU K. SUPPU : I am pressing my cut motion.

திரு. சுப்பு அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

As the hon. Member Dr. H. V. Hande did not press his cut motion, the same was, by leave, withdrawn.

As the hon. Members Thiru A. Subramaniam and K. S. Kothandaramiah were not in their seats, their cut motions were deemed to have been withdrawn.

MR. SPEAKER : The question is :

" That the Government be granted a sum not exceeding Rs. 83,12,49,200 under Demand No. 13—Education. "

The Demand was put and carried and the Grant was made.



[1971 ஜூலை 10

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி

பி.ப. 2-00

(ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு அப்காரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு அப்காரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு அப்காரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு அப்காரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஈ) 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் 12-7-71 திங்கட் கிழமையன்று காலை 9 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது. பி.ப. 2-01

## (8) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders*

151. Notification issued with G.O. Ms. No. 1003, Rural Development and Local Administration, dated the 23rd April 1971, in regard to appointment of District Development Officer (North) Chingleput as Special Officer to exercise certain powers of the Tamil Nadu District Muncipalities Act, 1920 until the constitution of Avadi, Ambattur, Kathiawakkam and Madhavaram Municipalities. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act 1920 (Tamil Nadu Act V of 1920).]

### B. *Reports, Notifications and Other Papers.*

@ 111. The Performance Budget of the Directorate of School Education Department for the year 1971–72.

@ 112. The Performance Budget of the Collegiate Education Department for the year 1971–72.

@ 113. The Performance Budget of the Technical Education Department for the year 1971–72.

& 114. The Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1971 (L.A. Bill No. 15 of 1971).

& 115. Annexure to the Madras City Civil Court (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 14 of 1971).

£ 116. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 (L.A. Bill No. 16 of 1971).

£ 117. The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Validation of Proceedings Bill, 1971 (L.A. Bill No. 17 of 1971).

118. First Report of the Committee on Subordinate Legislation (Fifth Assembly).

---

& Despatched to Members on 8th July 1971.

@ Laid on the Table of the House on 9th July 1971.

£ Despatched to Members on 9th July 1971.





## இணைப்பு.

[602-ம் பக்கத்தில் 192-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினவிற்குரிய விடையைக் காண்க.]

சென்னை மாநகரில் காலையிலும் மாலையிலும் நெரிசல் நேரங்களில் மட்டுமே அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் பயணிகள் கூட்டம் அதிகமாக உள்ளது. எனினும், கூடுதல் போக்குவரத்து வசதிகளை அளிக்கும் நோக்கத்துடன், அரசுப் போக்குவரத்துத் துறை கடந்த ஆண்டில் மேலும் 63 பேருந்துகளை இயக்க ஏற்பாடு செய்துள்ளது—மாநகரில் கடந்த ஆண்டில் 917 பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தன. தற்போது 980 பேருந்துகள் ஓட்டப்படுகின்றன. மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு, சாதாரண வகைப் பேருந்துகளுடன் கூட, இணைப்புப் பேருந்துகள், மாடிப் பேருந்து, நின்று பயணம் செய்யும் பேருந்துகள் போன்ற அதிக இடவசதி கொண்ட பேருந்துகளும், மகளிர்க்கேயான சிறப்புப் பேருந்துகளும் விடப்படுகின்றன. பயணிகளை வரிசையில் நிறுத்தி வைப்பதற்காக சீரணித் தொண்டர்களும், பேருந்துகள் பயணிகளை விரைவில் ஏற்றிச் செல்லும் வகையில் அப்பயணிகளுக்கு முன்னதாகப் பயணச்சீட்டுகள் வழங்குவதற்காக பேருந்துகள் நிற்கக்கூடிய முக்கியமான இடங்களில் பயணச் சீட்டுக் கொடுப்பவர்களும் அமர்த்தப்படுகின்றனர். பேருந்துகள் திறம்படச் செயலாற்றுவதற்கு இயலும் வகையில் போக்குவரத்துத் துறையிலுள்ள பேணுதல் பிரிவு சீரமைக்கப்பட்டு வருகிறது.

There is conjection in the State Transport buses in Madras city only during the peak hours in the morning and evening. However, with a view to providing additional transport facilities, the State Transport Department has put 63 more buses in operation during the last one year—that is the city passengers are now served by 980 buses as against the 917 buses which were in operation during the last year. In addition to the ordinary type buses, larger capacity buses, namely, trailer buses, double decker bus, standee buses and special buses for women are operated in the city to clear the traffic. Prosperity Brigade volunteers and stand conductors are posted in important bus stops for queuing of passengers and for advance issue of tickets to the passengers so that there may be quicker movement of buses. The maintenance organisation of the department is being reorganised for effective maintenance of the buses for better service.

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES.

*Second Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.*

6th, 7th, 8th, 9th and 10th July 1971.

Volume VI (Nos. 1 to 5.

A

PAGES

ABDUL JABBAR, THIRU V. M.—

Budget (Revised), 1971–72, Voting :

District Administration and Miscellaneous ...
Famine Relief ... ... ... ... ...
Pensions ... ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... ...
Compensation to Zamindars ... ... ...
Commuted value of Pensions ... ... ...
Loans and Advances by the State Government.
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ... 64–67

Education ... ... ... ... ... ... 373–376

ACCIDENT(S)—

Fire—at Virudhachalam, details ... ... ... 328–331
In Madras City, details ... ... ... ... 331–338

AGRICULTURE—

Garden opposite to Legislators' Hostel, reclamation. 26–27
Intensive Agricultural Area Programme, Tiruchirappalli district ... ... ... ... ... 140–144

PAGES

AGRICULTURE—*cont.*

Multiple cropping scheme ... ... ... ... 338–341

Tractors sold in North Arcot district, number ... 341–345

ALAGARSAMY, THIRU S.—

Budget (Revised), 1971–72, Voting:

District Administration and Miscellaneous ...
Famine Relief ... ... ... ... ...
Pensions ... ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... ...
Compensation to Zamindars ... ... ...
Commuted value of Pensions ... ... ...
Loans and Advances by the State Government.
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ... ... 39, 41, 42, 50–53

ALDA M. FOWLER, THIRUMATHI—

Budget (Revised), 1971–72, Voting:

Education ... ... ... ... ... 371–373

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—

Budget (Revised), 1971–72, Voting:

Education ... ... ... ... ... ... 365 410–414

Constitution of a Tribunal and referring the Cauvery Water Dispute thereto and the need to prevent the Mysore Government from proceeding with the construction of the projects (R) ... ... ... 256–262

Unrest among workers of Madras Rubber Factory (A.M.) ... ... ... ... ... ... 351, 352, 353, 354

ARANGANNAL, THIRU RAMA—

Constitution of a Tribunal and referring the Cauvery Water Dispute thereto and the need to prevent the Mysore Government from proceeding with the construction of the projects (R) ... ... ... 250–256



PAGES

A—*cont.*

ARUMUGAM, THIRU S.—

Budget (Revised), 1971–72, voting:

District Administration and Miscellaneous ...
Famine Relief ... ... ... ... ...
Pensions ... ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... ...
Compensation to Zamindars ... ... ...
Commuted value of Pensions ... ... ...
Loans and Advances by the State Government.
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ... ... 54–57

B

BACKWARD CLASSES—

Welfare Day, celebration ... ... ... ... 144–148

BILL(S)—

Abkari (Amendment) Bill, 1971:

Message from Governor:

Int. ... ... ... ... ... ... 579

Agricultural Income-tax (Amendment) Bill, 1971:

Message from Governor:

Int. ... ... ... ... ... ... 506

Buildings (Lease and Rent Control) Validation of Proceedings Bill, 1971:

Int. ... ... ... ... ... ... 152

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1971:

Int. ... ... ... ... ... ... 37

Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971:

Int. ... ... ... ... ... ... ... 151

Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971:

Int. ... ... ... ... ... ... 579

Urban Land Tax (Amendment) Bill, 1971:

Message from Governor ... ... ... 505

Int. ... ... ... ... ... ... 506

PAGES

B—*cont.*

BOARD—
Land Development, election to (M) ... ... 364

C

CALLING ATTENTION—
Colleges and High Schools, difficulty in getting admission ... ... ... ... ... ... 360–364
Rice supplied through Civil Supplies Agency in Kanyakumari district, rise in prices ... ... 358–360
Sea erosion at Midalam in Vilavancode taluk, destruction of the preventive wall and consequent difficulties to fishermen ... ... ... ... 504
Teachers' Tra'ning Schools, hardships caused due to limitation in admission ... ... ... 36–37

CHAIR—
*Announcements*:
Agricultural University Management Board, election to ... ... ... ... ... 505
Land Improvement Board, election to ... ... 364–365

RULINGS AND OBSERVATIONS:
*Adjournment Motions*:
Arrest of workers of closed mills in Coimbatore:
Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the Chief Minister's statement ... 36
Unrest among Madras Rubber Factory workers:
Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the Chief Minister's statement ... 358
Unrest among Coimbatore textile workers and rejection of Chief Minister's appeal:
Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Hon. Minister for Labour ... ... ... ... ... 15



PAGES.

C—*cont.*

CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Adjournment Motions—*cont.*
*Scope for discussion*:
At the stage of giving consent to an adournment motion, Members should confine their remarks to explain how the matter was beyond the ordinary administration of law, how it came within the purview of the rules governing adjournment motions and why consent should be given for the discussion of the moton but they should refrain from going into the merits which would be permissible only after consent had been given ... ... ... 352–353, 354
*Allegations*:
Members should take responsibility for their allegations for which there should be some basis. They should avoid insinuations ... 335–336
Should be specific and not general ... ... 184
*Call Attention*:
Members should only read the matter that they had given notice of ... ... ... 36
*Expressions used in the House*:
" நீங்கள் ஏதோ அவசரப்படுகிறீர்கள் "
(You are hasty while I am explaining) A Member's remark when interrupted by the Chair—Deprecated and withdrawn ... 352–353
*Language of the House*:
With reference to a point of information raised by a Member about the speech made by another Member in Telugu, the Chair drawing attention to the relevant rule observed that while there was no objection to a Member speaking in his mother-tongue, he had to submit a translation of his speech to the Chair ... ... ... 403–404
*Questions and Answers*:
*Supplementary questions*:
A supplementary which the Chair considered to be not in good taste was disallowed ... 484

PAGES.

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Questions and Answers*—cont.

*Supplementary questions*—cont.

It was not obligatory to allow supplementaries on all questions. Keeping in view the importance of the questions, the need to finish all the questions in the order paper within the time allotted and the need to afford opportunity to as many Members as possible to put supplementaries, the question of allowing supplementaries was left to the discretion of the Chair ... 224

*Opportunity for putting supplementaries*:

With reference to a point of order raised by a Member that in spite of the fact that a Member of his party had tabled the main question, none of them had been allowed to put a supplementary question, the Chair held that supplementary questions were not distributed on party basis. A party could not claim a particular question simply because a Member of that party had tabled the main question. Supplementary questions were allowed according to the importance of the question and those who caught the eye of the Chair were called to put supplementary questions. Hence there was no point of order ... ... ... 137

*Relevancy*:

Supplementaries should relate to the main question ... ... ... ... — 24–25, 31, 32, 122, 123, 225

CHELLIAH, THIRU KUZHA:

Budget (Revised), 1971–72, voting:
Education ... ... ... ... ... 522–525

CHINNASAMY, THIRU M.—

Budget (Revised), 1971–72, voting:
Education ... ... ... ... ... ... 408–410



PAGES.

C—*cont.*

CLUB(S)—

Rifle Clubs, Madras City ... ... ... ... 234

COLLEGE(S)—

Arts College, Ponneri, medium of instruction ... 11–12
A.V.C. College, Mayuram, grant for 1970–71 ... 119–123
Colleges and High Schools, difficulty in getting admission (C.A.) ... ... ... ... ... 360–364

COMMITTEE—

Subordinate Legislation, First Report (Fifth Assembly), presentation ... ... ... ... 505

CO-OPERATIVES—

Land Development Bank at Kelamangalam Block, starting ... ... ... ... ... 494

COURT—

High Court, Vigilance Cell in ... ... ... 232–233

D

DENNIS, THIRU N.—

Diabetes, survey of incidence ... ... ... ... 224
King Institute, Guindy, income ... ... 490–491
Rifle clubs, Madras City ... ... ... ... 234

DEVENDIRAN, THIRU A.—

Budget (Revised), 1971–72, Voting:
Education ... ... ... ... 386–388

DHARMALINGAM, THIRU A. P.—

Land Development Board, election to (M) ... 364

DISEASES—

Diabetes survey into incidence ... ... ... 224

G

GOVINDARASAN DURAI, THIRU—

Budget (revised) 1971–72, voting:
District Administration and Miscellaneous ...
Famine Relief ... ... ... ... ...
Pensions ... ... ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... ...
Commuted Value of Pensions ... ... ...
Compensation to Zamindars ... ... ...
Loans and Advances by State Government ...
Land Revenue Department ... ... ...
Stamp—Administration ... ... ... 69–72

PAGES.

D—*cont.*

DURAI MURUGAN, THIRU—
Budget (Revised), 1971-72, Voting :
District Administration and Miscellaneous ...
Famine Relief ... ... ... ...
Pensions ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ...
Compensation to Zamindars ... ... ...
Commuted Value of Pensions ... ...
Loans and Advances by the State Government
Land Revenue Department ... ...
Stamps—Administration ... ... ... 82-87
DURAISAMY, THIRU S.—
Budget (Revised), 1971-72, Voting :
Education ... ... ... ... 382-384
Central Bus Stand in Coimbatore City, construction ... ... ... ... ... 123-125
E.S.I. Hospital for T.B. Patients ... ... 129-133
E.S.I. Hospital, opening at Tiruppur ... ... 128-129
Government Servants Rental Housing Scheme at Tiruppur, particulars ... ... ... ... 235
Mineral ores, occurrence in Coimbatore district 138-140
Radio sets for elementary schools ... ... 323-324

E

EDUCATION—
Co-education, survey ... ... ... ... ... 481-485
Dental Hygienists, training ... ... 488-490
Women's—, seminar on ... ... ... 485-487
ETTIYAPPAN, THIRU P.—
Budget (Revised), 1971-72, Voting :
District Administration and Miscellaneous ...
Famine Relief ... ... ... ...
Pensions ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ...
Compensation to Zamindars ... ... ...
Commuted value of Pensions ... ...
Loans and Advances by the State government
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ... 61-62



E—*cont.*

PAGES.

EXPUNCTION—
Budget (Revised), 1971-72, Voting :
District Administration and Miscellaneous ...
Famine Relief ... ... ... ...
Pensions ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ...
Compensation to Zamindars ... ...
Commuted value of Pensions ... ... ...
Loans and Advances by the State Government.
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ... 75

F

FINANCIAL BUSINESS—
Budget (Revised), 1971-72, Voting :
District Administration and Miscellaneous ...
Famine Relief ... ... ... ...
Pensions ... ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ...
Compensation to Zamindars ... ...
Commuted Value of Pensions ... ...
Loans and Advances by the State Government
Land Revenue Departmnet ... ... ...
Stamps—Administration ... ... ... 38-87
Education ... ... ... ... ... ... 152-211, 365-416, 506-578
FISHERIES—
Sea erosion at Midalam in Vilavancode taluk, destruction of the preventive wall and consequent difficulties to fishermen (C.A.) ... ... ... 504
FOODGRAINS—
Paddy, procurement price ... ... ... ... 13-16
Rice supplied through Civil Supplies Agency in Kanyakumari district, rise in prices (C.A.) .. 358-360

G


GANAPATHY, THIRU N.—

Budget (Revised), 1971–72, Voting :
District Administration and Miscellaneous ...
Famine Relief ... ... ... ...
Pensions ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ...
Compensation to Zamindars ... ...
Commuted Value of Pensions ... ...
Loans and Advances by the State Government.
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ... 67–69

Constitution of a Tribunal and referring the Cauvery water dispute thereto and the need to prevent the Mysore Government from proceeding with the construction of the projects (R) ... ... ... 266–269

GANDHIJI CENTENARY CELEBRATIONS—

Valliammai Nagar at Thillaiyadi, amount spent by Chembanarkoil Panchayat Union ... ... 125–128

GANESAN, THIRU S.—

Valliammai Nagar at Thillaiyadi—Amount spent by Sembanarkoil panchayat union ... ... 125–128

GOPAL, THIRU K. P.—

Budget (Revised), 1971–72, Voting :
Education ... ... ... ... 384–386

GOPAL, THIRU M.—

Budget (Revised), 1971–72, Voting :
District Administration and Miscellaneous ...
Famine Relief ... ... ... ...
Pensions ... ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ...
Compensation to Zamindars ... ...
Commuted Value of Pensions ... ...
Loans and Advances by the State Government.
Land Revenue Department ... ...
Stamps—Administration ... ... ... 173–175


G—*cont.*


GOPAL, THIRU P.—

Budget (Revised), 1971–72, Voting :
District Administration and Miscellaneous ...
Famine Relief ... ... ... ...
Pensions ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ...
Compensation to Zamindars ... ...
Commuted Value of Pensions ... ...
Loans and Advances by the State Government.
Land Revenue Department ... ...
Stamps—Administration ... ... ... 171–173

GURUSAMI, THIRU N. V.—

Budget (Revised) 1971–72, Voting :
Education ... ... ... ... ... ... 407–408


H


HANDE, DR. H. V.—

Arts College, Ponneri, medium of instruction ... 11–12
Block Development Officers, selection of Tahsildars. 487–488
Budget (Revised), 1971–72, Voting :
District Administration and Miscellaneous ...
Famine Relief ... ... ... ... ...
Pensions ... ... ... ... ...
Other Miscellaneous Compensation and Assignments ... ... ... ... ... ...
Compensatin to Zamindars ... ... ...
Commuted Value of Pensions ... ...
Loans and Advances by the State Government ...
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ... 38, 39, 40, 41, 42, 176–179
Education ... ... ... ... ... 365, 538–543
Co-education, survey ... ... ... ... 481–485
Colleges and High Schools, difficulty in getting admission (C.A.) ... ... ... ... 360–363

HANDE, DR. H. V.—*cont.*

Constitution of a Tribunal and referring the Cauvery water dispute thereto and the need to prevent the Mysore Government from proceeding with the construction of the projects (R). ... 277–282

Dental Hygienists, training ... ... ... 488–490

Joint Directors of Education, posts ... ... 222–224

Record Office, petitions from employees ... ... 233

State Express Buses, increase in seats ... ... 27–31

Unrest among Coimbatore Textile Workers and rejection of the Chief Ministers' Appeal (A.M.). ... 149

Unrest among workers of Madras Rubber Factory (A.M.) ... ... ... ... ... 351

HANDLOOMS—

Clothes, disposal ... ... ... ... ... 133–137

Weavers, distribution of Cess Fund ... ... 138

HOSPITALS AND DISPENSARIES—

E.S.I. Hospital for T.B. patients ... ... 129–133

E.S.I. Hospital, openings at Tiruppur ... ... 128–129

Gosha Hospital for Mel Visharam ... ... 325–328

King Institute, Guindy, income ... ... 490–491

Tuberculosis Sanatorium, Perundurai Advisory Committee ... ... ... ... ... 224–225

HOUSING—

Government Servants Rental Housing Scheme at Tiruppur, particulars ... ... ... ... 235

I

ILANGOVAN, THIRU G.—

Budget (Revised), 1971–72, Voting :

Education ... ... ... ... ... 390–392

J

JAIL—

Central Jail, Madras, diet of prisoners ... ... 231–232





PAGES.

JAMES, THIRU J.—

Budget (Revised), 1971–72, Voting :

District Administration and Miscellaneous.
Famine Relief ... ... ... ... ...
Pensions ... ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... ...
Compensation to Zamindars ... ... ...
Commuted Value of Pensions ... ...
Loans and Advances by the State Government.
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ... 182–185, 206

Education ... ... ... ... ... 366–371

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—

Budget (Revised), 1971–72, Voting :

Education ... ... ... ... ... 527–530

K

KADHER BATCHA ALIAS VELLAICHAMY, THIRU.—

Budget (Revised), 1971–72, Voting :

Education ... ... ... ... ... 519–520

KALIMUTHU, THIRU K.—

Budget (Revised), 1971–72, Voting :

Education ... ... ... ... ... 401–403

KAMATCHI, THIRU K.—

Budget (Revised), 1971–72, Voting :

Education ... ... ... ... ... 414–416

PAGES.

KANDASAMI, MANALI THIRU C.—
Budget (Revised), 1971–72, Voting:
District Administration and Miscellaneous.
Famine Relief ... ... ... ... ...
Pensions ... ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... ...
Compensation to Zamindars ... ... ...
Commuted Value of Pensions ... ...
Loans and Advances by the State Government
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ... ... 180–182

KARUNAINATHAN, THIRU J.—
Budget (Revised), 1971–72, Voting:
District Administration and Miscellaneous.
Famine Relief ... ... ... ... ...
Pensions ... ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... ...
Compensation to Zamindars ... ... ...
Commuted Value of Pensions ... ...
Loans and Advances by the State Government.
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ... ... 53–54

KARUNANIDHI, DR. M.—
Abkari (Amendment) Bill, 1971 ... ... ... 579
Arrest of 14 workers in Coimbatore (A.M.) ... 34–36
Budget (Revised), 1971–72, Voting:
District Administration and Miscellaneous.
Famine Relief ... ... ... ... ...
Pensions ... ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... ...
Compensation to Zamindars ... ... ...
Commuted Value of Pensions ... ...
Loans and Advances by the State Government.
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ... ... 38, 39, 40, 43, 206–209



PAGES.

KARUNANIDHI, DR. M.—*cont.*
Budget (Revised), 1971–72, Voting:
**Education** ... ... ... ... ... 403–404
Constitution of a Tribunal and referring the Cauvery Water dispute thereto and the need to prevent the Mysore Government from proceeding with the construction of the projects (R) ... ... 237–243, 260, 261–262, 288–301
Unrest among workers of Madras Rubber Factory (A.M.) ... ... ... ... ... ... 355–358

KARUPPIAH, THIRU A.—
Budget (Revised), 1971–72, Voting:
**Education** ... ... ... ... .. 404–405

KITTAPPA, THIRU N.—
Agricultural University in Thanjavur District, establishment ... ... ... ... ... 497–499
A.V.C. College, Mayuram, grant for 1970–71. 119–123
Backward Classes Welfare Day, Celebration ... 144–148
Budget (Revised), 1971–72, Voting:
District Administration and Miscellaneous.
Famine Relief ... ... ... ... ...
Pensions ... ... ... ... ...
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... ...
Compensation to Zamindars ... ... ...
Commuted Value of Pensions ... ...
Loans and Advances by the State Government.
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ... 156–158
Central Jail, Madras, diet of prisoners ... ... 231–232
Electric buses in Madras City, plying of ... ... 235–237
Lands of Religious institutions, assignment to cultivating tenants ... ... ... ... ... 346–350
N.C.C. Students, share of Central Government in expenditure ... ... ... ... ... 219–222
Police Officials, change in Uniform ... ... 492–494
Police Personnel, free Railway passes ... ... 491–492

K—*cont.*


| | PAGES. |
|---|---|
| KITTAPPA, THIRU N.—*cont.* | |
| Thalaimannar-Rameswaram Steamer Service ... | 495–496 |
| Trailer buses, plying ... ... ... ... | 499–502 |
| KOTHANDARAMIAH, THIRU K.S.— | |
| Budget (Revised), 1971–72, Voting : | |
| Education ... ... ... ... ... | 366 |
| KOVAI CHEZHIYAN, THIRU— | |
| Constitution of a Tribunal and referring the Cauvery Water dispute thereto and the need to prevent the Mysore Government from proceeding with the construction of the projects (R) ... ... ... | 262–266 |
| KRISHNAMOORTHY, THIRU V.— | |
| Budget (Revised), 1971–72, Voting : | |
| Education ... ... ... ... ... | 406–407 |
| KUMARASAMI, THIRU K. N.— | |
| Budget (Revised), 1971–72, Voting : | |
| Education ... ... ... ... ... | 535–538 |


L


| | |
|---|---|
| LAND(S)— | |
| —of Religious institutions, assignment to cultivating tenants ... ... ... ... ... | 346–350 |
| LANGUAGE— | |
| Urdu language, study of ... ... ... ... | 6–11 |
| LATHEEF, THIRU M.A.— | |
| Budget (Revised), 1971–72, Voting : | |
| Education ... ... ... ... ... | 513–516 |
| Constitution of a Tribunal and referring the Cauvery Water dispute thereto and the need to prevent the Mysore Government from proceeding with the construction of the projects (R) ... ... ... | 245–248 |


M


| | |
|---|---|
| MADHAVAN, THIRU S.— | |
| Unrest among Coimbatore textile workers and rejection of the Chief Minister's appeal (A.M.). | 149–151 |
| MANIYAN, THIRU P. S.— | |
| Agricultural University at Madurai, establishment. | 496–497 |
| Village Officers, transfer ... ... ... ... | 16–22 |




M—*cont.*


| | PAGES. |
|---|---|
| MARIMUTHU, THIRU A. R.— | |
| Budget (Revised), 1971–72, Voting : | |
| District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps—Administration ... ... ... ... | 158–163 |
| MARUDACHALAM, THIRU N.— | |
| Budget (Revised), 1971–72, Voting : | |
| District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps—Administration ... ... ... ... | 39 |
| MINES AND MINERALS— | |
| Mineral ores, occurrence in Coimbatore District. | 138–140 |
| MOTION(S)— | |
| Adjournment Motions : | |
| Arrest of 14 workers in Coimbatore. ... ... | 32–36 |
| Unrest among Coimbatore textile workers and rejection of the Chief Minister's appeal ... | 148–151 |
| Unrest among workers of Madras Rubber Factory. | 351–358 |
| B.O.H., change in order ... ... ... ... | 505 |
| Land Development Board, election ... ... ... | 364 |
| MUNUSAMI, THIRU R. R.— | |
| Registry office for Anandapuram, opening ... | 12 |


N


| | |
|---|---|
| NACHIAPPAN, THIRU N.— | |
| Budget (Revised), 1971–72, Voting : | |
| District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps—Administration ... ... ... ... ... | 163–165 |

PAGES.

N.C.C.—
Students, share of Central Government in expenditure ... ... ... ... ... ... 219–222

NEDUNCHEZHIYAN, THIRU V. R.—
B.O.H., change in order (M) ... ... ... 505
Budget (Revised), 1971–72, voting : 365, 366, 404,
Education ... ... ... ... ... 555–578
Colleges and High Schools, difficulty in getting admission ... ... ... ... ... 360–363 363–364
Teachers' Training Schools, hardships caused due to limitation in admission (C.A. St.) ... ... ... 36, 37

O

OBITUARY REFERENCE—
Lakshmipathi, Thiru K. S. ... ... ... 119

OFFICE(S)—
Agriculture Department, reorganisation ... 22–26
Registry Office for Anandapuram, opening ... 12

P

PALANISAMY, PULAVAR C.—
Budget (Revised), 1971–72, Voting :
Education ... ... ... ... ... 525–527

PALANISAMY, THIRU N. K.—
Agricultural Department, reorganisation ... ... 22–26
Buses in Madras city, congestion ... ... ... 502–504
Handloom clothes, disposal ... ... ... 133–137
Handloom Weavers, distribution of cess fund ... 138
Sugar, lifting of stock ... ... ... ... ... 227–231
Tuberculosis Sanatorium, Perundurai Advisory Committee ... ... ... ... ... 224–225

PALANIVELAN, THIRU M.—
Budget (Revised), 1971–72, Voting :
Education ... ... ... ... ... 520–522





PAGES.

PAPERS LAID ON THE TABLE—
Agricultural Produce Markets Act, 1959, Notification ... ... ... ... ... ... 302
Appropriation Accounts for 1962–63 and Audit Report 1964, report of action taken on ... ... ... 302
Buildings (Lease and Rent Control) Validation of Proceedings Bill, 1971 ... ... ... ... 580
Cauvery Water Dispute with Mysore, Brochures (English and Tamil) ... ... ... ... 211, 303
City Civil Court (Amendment) Bill, 1971, Annexure. 580
Collegiate Education Department, Performance Budget for 1971–72 ... ... ... ... 580
Committee on Subordinate Legislation (Fifth Assembly), first report ... ... ... ... 580
Directorate of School Education Performance Budget for 1971–72 ... ... ... ... ... 580
District Municipalities Act, 1920, Notification ... 580
General Sales Tax Act, 1959, Notification ... 302
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1971 ... ... 580
Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1971 (with annexure) 303
Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 ... ... ... ... ... 580
Land Revenue and other allied demands, Policy Note (English and Tamil) ... ... ... ... 211
Motor Vehicles Act, 1939, Notification ... ... 302
Motor Vehicles Taxation Act, 1931, notification ... 302
Panchayats Act, 1958, Notification ... ... 211
Police Commission, Report ... ... ... ... 416
Progress of Education in Tamil Nadu, 1971–72, Note (English and Tamil) ... ... ... 303
Public Service Commission—Annual Report, 1969–70 ... ... ... ... ... ... ... 87

P—*cont.*

PAGES.

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Remission of Stamp Duty, Notification ... ... 87

State Aid to Industries Act, 1922, Notification ... 302

Tamil Nadu Agro Industries Corporation, Limited Tamil Nadu Government's Review and the Third and the Fourth Annual Reports and Statements of Accounts ... ... ... ... ... 211

Technical Education Department, Performance Budget for 1971–72 ... ... ... ... 580

PARANDHAMAN, THIRU A.—

Budget (Revised), 1971–72, Voting:

District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Commuted Value of Pensions, Compensation to Zamindars, Land Revenue Department, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration. 45–48

PERUMAL, THIRU A. R.—

Constitution of a Tribunal and referring the Cauvery water dispute thereto and the need to prevent the Mysore Government from proceeding with the construction of the projects (R) ... ... ... 248–250

PERUMAL, THIRU S.—

Budget (Revised), 1971–72, Voting:

Education ... ... ... ... ... 396–398

POLICE—

Police Officials, change in uniform ... ... 492–494

Police personnel, free railway passes ... ... 491–492



PAGES.

P—*cont.*

PON CHOCKALINGAM, THIRU P.—

Budget (Revised), 1971–72, Voting:

District Administration and Miscellaneous
Famine Relief
Pensions
Other Miscellaneous Compensations and Assignments
Compensation to Zamindars
Commuted Value of Pensions
Loans and Advances by the State Government
Land Revenue Department
Stamps—Administration

165–167

PONNAPPA NADAR, THIRU R.—

Budget (Revised), 1971–72, Voting:

District Administration and Miscellaneous
Famine Relief
Pensions
Other Miscellaneous Compensations and Assignments.
Compensation to Zamindars
Commuted Value of Pensions
Loans and Advances by the State Government
Land Revenue Department
Stamps—Administration

38, 39, 41, 42, 185–191

Education ... ... ... ... ... 549–555

Constitution of a Tribunal and referring the Cauvey water dispute thereto and the need to prevent the Mysore Government from proceeding with the construction of the projects (R) ... ... ... 268–282, 288

Rice supplied through Civil Suplies Agency in Kanyakumari district, rise in prices (C.A.) ... 358–360

Sea erosion at Midalam in Vilavancode taluk, destruction of the preventive wall and consequent difficulties to fishermen (C.A.) ... ... ... 504

PAGES.

RAJAH PILLAI, THIRU V. K.—

Budget (Revised), 1971–72, Voting :

Education ... ... ... ... ... 379–382

RAJARAM, THIRU K.—

Buildings (Lease and Rent Control) Validation of Proceedings Bill, 1971 ... ... ... ... 352

RAMACHANDRAN, THIRU S.—

Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 ... ... ... ... ... 579

RESOLUTION—

Constitution of a Tribunal and referring the Cauvery water dispute thereto and the need to prevent the Mysore Government from proceeding with the construction of the projects (R) ... ... ... 237–301

S

SADIQ PASHA, THIRU S. J.—

Agricultural Inome-Tax (Amendment) Bill, 1971. 506

destruction of the preventive wall and consequent Sea erosion at Midaam in Vilavancode taluk,

difficulties to fishermen (C.A. St.) ... ... 504

Urban Land Tax (Amendment) Bill 1971 ... ... 506

SANGUMUTHU THEVAR, THIRU S.—

Fire accident at Virudhachalam, details ... ... 328–331

Fire accident in Madras City, details ... ... 331–338

High Court, Vigilance Cell in ... ... ... 232–233

Multiple Cropping Scheme ... ... ... ... 338–341

Paddy, procurement price ... ... ... ... 13–16

Sri Guruvayoorappan Temple, supply of rice ... 225–227



PAGES.

S—*cont.*

SARATHY, THIRU M. P.—

Tractors sold in North Arcot district, number ... 341–345

SATHIYENDRAN, THIRU M. S. K.—

Budget (Revised), 1971–72, Voting :

District Administration and Miscellaneous.
Famine Relief.
Pensions.
Other Miscellaneous Compensations and Assignments.
Compensation to Zamindars
Commuted Value of Pensions.
Loans and Advances by the State Government
Land Revenue Department
Stamps—Administration

167–169

SCHOOL(S)—

Colleges and High Schools, difficulty in getting admission (C.A.) ... ... ... ... ... 360–364

Radio sets for elementary schools ... ... 323–324

Teachers Training Schools, hardships caused due to limitation in admission (C.A.) ... ... ... 36–37

SEENIVASAN, THIRU P.—

Subordinate Legislation Committee, First Report (Fifth Assembly), presentation ... ... ... 505

SERVICES—

Block Development Officers, selection of Tahsildars. 487–488

Joint Directors of Education, posts ... ... 222–224

Record Office, petitions from employees ... ... 233

Village Officers, transfer ... ... ... ... 16–22

PAGES

SHANMUGAM, THIRU P. U.—
Budget (Revised), 1971–72, Voting :
District Administration and Miscellaneous
Famine Relief
Pensions
Other Miscellaneous Compensations and Assignments.
Compensation to Zamindars
Commuted value of Pensions
Loans and Advances by the State Government
Land Revenue Department
Stamps—Administration ... 41, 42, 47, 48, 58–59, 60, 65, 66, 77, 79, 80, 81, 160, 161–162, 190, 191–206
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1971 ... ... ... 37
Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 ... ... ... ... ... 151
Rice supplied through Civil Supplies Agency in Kanyakumari district, rise in prices (C.A. St.) ... 358–360

SON-ET-LUMERIE—
Setting up at Madurai ... ... ... ... 215–219

SOUNDARAPANDIAN, THIRU P.—
Budget (Revised), 1971–72, Voting :
Education ... ... ... ... ... 516–519

SUBBIAH, THIRU A. K.—
Budget (Revised), 1971–72, Voting :
District Administration and Miscellaneous
Famine Relief
Pensions
Other Miscellaneous Compensations and Assignments.
Compensation to Zamindars
Commuted Value of Pensions
Loans and Advances by the State Government
Land Revenue Department
Stamps—Administration ... 38, 41,



PAGES

SUBBIAH, THIRU A. R.—
Budget (Revised), 1971–72, Voting :
Education ... ... ... ... ... ... 511–513, 401

SUBRAMANIAM, THIRU A.—
Budget (Revised), 1971–72, Voting :
Education ... ... ... ... ... ... 366, 398–401
Constitution of a Tribunal and referring the Cauvery water dispute thereto and the need to prevent the Mysore Government from proceeding with the construction of the projects (R) ... 243–245
Unrest among workers of Madras Rubber Factory (A.M.) ... ... ... ... ... ... 351

SUBRAMANIAN, THIRU K. M.—
Budget (Revised), 1971–72, Voting :
District Administration and Miscellaneous
Famine Relief
Pensions
Other Miscellaneous Compensations and Assignments
Compensation to Zamindars
Commuted Value of Pensions
Loans and Advances by the State Government
Land Revenue Department
Stamps—Administration ... 41, 42–45
Education ... ... ... ... ... ... 388–390
Teachers' Training Schools, hardships caused due to limitation in admission (C.A.) ... ... ... 36, 37

SUGAR—
Lifting of stock ... ... ... ... ... 227–231

SUNDARAM, THIRU O. N.—
Intensive Agricultural Area Programme, Tiruchirappalli district ... ... ... ... 140–144
Women's education, Seminar on ... ... 485–487

PAGES

SUPPU, THIRU K.—
Arrest of workers in Coimbaore (A.M.) ... ... 32-33
Budget (Revised), 1971-72, Voting :
Education ... ... ... ... ... ... 365-392
396

SURENDRAN, THIRU M.—
Budget (Revised), 1971-72, Voting :
District Administration and Miscellaneous
Famine Relief
Pensions
Other Miscellaneous Compensations and Assignments
Compensation to Zamindars
Commuted Value of Pensions
Loans and Advances by the State Government
Land Revenue Department
Stamps Administration 38, 39, 42, 74-82

SWAMIDHAS, THIRU A.—
Budget (Revised), 1971-72, Voting :
District Administration and Miscellaneous
Famine Relief
Pensions
Other Miscellaneous Compensations and Assignments
Compensation to Zamindars
Commuted Value of Pensions
Loans and Advances by the State Government
Land Revenue Department
Stamps Administration 57-60
Education ... ... ... ... ... ... 509-511
Central Jail, Madras, diet of prisoner's ... ... 231-232
Urdu Language, study ... ... ... ... 6-11

T

TEACHERS—
Association centres in Pallipet Range, particulars . . 3-6

TEMPLE—
Sri Guruvayoorappan Temple supply of rice ... 225-227



PAGES

THANGAMANI, THIRU K. T. K.—
Budget (Revised), 1971-72, Voting :
Education ... ... ... ... ... ... 543-549
Constitution of a Tribunal and referring the Cauvery Water dispute thereto and the need to prevent the Mysore Government from proceeding with the construction of the projects (R) ... ... 270-277
Sound and light spectacle in Madurai ... ... 215-219
Unrest among workers of Madras Rubber Factory (A.M.) 351, 352

THIRUVENGADAM, THIRU THOPPUR—
Budget (Revised), 1971-72, Voting :
District Administration and Miscellaneous
Famine Relief
Pensions
Other Miscellaneous Compensations and Assignments
Compensation to Zamindars
Commuted Value of Pensions
Revenue Department
Loans and Advances by the State Government
Stamps Administration 48-50
Education ... ... ... ... ... 377-379

THOOYAMANI, THIRU M. C.—
Budget (revised), 1971-72, Voting ;
Education ... ... ... ... ... 506-508

THYAGARAJAN, THIRU E. S.—
Budget (Revised), 1971-72, Voting :
Education ... ... ... ... ... 534-535
Teachers Association Centres in Pallipet Range, particulars ... ... ... ... ... 3-6

TRANSPORT AND COMMUNICATIONS—
Buses in Madras City, congestion ... ... 502-504
Central Bus Stand in Coimbatore City, construction ... ... ... ... ... ... 123-125
Electric Buses in Madras City, Plying ... ... 235-237
Madras-Krishnagiri Express Bus, extension up to Hosur ... ... ... ... ... 31-32

PAGES

TRANSPORT AND COMMUNICATIONS—*cont*.

State Express Buses, increase in seats ... ... 27–31
Thalaimannar-Rameswaram Steamer Services ... 494–496
Trailer buses, plying ... ... ... ... ... 499–502

U

UNIVERSITIES—
Agricultural—, at Madurai establishment ... ... 496–497
Agricultural—, in Thanjavur District, establishment. 497–499

V

VADIVEL, THIRU S.—
Budget (Revised) 1971–72, Voting :
District Administration and Miscellaneous
Famine Relief
Pensions
Other Miscellaneous Compensations and Assignments
Compensation to Zamindars
Commuted Value of Pensions
Loans and Advances by the State Government
Land Revenue Department
Stamps Administration 62–64

VEERASAMI, THIRU N.—
Budget (Revised), 1971–72, Voting :
Education ... ... ... ... 530–534

VELAPPAN, THIRU C. V.—
Budget (Revised) 1971–72, Voting :
District Administration and Miscellaneous
Famine Relief
Pensions
Other Miscellaneous Compensations and Assignments.
Compensation to Zamindars
Commuted Value of Pensions
Loans and Advances by the State Government
Land Revenue Department
Stamps Administration 72–74